உ

சிவமயம்

பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்

மூலமும்

தெளிவுரையும்

தொகுதி 1



வெளியீடு:

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

இலங்கை

உ

சிவமயம்

சேக்கிழார் சுவாமிகள்

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்-போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரிந்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

உ

சிவமயம்

பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்

எனப்பெறும்

திருத்தொண்டர் புராணம்

மூலமும் தெளிவுரையும்

தொகுதி – 1

வெளியீடு:

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை – இலங்கை

SRI DURGADEVI DEVASTHANAM

TELLIPPALAI - SRI LANKA.

T.P.: 021 3213151, 021 2241909 Fax: 021 2241909

e-mail: thurkaiammantemple@gmail.com

facebook: tellidurga@gmail.com

28-06-2015

உ

சிவமயம்

இத்திருமுறை மலரினை அன்னைக்கு காணிக்கை செய்கிறோம்

சிவத்தமிழ்ச்செல்வி, அன்னை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

(முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

- வாயாரப் பாடி வாழ்நாள் முழுவதும் திருமுறைக்கு மதிப்புக் கொடுத்த அன்னை.
- திருமுறை மடம் கட்டுவித்து தினமும் நால்வருக்கு திருவமுது படைத்த திருமுறைச் செல்வி.
- காலமெல்லாம் திருமுறைச் செல்வம் காத்திடுவீர் என்ற கட்டளையைப் பிறப்பித்த தெய்வத்திருமகள்

உங்கள் திருவடி போற்றுகிறோம்.

நிர்வாக சபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

2015

உ

சிவமயம்

வெளியீட்டுரை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்

செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன்

அவர்கள் வழங்கிய வெளியீட்டுரை

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளை முதற்கண் வேண்டுதல் செய்கிறேன். அம்பாளின் திருவருளால் திருமுறைகளை வெளியிடும் புண்ணிய கைங்கரியம் தொடர்கிறது. சைவத்தமிழர்களின் பெருஞ்சொத்தாக விளங்குவது பெரிய புராணம். பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ள இப்புராணம் மூலமே தமிழில் எழுந்த புராணம் என்ற பெருமைக்குரியது. பொதுவாக சைவத்தமிழ் புராணங்களில் வரலாறு முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால் திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணம் இறைவனதும், இறை அடியார்களின் வரலாற்றினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிற புராணங்கள் விண்ணில் இருந்து மண்ணுக்கு வந்தவர்கள் பற்றி கூறுகின்றன. ஆனால் பெரிய புராணம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து விண்ணுக்கு சென்றவர்கள் பற்றி கூறுகின்றது. அனபாய சோழனின் முதல் மந்திரியாக விளங்கிய சேக்கிழார் நன்கு திட்டமிட்டு இக்காப்பியத்தை படைத்தார். இக்காப்பியத்தின் கதாபாத்திரங்கள் சிவனடியார்களே. மன்னர்கள் முதல் மட்பாண்டங்கள் செய்யும் சாதாரண தொழிலாளர் வரை, சரியாசனம் கொடுத்து புரட்சி செய்தார். பொதுவாக காப்பியங்கள் பல கற்பனை பாத்திரங்களை கொண்டனவையாக இருக்கும். சேக்கிழார் தனது பெரிய புராணத்தில் இம்மியளவும் கற்பனைக்கு இடம் கொடுக்கவில்லை. இறை அடியவர்களை, பற்றற்று பணி செய்தவர்களை உயரத்தில் வைத்து போற்றுகின்றார். பாட்டுடைத் தலைவராக சுந்தரமூர்த்தி சுவாமிகளை போற்றும் சேக்கிழார் இக்காப்பியத்தை சிவனடியார்களின் மேன்மையை வெளிப்படுத்துவதற்கு சான்றாக படைத்து அருளியுள்ளார். பெரிய புராணம் சைவசமயத்தவர்களின் அரனாக விளங்குகின்றது என்பது ஐயமில்லை.

திருத்தொண்டர் புராணம் ஆகிய பெரிய புராணத்தை வசன நடையில் எழுதி பலரும் அறிய வைத்தவர் நல்லை நகர் நாவலர் பெருமான். ஈழத்திருநாட்டில் பெரிய புராணத்தை நேசித்து, அவற்றின் உட்பொருளை மக்கள் உணரச் செய்தவர்கள் பலர். ஈழத்தில் மடங்கள், சத்திரங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் தோன்றுவதற்கு பெரியபுராண நேசிப்பே வித்திட்டது எனலாம். இத்தெய்வீக புராணத்தை இன்றைய சமூகம் அறிந்து நல்வாழ்வு வாழ வேண்டும் என்பது எமது அவா.

உ

சிவமயம்

இத்திருமுறை மலரினை அன்னைக்கு காணிக்கை செய்கிறோம்

சிவத்தமிழ்ச்செல்வி, அன்னை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

(முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

- வாயாரப் பாடி வாழ்நாள் முழுவதும் திருமுறைக்கு மதிப்புக் கொடுத்த அன்னை.
- திருமுறை மடம் கட்டுவித்து தினமும் நால்வருக்கு திருவமுது படைத்த திருமுறைச் செல்வி.
- காலமெல்லாம் திருமுறைச் செல்வம் காத்திடுவீர் என்ற கட்டளையைப் பிறப்பித்த தெய்வத்திருமகள்

உங்கள் திருவடி போற்றுகிறோம்.

நிர்வாக சபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

2015

உ

சிவமயம்

வெளியீட்டுரை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்

செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன்

அவர்கள் வழங்கிய வெளியீட்டுரை

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளை முதற்கண் வேண்டுதல் செய்கிறேன். அம்பாளின் திருவருளால் திருமுறைகளை வெளியிடும் புண்ணிய கைங்கரியம் தொடர்கிறது. சைவத்தமிழர்களின் பெருஞ்சொத்தாக விளங்குவது பெரிய புராணம். பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ள இப்புராணம் மூலமே தமிழில் எழுந்த புராணம் என்ற பெருமைக்குரியது. பொதுவாக சைவத்தமிழ் புராணங்களில் வரலாறு முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால் திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணம் இறைவனதும், இறை அடியார்களின் வரலாற்றினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிற புராணங்கள் விண்ணில் இருந்து மண்ணுக்கு வந்தவர்கள் பற்றி கூறுகின்றன. ஆனால் பெரிய புராணம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து விண்ணுக்கு சென்றவர்கள் பற்றி கூறுகின்றது. அனபாய சோழனின் முதல் மந்திரியாக விளங்கிய சேக்கிழார் நன்கு திட்டமிட்டு இக்காப்பியத்தை படைத்தார். இக்காப்பியத்தின் கதாபாத்திரங்கள் சிவனடியார்களே. மன்னர்கள் முதல் மட்பாண்டங்கள் செய்யும் சாதாரண தொழிலாளர் வரை, சரியாசனம் கொடுத்து புரட்சி செய்தார். பொதுவாக காப்பியங்கள் பல கற்பனை பாத்திரங்களை கொண்டனவையாக இருக்கும். சேக்கிழார் தனது பெரிய புராணத்தில் இம்மியளவும் கற்பனைக்கு இடம் கொடுக்கவில்லை. இறை அடியவர்களை, பற்றற்று பணி செய்தவர்களை உயரத்தில் வைத்து போற்றுகின்றார். பாட்டுடைத் தலைவராக சுந்தரமூர்த்தி சுவாமிகளை போற்றும் சேக்கிழார் இக்காப்பியத்தை சிவனடியார்களின் மேன்மையை வெளிப்படுத்துவதற்கு சான்றாக படைத்து அருளியுள்ளார். பெரிய புராணம் சைவசமயத்தவர்களின் அரனாக விளங்குகின்றது என்பது ஐயமில்லை.

திருத்தொண்டர் புராணம் ஆகிய பெரிய புராணத்தை வசன நடையில் எழுதி பலரும் அறிய வைத்தவர் நல்லை நகர் நாவலர் பெருமான். ஈழத்திருநாட்டில் பெரிய புராணத்தை நேசித்து, அவற்றின் உட்பொருளை மக்கள் உணரச் செய்தவர்கள் பலர். ஈழத்தில் மடங்கள், சத்திரங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் தோன்றுவதற்கு பெரியபுராண நேசிப்பே வித்திட்டது எனலாம். இத்தெய்வீக புராணத்தை இன்றைய சமூகம் அறிந்து நல்வாழ்வு வாழ வேண்டும் என்பது எமது அவா.

எங்கள் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் அமரர் பண்டிதை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது ஆன்மீக சொற்பொழிவில் பெரியபுராணச் சிறப்பை பெருமைப் படுத்தி வந்தார். இன்று சைவ ஆலயங்களில் புராண நூல்கள், திருமுறைகள் என்பவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. போரின் அனர்த்தங்களினால் கோவில்களில் பாதுகாக்கப்பட்ட திருமுறை நூல்கள் பயன்படுத்த முடியாமல் அருகிப் போய்விட்டன.

கோவில்கள் தோறும் திருமுறைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு எமது தேவஸ்தானம் திருமுறைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. 1ம் திருமுறை முதல் 11ம் திருமுறை வரை எமது தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டு பலர் பயன் பெறுகின்றனர். இவ்வாண்டு பன்னிரண்டாம் திருமுறை ஆகிய திருத்தொண்டர் புராணத்தை வெளியிடத் தீர்மானித்தோம். இதன் பிரகாரம் நான்கு தொகுதிகளாக இப்புராணத்தை பொருளோடு வெளியிடுவது எனத் தீர்மானித்து, "பாயிரம்" முதல் "இலை மலிந்த சருக்கம்" வரை முதலாவது தொகுதியாக வெளியிட முன் வந்துள்ளோம். ஏனைய தொகுதிகளைத் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்.

திருத்தொண்டர் புராணத்தின் உட்பொருளை சுருக்கமாகவும், தெளிவாகவும் உரை எழுதிய ஸ்ரீமான் சைவசித்தாந்த இரத்தினம். வ. த இராமசுப்பிரமணியம் அவர்களின் உரையையும் உள்ளடக்கி இந்நூல் வெளி வருகின்றது. அப்பெருமகனாருக்கும் இவ்வேளை நன்றி கூறுகின்றோம். திருத்தொண்டர் புராணம் பதிப்பித்தல் பணியில் எழுத்துப்பிழைகளை சீர்செய்து உதவிய இளைப்பாறிய அதிபர் வே. தனபாலசிங்கம் அவர்கட்கும், எமது தேவஸ்தான உப தனாதிகாரியும் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தருமாகிய திரு. சு. ஏழுர்நாயகம் அவர்கட்கும் எமது நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன். அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் 7வது குருபூசை நன்நாளில் எமது தேவஸ்தானத்தால் இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டு உதவிய கொழும்பு அனுஷ் பிரின்டர்ஸ் உரிமையாளர் திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். எல்லாம் வல்ல துர்க்காதேவியின் நல்லருளால் பாரிய பணி தொடர்கிறது. அம்பாளின் பேரருள் மேலும் சிறக்க வேண்டி நிறைவு செய்கிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்

எனப்பெறும்

திருத்தொண்டர் புராணம்

மூலமும் தெளிவுரையும்

தொகுதி

1

உள்ளடக்கம்

01.	பாயிரம்	01
	திருமலைச் சருக்கம்	13
02.	திருமலைச் சிறப்பு	13
03.	திருநாட்டுச் சிறப்பு	38
04.	திருநகரச் சிறப்பு	58
05.	திருக்கூட்டச் சிறப்பு	94
06.	தடுத்தாட்கொண்ட புராணம்	104
	தில்லைவாழ் அந்தணர் சருக்கம்	249
07.	தில்லைவாழ் அந்தணர் புராணம்	250
08.	திருநீலகண்ட நாயனார் புராணம்	258
09.	இயற்பகை நாயனார் புராணம்	289
10.	இளையான் குடிமாற நாயனார் புராணம்	314
11.	மெய்ப்பொருள் நாயனார் புராணம்	330
12.	விறன்மிண்ட நாயனார் புராணம்	347
13.	அமர்நீதி நாயனார் புராணம்	355
	இலை மலிந்த சருக்கம்	387
14.	எறிபத்த நாயனார் புராணம்	387
15.	ஏனாதிநாத நாயனார் புராணம்	424
16.	கண்ணப்ப நாயனார் புராணம்	450
17.	குங்குலியக் கலய நாயனார் புராணம்	576
18.	மானக்கஞ்சாற நாயனார் புராணம்	604
19.	அரிவாட்டாய நாயனார் புராணம்	630
20.	ஆனாய நாயனார் புராணம்	644
	பாட்டு முதற்குறிப்பு அகராதி	673

உ

சிவமயம்

பெரிய புராணம்

எனப் பெறும்

திருத்தொண்டர் புராணம்

1. பாயிரம்

பாயிரம் என்பது, தாம் சொல்லப்புகும் நூலின் அமைப்பைப் பற்றி உரைப்பதாகும். இதில் கடவுள் வாழ்த்தும் திருக்கூட்டத்தின்கண் விளங்கும் சிவனடியார்களைத் துதிப்பதும் உரைக்கப்பட்டது. இப்புராணம் அமைவதற்குரிய இறையருள் முதலானவை சாற்றப்படுவதாயிற்று.

கடவுள் வாழ்த்து

நடராசர் துதி

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1. உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

தெளிவுரை: உலகத்தில் உள்ள உயிர்கள் நன்கு உணர்ந்து போற்றி உரைப்பதற்கு அரியவனாகிய இறைவன், பிறைச் சந்திரனும் கங்கையும் தரித்த சடை முடியுடையவராகிப் பெருஞ் சோதி வடிவம் கொண்டு, தில்லை அம்பலத்தில் கருணாலயனாகத் திருநடனம் புரிகின்றார். அப்பரமனின் மலர் போன்று திகழ்வதும், சிலம்பு அணிந்து விளங்குவதுமான திருவடியை வாழ்த்தி வணங்குவோமாக.

சிறப்புரை: இது திருத்தொண்டர் புராணத்தைப் பாடுவதன் முன்னர் இறைவனைப் போற்றும் வாழ்த்துப் பா ஆயிற்று. சேக்கிழார் சுவாமிகள் பாடுவதற்கு அமைத்துக் கொடுக்கும் முதற் பொருளாக, இறைவனால் "உலகெலாம்" என்று அசரீரிவாக்காக எடுத்துத் தர, இப்பாடல் அமைவதாயிற்று. இப்புராணம், உலகெலாம் என்று

தொடங்குவதைப் போலவே, "மன்றுளார் அடியாரவர் வான்புகழ் நின்றது எங்கும் நிலவி உலகெலாம்" என்று நிறைவு செய்யப்பெற்று, "உலகெலாம்" என்று முடிபைப் பெற்று விளங்குவதாயிற்று.

இப்பாடலின் எழுத்துக்களைச் சேர்த்துப் பார்த்தால் 72 அமைவதைக் காணலாம். இதன் வழி 63 தனியடியார்களும், 9 தொகை அடியார்களும் ஆக 72 நாயன்மார்கள் இப்பாடலின் வாயிலாகச் சேக்கிழார் சுவாமிகளால் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதாகவும் ஆன்றோர் பொருள் காண்பர். இறைவன் முதற்கண் எடுத்து ஓதி, முதல் அளித்த சொல்லின் திருவருள் வளத்தால் ஆகாததுதான், யாது உள்ளது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்யும் வகையில் முதற் பொருளாக, "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று பாடுமாறு அடியெடுத்துக் கொடுத்த எம்பெருமானின் கருணைத்திறத்தையும் காண்க.

இப்பாடலின் கண் இறைவனை அறிந்து உணர்வதும், காண்பதும் அரிது என்னும் கருத்து முதலடியின் வாயிலாக ஓதப் பெற்றது. உலகம் என்பது உயிர்களைக் குறிப்பது. மும்மலங்களால் வயப்பட்ட உயிர், மலம் நீங்கிய தூய்மையாக விளங்கும் இறைவனை அறிதல் இயலாது. ஆதலால், உலகத்தில் உள்ள உயிர்கள் என்பது உலகெலாம் என பொதுப் பெயரால் சுட்டப் பெறுதலாயிற்று. உண்மைப் பொருளாக விளங்கும் இறைவனை ஓரளவு உணர்ந்த பெருமக்களானாலும், "கண்டவர் விண்டிலர்" என்னும் வாய்மைக்கு ஏற்றவாறு பிறர்க்கு அறிவித்து உணருமாறு ஓதுதலும் அரிது என உணர்ந்து ஓதற்கு அரியவன் எனச் சாற்றப்பட்டது. அத்தகைய பரம்பொருள், கருணை வயத்தனாகி நிலவையும், கங்கையையும் சடைமுடியிற் கொண்டு அளவு கடந்த கருணை பொழிபவனாக விளங்குகின்றார். இறைவன் ஓதற்கு அரியவன் என்பதை மாணிக்க வாசக சுவாமிகள், "நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!", "ஓதஉலவா ஒரு தோழன் தொண்டர் உளன்" என உணர்த்தியவாறும் காண்க. குளிர்ந்த கருணை புரியும் இறைவன் அலகிலா சோதி வடிவாகத் தில்லையம்பலத்தில் திருநடனம் புரிபவர் என்பதை அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்" என்று சாற்றப்பட்டது. அப்பெருமானின் திருவடியானது மலர்ப்பாதம் என்னும் வகையிலும் திருநடனம் புரியும் வகையில் சிலம்பொலி

விளங்க மேவுதலையும், "மலர்சிலம்படி" என்று நான்காம் அடியில் உணர்த்தியமையும் காண்க. இத்தகைய நடனம் புரியும் நடராசப் பெருமான் ஆடும்போது உண்டாகும் சிலம்போசையைச் சேரமான் பெருமாள் செவிமடுத்துக் கேட்ட பாங்கினைக் கழறிற்றறிவார் புராணம் பாடல் எண் 42 - இல் நவின்றவாறும் நோக்குக.

இறைவன் சிலம்பு அணிந்து திருநடனம் புரியும் சிறப்பினை மணிவாசகப் பெருமான், "அலம்பார் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற சிலம்பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ!" எனச் சாற்றியவாறும் காண்க.

உலகத்தில் உள்ளன யாவும் இறைவனால் படைக்கப்பட்டவை. ஆயினும் இறைவன் மெய்த்தன்மை கொண்டு நிலைபெற்று விளங்குவதைப் போன்று, ஆன்மாவும் மெய்த்தன்மை கொண்டு விளங்குகின்றது. எனவே மெய்த் தன்மையுடைய ஆன்மா, மெய்த்தன்மையுடைய மலர் போன்ற இறைவன் திருவடியில் பொருந்திப் பேரின்பத்தில் திளைத்து மகிழ்தல் வேண்டும் என்கிற முத்திப் பேற்றைச் சாற்றும் வகையில் ஆன்மாக்கள் வாழ்த்தி வணங்குதல் வேண்டும் என்று உபதேசித்தலாயிற்று. பொன் உயர்வு உடையதாயினும், நறுமணமலர் நெடுத்தூரத்திலும் சென்று வாசனையைத் தருதல் போன்று இறைவன் திருவடி மலரும் சேய்மையில் உள்ள மன்னுயிர்களையும் ஈர்த்து அருள் புரிய வல்லது என்கிற குறிப்பு மலர் சிலம்படி என்னும் தொடரால் உணர்த்தப் பெறுதலும் ஆம். இத்தகைய நடராசப் பெருமானின் திருவடி மலரை நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தின் வழி திருநாவுக்கரசு சுவாமிகள்.

"நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாடமா ளிகை சூழ் தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே"

- ஐந்தாம் திருமுறை, கோயில் திருப்பதிகம்

என்று அருளிச் செய்தமையும் காண்க.

இப்பாடல் இறைவன் ஐம்பூதங்களாக உள்ளவன் என்பதையும் மற்றும் எண் வடிவினனாகிச் சூரியன், சந்திரன், ஆன்மா எனவும் ஆகியவன் என்பதையும் இனிது புகட்டுகின்றது. இவற்றை,

1. நிலம் - சிலம்படி
2. நீர் - நீர்மலி (கங்கை)
3. நெருப்பு - சோதி
4. காற்று - ஆடுதல் (ஆடுவான்)
5. ஆகாயம் - அம்பலம்
6. சூரியன் - அலகில் சோதி
7. சந்திரன் - நிலவுலாவிய
8. உயிர் - உலகெலாம் (உலகு - உயிர்த் தொகை)

எனக் கொண்டும் நோக்கற்பாலது.

இப்பாடலின் பொதுத்தன்மையாக முதலடி இருப்பினும் இறைவன் இத்தன்மையில் உள்ளனன் என்னுமாறு, பிறைச்சந்திரனுடன் கங்கையும் சடைமுடியில் விளங்க, அலகிலா சோதி வடிவாகத் தில்லையில் நடனம் புரியும் சிவபெருமானின் திருநடனத் திருக்கோலத்தைச் சுட்டிய தன்மையில், பரம்பொருளாக எங்கும் நிறைந்து விளங்கும் சிவபெருமான் நடராசப் பெருமானாகத் திருக்கோலம் கொண்டு மன்னுயிர்க்குக் கருணைபொழிதலை இவண் காட்டிற்று. இதன் வழி, இவ்வாழ்த்துப்பா அரிய தத்துவங்களை நவிலும் திருப்பாட்டாகி உபதேசம் நவில்வதைக் காண்க.

உலகு - உலகத்து உயிர்கள். நிலவுலாவிய - பிறைச்சந்திரன் திகழ்கின்ற. நீர்மலி - மிகுந்த நீர், கங்கையைக் குறித்தது. அம்பலம் - தில்லையம்பலம். மலர்சிலம்படி - மலர் போன்று மென்மையானதும் நடனத்திற்கு ஏற்ப சிலம்பு அணிந்ததுமாகிய நடராசப் பெருமான் திருவடி. மலர் - தாமரை என்க. அடி - திருவடி. 1

2. ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தோழ.

தெளிவுரை: தசைகள் கொண்டுள்ள மனித தேகத்தைக் கொண்ட இப்பிறவியானது, தேன்கூடு விளங்கும் மலர்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த தில்லையில் சிறப்பான நடம் செய்பவரும் இணையில்லாத வரங்களைத் தருபவருமான நடராசப் பெருமானின் அழகிய திருப்பாதங்களைத் தொழுதலால் முத்தியை அடையும் பெருமையைக் கொள்ளும்.

சிறப்புரை: இப்பிறவி எடுப்பதன் நோக்கமே இப்பிறவியை அகற்றி ஆன்மாவானது முத்திப் பேற்றை அடைய வேண்டும் என்னும்

தன்மைக்கேயாம் என்பது இவண் சாற்றப்பட்டது. இதுவே தான் அடைந்த உறுதி எனச் சுட்டுதலாம். அடைந்த உறுதி என்பது, தான் பிறவி எடுத்ததன் நோக்கம் என்க. இத் தன்மையில் மணிவாசகப் பெருமான்.

"புவனியில் போய் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திரு மாலாம்
அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்துஎமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே!"

- *20. திருப்பள்ளியெழுச்சி. 10.*

என்று அருளிச் செய்தமையும் காண்க.

தில்லைப் பெருமானின் திருநடனதரிசனத்தைக் "காணமுத்தி" என்பது இத்தலத்தின் மாண்புறு சிறப்பாகும். முத்தித் தலங்கள் ஐந்தனுள் ஏனைய நான்காவன.

1. பிறக்க முத்தி - திருவாரூர்.
2. நினைக்க முத்தி - திருவண்ணாமலை.
3. இருக்க முத்தி - காஞ்சிபுரம்
4. இறக்க முத்தி - காசி.

இப்படலின்கண் நடராசப்பெருமானின் திருநடனச் சிறப்பும் "மாநடம்" என ஏத்தப்பட்டதைக் காண்க. இத்தன்மையில் நடராசப் பெருமானின் திருநடனத்தைக் காண்பதில் மனிதப் பிறவி பெருமை கொள்வதைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே."

- *நான்காம் திருமுறை. 81 - கோயில் திருப்பதிகம்.*

என்று அருளிச் செய்தமையும் காண்க.

ஊன் - தசை. தான் அடைந்த - பிறவியை அடைந்த. உறுதி - காரணம், நோக்கம். இது முத்திப் பேற்றைக் குறித்தது. சாரும் - கை கூடும். மாநடம் செய் வரதர் - திருநடனம் புரியும் நடராசப் பெருமான். வரதர் - வரம் கொடுக்கும் இறைவன். இது தரிசனப் பேற்றால் பெறுவதாயிற்று. பொற்றாள் - அழகிய திருவடி. தாள் தொழ - தரிசனம் செய்து வணங்குதல், இது தரிசிக்க முத்தி என்னும் தலச்சிறப்பைச் சுட்டுதலாயிற்று. 2

விநாயகர் துதி

3. **எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்**
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

தெளிவுரை: இங்ஙனம் சிறப்பாக விளங்குகின்ற நாயன்மார்களின் வரலாற்றை இனிய தமிழ்ப்பாடல்களால் பாடுகின்ற பெருமையை நமக்கு அருள் செய்யும் முகத்தால், ஐந்து பெரிய கைகளும், நீண்டு தொங்கும் காதுகளும், மிக உயர்ந்த முடியும் கொண்டு விளங்கும் மதம் கொண்ட யானையின் முகத்தையுடைய விநாயகக்கடவுளைச் சிந்தையில் பதித்து ஏத்துவோம்.

சிறப்புரை: நாயன்மார்களின் சரிதம் எல்லா வகையான சிறப்புடன் உயர்ந்து, ஈசன் திருவருள் பொலியுமாறு தனிப்பெருமையுடையதாக விளங்குவதால் இது மாக்கதை எனப்பட்டது. இத்தகைய சிறப்புடைய வரலாறு தமிழின் இனிமையோடு பாடல்களாக விளங்குவதும், அதன் மேன்மையை நமக்கு அருள் செய்திடவும், இவண் விநாயகப்பெருமானை ஏத்துவதாயிற்று.

விநாயகப் பெருமானுக்கு ஒரு பக்கம் கொம்பு உள்ளமை ஆண் தத்துவமாகவும், மறுபக்கம் கொம்பின்மை பெண்மையெனவும் கொண்டு சிவசக்தி சொரூபமாகக் கொள்வதும் மரபு.

மாக்கதை - பெரிய புராணம், பெருமையுடையோர் வரலாறு இன்தமிழ் - தமிழின் இனிமைப்பாங்கை உரைத்தது. நடக்கும் மேன்மை - எல்லாக் காலத்திலும் மேன்மையோடு போற்றப்படும் பெருமை. நமக்கு அருள் செய்திட - இதனைச் செய்யுள் நடையில் அமைத்துக் கொடுத்த சேக்கிழார் சுவாமிகளும், அவர்தம் திருவடிகளை யொட்டிப் பயிலும் அடியவர் பெருமக்களும் என்று யாவர்க்கும் அருள் செய்திட. தடக்கை ஐந்து - நான்கு திருக்கரமும், தும்பிக்கை ஒன்றும் ஆக ஐந்து கைகளையுடைமை. தாழ்செவி - தாழ்ந்து விளங்கும் பெரிய காது. களிறு - யானைமுகம் கொண்ட விநாயகப் பெருமான். கடம் - மதம். இது ஞானபோதத்தைக் குறிக்கும். 3

அடியார் திருக்கூட்ட வழிபாடு

4. மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

தெளிவுரை: பிறைச் சந்திரனைச் சடைமுடியில் சூடியவராய்த் தில்லையில் திருநடனம் புரியும் நடராசப் பெருமானை முன்னர் துதி செய்த நாயன்மார்களைப் பற்றிய தூய சொல் மலர் மாலை யான திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை நன்கு ஏத்தி, அருள் நலனைத் திரட்சியாகப் பெற்று நுகரும் அடியார்களாகிய புனிதர் பேரவை இவ்வுலகி னில் நன்கு சிறந்து விளங்க இனிது துதி செய்வோமாக !

இவண் சிவனடியார்களைப் புனிதப் பேரவை எனச் சாற்றப்படுதல் காண்க. சிவனடியார்கள் செய்யும் கிரியைகளே தூய்மையுடையன என்பதும், எனவே அத்தகைய செயல்கள் உலகில் நிலைபெற்று விளங்கி வெல்லும் என்பதும் சாற்றுதலாயிற்று.

இது திருக்கூட்டத்தின் பெருமையை விளம்புதலாம்.

மதிவளர் - வளரும் பிறைச்சந்திரன். மன்றுளார் - நடராசப் பெருமான். பொதிநலன் - நிறைந்த நலன். புனிதர் பேரவை - அடியார் திருக்கூட்டம். விதிமுறை - அடியவர்களின் அருள் உள்ளத்தின்படி உண்டாகும் செயல். 4

அவையடக்கம்

5. அளவிலாத பெருமையர் ஆகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரிது ஆயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்.

தெளிவுரை: அளவு, இவ்வளவு என்று வரையறை செய்யப்படாத மிகுந்த பெருமை விளங்கும் அளவு செய்யப்பட முடியாத அடியவர்களுடைய புகழைக் கூறத் தொடங்கினேன். சிறிதளவு கூட அவர்களுடைய புகழை உரைப்பது அரிது. ஆயினும் அளவில்லாத ஆசையானது என் மனத்தில் இருந்து உந்திச் செலுத்த நான் உரைக்கலானேன்.

சிறப்புரை: இறைவன் அளத்தற்கு அரியவன். இத்தன்மையில் மாணிக்கவாசகர்,

"ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!"

எனச் சாற்றிமையும் காண்க. இத்திறத்தில் அப்பெருமானைத் தன்னுள்ளே விளங்கப் பெறும் அடியவர்களும், அளவிட்டுக் கூறுவதற்கு இயலாத பெரும் புகழ் கொண்டவர்கள் என்பது ஆயிற்று. இதனை ஔவையார்,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது!
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரிய மாலோ, அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனியோ, கல சத்தில் பிறந்தோன்;
கலசமோ, புவியிற் சிறுமண்;
புவியோ, அரவினுக்கு ஒரு தலைப் பாரம்;
அரவமோ, உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ, இறைவன் பாகத்து ஒடுக்கம்;
இறைவனோ, தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

என்று உரைத்தமையும் காண்க.

அடியவர்பால் கொள்ளும் ஆசை என்கிற பக்தியானது, அவ்வடியவர் பால் கலந்து அதுவே அருளாக மாறி, ஒருவரை உந்திச் செலுத்துகின்றது என்னும் கருத்து இப்பாடலின் ஈற்றடி வாயிலாகப் பெறப்படுவதாகும். இதனை மாணிக்க வாசகர், "நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" என்று நவின்றாற் போன்று, புனிதர் பேரவை விதிமுறை விளங்கி வெல்லும் தன்மை காண, அதுவே அருளாக மாறி, உந்திச் செலுத்தி அடியார் புகழைப்பாட வைத்தது எனக் காண்க.

அளவு கூட - சிறிது அளவும். அளவில் ஆசை துரப்ப - அடியவர் பால் கொண்ட அளவில்லாத பக்தி அருளாக மாறி உந்திச் செலுத்த. அறைகுவேன் - உரைக்கலானேன். 5

6. தெரிவ ரும்**பெரு மைத்திருத் தொண்டர்தம்**
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன்.

தெளிவுரை: நன்கு விளங்கும் பெருமையுடைய திருத் தொண்டர்களின் ஒப்பற்ற சிறப்பினை உரைக்கும் என் செயல், தெளிந்த கடல் நீரை முழுவதுமாகக் குடிக்க வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டு முகலும் ஒரு நாயைப் போன்றது.

இப்பாடல் அளவிலாத புகழையுடைய அடியவர்களின் சிறப்பை இனிது நவில்வதாயிற்று. நாய் தன் தலைவனிடம் முற்றுமாய் அடிமை கொண்டு விளங்கும் பண்பு போன்று இவண், இறைவனிடமும், இறைவன் அடியார்களிடம் கொண்ட மாறாத அன்பையும், திருவடிபணிதலையும் சாற்றப்பட்டது.

பொருவரும் சீர் - ஒப்பற்ற சிறப்பு. பெருநசை - பெருவிருப்பம். சுணங்கன் - நாய். 6

7. செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குஉரை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்குஎன் உரைசிறிது ஆயினும்
மெய்ப்பொ ருட்குஉரி யார்கொள்வர் மேன்மையால்.

தெளிவுரை: உலகோர் சொல்லப்படுகின்ற பொருளின் சிறப்பைக் கருதியே உரை கொள்வார்கள். இப்போது, நான் சொல்லப்புகும் சிறப்புடைய சிவனடியார்களைப் பற்றி, நான் சொல்லும் உரை சிறிதளவே ஆகும். ஆயினும் மெய்ப்பொருளின் சிறப்புக்கு உரியவராகிய அடியார் பெருமக்கள் இச்சிறிய உரையையே மிகவும் மேன்மையுடையதாகக் கொள்வார்கள்.

சிறப்புரை: அளப்பிலாதவனாகிய சிவபெருமானுடைய அளப்பிலாத பெருமையைப் போற்றும் அளப்பிலாச் சிறப்புடைய அடியவர்களைப் பற்றி உரைக்கும் உரை சிறியதாயினும், அச்சிறப்பினை நோக்கி உலகோர் பெருமையாகக் கொள்வர் என்பதாம். இவ்வாறு கொள்பவர்கள் மெய்ப்பொருளாகிய சிவபெருமானைத் தம் உள்ளத்தில் இடையறாது கொண்டு, ஏத்தும் அடியவர் பெருமக்கள் என்று சாற்றும் வகையில், "மெய்ப் பொருட்டு உரியார் கொள்வர்" எனப்பட்டது இதுவே, அவ்வடியவர்களின் மேன்மையைப் புலப்படுத்தும் எனவும் விளம்புதலாயிற்று.

"யாவரும் கொள்வர்" என்பது பொதுமையாகவும் " மேன்மையால் கொள்வர்" என்பது சிறப்புத் தன்மையாகவும் இவண் சாற்றுதலாம்.

செப்பல் உற்ற பொருள் - திருத் தொண்டர் பெருமை. மெய்ப்பொருள் - சிவபெருமான். உரியார் - அடியவர் பெருமக்கள். 7

8. மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேர்அம் பலம்செய்ய
தூய பொன்அணி சோழன் நீ டூழிபார்
ஆய **சீர்அந பாயன்** அரசவை.

தெளிவுரை: சிறப்பான பொன்னாலாகிய அணிகலன்களையுடைய சோழ மன்னனான அநபாயனின் தலைமையில் இவ்வுலகின் கண் நெடுங்காலம் நிலைத்து மேவும் அரச அவை விரும்பியவாறு, இத்திருத்தொண்டர்களின் வரலாற்றைச் செம்மேனியனான நடராசப் பெருமான் விளங்கும் பேரம்பலத்தில் பாடத் தொடங்கினேன்.

சிறப்புரை: இவண் அநபாய சோழனின் விருப்பமானது அவன் அவையில் உள்ளவர்கள் வரவேற்றுப் போற்றப்டுமாறு ஆயிற்று என்பது கருத்து. இப்புராணம் சிதம்பரத்தில் கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமான் விளங்கும் பேரம் பலத்தில் பாடப்பெற்றது என்பதாம். இத்திருக்கோயிலில் ஐந்து சபைகள் உள்ளன. அவை 1. சிற்றம்பலம் 2. பொன்னம்பலம் 3. பேரம்பலம் 4. திருத்தசபை 5. இராசசபை என்பன.

1. சிற்றம்பலம் : நடராசப் பெருமான் திருநடனம் புரிந்தருளும் இடம்.

2. பொன்னம்பலம் : இது கனக சபை எனப்படும் சிற்றம்பலத்திற்கு முன்னே உள்ள பகுதி. இங்குப் படிக லிங்கத்திற்கு நாள்தோறும் ஆறுகால பூசையும், ரத்தின சபாபதிக்கு அபிஷேக வழிபாடும் நடைபெறும்.

3. பேரம்பலம் : இது தேவ சபை எனப்படும். இங்கு பஞ்ச மூர்த்திகளும் எழுந்துள்ளனர்.

4. நிருத்த சபை : நடராசப் பெருமானின் கொடி மரத்துக்குத் தென்பால் உள்ளது. ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய இடம்.

5. இராச சபை : இ.ந்து ஆயிரங்கால் மண்டபம் ஆகும். இங்கு உள்ள சிறப்புக்களாவன :

1. மணிவாசகப் பெருமான் புத்தரை வாதில் வெற்றி கொண்டு ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தது.

2. திருஞான சம்பந்தர், தில்லை வாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டது.

3. உமாபதி சிவம் கொடிக்கவி பாடிக் கொடி ஏறச் செய்தது.

4. சேந்தனர் திருப்பல்லாண்டு பாடித் தடைப்பட்டு நின்ற தேரை ஓடுமாறு செய்தது.

5. திருமுறைகளை வெளிப்படுத்தியதும் சேக்கிழார் பெருமானுக்கு "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுத்தும் முதலாவன.

சேயவன் - செம்மேனியனாகிய நடராசப் பெருமான். அநபாயன் - சோழ மன்னன், இவன் விருப்பத்தின்படி சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார் என்பதாம். 8

9. அருளின் நீர்மைத் திருத்தொண்டு அறிவரும்
தெருள்இல் நீர்இது செப்புதற்கு ஆம்எனின்
வெருள்இல் **மெய்ம்மொழி வான்நிழல் கூறிய**
பொருளின் ஆகும்எனப் புகல்வாம் அன்றே.

தெளிவுரை: அருளின் இனிய தன்மையுடைய திருத்தொண்டின் பெருமையை அறிவதற்கு அரியதான இந்நிலைமையில், உரைக்க வேண்டும் என்கிற விருப்பம் உண்டாகுமானால், மயக்க உணர்வு இல்லாத இறைவன் மெய்ம்மொழியாக எடுத்துக் கொடுத்த " உலகெலாம்" என்கிற அசரீரி வாக்கைப் பொருளாகக் கொண்டு புகலுதல் ஆயிற்று.

இப்புராணத்திற்கு முதற்பொருளாக விளங்குவது இறைவன் அடியெடுத்துக் கொடுத்த, "உலகெலாம்" என்பதேயாகும் என்று இயம்புதலாயிற்று.

நீர்மை - தன்மை, இனிமை. தெருள் - ஞானம். வெருள் - மயக்கம். மெய்ம்மொழி - உலகெலாம் என்பது. வான்நிழல். - அசரீரி வாக்கு.

நூற்பெயர் விளம்புதல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

10. இங்கு இதன் நாமம் கூறின்
இவ்வுல கத்து முன்னாள்
தங்குஇருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம்.

தெளிவுரை: இவ்வுலகத்தின் கண் தொன்றுதொட்டு மாந்தர்களிடம் இருந்து வருவது இரண்டு வகையான இருள் ஆகும். அவை அகத்தில் நிலவும் அஞ்ஞானம் ஆகிய அக இருளும், புறத்தே நிலவும் இருட்டாகிய புற இருளும் ஆகும். புற இருளைப் போக்குகின்ற சூரியனைப் போன்று மாந்தரின் சிந்தையுள் தோன்றும் அக இருளை நீக்குவது திருத்தொண்டர் புராணம். இதுவே இந்நூலின் பெயராகக் கூறப்பட்டது.

சிறப்புரை: புறத்தே இருக்கும் இருளைப் போக்குவது புற ஞாயிறு. எனவே அகத்தே இருக்கும் இருளைப் போக்குகின்ற திருத்தொண்டர் புராணத்தை அக ஞாயிறு என்பார் திரு. வி. க. அவர்கள் இதன் வழி, புற இருளைப் போக்கும் ஞாயிறு மறைய இருள் சூழும். ஆனால் அகத்தே இருக்கும் ஞாயிறு எக்காலத்திலும் மறையாது விளங்குவதால், இத்திருத்தொண்டர் புராணமானது மாந்தரின் நெஞ்சினுள் எக்காலத்திலும் விளங்கி மெய்ஞ்ஞானத்தைத் தருகின்றது என்பதாம். தவிரவும், ஞாயிறு போன்று திருத்தொண்டர் புராணம் பேரொளியுடன் திகழக் கூடியது எனவும் காண்க. இத்தன்மையில் சிவபிரானுடைய நுதல் வழியாகக் கந்தபுராணமும் வலது கண்ணாகத் திருவிளையாடற்புராணமும், இடது கண்ணாகத் திருத்தொண்டர் புராணமும் விளங்குவதாகச் சாற்றப்படுதலையும் ஓர்க.

இதன் - இந்தநூல். நாமம் - பெயர். இருள் இரண்டு - அக இருள், புற இருள். மாக்கள் - மாந்தர். பொங்கிய இருள் - அஞ்ஞானமாகிய அக இருள். *10*

பாயிரம் நிறைவுற்றது.

முதலாவது காண்டம்

I. திருமலைச் சருக்கம்

2. திருமலைச் சிறப்பு

கயிலை மலையின் சிறப்பும் ஆங்கு பூவுலகத்திலிருந்து திரும்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பேரொளியைக் கண்டு உபமன்னிய முனிவர் வணங்குதலையும், அவ்வடியவரின் வரலாற்றையும் கூறித் தென்திசையில் உள்ள திருநாட்டின் சிறப்பினையும் திருத்தொண்டத்தொகையின் அருள் திறத்தையும் உரைத்தலாயிற்று.

கயிலை மலையின் சிறப்புரைத்தல்
கலி விருத்தம்

11. பொன்னின் **வெண்திரு நீறு** புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவு அரியான் என்றும்
மன்னி வாழ்கயி **லைத்திரு மாமலை.**

தெளிவுரை: பரந்து விளங்கும் உயர்ந்த இமயமலையின் மேல் பெருமையோடு இருப்பது கயிலை என்னும் திருமலை. ஆங்குப் பனிபடர்ந்து மேவும் காட்சியானது பொன்மயமாக விளங்கும் மலையின் மீது திருவெண்ணீறு பூசியதைப் போன்று விளங்குவதாயிற்று.

சிறப்புரை: இறைவன் அடியவர்களுக்கு அருள் செய்தலையும், சைவ முதற் பொருளாக விளங்குதலையும் ஒருசேரச் சாற்றும் பொருட்டுத் திருவெண்ணீற்றின் சிறப்பினை முதற்கண் உவமை வாயிலாக உரைக்கப்பட்டது. இதன் வழி அடியவர் விளங்கும் திருவேடச் சிறப்பின் பொலிவை ஓதுதலாம் என்க.

புனைந்து என - தரித்தது என. மால்வரை - இமயமலை. தன்னை - சிவபிரானைக் குறித்தது. இது சிவபெருமான் வீற்றிருப்பது கயிலை எனச் சுட்டுதலாம். அறிவு அரியான் - புலன் அறிவின் துணைகொண்டு அறியப்படாத சிவபெருமான், மெய்ஞ்ஞானத்தால் மட்டுமே உணர முடியும் என்னும் பொருளது. திருமாமலை - முத்திச் செல்வமும், பிறர்பால் யாதொன்றும் நாடாதனவான பெருவளமும் கொண்டு விளங்கி, மன்னுயிர்களைக் காக்கும் சிறப்பும் உடைய மலை என்க. *1*

12. அண்ணல் வீற்றிருக்கு கப் பெற்றது. ஆதலின்
நண்ணும் மூன்று உலகும்நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந்து எய்திய
புண்ணியம் திரண்டு உள்ளது போல்வது.

தெளிவுரை: இக்கயிலைமலை சிவபெருமான் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்றது ஆதலின் மூன்று உலகங்களும், நான்கு மறைகளும் பெருந்தவத்தைச் செய்ய வந்தது எனப் புண்ணியம் திரண்டது போன்று விளங்குவாதயிற்று.

சிறப்புரை: ஏனைய இடங்களில் புண்ணியம் என்பது ஆங்காங்கே இருத்தலும், கயிலையில் யாவும் திரண்டு ஒருங்கே விளங்குதலும் சாற்றப்பட்டது. இதற்குக் காரணம் புண்ணியனாக விளங்கும் சிவபெருமான் கயிலையில் வீற்றிருப்பதேயாகும் என்பதாம்.

அண்ணல் - பெருமையுடையவன், சிவபெருமான். மூன்று உலகம் - மேலுலகம், பூவுலகம், பாதாள உலகம். நான்மறை - இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு மறைகள். எண்ணில் - எண்ணற்ற. புண்ணியம் - நல்வினைப்பயன், தூய்மை. 2

13. நிலவும் எண்ணில் தலங்களும் நீடுஒளி
இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்
உலகம் என்னும் **ஒளிமணி வல்லிமேல்**
மலரும் வெண்மலர் போல்வதுஅம் மால்வரை.

தெளிவுரை : நில உலகில் எண்ணற்ற திருத்தலங்கள் விளங்க அவற்றின் தளிர் என எழுந்த உலகம் என்னும் ஒளிமணியின் மீது மலரும் வெண்மலர் போன்றது, அத்தகைய பெருமையுடைய கயிலைமலை.

மால் வரை - பெருமையுடைய கயிலைமலை 3

14. மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் கார்எதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம்.

தெளிவுரை: அத்தகைய கயிலைமலையானது நான்கு வேதங்களின் ஒலியும், வித்தியாதரர்கள் இசைக்கும் வீணையின் ஓசையும், மேகம் முழங்குவதைப் போன்று தேவதுந்துபிகளைக் குறைவுபடாத சிறப்போடு வானவர் ஒலிக்கவும் சூழ்ந்து விளங்கும்.

விஞ்சையர் - வித்தியாதரர் - கார் - மேகம். தான மாக்கள் - ஒரு வகை வானவர். மருங்கு - பக்கம். 4

15. பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்அரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம்.

தெளிவுரை: அக்கயிலை மலையின்கண் குளிர்ச்சி பொருந்திய வானில் விளங்கும் தேவர்கள் எண்ணற்றவராகித் தலையில் மகுடம் விளங்க வாடாதனவான பொன்மாலையைத் தரித்தவராகிப் பணிந்து நின்று தொழுபவரானார்கள். முனிவர்கள் கைகளை மாலை போன்று மேலே உயர்த்தி வணங்குபவர் ஆனார்கள்.

பனிவிசும்பு - குளிர்ச்சி பொருந்திய ஆகாயம். அனிதம் - எண்ணற்ற. அணிமுடி - தேவர்கள் தலையில் தரித்துள்ள மகுடம். அஞ்சலி மாலை - தம் கைகளைத் தலைக்கு மேல் ஏழுப்பிக் குவித்து மாலை போன்று விளங்க ஏத்துவது. 5

16. நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடு ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறள்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம்.

தெளிவுரை: அத்தகைய கயிலை மலையில் சிறு வடிவங் கொண்ட கோடிக்கணக்கான பூத கணங்கள் இறைவனைப் போற்றிப் பாடியும், ஆடியும் மகிழ்ந்து விளங்குவன. அவை தேவர்களின் பதங்களையும் நாட்ட வல்ல அருட்தன்மை கொண்டு விளங்குவதோடு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டனவாகும்.

தேவர் நிலை - தேவர் பதம். ஐம்பெரும்பூதம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன. நாட்டுவ - படைக்கும் ஆற்றல் உடையன. குறள்சிறுபூதம் - சிறிய உருவத்தில் விளங்கும் பூதகணங்கள். 6

17. **நாய கன் கழல் சேவிக்க** நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியின் மூழ்கி ஒன்று
ஆய அன்னமும் காணாது அயர்க்குமால்

தெளிவுரை: அக்கயிலை மலையில் வீற்றிருக்கும் தலைவனாகிய சிவபெருமானைக் கண்டு அப்பரமனின் திருக்கழலைச் சேவிக்க வந்த நான்முகன், அது அப்பெருமானைச் சேவித்தற்கு உரிய பொழுதாக இல்லாமையால், அவன் தரிசிக்காது அயர்ந்து திரும்பினான். அப்பொழுது தூய வெண்மை நிறத்தோடு விளங்கும் வாகனமாகிய அன்னப் பறவை அக்கயிலையில் விளங்கும் வெண்பனியோடு இயைந்து தோன்ற பிரமன் தன் வாகனத்தைக் காணாது ஆங்கு அயர்ந்தவனானான்.

சிறப்புரை: வெண்பனியில் வெண்மையான அன்னமும் இயைந்து, காட்சிக்கும் தோற்றம் பெறாது விளங்கிற்று என்பதாம். சிவபெருமானைச் சேவிப்பதற்கென்று கால வரையறை உள்ளது என்னும் கருத்து, "மேய காலம் அலாமை" என்பதாலும், நான்முகன் பரமனைத் தரிசிக்காது மீண்டனன் என்பதாலும் சாற்றப்படுதலைக் காண்க.

நாயகன் - சிவபெருமான். மேயகாலம் - பொருந்திய காலப் போது. தூயமால்வரைச் சோதி - கயிலையின் வெள்ளொளி. ஒன்று ஆய - வெண்மை நிறம் ஒன்றாக ஆகி. அன்னம் - நான் முகனின் வாகனம். அயர்க்கும் - மயங்கும். 7

எழுசீர் ஆசிரிய விருத்தம்

18. காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம் பார்த்து இருந்ததும் அறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுடர் ஆனதுஎன்று அதன் கீழ்
ஆதிஏ னமதாய் இடக்கல் உற்றான் என்று
அதனை வந்து அணைதரும் கலுழன்

தெளிவுரை: காதில் வெண்குழையணிந்த இறைவனான சிவபெருமான் திருக்கழலைத் தொழுவதற்குத் திருமால் தகுந்த காலத்தை எதிர் நோக்கி இருந்தார். அதனை அறியாத ஊர்தியான கருடன், சோதி வடிவமாக விளங்கி வெண்மை திகழும் கயிலையின் தாழ்வரையில் உள்ள குகையில் விநாயகப் பெருமானுடைய வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டு, முன்னே செந்நிறத்தில் விளங்கிய இது வெண்மை படர மேவியது எவ்வாறு என்று எண்ணிய நிலையில், தன் நாயகனாகிய திருமால் பன்றி உருவம் தாங்கிப் பூமியைக் குடைந்து செல்லலுற்றார் போலும் என்று மயங்கினான்.

சிறப்புரை: இவண், கயிலையின் வெண்மையானது விநாயகப் பெருமான் வாகனமான பெருச்சாளியையும் வெண்மை நிறமாகச் செய்தது என்பது வெண்சுடர் ஆனது என்று ஓதப் பெற்றது. தவிரவும், இப்பெருச்சாளி ஆதியில் திருமால் பூமியைக் குடைந்து சென்றபோது தாங்கிய பன்றியின் உருவம் போல் தோன்றியது என்பதாம். முன்பாடலில் சிவபெருமானைக் காணும் வாய்ப்பு அமையாது நான்முகன் திரும்பினான் என்பதும், இப்பாடலில் சிவபெருமானைக் காணும் நோக்கத்தோடு திருமால் தகுந்த காலத்தை நோக்கிக் காத்திருந்தார் என்பதும் சாற்றப்படுதல் காண்க.

திருமால் பன்றியாக வடிவம் தாங்கிப் பூமியைக் குடைந்து சென்ற வரலாறு :

திருமாலும், நான்முகனும் ஒருவர்க்கொருவர் தாமே பெரியவர் என்று முனைந்து நிற்கப் பின்னர் சிவபிரானுடைய திருமுடியைக் காண்பதாக நான்முகனும், திருவடியைக் காண்பதாகத் திருமாலும் முனைந்தனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாகி அடிமுடி காணாதவாறு மேவினார். திருமால் பன்றி வடிவம் தாங்கிப் பூமியைக் குடைந்து சென்றும் காணாதவராகி அயர்ந்து நின்றார். நான்முகன் அன்னப் பறவை வடிவு கொண்டு மேலே உயர்ந்து பறந்து சென்று சிவபெருமானின் திருமுடியைக் காணச் சென்றார். நெடுந் தொலைவு பறந்து மேலே சென்றும், சிவபெருமானின் திருமுடியைக் காண்பதற்கு அரிதாகிய நிலையில், பரமனின் முடியிலிருந்து கீழ் நோக்கி விரைந்து விழுகின்ற தாழம்பூ நோக்கித் தாம் திருமுடியைக் கண்டதாக சாட்சி கூறுமாறு கேட்டுக் கொண்டார். பொய்ச்சாட்சி கூறிய தாழம்பூ இறைவனுக்கு உகவாமையாயிற்று. இதன் வழி பொய்ம்மை நயந்த நான்முகனுக்குப் பூவுலகில் தனிக்கோயில் இன்மை யாயிற்று. இத்தன்மையான திருமால் பன்றியான வரலாறு இவண், "ஆதி ஏனமதாய் இடக்கல் உற்றான்" என்று சுட்டப்பட்டது.

வெண்குழையோன் - குழையைக் காதில் அணிந்த சிவபெருமான். நெடியோன் - திருமால். தாழ்வரை - மலையடிவாரம் முழை - குகை. துதிக்கையோன் - யானை முகங் கொண்டு விளங்கும் விநாயகப் பெருமான். ஊர்தி - பெருச்சாளி. பண்டைச் செஞ்சுடர் - முன்னாளில் முண்டகன், முகுந்தன் ஆகியோர் சினங் கொண்டு போர் புரியும் போது அவர்களை ஆட்கொள்ளும் வகையில் சிவபெருமான் கொண்ட செஞ்சுடர் மலை உருவாகிய அக்கினியைக் குறித்தது. வெண்சுடர் - கயிலாயம். ஏனம் - பன்றி. இடக்கல் - பூமியைக் குடைந்து தோண்டுதல். அணைதரும் - நெருங்கும். கலுழன் - கருடன், திருமாலின் வாகனம்.

8

19. அரம்பையர் ஆடல் முழவுடன் மருங்கில்
அருவிகள் எதிர்எதிர் முழங்க
வரம்பெறும் காதல் மனத்துடன் தெய்வ
மதுமலர் இருகையும் ஏந்தி
நிரந்தரம் மிடைந்த விமான சோபான
நீடுயர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாம் கடவுளர் போற்றப்
பொலிவது அத் **திருமலைப் புறம்பு.**

தெளிவுரை: தெய்வ மகளிர் நடனம் புரியும் போது தாளத்திற்கு ஏற்றவாறு ஒலிக்கப்படும் மத்தளம் போன்று, மலையிலிருந்து வீழும் அருவிகளின் ஓசை முழங்கும். சிவபெருமானிடமிருந்து வரங்கள் பெறவேண்டும் என்கிற விருப்பத்துடன் தேன் நிறைந்த கற்பக மலர்களை இரண்டு கைகளிலும் ஏந்தியவர்களாய், இடையீடில்லாது நெருங்கி விளங்கும் விமானங்களின் கீழுள்ள படிகள் வழியாகத் தேவேந்திரன் முதலான தேவர்கள் புகழ்ந்து ஏத்துவர். இத்தன்மையில் அத்திருமலையாகிய கயிலை வெளி இனிது பொலியும்.

அரம்பையர் - தெய்வ மகளிர். ஆடல் - நடனம். முழவு - மத்தளம். காதல் - விருப்பம். தெய்வ மது மலர் - தேன் நிறைந்த கற்பக மலர். விமான சோபானம் - நெருங்கிய மேல்தள விமானம். உயர்வழி - படிகள். புரந்தரன் - தேவேந்திரன். கடவுளர் - தேவர்கள். திருமலை - கயிலை. புறம்பு - வெளி. 9

20. வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதல்பெருந் தடையாம்
கதிர்மணிக் கோபுரத்து உள்ளான்
பூதவே தாளம் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவில் நின் றாடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில்
நாயகன் நந்திஎம் பெருமான்

தெளிவுரை: வேதங்களை ஓதும் நான்முகன், திருமால், தேவேந்திரன் முதலாக உள்ள எண்ணற்ற தேவர்கள் சிவபெருமானைச் சேவிக்கும் பேரன்பு பூண்டவராய் ஒன்று சேர்ந்து வரலாயினர். முதற்கண் விளங்கும் ஒளி திகழும் மணிக்கோபுரத்தில் விளங்கும் பெரிய வாயிலின் கண் உள்ளவர், பூதகணங்கள், வேதாளம், பெருங்கணநாதர் போற்ற அம்பலத்தில் நின்று நடனம் புரிகின்ற தலைவனும், ஆதிமூலப் பொருளானவனும் ஆகிய நடராசப் பெருமான் திருக்கோயிலின் நாயகனாக விளங்கும் நந்தியம் பெருமான் ஆவர்.

மால் - திருமால். புரந்தரன் - தேவேந்திரன். காதல் - விருப்பம், அன்பு, பக்தி மிடைந்த - அடைந்து நெருங்கிய. தடை - வாயில். பொது - அம்பலம். கோயில் - தில்லை. நாயகன் - முன்னிருந்து அதிகாரம் செய்யும் தலைவன். 10

21. நெற்றியின் கண்ணார் நால்பெருந் தோளர்
நீறணி மேனியர் அநேகர்
பெற்றம்மேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்அருள் பெறுவார்

மற்றவர்க்கு எல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பது அக் கயிலைமால் வரைதான்.

தெளிவுரை: நெற்றியில் கண்ணுடையவரும், நான்கு பெருந்தோள் உடையவரும், திருநீறு அணிந்த திருமேனியுடைய வரும், பலவாக விளங்குபவரும், இடப வாகனத்தில் மேலிருந்து காட்சி தரும் தம்பிரானின் அடியவராகியும், சிவபெருமானின் அருளையும் பெற்றவர் நந்தியம் பெருமான். இவர் ஏனையோர்க்கு எல்லாம் தலைமையாகும் பணியைப் பெற்றவராகி, மலர் போன்ற கையில் உடைவாளும், பிரம்பும் ஏந்திக் கயிலை மலையைக் காப்பவர். இவர் அத்தகைய பணியைப் பெற்றது அடர்ந்த சடை முடியுடைய சிவபெருமான் திருவருளாலே ஆகும்.

சிறப்புரை: பலவாக விளங்கும் நிலையைஅநேகர் எனக் குறித்தமை காண்க. இத்தன்மையில் மாணிக்க வாசக சுவாமிகள். "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!" எனச் சாற்றியவாறும் நோக்குக.

அநேகர் - பலவாக விளங்குபவர். பெற்றம் - இடபம். தம்பிரான் - சிவபெருமான். சுரிகை - உடைவாள். காப்பது - கயிலையைக் காவல் புரியும் பணி. மால் வரை - பெருமையுடைய மலை. *11*

22. கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிர்இளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்கும் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் **திருமனத்து ஓங்கும்**
திருக்கயி லாயநீள் சிலம்பு.

தெளிவுரை: கையில் மானும், மழுவும் ஏந்திக் கங்கை தரித்த சடைமுடியில் வெண்ணொளி வீசும் பிறைச் சந்திரனையும், நறுமணம் கமழும் கொன்றையாகிய தலைமாலையையும் கொண்டு, எம் தலைவராகிய சிவபெருமான் வீற்றிருப்பாதலும், அதன் வழித் திகழும் அளப்பதற்கு அரிய பெருமையினாலும், திருமேனியில் தழைத்தொளிரும் தூய்மையினாலும், வெற்றி மேவும் வெண்கொற்றக் குடையுடைய அநபாய சோழன் செங்கோல் ஆட்சி விளங்குவதாகும்.

அத்தகைய சோழ மன்னனின் அச்சமற்ற திருமனத்தில் திருக்கயிலை என்கிற பெரியதாக உயர்ந்த மலை விளங்கும்.

சிறப்புரை: இவண் சிவபெருமானுடைய திருவடிவப் பொலிவைக் கூறி, அத்தகைய பெருமையாலும் திருவருள் வலத்தாலும் அநபாய சோழனின் செங்கோல் ஆட்சி முறை விளங்கிப் பொலிந்தது எனச் சாற்றப்பட்டது. சோழ மன்னன் ஒழுகிய சைவ நெறி நாடு முழுமையும் விளங்கிற்று என்க.

மற்றும் அநபாய சோழனின் திருமனத்தில் கயிலாய மலை இனிது ஓங்கிற்று என்னும் ஈற்றடியால் அப்பெருமன்னன் சிறந்த தொண்டராக விளங்கியமையும் அத்தன்மையில், "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!" என்னுமாறு மிளிர்ந்தமையும் காண்க.

நறுங்கண்ணி நறுமணம் கமழும் கொன்றை மாலை. கண்ணி - தலைமாலை. ஐயர் - தலைவனாக விளங்கும் சிவபெருமான். மெய்யொளி - பெருஞ்சோதி. இதனை அலகில் சோதியன் என்று பாடல் 1 - இல் சாற்றியவாறும் காண்க. தழைக்கும் தூய்மை - மலம் முற்றுமாய் நீங்கிய தன்மை, திருநீற்றின் பொலிவையும் கொள்க. இத்திருவெண்ணீறு அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தழைக்கச் செய்வது எனவும் ஆம். வென்றி வெற்றிமேவும். செய்யகோல் - செங்கோலட்சி முறை. அநபாயன் - சோழ மன்னன். அபயன் - அச்சம் அற்றவன். இது சிவஞானத்தால் உண்டாயிற்று என்க. சிலம்பு - மலை. 12

உபமன்யு முனிவரை உரைத்தல்
கலிவிருத்தம்

23. அன்ன தன்திருத் தாழ்வரை யின்இடத்து
இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்
தன்னை யேஉணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான்
உன்ன அருஞ்சீர் உபமன் னியமுனி.

தெளிவுரை: பெருமை விளங்கும் சிறப்புடைய கயிலாய மலையின் அடிவாரத்தில், இன்ன தன்மையன் என்று அறிவதற்கு அரியவராகிய சிவபெருமானை யல்லாது வேறாகிய எத்தகைய உணர்வும் இன்றித் தழைத்து மேவும் எண்ணுதற்கு அரிய உபமன்னிய முனிவர் விளங்குபவரானார்.

சிறப்புரை: சிவபெருமானுடைய தன்மையானது பிறரால் அறியப்படாதது என்கிற மெய்ம்மை இவண், "இன்ன தன்மையன் என்றறியாச்

சிவன்" எனச் சுட்டப்படுவதாயிற்று இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப் பானைப்
பின்னைஎன் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மா னை எளிவந்த பிரானை
அன்னம் வைகும்வயற் பழனத்துஅணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே"

திருவாரூர்த் திருப்பதிகம்.

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக.

மற்றும் சிவபெருமான் இன்னதன்மையன் என்று அறிவதற்கு அரியவராயினும், அப்பொருமானைத் தவிர வேறு அநித்தியமானவற்றை நினையாது தழைத்து மேவும் பெருஞ் சிறப்பானது, இவண் "உன்ன அருஞ்சீர்" எனப்பட்டது. இத்தகைய சிறப்பின் மிக்கவர் உபமன்னிய முனிவர் என்க. இத்தன்மையிலேயே உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாகிய ஈசன் மன்னுயிர்பால் கருணை விளங்கி அருள் பாலிப்பவன் என்று சாற்றப்படும் பாடல் 1 - இல் சுட்டிய கருத்தினையும் கொள்க.

தாழ்வரை - கயிலையின் அடிவாரம் ஆர்வம் - பக்தி, சிவஞானம். 13

24. யாத வன்துவ ரைக்குஇறை ஆகிய
மாத வன்முடி மேல்அடி வைத்தவன்
பூத நாதன் பொருஅரும் **தொண்டினுக்கு**
ஆதி அந்தம் இலாமை அடைந்தவன்

தெளிவுரை: இத்தன்மையுடைய உபமன்னிய முனிவர் யதுகுலத்தில் தோன்றித் துவாரகைப் பதியின் மன்னனாகும் கண்ணபிரானாக விளங்கிய திருமாலின் முடி மீது, தன் திருவடியைப் பதித்துத் தீக்கை செய்தவர். எல்லா உயிர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் முறைமையில் ஆதியும், முடிவும் இல்லாமை கண்டு அதனையே ஆற்றும் பேறு பெற்றவர் இம்முனிவர் ஆவர்.

சிறப்புரை: சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் பணி எக்காலத்திலும் முற்றுப் பெறுவதில்லை என்னும் கருத்தானது இவண், "தொண்டினுக்கு ஆதி அந்தம் இலாமை" என்னுமாறு உரைக்கப்பட்டது. இத்தன்மையில் சிவபெருமான் உமா தேவியை நோக்கி,

"நின் பூசனை என்றும் முடிவது இல்லை நம்பால்"

- திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம், பாடல் - 68

என்று அருளியவாறும் காண்க. இத்தன்மையான திருத்தொண்டின் பேற்றை அடைந்தவர் உபமன்னிய முனிவர் என்க.

யாதவன் - கண்ணபிரான். துவரை - துவாரகாபுரி. இறை - அரசன். மாதவன் - திருமால். அடி வைத்தவன் - திருவடித்தீக்கை செய்தவன். பூதநாதன் - உயிர்களின் தலைவனாகிய சிவபெருமான் பொரு - ஒப்புமை. 14

25. **அத்தர் தந்தஅருள் பாற்கடல் உண்டு**
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்தர் ஆய முனிவர்பல் லாயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி

தெளிவுரை: சிவபெருமான் தந்தருளிய பாற்கடலை அருந்திப் பசி தீரப் பெற்றவராய்ச் சித்தம் தெளியப் பெற்றுச் சிவானந்தப் பேற்றுடன் திளைத்து வளர்ந்தவர், உபமன்னிய முனிவர். அவர் பால் பக்தி கொண்ட யோகியர்களாகிய முனிவர்கள் பல்லாயிரவர் சூழப் பெருந்தகையாகிய உபமன்னிய முனிவர் விளங்குபவரானார்.

சிறப்புரை: சிவபெருமான் உயிர்களுக்கெல்லாம் தந்தையாக விளங்கும் பெற்றியைச் சாற்றும் வகையில், "அத்தர்" எனப்பட்டது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அத்தாஉனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே!" எனவும், மணிவாசகப் பெருமான், "அத்தா போற்றி! அரனே போற்றி!" முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிர் எழுந்தென் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடை திறவாய்" எனவும் அருளிச் செய்தமையும் காண்க.

உபமன்னிய முனிவர்க்காக இறைவன் பாற்கடலை உண்டாக்கித் தந்த சிறப்பினைப்,

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

- 9 ஆம் திருமுறை, சேந்தனார்

திருப்பல்லாண்டு. என்று அருளிச் செய்தவாறும் காண்க.

அத்தர் - சிவபெருமான், தந்தை என்னும் பொருளது. பாற்கடல் - ஏழு கடல்களுள் ஒன்று. ஏழு கடல்களாவன: 1. உவர் நீர்க் கடல்; 2. நன்னீர்க் கடல்; 3. பாற்கடல்; 4. தயிர்க்கடல்; 5. நெய்க்கடல்; 6. கருப்பஞ்சாற்றுக் கடல்; 7. தேன் கடல்;. 15

ஆங்குப் போராளி தோன்றுதல்

26. "அங்கண் **ஓர்ஒளி ஆயிர ஞாயிறு**
பொங்ஞ பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தார்எலாம்
இங்குஇது என்கொல் அதிசயம்" என்றலும்.

தெளிவுரை: அவ்விடத்தில் ஓர் ஒளி தோன்றியது அ.்.து ஓராயிரம் சூரியன் திரண்டது போன்று பேரொளியாக விளங்கிற்று. அதனைக் கண்டு ஆங்குச் சூழ்ந்திருந்த பெருமையுடைய தவமுனிவர்கள் யாவரும் இது என்ன அதிசயம் என்று வியந்து வினா வினார்கள்.

ஞாயிறு - சூரியன். துங்கமாதவர் - பெருமையுடைய தவ முனிவர்கள். 16

சிவபெருமான் அருளால் வன்தொண்டர் வருகிறார் என்று உபமன்னிய முனிவர் கை கூப்பித் தொழுதல்

27. அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தி யாஉணர்ந்து அம்முனி "தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்
எந்தை யார்அரு ளால் அணை வான்" என.

தெளிவுரை: அப்போது, பிறைச் சந்திரனைச் சடைமுடியில் சூடிய சிவபெருமான் திருவடி மலரைச் சிந்தையில் உணர்ந்து உபமன்னிய முனிவர், "தென் திசையில் திருஅவதாரம் செய்த திருநாவலூ ரின் தலைவனாகிய புகழ் விளங்கும் வன்தொண்டர் எனப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், எம்பெருமானின் திருவருளால் கயிலைக்கு வருகின்றார்." என்று உரைத்தார்.

அந்திவான்மதி - சந்திரன் முழுவதுமாகத் தேய்ந்து இறுதி நிலையில் விளங்கும் பிறை வடிவத்தில் இருத்தலைச் சுட்டியது.

இதன் வரலாறு : தக்கனின் அசுவினி, பரணி முதலாக இரேவதி வரையில் உள்ள 27 புதல்வியரைத் திருமணம் கொண்ட சந்திரன்,

அவர்களுள் உரோகிணி என்பவளிடம் மட்டும் தனித்தன்மையில் அன்பு கொண்டிருந்தான். இதனை அறிந்த ஏனைய மனைவியர் தன் தந்தையிடம் முறையிட்டார்கள். சந்திரனின் அழகே இவ்வாறு நடப்பதற்குக் காரணமாயிற்று என்று எண்ணிய தக்கன், அவன் ஒளி மங்குமாறு சாபம் கொடுத்தான். சந்திரன் பெற்ற சாபத்தை எவராலும் மாற்ற முடியாத நிலையில், அவன் சிவபெருமானை அடைக்கலம் புகுந்தான். வெறும் கீற்றைப் போன்று அந்திமநிலையில் இருந்த சந்திரன், நாள்தோறும் பின்னர் வளரத் தொடங்கினான். இவ்வரலாறு இவண் அந்திவான்மதி எனச் சுட்டப் பெற்றது.

அண்ணல் - சிவபெருமான். முனி - உபமன்னிய முனிவர். நாவலூ ர்கோன் - திருநாவலூரின் கண் திருஅவதாரம் செய்த நம்பி ஆரூரர், சுந்தரமூர்த்தி சுவாமிகள். எந்தை - சிவபெருமான் அணைவான் - கயிலையை அடைதல். 17

28. கைகள் கூப்பித் தொழுது எழுந்து அத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர்.

தெளிவுரை: கைகளைக் கூப்பித் தொழுது எழுந்து நின்று தென்திசை நோக்கி வணங்கியவராய் ஆனந்தத்தால் பெருகும் கண்ணீர், தேகம் முழுவதையும் நனைக்கச் செம்மை விளங்கும் நீண்ட சடைமுடியுடைய உபமன்னிய முனிவர் மேவினார். இவர்தம் செயலைக் கண்ட அருகில் இருந்த முனிவர்கள் அனைவரும் தம் மனத்தில் எழுந்த ஐயம் நீங்கும் பொருட்டுச் சிலவற்றை வினவலாயினர்.

அத்திசை - தென்திசை. ஆனந்தவாரி - மகிழ்ச்சிக் கடல், ஆனந்த வெள்ளம் என்க. செய்ய நீள்சடை - செஞ்சடை, செம்மை விளங்கும் சடையும் ஆம். அந்தணர் - முனிவர். 18

உபமன்னிய முனிவர் சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் புகழ்ந்துரைத்தல்

29. "சம்பு வின்அடித் தாமரைப் போதுஅலால்
எம்பி ரான்இறைஞ் சாய்இஃது என்" எனத்
தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇ யவன்
"நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்."

தெளிவுரை: ஆங்கிருந்த முனிவர்கள் உபமன்னிய முனிவரை நோக்கி, "எம் தலைவனே! சிவபெருமான் திருவடித் தாமரை யல்லாது,

வேறு யாரையும் வணங்கித் தொழாதவராகிய நிலையில், இப்போது இப்பேரொளியைக் கண்டு தொழுகின்ற காரணம் யாது?" எனக் கேட்க, உபமன்னிய முனிவர், "சிவபெருமானைத் தன் உள்ளத்தில் தழுவி விளங்கும் நம்பி ஆரூரன் நாம் தொழத்தக்க பெருமையுடையவன் எனப் புகன்றார்.

சிறப்புரை: சிவபெருமானைத் தம் உள்ளத்தில் எஞ்ஞான்றும் கொண்டு ஆராதித்து இருத்தலின் சிறப்பானது இவண், "தம்பிரானைத் தன் உள்ளம் தழீஇயவன்" எனச் சுட்டப் பெறுவதாயிற்று. இத்தன்மையில் சுந்தர மூர்த்தி சுவாமிகள். "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை," "வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறு மாற்றம்" எனவும், மாணிக்க வாசகர், "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!" "யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே!" எனவும் சாற்றியவாறு காண்க.

சம்பு - சுயம் சோதியாக விளங்கும் சிவபெருமான. எம்பிரான் - உபமன்னிய முனிவர். இ.ந்து - முனிவர் சோதி வடிவாக வரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளைத் தொழுது வணங்கும் செயல். தம்பிரான் - சிவபெருமான். தழீஇயவன் - தழுவியவன், நெஞ்சுள் வைத்துப் போற்றி வணங்கி மகிழ்பவன். 19

சுந்தரர் வரலாற்றை உரைக்குமாறு முனிவர்கள் வினவுதல்

30. என்று கூற இறைஞ்சி இயம்புவார்
"வென்ற **பேரொளி யார்செய் விழுத்தவம்**
நன்று கேட்க விரும்பும் நசையினோம்
இன்று எமக்குரை செய்தருள்" என்றலும்.

தெளிவுரை: இவ்வாறு உபமன்னிய முனியர் கூற, உடன் இருந்த முனிவர்கள் மிகவும் தொழுது, "ஐம்புலன்களை வெற்றி கொண்டு பேரொளியுடைவராக வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்த சிறப்புடைய தவத்தை நாங்கள் இனிது கேட்க விரும்புகின்றோம். அதனை எமக்கு உரைத்தருள்க!" என்றார்கள்.

வென்ற - ஐம்புலன்களை வெற்றி கொண்ட. பேரொளியார் - பேரொளியாக விளங்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள். நசை - விருப்பம். 20

உபமன்னிய முனிவர் சுந்தரர் வரலாற்றைக் கூறுதல்

31. உள்ள வண்ணம் முனிவன் உரை செய்வான்
"வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருள் ஆகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்து அணை வான்உளன்"

தெளிவுரை: முனிவர்கள் இவ்வாறு வினவ, உபமன்னிய முனிவர் உரை செய்யலானார். "கங்கையைச் சடைமுடியில் தரித்த மெய்ப்பொருளான சிவபெருமானுக்குத் தேன் நிறைந்த மலர் மாலை புனைந்து சாத்துதலும், அள்ளி எடுக்கும் திரு நீற்றைத் தாங்கி வைத்திருத்தலும் ஆகிய பணியில் மேவி விளங்குபவன் ஒருவன் உளன்.

வெள்ள நீர் - கங்கை. வள்ளல் - சிவபெருமான். மது - தேன். அணைவான் - பணி செய்து கொண்டு அண்மையில் விளங்கு பவன், அணுக்கத் தொண்டு புரிபவன். 21

ஆலால சுந்தரன் பூக் கொய்யச் செல்லுதல்

32. **"அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்**
முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்கு
இன்ன ஆம்எனும் நாள்மலர் கொய்திடத்
துன்னி னான்நந் தன வனச் சூழலில்"

தெளிவுரை: அவ்வாறு மாலை புனைதலும் திருநீற்றுப் பையைத் தாங்கியிருத்தலுமாகிய அணுக்கத் தொண்டு புரிபவனின் பெயர் ஆலால சுந்தரன் என்பதாம். ஆங்கு, முன்பு ஒரு நாள் சிவபெருமானுக்கு இத்தன்மையான மலர்கள் உரித்தாம் என்று தேர்ந்து கொய்வதற்கென நந்தவனத்தை அடைந்தான்.

சிறப்புரை: இவண் சிவபெருமானுக்குரிய பூக்களை நன்கு தேர்ந்து கொய்தல் வேண்டும் என்று உணர்த்தும் வகையில், "இன்னஆம் எனும் நாள்மலர் கொய்திட" எனச் சாற்றப் பட்டது. இத்தன்மையில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்,

"பூத்தேர்ந்து ஆயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங் கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாள்அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே."

- முதல் திருமுறை, திருவோத்தூர் திருப்பதிகம். என்று அருளிச் செய்தவாறும் காண்க.

ஆங்கு - கயிலை மலை. முதல்வன் - சிவபெருமான். துன்னினாள் - அடைந்தான்.

22

உமாதேவியின் சேடியர் பூக்கொய்ய நந்தவனம் அடைதல்

33. "அங்கு முன்எமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற்கு ஆம்மலர் கொய்திடத்
திங்கள் வாள்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார்."

தெளிவுரை: முன்னமே எம்மை ஆட்கொண்ட நாயகி உம தேவியாவர். அப்பிராட்டியின் தேன் மணம் கமழும் கூந்தலுக்கு உரிய மலர்களைத் தேர்ந்து கொய்யும் பொருட்டுச் சந்திரனைப் போன்ற ஒளி திகழும் அழகுடைய பணிப்பெண்கள் அந்த நந்த வனத்தின் கண் எய்தினார்கள்.

சிறப்புரை: இவண் உமாதேவியாருடைய கூந்தல் தேன் மணம் கமழ்ந்து விளங்கும் சிறப்புடையது என்னுமாறு, "எமை ஆளுடை நாயகி கொங்கு சேர் குழற்கு" எனச் சாற்றப்பட்டது காண்க இத்தன்மையில் சிவபெருமான் பாண்டிய மன்னனின் மனத்தில் எழுந்த ஐயத்தை நீக்கும், உமாதேவியின் கூந்தல் இயற்கையான தேன் மணம் கொண்டு விளங்குவதாகும் என்னும் கருத்தில் தருமியின் வாயிலாகக், " கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி காமம் செப்பாது கண்டது மொழிமோ!" என்னும் பாடல் வாயிலாகத் தெளியப்படுத்து தலையும் காண்க.

அங்கு - நந்தவனம். ஆளுடை நாயகி - உமையவள். கொங்கு - தேன். குழல் - கூந்தல். ஆம்மலர் - ஏற்றதாக விளங்கும் நன்மலர். திங்கள் - சந்திரன். சேடியர் - பணிசெய்பவர். கவின் - அழகு. பூவையார் - மகளிர்.

23

34. **"அந்தம் இல்சீர் அநிந்திதை ஆய்குழல்**
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் **ஈசர் அருள்**என."

தெளிவுரை: அழிதல் இல்லாத பேரழகுடைய அநிந்திதையும், நறுமணம் கமழும் மாலையணிந்த கமலினியும் கொத்துக்களாக விளங்கும் பூக்களைக் கொய்யும் பொருட்டு அந்த நந்தவனத்தின் கண் வந்து சேர்ந்தார்கள். இச்செயல் வானவர்களின் தலைவனாகிய ஈசன் திருவருள் போன்று ஆயிற்று.

சிறப்புரை: ஆலாலசுந்தரர் நந்தவனத்தை அடைந்தபோது, அநிந்திதையும், கமலினியும் ஆங்கு அடைந்தது ஈசன் திருவருள் வண்ணமே என்பது இவண் கருத்து. இதனைப் பாடல் 23 - இல் "இன்ன தன்மையன் என்றறியாச்சிவன்" என்ற சேக்கிழார் சுவாமிகள் திருவாக்காலும் காண்க.

அந்தம் இல் சீர் - அழிவில்லாத பேரழகு. ஆய் குழல் கந்த மாலை - ஒப்பனை செய்யப்பட்டு மணம் கமழும் மாலை போன்று விளங்கும் கூந்தல். கொந்து - பூங்கொத்து. கொய்வுழி - மலர் கொய்யும் பொருட்டு. 24

ஆலாலசுந்தரர் மாதர் மேல் மனத்தைப் போக்குதல்

35. **"மா தவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்**
தீது இலாத்திருத் தொண்டர் தொகைதரப்
போது வான்அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்."

தெளிவுரை : பெருந்தவப்பேறுடைய தென்திசை இனிது சைவ மணம் கமழ வாழவும், அதற்கு ஏற்ப மன்னுயிர்களின் வினையாகிய தீமை இல்லாதவாறு செய்யும் அருட்சிறப்பு வாய்ந்த திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம் அருளிச் செய்யவும், பூவுலகத்தை நோக்கிச் செல்லும் முகாந்திரமாக ஆலாலசுந்தரர் அந்த நந்தவனத்தில் உள்ள மாதர்கள் மீது தம் மனத்தைச் செலுத்தினார். ஆலாலசுந்தரரின் பார்வை தம் மீது சார்வதைக் கண்டு அநிந்திதை, கமலினி ஆகிய மாதரும் மனம் மகிழ்ந்து இசைவு பெருகினவராய் விளங்கினார்கள்.

சிறப்புரை: இவண், ஈசன் திருவருளே இவ்வாறு நிகழ்ச்செய்தது என்னுமாறு முன் பாடலின் "ஈசர் அருள் என" என்று ஈற்றடியில் சாற்றியமை காண்க. தென்திசையின் பெருமை தோன்ற, மாதவம் செய்த தென்திசை எனப்பட்டது. இத்தன்மையில், "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி," "தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி, இன்றெனக்கு ஆரமுதம் ஆனாய் போற்றி," என்று அருளிச் செய்த மாணிக்கவாசகரின் அருள் வாக்கினையும் காண்க.

வாழ்தல் - சைவ நெறியில் விளங்குதல். தீது இலர் - வினையாகிய தீது இல்லாமையாக்கும். திருத் தொண்டத் தொகை - சிவனடியார் பெருமக்கள் இறைவனால் காட்டப் பெறுதலும், இந்தகைய சிறப்பு வாய்ந்த அடியார்களைப் போற்றி வணங்குவதற்கான திருப்பதிகத்திற்கு

இறைவனால் அடியெடுத்துத் தரப் பெறுதலும் இவண் நிகழ்ந்த அருட்பாங்காயிற்று. மற்றும் திருக்கடைக்காப்பில் இத்திருப்பதிகத்தைக் கேட்டு மகிழ்பவர்கள் சிவபெருமானுடைய அன்பர்களாகி நலம் பெறுவர் என்பதும் உரைத்தமை காண்க. எனவே இத்திருப்பதிகம் தீமைகளைப் போக்கும் பதிகமாயிற்று என்பதாம். போதுவான் - திருப்பதிகம் அருளிச் செய்யும் ஆலாலசுந்தரர். காதல் மாதர் - அநிந்திதை, கமலினி. காட்சியில் கண்ணினார் - இசைந்தார் என்க. 25

36. "முன்னம் ஆங்குஅவன் மொய்ம்முகை நாள்மலர்
என்னை ஆட்கொண்ட ஈசனுக்கு ஏய்வன
பன்மலர் கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவரும் கொண்டு அகன்றபின்."

தெளிவுரை: அந்த நந்தவனத்தில் விளங்கிய அரும்புகளானவற்றுள் என்னை ஆளுடை ஈசனுக்குப் பொருந்திய நாள் மலர்களைப் பறித்துக் கொண்டு ஆலாலசுந்தரர் சென்றார். அன்னம் போன்ற நடையுடைய மாதரும் பொருந்திய மலர்களைப் பறித்துச் செல்லானார்கள்.

முகை - அரும்பு. என்னை - உபமன்னிய முனிவரைக் குறித்தது. ஏய்வன - ஏற்றுவாறு. அன்னம் அன்னவர் - அன்னம் போன்ற நடையுடைய அநிந்திதை, கமலினி ஆகியோர். 26

சிவபெருமான் சுந்தரரை நோக்கிப் பூவுலகில் சென்று இன்பம் துய்த்துப் பின்னர் வந்து சேருமாறு பணித்தல்

37. "ஆதிமூர்த்தி அவன்திறம் நோக்கியே
மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்துஅணை வாய்என,"

தெளிவுரை: அப்போது சிவபெருமான் ஆலாலசுந்தரர் செய்த செயலை நோக்கி, "நீ மாதர்மேல் மனத்தைச் செலுத்தினை. எனவே பூவுலகில் தென்திசையின் கண் உள்ள பதியில் அவதாரம் செய்து, நீ விரும்பிய அம்மாதர்களுடன் காதல் இன்பத்தில் கலந்து பின்னர் வந்து சேர்வாய்" எனப் பணித்தார்.

மாதர் மேல் மனம் வைத்த நிலையில் புலன் இன்பம் நுகர்தற்கு உரிய இடம் பூவுலகம் என்னும் வகையில் இறைவன் அருளினார் என்க.

ஆதி மூர்த்தி - சிவபெருமான். திறம் - மாதர் மேல் மனம் செலுத்தியது. அணைவாய் - மீண்டும் வந்து சேர்வாய். 27

மயங்கும் வழி தடுத்தாளுமாறு ஆலாலசுந்தரர் இறைவனை வேண்டுதல்

38. "கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத்து ஆண்டுஅருள் செய்என."

தெளிவுரை: பூவுலகத்தில் பிறவி எடுக்க வேண்டும் என்று இறைவன் ஆணையிட்டதைக் கேட்ட ஆலாலசுந்தரர் பெரிதும் கலங்கிக் கைகளை மேலே, கூப்பி, "ஐயனே! செந்தாமரை போன்ற அழகிய திருப்பாதங்களை நீங்கிச் செல்லும் சிறுமையுடையவனானேன். பூவுலக வாழ்க்கையில் மானுட வடிவம் கொண்டவனாகி மயங்கும்போது அடியேனைத் தடுத்த அருள் புரிக." என்றார்.

சிறப்புரை: ஆலாலசுந்தரர் அணுக்கத்தொண்டு செய்து வந்த நிலையானது பாடல் 31 - இல் உரைத்தமை காண்க. இப்போது பூவுலகில் மானுடனாகப் பிறவி கொள்ள வேண்டியதால், "சேவடி நீங்கும் சிறுமையேன்" எனச் சாற்றப்பட்டது. தம்பிரானைத் தன் உள்ளம் தழுவிய செம்மையானது (பாடல் 29.) அக நிலையைச் சுட்டுதலாயிற்று. இவண் "சேவடி நீங்கும் சிறுமையேன்" என்பது புறநிலையைச் சுட்டுவதாயிற்று. இ.ஃது அணுக்கத் தொண்டிலிருந்து நீங்கியதேயன்றி அகத்தில் தழுவிய நிலையிலிருந்து வேறாகாமை காண்க.

செய்ய - செம்மை விளங்கும் அழகிய. ஐயன் - சிவபெருமான். தடுத்து ஆண்டு - சஞ்சிதவினை இன்மையும், பிராரத்த வினை நுகரும் ஞான்று மறு பிறவிக்கான ஆகாமியம் சேரப் பெறாத நிலையை வேண்டும் வகையில், இவ்வாறு மயங்கும் வழி தடுத்தாள வேண்டும் என்று கோரப்பட்டது. அழுக்குப் பாத்திரத்தில் விளங்கும் தூய பால் திரிதல் போன்று, புலன்கள் சார்ந்த அழுக்கு மெய்யால், ஆன்மாவானது தீவினையின் பால் சாராது விளங்குவது அரிது என்பது புலப்படுத்தலாயிற்று - இதிலிருந்து காப்பது இறைவன் திருவருளே என்க. 28

39. "அங்கணாளான் அதற்குஅருள் செய்தபின்
நங்கை மாருடன் நம்பிமற்று அத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாரும்" என்று
அங்கு அவன்செயல் எல்லாம் அறைந்தனன்

தெளிவுரை: அருள் நல்கும் விழியுடைய சிவபிரான், ஆலால சுந்தரர் வேண்டியவாறு அருள் செய்த பின்பு, அவ்வணுக்கத் தொண்டர் நங்கையாகிய அநிந்திதை, கமலினி ஆகியோருடன் பூவுலகத்தில்

விளங்கும் தென்திசைக் கண் மேவிய தென்னாட்டில் திரு அவதாரம் செய்து விளங்கினார். இவ்வாறு ஆலாலசுந்தரரின் வரலாற்றை உபமன்னிய முனிவர் கூறியருளினார்.

அங்கணாளன் - சிவபெருமான், அருள் விழியுடையவர். நம்பி - ஆலாலசுந்தரர். அவன் செயல் - நம்பியாரூரரின் வரலாறு. அறைந்தனன் - உபமன்னிய முனிவர் கூறினார். 29

தென்திசையின் சிறப்பை உரைக்குமாறு முனிவர்கள் வேண்ட உபமன்னிய முனிவர் கூறுதல்

40. அந்த ணாளரும் ஆங்குஅது கேட்டவர்
"பந்த மானுடப் பால்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும் மேற்பட
வந்த புண்ணியம் யாதென" மாதவன்:

தெளிவுரை: உபமன்னிய முனிவர் இவ்வாறு சொல்லக் கேட்ட முனிவர்கள், "பந்தம் மிகுந்த மானுடப்பிறவி விளங்கும் எட்டுத் திசைகளில் தென்திசை மேன்மையுடையதாகச் சாற்றப் பெறுமாறு அமையப் பெற்ற புண்ணியம் யாது." என வினவினர்: அதற்கு ஏற்ப உபமன்னிய முனிவர் மேலும் உரைக்கலானார்.

அந்தணாளர் - முனிவர். மாதவன் - உபமன்னிய முனிவர். 30

பெரும்பற்றப் புலியூரின் சிறப்புரைத்தல்

41. "பொரு அரும் தவத் தான் புலிக் காலனாம்
அருமுனி எந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர் **பெரும் பற்றப் புலியூர்** என்று
ஒருமை யாளர் வைப்பாம் பதி ஓங்குமால்."

தெளிவுரை: ஒப்பற்ற அருந்தவத்தையுடைய புலிக்காலுடைய அரிய முனிவராகிய எந்தையை அர்ச்சித்து வழிபட்டு உள்ளது பெருமை விளங்கும் பெரும்பற்றப்புலியூர் ஆகும். இது புலன்களைச் சிதற வொட்டாது அடக்கி ஒருமை மனத்தொடு விளங்கும் சீவன் முத்தர்களின் இருப்பிடமாகும்.

பொருஅரு - ஒப்பற்ற. புலிக்காலன் - புலிக்கால் முனிவர். பெரும்பற்றப் புலியூர் - தில்லை, சிதம்பரம் என்க. ஒருமையாளர் - சீவன் முத்தர். வைப்பு ஆம்பதி - இருக்கும் இடம் 31

42. "அத்தி ருப்பதி யில் நமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்
அத்தன் நீடிய அம்பலத்து ஆடும் மற்று
இத்தி றம்பெற லாம் திசை எத்திசை."

தெளிவுரை: அத்தகைய சிறப்பின்மிக்க பதியில் நம்மை ஆட்கொள்ளும் மெய்த்தவக் கொடியாகிய சிவகாமவல்லி கண்டு மகிழுமாறு, விருப்பத்தோடு சிவபெருமான் அம்பலத்தில் ஆனந்தத் திருநடனம் புரிபவர். இத்தகைய பெருமையை இத்தென்திசையல்லாது வேறு எத்திசையுற்றது?

சிறப்புரை: சீவன் முத்தர்கள் வாழும் இடமே சிறப்பின் மிக்க பதி என்னுமாறு பெரும்பற்றப்புலியூர் என்பது "திருப்பதி" எனச் சாற்றப்பட்டது.

திருப்பதி - சிறப்புடைய நகர், தில்லை. மெய்த்தவக்கொடி - உமாதேவி, சிவகாமவல்லி என்க. அத்தன் - சிவபெருமான். 32

திருவாரூரின் சிறப்புரைத்தல்

43. "பூதம் யாவையின் **உள்அலர் போதென**
வேத மூலம் வெளிப்படு **மேதினிக்**
காதல் மங்கை இதயக் கமலமாம்
மாதொர் பாகனார் **ஆரூர்** மலர்ந்ததால்."

தெளிவுரை: எல்லா உயிர்களுள்ளும் விளங்கும் நெஞ்சமாகிய தாமரைபோல், வேதமூலமாகத் திகழும் ஓம் என்னும் பிரணவ முகமாய்ப் பூமி தேவியின் இதயத் தாமரை போல விளங்குவது. உமாதேவியைப் பாகம் கொண்ட சிவ பெருமானின் திருவாரூர்.

பூமி தேவியின் இதயத்தாமரை போன்று விளங்குவது திருவாரூர் என்னும் பதி என்பது கருத்து.

பூதம் - உயிர். உள்ளலர் போது - நெஞ்சமாகிய தாமரை. வேதமூலம் - ஓம் என்னும் பிரணவம். மேதினிக் காதல் மங்கை - பூமி தேவி. கமலம் - தாமரை. மாதொரு பாகன் - உமாதேவியை இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமான். ஆரூர் - திருவாரூர். 33

காஞ்சிபுத்தின் சிறப்புரைத்தல்

44. "எம்பி ராட்டிஇவ் ஏழ்உலகு ஈன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தால் எய்திக்
கம்பை ஆற்றில் வழிபடு காஞ்சியென்று
உம்பர் போற்றும் பதியும் உடையது."

தெளிவுரை: ஏழுலகங்களையும் ஈன்றவளாகிய எம்பிராட்டி, தம் நாயகனைத் துதித்துத் தனியே ஒப்பற்ற தவத்தைச் செய்து, கம்பா நதிக்கரையில் வழிபாடு செய்த சிறப்புடைய பதி காஞ்சி என்று தேவர்களால் போற்றப்படுவது. இதுவும் தென்திசையில் விளங்குவது.

இத்தகைய சிறப்புடைய காஞ்சியைப் பற்றித் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் விரிவாக உரைக்கப்பட்டுள்ளது காண்க.

எம்பிராட்டி - உமாதேவி. ஏழுலகு ஈன்றவள் - ஏழு உலகங்களையும் படைத்தவள் உமாதேவி என்க. தம்பிரான் - சிவபிரான். கம்பை - கம்பாநதி. இது பூமிக்குள்ளே கண்ணுக்குப் புலனாகாது செல்வதாக ஐதீகம். உம்பர் - தேவர். 34

திருவையாற்றின் சிறப்புரைத்தல்

45 "நங்கள் நாதனாம் நந்தி தவம் செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல் மலர்
செங்கை யாளர் **ஐயாறும்** திகழ்வது."

தெளிவுரை: நம் போன்ற முனிவர்களுக்கெல்லாம் குருநாதனாய் விளங்கும் நந்திதேவர் தவம் செய்து பேரருள் எய்திய சிறப்புடையது. ஆங்குக் கங்கையைச் சடைமுடியில் ஏந்தி, அழகிய மலர்க்கரத்தில் நெருப்பாகிய மலரையும் தாங்கியுள்ள சிவபெருமான் இனிது திகழ்வது திருவையாறு ஆகும்.

நங்கள் நாதன் - குருநாதன். உபமன்னிய முனிவர் முதலானவர்களின் குருநாதனாகச் திகழ்பவர் நந்திதேவர் என்க. பொற்பு - பொலிவுடையது. வேணி - சடைமுடி. கனல் மலர் - நெருப்பு. செங்கையாளர் - அழகிய கரத்தையுடைய சிவபெருமான். ஐயாறு - திருவையாறு. இங்கு பாயும் ஐந்து தீர்த்தங்களாவன : 1. சூரிய தீர்த்தம்; 2. சந்திர தீர்த்தம்; 3. நந்தியின் வாயில் ஒழுகிய நுரை நீர்; 4. காவிர் ஆறு; 5. அம்பாளின் திருமுலைப்பாலாகிய நீர். இங்கு நந்தி தேவர் அதிகார நந்தி என்னும் பட்டத்தைப பெற்றார். 35

சீர்காழியின் சிறப்புரைத்தல்

46. "தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் **தோணி புரத்**துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை."

தெளிவுரை: தேசம் முழுமையும் விளக்கிய சிறப்புடைய தென்திசையில் சிவபெருமான் தோணிபுரம் எனப்படும் சீகாழி மட்டும் அல்லாது பூசனைக்குப் பொருந்திய இடங்கள் பலவாகும். ஆராய்ந்து சொல்லும்போது அத்திசைக்கு ஒப்புமையாக வேறு எந்தத் திசையும் உரைக்கக் கூடியதன்று.

சிறப்புரை : தென்திசையில் விளங்கும் திருத்தலங்கள் பல என்பதைச் சாற்றும் வகையில் சீகாழியை முதலாவதாகச் சுட்டப் பெற்றது. காண்க. சீகாழியின் 12 சிறப்புப் பெயர்கள் வருமாறு.

1. பிரமன் வழிபட்டதால் **பிரமபுரம்** எனப்பட்டது.

2. இறைவன் மூங்கில் வடிவத்தில் தோன்றியதால் **வேணுபுரம்** எனப்பெயர் கொண்டது.

3. குரு பகவான் வழிபட்டதால் **வெங்குரு** என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

4. பிரளய காலத்தில் இறைவன் உமையம்மையோடு தோணியில் விளங்குவதால் **தோணிபுரம்** ஆயிற்று.

5. பூமியைக் குடைந்து சென்று இரணியாக்கனைக் கொன்ற வராகமூர்த்தி வழிபட்டதால் **பூந்தராய்** எனப்பட்டது. (தராய் - மேட்டு நிலம்.)

6. சூரனுக்கு அஞ்சித் தேவர்கள் புகலிடம் பெற்றதால் **புகலி** ஆயிற்று.

7. தலைக்கூறாகிய ராகு பூசித்தலால் **சிரபுரம்** ஆயிற்று.

8. புறாவடிவத்தில் வந்த அக்கினி தேவனால் சிபிச் சக்கரவர்த்தி நற்பேறடைந்ததால் **புறவம்** எனப்பட்டது.

9. சண்பை என்னும் கோரைப் புல்லால் முனிவர் சாபத்தின் வழி பெற்ற தம் குலத்தினரின் வாயிலாக அடைந்த பாவம் பற்றா திருக்கக் கண்ணபிரான் பூசித்ததால் **சண்பை** எனப் பெற்றது.

10. தில்லையில் பெருமானுடன் போட்டியிட்ட காளி வழிபட்டதால் ஸ்ரீகாளி - **சீகாழி** என்று பெயர் கொண்டது. இதுவே இன்று ஊராக வழங்கப் பெறுதல் காண்க.

11. மச்சகந்தியைக் கூடிய பராசர முனிவன் கொச்சைப் பழி நீங்கிப் பூசித்ததால் **கொச்சை வயம்** எனப் பெயர் பெற்றது.

12. ஊரோமச முனிவர் தம் மலத்தொகுதி நீங்கப் பூசித்ததால் **கழுமலம்** எனப்பட்டது.

இத்தன்மையோடன்றி, மேலும் பலர் பூசித்து அருள் பெற்ற தலம் தென்திசையில் உள்ளமையைச் சாற்றும் வகையில், பஞ்ச பூதத்தலமும் சப்த விடங்க தலமும், அட்ட வீரட்டத் தலமும், பஞ்ச சபைத் தலமும் முதலான திருத்தலங்களையும் இவண் சிறப்புடைமையாகக் கொள்க.

தேசம் - உலகம். பேசில் - உரைக்கப் புகுந்தால். ஒவ்வா - ஒப்புமையாகாது. 36

திருத்தொண்டர் புராணம் அருளிச் செய்தல்

47. என்று மாமுனி வன் தொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று **சீர்த் திருத் தொண்டத் தொகை** விரி
இன்றென் ஆதர வால் இங்கு இயம்புகேன்

தெளிவுரை : இவ்வாறு மாமுனிவராகிய உபமன்னிய முனிவர் அன்று சொன்னபடியும் அடியவராகிய நம்பி ஆரூரர் தொன்மை விளங்கும், புகழ் விளக்கும் திருத்தொண்டத் தொகையை விரித்தும் வேட்கை மிகுதியால் இங்கு உரைக்கத் தொடங்கினேன்.

இவண் சேக்கிழார் சுவாமிகள் தாம் பாடிய வகையை எடுத்தியம்பியதாயிற்று.

மாமுனி - உபமன்னிய முனிவர். அடியவர் - நம்பியாரூரர். திருத்தொண்டத் தொகை - திருவாரூரில் இறைவன் "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று எடுத்துக் கொடுக்கச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பதிகம். ஆதரவு - வேட்கை, விருப்பம். 37

48. மற்று இதற்குப் பதிகம் வன் தொண்டர்தாம்
புற்று இடத்துஎம் புராணர் அருளினால்
சொற்ற **மெய்த் திருத் தொண்டத் தொகை** எனப்
பெற்ற **நற்பதி கம் தொழப்** பெற்றதாம்.

தெளிவுரை: திருத்தொண்டர் புராணத்தைப் பாடுவதற்கு உரிய திருப்பதிகமாகத் திகழ்வது, புற்றிடம் கொண்ட புராணராக விளங்கும் தியாகேசப் பெருமானால் அடி எடுத்துக் கொடுக்கப் பட்டு, நம்பியாரூரரால் பாடியருளிய திருத்தொண்டத் தொகை ஆகும். இந்த நற்பதிகமே நாம் தொழத்தக்கதாகும்.

திருத்தொண்டத் தொகை தொழத்தக்க பதிகம் என்று உபதேசித்தமை காண்க.

வன்தொண்டர் - சுந்தர மூர்த்தி சுவாமிகள். புற்று இடத்து எம் புராணர் - திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமான். சொற்ற - பாடிய. 38

49. அந்த மெய்ப்பதி கத்து அடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்.

தெளிவுரை: அத்தகைய தெய்வத் தன்மை வாய்ந்த திருத்தொண்டத் தொகையில் குறிக்கப்பட்டு நிலவுலகத்திற்குச் சுட்டிக் காட்டப் பெற்ற அடியவர்களை நம்முடைய தலைவனாம் நம்பியாண்டார் நம்பி சிந்தையில் பதித்துத் திருவருள் துணை கொண்டு புகன்ற திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் திருநூலின் அடியொற்றி இத்திருத்தொண்டர் புராணத்தைக் கூறத் தொடங்குவாம்.

சிறப்புரை: இப்புராணம் தொன்றுவதற்கு அடிப்படையான காரணம் இவண் உரைத்தலாயிற்று.

சிவபெருமானை யல்லாது வேறு யாரையும் தொழாதவர் உபமன்னிய முனிவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த முனிவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தொழுது வணங்கினார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவபெருமானால் சுட்டிக் காட்டப்பட்ட அடியவர்களாகிய திருத்தொண்டர்களைத் தொழுது, பரமனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்ட "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் திருவார்த்தைகளை முதலாகக் கொண்டு பாடித் துதிக்கலானார். அத்திருப்பதிகத்தை முதலாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த "திருத்தொண்டர் திருவந்தாதி" யைச் சிறப்பாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணம் அருளிச் செய்யலானார் என்க. தாம் பாடும் நூலுக்கு நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவாந்தாதி காரணமாக விளங்கும் தன்மையில் "நந்தம் நாதன்" எனத் துதித்தவாறும் ஆயிற்று.

ஈண்டுத் திருத்தொண்டத் தொகையின் வழி திருத்தொண்டர் திருவந்தாதி மலர்ந்ததும், அதன் வழி திருத்தொண்டர் புராணம் விரிந்ததும் காண்க.

நம்பியாண்டார் நம்பிகள் வரலாறு: திருநாரையூரில் இவர் தந்தையார் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தார். ஒரு நாள்

தாம் வெளியூர் செல்ல இருந்ததால் தன் புதல்வரான நம்பிகளைப் பூசிக்குமாறு கூறிச் சென்றார். நம்பிகள் பூசிக்க, விநாயகப் பெருமான் நைவேத்தியத்தை ஏற்று அமுது செய்தருளினார். இத்திருவருட் செயலைக் கட்டுக்கதை எனக்கருதிய இவர் பெற்றோர் நம்பிகளை இகழ்ந்தனர். இதனால் நம்பிகளுக்கு விநாயகப் பெருமான் மீளவும் அமுது உண்டு ஏற்றுக் திருவருள் விளக்கம் புரிந்தார். பின்னர் விநாயகப்பெருமான் திருவருளால் புலமை வாய்க்கப் பெற்று நம்பிகள் விளங்கினார். சோழ அரசன் வேண்டுகோட்கு இணங்கித் தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலிலிருந்து நம்பிகள் திருமுறைகளை வெளிப்படுத்தி உலகுக்கு ஒப்பற்றதான பெருஞ்செல்வத்தை அருளினார். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் வருமாறு:

1. திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை.
2. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
3. திருத்தொண்டர் திருவந்தாதி.
4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்.
6. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை.
7. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை.
8. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்.
9. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை.
10. திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை.

இவை யாவும் 11 - ஆம் திருமுறையுள் தொகுக்கப்பட்டுள்ளன.

மெய்ப்பதிகத்து அடியார்கள் - திருத்தொண்டத் தொகையில் வரும் அடியார்கள். புந்தி ஆர - சிந்தை மகிழ். 39

கவிக்கூற்று

50. **உலகம் உய்யவும் சைவம் நின்று ஓங்கவும்**
அலகில் **சீர்நம்பி ஆரூரர்** பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் **நாட்டுஅணி** கூறுவாம்.

தெளிவுரை: உலகுயிர்கள் உய்தி பெறவும், சைவ நெறி முன்னின்று ஓங்கவும், அளவிடுவதற்கு அரியதான பெருஞ் சிறப்புடைய நம்பி ஆரூரர் பாடிய தொண்டர்கள் நிலவி உறையும் தன்மை விளங்கும் சோழநாட்டின் சிறப்பினை இனிக் கூறுவோம்.

சிறப்புரை: உலகில் உள்ள உயிர்கள் நற்கதி பெற வேண்டும் என்பதற்காகத் திருவாரூரின் கண் உள்ள தேவாசிரிய மண்டபத்துள் 63 அடியவர்களைத் தோன்றுமாறு செய்து காட்டிய இறைவன், அவ்வடியவர்களைப் போற்றித் துதிக்குமாறு முதலடியையும் எடுத்துக் கொடுத்தார். இச்சிறப்பு, சோழ நாட்டின் கண் நிகழ்ந்ததால் இத்தகைய சிறப்புடைய நாடே, இப்புராணத்திற்கு உரிய நாட்டுச் சிறப்பு என உரைக்கும் தன்மையாயிற்று என்பதாம்.

உலகம் - உலகில் உள்ள உயிர்கள். சைவம் - சைவ நெறி. அலகில் - அளவிடுவதற்கு அரியதான. நம்பியாரூரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். புனல் நாடு - நீர்வளம் மிகுந்த சோழ நாடு. அணி - சிறப்பு.

திருமலைச் சிறப்பு நிறைவுற்றது

3. திருநாட்டுச் சிறப்பு

இவண், காவிரியாற்றின் பெருமையும், சோழ நாட்டின் நெல்வளமும் சாற்றி அநபாய சோழன் வெண்கொற்றக் குடையின் கீழ் விளங்கும் நாட்டின் சிறப்பினை விளம்புதலாயிற்று.

காவிரியின் சிறப்புரைத்தல்
கலிவிருத்தம்

51. பாட்டுஇயல் தமிழ்உரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்.

தெளிவுரை: தமிழின் பண்பாடு உரைக்கப் பெறும் எல்லையுடைய பனி படரும் இமயமலையின் உச்சியில் புலியின் சின்னத்தைப் பொறித்த சோழர்களின் காவிரியாற்றின் பெருமை விளங்கும் இயல்பினை இப்போது கூறலுற்றேன்.

பாட்டு இயல் தமிழ் - தமிழ்ப் பண்பாட்டு நெறி. கோட்டுயர் பனிவரை - பனி படர்ந்த இமயமலையின் கண் கரிகாற் சோழனால் புலிச்சின்னம் பொறித்தமை நவில்வதாயிற்று. புலி - புலிச்சின்னம். காவிரி நாட்டியல் - காவிரியால் வளம் பெறும் சோழ நாட்டுச் சிறப்பு.

52. ஆதிமா தவமுனி **அகத்தி யன்**தரு
பூதநீர்க் **கமண்டலம் பொழிந்த காவிரி**
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்.

தெளிவுரை: தொன்மை விளங்கும் பெருந் தவமுனிவரான அகத்தியரின் தூய கமண்டலம் பொழிந்த காவிரி ஆறு வளம் திகழும் வகையில் தவழ்ந்து செல்லும் காட்சி, பூமிதேவியின் அழகிய மார்பில் கடலிலிருந்து பெற்ற முத்துக்களால் ஆன மாலை திகழ்வது போன்று விளங்கும்.

சிறப்புரை: காவிரி மண்ணுலகத்தில் தோன்றிய வரலாறு, அகத்தியன் தரு பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி என்று உரைத்தலாயிற்று. இதன் வரலாறு வருமாறு:

ஒரு காலத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய தேவேந்திரன், சீகாழியில் வாசம் செய்து சிவபூசை புரிந்து வந்தான். அப்போது நீர் வறட்சியால் பூசைக்குரிய தூய நீரும், உரிய மலர்களும் கிடைக்கப் பெறாமல் இருந்தது. இந்திரன், அகத்தியரின் கமண்டலத்தில் விளங்கிய பொன்னி நீரைக் கவிழ்த்து ஆறாகப் பெருகச் செய்யுமாறு விநாயகப் பெருமானை வேண்டினான். அகத்தியர் கமண்டலத்தைக் கீழே வைத்துப் பூசனை செய்து கொண்டிருக்கையில் விநாயகப் பெருமான், காகம் வடிவு தாங்கிக் கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அதனைக் கண்ட அகத்திய முனிவர் தம் கை கொண்டு துரத்தக் காகம் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுப் பறந்தது. உள்ளே இருந்த பொன்னித் தீர்த்தமும், முனிவர், தம்கைக் கொண்டு துரத்தியதை எண்ணி தன்னை விடுவித்துத் தவழ்ந்து செல்லுமாறு பணித்ததாகக் கருதிப் பெருக்கெடுத்து ஓடியது.

பூத நீர் - தூய நீர். மாதர் - அழகு. பொன் மார்பு - வளம் திகழும் மார்பு. இது பூமி தேவியைக் குறித்தது. ஓதநீர் - கடல் நீர், முத்து உண்டாகும் இடம். நித்திலத் தாமம் - முத்து மாலை. 2

53. சைய மால் வரைபயில் தலைமை சான்றது
செய்ய பூ மகட்குநல் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாள் தொறும்
உய்யவே சுரந்தளித்து ஊட்டும் நீரது.

தெளிவுரை: குடகு என்னும் பெருமைமிக்க மலையில் தோன்றித் தலைமை கொண்டு விளங்கிச் செம்மை திகழும் பூமகளுக்குச் செவிலித்தாய் போன்று காப்பது காவிரி இவ்வுலகின் கண் பல்வகையான உயிர்களை வளர்த்து ஊற்றுப் போன்று நாள்தோறும் குறைவில்லாது சுரந்து காக்கும் தன்மையுடையதும் இக்காவிரியாகும்.

சையம் - குடகு மலை. தலைமை - சிறப்பு. உய்யவே சுரந்தளித்து - தாய்ப்பால் சுரந்து தம் மக்களைக் காப்பது போன்று காப்பது. பல்லுயிர் - ஓரறிவுடைய மரம், புல்லினம் : ஈரறிவுடைய நத்தை சங்கு : மூவறிவுடைய எறும்பு, அட்டை: நான்கறிவுடைய நண்டு, தும்பி: ஐயறிவுடைய விலங்கு, பறவை: ஆறறிவு உடைய மக்கள் என்க. நீரது - தன்மையுடையது. 3

காவிரி பிரமனை நிகர்த்தது

54. மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வரும்
சால்பினால் பல்லுயிர் தருதல் மாண்பினால்
கோலநல் குண்டிகை தாங்கும் கொள்கையால்
போலும்நான் முகனையும் **பொன்னி மாநதி**

தெளிவுரை: திருமாலின் உந்தியில் விளங்கும் சுழியில், தாமரை மலர் விளங்குவது போன்று காவிரியில் சுழிகள் விளங்கத் தாமரைப் பூக்கள் மலரும். பிரமதேவன் உலகில் பல உயிர்களையும் படைப்பதைப் போன்று காவிரி, தன் நீர் வளத்தால் பல்லுயிர்களையும் தோன்றச் செய்து வாழ்விக்கிறது. பிரமதேவன் தன் கையில் குண்டிகை தாங்குகின்ற கொள்கை போன்று காவிரி முதற்கண் கமண்டலத்தின் கண் விளங்கியது.

குண்டிகை தெய்வத்தன்மை வாய்ந்தது என்னும் சிறப்புத் தோன்றக் காவிரியும் தெய்வத் தன்மையால் தோன்றி நிலவுவது என்னும் கருத்தும் சாற்றப்படுவதாயிற்று.

மால் - திருமால் குண்டிகை - கமண்டலம். நான்முகன் - பிரமன், பொன்னி - காவிரி. மாநதி - பெருமையுடைய ஆறு. 4

கங்கையைப் போன்றது காவிரி

55. திங்கள் சூ டியமுடிச் சிகரத்து உச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள் நாயகன் முடி மிசை நின்றே இழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே.

தெளிவுரை: பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமான் சடைமுடியின் உச்சியில் வெண்மையான நுரை பொங்கி எழுமாறு பொலியும் கங்கை நதியைப் போன்று காவிரியாறு வெண்மையான நுரையைப் பெருக்கி எழுமாறு செய்து அழியாத புனிதத் தன்மையோடு விளங்கும்.

சிறப்புரை: இப் பாடலில் கங்கைக்கு நிகராகக் காவிரியாறு

ஒப்பிடப் படுவதாயிற்று. இதன் அடிப்படை பொங்கும் நுரை எனச் சாற்றப்பட்டது.

திங்கள் - பிறைச் சந்திரன். எங்கள் நாயகன் - சிவ பெருமான். இழி - இறங்கி வருதல். பொன்னி - காவிரி ஆறு. கன்னி நீத்தம் - அழியாத வெள்ளம். 5

உமாதேவியின் கருணை போன்றது காவிரி

56. வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை **ஆளுடைய நாயகி**
உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

தெளிவுரை: பர்வத மன்னன் மகளாகப் பூமியில் மேவும்அழகிய நெடிய இமயமலையின் கண் தோன்றிய பார்வதி தேவி போன்று, காவிரி குடகு மலையில் தோன்றித் தென்திசையின் கண் விளங்குபவள். முப்பத்திரண்டு பேரறங்களைக் காஞ்சியில் புரிந்தவள் உமையம்மை. அதைப் போன்று காவிரி தன்னுடைய நீர்வளத்தால் நாட்டைச் செழிப்படையச் செய்து நல் அறங்களை வளர்க்கிறது. உமாதேவி சிவபெருமானின் இடப்பாகத்தைக் கொண்டு உள்ளார்ந்த கருணை விளங்க அருள் புரிதலைப் போன்று, காவிரியும் மாந்தர்பால் நல்லொழுக்கம் விளங்கச் செய்கிறது.

சிறப்புரை: நீர் இல்லாது உலக வாழ்க்கை நடைபெறாது அதே போன்று மழையில்லையெனில் உலகியல் ஒழுக்கமும் குன்றும் எனத் திருவள்ளுவர்.

"நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு"

திருக்குறள் : 20

என்று உரைத்தமை போன்று, மழை நீர் அன்ன பெருகும் நீர்வளத்தைக் காவிரி தந்து உலகுயிர் ஒழுக்கத்து மேவத்துணை புரிகின்றது என்பதாம். இக்கருத்து இப்பாடலின் ஈற்றடியில் சாற்றப்பட்டது என்க.

நீள் வரை - இமய மலை பார்வதி தேவி தோன்றிய மலை குடகு - காவிரி தோன்றிய மலை. பேர் அறங்கள் - காஞ்சியில் அன்னை காமாட்சி புரிந்த 32 அறங்களைக் குறித்தது. அண்ணல் - சிவபெருமான். ஆளுடைய நாயகி - உமையம்மை. 6

காவிரிக்கரையில் உள்ள சிவாலயச் சிறப்பு உரைத்தல்

57. வம்புஉலா மலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்

தெளிவுரை: நறுமணம் கமழும் பலவகையான மலர்களை நீரின் அடித்துக் கொண்டு வந்து, அலைகளாகிய கரங்களால் கரைகளில் உள்ள எண்ணற்ற சிவாலயங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை இறைஞ்சி ஏத்துதலால் காவிரி நதியானது, உம்பர் நாயகனாகிய சிவபெருமான் அடியார் திருக் கூட்டத்தையும் ஒக்கும்.

சிறப்புரை: காவிரியின் வடகரைத்தலங்கள் 63 எனவும், தென்கரைத்தலங்கள் 127 எனவும் சிவத்தலங்களின் சிறப்புரைத்தமை நோக்கி, அடியவர்கள் மலர் கொண்டு ஏத்துதல் போன்று காவிரி நதியும் அலைகளாகிய கரங்களால் மலர்தூவிக் கரைதொறும் ஒதுக்கும் செயல் இனிது ஏத்தப் பெற்றது. மற்றும் சிவனடியார்கள் தொழத்தக்கவர்களாக விளங்குதல் போன்று காவிரியும் தொழத்தக்கது என்பதாயிற்று.

வம்பு - நறுமணம். சிவாலயம் - காவரி வடகரைத்தலம் 63 - உம், தென்கரைத்தலம் 127 - உம் மூவர் பெருமக்களால் பாடல் பெற்றவை. இவற்றை உரைத்தமையாகக் கொள்க இத்தகைய அருட்பாடல்கள் அமையப் பெறாத தலங்களும் கொள்ளப் பட வேண்டியனவே. எம்பிரான், உம்பர் நாயகர் - சிவபெருமான். அன்பர் - சிவனடியார். 7

குங்குமமும் சந்தனமும் கொண்டு விளங்கும் காவிரி

58. வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்திரை மீது இழிந்து ஓடும் நீர்
தேசு உடைத்து எனினும் தெளிவு இல்லதே.

தெளிவுரை: வாசம் மிக்குடைய நீரில் மங்கையர்கள் நன்கு குடைந்து மூழ்கி எழுதலால் தனங்களில் பூசிய குங்குமக் குழம்பும், சந்தனச் சேறும் கலந்து கரைந்தது. இதனால் அது பெருமையுடையதாயினும் தெளிவு காணாதவாறு கலங்கி விளங்கிற்று.

சிறப்புரை: மகளிர் நீரில் குடைந்து நீராடும் சிறப்பு இவண் உரைக்கப்பட்டது. இத்தன்மையில் திருஞான சம்பசந்தர் சுவாமிகள்.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ."

- முதல் திருமுறை, திருக்கோலக்காத் திருப்பதிகம்.

என அருளிச் செய்தமை காண்க. மற்றும் மாணிக்க வாசக சுவாமிகள். "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக் கையால் குடைந்து குடைந்துன் கழல் பாடி, ஐயா வழி அடியோம் வாழ்ந்தோம் காண்" எனச் சாற்றியவாறும் நோக்குக.

குடை மங்கையர் - காவிரி நீரில் குடைந்து நீராடும் மங்கையர். தேசு - சிறப்பு, பெருமை. தெளிவு - தெளிந்ததாகத் தோற்றம் பெறும் நீரின் தன்மை, இல்லது - இல்லாமையாம். 8

காவிரி நீர்க்கால்களின் சிறப்புரைத்தல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

59. மாஇ ரைத்தெழுந்து ஆர்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யின் பொலி நாடு வளம்தரக்
காவி ரிப்புனல் கால்பரந்து ஓங்குமால்.

தெளிவுரை: வண்டுகள் ரீங்காரம் செய்ய மலைப்பகுதிகளில் உள்ள பூக்கள் விரிந்து மலர்ந்து புதிய தேன் விளங்கிப் பொங்குமாறு ஆற்றுநீரில் கலந்து வர அது, கால்வாய் வழியாகப் பொய்கைகளில் சேர்ந்து, அங்கிருந்து மேலும் பல கால்களாக வயல்கள் தோறும் பரந்து பாயும். இதன் வழி நெல்வளம் ஓங்கிப் பெருகும்.

மா - வண்டு. வரைதரு பூ - மலைச்சாரல்களில் விளங்கும் மரங்கள் தரும் பூக்கள். மது - தேன். வாவி - பொய்கை. காவிரிப் புனல் - காவிரி நீர். கால் பரந்து - பலவாய்க்கால்களாகப் பெருகி. ஓங்கும் - நெல்வளம் பெருகும். 9

60. ஒண்து றைந்தலை மாமதகு ஊடுபோய்
மண்டு நீர்வய லுள்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறம் சாருமால்.

தெளிவுரை: நீர்த்துறையின் முதன்மையாய்ப் பொருந்திய பெரிய மதகின் வழியே நீர் பெருகிச் சென்று வயல்களில் பாய்வதைக்

கண்ட உழவர்கள் பெருத்த ஆரவாரம் செய்தார்கள். அந்த ஓசை வானத்தில் விளங்கும் தேவலோகத்தையும் கடந்து சென்றது.

காவிரியாற்றின் வளமும் அதனால் உழவர்கள் காணும் உவகையும் தேவலோகத்திலும் சென்று பரவியது என்க.

ஒண் - பொருந்திய. ஊடு - இடையே. மண்டு நீர் - பெருகி வரும் நீர். மள்ளர் - உழவர். குரைத்த - ஆரவாரம் செய்த. அண்டர் - தேவர். சாரும் - சென்றடைந்தது. ஆல் - அசைச்சொல். *10*

உழவர் பெருமக்களின் செயலை விளம்புதல் - இது முதல் அடுத்த ஐந்து பாடல்கள் ஒரு தொடர்

61. மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை ஆர்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே.

தெளிவுரை: ஆங்கு அவ்வயல்களிடைய பசுமை நிறைந்த அழகிய நாற்றைப் பறிப்பவர்களின் மாண்புமிக்க செயலும், அத்தகைய நாற்றைப் பறித்து முடிச்சுகளாகக் கட்டி வைக்கப் போதிய நீரைப் பாய்ச்சுகின்ற செய்கையும், பின்பு அந்நாற்றை நடுவதற்காகக் சேறு கூட்டி உழுகின்ற உழவர்களின் பணியும் நோக்கும்போது அவற்றைக் காண்பதே மிகவும் இனிமை தரும் காட்சியாகத் தோன்றும்.

சிறப்புரை: நாற்றுகளின் வேர் அறுபடாமல் பறித்து மீண்டும் நடவு செய்து விளைச்சல் பெரிதும் காணுமாறு செய்யப்படுவதன் சிறப்புத் தோன்ற, இச்செயல் மாட்சிமையுடையதெனச் சாற்றப்படுவதாயிற்று.

மாதர் - அழகிய, பொன் போன்ற உயர்வுடைமையும் ஆம். நாறு - நாற்று. மாட்சி - மாண்புறு செயல். சீதநீர் - குளிர்ந்த நீர். முடி - நாற்று முடிச்சு. ஓதை - உழுதல் ஆராவரம். ஒழுக்கம் - சேற்றுக்கட்டிகளை உடைத்தும் சமம் செய்யும் வகையில் பரம்பு அடித்தலும் ஆம். காதல் செய்வது - உழைப்பின் மீது கொண்டுள்ள பற்று, இது உழவுத் தொழிலின் மென்மையைச் சாற்றுதலாம். மலிந்தது - பலவான காட்சிகளைச் சுட்டுதலாயிற்று. *11*

62. உழுத சால்மிக ஊறித் தெளிந்தசேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்.

தெளிவுரை: எத்தன்மையாலும் பழுது படாத காவிரி பாயும் நாடாகிய சோழ நாட்டின் வயல்களில் ஏர் உழுவதால் சேறு நன்கு ஊறிக் குழம்பிய கழனிகளில் நாற்று நடுவதற்காக மருத நிலத்துத் தெய்வமாகிய இந்திரனை உழவர் பெருமக்கள் ஏத்தி வணங்குபவராவார்கள்.

இழுது செய்யினுள் - கழனிகளில் ஏர் உழுதலால் சேறு குழம்பிய தன்மை செய் - வயல். நாறு - நெல் நாற்று. தொகுதி - நாற்று நடும் உழவர்கள் கூட்டம். பழுதில் காவிரி - நீர் குறைதலால் வறட்சியும், நீர் மிகுதலால் அழிவும் உண்டாக்காத சிறப்புடைய காவிரி என்க. 12

கொச்சகக் கலி

63. மண்டுபுனல் பரந்த வயல்
வளர் முதலின் சுருள் விரியக்
கண்டுழவர் பதம் காட்டக்
களைகளையும் கடைசியர்கள்
தண்தரளம் சொரிபணிலம்
இடறிஇடை தளர்ந்து அசைவார்
வண்டலையும் குழல்அலைய
மடநடையின் வரம்புஅணைவார்.

தெளிவுரை: விரைந்து சென்று நீர் பாய்தலால் வயல்களில் வளர்ந்து வரும் பயிர்களின் பதம் இத்தன்மைத்து என்று உழவர்கள் அறிய, அதன் வழி களை பறிக்க உழவர் மகளிரை ஏவுதல் செய்வார்கள். உழத்தியர்கள், வயலில் இறங்கிக் களை பறிக்கும் போது ஆங்குச் சிதறிக் கிடக்கும் முத்துக்களாலும் சங்குளாலும் நடை தடுமாற அசைந்து செல்வார்கள். உழத்தியர்கள் பணி செய்யும்போது வண்டுகள் ரீங்காரம் செய்தவாறு அப்பெண்களின் கூந்தல்களைச் சுற்றி வர அவர்கள், மெல்ல வரப்புகளில் ஏறி நிற்பார்கள்.

மண்டு புனல் - பெருக்கெடுத்து விரைந்து வரும் நீர்: இது நீரின் மிகையைச் சுட்டுதலாம். வளர் முதல் - நெற்பயிர். பதம் - களை எடுக்கும் காலம் முதலானவை. கடைசியர் - உழவர் குலப்பெண்கள். தரளம் - முத்து. பணிலம் - சங்கு. அசைவார் - சாய்ந்து அசைந்து நடப்பார்கள். வரம்பு - வரப்பு. 13

64. செங்குவளை பறித்து அணிவார்
கருங்குழல்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக் கொடு உகைத்து
அயல் வண்டும் வரவழைப்பார்

திங்கள் நுதல் வெயர்வுஅரும்பச்
சிறுமுறுவல் தளவுஅரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின்
புதுமதுவாய் மடுத்தயர்வார்.

தெளிவுரை: உழவர் குலப் பெண்கள் சிவந்த நிறமுடைய செங்கழுநீர்ப்பூக்களைப் பறித்துத் தம் கருமையான கூந்தலில் அணிவார்கள். கூந்தலில் சுற்றிவரும் சிறகுகளையுடைய வண்டைத் தம் அழகிய தாமரை போன்ற கைகளால் ஓட்டுவார்கள். பக்கங்களில் உள்ள வண்டையும் வரவழைப்பார்கள். அப்பெண்கள் உழவுப் பணி செய்தலால் பிறைச்சந்திரன் போன்று விளங்கும் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பும். அவர்கள் செய்யும் முறுவல் சிறிய முல்லை அரும்புகள் போன்று விளங்கப் பொங்கும் தாமரை மலரில் துளிர்க்கும் தேனைப் பருகி, மகிழ்வார்கள்.

சிறைவண்டு - சிறகுகளையுடைய வண்டு. அங்கை மலர் - தாமரை போன்ற கை. உகைத்து - ஓட்டி. அயல் வண்டு - கையால் வண்டை ஓட்டினாலும் மீண்டும் அயலிலேயிருந்து கூந்தலில் மொய்க்கும் என்பதாம். திங்கள் நுதல் - பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றி. வெயர்வு - வியர்வை. அரும்ப - துளிர்க்க. தளவு - முல்லை. மகளிர் பற்களை உவமித்தது. கமலம் - தாமரை. 14

65. கரும்பல்ல நெல்லென்னக்
கமுகல்ல கரும்பென்னச்
கரும்பல்ல குடைநீலத்
துகள்அல்ல பகல்எல்லாம்
அரும்பல்ல முலைஎன்ன
அமுதல்ல மொழிஎன்ன
வரும்பல்ஆ யிரம்கடைசி
மடந்தையர்கள் வயல் எல்லாம்.

தெளிவுரை: இனிமை திகழும் காவிரி நீர் பாயும் சிறப்பால், கரும்பின் உயரத்திலும், பருமனிலும் நெற்பயிர் விளங்கின, அதைப் போலவே கமுகமரங்கள் என்று நவிலத் தகுமாறு கரும்பு செழித்து வளர்வன. ஆங்கு, நீலப்பூவின் துகள்கள் அல்ல: அக இதழ்களைக் குடையும் வண்டுகள் எனவும் : இவைகள் மலர் அரும்புகள் அல்ல உழத்தியர்களின் மார்பகங்கள் எனவும், இறை அமுதம் அல்ல, உழத்தியர்களின் இனிய மொழிகள் என்று கூறப்படுமாறும் விளங்கப் பல்லாயிரக் கணக்கான மகளிர் வயல்களில் பணி செய்து கொண்டிருப்பவர்களாவர்.

இவண் நெல், கரும்பு ஆகியவற்றின் வளமும், மகளிரின் வளப்பமும் அவர்கள் உரைக்கும், இன்சொற்களின் பெருமையும் உழைப்பின் மேன்மையும் ஓதப் பெற்றது.

கமுகு - பாக்கு மரம். சுரும்பு - வண்டு. நீலத்துகள் - நீலமரிதழ். கடைசி மடந்தையர் - உழவுத் தொழிலில் மேவும் பெண்கள் 15

உழவர்குலச் சிறுமியரின் விளையாட்டை உரைத்தல்
- இது முதல் அடுத்த மூன்று பாடல்கள் ஒரு தொடர்

66. கயல் பாய் பைந் தடம்நந்துஊன்
கழிந்தபெருங் கருங்குழிசி
வியல் வாய்வெள் வளைத்தரள
மலர்வேரி உலைப்பெய்து அங்கு
அயல்ஆமை அடுப்பேற்றி
அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர்
விளையாட்டு வரம்பெல்லாம்

தெளிவுரை: கெண்டை மீன்கள் விளங்கும் குளிர்ந்த பொய்கையில் உள்ள தசையில்லாத சங்கைக் கரிய பானை போல வைத்து அகன்ற வாய் உடைய வெண்சங்குகள் ஈன்ற முத்துக்களை அரிசியாகக் கொண்டு, மலரிலிருந்து எடுத்த தேனை உலையாகப் பெய்து, ஆமை ஓடுகளை அடுப்பாக அமைத்துச் சிவந்த ஆம்பல் மலர்களை விறகாக வைத்து, வயல்களில் வேலை செய்யும் மாதர்களின் சிறு புதல்வியர்கள் வரப்புகளில் விளையாடுவார்கள்.

கயல் - கெண்டை மீன். பைந்தடம் - குளிர்ந்த நீர் விளங்கும் பொய்கை, தடாகம். ஊன்- தசை. நந்து - சங்கு. தரளம் - முத்து. வேரி - தேன். அரக்கு - சிவந்த நிறம். வயல் மாதர் - வயலில் வேலை செய்யும் உழத்தியர்கள். 16

67. காடு எல்லாம் கழைக்கரும்பு
கா எல்லாம் குழைக்கு அரும்பு
மாடு எல்லாம் கருங்குவளை
வயல்எல்லாம் நெருங்குவளை
கோடு எல்லாம் மடஅன்னம்
குளம் எல்லாம் கடல்அன்னம்
நாடு எல்லாம் நீர்நாடு
தனைஒவ்வா நலம் எல்லாம்.

தெளிவுரை: காடு போன்று தோன்றுவன யாவும் மூங்கில் போன்று உயர்ந்து விளங்குகின்ற கரும்பாகும். சோலைகள் யாவும் தளிர் அரும்புகளைப் பெருவாரியாகக் கொண்டு விளங்கும். எல்லாப் பக்கங்களிலும் நீலோற்பல மலர்கள் நிறைந்து விளங்கும். வயல்களின் எல்லா இடத்திலும் வெண்சங்குகள் மிகுந்து விளங்கும். குளக்கரையில் அன்னப் பறவைகள் விளங்க அக்குளத்தில் விளங்கும் நீர், கடல் போன்று நிறைந்து அலைகளை வீசிக் கொண்டிருக்கும். இத்தன்மையில் நாடு என்று சொல்லப்படுவது நீர் நாடு எனச் சொல்லப்படுகின்ற சோழ நாடேயல்லாது வேறு எந்நாட்டிற்கும் ஒப்புமையாகாது. இங்கு எல்லா நலமும் சிறக்கும்.

சிறப்புரை: இவண் கரும்பின் வளத்தை மூங்கிலுக்கு உவமித்ததைக் காண்க. இதனைப் பாக்குமரத்திற்குப் பாடல் 65 - இல் உவமை சாற்றமையும் நோக்குக. இவண் சோழ நாட்டினை நீர் நாடு எனச் சாற்றுதல் போன்று பாடல் 50 - இல் புனல் நாடு எனச் சாற்றியமையும் காண்க.

இச்சிறப்பு தெய்வத்தன்மை வாய்ந்த காவிரி நீர் பாய்வதாலும், உழவர்களின் உழைப்பினாலும் தோற்றம் பெறுவதாயிற்று என்க. இப்பாடலின் கண் மடக்கணி விளங்குதலையும் நோக்குக.

காடு - அடர்ந்து விளங்கும் பொழில் போன்றது. கழை - மூங்கில். கா - சோலை. குழைக்கும் - பெருகி விளங்கும். அரும்பு - தளிர், மொக்கு. மாடு - பக்கம். கருங்குவளை - நீலோற்பல மலர். நெருங்கு வளை - நெருங்குகின்ற சங்குகள், சங்குகளின் மிகுதி என்க. கோடு - குளக்கரை. நீர் நாடு - சோழ நாடு. 17

கலி விருத்தம்

68. ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஓலமும்
சோலை வாய்வண்டு இரைத்தெழு சும்மையும்
ஞாலம் **ஓங்கிய நான்மறை ஓதையும்**
வேலை ஓசையின் மிக்கு விரவுமால்

தெளிவுரை: அந்நாட்டில் கரும்பாலையில் கரும்பைச் செலுத்திச் சாறு பிழிந்தும், வெல்லம் காய்ச்சியும் செய்யும் உழவர்களின் ஆரவார ஒலியும், சோலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் ஒலியும், உலகமெல்லாம் ஓங்கி விளங்கும் நான்கு வேதங்களை ஓதுகின்ற

ஒலியும் எழும். இவையனைத்தும் கடலலைகளின் ஓசையினும் மிக்கு விளங்கும்.

சிறப்புரை: இவண் உழைப்பின் மேன்மையை உணர்த்தும் வகையில் எழும் ஓசை முதலடியிலும், வளத்தால் எழும் ஓசை இரண்டாம் அடியிலும், அறிவின் மேன்மையால் உண்டாகும் ஓசை மூன்றாம் அடியிலும் சுட்டப் பெறுதல் காண்க.

ஆலை - கரும்பாலை. பாய்பவர் - கரும்புத்துண்டுகளை ஆலயில் சேர்த்துப் பிழிந்து சாறு எடுப்பவர். ஓலம் - ஓசை. சும்மை - ஓசை. ஞாலம் - உலகம். ஓதை - வேதஒலி. வேலை - கடல். 18

இயற்கை வளத்தின் சிறப்புரைத்தல்

- இது முதல் அடுத்த ஆறு பாடல்கள் ஒரு தொடர்

69. அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேல் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால்.

தெளிவுரை: அன்னப்பறவை நீராடும் அகன்ற பொய்கையில் எருமைகள் கூட்டமாகச் சென்று படிந்து கலக்க, ஆங்குள்ள இளமையுடைய வாளை மீன்கள் அஞ்சிக் கரையில் உள்ள கமுக மரங்களின் மீது துள்ளி எழுந்து பாயும். இது வானத்தில் தோன்றும் வண்ணம் உடைய வானவில்லைப் போன்று தென்படும்.

ஆடும் - நீராடும். அகன்துறை - அகன்ற படிகள் உடைய. மேதி - எருமைகள். துதைந்து எழம் - கலக்கி எழும். கன்னிவாளை - இளமையான வாளைமீன். 19

70. காவி னில்பயி லும்களி வண்டினம்
வாவி யில்படிந்து உண்ணும் மலர்மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழி லின்கனி சாடுமால்.

தெளிவுரை: சோலையில் பயிலும் மகிழ்ச்சியுடைய வண்டினம் குளத்தில் படிந்து ஆங்குள்ள மலர்களில் விளங்கும் தேனை அருந்துவதற்குப் பறந்து வரும். அதனால் அப்பொய்கை அலை பாய, ஆங்குள்ள கெண்டை மீன்கள் கரையில் உள்ள பொழிலில் தாவிச் சென்று, அவற்றில் உள்ள கனிகளைச் சாடும்.

கா - சோலை. களிவண்டினம் - தேனருந்திக் களித்த வண்டுகள்.

வாவி - குளம். மலர்மது - மலரில் உள்ள தேன். தடம் - குளம். கயல் - கெண்டை மீன். சாடும் - மோதும். 20

அறுசீர் ஆசிரிய விருத்தம்

71. சாலிநீள் வயலின் ஓங்கித்
தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக்
கருவின்ஆம் வளத்த ஆகிச்
சூல்முதிர் பசலை கொண்டு
சுருள்விரித்து **அரசனுக்கு அன்பர்**
ஆலின சிந்தை போல
அலர்ந்தன கதிர்கள் எல்லாம்.

தெளிவுரை: சாலி என்னும் நெற்பயிர் வயலில் ஓங்கி வளர்ந்து மிகுதியான சூல் முதிர்ச்சி கொண்டு பசுமை விளங்கக் கதிர்ச்சுருள் விரித்துச் செழிப்பனவாகும். அப்பயிர் விளைவிக்கும் கதிர்கள் யாவும், சிவபெருமானைத் தம் சிந்தையில் கொண்டு மகிழும் சிவனடியார்கள் நெஞ்சம் போன்று வளம் பெற்றுத் திகழ்வனவாகும்.

சிறப்புரை: பூர்வ புண்ணியம் வாய்க்கப் பெற்று அத்தகைய பேற்றால் சிவபெருமானைத் தம் நெஞ்சில் பதித்து மேவும் சிவனடியார்கள் உவமை சாற்றப்படுவதாயிற்று. இதனால் சிறப்புடைய நாட்டில் பிறவி கொள்பவர்கள் புண்ணியப் பேறுடைய நல்வினை யுடையவர்களே யாவர் என்று குறிப்பால் சுட்டப் பெறுதலை ஓர்க.

சாலி - நெற்பயிர். வாலிதாம் வெண்மை - தூய வெண்ணிறம். அரசனுக்கு அன்பர் - சிவனடியார். ஆலின சிந்தை - பொருந்திய சிந்தை, "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே!" என்னும் சேந்தனார் திருப்பல்லாண்டும் நோக்குக. அலர்ந்தன கதிர்கள் - நெற்கதிர்கள் விளங்கின. 21

72. **பத்தியின் பாலர் ஆகிப்**
பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள்
தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்த நீள் பத்தி யின்பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி எல்லாம்.

தெளிவுரை: பக்தியின்பால் திளைக்கப் பெற்றுச் சிவபெருமானுக்கு அடியவராகிய அன்பர்கள், தமக்குள் ஒன்று கூடும்போது ஒருவரை ஒருவர் தலைதாழ்த்தி வணங்குவது போன்று, பால் முற்றிக் கதிர்களைத் தலையாய்க் கொண்ட சாலி என்னும் நெற்பயிர் தலைதாழ்த்தி விளங்குவதாயின.

சிறப்புரை: இப்பாடலின் வாயிலாக நெல் விளைச்சலால் நாட்டின் வளமும், மெய்ஞ்ஞானம் வாய்க்கப் பெற்ற அடியார் பெருமக்களின் சிறப்பும், ஒன்றிற்கொன்று உவமையாகுமாறு தன்முனைப்பற்று வணக்கம் உடையவர்களாய் இருத்தலைச் சுட்டுதலும் ஆயிற்று.

பரமனுக்கு ஆள் - சிவனடியார்: இவர்களே அன்பின் தலைப்படுபவர் என்க. மொய்த்த நீள்பத்தி - நெருங்கி நீண்டு வரிசையாக விளங்கும் நெற்பயிர். பால்முதிர் - பால் முற்றி நெல்மணிகள் விளங்குதல். தலை வணங்கி - கதிர் சாய்ந்திருத்தல். வித்தகர் - மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற சிவனடியார். சாலி - நெற்பயிர். 22

73. அரிதரு செந்நெல் கூட்டின்
அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன்
படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின்
சுடர்ப்பெரும் பொருப்பு உயர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி
பொழிந்து இழி வெற்பு வைப்பார்.

தெளிவுரை: நெற்கதிர்களை அரிந்து அரிகளாகச் சேர்த்து அடுக்கி ஒன்று சேர்த்துக் கட்டுகளாக்கி, அவற்றைக் களைந்து பின்னர் சிதறாமல் பரிவோடு அடித்து, முத்துக்கள் போன்ற நெல்மணிகளை அவ்வுழவர்கள் மலை போலச் சேர்ப்பார்கள். வளைந்த சங்குகளிலிருந்து தோன்றிய முத்துக்களை ஒளி திகழும் பெருமலை போன்று அவர்கள் குவித்து வைப்பார்கள். மற்றும் கற்றையாக விளங்கி விரிந்த மலர்களிலிருந்து மலையிடையே ஒழுகிவரும் தேனை முகந்து வைப்பார்கள்.

சூடு - நெல் அரிக்கட்டு. சுரிவளை - சங்கு. வேரி - தேன். 23

74. சாலியின் கற்றை துற்ற
தடவரை முகடு சாய்த்துக்
கால்இரும் பகடு போக்கும்
கரும்பெரும் பாண்டில் ஈட்டம்

ஆலிய முகிலின் கூட்டம்
அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலம் கொண்டு சூழும்
காட்சியின் மிக்கது அன்றே.

தெளிவுரை: சாலியில் நெற்கதிர்கள் நீங்கப் பெற்ற தாள்கள் பெரிய மலை போன்று விளங்க, அவற்றைச் சாய்த்துத் தரையில் விரித்து, எருமைக் கடாக்களைப் பிணைத்து வட்டமாக நடக்கச் செய்யும் காட்சியானது இமயமலைச் சாரலில் நெருங்கிய முகிலின் கூட்டம் வலம் வருதலைப் போன்று விளங்கும்.

பகடு - எருமைக்கடா. பாண்டில் - வட்டம். சிமயம் - மலையுச்சி. 24

பல்வகையான சிறப்பியல்புகளை விளம்புதல்
- இது முதல் அடுத்த பத்து பாடல்கள் ஒரு தொடர்

75. வைதெரிந்து அகற்றி ஆற்றி
மழைப்பெயல் மானத் தூற்றிச்
செய்யபொன் குன்றும் வேறு
நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானம்
கரக்கஆக் கியநெல் குன்றால்
மொய்வரை உலகம் போலும்
முளரிநீர் மருத வைப்பு.

தெளிவுரை: எருமைக்கிடாக்களைக் கொண்டு நெல்தாள்களை மிதிக்கச் செய்து, கைத்தொழிலில் வல்ல உழவர்கள். வைக்கோலை ஆராய்ந்து எடுத்து அகற்றி, நெல்லை ஒன்று சேர்த்து, மழைத்துளிகள் போன்று சேர்த்த நெல் நவமணிக்குன்றுகளைப் போன்று வானத்தை மறைத்து விளங்கும். இத்தகைய நெல் மலைகளால் தாமரை விளங்கும் நீர் நிலைகளையுடைய மருத நிலமானது மலைகள் சூழ்ந்த குறிஞ்சி நிலம் போன்று தோன்றும்.

சிறப்புரை: செந்நெல், வெண்ணெல், கருநெல் முதலியவான குவியல்கள் நவமணிகளுக்கு உவமையாக உரைக்கப்பட்ட தாயிற்று.

வை - வைக்கோல். மழைப்பெயல் - பதர்கள் அகலுமாறு முறங்கொண்டு தூற்றப்பறக்கும் துகள்கள், மழைத்துளிச் சிதறலுக்கு உவமை சாற்றப்பட்டது. செய்ய பொன்குன்று - செந்நெல். சிலம்பு - மலை. கைவினை - கைத்திறம். மிக்க செயல் மள்ளர் - உழவர். கரக்க - மறைக்க. மொய்வரை உலகம் - குன்றுகள் சூழ விளங்கும் குறிஞ்சி நிலம். முளரி - தாமரை. 25

76. அரசுகொள் கடன்கள் ஆற்றி
மிகுதிகொண்டு அறங்கள் பேணிப்
பரவரும் கடவுள் போற்றிக்
குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி
விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி
மலர்ந்துள பதிகள் எங்கும்.

தெளிவுரை: அரசனுக்கு உரிய ஆறில் ஒரு பங்கு என்னும் அளவில் தம் வருவாயிலிருந்து செலுத்தி, எஞ்சியதைக் கொண்டு அகங்கள் செய்தும், பரவுதற்கு அரிய சிவ வழிபாட்டைச் செய்தும், ஆசாரியர், விருந்தினர், பண்பின் மேவும் உறவினர் ஆகியோரைத் தாங்கியும் விளங்குகின்ற குடிமக்கள், மலை போன்று உயர்ந்து விளங்கும் மாட மாளிகைகளில் வாழ்பவராவர். இவ்வாறு மலிந்து விளங்கும் மாட மாளிகைகளையுடைய நகரங்கள் பலவாயின.

அரசு கொள்கடன் - ஆறில் ஒரு பங்கு வரி. மிகுதி - எஞ்சியது. குரவர் - ஆசாரியர். கிளை - சுற்றம். குடிகள் - குடி மக்கள். வரைபுரை - மலையை ஒத்து உயர்ந்து விளங்குகின்ற. மாடம் - மாட மாளிகைகள். பதிகள் - ஊர் மலர்ந்துள - நிறைந்துள்ளன. 26

77. கரும்படு களமர் ஆலைக்
கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட
தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச்சாலை தோறும்
பிறங்கிய புகையோ வானின்
வரும்கரு முகிலோ சூழ்வ
மாடமும் காவும் எங்கும்.

தெளிவுரை: கரும்பின் சாற்றை எடுத்துக் காய்ச்சுவதால் எழுகின்ற புகையும், மாதர்கள் தம் கூந்தலுக்கு மணம் சேர்க்கும் வகையில் மூட்டுகின்ற அகிற்புகையும், யூபத் தம்பங்களை நிறுத்திச் செய்யப்படும் புகையும், வானில் தோன்றும் மழைமேகமோ என்று கூறும்படியாக அப்பதிகள்தோறும் விளங்கும் மாட மாளிகைகளிலும், சோலைகளிலும் படர்வன.

அடு களமர் ஆலை - கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுகின்ற ஆலை. சுரும்பு - வண்டு. கா - சோலை. 27

78. நாளிகே ரம்செ ருந்தி
நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லம்த மாலம்
குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாள்இரும் போந்து சந்து
தண்மலர் நாகம் எங்கும்
நீள்இலை வஞ்சி காஞ்சி
நிறைமலர்க் கோங்கம் எங்கும்.

தெளிவுரை: ஆங்கு, தென்னை, செருந்தி, நறுமண மலர் கொண்ட நாரத்தை, அரசு, ஆச்சா, பச்சிலை மரம், குரவம், அடிப்பருந்த பனை, சந்தனம், நாகம், வஞ்சிக்கொடி மற்றும் காஞ்சி. கோங்கு ஆகிய மரங்கள் எல்லா இடங்களிலும் விளங்குவன.

நாளிகேரம் - தென்னை, நரந்தம் - நாரத்தை. கோளி - அரசு மரம் : பூவாமற் காய்ப்பது என்க. சாலம் - ஆச்சா மரம். தமாலம் - பச்சிலை மரங்கள். தாள் - அடிப்பாகம். இரும்போந்து - பருத்த பனைமரம். சந்து - சந்தன மரம். நாகம் - நாக மரம். வஞ்சி - வஞ்சிக் கொடி. காஞ்சி - ஆற்றுப் பூவரசு. 28

79. சூதபா டலங்கள் எங்கும்
சூழ்வழை ஞாழல் எங்கும்
சாதிமா லதிகள் எங்கும்
தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும்
வகுளசண் பகங்கள் எங்கும்
போதுஅவிழ் கைதை எங்கும்
பூகபுன் னாகம் எங்கும்.

தெளிவுரை: மா, பாதிரி, சுரபுன்னை, குங்குமம், சாதி, மல்லிகை ஆகிய மரங்களும், செடிகொடிகளும் மல்கி விளங்குவன. நறுமணம் கமழும் குருக்கத்தி, மகிழமரங்கள், சண்பகம் ஆகியனவும், மடல் விரிந்த தாழையும், பாக்கு மற்றும் புன்னை மரங்களும் இனிது விளங்குவன.

சூதம் - மா. பாடலம் - பாதிரி. வழை - சுரபுன்னை, ஞாழல் - குங்கும மரம், கோங்கு. புலிநகக்கொன்றையும் ஆம். சாதி - சாதிமரம், சாதிக்காய், சிறுசண்பகம், தேக்குமரம். மாலதி - மல்லிகை, முல்லை. நறவம் - அனிச்ச மரம், வாசனை மரம், மயிற்கொன்றை. கைதை - தாழை பூகம் - கமுகம், பாக்குமரம். புன்னாகம் - புன்னை மரம். 29

80. மங்கல வினைகள் எங்கும்
மணம்செய்கம் பலைகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும்
பண்களின் மழலை எங்கும்
பொங்குஒளிக் கலன்கள் எங்கும்
புதுமலர்ப் பந்தர் எங்கும்
செங்கயல் பழனம் எங்கும்
திருமகள் உறையுள் எங்கும்.

தெளிவுரை: மனைகளில் மங்கலச் சடங்குகள் நடத்தலும், திருமணம் நடைபெறும் ஆரவாரமும் நிலவும். தாமரை போன்ற முகங்களையுடைய மகளிர் இனிய பண்களை இசைக்கவும், ஒளி திகழும் ஆபரணங்களை அணிந்து மாதர்கள் விளங்க, மலர்ப்பந்தலின் கண் மகிழ்ந்து திளைப்பார்கள். எல்லா இடங்களிலும் வளம் பெருகும் நிலையில் திருமகள் வாசம் செய்ய, வயல்களில் நீர்வளம் மிகுந்த கெண்டை மீன்கள் விளங்குவதாயின.

மங்கல வினை - காதணி, முதலான சுபநிகழ்ச்சிகள். மணம் - திருமணம். கம்பலை - ஆரவாரம், முழக்கம். பங்கயம் - தாமரை. கலன் - ஆபரணம். பழனம் - வயல். உறையுள் - இருப்பிடம், வாழும் இடம்.

30

81. மேகமும் களிறும் எங்கும்
வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும்
இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும்
ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும்
புண்ணிய முனிவர் எங்கும்

தெளிவுரை: மேகம் போன்ற களிறும், வேதமும், அதனை ஓதும் இடமும், யாகமும் அதற்குரிய சடங்கும், இன்பமும் அதனால் காணும் மகிழ்வும், யோகமும் அதன் பயனாய் மேவும் தவமும், அடிக்கடி சஞ்சாரம் செய்தலாகிய போக்குவரத்தும், அதற்குரிய தெருக்களும், போகமும், அதனால் மலரும் பொலிவும் ஆங்கு நிலவி விளங்குவன. அதனுடன், புண்ணியத்தை நாட்டும் முனிவர்கள் திகழ்ந்தோங்கினார்கள்.

கிடை - வேதம் ஓதும் இடம். ஊசல் - போக்குவரத்து, நடமாட்டம். மறுகு - தெரு.

31

82. பண்தரு விபஞ்சி எங்கும்
பாதசெம் பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும்
வளர்இசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும்
சொல்வது இருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும்
தாதகி பலவும் எங்கும்.

தெளிவுரை: இனிய பண்ணை எழுப்பும் யாழ், மனைகள் தோறும் விளங்க, மகளிர் தம் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு பூசி மகிழ்வர். மகளிர் கூந்தலில் வண்டுகள் ரீங்காரம் செய்ய, இனிய புல்லாங்குழலின் இசை இனிது எழும்பும். சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் அன்பர்கள் தம் இருப்பிடத்தில் இனிது விளங்குபவர்களாய், இருக்கு முதலான நான்கு வேதங்களையும் ஓதுபவர்களாவர், சோலைகள் பலவும் விளங்க ஆத்தியும் பலாவும் நிலவும்.

இப்பாடலில் மடக்கு அணி விரவி வந்தமை காண்க. இப்பாடலை அடுத்தும், இவ்வணி வந்துள்ளமை காண்க.

விபஞ்சி - யாழ். செம்பஞ்சி - மகளிர் காலில் அணியும் செம்பஞ்சுக் குழம்பு. வண்டு அறை குழல் - வண்டு ரீங்காரம் செய்யும் கூந்தல். வளர் இசைக் குழல் - இனிய இசை தரும் புல்லாங்குழல். தொண்டர்தம் இருக்கை - ஓதுவது இருக்கு முதலான வேதங்கள். தண்டலை - சோலை. பலவும் - பலவாம். தாதகி - ஆத்தி மரம். பலவும் - பலா மரமும். 32

83. மாடுபோ தகங்கள் எங்கும்
வண்டுபோது அகங்கள் எங்கும்
பாடும்அம் மனைகள் எங்கும்
நீடுகே தனங்கள் எங்கும்
நிதிநிகே தனங்கள் எங்கும்
தோடுசூழ் மாலை எங்கும்
துணைவர்சூழ் மாலை எங்கும்.

தெளிவுரை: பக்கங்களில் யானைக் கன்றுகள் விளங்க, மலரில் விளங்கும் வண்டுகள் இல்லங்களில் சென்று இசை எழுப்பும். வீடுகள்தோறும் சிறுமியர்கள் அம்மானை என்னும் விளையாட்டை ஆடுவார்கள். எல்லா இடங்களிலும் கொடிகள் பறந்து விளங்கும். நிதி விளங்கும் அறக்கட்டளைகள் விளங்கித் திருக்கோயில்களில்

அறச்செயல்கள் நிலவும். இதழ்கள் விளங்கும் பூமாலைகள் எங்கும் விளங்க, நாயக நாயகியர் வரிசையாகச் சூழ்ந்திருப்பார்கள்.

போதகம் - யானைக்கன்று. வண்டு போதுஅகம் - வண்டு பாடும் மலர் இடங்கள். பாடும் அம்மனைகள் - வண்டு இசை பாடும் இல்லங்கள். பயிலும் அம்மனைகள் - சிறுமியர் அம்மானை ஆட்டம். கேதனம் - கொடி. நிகேதனம் - தெய்வ வழிபாடு, அறச்செயல். தோடு சூழ் மாலை - இதழ்கள் சூழ்ந்த பூமாலை துணைவர் சூழ்மாலை - நாயக நாயகியராகத் திகழும் வரிசை. மாலை - வரிசை. 33

84. வீதிகள் விழவின் ஆர்ப்பும்
விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா
தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளு மாவும்
நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும்
உறுபிணி வரத்தாம் அஞ்சும்.

தெளிவுரை: ஆங்கு வீதிகள் தோறும் திருவிழாக்களின் ஆரவாரம் பெருகும் விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதால் மகிழ்ச்சியாரவாரம் விளங்கும். குலமுறைப்படி அவரவர்கள் தம் தொழிலை நன்னெறியில் தவறாது புரிவார்கள். மனையில் உள்ள ஆடவர்கள் பிறன்மனை நோக்காத பேராண்மையுடையவர்களாகி இனிது விளங்குபவர்களாவர். பறவைகளும், விலங்குகளும் பகைமையொழிந்து விளங்கும். பூவுலகத்தில் செல்வப் பேற்றை வழங்கும் திருமகள் விரும்பி வாசம் செய்வாள். சிவாயநம என்னும் ஐந்தெழுத்து ஓதப்படுவதால் புறத்தே காணும் பிணியும், அகத்தே ஒளிக்கும் பிணியும் வருவதற்கு அஞ்சி விலகிச் செல்லும்.

தனயர் - ஆடவர். மனையில் தப்பா - மனைவியையன்றிப் பிறமாதரை நெஞ்சாலும் கருதாத பேராண்மையுடன் விளங்கினர் என்பதாம். புள் - பறவை. மா - விலங்கு. நிலத்து இருப்பு உள்ளும் மா - நிலவுலகில் பொருந்தி விளங்கும் திருமகள். எழுத்தாம் அஞ்சு - திருவைந்தெழுத்து. அஞ்சும் - அஞ்சி நீங்கும். 34

கவிக்கூற்று

85. நற்றமிழ் வரைப்பின் ஓங்கும்
நாம்புகழ் திருநாடு என்றும்
பொன்தடந் தோளால் வையம்
பொதுக்கடிந்து இனிது காக்கும்

கொற்றவன் அநபா யன்பொன்
குடைநிழல் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால்
வரம்புற விளம்பல் ஆமோ!

தெளிவுரை: இனிய நற்றமிழ் வழங்கும் நாட்டில் இனிது ஓங்கி விளங்குகின்றதும் நாம் புகழ்ந்து சாற்றுவதுமான திருநாடாகிய சோழ நாட்டில் பிற அரசர்களுக்குடைய பொதுமையை நீக்கி அழகிய பெரிய தோள் கொண்டு உலகத்தை இனிது காக்கும் கொற்றவனான அநபாய சோழனின் பொன்மயமாக ஒளிரும் வெண் கொற்றக்குடை நிழலில் யாவும் தண்ணொளி கொண்டு விளங்குகின்றது என்றால் அவற்றின் பெருமையை நம்மால் எல்லைக்குட்படும் வார்த்தைகளால் விளம்புதல் இயலுமோ!

அநபாய சோழனின் இனிய ஆட்சியால் சோழநாடு பெருமை யோடு விளங்குவதாகும் எனச் சாற்றப்பட்டது. இது கவிக் கூற்று.

தமிழ்வரை - தமிழ் பேசும் நாடு. திருநாடு - சோழ நாடு, குளிர்வது - தண்மையோடு விளங்குவது. வரம்புற - எல்லைக் குட்படுத்தப்படும் சொற்கள் கொண்டு உரைத்தல் 35

திருநாட்டுச் சிறப்பு நிறைவுற்றது.

4. திருநகரச் சிறப்பு

பூமிதேவியின் இதயக் கமலம் போன்று திருவாரூர் விளங்குவது என்று பாடல் 23 - இல் நவின்றவாறு இவண் திருவாரூர் நகரத்தின் சிறப்பு உரைக்கப்படுவதாயிற்று. தவிரவும் கயிலைமலையிலிருந்து பூவுலகில் போந்தருளிய நம்பிஆரூரர். பரவை, சங்கலி ஆகியோருள் பரவையாரின் பிறப்பிடமாகவும், நம்பியாரூரர் இருந்து திருத்தொண்டு செய்த இடமாகவும் விளங்கியது இந்நகரமே என்க. இவண் மனுநீதிச் சோழனின் நீதிமுறையும் அவனைப் பாராட்டி விளங்கிய தெய்வ அருளும் இனிது சாற்றப்படுவதாயிற்று.

திருவாரூர்ச் சிறப்புரைத்தல்

- இது முதல் அடுத்த நான்கு பாடல்கள் ஒரு தொடர்

கலிவிருத்தம்

86. சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னும் மாமல ராள்வழி பட்டது
வன்னி ஆறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்

தெளிவுரை: வன்னிப்பத்திரம், கங்கை, பிறைச்சந்திரன் ஆகியவற்றைத் தம் சிவந்த சடை முடியில் சூடிய மேலானவராகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவாரூர் என்கிற திருநகரம் மேற்கூறிய சோழநாட்டின் கண் தொன்மை வாய்ந்த சிறப்புடையது. அது திருமகள் சிவபெருமானை வழிபட்ட திருத்தலமாகும்.

சிறப்புரை: சிவபெருமான் தியாகராஜர் என்னும் திருநாமத்தில் விளங்கும் இத்தலத்தின் சிறப்பினைச் சாற்றும் வகையில் செஞ்சடைச் சென்னியார் திருவாரூர் எனப்பட்டது. இத்திருத்தலத்திற்கு வேறு பெயர்கள் உள்ளன. அவை வருமாறு :

1. ஷேத்ரவரபுரம்
2. ஆடகேசுரபுரம்
3. தேவயாகபுரம்
4. முசுகுந்தபுரம்
5. கலிசெலாநகரம்
6. அந்தரகேசுபுரம்
7. வன்மீகநாதபுரம்
8. தேவாசிரியபுரம்
9. சமற்காரபுரம்
10. மூலாதாரபுரம்
11. கமலாலயபுரம் என்பன.

சிவபெருமான் திருவாரூரில் திருக்கோயில் கொண்டு விளங்கும் தன்மையைத் திருநாவுக்கரசர்,

"பாதத்தால் முயலகனைப் பாதுகாத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ!
கீதத்தை மிகப்பாடும் அடியார்க்கு என்றும்
கேடிலா வானுலகம் கொடுத்த நாளோ!
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
பொய்யுரையா மறை நால்வர் விண்ணோர்க்கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ! பின்னோ!
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே."

- 6 ஆம் திருமுறை, திருவாரூர்த் திருப்பதிகம்.

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக. மற்றும் இத்திருத்தலத்தின் தொன்மையைச் சாற்றும் வகையில், "மான் மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாகம் திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ, திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!" எனவும்,

"மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!"

எனவும் அருளிச் செய்தவாறும் காண்க.

சொன்னாடு - இதுவரை சாற்றிவந்த சோழநாடு. மாமலராள் - திருமகள். வன்னி - வன்னிப் பத்திரம். ஆறு - கங்கை. மதி - சந்திரன். செஞ்கடைச் சென்னியார் - சடைமுடியைத் தலையில் கொண்ட சிவபிரான். 1

87. வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழவு ஓசையும்
கீத ஓசையு மாய்க் கிளர்வு உற்றவே.

தெளிவுரை: வேதங்களை ஓதுகின்ற ஓசையும், வீணையின் இனிய ஓசையும், ஒளிவடிவமாக விளங்கும் தேவர்கள் சிவபெருமானைத் துதித்து ஏத்தும் ஓசையும், அழகிய பெண்கள் சிலம்பு அணிந்து நடனம் புரிகின்ற ஓசையும், அந்நடனத்திற்கு ஏற்ப முழவு ஒலிக்கின்ற ஓசையும், இனிய பாடல்களைப் பாடிப் பரவும் ஓசையும் என மனத்திற்கு மகிழ்ச்சியை நல்கும் வகையில் யாவும் அந்நகரின் கண் பெருகி எழுந்தன.

சோதிவானவர் - ஒளி வடிவமுள்ள தேவர்கள். மாதர் ஆடல்மணி - அழகிய பெண்கள் நடனம் புரிவதற்காகக் காலில் அணியப் பெற்ற அழகிய சிலம்பு. இது மாணிக்கப் பரல்களையுடையது என்க. கீதம் - இசைப்பாடல். 2

88. பல்இ யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேர்ஒலி
மல்லல் யானை ஒலியுடன் மாஒலி
எல்லை யின்றி எழுந்துள எங்கணும்

தெளிவுரை: பல்வகையான வாத்தியங்கள் எல்லா இடங்களிலும் பரவ, செல்வம் பெருகும் வீதியில் செழிப்பான மணித்தேர் செல்லும் ஒலி, குன்று போல் விளங்கும் யானைகளின் ஒலியோடு, குதிரைகள் செல்லும் ஒலியும் அளவில்லாது எழுந்தன.

பல்இயம் - பல்வகையான வாத்தியங்கள். மல்லல் - வளமான. மா - குதிரைகள். 3

89. மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளரம் நீடரங்கு எங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம்பு ஆர்ப்பன.

தெளிவுரை: மாட மாளிகைகள், மிக உயர்ந்த அளவு கட்டப்பட்ட மண்டபம், அகன்று விளங்கும் கூடங்கள், கோபுரம், திண்ணைகள்,

சாளரங்களையுடைய நீண்ட அரங்குகள் என எல்லா இடங்களிலும் நடன மாதர்கள் சிலம்பணிந்து ஆடுகின்ற ஒலியாரவாரம் விளங்கும்.

சூளிகை - உயர்ந்து விளங்கும் இடம். தெற்றி - திண்ணை மேடை. ஆடல்மாதர் - நடனமாதர். 4

பரவையாரின் திருமாளிகையை விளம்புதல்

90. அங்கு உரைக்குஎன் அளவுஅப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்ஒன்று சம்புவின்
பங்கி னாள்திருச் சேடி **பரவையாம்**
மங்கை யார்அவ தாரம்செய் மாளிகை.

தெளிவுரை: நடன மாதர்களாகிய பதியிலார் வாழும் மாளிகைகளுள் சிவபெருமானுடைய இடப்பாகத்தைக் கொண்ட உமாதேவியின் அழகிய தோழியான கமலினி என்பவர் பரவையார் என்னும் பெயர் கொண்டு அவதாரம் செய்த மாளிகையும் ஒன்றாய் விளங்குவது.

சிறப்புரை: உமாதேவியின் சேடியார்களான அநிந்திதை, கமலினி ஆகியோரில் கமலினி என்பவர் திருஅவதாரம் செய்த மாளிகையைப் பற்றி இவண் சாற்றப்பட்டது. இதன் விரிவான செய்தியைப் பாடல் 277-இல் (தடுத்தாட் கொண்ட புராணம் - பாடல் 131) காண்க.

பதியிலார் - இவர்கள் ஆடவர் பிறரைப் பதியாகக் கொள்ளாதவராய்ச் சிவபெருமானுக்கு ஆற்றும் தொண்டே மேன்மையுடையது என்னும் கொள்கையில் விளங்கும் மாதர். சம்பு - சிவபெருமான். பங்கினாள் - இடபாகம் கொண்டு விளங்கும் உமாதேவி. திருச்சேடி - கயிலையில் விளங்கிய அநிந்திதை, கமலினி என்பவர்களுள் கமலினி ஆவர்: மற்றும் பாடல் வ.எண் 33, 34 திருமலைச் சிறப்பு 23, 24 காண்க. 5

சிவபெருமான் தூதுரை செய்யும் வகையில் சென்ற திருப்பாதப் பொலிவை உரைத்தல்

91. படர்ந்த பேரொளிப் பல்மணி வீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூது போய்
நடந்த செந்தா மரைஅடி நாறுமால்.

தெளிவுரை: பேரொளியுடன் அகன்று விளங்கும் வீதியில் ஈசன் திருவடியைக் காணப் பூமியைத் தோண்டிக் கொண்டு பன்றி வடிவம் தாங்கிச் சென்ற திருமாலும், திருமுடியைக் காண ஆகாயத்தில்

அன்ன வடிவம் தாங்கிப் பறந்து சென்ற பிரமதேவனும் காண்பதற்கு அரியவராகிய சிவபெருமான், வன்தொண்டரான சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தூது சென்ற வகையில் நடந்து சென்றதால் செந்தாமரை மணம் கமழும்.

சிறப்புரை: சிவபெருமானின் மலர்ப்பாதம் ஆரூர் வீதிகளில் படிந்ததால் அந்நகர் நறுமணம் கொண்டு திகழ்வதாயிற்று எனச் சாற்றப்பட்டது. இதன் வழி திருமாலுக்கும், பிரமதேவருக்கும் காணற்கரியவரான சிவபெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருவாரூரில் வீதி வழியே நடந்து சென்று அடிமுடி காணுமாறு விளங்கினார் எனப்பட்டது.

பேரொளிப் பல்மணி வீதி - ஒளி மிகுந்த அகன்ற திருவாரூர் வீதிகள். பார் இடந்த - பூமியைத் தோண்டிச் சென்ற. ஏனம் - பன்றி வடிவம் தாங்கிய திருமால். அன்னம் - அன்னப் பறவை வடிவம் தாங்கிய பிரம தேவன். வன்தொண்டர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். தூது போய் நடந்த - பரவையாரின் மனையை நோக்கித் தூது சென்ற சிவபெருமான் திருவருட் செயலை உரைத்தவாறு ஆயிற்று. இதன் விரிவானது ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் உரைத்தவாறு காண்க. செந்தாமரை அடி - சிவபெருமான் திருப்பாத மலர். நாறும் - மணம் பெறும் : இவண் திருவருள் மணத்தைச் சுட்டுமாறு கொள்க. ஆல் - அசைச் சொல். 6

திருவாரூர் வீதிகளின் சிறப்புரைத்தல்

92. செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு கோதையின் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால்

தெளிவுரை: அழகிய கண்களையுடைய மாதர் தெருவில் தெளித்த சிவந்த குங்குமக் குழம்பில், அவர்கள் கூந்தலில் நெருக்கமாகச் செருகப்பட்ட பூமாலைகளின் பூந்தாதுகள் வீழ அவை, அக்குழம்பால் மேவிய சேற்றை உலரச் செய்யும்.

குழல் - கூந்தல். கோதை - பூமாலை. அளறு - சேறு. 7

திருப்பதிகங்களைப் பாடும் கிளிகள்

93 உள்ளம் ஆர்உரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்.

தெளிவுரை: இடப வாகனத்தில் ஊர்ந்து செல்லும் தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவாரூரில் எல்லா இடங்களிலும் இனிய ஓசையுடைய திருப்பதிகங்களைக் கிளிகள் பாடும். அவற்றை நாகணவாய்ப் பறவைகள் கேட்டு மயங்கும். இத்தன்மையில் பக்தி நிலையில் உள்ள மாந்தர்களில் மனம் கசிந்து உருகாதவர் யாவர் உளர்?

சிறப்புரை: மாந்தர்கள் பக்தியின் வயத்தராகிப் பாடும் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் கிளிகளும் நன்கு பயின்று பாடும் என்க. இதன் வழி மக்களின் பக்திச் சிரத்தையும் நவில்வதாயிற்று.

ஊர் விடை - ஊர்ந்து செல்லும் இடப வாகனம் வள்ளலார் - சிவபெருமான்: இவண் தியாகேசப் பெருமானைக் குறித்தது. இத்தகைய அரிய சொல்லை நாயன்மார்களைக் குறிக்குமாறு சாற்றியமையும் ஆங்காங்கே காண்க. பைங்கிள்ளை - கிளி. பூவை - நாகணவாய்ப் பறவை. 8

கடைத் தெருக்களின் சிறப்புரைத்தல்

94. விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல ஆறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள்.

தெளிவுரை: கடைத்தெருக்களில் ஒளி திகழும் ஆபரணங்கள் விளங்குவதாலும், இடையறாத பேரொலி எப்போது கேட்டுக் கொண்டிருப்பதாலும், வளம்பெறும் பல்வகையான பொருள்கள் பல வழிகளின் வழியாக வந்து சேர்வதாலும் அவை கடலை நிகர்த்து விளங்குவன.

சிறப்புரை: கடலுக்குரிய உறுப்புகளான மணிகள். இடையறா ஓசை, பலவான வழித்தடம் ஆகியன முறையே கலன்கள் எனவும். பேரொலி எனவும், பல ஆறு சேர்தல் எனவும் ஓதப் பெறுதல் காண்க.

விளக்கம் - பொலிவு. கலன் - ஆபரணங்கள்: கடலின் உறுப்பான மரக்கலன்களைக் குறித்தது. துளக்கில் பேரொலி - கடைத் தெருவில் உண்டாகும் ஓசையைக் குறித்தது. இதனைக் கடலுக்குரிய அலையோசை என்க ஆறு - வழிகள். கடலைக் குறித்த நிலையில் நீர் மேவும் ஆறுகள் என்க. அளக்கர் - கடல். ஆவண வீதி - கடைத்தெரு. 9

பல்வேறு சிறப்புகளை விளம்புதல்

- இது முதல் அடுத்த மூன்று பாடல்கள் ஒரு தொடர்

95. ஆர ணங்க ளேஅல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழாங்குமால்
சீர்அ ணங்கிய தேவர்க ளேஅலால்
தோர ணங்களில் தாமமும் சூழுமால்

தெளிவுரை: தெருக்களில் வேத ஒலிகளே யல்லாது யானைகளின் முழக்கங்களும் மாறி முழங்கும். சீர் விளங்கும் தேவர்களே யல்லாது மனைகள்தோறும் தோரணங்களும், பூமாலைகளும் பெருகி அலங்கரிக்கப்பட்டு விளங்கும்.

ஆரணம் - வேதம். வாரணம் - யானை. தாமம் - பூமாலை. 10

96. தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வேறு இடத்ததுஅத் தொல்நகர்.

தெளிவுரை: தொன்மையான நகராகிய அத்திருவாரூரில் நீண்ட சடைமுடி கொண்டு விளங்கும் முனிவர்களும், சிவபெருமானையே ஏத்தி வழிபடும் அன்பர்களும், தவம் செய்யும் மாண்புடைய சீலர்களும், புலன்களைச் சார்ந்த பற்றை விடுத்து, இல்லற மாண்பில் உடமையாற்றும் தூய மாந்தர்களும், வேதம் ஓதும் மறையவர்களும், கொடைத்தன்மை மிகுந்து விளங்கி ஈத்துவக்கும் இன்பம் உடையவர்களும் எல்லா இடங்களிலும் பரவிச் சூழ்ந்து விளங்குபவராயினர்.

வேணி - சடை சைவர் - சிவபெருமானையே வழிபடும் நெறியினர். தபோதனர் - தவ வாழ்வில் நிற்கும் தூயவர். வாழ்ந்த சிந்தை முனிவர் - புலன்களால் தாக்கப்படாது இல்லற வாழ்வில் திளைத்து மேவும் தூய்மையுடையவர் முனிவர் - அந்தணர், தூய்மையுடையவர். வீழ்ந்த - விரும்பிய. இன்பத்துறை - ஈத்துவக்கும் இன்பத்தின் சிறப்புணர்ந்து கொடை விளங்கும் சான்றோர். இவண் பல்வேறுபட்ட மக்களின் எழில் பற்றிச் சாற்றிய வகையில் காதல் இன்பத்தை நுகர்பவர் எனினும் அமையும். தொல்நகர் - பழமையான நகராகிய திருவாரூர். 11

97. **நிலம கட்குஅழ கார்திரு நீள்நுதல்**
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்து
அலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.

தெளிவுரை: அளவில்லாத சிறப்புடைய பழம்பதியான திருவாரூர், பூமிதேவியின் அழகிய நெற்றிக்குத் திலகம் போன்றது. சோழமன்னர்கள் வாழும் அந்த நகரம், திருமகளுக்குரியதான வளமிக்க தாமரை போன்று மலர்ந்து விளங்குவதாகும்.

சிறப்புரை: திருவாரூர் நகரம் இவண் பூமிதேவியின் இதயத்தாமரையென விளங்குவதாகப் பாடல் 43 - இல் சாற்றியவாறும் காண்க.

நிலமகள் - பூமிதேவி. நுதல் - நெற்றி. திலகம் - நெற்றிப் பொட்டு. செம்பியர் - சோழர்களின் மரபுப்பெயர். மலர்மகள் - திருமகள். வண்தாமரை - தாமரை மலர் தன்னுடைய நறுமணத்தால் நெடிது தூரம் இன்பம் கமழச் செய்தலோடு, மக்கள் வறுமையில்லாதவாறு வாழ்வதற்குத் திருமகளைத் தன்னிடத்தே தோற்றுவித்துச் செல்வத்தை வழங்கச் செய்தலால் வண்மை பெற்றதாயிற்று. வண் - வள்ளல் தன்மை. அலகில் - அளவில்லாத. ஆல் - அசைச்சொல். 12

மனுநீதி சோழனை உரைத்தல்

98. அன்ன தொல்நக ருக்குஅரசு ஆயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
பன்னு சீர் **அந பாயன்** வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்**மனு வேந்தனே.**

தெளிவுரை: அத்தகைய தொன்மையான நகரமான திருவாரூர்க்கு அரசனாக விளங்கியவன், சூரியனுடைய மரபில் தோன்றியவன். இவன் பெரும் புகழ் கொண்டு விளங்கும் அநபாய சோழனின் வழி முதல்வனாவன். அவன் ஒளி திகழும் மாணிக்கமாலையைத் தரித்த மனுநீதி சோழன் ஆவன்.

சேக்கிழார் சுவாமிகளின் காலத்தில் அநபாயன் ஆட்சி புரிந்த செம்மை நோக்கி, இவண் அநபாயன் வழிமுதல் எனப்பட்டது. சோழர்கள் சூரிய குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதாம்.

தொல்நகர் - திருவாரூர். மணிப்பூண் - மாணிக்க மாலை. 13

99. மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ்வு எய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான்.

தெளிவுரை: அம்மன்னன், நிலவுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் கண் போலவும், உயிர் போலவும் விளங்கும் பெருங்காவலாகத்

திகழ்பவன். தேவர்கள் மகிழ்வு கொள்ளும் வகையில் எண்ணற்ற வேள்விகளை மாண்பு திகழ் வேத நெறிப்படி இயற்றுபவனானான்.

இத்தகைய பெருமையுடையவன் மனுநீதி சோழன் ஆவன்.

சிறப்புரை: இவண் மனுநீதி சோழன் தம் குடிமக்களுக்குக் கண் போலவும் உயிர் போலவும் விளங்கி ஆட்சி புரிந்து வந்தான் என்பது முதல் இரண்டு அடிகளின் கருத்தாயிற்று. இத்தன்மையில், "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று மோசிகீரனார் என்னும் புலவர் (புறநானூறு, பாடல் 186) சாற்றிய வாறும் நோக்குக. தேவர்களுக்குரிய உணவாகிய அவிர்பாகத்தை அளிக்கும் வகையில் இச்சோழ மன்னன் அளவற்ற வேள்விகளை இயற்றியமை பன்னிரண்டு அடிகளில் சாற்றப்பட்டது.

மண் - நிலவுலகம். ஆவி - உயிர். காவலான் - பெரும் நேரிட்ட போது அதனைப் போக்கத் தன் மகனையே தேர்க்காலில் இடுவதற்குக் காரணமாயிற்று என்க. மாண - பெருமையுடைய வேள்வியைப் பெருமை விளங்க இயற்றுதலைக் குறித்தது. 14

100. கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திடச்
சுற்றும் மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான்.

தெளிவுரை: தன்னுடைய ஆட்சியின் ஆக்ஞா சக்கரம் உலகம் முழுவதும் பரவிச் சூழும் வகையில், சூழ்ந்து விளங்கும் நாட்டில் உள்ள மன்னர்கள் திறை செலுத்துவதற்காக வாயிற்புறத்தில் காத்திருக்கும் வகையில் பெருமை விளங்குமாறு திகழ்ந்தவன் சோழ மன்னன். அவன் பகை நீக்கியவனாய்ச் செம்மை விளங்குமாறு பண்டைய நாளில் சிறந்து விளங்கி, நீதிக்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொன்மை மனுவின் பெயர் தனக்கே உரியதாக்கியவனாய் விளங்கினான்.

நீதியில் சிறந்து விளங்கிய மனுவின் பெயர் கொண்டவனாகி அச்சோழன், மனுநீதி சோழன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான்.

ஆழி - ஆக்ஞா சக்கரம். குவலயம் - உலகம். திறை - கப்பம். கடை - வாயில். 15

மனு நீதி சோழன் சிவபூசைக்கு நிபந்தங்கள் வைத்தல்

101. பொங்கு **மாமறைப் புற்றிடம் கொண்டவர்**
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு
அங்கண் வேண்டும் **நிபந்தம்**ஆ ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால்.

தெளிவுரை : மனுநீதி சோழன் உயர்ந்ததாகிய சிவாகமத்தில் சொன்ன முறையின்படி புற்றிடம் கொண்ட புராதனனாகிய பெருமானும், எல்லா இடங்களிலும் நிலவி விளங்குபவருமாகிய சிவபிரானுக்குப் பூசனைக்குரிய நிபந்தங்களை நிறுவினான்.

சிறப்புரை: திருவாரூர் என்பது பிருத்துவித்தலமாதலின் அதன் சிறப்பும், புற்றுமண்ணிடை நிலவும் சிறப்பும் நவிலும் வகையில், பொங்கு மாமறை என்னும் அடைமொழி சாற்றப்படுவதாயிற்று. வேதம் தோன்றிய காலத்தைக் கூற முடியாதது போல, புற்றிடம் கொண்டவர் தோன்றிய காலத்தையும் கூற முடியாது என்பதாம். இதனை இனிது புகலும் வகையில் திருநாவுக்கரசர்,

"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஒருருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரிந்த நாளோ
மான் மறிக்கை ஏந்தியோர்மா தோர்பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே."

ஆறாம் திருமுறை, திருவாரூர்த் திருப்பதிகம்,
பாடல் - 340.

என அருளிச் செய்தவாறும் காண்க.

சிவபிரான் எங்கும் ஆகி இருந்து அருள் புரிதலால், ஆகம விதிப்படி திருவாரூரில் நிகழ்த்தும் பூசனையால் அப்பெருமானின் திருவருளும் எங்கும் ஆகி விளங்குவதாம் எனவும் கொள்க. இது திருத்தலச் சிறப்பினையும், திருவருட் சிறப்பினையும் ஒருசேர உணர்த்துதலாயிற்று.

பொங்கு மாமறை - வேத ஒலியானது சிவபிரானது பெருமையைப் போற்றிய நிலையில் அவன் திருவருளும் பூத்து ஓங்குதலைக்

குறிப்பால் சுட்டுவதாம். புற்று - மண் புற்று: இது திருக்கோயிலின் தலச் சிறப்பினையும் ஈசன் விளங்கும் எழிலையும் உணர்த்துலாயிற்று. ஆராய்ந்து - நன்கு தேர்ந்து : பூசனையே சிறப்புடையது என்று உணர்த்துதலாம். துங்க ஆகமம் - உயர்வுடையதாகிய சிவாகமம். முறைமை சிறப்பான நெறி. 16

மனு நீதி சோழனுக்குப் புதல்வன் பிறந்தல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

102. அறம்பெருள் இன்பம் ஆன
அறநெறி வழாமல் புல்லி
மறம்கடிந்து அரசர் போற்ற
வையகம் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி
திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப்
பேர்அரிக் குருளை அன்னான்.

தெளிவுரை: இவ்வாறு மனுவேந்தன் அறம், பொருள், இன்பம் என மேவும் அறநெறி பிறழாமல், அதனை முற்றுமாகத் தழுவி, அதருமத்தைக் கடிந்து போக்கி, ஏனைய அரசர்கள் எல்லாம் போற்றி வணங்குமாறு உலகத்தைப் பாதுகாக்கும் நல்லாட்சி புரியும் நாளில், சிறப்பாக முன் செய்த தவத்தால் அவன் பட்டத்து அரசியின் திருமணியென விளங்கும் வயிற்றில் உலகம் யாவும் போற்றும் வகையில் சிங்கக் குட்டி என்னுமாறு ஒரு மகன் பிறந்தான்.

சிறப்புரை: அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நாற்பொருளில் அறம், பொருள், இன்பம் ஆகியவை அறநெறி தவறாத அரசாட்சியின் வாயிலாக எய்துதலின் பொருட்டு "அறநெறி வழாமல் புல்லி" என்னும் அருந்தொடரால் உணர்த்தப்பட்டது. புல்லி என்பதற்குப் பாலில் நெய் கலந்து மேவுதல் போன்று அறநெறியில் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளும் தோய்ந்து விளங்குதலைப் புலப்படுத்தலாம். நாட்டில் தலைதூக்கும் அதர்மத்தைக் கடிந்து நீக்குதலோடு பிற அரசர்களின் பகையும் கடிந்து நீக்கியதால் அவர்களும் போற்றி வணங்குமாறு சோழச்சக்கரவர்த்தியாய் அம்மன்னன் விளங்கினான் எனவும் சாற்றுவதாயிற்று.

குற்றம் கடிந்து காப்பது அரசருக்குரிய முறைமை எனும் வகையில் திருவள்ளுவர்,

"குடி புறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்."

- திருக்குறள், 55. செங்கோன்மை, எண் - 549.

எனச் சாற்றியவாறும் நோக்குக. இத்தன்மையுடைய நீதி முறையே பின்னர் கன்றையிழந்த பசு, நீதி வேண்டி நிற்க, மன்னன் தீர்ப்பு வழங்குதற்கு அடித்தளமாயிற்று எனவும் காண்க.

முன் பாடலின் வாயிலாகச் சிவபூசனை பொலிவுடன் மேவுதற்கு நிபந்தங்களை உண்டாக்கிய அரசனின் வண்ணச் செயலைக் கூறி, அடுத்த பாடலின் வாயிலாகச் "சிறந்த நல்தவத்தால் தேவி திருமணி வயிற்றில் மைந்தன் பிறந்தனன் உலகம் போற்ற" என்றமையால் சிவபூசனையால் இம்மையில் பெறும் பயனும் மனத்திற் கொள்ளுமாறு சுட்டப் பெற்றது.

தந்தையைப் போன்றே புதல்வனும் பின்னர் சிறப்புடைய வனாகப் பொலிய உள்ளதைக் குறிக்கும் வகையில் "மைந்தன் பிறந்தனன் உலகம் போற்ற" என உரைத்தலாயிற்று. இதனை எடுத்தோதும் வகையில் திருவள்ளுவர்,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

- திருக்குறள் 236.

என நவின்றமையானும் காண்க.

வழாமல் - குறைவின்றி. புல்லி - தழுவி. மறம் - அதருமம். கடிந்து - நீக்கி. தேவி - மனுநீதி சோழன் மனைவி. திருமணி வயிறு - சிவபூசைப் பயனும், முன்பு செய்த தவப்பயனும் கொண்டு நன்மைந்தனைப் பெற்றெடுத்த வயிற்றுக்குச் சிறப்பு சேர்ந்தது. அரிக்குருளை - சிங்கக் குட்டி. 17

அரசன் மகன் வளர்ந்து இளவரசு பட்டம் கொள்ளுதற்கு அணியனாதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

103. தவம் முயன்று அரிதில் பெற்ற
தனி இளங் குமரன் நாளும்
சிவம் முயன்று அடையும் தெய்வக்
கலைபல திருந்த ஓதிக்

கவனவாம் புரவி யானை
தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே
எனவரும் பண்பின் மிக்கான்.

தெளிவுரை: தவத்தின் பயனாய்ப் பெறுதற்கு அரிய பெருஞ் செல்வம் எனப் பிறந்த அவ்வரச குமாரன் நாள்தோறும் முயன்று சிவபரம்பொருளை அடையச் செய்யும் வேதம், ஆகமம் முதலான தெய்வக்கலைகளைத் திருந்தக் கற்றுத் தேர்ந்தவனாகித் தன் குலத்துக்குரிய குதிரை, யானை, தேர்ப்படை முதலான படைத்தொழில்களிலும் பயின்றவனாய், இப்பிறவி பேறுடையது என்னுமாறு நற்பண்பு மேலோங்கத் திகழ்ந்தான்.

சிறப்புரை: ஐயம் திரிபு இன்றிப் பயிலும் கல்வியைத் "திருந்த ஓதி" என இவண் குறித்தலாயிற்று. இதனை திருவள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

- திருக்குறள் 391.

எனச் சாற்றியவாறும் நோக்குக.

அரிதில் பெற்ற - அருமையுடைய பொருளாகத் தவப்பயனால் முயன்று பெற்ற தெய்வக்கலை - வேதம், ஆகமம் முதலான கல்வி. திருந்த ஓதி - ஐயம் திரிபு இன்றிக் கற்பது. கவனவாம் புரவி - விரைந்த கதியும், தாவிப் பாய்தலும் உடைய குதிரை. படைத்தொழில் - வாட்போர், வேலெறிதல், ஈட்டி எறிதல், விற்றொழில் போல்வன. பவம் - பிறவி. பவம் முயன்றது - வினைப் பயனால் உலகில் பிறவி கொள்வதற்கான தன்மையைச் சுட்டுதலாம். பேறு - பாக்கியம் : பிறவியை நீக்குவதற்காக அமையப் பெறும் இப்பிறவி உண்மையில் பாக்கியம் உடையதாதலை உணர்த்துவது. 18

104. அளவுஇல்தொல் கலைகள் முற்றி
அரும்பெறல் தந்தை மிக்க
உளம்மகிழ் காதல் கூர
ஓங்கிய குணத்தால் நீடி
இளவரசு என்னும் தன்மை
எய்துதற்கு அணியன் ஆகி
வளர்இளம் பரிதி போன்று
வாழும்நாள் மைந்தன்.

தெளிவுரை: எல்லைக் கடங்காத கல்விகளில் தேர்ந்து விளங்கிய அவ்வரச குமாரன் பெறுவதற்கு அரிய தந்தையின் மனம் மிகுந்த

அன்பு பாராட்டும் வகையில் ஓங்குகின்ற நற்குணத்தால் பெருகி இளவரசுப் பட்டம் அடைகின்ற வகையில் வளரும் இளஞ்சூரியன் போன்று திகழ்ந்தான்.

இச்செய்யுள் குளகம் ஆகும். இது அடுத்த பாடலின் ஈற்றடியில் வரும் "தேர்மிசைப் பொலிந்து போந்தான்" என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: கல்வி கரையில என்னும் கருத்தினை வலியுறுத்தும் வகையில், "அளவுஇல் தொல் கலைகள் முற்றி" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நரசிங்க முனையர் என்னும் அரசரால் மகன்மை கொண்டு வளர்ந்து வருகையில் பெற்ற கல்வி நிலையைச் சேக்கிழார் சுவாமிகள், தடுத்தாட் கொண்ட புராணம் செய்யுள் 6-இல்,

"அருமறை முந்நூல் சாத்தி
அளவுஇல்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச்
சீர்மணப் பருவம் சேர்ந்தார்."

என அருளிச் செய்தவாறும் காண்க.

தந்தையின் உளம் மகிழுமாறு அரசிளங்குமரன் கல்வி பயின்றும் நற்குணத்தால் ஓங்கியும் வளர்ந்த தன்மையானது திருவள்ளுவர் உரைத்த,

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்." - திருக்குறள், 70

என்னும் வகையில் விளங்குதலாம்.

அளவு இல் - எல்லையில்லாத. கலை - கல்வி. முற்றி - தேர்ந்து சிறந்து. தந்தை - மனுநீதி சோழனைக் குறித்தது. காதல் - அன்பு. நீடி - வளர்ந்து. அணியன் ஆகி - இளவரசுப் பட்டம் பெறுகின்ற வகையில். பரிதி - சூரியன். 19

அரசகுமாரன் தேரின் மீது ஏறிச் செல்லுதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

105. திங்கள்வெண் கவிகை மன்னன்
திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி
மன்இளங் குமரர் சூழக்

கொங்குஅலர் மாலை தாழ்ந்த
குங்குமம் குவவுத் தோளான்
பொங்கிய தானை சூழத்
தேர்மிசைப் பொலிந்து போந்தான்.

தெளிவுரை: அப்போது ஒரு நாள் நறுமணம் கமழும் வாசனைக் கலவையைத் தோளில் பூசி விளங்கும் அவ்வரச குமாரன், வெண்கொற்றக் குடையுடைய மன்னன் அரண்மனையிலிருந்து கிளம்பி, இருண்ட மேகம் சூழ்கின்ற மாடவீதியின் வழியாக இளம்குமரர் பலர் சூழவும், சேனைகள் தொடரவும் தேரின் மீது ஏறிப் பொலிவுடன் செல்லலானான்.

சிறப்புரை: அரச குமாரனைச் சூழ்ந்து அவனையொத்த குமாரர்கள் இருந்தனர் என்பதும், இ.ந்து அவன் ஏவற்கு உரியர் என்பதும் கொள்க. மற்றும் மரபு கருதி அவனைச் சூழ்ந்து ஒரு பகுதி சேனையும் உடன் செல்லும் எனக் காண்க. இவை அரச மரியாதைக்குரிய உறுப்புகளாம்.

திங்கள் வெண் கவிதை - வெண் கொற்றக் குடை: அரசனின் நீதியை விளக்கும் சின்னமாம். திருவளர் கோயில் - மன்னன் அரண்மனை. மங்குல் - இருண்ட மேகம். கொங்கு - தேன். கொங்கு அலர் மாலை - தேன் மணம் கமழும் மலர் மாலை. மலர்மாலை தரித்தல் அரசர்க்குரிய சிறப்பு என்பது குறிப்பு. குங்குமம் - வாசனைக் கலவை. குவவுத் தோள் - திரட்சியான தோள்: வலிமை குறித்தது. பொங்கிய தானை - ஆரவாரம் மிகுந்த சேனைத் தொகுதி. தேர்மிசை - தேரின் மீது. பொலிவு - கம்பீரம். 20

106. பரசுவந் தியர்முன் சூதர்
மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும்
வெள்வளை ஒருபால் மிக்க
வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப
முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும்
அணிமணி மாட வீதி.

தெளிவுரை: அரச குமாரன் மாடவீதியில் உலா வரும்போது மங்கலப் பாடல்கள் இசைப்போரும், நின்று ஏத்துவோரும், இருந்து ஏத்துவோரும் உடன்வர, மாதர் அணிந்து மேவும் கைவளைகள் சிந்தவும், முரசொலியும் சங்கொலியும் ஆர்ப்பவும் விளங்கிற்று.

பரசுவந்தியர் - மங்கலப் பாடல்களால் துதித்துப் பாடுவோர். சூதர் - நின்று புகழ்பாடுவோர். மாகதர் - இருந்து புகழ் பாடுவோர். ஒருபால் - ஒருபக்கம். சங்கம் - சங்கு. போதும் - உலா செல்கின்ற. அணிமணி மாட வீதி - அழகு விளங்கும் மணிகளால் அலங்காரம் கொண்ட மாட வீதி. 21

பசுங்கன்று ஒன்று துள்ளி வருதல்

107. தனிப்பெருந் தருமம் தானோர்
தயாஇன்றித் தானை மன்னன்
பனிப்புஇல்சிந் தையினின் உண்மைப்
பான்மை சோதித்தால் என்ன
மனித்தர்தன் வரவு காணா
வண்ணம்ஓர் வண்ணம் நல்ஆன்
புனிற்று இளங் கன்று துள்ளிப்
போந்ததுஅம் மறுகின் ஊடே

தெளிவுரை: ஒப்பற்ற பெருமையுடைய தருமம், கருணை என்பது சிறிதும் இல்லாது, பெரும்படைகளையுடைய மனுநீதி சோழனின் நடுக்கம் இல்லாத சிந்தையின் உண்மைப் பாங்கினைச் சோதிப்பதற்கு வந்தது போன்று, ஆங்குச் செல்லும் மக்கள் கண்களால் தன்னைக் காணப் பெறாதபடி அழகிய வண்ணமுடைய அப்போது ஈனப் பெற்ற பசுங்கன்று ஒன்று அந்த மாடவீதியின் இடையே துள்ளிச் சென்றது:

இது பின்னர் அரசனின் நீதி முறையை உலகுக்கு வெளிப்படுத்த உள்ள தன்மை கண்டு, "மன்னன் பனிப்பு இல் சிந்தையினின் உண்மைப்பான்மை சோதித்தால் என்ன" என்று சாற்றியமையாம். இது தருமமே சோதிக்க விழைந்தது என்பதாம்.

தயா - கருணை: தயவு. தானை மன்னன் - மனு வேந்தன். பனிப்புஇல் - நடுக்கம் இல்லாத, மனித்தர்கள் - மனிதர்கள்: உலா வரும் மக்கள் என்க. வண்ணம் நல் ஆன் - அழகிய வண்ணம் உடைய பசு: வெள்ளை வண்ணம் எனவும் கொள்க. புனிற்று இளங்கன்று - அப்போது ஈன்றெடுக்கப் பெற்ற இளங்கன்று. மறுகு - மாடவீதி. 22

கன்று தேர்க்காலின் இடைப்பட்டு விண்ணுலகு செல்லப் பசு துயருற்று வீழ்தல்

108. அம்புனிற்று ஆவின் கன்றுஓர்
அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது
விசையினால் செல்லப் பட்டே

உம்பரின் அடையக் கண்டுஅங்கு
உருகுதாய் அலமந்து ஓடி
வெம்பிடும் அலறும் சோரும்
மெய்ந்நடுக் குற்று வீழும்.

தெளிவுரை: அழகிய வண்ணம் உடைய அப்பசுவின் கன்று ஓர் அபாயத்தை நோக்கிச் செல்லும் வகையில், செம் பொன்னால் இழைக்கப்பட்ட தேர்ச்சக்ரத்தின் வேகத்தால் உருட்டப்பட்டு விண்ணுலகை அடைய, அதைக் கண்ட தாய்ப்பசு நெஞ்சு பதைத்து உருகித் துயர் கொண்டு, அங்கும் இங்குமாக ஓடிப் பெருமூச்சு விட்டு அலறியும் சோர்ந்தும் மெய்ந்நடுக்கம் அடைந்தும் மண்ணில் விழுந்தது.

அம் - அழகிய. புனிற்றுஆ - பசுங்கன்று. புனிறு - ஈன்றணிமை : அண்மையில் ஈனப்பட்டது. அபாயம் - உயிர்க்கு நேரக்கூடிய துன்பம். ஊடு போகி - இடையே சென்று. தேர்க்கால் - தேர்ச்சக்கரம். விசை - சக்கரம் செல்லும் வேகம். செல்லப்பட்டு - கன்று உருண்டு செல்லும் தன்மை குறித்தது. உம்பரின் அடைய - விண்ணுலகு அடைய: இறக்க என்னும் பொருளது. தாய் - பசுவைக் குறித்தது. அலமந்து - நெஞ்சம் உழன்று. மெய் நடுக்குற்று - உடல் நடுங்கி. 23

கன்று மாய்ந்ததைக் கண்ட அரசிளங்குமரன் தேரினின்று கீழே வீழ்ந்து புலம்புதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

109. மற்றது கண்டு மைந்தன்
“வந்தது இங்கு அபாயம்” என்று
சொற்றடு மாறி நெஞ்சில்
துயர்உழந்து அறிவு அழிந்து
“பெற்றமும் கன்றும் இன்றென்
உணர்வெனும் பெருமை மாளச்
செற்றஎன் செய்கேன்” என்று
தேரில்நின்று இழிந்து வீழ்ந்தான்.

தெளிவுரை: கன்று தன் தேர்ச்சக்ரத்தின் இடையே விழுந்த நிகழ்ச்சியைக் கண்ட அரசிளங் குமரன். இவ்விடத்தில் தனக்கு தீங்கு வந்துற்றது என்று எண்ணிச் சொல் தடுமாறவும், நெஞ்சில் துயர் உழன்றும் அறிவழிந்தும் “தாய்ப்பசுவும் அதன் கன்றும் இன்று என் உணர்வு என்கிற பெருமை மாளுமாறு செற்றன! இனி நான் என் செய்கேன்” என்று மிக விரைவாகத் தேரிலிருந்து கீழே இறங்கித் தரையில் வீழ்ந்தான்.

சிறப்புரை: கன்று தன் தேர்ச்சக்கரத்தின் இடையில் வீழ்ந்தது அரசகுமாரன் பெரிதும் அஞ்சிய அளவில், அவன் அறிவு அழிந்து செயற்பாடு புரியும் உணர்வு என்னும் பெருமை மாளச் செய்தது என்பதாம். கன்றின் செய்கை முன்னின்றாலும் அது மாட நெடு வீதியில் வருவதற்குத் தாய்ப் பசு காரணமாக இருத்தலின் பெற்றமும் கன்றும் எனச் சாற்றப்பட்டது.

இங்கு நிகழ்ந்தது உயிர்க் கொலை. அதுவும் பசுக் கொலை என்னும் பேரச்சம் அரகுமாரன் மனத்தில் தோய்ந்தமையால் துயரும், அறிவு அழிதலும் உண்டாயிற்று. மற்றும் இவ் அரச குமாரன் சிவம் முயன்று அடையும் தெய்வக் கலை பல திருத்த ஓதிய நிலையில், பசுவின் பெருமை நன்கு அறிந்த வகையில் தன் பெருமை அவ் ஆவினத்தால் செற்றது. என நெஞ்சுழன்றான். இத்தன்மையில் பசுக்குலங்களின் பெருமையைச் சேக்கிழார் சுவாமிகள் சன்டேசுர நாயனார் புராணத்தில் செய்யுள் 21 - இல்.

"சீலம் உடைய கோக்குலங்கள்
சிறக்கும் தகைமைத் தேவருடன்
காலம் முழுதும் உலகனைத்தும்
காக்கும் முதல்கா ரணர்ஆகும்
நீலகண்டர் செய்யசடை
நிருத்தர் சாத்தும் நீறுதரும்
மூலம்அவதா ரம்செய்யும்
மூர்த்தம் என்றால் முடிவு என்னோ!"

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக.

மைந்தன் - அரசகுமாரன். அபாயம் - தீங்கு. பெற்றம் - பசு. செற்ற - செற்றன: சாய்த்தன. 24

110. அலறுபேர் ஆவை நோக்கி
ஆருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி
நெடிதுஉயிர்த்து இரங்கி நிற்கும்
"மலர்தலை உலகம் காக்கும்
மனுஎனும் என் கோ மானுக்கு
உலகில்இப் பழிவந்து எய்தப்
பிறந்தவா ஒருவன்" என்பான்.

தெளிவுரை: அவ் அரச குமாரன், கன்றை இழந்து அலறும் பேருயிராகிய பசுவை நோக்கித் தன்னுயிர் பதைக்குமாறு சோர்வான், தேர்ச்

சக்கரத்தின் இடையில் புகுந்து நிலத்தில் விழுந்து கிடக்கும் கன்றை நோக்கி இரக்கத்தால் பெருமூச்சு விடுவான், இந்நிலவுலகத்தைக் காக்கும் மனு என்னும் என் தலைவனுக்கும் கன்றை வீழ்த்தியதால் பழிவந்து எய்தத் தான். பிறந்ததை எண்ணிப் புலம்பினான்.

சிறப்புரை: உலகில் மன்னுயிர்கள் செய்யும் பழி மன்னனைச் சாரும் என்னும் கருத்து இவண் ஈற்றடியின் வாயிலாக உரைக்கப்பட்டது. இத்தன்மையில் மன்னுயிர் செய்யும் பிழை மன்னன் மீது ஏற்றி உரைக்கப்படுதலைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் வாயிலாக,

"மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தில் பெரும்பேர் அச்சம்
குடிபுரவு உண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழு தகவு இல்லெனத்"

எனச் சாற்றப்படுதலும் காண்க.

பேர் ஆ - பேருயிராகிய பசு. சோரும் - தளரும். மலர்தலை உலகம் - இனிது வளரும் தன்மையுடைய உலகம். கோமான் - அரசன். ஒருவன் - அரச குமாரன் தன் எளிமை நோக்கி நாட்டு மக்களுள் ஒருவனாக எண்ணினான் என்க. 24

அரசகுமாரன் தான் செய்த தீங்குக்குப் பரிகாரம் தேட எண்ணுதல்

111. "வந்தஇப் பழியை மாற்றும்
வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால்
ஆற்றுவது அறமே ஆகில்
எந்தைஈ-து அறியா முன்னம்
இயற்றுவன்" என்று மைந்தன்
சிந்தைவெந் துயரம் தீர்ப்பான்
திருமறை யவர்முன் சென்றான்.

தெளிவுரை: தனக்கு இவ்வாறு வந்த பழியைப் போக்கும் வகையினை வேதத்தில் விதிப்படி ஆற்றுவது அறம் ஆகுமானால் தன் தந்தை அறிவதன் முன்னர் அதனை இயற்றத்தன் சிந்தையின் துயரத்தையும் தீர்க்கும் விதத்தில் வேத விற்பன்னர்களை அடைந்தான்.

எந்தை - சோழ மன்னன். மைந்தன் - அரசகுமாரன் திருமறையவர் - வேத விற்பன்னர். 26

கன்றை இழந்து பசு அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட மணியைத் தன் கொம்பால் அசைத்து ஒலிக்கச் செய்தல்

112. தன்னுயிர்க் கன்று வீயத்
தளர்ந்தஆத் தரியாது ஆகி
முன்நெருப்பு உயிர்த்து விம்மி
முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்கும் செங்கோல்
மனுவின் பொன் கோயில் வாயில்
பொன்அணி மணியைச் சென்று
கோட்டினால் புடைத்தது அன்றே

தெளிவுரை: அப்போது, தன்னுயிர் போன்ற கன்று வீழ்ந்த நிலையில் தளர்ச்சியுற்று வருந்தும் அப்பசு நெருப்பெனப் பெருமூச்சுவிட்டுத் துயர் தாங்காது விம்மி, முகத்தில் கண்ணீர் பெருக, மன்னுயிர்களைக் காக்கும் வகையில் செங்கோலாட்சி புரியும் மனுநீதி சோழனின் அரண்மனை வாயிலின் கண் சென்று ஆங்கு இருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் முட்டி அசைத்து ஒலிக்கச் செய்தது.

வீய - தரையில் விழுந்து மாள, ஆ - பசு. பொன் அணிமணி - மக்கள் குறைகளைக் கூறும் வகையில் அரசனை அழைக்க ஒலிக்கச் செய்யும் ஆராய்ச்சி மணி. பொன் கோயில் - அரசனின் அழகிய அரண்மனை. கோடு - கொம்பு. புடைத்தது - மிகவும் வேகமாக முட்டி ஒலிக்கச் செய்தது. 27

மணியோசை கேட்ட மன்னன் சிம்மாசனத்திலிருந்து எழுந்து வாயிலின் கண் வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

113. "பழிப்பறை முழக்கோ ஆர்க்கும்
பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி
கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ"
என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன்
செவிப்புலம் புக்க போது.

தெளிவுரை: அப்பசு எழுப்பிய மணியோசை, "பழிச் சொல்லின் முழக்கமோ! ஆரவாரித்து எழுகின்ற பாவத்தின் ஒலியோ! மன்னன்

மரபிடைத் தோன்றிய அரச குமாரன் ஆவியைப் பறிக்க வருகின்ற இயமனின் வாகனமான எருமைக்கடாவின் கழுத்தில் உள்ள மணியின் ஆரவாரமோ!" என்றவாறு அரசன் வாயிலின் முன் கட்டப்பட்டிருந்த மணியோசையானது அவன் செவியில் புகுந்தது.

இது கவிக்கூற்று. பின்னர் அரசன் தன் மைந்தனைத் தேர்ச்சக்கரம் கொண்டு செலுத்த உள்ளமையைக் குறிக்கும் பாங்கில் இவண் "மறலி ஊர்திக் கழுத்தணி மணியின் ஆர்ப்பு" எனச் சுட்டுதலாயிற்று.

பழிப்பறை - பழிச்சொல் : பறையொலியும் ஆம். மறலி - இயமன்: மறவாது தன் தொழிலைப் புரிபவன். ஊர்தி - எருமைக் கடா. கழுத்தணி - கழுத்தில் அலங்காரம் செய்வது. கடைமுன் - வாயில் முன். கேளா - கேட்டபோது. 28

114. ஆங்கு அது கேட்ட வேந்தன்
அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக்
காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந்து எய்தி
இறைவநின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால்
துளக்கியது" என்று சொன்னார்.

தெளிவுரை: மணியோசையைக் கேட்டதும் அரசன் மிக விரைவாகத் தன் சிம்மாசனத்திலிருந்து இறங்கிச் சென்று பூங்கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்ட வாயிலை அடைந்தான். அப்போது காவலர்கள் மன்னனை வணங்கித் துதித்து, "இவ்விடத்தில் ஒரு பசு வந்து மேலே தொங்குகின்ற மணியைத் தன் கொம்புகளால் அசைத்தது." என்று சொன்னார்கள்.

அரியணை - சிம்மாசனம் இழிந்து - இறங்கி. போந்து - சென்று. நண்ண - அடைய. போற்றி - வணங்கித் துதித்து - இறைவ - அரசனே என்னும் விளி. கொற்ற வாயில் - வெற்றியுடைய வாயில்: இது நீதியின் வகையால் அமைவதைக் குறித்தது. கோடு - பசுவின் கொம்பு. துளக்கியது - அசைத்தது. தூங்கிய மணியென்பது இதுவரையில் யாராலும் அசைக்கப் படாது இருந்தது என்னும் குறிப்பும் ஆம். 29

பசுவுக்கு நேர்ந்த துன்பம் யாது என மன்னன் அமைச்சரை நோக்கி வினவுதல்

115. மன்னவன் அதனைக் கேளா
வருந்திய பசுவை நோக்கி
"என்இதற்கு உற்றது" என்பான்
அமைச்சரை இகழ்ந்து நோக்கி
முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான்.

தெளிவுரை: காவலர்கள் மொழிந்ததைக் கேட்ட மன்னன் முதற்கண் துன்புற்று வாடும் பசுவை நோக்கிப் பின் இப்பசுவுக்கு நேர்ந்த துன்பம் யாது என்று வினவும் வகையில் அமைச்சரை இகழ்ந்து நோக்கினான். சிறந்த கேள்வி ஞானமும் தொன்மையான வேத நெறி வழுவாத தன்மையும் உடைய அமைச்சர் மன்னனைத் தொழுது முன்னர் உற்ற செயலைச் சொல்லலானார்.

சிறப்புரை: குடிமக்களைக் காப்பதில் அமைச்சர் முன்னிருந்து ஒழுகுதல் வேண்டும். அவ்வாறு காத்தலைப் புரியாமையால் பசுவானது நீதி வேண்டி மன்னன் வாயிலில் கட்டியிருந்த மணியை ஒலிக்கச் செய்தது. இதனைச் சுட்டிக் காட்டும் வகையில் மன்னன் அமைச்சரை இகழ்ந்து நோக்குதலைக் குறிப்பால் உணர்த்துவதாயிற்று. இத்தன்மையில் திருவள்ளுவர்.

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு." - திருக்குறள் : 632.

எனச் சாற்றியமையும் காண்க. ஐந்து என்பது 1. அஞ்சாமை, 2. நற்குடிப்பிறப்பு, 3. காத்தல், 4. கற்றறிதல், 5. ஆளும் திறன்.

முன்னுற நிகழ்ந்த - அரச குமாரன் மாட வீதியில் செல்லுதல், கன்று இடை புகுந்து தேர்ச் சக்கரத்தில் புகுதல், மடிதல், பசு துன்புற்று வருந்துதல் முதலான. தொன்னெறி - பழைமையான வேதநெறி. 30

அமைச்சர் கூறுதல்

116. "வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்ச் சேனை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்

இளைய ஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்தது ஆகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததுஇத் தன்மை" என்றான்.

தெளிவுரை: மன்னன் பசுவின் துன்பத்தைப் பொறுத்தற்கு இயலாதவனாய், அமைச்சரை நோக்கிய அளவில், அவன் குறிப்பை நன்கு உணர்ந்த அமைச்சர், "சோழ மன்னனே! உன்னுடைய புதல்வன் மணிகள் ஒலிக்கும் பெரிய தேரின் மீது ஏறி, அளவில்லாத தேர்ப்படை சூழ்ந்து வர, அரசர் உலவும் தெருவில் போகும் போது, பசுவின் இளங்கன்று தேர்ச்சக்கரத்தின் இடையே புகுந்து இறந்து விட்டதாக எண்ணிக் கொண்டு இத்தாய்ப்பசு தளர்வடைந்து இங்குற்று இச்செயலை உண்டாக்கியது." என்றார்.

சிறப்புரை: அரசன், பசு வழக்குத் தொடுத்து முறையிடும் வகையில் ஆராய்ச்சி மணியை ஒலிக்கச் செய்த நிலையில் வருந்தியவனாக, அமைச்சர் அவ்வரசன் அச்செயலுக்காகப் பெரிதும் வருந்த வேண்டியதன்று என்று உணர்த்தும் வகையில் பதில் உரைத்தார் என்பது இவண் அறிதற்பாலது.

அமைச்சர் முதற்கண் "நின் புதல்வன்" என்றமையால் இது நாடும், ஊரும் அரசற்கு உரியது என்பதும், அது அரச வீதி என்பதால் ஏனையவர் போன்று எண்ணப்படுவதன்று என்பதும் குறிப்பால் உணர்த்ததலாம். மணி நெடுந்தேரில் செல்வதால் அதன் ஆரவாரமும் நன்கு பிறர்க்கு அறிவித்தற்கு உரியது என்பதும் பெறப்படுவதாயிற்று. மற்றும் உயர்ந்து விளங்கும் தேரில் செல்வதால் தரையில் உள்ள பொருள்களை அண்மையில் கண்டு நோக்குதற்கு அரியது எனவும் குறிப்பாயிற்று. மேலும் இளங்கன்று இத்துணை ஆரவாரத்தை அறியும் திறத்தன்று என்றாலும் தேர்ச்சக்கரத்தின் இடையில் புகுந்த நிலையில் அதற்கு உண்டான தீங்கு தவிர்க்க முடியாதது என்பதும் உணர்த்துதலாயிற்று. கன்று இறந்தது என்று எண்ணி இப்பசு தளர்வுறுகின்றது. எனினும் கன்று இறந்தது என்று உறுதி செய்யப்படவில்லை என்பதும் குறிப்பு. தாய்ப்பசு தன் கன்றினை இழந்து வருந்ததுதல் இயல்பு. எனவே அதனைப் பெருந்தீங்காக அரசன் எண்ண வேண்டாம் என்பதும் தொக்கி நிற்றலாம்.

வளவ - சோழ மன்னனே! என்னும் விளி. போங்கால் - போகும் போது. ஆன் கன்று - பசுவின் கன்று. தாய் - தாய்ப்பசு. இறந்ததாகத் தளர்வுறும் - இறந்தது என்று எண்ணிச் சோர்வுறும். விளைத்தது - தன் கொம்பால் மணியை ஆட்டி ஒலிக்கச் செய்தது. 31

அமைச்சரின் உரையைக் கேட்ட அரசன் பெரிதும் துயருற்றுக் கலங்குதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

117. அவ்வுரை கேட்ட வேந்தன்
ஆவுறு துயரம் எல்லாம்
வெவ்விடம் தலைக்கொண்டாற்போல்
வேதனை அகத்து மிக்குஇங்கு
இவ்வினை விளைந்த வாறென்று
இடர்வுறும் இரங்கும் ஏங்கும்
"செவ்விதென் செங்கோல்" என்னும்
தெருமரும் தெளியும் தேறான்

தெளிவுரை: அமைச்சர் கூறியவற்றைக் கேட்ட மன்னன், பசு அடைந்த துயரம் யாவும் கொடிய நஞ்சு தலைக்கு ஏறியது போன்று நெஞ்சில் வேதனையை உண்டாக்கப் பெரிதும் வருந்தினான். இச்செயல் ஏன் உண்டாயிற்று என்று இடருற்று நைந்து உருகினான். "என்னுடைய செங்கோலாட்சி இத்தன்மைத்தாய்ப் பழியுற்றதே" என்று மருட்சியுற்றுத் தெளிவிழந்தவனானான்.

ஆ - பசு. வெவ்விடம் - கொடிய நஞ்சு. இவண் கொடிய நஞ்சு தலைக்கேறுதலானது மரண அவஸ்தையைத் தரவல்லது என்பதாம். இத்தன்மையில் நெஞ்சில் வேதனை மிகுந்த அத்தகைய அவஸ்தையை உண்டாக்கி மன்னனை வருத்தியது என்பதாம். இடர் உறும் - அறநெறியில் நிகழும் செங்கோன்மையில் இத்தன்மையான தீங்கு நிகழ்தற்கு முகாந்தரம் இல்லை என்கிற உறுதிப்பாடும், ஆயினும் நிகழ்ந்த தீங்கு குறித்த வகுத்தமும் இத்தொடர் வழிப் புலனாதல் காண்க. செவ்விது - செவ்வையன்று என்னும் பொருளில் வந்த எள்ளற் குறிப்பு, தெருமரும் - மருட்சியுறும். 32

118. "மன்னுயிர் புரந்து வையம்
பொதுக் கடிந்து அறத்தில் நீடும்
என்நெறி நன்றால்" என்னும்
"என்செய்தால் தீரும்" என்னும்
தன்இளங் கன்று காணாத்
தாய்முகம் கண்டு சோரும்
அந்நிலை அரசன் உற்ற
துயரம் ஓர் அளவிற் றன்றால்.

தெளிவுரை: "நாட்டு மக்கள் முதலான அனைத்து உயிர்களையும் பாதுகாத்து உயிர்களின் துன்பத்தில் பொதுவான தன்மையை

நீக்கித் தான் அடைந்த துன்பமாகவே கருதும் அறவழியில் மேவும் தன்னுடைய நெறி நன்றாமே!" என்று அரசன் தன்னைத் தானே கடிந்து கொள்வான். தன் இளங்கன்றைக் காணாது வருந்தும் பசுவைக் கண்டு இதற்கு யாது செய்தால் துன்பம் நீங்கும் என்று கலங்கி நிற்பான். அரசன் அடைந்த துன்பம் இன்னஅளவுடையது என்று உரைக்கப் பெறாது பெருகிற்று.

புரந்து - பாதுகாத்து. பொதுக்கடிந்து - பிறர் துன்பத்தைக் கண்டு பொதுவாகக் கருதாது தனதாகவே பாவித்து வருந்துதல். தாய்முகம் - பசு. 33

அமைச்சர்கள் ஆலோசனை கூறுதல்
கொச்சிகக் கலி

119. மந்திரிகள் அதுகண்டு
மன்னவனை அடிவணங்கிச்
"சிந்தைதளர்ந்து அருளுவது
மற்றிதற்குத் தீர்வுஅன்றால்
கொந்துஅலர்தார் மைந்தனை முன்
கோவதைசெய் தார்க்கு மறை
அந்தணர்கள் விதித்த முறை
வழிநிறுத்தல் அறம்" என்றார்.

தெளிவுரை: மன்னன் துயருழன்று நைதலைக் கண்ட அமைச்சர்கள் அவனை வணங்கி, "சிந்தை தளர்ந்து உரைப்பது துன்பத்திற்குத் தீர்வு ஆகாது. இதற்கு முன்பு பசுவதை செய்தவர்களுக்கு, வேதம் அறிந்த அந்தணர்கள் விதித்த நீதிமுறைப்படி நின் புதல்வனை நிறுத்திக் கழுவாய் தேட வேண்டும். அதுவே அறமாகும்." என்று மொழிந்தார்கள்.

அருளுவது - உரைப்பது. கொந்துஅலர் தார் - மலர்மாலை. கோவதை - பசுவதை. 34

அமைச்சர்கள் கூறிய ஆலோசனையை
அரசன் ஏற்காது உரைத்தல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

120. "வழக்கென்று நீர்மொழிந்தால்
மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும்
கோவுறுநோய் மருந்தாமோ

இழக்கின்றேன் மைந்தனைஎன்று
எல்லீரும் சொல்லியஇச்
சழக்குஇன்று நான்இசைந்தால்
தருமம்தான் சலியாதோ."

தெளிவுரை: அமைச்சர்கள் உரைத்தவற்றை ஏற்காதவனான அரசன், "நீங்கள் மொழிகின்ற இத்தகைய கழுவாய் இளங்கன்றை இழந்து அலறுகின்ற பசுவின் துன்பத்திற்கு மருந்து ஆகுமோ? நான் என் புதல்வனை இழக்கின்றேன் என்னும் எண்ணம் கொண்டு எல்லோரும் சொல்லிய இந்தப் பரிகாரத்திற்கு நான் இசைவு கொண்டால் தருமமே ஏளனம் செய்யும்." என்றான்.

சிறப்புரை: இவண், அமைச்சர்கள் வேதவிதிப்படி தீர்வு காண வேண்டும் என்று கூற, அரசன் அறநெறிப்படி நடத்தல் வேண்டும் என நவின்றமையாம். அமைச்சர் கூறியவாறு செய்யும் கழுவாய் பசுவின் துயரைத் தீர்க்கும் வல்லமை பெறாது என்னும் குறிப்பின் வழி அதனைச் சழக்கு எனச் சுட்டப்பெற்றது.

வலிப்பட்டு - வலிமை பெற்று. குழக்கன்று - இளங்கன்று கோ - பசு. மருந்து ஆமோ - தீர்வு ஆகுமோ. சழக்கு - பயனின்மை. இசைவு - உடன்படுதல். 35

121. "மாநிலம்கா வலன்ஆவான்
மன்னுயிர்காக் கும்காலைத்
தான்அதனுக்கு இடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர்கள் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ."

தெளிவுரை: அரசன் மேலும் தொடர்ந்து. "நாட்டைக் காக்கும் மன்னன் என்பவன் செங்கோலாட்சி புரியும்போது மன்னுயிர்க்குத் தன்னாலும், தன் பரிவாரங்களாலும், தீமை மிகு பகைவர்களாலும், கள்வர்களாலும், வேறு பிற உயிர்களாலும் தீங்கு உண்டாகுமானால், அதனை முற்றும் தீர்த்து அறத்தைக் காப்பவனே உண்மையில் பாதுகாப்பவன் அல்லனோ?" என உரைத்தான்.

இவண், இப்பசுவிற்குத் துன்பம் தன் மைந்தனால் உண்டான தீங்கு தன் பரிசனத்தால் உண்டாகிய தீங்காகக் கருதப்படுதலாம் என்க.

மாநிலம் - நாடு. காவலன் - அரசன். ஊனம் - தீமை. 36

122. "என் மகன்செய் பாதகத்துக்கு
இருந்தவங்கள் செயஇசைந்தே
அன்னியன்ஓர் உயிர்கொன்றால்
அவனைக்கொல் வேன்ஆனால்
தொல்மனுநூல் தொடைமனுவால்
துடைப்புண்டது எனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்
மந்திரிகள் வழக்கு" என்றான்.

தெளிவுரை: பின்னரும் அரசன் தொடர்ந்து, "என் மகன் செய்த பாவச் செயலுக்குக் கழுவாயாகப் பெருந்தவங்களைச் செய்வதற்கு இசைந்து, வேறு ஒருவன் ஒரு கொலையைச் செய்வானேயானால் அவனுக்குக் கொலை தண்டனை அளிப்பேனாயின் தொன்மையுடைய மனுநூல் மரபின் வந்த தருமமானது என்னால் அழிக்கப்படுவதாயிற்று என்று உலகத்தோர் மொழியுமாறு உரைத்தீர்கள். இது அமைச்சர்கள் வழக்கு ஆகும்." என மொழிந்தான்.

சிறப்புரை: அரச குமாரனுக்கு ஒரு நீதி முறையும், மற்றோர்க்கு வேறு ஒரு நீதிமுறையும் கடைப்பிடிப்பது பழிப்புக்கு இடமாகும் என்று நவில்வதாயிற்று. மனுவால் வகைப்படுத்திய அறநெறியை அவன் வழிவந்தவனே போக்கினான் என்னும் பழியாதலும் ஆம். அமைச்சர்கள் அரசனுக்கு ஏற்றவாறு மனம் மகிழச் சொல்வது உலகியல்பு என இவண் சுட்டும் வகையில் "மந்திரிகள் வழக்கு" எனப்பட்டது.

பாதகம் - கன்றைக் கொன்ற தீங்கு; பாவம். அன்னியன் - வேறு ஓர் உயிர். தொல் மனுநூல் தொடை - பழைய மனு தரும சாத்திர ஒழுங்குமுறை. துடைப்புண்டது - அழிவுற்று மாறுபட்டது. வழக்கு - சம்பிரதாயம், மரபு 37

மதி அமைச்சர் அரசனிடம் கூறுதல்

123. என்றுஅரசன் இகழ்ந்துரைப்ப
எதிர்நின்ற மதிஅமைச்சர்
"நின்றநெறி உலகின்கண்
இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தல் மரபன்று
மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடும் நெறியன்றோ
தொல்நிலம் கா வல" என்றார்.

தெளிவுரை: அமைச்சர்கள் கூறியவற்றை ஏற்காதவனாய் அரசன் இகழ்ந்து உரைக்க, எதிர்நின்ற மதியமைச்சர், "இது போன்று கழுவாய் தேடும் செயல் வேதத்தில் விதித்தவாறு முன்னே நடைபெற்றுள்ளது. பூவுலகத்தைப் பாதுகாக்கும் மன்னவ! அரசகுமாரனைக் கொல்வது மரபு அல்ல. "என்று உரைத்தார். இவண் அன்பு, அருள் நீதி முதலியனவற்றை விடுத்து நூலறிவால் மட்டும் ஒழுங்குபடுத்த வல்ல அமைச்சர் என்னுமாறு "மதியமைச்சர் நின்ற நெறி" என நவிலப் பெற்றது.

பொன்றுவித்தல் - கொல்லுதம். மறைமொழிந்த அறம் - வேதத்தில் இயம்பியவாறு செய்யத் தகுந்த தருமம். தொன்று தொடும் - பழைமையாக; தொன்று தொட்டுக் கடைப் பிடிக்கப்படுவது. காவலன் - அரசன். 38

அரசன் வருந்திக் கூறுதல்

- இது முதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்

124. அவ்வண்ணம் தொழுதுரைத்த
அமைச்சர்களை முகம்நோக்கி
மெய்வண்ணம் தெரிந்துணர்ந்த
மனுஎன்னும் விறல்வேந்தன்
"இவ்வண்ணம் பழுதுரைத்தீர்"
என்று எரியின் இடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல்
முகம்புலர்ந்து செயிர்த்து ரைப்பான்.

தெளிவுரை: அவ்வாறு வணக்கத்துடன் தொழுது நின்ற அமைச்சர்களை நோக்கிய மெய்த்தன்மையை நன்கு தேர்ந்து உணர்ந்தவனாகிய மனு என்னும் வெற்றி வேந்தன், "நீங்கள் இவ்வாறு பழுதுடைய சொற்களை உரைத்தீர்கள்." என்று கடிந்து கூறி, எரியிடைத் தோய்ந்து வாடிய செந்தாமரை போன்று முகம் வாடி உலர்ந்து சினந்து வருத்தத்துடன் கூறலானான்

மெய்வண்ணம் - அறநெறியின் உண்மைத் தன்மை. விறல் - வெற்றி. பழுது - பயனற்றதும் குற்றம் உடையதானதும் ஆகிய சொல். எரி - நெருப்பு. கமலம் - தாமரை. புலர்ந்து - உலர்ந்து; வாடி வதங்கி. செயிர்த்து - சினமும் வருத்தமும் கொண்டு. 39

125. "அவ்வுரையில் வரும்நெறிகள்
அவைநிற்க அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறம் நீர்
சிந்தைசெலாது உரைக்கின்றீர்!

எவ்வுலகில் எப்பெற்றம்
இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி
எறிந்துவிழுந் ததுவிளம்பீர்!"

தெளிவுரை: அரசன் அமைச்சர்களை நோக்கி, "நீங்கள் கூறிய நெறிகள் ஒருபுறம் நிற்க. அறநெறியின் உண்மைப் பொருளையும், அதன் செம்மையான திறத்தையும் சிந்தையில் கொள்ளாது உரைக்கின்றீர். எந்த உலகில் எந்தப் பசு இத்தன்மையால் இடர் உழன்று பெரிதும் கலங்கித் துன்பத்தால் பெருமூச்சு விட்டுக் கதறி ஆராய்ச்சி மணியை ஒலிக்கச் செய்தது. அதனை உரைப்பீராக!" என்றான்.

சிறப்புரை: இதற்கு முன்னால் பசுவதை செய்தவர்களுக்கு கழுவாய் தேடும் அறச்செயலை புரியுமாறு அமைச்சர்கள் தெரிவித்தமைக்கு அது போன்று முன் உதாரணமாக எந்த பசுவும் ஆராய்ச்சி மணியை அடித்ததில்லை என்று உரைத்தலைக் காண்க. இது மன்னனின் தெளிவான சிந்தனையும் ஆழ்ந்த அறநெறியுணர்வும், நீதிநெறியின் தரமும் உணர்த்துதலாம் என்க.

பெற்றம் - பசு. மணி எறிந்து - மணியை ஒலிக்க செய்து. வெவ்வுயிர்த்து - பெருமூச்சு விட்டு. 40

126. "போற்றிசைத்துப் **புரந்தரன்மால்**
அயன்முதலோர் புகழ்ந்துஇறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார்
மேவிஉறை திருவாரூர்த்
தோற்றம்உடை உயிர்கொன்றான்
ஆதலினால் துணிபொருள்தான்
ஆற்றவும்மற்று அவற்கொல்லும்
அதுவேயாம் எனநினைமின்"

தெளிவுரை: "தேவேந்திரன், திருமால், நான்முகன் முதலானோர் புகழ்ந்துபோற்றுகின்ற பெருமானாகிய வீதி விடங்கர் பொருந்தி உறைகின்ற திருவாரூர்த் திருத்தலத்தில் தோற்றம் கொண்ட உயிரை கொன்றானாதலின் அத்தகையோனைத் துணிந்து நிகழ்த்துவது அவனைக் கொல்லும் செயல் ஒன்றே தீர்வாகும் என்று நினைமின்" என அரசன் மேலும் சாற்றினான்.

சிறப்புரை: திருவாரூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைத் திருமால், தேவேந்திரன் முதலியோர் வழிப்பட்டமையைத் தலபுராணத்தின்

வாயிலாக அறியலாம். திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாரும் சிவவடிவம் கொண்டு விளங்குபவர்கள் என்பதை நமிநந்தியடிகள் புராணம் பாடல் - 29 இல் சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்தமை காண்க. தவிரவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில், "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்" என அருளிச் செய்தமையும் நோக்குக. இத்தன்மையை முன்னிருத்தித் திருவாரூரில் பிறந்த ஆண்கன்று மடிவதற்குக் காரணமான அரசகுமாரன் கொல்லப்படுவதே துணியப்படுகின்ற நீதிமுறையாகும் என்று உரைத்தலாயிற்று.

அரச குமாரன் திருவாரூரில் பிறந்தவனேயாயினும் அவன் செய்த குற்றத்திற்கு அழிக்கப்படும் நீதி முறையின்படி அவன் உயர் துணிக்கப்படுவதற்குக் காரணமாயிற்று என்பதாம்.

புரந்தரன் - தேவேந்திரன். மால் - திருமால். அயன் - பிரமன். இறைஞ்ச - வணங்கித் துதிக்க. துணிப்பொருள் - துணிந்து நிகழ்த்துவது. அவற்கொல்லும் அதுவே - அவனைக் கொல்லுலே. நினைமின் - அரசன் அமைச்சர்களை நோக்கி அறிவுறுத்தும் குறிப்பு. 41

127. எனமொ ழிந்து "மற்றிதனுக்கு
இனி இதுவே செயல் இவ்ஆன்
மனம்அழியும் துயர் அகற்ற
மாட்டாதேன் வருந்தும் இது
தனதுறு பேர் இடர் யானும்
தாங்குவதே கருமம்" என
அனகன் அரும் பொருள்துணிந்தான்
அமைச்சரும் அஞ் சினார் அகன்றார்.

தெளிவுரை: இவ்வாறு மொழிந்த அரசன் மேலும் தொடர்ந்து, "இந்தப் பசுவின் மனம் அழிகின்ற துயரைத் தீர்க்க முடியாதவனாகிய நானும் அது போலத் துயரை அடைவதே ஏற்ற செயலாகும். இதற்குக் கன்றைக் கொன்றவனாகிய என் புதல்வனைக் கொல்வதே செய்யத் தகுந்தது." என்று உரைத்தான். இதைக் கேட்டு அச்சம் கொண்ட அமைச்சர்கள் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.

இதனுக்கு இனி இதுவே செயல் - கன்றைக் கொன்ற மைந்தனைக் கொல்லுதலே பொருந்திய செயல். துயர் அகற்ற மாட்டாதேன் - பசுவின் துயரைப் போக்கும் செயலைப் புரிய முடியாதவன். பேரிடர் யானும் தாங்குவது - பசு, கன்றை இழந்து வாடித் துன்பத்தில் ஆழ்வது போன்று யானும் என் புதல்வனை இழந்து துன்பத்தில் ஆழ்வது.

அநகன் - பாவமற்ற அரசனைக் குறித்தது; எதுகை நோக்கி அனகன் என வந்தது. 42

மன்னன் தேரின் மீது ஏறித் தன் புதல்வனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லச் செல்லுதல்

128. மன்னவன் தன் மைந்தனை அங்கு
அழைத்து ஒருமந் திரிதன்னை
"முன்இவனை அவ்வீதி
முரண்தேர்க்கால் ஊர்க" என
அன்னவனும் அதுசெய்யாது
அகன்றுதன்ஆர் உயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத்
தான்கொண்டு மறுகுஅணைந்தான்.

தெளிவுரை: அக்கணமே அரசன் தன் மைந்தனை ஆங்கு அழைத்து வரச் செய்து அமைச்சன் ஒருவனை நோக்கி, "இவனை அரச வீதியில் தேர்க்கால் கொண்டு ஊர்ந்து செல்க" என்று ஆணையிட்டான். அந்த அமைச்சன் அத்தகைய செயலை ஆற்ற மாட்டாதவனாய் தன்னுடைய அருமையான உயிரைத் துறந்தனன். இதனை அறிந்த மன்னன் தன் மைந்தன் உயிரைத் தானே தேர்க்கால் செலுத்திப் போக்க அரச வீதியினை அடைந்தான்.

சிறப்புரை: கன்றைக் கொன்ற மகனைக் கொல்லுதலாகிய தண்டனை திருவாரூரின் கண் பிறந்த ஓர் உயிரைக் கொன்றமையால் வழங்கப்பட்டதாகும். அது பாவம் புரிந்தமைக்குக் கழுவாய் என்பதாயிற்று. இது பசுவின் துயரத்தை நீக்காது. எனவே அத்தகைய துன்பத்தைத் தான் அடைதல் அறவழியில் காணும் செயலாகும். ஆக இருவகையிலும் சிந்தனை செய்த மன்னன் இத்தன்மையில் முறைமை வழங்கினான் என்பதாம். இந்தத் தண்டனையை மன்னன் ஆணைப்படி நிறைவேற்றாத அமைச்சர் தன்னுயிர் துறந்தமையால் அரசன் வேறு ஒருவரை மீண்டும் குறிக்காது தானே அத்தண்டனையை நிறைவேற்ற முனைந்தான் என்க.

ஊர்க - செலுத்துக. மறுகு - அரச வீதி. ஆர்உயிர் அருமையுடைய சிறப்பு. திருவாரூரில் பிறந்த அமைச்சரின் உயிர்ச் சிறப்பும் ஆம். 43

அரசன் தன் மைந்தனை வீதியில் கிடத்தித் தேர் செலுத்துதல்

129. ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான்என் பதும்உணரான்
தருமம் தன் வழிச்செல்கை
கடன்என்று தன்மைந்தன்
மருமம் தன் தேர்ஆழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோ மற்று எளிதோதான்.

தெளிவுரை: அத்தகைய மனுநீதி சோழன் தன் குலத்துக்கு ஒரு மைந்தனே உள்ளனன் என்பதையும் எண்ணாதவனாய்க் கருமத்தின் வழியே செல்வது கடமை என்று தீர்மானித்து, அவனை வீதியிலே கிடத்தி மார்பின் மீது தேர்ச்சக்கரம் உருண்டு செல்லுமாறு தேரைச் செலுத்தினான். பெறுதற்குப் பெருமையுடைய அரசாட்சி நடத்துதற்கு அரியதோ! அன்றி எளிமை யுடையதோ!

சிறப்புரை: உயிரின் பொதுமை நீக்கி எல்லா உயிரின் துன்பமும் தன்னுடையதாகவே கருதி, நீதி வழங்கிய இவ்வரிய மாண்பு பல இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது. இத்தன்மையில் சிலப்பதிகாரம் வழக்குரை காதையில்,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே!"

(புகார் என்னும் நகரமாயினும், திருவாரூர் என்னும் நகரமாயினும் சோழர்தம் அரசாட்சிக்குட்பட்டமையால் அரசன் பெருமையை ஆட்சிக்குட்பட்ட ஊரின் மீது ஏற்றிக் கூறுவது மரபாம் என்க.)

என உரைத்தவாறும் நோக்குக.

கடன் - கடமை. மருமம் - மார்பு. ஆழி - தேர்ச்சக்கரம். உற - பொருத்த. ஊர்ந்தான் - செலுத்தினான். அருமந்த அரசு - பெருமையுடன் கொள்ளத் தகுந்த அரசாட்சி.

வீதிவிடங்கப் பெருமான் காட்சிதருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

130. தண்ணிளிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்
வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணல்அவன் கண்எதிரே
அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங் கப்பெருமான்.

தெளிவுரை: மக்கட்குக் குளிர்ச்சியுண்டாகும் வகையில் வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்து ஆட்சி புரியும் மனுநீதி சோழன் செய்கையைக் கண்டு ஆற்றாது நாட்டுமக்கள் இரக்கத்தால் கண்ணீர் பெருக்கி வருந்தினார்கள்; தேவர்கள் வேந்தன் அறநெறி காக்கும் செயல் புரிவதை எண்ணிக் கற்பகமலர்களை மழை போல் சொரிந்தார்கள். அப்போது திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வீதிவிடங்கப் பெருமான், தேவர்கள் தொழவும் அண்ணலாகிய மனுவேந்தன் காணுமாறும் இளமையுடைய இடபவாகனத்தின் மீது அரச வீதியில் வெளிப்பட்டுத் தோன்றினான்.

தண்ணளி - குளிர்ச்சி பொருந்திய; அன்பும் ஆம். தரியாது - ஆற்றாது. கண் மழை - கண்ணீர். வானவர் - தேவர். பூ - கற்பக மலர். அண்ணல் - இதனை அவன் என்னும் மன்னனைத் தழுவிச் சிறப்பித்தும், வீதிவிடங்கப் பெருமானுக்குக் கொண்டு கூட்டியும் பொருள் கொள்க. அண்ணல் - பெருமைமிக்கவன் அணிவீதி - அலங்காரமுடைய அரச வீதி மழவிடை - இளமையுடைய இடப வாகனம். வீதிவிடங்கப் பெருமான் - திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமான். விடங்கம் - சுயம்பாகத் தோன்றியது (டங்கம் - உளி; வி - இன்மை) 45

131. **சடைமருங்கில் இளம்பிறையும்**
தனிவிழிக்கும் திருநுதலும்
இடம்மருங்கில் உமையாளும்
எம்மருங்கும் பூதகணம்
படைநெருங்கும் பெருமையும்முன்
கண்டுஅரசன் போற்றிசைப்ப
விடை மருவும் பெருமானும்
விறல்வேந்தற்கு அருள்கொடுத்தான்.

தெளிவுரை: சடைமுடியின் மீது இளைய பிறைச்சந்திரனும் தனித்தன்மை யுடையதாய் விளங்கும் கண் நெற்றியில் திகழவும், இடப்பாகத்தில்

உமாதேவியும், மற்றும் சூழ்ந்துள்ள எல்லா இடங்களிலும் பூதகணங்கள் தோன்ற விளங்கும் பெருமையும் தன்முன்னே தெரியக் கண்ட அரசன் போற்றித் துதிக்க, இடப வாகனத்தில் விளங்கும் சிவபெருமான் அவ்வெற்றி வேந்தனுக்கு அருள் கொடுத்தார்.

தனிவிழி - ஒப்பற்றதாகிய விழி. இது சிவபிரான் நெற்றியில் திகழ்வது. நுதல் - நெற்றி. இடம் - இடப்பாகம், இ.ந்து உமாதேவிக்கே உரிய இடம் எனவும் கொள்க. மருங்கு - பக்கம். இசைப்ப - துதிக்க. விடை - இடப வாகனம். விடை மருவும் பெருமான் - இடப வாகனத்தில் வீற்றிருக்கும் சிவபிரான். அருள் கொடுத்தான் - புண்ணியச் செயலின் வழி அமைதலின் சிறப்புத் தோன்ற அரசன் தன் கண்களால் ஈசனைத் தரிசிக்கும் பேறும், பின்னர் அவன் மேற்கொண்ட அறநெறியை ஏற்கும் தன்மையும், அவன் மனத்திற்கு இசைந்தவனாகிய புதல்வன் உயிர் பெற்றதனால் விளையும் மகிழ்வும், நலமும், பின்னர் அடையப் பெறும் முத்தி நலமும், பேரின்ப வாழ்வும் முதலான பிறவும் ஈசன் கொடுத்தருளினான் என்க. 46

உயிர் பிரிந்த கன்றும் மற்றும் அமைச்சரும், அரச குமாரனும் ஈசன் அருளால் மீண்டு எழுதல்

132. அந்நிலையே உயிர்பிரிந்த
ஆன்கன்றும் அவ்அரசன்
மன்உரிமைத் தன்கன்றும்
மந்திரியும் உடன்எழலும்
இன்னபரிசு ஆனான் என்று
அறிந்திலன் வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்றால்
முடியாத பொருள்உளதோ.

தெளிவுரை: சிவபிரான் திருக்காட்சியளித்த அத்தருணத்திலேயே பசுவின் கன்றும், அதற்குக் கழுவாயாகக் கொல்லப்பட்ட அரசன் புதல்வனும், அரசன் புதல்வனுக்குக் கொலைத் தண்டனையை நிறைவேற்ற இயலாதவராய்த் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட அமைச்சரும் உயிர் பெற்று எழ, இத்தகைய செயல் நிகழவும் தான் எந்த நிலையில் உள்ளனன் என்று உணர்ந்திலனாய் அரசன் திகைத்து நின்றான்.

மும்மூர்த்திகட்கும் முன்னவனாய் விளங்கும் சிவபரம் பொருள் முன் நின்று மேவினால் முடியாத பொருளும் உள்ளதோ! - இது கவிக் கூற்று.

அந்நிலை - சிவபிரான் திருக்காட்சியளித்த அத்தருணம். மன்உரிமை - சிறப்புடைய அரசுரிமை. தனிக்கன்று - ஒப்பற்ற அரசகுமாரன். உடன் எழல் - உயிர் பெற்று எத்தகைய வடுவும் இல்லாது விரைவில் எழுதல். யார்க்கும் - எல்லார்க்கும், இவண் மும்மூர்த்திகளாகிய பிரமன், திருமால், உருத்திரன் என்க. முன்னவன் - முதற்பொருளாகிய சிவபிரான். முன் நிற்றல் - திருக்காட்சி நல்கி முன்னின்று வெளிப்படுவதைக் குறித்தது; செயலின் கண் முன் நின்று விளங்குதலும் ஆம். 47

பசுவின் துயர் நீங்குதல்

133. அடிபணிந்த திருமகனை
ஆகம்உற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந்து அருந்துயரம்
நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால்
வரும்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும் பசுவும்
பருவரல்நீங் கியது அன்றே.

தெளிவுரை: உயிர் பெற்று எழுந்த அரசகுமாரன் மன்னவனாகிய தன் தந்தையின் பாதங்களை வணங்க, அரசன் தன் மைந்தனை அன்போடு எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டான். அவன் துயரம் விலகியது. பசுவின் கன்று உயிர் பெற்றுத் துள்ளி வர, மடியில் பால் சுரக்க நின்ற பசு துயரம் நீங்கி நின்றது. கன்று மகிழ்ந்து பால் உண்டு மிகையாயின் தரையில் நனையப் பெருகிற்று.

திருமகன் - அரச குமாரன். ஆகம் - மார்பு. நிலவேந்தன் - மனுநீதிச் சோழன். தீம்பால் - இனிமையுடைய பசுவின் பால். படி - உலகம்; இங்கு தரைப்பகுதி என்க. பருவரல் - துன்பம். 48

திருவாரூர்ப் பெருமானின் பெருங்கருணை

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

134. பொன் தயங்கு மதில் ஆரூர்ப்
பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு
வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத்
திறம்கண்டு தன்அடியார்க்கு
என்றும்எளி வரும்பெருமை
ஏழ்உலகும் எடுத்துஏத்தும்

தெளிவுரை: பொன்னென ஒளிரும் மதில் விளங்குகின்ற திருவாரூர்ப் பூங்கோயிலின் கண் வீற்றிருக்கும் சிவபிரான் வெற்றி பொருந்திய மனுவேந்தனுக்கு அரச வீதியில் திருக்காட்சியளித்து அருள் புரிந்த பெருங்கருணையானது அப்பெருமான் தன் அடியவர்களுக்கு எப்போதும் எளியவனாக விளங்கி அருள் புரிபவன் என்று காட்ட, ஏழுலகமும் அதனை எடுத்து ஓதிப் புகழ்ந்து போற்றும்.

பொன் - அழகு; பெருமை. தயங்குதல் - ஒளிர்தல் பூங்கோயில் - திருக் கோயிலின் பெயர். அமர்ந்த பிரான் - வீற்றிருக்கும் சிவபிரான். எளிவரும் பெருமை - திருமால், பிரமன் ஆகியோருக்கும் காணற்கு அரியனாகிய நிலையில் அடியவர்கள் உளம் கசிந்து வேண்ட உடனே திருவருள் புரியும் அருள் வெளிப்பாடு குறிப்பது. அடியார் - தம் நெஞ்சத் தாமரையில் ஈசன் திருவடியைப் பதித்து ஒழுகும் பக்தர்கள். ஏத்தும் - போற்றித் துதிக்கும். 49

கவிக் கூற்று

135. இனையவகை அறநெறியில்
எண்இறந்தோர்க்கு அருள்புரிந்து
முனைவர்அவர் மகிழ்ந்தருளப்
பெற்றுடைய மூதூர்மேல்
புனையும்உரை நம்அளவில்
புகலல்ஆம் தகைமையதோ
அனையதனுக்கு அகமலர்ஆம்
அறவனார் பூங்கோயில்

தெளிவுரை: இத்தன்மையில் அறநெறி காக்கும் அடியவர்கள் எண்ணற்ற பேர்களுக்கு அருள் புரிந்த சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் பழம்பெரும் ஊராகிய திருவாரூர் என்னும் நகரத்தின் சிறப்பை வார்த்தைகளால் நம்மால் எடுத்துச் சொல்லக் கூடியதோ அத்தகைய சிறப்புடைய திருவாரூர்க்கு நெஞ்சத் தாமரையாக விளங்குவது திருவாரூர்த் திருக்கோயில். இது கவிக் கூற்று.

அறநெறியைக் காக்கும் தலைவனாகச் சிவபிரான் விளங்குதலால் அறநெறி மேவும் அடியவர்களுக்கு எளியவனாக விளங்குகின்றார் என்று இவண் சாற்றப்படுதலாயிற்று.

அனை என்பதனைப் பூமி மங்கை எனக் கொண்டுஅவட்கு நெஞ்சத்தாமரையாகத் திருவாரூர் திகழும் என்று பாடல் 43 - இல் (திருமலைச் - சிறப்பு) சுட்டியவாறும் கொள்க.

எண்ணிறந்தோர் - எண்ணிக்கை கடந்தவர் இது அடியவர் பெருமக்களைக் குறித்தது. முனைவர் - சிவபிரான். யாவும் சிவபெருமான் திருவுளப் பாங்கின் வண்ணம் நிகழ்வதால் பிறர் எத்துணை முனைந்தாலும் செயலாகாது என்னும் பொருள் சுட்டுதலாம். மூதூர் - தொன்மையுடைய நகரமான திருவாரூர். புனையும் உரை - இனிமை வடிவத்தில் கூறப்படும் உரை. நம் அளவில் - சேக்கிழார் சுவாமிகள் தம்மை எளிமையாக்கி உரைத்துப் போற்றும் மரபு வழி அவையடக்கமாகக் கொள்க. அனை அதனுக்கு - அத்திருவாரூர்க்கு. அனை - பூமி தேவிஎனவும் காண்க. அகமலர் - நெஞ்சத் தாமரை. அறவனார் - அறநெறியில் ஆள்விக்கும் சிவபிரான். பூங்கோயில் - திருவாரூர்த் திருக்கோயில். 50

திருநகரச் சிறப்பு நிறைவுற்றது.

5. திருக்கூட்டச் சிறப்பு

புற்றிடம் கொண்ட ஆதிதேவர் எழுந்தருளியிருக்கும் பூங்கோயிலின் முகப்பு வாயிலின் முன் உள்ளது தேவாசிரியன் என்னும் திருப்பெயருடைய திருமண்டபம். ஆங்கு தெய்வத் தன்மையுடைய ஆசிரியர்கள் எழுந்தருளப் பெற்றுள்ளார்கள். அவர்கள் நுண்ணிய ஒளி வடிவினராய் இமயம், மேரு முதலிய இடங்களில் இருப்பவர்கள், அவர்கள், உருத்திராட்ச மாலை அணிந்திருப்பவர்கள்; திருமேனியில் வெண்ணிறமுடைய திருநீற்றைப் பூசி விளங்குபவர்கள். அது போலவே அவர்கள் உள்ளமும் புனிதம் உடையதாகும். அவர்கள் பேரன்பால் சிவபிரானை வணங்கி இருப்பவர்கள்; முத்தியின்பமும் வேண்டாதவர்களாய் விருப்பு வெறுப்பு என இரண்டும் அற்றுச் சிவபிரான் பால் மேவி விளங்கும் சிந்தையிலேயே இருப்பார்கள். அத்தகைய தவச் சீலர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், திருத்தொண்டர்களின் வரலாறு சேக்கிழார் சுவாமிகளால் உரை செய்யப் பெற்றது.

ஈண்டுத் திருக்கூட்டத்தின் சிறப்பினைச் சாற்றுதலாயிற்று.

தேவாசிரிய மண்டபத்தின் சிறப்புரைத்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

கலி விருத்தம்

136. **பூத நாயகர் புற்றிடம் கொண்டவர்**
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூது எயில்திரு வாயில்முன் ஆயது.

தெளிவுரை: உயிர்களுக்கெல்லாம் தலைவரும் புற்றிடங் கொண்டவராய், ஆதிதேவராகப் பூங்கோயிலில் தியாகேசப் பெருமான் எழுந்தருளியிருக்க, அத்திருக்கோயிலின் பொன்னென ஒளிரும் பழைமையுடைய மதிலின் அருகில் உள்ள முற்றத்தில் முன் வாயிற்புறத்தில் ஒரு மண்டபம் உள்ளது.

பூத நாயகர் - உயிர்களுக்குத் தலைவர். புற்றிடம் கொண்டவர் - தியாகேசர், வீதிவிடங்கர், தேவரகண்டப் பெருமான், ஆடரவக் கிண்கிணிக்கால் அழகர், செங்கழுநீர் அழகர், செவ்வந்தித் தோடகர், கம்பிக்காது அழகர், தியாகவிநோதர், கருணாகரத் தொண்டைமான், அசைந்தாடும் அப்பர், அடிக்கு ஆயிரம் பொன் வழங்கியவர், கமலேசர், செம்பொன் தியாகர், தேவசிந்தாமணி, தியாக சிந்தாமணி முதலான அறுபதுக்கு மேற்பட்ட பெயர்கள் உள்ளன. பூங்கோயில் - திருக்கோயிலின் பெயர். முன்றில் - முற்றம் எயில் - மதில். 1

137. பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்
ஓவாது எவரும் நிறைந்து உறைந் துள்ளது
தேவா சிரியன் எனும்திருக் காவணம்

தெளிவுரை: தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனாகிய பிரமன், தேவேந்திரன், மலரின் மீது வீற்றிருக்கும் திருமகளைத் தன் மார்பில் கொண்டு விளங்கும் திருமால் முதலாகத் தேவர்கள் நீங்காது எல்லாக் காலத்திலும் நிறைந்து இருக்கும் இடமாக உடையது தேவாசிரியன் என்னும் அத்திருமண்டபம்.

பூவார் - தாமரையில் வீற்றிருக்கும்; பூவுலகினைப் படைக்கும் தொழிலைப் புரியும். எனவும் ஆம். திசைமுகன் - நான்முகன்; பிரமன். பூமிசை - தாமரை மலரின் மீது. மா - திருமகள். அகலம் - மார்பு. மால் - திருமால். வானவர் - தேவர். ஓவாது - நீங்காது. தேவாசிரியன் - முன் மண்டபத்தின் பெயர். காவணம் - மண்டபம். 2

திருக்கூட்டத்தினரின் தோற்றப் பொலிவு உரைத்தல்

138. அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத்து ஓசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது.

தெளிவுரை: பிறப்பு எனும் உலகத் துன்பத்தைத் தீர்க்கும் அத்தகைய அடியவர் திருமேனியின் மீது ஒழுங்கு திகழும்

திருநீற்றொளி விளங்குவதாலும், நிறை தூய்மையால் பாதுகாக்கும் திருவைந்தெழுத்தின் ஓசை பொலிந்து எழுதலாலும் மிகவாகப் பரந்து விரியும் ஓராயிரம் பாற்கடல் போன்று அவர்தம் தோற்றம் காட்சிபெறும். திருவைந்தெழுத்தின் ஒலி அலையோசையைக் குறித்தலாம்.

சிறப்புரை: "அரந்தை தீர்க்கும்" என்பது அடியவர்க்குச் சாற்றும் பெருமை நனி விளங்குதலை அறியலாம். பிறவியாகிய பெருந்துன்பத்தைப் போக்குபவர் அடியவர் என்று ஆயிற்று. இத்தன்மையில் அடியவர்கள் மரண பயம் அற்றவர்கள் என்க. அவர்கள் ஏனையோர் துன்பத்தையும் நீக்க வல்லவர்கள் எனச் சாற்றப்படுவதாயிற்று. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 5 - ஆம் திருமுறை பொது, காலபாசத் திருக்குறுந்தொகை, திருப்பாட்டு 909 - இல்.

"படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியி னான்அடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

அரந்தை தீர்க்கும் என்பதைத் திருநீற்றுக்குத் தொடர்பு படுத்தியும் காண்க.

திருநீறானது சிவபஞ்சாட்சரத்தை ஓதி நீரில் குழைத்து அணியப் பெறும் பாங்கினை நிரந்த நீற்றொளி எனப்பட்டது. இது தூய்மை நிலவி நன்மையைப் பெருகச் செய்யும். இத்தன்மையுடைய திருநீற்றுடன் விளங்கும் அடியவர்கள் திருவைந்தெழுத்தை இசைத்துக் கொண்டே இருப்பவர்கள். அது மலங்கள் பற்றாவண்ணம் நீக்கி உயிரைப் பாதுகாத்து வருவது. எனவே இவண் "புரந்த அஞ்செழுத்து என உணர்த்தப் படுவதாயிற்று. திருவைந்தெழுத்தின் பெருமையைத் திருஞான சம்பந்தர், 3 - ஆம் திருமுறை, பஞ்சாட்சரத் திருப்பதிகம் திருப்பாட்டு 234 - இல்,

"நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே."

என்று அருளிச் செய்தமையும் நோக்குக.

அரந்தை - துன்பம்; பிறவிப் பிணி என்க. நிரந்த - ஒழுங்கு முறையுடன் விளங்குதல்; விதிப்படி அணிதலைக் குறித்தலாம். புரந்த அஞ்செழுத்து - காக்கின்ற திருவைந்தெழுத்து; இதனைத் தூல பஞ்சாட்சரமான நமசிவய எனவும், சூக்கும பஞ்சாட்சரமான சிவயநம எனவும் கொள்க; "வ" கரத்தை நீட்டி உச்சரித்தலும் அமையும். 3

திருக்கூட்டத்தினரின் சிறப்புரைத்தல்

- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

139. **அகில காரணர்** தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர்என்று
அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வது அதன்இடை.

தெளிவுரை: யாவற்றுக்கும் காரணகர்த்தாவாக விளங்கும் சிவபிரான் திருவடியை வணங்குபவர்கள் அனைவரும் எல்லா உலகங்களையும் ஆட்சி செய்வதற்கு உரியவர்கள் ஆவர். ஆதலால் எல்லா உலகத்தில் உள்ளவர்களும் ஆங்கு அடைதலின் அத்தேவாசிரிய மண்டபமானது அகில உலகமும் இருப்பது போன்று காணப்படுவதாகும்.

முந்தைய பாடலில் பாற்கடலுக்கு உவமை சாற்றியமையைத் தொடர்ந்து இவண் அகில உலகத்திற்கு ஒப்புமை சாற்றப்படுதலைக் காண்க.

காரணர் - சிவபிரான் 4

140. **அத்தர்** வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்.
இத்திறந்தவர் அன்றியும் எண்ணிலார்.

தெளிவுரை: இத் தன்மையுடைய திருக்கூட்டத்தவர் முற்காலத்தில் சிவ பிரானால் விரும்பி ஆட்கொள்ளப்பட்டவர். சிவபிரான் மீது இவர்கள் கொண்ட அன்பும், பக்தியும் தேகம் முழுவதிலும் பரவி விளங்குவதால் மயிர்க்கால் தோறும் புளகாங்கிதம் அடைந்து விதிர்ப்பு கொள்வார்கள். இவர்கள், ஈசனுக்குத் தொண்டு செய்தலே தமக்கு உரிய கடமையாக கொள்வார்கள். இவர்கள் இத்தன்மையுடையவர்களையன்றி வேறு தரத்தினரைச் சிந்தை செய்யாதவர்களாவர்.

சிறப்புரை: இவண், ஈசனை அத்தர் எனப்பட்டது. இத்தன்மையில் மணிவாசகப் பெருமான், திருவாசகம் போற்றித் திருஅகவல், வரிகள் *174 - 176* - இல்.

"அத்தா போற்றி! ஐயா போற்றி!
நித்தா போற்றி! நிமலா போற்றி!
பக்தா போற்றி! பவனே போற்றி!"

எனவும் திருவெம்பாவையில்,

"முத்தன்ன வெண்ணகையாய் முன் வந்து எதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்"

எனவும், அருளிச் செய்தமை காண்க. மற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாலங்காட்டுத் திருப்பதிகத்தில்,

"பத்தா பக்தர் பலர் போற்றும்
பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன்
அடியார்க்கு அடியேன் ஆவேனே."

எனவும், திருவெண்ணெய் நல்லூர் முதல் திருப்பதிகத்தில்,

"அத்தா உனக்குஆ ளாய்இனி
அல்லேன் எனல் ஆமே."

எனவும், திருவாரூர்த் திருப்பதிகத்தில்,

"முத்தன் எங்கள் பிரான் என்று வானோர்
தொழநின்ற திமில்ஏறு உடையானை
அத்தன் எந்தைபிரான் எம்பிரானை
ஆரூரானை மறக்கலும் ஆமே."

எனவும், அருளிச் செய்தவாறு காண்க.

அத்தன் - சிவபிரான். "அர்" விகுதி கொண்டு வந்தது. முன் - முன்நாள்; முற்பிறவிகளும் ஆம். ஆண்டவர் - ஆட் கொண்டு அருள்புரிந்தவர். மெய் தழைந்து - மேனியில் பரவ விளங்கி. விதிர்ப்பு - புளகாங்கிதம். திருத்தொண்டு - ஈசனுக்கு உரிய மலர் பறித்து மாலை தொடுத்துச் சாற்றுதல், திருக்கோயிலில் அலகிடுதல், மெழுக்கிடுதல் முதலானவை; அடியவரை உபசரித்து போற்றுதலும் ஆம். இத்திறத்தவர் - அடியவர் - பெருமக்கள். எண்ணிலார் - வேறு சிந்தையில்லாதவர். 5

141. மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.

தெளிவுரை: மாசு என்பது சிறிதும் இல்லாத உருத்திராட்ச மணியைத் தரித்து விளங்கும் திருமேனியில் விதிப்படை குழைத்து அணியப் பெறும் திருநீற்றின் புனிதம் போன்று உள்ளத்திலும் புனிதத் தன்மையுடையவர்களாய்த் திருக்கூட்டத்தினர் விளங்குவார்கள் அவர்கள் தாம் கொண்டுள்ள புனிதத் தன்மையால் அருளின் வெளிப்பாடு விளங்க எல்லாத் திசைகளிலும் ஞான ஒளி பரவச் செய்து எல்லையில்லாத பெருமையுடன் திகழ்பவர்கள்.

சிறப்புரை: சிவபிரான் புனிதராக இருப்பவர். இத்தன்மையில் திருநாவுக்கரசர், 6 - ஆம் திருமுறை, திரு இன்னம்பர்த் திருப்பதிகம் திருப்பாட்டு 882 - இல்,

பாதத்து அணையும் சிலம்பர் போலும்
பாரூர் விடையொன்று உடையார் போலும்
பூதப் படையாள் புனிதர் போலும்
பூம்புகலூர் மேய புராணர் போலும்.

என அருளிச் செய்தமை காண்க. திருக்கூட்ட அடியவர்களின் இதயத்தாமரையில் புனிதராகிய ஈசன் விளங்கும் வழி, அத்தகைய அடியவர் பெருமக்களும் புனிதராயினர் என்க. தவிரவும் இறைவன் திருவடியை நண்ண வொட்டாது மருவும் மலங்களைத் திருவெண்ணீற்றாலும் திருவைத்தெழுத்தாலும் கழியச் செய்து, மயங்குதல் இல்லாத தூய அன்பினராய் விளங்கும் அடியவர்கள் பெருமக்கள் புனிதராய் மேவ, அவர்களும் அரன் எனத் தொழப்படுதற்கு உரியவர் என்பதைச் சிவஞானபோதம், 12 - ஆம் சூத்திரத்தில்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே."

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக.

மாசிலாத மணி - முத்து, மாணிக்கம் முதலான மணிகளில் காணப்படுவது போன்று எத்தன்மையான குற்றமும் இல்லாதது உருத்திராட்சம் எனக்கொள்க. புனிதர் - தூய்மையுடையவர். தேசு - ஒளி; அருளொளி என்க. பிறங்குதல் - விளங்குதல். 6

142. பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோது இலாத **குணப்பெருங்குன்றனார்.**

தெளிவுரை: இத்தகைய பெருமையுடைய அடியவர்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்பன, தன் நிலையினின்று உற்பவத்தால் கலங்கினாலும், உமாதேவியை தன் இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரான் திருவடிமலரை மறவாது ஏத்தி மகிழ்பவர்கள். அவர்கள் உயிர்கள் பால்காட்டும் அன்பின் மிகுதியானது குற்றவயப்படாத நற்குனத்தின் பெருங்குன்று போல உறுதியுடையது.

சிறப்புரை: சிவபிரானது எட்டுவடிவங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவற்றுள் ஐம்பூதங்கள் இவண் சுட்டப்படுவன. இவை தம்நிலையில் கலங்கினும் அடியவர்கள் அதன் இயல்பினைப் பெருமான் வடிவமாகவே கொள்வதால் மறவாமையாயிற்று. இத்தன்மையில் திருநாவுக்கரசர், 4 - ஆம் திருமுறை, திருப்பாதிரிப் புலியூர்த் திருப்பதிகம், திருப்பாட்டு 921 - இல்,

"மண்பாத லம்புக்கு மால்கடல்
மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே."

என்று அருளிச் செய்தமையும் காண்க.

பூதம் ஐந்து - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து. மாதொர் பாகர் - உமா தேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரான். காதல் உறைப்பு - அன்பின் மிகுதி. கோது - குற்றம். 7

143. கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் **அன்பினில் கும்பிட லேஅன்றி**
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

தெளிவுரை: செல்வமில்லாத நிலையில் வறுமையுற்றபோது துன்புறுதல் கொள்ளாத இயல்பும், பெரும் பொருள் எய்தும் போது

மகிழ்வு கொண்டு ஆரவாரித்தலும் இல்லாது எல்லாக் காலத்திலும் சமநிலையில் விளங்கும் செம்மையுடைவர்களான அத்தகைய அடியவர்கள், ஓடு போன்ற இழிந்த பொருளாக இருந்தாலும் பொன் போன்ற உயர்ந்த பொருளாக இருந்தாலும் விருப்பு வெறுப்பின்றி நோக்கும் இயல்பு உடையவர்கள். அவர்கள் இறைவனைக் கும்பிட்டு வழிபடுவதை தவிர அப்பிரானிடம் முத்தி பேறு என்றாலும் தனக்கு வேண்டாம் என்று சாற்றும் அளவில், பயன் கருதாது உறுதியுடன் பக்தி செய்பவர்கள்.

சிறப்புரை: அடியவர்கள் விருப்பு வெறுப்பு அற்று விளங்குபவர்கள் என்று இவண் சாற்றப்பட்டது. இத்தன்மையில் வேண்டாமையின் பெருமை ஓதப்படுதல் காண்க. இதனைத் திருவள்ளுவர்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்" - திருக்குறள். 362.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதுஒப்பது இல்." - திருக்குறள். 363.

என அருளிச் செய்தவாறும் காண்க.

தவிரவும் திருமூலர் திருமந்திரம் 2615 இல்

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே."

என அருளியமையும் நோக்குக. மற்றும் புறநானூற்றில் கழைதின் யானையார் என்னும் புலவர் பாடல் 204 - இல்,

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."

(இழிந்தன்று - இழிந்தது; உயர்ந்தன்று - உயர்ந்தது) எனச் சாற்றியவாறும் கொள்க.

இதன் வழி எத்தன்மையிலும் வேண்டாமையாகிய, விழுச் செல்வத்தில் மேவும் அடியவர்கள் "திருவினார்" என்னும் கலைச் சொல்லால் சுட்டப் பெறுதலை ஓர்க.

கேடு - துன்பம்; வறுமை. கெட்ட - நீங்கிய. திருவினார் - செம்மைமிகு மனத்தினையுடையவர். வீடு - முத்திப் பேறு. விறல் - உறுதிப்பாடு. 8

144. **ஆரம் கண்டிகை** ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.

தெளிவுரை: இத்தகைய அடியவர்கள், உருத்திராட்சத்தை மாலையாகக் கொண்டும், எளிமையான ஆடையுடுத்தியும், ஈசற்குப் புரியும் திருத்தொண்டு அன்றி வேறு ஒரு பணி இலாமையும், ஈசன்பால் கசிந்துருகும் அன்பினராய், குறைவற்ற மனத்தினராய், நிறை மகிழ்வுடன் உறுதி மிக்கவராய் விளங்குபவர்கள் ஆவர். அத்தகைய பெருமையுடைய அடியவர்களைப் பற்றி வார்த்தைகளால் உரைப்பதும் எளிமையாகுமோ!

இது கவிக்கூற்று.

சிறப்புரை: ஈசன்பால் அன்பு கொண்டு கசிந்து உருகுதலும் அதனால் அவர்கள் மகிழ்தலும் ஆகிய அடியவர்களின் மெய்ப்பாடு இவண் "ஈரஅன்பினர் யாதும் குறைவிலார்" எனப்பட்டது. இத்தகையோர் உள்ளத்தில் கொள்ளும் உறுதிப்பாடு வீரம் என ஈற்றடியில் உணர்த்தப்பட்டது. இது முன் திருப்பாட்டில் உணர்த்திய விறல் என்பதோடு இயைபு கொள்ளத்தக்கதாம்.

இப்புராணத்தில் சாற்றப்பெறும் அடியவர் பெருமக்கள் அத்தன்மையுடையவர்கள் என்பது பொதுமையில் கட்டப் பெறுதலாம். இத்தகைய உறுதிப்பாடும், மெய்த்தவ வேடமுமே மெய்ப்பொருள் எனக் காணும் திருநெறி வீரத்தின்பாற் படுதலாம் எனச் சாற்ற, அத்தகையோரை வெற்றிக்குரியர் என்று ஓர்தலும் சிறப்புடைத்து. அதன் வழி, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில்,

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்."

என அருளிச் செய்தவாறும் காண்க.

ஆரம் - மாலை. கண்டிகை - உருத்திராட்சம். கந்தை - எளிமையான ஆடை. பாரம் - கடமை. ஈரஅன்பு - கசிந்துருகும் பேரன்பு. வீரம் - உறுதிப்பாடு.

145. **வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்**
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்அறிந்து ஏத்துகேன்

தெளிவுரை: இவ்வடியார்கள் தாம் விரும்பும் வேடத்தைக் கொள்வார்கள். திருநடம் புரியும் கூத்தப் பெருமானுக்குத் தனித் தொண்டர்களால் விளங்கும் இவர்களுடைய தொன்மையான புகழையும், அவர்கள் ஆற்றும் தொண்டின் நிலையையும் இங்கு வாழ்த்தப் புகும் யான், என்னவென்று அறிந்து ஏத்துவேன்!

இது கவிக் கூற்று.

இவண், அடியவர்களின் புகழும் திருத்தொண்டின் திறனும் மிகப் பெரியது என்பதும், அதனைச் சொற்களால் எடுத்து இயம்புவது மிகவும் அரிது என்பதும் கருதாயிற்று.

தாண்டவப்பெருமான் - நடராசப்பெருமான். தனித்தொண்டர் - தனிச்சிறப்புடைய தொண்டர்கள்; இது நாயன்மார்களின் ஒப்பற்ற தன்மையைச் சுட்டுதலாம். *10*

திருத்தொண்டத் தொகையில் உரைத்த வழி அடியவர்களின் சரிதம் உரைத்தலைச் சாற்றுதல்

146. இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்தரத் திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம்

தெளிவுரை: இத்தகைய பெருமை விளங்கும் அடியவர் திருக்கூட்டத்தை எம் தலைவர் ஆகியவரும் எல்லையில்லாத புகழ் மிக்கவருமான ஆலால சுந்தரர் திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தை அழகுத் தமிழால் அருளிச் செய்த வண்ணம் உரைக்கத் தொடங்குவோம்.

சிறப்புரை: சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பெயர் கையிலையின் கண் ஆலால சுந்தரன் என வழங்கப் பெற்றமையை பாடல் எண் 32 (திருமலைச் சிறப்பு பாடல் 22) - இல் உணர்த்தப் பெறுதல் காண்க.

எம்பிரான் - எம் தலைவன், சுந்தரமூர்த்தி சுவாமிகளை குறித்தது. சுந்தரம் - அழகு; இது தமிழுக்கு அடைமொழியாம் என்க. வந்து பாடிய ஆலால சுந்தரர் திருக்கையிலையில் இருந்து பூவுலகில் வருவதற்குக் காரணம் அடியவர் பெருமக்களைப் பாடும் பொருட்டாம் என நவில்வதாயிற்று. அதுவே இவ்வரலாற்றுக்கு அடித்தளம் என்பதாம்.

திருக்கூட்டச் சிறப்பு நிறைவுற்றது

6. தடுத்தாட் கொண்ட புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூர் என்னும் திருத்தலத்தில் மறையவர் குலத்திலகமாம் சடையனாருக்கும் கற்பின் திருவாய் விளங்கும் இசைஞானியாருக்கும் திருஅவதாரம் செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவரது இயற்பெயர் நம்பியாரூரர் என்பது. இவர் மணப்பருவம் அடைய, புத்தூர் சடங்கவியின் திருமகளை மணம் பேசினர். திருமணம் நிகழ்கின்றபோது சிவபிரான் சுந்தரர் முன் முதியவர் திருக்கோலத்தில் வந்து, அவர் தனது அடிமை என்னும் ஓலை காட்டித் திருமணம் நிகழாவண்ணம் தடுத்து ஆட்கொண்டார்.

தன்னை தடுத்து ஆட்கொண்டவர் சிவபிரானே எனத் தெளிந்து இறைவனைத் துதித்துத் திருப்பதிகங்கள் அருளிச் செய்யலானார். திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருத்துறையூர், திருவதிகை, திருமாணிக்குழி, திருத்தினைநகர், திருத்தில்லை ஆகிய திருத்தலங்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடி இறைவனைத் துதித்தார். ஈசன் ஆணைப்படி திருவாரூர் செல்லும்போது சீர்காழியில் சிவபிரான் திருக்காட்சி நல்கத் தரிசித்தார்.

ஈசன் கட்டளைப்படி திருவாரூரை அடைந்த நம்பியாரூரரை ஆரூர் மக்கள் இனிது வரவேற்க, இறைவன் தமது தோழமையை நல்க, தம்பிரான் தோழரானார். இவர் ஆங்கு பரவையாரைத் திருமணங் கொள்ள விழைய அதனை ஈசன் நிறைவேற்றிக் கொடுத்தார்.

தேவாசிரியர் மண்டபத்தில் எழுந்தருளிய அடியவர்களைப் போற்றிப் பாட, ஈசன், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்." என்று அடியெடுத்துக் கொடுக்க, திருதொண்டத் தொகை அருளிச் செய்யலானார்.

நம்பியாரூரரின் வரலாற்று அருளிச் செயல்கள் சாற்றப்படும் தலைப்புக்களாவன:

1. தடுத்தாற்கொண்ட புராணம் பாடல்கள் 203
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் பாடல்கள்409
3. கழறிற்றறிவார் புராணம் பாடல்கள் 175
4. வெள்ளானைச் சருக்கம் பாடல்கள் 53

ஆக பாடல்கள் 840

இவையேயன்றி விறல் மிண்ட நாயனார் புராணம், பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம், சோமாசி மாற நாயனார் புராணம், சடையநாயனார் புராணம், இசைஞானி நாயனார் புராணம் ஆகியவற்றிலும் நம்பியாரூரரின் வரலாறு இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் முதற்கண் குறித்த நான்கினுள் தடுத்தாற் கொண்ட புராணம் இத்தொகுதியிலும் ஏனைய மூன்றும் தொகுதி 4 - லும் உரைக்கப்படுதலாயிற்று

திருமுனை நாட்டுச் சிறப்புரைத்தல்
அறுசீர் ஆசிரியர் விருத்தம்

147. கங்கையும் மதியும் பாம்பும்
கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி
ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத
மதி இரு மருங்கும் ஓடிச்
செங்கையல் குழைகள் நாடும்
திருமுனைப்பாடி நாடு.

தெளிவுரை: கங்கை, பிறைச்சந்திரன், பாம்பு, கொண்டைமலர் ஆகியவற்றைச் சடைமுடியின் மேல்தரித்து விளங்கும் அழகிய கண்ணுடையவரான சிவபிரான் ஆட்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குரிய நாடு திருமுனைப்பாடி என்பது. அந்நாட்டில் விளங்கும் பெண்களின் சந்திரனைப் போன்ற குளிர்ந்த முகத்தின் இருபுறத்திலும் கயல்மீன்களையொத்த கண்கள், குழைகள் அணிந்த காதுகள் வரையில் ஓடிச் சென்று நோக்கும் எழில் கொண்டு விளங்கும்.

சிறப்புரை: பெண்களின் விழியானது காதுவரை சென்று மீள்வது அவர்களுக்குரிய சிறப்பாகச் சுட்டப் பெறுதலை காண்க. மற்றும் நாட்டின் சிறப்பு அந்நாட்டுப் பெண்களின் சிறப்பைப் பொறுத்து நிற்றலால் இவண் நாட்டுச் சிறப்பில் பெண்ணின் பெருமை சாற்றப்பட்டது. சிவபெருமான் திருவிழிச் சிறப்பினை அங்கணர் என ஓதியமையும், அடுத்து நாட்டு மாதரின் விழிச் சிறப்பினை ஓதியமையும் ஆய்ந்து நோக்குக. மேலும், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்று சிவபிரானைப் போற்றித் தொடங்கிய அதே வகையில் கங்கையும், மதியும் இவண் சாற்றிய தன்மையும் ஓர்க.

கங்கை - நீர்மலி வேணியன் என்னும் தன்மையில் அமைதலாம். மதி - சந்திரன்; நிலவுலாவிய என்னும் தொடர்க்கு ஒப்பிடுக. கடுக்கை - கொன்றை மலர்; இது பிரணவ புட்பம் என்பதாம். அங்கணர் - சிவபிரான். ஆண்டவர் - ஆட் கொள்ளப் பட்டவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள். வதன சீத மதி - குளிர்ந்த நிலவு போன்ற முகம். கயல் - மீன். குழை - காதணி. 1

திருநாவலூர் நகரச் சிறப்புரைத்தல்

148. பெருகிய நலத்தால் மிக்க
பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க
அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க
வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடும்
திருநாவ லூராம் அன்றே.

தெளிவுரை: திருநலம் பெருகும் அந்நாட்டில் வேதநெறியில் சைவம் நிலைத்து நின்று ஓங்கும் வகையில் ஈசன் திருவருளால் அவதாரம் செய்த மறையவர்கள் விளங்கும் தவத்தால் திரு நாவலூர் திகழ்ந்தது.

திருநாவலூர் என்னும் திருத்தலமானது நலமும், வளமும் கொண்டு தவத்தால் மிக்கும், வேதநெறியில் சைவம் ஓங்கவும் விளங்கியது என்பதாம், நீடும் - நிலைத்து விளங்கும். 2

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஅவதாரம் செய்தல்

149. **மாதொரு பாக னார்க்கு**
வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடைய னாருக்கு
ஏதம்இல் கற்பின் வாழ்க்கை
மனைஇசை ஞானி யார்பால்
தீதுஅகன்று உலகம் உய்யத்
திருஅவ தாரம் செய்தார்.

தெளிவுரை: உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரானுக்கு வாழையடி வாழையாக அடிமை பூண்டு தொண்டு செய்யும் வேதியர் குலத்தில் தோன்றிய மேன்மைமிகு சடையனாருக்கும், அவருடைய வாழ்க்கைத் துணைவியான கற்பின்மிக்க இசைஞானியாருக்கும் தீது அகன்று உலகம் உய்ய, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புதல்வராகத் திருஅவதாரம் செய்தார்.

சிறப்புரை: பாடல் எண் 147 - இல் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் ஓலைகாட்டி ஆட்கொள்ளப்பட்டவர் என்று குறிப்பிட்ட வகையில் அவருக்கு நாடு திருமுனைப்பாடி எனவும், அடுத்த பாடலில் அவருக்கு ஊர் திருநாவலூர் எனவும், புகன்றமை காண்க. அத்தன்மையில் இத்திருப் பாட்டுக்கு எழுவாயாக ஓலைகாட்டி ஆட்கொள்ளப் பட்டவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஅவதாரம் செய்தார் எனக் கூட்டுக.

வழிவழி அடிமை செய்யும் வேதியர்குலம் என்பதும், அக்குலத்துள் தோன்றியவர் மேம்படு சடையானர் என்பதும் புலப்படுத்தும் வகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாழ்கொளி புத்தூர்த் திருப்பதிகத்தில்,

"எந்தையை எந்தை தந்தை பிரானை
ஏதமாய இடர் தீர்க்க வல்லானை"

என அருளிச் செய்தவாறும் நோக்குக.

மாதொரு பாகனார் - சிவபிரான்; உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் பெருமான். மேம்படு சடையனார் - வேதத்தில் மிக்கவரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் புதல்வராகப் பெற்ற சிறப்பால் மேம்பட்டவரும் ஆம். இவர் 63 நாயன்மார்களுள் ஒருவர்

ஆவர். இவ்வரலாறு தனியே இடம்பெற்றுள்ளது. ஏதம் இல் - குற்றம் இல்லாத; இது தலைக் கற்பினைச் சுட்டுதலாம். இசைஞானியார் - இவர் 63 நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாறு தனியே சாற்றப்பட்டுள்ளது. 3

நம்பியாரூரர் என்னும் திருநாமம் சூட்டப் பெற்று வளர்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

150. தம்பிரான் அருளி னாலே
தவத்தினால் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூரர் என்றே
நாமமும் சாற்றி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி
அணிமணிச் சுட்டி சாத்தி
செம்பொன்நாண் அரையில் மின்னத்
தெருவில் தேர் உருட்டும் நாளில்!

தெளிவுரை: சிவபிரான் திருவருளால் தவத்தில் மிக்கவர்களால் போற்றப்படுகின்ற நம்பி ஆரூரர் என்னும் பெயரைச் சாற்றி ஐம்படைத் தாலியும், சதங்கையும், பொன்னால் ஆன அரைஞாணும் அணிவித்து அத்திருமைந்தனைப் பெற்றோர் வளர்த்து வரலானார்கள். நம்பியாரூரர் தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடலானார்.

இ.ந்து ஒரு குளகச் செய்யுள்; அடுத்த செய்யுளில் மகன்மை கொண்டார் என வினைமுடிபு பெறும்.

சிறப்புரை: அடியவர் பெருமக்களை மாதவர் கூட்டம் என்று திருக்கூட்டச் சிறப்பு, திருப்பாட்டு தொடர் எண் - 146 - இல் உரைத்தவாறு இவண் அத்தகைய பெருந்தகையோரால் போற்றப்படுதலை உணர்த்துதல் காண்க. இவருக்கு இடப்பட்டது இவர் பாட்டனார் பெயர் என்பதனை இப்புராணத்தின் திருப்பாட்டு தொடர் எண் 205 இன்படி காண்க.

தம்பிரான் - சிவபிரான். தவத்தினால் மிக்கோர் - அடியவர் பெருமக்கள். நாமம் - திருப்பெயர் சாற்றி - பெயரிட்டு. ஐம்படை சதங்கை - திருமாலின் படையாகிய சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்தினையும் பொன்னால் வடித்துக் குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் மார்பில் அணியப் பெறும் அணிகலம். சதங்கை - ஓர் அணிகலம். அரைநாண் - அரைஞாண். 4

151. **நரசிங்க முனையர்** என்னும்
நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப்
பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே
வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற்கு ஏற்ப
அன்பினால் மகன்மை கொண்டார்.

தெளிவுரை: நம்பியாரூரர் தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கும் போது அந்நாட்டின் மன்னரான நரசிங்க முனையர் என்பவர், அம்மைந்தன் மீது பேரன்பு பூண்டவராய் அரியதாகிய நட்பின் பண்பினால் சடையனாரை வேண்டிப் பெற்று மகன்மை கொண்டு அரசிளங்குமரனுக்குரிய பெருமையோடு தம் அரண்மனையின் கண் வளர்த்து வரலானார்.

சிறப்புரை: இவண் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தந்தை என்னும் வகையில் சடையனார், நரசிங்க முனையர் என இருவர் விளங்கினர் எனக் காண்க. இத்தெய்வத் திருவினாரைத் திருநாவலூர்த் திருப்பதிகம் திருப்பாட்டு எண் 11 - இல்,

"நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் **நர**
சிங்க முனையரையன்
ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும்
ஊர் அணி நாவலூர்என்று
ஓத நல் தக்க வன்தொண்டன்
ஆரூரன் உரைத்த தமிழ்
காதலித்தும் கற்றும் கேட்பவர்
தம் வினைக்கட்டு அறுமே."

என அருளிச் செய்தவாறும் காண்க.

நரசிங்க முனையார் - சுந்தரரை வளர்த்த குறுநிலமன்னர்; இவர் 63 நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாறு தனியே உள்ளது. காதல் - அன்பு. கூர - முன்னின்று விளங்க. பயந்தவர் - நம்பி யாரூரரின் தந்தையாகிய சடையனார் மற்றும் இசைஞானியார். மகன்மை - புதல்வனாகப் பெறுதல். ஏற்ப - இசைய. 5

நம்பியாரூரர் மணப்பருவம் அடைதல்

152. பெருமைசால் அரசர் காதல்
பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி
வளர்ந்துமங் கலம்செய் கோலத்து
அருமறை முந்நூல் சாத்தி
அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச்
சீர் மணப் பருவம் சேர்ந்தார்.

தெளிவுரை: பெருமை மிக்க அரசரின் அன்புக்குரிய திருமகவாயும், பின்னும் தம்முடைய மறையவர் குல மரபுப்படி மேவி வளர்ந்து வரும் நம்பியாரூரர்க்கு மங்கல நிகழ்ச்சி புரியும் வகையில் முப்புரி நூல் சாத்தியிருக்க, அவர் எல்லையில்லாத கல்விச் செல்வத்தை இனிது பெற்று மிகச் சிறப்புடன் ஓங்கித் திருமணப் பருவம் அடைந்தார்.

காதல் பிள்ளை - அன்பின் மிக்க நல்மைந்தன். முறை மரபு - அந்தணர் மரபு - முந்நூல் - முப்புரி நூல்; பூணூல். தொல்கலை - கல்விச் செல்வம்.

6

நம்பியாரூரர்க்குத் திருமணம் புரியும் வகையில் மணம் பேசுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

153. **தந்தையார் சடையனார்தம்**
தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள்
அரும்பெரும் மரபுக்கு ஏற்ப
வந்த தொல்சிறப்பின் **புத்தூர்ச்**
சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி
மணத்திறம் செப்பி விட்டார்.

தெளிவுரை: தந்தையாகிய சடையனார் தன் ஒப்பற்ற திருமகனாகிய நம்பியாரூரருக்குச் சைவ அந்தணர் குலத்திற்கு ஏற்ப, புத்தூரில் பழைமை வாய்ந்த சிறப்போடு விளங்கும் சடங்கவி சிவாசாரியார். செல்வப் புதல்வியைத் திருமணம் செய்விக்க எண்ணிச் செய்தி அனுப்பினார்.

தனித்திருமகன் - ஒப்பற்ற செல்வம் போன்ற புதல்வன். நம்பியாரூரர். கன்னி - மகள்; புதல்வி. 7

154. குலமுதல் அறிவின் மிக்கார்
கோத்திர முறையும் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச்
சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தன் ஆகி
மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த
பண்பினால் அன்பு நேர்ந்தான்.

தெளிவுரை: குலத்தில் முதல்வராக விளங்கும் அறிவின் மிக்கோர் சடையனாரின் கோத்திரம் முதலியவற்றை இனிது எடுத்துரைக்கக் கேட்ட சடங்கவி சிவாசாரியார், ஏற்று மகிழ்ந்து தன் திருமகளை நம்பியாரூரருக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தும், அன்புடன் மேற்கொண்டு செயலாற்றவும் தொடங்கினார்.

அன்பு நேர்ந்தான் - தன் புதல்வியை மணம் செய்து கொடுக்க அன்புடன் இசைந்தார். 8

155. மற்றவன் இசைந்த வார்த்தை
கேட்டவர் **வள்ளல்** தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று
சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி
மணவினை உவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக்கு ஏற்பக்
குறித்து நாள் ஓலை விட்டார்.

தெளிவுரை: சடங்கவி சிவாசாரியார் தன் திருப்புதல்வியை மணம் செய்து கொடுக்க இசைவு கொண்டதைக் கேட்ட குல முதல்வர்கள் நம்பியாரூரரைப் பெற்றவராகிய சடையனாரிடம் சென்று அச்செய்தியைத் தெரிவிக்க, அவரும் உள்ளம் பெரிதும் மகிழ்ந்து அரசகுமாரனுக்கு ஏற்றவாறு சிறப்பான வகையில் மணம் திகழ்த்துவதற்கு மணநாளைக் குறிப்பிட்டுத் திருமண ஓலை அனுப்பினார்.

சிறப்புரை: பிறர்பால் ஒரு பொருளை வேண்டி நில்லாது இயல்பாய் அடைந்து அனைவர்க்கும் வழங்கும் சிறப்புடைமையை இவண் வள்ளல் தன்மை எனச் சாற்றுதலாயிற்று. ஈசனார் திருவருள்

வயத்தால் மேவுதலும், யாதும் குறைவிலராயும் (திருப்பாட்டு எண்-144.) விளங்குபவர்கள் எனவும், அரந்தை தீர்க்கும் அடியவர்கள் (எண் - 138.) எனவும், மாதவர் (எண் - 146.) எனவும் சாற்றப்பெறுதலும் காண்க. இதன் வழி அனைத்து அடியவர்களும் வள்ளல் எனக் குறிப்பிடப்படுதலை ஓர்க. இங்கு நம்பியாரூரர், திருவருளை வாரி வழங்கும் தன்மையைக் குறித்தலாம் என்க.

மற்றவன் - சடங்கவி சிவாசாரியார். வள்ளல் - நம்பியாரூரர். பெற்றவர் - சடையனார். கொற்றவர் - நரசிங்க முனையர். கொற்றவர்திரு - அரசரிடம் வளர்ந்து வரும் நம்பியாரூரர் குறித்துப் பெருமையுடன் கூறி அதற்குரிய சிறப்புடன் நடத்தப்பெறும் திருமணம் என்பது பொருள். ஓலை - மணச் செய்தி. 9

நம்பியாரூர் திருமணக்கோலம்
- இது முதல் 9 பாடல்கள் ஒரு தொடர்

156. மங்கலம் பொலியச் செய்த
மணவினை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னாரும்
ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர்
குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும்
மைந்தரும் பணிந்து கொண்டார்

தெளிவுரை: நன்மங்கலம் பொலியுமாறு செய்யப்படும் திருமண நிகழ்ச்சிக்குரிய மணஓலையை ஏந்தி அழகிய கயல் போன்ற கண்ணுடைய மகளிரும், ஆடவர் பலரும் சேர்ந்து தேன் விளங்கும் மலர்கள் மிக்க சோலை சூழ்ந்த தொன்மையான புத்தூரை அடைந்தார்கள். ஆங்குச் சடங்கவி சிவாச்சாரியரின் சார்பாகத் தாமரை போன்ற முகங் கொண்டு விளங்கும் மாதரும் மற்றும் ஆடவரும் எதிர் நின்று வணங்கி மரபு முறையுடன் வரவேற்றார்கள்.

மங்கலம் - இனிய நல்லறம். அங்கயல் கண் - அழகிய கயல் போன்ற கண்; இ.ந்து உமாதேவியை அங்கயற் கண்ணி என்று நவின்றமை ஒக்கும். மீன் தன் பார்வையால் குஞ்சுகளைப் பராமரித்தல் போன்று இத்தகைய பெண்கள் கருணை விளங்க இல்லறத்தை இனிது மேவுதலைச் சுட்டுதலாம். ஈண்டி - சேர்ந்து. கொங்கு - தேன். மூதூர் - தொன்மை விளங்கும் புத்தூர்; இதனைத் தொல்சிறப்பின் புத்தூர் எனப் பாடல் 153 - இல் முன்னர் நவின்மை காண்க. பங்கய வதனிமார் - தாமரை போன்ற மலர்ந்த முகம் உடைய மகளிர். மைந்தர் - ஆடவர் 10

157. மகிழ்ச்சியால் மணம் மீக் கூறி
மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப்
போற்றிய தொழிலர் ஆகி
இகழ்ச்சி ஒன் றானும் இன்றி
ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி
நீள்முளை சாத்தி னார்கள்

தெளிவுரை: திருமணம் செய்து கொள்வதற்குரிய இசைவை நல்கிய நிலையில் பெண் வீட்டார் மகிழ்ந்து ஏற்றுப் புகழ் மிகுந்த திருமண நிகழ்ச்சிக்குரிய அத்துணை செயல்களையும் நிகழ்த்துபவராய், எத்தன்மையாலும் குறைவுபடாத ஏற்றமிகு பூமாலைகள் விளங்கும் பந்தல் அமைத்தும், தானியங்களை முளை கொள்ளுமாறு செய்தும் ஆற்றினார்கள்.

மீக்கூறி - மேற்பட உரைத்து. தொழிலர் ஆகி - திருமணத்திற்குரிய செயல்களை மேற்கொள்வாராகி, மைந்தர் - ஆடவர் நீள்முளை - தானியங்களை முளைக்கச் செய்து அவற்றைத் திருமணப் பந்தலில் வைத்தல் என்பது திருமணச் சடங்குகளில் ஒன்று. 11

158. மணவினைக்கு அமைந்த செய்கை
மாதினைப் பயந்தோர் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச்
சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னாள்
பொருந்திய விதியி னாலே
பணைமுரசு இயம்ப வாழ்த்திப்
பைம்பொன் நாண் காப்புச் சேர்த்தார்.

தெளிவுரை: திருமண நிகழ்ச்சிக்கு உரிய செயலை மணமகள் வீட்டார் செய்யலானார்கள். கொத்தான மலர்கள் நெருக்கமாகக் கட்டப்பட்டதும், வண்டுகள் ரீங்காரம் செய்யக் கூடியதுமான மாலையணிந்த நம்பியாரூரரைத் திருமணத்திற்கு முன்நாள் மேடையில் இருத்தி, மங்கலம் பெருகும் முரசு முதலிய வாத்தியங்கள் முழங்க, பொன்னாலாகிய நாணைக் காப்பாகக் கையில் கட்டினார்கள்.

மணவினை - திருமணச் செயல். மாதினைப் பயந்தோர் - மணமகளின் பெற்றோர். சுரும்பு - வண்டு. சுரும்பு அணை தோளினான் - நம்பியாரூரர். திருநாள் முன்னாள் - திருமணத்திற்கு முந்தைய நாள்;

அக்காலத்தில் திருமண நிகழ்ச்சி 3 நாட்களுக்கும் மேலாக நடந்தது என்பது கொள்ளத்தக்கது. இயம்ப - ஒலிக்க. 12

159. மாமறை விதிவ ழாமல்
மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல
மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன்
திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக்
கதிரவன் உதயம் செய்தான்.

தெளிவுரை: மேன்மை விளங்கும் வேதத்தில் மொழியப்பட்ட விதி வழுவாது திருமணத்திற்குரிய செயல்களை இனிது ஆற்றி வரும் நிலையில், முன்னாள் இரவு முழுமையும் மங்கல வாத்தியங்கள் முழங்கத் திருநாவலூரின் கண் நறுமணம் கமழும் மாலையணிந்த மார்பினையுடைய நம்பியாரூரரின் திருமணத்தைக் காணும் விருப்பம் உடையவன் போன்று சூரியன் உதயம் ஆனான்.

மாமறை - மேன்மையுடைய வேதம். வழாமல் - வழுவாது; பிறழாது. மணத்துறைக் கடன் - திருமணத்துக்குரிய கடமைகள். தூமறை மூதூர் - இவண் திருநாவலூரைக் குறித்தது. தொடையல் - பூமாலை. கங்குல் - இரவு, காமுறு - விருப்பம் கொண்ட தன்மை. 13

160. காலைசெய் வினைகள் முற்றிக்
கணிதநூல் புலவர் சொன்ன
வேலைவந்து அணையும் முன்னர்
விதிமணக் கோலங் கொள்வான்
நூல் அசைந்து இலங்கும் மார்பின்
நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையும் தாரும் பொங்க
மஞ்சனச் சாலை புக்கான்.

தெளிவுரை: காலை நேரத்தில் செய்யத்தக்க சடங்குகளை இனிது செய்த பின்பு, சோதிடக் கணிதத்தில் வல்லவர்கள் குறித்த திருமணவேளை வருவதற்கு முன்னர் விதிக்கப்பட்ட முறைப்படி திருமணத் திருக்கோலம் கொள்ள வேண்டும் என்கிற நிலையில் பூணூல் தரித்த மார்பினரும், நுட்பமான கேள்வி ஞானத்தையுடைவருமான மேலோனாக விளங்கும் நம்பியாரூரர் மார்பில் அசையும் மாலைகள் விளங்கத் திருமஞ்சனச் சாலையை அடைந்தார்.

சிறப்புரை: திருப்பாட்டு 152 - இல் "மணப்பருவம் சேர்ந்தார்" என்னுமாறு "அர்" விகுதி கொண்டும் இத்திருப்பாட்டில் "சாலை புக்கான்" என்னுமாறு "அன்" விகுதி கொண்டும் நம்பியாரூரர் அழைக்கப்படுதலைக் காண்க. அது காவிய மரபு.

காலை - திருமண நாளின் காலைப் பொழுது. வினைகள் - செயல். முற்றி - முடித்து; செய்து - கணித நூல் - சோதிட நூல். புலவர் - வல்லோர். வேலை - நற்பொழுது. அணைதல் - சேர்தல். கொள்வான் - கொள்ளும் பொருட்டு. நூல் - பூணூல். மேலோன் - மேன்மையுடைய நம்பியாரூரர். மாலை - மணி மாலை. தார் - பூமாலை. மஞ்சனச் சாலை - நீராட்டு இடம். 14

161. வாசநெய் ஊட்டி மிக்க
மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத்து அமைந்த பாங்கர்ப்
பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத்து அணிநீர் ஆட்டி
அரிசனம் சாத்தி அன்பால்
ஈசனுக்கு இனியான் மேனி
எழில்பெற விளக்கி னார்கள்.

தெளிவுரை: சிவபிரானுக்கு இனியவரான நம்பியாரூரரை நறுமண எண்ணெய் தேய்த்து மாணிக்கத்தால் இழைக்கப்பட்டுப் பொன்னாலான ஆசனத்தில் இருக்கச் செய்து, நறுமண மலர்கள் கலந்த தூய நீர் கொண்டு ஆட்டி, மஞ்சள் கலவையும் சாத்தி திருமேனியை எழில்பெறுமாறு அலங்கரித்தார்கள்.

அரிசனம் - மஞ்சள். ஈசனுக்கு இனியான் - நம்பியாரூரர். எழில் - அழகு. வரை - நறுமணம். 15

162. அகில்விரைத் தூபம் ஏய்ந்த
அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக்
கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம்
புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி
ஒளிர்நறும் சிகழி ஆர்த்தான்.

தெளிவுரை: நம்பியாரூரர்க்கு நறுமணம் உடைய அகிற்புகை விரவிய அழகிய பட்டாடை சாத்தி, மேகம் போன்ற கருமையுடைய தலை

மயிரை வெண் திங்கள் போன்ற ஆடை கொண்டு, ஒப்பனை செய்வதில் வல்லவன் ஒருவன் ஈரத்தைப் போக்கி உலரச் செய்து கைவிரல் நகத்தைக் கொண்டு அதன் சிக்கறுத்து அழகுற முடித்தான்.

நம்பியாரூரரின் தலையைத் துவட்டி ஈரத்தைப் போக்கி முடியலங்காரம் செய்தலை இவண் உரைத்தலாயிற்று.

அகில் விரை - அகில் என்னும் நறுமணம் பொருள். முகில் - மேகம், கூந்தலின் கருமையைச் சுட்டியது. துகில் - ஆடை. மதியம் - வெண்மை. குஞ்சி - தலைமயிர்., உகிர்நுதி - நகத்தின் நுனி. சிகழி - குடுமி; தலையலங்காரத்தைக் குறித்தது. 16

163. தூநறும் பசுங்கர்ப் பூரச்
சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆண்தன் பனிநீர் கூட்டி
அமைத்தசந் தனச்சேறு ஆட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த
மங்கலக் கலவை சாத்திப்
பால்மறை முந்நூல் மின்னப்
பவித்திரம் சிறந்த கையான்.

தெளிவுரை: நறுமணம் மிகுந்த பச்சைக் கர்ப்பூரக் கலவையில் பனி நீர் கூட்டிச் சந்தனம் சேர்த்துக் குழம்பாக்கிக் கஸ்தூரிச் சாந்து தோய்த்த வாசனைக் கலவையை நம்பியாரூரர்க்குப் பூசிப் பால் போன்ற வெண்மையான முப்புரிநூல் மார்பில் ஒளிருமாறு அலங்காரம் செய்தார்கள். கையில் பொன் மோதிரம் விளங்கிற்று.

பசுங்கர்ப்பூரம் - பச்சைக் கர்ப்பூரம் என்னும் நறுமணப் பொருள். மான்மதம் - கஸ்தூரி. பால் - வெண்மையைக் குறித்தது. மின்ன - ஒளிர. பவித்திரம் - பொன்மோதிரம். சிறந்த கையான் - நம்பியாரூரரைக் குறித்தது. 17

164. தூமலர்ப் பிணையல் மாலை
துணர்இணர்க் கண்ணி கோதை
தாமம் என்று இனைய வேறு
தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய
வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி
நன்மணக் கோலங் கொண்டார்.

தெளிவுரை: தூய்மையான மலர்களால் பிணைக்கப்பட்ட மாலையும், கண்ணி, தாமம், கோதை, பூங்கொத்து ஆகியனவும் வெவ்வேறுவகையால் அமையச் சாத்தி, இருளை நீங்கச் செய்யும் ஒளி திகழும் பேர் பெற்ற மணிமாலை போன்றனவும் அணிவிக்க, நம்பியாரூரர் நல்ல மணக்கோலத்தில் விளங்கினார்.

பிணையல் - பிணைக்கப்பட்ட மாலை. துணர் இணர் - பூங்கொத்துவகை; செண்டு வகை. கண்ணி - தலைமாலை. கோதை தாமம் - சரம் போன்று கோத்து அமைக்கப்படும் மாலை. மாமணி - உயர்ந்த மாணிக்கம் முதலான மணிகள். இருள் கால் சீக்கும் - இருளை அறவே நீக்கும். நாம நீள் கலன்கள் - பேர் பெற்ற ஆபரணங்கள். *18*

நம்பியாரூரர் குதிரையின் மீது ஏறி வர மங்கல வாத்தியங்கள் முழங்கப் புத்தூரை நோக்கிச் செல்லுதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

165. மன்னவர் திருவும் தங்கள்
வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள
நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துள் கொண்டு
தகும்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணிஆர் **யோகப்**
புரவிமேற் கொண்டு போந்தார்.

தெளிவுரை: நரசிங்க முனையரையரின் வளர்ப்பு மகனாதலின் அரச பரிவாரமும், சடையனாரின் செல்வனாதலின் வேத ஒலியும் திகழும் திருமணத்தை முன்னிட்டுத் திருநாவலூர் என்னும் நன்னகர் திருவிழாக்கோலம் கொள்ள, நம்பியாரூரர் தன்னுடைய தலைவனாகிய சிவபிரான் திருவடியை மனத்துள் கொண்டு, ஆன்மாக்களை இறைவன்பால் தகுதிப்படுத்தும் திரு வெண்ணீற்றைத் தரித்து அழகிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த குதிரையின் மீது ஏறி அமர, அழைத்துச் செல்லப்படலானார்.

சிறப்புரை: இவண் நம்பியாரூரர் அமர்ந்து சென்ற குதிரை யோகப் புரவி எனப்பட்டது. இத்தன்மையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோகத்தின்பாற் கொள்ளப்படுதலை ஓர்க். பின்னர் இவர் பரவையாரை மணங்கொண்டு மேவுகையில், பாட்டு தொடர் எண் *327* - இல்,

"பல்நாளும் பயில்யோகம்
பரம்பரையின் விரும்பினார்!"

எனச் சாற்றியமையும் நோக்குக. இதன்வழி இவர் சிவயோகியாகத் திகழ்தல் காண்க. இந்நெறியில் உமாபதி சிவாச்சாரியார் அருளிய உண்மைநெறி விளக்கத்தில் சிவயோகம் பற்றி,

"எப்பொருள்வந்து உற்றிடினும்
அப்பொருளைப்பார்த்து அங்கு
எய்தும்உயிர் தனைக்கண்டு
இங்குஅவ் வுயிர்க்கு மேலாம்
ஒப்பில் அருள் கண்டு சிவத்து
உண்மை கண்டிங்கு
உற்றதுஎல்லாம் அதனாலே
பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே
நினைப்பும் அதுதானே
தரும்உணர்வு புசிப்பும் அது
தானே யாகும்
எப்பொருளும் அசை வில்லை
என அந்தப் பொருளோடு
இசைவதுவே **சிவயோகம்**
எனும் இறைவன் மொழியே."

என அருளிச் செய்தவாறும் காண்க.

திரு - செல்வம், இங்குப் பரிசனம் என்க. வைதிகத் திரு - வேத முழக்கம். நல்நகர் - திருநாவலூர் - நாதன் - சிவபிரான். யோகம் - உயர்ச்சி. புரவி - குதிரை. 19

166. இயம்பல துவைப்ப எங்கும்
எத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற
நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து
விரவினர்க்கு இன்பம் செய்தே
உயர்ந்த வாகன யானங்கள்
மிசைக் கொண்டார் உழையர்ஆனார்.

தெளிவுரை: நம்பியாரூரர் குதிரையின் மீது ஏறிச் செல்ல பலவான வாத்தியங்கள் முழங்கவும், பல்லோர் புகழ்ந்து ஏத்தவும், மாதர்கள்

பல்லாண்டு வாழ்த்துகள் மொழியவும், மறையவர்கள் வேதங்கள் ஓதவும், திருமணத்தை வியந்து உலக வாழ்வை விரும்பி இன்பம் பெருகுமாறு செய்து சுற்றத்தினர் சிவிகையின் மீது அமர்ந்து இனிது சூழ்ந்து செல்லலானார்கள்.

இயம் - வாத்தியம். துவைப்ப - முழங்க. வாகனயானங்கள் - சிவிகை. உழை - பக்கம். 20

167. மங்கல கீத நாத
மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த
மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப்
பணைத்தெழுந்து அணியில் மிக்க
குங்கும முலையினாரும்
பரந்தெழு கொள்கைத்து ஆகி.

தெளிவுரை: மங்கல கீதத்தை இனிய இசையோடு ஒலிக்கும் மறையவர் கூட்டத்தோடு, மாலையும் நல்ல வாசனைப் பொருள்களும் தரித்த ஆடவர்கள் உடன் சென்றார்கள். வஞ்சனையும், தாமரை அரும்பும் தோற்கும் வண்ணம் பருத்த மார்பகத்தில் குங்குமச் சாந்து தடவப்பெற்ற மகளிரும் உடன் எழுந்தவர்களாய்ச் செல்லலானார்கள்.

இ.ந்து ஒரு குளகச் செய்யுள். கொள்கைத்து ஆகி என்பதனோடு அடுத்த பாடலின் அருங்கடி எழுந்த போது என்று கூட்டிப் பொலிந்தது என வினைமுடிபு காண்க.

சிறப்புரை: காண்பவர் உள்ளத்தைக் கவரும் பருத்த மார்பகங்கள் சூது என்னும் குணத்திற்கு உவமை சாற்றப்பட்டது. இது போன்று வருவது காவிய மரபு என்க.

தொங்கல் - மாலை. விரை - வாசனைப்பொருள். மைந்தர் - ஆடவர். துவன்றி - நெருங்கி. சூது - வஞ்சனை, இவண் கவர்ச்சி என்க. பங்கயம் - தாமரை. சாய்த்து - அசைத்து. பனை - பருமை. குங்குமம் - வாசனைக் கலவை. கொள்கைத்து - உடன் செல்லும் கொள்கையுடையவராகி. 21

168. அருங்கடி எழுந்த போழ்தின்
ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும்
இலங்கொளி மணிக ளாலும்

நெருங்கிய பீலிச் சோலை
நீலநீர்த் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்தது என்ன
காட்சியின் பொலிந்தது அன்றே.

தெளிவுரை: மகளிர் மிக விரைந்து எழுந்தபோது ஆரவாரம் செய்த வெண்மையான சங்கு வளையல்களாலும், காதில் அணிந்த மகரக்குழைகளாலும், ஒளி வீசுகின்ற முத்து முதலான மணிகளாலும், நெருங்கி ஏந்திச் சென்ற மயிற்பீலிக் குஞ்சத்தாலும், நீலவண்ணமுடைத்தாய் அலைகள் கொண்டு அசையும் கடலை ஒத்து இருந்தது.

சிறப்புரை: மகளிர் கூட்டமானது கடலை ஒத்து இருந்தது எனச் சாற்றப்பட்டது. வெண்மையான சங்கு, மகரம், மணி நீலவண்ண மயிற் பீலி கடலுக்கு உவமை சாற்றிய எழிலை நோக்குக.

அருங்கடி - மிக விரைவாக. வெள்வளை - சங்கு வளையல். மகரக் குழை - காதணி. மகரம் - மீன். இது குழையின் அமைப்பைக் குறித்தது. பீலிச் சோலை - மயிற் பீலி. தரங்கம் - அலை - பொலிந்தது - இனிது விளங்கியது. 22

169. நெருங்குதூ ரியங்கள் ஏங்க
நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைத்து செல்லப்
பிணங்கு பூங் கொடிகள் ஆட
அருங்கடி மணம் வந்து எய்த
அன்று தொட்டு என்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர்
மணம் வந்த புத்தூர் ஆமால்.

தெளிவுரை: மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும், மயிற்பீலிகளால் செய்யப்பட்ட சாமரங்கள் அசையவும், பூச்சக்கரக் குடைகள் நெருங்கி விளங்கவும், பல்வகையான பூங்கொடிகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து அழகுடன் அசைந்து ஆட நறுமணம் கமழ வரும் அத்திருமண ஊர்வலமானது அன்பின் பால் ஒழுகும் மறையவர்கள் விளங்கும் புத்தூரை அடைய அது மணம் வந்த புத்தூர் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றது.

தூரியம் - வாத்தியம். ஏங்க - ஒலிக்க. நிரை - வரிசையான. பிணங்கு பூங்கொடி - பிணைந்து மேவும் பூங்கொடிகள். கடிமணம் - நறுமணம், ஆல் - அசைச்சொல். 23

மணப்பெண் வீட்டார் எதிர்கொண்டு வரவேற்றல்

170. நிறைகுடம் தூபம் தீபம்
நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம்
நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின்
உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் **வள்ளல்**
மணம் எதிர்கொள்ள வந்தார்

தெளிவுரை: பூரணகும்பம், தூபம், தீபம், பாலிகைகள் ஆகியன ஏந்தியும் தேன் துளிர்க்கும் மலர்கள், அறுகு, வாசனைக் கலவை, வண்ணப்பொரி முதலான பலவும் கொண்டு, பன்னீர், சந்தனம் முதலானவைகள் தெளித்து வீதி வழியே வேதம் ஓதும் அந்தணர்களும், மங்கல மகளிரும் நம்பியாரூரர் முதலான அனைவரையும் எதிர்கொண்டு வரவேற்றார்கள்.

சிறப்புரை: இத்திருமணமானது பின்னர்ச் சிவபெருமானால் வழக்குத் தொடுக்கப் பெற்று நிகழாது தடைப்படவுள்ளது என்பதனை நாடக யுத்தி வாயிலாக முன்னர் அறிவிக்கும் வகையில் "மணம் எதிர்" - திருமணம் எதிர்ப்பு கொள்ளப்படுதல் என்னும் பொருளும் உள்ளப்படுமாறு அமைத்தலைக் காண்க. இத்தன்மையில் சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் பிரிந்திருத்தலை மறைமுகமாகக் குறிக்கும் வகையில் வாழ்த்துச் செய்தியாக இளங்கோவடிகள்,

"காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக!"

எனச் சாற்றுதலையும் நோக்குக.

நிறைகுடம் - பூரண கும்பம். நறை - வாசனை; தேன் மணம். சுண்ணம் - வாசனைக் கலவை. உறுபுனல் - பன்னீர். சாந்து - சந்தனம். மறையவர் - வேதம் ஓதும் அந்தணர். மடவார் - மங்கலப் பெண்டிர். வள்ளல் - நம்பியாரூரர், இது நாயனார் என்னும் சிறப்புரைத்தமையாம். எதிர்கொள்ள - நேர் எதிரே வந்து வரவேற்றல், எதிர் என்பது எதிர்வு என்னும் தடை பற்றிய பொருளையும் உணர்த்தும் என்பதாம். 24

நம்பியாரூரரைக் கண்ட ஊர்மக்கள் சாற்றுதலை உரைத்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

171. கண்கள் எண் இலாத வேண்டும்
காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள
சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த
மணம்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம்
பாடுவார் ஆடு வார்கள்.

தெளிவுரை: திருமண ஊர்வலத்தில் நம்பியாரூரரைக் கண்ட மக்கள் இவ்அருமையுடைய மைந்தனைக் காண்பதற்கு அளவில்லாத கண்கள் வேண்டும் என்று அழகினைப் புகழ்ந்து சாற்றினார். சடங்கவி சிவாச்சாரியாரின் புதல்வி பெண்களில் சிறந்தவளாய் அரியதொரு நோன்பினைப் புரிந்தனள் என்று உரைத்தனர். இப்பூமி மகிழும் வண்ணம் வந்த மணத்தைக் காணப் பெற்றுப் பிறவியின் சிறந்த போற்றை அடைந்தோம். என்று கூறலானார்கள். அத்தகையோர் மனம் மகிழ்வுற்ற நிலையில் இனிய பாடல்களை இசையோடு பாடியும் அதற்கேற்ப ஆடியும் இருந்தார்கள்.

சிறப்புரை: இவண் நம்பியாரூரரின் அழகு மேம்பட்டு விளங்குவதை, "கண்கள் எண்ணிலாத வேண்டும்" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருப்பாட்டு தொடர் எண் 289 - இல் நம்பியாரூரைக் "கண் கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி" எனவும், திருப்பாட்டு எண் 290 - இல் "முருகனோ! பெருகு ஒளியால் தன் நேரில் மாரனோ! தார் மார்பின் விஞ்சையனோ! மின்நேர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்று உடையவனோ!" எனச் சாற்றியவாறும் காண்க. அழகு அளவிற்கு அதிகமாக வெளிப்பட்டுத் தோன்றுமாயின் அதனைக் காண்பதற்கு இரண்டு கண்கள் மட்டும் போதாது என்னும் கருத்து உரைக்கப்படுதல் காண்க. இதனைப் புலப்படுத்தும் வகையில் அருணகிரிநாதர் கந்தரலங்காரம் திருப்பாட்டு 90 இல்,

"மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்

சேலார் வயல்பொழில் செங்கோ
டனைச்சென்று கண்டு தொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேஅந்த நான்முகனே!"

என்று அருளியவாறும் காண்க.

தவிரவும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கண்டு பேரின்பம் அடைந்த மக்கள் கூறியதைப் போன்று இராமபிரானைக் கண்ட மக்கள் நிலையைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாலகாண்டம், கார்முகப் படலம், பாடல் 43 - இல்,

"நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கும் அன்ன தேயால்
தம்பியைக் காண்பின் என்பார்
தவம் உடைத்து உலகம் என்பார்
இம்பர்இந் நகரில் தந்த
முனிவனை இறைஞ்சும் என்பார்."

எனச் சாற்றியவாறும் நோக்குக.

எண்ணிலாத - எண்ணற்ற, பல. காளை - நம்பியாரூரர். பேதை - மணமகளான சடங்கவியின் புதல்வியைக் குறித்தது; 5 முதல் 7 வயதுடைய பெண் பருவமும் ஆம். மண் - பூவுலகம், இவண் புத்தூர் என்னும் தலம். களிகூர - மகிழ்வு எய்த வாழ்ந்தோம் - பிறவியின் பேறாகக் கண்டு மகிழ்தலைக் குறித்தது. 25

172. ஆண்தகை அருளின் நோக்கின்
வெள்ளத்துள் அலைந்தோம் என்பார்
தாண்டிய பரியும் நம்பால்
தகுதியின் நடந்தது என்பார்
பூண்தயங்கு இவனே காணும்
புண்ணிய மூர்த்தி என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம்
இன்னன இசைப்பச் சென்றார்.

தெளிவுரை: அருள் நோக்குடைய ஆண்தகமை கொண்ட ஆரூரரின் பார்வையால் பேரருள் வாய்க்கப் பெற்று மகிழ்ந்தோம் எனவும், தம்மைத் தாண்டிச் சென்ற மணமகன் ஏறியிருந்த குதிரையும் தன்

நாயகனுக்கு ஏற்ப விழைவுடன் மெல்லச் சென்றது எனவும், நிறைந்த ஆபரணங்களைப் பூண்டு விளங்கும் இவனே காண்பதற்குரிய புண்ணியமூர்த்தியாவன் எனவும், ஆங்கு நெருங்கிக் கூடிய மகளிர் கூட்டம் பாராட்டிப் பேச, நம்பியாரூரர் ஊர்வலத்தில் சென்றார்.

சிறப்புரை: நம்பியாரூரர் மண ஊர்வலத்தில் செல்லும்போது தன் நாயகனாகிய சிவபிரான் திருவடியையே நெஞ்சிருத்தி மேவுதலைத் திருப்பாட்டு தொடர் எண் - 165 - இல் நவின்றமை காண்க. இத்தன்மையில் அப்பேறு கொண்டவரே ஆண்தகை என்னும் வகையில் மாணிக்கவாசகர் திருவாசகம் அச்சப்பத்து, திருப்பாட்டு எண் 10 - இல்,

"வாணிலாங் கணகள் சோர
வாழ்த்திநின்று ஏத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே."

என அருளிச் செய்தவாறும் நோக்குக. இத்தன்மையில் நம்பியாரூரரை ஆண்தகை எனச் சாற்றப்படுதல் காண்க.

ஆண்தகை - நம்பியாரூரர், வெள்ளம் - அருள் வெள்ளம்; இது ஆனந்தத்தை நிலவச் செய்வது. தகுதி - இனிதாக. நடந்தது - நடந்து சென்றது; இது தன் இயல்பான துரித நடையை விடுத்து மெல்லச் சென்றது என்பதாம். பூண் தயங்கு - ஒளிரும் ஆபரணங்கள். புண்ணியமூர்த்தி - இப்பிறவியில் தன்னைச் சார்வோர்க்கு மறுமைக்குரிய நற்பேறு அளித்துக் காப்பவனும் முற்பிறப்பில் செய்த தவப்பயனால் இப்பிறவியில் நல்லின்பத்துள் மேவி விளங்குபவனும் ஆம். ஈண்டிய - நெருங்கிய. மடவார் - மகளிர். இன்னன - இது போல. இசைப்ப - மொழிய. 26

கவிக் கூற்று

173. வருமணக் கோலத்து எங்கள்
வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு
சென்றுவெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப்
பரிமிசை இழிந்து பேணும்
ஒரு மணத் திறத்தின் ஆங்கு
நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன்.

தெளிவுரை: திருமணக் கோலத்தில் ஊர்வலமாக வந்த எங்கள் வள்ளலாராகத் திகழும் நம்பியாரூரர் இனிய வாசனை விளங்கும்

திருமணப் பந்தரின் முன்பு வெண்சங்கானது மழை தரும் மேகம் போன்று ஒலித்து ஆரவாரம் செய்ய, உயர்ந்த குதிரையின் மேலிருந்து கீழே இறங்கி மணச்செயலில் ஈடுபட உட்செல்ல முற்படலானார். இனி ஆங்கு நிகழ்ந்ததை மொழியலானேன். அவ்வாறு மொழியும் பேற்றால் நான் உய்ந்தேன்.

இது கவிக் கூற்று

சிறப்புரை: இவண் அடியவர் பெருமக்களின் வரலாற்றை மொழிதலானது பெரும் புண்ணியச் செயல் என்பதும், அதுவே பிறவாமையாகிய செயல் என்பதும், அதுவே பிறவாமையாகிய பெருநெறியில் திளைக்கச் செய்து பிறவிப் பிணியைப் போக்கும் என்பதும் இனிது உணர்த்தும் வகையில், "மொழிவேன் உய்ந்தேன்" என்று சாற்றப்படுவதாயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை திருப்பாட்டு 11 - இல்,

"என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திரு நாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர்ஆ வாரே."

என அருளிச் செய்தமை காண்க.

வள்ளலார் - திருவருளைப் பொழியும் நம்பியாரூரர். தெள்ளும் - இனிமையுடைய. பெருமழைக் குலம் - மேகமுழக்கம் போல ஒலித்தல். பரி - குதிரை. இழிந்து - கீழே இறங்கி. பேணும் - திருமணச் செயலைப் புரிய உள்ளே செல்லும் தன்மை. நிகழ்ந்தது - சிவபெருமான் பேரழகுடைய முதியவராக வந்து தொன்றி ஓலைகாட்டி ஆட்கொண்டமை முதலான பிற நிகழ்வுகள். உய்ந்தேன் - வாய்த்த பிறவி நீக்கமும் பிறவாமையாகிய பெரும் பேறு கொள்ளுதலும் ஆம். 27

கயிலைநாதன் உருக் கொண்டு வருதல்
கலி விருத்தம்

174. ஆலும் மறை சூழ்கயிலை
யின்கண் அருள் செய்த
சாலும்மொழி யால்வழி
தடுத்து அடிமை கொள்வான்

மேலுற எழுந்துமிகு
கீழுற அகழ்ந்து
மாலும் அய னுக்கும்அரி
யார்ஒருவர் வந்தார்.

தெளிவுரை: இனிது ஓதப்பெறும் வேதஒலி சூழ்ந்துள்ள கயிலைமலையில் அருள் புரிந்த நல்ல சால்புடைய மொழியால் சுந்தரர் செல்லும் உலகியல் வழியைத் தடுத்து அடிமை கொள்ளும் வகையில், முற்பட்டு மேல் எழுந்து பறந்தும், மிகவும் கீழே அகழ்ந்து குடைந்தும் சென்ற நான்முகனாகிய பிரமனுக்கும், திருமாலுக்கும் காண்பதற்கு அரியராக விளங்கும் சிவபிரான் அங்கு வந்தார்.

சிறப்புரை: சிவபிரான் ஆலால சுந்தரரைப் பூமியில் பிறவி கொள்ளுமாறு ஆணை வழங்கிய போது அவர் தன்னைத் தடுத்து ஆட்கொள்ளுமாறு வேண்டியவாறு (திருப்பாட்டு எண் - 38) சிவபிரான் இங்கு எழுந்தருளப் பெற்றார் என்பதாம். சிவபிரான், திருமாலும், பிரமனும் காணற்கு அரியராய் விளங்கிய தன்மையும் அடியார் விருப்பத்திற்கு இசைய மிக எளியராய்த் தோன்றித் திருக்காட்சி நல்குதலும் இவண் சாற்றப்படுதல் காண்க.

சிவபிரானின் திருநாமங்களுள் ஒருவன் என்னும் பெயர் இங்கு உரைக்கப் பெறுதலை ஓர்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவாசகம் - திருவண்டப் பகுதி வரி 43 - இல்,

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க!"

என அருளிச் செய்தவாறும் கொள்க.

சிவபிரான் திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரியவராகிய வரலாறு:

ஒரு காலத்தில் யார் பெரியவர் என்னும் வினா எழுந்த நிலையில் திருமாலும், பிரமனும் சர்ச்சை கொண்டு ஈசனை நாடினர். அவர் தீத்திரட்சியாகி ஓங்கி நின்று, தன்னைக் காண்பவரே உயர்ந்தவர் என உரைக்கத் திருமால் பன்றி வடிவமாகப் பூமியைக் குடைந்து ஈசன் திருப்பாதத்தைத் தேடிச் சென்றார். அப்போது ஈசன் திருமுடியிலிருந்து சிதறிய தாழம்பூ ஒன்று வர, பிரமன் தான் ஈசனைக் கண்டமைக்குச் சாட்சி கூறுமாறு வேண்டினார். திருமால் தான் திருவடியைக் காணாத நிலையைத் தெரிவித்தார். பிரமன்

ஈசன் திருமுடியைக் கண்டதாகப் பொய் புகன்ற தாழம்பூ ஈசனுக்குச் சாற்றுதலினின்றும் விலக்கப்பட்டது. பொய் புகன்ற பிரமனுக்குத் தனிக்கோயில் இல்லாமையாயிற்று. இந்த வரலாறு இத்திருப்பாட்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அடிகளில் உரைக்கப்பட்டது.

ஆலுதல் - வாயால் ஓதுதல். சாலும் மொழி - சால்பு அமைந்த மொழி; இது அடியவர்க்கருளும் பாங்குடைய மொழி; இதனைத் திருப்பாட்டு எண் 39 - இல் "அங்கணன் அதற்கு அருள் செய்தபின்" என்றமையாம். மேல்உற - அன்னமாய் மேலே பறந்து செல்ல. மிகு கீழ் உற - பாதாளத்தில் செல்ல. அகழ்ந்து - குடைந்து. மால் - திருமால். அயன் - பிரமன். அரியார் - காணற்கு அரிதாக விளங்குபவர். ஒருவர் - ஒருவன். ஒப்பற்றவர், ஈசன் திருப்பெயராகவும் காண்க. 28

சிவபிரான் வந்த திருக்கோலத்தை உரைத்தல்

- இது முதல் 4 - பாடல்கள் ஒரு தொடர்

175. கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்**புனித நீறு** பொலிவு எய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதுஎன மீதே
வெண்ணரை முடித்தது விழுந்துஇடை சழங்க.

தெளிவுரை: நெற்றியில் உள்ள ஒளி திகழும் கண், வெண்மையான படம் போன்ற ஆடையென விளங்கும் திருநீறென நெற்றியில் பொலிய, குளிர்ந்த பிறைச் சந்திரன், முற்றிய கதிர் சாய்வது போன்று வெண்மையான நரைமுடியென முடிக்கப் பெற்றுத் தளர்ந்து அசைய (எய்தி),

இது முதல் நான்கும் குளகச் செய்யுள். இது தொடர் எண் 179 - ஆம் திருப்பாட்டின் மூன்றாம் அடியில் "என்றான்" என வினை முடிபு பெறும்.

கண்ணிடை - நெற்றிக் கண். கரந்த - மறைந்த. நுதல் - நெற்றி. தண்மதி - பிறைச்சந்திரன். சழங்க - தளர்ந்து துவள. 29

176. காதில்அணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின் மிசை நூலினொடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்துகில் நுடங்க
ஆதபம் மறைக்குடை அணிக்கரம் விளங்க.

தெளிவுரை: காதில் உருத்திரட்சத்தால் வடிக்கப்பட்ட குழை விளங்கவும். சுடர் விடும் மார்பில் மின்னும் முப்புரி நூலினொடு தோளின்

மீது சாத்திய வெண்மையான மேலாடை இணைந்து அசையவும், வெயிலை மறைக்கும் குடை கையில் விளங்கவும். (எய்தி)

கண்டிகை - உருத்திராக்கம். நூல் - முப்புரி நூல். உத்தரியம் - மேலாடை. ஆதபம் - சூரியன். மறைக்குடை - வெயிலை மறைக்கும் குடை, வேதமாம் குடையும் ஆம். 30

177. பண்டிசரி கோவண உடைப்பழமை கூரக்
கொண்டதோர் சழங்கல்உடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள.

தெளிவுரை: வயிற்றினின்றும் சரிந்த கோவண உடையின் மீது பழைமை மிகுந்த ஆடை உடுத்திய அழகு கொள்ள, வெண்மையான மெல்லிய உடையோடு தருப்பைப்புல் முடிந்த மூங்கில் தண்டினைக் கரத்தில் பற்றிக் கால்கள் தள்ளாடும் நடைகொண்டு. (எய்தி)

பண்டி - வயிறு. சழங்கல் - தளர்ந்த, நழுவுகின்ற தன்மை. குசை - தருப்பைப் புல். வேணுத்தண்டு - மூங்கில் தண்டு. 31

178. மொய்த்துவளர் **பேரழகு மூத்தவடி வேயோ**
அத்தகைய மூப்பு எனும் அதன்படிவ மேயோ
மெய்த்த நெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடம்என ஐயம்உற எய்தி.

தெளிவுரை: பேரழகு யாவும் ஒன்று சேர்ந்து முற்றிய வடிவமோ எனவும், அத்தகைய மூப்புக்கு வடிவம் இதுதானோ எனவும், மெய்யான வேத நெறியான வைதிகம் தோற்றுவித்த முதன்மையான குருவடிவமோ இவ்வடிவம் கொண்டுள்ளது என எண்ணுமாறும் ஆங்கு எய்தி,

மொய்த்து - ஒன்று சேர்ந்து. மூத்த - முற்றிய; முதிர்ந்த. படிவம் - வடிவம். மெய்த்த நெறி - மெய்ந்நெறி. முதல் - முதற் பொருள் எனவும் காண்க; குருநாதன் என்க. ஐயம்உற - இவ்வாறு யாவரும் எண்ணம் கொள்ளுமாறு. எய்தி - அடைந்து. 32

முதியவராக வந்த சிவபிரான் மொழிதல்

179. வந்ததிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்று
"இந்தமொழி கேண்மின் எதிர் யாவர்களும்" என்றான்
முந்தைமறை ஆயிரம் **மொழிந்ததிரு வாயான்.**

தெளிவுரை: இத்தகைய திருக்கோலத்துடன் வந்து பெருமை விளங்கும் வேதநெறிப்படி மணச்சடங்கு தொடங்கும் பந்தரின் முன்னர், பலர் நெருங்கிக் குழுமி இருக்கும் சபையில் பழைமையுடைய வேதங்கள் மொழிந்த திருவாயால், அம்முதியவர் கோலத்தில் வந்த சிவபிரான் நம்பியாரூரரின் எதிர் நின்று, "நான் கூறுவதை யாவரும் கேளுங்கள்." என்றார்.

மாமறை - பெருமை விளங்கும் வேதம். மணத்தொழில் - திருமணச்சடங்கு. நம்பி - நம்பியாரூரர். பன்னுசபை - நெருக்கமாகக் குழுமிய சபை. முந்தைமறை - பழைமையுடைய வேதம்; ஆகமமும் கொள்க. 33

முதிய வேதியரை அனைவரும் வரவேற்க நம்பியாரூரர் அவரை மொழியுமாறு தெரிவித்தல்

180. என்றுரைசெய் அந்தணனை
எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை **மங்கல**
மடங்கல் அனையானும்
"நன்றுமது நல்வரவு
நங்கள் தவம் என்றே
நின்றதுஇவண் நீர்மொழிமின்
நீர்மொழிவது" என்றார்.

தெளிவுரை: இவ்வாறு மொழிந்த வேதியரை எண்ணற்ற வேதநெறி மிக்க அந்தணர்களும், திருமணம் மேவும் சிங்கம் போன்ற நம்பியாரூரரும், "உங்கள் வருகை நன்றுடையது. இது எம்முடைய தவப்பயன் முன்னின்று விளங்கிற்று. இங்கு நீர் மொழிவதாகக் தெரிவித்ததைக் கூறுக." என்றார்.

மடங்கல் - சிங்கம் போன்ற நம்பியாரூரர். 34

சிவபெருமான் தனக்கும், நம்பியாரூரருக்கும் வழக்கொன்று இருத்தலைக் கூறுதல்

181. பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
"என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி" என்றான்.

தெளிவுரை: அப்போது முதிய வேதியராக வந்த சிவபிரான் நாவலூர் பெருந்தகையான நம்பியாரூரரை நோக்கி, "என்னிடையும்,

நின்னிடையும் உண்டான இசைவினால் யான், முன்னே உள்ள பெரிய வழக்கு ஒன்றை முடித்த பின்னர், நின்னுடைய திருமணத்தை நடத்த முயல்க." என்றார்.

சிறப்புரை: இசைவு என்பதும், வழக்கு என்பதும் சுந்தரர் திருக்கயிலையில் சிவபிரானிடம் உலகியல் கொண்டு மயங்கும் வழித் தடுத்தாட் கொள்ள வேண்டும் என்று வேண்டியதற்கேற்ப நடைபெறவுள்ளது எனக் கொள்க.

பிஞ்ஞகன் - சிவபிரான். நாவலர் பெருந்தகை - திருநாவலூரின் கண் திரு அவதாரம் செய்த நம்பியாரூரர். இசைவு - உடன்பாடு என்க; இது அடியவர் வேண்டிய நிலையில் இறைவன் அருளிய கருணை. வேள்வி - திருமணம். 35

வழக்கு முடித்த பின்னர் மணம் செய்வதாக ஆரூரர் உரைத்தலும், சிவபிரான் வழக்கைக் கூறுதலும் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

182. நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
"உற்றதொர் வழக்கென்இடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்
முற்றஇது சொல்லுகஎன" எல்லைமுடி வில்லான்,

தெளிவுரை: நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் மொழிந்ததைக் கேட்ட நிகரற்ற பெருந்தகையாரான நம்பியாரூரர், "என்னோடு வழக்கு ஒன்று நினக்கு இருக்குமானால் அதனை முடிவுக்கு கொண்டு வராது யான் திருமணம் செய்யேன். ஆதலால் அதனை முழுமையாகச் சொல்லுக." என்றார். அதைக் கேட்ட ஆதியந்தம் இல்லாதவராகிய சிவபிரான் வழக்கினை மொழியலானார்.

இ.ந்து ஒரு குளகச் செய்யுள். அடுத்த பாடலில் வரும் கேண்மின் என வினை முடிபு பெறும்.

நெற்றிவிழியான் - நெற்றியில் நெருப்புக்கண்ணுடைய ஈசன். நிகர்இல்லான் - நம்பியாரூரர். வதுவை - திருமணம். முற்ற - முழுவதுமாக. எல்லைமுடிவு இல்லான் - ஆதியந்தம் இல்லாத ஈசன். 36

183. "ஆவதிது கேண்மின் மறை யோர்என்அடி யான் இந்
நாவல்நகர் ஊரன்இது நான்மொழிவ" தென்றான்
தேவரையும் **மால்அயன் முதல் திருவின் மிக்கோர்**
யாவரையும் வேறடிமை யாய்உடைய எம்மான்.

தெளிவுரை: திருமால், பிரமன், தேவர்கள் முதலாக செல்வத்திற் சிறந்தவர்கள் அனைவரையும் அடிமையாகக் கொண்ட எம்தலைவனான சிவபிரான், "மறையவர்களே! இதனைக் கேட்பீராக! இத்திருநாவலூரின் நம்பியாரூரன் என் அடிமை இது நான் மொழிவது." என உரைத்தார்.

நாவல்நகர் - திருநாவலூர். ஊரன் - நம்பியாரூரன். எம்மான் - எம்தலைவன், சிவபிரான். 37

முதியவராக வந்த சிவபிரான் கூறியதைக் கேட்டு அனைவரும் சிரித்தல்

கலித்துறை

184. என்றான் இறையோன் அது
கேட்டவர் எம்மருங்கும்
நின்றார் இருந்தார் "இவன்என்
நினைந்தான் கொல்" என்று
சென்றார் வெகுண்டார்
சிரித்தார் திருநாவலூரர்
"நன்றால் மறையோன்மொழி"
என்று எதிர் நோக்கி நக்கார்.

தெளிவுரை: சிவபிரான் இவ்வாறு சொன்னதும், அதைக் கேட்ட அங்கிருந்தவர்கள், "இவன் என்னவென்று நினைத்தான் கொல்?" என்று அருகில் எழுந்து செல்வதும், சினங் கொள்வதும், ஏளனமாகச் சிரிக்கவும் செய்தார்கள். நம்பியாரூரர், "இவ்வேதியர் சொல்லும் மொழி நன்றேயுள்ளது" என்று சாற்றி எதிர் நின்று நகை செய்தார்.

இறையோன் - வேதியர் கோலத்தில் வந்த சிவபிரான். மறையோன் மொழி - முதிய வேதியர் கூறிய சொல். நக்கார் - சிரித்தார். 38

முதிய வேதியர் நம்பியாரூரரைப் பார்த்து அடிமை என்று ஓலை காட்டி உரைத்தல்.

185. நக்கான் முகம் நோக்கி
நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசை உத்தரியத்
துகில்தாங்கி மேற்சென்று
"அக்காலம் **உன்தந்தை**
தன்தந்தை ஆள் ஓலைதால்
இக்கா ரியத்தை நீ இன்று
சிரித்தது என் ஏட" என்ன.

தெளிவுரை: அப்போது தன்னை நோக்கி நகைத்த நம்பியாரூரரை நோக்கி, எல்லோர்க்கும் மிக்கவராய் விளங்கும் வேதியராக வந்த சிவபிரான், முதுமை நடுக்கம் உடையவராய் மேலாடையைத் தாங்கிப் பற்றி மேலும் முன்னே சென்று, "அடேய்! நீ சிரிப்பது எதற்கு? அக்காலத்தில் உன் தந்தையின் தந்தை எழுதிக் கொடுத்த அடிமை ஓலை இதோ உள்ளது." என்றார்.

நக்கான் - நம்பியாரூரரைக் குறித்தது. நுடங்கி - தள்ளாடி. மிக்கான் - மேன்மையுடைவராகிய சிவபிரான். மிசை - தோளின் மீது. உத்திரியத் துகில் - மேலாடை. தந்தை தன் தந்தை - பாட்டன். ஆள் ஓலை - அடிமை ஓலை. 39

அந்தணர்கள் பிறர்க்கு அடிமையாதல் இல்லை என உரைத்தல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

186. **மாசிலா மரபில் வந்த**
வள்ளல்வே தியனை நோக்கி
நேசம்முன் கிடந்த சிந்தை
நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
"ஆசில்அந் தணர்கள் வேறோர்
அந்தணர்க்கு அடிமை ஆதல்
பேசஇன்று உன்னைக் கேட்டோம்
பித்தனோ மறையோய்" என்றார்.

தெளிவுரை: குற்றமில்லாத மரபில் தோன்றிய நம்பியாரூரர், முதிய வேதியரை நோக்கி, முன்னே கயிலையில் கொண்ட நேசமானது சிந்தையில் தோய்ந்து நெகிழ்ச்சி கொள்ளச் சிரிப்பு நீங்கி, "வேதியரே! குற்றமில்லாத அந்தணர்கள் வேறு ஓர் அந்தணர்க்கு அடிமையாதல் என்று கூறுவதை நீர் சொல்லக் கேட்டோம். மரபில் இல்லாத ஒன்றைக் கூறும் நீர் பித்தனோ?" என்றார்.

இங்கு கயிலையில் ஆலாலசுந்தரர் தொண்டு செய்த பாங்கு திருவருளால் சிந்தையில் தோன்றியது என்பது இத்திருப்பாட்டின் 2 - ஆம் அடியின் கருத்து.

மாசிலா - குற்றமில்லாத. வள்ளல் - நம்பியாரூரர். வேதியன் - முதியராய் வந்த ஈசன். சிந்தை நெகிழ்ச்சி - கசிந்த பேரன்பு. ஆசில் - குற்றமில்லாத. உன்னை - உன்னால் சொல்ல. 40

சிவபிரான் நம்பியாரூரரை நோக்கிப் பணி செய்யுமாறு ஆணை மொழிதல்

187. "பித்தனும் ஆகப் பின்னும்
பேயனும் ஆக நீயின்று
எத்தனை தீங்கு சொன்னால்
யாதும்மற்று அவற்றால் நாணேன்
அத்தனைக்கு என்னைஒன்றும்
அறிந்திலை ஆகில் நின்று
வித்தகம் பேச வேண்டா
பணிசெய வேண்டும்" என்றார்.

தெளிவுரை: சிவபிரான் நம்பியாரூரரை நோக்கி, "நான் பித்தனாகவும் ஆகுக, பேயனாகவும் ஆகுக, நீ எவ்வளவு தீங்கான சொற்களைக் கூறினாலும் அவற்றால் நாணம் கொள்ளமாட்டேன். இத்துணை சொல்லியும் நீ என்னை அறியவில்லை. ஆயினும் என்முன் நின்று பெரிய அறிவாளி போன்று பேசிக் கொண்டிருக்காதே. அடிமைப் பணி செய்ய வேண்டும். என்றார்.

சிறப்புரை: இவண் மனிதப் பிறவியைக் கொண்ட ஆலால சுந்தரர், பிறவியால் நேரும் மயக்கத்தால் சிவபிரான் வேதியர் வடிவினராய் வந்த நிலை அறிந்திலை என்னும் வகையில் இத்திருப்பாட்டின் 3 - ஆம் அடியானது உணர்த்துதலாம்.

தீங்கு - குறை கூறிப் பேசுதல். ஆகில் - ஆனாலும். வித்தகம் - அறிவுடைச் சொல் போன்று. பணி - அடிமைப் பணி, தொண்டு. 41

அடிமை ஓலையைக் காட்டுமாறு ஆரூரர் கூறுதல்

188. கண்ட தோர் வடிவால் உள்ளம்
காதல்செய்து உருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை
கோபமும் உடனே ஆக்கும்
உண்டு ஓர்ஆள் ஓலை என்னும்
அதன் உண்மை அறிவேன் என்று
தொண்டனார் "ஓலை காட்டு"
என்றனர் துணைவ னாரை.

தெளிவுரை: சிவபிரான் முதிய வேதியராக வர அத்தோற்றத்தைக் கண்டு நம்பியாரூரர் உள்ளமானது அன்பு கொண்டு உருகும். அவர்,

தனக்கு அடிமை என்று பித்தரைப் போன்று உரைத்ததைக் கேட்டுச் சினம் பெருகும் அந்நிலையில் அடிமை ஓலையொன்று உள்ளது என உரைத்தலால் அதன் மெய்த் தன்மையை அறியலாம் என்னுமாறு, அவர் அவ்வேதியரை நோக்கி ஓலையைக் காட்டும்படி கூறினார்.

தொண்டனார் - நம்பியாரூரர். துணைவனார் - முதியவராகத் தோன்றிய சிவபிரான், உயிர்க்குத் துணையாக வந்தவர். 42

வேதியர் தன்னிடமிருந்த ஓலையைக் காட்ட மறுக்க, நம்பியாரூரர் வலிமையாகப் பற்றி அவ்வோலையைக் கிழித்தெறிதல். - இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்.

189. "ஓலை காட்" டென்ற நம்பி
உரைக்க "நீ ஓலை காணற்
பாலையோ அவைமுன் காட்டப்
பணிசெயற் பாலை" என்ற
வேலையில் நாவ லூரர்
வேகுண்டுமேல் விரைந்து சென்று
மால்அயன் தொடரா தானை
வலிந்துபின் தொடரல் உற்றார்.

தெளிவுரை: ஓலையைக் காட்டுமாறு நம்பியாரூரர் வினவ, வேதியர், "நீ ஓலையைக் காண்பதற்கு வல்லவனோ! இச்சபையினர் முன்னே காட்ட அவர்கள் அதனைக் கண்டு கூற நீ பணி செய்வதற்கு உரியவன்." என்றபோது நம்பியாரூரர் கோபம் கொண்டவராகி விரைவாகச் சென்று, திருமாலும் பிரமனும் தொடர முடியாத சிவபிரானைப் பின் தொடர்ந்து செல்லலானார்.

நம்பியாரூரர் வேதியரிடம் வலிந்து ஓலையைப் பறிக்க முயன்றார் என்க.

அவை - சபை. பணி செயற்பாலை - தொண்டு செய்தற்கு உரியவன். வேலை - அப்போது. 43

190. ஆவணம் பறிக்கச் சென்ற
அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக்
கடிது பின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார்
அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை
யார்தொடர்ந்து எட்ட வல்லார்.

தெளிவுரை: நம்பியாரூரர் அடிமை ஓலையைப் பறிக்கச் சென்ற அத்தருணத்தில் அந்தணராக வந்த சிவபிரான் அதனை அறிந்து கொண்டவராய், அத்திருமணப் பந்தரிடையே ஓட, நம்பியும் பின்தொடர்ந்து சென்று செந்தாமரைப் பூவை ஒத்த வண்ணம் உடைய சிவபிரானை அடைந்தார். அம்பு பூட்டிய மேரு என்னும் மலையை வில்லாகக் கொண்டு முப்புரத்தை எரித்த சிவபிரானை நம்பியாரூரர் அல்லாது வேறு எவர் எட்ட வல்லவர்!

சிறப்புரை: இவன் திருத்தொண்டர்களுக்கு எளியவராக விளங்கும் சிவபிரான் புகழ் பேசப்பட்டது. சிவபிரான் முப்புரத்தை அழித்த வரலாறு இவண் புரங்கள் செற்ற ஏவணச் சிலையினார் எனப்பட்டது.

முப்புரம் எரித்த வரலாறு: ஒரு காலத்தில் கமலாட்சன், தாரகாட்சன், வித்யுன்மாலி என்னும் அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பாலளை அமைத்து உலகத்தில் நாசம் விளைத்தனர். தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபிரான், மேரு மலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு, திருமால் அம்பாகவும், அக்கினி அதன் முனையாகவும், வாயு தேவன் இறக்கைகளாவும் அமைய முப்புரக் கோட்டைகளையும் அசுரர்களையும் அழித்தார்.

ஆவணம் - ஓலை, அந்தணாளன் - சிவபிரான். காவணம் - திருமணப் பந்தர். கடிது - விரைந்து. நம்பி - நம்பியாரூரர். பூவணம் - பூவண்ணம்; செந்தாமரை வண்ணம். ஏ - அம்பு. வணச்சிலை - வண்ணமுடைய வில்; மேருமலை. 44

191. மறைகளா யினமுன் போற்றி
மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி
எழுதும்ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் ஆளாய்
அந்தணர் செய்தல் என்ன
முறைஎனக் கீறி இட்டார்
முறையிட்டான் முடிவு இலாதான்.

தெளிவுரை: வேதங்கள் எல்லாம் முற்படுத்திப் போற்றி மலர்த்தாளைப் பற்றி நின்ற சிவபிரானைத் தொடர்ந்து ஓடிப் பற்றி எழுதப்பட்டிருக்கும் அடிமை ஓலையை வாங்கிய வீரக்கழலை யணிந்த பெருமையுடைய நம்பியாரூரர், "ஒருவரை அடிமையாகச் செய்தல் என்ன முறை?" எனக் கூறிக் கிழித்தெறிந்தார். அப்பொது முடிவற்றவராக விளங்கும் சிவபிரான் அந்தச் சபையார் முன்னே முறையிடலானார்.

முன்போற்றி - முன்னின்று போற்றி. ஆள் ஓலை - அடிமை ஓலை. அறை கழல் - ஒலிக்கும் வீரக் கழல். அண்ணல் - பெருமையுடைய தம்பியாரூரர். முடிவிலாதான் - சிவபிரான். 45

வேதியர் முறையிட மறையவர்கள் அவர் இருப்பிடத்தை வினவுதல்

192. அருமறை முறையிட்டு இன்னும்
அறிவதற்கு அரியான் பற்றி
ஒருமுறை "முறையோ" என்ன
உழைநின்றார் விலக்கி "இந்தப்
பெருமுறை உலகில் இல்லா
நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர்
எங்குளீர் செப்பும்" என்றார்.

தெளிவுரை: வேதங்கள் முறையிட்டு இன்னமும் அறிவதற்கு அரியவனாகிய வேதியர் வடிவம் தாங்கிய சிவபிரான் நம்பியாரூரரைத் தம் திருக்கரத்தால் பற்றிக் கொண்டு, "இவ்வாறு ஓலையைக் கிழித்து எறிதல் முறையோ?" என்று கூற, பக்கத்தில் உள்ளவர்கள் இருவரையும் தனித்தனியே விலக்கி, "வேதியரே! அந்தணர் ஒருவர் வேறொருவர்பால் அடிமையாதல் இல்லை. அவ்வாறு இருக்க அதையே ஒரு நெறியாகக் கொண்டு வழக்காடுகின்ற நீர் எவ்விடத்தில் உள்ளீர்? அதனைக் கூறும்." என்றார்கள்.

சிறப்புரை: அருமையுடைய வேதங்கள் முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியவராகியவர் சிவபிரான் என்பது முதலடியில் சாற்றப்படும் கருத்தாகும். இத்தன்மையில் மாணிக்கவாசகர் திருவாசகம், சிவபுராணம் வரிகள் 33 - 35 இல்,

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என, ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!"

என அருளிச் செய்தவாறும் காண்க.

உழை - பக்கம். இந்தப் பெருமுறை - அந்தணர் பிறர்க்கு அடிமை என்னும் முறை. பிணங்குகின்ற - வழக்காடுகின்ற. 46

வேதியர் தன்னிருப்பிடத்தை உரைத்துப் பின்னும் இவ்வாரூரன் தன் அடிமை என உரைத்தல்

193. என்றலும் நின்ற ஐயர்
"இங்குளேன் இருப்பும் சேயது
அன்றுஇந்த வெண்ணெய் நல்லூர்;
அது நிற்க அறத்துஆறு இன்றி
வன்திறல் செய்துஎன் கையில்
ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே
நிரப்பினான் அடிமை" என்றான்.

தெளிவுரை: அந்தணர்கள் இவ்வாறு கேட்க, தலைவராகிய ஈசன், "நான் இந்த இடத்தில் உள்ளேன். என்னுடைய இருப்பிடமும் தொலை தூரத்தில் உள்ளதல்ல. திருவெண்ணய் நல்லூர் ஆகும். அது ஒருபுறம் இருக்கட்டும். தருமவழி சிறிதும் இல்லாது வலிமை செய்து என் கையில் உள்ள ஆவணத்தை வலிய வாங்கிக் கிழித்து எறிந்ததால் இவன் அடிமை என்பதைத் தனக்குத் தானே உறுதிப்படுத்திவிட்டான்." என்றார்.

சிறப்புரை: இவண் ஐயர் என்பது அந்தணரைப் பொதுவாகக் குறிப்பதாயினும் சிவபிரானைக் குறித்தலால் தலைவன் எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இத்தன்மையில் வள்ளல் இராமலிங்க சுவாமிகள், 6 - ஆம் திருமுறையில்,

"ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுதல் ஆனந்த நாடகமே"

எனவும்,

"பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்
ஐயரைக் கண்டே னடி - அக்கச்சி
ஐயரைக் கண்டேனடி"

எனவும் அருளிச் செய்தவாறு காண்க.

ஐயர் - வேதியர், தலைவராகிய ஈசன். சேயது அன்று - தொலைவில் இல்லை. வன் திறல் - வலிமை காட்டுதல். ஆவணம் - அடிமை ஓலை. நிரப்பினான் - உறுதி செய்தான்.

நம்பியாரூரர் வழக்கினைத் திருவெண்ணெய் நல்லூரில் வைத்துக் கொள்ளலாம் என ஆங்குச் செல்லுதல்.
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

194. குழைமறை காதி னானைக்
கோதில் ஆ ரூரர் நோக்கிப்
பழையமன் றாடி போலும்
இவன்என்று பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க
"வெண்ணெய்நல் லூரா யேல்உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே
பேசநீ போதாய்" என்றார்.

தெளிவுரை: வேதம் ஒலிக்கும் குழையைக் காதில் அணிந்தவராகிய சிவபிரானைக் குற்றம் ஏதும் இல்லாத நம்பியாரூரர் கண்டு, இவர் பழைய மன்றாடி போலும் என்று எண்ணியவராய் நற்பண்பால் மிகும் விருப்பமும் அவர் பால் கொள்ள, "நீங்கள் இருப்பது திருவெண்ணெய் நல்லூராயின் பிழையுள்ளதான இவ்வழக்கை அங்கேயே வைத்து வாதிடலாம்." என்றார்.

சிறப்புரை: சிவபிரான் இசையில் விருப்பம் கொண்டு விளங்குதல் குறித்துக் "குழைமறை காதினான்" என எடுத்து ஓதப் பெற்றது. ஈசன் அசுவதரன் கம்பதரன் என்னும் இரு கந்தருவர்களைக் குழைகளாக அணிந்துள்ளமையைத் திருநாவுக்கரசர் 6 - ஆம் திருமுறை, "நாமாக்கும் குடியல்லோம்" எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில்,

"தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளாஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

இவண், திருமணப்பந்தர் வழக்குமேடையாதல் பொருத்தமன்று என்னும் தகைமையில் வெண்ணெய் நல்லூரின் கண் வழக்கினை ஏற்க நம்பியாரூரர் ஒருப்பட்டார் என்க. இங்கு "வள்ளல் மணம் எதிர்" என்ற நாடக யுத்தியாய்த் திருப்பாட்டு 170 - இல் உரைத்தமை நிகழ்வதாயிற்று.

முற்காலத்தில் வழக்குகள் ஊர்ப் பஞ்சாயத்தின் வழியாக மரத்தடியில் நடைபெற்ற பாங்கினைப் பண்டைய தமிழிலக்கியச் சான்றுடன் திரு. வி. க. அவர்கள் உரைத்தமைக்கேற்ப இம்முதியவர் வழக்குகள் பல நடத்தித் தேர்ந்தவராக இருக்கலாம் என்று நம்பியாரூரர் கருத்திற்கொண்டு "பழைய மன்றாடி போலும்" எனக் கூறினமையாம்.

பழைய மன்றாடி என்பது உள்ளுறையாக மாணிக்கவாசகர் திருவாசகம், கீர்த்தித் திருஅகவல் வரிகள் 1 - 3 இல்,

"தில்லை மூதூர்ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம் பயின்றனன் ஆகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி"

என்று அருளிச் செய்தமை காண்க.

குழைமறை காதினான் - சிவபிரான், வேதியரை உரைத்தது. கோது - குற்றம். மன்றாடி - மன்றில் வழக்குரைப்பவர், சிவபிரான். விழைவு - அன்பு, விருப்பம். பிழை நெறி - அந்தணர் வேறு ஒருவர்க்கு அடிமை என்னும் கருத்து. போதாய் - வருக. 48

195. வேதியன் அதனைக் கேட்டு
"வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப்
புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியில் மூல ஓலை
காட்டி நீ அடிமை யாதல்
சாதிப்பன்" என்று முன்னே
தண்டுமுன் தாங்கிச் சென்றான்.

தெளிவுரை: நம்பியாரூரர் உரைத்ததைக் கேட்ட வேதியர், "திருவெண்ணெய் நல்லூரில் நீ வருகினும் நன்று. ஆங்குள்ள புனிதமான அந்தணர்கள் முன்பு, ஆதியில் உள்ள மூல ஓலையைக் காட்டி நீ அடிமையாகுதலை நான் சாதிப்பேன்." என்று கூறித் தன் கையில் உள்ள தண்டினை ஊன்றி நடந்து சென்றார். 49

ஏனைய சுற்றத்தாரும் பின் தொடர்ந்து செல்லுதல்

196. செல்லும்மா மறையோன் தன்பின்
திரிமுகக் காந்தம் சேர்ந்த
வல்லிரும்பு அணையு மாபோல்
வள்ளலும் கடிது சென்றார்

எல்லையில் சுற்றத் தாரும்
இது என்னாம் என்று செல்ல
நல்லஅந் தணர்கள் வாழும்
வெண்ணெய்நல் லூரை நண்ணி.

தெளிவுரை: நற்பேறுடைய அந்தணர்கள் விளங்கும் திருவெண்ணெய் நல்லூரை நோக்கிச் செல்கின்ற வேதியர் பின்னே காந்தத்தால் ஈர்க்கப்படும் வலிமையான இரும்பு போன்று நம்பியாரூரரும் பின் தொடர்ந்து வேகமாகச் சென்றார். இதனைக் கண்ட எல்லையில்லாத அன்பின்மிக்க சுற்றத்தாரும் இவ்வழக்கு என்ன ஆகுமோ என்று ஏக்கம் கொண்டவர்களாய்த் தொடர்ந்து செல்லலானார்கள்.

சிறப்புரை: சிவபிரானைத் தொடர்ந்து நம்பியாரூரர் விரைந்து சென்றமையால், அம்முதியவரும் தளர் நடைகொண்டு மிக விரைவாகச் சென்றமை குறிப்பால் சுட்டப் பெறுதலாயிற்று. இத்தன்மையில் நாவுக்கரசர் திருமறைக்காட்டிலிருந்து வாய் மூரை நண்ணிச் செல்லும் போது சேக்கிழார் சுவாமிகள், திருநாவுக்கரசர் புராணம் திருப்பாட்டு எண் *1548* - இல்,

"நீரார் சடையார் எழுந்தருள
நெடிது பின்பு செல்லும்அவர்
பேரா ளரைமுன் தொடர்ந்தணையப்
பெறுவார் எய்தப் பெற்றிலரால்."

என்று அருளியமையும் காண்க.

இவண், நம்பியாரூரரை வேறுபடுத்தும், சிவபிரானைக் காந்தம் எனவும், வன்மை பேசித் திருத்தொண்டராகும் அடியவரை வலிமையுடைய இரும்பு எனவும் உவமை சாற்றிய நயம் காண்க.

நம்பியாரூரரைத் திருத்தொண்டராக்கித் தீர்ப்பு வழங்கவுள்ள அந்தணர்கள் நற்பேறுடையவர்கள் என்னும் தன்மை இவண் குறிப்பால் உணர்த்தப் பெறுதலாம். திருத்தொண்டத்தொகையைத் தருவதே திருஅவதார நோக்கம் எனத் திருப்பாட்டு 35 - இல் (திருமலைச் சிறப்பு) சாற்றியமையும் நோக்குக.

மாமறையோன் - வேதியராக வந்த ஈசன். திரிமுகம் - ஈர்க்கின்ற முகம், மாறுபடுத்தும் தன்மை. வள்ளல் - நம்பியாரூரர். கடிது - விரைந்து. நல்ல - நற்பேறு.

வழக்கு மன்றத்தில் வேதியர் வழக்குரைத்தல்

197. வேதபா ரகரின் மிக்கார்
விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனாம் மறையோன் "சொல்லும்
நாவலூர் ஆரூ ரன் தான்
காதல்என் அடியான் என்னக்
காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தான்
இதுஎன்றன் முறைப்பாடு" என்றான்.

தெளிவுரை: வேதத்தில் சிறந்து விளங்கும் சான்றோர்கள் கூடியிருக்கும் சபை முன் சென்ற தலைவராகிய வேதியர், "நாவலூரில் நம்பியாரூரன் என்று சொல்லப்படுகின்றவன் என் அன்புக்குரிய அடியவன். அதனை உறுதிப் படுத்த நான் காட்டிய ஓலையைக் கிழித்தெறிந்து இப்போது மூதறிஞர்களாகிய உங்கள் முன்னே வந்துள்ளான். இது என்னுடைய முறையீடு." என்றார்.

வேதபாரகர் - வேதநூலில் விற்பன்னர்கள். பேர்அவை - பெருமைமிக்க சபை. நாதன் - தலைவன், சிவபிரான். காதல் - அன்பு. கீறி - கிழித்து. முறைப்பாடு - முறையீடு, வழக்கு. *51*

அவையினர் வினவுதலும் வேதியர் பதிலும்

198. அந்தணர் அவையில் மிக்கார்
"மறையவர் அடிமை யாதல்
இந்தமா நிலத்தில் இல்லை
என்சொன்னாய் ஐயா" என்றார்
"வந்தவாறு இசைவே அன்றோ
வழக்கு இவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்தது"
என்றனன் தனியாய் நின்றான்.

தெளிவுரை: "ஐயனே! அந்தணர்கள் அடிமையாதல் என்பது அம் மண்ணுலகத்தில் இல்லை. அங்ஙனமிருக்க நீர் எதனைக் கொண்டு உரைத்தீர்?" என்று அவையினர் கேட்டார்கள். தெற்குத் தனித் தலைவனாய் விளங்கும் ஈசன், "இவன் எனக்கு அடிமையாய் வந்த வகையானது தனிப்பட்ட விருப்பத்தின் பாற்பட்டது அல்லவா? இவன் கிழிந்த ஓலை தந்தையின் தந்தையாகிய பாட்டன் எழுதிய ஓலையாகும். இதுவே வழக்கு." என்றார்.

மாநிலம் - மண்ணுலகம். தனியாய் நின்றான் - இறைவன் தனிப்பெரும் ஒருவன் என்பதைச் சுட்டுதலாம்: தவிரவும் அடியவரைச் சோதிக்கத் தனியனாயும் அருள் புரியத் தேவியரும் உடன் நிகழ்தலைக் காட்டும் வகையில் இவண் சோதிக்கத் "தனியனாய் நின்றான்" என்னுமாறு கொள்க. 52

அவையோர் நம்பியாரூரனை வினவுதலும் அவர் தம் பதிலுரையும்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

199. "இசைவினால் எழுதும் ஓலை
காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக்
கிழிப்பது வெற்றி யாமோ!
தசையெலாம் ஒடுக்க மூத்தான்
வழக்கினைச் சாரச் சொன்னான்
அசைவில் ஆரூரர் எண்ணம்
என்னென்றார்" அவையின் மிக்கார்.

தெளிவுரை: அவையின் மிக்கோர் நமிபியாரூரரை நோக்கி, "இசைவு கொண்டவராகி முன்பு எழுதிய ஓலையைக் காட்டினாரானால் இப்போது வலிமை கொண்டு உணர்வு மேலிட்டுக் கிழிப்பது வெற்றி தருமோ? தசை தளர்ந்து மிகவும் மூத்தவரான இவ்வேதியர் பொருத்தமாக உரைத்தார். மனத்தளர்வு இல்லாது உறுதியுடன் விளங்கும் ஆரூரரின் கருத்து யாது?" என்றார்.

சிறப்புரை: இவண், இசைவு கொண்டு எழுதப்படும் அடிமை ஓலை ஏற்புடையது என குறிப்பால் நவிலப்படுதலும் ஆம்

சிவபிரான் இவண் மூத்தான் எனச் சுட்டப்படுதல் காண்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவாசகம் திருவேசறவு, திருப்பாட்டு 8 - இல்,

"மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவாறு அன்றேஎம் பெருமானே!"

என அருளிச் செய்தவாறும் காண்க.

வெறியாமோ - வெற்றியாகாது. விசை - அக உணர்வு. அசைவு இல் அரூரர் - வேதியர் வேதம் பயின்றும், அரசன் மகனாக வளர்ந்தும் இருந்த நிலையில், இதன் விளைவு யாது ஆகுமோ என்னும் அதிர்ச்சியில் அசைவற்று இருந்தார் எனவும் ஆம் 53

200. "அனைத்து நூல் உணர்ந்தீர் ஆதி
சைவன் என்று அறிவீர் என்னைத்
தனக்கு வேறு அடிமை என்றிவ்
அந்தணன் சாதித் தானேல்
மனத்தினால் உணர்தற்கு எட்டா
மாயைஎன் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளியஒண் ணாது"
என்றனன் எண்ணம் மிக்கான்.

தெளிவுரை: உயர்ந்த நல்லெண்ணம் உடையவராகிய நம்பியாரூரர் அவையோரை நோக்கி, "அனைத்து நூல்களையும் நன்கு கற்றுணர்ந்த பெரியீர்! நான் ஆதி சைவ குலத்தினன் என்பதை அறிவீர்கள். என்னை இவ்வேதியர் அடியவன் என்று சாதித்தால், அது மனத்தால் எண்ணிப் பார்ப்பதற்கும் இயலாத மாயையாகும். நான் மேற்கொண்டு யாது கூறுவேன்! இதைப் பற்றி நான் தெளிவு காணாதவனாவேன்." என்றார்.

சிறப்புரை: உணர்தற்கு எட்டா மாயை என்பதனால் பிறவியின் பயனாய் அறிதற்கு இயலாத திருவருட் செயல் என்பது உணரற்பாலது. இத்தன்மையால் தெளிவும் உண்டாகவில்லை என்பது இவண் கருத்து.

அந்தணன் - வேதியர். மாயை - உண்மையை மறக்கும் தன்மை. 54

அவையோர் வேதியரை நோக்கி அடிமை என்று சொல்லத்தக்க ஆதாரத்தைக் கூறுமாறு தெரிவிக்க அவர் மூலஓலை காட்டுதல்

- இது முதல் 3 - பாடல்கள் ஒரு தொடர்

201. அவ்வுரை அவையின் முன்பு
நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற
திருமறை முனியை நோக்கி
"இவ்வுல கின்கண் நீர்இன்று
இவரை நும் அடிமை என்ற
வெவ்வுரை எம்முன்பு ஏற்ற
வேண்டும்" என்று உரைத்து மீண்டும்.

தெளிவுரை: இவ்வாறு நம்பியாரூரர் அவையின் முன்னே உரைக்க, அவற்றைக் கேட்ட செவ்விய மறையவர்கள் எதிரே வழக்குத் தொடுத்த வேதியரை நோக்கி, "நீர் இவ்வுலகத்தில் நம்பியாரூரரை

உமது அடியவர் என்கிற கடுமையுடைய உரையை நாங்கள் ஏற்குமாறு மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்." என்று உரைத்தார்கள்.

இ.ன்.து ஒரு குளகச் செய்யுள், இ.ன்.து அடுத்த பாடலில் என்ன என்று வினை முடிபு பெறும்.

சிறப்புரை: அந்தணர் பிறர்க்கு அடிமையாதல் இல்லை என்பது உலகில் நிலவி நிற்க, அத்தகையோர் அடிமை என்று சாற்றுதல் கடுமையுடையது என்னுமாறு வெவ்வுரை எனப்பட்டது.

திருமறைமுனி - வேதியராக வந்த ஈசன். இவரை - நம்பியாரூரரை. வெவ்வுரை - கொடிய உரை. 55

202. "**ஆட்சியில் ஆவணத்தில்**
அன்றிமற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய்" என்ன முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை
படிஓலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான்.

தெளிவுரை: அவையோர் மேலும் தொடர்ந்து "அனுபவ முறையிலாயினும், செப்பேடு, ஓலை முதலிய ஆவணத்திலாயினும், அயலவர் சாட்சி என வாயினும் மூன்று வகையுள் ஏதேனும் ஒன்றைக் காட்டுவீராக." என்று சொல்ல, மாயையில் வல்லவராகிய பெருமான், "முன்பு நம்பியாரூரர் மூண்டெழுந்த சினத்தால் கிழித்தது படியெடுக்கப்பட்ட ஓலை: மூல ஓலையைப் பெருமையோடு காட்ட வந்துள்ளேன்."என்றார்.

சிறப்புரை: நம்பியாரூரர் குடும்பத்தில் யாரேனும் அடிமையுடைமையாயின் அதனை உறுதி செய்தல் "ஆட்சியில் காட்டுதல்." எனவும். வேறு பட்டயம் முதலான ஆவணம் இருப்பின் அதனை "ஆவணத்தில் காட்டுதல்." எனவும், அவ்வாறின்றி அவர் வகையில் அடிமைத்தொழில் செய்திருப்பாராயின் அதனை உறுதி செய்தல் "அயலார் தங்கள் காட்சியில்." எனவும் உரைத்தமையாக இவண் கொள்க.

இத்தகைய வழக்கு, "மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயை." என்று திருப்பாட்டு 200 - இல் உரைத்தமையடுத்து இத்திருப்பாட்டில் "மாயை வல்லான்."என நவின்றமையும் ஓர்க.

மூட்சி - மூண்டெழுந்த சினம். படிஓலை மூல ஓலையினின்றும் வேறு

ஒரு நகல் தயாரித்தது என்பதாம். மாட்சி - பெருமை: சிறப்பு. மாயை வல்லான் - சிவபிரான்.

56

203. "வல்லையேல் காட்டிங்" கென்ன
"மறையவன் வலிசெய் யாமல்
சொல்லநீர் வல்லீர் ஆகில்
காட்டுவேன்" என்று சொல்லச்
"**செல்வ நான் மறையோய்** நாங்கள்
தீங்குற ஓட்டோம்" என்றார்
அல்லல் தீர்த்து ஆள நின் றார்
ஆவ ணம் கொண்டு சென்றார்.

தெளிவுரை: மூல ஓலை உள்ளது என்று வேதியர் உரைத்த அளவில், "அதனைக் காட்டக் கூடுமாயின் இவ்வகைக்குக் காட்டுக." எனக் கூற, வேதியரும், "இந்த அந்தணனாகிய நம்பியாரூரர் மீண்டும் வன்மை செய்யாது இருக்குமாறு நீங்கள் கட்டுப்படுத்த வல்லவரானால் அதனைக் காட்டுகிறேன்." என்றார். அவையோர், "செல்வம் போன்ற நான்கு வேதங்களை அறிந்தவரே! நீவீர் காட்டுகின்ற அந்த ஆவணத்திற்கு ஊறு விளைவிக்குமாறு செய்ய மாட்டோம்." என்றார்கள். அப்போது துன்பத்தைத் தீர்த்து ஆள்வதற்காக வந்து நின்ற இறைவன் ஆவணத்தைக் கொண்டு சென்றார்.

சிறப்புரை: இவண் மறையவன் என்பதை நம்பியாரூரர்க்கு ஏற்றிப் பொருள் உரைக்கப் பெற்றது. இதனை இறைவனுக்கு ஏற்றி உரைத்தலும் அமையும். இவண் முன்னர் வேதியர் கையிலிருந்த ஓலையை வலிந்து வாங்கிக் கிழித்தெறிந்தது போன்று மீண்டும் நிகழா வண்ணம் உறுதி செய்யும் முகத்தான் "மறையவன்." வலி செய்யாமல் எனச் சாற்றப் படுவதாயிற்று.

மூல ஓலை வேறு உள்ளது என்று திருப்பாட்டு 195 - இல் வேதியர் வாயிலாக உரைக்கப்பட்டமையும் இவண் ஓர்க.

சிவபெருமானைச் "செல்வ நான்மறையோய்." எனச் சாற்றிய வகையில் மாணிக்க வாசகர், திருவாசகம், பிடித்த பத்து, திருப்பாட்டு 3 - இல்,

"செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே."

என அருளியவாறும் காண்க.

புத்தூரின் கண் நிகழ்வதாக இருந்த திருமணம் உலகியல் காரணமாக அமைக்கப்பட்டது. நம்பியாரூரர் வினைப்பயன் தொடர்பின்றி இறைவன் திருவுளப் பாங்கின்படி உலகில் திரு அவதாரம் செய்த நிலையில், மயங்கும் வழி தடுத்தாள்வான் பொருட்டு இங்கு வேதியர் வடிவு தாங்கி வந்த அருட்செயல் "அல்லல் தீர்த்து ஆள நின்றான்" எனச் சாற்றப்படுதலாயிற்று.

மறையவன் - நம்பியாரூரர்: வேதியரைச் சாற்றலும் ஆம். செல்வ நான் மறையோய் - ஈசனை விழித்தது. தீங்கு - மூல ஓலை பழுதாகும் செயலைச் சுட்டுதலாம். அல்லல் - வினை வயத்தால் பிறவி கொள்ளும் மன்னுயிர் அடையும் துன்பம். ஆள நின்றான் - ஆட்கொண்டு அருள் புரிய வந்தவராகிய சிவபிரான். ஆவணம் - மூல ஓலை. 57

வேதியர் ஓலை தர கரணத்தான் தொழுது வாங்குதல்

204. **இருள்மறை மிடற்றோன்** கையில்
ஓலைகண்டு அவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும்
ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி
விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு அவையோர் கேட்ப
வாசகம் செப்பு கின்றான்.

தெளிவுரை: பாற்கடலில் தோன்றிய கரிய நஞ்சைத் தன் கண்டத்தில் மறையும்படி வைத்த சிவபிரான் வேதியராக வர, அவர் கையில் ஓலையைக் கண்ட அவையோர் ஏவலின்படி அருள் பெற்று விளங்கிய அவ்வூர்க் கணக்கப்பிள்ளை அவ்வோலையைத் தொழுது வாங்கிச் சுருட்டப் பெற்றிருந்த மடிப்புகளையும் அதன் தொன்மையையும் கண்டு மிகப் பொறுமையோடு விரித்துத் தெளிந்த ஞானம் உடைய அவையோர் கேட்குமாறு படிக்கத் தொடங்கினார்.

சிறப்புரை: பாற்கடலில் தோன்றிய நஞ்சைக் கண்டு தேவர்கள் முதலானோர் அஞ்சி நடுங்கிச் சிவபிரானிடம் முறையிட, அவர் அதனைத் தன் கண்டத்தில் இருத்திக் காத்தருளினார். இது இவண் இருள்மறைமிடற்றோன் எனப்பட்டது. இதனை மாணிக்கவாசகர், திருவாசகம், நீத்தல் விண்ணப்பம் திருப்பாட்டு 50 - இல்,

"தேசுடையாய் என்னை ஆளுடையாய்
சிற்றுயிர்க்கு இரங்கிக்
காய்சின ஆலம் உண்டாய்
அமுதுஉண்ணக் கடையவனே."

என அருளியவாறு காண்க.

பாற்கடலில் நஞ்சு தோன்றிய வரலாறு: ஒரு காலத்தில் தேவர் உலகத்துச் செல்வம் யாவும் மறைய, அதனை மீளவும் பெறுதற் பொருட்டு, மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருமால் அதன் அடியில் ஆமையாக இருந்து தாங்கத் தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து கடையலானார்கள். அப்போது வலி தாளமுடியாத வாசுகி என்னும் பாம்பு நஞ்சைக் கக்கியது. மிகக் கறுத்து வெளிப்பட்ட நஞ்சைக் கண்டு அஞ்சி சிவபிரானிடம் முறையிட அவர் அதனைக் கண்டத்தில் தேக்கிக் காத்தருளினார். இப்புராண வரலாறு இத்திருப்பாட்டின் முதலடியில் சாற்றப்பட்டது.

அக்காலத்தில் ஊர்க்கணக்குகள் எழுதும் பணியை அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்களாய்க் கருணீகர் குலத்தவர்கள் பரம்பரைத் தொழிலாகப் புரிந்து வந்தார்கள். இத்தகையோர் இருந்தமையால் வேதியர் கொடுத்த ஓலையைக் கணக்கப்பிள்ளை வாங்கிப் படிக்கலானார் என்பது இரண்டாம் அடி வாயிலாக உரைக்கப் பெற்றது. சிவபிரானிடமிருந்து ஓலையை வாங்குகின்ற திருவருள் மேன்மையை நவிலுமாறு அருள் பெறு காரணத்தான் எனப்பட்டது. தற்போது அது போன்ற பரம்பரைத் தொழில் நீக்கப்பட்டு விட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அக்குலம் இன்றும் நிலவுகிறது.

இருள் - கரிய வண்ணத்தைக் குறிப்பிட்டு நஞ்சை உணர்த்தியது. மறை - மறைக்கப்பட்ட. மிடறு - கண்டம். கரணத்தான் - ஊர்க்கணக்கப் பிள்ளை. இது கருணீகர் குலம் என்க. மடிவு - மடிப்புகள். தொன்மை - பழமை. வாசகம் - ஓலையில் எழுதப்பட்டுள்ள வாசகம் என்க. தெருள் - ஞானம், தெளிவு. 58

ஓலை வாசகம் உரைத்தல்

205. அருமறை நாவல் ஆதி
சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்

வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கு இவை என் எழுத்து.

தெளிவுரை: மறைவல்ல திருநாவலூரில் உள்ள ஆதிசைவர் குலத்தவரான ஆரூரன் எழுதிக் கொடுப்பது. பெருமுனிவராகிய வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால் வரும் வழிமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்குரிய ஓலையை நான் அகத்தாலும், புறத்தாலும் எழுதி நேர்ந்தேன். இதற்கு இதுவே என் கையெழுத்து.

சிறப்புரை: நம்பியாரூரர் பாட்டனாரின் பெயர் ஆரூரன் என்க. மற்றும் இவ்வேதியரின் ஊர் வெண்ணெய் நல்லூர் என்பது திருப்பாட்டு 193 - லும், பெயர் பித்தன் என்பது திருப்பாட்டு 187 - லும் சாற்றப்படுதல் காண்க.

ஆரூரன் - நம்பியாரூரின் பாட்டனார். பித்தன் - வேதியனாக வந்த சிவபிரான். இருமை - உள்ளும், புறமும், உள்ளத்தாலும் உடலாலும். 59

அவையோர் ஓலையைக் கண்டறிந்து தீர்ப்பு வழங்குதல்
- இது முதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்

206. வாசகம் கேட்ட பின்னர்
மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி
அவை ஒக்கும் என்ற பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா
மற்றுங்கள் பேர னார்தம்
தேசுடை எழுத்தே யாகில்
தெளியப்பார்த்து அறிமின்" என்றார்.

தெளிவுரை: ஓலையில் இருந்த வாசகத்தைப் படிக்கக் கேட்ட பின்னர் மற்றும் மேலே எழுதப்பட்ட சாட்சியின் கையெழுத்தையும் ஆய்ந்து யாவும் பொருத்தமாக உள்ளது என்று மாசிலாத அவையோர் அறிந்தனர். பின்பு அவர்கள் நம்பியாரூரரை நோக்கி, "ஐயா! இது உங்கள் பாட்டனாருடைய எழுத்தேயாகில் தெளிவாகப் பார்த்து அறிக." என்றார்கள்.

வாசகம் - ஓலையில் எழுதப்பட்ட சொற்கள். மேல் எழுத்து - சாட்சி. ஆசுஇலா - குற்றம் இல்லாத. மாசிலா மறையோர் - நடுநிலை நின்று தீர்ப்பு வழங்கும் அவையோர், இவர்கள் நம்பியாரூரரை அறிந்தவராயும், வேதியரை அறியாதவராயும் உள்ளனர். ஆயினும் அந்தணர் யார்க்கும் அடிமையாதல் இல்லை என்று காரணம் கூறி வழக்கை ஒதுக்காது, ஆரூரர் ஓலையைக் கிழித்தெறிந்து வன்மை புரிந்தமையால் அதனைக் கருதி ஏற்று நடுநிலை வகித்த மாண்பு இவ்வாறு சுட்டப்படுதலாயிற்று. பேரனார் - பாட்டனார், பேரை உடையவர் எனலும் ஆம். 60

207. அந்தணர் கூற "இன்னும்
ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வேறு
எழுது கைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும்
எழுத்து நீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்" என்றான்
வலியஆட் கொள்ளும் அண்ணல்.

தெளிவுரை: அப்போது வலிய ஆட்கொள்ள வந்த அண்ணலாகிய சிவபிரான் அவையில் இருந்த மறையவர்கள் மொழிந்ததைக் கேட்டு, "இந்த அடிமை ஓலையைக் கண்டு தெளிவு கொள்வதற்கு இவனோ உரியவன்? இவன் பாட்டனார் எழுதிய வேறு கையெழுத்து இருக்குமானால் அதனை இந்த ஆவணத்தோடு உள்ள கையெழுத்துக்கு ஒப்பு நோக்கித் தெளிவு கொண்டு உங்கள் உள்ளத்திற்கு நியாயம் என்று தோன்றுவதைக் கூறுங்கள்." என்றார்.

அந்தணர் - அவையில் இருந்த மறையவர். இவனே - நம்பியாரூரர் என்பவரோ என்னும் வியப்புரைத்தல். கைச்சாத்து - கையெழுத்து. ஆவணம் - வேதியர் அவையில் கொடுத்த மூல ஓலை. வந்தது - அவையோர் உள்ளத்தில் படும் தீர்ப்பு. அண்ணல் - சிவபிரான். 61

208. திரண்ட மா மறையோர் தாமும்
திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்ற
மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறொன்று
அழைத்துடன் ஒப்பு நோக்கி
இரண்டும் ஒத்து இருந்தது என்னே
"இனிச் செயல் இல்லை" என்றார்.

தெளிவுரை: வேதியர் உரைத்ததைக் கேட்ட மறையவர்கள் அவ்வாறே செய்ய எண்ணி, நம்பியாரூரர் மருட்சியைத் தெளிவிக்கும் வகையில்,

அவர் பாட்டனார் எழுதிய வேறு ஓலை தன் மனையின் கண் பாதுகாப்புடன் உள்ளதெனக் கூற, அதனைத் தருவித்து ஒப்பு நோக்கினார்கள். அதில் கையெழுத்து ஒத்திருத்தலைக் கண்டறிந்து, "அந்தணர் வேறு ஒரு அந்தணர்க்கு ஓலை எழுதிக் கொடுத்தது என்னே!" என்று வியந்தவராய் இனிமேலும் செய்யத்தக்க செயல் வேறு எதுவும் இல்லை என்றார்கள்.

இவண், ஆவணத்தைக் கொண்டு அடிமை என்று நிலை நாட்டப்பட்டதை உறுதிப்படுத்துதலாயிற்று.

திருநாவலூரர் கோ - நம்பியாரூரர். மருண்டது - மயங்கிய நிலை. என்னே - வியப்பிடை வந்தது. 62

209. "நான்மறை முனிவ னார்க்கு
நம்பியா ரூரர் தோற்றீர்!
பான்மையின் **ஏவல் செய்தல்**
கடன்" என்று பணிபின் மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி
"விதிமுறை இதுவே யாகில்
யான்இதற்கு இசையேன் என்ன
இசையுமோ!" என்று நின்றார்.

தெளிவுரை: பண்பின் மிக்கவர்களான அவையோர் இருதிறத்தின் நிலையையும் நன்கு ஆராய்ந்து, "நான்மறை முனிவராகிய வேதியர்க்கு நம்பியாரூரர் வழக்கில் தோற்றீர். எனவே அவர் சொன்ன வகையின்படி ஏவல் செய்வது உமது கடமை." என்று கூற, நம்பியாரூரர், "இதுவே விதிமுறையானால் நான் இதற்கு இசைய மாட்டேன் என்று சொல்லப்படுமோ!" என்றார்.

ஏவல் செய்தல் - அடிமைப் பணி செய்தல். கடன் - கடமை. விளம்ப - கூற, சொல்ல. இசையேன் என்ன - இசைய மாட்டேன் என்று. இசையுமோ சொல்லப்படுமோ. நின்றார் - அடிமைத் தொண்டில் உறுதி பூண்டு நின்றார் என்க. 63

அவையோர் வேதியர் இருப்பிடத்தைக் கூறுமாறு கேட்க அவர் அருட்டுறைக்குள் சென்று மறைதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

210. திருமிகு மறையோர் நின்ற
செழுமறை முனியை நோக்கி
"அருமுனி நீமுன் காட்டும்
ஆவணம் அதனில் எங்கள்

பெருமைசேர் பதியே ஆகப்
பேசியது உமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு
வாழ்க்கையும் காட்டுக" என்றார்.

தெளிவுரை: அந்த அவையில் இருந்த சிறப்புடைய மறையவர்கள், செழுமையுடைய மறையவராய் வழக்குத் தொடுத்த வேதியரை நோக்கி, "அருமையுடைய வேதியரே! நீவீர் முன்பு இருத்திக் காட்டும் ஆவணத்தில் எங்கள் பெருமைக்குரிய திருவெண்ணெய் நல்லூரே இருப்பிடமாகப் பேசப்பட்டுள்ளது. இந்த ஊரில் உமக்குரிய இருப்பிடம், செய்யும் தொழில், தலைமுறையாக வரும் நெடிய வாழ்க்கை முறை என இவற்றைக் காட்டுவீராக." என்றார்.

சிறப்புரை: வேதியர் வழக்குரைத்தபடி ஆள் ஓலை காட்டி நம்பியாரூரரை அடிமை கொண்டதை ஏற்றுத் தீர்ப்பு வழங்கப் பெற்றிருப்பினும் அவ்வூரைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் வேதியரை அறியவில்லை என்பதனைக் கொண்டு இவ்வாறு வினவப்பட்டது என்பதாம்.

திருமிகு மறையோர் - சிவபிரான் முதியவர் கோலத்தில் நிற்க அவரோடு பேசுதலும், அவரைக் காணுதலுமான பேறு பெற்றமையால் திருமிகு என்னும் அடைமொழி சாற்றப்பட்டது. செழுமறை முனி, அருமுனி - வேதியர். பதி, இவ்வூர் - இரண்டும் திருவெண்ணெய் நல்லூரைக் குறித்தது. வருமுறை - தொழில், வருவாய். மனை - இருப்பிடம். நீடு வாழ்க்கை - உற்றார் வழி மரபு, தலை முறை என்க. 64

211. பொருஅரும் வழக்கால் வென்ற
புண்ணிய முனிவர் "என்னை
ஒருவரும் அறியீர் ஆகில்
போதும்" என்று உரைத்துச் சூழ்ந்து
பெருமறை யவர்கு ழாமும்
நம்பியும் பின்பு செல்லத்
திருஅருள் துறையே புக்கார்
கண்டிலர் திகைத்து நின்றார்.

தெளிவுரை: ஒப்பற்ற வழக்கால் வெற்றிகொண்ட புண்ணிய முனிவராகிய சிவபிரான், அவர்களை நோக்கி, "ஒருவரும் என்னை அறியவில்லையானால் என்னோடு வாருங்கள்." என்று உரைத்து முன்னே செல்லப் பெருமைமிக்க அந்தணர்கள் கூட்டமும், நம்பியாரூரரும் பின் தொடர்ந்து சென்றார்கள். சிவபிரான் திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயிலின் கருவறையாகிய

திருஅருள் துறையில் புகுந்ததும் மறைந்து விட்டார். உடன் சென்றவர்கள் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

பொருஅரும் - ஒப்பற்ற. நம்பி - நம்பியாரூரர். திருஅருள் துறை - திருக்கோயில் கருவறை. போதும் - வருவீராக. 65

சிவபிரான் உமாதேவியோடு இடபவாகனத்தில் காட்சியளித்து அருள் புரிதல்

- இது முதல் ஐந்து பாடல்கள் ஒரு தொடர்

212. எம்பிரான் கோயில் நண்ண
"இலங்குநூல் மார்பர் எங்கள்
நம்பர்தம் கோயில் புக்கது
என்கொலோ" என்று நம்பி
தம் பெரு விருப்பி னோடு
தனித் தொடர்ந்து அழைப்ப **மாதோடு**
உம்பரின் விடைமேல் தோன்றி
அவர்தமக்கு உணர்த்தல் உற்றார்.

தெளிவுரை: "வேதியராக வந்த எம் தலைவனாம் சிவபிரான் திருவெண்ணெய் நல்லூரில் விளங்கும் திருக்கோயிலை நண்ணினார். அதனைக் கண்ட நம்பியாரூரர், நன்கு விளங்கும் முப்புரி நூல் அணிந்த மார்பினையுடைய இவ்வேதியர் எங்கள் நாயகராகிய சிவபிரான் திருக்கோயிலில் புகுந்தது என் கொல்!." என்று பெருவிருப்பத்தோடு தனியே தொடர்ந்து சென்று அழைத்தார். அப்போது சிவபிரான், உமாதேவியோடு இடப வாகனத்தில் விண்ணில் தோன்றிக் காட்சி நல்கி நம்பியாரூரருக்கு உணர்த்துதலானார்.

எம்பிரான் கோயில் - திருவெண்ணெய் நல்லூரில் உள்ள சிவாலயம். இலங்கு நூல் மார்பர் - வேதியர். நம்பர் கோயில் - சிவாலயம். தனித் தொடர்ந்து - எல்லோரும் ஒருபுறம் நிற்க நம்பியாரூரர் மட்டும் தனியே சென்று தொடர்ந்து. மாது - உமாதேவி. உம்பர் - விண், ஆகாயம். விடை - இடப வாகனம். அவர் தமக்கு - நம்பியாரூரர்க்கு. 66

213. "முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாம்தடுத்து ஆண்டோம்" என்றார்.

தெளிவுரை: சிவபிரான், "முன்பு திருக்கைலையில் நீ எமக்குத் தொண்டனாக இருந்தனை. விருப்பமானது. முந்தி உந்த நம் ஏவலால் இங்குப் பிறவி கொண்டனை. இம்மண்ணுலகின் இயல்பால் துன்புறுகின்ற வாழ்க்கை நின்னைத் தொடர்பு கொள்வதைத் தடுக்கும் வகையில் தொடர்ந்து வந்து ஐம்புலன்களையும் அடக்கித் தெளிவுறும் மறையவர்கள் முன்னே யாம் தடுத்து ஆட்கொண்டோம்." என்றார்.

சிறப்புரை: நம்பியாரூரராகத் திருஅவதாரம் செய்தவர் முன்பு திருக்கைலையில் சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டு செய்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை திருமலைச் சிறப்பு, பாடல் தொடர்பு எண் 31 - இல் வந்தவாறும் காண்க. மற்றும், திருநாவுக்கரசர், 6 - ஆம் திருமுறை, திருப்பாட்டு 943 - இல்,

"அந்தகளை அயிற்சூலத்து அழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரையாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடும் இடமாகக் கொண்டார்"

என அருளிச் செய்தவாறும் காண்க. சுந்தரர், மாதர் மேல் மனம் போக்கிய தன்மையானது. இவண், "முன்னிய வேட்கை எனப்பட்டது. இத்தன்மையில் இவர் பரவையார் மற்றும் சங்கிலியார் ஆகியோரை மணங் கொள்ள வேண்டியவர் என்பதாம். இது தடுத்து ஆண்டமைக்குரிய காரணங்களுள் ஒன்று.

முன்னிய - முற்பட்டுக் கிளர்ந்த. வேட்கை - விருப்பம். மண் - உலகு. தொடர்வு அற - தொடர்பு அறுமாறு. தடுத்து - பரவையாரும், சங்கிலியாரும் இல்லாத பிற திருமணத்தைத் தடை செய்தலைக் குறித்தது. 67

214. என்றெழும் ஓசைகேளா
ஈன்றஆன் கனைப்புக் கேட்க
கன்றுபோல் கதறி நம்பி
கரசர ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத்
தொழுதலை தலைமேல் ஆக
"மன்றுளீர் செயலோ வந்து
வலியஆட் கொண்டது" என்றார்.

தெளிவுரை: சிவபிரான் விண்ணிலிருந்து உரைத்ததைக் கேட்டவுடன், தன்னை ஈன்றெடுத்த பசுவின் கனைப்புக் கேட்ட கன்று போல்

அன்பின் பெருக்கால் கதறிய நம்பியாரூரர், கை கால் முதலிய எல்லா அங்கமும் நெருங்கிய புளகாங்கிதம் அடையத் தலையின் மீது கைகளைக் குவித்துத் தொழுதவராய் "மன்றுள் ஆடும் - கூத்தப் பெருமானாய் விளங்கும் தேவரீருடைய திருவருட் செயல்தான் என்னை வலிந்து ஆட்கொண்டது!" என்றார்.

சிறப்புரை: முன்னர்ப் "பழைய மன்றாடி போலும்." எனச் சாற்றிய வகையில் இங்கு "மன்றுளீர்செயலோ." என உரைக்கும் பெற்றி காண்க. இது இறைவனின் தோத்திரப்பாடல்களை ஓதுதற்கு முன்னர், "திருச்சிற்றம்பலம்" என ஏத்தியுரைப்தைப் போன்று மன்றுளாரை முதற்கண் முன்னிலைப் படுத்திச் சாற்றப் பெறுதல் காண்க.

ஆன் - பசு. கரசரணாதி - கை, கால் முதலான. அங்கம் - உடலுறுப்பு. துன்றிய - நெருங்கிய. மன்றுளீர் - மன்றுள் திருநடனம் புரியும் கூத்தப் பெருமான். வலிய ஆட் கொண்டது. அடிமை ஓலை காட்டி ஆட் கொண்டது. 68

215. எண்ணிய ஓசை ஐந்தும்
விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி
மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க
மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை **ஓலை காட்டி**
ஆண்டவர் அருளிச் செய்வார்.

தெளிவுரை: எம்பிரான் விண்ணின்று காட்சி வழங்கிய நிலையில், ஐவகை ஓசையான தோற்கருவி, நரம்புக் கருவி, துளைக் கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக் கருவி (மணி, தாளம் முதலியன) ஆகியன ஒலித்தன. தேவர்கள் பூமாரி பொழிய மண்ணுலகத்தவர் மகிழ்ச்சி பொங்க வேதங்களை பொழிந்து போற்றினார்கள். அப்போது நம்பியாரூரரை ஓலை காட்டி ஆட்கொண்ட சிவபிரான் அருளிச் செய்யலானார்.

விசும்பு - விண். விண்ணவர் - தேவர். மேதினி விம்ம - உலக மக்கள் பேரானந்தம் கொண்டு மகிழ்தலைச் சாற்றுதலாம். அண்ணல் - பெருமைக்குரிய நம்பியாரூரர். ஆண்டவர் - ஆட் கொண்ட சிவபிரான். அருளிச் செய்வார் - திருவாய் மலர்ந்து உரைத்தார். இது பாடல் 213 - இல் இறைவன் கூறியதை யொட்டி மேலும் உரைக்கலானார் என்பதாம். 69

216. "மற்றுநீ வன்மை பேசி
வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு அன்பின்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்"
தூமறை பாடும் வாயார்"

தெளிவுரை: தூயதான வேதங்களைத் திருவாய் மலரும் சிவபிரான் நம்பியாரூரரை நோக்கி, "என் முன்னே வன்மையான சொற்களைப் பேசி வன்தொண்டன் என்னும் பெயரைப் பெற்றனை! நமக்கும் அன்பினால் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனையாவது பாட்டேயாகும். ஆதலால் இப்பூவுலகத்தில் நம்மைப் புகழ் மிக்க தும் பொருள் குறித்ததுமான தமிழில் பாடுக!" என்றார்.

சிறப்புரை: நம்பியாரூரர் வன்மை மொழியில் சிவபிரானைப் பேசியமையைப் பாடல் 186 - இல் உள்ளவாறும் செயல் முறையில் வலிந்து பற்றி ஓலையை வாங்கிக் கிழித்தெறிந்தமையைத் திருப்பாட்டு 191 - இல் உள்ளவாறும் காண்க. இதலால் இவண் வன்தொண்டன் என்னும் பெயர் வழங்குதலாயிற்று என்பதாம். இதனைச் சுந்தரர் பல இடங்களில் தம்மை வன்தொண்டன் எனச் சாற்றியமையும் கொள்க.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்னுமாறு நோக்குங்கால் சொல் தமிழ் என்பது பொருள் வழி மேவும் தமிழ் எனவும் அறிதலாம். சொல் என்பதற்குப் புகழ் என்னும் பொருளும் உள்ளதால், புகழ் மிகும் தமிழ் எனவும் ஆம்."சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே." என்று மகாகவி சுப்ரமணிய பாரதியார் உரைத்ததைப் போன்று தமிழில் பாடுமாறு உரைத்தார் எனவும் ஆம். பார்வதி தேவியின் திருமணத்தை முன்னிட்டு அனைத்து மண்ணுயிர்களும் வர, வடகோடி தாழ்ந்து, தென் கோடி உயர்ந்து மேவியது. அதனைச் சமநிலைக்கு கொண்டு வரும் பொருட்டு ஈசன் அகத்தியரைப் பணிந்தார். அப்போது அகத்தியர் தென்னாட்டில் தமிழ்ச் சான்றோர் மிகுந்துள்ள நிலையில் அத்தகைய தமிழை உபதேசிக்குமாறு வேண்ட, ஈசன் உபதேசித்தார். அகத்தியர் தென்னாடு அடைந்து பொதிய மலையிலிருந்து தமிழ் வளர்த்தார் என்பதும் புராண வரலாறு. இத்தன்மையினால் சிவபிரான் சிறந்தோங்கும் தமிழால் பாடுமாறு பணித்தமை இனிது அறியத்தக்கது.

வன்மை - முரட்டுத்தன்மை. நாமம் - பெயர். அர்ச்சனை - போற்றித் துதித்தல். மண்மேல் - பூவுலகத்தில். சொல்- உறுதி, புகழ் பொருள் செறிவுடைமை. தூமறை - வேதம். தூமறை பாடும் வாயார் - சிவபிரான். 70

மனம் உருகிப் போற்றிய நம்பியாரூரர் சிவபிரானைப் பாடத் தொடங்குதல்

- இது முதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர்

217. தேடிய அயனும் மாலும்
தெளிவுறா **ஐந்தெ ழுத்தும்**
பாடிய பொருளாய் உள்ளான்
"பாடுவாய் நம்மை" என்ன
நாடிய மனத்தர் ஆகி
நம்பியாரூரர் **மன்றுள்**
ஆடிய செய்ய தாளை
அஞ்சலி கூப்பி நின்று.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் தேடியும் தெளிவுறாது வாடிய நிலையில், திருவைந்தெழுந்தால் ஓதப் பெறும் பொருளாய்த் திகழும் சிவபிரான், தன்னைப் பாடுமாறு கூற அப்பெருமானை நாடிய மனத்தினராகிய நம்பியாரூரர் அம்பலத்தில் திருநடனம் புரியும் செந்தாமரை போன்ற திருப்பாதத்தைக் கைதொழுது கூப்பி நின்றார்.

சிறப்புரை: சிவபெருமான் திருவைந்தெழுத்தின் பொருளாய் விளங்கும் சிறப்பு இவண் உரைத்தமை காண்க. நடராசப் பெருமான் திருவைந்தெழுத்துப் பொருளானவர் என்பதனை உண்மை விளக்கம் பாடல் 33 - இல் திருவதிகை மனவாசகங் கடந்தார்,

"ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

திருவடி	- நகரம்	ந
உதரம்(வயிறு)	- மகரம்	ம
தோள்	- சிகரம்	சி
முகம்	- வா	வ
முடி	- ய	ய

இதன் சிறப்பினை "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்றும் நாவுக்கரசர் திருவாக்காலும் நோக்குக.

மற்றும் திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறை - பஞ்சாக்கரத் திருப்பதிகத்தில்,

"வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே."

என அருளியவாறும் காண்க.

இது குளகச் செய்யுள். இதன் ஈற்றடியானது அடுத்த பாடலில் வரும் "என் சொல்லிப் பாடுகேன் என மொழிந்தார்" என்று வினை முடிபு பெறும்.

தெளிவுறா - தெளிவடைகிலர். பாடிய - போற்றிய. நம்மை - சிவபிரானைக் குறித்தது. 71

218. "வேதியன் ஆகி என்னை
வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக்கு
உணர்வு தந்து உய்யக் கொண்ட
கோதிலா அமுதே இன்றுன்
குணப் பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப்
பாடுகேன்" எனமொ ழிந்தார்.

தெளிவுரை: நம்பியாரூரர் கோதில்லாத அமுதே! வேதியராகத் தோற்றம் கொண்டு என்னை வழக்குத் தொடுத்து வெற்றி கொள்ள வந்த பெருமானே! நீவிர் வந்தது எனக்கு நன்மை செய்வதன் பொருட்டே யாதலை அறியாது இருக்க மெய்யுணர்வு தந்து, உய்யுமாறு செய்த பரம்பொருளே! தேவரீருடைய குணமாகிய பெருங்கடலை அணுகுதற்கும், சுவைப்பதற்கும் அறியாத நாயைப் போன்றவன். எதனை அறிந்து யாது சொல்லிப் பாடுவேன்!" என்றார்.

சிறப்புரை: சிவபிரான் வேதியராக வந்தது நம்பியாரூரர்க்கு நன்மை செய்யும் நோக்கம் உடையது என்பதும், அதன் நல்ல தன்மையைத் தான் அறியாது இருந்தமையும் இனிது சாற்றும் வகையில், "ஊதியம் அறியாதேன்" எனப்பட்டது.

கோதிலா அமுதே எனச் சுந்தரர் வாக்காகச் சேக்கிழார் சாற்றிய நெறியானது சுந்தரர் தேவாரம், திருவாவடுதுறை திருப்பதிகம் திருப்பாட்டு எண் 8 - இல்,

"கோதிலா அமுதே அருள் பெருகு
கோலமே இமையோர் தொழு கோவே!"

எனவும், மாணிக்கவாசகர், திருவாசகம், கோயில் திருப்பதிகம், திருப்பாட்டு 5 - இல்,

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!"

எனவும் அருளிச் செய்தமை காண்க.

ஊதியம் - ஆதாயம்: நன்மை. இது செயலுக்குப் பின்னர் கிடைத்தலைப் போன்று இவண் இறைவன் சோதனைக்குப் பின் நிகழ்ந்தது எனவும் காண்க. கோது - கசடு; சக்கை. கோதிலா அமுது - தெளிந்த அமுது. 72

219. அன்பனை அருளின் நோக்கி
அங்கணர் அருளிச் செய்வார்
"முன்புஎனைப் பித்தன் என்றே
மொழிந்தனை யாத லாலே
என்பெயர் பித்தன் என்றே
பாடுவாய்" என்றார் நின்ற
வன்பெருந் தொண்டர் **ஆண்ட**
வள்ளலைப் பாடல் உற்றார்.

தெளிவுரை: நம்பியாரூரர் உரைத்ததைக் கேட்ட சிவபிரான், தன் அன்பரை அருள் புரிந்து ஆற்றும் வகையில் கனிந்து நோக்கி அருள் புரிபவராய், "முன்பு என்னைப் பித்தன் என்று மொழிந்தனை. ஆதலால் என் பெயர் பித்தன் என்றவாறே கொண்டு பாடுவாய்." என்றார். வன்பெருந்தொண்டரும், தன்னை ஆளாகக் கொண்ட சிவபிரானைப் போற்றிப்பாடலானார்.

சிறப்புரை: முன்பு நம்பியாரூரர் "பித்தனோ மறையோய்" என்று வன்மொழியால் கூற, ஈசனும், "பித்தம் ஆகப் பின்னும் பேயனும் ஆக" என்று பதிலுரைக்க, அச்சொல்லே இவண் பாடுதற்கு எடுத்துக் கொடுக்கும் முதற் சொல்லாயிற்று.

அன்பன் - நம்பியாரூரர். அங்கணர் - சிவபிரான். வன்பெருந்தொண்டர் - நம்பியாரூரர். ஆண்ட வள்ளல் - சிவபிரான் 73

நம்பியாரூரர் திருப்பதிகம் அருளிச் செய்தலும் சிவபிரான் திருவருளும்

- இது முதல் 3 பால்கள் ஒரு தொடர்

சந்தக் கலி விருத்தம்

220. கொத்தார் மலர்க் குழலாள்ஒரு
கூறாய்அடி யவர்பால்
மெய்த்தா யினும் இனியானை அவ்
வியன்நாவலர் பெருமான்
பித்தாபிறை சூடிஎனப்
பெரிதாம் திருப் பதிகம்
இத்தாரணி முதலாம் உலகு
எல்லாம்உய எடுத்தார்.

தெளிவுரை: பூங்கொத்து நிறைந்த மலரணிந்த கூந்தலையுடைய உமாதேவியை இடப் பக்கமாகக் கொண்டு அடியவர்களிடத்தில் ஈன்ற தாயினும், இனிமையுடைய சிவபிரானைப் பெருமை விளங்கும் திருநாவலூரில் உள்ள பெருமைக்குரிய நம்பியாரூரர், "பித்தா பிறை சூடி" எனத் தொடங்கும் பெரிதாம் திருப்பதிகத்தை இம்மண்ணுலகம் முதலாக அனைத்துலகமும் உய்யுமாறு எடுத்துப் பாடத் தொடங்கினார்.

சிறப்புரை: சிவபிரான் உமையொருபாகனாக விளங்கும் பாங்கு முதலடியின் வாயிலாக உரைத்தலாயிற்று. அடியவர்பால் இறைவன் கொள்ளும் பெருங்கருணை, ஈன்ற தாயினும் மிக்கது என்னுமாறு" மெய்த்தாயினும் மிக்கான்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசக சுவாமிகள்,

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!"

-சிவபுராணம், வரிகள் 60-61.

"பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"

-பிடித்த பத்து, பாடல் 9.

என அருளியவாறும் காண்க.

இறைவனைப் பித்தன் என முதன்மைப்படுத்திய நிலையில் மாணிக்கவாசகர்,

"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதி கண்டாய்
விடின் வெங்கரியின்
உரிப் பிச்சன் தோலுடைப் பிச்சன் நஞ்சு
ஊண் பிச்சன் ஊர்ச்சுடு காட்டு
எரிப் பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சன் என்று ஏசுவனே.

(பிச்சன் - பித்தன்.) -நீத்தல் விண்ணப்பம், 49.

என அருளிச் செய்தவாறும் இனிது காண்க.

நம்பியாரூரர் அருளிச் செய்த முதல் திருப்பாட்டில், பித்தா என்பது அன்பின் எல்லையற்ற பெருக்கமும், பிறைசூடி என்பது அடைந்தவர்களை ஆதரித்துக் காக்கும் பெருங்கருணையும், பெருமானே என்பது யாவற்றுக்கும் பேரழகுடன் ஒளிரும் தலைவன் என்பதும், அருளாளா என்பது அருள் புரியும் தன்மை தனக்கே உரியதாக உடையவன் என்பதும் இவண் சாற்றப்படுமாறு முதலடி கொண்டு விளங்கிற்று. சிவபிரான் ஒருவனே அருள் ஆட்சி கொண்டு விளங்குதலை,

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர்மற்று அத்தெய் வங்கள்
வேதனைப் படும் இறக்கும்
பிறக்குமேல் வினையும் செய்யும்
ஆதலால் இவை யிலாதான்
அறிந்தருள் செய்வன் நன்றே."

- சிவஞான சித்தியார் சுபக்கம், திருப்பாட்டு, 115.

என அருளிச் செய்தவாறும் காண்க.

குழல் - கூந்தல். கூறு - பாகம். மெய்த்தாய் - ஈன்றதாய். வியன் - பெருமை. நாவலர் பெருமான் - திருவாலூரில் திருஅவதாரம் செய்த நம்பியாரூரர். தாரணி - உலகம். உய - உய்ய. எடுத்தார் - எடுத்துத் திருப்பதிகம் அருளிச் செய்தார். திருவெண்ணெய் நல்லூர் - சுந்தரர் பாடல் பெற்ற நடுநாட்டுத்தலம்.

221. முறையால்வரு மதுரத்துடன்
மொழிஇந்தளம் முதலில்
குறையா நிலை மும்மைப்படி
கூடும் கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர்
நீடும் புகழ் வகையால்
இறையான் மகிழ் இசைபாடினன்
எல்லாம் நிகர் இல்லான்.

தெளிவுரை: எல்லாவற்றாலும் இணையில்லாதவரான நம்பியாரூரர் இனியதாகிய இத்திருப்பதிகத்தை இந்தளம் என்னும் பண்ணில் அமைத்து மேல், கீழ், உச்சம் என்னும் தானங்களில் இசை இலக்கணம் விளங்கவும். தாள வகைகள் இனிது பொருந்தவும் நெடும் புகழ் மேவும் வகையால் சிவபிரான் மகிழும் இசையில் பாடியருளினார்.

மதுரம் - இனிமை. இந்தளம் - ஒரு பண். மும்மைப்படி - மேல், கீழ் உச்சம் எனும் தானங்கள். இறையான் - சிவபிரான். எல்லாம் - எல்லாக் கலைகளும். நிகர்இல்லான் - இணையற்றவராகிய நம்பியாரூரர். 75

222. சொல்ஆர் தமிழ் இசைபாடிய
தொண்டன்தனை இன்னும்
பல்லாறுஉல கினில்நம்புகழ்
பாடு என்றுஉறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூர் அருள்
துறை மேவிய நம்பன்
எல்லா உலகு உய்யப் புரம்
எய்தான் அருள் செய்தான்.

தெளிவுரை: புகழ்மிக்க இனிய தமிழ் கொண்டு இசை பாடிய நம்பியாரூரரை நோக்கி, நன்மைகள் விளங்கும் திருவெண்ணெய் நல்லூர் அருள்துறையில் மேவியவராய் எல்லா உலகங்களும் இனிமை கொள்ளுமாறு முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய சிவபிரான், "உலகத்தில் நம்புகழைப் பல்லாற்றானும் விளங்குமாறு பாடுக." என்று பரிவோடு உரைத்தருளினார்.

நாயனார் அருளிய பதிகம் வருமாறு, பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" என்று தொடங்கும் திருப்பதிகம் தடுத்தாட்கொண்ட புராணம்.

சொல் ஆர் தமிழ் - சொல்தமிழ் என்று நவின்றவாறு கொள்க.

தொண்டன் - நம்பியாரூரர். நல்லார் - நன்மாந்தர். நம்பன் - சிவபிரான். புரம் எய்தான் - முப்புரத்தை எரியுண்ணச் செய்தவன், ஈசன். 76

புத்தூர் சிவவேதியர் திருமகளைப் பற்றியுரைத்தல்

223. அயல் ஓர்தவம் முயல்வார் பிறர்
அன்றே மணம் அழியும்
செய லால்நிகழ் புத்தூர்வரு
சிவ வேதியன் மகளும்
உயர் நாவலர் தனிநாதனை
ஒழியா துணர் வழியில்
பெயராது உயர் சிவலோகமும்
எளிதாம் வகை பெற்றாள்.

தெளிவுரை: திருமணம் தடைப்பட்டு நிற்கப் புத்தூர்ச் சடங்கவியாரின் திருமகள், உயர்வுடைய திருநாவலூரின் ஒப்பற்ற தலைவரான நம்பியாரூரரைத் தியானத்தால் ஒழியாது நின்று, உணர்வினிலும் பெயராது விளங்கிச் சிவலோகத்தை எளிதான வகையில் அடைந்தார். இவரையன்றிப் பிறராயின் வேறுதவத்தின் வகையில் மேற்கொள்பவராவர்.

சிறப்புரை: இவண் நம்பியாரூரைத் தியானம் செய்தலின் பயன் சாற்றப்பட்டது. இத்தன்மையில் பெருமிழலைக் குறும்ப நாயனார் நம்பியாரூரரைத் தியானித்துப் பேறுற்றதையும் இனிது காண்க.

மணம் அழியும் - தடைப்படும் திருமண நிகழ்வு. சிவவேதியன் - சடங்கவி சிவாசாரியார். நாவலூர் தனிநாதன் - நம்பியாரூரர். 77

நம்பியாரூரர் திருநாவலூர் சார்தல்
கொச்சகக் கலி

224. நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவும் அருள் துறையமர்ந்த வேதியர் ஆட் கொண்டதன்பின்
பூஅலரும் தடம் பொய்கைத் திருநாவ லூர் புகுந்து
தேவர்பிரான் தனைப் பணிந்து திருப்பதிகம் பாடினார்.

தெளிவுரை: திருநாவலூரின் தலைவராகிய நம்பியாரூரர் திருவருள் துறையில் எழுந்தருளியுள்ள சிவபிரானால் அடிமை என்று ஆட்கொண்ட பின்னர், செந்தாமரை விளங்கும் அகன்ற பொய்கையையுடைய திருநாவலூரை அடைந்து ஆங்குக் கோயில் கொண்டுள்ள சிவபிரானைப் போற்றிப் பணிந்து திருப்பதிகம் பாடினார்.

குறிப்பு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகங்கள் 3800 என்பர். அவற்றுள் கிடைக்கப் பெற்ற 100 திருப்பதிகங்களின் விவரம் சேக்கிழார் சுவாமிகள் எடுத்தியம்பிய தடுத்தாட்கொண்ட புராணத்தில் 7 திருப்பதிகங்களும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கம் ஆகியவற்றுள் எஞ்சிய 93 திருப்பதிகங்களும் ஆங்காங்கு இடம் பெறுதலைக் காணலாம். இத் திருத்தலத்தில் பாடப் பெற்றதாகக் கூறப்படும். திருப்பதிகம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

பூ - தாமலை மலர். தடம் பொய்கை - அகன்ற குளம்; நீர் நிலை. தேவர் பிரான் - சிவபிரான் 78

நம்பியாரூரர் திருத்துறையூர் சென்று திருப்பதிகம் பாடுதல்

225. சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையால்
அவநெறியில் செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருள் என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகம் பாடினார்.

தெளிவுரை: திருத்துறையூர் சென்ற நம்பியாரூரர் அங்கு வீற்றிருக்கம் சிவபிரானைத் துதித்து, "என்னைப் பிறவி என்னும் துன்பத்தில் அழுந்தாது தடுத்து ஆட்கொண்ட பெருமானே! அடியேற்குத் தவநெறி தந்தருள்க." என்று திருப்பதிகம் பாடினார்.

சிறப்புரை: சுந்தரர் பாடிய இத் திருப்பதிகம் 2 - வது திருப்பதிகமாயிற்று. தக்க ராகத்தில் "மலையார் அருவி" என்று தொடங்கும் இத்திருப்பதிகம் தவநெறியை வேண்டுதலாய் அமைய இதன் கடைக்காப்பாக.

"பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தனவல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே"

எனச் சாற்றுவது கருதத்தக்கது.

திருத்துறையூர் - சுந்தரர் பாடல் பெற்ற நடுநாட்டுத்தலம். தம்பிரான் - சிவபிரான். பவநெறி - பிறப்பு அடைதல்; பிறவிப்பிணி 79

தவநெறி அருளப் பெற்ற ஆரூரர் திருவதிகை சார்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

226. புலன்ஒன்றும் படிதவத்தில் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவும்தண் புனலும்ஒளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்தொண்டர்.

தெளிவுரை: ஆரூரர் வேண்டியவாறு ஐம்புலனும் ஒன்றி இறைவன் பால் ஆன்மாவை ஒன்றச் செய்து புரியவல்ல அருமையுடைய தவநெறியை ஈசன் கொடுத்தருள, அவர் நறுமணம் கமழும் சோலைகளும் குளிர்ந்த நீரும் உடைய திருத்துறையூரின் கண் சிவபிரான் திருப்பாதங்களை மலர் கொண்டு போற்றினார்.

சிறப்புரை: இறைவனை மலர் கொண்டு தொழுதலைத் திருஞானசம்பந்தர் முதல் திருமுறை, திருவண்ணாமலைத் திருப்பதிகத்தில்,

"பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்" என்று அருளியவாறும் காண்க.

புலன் - மெய், வாய், கண், நாசி, செவி என்னும் ஐம்புலன்கள். ஒன்றும்படி - வேறு இச்சை கொண்டு நாடாது ஆன்மாவோடு ஒருமித்து நிற்கும் உறுதிப்பாடு. அலர் - மலர். புனல் - நீர். 80

227. திருத்துறையூர் தனைப்பணிந்து
சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும்
புக்கு இறைஞ்சிப் பொன்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத்
தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால்
வழிக் கொள்வான் மனம் கொண்டார்.

தெளிவுரை: திருத்துறையூர் மேவும் சிவபிரானைப் பணிந்து மேலும் ஈசன் திருக்கோயில் கொண்டு விளங்கும் தலங்கள் பல சென்று ஏத்தித் தில்லை எனப்பெறும் அழகிய புலியூரில் திருநடனம் புரியும் காட்சியைக் கொண்டு தொழுவதற்கு எண்ணிய நம்பியாரூரர் ஆற்றொணா பேரன்பு கொண்டு அவ்வழியே செல்லத் தொடங்கினார்.

இறைஞ்சி - ஏத்தி வணங்கி. பொன் - அழகு. புலியூர் - தில்லை: சிதம்பரம். நிருத்தனார் - நடராசப்பெருமான். திருக்கூத்து - திருநடனம். வருத்தமிகு - ஆற்றாமைமிகு. காதல் - பேரன்பு. 81

228. மலைவளர்சந்து அகில் பீலி
மலர்பரப்பி மணிகொளிக்கும்
அலைதருணீ புனல்பெண்ணை
ஆறுகடந்து ஏறியபின்
நிலவுபசும் புரவிநெடுந்
தேர்இரவி மேல்கடலில்
செலஅணையும் பொழுதுஅணையத்
திருஅதிகைப் புறத்தணைந்தார்.

தெளிவுரை: மலையில் வளரும் சந்தன மரம், அகில் மரம், மயிற்பீலி, நறுமணமலர், முத்துமணி என யாவற்றையும் தம் அலைகளால் உந்திக் கொழிக்கும் குளிர்ந்த நீருடைய பெண்ணையாற்றைக் கடந்து சென்ற நம்பியாரூரர் திருவதிகை என்னும் தலத்தை நெருங்கினார். அப்போது, நன்கு விளங்குகின்ற குதிரைகளைப் பூட்டிச்செலுத்துகின்ற சூரியன் மேற்குக் கடலை அடைய, பொழுது சாய்ந்தது. இது மாலைப்பொழுது உற்றதை நவின்றது.

சந்து - சந்தனம். பீலி - மயிற்பீலி. மணி - முத்துமணி. புரவி - குதிரை. இரவி - சூரியன். சூரியன் 7 குதிரைகளைப் பூட்டிய ஒற்றைச் சக்கரம் கொண்ட தேரில் செல்வதாகக் கூறுதல் கவி மரபு. மேலைக் கடலில் அணைவது மாலைப் பொழுதைக் குறித்தலாம். திருஅதிகைப் புறத்து - திருவதிகை என்னும் தலத்தின் பக்கம். 82

திருவதிகை என்னும் தலத்தை மிதிப்பதற்கு அஞ்சிச் சித்த வட மடம் புகுதல்

229. உடையஅரசு உலகேத்தும்
உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு
விரும்புபெரும் பதியைமிதித்து
அடையும் அதற்கு அஞ்சுவன் என்று
அந்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையில்
சித்தவட மடம்புகுந்தார்.

தெளிவுரை: ஆளுடைய திருநாவுக்கரசர் உலகேத்தும் உழவாரப் படையாளியாகச் சிவபிரானுக்குக் கைத்தொண்டு செய்த பெருமைமிக்க

திருத்தலம் திருவதிகை. அத்தகைய திருத்தொண்டர் விளங்கிய நகரில் தன்னுடைய பாதம் படுதல் ஏற்றதன்று என்று அச்சம் கொண்ட நம்பியாரூரர் ஆங்குச் செல்லாது அதனை அடுத்துள்ள வயல் சார்ந்த சித்தவட மடம் அடைந்தார்.

உழவாரப் படையாளி - உழவாரம் என்னும் படை கொண்டு திருக்கோயிலைத் தூய்மை செய்யும் விதத்தில் புல் செதுக்குதல், பாதை அமைத்தல் முதலான தொண்டுகளைச் செய்த திருநாவுக்கரசரைக் குறித்தது. இதன் விரிவினை அவர் தம் புராணத்தில் காண்க. கைத்தொண்டு - கையால் செய்யும் தொண்டு. மடை- நீர் மடை. புறம்பணை - வயல்கள் சார்ந்த. 83

நம்பியாரூரர் ஆங்கு இரவு ஒரு மடத்தின் கண் பள்ளி கொள்ளுதல்

230. வரிவளர்பூஞ் சோலைசூழ்
மடத்தின்கண் வன்தொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட
வீரட்டா னத்துஇறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப்
புடையெங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில்கொள்ளப்
பள்ளிஅமர்ந்து அருளினார்.

தெளிவுரை: வண்டுகள் ரீங்காரம் செய்யும் பூஞ்சோலை சூழ்ந்த மடத்தில் வன்தொண்டராகிய நம்பியாரூரர், அகன்ற அலைகளையுடைய கெடில நதியின் வடகரையிலுள்ள வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானை விருப்பமுடைய மனத்தினராய்ப் பேரன்புடன் இடையறா சிந்தையில் கொண்டு ஆழ்ந்திருந்தார். அவரைச் சூழ்ந்து பரிவாரங்களும் விளங்கத் துயில் கொள்ளுமாறு பள்ளி கொண்டார்.

சிறப்புரை: திருவதிகையின்கண் திருநாவுக்கரசர் விளங்கி வீரட்டானத்தீசனைக் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிச் சூலை நோய் தீரப் பெற்றார் என்பது புராண வரலாறு. இத்தன்மையில் இத்திருத்தலம் சித்தவட மடத்தையடுத்து உள்ளமையை 4 - ஆம் திருமுறை. திருவதிகை வீரட்டானத் திருப்பதிகம் 2 - இல்,

"ஒத்த வடத்து இளநாகம்
உருத்திர பட்டம் இரண்டும்
முத்துவடக் கண் டிகையும்
முளைத்தெழு மூவிலை வேலும்

சித்த வட மும் அதிகைச்
சேணுயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை"

என்று அருளிச் செய்தமையும் காண்க.

வரி - வண்டு. வன்தொண்டர் - நம்பியாரூரர். விரிதிரை - அகன்று வீசும் அலை. கெடிலம் - ஓர் ஆறு. வீரட்டானம் - திருவதிகை என்னும் நகரில் உள்ள சிவபிரான் திருக்கோயிலின் பெயர். பரிவுடைய - விருப்பமுடைய. புடை - பக்கம். மிடை - நெருக்கம். பரிசனம் - நம்பியாரூரருடைய அன்பர்களாகிய சிவனடியார்கள். பள்ளி அமர்தல் - துயில் கொள்ளுதல். அருளினார் - திருவருள் நிலையில் நிகழ்தலை உரைக்கும் பண்புச்சொல். 84

நம்பியாரூரர் பள்ளி கொள்ள சிவபிரான் முதியவர் போல் வந்து உடன் துயிலுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

231. அதுகண்டு வீரட்டத்து
அமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய்
முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தின் உள்புகுந்து
பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப்
பள்ளிகொள்வார் போல் பயின்றார்.

தெளிவுரை: நம்பியாரூரர் திருவதிகை. நகரில் தன் கால் வைப்பதற்கு அஞ்சிய நிலையில், வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் முதுமையுடைய வேதியராய்ப் பிறர் கண்ணுக்குத் தெரியாதவாறு பொதுவாக உள்ள மடத்துள் புகுந்து மலர் மாலை தரித்த அவ்வடியவர் உறங்கும் போது அவர் தமது தலையில் தமது தாமரை மலர்த்தாள் வைத்துப் பள்ளி கொள்வார் போல் இருந்தார்.

அங்கணர் - சிவபிரான். பூந்தாரான் - மலர் மாலை சூடிய நம்பியாரூரர். பதுமமலர் - தாமரை மலர். பயின்றார் - இருந்தார்: நடித்தார். 85

232. அந்நிலை ஆரூரன் உணர்ந்து
"அருமறைபோய் உன்னடிஎன்
சென்னியில்வைத் தானை" யென்னத்
திசை யறியா வகைசெய்தது
என்னுடைய மூப்புக்காண்"
என்றருள அதற்கிசைந்து
தன்முடி அப் பால்வைத்தே
துயில் அமர்ந்தான் தமிழ்நாதன்.

தெளிவுரை: இவ்விதம் முதிய வேதியர் துயில் கொள்வதைக் கண்ட நம்பியாரூரர், "அருமையுடைய மறையவரே! உம்முடைய பாதத்தை என் சென்னியில் படுமாறு வைத்தீர்." என்று தெரிவிக்க அவர், என்னுடைய முதுமைத் தன்மையானது திசையறியாது செய்து விட்டது." என்றார். ஆரூரர் அம்முதியவர் சொன்ன வார்த்தைக்கு உடன்பட்டுத் தன் தலையைச் சற்றுத் தள்ளி வைத்துத் துயில் கொள்ளலானார்.

மூப்பு - முதுமை. தமிழ்நாதன் - நம்பியாரூரர்: பொய்யாத்தமிழ் ஊரன் சுட்டியவாறும் நோக்குக. 86

233. அங்கும்அவன் திருமுடிமேல்
மீண்டும்அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ்
திருநாவ லூராளி
"இங்கென்னைப் பலகாலும்
மிதித்தனைநீர் யார்" என்னக்
கங்கைசடைக் கரந்தபிரான்
"அறிந்திலையோ" எனக் கரந்தான்.

தெளிவுரை: அவ்விடத்தில் ஆரூரர் திருமுடியின் மீது வேதியர் தமது பாதங்கள் படுமாறு வைத்தார். கயல்மீன்கள் விளங்கும் பெரிய பொய்கையுடைய நீர்வளம் மிகுந்த திருநாவலூர் வேந்தரான நம்பியாரூரர், "இங்கு என்னைப் பலமுறை உம் பாதங்கள் கொண்டு மிதித்தீர். நீர் யார்?" என்றார். அந்த நிலையில் கங்கையைத் தன் சடையில் மறைத்த பிரானான ஈசன், "என்னை நீ அறியவில்லையோ!" என்று கூறி மறைந்தார்.

சிறப்புரை: சிவபிரான் வலிய ஆட்கொண்ட வள்ளலாய்த் திருமணப் பந்தலில் தடுத்தாட் கொண்ட வகையில் நயனதீட்சையும், ஓலையை

வலிய வாங்கிக் கிழித்த போது பற்றிய நிலையில் பரிச தீட்சையும், இங்குத் திருவடி தீட்சையும் நல்கினார் என்க.

கரந்த பிரான் - மறைந்த பெருமான். கரந்தான் - தன்னுருவை மறைத்துக் கொண்டான்.

87

ஆரூர் வீரட்டானத்து இறைவனைப் பாடித் திருக்கோயிலை வணங்கியும் மகிழ்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

234. செம்மாந்து இங்கு யான் அறியாது
என் செய்தேன்" எனத் தெளிந்து
தம்மானை அறியாத
சாதியார் உளரே என்று
அம்மானைத் திருவதிகை
வீரட்டா னத்து அமர்ந்த
கைம் மாவின் உரியானைக்
கழல் பணிந்து பாடினார்.

தெளிவுரை: முதிய வேதியராக வந்தவர் சிவபிரானே எனத் தெளிந்த நம்பியாரூரர், "இவரே வீரட்டானத்து இறைவன் என்று அறியாதவனாய் இருந்தனனே!" என்று எண்ணி உள்ளம் பேரார்வம் பொங்கத், "தம்மானை அறியாத சாதியர் உளரே!" என்று எடுத்துத் திருவதிகை வீரட்டானத்து உறையும் தலைவரும். யானையின் தோலை உரித்தவருமான ஈசன் திருப்பாதங்களை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்யலானார்.

சிறப்புரை: சுந்தரர் பாடிய இத்திருப்பதிகம் 3 - வது பதிகம் ஆயிற்று. கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்த இத்திருப்பதிகம் இறைவன் ஐம்பூதங்களாகவும், யாவர்க்கும் அறிவரியவராயும், மயில் வாகனத்தையுடைய முருகவேளின் தந்தையாயும் உள்ளவர் எனப் பலவாறு போற்றித் துதித்து ஆரூரர் மகிழ்ந்தார்.

யானையின் தோலுரித்த வரலாறு: தாருக முனிவர்கள் சிவபெருமானை அழித்தற்காக வேள்வி செய்து அதன் வாயிலாக யானையைத் தோற்றுவித்து ஏவ, அவர் அதனை மாய்த்துத் தோலைத் தோளில் போர்த்திக் கொண்டார். இத்தன்மையான வீரச்செயல் புரிந்த தலம் வழுவூர் என்பதாம். இவ்வாறு உள்ள வீரட்ட தலங்கள் எட்டு அவை வருமாறு:

1. முப்புரம் எரித்தது - திருவதிகை.
2. சலந்தராசுரனை அழித்தது - திருவிற்குடி.
3. மன்மதனை எரித்தது - திருக்குறுக்கை.
4. அந்தகாசுரனை மாய்த்தது - திருக்கோவலூர்.
5. தக்கனை அழித்தது - திருப்பறியலூர்.
6. பிரமன் சிரம் அரிந்தது - திருக்கண்டியூர்.
7. காலனை மாய்த்தது - திருக்கடவூர்.
8. யானையை உரித்தது - வழுவூர்.

செம்மாந்து - இறுமாந்து. தம்மான் - தன் தலைவன். அம்மான் - பெருமையுடைய தலைவனான சிவபிரான். கைம்மா - யானை. 88

235. பொன்திரளும் மணித்திரளும்
பொருகரிவெண் கோடுகளும்
மின்திரண்ட வெண்முத்தும்
விரைமலரும் நறுங்குறடும்
வன்திரைக ளால் கொணர்ந்து
திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும்
திருக்கெடிலம் திளைத்து ஆடி:

தெளிவுரை: பொன்னையும், நவரத்தின மணிகளையும், யானைத் தந்தங்களையும், ஒளி திகழும் வெண்முத்துக்களையும், நறுமண மலர்களையும், சந்தனக் கட்டைகளையும் வலிமையுடைய அலைகளால் அடித்துக் கொண்டு திருவதிகையின் வழியே செல்வதால் இக் கெடில நதி தென்திசையின் கங்கை என்னும் புனிதப் பெயர் பெற்று விளங்கிற்று. இத்தகைய கெடிலத்தில் நீராடி மகிழ்ந்தார் நம்பியாரூரர்.

இது குளகச் செய்யுள். இச்செய்யுளின் ஈற்றடியானது அடுத்த பாடலின் அணைந்தார் என வினை முடிபு கொள்ளும்.

பொருகரி - போர் புரியும் யானை. வெண்கோடு - யானைத்தந்தம். விரை - நறுமணம். குறடு - சந்தனக் கட்டை. வழிபடல் - வழியே செல்லுதல்: வணங்குதல். திருவதிகை - மூவர் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலம். 89

ஆரூரர் ஈசனை வணங்கித் திருமாணிக்குழி சார்தல்

236. அங்கணரை அடி போற்றி
அங்ககன்று மற்றந்தப்
பொங்கு நதித் தென்கரைபோய்ப்
போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியில்பண்டு
வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்ட
திருமாணிக் குழிஅணைந்தார்.

தெளிவுரை: திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பரமனை வணங்கிய நம்பியாரூரர், அந்நதியின் தென்கரையே சென்று வேள்வியில் மூன்றடி மண் யாசித்த திருமால் வழிபட்ட திருமாணிக்குழி என்னும் தலத்தை அடைந்தார்.

சிறப்புரை: திருமால் வாமன அவதாரம் கொண்டு சிவபிரானை வழிபட்ட வரலாறு இவண் சாற்றப்பட்டது. இதன் வரலாறு வருமாறு:

ஒரு காலத்தில் மகாபலி சக்கரவர்த்தி தேவலோக ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டுப் பெருவேள்வி இயற்றினான். அப்போது திருமால் வாமனனாகத் திருஅவதாரம் செய்து தன் பாதத்தால் மூன்றடி மண் யாசித்துப் பின் திருவிக்கிரமனாகப் பேருருவம் கொண்டு ஓரடியால் பூவுலகத்தையும் மற்றோர் அடியால் வானுலகத்தையும் அளந்தார். மூன்றாவது அடியாக அளப்பதற்கு இடமில்லாததால் மகாபலி சக்கரவர்த்தி தன் முடியில் வைத்தருளுமாறு வேண்டினான்.

இப்புராண வரலாறு இத்திருப்பாட்டின் 3 - ஆம் அடியில் உரைத்தலாயிற்று.

அங்கணர் - சிவபிரான். மாவலி - மகாபலி சக்கரவர்த்தி. வாமனன் - திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்று, மிகக் குறுகிய வடிவினன். மண் இரந்த - மூன்றடி மண் யாசித்த. செங்கணவன் - தாமரை போன்ற சிவந்த கண்ணுடைய திருமால். திருமாணிக்குழி - நடு நாட்டுத்தலம், திருஞான சம்பந்தரின் திருப்பதிகம் கொண்டது. 90

ஈசனைப் பணிந்த ஆரூரர் தினை நகரை அடைந்து பாடிப் போற்றித் தில்லை சார்தல்

237. பரம்பொருளைப் பணிந்துதாள்
பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரம்தருவான் தினைநகரை
வணங்கினர்வண் தமிழ்பாடி
நரம்புடை யாழ் ஒலிமுழவின்
நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி
அறாத்தில்லை மருங்கணைந்தார்.

தெளிவுரை: திருமாணிக்குழியில் எழுந்தருளியுள்ள ஈசனைப் பணிந்து திருப்பாதத்தைப் போற்றிப் பின்பு வரம் தரும் பெருமானாய் விளங்கும் திருத்தினை நகர் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிய நம்பியாரூரர் யாழொழி, முழவொலி, வேதஒலி, அரம்பையரின் கீத ஒலி முதலாயின எப்போதும் விளங்குகின்ற தில்லை நகர்ப்புறத்தே சார்ந்தார்.

சிறப்புரை: நடுநாட்டுத் தலமான திருத்தினை நகரில் சுந்தர் அருளிச் செய்த **4 - வது திருப்பதிகம், 'நீறு தாங்கிய திருநுதலானை"** என்று தொடங்கித் தக்கேசிப்பண்ணில் அருளிச் செய்யலானார். சுற்றமும், துணையும் அநித்தியம். இவ்வாழ்வெனும் பிணக்கைத் தவிர்த்து இறைவனைச் சார்தலே உயிர்க்கு நன்மை தருவதாகும் என்று மனத்துக்கு அறிவுறுத்தித் திருக்கடைக் காப்பில் இத்திருப்பதிகத்தை ஓதுபவர் முத்திப் பயனை அடைவார்கள் எனச் சாற்றுதலானார்.

வரந்தருவான் - சிவபிரான். தினை நகர் - நடு நாட்டுத் தலம், சுந்தரர் பாடல் பெற்றது. அரம்பையர் - மாதர், பெண்கள். மருங்கு - பக்கம். 91

ஆரூரர் தில்லை நகரை வணங்கித் திருவீதிவலம் வந்து திருக்கோயிலை அடைதல்
- இது முதல் 12 பாடல்கள் ஒரு தொடர்

238. தேம லங்கல்அணி மாமணி மார்பின்
செம்மல் அங்கயல்கள் செங்கம லத்தண்
பூம லங்கலதிர் பாய்வன மாடே
புள்அ லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குகள் தடம்பணை சூழும்
தண்ம ருங்குதொழு வார்கள்தம் மும்மை
மாம லங்கள்அற வீடருள் தில்லை
மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி.

தெளிவுரை: அழகும், மேன்மையும் உடைய மணி மாலையணிந்த மார்பில் மலர்மாலைகள் சூடிய செம்மலாகிய ஆரூரர், தாமரை மலர்கள் அசையுமாறு மீன்கள் பாய, அதனால் வண்டுகளும், நீர்ப்பறவைகளும், அலைகளும் ஒலிக்கும் சங்குகளும் உடைய நீர்நிலைகளில், மலங்கு மீன்கள் அகன்ற வயல்களில் சூழும் வளம் நிறைந்தனவாய் மேவ மும்மலங்களையும் அறுத்து வீடு பேறு அருளும் தில்லை நகரின் எல்லையை வணங்கினார்.

இது குளகச் செய்யுள். இதன் ஈற்றடியானது அடுத்த பாடலில் வரும் புகுந்தார் என வினை முடிபு பெறும்.

தேம் அலங்கல் - நறுமணம் பொருந்திய மாலை. மாமணி - இரத்தின மணி. செம்மல் - நம்பியாரூரர். பூமலங்க - பூக்கள் அசைய. புள் அலம்பு - பறவைகள் ஒலிக்கின்ற. திரை - நீரலை. வெள்வளை - வெண்சங்கு. வாலி - நீர்நிலை. தாமலங்குகள் - தாவும் மலங்கு மீன்கள். தடம் பணை- அகன்ற வயல்கள். மும்மை மாமலங்கள், இம்மலங்கள் நீங்கற்கு அரிதாதலின் மா எனும் அடைமொழி கூறப்பட்டது. மல்லல் - வளப்பம்

92

239. நாக சூதவகு ளம்சர ளம்சூழ்
நாளி கேரம் இலவங்கம் நரந்தம்
பூகம் ஞாழல் குளிர்வாழை மதூகம்
பொதுளும் வஞ்சிபல எங்கும் நெருங்கி
மேக சாலம்மலி சோலைகள் ஆகி
மீது கோகிலம் மிடைந்து மிழற்றப்
போக பூமி யினும்மிக்கு விளங்கும்
பூம்புறம் பணை கடந்து புகுந்தார்.

தெளிவுரை: நாகம், மா, மகிழம், ஏராளமான தென்னை இலவங்கம், நாரத்தை, பாக்கு, குங்குமம், வாழை, இலுப்பை ஆகிய மரங்களோடு, பசுங்கொடிகளும் நெருங்கி மேகத்தை அளாவி விளங்கவும், சோலைகளில் குயில்கள் ஒன்று சேர்ந்து கூவ, தேவர் உலகத்தினும் பெருஞ்சிறப்புடையதாய் விளங்கும் தில்லை நகரின் பொலிவுடைய எல்லைப் புறத்திலுள்ள வயல்களைக் கடந்து நம்பியாரூரர் நகருள் புகுந்தார்.

நாகம் - நாக மரம், சூதம் - மா. வகுளம் - மகிழ மரம். நாளி கேரம் - தென்னை. நரத்தம் - நாரத்தை. மதூகம் - இலுப்பை. பூகம் - பாக்கு. வஞ்சி - கொடி. மேகசாலம் - மேகக் கூட்டம். கோகிலம் - குயில். போகபூமி - தேவர் உலகம். பணை - வயல்கள், தோட்டங்கள்.

93

240. வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
மலர்ப்ப லாசொடு செருந்தி மந் தாரம்
கன்னி காரங் குரவம்கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல்
துதைந்த நந்திகர வீரம் மிடைந்த
மன்மலர்ப் புனித நந்தவ னங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்.

தெளிவுரை: வன்னி, கொன்றை, சுரபுன்னை, சண்பகம், சந்தனம், முருக்கமரம். செருத்தி, மந்தாரை, கோங்கு, குராமரம், புன்னை, கொடிமல்லிகை, பாதிரி, வில்வம், நெருங்கி விளங்கும் சிறுசண்பகம், நறுமணம் கமழும் மல்லிகை, முல்லை, இதழ் நெருங்கிய நந்தியாவர்த்தனம், அலரி என்னுமாறு பல்வகையான மலர்களைத் தரும் புனிதம் மிகுந்த நந்தவனங்களைப் பணிந்து, நறுமணம் கமழும் மாலையணிந்த நம்பியாரூரர் கடந்து செல்லலானார்.

சிறப்புரை: இத்தகைய நந்தவனங்கள், ஓரறிவு கொண்ட இறைவன் படைப்பாகித் தம் பிறவிப் பயனால் ஈசனுக்குப் பருவம் தவறாது செழுமலர்களைத் தருகின்ற பேறு பெற்றதாதலின் அதனை ஆரூரர் வணங்கிச் சென்றமை நவிலப் பெற்றது.

வழை - சுரபுன்னை. ஆரம் - சந்தன மரம். பலாசு - முருக்க மரம். செருத்தி - ஒருவகை மரம், வாட்கோரை, மணித்தக்காளி எனவும் வழங்கப் பெறும். கன்னிகாரம் - கோங்கு. கற்பு - கொடி மல்லிகை. பாடலம் - பாதிரிமரம். கூவிளம் - வில்வம். துன்னு - நெருங்கிய. சாதி - சிறு சண்பகம். மௌவல் - முல்லை. துதைந்த - அடர்ந்த இதழ்கள் கொண்ட. நந்தி - நந்தியாவர்த்தம். கரவீரம் - அலரி. மணம் கமழ் தாரான் - நம்பியாரூரரைக் குறித்தது. 94

241. இடம்ம ருங்குதனி நாயகி காண
ஏழ்பெ ரும்புவ னம்உய்ய எடுத்து
நடம்ந வின்றருள் சிலம்பொலி போற்றும்
நான்ம றைப்பதி யைநாளும் வணங்கக்
கடல்வ லம்கொள்வது போல்புடை சூழும்
காட்சி மேவிமிகு சேண்செல ஓங்கும்
தடம ருங்குவளர் மஞ்சுஇவர் இஞ்சித்
தண்கி டங்கைஎதிர் கண்டு மகிழ்ந்தார்.

தெளிவுரை: இடப்பாகத்தில் தனிப்பெரும் நாயகியான உமையம்மை காண, ஏழு பேருலகங்களின் உயிர்கள் உய்யுமாறு திருப்பாதத்தை

எடுத்து ஈசன் நடனம் புரிந்தருள, அச்சிலம் பொலியைப் போற்றும் நான்கு வேதங்களும் விளங்கும் திருத்தலமான தில்லையை நாள்தோறும் வணங்க வேண்டும் என்னும் உறுதிப்பாட்டுடன் கடல்வலம் செய்வது போன்று, மிக உயரச் சென்று மேகம் தவழ்வதற்கு இடமான மதிற்புறத்தில் உள்ள குளிர்ச்சி மிக்க அகழியைக் கண்டு ஆருரர் மகிழ்ச்சியுற்றார்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் ஈசன் திருநடனச் சிறப்பும். வேதங்கள் ஒலிக்கும் மாண்பும், உயர்ந்ததாகிய கோயில் மதில்களில் மேகம் தவழும் பாங்கும் சாற்றி அத்தகைய சிறப்புமிக்க பதியைச் சூழ்ந்து அகழி விளங்குதலைக் கூறுதலாயிற்று.

இடம் - இடப்பாகம். தனிநாயகி - உமாதேவி, இவண் சிவகாமசுந்தரி என்க. ஏழ்பெரும்புவனம் - மேலேழு உலகம், அவை பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்யலோகம் என்பதாம். உய்ய - நற்பேறு கொள்ள, இது தரிசிக்க முக்தி என்னும் பேருண்மையைச் சாற்றும் மொழியாயிற்று. நான்மறைப் பதி - நான்கு வேதங்களும் இனிது சாற்றப்படுகின்ற திருத்தலமான தில்லை, நான்கு வேதங்களும் போற்றும் தலைவரான நடராசப் பெருமானும் ஆம். புடை - பக்கம். சேண்செல ஓங்கும் - உயர்ந்தோங்கும். மஞ்சு - மேகம். இஞ்சி - மதில். கிடங்கு - அகழி 95

242. **மன்றுள் ஆடும்மதுவின்** நசை யாலே
மறைச்சு ரும்புஅறை புறத்தின் மருங்கே
குன்று போலும்மணி மாமதில் சூழும்
குண்டு அகழ்க் கமல வண்டுஅலர் கைதைத்
துன்று நீறு புனை மேனிய ஆகித்
தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
சென்று சென்றுமுரல் கின்றது கண்டு
சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்றார்.

தெளிவுரை: மன்றுள் நடனம்புரியும் பெருமான் திருவடியாகி தேன் விளங்கும் தாமரையை நண்ணும் விருப்பத்தால்,வேதமாகிய வண்டு இனிது ஒலிக்கும். அருகில் குன்று போல் உயர்ந்து ஒளிரும் நெடிய மதில்களைச் சூழ்ந்துள்ள ஆழமான அகழியில் விளங்கும் தாமரை மலரிலுள்ள வண்டுகள், அருகே மலர்ந்துள்ள தாழம்பூவில் உள்ள வெண்மையான மகரந்தப் பொடியைச் சுவைத்து அதில் மூழ்கித் திழைத்ததால் அவை, புனிதமான திருநீறு பூசப்பட்டதைப் போன்று விளங்குவன. இது, தூய்மையான நீறணிந்த சிவனடியார்கள்

சிவபாதத்தைச் சுற்றி வருவதைப் போன்று காட்சி நல்க, நம்பியாரூரர் சிவசிந்தையில் ஆழ்ந்தவராகி அன்போடு திளைத்து மேற்கொண்டு செல்லலுற்றார்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில், நடராசப் பெருமான் திருப்பாதம் இனிமை நிறைந்த தேன் எனவும், வேத ஒலியானது வண்டின் ரீங்காரம் எனவும் முதலடியில் உவமை சாற்றப்படுதல் காண்க. இத்தன்மையில் நடராசப் பெருமான் திருவடியை "இனித்த பொற்பாதம் " எனப் புகழும் திருநாவுக்கரசர், 4 - ஆம் திருமுறை, கோயில் திருப்பதிகத்தில்,

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில்பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே!"

என்று அருளிச் செய்தமையும் காண்க.

மது - தேன்: நடராசப்பெருமான் என்க: திருவடிப் பேற்றினையும் சுட்டும். நசை - விருப்பம். மறை - வேதம். சுரும்பு அறை - வண்டின் ஒலி. குண்டு அகழ் - ஆழமான அகழி. கமல வண்டு - தாமரை மலரிலுள்ள வண்டு. கைதை - தாழம்பூ. துன்று நீறு - நெருங்கிய வெண்பொடியாக உள்ள மகரந்தத்தூள். முரல்கின்றது - வட்டமிட்டு ரீங்காரம் செய்கிறது. எதிர் சென்றார் - நம்பியாரூரர் தொடர்ந்து செல்லலானார்: இதற்க்கு எழுவாயாகத் திருப்பாட்டு 240 - இல் வரும் மணம் கமழ் தாரான் என்க. 96

243. பார்விளங்க வளர் நான்மறை நாதம்
பயின்ற பண்புமிக வெண்கொடி ஆடும்
சீர் விளங்குமணி நாஒலி யாலும்
திசைகள் நான்குஎதிர் புறப்படலாலும்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொன்
சதுர்மு கங்கள் என ஆயினதில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின்
உத்த ரத்திரு வாயில்முன் எய்தி.

தெளிவுரை: இவ்வுலகு நன்கு விளங்க ஓதப் பெறும் நான்கு வேதங்களின் ஒலி பண்பு மிக ஓங்கும் கலைமகளின் புகழை விரவிக்

காட்டுதலாலும், சீர்மை திகழும் மணியோசை நான்கு திக்குகளிலும் எதிரொலித்தாலும், நறுமணம் கமழும் மாலையணிந்த அகன்ற தோள்களையுடைய பிரமனின் நான்கு திருமுகங்கள் போன்று தில்லை நகரில் விளங்கும் திருக்கோயில் வாயில்கள் உடையதாயின. அதில் நம்பியாரூரர் வடக்குத் திருவாயில் முன்பு எய்தினார்.

இது குளகச் செய்யுள்: அடுத்த பாடலின் திருவீதி புகுந்தார் என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: மலர்தலையுடைய நான்மறையொலியும், மணியொலியும் பயிலும் பண்பு சிறப்புமிக்க நான்கு முகங்களையுடைய பிரமனுக்கு உவமை சாற்றி நான்கு வாயில்கள் சிறப்பிக்கப்படுதலாயிற்று. வெண்கொடி என்பது கலைமகளை உணர்த்துதலாம். இத்தன்மையில் நம்பியாரூரர் வடக்குக் கோபுரம் வழியாகத் திருக்கோயிலிலுள் புகுந்தமை சாற்றப்பட்டது. இங்ஙனம் சமயாசாரியர்கள் நால்வரும் திருக்கோயிலுள் புகுந்த வாயில்கள் வருமாறு:

1. திருஞானசம்பந்தர் - தெற்குக் கோபுரம்
2. திருநாவுக்கரசர் - மேற்குக் கோபுரம்
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் - வடக்குக் கோபுரம்
4. மாணிக்கவாசகர் - கிழக்குக் கோபுரம்.

பார் - உலகம். பயின்ற பண்பு - வேதம் ஓதும் இயல்பு. வெண்கொடி - கலைமகள்: கலைஞானமும் ஆம். வரை மார்பின் அயன் - உறுதியான மார்புடைய பிரமனைக் குறித்தது. பொன் சதுர்முகம் - அழகிய நான்கு முகம்: இது கோபுரத்திற்கு உவமையாயிற்று. உத்தரம் - வடக்கு. 97

244. அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார்
அவர்களோ நம்பியா ரூரர் தாமோ
முன்பு இறைஞ்சினர் யாவர்என்று அறியா
முறைமை யால்எதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து
பெருகு நாவல்நக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும்
பொருஇ றந்ததிரு வீதி புகுந்தார்.

தெளிவுரை: நம்பியாரூரர் கோபுர வாயிலில் புக, அவரை எதிர் கொண்ட அடியவர்கள் அன்பின் மிகுதி கொண்டு வணங்கவும், ஆரூரர் எதிர் கொண்டு வணங்கவும், யார் முதற்கண் வணங்கினர் என்று அறியாதவாறு விளங்கிற்று. பின்பு சிவபிரானைக் கும்பிட்டு

மகிழும் விருப்பத்தால் திருநாவலூரான நம்பியாரூரர் இனிது அழகுடன் ஒளிரும் மாளிகைகள் விளங்கும் ஒப்பற்ற திருவீதியுள் புகுந்தார்.

சிறப்புரை: அடியவர்கள் திருத்தொண்டர்களை முதற்கண் பணிந்து வணங்குதலைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள பாங்கு இவண் சாற்றப்படுவதாயிற்று. இவ்வாறு அடியவர்கள் கூடும்போது வணங்கும் அரும் பண்பு திருநாட்டுச் சிறப்பில் திருப்பாட்டு எண் 72 - இல் உரைத்தவாறும் காண்க.

சீர்அடியார் - திருத்தொண்டர். முன்பு - முன்னதாக. இறைஞ்சினர் - வணங்கினவர். நாவல் நகரார் பெருமான் - நம்பியாரூரர். திருவீதி - ஈசன் திருவுலா வரும் சிறப்பினைச் சுட்டுதல். 98

245. அங்கண் மாமறை முழங்கும் மருங்கே
ஆடு அரம்பையர் அரங்கு முழங்கும்
மங்குல் வானின் மிசை ஐந்தும் முழங்கும்
வாச மாலைகளில் வண்டு முழங்கும்
பொங்கும் அன்புஅருவி கண்பொழி தொண்டர்
போற்றி சைக்கும்ஒலி எங்கும் முழங்கும்
திங்கள் தங்குசடை கங்கை முழங்கும்
தேவ தேவர்புரி யும்திரு வீதி.

தெளிவுரை: அத்திரு வீதியில் பெருமை விளங்கும் வேத ஒலியும், பக்கத்தில் மகளிர் நடனம் புரியும் ஒலியும், அடுத்து மேகம் திகழும் வானில் கலக்கும் தோற்கருவி, துளைக்கருவி, மிடற்றுக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்னும் ஐவகைக் கருவிகளின் முழக்கமும், நறுமணம் கமழும் மலர் மாலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் ஒலியும், திருத்தொண்டர்கள் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கப் பக்திப் பெருக்கால், எழும் "அர அர" என்னும் சிவஒலியும் நிறைந்து விளங்கின. இவ்வாறு பிறைச்சந்திரனைச் சடைமுடியில் தரித்துக் கங்கை முழங்க விளங்கும் தேவதேவராகிய சிவபிரான் திருவுலா நிகழும் திருவீதி விளங்கிற்று.

சிறப்புரை: வேத முழக்கம், அரம்பையர் ஆடும் ஒலி, ஐவகை வாத்தியங்களின் முழக்கம், வண்டின் ரீங்காரம், திருத்தொண்டர் தம் சிவஒலி முழக்கம் போன்று சிவபிரான் சடைமுடியின் மீது கங்கை முழங்குதலைச் சாற்றுதலையும் ஓர்க. இது கங்கையின் அலைகள் ஆரவாரித்தலை உரைத்தலாம். இவ்வாறு ஆரவார ஒலி எழுப்பும்

கங்கையின் சிறப்பினை இனிது நல்குமாறு திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை, திருப்புகலூர்த் திருப்பதிகத்தில்,

"வெள்ளம் ஆர்த்து மிளிர் செஞ்சடைதன்மேல்
விளங்கும் மதிசூடி
உள்ளம் ஆர்த்த அடியார்தொழுது ஏத்த
உகக்கும் அருள் தந்து..."

என உரைத்தருளியவாறும் காண்க.

முழங்குதல் - ஒலித்தல். அரம்பையர்- நடம் புரியும் தேவமாதர். மங்குல் - மேகம். ஐந்து - இசைக் கருவிகள் ஐந்து. பொங்கும் அன்பு - பக்தி. அருவிகண் - கசிந்து பெருகும் கண்ணீர். போற்றி இசைக்கும் ஒலி - சிவஒலி. திங்கள் - பிறைச் சந்திரன். தேவதேவர் - சிவபிரான். 99

246. போகம் நீடுநிதி மன்னவன் மன்னும்
புரங்கள் ஒப்பன வரம்பில ஓங்கி
மாகம் முன்பருகு கின்றன போலும்
மாளி கைக் குலம் மிடைந்த பதாகை
யோக சிந்தை மறை யோர்கள் வளர்க்கும்
ஓம தூமம்உயர் வானில் அடுப்ப
மேக பந்திகளின் மீதிடை எங்கும்
மின்நு டங்குவன என்ன விளங்கும்.

தெளிவுரை: செல்வத்தாலும், போகத்தாலும் திளைத்து விளங்கும் குபேரனுடைய நகரத்தைப் போன்று திருவீதியில் உள்ள மாளிகைகள் உயர்ந்து மேகத்தை உறிஞ்சும் கொடிகளை உடையன. இக்காட்சியானது யோக சிந்தையுடைய மறையவர்கள் வளர்க்கும் வேள்வித் தீயால் மேலெழும் புகை வானமண்டலத்தில் பரவி மேகம் போன்று நிலவ அதனிடையே தோன்றும் மின்னலைப் போன்று ஒளிர்வதாம்.

சிறப்புரை: வேள்விப்புகை மேகத்திற்கும், மாளிகையின் மீது பறக்கும் கொடிகள் மின்னலுக்கும் உவமை கூறப்பட்டது. இத்தகு வேள்விச் சிறப்பினைத் திருஞான சம்பந்தர், முதல் திமுறையில்,

"கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பவமே."

என அருளிச் செய்தவாறும் காண்க.

நிதி மன்னவன் - குபேரன். புரங்கள் -நகரங்கள். மாகம் - ஆகாயம். பரகுதல் - உண்ணுதல். பதாகை - கொடி. ஓமதூபம் - வேள்விப்புகை. அடுப்ப - நெருங்க. மேகபந்தி - மேகவரிசை. மின் - மின்னல். நுடங்குவன - தோன்றி மறைவன. 100

247. ஆடு தோகைபுடை நாசிகள் தோறும்
அரணி தந்தசுடர் ஆகுதி தோறும்
மாடு தாமம்அணி வாயில்கள் தோறும்
மங்க லக் கலசம் வேதிகை தோறும்
சேடு கொண்ட ஒளி தேர்நிரை தோறும்
செந்நெல் அன்னமலை சாலைகள் தோறும்
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும்
நிறைந்த தேவர்கணம் நீள்இடை தோறும்.

தெளிவுரை: ஆங்கு, நுழைவாயில்களில் உள்ள பக்கங்கள் தோறும் மயில்கள் ஆடும். வேள்வி செய்வதற்குரிய யாக குண்டங்கள் தோறும் தீச்சுடர் விளங்கும். அழகிய வாயில்கள் தோறும் பூமாலைகள் விளங்கும். பூசை மேடைகள் தோறும் மங்கலக் கலசம் விளங்கும். அலங்காரமுடைய ஒளி, வரிசையாகத் தேர்கள் தோறும் மிளிரும். அன்ன சத்திரங்கள் தோறும் சோற்றுக் குவியல் விளங்கும். பந்தர்கள் தோறும் குளிர்ந்த நீர் விளங்கும். இடையில் உள்ள இடங்கள் தோறும் பக்தர்கள் கூட்டம் விளங்கும்.

இதுவும் அடுத்த பாடலும் குளகச் செய்யுளாய்ப் பாடல் 249 - இல் தலைமேல் கொடு புக்கார் என வினை முடிபு பெறும். இதற்குத் திருவீதி என்பது எழுவாய் ஆயிற்று.

இத்திருப்பாட்டில் தெய்வீக நிலை, விருந்தோம்பல் முதலான சிறப்புகள் சாற்றப்பட்டன.

புடை - பக்கம். நாசி - வாயில். அரணி - கவசம். மாடு - பக்கம். தாமம் - மாலை வேதிகை - பூசைமேடை. சேடு - பெருமை. சாலை - சத்திரம். புனல் - நீர். தேவர்கணம் - பக்தர் குழாம். 101

248. எண்ணில் பேருலகு அனைத்திலும் உள்ள
எல்லை யில்அழகு சொல்லிய எல்லாம்
மண்ணில் இப்பதி யில் வந்தன என்ன
மங்க லம்பொலி வளத்தன ஆகிப்
புண்ணியப் புனித அன்பர்கள் முன்பு
புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும்.
அண்ணல் ஆடுதிரு அம்பலம் சூழ்ந்த
அம்பொன் வீதியினை நம்பி வணங்கி,

தெளிவுரை: உலகத்திலுள்ள எல்லையற்ற அழகு இத்திருத்தலத்தில் வந்தது என்னும்படி மங்கலம் பொலியும் வளமுடன் விளங்கியது. புண்ணியப் புனித அன்பர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் புகழ்ந்து பாடல்களை அருளிச் செய்ய அதனால் பொற்புடன் விளங்கும் அண்ணலாகிய நடராசப்பெருமான் திருநடனம் புரியும் அம்பலத்தைச் சூழ்ந்த திருவீதியை நம்பியாரூரர் வணங்கினார்.

சிறப்புரை: திருத்தில்லை என்பது காவிரி வடகரைத் தலங்களுள் முதலாவதாக விளங்குவது. திருஞானசம்பந்தரின் 2 - திருப்பதிகமும் திருநாவுக்கரசரின் 8 திருப்பதிகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 1 திருப்பதிகமும் கொண்டு விளங்குவது. இ.ஃது இவண் திருப்பாட்டில் 3 வது அடியின் வாயிலாக உணர்த்தப்படுவதாயிற்று.

புனித அன்பர்கள் - திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் என்க. ஏனைய அருளாளர்களும் ஆம், அண்ணல் - நடராசப் பெருமான். 102

249. மால் அயன்சத மகன்பெருந் தேவர்
மற்றும் உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்றுமுன் துன்னித்
திருப்பி ரம்பின்அடி கொண்டு திளைத்துக்
காலம் நேர் படுதல் பார்த்துஅயல் நிற்பக்
காதல் அன்பர் கணநாதர் புகும்பொன்
கோலம் நீடுதிரு வாயில் இறைஞ்சிக்
குவித்த செங்கைதலை மேல்கொடு புக்கார்.

தெளிவுரை: திருமால், பிரமன், தேவேந்திரன் மற்றும் வருணன் முதலான தேவர்கள் நெருங்கிச் சீலம் மிகுந்த முனிவர்களோடு சென்று, வரிசையாக நின்று தரிசிக்க நந்தியம் பெருமான் தன் கையில் விளங்கும் திருப்பிரம்பு கொண்டு வகைப்படுத்தச் சிவனடியார்களும், சிவகண நாதர்களும் புகுகின்ற அழகிய திருவாயிலை வணங்கிக் குவிந்த கைகளைத் தலைமேல் கொண்டு நம்பியாரூரர் உள்ளே புகுந்தார்.

மால் - திருமால். அயன் - பிரமன். சதமகன் - தேவேந்திரன். பெருந்தேவர் - வருணன் முதலான ஏனைய தேவர்கள். துன்னி - நெருங்கி. திருப்பிரம்பு - நந்தியம் பெருமான் திருக்கரத்தில் விளங்கும் படை. காலம் நேர்படுதல் - தரிசனத்துக்குரிய தருணம். அயல் - வெளியே. காதல் அன்பர் - சிவனடியார்: நம்பியாரூரர். பொன்கோலம்

- அழகியமுறை. குவித்த செங்கை தலைமேல் - இது திரியங்க வணக்க முறையைக் குறித்தது. புக்கார் - நம்பியாரூரர் உள்ளே புகுந்தார். 103

நம்பியாரூர் நடராசப்பெருமானைத் தரிசித்து மகிழ்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

- எழுசீர் ஆசிரிய விருத்தம்

250. பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகை
மின்பிறங்கு **பேரம்பலம்மேரு**
வருமுறை வலங்கொண்டு இறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொ டும்பு குந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தம் சிந்தை யில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலம்முன்
திரு அணுக் கன்திரு வாயில்.

தெளிவுரை: பெருமதில் சூழ்ந்த செம்பொன் மாளிகையும் பேரம்பல மேருவையும் முறைப்படி வலங்கொண்டு வணங்கி அதன் பின்னர் மகிழ்வுடன் மேலும் சென்று வணங்கும் பொருட்டு வேதத்தின் முதல், இடை, கடை எனவும் அன்பர் தம் சிந்தை எனவும் விளங்கும், ஒளிரும் திருச்சிற்றம்பலத்தின் முன்புள்ள திருஅணுக்கன் திருவாயிலை நம்பியாரூரர் அடைந்தார்.

சிறப்புரை: வடக்குக் கோபுரம் வழியாகத் திருக்கோயிலை அடைந்த நம்பியாரூரர் வலம் வரும் முறையில் பேரம்பலம் மேருவை அடைந்து வழிபட்டதை முதற்கண் சாற்றப்பட்டது. இங்கு ஆரூரர் கூத்தப்பெருமானை அடையும் திருவலமுறை உரைத்தலாயிற்று.

பேரம்பலம் மேரு - பேரம்பலம், தட்சிணமேரு எனவும் பெறும். திருச்சிற்றம்பலம் - சிற்சபை. திருஅணுக்கன் திருவாயில் - சிற்றம்பலத்தை நண்ணும் வாயிற்புறம். 104

251. வையகம் பொலிய மறைச்சிலம்பு ஆர்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்த அன்பு உந்தச்
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்து எழுந்தான்
திருக்க ளிற் றுப்படி மருங்கு.

தெளிவுரை: இவ்வுலகம் பொலிந்து விளங்குமாறு வேதமாகிய சிலம்பின் ஒலி இனிது ஆர்ப்ப, மாலும், அயனும் தேட, அம்பலத்தில் பெருவெளியில் பெருமான் திருநடனம் புரியும் பேரழகைக் கண்டு கைகள் தலை மேல் குவித்து அஞ்சலி செய்யவும், கண்கள் ஆனந்தப் பரவசத்தால் கண்டு மகிழவும், அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கும் திரண்டெழுந்து கலந்த அன்பு உந்தித் தள்ளத் தவச்சீலரான நம்பியாரூரர் திருக்களிற்றுப்படியின் அருகில் சென்று வணங்கி எழுந்தார்.

சிறப்புரை: இறைவனை வணங்கும்போது உள்ளமானது வேறு நினைவின்றி இருத்தல் வேண்டும் என்பது இவண் சாற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும் நலம்" எனவும், திருஞானசம்பந்தர், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஒதுவார்" எனவும் அருளியமையும் காண்க.

ஐயர் - நடராசப்பெருமான் மற்றும் பாடல் குறிப்பு 193 - இல் உள்ளவாறு காண்க. தவப்பெரியோன் - ஆரூரர். திருக்களிற்றுப்படி - பொற்சபையின் 5 படிகள், யானைத் துதிக்கையின் வடிவில் இரண்டு பக்கத்திலும் திரணைகள் கொண்டு விளங்குவது. 105

252. ஐந்துபோ**ர்அறிவும் கண்களே கொள்ள**
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசா**த் துவிகமே யாக**
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே**ர் இன்ப வெள்ளத்துள் திளைத்து**
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

தெளிவுரை: ஐந்து புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் குணங்களாலும் முறையே ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை என்பன பேரறிவு ஒன்று திரண்டு வேறு விகற்பம் இல்லாது கண்களிலே பதியவும், அளவிடற்கு அருமையுடைய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும் சித்தம் என்பதிலேயே பதியவும், சத்துவகுணம், ரஜோ குணம், தமோ குணம் எனப் பெறும் மூன்றுள் ஏனைய இரண்டும் கெட்டழிந்து சத்துவ குணமே விளங்கி நிற்கவும், பிறைச் சந்திரனைச் சடைமுடியில் சூடி ஆனந்தத் திருநடனம் என்னும் எல்லையில்லாத தனிப்பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து நம்பியாரூரர் மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

சிறப்புரை: ஆரூரர் மனம் ஒன்றிய நிலையில் இறைவன் புரியும் ஆனந்தத் திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்தார் என்பதாம். இத்தன்மையில் மனம் ஒன்றிய தவநெறியை இறைவன் வேண்டிப் பெற்றமையைத் திருப்பாட்டு 226 -இல் சாற்றியவாறு காண்க.

ஐந்து பேர் அறிவு - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புனலால் உணரும் அறிவு. கரணம் - அந்தக் கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு குணம் மூன்று - சாத்துவிகம், ரஜோ குணம், தமோ குணம். இந்து - பிறைச் சந்திரன். 106

253. "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம்" என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

தெளிவுரை: தில்லையம்பலக் கூத்தனைத் தரிசித்து மகிழ்ந்த ஆரூரர், "தூய்மையான பிறைச் சந்திரனைத் தரிசித்த சடைமுடியுடையவனே! தேவரீருடைய திருநடனக் காட்சியைத் தரிசிக்கப் பெற்ற இம்மண்ணுலகத்தில் வந்த பிறவி பெருமையுடையதாயிற்று. இன்பம் தருவதாகவும் ஆயிற்று." என்று பேரானந்தம் பெருகக் கண்ணீர் மல்கிக் கைகளைத் தலைமீது கூப்பித் தொழுது இசை விளங்கும் திருப்பதிகம் அருளிச் செய்து வணங்கினார்.

குறிப்பு: இவர் பாடிய இத்தலத்துத் திருப்பதிகம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் காண்க.

சிறப்புரை: கூத்தப்பெருமானைத் தரிசித்தல் என்பது பிறவிப்பயன் என்னும் வகையில் நாவுக்கரசர் திருவாக்காக 4 - ஆம் திருமுறையில்,

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்தமா நிலத்தே!"

என்று அருளிச் செய்தவாறும் காண்க. மற்றும் மாணிக்கவாசகர், இறைவன் தரிசனம் பெறுகின்றமையினால் புலன் அடைகின்ற பெருமையைத் திருவாசகம், திருச்சதகம், திருப்பாட்டு 26 - இல்,

"சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்தன்
கண்ணினை நின்திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கேஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள்ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப்பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச் சுடரேஇரண்டு மிலித் தனிய னேற்கே."

என அருளிச் செய்தவண்ணமும் காண்க. இதன் வழி இப்புலன்களை நன்நெறியின்கண் செல்லுமாறு அமைத்துக் கொண்டால் மன்னுயிர் நலம் பெறுதல் எளிதில் கூடும் என அறிவுறுத்தலும் ஆம்.

தெள்நிலா - பிறைச்சந்திரன். வேணி - சடைமுடி. வாலிது - பெருமையுடையது. வால் - பெருமை: ஒளி. அருவிநீர் - கண்ணீர். பண் - இசை. *107*

ஆரூரைத் திருவாரூர்க்கு வருமாறு அசரீரியாய்த் தெரிவித்தல்

254. தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு
தனிப் பெரும் தாண்டவம் புரிய
எடுத்தசே வடியார் அருளினால் "தரளம்
எறிபுனல் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணை **ஆரூரில்**
வருகநம் பால்" என வானில்
அடுத்த போதினில் வந்து எழுந் ததுஓர் நாதம்
கேட்டலும் அதுஉணர்ந் தெழுந்தார்.

தெளிவுரை: தனித்திருத்தாண்டவம் புரியத் தூக்கிய திருவடியுடையவராயும் முன்னர் நம்பியாரூரரைத்தடுத்து ஆட்கொண்டவராயும் விளங்கும் சிவபிரான் அப்போது, "முத்துக்களைத் தனது அலைகளால் கரையில் உந்தித் தள்ளும் இயல்புடைய காவிரியின் அருகில் விளங்கும் வயல்கள் சூழ்ந்த திருவாரூர்க்கு நம்பால் வருக." என்று வானில் அசரீரியாக நாதஒலி எழுப்ப. அவ்வொலியைக் கேட்ட வன்தொண்டர் தன்னை உணர்ந்தவராகி எழுந்தார்.

இவண் ஐம்புல உணர்வும். சிந்தையும் இறைவன் பால் நாட்டிய ஆரூரர், அசரீரி வாக்கைக் கேட்டுத் தன்னிலையை உணரப் பெற்றார் என்பதாம்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் உலகெலாம் உய்யும் வகையில் தனிப்பெரும் தாண்டவம் புரியத் திருவடியைத் தூக்கிய இறைவன் அருட்செயலைக் குறிக்கும் பாங்கில், "எடுத்த சேவடியா என்று உணர்த்தப் பெற்றது, இதனை அருள் வழங்கும் திருவடியாகச் சாற்றப்படுதலை உண்மை விளக்கம் செய்யுள் 35 - இல்,

> "[1]தோற்றம் துடியதனில் தோயும் [2]திதியமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே [3]சங்காரம் - ஊற்றமா
> [4]ஊன்று மலர்ப்பாதத்தில் உற்றதிரோ தம்முத்தி
> [5]நான்ற மலர்ப்பதத்தே நாடு."

1. தோற்றம் - படைத்தல் — உடுக்கையேந்திய கரம்
2. திதி - காத்தல் — அபயகரம்
3. சங்காரம் - அழித்தல் — நெருப்பு ஏந்திய கரம்
4. திரோதம் - மறைத்தல் — ஊன்றிய மலர்ப்பாதம்
5. அருளல் - தூக்கிய திருவடி — இதனைப் பெருமான் ஒரு கரத்தால் சுட்டிக் காட்டுதலையும் ஓர்க.

தடுத்து - புத்தூரில் திருமணத்தைத் தடுத்து. தொண்டனார் - ஆரூரர். தாண்டவம் - திருநடனம். எடுத்த சேவடி - தூக்கிய திருவடி. எடுத்த சேவடியார் - திருவடியை எடுத்து உலகம் உய்ய அருள் புரியும் நடராசப் பெருமான். மறி திரைப் பொன்னி அலைகளையுடைய காவிரி. தரளம் - முத்து. பண்ணை - வயல். ஓர் நாதம் - அசரீரி வாக்கு 108

இறைவனை வணங்கிய ஆரூரர் திருவாரூரை நோக்கிச் செல்லுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

255. ஆடுகின் றவர்பேர் அருளினால் நிகழ்ந்த
அப்பணி சென்னிமேல் கொண்டு
சூடுதம் கரங்கள் அஞ்சலி கொண்டு
தொழுந்தொறும் புறவிடை கொண்டு
மாடுபேர் ஒளியின் வளரும்அம் பலத்தை
வலம்கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய உயர்ந்தபொன் வரைபோல்
நிலைஎழு கோபுரம் கடந்து.

தெளிவுரை: தில்லைக் கூத்தப் பெருமான் பேரருளால், "திருவாரூர்க்கு வருக" என்னும் அசரீரி ஒலி வானிடை எழக் கேட்ட நம்பியாரூரர், தம் கரங்களைக் குவித்து வணங்கி விடை கொண்டு அம்பலத்தை வலங்கொண்டு தொழுது, பொன்மாலை போன்று விளங்கும் ஏழு நிலையுடைய கோபுரத்தைக் கடந்து சென்றார்.

இது குளகச் செய்யுள்: அடுத்த பாடலின் ஈற்றடியில் வரும், "திருநதி கடந்தார்" என வினை முடிபு பெறும்.

ஆடுகின்றவர் - நடராசப் பெருமான். அஞ்சலி கொண்டு - கைகூப்பி வணங்கி. பொன்வரை - மேருமலை: இவண் கோபுரத்தைக் குறித்தது. நிலை எழுகோபுரம் - ஏழு நிலையுடைய கோபுரம். 109

256. நின்றுகோபுரத்தை நிலமுறப் பணிந்து
நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகின்ஊடு ஏகி
மன்னிய திருப்பதி யதனில்
தென்திரு வாயில் கடந்துமுன் போந்து
சேண்படும் திருஎல்லை இறைஞ்சிக்
கொன்றைவார் சடையான் அருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார்.

தெளிவுரை: நம்பியாரூரர் கோபுரத்தை நோக்கி வணங்கியும், நிலமுற எட்டு அங்கமும் நிலத்தில் படியப் பணிந்தும் வளம்மிக்க திருவீதி வழி ஏகித் தென்புறத்தில் உள்ள வாயிலைக் கடந்து சென்று, தொலைவிலுள்ள எல்லையை அடைந்து மீண்டும் தொழுதார். கொன்றைமலர் தரித்தவராயும் சடைமுடியுடையவராயும் விளங்கும் சிவபெருமான் திருவருளையே எண்ணத்தில் கொண்டவராய் அவர் கொள்ளிட நதியைக் கடந்து செல்லலானார்.

சிறப்புரை: நம்பியாரூரர் வடக்குத் திருவாயிலின் வழியேவந்து தெற்குத் திருவாயிலின் வழியேதிரும்பினார் என்று சாற்றப் பெறுதல் காண்க. தவிரவும் நம்பியாரூரர் முதற்கண் வரும்போது எல்லையை வணங்கியமை திருப்பாட்டு 238 - இல் உணர்த்தியமை காண்க. இறைவனை வணங்கித் திரும்பும் காலத்தும் எல்லையை வணங்கியமை நோக்குக. மற்றும் இதனைத் "திருஎல்லை "எனச் சாற்றும் சிறப்பினையும் கொள்க.

மறுகு - திருவீதி. சேட்படும் - தொலைவில் உள்ள கொள்ளிடம் - ஓர் ஆறு. திருப்பதி - சிதம்பரம். 110

நம்பியாரூரர் சீகாழியை அடைதல்
கொச்சகக்கலி

257. புறந்தருவார் போற்றிசைப்பப்
பரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தாள் திருமுலைப்பால்
அமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு
பெற்றதென முற்றுலகில்
சிறந்த புகழ்க் கழுமலமாம்
திருப்பதியைச் சென்றணைந்தார்.

தெளிவுரை: அப்போது முப்பத்திரண்டு அறங்கள் புரிந்தவளாகிய உமாதேவியார் திருமுலைப்பால் கொடுக்க ஞானஅமுதமாகிய அதனை உண்டு திருவருள் நிலையில் வளர்ந்தவராகிய திருஞானசம்பந்தர் தோற்றம் பெற்றதும், பெருமை மிக்க பேறுகளை உடையதும் உலகம் முழுவதிலும் உள்ள புகழ் யாவும் தன்னகத்தே கொண்டு விளங்கிப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உடைய கழுமலம் எனப்படும் சீகாழி என்கின்ற திருத்தலத்தை முப்புரிநூல் அணிந்த மார்பினராகிய நம்பியாரூரர், சூழ்ந்து வரும் அடியவர் பெருமக்கள் போற்றித் துதிக்கச் சென்றார்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் திருஞானசம்பந்தரின் வரலாறும் சீகாழிப் பதியின் சிறப்பும் உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் தென்திசையின் புகழுக்கு எடுத்துக் காட்டாகச் சாற்றப்படும் 5 திருத்தலங்களுள் இத்திருத்தலம் குறிக்கப் பெறுதலை திருப்பாட்டு 46 - இல் (திருமலைச் சிறப்பு) நவின்றவாறும் காண்க.

புறந்தருவார் - தம்மைச் சூழ்ந்து வரும் அடியவர் பெருமக்கள். அணி மார்பர் - நம்பியாரூரர். அறம் பயந்தாள் - காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மை 32 அறங்களைப் புரிந்த பாங்கினைச் சுட்டியது. அமுதுண்டு வளர்ந்தவர் - ஞானப் பாலுண்டு வளர்ந்த திருஞானசம்பந்தர். கழுமலம் - சீகாழி. திருப்பதி - திருத்தலம். *111*

சிவபிரான் திருக்காட்சி நல்குதல்

258. பிள்ளையார் திருஅவதாரம்
செய்த **பெரும் புகலி**
உள்ளும் நான் மிதியேன் என்று
ஊர் எல்லைப் புறம் வணங்கி

வள்ளலார் வலமாக
வரும்பொழுது மங்கைஇடம்
கொள்ளுமால் விடையானும்
எதிர்காட்சி **கொடுத்தருள.**

தெளிவுரை: திரஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்த திருத்தலமாகிய சீகாழிப் பதியினுள் "கால் படுமாறு செய்யேன்"." என்று அத்தலத்தை வலமாக வந்து எல்லைப் புறத்தை வணங்கிய நம்பியாரூரருக்கு, உமாதேவியை இடப்பாகமாகக் கொண்டுள்ள சிவபிரான் எதிரே தோன்றித் திருக்காட்சி கொடுத்தருளினார்.

இது குளகச் செய்யுள்: அடுத்த பாடலின் "திருப்பதிகம் பாடினார்" என்று வினை முடிபு பெறும்.

சிறப்புரை: அருளாளர்கள் பேணிய புனிதமான இடத்தில் தன் கால்படக் கூடாது என்று கருதிய நம்பியாரூரர் செயல்பட்ட பெரும் புனிதம் இவன் சாற்றப்பட்டது. இதைப் போன்று திருநாவுக்கரசர் திருத்தொண்டு புரிந்த திருவதிகையில் கால் மிதிபடாது காக்க, இறைவன் சித்தவடமடம் வந்து நம்பியாரூரர்க்கு இன்னருள் புரிந்தமையைத் திருப்பாட்டு 229 - இல் சாற்றியவாறும் காண்க.

இந்நிலையில் காரைக்கால் அம்மையார் திருத்தலையால் நடந்து போற்றும், சிவபிரான் கோயில் கொண்டுள்ள திருவாலங்காட்டினைத்தன் கால் மிதிபடக் கூடாதென்று திருஞானசம்பந்தர் கொண்ட மாண்பினைத் திருப்பாட்டு 2911 -இல் (திருஞானசம்பந்தர் புராணம் -1008) உரைத்தவாறும் நோக்குக.

திருமாலை விடையாகக் கொண்ட வரலாறு:

சிவபிரான் முப்புரங்களை எரிப்பதற்காகத் தேர்மிசை இருந்த போது அதன் அச்சு முறியத் திருமால் பேரன்பு உடையவராய் இடபமாகத் தாங்கினார் என்பதாம். இதனை மாணிக்கவாசகர், "தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால்கான் சாழலோ!"என்று அருளியவாறும் காண்க.

பிள்ளையார் - திருஞானசம்பந்தர். புகலி - சீகாழி. உள்ளம் - நகரின் உட்புறத்தில். வள்ளலார் - நம்பியாரூரர். மங்கை - உமையம்மை. இடம் - இடப்பக்கம். மால்விடையான் - பெருமையுடைய இடப வாகனத்தையுடைய சிவபிரான், திருமாலை இடபமாகக் கொண்டவர். 112

ஆரூரர் திருப்பதிகம் அருளிச் செய்தல்

259. மண்டியபேர் அன்பினால்
வன்தொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்திரை வேலையில் மிதந்த
திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில்
வீற்றிருந்த படி என்று
பண்தரும்இன் னிசைபயின்ற
திருப்பதிகம் பாடினார்.

தெளிவுரை: சிவபிரான் திருக்காட்சி நல்கத் தரிசித்த வன்தொண்டராகிய நம்பியாரூரர் நிறைந்த பேரன்பால் களி கூர்ந்து, "கடலின் கண் மிதந்து விளங்கிய தோணிபுரத்தில் எழுந்தருளும் பிரானைத் திருக்கயிலையில் வீற்றிருந்த திருக்கோலத்தில் கண்டு கொண்டேன்." என்று இனிய இசை விளங்கும்படிப் பொருந்திய திருப்பதிகம் அருளிச் செய்தார்.

சிறப்புரை: இவண் சீகாழிப் பதியானது பிரளய காலத்தில் அழியாது தோணி போன்று கடலில் மிதந்து நிலைத்தது என்னும் திருத்தல வரலாறு இத்திருப்பாட்டின் இரண்டாம் அடியில் உணர்த்தப் பெற்றது.

காவிரி வடகரைத் தலமான சீகாழி, திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் 66 - உம் திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் 4 - உம் உடையது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய 5 - வது ஆகிய இத்திருப்பதிகம் தக்கேசிப் பண்ணில், "சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்துத் தன் அருள் தந்த எம் தலைவனை" என்று எடுத்துத் திருக்கடைக்காப்பாக இப்பதிகத்தை ஓதும் அடியவர்களுக்குத் துன்பமும் இடையூறும் அடையாது எனச் சாற்றுவதாயிற்று.

மண்டிய - நிறைந்த. வேலை - கடல். திருத்தோணிபுரம் - சீகாழி. பயின்ற - செறிந்த. *113*

சுந்தரர் திருக்கோலக்கா அடைதல்

260. இருக்கோலம் இடும் பெருமான்
எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோள் உற்றுஅது நீங்க
ஆரூர்மேல் செலவிரும்பிப்

பெருக்கோதம் சூழ்புறவப்
பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காஇறைஞ்சிச்
செந்தமிழ்மா லைகள்பாடி

தெளிவுரை: இருக்கு முதலான நான்கு வேதங்களும் முறை செய்து போற்றும் சிவபிரான் காட்சி நல்கிப் பின் மறைந்தருள, மகிழ்வுணர்விலிருந்து நீங்கியவராகி நம்பியாரூரர், கடலலைகளின் ஓதம் சூழ விளங்கும் சீகாழிப் பதியை ஆங்கு வணங்கித் திருக்கோலக்கா என்னும் தலத்தை வணங்கித் திருப்பதிகங்கள் அருளிச் செய்தார்.

இது குளகச் செய்யுள், அடுத்த பாடலின் ஈற்றடியில் "காவிரியின் கரை அணைந்தார்" என வினை முடிபு பெறும்.

இருக்கு - இருக்கு முதலான நான்கு வேதங்கள் என்க. ஓலம் இடும் - முறை செய்து போற்றும். வெருங்கோள் - வெருவுதல் என்பது. மகிழ்வு அச்சம் முதலான உணர்வுகள் விநாடியில் தோன்றி மறையும் அதிர்வு உணர்வு என்க. ஓதம் - நீரின் குளிர்ச்சி. புறவம் - சீகாழி, இதற்குரிய 12 பெயர்களாவன. 1 பூந்தலாய், 2 கழுமலம், 3 பிரமபுரம், 4 வெங்குரு, 5 கொச்சைவயம், 6 சிரபுரம், 7 புகலி, 8 வேணுபுரம், 9 புறவம், 10 தோணிபுரம், 11 சண்பை, 12 சீகாழி. திருக்கோலக்கா - காவிரி வடகரைத்தலம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது, மற்றும் அவர் பொற்றாளம் பெற்ற திருத்தலம். சுந்தரர் அருளிச் செய்த திருப்பதிகக் குறிப்பினை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் திருப்பாட்டு 3312 காண்க. 114

சுந்தரர் திருப்புன்கூர் இறைவனை வணங்கிப் பின்னர் மயிலாடுதுறை சென்று ஈசனைப் பணிந்து போற்றித் திருஅம்பர் மாகாளம் அடைதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

261. தேனார்க்கும் மலர்ச் சோலைத்
திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பேர் அன்புமிக
அடிபணிந்து தமிழ்பாடி
மான்ஆர்க்கும் கரதலத்தார்
மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கான்ஆர்க்கும் மலர்த்தடம் சூழ்
காவிரியின் கரை அணைந்தார்.

தெளிவுரை: தேன் விளங்கும் மலர்ச்சோலைகள் நிறைந்த திருப்புன்கூரில் வீற்றிருக்கும் பரமனைப் பணிந்து, அடங்காத பேரன்பு மிக

அடிபணிந்து தமிழ்மாலைகளால் பாடித் துதித்த ஆரூரர், மான் ஏந்திய திருக்கரத்தினராய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றுக்கும் சென்று வணங்கி மணம் கமழும் மலர் விளங்கும் பொய்கைகளையுடைய காவிரியின் கரையை அடைந்தார்.

தேன் ஆர்க்கும் - தேன் மணம் கமழும், வண்டுகள் ஒலிக்கும். திருப்புன்கூர் - இது காவிரி வடகரைத் தலம். மூவர் பாடல் பெற்றது. நந்தனாரின் வேண்டுகோளுக்கு இணங்க நந்தி விலகி இருக்கப் பெற்ற திருத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பதிகம் பற்றிய குறிப்பினை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் திருப்பாட்டு 3565 - இல் உள்ளவாறு காண்க. நம்பர் - சிவபிரான். ஆனா - அடக்கமுடியாத. இடம்பல - மற்றும் அண்மையில் உள்ள பிற தலங்கள் என்க. கான் - மணம் மலர்த்தடம் - தாமரை மலர் விளங்கும் பொய்கை. 115

262. வம்புலா மலர்அலைய
மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன் வார் கரைப்பொன்னிப்
பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் **மயிலாடு**
துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின்
அமர்ந்தபிரான் அடிபணிந்தார்

தெளிவுரை: நறுமண மலர்களும், நவரத்தின மணிகளும் கொழித்து வந்து அலைகளால் சேர்க்கும் அழகிய கரையுடைய காவிரி நதியில் நீராடிய நம்பியாரூரர் மயிலாடுதுறையடைந்து பரமனைப் பணிந்த பின்பு, குறைதல் இல்லாத பெருமையுடைய திருஅம்பர் மாகாளம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானைப் பணிந்தார்.

வம்புஉலா - நறுமணம் வீசுகின்ற. மணி - நவரத்தின மணிகள். இழியும் - சேர்க்கும். வார்கரை - நீண்ட கரை. பொன்னிப் பயில் தீர்த்தம் - புனித நதிகளுள் காவிரி ஒன்றாதலின் அதன் பெருமை சாற்றும் வகையில் தீர்த்தம் எனப்பட்டது. தீர்த்தம் - உடல் அழுக்கு மட்டுமல்லாது மும்மலத்தையும் தீர்க்க வல்லது எனவும் ஆம். ஆடி - நீராடி. தம்பிரான் - சிவபிரான். மயிலாடுதுறை - இது காவிர் தென்கரைத்தலம், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. உமையம்மை மயில் வடிவத்தில் சிவபிரானை வழிபட்டதலம். தாவில் - தாழ்வில்லாத, குறைவில்லாத. சீர் - பெருமை. அம்பர் மாகாளம் - இது காவிரி தென்கரைத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது, அம்பன், அம்பாசுரன், காளி பூசித்த தலம். சோமாசி மாற நாயனார் சோமயாகம் செய்த திருத்தலம். 116

சுந்தரர் திருவாரூரை அடைதல்

263. மின்னார்செஞ் சடை யண்ணல்
விரும்பு திருப் புகலூரை
முன் ஆகப் பணிந்து தேத்தி
முதல்வன்தன் அருள் நினைந்து
பொன்ஆரும் உத்தரியம்
புரிமுந்நூல் அணிமார்பர்
தென்நாவலூர் ஆளி
திருவாரூர் சென்றணைந்தார்.

தெளிவுரை: மின்னலின் ஒளி போன்ற சிவந்த சடை முடியுடைய சிவபிரான் விரும்பி உறையும் திருப்புகலூரை முன்னதாகப் பணிந்தேத்தி ஈசனின் திருவருளை நினைந்து மகிழ்ந்து பொன்வேய்ந்த மேலாடையும், முப்புரிநூலும் அணியாய் விளங்கும் திருமார்பினையுடைய அழகிய திருநாவலூரின் நாயகராகிய நம்பியாரூரர் திருவாரூரை அடைந்தார்.

மின் - மின்னல் ஒளி, சிவபிரான் சடைமுடிக்கு உவமையாயிற்று. அண்ணல் - சிவபிரான். திருப்புகலூர் - இது காவிரித் தென்கரைத்தலம், மூவர் பாடல் பெற்றது. முருக நாயனார் திரு அவதாரத்தலம், திருநாவுக்கரசர் சித்திரைச் சதய நாளில் இறைவனடி சேர்ந்த தலம், சுந்தரர்க்குச் செங்கல்லைப் பொன்னாக்கித் தந்த தலம். சுந்தரர் தேவாரம் பற்றிய குறிப்பு ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் திருப்பாட்டு 3210 - இல் சாற்றப் பெறுதல் காண்க. முதல்வன் - ஈசன். பொன் ஆரும் - அழகு. நாவலூராளி - நம்பியாரூரர். 117

திருவாரூர் இறைவன் திருவருள் ஆணைப்படி அடியவர்கள் நம்பியாரூரரை எதிர் கொண்டு அழைத்தல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

264. தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வார்க்கு
ஆராத காதலின் "நம் ஆரூரன் நாம் அழைக்க
வாராநின்றான் அவனை மகிழ்ந்தெதிர்கொள்வீர்" என்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள் செய்தார்.

தெளிவுரை: தன் சடைமுடியில் கங்கையையும், சந்திரனையும் அணிந்த சிவபிரான், தேர் செல்லும் நீண்ட வீதிகளையுடைய திருவாரூரில் வாழ்பவர்களுக்கு, "நாம் அழைத்ததனையொட்டி மிகுந்த அன்புடனே நம்பியாரூரன் வருகின்றான். அவனை மகிழ்வுடன் எதிர் கொள்வீர்." என்றார்

சிறப்புரை: திருவாரூர்ருக்கு வருமாறு நம்பியாரூரைத் தில்லையினின்று அழைத்ததையொட்டி இங்கு எம்பெருமான் ஆரூரரை இனிது வரவேற்குமாறு அடியவர்களைப் பணி கொள்கின்றார் என்க. தவிரவும் புத்தூரில் நிகழவிருந்த மணத்தைத் தவிர்த்து இங்குப் பரவையாரைத் திருமணம் செய்விக்க விருக்கும் அருட்செயலை முன்னிட்டு நல்வரவேற்பு செய்தலும் ஆம். மற்றும் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்வதற்கும் ஈசன் ஆரூரரை வருமாறு பணித்தார் என்க.

தேர் ஆரும் - திருவாரூர்த் தேர்ச் சிறப்பை எடுத்தோதுதலாயிற்று. ஆராத காதல் - பேரன்பு. நம் ஆரூரன் - இதன் வழி ஈசன் அடியவர் பால் கொண்டுள்ள நெருக்கத்தை ஆய்ந்து உணர்க. நீர் ஆரும் - கங்கை தரித்த. நிலவு - பிறைச் சந்திரன். *118*

265. தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்டர் அதுசாற்றி
எம்பிரா னார் அருள்தான் இருந்த பரிசு இதுவானால்
நம்பிரா னார்ஆவார்அவர்என்றே எனும்நலத்தால்
உம்பர்நாடு இழிந்ததென எதிர்கொள்ள உடன் எழுந்தார்.

தெளிவுரை: சிவபெருமான் அருள் செய்ததைக் கேட்ட திருவாரூர்த் திருத்தொண்டர்கள், "இறைவன் திருவருள் இத்தன்மையுடையதாயின், நம்பியாரூரர் நமது தலைவர் ஆவர்." என்னும் கருத்தின் வழி, தேவர் உலகமே இங்கு வந்ததெனும் வகையில் சிறப்புடன் வரவேற்கத் தொடங்கினார்கள்.

தம்பிரான் - சிவபிரான். எம்பிரான் - இறைவன். பரிசு - தன்மை. நம்பிரான் - நம் தலைவர். அவர் - நம்பியாரூரர். நலம் - சிறப்பின் மேன்மை. உம்பர் நாடு - தேவர் உலகம். இழிந்தது - இறங்கி வந்தது. எதிர் கொள்ள - வரவேற்க. *119*

266. மாளிகைகள் மண்டபங்கள்
மருங்குபெரும் கொடி நெருங்கத்
தாளின் நெடுந் தோரணமும்
தழைக் கமுகும் குழைத் தொடையும்
நீளிலைய கதலிகளும்
நிறைந்த பசும் பொன் தசும்பும்
ஒளி நெடு மணி விளக்கும்
உயர் வாயில் தொறும் நிரைத்தார்.

தெளிவுரை: நம்பியாரூரரை வரவேற்கும் வகையில், திருவாரூர்த் தொண்டர்கள் மாளிகைகளிலும், மண்டபங்களிலும் நெருங்கி

மேவும் பெரிய கொடிகளைக் கட்டினார்கள்: அடிப்பாகத்தில் நீண்ட தோரணங்களையும், பாக்கு, தென்னை, பனை முதலிய குருத்துக்களையும் பொருந்தக் கட்டினார்கள்: நீண்ட இலைகளையுடைய வாழை மரங்களையும், பொற்குடங்களையும் நிறுத்தினார்கள்: வாயில்கள் தோறும் உயர்ந்து விளங்கும் ஒளி விளக்குகளை வரிசையாக நிறுத்தினார்கள்.

மருங்கு - பக்கம். தாள் - அடிப்பகுதி. கமுகு - பாக்கு. குழை - குருத்து. தொடை - மாலை. கதலி - வாழை. தசும்பு - குடம். ஒளி - ஒழுங்கு: வரிசை. நிரைத்தார் - வரிசையாக வைத்தார்கள். 120

267. சோதிமணி வேதிகைகள்
தூநறுஞ்சாந்து அணிநீவிக்
கோதில் பொரி பொன்சுண்ணம்
குளிர்தரள மணிபரப்பித்
தாதுஅவிழ்பூந் தொடை மாலைத்
தண்பந்தர் களும் சமைத்து
வீதிகள் நுண் துகள் அடங்க
விரைப் பனிநீர் மிகத் தெளித்தார்.

தெளிவுரை: அழகுடன் ஒளிரும் திண்ணைகளை நறுமணம் கமழும் தூய சந்தனத்தால் மெழுகு அணி பெறச் செய்து குற்றமில்லாத பொரிகளையும், அழகு விளங்கும் நறுமணக் கலவைகளையும், குளிர்ந்த முத்து மணிகளையும் பரப்பி, மகரந்தப் பொடிகள் விளங்குகின்ற மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளைக் கொண்ட குளிர்ந்த பந்தர்களையும் அமைத்து, வீதிகளில் உள்ள மண்துகள் அடங்குமாறு நறுமணம் உடைய பனிநீரைத் தெளித்தார்கள்.

சோதிமணி - ஒளிரும் மணி. வேதிகை - திண்ணை. சாந்து - சந்தனம். நீவி - மெழுகி. கோது - குற்றம். சுண்ணம் - வாசனைக் கலவை. தரளம் - முத்து. தாது - மகரந்தப்பொடி. தொடை மாலை - தொடுக்கப்பட்ட பூமாலை. சமைத்து - அமைத்து. விரை - நறுமணம். பனிநீர் - குளிர்ந்தநீர்: பன்னீர். 121

268. மங்கல கீதம் பாட
மழை நிகர் தூரியம் முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார்
தெற்றிதொறும் நடம்பயில
நங்கள்பிரான் திருவாரூர்
நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில்
புறம்உறவந்து எதிர்கொண்டார்.

தெளிவுரை: மங்கல கீதம் பாடவும், மேகத்தின் இடி முழக்கம் போன்ற பேரிகை ஒலிக்கவும், சிவந்த கயல் மீன் போன்ற கண்களையுடைய பெண்கள் நன்கு இழைக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவர்களாய்த் திண்ணைதோறும் நடனம் பயிலவும், நம் தலைராகிய தியாசேகப் பெருமான் விளங்கும் திருவாரூர் நகரில் வாழும் பெருமக்கள் பொலிவுடைய நீண்ட மதிலின் திருவாயிலின் பக்கம் சேர வந்து, நம்பியாரூரரை எதிர் கொண்டு வரவேற்றார்கள்.

மழை - மேகம்: வாத்தியத்தின் ஒலியானது மேகத்திலிருந்து எழும் இடி முழக்கத்திற்கு உவமை கூறப்பட்டது. தூரியம் - பேரிகை. இழையார் - இழைக்கப்பட்ட ஆபரணங்களையுடைய மகளிர். தெற்றி - திண்ணை: மேடை. நங்கள்பிரான் - திருவாரூரில் வீற்றிருக்கும் தியாகேசப் பெருமானைச் சுட்டியது. பொங்கு எயில் - பொலிவுடைய மதில். உறவந்து - சேரவந்து. எதிர் கொண்டார் - வரவேற்றார்கள். 122

சுந்தரர் திருக்கோயிலையடைந்து இறைவனை வணங்குதல் - இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

269. வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன்
வன்தொண்டர் அஞ்சலி கூப்பிநின்று
சிந்தை களிப்புற வீதியூடு
செல்வார் திருத்தொண்டர் தம்மைநோக்கி
"எந்தை இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்னும்
சந்த இசைப்பதி கங்கள் பாடித்
தம்பெரு மான்திரு வாயில் சார்ந்தார்.

தெளிவுரை: நம்பியாரூரர் வர, அவரை எதிர்கொண்டு வரவேற்கும் திருவாரூர் அடியார்கள் வணங்கி நிற்கத் தாமும் கைதொழுது சிந்தை மகிழ்ந்து வீதி வழியாகச் செல்லலானார். அப்போது அவர் திருத்தொண்டர்களை நோக்கி, "எம் தந்தையாகிய தியாகேசப் பெருமான் இனிது இருக்கின்ற தலம் திருவாரூர் ஆகும். அத்தகைய பெருமைமிக்க ஈசன் என்னையும் அடியவனாக ஆட்கொள்வாரோ! நீங்கள் கேட்டுத் தெரிவிப்பீர்களாக." என்னும் விண்ணப்பம் சாற்றும் வகையாகத் திருப்பதிகம் பாடித் திருக்கோயிலின் வாயிலைச் சார்ந்தார்.

சிறப்புரை: திருவாரூர்த் தொண்டர்கள் நம்பியாரூரரை "நம்பிரான்" எனக் கருதிய நிலையில் இறைவன் மட்டுமே பெருமான் தான் அடியவன்

என்று சாற்றும் வகையால், அடியவர்களை வணங்கித் தொழுதலை நோக்கமாக உடைய தன்னைப் பிரானாகக் கருதுதற்கு இடமில்லை எனத் தெரிவிக்க "எம்மையும் ஆள்வாரோ" என்றார் என ஆம். திருவாரூர், மூவர் பாடல் பெற்ற காவிரித் தென்கரைத் தலம். சுந்தரர் இத்தலத்தைப் பற்றி பாடிய 6 - வது திருப்பதிகம் ஆகும். காந்தாரப் பண்ணில் "கரையும் கடலும் மலையும்" என்றெடுத்துத் திருப்பதிகம் அருளிச் செய்த சுந்தரர், திருக்கடைக்காப்பில் இத்திருப்பதிகத்தை இசையோடும் பாட வல்லவர் புகழ் எய்துவர்" எனச் சாற்றினார்.

எந்தை - சிவபிரான். எம்மை - சுந்தரரைத் குறித்தது. 123

270. வானுற நீள்திரு வாயில்நோக்கி
மண்ணுற **ஐந்துறுப் பால்வணங்கித்**
தேனுறை கற்பக வாசமாலைத்
தேவா சிரியன் தொழுதிறைஞ்சி
ஊனும் உயிரும் உருக்குமன்பால்
உச்சி குவித்தசெங் கைகளோடும்
தூநறுங் **கொன்றையன் மூலட்டானம்**
சூழ்திரு மாளிகை வாயில்புக்கார்.

தெளிவுரை: மிக உயர்ந்து விளங்கும் திருவாயிலை நோக்கித்தம் ஐந்து உறுப்புகளும் மண்ணில் பதியுமாறு வணங்கி, வண்டு உறையும் கற்பக மலரின் மணம் கொண்ட தேவாசிய மண்டபத்தைத் தொழுது போற்றி, ஊனும், உயிரும் அன்பால் நெகிழ்ந்து செம்மை திகழும் கைகளைக் கூப்பித் தலையின் உச்சி மீது வைத்தவாறு, நம்பியாரூரர் தூய நறுமணம் கொண்ட கொன்றை மலர் தரித்த சிவபிரான் வீற்றிருந்தருளும் திருமூலட்டானத்தின் வாயிலை அடைந்தார்.

வானுற நீள் - மிக உயர்ந்த. ஐந்து உறுப்பால் வணங்கி - பஞ்சாங்க வணக்கம் எனப்படும் கைகள் இரண்டு, முழந்தாள் இரண்டு சிரம் ஆக ஐந்தும் நிலத்தில் பொருந்த வணங்குதல். செங்கை - அடியவர்களையும் ஈசனையும் வணங்கும் மகிமையுடைய கை. மூலட்டானம் - புற்றிடங் கொண்ட பரமன் சிவலிங்கத் திருமேனியுடன் விளங்கும் கருவறை. திருமாளிகை - திருக்கோயில். 124

271. புற்றிடம் கொண்ட புராதனனைப்
பூங்கோயில் மேயபிரானையார்க்கும்
பற்றிடம் ஆய பரம்பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்கயத்தாள்

அர்ச்சனை செய்ய அருள்புரிந்த
அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால்
நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார்.

தெளிவுரை: புற்றிடம் கொண்டு விளங்கும் ஆசேசனையும், கதலாலயத்தில் வீற்றிருக்கும் எல்லோராலும் அன்பாகப் பற்றுதற்கு உரிய பரம்பொருளாகத் திகழ்பவரும், பார்வதி தேவியை இடப்பாகமாகக் கொண்டு விளங்குபவரும், திருமகள் போற்றி வழி பட அருள் புரிந்தவரும் ஆகிய பரமனை நிலத்தில் படிய வணங்கி நம்பியாரூரர் இத்தேகத்தால் பெறுகின்ற நன்மையைப் பெற்று மெய்த்தன்மையுடையவரானார்.
அர்ச்சனை எனவும் பாடம். எதுகை நோக்கித் திரிந்தது.

சிறப்புரை: இத்தலத்தில் திருமகள் பூசனை செய்த சிறப்புத் தோன்ற, "பங்கயத்தாள் அர்ச்சனை செய்ய அருள் புரிந்த அண்ணல்" எனப்பட்டது. இதனை ஈசனின் தாமரை போன்ற திருவடி மலரை நம்பியாரூரர் போற்றி வணங்க அருள் புரியும் அண்ணல் எனவும் அமையும்.

இத்தேகம் கொண்டதன் சிறப்பு இறைவனை வணங்குதற் பொருட்டேயாம் என்னும் கருத்து ஈற்றடியின் வாயிலாக உணர்த்தப்பட்டது. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 4 - ஆம் திருமுறை திருஅங்க மாலையில்,

"ஆக்கையாற் பயன்என் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையாற் பயன் என்"

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

புராதனன் - பழமையானவன், "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே" எனும் மணிவாசகப் பெருமான் அருளியவாறும் கொள்க. பூங்கோயில் - கமலாலயம், திருக்கோயிலுக்கு வழங்கும் திருப்பெயர். பார்ப்பதி - பார்வதிதேவி. பங்கயத்தாள் - தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், தாமரை போன்றதான இறைவன் திருத்தாள், நாவலர் கோன் - நம்பியாரூரர். 125

தம்மை வணங்கிய சுந்தரர்க்கு ஈசன் தோழமையாதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

272. அன்புபெருக உருகிஉள்ளம் அலைய
அட்டாங்க பஞ்சாங்கம் ஆக
முன்பு முறைமையினால் வணங்கி
முடிவிலாக் காதல் முதிர ஓங்கி
நன்புலன் ஆகிய ஐந்தும் ஒன்றி
நாயகன் சேவடி எய்தப்பெற்ற
இன்ப வெள்ளத்திடை மூழ்கிநின்றே
இன்னிசை வண்தமிழ் மாலைபாட.

தெளிவுரை: அன்பு மீதூர நெஞ்சம் மகிழ்ச்சியால் அலை மோத, கைகள் - 2, செவிகள் - 2, முழந்தாள், மார்பு, தலை ஆகிய 8 உறுப்புக்கள் பூமியில் பதியுமாறு வணங்கி எல்லையற்ற அன்பில் திளைத்தவராய், ஐம்புலன்களும் ஆன்மாவிடம் ஒன்றி நின்று, சிவபிரான் திருவடியை எய்தப் பெற்ற நம்பியாரூரர் இன்பவெள்ளத்தில் மூழ்கியவராகி இனிய தமிழ்ப்பதிகங்கள் அருளிச் செய்தார்.

இக் குளகச் செய்யுள், அடுத்த பாடலின் "எழுந்தது" என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: புலன்கள் ஒன்றி இறைவனைப் பற்றுங்கால் பேரருள் துலங்குதலையும், அதனால் தேகமும் உருகிப் பிறவிப் பேற்றைக் கொள்ளுதலுமாகிய சிறப்பு இவண் சாற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்கவாசகர்,

"அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி!"
- திருவாசகம், போற்றித் திருஅகவல், வரி 210.

என அருளிச் செய்தவாறும் காண்க.

உள்ளம் அலைய - அன்பால் மனம் பூரிக்க. அட்டாங்கம் - எட்டு உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல். பஞ்சாங்கம் - ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல். காதல் முதிர - அன்பு முற்ற. நாயகன் - சிவபிரான். தமிழ் மாலை - திருப்பதிகம். 126

273. வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவன் ஆரருளால் ஓர்வாக்குத்
"தோழமை யானஉனக்கு நம்மைத்
தந்தனம் நாம்முன்பு தொண்டுகொண்ட

வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்" என்று
ஆரூரர் கேட்க எழுந்தது அன்றே.

தெளிவுரை: எல்லாக் காலத்திலும் வாழ்கின்ற பெருமை மிகு வேதமாகிய புற்றுள் வீற்றிருக்கும் நாதன் அருளால் ஆங்கு அசரீரி வாக்காக, "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம். நாம் முன்பு தொண்டு கொண்ட புத்தூர்த் திருமண நிகழ்ச்சியில் நீ கொண்ட திருமணக் கோலம் பூண்டு நின் விருப்பம் நிறையுமாறு இந்த மண்ணுலகில் விளையாடல் புரிவாய். நீ வாழ்க." என்று நம்பியாரூரர் கேட்குமாறு எழுந்தது.

சிறப்புரை: இவண் கயிலையில் மாதர் மேல் மனம் போக்குவித்துச் சுந்தரரை மண்ணுலகத்தில் அவதாரம் செய்யுமாறு அருளிய வகையில் கமலினி, அனிந்திதை ஆகியோர் முறையே பரவையார், சங்கிலியார் எனத் தோன்ற, அவர்களைத் திருமணம் கொண்டு வாழ்தலைக் குறிப்பால் சுட்டும் வகையில் விளையாடுவாய் எனப்பட்டது. சுந்தரர் அடியவர்பால் பேரன்புடைமையால் அவர்கள் பொருட்டுத் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்து போற்றுதலைச் சுட்டும் வகையில், "வேட்கை தீர" என்று சாற்றுதலாம் எனவும் கொள்க.

வாழிய - எக்காலமும் விளங்குகின்ற. மன்னவன் - ஈசன். வேள்வி - புத்தூர்த் திருமணம். வேட்கை - விருப்பம். மண் - பூவுலகம். விளையாடுதல் - பற்றின்றி இருந்து வினை புரிதல் தன்மையை உணர்த்துதலும் ஆம். 127

சுந்தரர் தம்பிரான் தோழராதல்
- இது முதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர்

274. கேட்க விரும்பி வன் தொண்டர்என்றும்
கேடிலா தானை இறைஞ்சிநின்றே
"ஆட்கொள வந்த மறையவனே
ஆரூர் அமர்ந்த அருமணியே
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா
மற்றுன் பெரிய கருணைஅன்றே
நாட்கம லப்பதம் தந்ததின்று
நாயி னே னைப்பொருள் ஆக" என்றார்.

தெளிவுரை: ஈசன் அசரீரியாக மொழிந்தவற்றைக் கேட்ட நம்பியாரூரர், கேடு அற்றவராக விளங்கும் சிவபிரான் திருப்பாதத்தைப் போற்றி,

"திருவாரூரில் வீற்றிருக்கும் அருமணியே! அங்கயற்கண்ணியாய் விளங்கும் உமையம்மையைப் பாகமாகக் கொண்ட பெருமானே! தேவீருடைய திருப்பாத மலர்களைத் தந்தருளியது பெருங்கருணையே அல்லவா! நாயினேனைப் பொருட்டாகக் கொண்டு திருவருள் நல்கிய தகைமைதான் என்னே!" என்று ஏத்தி நின்றார்.

சிறப்புரை: சிவபிரான் எத்தன்மையிலும் அழிபாடற்றவர் என்னும் சிறப்பினைச் சாற்றும் வகையில், "கேடிலாதான்" எனச் சுட்டப்பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர் திருவாசகம், திருச்சதகம் பாடல் 28 இல்.

"கேட்டாரும் அறியாதான் **கேடொன்றில்லான்**
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டா தனஎல்லாம் காட்டிப் பின்னும்
கேளா தனஎல்லாம் கேட்பித்து என்னை
மீட்டே யும்பிறவாமல்காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே."

என்று அருளியவாறும் காண்க.

கேடிலாதான் - அழிதல் இல்லாத கடவுள். மறையவன் - வேதியராக வந்து தடுத்தாண்டவர். வாள் - ஒளி. கமலம் - தாமரை. நாயினேன் - எளிமை, அடிமை, நன்றியுடைமையைக் குறிப்பால் உணர்த்துதலாம் என்க.

128

275. என்று பலமுறை யால் வணங்கி
எய்திய உள்ளக் களிப்பி னோடும்
வென்றி அடல்விடை போல்நடந்து
வீதி விடங்கப் பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்து வாழ்ந்து
திருமா ளிகைவலம் செய்துபோந்தார்
அன்று முதல் அடியார்கள் எல்லாம்
தம்பிரான் தோழர்என்றே அறைந்தார்.

தெளிவுரை: இவ்வாறு பலமுறையான வணக்கமாகிய ஏகாங்கம், திரியாங்கம், பஞ்சாங்கம், ஷடாங்கம், அட்டாங்கம் என்று உரைக்கப்பட்ட வகையில் வணங்கிப் பெரு மகிழ்வெய்திப் பெருமிதத்தால் திளைத்து

வெற்றிமிக்க பீடு நடைபோல் நடந்து வீதிவிடங்கப் பெருமான் திருமுன்பு சென்று தொழுது துதித்து வலம் வந்து நம்பியாரூரர் வெளிப் போந்தார். அன்று முதல் அடியவர் பெருமக்கள் யாவரும் அவரைத் தம்பிரான் தோழர் என்று அழைக்கலானார்கள்.

சிறப்புரை: இது காறும் வாழ்ந்த வாழ்க்கை மானுடப் பிறப்பால் காணும் மருள் வாழ்வு என்பதும், இனிமேல் காணப்பெறும் வாழ்வானது மெய்ம்மை யுணர்ந்த அருள் வாழ்வு என்பதும் இவண் "வாழ்ந்து" என்னும் சொல் சுட்டப் பெறுதலாம்.

அடல்விடை - போர் ஏறு, பெருமித நடை. இதனைத் திருநாவுக்கரசர், திருஅங்க மாலையில் (4 - ஆம் திருமுறை) இறுமாந்திருப்பன் கொலோ" என அருளிச் செய்தவாறும் நோக்குக. திருமாளிகை - திருக்கோயில். அறைந்தார் - உரைத்தார்கள். 129

276. மைவளர் கண்டர் அருளினாலே
வண்தமிழ் நாவலர் தம்பெருமான்
சைவ விடங்கின்அணி புனைந்து
சந்தமும் மாலையும் தாருமாகி
மெய்வளர் கோலம்எல்லாம் பொலிய
மிக்க **விழுத்தவ வேந்தர்** என்ன
தெய்வ மணிப்புற்று ளாரைப்பாடித்
திளைத்து மகிழ்வொடும் செல்லாநின்றார்.

தெளிவுரை: நீல கண்டத்தையுடைய சிவபிரான் திருவருளால் தமிழ் நாவலராகிய வன்தொண்டர் சைவப் பொலிவு விளங்கும் விபூதி, உருத்திராட்சம் புனைந்தும், சந்தனம், மணிமாலை, மலர் மாலை எனக் கொண்டும், திருமேனியில் அழகுமிக்க அலங்காரம் கொண்டவராய்ச் சிறப்பின் மிக்க தவவேந்தரெனத் திகழத் திருமூலட்டான நாதரைப் பதிகமாலைகளால் போற்றிப்பாடி மகிழ்ச்சியில் திளைத்தார்.

மைவளர் கண்டர் - திருநீலகண்டர். சைவ விடங்கு - சைவப் பொலிவு. விடங்கு - அழகு, பொலிவு. அணி - விபூதி, உருத்திராட்சம். சந்தம் - சந்தனம். தார் - பூமாலை. தெய்வ மணிப்புற்றுளார் - புற்றிடங் கொண்ட மூலட்ட நாதர். திளைத்து - அருளின்பத்தில் ஆழ்ந்து. 130

கமலினியார் கயிலையிலிருந்து பரவையார் என்னும் பெயர் கொண்டு விளங்குதலை உரைத்தல்

- இது முதல் ஆறு பாடல்கள் ஒரு தொடர்

வேறு

277. இதற்குமுன் எல்லை யில்லாத்
திருநகர் இதனுள் வந்து
முதல்பெருங் **கயிலை ஆதி**
முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக் கடிந்து உரிமை செய்யும்
பூங்குழல் சேடி மாரில்
கதிர்த்த பூண் ஏந்து கொங்கைக்
கமலினி அவத ரித்தாள்.

தெளிவுரை: நம்பியாரூரர் திருவாரூரை அடைந்து தம்பிரான் தோழர் என்னும் சிறப்பினை எய்துவதன் முன்னர், கால அளவு கூறப்பட முடியாத மிகப் பழைமையுடைய திருநகராக விளங்கும் திருவாரூர் என்னும் இத்தலத்தில் முதன்மைத் தன்மையுடைய முதல்வனாக விளங்குகின்ற சிவபிரான் இடப்பாகமாக விளங்கும் உமாதேவியாரின் சேடியர்களாகக் கயிலை மலையின் கண் இருந்த பூப்போன்ற மென்மையான கூந்தலையுடைய கமலினி, அனிந்திதை ஆகியோரில், சிறந்த ஆபரணங்களைத் தரித்தவரும், திரண்ட மார்பகத்தையுடையவருமான கமலினி என்பவர் திருஅவதாரம் செய்தார்.

எல்லை இல்லா - காலத் தொன்மையுடைய. திருநகர் - திருவாரூர். ஆதி முதல்வர் - சிவபிரான். பூங்குழல் - பூப்போன்ற மென்மையான கூந்தல். சேடிமார் - பணிப்பெண்கள், அநிந்திதை கமலினி என்க. கதிர்த்த பூண் - ஒளி திகழ மேவும் சிறப்புமிக்க ஆபரணம். *131*

278. கதிர்மணி பிறந்த தென்ன
உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப்
பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே
மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்னாள்
மங்கல அணியால் சாற்றி.

தெளிவுரை: ஒளி திகழும் மாணிக்க மணி தோன்றிய தென்னுமாறு உருத்திர கணிகையர் மரபில், பதியிலார் குலத்தில் அவர்

பரவையார் என்னும் பெயர் கொண்டு விளங்கினார். அவைக்கு மேன்மையுடையவர்களான சான்றோர்கள், அமைந்து விளங்கும் பிறைச்சந்திரனை யணிந்த புனிதராகிய ஈசனின் நன்னாள் எனப்படும் திருவாதிரையில் மங்கல அணியைச் சாற்றினார்கள்.

இது குளகச் செய்யுள், அடுத்த பாடலின் ஈற்றடியில் சேர்ந்தார் என வினை முடிபு பெறும்.

குறிப்பு: உருத்திர கணிகையர், பதியிலார் என்னும் மரபினர் முற்காலத்தில் சிறப்புற ஈசன் பணியாற்றுபவர்களாய் எழில் மிகு பெருமை கொண்டு விளங்கினர். இப்போது அம்மரபு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கதிர்மணி - ஒளிரும் மாணிக்கம். உருத்திர கணிகைமார் - சிவபிரானையே பதியாகக் கொண்டவர். பதியிலார் - ஈசனைத் தவிர வேறு இல்லாதவர். மதியணி - பிறைச் சந்திரன் சூடிய. புனிதன் - சிவபிரான். நன்னாள் - திருவாதிரை நட்சத்திரம். சாற்றி - அழகு படுத்தி. 132

279. பரவினர் காப்புப் போற்றிப்
பயில்பெருஞ் சுற்றம் திங்கள்
விரவிய பருவம் தோறும்
விழாஅணி எடுப்ப மிக்கோர்
வரமலர் மங்கை இங்கு
வந்தனள் என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத்
தளர்நடைப் பருவம் சேர்ந்தார்.

தெளிவுரை: பெருஞ் சுற்றத்தார் ஒன்று சேர்ந்து அக்குழந்தையைக் காக்கும் வகையில் மாதந்தோறும் செய்யப்படும் சடங்குகளைச் செய்து விழாக் கொண்டாடினார்கள். செந்தாமரை மலரில் விளங்கும் திருமகள் போன்று இங்கு வந்து தோன்றினள் என்று அனைவரும் மகிழ்ச்சி கொள்ளப் பரவையார் தளர் நடை கொண்டு நடக்கும் பருவத்தை அடைந்தார்.

காப்பு - காத்தல் செய்யும் சடங்கு. சுற்றம் - சுற்றத்தார். திங்கள் - மாதம். வர மலர் மங்கை - தாமரை மலரில் விளங்கும் திருமகள். 133

280. மானியம் பிணையோ தெய்வ
வளர்இள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத்
திரைஇளம் பவள வல்லித்

கானிளம் கொடியோ திங்கள்
கதிர்இளங் கொழுந்தோ காமன்
தான்இளம் பருவம் கற்கும்
தனிஇளந் தனுவோ என்ன,

தெளிவுரை: பரவையாரின் இளமைப்பருவ எழில் இவண் சாற்றப்படுதலாயிற்று.

"மானின் இளங்கன்றோ! தெய்வ உலகத்தில் விளங்கும் இளம் பதமோ! கடலலையில் தோன்றி மலரும் இளமையான பவளக்கொடியிலிருந்து தளிர்க்கும் இளங்கொடியோ! நிலவின் கதிரில் முதற்கண் தோன்றும் இளம் பிறையோ! மன்மதன் இளம் பருவத்தில் கற்கும் இளம் வில்லான இளங்கரும்போ!" என்னுமாறு பரவையார் விளங்கினார்.

இது குளகச் செய்யுள், அடுத்த பாடலின் "நாடும்" என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: இப்பாட்டில் மானிளம் பிணை கண்ணுக்கும், தெய்வ இளமுகை நாசிக்கும், தேனின் இளம் பதம் வாய்க்கும், இளம் பவளமும் கொடியும் வண்ணம் மற்றும் மென்மைக்கும், திங்கள் கதிரின் இளங்கொழுந்து புருவத்திற்கும், காமன் தனி இளம்தனுவெனும் கரும்பு மழலைச் சொல்லுக்கும் உவமை என்க.

முகை - அரும்பு, திங்கள் கதிர் - நிலவொளி. இளங் கொழுந்து - பிறைச் சந்திரன். காமன் - மன்மதன். தனு - கரும்பு வில். 134

281. நாடும்இன் பொற்பு வாய்ப்பு
நாளும்நாள் வளர்ந்து பொங்க
ஆடும்மென் கழங்கும் பந்தும்
அம்மனை ஊசல் இன்ன
பாடும்இன் இசையும் தங்கள்
பனிமலை வல்லி பாதம்
கூடும்அன்பு உருகப் பாடும்
கொள்கை ஓர் குறிப்புத் தோன்ற.

தெளிவுரை: இனிய அழகு நாள்தோறும் வளர்ந்து பொலிய, ஆடுகின்ற கழங்கு, பந்து, அம்மானை, ஊசல் ஆகிய விளையாடல்களோடு பாடுகின்ற இன்னிசையிலும் மிக்கவராய் உமாதேவியின் திருப்பாதத்தில்

கூடும் அன்பு பெருகப் பாடி உருகி ஏத்தும் கொள்கையும் கொண்டவராய்ப் பரவையார் விளங்கினார்.

இச் செய்யுளின் ஈற்றடியானது அடுத்த பாடலின் "நீங்கி" என வினைமுடிபு பெறும்.

பொற்பு - அழகு. பொங்க - பொலிய. கழங்கு, பந்து அம்மனை, ஊசல் - விளையாட்டு வகை. பனிமலை வல்லி - பார்வதி தேவி, உமையம்மை. 135

282. பிள்ளைமைப் பருவம் மீதாம்
பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளுதற்கு அமைந்த பொற்பால்
அநங்கன் மெய்த் தனங்கள் ஈட்டம்
கொள்ளமிக்கு உயர்வ போன்ற
கொங்கை கோங்கு அரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை
உண்மையும் தோன்ற உய்ப்பார்.

தெளிவுரை: குழந்தைப் பருவத்தையடுத்த பேதைப் பருவத்தைக் கடந்து அள்ளி எடுத்துக் கொள்ளும் விருப்பத்தையுண்டாக்கும் மன்மதனின் மெய்யான செல்வங்களைப் போலும் உயர்ந்து மேவும் மார்பகம், கோங்கு மலரின் அரும்பினைத் தோற்கச் செய்யும்படி விளங்கித் திருக்கயிலையில் உமாதேவியின் தோழியாக இருந்த முன்னை உணர்வும் தோன்றுமாறு பரவையார் விளங்கினார்.

பேதை - 5 முதல் 7 வயது வரை உள்ள பருவம். பொற்பு - அழகு. உயர்வ - மேலோங்குதல். வீழ்ப்ப - தோற்குமாறு. முன்னை உண்மை - முன்னர்க் கயிலையில் உமையம்மையின் தோழியாய் இருந்த உணர்வு. 136

பரவையார் திருக்கோயில் சென்று இறைவன் நாள்தோறும் வணங்கி வருகையில் ஒரு நாள் நம்பியாரூரர் அவரைக் காணுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

283. பாங்கியர் மருங்கு சூழப்
படர்ஒளி மறுகு சூழத்
தேன்கமழ் குழலின் வாசம்
திசையெலாம் சென்று சூழ

ஓங்குபூங் கோயில் உள்ளார்
ஒருவரை அன்பி னோடும்
பூங்கழல் வணங்க என்றும்
போதுவார் ஒருநாள் போந்தார்.

தெளிவுரை: தோழியர்கள் தன் பக்கத்தில் சூழ்ந்து வர, ஒளி திகழும் வீதியில் தேன்மணம் கமழும் கூந்தலின் வாசனை எல்லாத் திசைகளிலும் சென்ற பரவப் பெருமையுடன் ஓங்கும் பூங்கோயில் எழுந்தருளியுள்ள ஓப்பற்ற சிவபிரான் திருவடி மலரை நாள்தோறும் வணங்கி வரும் பரவையார் ஒருநாள் இவ்வாறு சென்றார்.

பாங்கியர் - தோழியர். மருங்கு - பக்கம். குழல் - கூந்தல். பூங்கோயில் - கமலாலயம், திருவாரூர்த் திருக்கோயில். ஒருவர் - சிவபிரான், மற்றும் பாடல் 174 - இல் உரைத்த குறிப்பினையும் நோக்குக. 137

284. அணிசிலம்பு அடிகள் பார்வென்று
அடிப்படுத் தனம்என்று ஆர்ப்ப
மணிகிளர் காஞ்சி அல்குல்
வரியரவு உலகை வென்ற
துணிவுகொண்டு ஆர்ப்ப மஞ்சு
சுரிகுழற்கு அழிய விண்ணும்
பணியும் என்று இனவண்டு ஆர்ப்பப்
பரவையார் போதும் போதில்.

தெளிவுரை: பரவையாரின் சிலம்பணிந்த பாதங்கள் உலகத்தை வெற்றி கொண்டு கீழ்ப்படுத்தினோம் என்று ஆரவாரம் செய்ய, முத்து மணிகள் விளங்கும் காஞ்சி என்னும் மேகலை தவழும் பாம்பின் படம் போன்ற அல்குல் உலகை வெற்றி கொண்ட துணிவுடையதாய் ஆரவாரிக்க, மேகமானது சுருண்டு விளங்கும் கருமையான கூந்தலுக்கு நாணம் கொண்டு தோற்றது என இன வண்டுகள் ஆரவாரம் செய்தன. இவ்வாறு பரவையார் திருக்கோயிலுக்குச் செல்லலுற்றார்.

இக்குளகச் செய்யுள் அடுத்த பாடலின் "கண்டார்" என வினை முடிபு பெறும்.

சிலம்பு - காலணி கலன். பார் - உலகம். மணி - முத்து முதலான மணிகள். காஞ்சி - மேகலை, துகில் வகை. வரி அரவு - வரிகளையுடைய பாம்பு; இதன் படம் அல்குலுக்கு உவமை என்க. மஞ்சு - மேகம். சுரிகுழல் - கூந்தல். அழிய - நாண 138

285. புற்றிடம் விரும்பி னாரைப்
போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள்
சூழஆ ளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட
நகைபொதிந்து இலகு செவ்வாய்
விற்புரை நுதலின் வேல்கண்
விளங்குஇழை யவரைக் கண்டார்.

தெளிவுரை: புற்றை இருப்பிடமாக விரும்பிய சிவபிரானைப் போற்றியவராயும் தொழுதவராயும் செல்லும் பரிசனங்கள் சூழ மேவும் நம்பியாரூரர், பெருமையுடைய நல்வினை கூட்டிய நிலையில் பற்களின் அழகும், சிவந்த வாயழகும், வில் போன்ற வளைந்த நெற்றியழகும், வேல் போன்ற கண்ணழகும், ஒளி திகழும் ஆபரணங்களையுடைய பேரழகும் கொண்ட பரவையாரைக் கண்டார்.

புற்றிடம் விரும்பினார் - சிவபிரான். தொழுது செல்வார் - நம்பியாரூரர். பரிசனம் - அடியவர் பெருமக்கள். ஆளுடைய நம்பி - சிவபிரானுக்கு அடிமையாளாக உடைய நம்பியாரூரர். நற்பெரும் பான்மை - நல்வினைப் பயன். கூட்ட - பொருந்த. விற்புரை - வில்லையொத்த. நுதல் - நெற்றி. இழையவர் - அணிகலன் தரித்த பரவையார். 139

சுந்தரர் பரவையாரைக் காணுதல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

கொச்சகக் கலி

286. கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ
அறியேன்என்று அதிசயித்தார்.

தெளிவுரை: நம்பியாரூரர் பரவையாரைக் கண்ட அளவில் மனமானது அதிசயம் கொண்டு நின்று, "இ.ஃ.து என்ன அற்புதமோ எனவும், சிவபிரான் தம்மைத் திருவாரூர்க்கு வருமாறு பணிந்த அருட்செயலின் விளைவோ." என்று எண்ணி மேலும், "விரும்பியதைத் தரும் கற்பக

மரத்தின் பூங்கொம்போ! மன்மதனின் பெருவாழ்வாக விளங்கும் ரதிதேவியோ! வாழ்வைப் பொலிவுடைய ஒன்றாகச் செய்யும் புண்ணியத்தை உண்டாக்க வல்ல புண்ணியமோ! மேகம் போன்ற கருமையுடைய கூந்தலும், வில் போன்ற புருவமும், குவளை மலர் போன்ற கண்ணும், பவளம் போன்ற வாயும் முழுநிலவு போன்ற முகமும், அதனை நறுமணம் கமழும் தாமரை மலர் போன்று விளங்கச் செய்யும் கொடி போன்ற இடையும் கொண்ட இப்பெண் யாவளோ!" என்று அதிசயித்தார்.

நம்பியாரூரர் மனம் பரவையார் பால் விழைவுற்றுச் சென்றது. இச்செயல் திருக்கயிலையில் சிவபிரான் பணித்தவாறு கூட்டப் பெற்றது என்று புலப்படுத்தும் வகையில் பாடல் 285 - இல் "நற் பெரும் பான்மை" என்று உணர்த்தியவாறும் நோக்குக.

கற்பகத்தின் பூங்கொம்பு - விரும்பியவாறு தந்து மகிழ்வளிக்கும் தேவலோகத்தின் கற்பக மரத்தை உவமையாய்க் கூறியவாறு ஆயிற்று. காமன் தன் பெருவாழ்வு - ரதிதேவி; மன்மதனின் மனைவி. புயல் - மேகம். குவளை - கருங்குவளை; நீலோற்பல மலர். மதி - முழுநிலவு, முகத்துக்கு உவமையாய்த் தாமரையையும் குறித்தது. விரை - நறுமணம். 140

287. ஓவியம்நான் முகன் எழுத
ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற
விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனாகி
முன்னின்றது என நினைந்து
நாவலர்கா வலர்நின்றார்
நடுநின்றார் படைமதனார்

தெளிவுரை: மேலும் நான்முகன் படைத்தல் தொழிலையன்றி ஓவியம் தீட்டுதலை அறியானே என நினைத்த வன்தொண்டர், "மூன்று உலகங்களின் பேறுகள் யாவும் ஒன்று திரண்டு முன்னின்று விளங்கும் ஒப்பற்ற மணி விளக்கு போன்று அந்த நான்முகன் படைத்தனனோ!" என்று நினைத்தார். அப்போது ஐந்து மலர்க்கணைகளையுடைய மன்மதன் ஆரூரர் மனத்திடையில் நின்று காதல் விருப்பத்தைப் பெருக்கும் செயலில் மேவினான்.

நாவலர் காவலர் - நம்பியாரூரர். நடு - மனத்திடையே. படை மதனார் - கரும்பு வில்லும் ஐந்து அம்புகளாகத் தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை ஆகியவற்றையும் உடைய மன்மதன். 141

288. தண்தரள மணித்தோடும்
தகைத் தோடும் கடை பிறழும்
கெண்டை நெடுங் கண்வியப்பக்
கிளர் ஒளிப்பூண் உரவோனை
அண்டர் பிரான் திருவருளால்
அயலறியா மனம் விரும்பப்
பண்டை விதி கடைக் கூட்டப்
பரவையா ரும் கண்டார்.

தெளிவுரை: முத்து மணிகளால் ஆன தோடு என்னும் அணி காதில் விளங்க, அதனை முனைந்து காண்பதற்கு ஓடும் கடைவிழி மேவும் கெண்டை மீனையொத்த கண் வியப்பு அடையவும், பரவையார் முன்னர்க் கயிலையில் விதிக்கப்பட்டவாறு நற்பேறு கூட்டி வைக்கத் தேவர் பிரானான சிவபிரான் திருவாருளால் ஒளிரும் மணிமாலை அணிந்த நற்பிரானாகிய நம்பியாரூரரை நோக்கினார்.

சிறப்புரை: நங்கையாம் பரவையாரின் கண், காது வரை சென்று நாடுதலை இவண் முதலடியின் வாயிலாகச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருமுனைப்பாடி என்னும் நாட்டில், "மங்கையர் வதன சீதமதி இரு மங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும்" என்று திருப்பாட்டு எண் 147 - இல் நவின்றவாறும் காண்க.

தன் உள்ளத்தில் நிகழ்ந்த காதல் உணர்வைப் பிறர் அறியாதபடிக் காத்தலை, "அயலறியா மனம்" எனப்பட்டது. இதனை இறைவனைத் தவிர பிறர் அயலார் எனக் கொள்க. இத்தன்மையில் திருப்பாட்டு 367 - இல்

(திருநீலகண்ட நாயனார் புராணம் - 8) "அயலறியாமை வாழ்ந்தார்" எனச் சுட்டப் பெறுதலை நோக்குக.

தரள மணித்தோடு - முத்து மணிகளால் ஆன காதணி. கடை - கடைக்கண். கொண்ட - மீன் வகை. உரவோன் - அறிஞன், நம்பியாரூரரைக் குறித்தது. அண்டர் பிரான் - சிவபிரான். அயலறியா - பிறர் அறியாதபடி. பண்டை விதி - திருக்கயிலையில் ஈசன் பணித்த ஆணை; பாடல் 37 - இல் திருமலைச் சிறப்பு காண்க. கடை கூட்ட - முன்னின்று சேர்க்க.

பரவையார் ஆரூரைக் கண்டு காதல் மலர இறைவன் திருக்கோயில் புகுதல்

- இது முதல் 4 - பாடல்கள் ஒரு தொடர்

289. கண்கொள்ளாக் கவின்பொழிந்த
திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான்
எதிர்நோக்கும் மெல்லியலுக்கு
எண்கொள்ளாக் காதலின்முன்பு
எய்தாதது ஒருவேட்கை
மண்கொள்ளா நாண்மடம்அச்சம்
பயிர்ப்பை வலிந்தெழலும்.

தெளிவுரை: கண் கொள்ளாத பேரழகுடைய திருமேனியின் ஒளியானது விரிந்து பெருகச் சூரியன் போன்று விளங்கும் நம்பியாரூரரை எதிர் நோக்கும் பரவையார்க்கு எண்ணிப் பார்க்க இயலாத பெருங்காதலுணர்வு எழுந்தது. ஆயினும் தாம் கைக்கொண்டு ஒழுகும் பெண்களுக்குரிய குணங்களான நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. இனிது வலிமையுடன் எழுந்தும், அக்காதல் உணர்வு அவற்றை அடக்கி மேலோங்கிற்று.

கதிர் - ஒளிக்கற்றை. பேரொளியான் - நம்பியாரூரரைக் குறித்தது. மெல்லியல் - மென்மைப் பாங்குடைய பரவையார். எண்கொள்ளா - எண்ணத்துள் அடங்கி நில்லாது மேலோங்கும் தன்மை. *143*

290. "முன்னேவந்து எதிர்தோன்றும்
முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ
தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள் பெற்று உடையவனோ
என்னேஎன் மனம்திரித்த
இவன் யாரோ" என நினைத்தார்.

தெளிவுரை: நம்பியாரூரரைக் கண்ட பரவையார் தன் மனத்தைப் பறி கொடுத்தவராகி, "எதிர் தோன்றி முன்னே வந்தவர் முருகக் கடவுளோ! பேரொளியோடு ஒப்பற்றவனாக விளங்கும் மன்மதனோ! மாலையணிந்த மார்பினையுடைய கந்தருவர்களுள் ஒருவனோ! மின்னலைப் போன்று ஒளிரும் சிவந்த சடைமுடியுடைய அண்ணல் சிவபிரான் திருவருள் பெற்று விளங்கும் சிவனடியாரோ! என்னுடைய மனத்தைத் திரியுமாறு செய்த இவர் யாரோ!" என நினைத்தார்.

சிறப்புரை: இவண் பரவையார் நம்பியாரூரரை நோக்கிய வகையில் முருகனோ என்ன, அதே நிலையில் நம்பியாரூரர் கற்பகத்தின் பூங் கொம்போ-தெய்வ யானையைச் சுட்டுமாறு உரைத்தல் காண்க. மற்றும் மன்மதன் என்பதற்குப் பாடல் 286-இல் ரதிதேவியைக் குறிக்கும் வகையில் காமன் தன் பெருவாழ்வோ எனவும், மெய்யருள் பெற்று உடையவனோ என்று உரைத்த வழி, நம்பியாரூரர் சிவனருளோ எனச் சாற்றிய வகையில் காணப்பெறும் ஒப்புமையும் இனிது நோக்குக.

மாரன் - மன்மதன், விஞ்சையன் - வித்தியாதரர், கந்தருவர். செஞ்சடை அண்ணல் - சிவபிரான். மெய்யருள் பெற்றுடையவன் - சிவனருட் செல்வர். 144

291. அண்ணல்அவன் தன்மருங்கே
அளவிறந்த காதலினால்
உள்நிறையும் குணம்நான்கும்
ஒருபுடை சாய்ந் தனஎனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல்
மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும் அன்பே
கைக்கொண்டு செலஉய்ப்ப.

தெளிவுரை: பெருமையுடைய நம்பியாரூரர் பால் கொண்ட எல்லையற்ற காதலால், உள் நிறைந்த நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கும் ஒருபுறம் சரிந்தனவாயினும், அழகிய கூந்தல் விளங்கும் பரவையார் சிவ சிந்தனையின் வலிமையால் மனத்தை உறுதியுடன் நிலவச் செய்து சிவபிரானைத் தொழுது வணங்கும் நேயத்தைக் கொண்டவராய்க் கோயிலுக்குச் செல்லலானார்.

நம்பியாரூரர் மீது கொண்ட காதல் நான்கு குணங்களையும் சாய்த்ததென்றாலும் சிவநேயத்திற் சிறந்த பரவையாரின் சிந்தனை திருக்கோயிலுக்குச் செல்ல வைத்தது என்க.

இப்பாடலில் "செல உய்ப்ப" என்பது அடுத்த பாடலின் "புகுந்தார்" என்று வினை முடிபு பெறும்.

அண்ணல் - நம்பியாரூரர். அளவு இறந்த - அளவு கடந்த. குணம் நான்கு - நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு. சாய்ந்தன - சரிந்தன. மடக்கொடி - பரவையார் வலிது - மன உறுதி. கண்ணுதல் - சிவபிரான் 145

292. பாங்குஓடிச் சிலைவளைத்துப்
படைஅநங்கன் விடுபாணம்
தாங்கோலி எம்மருங்கும்
தடைசெய்ய மடவரலும்
தேன்கோதை மலர்க்குழல்மேல்
சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான்
பொன்கோயில் போய்ப்புகுந்தார்.

தெளிவுரை: வலமாகவும், இடமாகவும் ஓடிச் சென்று கரும்பு வில்லை வளைத்து மன்மதன், தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, கருங்குவளை ஆகிய மலர்களைக் கணையாகத் தொடுக்க மனத்தைத் தடை செய்தாலும் வண்டுகள் ரீங்காரம் செய்யும் மாலைகளையுடைய பரவையார் பூங்கோயில் அமர்ந்த பிரானைத் தரிசிப்பதற்கு உள்ளே சென்றார்.

சிறப்புரை: மன்மதனுடைய மலர்க்கணைகள் முறையே முகம், நாசி, மேனி, பல், கண் ஆகியவற்றை விரும்பச் செய்யும் வகையில் பரவையார் ஈசன் திருவருளை நாடும் குறிப்பும் ஆம்.

நம்பியாரூரர் திருக்கோயிலிருந்து வெளியே செல்லும் போது பரவையார் திருக்கோயிலை நோக்கிச் செல்லலானார் என்பதும், அக்கணத்தில் இருவரும் ஒருவரையொருவர் காணத் திருவருள் கூட்டிற்று என்பதும் காண்க.

சிலை - மன்மதனுடைய கரும்பு வில். அநங்கன் - மன்மதன். பாணம் - மலரம்புகள். தடை - மனத்தில் வேறு சிந்தனை தோன்றாதபடி செய்யும் தன்மை. மடவரல் - பரவையார். சிறைவண்டு - சிறகுகளையுடைய வண்டு. பூங்கோயில் - திருவாரூர்த் திருக்கோயில். 146

தன் மனத்தைக் கவர்ந்தவர் பரவையார் என அறிந்த நம்பியாரூரர் அவரையே சிந்தித்திருத்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

293. வன்தொண்டர் அதுகண்டு என்
மனம் கொண்ட மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய்
இளங்கொடிதான் யார்என்ன
அன்றுஅங்கு முன்நின்றார்
அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும்
சேர்வரியார் எனச்செப்ப.

தெளிவுரை: வன்தொண்டர் தன் மனத்தைக் கவர்ந்து சென்ற "மென்மையான மயில் போன்ற சாயலையும் கொவ்வைக் கனி போன்ற வாயினையும் உடைய இளங்கொடி போன்ற இவள் யார்?" என்று வினவ ஆங்கு முன்னே நின்றவர்கள், "அவர் தேவர்களாலும் அடைதற்கு அரிய பரவையார்." என்றார்கள்.

மயிலியல் - மயில் போன்ற சாயல். தொண்டைச் செங்கனி - கோவைக்கனி. உம்பர் - தேவர். 147

294. **பேர்பரவை** பெண்மையினில்
பெரும்பரவை விரும்புஅல்குல்
ஆர்பரவை அணிதிகழும்
மணிமுறுவல் **அரும்பரவை**
சீர்பரவை ஆயினாள்
திருஉருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட
என்ஆசை **எழுபரவை.**

தெளிவுரை: தன் உள்ளத்தில் அந்நங்கையின் அழகு பதிந்த நிலையில் பரவை என்கின்ற பெயரைக் கேட்டதும் நம்பியாரூரர் உள்ளத்தில் கிளர்ச்சியுற்று எண்ணுதலானார்.

பேர் பரவை என்று அமையலாயிற்று. மென்மையழகு முதலியவற்றில் பெரிய தேவர் அவையில் யாவராலும் போற்றப்படும் அல்குலையுடைய மாதர்கள் யாவும் திலோத்தமை போன்ற தெய்வமகளோ! இவளுடைய அழகு விளங்கும் முத்துப் போன்ற பற்கள் முல்லை அரும்புகளோ! சிறப்புகள் யாவும் கொண்டு விளங்கும் பேரழகியாக உள்ளனள். திருமகளின் சாயலையுடைய இவள் அழகு யாவும் திரண்டெழுந்து ஏத்த விளங்குபவளாயினள். இந்நிலையில் என் ஆசை ஏழு கடல்களைப் போல விரிந்து பரந்தது.

இத்திருப்பாட்டில் பரவை என்னும் சொல் 7 இடங்களில் வந்துள்ளமை காண்க. முன்பாடலில் செப்ப என்பதும் இப்பாடலின் எழுபரவை என்பதும் அடுத்த பாடலில் நினைந்து என வினை முடிபு பெறும்.

பேர் பரவை - பரவை என்னும் பெயரினள். பெரும் பரவை - பெரிய உம்பர் அவை: தேவர் அவை யெனப்படுவது. அல்குல் ஆர்பரவை அல்குலார் பரவு ஐ - மாதர்கள் போற்றும் தலைவி. மணி - முத்து

மணி. அரும் பரவை - அரும்பர் அவை: பற்கள் முல்லை அரும்பு போன்றவை. சீர் பரைவை - சீர்பரவு ஐ - சிறப்புகள் யாவும் திரண்டு போற்ற விளங்கும் அழகி. திருவுரு - திருமகள். ஏர்பரவை - ஏர்பரவு ஐ அழகெல்லாம் பரவும் தலைவி. எழுபரவை - ஏழு கடல். பரவை - கடல். ஏழு கடல்களாவன: 1) பாற் கடல்: 2) தயிர்க்கடல்: 3) நெய்க்கடல்: 4) தேன்கடல்: 5) கருப்பஞ்சாற்றுக்கடல்: 6) நன்னீர்க்கடல்: 7) உவர்நீர்க்கடல்.

148

சுந்தரர் மீண்டும் திருக்கோயிலுட் சென்று பரவையாரைத் தேடி செல்லுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

295. என்றினைய பலவும் நினைந்து
எம்பெருமான் அருள்வகையால்
முன்தொடர்ந்து வரும்காதல்
முறைமையினால் தொடக்குண்டு
நன்றெனைஆட் கொண்டவர்பால்
நண்ணுவன்என்று உள்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த்
தேவர்பிரான் கோயில்புக.

தெளிவுரை: இவ்வகையில் பலவாறு எண்ணிய தம்பிரான் தோழர், சிவபிரான் திருவருள் வயத்தால் காதல் பெருக்கெடுத்து மேவ, அதனைக் கூட்டி வைக்கும் தன்மையில் என்னை ஆட்கொண்ட இறைவனை நண்ணுவேன் என்று உள்ளத்தில் மகிழ்வு தோன்றியவராய்த் திருக்கோயிலுள் புகுந்தார்.

சிவபிரான் நம்பியாரூரரைஆளாகக் கொண்ட நிலையில் தேவையும், விருப்பமும் இறைவனைக் கொண்டு அடைதலை எண்ணி "எனை ஆட்கொண்டவர் பால் நண்ணுவன்" என்று சான்றியமை காண்க.

புக என்பது அடுத்த பாடலின் புறப்பட்டார் என்று வினை முடிபு பெறும்.

முன் தொடர்ந்து வரும் காதல் - கயிலை மலையில் தோன்றி மலர்ந்து எழுந்த காதல். ஆட்கொண்டவர் - சிவபிரான். உடைய நம்பி - சிவபிரானுக்கு உரிமையுடையவரான வன்தொண்டர். தேவர் பிரான் கோயில் - பூங்கோயில்.

149

296. பரவையார் வலம் கொண்டு
பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலில் நின்று
ஒரு மருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினால்
மெல்லியலார் தமை வேண்டி
அரவின் ஆரம் புனைந்தார்
அடி பணிந்தார் ஆரூரர்.

தெளிவுரை: பரவையார் இறைவனை வலங்கொண்டு பணிந்து வழிபட்டுப் பூங்கோயிலினின்று முன்னமே ஒரு பக்கமாகப் புறப்பட்டுச் செல்ல, தம்பிரான் தோழர் பெருங் காதல் கொண்டவராகிப் பரவையாரை அடைதல் வேண்டிப் பாம்பை மாலையாகக் கழுத்தில் புனைந்த சிவபிரான் திருவடியைப் பணிந்து ஏத்தினார்.

புரவலனார் கோயில் - பூங்கோயில். மருங்கு - பக்கம். மெல்லியலார் - பரவையார். அரவின் ஆரம் - பாம்பை மாலையாகப் புனைந்த தன்மை. 150

297. அவ்வாறு பணிந்தேத்தி
அணியாரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று
வானவர்பால் நின்றும் போந்து
எவ்வாறு சென்றாள்என்
இன்னுயிராம் அன்னம்எனச்
செவ்வாய்வெண் ணகைக்கொடியைத்
தேடுவார் ஆயினார்.

தெளிவுரை: இறைவனைப் பணிந்த நம்பியாரூரர் புற்றிடம் கொண்டவராய்த் தன் கழுத்தில் நஞ்சு கொண்டு நீலகண்டராக விளங்கும் தேவர் பிரான் சன்னதியினின்றும் வெளியே வந்து, "என் உயிர் போன்றவளும், அன்னம் போன்ற நடையும் சிவந்த வாயும், வெண்மையான பற்களும், கொடி போன்ற இடையும் கொண்டு விளங்கும் பரவையார் எவ்வாறு வெளியே சென்றாள்?" என்று ஆய்ந்து தேடுவாராயினார்.

மணிப்புற்று - திருமூலட்டானம். மை - பாற் கடலில் தோன்றிய நஞ்சு. வாழும் - நிலைத்து நிற்றலின் குறிப்பு உணர்த்துதல். மிடறு - கண்டம். வானவர் - தேவபிரான்: சிவபிரான். கொடி - பூங்கொடி. 151

சுந்தரர் பரவையாரை நினைத்து ஏங்கியவராய் இறைவனிடம் வேண்டுதல்

- இது முதல் 5 - பாடல்கள் ஒரு தொடர்

கலி விருத்தம்

298. பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசைஅளிப்பதோர்
தேசின் மன்னஎன் சிந்தை மயக்குற
ஈச னார்அருள் எந்நெறிச் சென்றதே.

தெளிவுரை: "பாசம் என்னும் வினை வயப்படும் பற்றை அறுப்பவனாகிய இறைவன் மிகுந்த ஆசையும் அதன் மேல் எழும் பேராசையும் அனிக்கும் வகையில் பரவையாரின் அழகு மேன்மை என் சிந்தையை மயக்குமாறு ஈசனார் திருவருள் எந்த நெறியை நோக்கிச் சென்றது!" என ஆரூரர் வியப்புற்றார்.

சிறப்புரை: இவண், பதியை அடைய வேண்டிய உயிர் அதனை அடைதல் குறித்து நாடவொட்டாது பாசத்துள் வீழும் தன்மை வினைப்பற்று எனப்பட்டது. இதுவே பிறவி கொள்வதற்கு காரணமாம் என்க. சூக்கும பஞ்சாக்கரமாய "சிவயநம" என்பதில் "ய" என்கிற உயிர். "சிவ" என்கிற பதி முன்னுமாகவும் "நம" என்கிற மறைப்பாற்றலும் ஆணவ மலமும் பின்னுமாகவும் நிற்க, ஆன்மா முன்னுள்ள பதியைச் சார்ந்தால் முத்திப் பேறும், பின்னுள்ள பாசத்தைச் சார்ந்தால் பிறவித்தளையும் உண்டாகும் என்னும் கருத்தில் உமாபதி சிவாசாரியார், சிவப்பிரகாசம் 10 - ஆம் சூத்திரம், திருப்பாட்டு 91 - இல்,

"திருவெழுத்து ஐந்தில் ஆன்மா
திரோதம்ஆசு அருள்சி வம்சூழ்
தரநடு நின்றது ஒன்றாம்
தன்மையும் தொன்மை யாகி
வரு மந மிகுதி யாலே
வாசியில் ஆசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறும்
காதலர்க்கு ஓத லாமே"

என அருளிச் செய்தமை காண்க.

வன்தொண்டரின் மனம் காதல் வயப்பட்டுத் திரிந்தமைக்கு அடித்தளமாக விளங்கியது, ஈசனார் அருளேயாதலைச் சாற்றுதல் காண்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவாசகம், குழைத்த பத்தில்,

"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகைநீ திகைப்பும் நீ தீமை நன்மை முழுதும் நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா திகைத்தால் தேற்ற வேண்டாவோ."

என்று அருளியவாறும் நோக்குக.

வினைப்பற்று - வினைத்தொடர்பு. தேசின்மின்ன - ஆசையால் ஒரு பிறவியுற்ற நிலையில் மேலும் ஓர் ஆசை வயப்பட்டுப் பாவையாரின் அழகில் சிந்தை மயங்குதலைக் குறித்தது. என் நெறிச் சென்றது - நன்மை தீமையறியாத நிலையினை வியத்தலாம். 152

299. உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறுஅறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கிஇன்று
எம்பி ரான்அருள் எந்நெறிச் சென்றதே.

தெளிவுரை: தேவர் பிரானாகிய ஈசன் திருவடியையன்றி வேறொன்றினையும் கருதாத என்னை நடுங்குமாறு செய்து காதல் மயக்கத்தை இப்பெண்ணின் பால் உண்டாகித் துவளச் செய்த எம்பெருமானின் திருவருள் எத்தன்மையாகிற்று?

உம்பா நாயகர் - தேவர் பிரான். நடுக்குற - மனம் பிறழ்ந்து நடுங்க. வம்புமால் - காதல் மயக்கம். வல்லி - பெண்: பரவையார் என்க. ஒல்கி - வாடித் தளர்ந்து: துவளுமாறு. 153

300. பந்தம் வீடுத ரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும் என் சிந்தையை
வந்து மால்செய்து மான்என வேவிழித்து
எந்தை யாரருள் எந்நெறிச் சென்றதே.

தெளிவுரை: உயிர்களுக்குப் பந்தமாகிய பிறவியும் பேரின்பமாகிய முத்தியுலகையும் தருகின்ற சிவபிரான் திருவடியைச் சிந்தையில் எஞ்ஞான்றும் பொருந்த மேவும் என் எண்ணத்தை மான் போன்ற மருட்சியுடைய விழியால் நோக்க எந்தையார் திருவருள் எங்ஙனம் சென்றது!

இம்மூன்று பாடல்களும் நம்பியாரூரர் மனம் திரிந்த நிலையில் ஈசனார் அருள் போன்று திகழும் பரவையார் எவ்வழியாகச் சென்றனள் என்று ஆய்ந்தவராய்த் தேடுவாராயினார். வன் தொண்டர்தம் சிந்தை சிவன் பால் திகழ்ந்து வந்த நிலையில் இப்போது பரவையார் பால் சென்றமையைக் கருதிப் பலவாறு உரைத்தலாம் என்க.

பந்தம் - பிறவித்தளை. வீடு - முத்திப்பேறு. ஆர - பொருந்த. மால் - மயக்கம். மான் - மருண்ட பார்வையுடைய மான் என்னும் வகையில் பரவையாரைச் சாற்றியது. எந்தையார் - சிவபிரான். 154

301. என்று சாலவும் ஆற்றலர் என்னுயிர்
நின்றது எங்கென நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின்:

தெளிவுரை: வன்தொண்டர் இவ்வாறு எண்ணி மிகவும் ஆற்றாது தன்னுயிர் போன்றவளாய் முத்து மணியணிந்த தனங்களும் நறுமணம் கொண்ட நீண்ட கூந்தலும் உடைய பரவையாரைத் தேடும் வகையில் தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்.

சால - மிக. உயிர் - பரவையாரைக் குறித்தது. நித்திலம் - முத்து. மன்றல்வார்குழல் - வாசனையுடைய நீண்ட கூந்தல். வஞ்சி - பரவையார். தேவாசிரியன் - தேவாசிரிய மண்டபம். 155

302. காவி நேர்வரும் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரையியம் பாதிருந்து
ஆவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்து எனும் போழ்தினில்:

தெளிவுரை: நீலோற்பல மலரைப் போன்ற கண்ணுடைய பரவையாரைக் காணும் வகையில் யாரொடும் உரை செய்திலராய் வன்தொண்டர் "திருவாரூர்ப் பெருமானாகிய தியாசேகர், திருமகள் போன்றவளாகிய பரவையாரைத் தந்து என் உயிரை நிற்கச் செய்வார்." என்று மொழியலானார்.

காவி - நீலோற்பலமலர். ஆவி - உயிர். ஆரூரை ஆண்டவர் - தியாகேசப் பெருமான். பூவின் மங்கை - திருமகள்: பரவையாரைக் குறித்தது. 156

கதிரவன் மறைந்து இருள் பரவுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

303. நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந்து என்பபோல்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக:

தெளிவுரை: நற்புகழை நாட்டும் வன்தொண்டரின் சிந்தை விரும்பிய மின்னல் போன்ற இடையுடையவளாயும், இனிய அமுதம் போன்றவளுமாகிய பரவையாரைக் காட்டுவன் என்று கடலைக் கடந்து எழுமாறு செய்வதைப் போன்று ஏழு குதிரைகளைப் பூட்டிய சூரியன் மேற்குக் கடலில் புகுந்தான்.

சிறப்புரை: பாற்கடலைக் கடைந்த நிலையில் அமுதம் தோன்றியது போன்று, அமுதம் போன்ற பரவையாரை வன்தொண்டருக்கு அளிக்கும் வகையில் சூரியன் கடலைக் கடையப் புகுந்தான் என்று கற்பனை நயம் விளங்கச் சாற்றப்பட்டது. சூரியன் மறைதலைக் கடல் புகுதற்கு ஒப்பிடுதல் கவி மரபு என்க.

நல்லிசை - நற்புகழ். நாவலூரன் - வன்தொண்டர். வேட்ட - விரும்பிய. மின்னிடை இன்னமுது - பரவையாரைக் குறித்தது. ஏழ்பரி - ஏழு குதிரைகள்: இவை சூரியனது தேர்க் குதிரைகள். தேரோன் - சூரியன். *157*

304. எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யில்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேல்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புற:

தெளிவுரை: பிரியாது பெடையோடு இரை தேர்ந்து உண்டு பொய்கையில் பகற்பொழுதைக் கழித்த பறவைகள் தம்தம் கூடுகளில் சென்று அடங்கும் பொழுதில் பிரிந்து மேவும் நாயகனும், நாயகியும் காம நோயால் காணும் துன்பத்தை அடையும் மாலைப் பொழுது வந்தது.

மென்படை - மென்மையுடைய பெண் பறவை . இரை - உணவு. புள் - பறவை. சேக்கை - கூடு. பையுள் - துன்பம். தமியோர் - காதல் துணைவரைப் பிரிந்து வாழ்வோர். பனிப்பு - வருத்தம். *158*

305. பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும் அரண்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சு என்ன இருண்டது நீண்டவான்.

தெளிவுரை: பஞ்சு போன்ற மென்மை காட்டும் விலை மகளிர் மனமும், மக்கள் தன்மையில்லாத கொடுமை காட்டும் விலை மகளிர் மனமும், மக்கள் தன்மையில்லாத கொடுமை நிறைந்த வஞ்சக மனிதர்கள் தம் கொடிய வினையின் ஈட்டமாக இருக்கும் நரகமும் சிவபிரானின்

திருவைந்தெழுத்தை உணராத மெய்யறிவு அற்றோரின் நெஞ்சம் போன்று, நீண்ட வானமானது இருளில் ஆழ்ந்தது.

சிறப்புரை: இத்திருப்பாட்டின் கண் திருவைந்தெழுத்தை உணராதவர் அறிவற்றவர் என்று சாற்றப்படுதலை நோக்குக. இத்தன்மையில் இறைவன் திருக்கழலை ஏத்திச் சிறந்திலாதவர், அறிவிலாதவர் என்னும் பான்மையில் மாணிக்கவாசகர் திருவாசகம், அச்சப்பத்து, திருப்பாட்டு 8 - இல்,

"செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்து இனிது இருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே!"

என அருளிச் செய்தமை காண்க. மற்றும் திருநாவுக்கரசர், திருவைந்தெழுத்தானது அக இருளைப் போக்க வல்ல தன்மையை 4 - ஆம் திருமுறை நமசிவாயத் திருப்பதிகத்தில்,

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே."

என்று அருளிச் செய்தவாறும் ஓர்க.

முன்னர் சாற்றப்பட்ட 4 திருப்பாடல்களும் இத்திருப்பாட்டின் கண் வினை முடிபு பெற்றது.

பாவையர் உள்ளம் - விலை மகளிர் உள்ளத்தைச் சுட்டுதலாம். வஞ்ச மாக்கள் - கொடுமை செய்யும் பாதகர். வல் வினை - இவர்களின் வினைப் பயனாய் நரகத்தை அடைதலின், இருள் எனப்பட்டது. அரன் அஞ்செழுத்து - நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து, தூல பஞ்சாட்சரம். 159

வெண்ணிலவு தோன்றிய நிலையில் வன்தொண்டர் பரவையாரை எண்ணி ஏங்குதல்

- இது முதல் 8 பாடல்கள் ஒரு தொடர்

306. மறுவில் சிந்தைவன் தொண்டர் வருந்தினால்
இறுமருங் குலார்க்கு யார்பிழைப் பார்என்று
நறுமலர்க் கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா.

தெளிவுரை: குற்றம் இல்லாத சிந்தையுடைய வன்தொண்டர் இவ்வாறு வருத்தம் அடைந்தால் மெல்லியதான இடையுடைய மாதர்கள் முன்னே யாவர் நின்று உய்ய வல்லவர் என்று ஆதங்கம் கொண்ட இரவு என்கிற நங்கை, புன்முறுவல் செய்தது போன்று வெண்ணிலவு எழுந்தது.

மறுவில் - குற்றமில்லாத. இறு மருங்கு - மெலிந்த இடை. மருங்குலார் - மாதர். கங்குல நங்கை - இரவு என்கிற நங்கை. முகிழ்ந்தது - எழுந்தது. 160

307. அரந்தை செய்வார்க்கு அழுங்கித் தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர் போல்
பரந்த வெம்பகற்கு ஒல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம்.

தெளிவுரை: தம் ஆருயிர்த் தலைவனாகிய கணவன் தீண்டுவதற்கு உரிமையாகி மலர்ந்து, துன்பம் செய்யும் ஏனையோர்க்கு நெருங்காது சுருங்கி விளங்கும் நற்குல மாதர் போன்று, பரந்துபட்ட வெம்மையுடைய சூரியனால் தீண்டப்பெறாது குவிந்து தன் நாயகனாகிய சந்திரன் தீண்டுதலால் மகிழும் அல்லி மலர்கள் மலர்ந்தன.

சிறப்புரை: பாடல் 305 - இல் அடிப்பாவையர் என்பது விலைமகளைச் சுட்டும் தன்மை போல், இப்பாடலில் குலமகளிரின் பெருமை சுட்டப் பெறுதல் காண்க. அல்லி என்னும் மலர் இரவில் மலர்தலின் இயல்பினை நிலவின் ஒளியைத் தலைவன் தீண்டுதலாக உரைக்கும் கவிநயம் காண்க. பகலில் தாமரையானது சூரியனின் கதிர்களால் தீண்டப் பெற்று மலர்தலால் கதிரவனைத் தாமரை நாயகன் எனச் சுட்டும் வகையில் "சகட சக்கரத் தாமரை நாயகன்" என்று வரும் கந்தபுராணத் தொடராலும் கொள்க.

அரந்தை - துன்பம். வரன் - நாயகன், கணவன். பகல் - சூரியன். ஒல்குதல் - வாடுதல். பனிமதி - குளிர்ந்த நிலவு. கயிரவம் - அல்லி மலர், ஆம்பல். 161

308. தோற்றும் மன்னுயிர் கட்கெலாம் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்ட மெலாம் பரந்து அண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா.

தெளிவுரை: உலகில் தோன்றும் உயிர்களுக்கெல்லாம் தூய்மையே வழங்கி இன்பமும், குளிர்ச்சியும் தந்து நலம் புரிய அண்டமெலாம்

பரந்து விளங்கும் சிவபிரானின் திருவெண்ணீறு போன்று குளிர்ந்த வெண்ணிலவின் ஒளி எங்கும் பரவியது.

சிறப்புரை: மன்னுயிர்களுக்கு இனிமை தரும் திருவெண்ணீறு சிவபிரான் திருவருள் நலம் தருதல் போன்று நிலவொளியின் சிறப்பு நவில்தலைக் காண்க. இத்தன்மையில் திருவெண்ணீற்றின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர், 2 - ஆம் திருமுறையில்.

"காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைக் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே."

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக.

அண்ணல் - சிவபிரான். நீள்நிலா - நிலாவொளி, இது நீற்றொளியென விளங்கிற்று. 162

309. வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினார்.

தெளிவுரை: பொய்கையில் விளங்கிய பறவைகளின் ஒலி அடங்கிய அம்மாலைக் காலத்தில் வன்தொண்டர், பரவையார் உண்டாக்கியதால் பெருகிய காதலால் பிறர்பால் உரையாடல் ஏதுமின்றித் தனித்து இருந்தார்.

வாவி - பொய்கை. 163

310. தம் திருக் கண் எரி தழலில் பட்டு
வெந்த காமன் வெளியே உருச் செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே
எந்தையார் அருள்இவ் வண்ணமோ என்பார்.

தெளிவுரை: சிவபிரான் நெற்றிக் கண்ணால் எரிந்து சாம்பலான மன்மதன் மீண்டும் தன் வடிவத்தைப் பெற்று என் முன்னே வந்து அம்பு தொடுத்து வருத்துமாறு ஆகியதே! இது எந்தையாகிய ஈசனின் அருள் வண்ணமோ! என்று வன்தொண்டர் புலம்புவாரானார்.

இவண் மன்மதன் படை தொடுத்த பாங்கு பாடல் 287 - இல் உரைத்தவாறும் காண்க.

திருக்கண் - நெற்றிக்கண். தழல் - நெருப்பு. காமன் - மன்மதன். உருச் செய்தல் - வடிவம் கொள்ளுதல். வாளி - மலரம்பு. எந்தை - சிவபிரான். 164

311. ஆர்த்தி கண்டும் என் மேல்நின்று அழல்கதிர்
தூர்ப்ப தேஎனைத் தொண்டு கொண்டு ஆண்டவர்
நீர்த்த ரங்க நெடுங் கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி

தெளிவுரை: "பரவையார் பால் நான் கொண்ட காதலால் வருந்தும் தன்மை கண்டும் இக்குளிர்ந்த சந்திரன் என் மீது நெருப்புக்கதிரை வீசுகின்றதே! என்னை ஆளாகத் கொண்ட சிவபிரான் திருமுடியில் நீரலைகள் கொண்ட கங்கை விளங்கும் சடையில் தரித்துள்ள வெண்ணிலவு போன்று இந்நிலவு இல்லையே!" என்று ஆரூரர் நவின்றார்.

ஈசன் திருவருள் இனிமை புரிதலைப் போன்று அப்பிரான் தரித்த நிலவு குளிர்ச்சி தராது காதல் வெம்மை தருதலை இவண் நயம் தோன்ற எடுத்தோதப்பட்டது.

ஆர்த்தி - வருத்தம். அழல் - நெருப்பு. தூர்ப்பது - வீசுவது. ஆண்டவர் - சிவபிரான். தரங்கம் - அலை. தண்மதி - குளிர்ந்த நிலவு. 165

312. அடுத்து மேல்மேல் அலைத்தெழும் ஆழியே
தடுத்து முன்எனை ஆண்டவர் தாம்உணக்
கடுத்த நஞ்சுஉன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னை இன்று என் செயாய்?

தெளிவுரை: காதற்பெருக்கால் நிலவை நோக்கி உரைத்த வன்தொண்டர் கடலை நோக்கிக் கூறலானார்.

"அலைகளை அடுத்தடுத்துத் தள்ளி ஆரவாரம் செய்யும் கடலே! என்னைத் தடுத்து ஆட்கோண்ட சிவபிரானுக்கு முன்னர்ப் பாற்கடலைக் கடையும்போது உண்பதற்கு உன் அலைகளாகிய கரங்களால் நஞ்சைக் கொடுத்தனை! அத்தன்மையுடைய நீ என்னதான் செய்யமாட்டாய்!"

இவண் இருண்டவானத்தின் தன்மை கண்டு கடலை ஒப்பதாக எண்ணி உரைத்தலாம்.

சிறப்புரை: ஈசனுக்கு நஞ்சளித்த கடலின் தன்மையைச் சாற்றியது. காண்க. இத்தகைய கடலுக்கு நிரம்ப நீர் அளியாத காவிரியின்

செம்மையைச் சேக்கிழார் பெருமான் (திருமூல நாயனார் புராணம் - 8) திருப்பாட்டு 3576 - இல்,

"தடநிலைமா ளிகைப்புலியூர்
தன்னில்உறைந் திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல்வருவார்
அழுதுசெய அஞ்சாதே
விடம்அளித்தது எனக்கருதி
மேதினிக்கு வளம்நிறைத்தே
கடல்வயிறு நிறையாத
காவிரியின் கரையணைந்தார்.

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

ஆழி - கடல். ஆண்டவர் - ஆட் கொண்ட ஈசன். கடுத்த - கொடிய. தரங்கக் கரம் - கடலலை. 166

313. பிறந்தது எங்கள்பிரான்மல யத்திடை
சிறந்தது அணைந்து தெய்வநீர் நாட்டினில்
புறம் பணைத் தடம் பொங்குஅழல் வீசிட
மறம்ப யின்றது எங்கோ தமிழ் மாருதம்.

தெளிவுரை: அத்திருப்பாட்டில் நம்பியாரூரர் தென்றல் காற்றை நோக்கி உரைத்தலாயிற்று.

"இனிய தென்றலே! நீ தோன்றியது எங்கள் தலைவன் விளங்கும் பொதிகை மலை. நீ சிறப்புடன் விளங்குவது தெய்வத் தீர்த்தமான காவிரியாறு பாயும் சோழநாடு. குளிர்ச்சி மிகுந்த வயல்களும். சோலைகளும், பொய்கையும் சூழ்ந்த இத்தகு இடத்தில் அனலை வீசுகின்ற பாவச் செயலைப் புரிய யாங்குக் கற்றனை!"

எங்கள் பிரான் - எங்கள் தலைவனாகிய சிவபிரான். மலயம் - பொதிகை மலை. தெய்வநீர் - காவியாறு. நாடு - சோழநாடு. பணை - வயல். தடம் - பொய்கை. பொங்கு அழல் - பொங்கியெழும் அனல். மறம் - பாவச் செயல். தமிழ் மாருதம் - இனிய தென்றல். 167

பரவையாரைப் பற்றி உரைக்கத் தொடங்குதல்
கவிக் கூற்று

314. இன்ன தன்மையை பின்னும் இயம்புவான்
மன்னு காதலன் ஆகிய வள்ளல்பால்
தன்அ ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம்.

தெளிவுரை: இன்ன தன்மையில் நம்பியாரூரர் மேலும் பலவாறு உரைக்கலானார். பெருமை விளங்கும் அன்பராகிய வன்தொண்டர்பால் தன் அரிய பெருமையுடைய நெஞ்சு சென்று பின்னே தயக்கம் கொண்டு வரப் பெற்ற அன்னம் போன்ற நடையுடைய பரவையாரின் செய்கையைக் கூறுவாம்.

சிறப்புரை: பரவையார் தேவர்க்கும் காண்பதற்கு அரியவராதலை முன்னிருத்தியதோடு ஈசனை தவிர பிற நினைவு அற்ற பாங்கு சேர்தலால் அரும்பெறல் நெஞ்சு எனப்பட்டது.

காதலன் - அன்பன். வள்ளல் - வன்தொண்டர். அன்னம் அன்னவள் - பரவையார். அறைதல் - சொல்லுதல். 168

பரவையார் தம்பிரான் தோழர் பால் கொண்ட காதலை உரைத்தல்

- இது முதல் 9 பாடல்கள் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

315. கனம்கொண்ட மணிகண்டர் கழல் வணங்கிக்
கணவனைமுன் பெறுவாள் போல
இனம்கொண்ட சேடியர்கள் புடைசூழ
எய்து பெருங் காத லோடும்
தனம்கொண்டு தளர்மருங்குல் பரவையும்வன்
தொண்டர்பால் தனித்துச் சென்ற
மனம்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு
தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள்.

தெளிவுரை: பெருமை விளங்கும் நீலகண்டப் பெருமான் திருப்பாதங்களை வணங்கி, கணவரைப் பெறுபவள் போன்று தன் சேடியர்கள் புடைசூழ மென்மையான இடையுடைய பரவையார் வன் தொண்டர்பால் மனத்தைச் செலுத்தியவராய் மயங்கிய நிலையில் தன் மாளிகையைச் சேர்ந்தார்.

கனம் - பெருமை. மணிகண்டர் - நீலகண்டராக விளங்கும் ஈசன். சேடியர் - தோழியர். தளர் மருங்குல் - மெலிந்த இடை. 169

316. சீறடி மேல் நூபுரங்கள் அறிந்தனபோல்
சிறிதளவே ஒலிப்ப முன்னர்
வேறொருவர் உடன் பேசாள் மெல்லஅடி
ஒதுங்கிமா ளிகையின் மேலால்

ஏறிமர கதத்தூணத்து இலங்குமணி
வேதிகையில் நலம்கொள்பொன்கால்
மாறில் மலர்ச் சேக்கை மிசை மணிநிலா
முன்றில் மருங்கு இருந்தாள் வந்து.

தெளிவுரை: சிறிய பாதங்களில் அணிந்துள்ள சிலம்புகள் சிறிதே ஒலிக்குமாறு மெல்ல நடந்து பிறரிடம் ஏதும் உரையாதவராய் மாளிகையின் மேற்பகுதியில் ஏறிச் சென்று மரகதத் தூண்கள் கொண்ட மேடையில் மலர்ப்படுக்கையின் மீது நிலா முற்றத்தின் மருங்கே பரவையார் வந்து அமர்ந்தார்.

சீறடி - சிறிய பாதம். நூபுரம் - சிலம்பு. வேதிகை - திண்ணை. மாறில் மலர் - வாடாத மலர். சேக்கை - படுக்கை. 170

317. அவ்வளவில் அருகிருந்த சேடிமுகம்
நேர் நோக்கா "ஆரூர் ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போம்
மறுகெதிர்வந் தவர்யார்" என்ன,
"இவ்வுலகில் அந்தணராய் இருவர்தேடு
ஒருவர்தாம் எதிர்நின்று ஆண்ட
சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான்
தோழனார் நம்பி" என்றார்.

தெளிவுரை: அப்போது, தன் அருகில் இருந்த சேடியின் முகத்தை நோக்கிய பரவையார், "திருவாரூரரை ஆளும் நீலகண்டப் பெருமானை நாம் வணங்குவதற்குப் போகும் போது வீதியின் எதிரே வந்தவர் யார்?" என்று வினவ, அவள், "திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் தேடுகின்றவராய் விளங்கும் ஒப்பற்ற தலைவராகிய சிவபிரான் ஆட்கொண்ட அந்தணரான வரும், ஆதி சைவரும், திருத் தொண்டரும் ஆகிய வன்தொண்டர். இவர் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரர்." என்றாள்.

நோக்கா - நோக்கி. மைவிரவு கண்டர் - நஞ்சு அருந்திய கண்டத்தையுடைய திருநீலகண்டர். ஆரூர் ஆண்ட மைவிரவு கண்டர் - தியாகேசப் பெருமான். மறுகு - வீதி. இருவர் - திருமாலும் பிரமனும். ஒருவர் - சிவபிரான். ஆண்ட சைவ முதல் - தடுத்தாட் கொள்ளப்பட்ட ஆதி சைவர். நம்பி - நம்பியாரூரர். 171

318. என்றவுரை கேட்டலுமே எம்பிரான்
தமரேயோ என்னா முன்னம்
வன்தொண்டர் பால்வைத்த மனக்காதல்
அளவின்றி வளர்ந்து பொங்க

நின்றநிறை நாண்முதலாம் குணங்களுடன்
நீங்கஉயிர் ஒன்றும் தாங்கி
மின்தயங்கு நுண்ணிடையாள்வெவ்வுயிர்த்து
மெல்லணைமேல் வீழ்ந்த போது.

தெளிவுரை: தம்பிரான் தோழர் என்று தோழி உரைத்த அளவில் வன்தொண்டர்பால் வைத்த மனக் காதல் அளவின்றி வளர்ந்து பொங்கி எழத் தனக்குச் சிறப்பாக விளங்கும் நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்கிற நான்கு குணங்களும் நீங்கப் பெற்று, உயிர் ஒன்று மட்டும் தாங்கியவராய், மின்னற்கொடி போன்ற இடையுடைய பரவையார் பெருமூச்சு மேலோங்க மலர்ப்படுக்கையின் மீது சாய்ந்தார்.

இச்செய்யுளில் ஈற்றடியானது அடுத்த பாடலின் செய்த என்னும் வினையைத் தழுவியது.

எம்பிரான் தமர் - தம்பிரான் தோழர். நாண் - நாணம். மின்தயங்கு - மின்னல் ஒளி. வெவ்வுயிர்த்து - பெருமூச்சு கொண்டு. 172

319. ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர்
நறுந்திவலை அருகு வீசி
ஈரஇளந் தளிர்க்குளிரி படுத்துமட
வார்செய்த இவையும் எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற்று
அதன்மீது சமிதைஎன்ன
மாரனும் தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி
மலர்வாளி சொரிந்தான் வந்து.

தெளிவுரை: பரவையார் மயங்கி வீழ்ந்த நிலையில் வாசனை மிகுந்த சந்தனக் குழம்பைப் பூசி பன்னீர்த்துளிகள் தெளித்து மென்மையான தளிர்க்கையுடைய குளிரி கொண்டு வீசி மயக்க நிலையைத் தெளிவிக்கும் வகையில் செய்தார். ஆனால் அவை யாவும் அவருக்குப் பெருநெருப்பின் மீது நெய் சொரிந்ததைப் போன்று வெப்பத்தைக் கொடுத்தது. இந்நிலையில் மன்மதன் தன் கரும்பு வில்லைக் கொண்டு மலரம்புகளைச் சொரிய, எரியும் நெருப்பில் வேள்வி விறகுச்சுள்ளிகளை இடுதல் போன்று மேலும் துன்பத்தை உண்டாக்கிற்று.

ஆர - பொருந்த. நறுஞ்சேறு - வாசனையுடைய சந்தனக் குழம்பு. நறுந்திவலை - பன்னீரின் நறுமணம் கமழும் துளிகள். குளிரி - நீர்க்குளிரி என்னும் ஒரு வகைக் கொடி. மடவார் - தோழியர். சமிதை

- வேள்விக்குரிய விறகுச் சுள்ளிகள். மாரன் - மன்மதன். பெருஞ்சிலை - கரும்பு வில். மலர் வாளி - மலர்களாலான அம்புகள். 173

320. மலர்அமளித் துயில்ஆற்றாள் வரும்தென்றல்
மருங்காற்றால் மங்குல் வானில்
நிலவுமிழும் தழலாற்றாள் நிறையாற்றும்
பொறையாற்றா நீர்மை யோடும்
கலவ மயில் எனஎழுந்து கருங்குழலின்
பரம் ஆற்றாக் கையள் ஆகி
இலவ இதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்து ஆற்றா
மையின் வறிதே இன்ன சொன்னாள்.

தெளிவுரை: பரவையார் மலர்ப்படுக்கையில் துயில் கொள்ளாதவளாய் இனிதாக வரும் தென்றல் காற்றின் குளிர்ச்சியும் தண்மை விளைவிக்காது, இருள் மேவும் வானில் நிலவும் சந்திர ஒளிக்கதிர் காதல் மேலிடுதலால் உடலில் அனல்படுத்த, கற்பின் நிறை நல்கும் பொறுமை ஆற்றாது, தோகை விளங்கும் மயில் போன்று எழுந்து நீண்டு விளங்கும் கூந்தலின் பாரத்தைத் தாங்குதற்கு அரியவராய்த் தன் கையில் பற்றி இலவம் பூப் போன்ற செவ்விதழ் இசைய உரைக்கலானார்

மலரமளி - மலர்ப்படுக்கை. மருங்கு - பக்கம். மங்குல் - இருள். தழல் - அனல். பொறை - பொறுமை. கலவ மயில் - தோகையுடைய மயில். கருங்குழல் - கருமையான கூந்தல். பாரம் - சுமை. 174

எண்சீர் சந்த விருத்தம்

321. "கந்தம் கமழ்மென் குழலீர் இதுஎன்
கலைவாள் மதியம் கனல்வான் எனைஇச்
சந்தின் தழலைப் பனிநீர் அளவித்
தடவும் கொடியீர் தவிரீர் தவிரீர்
வந்திங்கு உலவும் நிலவும் விரைஆர்
மலயா நிலமும் எரியாய் வருமாம்
அந்தண் புனலும் அரவும் விரவும்
கடையான் அருள்பெற்று உடையார் அருளார்."

தெளிவுரை: பரவையார் செந்துவர்வாய் நெகிழும் வண்ணம், "வாசனை மிகும் கூந்தலையுடைய தோழிகளே! அமிர்தக் கலைகள் உடைய ஒளி மிகுந்த சந்திரன் என்னைச் சுடுகின்றது. சந்தனக் குழம்பில் பன்னீர் கலந்து தடவும் பூங்கொடி போன்ற இடையுடையவர்களே! இதனைத் தவிருங்கள். இங்கு உலவுகின்ற நிலவும், தென்றல் காற்றும்

நெருப்பென வருத்துகின்றது. குளிர்ந்த கங்கையும், நாகாபரணமும் தரித்த சடைமுடியுடையவராகிய சிவபிரான் அருள் பெற்ற தம்பிரான் தோழர் அருள் செய்யாதவராயினரே! நான் என் செய்கேன்!" என்று மொழியலானார்.

கந்தம் - நறுமணம். குழல் - கூந்தல். கலைவாள் மதியம் - அமுத கலைகள் உடைய ஒளி மிக்க நிலவு. சந்து - சந்தனம்.சந்தின் தழல் - சந்தனத்தின் குளுமை காதல் பெருக்கால் அனல் போன்று தோன்றும் உணர்வைச் சுட்டுதலாம். அளவி - கலந்து. கொடியீர் - பூங்கொடி போன்ற இடையுடைய பெண்கள்: அவர்கள் செயல் தனக்குக் கொடுமை செய்தால் அதனைக் குறிப்பாகச் சுட்டுதலும் ஆம். விரை - நறுமணம். மலயாநிலம் - மலை ஆனிலம் என்றாகிக் காற்றைக் குறித்தது. ஆல் - அசைச்சொல். அந்தண்புனல் - கங்கை. அரவு - பாம்பு. இவை இரண்டும் சிவபிரான் சடைமுடியின்கண் நிலவும் குறிப்புச் சாற்றப்பட்டது. சடையான் - சிவபிரான். உடையார் - நம்பியாரூரர். 175

322. புலரும் படியன்று இரவுஎன் னளவும்
பொறையும் நிறையும் இறையும் தரியா
உலரும் தனமும் மனமும் வினையேன்
ஒருவேன் அளவோ பெருவாழ்வு உரையீர்
பலரும் புரியும் துயர்தான் இதுவோ
படைமன் மதனார் புடைநின்று அகலார்
அலரும் நிலவும் மலரும் முடியார்
அருள்பெற்று உடையார் அவரோ அறியார்.

தெளிவுரை: "இந்த இரவுப் பொழுது என்னளவில் விடியாது நீண்டு கொண்டுள்ளதே! இதனைத் தாங்கிக் கொள்ளும் திறனும், பொறுமையும் இல்லையே! என் புற உறுப்பாகிய தனமும், அக உறுப்பாகிய மனமும் உலர்ந்து காய்கின்றனவே! இத்தனையும் நீங்காத தீவினையேனாகிய என் ஒருத்தி மட்டிலா நிகழ வேண்டும்? இங்கு என்னைச் சூழ்ந்துள்ள நீங்கள் நான் பெருவாழ்வு கொள்வதற்குரிய வழியை உரைப்பீராக! நீங்கள் புரியும் செயல் இதுவோ! இது துயர்ப் படுத்துகின்றதே! கரும்பு வில்லும் மலாக்கணையும் உடைய மன்மதன் என் பக்கத்திலிருந்து அகன்று செல்லாதவராக உள்ளார். என்னுடைய தன்மையைக் கொன்றை மலரையும், பிறைச் சந்திரனையும் சடைமுடியின்கண் தரித்த சிவபிரான் திருவருள் பெற்ற வன்தொண்டர் அறியாதவராயினரே!" என்று பரவையார் மேலும் இரங்கலானார்.

புலர்தல் - விடிதல். பொறையும் நிறையும் - பொறுமையும், மன அடக்கமும். இறை - நொடிப்பொழுது. உலரும் - வாடும். தனம் -

மார்பகம். வினையேன் - பரவையார் தம்மைக் கூறிக் கொண்டது. அலர் - கொன்றை மலர். மலரும் - விளங்கும். முடியார் - சடை முடி கொண்டுள்ள சிவபிரான். உடையார், அவர் - நம்பியாரூரர். 176

323. "தேரும் கொடியும் மிடையும் மறுகில்
திருவா ரூரீர் நீரே அல்லால்
ஆர்என் துயரம் அறிவார் அடிகேள்
அடியேன் அயரும் படியோ இதுதான்
நீரும் பிறையும் பொறிவாள் அரவின்
நிரையும் நிரைவெண் தலையின் புடையே
ஊரும் சடையீர் விடைமேல் வருவீர்
உமதுஅன் பிலர்போல் யானோ உறுவேன்."

தெளிவுரை: இவ்வாறு பல்வகையான நிலையில் உரைத்து வரும் பரவையார் தியாகேசப் பெருமானிடம் விண்ணப்பிக்கும் வகையில், "தேரும் கொடியும் நெருங்கியுள்ள திருவீதியுடைய திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானே! உம்மையன்றி யார் என்துயரைத் தீர்க்கக் கூடியவர் உள்ளார்! அடியேன் சோர்ந்து வாடுதல் தேவரீர்க்குத் திருவுள்ளமோ! கங்கையும், பிறைச் சந்திரனும், புள்ளிகளையுடைய ஒளிமிக்க பாம்பின் வரிசையும், மண்டையோடுகளின் வரிசையும் ஒருங்கே நிலவும் சடைமுடியுடைய பெருமானே! இடப வாகனத்தின் மீது அமர்ந்து அருள்புரிய வருபவரே! தேவரீர் பால் அன்பில்லாதவர்களைப் போன்று யான் துன்புறுவேனோ!" என்று உரைக்கலானார்.

சிறப்புரை: ஈண்டு ஈசன்பால் அன்புடையவர் துன்பம் அடைய மாட்டார்கள் என்பதும் அன்பிலார் துன்பம் அடைவார்கள் என்பதும் குறிப்பாகச் சுட்டும் வகையில் ஈற்றடியில் சாற்றப் பெறுதலைக் காண்க. அடியவர்கள் துன்பத்தை எம்பெருமான் தீர்த்தருளும் கருணையைத் திருஞான சம்பந்தர் இரண்டாம் திருமுறை திருக்கடவூர் மயானத் திருப்பதிகத்தில்.

"பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர்எம் பெருமான் அடிகளே!"

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

மிடை - நெருக்கம். மறுகு - வீதி. அடிகேள் - பெருமான். அயரும்படியோ - சோர்தல் திருவுள்ளமோ! நீர் - கங்கை. பிறை - பிறைச் சந்திரன்.

பொறி - புள்ளி. வாளரவு - ஒளி திகழும் பாம்பு. நிரை - வரிசை. நிரை வெண்தலை - வரிசையாகக் கோர்க்கப்பட்ட மண்டையோடுகள். ஊரும் சடையீர் - தாங்கும் சடைமுடியுடையவரே! 177

ஈசன் திருவருள் புரிந்து மணம் நிகழ்ச் செய்தல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

324. என்றின் எனவே பலவும் புகலும்
இருள்ஆர் அளகச் சுருள்ஓ தியையும்
வன்தொண் டரையும் படிமேல் வரமுன்பு
அருள்வான் அருளும் வகையார் நினைவார்
சென்றும் பர்களும் பணியும் செல்வத்
திருவா ரூர்வாழ் பெருமான் அடிகள்
அன்றங்கு **"அவர்மன் றலைநீர் செயும்"** என்று
அடியார் அறியும் படியால் அருளி.

தெளிவுரை: இத்தன்மையில் பலவாறு புகலும் கருமை விளங்கும் சுருண்ட கூந்தலையுடைய பரவையாரையும், வன்தொண்டரையும் இவ்வுலகத்தில் பிறவி கொள்ளுமாறு அருளிச் செய்த சிவபிரான் அருள் புரியும் தன்மையை யாரால் நினைத்துப் பார்க்க இயலும். அப்போது தேவர்களும் வந்து பணிகின்ற செல்வம் கொழிக்கும் திருவாரூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், "பரவையார், நம்பியாரூரர் ஆகியோர்க்குத் திருமணத்தை நடத்தி வைப்பீர்." என்று அடியவர்கள் அறியுமாறு அருள்புரிந்தார்.

சிறப்புரை: சிவபெருமான் இத்தன்மையில் அருளிச் செய்பவர் என்று யாராலும் எண்ணிப் பார்க்க முடியாது என்னும் கருத்து, "அருளும் வகை யார் நினைவார்" என்று சாற்றப்பட்டது. இந்நிலையில் புத்தூர்ச் சடங்கவியாரின் திருமகளை மணம் செய்ய வொட்டாது தடுத்ததும், பின்னர் நம்பியாரூரரை அடிமை கொண்டதும், இதற்குச் சான்றாகக் கொள்க. பரவையாரை ஆரூரர்க்கு மணம் கொள்ளச் செய்ததும் சங்கிலியாரை வன்தொண்டர்க்கு மணம் முடித்ததும் பின்னர்ப் பரவையாரின் இல்லம் நோக்கித் தூது சென்றதும் இத்தன்மையே. இவ்வாறு சிவபிரான் திருவருட்செயலை யாவராலும் அறிதற்கு அரியது என்பதனை விகிர்தன் என்னும் சொல்வழி மாணிக்க வாசகர், போற்றித் திருஅகவல் வரி 105 - இல், "விரை சேர் சரண விகர்தா போற்றி" என்று அருளிச் செய்தவாறும் கொள்க.

இருள் - கருமை. அளகம் - தலை அலங்காரம், ஐம்பால் எனப் பெறும்

குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பவற்றுள் ஒன்று. ஓதி - கூந்தல். படி - பூவுலகம். முன்பு அருள்வான் - திருக்கயிலையில் அருள் புரிந்த சிவபிரான். உம்பர் - தேவர். பெருமானடிகள் - தியாகேசப் பெருமான். மன்றல் - திருமணம். 178

325. மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ
"மங்கை பரவை தன்னைத் தந்தோம்
இன்னவ் வகைநம் அடியார் அறியும்
படியே உரைசெய் தனம் "என் றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன்
பொருமா கரியின் உரிவை புனைவான்
அன்ன நடையாள் பரவைக்கு" அணியது
ஆரூரன்பால் மணம்" என்று அருள.

தெளிவுரை: நம்பியாரூரர் மகிழுமாறு, "பரவையாரை உனக்குத் தந்தோம். இதனை நம் அடியவர்கள் அறியுமாறு உரைத்தனம்." என்று உரை செய்த பொன்னென விளங்கும் சடைமுடியுடையவராயும், இடப வாகனத்தையுடையவராயும், யானையின் தோலைப் போர்த்தியவராயும் உடைய சிவபிரான் அன்னம் போன்ற நடையுடைய பரவையார்க்கு, "உனக்கு நம்பியாரூரன்பால் திருமணம் நிகழப் போகிறது." என்று அருள் செய்தார்.

சிவபிரான் யானை தோலையுரித்த வரலாறு: தாருக முனிவர்கள் சிவபிரானை அழிக்கும் பொருட்டுத் தீமை பயக்கும் வேள்வியைச் செய்தார்கள். அதிலிருந்து பெரிய யானை ஒன்று தோன்றி ஈசனை நோக்கிப் போர் செய்து அழிக்கச் சென்றது. சிவபிரான் அந்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்து வெற்றிக்கு அடையாளமாகப் போர்த்திக் கொண்டார். இவ்வரலாறு "இவண் பொருமாக கரியின் உரிவை புனைவான்." என்று சாற்றப்பட்டது.

நாவலூர் கோன் - நம்பியாரூரர். பொன் - பொன் போன்று ஒளிர்கின்ற. சடையன் - சடைமுடியுடைய சிவபிரான். விடையவன் - இடப வாகனம் உடையவர். பொருமாகரி - எதிர்த்துப் போர் செய்த பெரிய யானை. உரிவை - தோல். அணியது - நிகழப் போகிறது. 179

326. காமத் துயரில் கவல்வார் நெஞ்சில்
கரைஇல் இருளும் கங்குல் கழிபோம்
யாமத்து இருளும் புலரக் கதிரோன்
எழுகா லையில்வந்து அடியார்கூடிச்

சேமத் துணையாம் வந்து அடியார் கூடிச்
தொழுதே திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை
தகும்நீர் மையினால் நிகழச் செய்தார்.

தெளிவுரை: காமத்துயர் கொண்டு கவலையோடு இருந்த இருவர்க்கும் எல்லையில்லாது நீண்டு கொண்டிருந்த இரவு கழந்து இருள் மறைந்து சூரியன் எழுந்தது. உதய காலத்தில் அடியவர் பெருமக்களெல்லாம் ஒன்று கூடி, சேமநிதி போன்று துணை செய்யும் தியாகேசப் பெருமான் திருவருளை எண்ணித் தொழுது நம்பியாரூரர் மகிழுமாறு மாலையணிந்த கூந்தலையுடைய பரவையாரை மரபு முறைக்கு ஏற்பத் திருமணம் செய்து வைத்தார்கள்.

சிறப்புரை: சிவபிரான் அடியவர்களுக்குச் சேமநிதி போன்று விளக்குதலைச் "சேமத் துணை" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் நமக்காக நாம் சேர்த்து வைக்கும் பொருள் நமச்சிவாய என்கிற திருவைந்தெழுத்தின் உச்சாடனமே என்னுமாறு திருநாவுக்கரசர் 4 - ஆம் திருமுறை கோயில் திருப்பதிகத்தில்,

"வைச்ச பொருள்நமக்கு ஆகும்என்று
எண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன் அணிதில்லை
அம்பலத்து ஆடு கின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண்டாற் பின்னைக்
கண்டுகொண்டு காண்பதென்னே."

எனவும், திருப்பாதிரிப் புலியூர்த் திருப்பதிகத்தில்

"வைத்த பொருள் நமக்காம் என்று
சொல்லி மனத்து அடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய
நமஎன்று இருக்கின்அல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார்
அவர் பாதிரிப் புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ
அறிவிலாப் பேதைநெஞ்சே."

எனவும் அருளிச் செய்தவாறு காண்க. இதன் வழிச் சேமத்துணை என்பது திருவைந்தெழுத்தென உணர்த்தலாம்.

கவல்வார் - வருந்துபவர்களான நம்பியாரூரர் மற்றும் பரவையார். கரைஇல் - அளவில்லாத. இருள் கங்குல் - துன்பம் தரும் இரவு. சேமத் துணை - பாதுகாப்பு நிதி, திருவைந்தெழுத்து என்க. தாமக்குழல் - மாலையணிந்த கூந்தல். வதுவை - திருமணம். தகும் நீர்மை - தக்கதான மரபு முறை.

180

சுந்தரர் மணவாழ்வில் மேவி இறைவன் பால் தமிழ் மாலைகள் பாடுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

கொச்சகக் கலி

327. தென்நாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாரும் கொடி மருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலையோங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்.

தெளிவுரை: தேவர் பிரானாகிய தியாகேசப் பெருமான் திருவருளால் அழகிய நாவலூர்க் கோனாகிய நம்பியாரூரர் மின்னற்கொடி போன்ற இடையுடைய பரவையாரை யடைந்து சார்ந்து பலநாளும் பயில்கின்ற யோக நெறியில் சிவனும், சக்தியும் என விளைந்திருந்தார்.

சிறப்புரை: நம்பியாரூரர் காதல் வகையில் நெஞ்சம் செலுத்தினாராயினும் அவர் திருத்துறையூரில் வேண்டியவாறு தவநெறியும் அதன் வழியாக யோகநிலையில் மேவிய தன்மையில் சிவயோகத்தில் ஆழ்ந்து நின்றார் எனக் காண்க. இத்தன்மையில் திருப்பாட்டு 165 இல் உரைத்த வழியும் கொள்க.

தென் நாவலூர் மன்னன் - நம்பியாரூரர். தேவர்பிரான் - தியாகேசப் பெருமான். மருங்குல் - இடை. ஓங்கல் - மலை. பரவையார் மார்பகத்திற்கு உவமை. பரம்பரை - சிவம், சக்தி. விரும்பினார் - விழைந்திருந்தார்.

181

328. தன்னைஆள் உடையபிரான் சரணாவிந்த மலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தமிழ்மாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னடையாளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்.

தெளிவுரை: நம்பியாரூரர் தன்னை ஆளாகக் கொண்ட சிவபிரான்

திருவடியாகிய தாமரையைச் சென்னியிலும், சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகமான இனிய தமிழ் மாலைகள் பலவற்றை அருளியும் பரவையாருடன் கூடி விளையாடியும் வரலானார்.

சிறப்புரை: ஈசன்திருவடி மலரைச் சென்னியில் வைத்த தன்மையைத் தியானத்தில் பெறும் யோகநிலை எனவும், சிந்தையில் வைத்த தன்மையினைப் பக்தியின் பாலராய் ஏத்துதல் எனவும் காண்க. இறைவனுக்குப் பூமாலை சாத்துதல் போன்று பாமாலை சாத்துதலும் பேறுடைத்து என்க. விளையாடுதல் என்னும் தன்மையானது வாழ்வின் பொதுமையாகக் கொண்டு வினைசாரா பற்றின்றி மேவும் செயலாதலாம். இதனைச் சிவபிரான் தம்மைத் தோழமையாகத் தந்து, "வேட்கை தீர வாழி! மண் மேல் விளையாடுவாய்" என்று திருப்பாட்டு 273 - இல் அருளியவாறும் காண்க.

சரண் - திருப்பாதம். அரவிந்தம் - தாமரை. தமிழ் - இனிமை. தொடைமாலை - தொடுத்துப் பாடும் பாமாலை. 182

சுந்தரர் திருக்கோயிலை நண்ணுதல்

- இது முதல் 6 - பால்கள் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

329. மாதுடன் கூட வைகி
மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு
செய்குன்றின் புடை ஓர்தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச்
செழுந்தவிசு இழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக்
கும்பிடும் விருப்பால் நம்பி:

தெளிவுரை: நம்பியாரூரர் பரவையாருடன் இனிது கூடியிருந்த மாளிகை, சோலை, மலர்கள் விளங்கும் பொய்கை, செய்குன்றின் சார்பிடம், மேடை முதலிய இடங்களில் மகிழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் குளிர்ந்த முத்துக்கள் விளங்கும் பந்தரின் கீழ் அமைந்த இருக்கையிலிருந்து இறங்கித் தம் இறைவன் எருந்தருளியுள்ள பூங்கோயிலை அடைந்து கும்பிடும் விழைவு கொண்டார்.

மாது - பரவையார். வாவி - பொய்கை. தெற்றி - மேடை: திண்ணை. தவிசு - இருக்கை. நாதர் - தியாகேசப் பெருமான். 183

330. அந்தரத்து அமரர் பேற்றும்
அணிகிளர் ஆடை சாத்திச்
சந்தனத்து அளறு தோய்ந்த
குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரர் சுழியம் சாத்திச்
சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம்
எழில்மிக விளங்கித் தோன்ற:

தெளிவுரை: தேவர்கள் போற்றிப் பாராட்டும் வண்ணம் ஆடை அணிந்து சந்தனம், குங்குமம் முதலான வாசனைக் குழம்பு பூசி, அழகிய கிரீடத்தைத் தலையில் சாத்தி, மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை யணிந்து இந்திரன் விளங்கும் செல்வச் செழிப்பினும் மேன்மையான எழில் விளங்க நம்பியாரூரர் காணப்பட்டார்.

அந்தரத்து அமரர் - தேவர். அளறு - வாசனைக் குழம்பு. சுழியம் - தலைமுடி அலங்காரம்: கிரீடம் போன்றதும் ஆம். மணிமாலை - மணிகளால் கோர்க்கப்பட்ட மாலை. இந்திரத் திரு - செல்வச் செழிப்பைக் குறித்தது. *184*

331. கையினில் புனைபொன் கோலும்
காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளும் நூலும்
நெற்றியில் விளங்கும் நீறும்.
ஐயனுக்கு அழகிதாம் என்று
ஆயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலம்
தழைப்ப வீதியினைச் சார்ந்தார்.

தெளிவுரை: கையினில் அழகிய பொற்பிரம்பும், செவியில் தோடும், திருமேனியில் இனிது துவளும் முப்புரி நூலும், நெற்றியில் வெள்ளொளியுடன் விளங்கும். திருவெண்ணீறும், தலைவனாகிய நம்பியாரூரர்க்கு அழகுடைத்து என்று இழையணிந்த மகளிர் போற்றச் சைவத்தின் மெய்க்கோலம் விளங்கச் சுந்தரர் வீதியை அடைந்தார்.

முன்னிரு பாடல்களில் வரும் நம்பி, தோன்ற என்பது சார்ந்தார் என வினை முடிபு பெறும்.

நூல் - முப்புரிநூல். நீறு - திருவெண்ணீறு. ஐயன் - சுந்தரர். ஆயிழை - இழைக்கப்பட்ட ஆபரணங்கள். சைவ மெய்த்திருவின் கோலம் - சிவனடியார் திருக்கோலம் மற்றும் இப்புராணத் திருப்பாடல்கள் *16, 17, 18* ஆகியவற்றில் உரைத்தவாறும் ஒப்பு நோக்குக. *185*

332. நாவலூர் வந்த சைவ
நற்றவக் களிறே என்றும்
மேவலர் புரங்கள் செற்ற
விடையவர்க்கு அன்ப என்றும்
தாவில்சீர்ப் பெருமை ஆரூர்
மறையவர் தலைவ என்றும்
மேவினர் இரண்டு பாலும்
வேறு வேறு ஆயம் போற்ற :

தெளிவுரை: நம்பியாரூரார்க் கண்ட சிவனடியார்கள், "திருநாவலூரில் வந்துதித்த சைவக் களிறே! இறைவனைப் போற்றாது பகை கொண்டு போர் புரிந்த முப்புர அசுரர்களையும், அவர்களின் கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கிய இடப வாகன சிவபிரான் அன்பரே! குறைவில்லாத பெருமையுடைய திருவாரூரில் விளங்கும் அந்தணர்களின் தலைவரே!" என்று போற்றிப் புகழ்ந்தவர்களாய் இரு பக்கமும் சூழ்ந்து வந்தார்கள்.

போற்ற என்பது அடுத்த பாடலில் வந்தார் என வினை முடிபு பெறும்.

நாவலூர் - சுந்தரர் அவதாரம் செய்த திருத்தலம். சைவ நல் தவக் களிறு - சிவனடியார். புரங்கள் - முப்புரங்களைக் குறித்தது. மேவலர் - பகைவர். விடையவர் - சிவபிரான். விடை - இடபம். ஆயம் - சிவனடியார்கள். *186*

333. கைக்கிடா குரங்கு கோழி
சிவல்கவு தாரி பற்றிப்
பக்கம்முன் போது வார்கள்
பயில்மொழி பற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர்
விரை அடைப் பையோர் சூழ
மைக்கருங் கண்ணி னார்கள்
மறுக நீள் மறுகில் வந்தார்.

தெளிவுரை: கையில் கிடா, குரங்கு, கோழி, காடை, கவுதாரி ஆகியவற்றைப் பற்றி முன்னும் புறமும் அன்பர்கள் செல்ல, குறிப்பு மொழிகளும் சாற்றி அவ்விலங்கு, பறவைகள் முதலானவற்றை ஓச்சும் மொழிகள் கூறி, பூங்கூடைகளையும் நறுமணம் கமழும்

தாம்பூலங்களும் விளங்கும் பைகளுடன் அன்பர்கள் அருகு சூழ, மை தடவிய கண்களையுடைய மகளிர் உலாவர, நீண்ட வீதியில் சுந்தரர் வந்தார்.

சிறப்பின் மிக்க பெரியோர்கள் செல்லும் போது இது போன்ற ஊர்வலங்கள் சூழ்ந்து ஏகுதல் பெருமைக்குரிய மரபு என்பது குறிப்பிடத்தக்கது.

கிடா - ஆட்டுக்கிடா. சிவல் - காடை. பயில்மொழி - விலங்குகளை ஏவும் குறிப்புச் சொல். பிடகை - கூடை. விரை - நறுமணம். அடைப்பை - வெற்றிலைப் பாக்கு முதலியன வைத்துள்ள பை. மைக்கருங் கண்ணினார் - மை தடவப் பெற்ற மகளிர். மறுக - உலா வர. மறுகில் - வீதியில். *187*

334. பொலம் கலப் புரவிப் பண்ணி
போதுவார் பின்பு போதா
இலங் கொளி வலயப் பொன் தோள்
இடையிடை மிடைந்து தொங்கல்
நலம் கிளர் நீழல் குழ
நான்மறை முனிவ ரோடும்
அலங்கல் அம் தோளி னான் வந்து
அணைந்தனன் **அண்ணல் கோயில்.**

தெளிவுரை: அழகிய அணிகள் பூண்ட ஆடல் குதிரைகளை ஆடச் செய்பவர்கள் முன்பு செல்ல, ஒளி வீசுகின்ற வாகு வலயங்களை அணிந்து நலன்கள் நல்கும் மயிற்பீலியால் உண்டாகும். குடை நிழல் சூழ, நான்கு வேதங்களில் வல்ல அந்தணர்கள் உடன்வர, மாலையணிந்த தோளையுடைய ஆரூரர் தியாகேசப் பெருமான் திருக்கோயிலான பூங்கோயிலை நண்ணினார்.

புரவி - பொய்க்கால் குதிரை. நரங்கினார் நீழல் - குடை நிழல்: ஒளியும் ஆம். நான்மறை முனிவர் - அந்தணர். அலங்கல் அம் தோளினான் - மாலையணிந்த அழகிய தோள்களையுடைய ஆரூரர். அண்ணல் - சிவபிரான். *188*

தேவாசிரிய மண்டபத்தில் இருந்த அடியார்களுக்குத் தான் அடியராதல் என்று கொலோ என்று எத்தியவராய் ஆரூரர் இறைவனை வேண்ட திருக்காட்சி நல்குதல்

- இதவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்.

335. கண்ணுதல் கோயில் தேவா
சிரியனாம் காவணத்து
விண்ணவர் ஒழிய மண்மேல்
மிக்கசீர் அடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில்
இவர்க்கு **யான் அடியே னாகப்**
பண்ணும்நாள் எந்நாள் என்று
பரமர் தான் பரவிச் சென்றார்.

தெளிவுரை: திருக்கோயிலின் கண் உள்ள தேவாசிரிய மண்டபத்தை அடைந்த ஆரூரர், தேவர்களேயல்லாது மண்ணுலகத்தில் மிக்கு விளங்கும் செம்மையுடைய எண்ணற்ற அடியவர்கள் ஆங்குக் குடியிருக்க, இவர்களுக்குத் தான் அடியவனாக ஆகும் நன்னாள் என்று கொல்லோ! என்று எண்ணியவராய்ப் பரமன் திருத்தாளைப் பரவிக் கோயிலுள் சென்றார்.

கண்ணுதல் - சிவரிரான். காவணம் - மண்டபம். விண்ணவர் ஒழிய - தேவர்களே யல்லாது. மண் -இவ்வுலகம். எண்ணிலார் - அநேகர்: என்றல்லவர்கள். *189*

336. அடியவர்க்கு அடியன் ஆவேன்
என்னும்ஆ தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில்
பணிந்து கைகுவித்துப் புக்கார்
கடிகொள் பூங் கொன்றை வேய்ந்தார்
அவர்க்கு எதிர் **காணக் காட்டும்**
படிஎதிர் தோன்றி நிற்கப்
பாதங்கள் பணிந்து பூண்டு:

தெளிவுரை: கொடிகளையுடைய உயர்ந்த வெற்றியுடைய உட்கோபுரத் திருவாயிலை வணங்கிக் கைகூப்பித் தொழுது அடியவர்களுக்கு அடியவனாக ஆவேன் என்று அன்பு பெருக ஆரூரர் வேண்டினார். அஞ்ஞான்று நறுமணம் கமழும் அழகிய கொன்றை மாலை சூடிய சிவபிரான், நம்பி காணுமாறு திருக்காட்சி நல்க, வன்தொண்டரும் பெருமான் திருவடிகளைத் தன் சென்னிமிசைப் பூண்டு ஏத்துதல் ஆனார்.

இவண் பூண்டு என்பது பாடல் 341 - இல் இன்னவாறு ஏத்தும் என்று வினைமுடிபு பெறும்.

சிறப்புரை: தன்னைத் தரிசிக்கும் பக்தர்கள் வேண்டியவாறு வெற்றி தரும் பரமன் திருவருளைச் சாற்றும் வண்ணம் தோன்ற "நெடுங் கொற்ற வாயில்" எனப்பட்டது.

கொற்றம் - வெற்றி. கொன்றை வேய்ந்தார் - சிவபிரான். அவர்க்கு - சுந்தரரைக் குறித்தது. 190

வன் தொண்டர் இறைவனைப் போற்றுதல்
- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

கலி விருத்தம்

337. மன்பெருந்திரு மாமறை வண்டு சூழ்ந்து
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
தன்பெ ரும்பர மானந்த நல்மது
என்த ரத்தும் அளித்தெதிர் நின்றன.

தெளிவுரை: தியாகேசப் பெருமான் திருக்காட்சி நல்கக் கண்டு தரிசித்த வன்தொண்டர் தன் சென்னிமிசை அத்தாள்களைத் தாங்கிச், "சிறப்புப் பொருந்திய வேதமாகிய வண்டு சூழ்ந்து விளங்கவும், அன்பர்தாம் சிந்தையில் மலர்ந்ததும் ஆகிய செந்தாமரையாய் மேவிப் பரமானந்தம் என்கிற இனிய தேனைத் தன்னிடத்தும் அளித்து எதிர் நின்றனவே!" என்று ஏத்தி மேலும் உரைக்கலானார்.

சிறப்புரை: நம்பியாரூரர் இறைவன் திருவடித் தாமரையை வேதங்களாகிய வண்டுகள் ரீங்காரம் செய்து ஒலித்துச் சூழ்ந்து கொண்டிருத்தலைத் தில்லை நடராசப் பெருமானை வணங்கிய நிலையில் திருப்பாட்டு 251, 252 - இல் சாற்றியவாறும் காண்க.

பெருந்திரு - பெருஞ்செல்வம். மாமறை - பெருமையுடை வேதம். இது பெருமானின் திருவடியாகிய தாமரையில் வண்டின் ரீங்காரம் போன்று ஒலித்து மேவுதலைச் சாற்றுதலாம். 191

338. ஞாலம் உய்ய நடம்மன்றுள் ஆடின
காலன் ஆருயிர் மாளக் கறுத்தன
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன.

தெளிவுரை: சிவபிரான் திருவடிகள் உலகம் உய்யும் வகையில் மன்றுள் நடனம் ஆடின. மார்க்கண்டேயரிக் உயிரைக் கவர வந்த காலனின் அருமையுடைய உயிரை மாய்ப்பதற்குன் சின்ம் கொண்டன. நறுமண மாலை சூடியவரும் நீண்ட கூந்தலையுடையவரும், பெருமையுடைய இமய மலையின் நாயகியாகவும் விளங்கும் பார்வதி தேவியின் திருக்கரங்களால் பெருமையுடன் வருடச் சிவந்தன.

நடம் மன்று - பெருமான் திருநடம் புரியும் ஐந்து சபைகளைன் குறித்தது. 1. திருவாலங்காடு - இரத்தின சபை, 2. தில்லை - பொற்சபை, 3. மதுரை - வெள்ளியம்பலம், 4. திருநெல்வேலி - தாமிர சபை, 5. திருக்குற்றாலம் - சித்திர சபை. தாழ்குழல் - நீண்ட கூந்தல். மாமலையாள் - பார்வதி தேவி. 192

339. நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாய்எழும் சோதியுள் சோதிய
ஆதி மால் அயன் காணா அளவின.

தெளிவுரை: நல்லொழுக்க நெறியில் மேவும் பெருந்தவ வேந்தர்கள் நெஞ்சில் பொலிய விளங்கும் சிவபிரான் திருப்பாதங்கள், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்துள் ஆழ்ந்து கிடப்பவர்களைத் திருவருள் வயத்தால் பக்குவப்படுத்தி மலங்களை நீக்கியும், அஞ்ஞானத்தைப் போதித்தும் நன்னெறிப் படுத்துவன, பேரொளியாய் விளங்கி அப்பேரொளி எழுவதற்கும் உள்ளொளியாய் விளங்குவன, திருமால், பிரமன் ஆகியோரும் காண முடியாத அருமையுடையன.

மாதவர் - தவ வேந்தர். வேதியாதவர் - மும் மலத்தினின்றும் நீங்காதவர். வேதித்தல் - மும் மலத்தை நீக்குதல். ஆதி - தோற்றம். மால் - திருமால். அயன் - பிரமன். 193

340. வேத ஆரணம் மேல்கொண்டு இருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத்து ஆண்டன
ஏதம் ஆனவை தீர்க்க இசைந்தன
பூத நாதநின் புண்டரீ கப்பதம்.

தெளிவுரை: இவ்வாறு போற்றித் துதிக்கும் ஆரூரர், "பெருமானே! உயிர்களுக்கெல்லாம் தலைவனே! தேவரீருடைய தாமரைப் பதமானது, நான்கு வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றுக்கெல்லாம் மேற்கொண்டு விளங்க, எளியேன் செய்த குற்றங்களைப் பொறுத்து

ஆட்கொண்டு அருளிச் செய்தன. மேலும் குற்றமானவைகளைத் தீர்க்க இசைந்தன." என்றார்.

சிறப்புரை: இங்குச் செய்பிழை பொறுத்து ஆண்டன என்பது இறைவனைப் பித்தன் என்று ஏசியமையும் வேதியராக வந்த சிவபிரான் கையில் இருந்த ஓலையை வாங்கிக் கிழித்து எறிந்தமையும் என்க. ஏதும் தீர்க்க இசைந்த என்பது இப்பிறவி நீக்கத்திற்கு இறைவன் புரிந்த பேரருள் என்க.

ஏதம் - குற்றம், பிறவியின் தன்மை. பூதம் - உயிர்கள். புண்டரீகம் - தாமரை.

194

சிவபிரான் திருத்தொண்டர்களின் பெருமையைச் சாற்றுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

341. இன்னவாறு ஏத்தும் நம்பிக்கு
ஏறுசே வகனார் தாமும்
அந்நிலை அவர்தாம் வேண்டும்
அதனையே அருள வேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள்
வழித் தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள்
பெருமையை அருளிச் செய்வார்.

தெளிவுரை: இவ்வாறு நம்பியாரூரர் போற்றித் துதிக்க இடப வாகனத்தையுடைய ஈசன், அவர் வேண்டியபடியே அருள் புரியும் வகையில் பெருமை விளங்கும் சிறப்புடைய அடியவர்களின் மரபு சார்ந்த திருத்தொண்டை உணரும் வகையில் பெரு ஞானத்தை அளித்து அத்தகையோருடைய பெருமைகளையும் உரைக்கலானார்.

ஏறு சேவகனார் - இடப வாகனம் கொண்ட ஈசன். மன்னும் - சிறப்புடைய.

195

342. "பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம்மேல் ஒன்றும் இல்லார்

அருமையாம் நிலையில் நின்றார்.
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைவாய்" என்று:

தெளிவுரை: "அடியவர்கள் பெருமையில் பிறரை ஒப்புமை கூறுதற்கு அரியவராய்த் தமக்குத்தாமே இணையாக விளங்குபவர்கள். அத்தகையோர் எம்மையே சிந்தித்துப் போற்றி ஒழுகுதலால் எம்மை எப்போதும் உடையவராய் விளங்குபவராயினர். பலவிதமான மாச்சரியங்களும் இடமின்றிச் சிவ உணர்வே கொண்டு விளங்குவதால் பிறவி முதலான ஊனங்கள் இல்லாதவர்களாயினர். இத்தன்மையில் அருமை மிக்க நிலையில் நின்ற வழி அன்பின் வழி மேவி இன்பத்தில் திளைப்பவராயினர். இவர்கள் இறப்பும், பிறப்பும் கடந்தவர்களாவார்கள்; இவர்களை நீ அடைவாய்." என்று சிவபிரான் அருளிச் செய்தார்.

இத்தன்மையான அடியவர்களின் பெருமையைத் திருக்கூட்டச் சிறப்பு, திருப்பாடல்கள் 139 முதல் 145 வரையில் உரைத்தவாறும் காண்க.

என்று என்பது அடுத்த பாடலின் "அருளிச் செய்ய " என வினை முடிபு பெறும்.

தம்மை - தமக்குத் தாமே. பேணல் - போற்றித் துதித்தல். எம்மை - ஈசனைக் குறித்தது. ஒருமை - ஒருமையுணர்வு: மனம் ஈசன்பால் உறையும் மாண்பு என்க. ஊனம் - குற்றம்: பிறவித் துன்பம். இருமை - இறப்பும் பிறப்பும்.
196

343. நாதனார் அருளிச் செய்ய
நம்பியாரூரர் "நான் இங்கு
ஏதம்தீர் நெறியைப் பெற்றேன்"
என்றெதிர் வணங்கிப் போற்ற
"நீதியால் அவர்கள் தம்மைப்
பணிந்துநீ நிறைசொல் மாலை
கோதுஇலா வாய்மை யாலே
பாடு" என அண்ணல் கூற.

தெளிவுரை: சிவபிரான் இவ்வாறு அருளிச் செய்ய நம்பியாரூரர் எதிரே வணங்கிக் "குற்றம் தீரும் நெறியைப் பெற்றேன்." என்று போற்றினார். அப்போது ஈசன், "நீதியால் இவ்வடியவர்களைப் பணிந்து நிறைவான

புகழ்மாலையைக் குற்றம் இல்லாத பெரு நெறி விளங்குமாறு பாடு." என்று கூறலானார்.

கூற என்பது அடுத்த பாடலின் அருள் செய் என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: அடியவர்களைப் பரவிப் போற்றும் செயல் பிறவி முதலான குற்றத்தைத் தீர்க்கும் நெறி என்று கருத்து. "ஏதம்தீர் நெறி" எனப் பெற்றது. இத்தன்மையில் சிவஞான போதம் சூத்திரம் 12 - இல்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலர் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே."

என்று சாற்றியவாறும் கொள்க.

பூமாலை வாடும் தன்மையுடையதாதலால் என்றும் புகழ் விளங்கும் நிலைத்து மேவும் நிறைச்சொல் மாலை கோது இலா வாய்மையுடையது எனச் சுட்டப் பெறுதலையும் காண்க.

நாதனார் - சிவபிரான். ஏதம் - குற்றம். நிறைசொல் மாலை - நிறைவுடைய புகழ் மேவும் பாமாலை. கோது இலாது - குற்றமிலாது. அண்ணல் - சிவபிரான்.

197

344. தன்னை ஆள் உடைய நாதன்
தான் அருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற
திருமுனைப் பாடி நாடர்
"இன்னவாறு இன்ன பண்பு என்று
ஏத்துகேன் அதற்கு யான்ஆர்
பன்னு பா மாலை பாடும்
பரிசெனக்கு அருள் செய்" என்ன:

தெளிவுரை: தன்னை ஆட்கொண்ட தலைவனாகிய சிவபெருமான் அருளிச் செய்ததைக் கேட்ட நம்பியாரூரர் சென்னி கொண்டு வணங்கி, பெருமானே! இத்தகைய பெருமையுடைய அடியவர்களை இன்ன பண்புடையவர்கள் என்று எவ்வாறு ஏத்துவேன். அவர்களைப் போற்றும் வகையில் யான் பாமாலை பாடுவதற்குரிய ஆற்றலைத் தந்தருள்வீர்!" என்று வேண்டினார்.

ஈற்றடியில் "என்ன" என்பது அடுத்த பாடலின் "என்றார்" என வினை முடிபு பெறும் .

தான் - சிவபிரானைக் குறித்தது. திருமுனைப்பாடி நாடர் - நம்பியாரூரர்: திருமுனைப்பாடி நாட்டின் அரச குமாரனாய் வளர்ந்தவர் எனவும் கொள்க. பண்ணுதல் - சொல்லுதல். பரிசு - திறன்: ஆற்றல். 198

சிவபிரான் அடி எடுத்துக் கொடுத்தல்
கொச்சகக் கலி

345. தொல்லைமால் வரைபயந்த
தூயாள்தன் திருப்பாகன்
அல்லல் தீர்ந்து உலகுய்ய
மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன் என்று
எல்லையில்வண் புகழாரை
எடுத்து இசைப்பா மொழி" என்றார்

தெளிவுரை: பழமை மிக்கதும் பெருமையுடையதுமான இமயமலையில் தோன்றிய தூயவளான பார்வதிதேவியைத் தன் இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரான் அஞ்ஞானத்தால் விளையும் துன்பம் தீரும் வகையில் வேதங்களை நவின்ற திருவாயால், "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்." என்று முதலாகக் கொண்டு எல்லையற்ற புகழுடைய அடியவர்களின் பெருமையை இசைப் பாடலாகப் பாடு." என்றார்.

பார்வதி தேவி திரு அவதாரக் குறிப்பு:

தட்சன் திருமகளாகிய உமையம்மை தாட்சாயணி என்னும் பெயரில் விளங்கும் கருத்தில்லாமையால் அச்சரீரத்தைத் துறந்து பர்வதராசனின் புதல்வியாக இமயமலையில் வளர்ந்து தவமியற்றிச் சிவபெருமானை மணாளனாக அடைந்தார். இப்புராண வரலாறு இத்திருப்பாட்டின் முதலடியில் சாற்றப்பட்டது.

தொல்லைமால் - பழைமையான பெருமை. வரை - இமயமலை. பயந்த தூயாள் - பார்வதி தேவி. அல்லல் - அறியாமையால் உண்டாகும் துன்பம் வேதம் அறிவைப் பெருக்கும் என்பது குறிப்பு: அருளில் உய்க்கும் எனவும் ஆம். வண்புகழார் - அடியவர் பெருமக்கள். 199

நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகை அருளிச் செய்தல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்.

346. மன்னுசீர் வயல் ஆரூர்
மன்னவரை வன்தொண்டர்
சென்னியுற அடிவணங்கித்
திருவருள்மேல் கொள்பொழுதில்

முன்னம் மால் அயனறியா
முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலை கண்டு அடியவர்பால்
சார்வதனுக்கு அணைகின்றார்.

தெளிவுரை: சிநப்பான வயல்வளம் உடைய திருவாரூர் மன்னவனான தியாகேசப் பெருமானை வன்தொண்டர், தன்தலை தரையில் படியுமாறு வணங்கிப் பூரணமான திருவருளைப் பெற்ற நிலையில், மாலும் அயனும் அறியாத முதல்வராகிய ஈசன் திருவுருக் கரந்தார். அந்நிலை கண்டு நம்பியாரூரர் அடியவர்களைச் சாரும் வகையில் தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்.

ஆரூர் மன்னவர் - தியாகேசப் பெருமான். முதல்வர் - சிவபிரான். எழுந்தருளல் - தோற்றத்தை மறைத்துக் காத்தல். 200

347. தூரத்தே திருக்கூட்டம்
பலமுறையால் தொழுது அன்பு
சேரத் தாழ்ந்து எழுந்து அருகு
சென்றெய்தி நின்றழியா
வீரத்தார் எல்லார்க்கும்
தனித்தனிவேறு அடியேன் என்று
ஆர்வத்தால் திருத்தொண்டத்
தொகைப்பதிகம் அருள் செய்வார்.

தெளிவுரை: நம்பியாரூரர் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த அடியவர் பெருமக்களைத்தொலைவில் கண்டுற்ற அளவில் பலவகையான வணக்க முறையால் தொழுது, அன்பு ததும்பத் தாழ்ந்து படிந்து எழுந்து அருகில் சென்றடைந்து, எக்காலத்திலும் குறைவுபடாது உள்ள உறுதியுடைய அத்தகையவர்களைத் தனித்தனியாகப் போற்றித் துதித்து அவர்கட்கு அடியேன் என்று சாற்றித் திருத்தொண்டர் தொகை அருளிச் செய்யலானார்.

பலமுறையால் தொழுதல் - ஏகாங்கம், திரியாங்கம், பஞ்சாங்கம், சடாங்கம், அட்டாங்கம் என்னும் ஐந்து வகையான வணக்க முறை. அழியா வீரத்தார் - அறியாமையினால் பிறர் தீங்கு செய்யினும் அதனை அன்புடன் பொறுத்தலும் ஈசன் பால் கொள்ளும் உறுதி மிக்க அன்பும் ஆகும்: விறல். மற்றும் பாடல எண் 144 (திருக்கூட்டச் சிறப்பு) காண்க. அருள் செய்வார் பாடி அருளினார். 201

348. தம்பெருமான் கொடுத் தமொழி
முதலாகத் தமிழ் மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத்
தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தான் அருளும்
உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்தொண்டர்
பாடிஅவர் எதிர்பணிந்தார்.

தெளிவுரை: தம் பெருமானாகிய தியாகேசர் அடியெடுத்துக் கொடுத்த "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் திருமொழியை முதலாகக் கொண்டு செம்மை மிகும் பொருட் செறிவு விளங்கத் திருத்தொண்டத் தொகையாகிய திருப்பதிகத்தைத் தேவர் பிரான் நல்கிய திருவருளும் உணர்வு பெற, எம்பிரானாகிய வன் தொண்டர் பாடி அவ்வடியவர்களைப் பணிந்தார்.

சிறப்புரை: ஆரூரர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை 7-வது திருப்பதிகமாகும். இத்திருப்பதிகம் சாற்றும் நோக்கத்தோடு சுந்தரர் திரு அவதாரம் கொண்டார் என்று திருப்பாட்டு 35 (திருமலைச் சிறப்பு) -இல் உணர்த்தியவாறும் காண்க. இத்திருப்பதிகம், தில்லை வாழ் அந்தணர் என்று தொடங்கி இசைஞானியார் வரையில் சாற்றித் திருக்கடைக்காப்பாக இத்திருப்பதிகத்தை ஓதுவோர் திருவாரூர் தியாகேசப் பெருமான் அன்புக்குரியவராவர் என்று சாற்றப்படுதலாய்க் கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் விளங்குதலாயிற்று.

தம்பெருமான் - தியாகேசர். உம்பர் பிரான் - சிவபிரான். எம்பெருமான் - நம்பியாரூரரைக் குறித்தது. 202

திருத்தொண்டர் வரலாறு கூறத் தொடங்குதல் - கவிக் கூற்று

349. உம்பர்நா யகர் அடியார்
பேருவகை தாம் எய்த
நம்பியா ரூரர் **திருக்**
கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழர் அவர்
தாம்மொழிந்த தமிழ் முறையே
எம்பிரான் தமர்கள் திருத்
தொண்டேத்தல் உறுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேவர்பிரான் திருத்தொண்டர்கள் திருத்தொண்டர்த் தொகைத் திருப்பாகத்தில் பேருகை கொள்ள, நம்பியாரூரர் திருக் கூட்டத்தின் நடுவே சென்று நின்றார். தம்பிரான் தோழராகிய அவர் மொழிந்த தமிழ் முறையின் வரிசைப்படி எம்பிரான் அன்பர்கள் செய்த திருத்தொண்டினைப் போற்றி உரைக்கின்றேன். இது கவிக் கூற்று.

சிறப்புரை: இத்திருப்பதிகத்தில் மிகப் பழமையான காலத்தில் விளங்கிய கண்ணப்பர், காரைக்கால் அம்மையார் முதலியோரும் அவர் காலத்தில் விளங்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், விறல் மிண்டர் நாயனார், சோமாசி மாற நாயனார், பெருமிழலைக் குறும்பர் நாயனார் போன்றோரும் சிவபிரான் உணர்த்திக் காட்டியவாறு விளங்கிற்று என்பதாம். அவ்வரிசைப்படியே சேக்கிழார் பெருமான் அடியவர்கள் வரலாற்றை உரைக்கலானார் என்க.

உம்பர் நாயகர் - சிவபிரான். எம்பிரான் தமர்கள் - சிவனடியார்கள்: திருத்தொண்டர்கள். ஏத்தல் - போற்றுதல். 203

தடுத்தாட் கொண்ட புராணம் நிறைவுற்றது.

II. தில்லைவாழ் அந்தணர் சருக்கம்

சருக்க விரிவு:

திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகமானது 11 திருப் பாடல்களைக் கொண்டு விளங்குவது. ஒவ்வொரு பாடலிலும் வரும் முதலடியை அடிப்படையாகக் கொண்டு பதினோரு சருக்கங்களைத் தலைப்புகளாகக் கொண்டு 63 நாயன்மார்களையும், 9 தொகையடியார்களையும் சேக்கிழார் பெருமான் ஏத்திப் பாடியுள்ளார். முதலாவதாக திருமலைச் சருக்கமும் 13-ஆவதாக வெள்ளானைச் சருக்கமும் கொண்டு பெரிய புராணம் அருளிச் செய்யப்பட்டது. இவற்றின்" பகுப்பு வருமாறு.

வ . எண்	தலைப்பு	நாயன்மார்	தொகையடியார்
முதற் காண்டம்:			
1	திருமலை சருக்கம்		
2.	தில்லைவாழ் அந்தணர் சருக்கம்	6	1
3.	இலை மலிந்த சருக்கம்	7	
4.	மும்மையால் உலகாண்ட சருக்கம்	6	

5. திருநின்ற சருக்கம்	7	
இரண்டாம் காண்டம்		
6. வம்பறாவரி வண்டு சருக்கம்	6	
7. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்	6	
8. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்	7	1
9. கறைக்கண்டன் சருக்கம்	5	
10. கடல் சூழ்ந்த சருக்கம்	5	
11. பத்தராய்ப் பணிவார் சருக்கம்	-	7
12. மன்னிய சீர்ச் சருக்கம்	7	
13. வெள்ளானைச் சருக்கம்	1	
ஆக	62	9

இவண் சுந்தரர் வரலாறு தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்று அறிவார் நாயனார் புராணம், வெள்ளானைச் சருக்கம் ஆகியவற்றுள் கலந்து சாற்றப்படுதலால் தனிப்பெயர் கொண்டு அமைந்தில எனக் காண்க

7. தில்லைவாழ் அந்தணர் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்:

தில்லைவாழ் அந்தணர்கள் திருநீற்றினால் நிரம்பிய கோலத்தராகி, நடராசப் பெருமானை ஏத்திப் பூசிக்கும் பேறு பெற்றவர்கள். அவர்கள் பேரன்பினால் நடராசப் பெருமானையே போற்றி வாழ்பவர்கள். அவர்கள் விதிமுறைப்படி முத்தீ வளர்த்து உயிர்களுக்குத் துன்பம் வராமல் காப்பவர்களாய் இல்லற வாழ்க்கையில் மேவி இனிது வாழ்பவர்கள்.

நடராசப் பெருமான் திருவடி போற்றுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

350. ஆதியாய் நடுவும் ஆகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும் ஆகிப்

பேதியா ஏகம் ஆகிப்
பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி!

தெளிவுரை: சிவபிரான் ஆதி மூர்த்தியாகவும், நடுவும் ஆகி, அளவு கொண்டு அறியப்படாத பெரும் பொருளும் ஆகி, சோதிச் சுடராகியும் அதனை அறியும் உணர்வாயும் இருப்பவர். மற்றும் அவர் தோன்றுகின்ற பொருள்கள் யாவும் ஆகி, அவற்றுள் பேதமறப் பொருந்தி ஏகமாகி இருப்பவர். பெண்ணும் ஆகி ஆணும் ஆகி உலகில் திருவடிவம் தாங்கித் தில்லையில் திருநடனம் புரியும் அப்பரமன் திருவடிகளைப் போற்றுதும்.

சிறப்புரை: இறைவன் ஆதியாயும் நடுவாயும் சோதியாயும் உள்ள மாண்பினை மாணிக்க வாசகர், சிவபுராணத்தில்,

"சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!"

என்று அருளியவாறும் காண்க. மற்றும் சிவபிரான் பெண்ணாகவும் ஆணாகவும் உள்ள தன்மையைத் திருவாசகம் திருவண்டப் பகுதியில்,

"பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க!
கண்ணால் யானும் கண்டேன் காண்க!"

என்று அருளியவாறும் கொள்க.

சிவபிரான் திருத்தில்லையில் திருநடனம் புரியும் திருக்கோலம் திருவைந்தெழுத்தாகவும் ஐந்தொழிற் புரியும் அருஞ் செயலாகவும் சுட்டும் வகையில், இத்திருப்பாட்டில், "போதியா நிற்கும் தில்லை பொது நடம்" என்று சாற்றப்பட்டது. இதன் விளக்கத்தை முறையே, தடுத்தாட்கொண்ட புராணம், திருப்பாட்டு 217, 254 ஆகியவற்றில் சாற்றிய உரை வண்ணம் காண்க.

சிவபிரான் முதலடி எடுத்துக் கொடுத்த அமைப்பில் "தில்லை வாழ் அந்தணர்" என்று எடுத்துத் திருத்தொண்டத் தொகை அருளிச் செய்தபடி, தில்லை நடராசப் பெருமானைப் போற்றும் காப்புச் செய்யுளாகவும் திருத் தொண்டர்களின் வரலாற்றில் தில்லை வாழ்

அந்தணர்கள் முதன்மை கொண்டு விளங்கும் சிறப்பினையும் இனிது நோக்குக. இத்தகு சிறப்பு வாய்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் கணநாதராயக் காட்சி நல்கியதைத் (திருஞானசம்பந்த நாயனார் புராணம் -170) திருப்பாட்டு 2073 -இல் உரைத்தருளியவாறும் காண்க.

ஆதி - மூலப்பொருள்: முதல். நாடு - இயங்கும் ஒண் பொருள்: கருப்பொருளும் ஆம். பேதியா ஏகம் - அத்துவிதமாய் இரண்டறக் கலந்து ஒன்றி நிலவுதல். போதியா நிற்கும் - உபதேசம் வாயிலாக உணர்த்தும் வகை. பொதுநடம் - பொது என்னும் பரவெளியில் திருநடனம் புரிதலின் சிறப்புரைத்தல். 1

351. கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி!

தெளிவுரை: கற்பனைக்கு எட்டாத சோதி வடிவாகவும், கருணையின் வடிவமாகவும் அற்புதம் விளங்கும் திருக்கோலம் தாங்கி வேதத்தின் தலைப் பொருளாய் விளங்கிச் சிதாகாசமாக நிலவும் சிற்றம்பலத்துள் நின்று அழகுறத் திருநடனம் செய்கின்ற தாமரை போன்ற திருவடியைப் போற்றுதும்.

முன் திருப்பாட்டினுள் சிவபிரான் பொது நிலையைக் காட்டி இப்பாடலுள் எம்பிரான் திருநடனம் புரியும் அருட் செயலைச் சிறப்பித்துக் கூறுதலைக் காண்க.

சிறப்புரை: புலனுக்கு எட்டாத சோதியானது கற்பனைக்கு எட்டாதது எனவும், கருணையை உணர்தற்கு ஒல்லும் வகையில் அதுவே சிந்தையில் நிலவும் உள்ளொளி எனவும் குறித்துச் சாற்றும் வகையில் அற்புதக் கோலம் எனப்பட்டது. இவண் ஞான வெளி மேவி அருள் செய்தலையும் அன்பின் மேவும் அடியவர்கள் சிந்தை களிகூர அழகு திகழும் தாமரைத் தாளைத் தூக்கித் திருநடனம் புரியும் பொற்பும் உரைத்தலாயிற்று.

சிற்பரம் - சிதாகாசம். பொற்பு - அழகு: பொலிவு. பூங்கழல் - தாமரைத் திருப்பாதம். 2

தில்லைவாழ் அந்தணர் சிறப்புரைத்தல்

- இது முதல் 7-பாடல்கள் ஒரு தொடர்

352. போற்றிநீள் தில்லை வாழ்அந்
தணர்திறம் புகலல் உற்றேன்
நீற்றினால் நிறைந்த கோல
நிருத்தனுக்கு உரிய தொண்டாம்
பேற்றினார் பெருமைக்கு எல்லை
ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார் பெருகும் அன்பால்
அடித்தவம் புரிந்து வாழ்வார்.

தெளிவுரை: தில்லை வாழ் அந்தணர்களைப் போற்றித் துதித்து அவர்கள் திருவருட் பெருநிலையைப் புகழத் தொடங்குகின்றேன். அவர்கள் திருவெண்ணீற்றை முறைப்படி அணிந்து அழகிய திருக்காட்சி தோன்ற விளங்கி நடராசப் பெருமானுக்குரிய தொண்டுகளைப் புரியும் பேற்றையுடையவராகிப் பெருமையின் எல்லையைக் கண்டவராயினர். அவர்கள் அப்பரமனையே நாடிப் போற்றி அன்பு செலுத்துபவராகித் திருவடி மலரைத் தியானம் செய்யும் அருஞ்செயலைப் புரிந்து வாழ்பவர்கள்.

போற்றி - துதித்து. திறம் - அருட்செயலின் சிறப்பு. நிருத்தன் - நடராசப் பெருமான். அடி - ஈசன் திருவடி. தவம் - தொண்டு. 3

353. பொங்கிய திருவில் நீடும்
பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து
மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக்கு ஏற்ற பண்பில்
தகும் பணித் தலைநின்று உய்த்தே
அங்கணர் கோயில் உள்ளார்
அகம்படித் தொண்டு செய்வார்.

தெளிவுரை: செல்வம் பெருகி ஓங்கும் சிறப்புடைய பணிகளைத் தலையாயதாகக் கொண்டு மங்கலம் நல்கும் செயல்களைப் புரிந்து, வேதம் ஓதி ஈசனைத் துதித்துத் தங்களுக்கு ஏற்றதான சத்துவ குணப்பாங்குடன் முன்னின்று மேவித் திருநடராசப் பெருமான் சன்னதியில் அணுக்கத் தொண்டு புரிபவர்களாய் இவ் அந்தணர்கள் விளங்குவார்கள்.

பொங்கிய திரு - மேலெழும் செல்வம். பண்பில் தகும் பணி - சத்துவ குணம் மேவும் பூசைத் தொண்டு .அங்கணர் - நடராசப் பெருமான். அகம்படித் தொண்டு - அணுக்கத் தொண்டு. 4

354. வருமுறை எரிமூன்று ஓம்பி
மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு
தத்துவ நெறியில் செல்லும்
அருமறை நான்கி னோடு ஆறு
அங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க்கு ஆளாம்
திருவினால் சிறந்த நீரார்.

தெளிவுரை: மூன்று வகையான தீயை வளர்த்து உயிர்கள் பலம் பெறும் அருள் கொண்டு விளங்கச் செய்யும் தில்லை வாழ் அந்தணர்கள், தரும நெறியே சிறப்புடைப் பொருளாகக் கொண்டு தத்துவ நெறியைப் புகலும் நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் பயின்று தேர்ந்து விளங்குபவர்கள். அவர்கள் நடராசப் பெருமான் திருத்தொண்டர்களாய்ச் செல்வப் பேற்றுடன் சிறந்து மேவும் பண்புடையவர்கள்.

எரி மூன்று - ஆகவனீயம், காருக பத்தியம், தட்சணாக்கினி. மறை நான்கு - இருக்கு, யசூர், சாமம், அதர்வணம், ஆறு அங்கம் - சந்தசு, கற்ப சூத்திரம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருத்தம். நீரார் - பண்பினர். 5

355. மறுவிலா மரபின் வந்து
மாறிலா ஒழுக்கம் பூண்டார்
அறுதொழில் ஆட்சியாலே
அருங்கலி நீக்கி யுள்ளார்
உறுவது நீற்றின் செல்வம்
எனக் கொளும் உள்ளம் மிக்கார்
பெறுவது சிவன்பால் அன்பாம்
பேறெனப் பெருகி வாழ்வார்.

தெளிவுரை: குற்றமில்லாத வேதம் ஓதும் மரபில் வந்து, மாறுதல் இல்லா அறநெறியின்பால் மேவும் ஒழுக்கத்தில் கனிந்து மேன்மை திகழும் அறுவகைத் தொழிலை ஆற்றும் தில்லை வாழ் அந்தணர்கள், உலகத் துன்பத்தை நீக்கியவர்கள். திருநீறே சிறந்த செல்வமாகப் போற்றும் உள்ளப்பாங்கையுடைய அவர்கள் பெறுவது சிவபிரான்பால்

கொள்ளும் அன்பே என்று கண்டு பெருக்கம் உடையவராய் வாழ்பவர்கள்.

சிறப்புரை: இவ்வடியவர்கள், வேத நெறிப்படி வேள்வி வளர்த்து உலகத்துன்பத்தை நீக்கியவர்கள் என்று சுட்டும் வகையில், "அருங்கலி நீக்கியுள்ளார்" எனச் சாற்றப்பட்டது. இதனைச் திருஞானசம்பந்தர், "கற்று ஆங்கு எரியோம்பிக்கலியை வாராமே செற்றார் வாழ்தில்லை"என்று அருளிச் செய்தவாறும் காண்க. இவ்வந்தணர்களின் மேன்மையை, இவர்கள் பெறுவதற்கு விரும்புவது ஈசன்பால் அன்பாம் என்னும் பேறு எனச் சாற்றுதல் காண்க. இத்தன்மையில் திருப்பாட்டு 143-இல் திருக் கூட்டத்தின் இயல்பு என்னும் வகையில், "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என நவின்றவாறும் காண்க.

அறு தொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். கலி - துன்பம். நீற்றின் செல்வம் - திருவெண்ணீறு அணியும் பேறு. 6

356. ஞானமே முதலா நான்கும்
நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார்
தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி
மனையறம் புரிந்து வாழ்வார்.

தெளிவுரை: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளையும் குற்றமின்றித் தெரிந்து அறிவின் மிக்கவராய் வீளங்கும் தில்லை வாழ் அந்தணர்கள், கொடைப் பண்பு மிக்கவர்களாயும், தவநெறியில் உறுதி காப்பவர்களாயும் ஊனம் தருவதாகிய பிறவித் துன்பத்தை நீக்கியவர்களாகி, உலகத்துள்ள மன்னுயிர்கள் போற்றும் பெருமையும், பொறுமையும் கொண்டு விளங்கி மனையறம் பேணும் இல்லறத்தினை ஆற்றி ஒழுகுபவர்கள் ஆவர்.

ஊனம் - குறைபாடு: இவண் பிறவித் துன்பம் என்க. மனையறம் - இல்லற ஒழுக்கத்திற்கு உரிய அறங்களைப் பின்பற்றி மேவும் மாண்பு. 7

357. செம்மையால் தணிந்த சிந்தைத்
தெய்வ வேதியர்கள் ஆனார்
மும்மைஆ யிரவர் தாங்கள்
போற்றிட முதல்வனாரை
இம்மையே பேற்று வாழ்வார்
இனிப் பெறும் பேறொன்று இல்லார்
தம்மையே தமக்குஒப் பான
நிலைமையால் தலைமை சார்ந்தார்.

தெளிவுரை: செம்மை விளங்கும் சாந்தமான சிந்தை மேவும் தெய்வத் தன்மையுடைய அந்தணர்களாய் விளங்கும் மூவாயிரவராகிய இவர்கள், முதற்கடவுளாகிய சிவபிரானைப் போற்றிச் சார்வதால் இப்பிறவியிலே சீவன் முத்தர்களாய் விளங்குபவர்கள். ஆதலால் இனிமேல் பெறுகின்ற பேறு வேறு எதுவும் இல்லை என்பதால் தமக்குத் தாமே ஒப்புமையாகக் கூறத் தக்கவர்களாய் உலகில் தலை சார்ந்தவர்களாக இருப்பவர்கள்.

சிறப்புரை: தில்லை வாழ் அந்தணர்கள் தமக்குத்தாமே ஒப்புமை கூறத் தக்கவர்கள் என்று சாற்றிய வகையில், சிவபிரான் நம்பியாரூரர்க்கு அடியவர் பெருமையை அருளிச் செய்த திருப்பாட்டு 342 இல் "பெருமையால் தம்மை ஒப்பார்" என்று நவின்றமை காண்க.

தெய்வ வேதியர் - அந்தணர்கள். மும்மை ஆயிரவர் - மூவாயிரவர். முதல்வனார் - சிவபிரான்: நடராசப் பெருமான் என்க. இம்மை - இப்பிறவி. தலைமை - முதன்மை. 8

358. இன்றிவர் பெருமை எம்மால்
இயம்பலாம் எல்லைத்து ஆமோ
தென்தழிழ்ப் பயனாய் உள்ள
திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் தொண்டர் தம்மை
அருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்கால் கோத்த
முதல்பொருள் ஆனார் என்றார்.

தெளிவுரை: அழகிய தமிழின் பயனாய் உள்ள திருத்தொண்டத் தொகையை முன்னர்ப் பாடும் வகையில் வன்தொண்டருக்கு அருள் புரியும் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் திருவாக்கால்

முதற் பொருளாகத் திகழ்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் விளங்க, அத்தகைய பெரு மக்களுடைய பெருமையை எம்மால் ஒரு எல்லை வைத்து வரையறை செய்து இயம்புவதற்குக் கூடுமோ!

தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று ஈசன் அடி எடுத்துக் கொடுக்க முதற் பொருளாய் விளங்கும் அவ்வடியவர்கள் பெருமைக்குரியவர்களாய் எல்லையற்ற புகழுடன் விளங்க, அவர்களை வரையறை செய்து சாற்றுதல் இயலாது என்பதாம்.

எல்லை வைத்து - வரையறை செய்து. ஆரூர் அண்ணல் - தியாகேசப் பெருமான். முதல் பொருள் - அடியவர்களுள் முதலாக விளங்குபவர்கள். என்றார் - என்று சிவபிரான் உரைத்தார் என்பது. 9

தில்லை வாழ் அந்தணரைப் போற்றித் திருநீலகண்ட நாயனார் புராணம் கூறத் தொடங்குதல் - கவிக் கூற்று

359. அகலிடத்து உயர்ந்த தில்லை
அந்தணர் அகிலம் எல்லாம்
புகழ்திரு மறையோர் என்றும்
பொதுநடம் போற்றிவாழ
நிகழ்திரு நீல கண்டக்
குயவனார் நீடு வாய்மை
திகழும் அன்பு உடைய தொண்டர்
செய்தவம் கூறல் உற்றாம்.

தெளிவுரை: பூவுலகில் சிறப்புடன் விளங்கும் தில்லை வாழ் அந்தணர்கள் உலகெலாம் புகழும் அந்தணர்களாய் எப்போதும் நடராசப் பெருமானைப் போற்றி வாழ்ந்திருக்கக் குலால மரபுசார்ந்த திருநீலகண்டர் பேரன்பு உடைய திருத் தொண்டராய் விளங்கிச் செய்த தவநெறியைக் கூறுவாம். இது கவிக் கூற்று

அகலிடம் - மண்ணுலகம். உயர்ந்த - சிறந்த. அகிலம் - உலகம். தவம் - தொண்டு. 10

தில்லை வாழ் அந்தணர் புராணம் நிறைவுற்றது.

8. திருநீலகண்ட நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்

குலால மரபினராய்ச் சிவனடியார்பால் பேரன்பு பூண்டு அடியவர்களுக்கு மண்ணால் செய்த திருவோடு வழங்கி வந்தார். சிவபெருமான் நஞ்சுண்டு உலகுயிர்களைக் காத்தருளிய கருணையை எண்ணி மகிழ்ந்தவராய்த் திரு நீல கண்டம் என்று சொல்லி வந்தமையால் அவர்க்குத் திரு நீல கண்டர் என்னும் திருப் பெயர் வழங்கலாயிற்று.

இவர் இல்லறத்தில் ஒழுகிவரும் போது ஒரு நாள் இன்பத் துறையில் எளியராய்ப் பரத்தையின் பால் அணைந்து தம் இல்லம் சார்ந்தார். அதனை உணர்ந்த துணைவியார் ஊடல் கொண்டு திருநீல கண்டத்தின் மீது ஆணை செய்து "எம்மைத் தீண்டக் கூடாது." என்றார். நாயனார், பன்மையில் எம்மை என்றமையால் மாதர் எவரையும் மனத்தாலும் தீண்டேன்." என்று சூளுரை செய்து ஒழுகலானார். ஆண்டுகள் பல கடந்தன.

சிவபிரான் அடியவர் திருக்கோலத்தில் திருவோடு ஒன்றைக் கொண்டு வந்து பாதுகாக்குமாறு திருநீல கண்டரிடம் ஒப்படைத்தார். பல நாள் சென்றதும் ஈசன் அத்திருவோடு மறையுமாறு புரிந்து, முன்பு அத்திருவோடு நல்கிய சிவயோகி என வந்து, அதனைத் தருமாறு கேட்டார். ஓடு தேடிக் கிடைக்கப் பெறாத நிலையில், அச்சிவயோகி தில்லையில் விளங்கும் அந்தணர்கள் அவையில் முறையிட்டார். திருஓடு காணவில்லை என்பதைத் திரு நீலகண்டர் தன் துணைவியாரின் கரத்தைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்ய வேண்டும் என்பது ஆணையாயிற்று. ஆயினும் திரு நீல கண்டர் எந்த மாதரையும் தீண்டேன் என்று சூழ் உரைத்ததை உலகறியச் சாற்றி மூங்கில் தண்டின் ஒரு முனையைத் தன் துணைவியாரைப் பற்றிக் கொள்ளமாறு செய்து தான் மற்றொரு முனையைப் பற்றிக் குளத்து நீரில் மூழ்கி எழுந்தார். அப்போது சிவயோகியாக வந்த இறைவன் தன் உருக்கரந்து ஆகாயத்தில் உமாதேவியோடு இடப வாகனத்தில் காட்சி நல்க, நாயனாரும், அவர் துணைவியாரும் இளமை விளங்கப் பெற்றனர். பின்னர் அவ்விருவரும் சிவலோகம் அடைந்து பேரின்ப வாழ்வு பெற்றனர்.

தில்லையில் வேட்கோவர் குலத்தில் விளங்கும் சிவனன்பர் பற்றிச் சாற்றுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

360. வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார்.

தெளிவுரை: தில்லை வாழ் அந்தணர்கள் விளங்கும் தொன்மை ஊரான தில்லையில் வேட்கோவர் குலத்தில் வந்தவராய், உமாதேவி ஒரு பாகமாக உள்ள நிலையில் அவர் காணுமாறு எப்போதும் ஒளிரும் திருச்சிற்றம்பலத்தில் தோற்றமும் முடிவும் இல்லாத அற்புதத் திருக்கூத்து புரியும் தலைவரான நடராசப் பெருமான் திருத்தாள்களை வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவராய் ஒருவர் இருந்தார்.

இவண் நடராசப் பெருமானை வாழ்த்தி வழிபடுவது நலம் தரும் செயல் என்பது இத்திருப்பாட்டின் ஈற்றடியில் சாற்றப்பட்டது.

வேதியர் - தில்லைவாழ் அந்தணர்கள். மூதூர் - தொன்மையுடைய ஊர். வேட்கோவர் - குயவர். குலாலர். மாது - உமாதேவி: இங்குச் சிவகாமசுந்தரி என்க. நோக்கி - காண. சிற்றம்பலம் - நடராசப் பெருமான். திருநடனம் புரியும் பொன்னம்பலம். நாதனார் - நடராசப் பெருமான். வாழ்த்தி - போற்றி. இப்புராணத்திற்கு இதுவே முதற் பாட்டு ஆதலால் காப்புச் செய்யுளாகவும் கொள்க. 1

361. பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்
புனல்சடை முடியார்க்கு அன்பர்
மெய்யடி யார்கட் கான
பணி செயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே
பொருளெனச் சாரும் நீரார்.

தெளிவுரை: அவ் அடியவர் பொய்த் தோற்றமாகும் இனங்களை நன்கு அறிந்து அவற்றைக் களைந்து எறிந்து நல்லறத்தின் மாண்பு விளங்கக் கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபிரானின் மெய்யடியார்களுக்குப் பணி செய்யும் நெறியில் விருப்புடன் நின்றார். உலகம் போற்றும் செயல்களால் நல்லறமாகிய இல்லறத்தை இனிது புரிந்து வாழ்பவராய் அவர்,சைவமாம் நெறியில் வாழ்வதே சிறப்புடையது. என்னும் பண்புடையவராய் இருந்தார்.

சிறப்புரை: பொய்ம்மையை நீக்குதலே நல்லறம் விளங்குவதற்கு அடித்தளமாதலால் பொய்கடிதலை முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இத்தன்மையில் திருவள்ளுவர், திருக்குறள் 294-இல்,

> "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன்."

என்று உரைத்தவாறும் காண்க.

சிவபிரானை வணங்கும் அடியவர்கள் அருவப் பொருளாக விளங்கும் திருவெண்ணீறும், உருத்திராக்கமும் தாங்கித் தம் மேனியில் விளங்கச் செய்தலோடு திருவைந்தெழுத்தை நெஞ்சுள் கொண்டு விளங்குதலால் இத்தகையோர் மெய்யடியார் எனச் சாற்றப்படுபவராயினர் என்க. மற்றும் மெய்க்குள்ளே அந்தக்கரணமாய் மேவி விளங்கும் சிந்தையில் மெய்ப் பொருளாய் விளங்கும் சிவபிரான் திருவடியை இருத்தி வாழ்பவர்கள் மெய்யடியார் என்னும் கருத்தில் மாணிக்கவாசகர் திருச்சதகம், ஆனந்தத்து அழுந்தல் திருப்பாட்டு -72 இல்,

> "மை கலந்த கண்ணி பங்க வந்து நின் கழற்கணே
> மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டுமே"

என்று அருளிச் செய்தவாறும் காண்க. மற்றும் சிவபுராணத்தில், "மெய்யே உன் பொன்னடிகள் என்றவாறும் கொள்க.

புனல் - கங்கை. சடைமுடியார் - சிவபிரான். மெய்யடியார் - சிவனடியார். பணி - திருத்தொண்டு. மனையறம் - இல்லறம். மெய்த்திரு - மேலான செல்வம்

அடியவர்களுக்குத் திருவோடு அளித்துத் தொண்டு புரிதல்

362. அளவிலா மரபின் வாழ்க்கை
மண்கலம் அமுதுக்கு ஆக்கி
வளர்இளந் திங்கள் கண்ணி
மன்றுளார் அடியார்க்கு என்றும்
உளம் மகிழ் சிறப்பின் மல்க
ஓடளித்து ஒழுகும் நாளில்
இளமை மீதூர இன்பத்
துறையினில் எளியர் ஆனார்.

தெளிவுரை: அவர் தம் குலமரபின் படி மண்பாண்டங்களை விற்பனை செய்து அதன் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் போது, வளரும் பிறைச் சந்திரனைத் தலையில் சூடி விளங்கும் திருநடன சபாபதியின் அடியவர்களுக்கு உண்கலனாக மேவும் திருஓடு அளித்து மகிழ்ந்து ஒழுகலானார். இவ்வாறு ஒழுகும் நாளில் இளமை மீதூர இன்பத் துறையில் நாட்டம் கொண்டு அதில் விழைவு கொண்டவரானார்.

அமுதுக்கு ஆக்கி - வாழ்க்கைக்கு உரிய வருவாய் ஈட்டி. இளந்திங்கள் - பிறைச் சந்திரன். கண்ணி - தலைமாலையாகத் தரித்து. மன்றுளார் - நடராசப் பெருமான். மன்றுளார் அடியார் - சிவனடியார். எளியர் - விருப்பத்தில் நாட்டம் கொண்டு விளங்குபவர். 3

அடியவர் திருநீல கண்டர் என்னும் பெயர் பூண்டு விளங்குதல்

363. அவர்தங்கள் மனைவி யாரும்
அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர்
பொங்கு நஞ்சு உண்ண யாம் செய்
தவம் நின்று தடுத்தது என்னத்
தகைந்து தான் தரித்தது என்று
சிவன்எந்தை கண்டந் தன்னைத்
திருநீல கண்டம் என்பர்.

தெளிவுரை: அத்தகைய வேட்கோவ அன்பரின் துணைவியார் அருந்ததியின் கற்பின் மிக்கவராய்க் கணவர்க்கு ஏற்றவாறு தொண்டு செய்து விளங்குபவர். இவ்வுலகங்கள் உய்யும் பொருட்டுப்

பெருங்கருணையால் பாற்கடலில் முதற்கண் பொங்கியெழுந்த நஞ்சினைப் பருகி யாம் செய்த தவம் உலகம் தீய்ந்து அழியாது காத்தது என்று கண்டத்தைச் சிறப்பித்துப் போற்றும் வகையில் திரு நீலகண்டம் என்று கனிந்த சிந்தையுடன் பெருமானைத் தோத்திரம் செய்து வந்தார்.

இது நாளடைவில் அவர் திருப்பெயர் திருநீலகண்டர் என வழங்கலாயிற்று என்பதாம்.

சிறப்புரை: சிவபிரான் மன்னுயிர்களுக்குப் புரியும் அருங் கருணையே நஞ்சினைக் கண்டத்தில் தேக்கித் திருநீல கண்டராக விளங்கியது. சிவபிரான் ஆலம் எனப்படும் நஞ்சினை உண்டிலரேல் மேன்மையுடைய தேவர்களும் வீழ்வர் என்னுமாறு மாணிக்கவாசகர் திருவாசகம் திருச்சாழல் திருப்பாட்டு 8-இல்,

> "ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
> மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ!"

என்று அருளிச் செய்தமை காண்க.

மற்றும் திருநீலகண்டம் என்னும் சிறப்பினைத் திருஞானசம்பந்தர், முதல் திருமுறையில்,

> அவ்வினைக்கு இவ்வினை யாம்என்று
> சொல்லும் அஃது அறிவீர்
> உய்வினை நாடாது இருப்பதும்
> உந்தமக்கு ஊனம் அன்றே
> கைவினை செய்து எம்பிரான்கழல்
> போற்றுது நாம் அடியோம்
> செய்வினை வந்து எமைத் தீண்டப்
> பெறாதிரு நீலகண்டம்."

என்று அருளிச் செய்தவாறும் கொள்க.

அருந்ததி - வசிட்ட முனிவரின் பத்தினியாய்க் கற்பிற் சிறந்து விளங்கியவர். புவனம் - உலகம். ஐயர் - சிவபிரான்; மற்றும் பாடற் குறிப்பு 193-இல் உள்ளவாறு காண்க. தான் - கண்டம். தரித்தது - கொண்டு விளங்குவது. 4

அடியவரின் துணைவியால் திருநீலகண்டரைச் சூள் வாயிலாத் தீண்டாமை காத்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

364. ஆனதம் கேள்வர் ஆங்கோர்
பரத்தைபால் அணைந்து நண்ண
மானமும் பொறாது வந்த
ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாம் செய்தே
உடன் உறவு இசையார் ஆனார்
தேனலர் கமலப் போதில்
திருவினும் உருவம் மிக்கார்.

தெளிவுரை: இவ்வாறு ஒழுகும் நாள் திருநீலகண்டர் ஆங்குப் பரத்தை ஒருத்தியிடம் அணைந்து, மீண்டும் தன் மனைவியைச் சார்ந்தார். தன் கணவரின் செயலைக் கண்டு மானம் பொறாது ஊடலால் தனித்திருந்தவராய் மனைவாழ்க்கைக்குரிய பணிகளை மட்டும் குறைவற ஆற்றியவராகித் தேன் துளிர்க்கும் தாமரை மலரில் விளங்கும் திருமகளினும் அழகுடையவரான அவர் துணைவியார் வாழ்ந்து வரலானார்.

கேள்வர் - கணவர். உடன் உறவு - தாம்பத்திய உறவு. இசையார் - ஏற்காதவராய். கமலப் போது - தாமரை மலர். திரு - திருமகள். உருவம் - அழகிய வடிவம். 5

365. மூண்டஅப் புலவி தீர்க்க
அன்பனார் முன்பு சென்று
பூண்தயங்கு இளமென் சாயல்
பொன்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி
மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீர் ஆயின் எம்மைத்
திருநீல கண்டம் என்றார்.

தெளிவுரை: தன் துணைவியார் ஊடல் கொண்டதையறிந்த திருநீலகண்டர் அதனைத் தீர்க்கும் வகையில் முன் சென்று புகழ் மொழிகளைக் கூறி நெருங்கி மேனியைத் தழுவுவதற்கு முற்படும் போது, அம் மாதரசியார், "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம் இடை நின்று தடுத்தாள்க." என்றார்

சிறப்புரை: வேறு ஒரு நங்கையை நாடிச் சென்ற கணவர் மேனி, தன் பால் தீண்டுதலை விரும்பாமை இவண் தெரிவித்தலாயிற்று. அவர் "எம்மை" என்று பொதுவாகக் குறிப்பிட்டனராயினும் அதன் பொருள் பன்மையில் மாதர்களை உணர்த்தியதாதலின் நாயனார் மருண்டார் என்பதாம்.

புலவி - ஊடல். அன்பனார் - திருநீலகண்டர். பூண்தயங்கு - ஒளிமிக்க ஆபரணம். பொன்கொடியனையார் - அழகிய கொடி போன்ற மெலிந்த இடையுடைய மாதர்; திருநீலகண்டரின் துணைவியாரை உணர்த்துவது. மெய்யுற - மேனியைத் தழுவ. 6

366. ஆதியார் நீலகண்டத்து
அளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட
பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார்போல நோக்கி
எம்மைஎன் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன்
மனத்தினும் தீண்டேன் என்றார்.

தெளிவுரை: தன்னை வேறுபடுத்தும் ஆணையைத் தன் துணைவியார் வாயிலாகக் கேட்ட பெரியவராகிய நாயனார், ஆதிமூர்த்தியாகிய சிவபிரான் கொண்டுள்ள நீலகண்டத்தின் மீது வைத்த பேரன்பால் அவரைஅயலார் போல நோக்கி "எம்மை என்றதால் மற்ற மாதரையும் மனத்தாலும் தீண்டமாட்டேன்" என்றார்.

சிறப்புரை: சிவபிரானின் நீலகண்டம் அடியவர்க்கு அருள் சேர்க்கும் தன்மையுடையது எனத் திருஞானசம்பந்தர் சாற்றும் வகையில் காமத்தால் விளையும் ஆசையை நீக்கித் தீவினை சாராது காத்தருளும் என்னுமாறு தேவாரம் முதல் திருமுறையில்,

"முலைத்தடம் மூழ்கிய போகங்
களும் மற் றெவையும் எல்லாம்
விலைத்து அலையா வணம்கொண்டு எமை
ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டு
மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்."

என்று அருளிச் செய்தவாறும் நோக்குக.

ஆதியார் - ஆதிமூர்த்தியாகிய சிவபிரான். ஆர்வம் - அன்பு. பேதியா ஆணை - பேதப்படுத்தி உரைக்கும் ஆணை: எம்மைத் தீண்டாதீர் என்னும் சூள் உரைத்தலைக் குறித்தது. பெரியவர் - திருநீலகண்டர்: கடத்தற்கரிய காமத்தைக் கடந்து மேவும் பெற்றியில் புலன்களை வெற்றி கொள்ளும் பெருமையுடையவர். ஏதிலார் - அயலார். எம்மை - எம்போன்ற மாதர்களை. 7

திருநீலகண்டரின் வாழ்க்கையை உரைத்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்.

367. கற்புறு மனைவி யாரும்
கணவனார்க்கு ஆன எல்லாம்
பொற்புற மெய்யு றாமல்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம்பு ஒழியாது அங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
அயல்அறி யாமை வாழ்ந்தார்.

தெளிவுரை: கற்பு விளங்கும் துணைவியார் தன் கணவற்கு உரிய தொண்டுகள் யாவற்றையும் சிறப்புறச் செய்தவராய் அழகிய திருமேனி தீண்டாது பொருந்துமாறு போற்றிப் பணிகளைப் புரிந்து இல்லத்திலிருந்து வெளியே செல்லாது மேவியவராய் வாழ்க்கை நடத்தினார். இருவரும் அன்பு பொருந்திய புணர்ச்சியில் கலவாது பிறர் அறியாதவாறு வாழ்ந்து வந்தனர்.

கணவனார் - திருநீலகண்டர். மெய்யுறாமல் - ஒருவர் மேனி மற்றவர் மீது படாது. இற்புறம்பு - இல்லத்திலிருந்து புறத்தே. ஒழியாது - ஏகாது. அற்புறு - அன்பு உறுகின்ற. அயல் அறியாது - பிறர் அறிந்து கொள்ளாதவாறு. உள்ளத்திலே ஒருவரோடு மற்றொருவர் கொண்டுள்ள மன வேறுபாடு பிறர்க்குத் தோற்றம் பெறாதபடி என்க. 8

368. இளமையின் மிக்கு ளார்கள்
இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆணை போற்றி
ஆண்டுகள் பலவும் செல்ல
வளம்மலி இளமை நீங்கி
வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு
தம்பிரான் திறத்துச் சாயார்.

தெளிவுரை: இளமைப்பருவத்தில் விளங்கும் திருநீலகண்டரும், அவருடைய துணைவியாரும் அளவிட்டு உரைக்க முடியாத தெய்வப் பெயர் கொண்டு சாற்றிய ஆணையைக் கொண்டவராய்ப் போற்றிப் பாதுகாத்து வரும் நிலையில் பல ஆண்டுகள் கடந்தன. அவர்கள் இருவரும் இளமைத் தோற்றம் நீங்கி அழகு பொலியும் முதுமை வந்துற்று மேனி தளர்வுற்று அமைந்தாலும் சிவபிரான்பால் கொண்ட அன்பில் தளர்வில்லாது சிவத்தொண்டு ஆற்றி வந்தார்கள்.

இருவர் - திருநீலகண்ட நாயனாரும் அவரது துணைவியாரும். அளவில் சீர் ஆணை - அளவிடற்கு அருமையுடையதாகிய புலன்களை வெற்றி கொள்ளும் சிறப்புடைய திருநீலகண்டத்தின் மீது சாற்றப்பட்ட ஆணை. போற்றி - ஒழுகி. வளம்மலி இளமை - இளமையில் வளமையுறுதலை நவின்றவாறு ஆயிற்று: இ.ஃது இறைவன் திருத்தொண்டில் தம்பதியர் இருவரும் இடையறாது திளைத்து நற்பேறு பெறும் செம்மையில் விளங்கினார்கள் என்பதாம். 9

இறைவன் சிவயோகி வேடம் தாங்கி நாயனாரை அடைதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

369. இந்நெறி ஒழுகும் நாளில்
எரிதளிர்த்து என்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் தானும்
தொண்டரை விளக்கம் காண
நன்னெறி இதுவாம் என்று
ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றல்
அருள் சிவ யோகி யாகி:

தெளிவுரை: இத்தன்மையில் நாயனாரும், அவர் துணைவியாரும் இல்லறத்தின் மேன்மையினையும், தெய்வ ஆணையின் புனிதத்தையும் காத்து வருகையில், அத்திருத் தொண்டரை உலகுக்கு அறிமுகமாக்கி, உலகத்தில் உள்ளோர் விரும்பி உய்தி பெறும் தன்மையில் வெளிப்படுத்தும் திருவுள்ளப்பாங்கில் நெருப்பு நன்கு ஒளிர்தல் போன்றதும் மின்னலை நிகர்த்ததுமான சடைமுடியுடைய சிவபிரான் அருள் நிலவும் சிவயோகி என்னும் வடிவம் தாங்கி வந்தார்.

இவண் ஈற்றடியின் ஆகி என்பது பாடல் 371 இல் நண்ணினார் என்று வினை முடிபு பெறும்.

எரிதளிர்த்து - நெருப்புக் கொழுந்து என்னுமாறு. மின் ஒளிர் - மின்னல் போன்று ஒளிரும். சடையோன்தான் - சடைமுடியுடைய சிவபிரான். தொண்டர் - திருநீலகண்டர். ஞாலத்தார் - உலக மக்கள். அந்நெறி - தெய்வத்தின் பெயரைக் கூறி ஆணையிட அதனைப் போற்றி ஒழுகும் புனிதம். 10

கலி விருத்தம்

370. கீளொடு கோவணம் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும்.

தெளிவுரை: அரைஞாணொடு கூடிய கோவண ஆடையை இடையில் சாத்திக் குறையாது விளங்கும் திருநீற்றொளி மலர்ந்த திருமேனியில் தோளோடு மார்பில் அசையும் முப்புரி நூல்விளங்கப் பேரொளி வளரும் மூன்று கீற்றுடனான திருவெண்ணீறு நெற்றியில் விளங்கச் சிவயோகி வந்தார்.

இச்செய்யுளின் ஈற்றடியானது அடுத்த பாடலின் "மேம்பாட" என்பதனோடு சாரும்.

கீள் - ஆடை வகை. வாள் - ஒளி. நூல் - முப்புரி நூல். திருமுண்டம் - திருநீறு; மூன்று கீற்றுகளுடன் திகழும் நீறு. 11

371. நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடும் கதிர் முறுவல் வெண் நிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்து வேட் கோவர்தம் மனையில் நண்ணினார்.

தெளிவுரை: அச்சிவயோகியாக வந்த சிவபிரான் நீண்டு விளங்கும் சிவந்த சடையை மறைத்து நெருங்கி விளங்கும் சுருண்ட முடியாக்கி, வெண்ணிலவு போன்ற பற்கள் ஒளிர்ந்து முறுவல் பூக்க, இடுகின்ற உணவை ஏற்றும் வகையில் திகழும் பலிபாத்திரமான திருவோட்டினைக் கையில் ஏந்தி வேட்கோவராகிய திருநீலகண்டர் மனையை நாடி வந்தார்.

நெறித்த பம்பை - சுருண்டு நீண்ட தலைமயிர். பலிப்பாத்திரம் - திருவோடு. 12

நாயனார் சிவயோகியை உபசரித்து மகிழ்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்.

372. நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றி செய்து
எண்ணிய வகையினால் எதிர்கொண்டு ஏத்தினார்.

தெளிவுரை: சிவயோகியாக வடிவம் தாங்கி வந்த சிவபிரானைக் கண்பெற்ற பயனாய் இனிது நோக்கிய அன்பு பெருகும் திருநீலகண்டர். அவரே புண்ணித் திருத்தொண்டர் என்று துதித்து உள்ளம் மலர எதிர்கொண்டு வரவேற்றார்.

நாதர் - சிவபிரான். காதல் அன்பர் - அன்பு மிக உடைய திருநீலகண்டர். புண்ணியத் தொண்டர் - திருத்தொண்டர் ஆதற்குப் புண்ணியப் பேறு காரணமாம் என்பது. போற்றி - துதித்து. எண்ணியவகை - மனம் இசைந்தவாறு. 13

373. பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டர் என்று
உறையுளில் அணைந்து பேர் உவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்.
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின்:

தெளிவுரை: பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்துள்ள சிவபிரானைச் சிவனடியார் என்று எண்ணிய திருநீலகண்டர் மனைக்குள் அழைத்துச் சென்று பேருவகையோடு முறையான பாத பூசை முதலிய வழிபாட்டு நெறியோடு ஆற்றி நின்றார்.

இச்செய்யுளின் ஈற்றடி அடுத்த பாடலின் என்றனர் என வினை முடிபு பெறும்.

சடைமுடிப்பிரான் - சிவபிரான். தொண்டர் - சிவயோகியாக வந்தவர் சிவபிரான் என்று கருதாது அடியவர் என்றே எண்ணுதலைக் குறித்தது. உறையுள் - மனை. 14

சிவயோகி திருவோடு ஒன்றை அளித்துப் பாதுகாக்குமாறு தெரிவித்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்.

374. எம்பிரான் யான் செயும் பணிஎது என்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர்நா யகனும்இவ் ஓடுஉன் பால்வைத்து
நம்பிநீ தருகநாம் வேண்டும் போது என்று.

தெளிவுரை: நறுமணம் கமழும் கொன்றை மாலை தரித்த சடைமுடியுடைய வள்ளலாகிய சிவபிரான் திருத் தொண்டனாராகிய திருநீலகண்டர். "எம்பெருமானே! நான் செய்ய வேண்டிய பணி யாது?" என்றார். அப்போது தேவர்களின் தலைவரான சிவபிரான், "நம்பி! இந்த ஓட்டினை உன்னிடம் பாதுகாப்பாக வைத்திருந்து, பிறகு வேண்டும் போது தருக." என்றுரைத்தார்.

எம்பிரான் - எம்பிரானே என்னும் விளி. வம்பு உலா மலர் - நறுமணம் கமழும் கொன்றை மலர். சடை வள்ளல் - சிவபிரான். தொண்டனார் - திருநீலகண்டர். உம்பர் நாயகன் - தேவர் தலைவர்; சிவபிரான். நம்பி - திருநீலகண்டரைக் குறித்து அழைத்த பெருமையுடையவன் என்னும் சொல். 15

375. "தன்னை ஒப்பு அரியது தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையும் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது
இன்ன தன்மையது இது வாங்கு நீ" என.

தெளிவுரை: இந்த ஓடு தனக்குத்தானே ஒப்பாகி வேறொன்றை உவமை சாற்ற அரியது. இவ்வுலகில் தன்னிடம் பொருந்தும் யாவையும் தூய்மை செய்வது. பொன், மாணிக்கம் முதலான மணிகள் என யாவற்றிலும் சிறப்பாகப் போற்றப்பட வேண்டுவது. இத்தகைய பெருமையுடையது இவ் ஓடு. இதனை நீ வாங்கிக் கொள்." என்று சிவயோகி கூறினார்.

சிறப்புரை: சிவபிரான் அளித்த திருவோடு தனக்கு இணையென வேறு ஒன்றைக் குறிப்பிட முடியாதபடி ஒப்புமையற்றது என்பதனால் அது ஈசனார்க்கு இணையானது எனக் கொள்க. ஆன்மாக்கள் மலக்கட்டிலிருந்து விடுபடும் செயலைத் தூய்மை செய்வது எனவும், பொன்னினும் மணியினும் போற்ற வேண்டியது என்பதானது பொற்சபை, இரத்தின சபை முதலான அம்பலத்தினும் போற்றித் துதிக்கப்படவேண்டியது எனவும், "இது வாங்கு நீ" என்பதனால் புலன்களை வெற்றி கொண்ட பேறுடையவரான திருநீலகண்டரையல்லாது வேறு ஒருவர் கைக்கொள்ள முடியாது என்பதும் குறிப்பால் உணர்த்துதலும் ஆம்.

தன்னை - ஓட்டினைக் குறித்தது. தலம் - திருவோட்டின் உட்புறத்தைச் சாற்றுதல். தன்னுழை - தன் பக்கம். துன்னிய - பொருந்திய. 16

376. தொல்லைவேட் கோவர்தம் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கிவாங்கிக் கொண்டு
ஒல்லையின் மனையில் ஓர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்து வந்து இறையை எய்தினார்.

தெளிவுரை: தொன்மை வாய்ந்த வேட்கோவர் குலத்துள் தோன்றிய சீலமிகு திருத்தொண்டர் வணங்கி, அவ்வோட்டினை வாங்கிக் கொண்டு விரைந்து உள்ளே சென்று தன் மனைவியின் ஓரிடத்தில் பாதுகாப்பான இடத்தில் வைத்துச் சிவயோகியாக வந்த ஈசனை அடைந்தார்.

தொல்லை வேட்கோவர் - தொன்மை விளங்கும் குலால மரபைக் குறித்தது. தொண்டனார் - திருநீலகண்டர். ஒல்லை - விரைவாக. காப்புறும் எல்லை - பாதுகாப்பான இடம். இறை - சிவயோகியாக வந்த இறைவன். 17

377. வைத்தபின் மறையவர் ஆகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார்.

தெளிவுரை: திருநீலகண்டர் தாம் வாங்கிய ஓட்டினை நன்கு பாதுகாப்பாக வைத்த பின்பு, சிவயோகியாய் வந்த நித்தியப் பொருளாகி அருள் புரியும் சிவபிரான் அங்கிருந்து வெளியேறத் தொடங்கத் திருத் தொண்டரும் சற்றுத் தொலைவு பின்னே சென்று வழி கூட்டி அனுப்பி, விடை பெற்றுத் திரும்பினார். எம்பெருமான் திருவம்பலத்தைச் சார்ந்து பொருந்தினார்.

பெரியவர்கள் செல்லும் போது சற்றுத் தொலைவு உடன் சென்று வழியனுப்பித் திரும்பும் மரபைக் குறிக்கும் வகையில் "உடன் போய் விடைகொண்டு மீண்டனர்" என்று சாற்றப்பட்டது.

மறையவர் - சிவயோகி. நித்தன் - சிவபிரான். அத்தர் - சிவபிரான். அம்பலம் - நடராசப் பெருமான் திரு நடனம் புரியும் சிற்றம்பலம். அணைய - சென்றணைய. 18

பலநாள் கழிந்தபின் சிவயோகியார் திருநீலகண்டரின் மனைக்கண் வருதல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

378. சாலநாள் கழிந்த பின்பு
தலைவனார் தாம்முன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக்
குறியிடத்து அகலப் போக்கிச்
சீலமார் கொள்கை என்றும்
திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட
முன்புபோல் மனையில் வந்தார்.

தெளிவுரை: பல நாட்கள் கழிந்த பின்னர் சிவபிரான், தாம் முன்னர்ப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு பணித்த பெருமை விளங்கும் திருஓடு மறையுமாறு செய்து, புலன்களை வென்றுகாமக் கடலைக் கடந்து சீலத்தால் விளங்கும் திருநீலகண்டரின் சிறப்பினை உலகுக்குப் புலப்படுத்த முன்னர் வந்தது பேன்று சிவயோகியாக மனையின் கண் வந்தார்.

தலைவனார் - நடராசப் பெருமான். கோலமார் ஓடு - சிறப்புடைய ஓடு. அகலப் போக்கி - மறையச் செய்து. சீலமார் கொள்கை - புவன்களை அடக்கிய கொள்கை. திருந்து வேட்கோவர் - மும்மலப் பிணிப்பினின்று விடுபட்ட வேட்கோவராம் திருநீலகண்டர். வாலிது - தூய்மையும் பெருமையும் உள்ள தன்மை. 19

சிவயோகி திருவோட்டைத் திருப்பித் தருமாறு வினவுதல்

379. வந்தபின் தொண்ட னாரும்
எதிர்வழி பாடு செய்து
"சிந்தை செய்து அருளிற்று எங்கள்
செய்தவம்" எற்று நிற்ப
"முந்தைநாள் உன்பால் வைத்த
மெய்யொளி விளங்கும் ஓடு
தந்து நில்" என்றார் எல்லாம்
தான் வைத்து வாங்க வல்லான்.

தெளிவுரை: தன் மனைக்கு வந்த சிவயோகியைத் தொண்டரான திருநீலகண்டர் எதிர் கொண்டு சென்று வழிபாடு செய்து, "தாங்கள்

இங்கு வர வேண்டும் என்று எண்ணி வந்தருளியது யாங்கள் செய்த தவப்பேறு" என்று வணங்கி நின்றார். அப்போது சிவயோகி "முந்தைநாள் நான் உன்னிடம் பாதுகாத்து வைக்கமாறு கொடுத்த, பெருமை விளங்கும் ஓட்டினைத் தந்து நில்." என்றார். இவ்வாறு யாவற்றையும் தருபவனும், பின்னர் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்பவனும் சிவபிரான் அல்லரோ!

இவண் கணவன் மனைவியரிடையே ஒருவரையொருவர் மேனி தீண்டாத நிலை இருந்தது என்பதும் மனம் பொருந்தி இருந்தது என்பதும் தோன்றுமாறு "எங்கள் செய்தவம்" என்னும் சொற்றொடர் புலப்படுத்திற்று மற்றும் இறைவன் ஓடு அகலுமாறு செய்ததை முன் திருப்பாட்டில் உரைத்து இவண் எல்லாம் வாங்க வல்லவன் என்று ஈசனார் திருவருளை இயம்பியமையும் நோக்குக. இத்தன்மையில் மாணிக்க வாசகர், திருச்சதகத்தில்,

"விச்சது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப்பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பரும்
உரியன் ஆக்கினாய் தாம்வளத்ததோர்
நச்சுமாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடையநாதனே!"

என்று அருளியவாறும் காண்க.

தொண்டனார் - திருநீல கண்டர். எங்கள் - திருநீல கண்டரையும் அவருடைய துணைவியாரையும் குறித்தது. மொய்யொளி - திரண்ட பெருமை. தந்து நில் - ஆணை வந்த சொல் என்க: இதன் வழி மிடுக்குடன் பின்னர் வழக்கு மன்றம் செல்வதற்குரிய நிலையைக் குறிப்பாகக் காட்டுதலும் ஆம். எல்லாம் தான் - யாவும் தானாய் மேவி இயக்கவல்ல சிவபிரான். 20

நாயனார் திருஓடு காணப்பெறாத நிலையில் பிழை பொறுக்குமாறு வேண்டுதல்

- இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர்

380. என்றவர் விரைந்து கூற
இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார்
கண்டிலர் திகைத்து நோக்கி

நின்றவர் தம்மைக் கேட்டார்
தேடியும் காணார் மாயை
ஒன்றும் ஆங்கு அறிந்திலார் தாம்
உரைப்பது ஒன்றின்றி நின்றார்.

தெளிவுரை: சிவயோகி விரைவாகக் கூறக் கேட்ட அடியார் மனைக்குள் சென்று கொண்டு வரும் பொருட்டு ஏக, அவ் வோட்டைக் கண்டிலராய்த் திகைத்து நின்று ஆங்கே நின்றிருந்தவரைக் கேட்க அவரும் அது பற்றி அறிந்திலராகத் தாமே மீண்டும் தேடுவாரானார். இவ்வோடு காணாமைக்குரிய காரணம் ஏதும் அறிந்திலராய்ச் சிவயோகியாருக்குப் பதில் உரைப்பது ஏதும் இன்றி நின்றார்.

இருந்தவர் - பெருந்தவத்திற்குரியவராய் விளங்கும் சிவயோகியாக வந்த சிவபிரான். நின்றர் - இவண் ஆங்குத் திருநீலகண்டரின் துணைவியார் என்க. மாயை - ஓடு மறைவதற்குரிய காரணம். 21

381. மறையவன் ஆகி நின்ற
மலைமகள் கேள்வன் தானும்
உறையுளில் புக்கு நின்ற
ஒருபெருந் தொண்டர் கேட்ப
"இறையில் இங்கு எய்தப் புக்காய்
தாழ்த்த தேன்" என்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக்
கை தொழுது உரைக்க லுற்றார்.

தெளிவுரை: சிவவேதியராக வந்த பார்வதி தேவியின் கணவரான சிவபிரான், மனைக்குள்ளே சென்ற நாயனார் கேட்குமாறு, "நொடிப் பொழுதில் இங்கு வந்து அடைக! காலம் தாழ்த்துவது ஏன்?" என்றார். உடனே திருத்தொண்டர் வெளியே வந்து நீலகண்டப் பெருமானை வணங்கித் தொழுது உரைக்கலானார்.

மறையவன் - சிவயோகி. மலை மகள் - பார்வதி தேவி. கேள்வன் - கணவன். உறையுள் - மனைக்குள்ளே. பெருந்தொண்டர் - திருநீலகண்டர். இறை - நொடிப்பொழுது. கறைமறைமிடற்றினான் - நஞ்சினை மறைத்த கறை விளங்கும் கண்டத்தையுடைய சிவபிரான். 22

382. "இழையணி முந்நூல் மார்பின்
எந்தைநீர் தந்து போன
விழைதரும் ஓடு வைத்த
வேறிடம் தேடிக் காணேன்

பழையமற் றதனில் நல்ல
பாத்திரம் தருவன் கொண்டிப்
பிழை யினைப் பொறுக்க வேண்டும்
பெரும" என்று இறைஞ்சி நின்றார்.

தெளிவுரை: திருத்தொண்டர் சிவயோகியாரை நோக்கி, நன்கு முறுக்கி இழைக்கப்பெற்ற முப்புரிநூல் மார்பில் திகழ விளங்கும் எந்தை பெருமானே! நீங்கள் தந்து சென்ற பெருமையுடைய ஓடு வைத்த இடத்தில் இல்லை. வேறிடத்தில் தேடியும் காணவில்லை. அந்த ஓடு பழமையுடையது. அதனினும் நல்ல பாத்திரமாக வேறு ஒரு ஓட்டினைத் தருகிறேன். அதனை ஏற்றுப் பிழை பொறுக்க வேண்டும்." என்று வணங்கித் தொழுது நின்றார்.

விழைதரும் ஓடு - விருப்பம் உடையதும் பெருமையுடையதுமான ஓடு. பாத்திரம் - ஓடு. பிழை - ஓடு பாதுகாத்தலில் உண்டான பிழை. இறைஞ்சி - வணங்கித் தொழுது. 23

383. சென்னியால் வணங்கி நின்ற
தொண்டரைச் செயிர்த்து நோக்கி
"என்இது மொழிந்த வாநீ
யான்வைத்த மண்ஒடு அன்றிப்
பொன்னினால் அமைத்துத் தந்தாய்
ஆயினும் கொள்ளேன் போற்ற
முன்னை நான் வைத்த ஓடே
கொண்டுவா" என்றார் முன்னோன்.

தெளிவுரை: அப்போது தலை தாழ்த்தி வணங்கி நின்ற திருத் தொண்டரைச் சினத்துடன் நோக்கிய முன்னோனாகிய சிவபிரான், "நீ மொழிந்தவாறு என்ன? யான் வைத்துச் சென்ற மண் ஓடு அல்லாது பொன்னால் வேறு ஓடு அமைத்துத் தந்தனையாயினும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். முன்னை நான் வைத்திருக்குமாறு கொடுத்த ஓட்டினையே தேடிக் கொண்டு வா." என்றார்.

சிறப்புரை: இவண் சென்னியால் வணங்குதலாவது ஏகாங்க வணக்க முறை என்க. ஈசன் மண்ணால் செய்த ஓடு சிறப்புடையது என்பதனால் வேறு பொன்னால் ஆயினும் கொள்ளப்படாமை நவில்வதாயிற்று. இறைவன் அட்ட மூர்த்தமாக நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆக இருத்தலால் தூய்மை துலக்குகின்ற ஓடாகத் திருப்பாட்டு 375 -இல் நவின்றவாறு இது நிலம் - மண்,

என்று குறித்தலைக் காண்க. மற்றும் நாயனார் மண் கொண்டு வேறு ஓடு செய்து தரும் வகையுண்டு என்பதைக் கருதி "முன்னை நான் வைத்த ஓடு கொண்டு வா" என்று உரைத்தமையும் காண்க.

சிவபிரான் திருப்பெயராக முன்னோன் என்று சாற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்க வாசகர் திருவாசகம் திருவண்டப் பகுதி வரிகள் 29-30 இல்,

"முன்னோன் காண்க முழுதோன் காண்க!
தன்னேரில்லோன் தானே காண்க!"

என்று அருளியவாறும் நோக்குக.

சென்னி - தலை. தொண்டர் - திருநீல கண்டர். செயிர்த்து - சினங்கொண்டு. ஏன் இது? - சினத்தினால் வெளிப்படுத்தும் விளி என்க. போற்ற - பாதுகாக்க. முன்னை - சில நாட்களுக்கு முன்பு. முன்னோன் - சிவபிரான்; தொன்மையுடையவன். 24

384. "கேடிலாப் பெரியோய் என்பால்
வைத்தது கெடுத லாலே
நாடியும் காணேன் வேறு
நல்லதோர் ஓடு சால
நீடு செல்வது தான் ஒன்று
தருகின்றேன் எனவும் கொள்ளாது
ஊடிநின்று உரைத்தது என்றன்
உணர்வெலாம் ஒழித்தது" என்ன:

தெளிவுரை: திருநீலகண்டர் சிவயோகியை நோக்கி, எத்தன்மையான குறையும் இல்லாத பெருமையுடையவரே! என்னிடம் கொடுத்த ஓடு காணாததாகியது; தேடிப் பார்த்தும் காண முடியவில்லை; நீண்ட நாள் நின்று பயன் தரத்தக்கதான நல்லதொரு ஓடு வேறு தருகின்றேன் என்று கூறினாலும் அதனை ஏற்க விழைந்திலராய்ச் சினந்து உரைத்தது தான் என்னே! இங்கு என் உணர்வுகள் அத்தனையும் போக்கியது." என்றார்.

இவண் "என்ன" என்பது அடுத்த பாடலில் "என்றான்" என வினை முடிபு பெறும்.

கேடு - குற்றம், குறைவு. பெரியோய் - சிவயோகியாரைக் குறித்தது. கெடுதல் - ஓடு காணாது போதலை உரைத்தல். நாடியும் -தேடிப் பார்த்தும். சால நீடு வெல்வது - நீண்ட காலம் நின்று பயன் தருவது; எளிதில் உடையாதது என்பதாம். ஊடி - சினங் கொண்டு. 25

395. ஆவதுஎன் உன்பால் வைத்த
அடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவும் செய்து
பழிக்கு நீ ஒன்றும் நாணாய்
யாவரும் காண உன்னை
வளைத்து நான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன்" என்றான்
புண்ணியப் பொருளாய் நின்றான்.

தெளிவுரை: அப்போது புண்ணியப் பொருளாய் விளங்கும் சிவயோகியாக வந்த சிவபிரான், "நீ வேறு ஓடு கொடுத்தால், எனக்கு அதனால் பயன் தருவது ஏதும் இல்லை. உன்னிடம் அடைக்கலப் பொருளாக வைத்ததைக் களவு செய்து காணவில்லை என்று வஞ்சகம் செய்கின்றாய். நீ பழிக்கு நாணம் கொள்பவனாகத் தெரியவில்லை. எல்லோரும் காணும் வகையில் உன்னை நெருக்கி வளைத்து என்னுடைய ஓட்டினைப் பெறாது நான் இங்கிருந்து செல்ல மாட்டேன்." என்றார்.

வௌவி கவர்ந்து கொண்டு. பாவகம் - வஞ்சகம்; சூழ்ச்சி. வளைத்து - நெருக்கி ஓடுங்கச் செய்து. கொண்டு - பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டு. புண்ணியப் பொருள் - சிவபிரான். 26

நாயனார் தன் புதல்வன் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கி களவு செய்யவில்லை என்று உரைக்குமாறு சிவயோகி கூறுதல்

386. **"வளத்தினால் மிக்க ஓடு**
வவ்வினேன் அல்லேன் ஒல்லை
உளத்தினும் களவி லாமைக்கு
என்செய்கேன் உரையும்" என்னக்
களத்து நஞ்சு ஒளித்து நின்றான்.
"காதல்உன் மகனைப் பற்றிக்
குளத்தினில் மூழ்கிப் போ" என்று
அருளினான் கொடுமை இல்லான்.

தெளிவுரை: அப்போது திருநீலகண்டர், "வளம் மிக்கதான திருஓட்டினை நான் களவு செய்யவில்லை. மிக விரைவாகப் பாய்ந்தோடும் மனத்தாலும் களவு செய்யவில்லை என்னுமாறு தெரிவித்தற்கு நான் செய்ய வேண்டியது யாது என உரைப்பீர்." என்று கேட்ட அளவில், கண்டத்தில் நஞ்சினை மறைத்து நீலகண்டனாக விளங்குகின்றவரும்,

உயிர்கள் பால் கருணை கொண்டு மேவுபவருமான சிவபிரான், "நின்னுடைய அன்புடைய புதல்வன் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சொல்." என்று அருளிச் செய்யலானார்.

சிறப்புரை: இவண் இறைவன் மன்னுயிர்கள் பால் கொண்ட அன்பின் வயத்தால் நஞ்சருந்தியதை முன்னர்ச் சாற்றிக் கொடுமை இல்லான் என்று பின்னர் நவின்றபாங்கு, சிவயோகி கடுமையான சொற்களால் உரைத்தாலும் ஆங்குக் கருணையே மலர்ந்து மேவுதலைச் சுட்டுதலாயிற்று.

வெளவுதல் - களவு செய்தல். ஒல்லை - மனோ வேகத்தைச் சுட்டுதலாம். களத்து - கண்டத்து. கொடுமை இல்லான் - கருணாமூர்த்தியான ஈசன். 27

சிவயோகி நாயனாரைத் தன் துணைவியாரின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்குமாறு கூறுதல்.

387. "ஐயர் நீர் அருளிச் செய்த
வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில் சீர்ப் புதல்வன் இல்லை
என்செய்கேன் புகலும்" என்ன
"மையறு சிறப்பின் மிக்க
மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு
மூழ்குவாய்" என மொழிந்தார்.

தெளிவுரை: இவ்வாறு சிவயோகி உரைக்க நாயனார், "மறையவரே! நீர் உரைத்தவாறு குளத்தில் மூழ்கி வாய்மையுரைப்பதற்குப் பொய்ம்மையில்லாத சிறப்புக்குரிய புதல்வன் இல்லை. எனவே நான் செய்ய வேண்டியது யாது உன உரைப்பீராக." என்று கூற அவர், "குற்றமில்லாத சிறப்பின் மிக்க நின் மனைவியின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிக் கூறு." என்றுரைத்தார்.

ஐயர் - மறையவராகிய சிவயோகி. அருளிச் செய்த - உரைத்த. மொய்யலர்வாவி - அடர்ந்த மலர்களுடைய பொய்கை. 28

துணைவியாரின்றித் தான் மட்டும் குளத்தில் மூழ்குவதாக உரைத்தல்

கொச்சகக் கலி

388. கங்கை நதி கரந்தசடை
கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண்விடை யவர்அருள
வேட்கோவர் உரை செய்வார்
"எங்களில் ஓர் சபதத்தால்
உடன் மூழ்க இசைவில்லை
பொங்குபுனல் யான்மூழ்கித்
தருகின்றேன் போதும்" என:

தெளிவுரை: கங்கையைச் சடைமுடியில் மறைந்து விளங்குமாறு செய்து, அதனையும் மறைத்துச் சிவயோகியாக வந்தவராகிய சிவந்த கண்ணையுடைய இடப வாகனத்தினராகிய ஈசன், மனைவியைப் பற்றிக் குளத்தில் மூழ்கி பிரமாணம் செய்யுமாய் உரை செய்யத் திருநீல கண்டர், "எங்களுக்குள் ஓர் சபதம் உள்ளதால், ஒன்றாகச் சேர்ந்து குளத்தில் மூழ்குவதற்கு இசைவு இல்லை. ஆதலால் யான் மட்டும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன்; வருவீராக!" என்றார்.

இவண் என என்பது அடுத்த பாடலில் சென்றார் என வினை முடிபு பெறும்.

விடையவர் - சிவபிரான். பொங்கு புனல் - குளம். போதும் - வருக என்னும் பொருளது.

சிவயோகி நாயனார் உரைத்ததற்கு உடன்படாது தில்லைவாழ் அந்தணர்கள் முன்னால் வழக்கிடுதல்

- இதுவும் முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்.

389. "தந்ததுமுன் தாராதே
கொள்ளாமைக்கு உன்மனைவி
அந்தளிர்ச்செங் கைபற்றி
அலைபுனலில் மூழ்காதே
சிந்தைவலித்து இருக்கின்றாய்
தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த பேரவையில்
மன்னுவன் யான்" எனச்" சென்றார்.

தெளிவுரை: சிவயோகியாய் வந்த ஈசன், "நான் தந்த ஓட்டினைத் திருப்பித் தராது, அதனைக் கவர்ந்து கொள்ளாமைக்கு உன் மனைவியின் அழகிய தளிர் போன்ற கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடு என்றால், அதனையும் செய்யாது மனத்தை உறுதியாக்கிக் கொண்டு வன்மையாய் இருக்கின்றாய். ஆதலால் தில்லைவாழ் அந்தணர்கள் விளங்கும் பேரவையில் முறையிட்டுக் கூறுவேன்." எனச் சென்றார்.

தந்தது - முன்பு கொடுத்த திருவோடு. கொள்ளாமை - கவர்ந்து கொள்ளவில்லை என்பதற்கான சத்தியம் உரைத்தல். அலைபுனல் - குளம். மன்றுவன் - போய் வழக்குத் தொடுப்பேன். 30

390. நல்லொழுக்கம் தலைநின்றார்
நான்மறையின் துறைபோனார்
தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த திருந்துஅவையில்
எல்லைஇலான் முன்செல்ல
இருந்தொண்டர் அவர்தாமும்
மல்குபெரும் காதலினால்
வழக்குமேல் இட்டணைந்தார்.

தெளிவுரை: நல்லொழுக்க நெறியில் தலை நின்றவராகி, நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தவர்களாய் ஆணவம், கன்மம், மாயை ஆகியன நீங்கப் பெற்ற தில்லைவாழ் அந்தணர்கள். விளங்கும் சபையில் ஆதியும் அந்தமும் இல்லாதவரான சிவபிரான் சிவயோகியாய் முன்னே செல்லப் பெரும் தொண்டரான திருநீல கண்டரும் அன்பு பெருகும் வகையில் வழக்கின் பொருட்டு உடன் சார்ந்தார்.

சிறப்புரை: சிவபிரான் முன் செல்லத் தொடர்ந்து பின் செல்லும் திருநீலகண்டர், "மல்கு பெரும் காதலினால் வழக்கு மேலிட்டு அணைந் தார்" எனச் சாற்றப்பட்டது. இ.ந்து ஈசன்பால் உள்ள இடையறாப் பேரன்பு ஈர்த்துச் சென்றது என்பதாம். இத்தன்மையில் சிவபிரான் வேதியர் வடிவு கொண்டு முன் செல்லச் சுந்தரர், "வல்லிரும்பு அணையுமா போல் வள்ளலும் கடிது சென்றார்" என்று திருப்பாட்டு 196இல் (தடுத்தாட் கொண்ட புராணம்) உரைத்தருளிய வாறும் காண்க.

எல்லை இலான் - ஆதியந்தமில்லாத ஈசன். இரும் தொண்டர்

- பெருந்தொண்டர்: இவரைப் பெரியவர் என்று பாடல் 366-இல் குறித்தமையும் காண்க. 31

391. அந்தணனாம் எந்தைபிரான்
அருமறையோர் முன்பகர்வான்
"இந்த வேட் கோவன்பால்
நான் வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல்
தன் மனைவி கைப்பற்றி
வந்து மூழ் கியும் தாரான்
வலி செய்கின் றான்" என்றார்.

தெளிவுரை: அந்தணராக வந்த எந்தை பிரானாகிய சிவபிரான் தில்லைவாழ் அந்தணர்கள் முன்பு, "இந்த வேட்கோவனிடம் பாதுகாக்குமாறு நான் கொடுத்த பாத்திரத்தைத் தரவில்லை. இதனை இழந்து விட்டானாயின், தன் மனைவியின் கையைப் பற்றிக் கொண்டு குளத்தில் மூழ்கியும் சத்தியம் செய்து தராது மறுத்துத் துன்பம் செய்கின்றான்." என்றார்

அந்தணன் - சிவயோகி. எந்தைபிரான் - சிவபிரான். வேட்கோவன் - திருநீலகண்டர். வைத்த பாதுகாக்குமாறு கொடுத்து வைத்த. பாத்திரம் - திருவோடு. கெடுத்தல் - இழக்கச் செய்தல். தாரான் - சத்தியப் பிரமாணம் செய்து தரவில்லை. வலி செய்தல் - மறுத்துரைத்தலால் துன்புறுத்தல். 32

அவையோர் கேட்கத் திரு நீலகண்டர் பதில் கூறுதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

392. நறைகமழும் சடைமுடியும்
நால்தோளும் முக்கண்ணும்
கறைமருவும் திருமிடறும்
கரந்தருளி எழுந்தருளும்
மறையவன் இத் திறம் மொழிய
மாமறையோர் உரைசெய்வார்
"நிறையுடைய வேட்கோவர்
நீர் மொழியும் புகுந்தது" என:

தெளிவுரை: சிவபெருமான் இனிய கொன்றை மலரின் மணம் மகழும் சடைமுடியும், நான்கு தோள்களும், மூன்று கண்களும், கறை விளங்கும் கழுத்தும் மறையுமாறு செய்து சிவயோகியாக வந்து இத்தன்மையில் கூற, தில்லை வாழ் அந்தணர்கள், "நிறையுடைய வேட்கோவரே! நீர்

உமது நிலையைக் கூறுவீராக." என்று உரைக்கலானார்கள்.

இவண் "என" என்பது அடுத்த பாடலின் "செய்தார்" என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: சிவபிரான் நறுங்கொன்றை மலர் மாலையைச் சடைமுடியில் தரித்த செம்மை நறைகமழும் சடைமுடி எனச் சாற்றப்பட்டது. சிவபிரான் நான்கு தோள் உடைய செம்மையைச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணம் சிவபுண்ணியப் படலம் பாடல் 8-இல்,

> "அடுப்பார்க்கு அருளும் ஒரு தாளும் அம்பொற்கமல விழி
> மூன்றும் பாடப்பாம்பு அணிந்த புயம் நான்கும்
> சூலப்படையும் எழில் வயங்க"

என்று அருளியவாறும் காண்க.

நறை - நறுமணம். கறை மருவும் திருமிடறு - நஞ்சின் வண்ணமான கருமை கலந்த கண்டம்; திருநீல கண்டம். மறையவன் சிவயோகியார். மாமறையோர் - தில்லைவாழ் அந்தணர்கள். நிறை - நற்பண்பு. வேட்கோவர் - நாயனாரைக் குறித்தது. புகுந்தது - நடந்த செயல். 33

393. "நீள்நிதியாம் இதுஎன்று
நின்றஇவர் தரும்ஓடு
பேணிநான் வைத்த இடம்
பெயர்ந்து கரந் ததுகாணேன்
பூண் அணிநூல் மணிமார்பீர்
புகுந்த பரிசுஇது" என்று
சேண் இடையும் தீங்கு அடையாத்
திருத்தொண்டர் உரை செய்தார்.

தெளிவுரை: அண்மையில் மட்டுமல்லாது தொலைவிடையும் தீங்கு நினையாத திருத்தொண்டரான திருநீலகண்டர், "அழகிய முப்புரி நூலை அழகு விளங்கும் மார்பில் அணிகலனாகக் கொண்டு விளங்கும் நல்லீர்! இதுவே பெருஞ்செல்வம் என்று கூறி, இச்சிவயோகி தந்த ஓட்டினை நான் பாதுகாப்பாக வைத்த இடத்திலிருந்து காணாமற் போனது. அதனை நான் அறியவில்லை. இதுவே நடந்த செயல்." என்றார்.

நீள் நதி - பெருஞ் செல்வம். இவர் - சிவயோகியாரைக் குறித்தது. பேணி - பாதுகாப்பாக. கரந்தது - மறைந்தது. நூல் - முப்புரி நூல். பரிசு - செயல். சேண் - தொலைவு. திருத்தொண்டர் - திருநீல கண்டர். 34

அவையோர் உரைத்தல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

394. திருவுடை அந்த ணாளர்
செப்புவார் "திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர்தாம் வைத்த
ஓட்டினைக் கெடுத்தீ ரானால்
தரும்இவர் குளத்தில் மூழ்கித்
தருக என்று உரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு
மூழ்குதல் வழக்கே" என்றார்.

தெளிவுரை: தில்லைவாழ் அந்தணர்கள், "நன்கு திகழும் திருநீற்றின் பாங்கராய் விளங்கும் இச்சிவயோகி உம்மிடம் வைத்திருக்குமாறு கொடுத்த ஓட்டினை இழந்தீரானால், அவ்வோட்டினைத் தந்த இவரே, உம் மனைவியோடு குளத்தில் மூழ்கிச் சத்தியப் பிரமாணம் செய்யுமாறு உரைத்தாராகில் அவ்வாறு செய்வதே நியாயம்." என்றார்கள்.

திருவுடை அந்தணாளர் - தில்லைவாழ் அந்தணர்கள். நீற்றின் திருவுடை இவர் - சிவயோகி. தரும் இவர் - ஓட்டினைத் தந்த சிவயோகி. தருக என்று - சத்தியப் பிரமாணம் தரும் படி. வழக்கு - நியாயம், ஒழுக்கு. 35

நாயனார், மனைவியாரைத் தண்டு வாயிலாகப் பற்றச் செய்து குளத்தில் மூழ்கச் செல்லுதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

395. அருந்தவத் தொண்டர் தாமும்
அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத்
தீண்டாமை செப்ப மாட்டார்
பொருந்திய வகையால் மூழ்கித்
தருகின்றேன் போதும் என்று
பெருந்தவ முனிவ ரோடும்
பெயர்ந்துதம் மனையைச் சார்ந்தார்.

தெளிவுரை: அருமையுடைய புலன்களை ஒடுக்கும் தவத்தையுடைய திருத்தொண்டராகிய திருநீல கண்டர், தில்லைவாழ் அந்தணர்கள் மொழியக் கேட்டு நல்ல நெறியினின்று வழுவாத தன் மனைவியாரைத் தீண்டாது காக்கம் செயலை உரையாதவராகிப் "பொருந்திய

வகையால் குளத்தில் மூழ்கிப் பாத்திரத்தைக் களவு செய்யாமை குறித்த சத்தியப் பிரமாணத்தைத் தருகின்றேன் வருக." என்று கூறிப் பெருந்தவ முனிவராகிய சிவயோகியாரோடு தன் மனையை அடைந்தார்.

சிறப்புரை: இவண் திருநீல கண்டரைத் தவத் தொண்டர் எனச் சாற்றப் பெறுதல் காண்க. இத்தன்மையில் நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் 'தில்லைத் திருநீல கண்டக் குயவனாம் செய் தவனே" என்று சாற்றியமையும் காண்க.

தவத்தொண்டர் - திருநீல கண்டர். அந்தணர் - தில்லை வாழ் அந்தணர். போதும் - வருக என்னும் பொருளது. தவமுனிவர் - சிவயோகி. 36

396. மனைவியார் தம்மைக் கொண்டு
மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவும்
திருப்புலீச் சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி
நண்ணித் தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின்
இருதலை பிடித்துப் புக்கார்.

தெளிவுரை: திருநீலகண்டர் தம் மனைவியை, அழைத்துக் கொண்டு வந்து அந்தணராகிய சிவயோகியார் முன்னிலையில் இடப வாகனத்தில் மேவும் சிவபிரான் வீற்றிருக்கும் திருப்புலீச்சுரம் என்னும் திருக்கோயிலின் முன்னே குளிர்ந்த மலர்ச்சோலை சூழ்ந்த குளத்தை யடைந்து தாம் சூளுரைத்த உண்மையைக் காக்கும் வகையில் மணிகள் பதித்த மூங்கில் தண்டின் ஒரு பக்கத்தில் மனைவி பற்றிக் கொண்டிருக்கத் தாம் வேறு ஒரு பக்கத்தைப் பற்றிக் கொண்டு குளத்திற் புகுந்தார்.

இவர்தம் சிறப்பினைப் பட்டினத்தடிகள், "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேனல்லன்" என்று திருநீல கண்டரைப் பற்றிச் சாற்றியமையும் காண்க.

விடைப்பாகர் - சிவபிரான். சினம் - இடபத்திற்கு அடைமொழி. திருப்புலீச்சுரம் - தில்லையில் நடராசப் பெருமான் திருக்கோயிலுக்கு மேற்புறத்தில் உள்ளது. இளமையாக்கினார் கோயில் என்று வழங்கப்படுவது. வாவி - குளம். வேணு - மூங்கில். இருதலை - இரண்டு பக்கம். 37

மனைவியின் கையைப் பற்றிக் கொண்டு மூழ்குமாறு சிவயோகியார் கூற, அது கூடாமைக்குரிய காரணத்தைப் பலரறியக் கூறிக் குளத்தில் மூழ்குதல்.

397. தண்டு இரு தலையும் பற்றிப்
புகும் அவர் தம்மை நோக்கி
வெண்திரு நீற்று முண்ட
வேதியர் "மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர்" என்னக்
கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதம் செய்கை சொல்லி
மூழ்கினார் பழுது இலாதார்.

தெளிவுரை: மூங்கில் தண்டின் இரு பக்கமும் தனித்தனியே பற்றிக் கொண்டு குளத்தில் மூழ்குபவர்களை நோக்கித் திருநீறு புனைந்த நெற்றியுடைய சிவயோகி மனைவியைத் தீண்டிக் கொண்டு நீரில் மூழ்குமாறு கூறினார். அப்போது திருத்தொண்டர், முற்காலத்தில் கொண்ட செய்கையும் மனைவியார் தொடுத்த ஆணையும் கூறி அதன் வழி மனைவியை மட்டுமல்லாது வேறு மாதரையும் தீண்டாத நெறியும் உள்ளவற்றைத் தெரிவித்துப் பழுதற்றவராய் மேவி இருவரும் குளத்தில் மூழ்கினார்கள்.

இருதலை - இரண்டு பக்கமும். மாது - நாயனாரின் மனைவி. பாரோர் - உலகோர். பண்டு - முன்பு. பழுது - குற்றம். 38

மூழ்கி எழுந்தவர் இளமையில் திகழ இறைவன் காட்சி தருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

398. வாவியின் மூழ்கி ஏறும்
கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி
விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும்
சிறப்பொடு பொழியும் தெய்வப்
பூவின்மா மழையின் மீள
மூழ்குவார் போன்று தோன்ற:

தெளிவுரை: குளத்தில் மூழ்கிக் கரையில் ஏறும் கணவரும், மனைவியாரும் அவர்கள் பெற்றிருந்த முதுமைக் கோலம் நீங்கி விரும்பி ஏற்கும் இளமை பெற்றவர்களாய்த் தோன்றத் தேவர்களும்,

முனிவர்களும் வானிலிருந்து பூமாரி பொழியலானார்கள். அத்தன்மை அவர்கள் பூமழையிலிருந்தும் மூழ்கி எழுதலைப் போன்று விளங்கியது.

இவண் தோன்ற என்பது அடுத்த பாடலின் விடைமேல் கண்டார் என வினை முடிபு பெறும்.

வாவி - குளம். கணவர் - திருநீலகண்டர். 39

399. அந்நிலை அவரைக் காணும்
அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத
முதல்வரைக் கண்டா ரில்லை
இந்நிலை இருந்த வண்ணம்
ஏன்என மருண்டு நின்றார்
துன்னிய **விசும்பின் ஊடு**
துணையுடன் விடைமேல் கண்டார்

தெளிவுரை: திருநீலகண்டரையும், அவர் துணைவியாரையும் இளமைக் கோலத்தில் காணும் அதிசயத்தைக் கண்ட அன்பர்கள் முன்னிலையில் நின்ற சிவவேதியரைக் காணாதவரானார்கள். அவ்வேதியர் யாங்கு சென்றார் என்று மருட்சி கொண்டு நிற்க, அவர் ஆகாயத்தில் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் திருக்காட்சி நல்குதலானார்.

வேத முதல்வர் - சிவவேதியர். விசும்பு - ஆகாயம். துணை - உமாதேவி. விடை - இடபம். 40

யாவரும் ஈசனைப் போற்றித் துதித்தல்

400. கண்டனர் கைகள் ஆரத்
தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள்
அன்பர்தம் பெருமை நோக்கி
விண் தரும் பொலிவு காட்டி
விடையின் மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாரும்
தொழுதுடன் போற்றி நின்றார்.

தெளிவுரை: சிவபிரானைக் கண்டு தரிசித்துக் கைகள் ஆரத் தொழுது தேவர்களும் பேரன்பு கொண்டு ஏத்தினார்கள். அடியவர்களின் பெருமையை நோக்கி விண்ணில் பொலிவோடு திருக் கோலத்தைக்

காட்டி யருளும் இடப வாகனத்தையுடைய ஈசனைத் திருத்தொண்டரும், அவர் மனைவியாரும் தொழுது போற்றித் துதித்து நின்றார்கள்.

கலந்த காதல் - இ.ந்து ஆன்மாவானது இறைவனோடு பொருந்தி மேவும் பேரன்பு என்பதாம். இதனை மாணிக்கவாசகர் "கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும் நலம்" என்று அருளியவாறும் காண்க. விடைவின் மேல் வருவார் - சிவபிரான். தொண்டர் - திருநீல கண்டர். 41

ஈசன் அசரீரி வாக்காக அருளிச் செய்து மறைதல்.

401. மன்றுளே திருக்கூத் தாடி
அடியவர் மனைகள் தோறும்
சென்று அவர் நிலைமை காட்டும்
தேவர்கள் தேவர் தாமும்
"வென்ற ஐம் புலனால் மிக்கீர்
விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ் இளமை நீங்காது"
என்று எழுந்து அருளி னாரே.

தெளிவுரை: சிற்சபையில் திருக்கூத்து ஆடி அடியவர்கள் இல்லந்தோறும் சென்று அத்தகையோருடைய சிறப்பியல்புகளை உலகுக்கு வெளிப்படச் செய்யும் தேவதேவராகிய சிவபிரான், "வெற்றி மேவும் புலன்கள் சிறக்க வாழ்ந்தவர்களே! நீங்கள் இவ் இளமை நீங்காது எக்காலத்திலும் நம்பால் விருப்பம் கொண்டு இருப்பீர்களாக!" என்று அருளிச் செய்து உருக்கரந்தார்.

சிறப்புரை: இவண் புலன் வழி அறிவு இல்லாது இறை வழி மேவி, அறிவின் வழி இயங்கிக் காத்தலை , "வென்ற ஐம்புலன்" என்று சாற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்க வாசகர் திருவாசகம் யாத்திரைப் பத்து திருப்பாட்டு 2-இல்,

"புகவே வேண்டா புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினை மின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளராது இருப்பார் தாந்தாமே!"

என்று அருளியவாறும் காண்க.

சிவபிரான் அடியவர்கள் மனைகள் தோறும் சென்று அருளிச் செய்தலின் சிறப்பினை இத்திருப்பாடலின் முதலடி வாயிலாகச் சாற்றியமை காண்க. இத்தன்மையில் மாணிக்க வாசகர், திருவெம்பாவை திருப்பாசுரம் 17-இல்,

"செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்எம்பாவாய்"

என்று அருளியவாறும் கொள்க.

மனைகள் - இல்லங்கள். தேவர்கள் தேவர் - சிவபிரான். வென்ற ஐம்புலன் - வெற்றி கொள்ளப்படும் ஐம் புலன். எழுந்தருளி - விண்ணிலிருந்து உருக்கரந்து மறைதற் குறிப்பு. 42

நாயனார் தம் மனைவியோடு சிவலோகம் அடைதல்.

402. விறலுடைத் தொண்ட னாரும்
வெண்ணகைச் செவ்வாய் மென்தோள்
அறல்இயல் கூந்த லாளாம்
மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து
சிவலோகம் அதனை எய்திப்
பெறலரும் இளமை பெற்றுப்
பேரின்பம் உற்றார் அன்றே.

தெளிவுரை: உறுதி மிக்க திருத் தொண்டராகிய திருநீல கண்டரும், வெண் பற்களும் சிவந்த வாயும் மென்மையான தோளும் கருமணலின் எழில் போன்ற கூந்தலும் உடைய அவர் மனைவியும் அருள் தன்மை பூண்ட திறமிக்க செய்கையான புலன்களை அடக்கி யாண்டு அதன் வாயிலாகச் சிவலோகத்தையும், பெறுவதற்கு அருமையுடைய இளமையையும் கொண்டு அப்போதே பேரின்பத்தைப் பெற்றார்கள்.

அறல் - கருமணல். 43

திருநீலகண்டருடைய செயலைப் போற்றி இயற்பகையார் செய்த திருத்தொண்டினைச் சாற்றத் தொடங்குதல் - கவிக்கூற்று

403. அயல்அறி யாத வண்ணம்
அண்ணலார் ஆணை ஊய்த்த
மயலில் சீர்த் தொண்ட னாரை
யானறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாடம் நீடும்
பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல்இயற் பகையார் செய்த
திருத் தொண்டு செப்ப லுற்றேன்.

தெளிவுரை: பிறர் அறியாதவாறு சிவபிரான் பெயரால் "திருநீலகண்டம்" என்று நவின்று ஆணை கடவாது பாதுகாத்து நின்றவரும், உலக மயக்கத்திலிருந்து நீங்கியவருமான சிறப்பின் மிக்க திருத் தொண்டராகிய திருநீல கண்டரைப் போற்றி, வணங்கி, மேகம் தவழும் உயர்ந்த மாடங்கள் பொருந்திய பூம்புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகப் பெருமகனாரான பொய்மையில்லாத செயல் மேவும் இயற்பகை நாயனார் ஆற்றிய திருத் தொண்டினைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

இது கவிக் கூற்று.

அயல் - பிறர். அண்ணலார் ஆணை - திருநீலகண்டம் என்னும் ஈசன் பெயரால் கொண்ட ஆணை. மயல்இல் - மயக்கம் இல்லாத. சீர்த் தொண்டர் - திருநீலகண்டர். புயல் - மேகம். பொய்யில் - பொய்ம்மை இல்லாத. 44

திரு நீலகண்ட நாயனார் புராணம் நிறைவுற்றது.

9. இயற்பகை நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்:

காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் தோன்றியவர் இயற்பகை என்பவர். அவர் சிவனடியார்கள் விரும்புவதை இல்லை என்னாது வழங்கி வந்தார். ஒரு நாள் சிவபிரான் அவ் அடியவரின் திருத் தொண்டின் திறத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு, வேதியராய்த் திருநீற்றுத் திருக்கோலம் கொண்டு காமுகர் என நாயனார்பால் வந்தார். அவர் அடியவரை நோக்கி "உமது திருத் தொண்டு செய்யும் திறத்தைக் கேள்வியுற்று ஒரு பொருளை நாடி வந்தோம். அதனை அளிப்பதற்கு நீர் இசைவீராயின் தெரிவிக்கிறோம்." என்றார்.

நாயனார் வந்த அடியவரை நோக்கி, "எப்பொருளாயினும் அது எம்மிடம் இருக்கமாயின் தருகிறேன்." என மொழிந்தார். மறையவர், "உம் மனைவியை நாடி இங்கு வந்தோம்." என, இயற்பகையார், "என்னிடம் உள்ள பொருளையே நாடியது என் புண்ணியப் பயனே." என்று உரைத்தார். நாயனார் தம் மனைவியைத் தர, வந்த அடியவர் "நான் இந்த நங்கையை அழைத்துக் கொண்டு செல்லும் போது, உங்கள் உறவினர்கள் இடையூறு செய்யாதபடி நீர் துணையாக வர வேண்டும்." என்றார்.

உறவினர்கள், இயற்பகையின் துணைவியாரை வேதியர் அழைத்துச் செல்வதைக் கண்டு தடுக்க, நாயனார் அவர்களை எதிர்த்து அனைவரையும் தம் வாளால் வெட்டி வீழ்த்தினார். பின்னர்ச் சிறிது தொலைவு சென்று தன் துணைவியாரை வேதியர் பால் அனுப்பித் திரும்பினார். அப்போது வேதியர் "ஓலம்" என்று கூக்குரல் இட நாயனார் திரும்பிச் சென்றார். ஆங்கு வேதியர் மறைய சிவபிரான் விண்ணில் இடப வாகனத்தில் அமர்ந்து உமாதேவியாரோடு காட்சி நல்கிச் சிவலோக வாழ்வழித்தார். இறந்துபட்ட உறவினர்களும் முத்திப்பேறு அடைந்தார்கள்.

புகார் நகரச் சிறப்புரைத்தல்
எண்சீர் ஆசிரியவிருத்தம்.

404. சென்னி வெண்குடை நீடுஅந பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளம்தர இயல்பினில் அளித்துப்
பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதம்ஆக் குவதோர்
நன்னெ டும்பெரும் தீர்த்தம் முன் உடைய
நலம்சி றந்தது வளம்புகார் நகரம்.

தெளிவுரை: சோழர்களின் வெண்கொற்றக் குடையின் கீழ் இனிது மேவும் அநபாய சோழன் என்னும்" மன்னவன் தொல் புகழ் விளங்கும் வகையில் மருத வளம் நாட்டி, நீர் வளம் பெருகும் இயல்பாய் பாயும் காவிரி நதி கடலைப் புனிதமாக்குவது போன்று அதன்கண் சேரும். இவ் இயல்பு கொண்டு சிறந்து விளங்குவது பூம்புகார் நகரம்.

சிறப்புரை: சோழ மன்னன் அநபாய சோழனின் பெரும் முயற்சியால் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை அருளிச் செய்தமை கொண்டு மன்னனை நினைவு கூரும் வகையில் "வெண் குடை நீடு அநபாயன்" எனப்பட்டது. இந்நகரில் காவிரி கடலில் கலப்பதால் காவிரிப்பூம்பட்டினம் எனவும் பெயர் பெற்றது.

பொன்னி நல் நதி - காவிரியாறு. புணரி - கடல். புகார் - காவிரிப்பூம்பட்டினம். இங்குள்ள சிவதலமான பல்லவனீச்சுரம், காவிரி வடகரைத்தலம் - ஞானசம்பந்தர் பாடல் பெற்றது. 1

இயற்பகையார் அடியவர்கள்
வேண்டுவனவற்றை அளித்து வாழ்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

405. அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர்
அளவில் செல்வத்து வளமையின் அமைந்தார்
செக்கர் வெண்பிறைச் சடையவர் அடிமைத்
திறத்தின் மிக்கவர் மறைச் சிலம்பு அடியார்
மிக்க சீர்அடி யார்கள் யார் எனினும்
வேண்டும் யாவையும் இல்லைஎன் னாதே
இக்க டல்படி நிகழ முன் கொடுக்கும்
இயல்பின் நின்றவர் உலகு இயற் பகையார்.

தெளிவுரை: அத்தகைய மேன்மையுடைய நகரில் அளவற்ற பெருஞ் செல்வந்தராய், வெண்மையான பிறைச் சந்திரனைத் தரித்த சடைமுடியுடைய சிவபிரானுக்கு அடிமைத் தொண்டு மிக்கவராய், வேதமாகிய சிலம்பு அணிந்த திருநடனம் புரியும் நடராசப் பெருமான் அடியவர்கள் யாராக இருப்பினும், அவர்கள் ஏது கேட்டாலும் இக்கடல் சூழ்ந்த உலகம் காண இல்லை என்னாது கொடுக்கும் இயல்பில் வணிகர் குலத்தில் இயற்பகையார் விளங்கினார்.

சிறப்புரை: இவர் உலகியல் நெறியைக் கருதாது இறைவன் திருத் தொண்டே மேன்மையுடையது என்று கருதிய செம்மை, உலகு இயற்பகையார் எனச் சாற்றப்பட்டது. இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "இல்லையே என்னாத இயற் பகைக்கும் அடியேன்" என்று அருளியவாறும் காண்க.

மறைச்சிலம்பு அடியார் - வேதமாகிய சிலம்பைப் பாதத்தில் அணிந்துள்ள நடராசப் பெருமான். கடல் படி - கடல் சூழ்ந்த உலகம். படி - உலகம். 2

406. ஆறு சூடிய ஐயர்மெய் அடிமை
அளவி லாததோர் உளம் நிறை யருளால்
நீறு சேர்திரு மேனியர் மனத்து
நினைத்த யாவையும் வினைப்பட முடித்து
மாறுஇ லாதநல் நெறியினில் விளங்கும்
மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த
பேறுஎ லாம்அவர் ஏவின செய்யும்
பெருமை யேஎனப் பேணி வாழ் நாளில்:

தெளிவுரை: கங்கையைச் சடை முடியில் தரித்த தலைவராகிய சிவபிரானுக்கு மெய்யடிமை கொண்டவராகி, அளவற்ற பேரன்பு கொண்டவராய் விளங்கி மேவும் இயற்பகையார், உள்ளம் நிறைந்த அருள் கொண்டு திருநீறு தரித்த மேனியராய்த் திகழும் சிவனடியார் மனத்தில் நினைத்தவாறு யாவையும் செயலில் கொள்ளுமாறு நிறைவு செய்து, அந்நெறியிலிருந்து சற்றும் மாறுபடாது மேவி, மனையறம் காத்தும், அதுவே வாழ்க்கையின் சிறப்பான பேறாகவும் கொண்டு வரலானார். இவ்வாறு சிவனடியார்கள் ஏவுகின்ற பணியைச் செய்வதே பெருமையுடையது என்று எண்ணி வாழ்ந்து வந்தார்.

இவண் நாளில் என்பது அடுத்த பாடலின் வந்தார் என வினை முடிபு பெறும்.

சிறப்புரை: சிவபிரானே மெய்யாய் நிலைத்து நிற்கக் கூடியவர். ஆதலால் அப்பெருமானுக்கு அடிமை பூண்டு ஒழுகுதலே மெய்யான அடிமை என்று முதலடியின் வாயிலாகச் சாற்றப்படுவதாயிற்று. மற்றும் அத்தகைய மெய்ப் பொருளைச் சார்ந்து விளங்கும் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்தலே பெருமையாம் என்பது ஈற்றடியின் வாயிலாக உணர்த்தப் பெற்றது. இதன் வழி ஏவின செய்யும் பணி அடியார்க்கு அடியனாதல் என்க. இத்தன்மையில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருப்பாட்டு 335-இல் (தடுத்தாட் கொண்ட புராணம்-189),

.....மண்மேல்
மிக்கசீர் அடியார்கூடி
எண்ணிலார் இருந்த போதில்
இவர்க்கு யான் அடியேனாகப்
பண்ணும்நாள் எந்நாள்..."

என்று விண்ணப்பித்த வகையும் காண்க.

ஆறு - கங்கை. ஐயர் - சிவபிரான்: தலைவர். மெய் அடிமை - மெய்ப் பொருட்டு அடிமை. நீறு சேர் திருமேனியர் - சிவனடியார். வினைப்பட - செயலில் விளைந்து பயன் தருமாறு - மனையறம் - இல்லறம். பேணி - பணி செய்து ஒழுகி 3

சிவபிரான் வேதியராக வருதல்

407. ஆயும் நுண்பொருள் ஆகியும் வெளியே
அம்ப லத்துள் நின்று ஆடுவார் உம்பர்
நாய கிக்கும்அஃது அறியவோ பிரியா
நங்கை தான்அறி யாமையோ அறியோம்
தூய நீறுபொன் மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமும் தோன்றவே தியர் ஆய்
மாய வண்ணமே கொண்டுதம் தொண்டர்
மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்.

தெளிவுரை: அறிவு கொண்டு ஆய்பவர்களுக்குப் புலப்படாத நுண்பொருளாகவும், பரவெளியில் அம்பலத்துத் திருநடனம் புரிபவராகவும், தேவர்களின் தலைவியாகிய சிவகாமவல்லி அறியவோ அன்றி, அப்பிரியாத நங்கையும் அறியாத தன்மையோ என அறியோம் அந்நிலையில் தூய திருநீறு மேனியில் விளங்கக் காமுகன் போன்று திருக்கோலம் தோன்ற வேதியர் வடிவு கொண்டவராகிப் பிறரை மயக்கும் எழில் வண்ணத்துடன் தம் தொண்டராகிய இயற்பகையாரின்

மாறாத திருத் தொண்டின் சிறப்பினை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் சிவபிரான் வந்தார்.

சிறப்புரை: சிவபிரான் அறிவால் அறிவதற்கு எட்டாத நுண்பொருளாயும் அன்பர் உள்ளத்தில் விளங்கும் ஒளி விளக்காகவும் விளங்குபவர் என்பது இவண் முதலடியின் கருத்தாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "வேதங்கள் ஐயா என, ஓங்கி அழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று அருளியமையும் காண்க.

ஆய்தல் - ஆராய்தல். வெளி - பரவெளி. உம்பர் நாயகி - சிவகாம வல்லி. பிரியா நங்கை - உமையம்மை: இவண் இடப்பாகத்தில் மேவும் அம்பிகையின் சிறப்பினை எடுத்தோதப்பட்டது. தூர்த்தர் - காமுகர். மாய வண்ணம் - மயக்கும் தன்மை. தொண்டர் - இயற்பகை நாயனார். மறாத - கொள்கையிலிருந்து வழுவாத. 4

வேதியராக வந்த சிவபிரான் இயற்பகையாரை அடைதல்

408. வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின்
மருங்கு இயற்பகை யார்மனை புகுந்த
எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார்கள்
என்று நின்றதோர் இன்பஅ தரவால்
சிந்தை அன்பொடு சென்றெதிர் வணங்கிச்
சிறப்பின் மிக்க அர்ச் சனைகள் முன் செய்து
"முந்தை எம்பெரும் தவத்தினால் என்கோ
முனிவர் இங்கெழுந்து அருளியது" என்றார்.

தெளிவுரை: வேதியராகிய ஈசன் புகார் நகரத்தின் வணிகர் வீதியில் உள்ள இயற்பகையார் மனையை அடைய, "எந்தையாகிய ஈசன் அடியவர் வந்துற்றார்." என்று மகிழ்வெய்தி பேரன்புடன் எதிர்சென்று வணங்கிச் சிறப்பான அர்ச்சனைகள் புரிந்தும், வழிபாடு செய்தும், "முன்னர் யாம் செய்த பெருந் தவப்பயனால் தேவரீர் இங்கு வந்துற்றது!" என்றார்.

மறுகு - வீதி. எம்பிரான் அடியவர் - சிவனடியார், முனிவர் - வேதியராக வந்த ஈசன். 5

யாம் கேட்கும் பொருளைத் தருவதாக உரைப்பின் வேண்டுவது யாது எனத் தெரிவிப்பதாக வேதியர் கூறுதல்

409. என்று கூறிய இயற்பகை யார்முன்
எய்தி நின்றஅக் கைதவ மறையோர்
"கொன்றை வார்சடை யார்அடி யார்கள்
குறித்து வேண்டிய குணம்எனக் கொண்டே
ஒன்றும் நீர்எதிர் மறாது வந்து அளிக்கும்
உண்மை கேட்டுநும் பால் **ஒன்று வேண்டி**
இன்று நான் இங்கு வந்தனன் அதனுக்கு
இசைய லாம்எனில் இயம்பலாம்" என்றான்.

தெளிவுரை: இவ்வாறு வரவேற்று உபசரித்த இயற்பகையார் முன்னே, வஞ்சனை ஒழுக்கமுடைய வேதியர், "சிவனடியார்களைக் குறித்துக் கேட்கும் பொருளனைத்தையும் நற்குணப் பாங்காகக் கொண்டு அவற்றை மறுக்காது நீர் மகிழ்வுடன் அளிக்கும் செம்மையைப் பிறர் கூறக் கேட்டு, உம்மிடம் ஒன்றை வேண்டிப் பெற, இன்று நான் இங்கு வந்தேன். அதற்கு நீர் இசைவதாக இருந்தால் நான் தெரிவிக்கிறேன்." என்றார்.

கைதவம் - வஞ்சகம்.: கபடம். மறையோர் - வேதியர். கொன்றைவார் சடையார் - சிவபிரான். குணம் - இனியதாக ஏற்று. இசையலாம் எனில் - உடன் படுவதாயின். இயம்பலாம் - தெரிவிக்கிறேன். 6

வேதியர் இயற்பகையின் மனைவியாரைக் கேட்க நாயனார் மகிழ்தல்

410. என்ன அவ்வுரை கேட்டு இயற் பகையார்
"யாதும் ஒன்றும்என் பக்கல்உண் டாகில்
அன்னது எம்பிரான் அடியவர் உடைமை
ஐயம் இல்லை நீர் அருள் செயும்" என்ன
"மன்னு காதல்உன் மனைவியை வேண்டி
வந்தது இங்கெ"ன அந்தணர் எதிரே
சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து
தூயதொண்டனார் தொழுதுரை செய்வார்.

தெளிவுரை: வேதியரின் உரையைக் கேட்டு இயற்பகையார், "என்னிடம் உள்ள பொருள் யாவும் அடியவர்க்கு உடைமையாகும். இதில் ஐயம் இல்லை; நீர் வேண்டியதைத் தெரிவிப்பீர்."என்று கூற வேதியரும்,

"நான் வேண்டி வந்தது உன் அன்பு மனைவியையே." என்றார். இதனைக் கேட்ட நாயனார், தன்னிடம் இருக்கின்றதையே கேட்டதை எண்ணி, முன்னினும் மகிழ்ச்சியடைந்து, வேதியரைத் தொழுது உரைக்கலானார்.

சிறப்புரை: அடியவர் தன்னிடம் உள்ள பொருள்களை வினவுவாரோ அன்றி வேறு ஒரு பொருளையும் நாடிக் கேட்பாரோ என்று ஐயுற்றிருந்த நிலையில், அவர்தம் மனைவி அவரிடமுள்ள பொருளாதலால் தடையின்றி வழங்கலாம் என்ற கருத்தில் இயற்பகையார் முன்னினும் மகிழ்ந்தார் என்பதாம்.

எம்பிரான் அடியவர் - சிவனடியார். அந்தணர் - வேதியர் வடிவத்தில் வந்த சிவபிரான். தூய தொண்டனார் - இயற்பகை நாயனார். 7

நாயனார் தன் மனைவியை வேதியர்க்குக் கொடுத்து மகிழ்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

411. "இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி
எம்பிரான் செய்த பேறு எனக்கு" என்னாக்
கதும்எனச் சென்று தம்மனை வாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலி யாரை
"விதி மணக் குலமடந் தைஇன்று உனைஇம்
மெய்த்த வர்க்கு நான் கொடுத்தனன்" என்ன
மதும லர்க்குழல் மனைவியார் கலங்கி
மனம் தெளிந்தபின் மற்றிது மொழிவார்.

தெளிவுரை: நாயனார், வேதியரை நோக்கி, "தேவரீர் தெரிவித்தது, என்னிடம் உள்ளதேயாகும். எம்பிரான் செய்த பெரும்பேறு இது." என்று உரைத்து விரைந்து சென்று, தன் இல்லற வாழ்க்கைக்குக் கற்பின் மேம்படு அன்புத் துணைவியை நோக்கி, "விதிப்படி மணந்துள்ள குலப்பெண்ணே! இன்று உன்னை மெய்த்தவ வேதியராக உள்ள இவற்குக் கொடுத்தேன்." என்றார். அதனைக் கேட்டதும் முதற்கண் சிறிது மனங்கலங்கிப் பின்னர்த் தெளிவு பெற்றவராகி அம்மாதரசி மொழியலானார்.

சிறப்புரை: தம்பால் இல்லாத பொருளைச் சிவனடியார் வினவி இருப்பாராயின் அதனைப் பெறுவது குறித்து நாயனார் ஈடுபடுகின்ற செயற்பாடு உண்டாகும். அத்தன்மையான இடர் ஏதும் இன்மையால்

இவண், "எம்பிரான் செய்த பேறு" எனச் சாற்றப்படுவதாயிற்று. அத்துணைவியார் தன் நாயகனை விடுத்துச் செல்வது "உலகியல் அல்லவே" என்னும் கருத்தில் முதற்கண் கலங்கினார் என்பதாம்.

முன் உள்ளதே - தன்பால் உள்ள பொருள் என்பது. எம்பிரான் செய்த பேறு - ஈசன் அருளிய சிறப்பு. கதும் - விரைவுக் குறிப்பு. மனை வாழ்க்கை - இல்லற வாழ்வு. காதலியார் - அன்பு மனைவி. குலமடந்தை - குலப்பெண்; இது வேறு வகையான பெண்டிரைப் போன்றன்றித் தன் கணவனே உயிர் எனக் காக்கும் குலப்பெண் என்னும் குறிப்பு. மெய்த்தவர் - வேதியர். மதுமலர்க்குழல் - தேன் விளங்கும் மலர் தரித்த கூந்தல்.

8

412. "இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல்
என்னுயிர்க்கு ஒருநாத நீர் உரைத்தது
ஒன்றை நான் செயும் அத்தனை அல்லால்
உரிமை வேறுஉள தோஎனக்கு" என்று
தன்த னிப்பெரும் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனார் தாம் எதிர் வணங்கச்
சென்று **மாதவன் சேவடி பணிந்து**
தினைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.

தெளிவுரை: தன்னை வேதியர் வேண்டியவாறு ஒப்படைத்ததைக் கேட்டதும் அந்நங்கை, "எனக்கு நீர் செய்த அருள் தன்மை இதுவாயின், என்னுயிர்த் தலைவராகிய தேவரீர் உரைத்த ஆணைவழி நான் நடப்பது அல்லால் வேறு உரிமை யாது உள்ளது?" என்று தன் ஒப்பற்ற கணவரை வணங்கி நின்றார். அப்போது இயற்பகையார் அவரை எதிர் வணங்கித் தாழ்ந்தார். பின்னர்த் திருமகளினும் சிறப்புடைய அவ் அம்மையார் மாதவராகிய வேதியரைப் பணிந்து திகைப்புற்ற நிலையில் நின்றார்.

சிறப்புரை: மனைவி என்பவர் கணவருக்குரிய உடைமையாய்த் தொண்டு செய்யும் உலகியல் நெறியைக் கடந்து உயிர் ஒன்றிய அன்பின் வழி மேவிய மெய்த்தன்மை இவண் அம்மையார் திருவாக்கால் "என்னுயிர்க்கு ஒரு நாதன்" எனச் சாற்றப்பட்டது. நாயனாரின் உயிர்த் தலைவனாக விளங்கும் சிவபிரான் போன்று அந்நங்கையின் உயிர்த் தலைவராக நாயனார் விளங்கியமை கற்பின் பெருமையைச் சாற்றுவதாம். இக்கருத்து முன் பாடலின் 2-ஆம் அடியில் "கற்பின் மேம்படு காதலியார்" என்ற சுட்டியமை காண்க.

தம் மனைவியே யாயினும் வேதியார்க்கு உரிய பொருளாக அளிக்கப்பட்ட நிலையில் நாயனார் அவர்க்கு வணக்கம் செலுத்தினார் என்பதாம்.

நாதன் - தலைவர். தனிப்பெருங் கணவர் - தான் மனைவியாக வாய்க்கப் பெற்றது சிவனடியார்க்கு என்பதால் இத்தகைய அடியவர்தம் பெருமை தோன்ற தனிப் பெருங் கணவர் எனச் சாற்றப்பட்டது. தொண்டனார் - இயற்பகை நாயனார். மாதவன் - வேதியராக வந்து தன்னை விழைந்து பெற்ற சிவபிரானைக் குறித்தது. திரு - திருமகள்; இவண் அம்மாதரசியின் அழகு மேன்மையைச் சிறப்பித்துக் கூறியது. 9

வேதியர், நாயனாரைத் தனக்கு துணையாய் வருமாறு கூறுதல்

413. மாது தன்னைமுன் கொடுத்த மாதவர்தாம்
மனம் மகிழ்ந்து பேர் உவகையின் மலர்ந்தே
யாது நான்இனிச் செய்பணிஎன்றே
இறைஞ்சி நின்றவர் தம்எதிர் நோக்கிச்
சாதிவேதியர் ஆகிய தலைவர்
"தையல் தன்னையான் தனிக்கொடு போகக்
காதல் மேவிய சுற்றமும் பதியும்
கடக்க நீதுணை போதுக" என்றார்.

தெளிவுரை: மனைவியைத் தானமாகக் கொடுத்த மாதவராகிய இயற்பகையார் பேருவகை யடைந்தவராகி, முகம் மலர்ச்சியோடு வேதியரை நோக்கி, "நான் இனிச் செய்ய வேண்டிய பணி யாது?" என வணங்கி நின்றார். அப்போது பிறப்பின் தன்மையில் வேதியராய் வந்த சிவபிரான் நாயனாரை நோக்கி, "இந்நங்கையைத் தனியே நான் அழைத்துக் கொண்டு போகும் போது, உன்னடைய சுற்றத்தார் மற்றும் நகரத்தார் ஆகியவர்களைக் கடந்து செல்வதற்கு நீ துணையாக வருக." என்றார்.

சிறப்புரை: இவண் இயற்பகையார் தன் மனைவியைக் கொடுத்த செயல் பெருந்தவத்திற்கு உரிய செயல் என்பதனைப் புலப்படுத்தும் வகையில், மாதவர் எனப்பட்டது. மற்றும் சிவனடியார்கள் எல்லாப் பொருளும் ஈசற்கே உரிமையுடையது என்னும் கொள்கையில் ஈசனடியார்கள் வேண்டியவாறு அளித்து வந்தவர் நாயனார் எனத் தெளிக. இத்தன்மையில் மனைவியும் ஈசன் உரிமைக்கு உரியவர் என்னும் கருத்தில் மாணிக்கவாசகர், திருக்கோத்தும்பி, திருப்பாட்டு 8-இல்,

"என்தாதை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ."

என்று அருளியமையும் காண்க. இவண் எம்மனை என்பதனை எம் அனை (அன்னை) எனக் காண்க. மனைவியை அன்னை என மரியாதை சாற்றம் மரபும் கருதத்தக்கது.

நாயனார் தன் மனைவியைக் கொடுத்த நிலையில் மகிழ்ந்திருந்தமைக்குக் காரணம் அவர் ஈத்துவக்கும் இன்பத்தை இனிது உணர்ந்தவர் என்பதாம்.

வேதியர் பகுப்பு முறை இருவகையாக அமையப் பெற்றது என்க. பண்டைக் காலத்தில் நல்லொழுக்க நிலையில் சிறந்து விளங்கியவர்களை "அந்தணர் என்போர் அறவோம் எனவும், மறையோர்" எனவும் போற்றப்பட்டனர். இத்தகையோர் சிறப்பு வேதியராகத் திரு. வி. க அவர்கள் குறித்தவாறும் காண்க. மற்றொரு வகை, பிறவி வேதியர் என்பதாம். இத்தன்மையில் சிவபிரான் பிறவி வேதியர் திருக்கோலத்தில் வந்தருளினார். என்பதனைச் சாதி வேதியர் எனச் சாற்றப்பட்டது.

தவிரவும் சிவபிரான் வேதியனாய் விளங்கும் மாண்பினை மாணிக்கவாசகர், திரு அம்மானை, திருப்பாட்டு 10-இல்,"விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை, மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானை" என அருளிச் செய்தமையும் காண்க.

மாது - நாயனார் துணைவியாரைக் குறித்தது. மாதவர் - நாயனாரைக் குறித்தது; அவர்தம் தவநெறியும் வாழ்வும் குறித்துப் போற்றப்படுதலால். இறைஞ்சி - வணங்கி, சாதி வேதியர் - சிவபிரான். தலைவர் - சிவபிரான். தையல் - இயற்பகையாரின் மனைவி. பதி - புகார் நகர், நகரமாந்தரையும் சுட்டும். கடக்க - கடந்து செல்ல, போதுக - வருக. 10

நாயனார் கச்சு அணிந்து வாளும் கேடயமும் ஏந்தித் துணையாகச் செல்லுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

414. என்று அவர் அருளிச் செய்ய
"யானே முன் செய்குற்று ஏவல்
ஒன்றிது தன்னை என்னை
உடையவர் அருளிச் செய்ய

நின்றது பிழையாம்" என்று
நினைந்து வேறுஇடத்துப் புக்குப்
பொன்திகழ் அறுவை சாத்திப்
பூங்கச்சுப் பொலிய வீக்கி;

தெளிவுரை: வேதியர் இயற்பகையாரைத் துணையாக வருமாறு கூற நாயனார், "இதனை நானே முதற்கண் செய்ய வேண்டிய பணி. அதனைச் செய்யாது என்னை உடையவராய் விளங்கும் சிவனடியாரே தெரிவிக்குமாறு நின்றது என் பிழையே ஆகும்." என்று கூறி, அங்கிருந்து சென்ற பீதாம்பரத்தால் ஆகிய உடையை அறையில் உடுத்திக் காட்டினார்.

இவண் வீக்கி என்பது அடுத்த பாடலின் போயினார் என்று வினை முடிபு பெறும்.

உடையவர் - வேதியராக வந்த ஈசனைக் குறித்தது: இது சிவபிரான் அடியவர்க்குத் தாம் அடிமையாக மனம், மொழி, மெய்களால் ஆன தன்மையைச் சுட்டுதலாம். பொன் திகழ் ஆடை - உயர்ந்த ஆடை: பீதாம்பரம். அறுவை - துகில். 11

415. வாளொடு பலகை ஏந்தி
வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி ஏறு போல்வார்
அவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே ஆகப்
போயினார் துன்னி னாரை
நீளிடைப் படமுன் கூடி
நிலத்திடை வீழ்த்த நேர்வார்.

தெளிவுரை: ஆண்சிங்கம் போன்றவரான மிடுக்குடைய இயற்பகையார் கையில் வாளும், கேடயமும் ஏந்தி வேதியர் முன்னே வந்து வணங்கி நின்று, வேதியரையும், அம்மையாரையும் முன்னதாகப் போகச் செய்து, தான் எதிர்த்து வருபவர் யாவராயினும் வெட்டி நிலத்தில் வீழ்த்தும் கருத்துடையவராய்ப் பின்னே தொடர்ந்து சென்றார்.

பலகை - கேடயம். ஆள் அரியேறு - ஆளும் தன்மையுடைய ஆண்சிங்கம். துன்னினார் - எதிர்ப்பதற்காக நெருங்கி வருபவர். நிலத்திடை வீழ்த்த - நிலத்தின் மீது வெட்டி வீழ்த்த. நேர்வார் - உறுதி பூண்டார். 12

சுற்றத்தார் சூழ்ந்து வளைத்துக் கொள்ளுதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

416. **மனைவியார் சுற்றத் தாரும்**
வள்ளலார் சுற்றத் தாரும்
இனையதொன்று யாரே செய்தார்
இயற்பகை பித்தன் ஆனால்
புனையிழை தன்னைக் கொண்டு
போவதாம் ஒருவன் என்று
துனைபெரும் பழியை மீட்பான்
தொடர்வதற்கு எழுந்து சூழ்வார்.

தெளிவுரை: மனைவியின் உறவினர்களும், இயற்பகையின் உறவினர்களும் ஒன்று கூடி இத்தன்மையான செயலை யார் செய்வார், இயற்பகை பித்தன் போன்று ஆகித் தன் மனைவியைக் கொடுத்தானாகிலும், அவன் அழைத்துக் கொண்டு செல்வதோ! என்று எண்ணியவராய் விரைந்து பெரும் பழியிலிருந்து மீள வேண்டி அவர்களைத் தொடர்வதற்காக விரைந்து சூழ்ந்தார்கள்.

சிறப்புரை: தன் மனைவியை வேறு ஒருவருக்குத் தருவது பெரும் பழியுடையது என இவண் கருதியமை நவில்வதாயிற்று.

இயற்பகையார் சிவனடியார்கள் பால் கொண்ட பற்றால் யாவற்றையும் தருகின்ற மாண்பானது இவண் "பித்து" எனச் சாற்றப்படுவதாம். இது சிவபிரானிடமும் சிவனடியாரிடமும் நாயனார் கொண்ட பெரும் பித்தினை எடுத்தோதுவதாயிற்று. ஈசனைப் பித்தன் என்று போற்றிப் பாடும் வகையில், அடியவர்களே பித்தாகி மேவும் தன்மையை மாணிக்கவாசகர்,

"பிச்சன் ஆக்கினாய்பெரிய அன்பருக்கு
உரியனாக்கினாய்...." - திருவாசகம் ஆனந்தா கீதம். 6

"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே."
- திருவாசகம், கண்ட பத்து 7.

என அருளிச் செய்தமையும் காண்க.

வள்ளலார் - இயற்பகையார். புனை இழை - பெண். துனை - விரைவு.

417. வேலொடு வில்லும் வாளும்
சுரிகையும் எடுத்து மிக்க
காலென விசையின் சென்று
கடிநகர்ப் புறத்துப் போகிப்
பால்இரு மருங்கும் ஈண்டிப்
பரந்த ஆர்ப்பு அரவம் பொங்க
மால் கடல் கிளர்ந்தது என்ன
வந்தெதிர் வளைத்துக் கொண்டார்.

தெளிவுரை: அப்பேது வேதியர், அந்நங்கையோடு நாயனார் பின் தொடர்ந்து நகர்ப்புறத்தை நண்ணிய நிலையில் உறவினர்கள் கையில் வேல், வில், நீண்ட வாள், உடைவாள் ஆகிய ஆயுதங்களை ஏந்தியவராகிக் காற்றினும் வேகமாக வந்து இரு பக்கமும் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்து வளைத்துக் கொண்டார்கள். அது கடலலை போல கிளர்ந்து எழுந்தது.

சுரிகை - உறைவாள். கால் - காற்று, காலன் எனக் கொள்ளினும் அமையும். விசையின் - விரைவாக. கடிநகர்ப் புறம் - பூம்பு கார் நகரின் எல்லை. பால் இரு - இரு பால்; இரு பக்கமும் என்க. ஆர்ப்பு அரவம் - ஆரவார ஒலி. மால்கடல் - பெரிய கடல். *14*

உறவினர் வெருட்ட அம்மையார் இயற்பகை வெல்லும் எனல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

418. வழிவிடும் துணைபின் போத
வழித்துணை ஆகி உள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக்
காரிகை யுடன்போம் போதில்
"அழிதகன் போகேல் ஈண்டவ்
அருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீ போ" என்று
பகர்ந்து எதிர் நிரந்து வந்தார்.

தெளிவுரை: இயற்பகையார் துணையாகப் பின்னே செல்ல, எல்லோர்க்கும் வழித்துணையாக விளங்கும் சிவபிரான் வேதியாரக வந்து பேரன்பு காட்டியவராகி அம் மாதரசியோடு செல்லும்போது, மருங்கு சூழ்ந்த சுற்றத்தினர், "தகுதி கெட்டவனே! அருமையுடைய குல நங்கையை இங்கே விட்டுச் செல். மாதரசியைக் கொண்டு

செல்வதான பழியை விட்டு விடு." என்று கூறியவர்களாய் எதிரில் திரண்டு வந்தார்கள்.

சிறப்புரை: சிவபிரான் யாவர்க்கும் துணையாய் விளங்கும் மாண்பானது "வழித் துணையாகி உள்ளார்" எனப்பட்டது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாடுதுறை திருப்பதிகத்தில்,

"வானநாட னேவழித்துணை மருந்தே
மாசிலா மணியே மறைப் பொருளே!"

என்று அருளியவாறும் காண்க.

வழிவிடும் துணை - நாயனாரைக் குறித்தது. வழித்துணை - வேதியர்; சிவபிரான். காதல் - அன்பு, அருளும் ஆம். காரிகை - இயற்பகையாரின் மனைவி. அழிதகன் - நல்ல பண்பு அற்றவன், வேதியரை விளித்தது. குலக்கொடி - நாயனார் மனைவி. நிரந்து - திரண்டு. 15

419. மறைமுனி அஞ்சி னான்போல்
மாதினைப் பார்க்க மாதும்
"இறைவனே அஞ்ச வேண்டாம்
இயற்பகை வெல்லும்" என்ன
அறைகழல் அண்ணல் கேளா
"அடியனேன் அவரை எல்லாம்
தறை இடைப் படுத்து கின்றேன்
தளர்ந்தருள் செய்யேல்" என்று

தெளிவுரை: வேதியர் அஞ்சினவர் போன்று அம்மையாரை நோக்க, அவரும் "இறைவனே! அஞ்சவேண்டாம். இயற்பகையார் எதிர்த்து வருபவர்களை வெற்றி கொள்வார்." என்றார். இதனைக் கேட்ட ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த நாயனார். "அடியேன் எதிர்த்து வருபவர்களை எல்லாம் தரையில் வீழ்த்துகின்றேன். தேவரீர் தளர்ச்சியடைய வேண்டாம்." என்றார்.

இவண் "என்று" என்பது அடுத்த பாடலில் வினைமுடிபு கொள்ளும்.

மறைமுனி - வேதியர். மாது - துணைவியார். அறைகழல் - ஒலிக்கும் வீரக்கழல். அண்ணல் - நாயனார். தறை - மண் தரை, எதுகை நோக்கித் திரிந்தது. 16

இயற்பகையார் சுற்றத்தாரை அச்சுறுத்திப் போர் செய்ய முற்படுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

420. பெருவிறல் ஆளி என்னப்
பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த
படர்பெருஞ் சுற்றத் தாரை
"ஒருவரும் எதிர்நில் லாமே
ஓடிப்போய்ப் பிழையும் அன்றேல்
எரிடர் வாளின் கூறாய்த்
துடிக்கின்றீர்" என்று நேர்ந்தார்.

தெளிவுரை: ஆற்றல் மிக்க சிங்கம் நெருப்புப்பொறிகள் பறக்குமாறு சினந்து நோக்கி அவமானம் உண்டாகி விட்டதாக எண்ணிப் பெருந்திரளாக வந்த உறவினர்களைப் பார்த்து, "யாரும் என் எதிரே நிற்காது ஓடிப் போய்ப் பிழைத்துக் கொள்ளுங்கள். இல்லையானால் நெருப்பென ஒளிரும் என்னுடைய வாளால் உங்கள் உடல்கள் துண்டு படுத்தப்பட்டுத் துடிப்பவர்களாவீர்கள்." என்றார்.

பெருவிறல்ஆளி - ஆற்றல் மிக்க சிங்கம். பிறங்கு எரி - சினத்தால் நெருப்பு கனன்று எழுமாறு. பரிபவம் - அவமானம். 17

421. "ஏட நீ என்செய் தாயால்
இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார்
நகையையும் நாணாய் இன்று
பாடவம் உரைப்பது உன்றன்
மனைவியைப் பனவற்கு ஈந்தோ
கூடவே மடிவது அன்றிக்
கொடுக்க யாம் ஒட்டோம்" என்றார்.

தெளிவுரை: சுற்றத்தார்கள் இயற்பகையாரை நோக்கி, "ஏட! நீ செய்த தகாத செயல்தான் என்னே! உன்னை நாடுகின்ற பழியையும் பார்க்கவில்லை, பகைவர் ஏளனம் செய்தலைப் பற்றியும் நாணவில்லை, உன்னுடைய ஆற்றலை உரைப்பதானது உன் மனைவியை ஒரு வேதியர்க்குக் கொடுத்ததோ! இதில் நாங்கள் மடிவதாயினும் குல மங்கையைக் கொடுப்பதற்கு இசைய மாட்டோம்" என்றார்கள்.

நாடுறு - நாடி வந்து உற்ற. ஒன்னார் - பகைவர். நகை - ஏளனம்.

பாடவம் - ஆற்றல், திறமை குறித்த பேச்சு. பனவற்கு - வேதியர்க்கு. ஓட்டோம் - இசைய மாட்டோம். 18

422. மற்றுஅவர் சொன்ன மாற்றம்
கேட்டலும் மனத்தின் வந்த
செற்றம் முன் பொங்க "உங்கள்
உடல்துணி எங்கும் சிந்தி
முற்றும்நும் உயிரை எல்லாம்
முதல் விசும்பு ஏற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக
விடுவான்" என்று எழுந்தார் நல்லோர்.

தெளிவுரை: சுற்றத்தார்கள் எதிர்த்து மொழிந்ததைக் கேட்ட இயற்பகையின் மனத்தில் சினம் தோன்றி வெளிப்பட, "உங்கள் உடலை எல்லா இடங்களிலும் சிதறும்படி வெட்டி வீழ்த்தி எல்லோருடைய உயிரையும் விண்ணுலகத்திற்கு ஏற்றி நற்றவ வேதியரை இங்கிருந்து போகச் செய்வேன்."

மற்று அவர் - உறவினர். செற்றம் - சினம். துணிதல் - வெட்டி வீழ்த்துதல். விசும்பு - விண்ணுலகம். நற்றவர் - வேதியர். நல்லோர் - இயற்பகையார். 19

எதிர்த்து வந்து சுற்றத்தாரைப் போர் செய்து வெற்றி கொண்டு நாயனார் விளங்குதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

423. நேர்ந்தவர் எதிர்ந்த போது
நிறைந்தஅச் சுற்றத் தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்லார்
தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேல் செல்ல
உற்றெதிர் உடன்று பொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தால் மேல் சென்று
அடர்ந்தெதிர் தடுத்தார் அன்றே.

தெளிவுரை: எதிர்த்து வரும் சுற்றத்தாரும் பிறரும் நேரிடையாகத் தன்னோடு மோதல் செய்யாது மாதரசிரயைக் கொண்டு செல்லும் வேதியர் வடிவத்தில் உள்ள இடப வாகனத்தையுடைய சிவபிரான் மீது பாய்ந்து செல்லப் பதைத்த இயற்பகை, பகைத்துப் போர் செய்ய எதிர் சென்று தடுத்தார்.

நேர்ந்தவர் - உறவினர்கள். சார்ந்தவர் - பகைத்து வந்த உறவினர்கள். தையல் - துணைவியார். பெற்றம் ஊர்ந்தவர் - சிவபிரானைக் குறித்தது. பெற்றம் - இடபம். படி - நிலம்; தரை. உடன்று - பகைத்து. 20

424. சென்றுஅவர் தடுத்த போதில்
இயற்பகை யார்முன் சீறி
வன்துணை வாளே யாகச்
சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளும் தாளும்
தலைகளும் துணித்து வீழ்த்து
வென்றடு புலியேறு என்ன
அமர்விளை யாட்டில் மிக்கார்.

தெளிவுரை: போர் செய்யம் ஆற்றிலில் மிக்கவரான இயற்பகையார் முன்னே சென்று, சீறி எழுந்து வலிமையான துணையாக வாட்படையே விளங்க, வலமாகவும், இடமாகவும் சாரி திரிந்து நெருங்கிய பகைவர்களைப் போல் செய்து வெற்றி கொள்ளும் ஆண் புலி போன்று, அவர்கள் தலையும், தோளும், தாளும்சிதறுமாறு வெட்டி வீழ்த்தினார்.

வன்துணை - வலிமையான துணை. துன்றினர் - நெருங்கிப் போர் செய்ய வந்தவர்கள். துணித்து - வெட்டி. அடுபுலியேறு - போரிடும் ஆண் புலி. அமர் விளையாட்டு - போர் புரிதல். 21

425. மூண்டு முன் பலராய் வந்தார்
தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைகள் தோறும்
வேறு வேறு அமர்செய் போழ்தில்
ஆண்தகை வீரர் தாமே
அனைவர்க்கும் அனைவர் ஆகிக்
காண்தகு விசையின் பாய்ந்து
கலந்துமுன் துணித்து வீழ்த்தார்.

தெளிவுரை: பல பேர்களாய் எதிர்த்து வந்தவர்கள் தனித்தனியாக நாயனார் எதிரே நின்று போர் செய்த போது, அவரும் தன்னுடைய போர்த் திறனால் அனைவரையும் தனித்தனியே தானே போர் செய்து ஆண் தகைமையோடு விரைந்து பாய்ந்து அவர்களிடையே புகுந்து சென்று வெட்டி வீழ்த்தினார்.

இவண் நாயனாரின் போர்த்திறன் இனிது சாற்றப்பட்டது. இதனை அவர் துணைவியார். "இயற்பகை வெல்லும்" என்று திருப்பாட்டு 419-இல் உரைத்தவாறும் காண்க.

முட்டினார் - போர் செய்தார். விசை - விரைவு. கலந்து - புகுந்து. துணித்து வீழ்த்தார் - வெட்டி வீழ்த்தினார். 22

426. சொரிந்தன குடல்கள் எங்கும்
துணிந்தன உடல்கள் எங்கும்
விரிந்தன தலைகள் எங்கும்
மிடைந்தன கழுகும் எங்கும்
எரிந்தன விழிகள் எங்கும்
எதிர்ப்பவர் ஒருவர் இன்றித்
திரிந்தனர் களனில் எங்கும்
சிவன்கழல் புனைந்த வீரர்.

தெளிவுரை: போரில் குடல்கள் கிழிக்கப்பட்டு வீழ்ந்து கிடந்தன: எல்லா இடங்களிலும் உடல்களும், தலைகளும் வெட்டப்பட்டுக் கிடந்தன. கழுகுகள் சூழ்ந்து அவற்றைக் கொத்தவும், அதனால் விழிகள் இரத்தம் வெளிப்பட்டு நெருப்பெனத் தோன்றவும் ஆயின. சிவபிரான் திருவடியைத் தன் இதயத்தில் தரித்து விளங்கும் இயற்பகையார், தன்னை எதிர்த்துப் போர் செய்பவர்கள் எவரும் இன்றி அப்போர்க்களத்தில் தனியாகத் திரிந்தவராய் இருந்தார்.

மிடைந்தன - நெருங்கின. களன் - போரிடும் இடம். சிவன் கழல் - சிவபிரான் திருவடித் தாமரை. புனைந்த - நெஞ்சில் பதித்த. 23

427. மாடலை குருதி பொங்க
மடிந்த செங் களத்தின் நின்றும்
ஆடுறு செயலின் வந்த
கிளைஞ ரோடு அணைந்தார் தம்மில்
ஓடினார் உள்ளார் உய்ந்தார்
ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார்
நீடிய வாளும் தாமும்
நின்றவர் தாமே நின்றார்.

தெளிவுரை: எல்லாப் பக்கங்களிலும் இரத்த வெள்ளம் பெருக்கெடுக்கப் போர்க்களத்தில் வெற்றி கொண்டு செல்ல வேண்டுமென்று சுற்றம் சூழ வந்தவர்களில் ஓடிப் பிழைத்தவர்கள் உயிர் பிழைத்தார்கள். ஆங்கே நின்ற அத்தனை பேரும் இறந்தார்கள். இயற்பகையார் நீண்ட வாளுடன் தாம் ஒருவரேயாக நிற்கலானார்.

நாயனாரை எதிர்த்துப் போரிட்டவர்கள் அனைவரும் மாண்டார்கள்.

மாடு அலை குருதி - பக்கங்களில் அலை வீசும் இரத்த வெள்ளம். ஆடுறு - போர் புரியும் தன்மை. கிளைஞர் - சுற்றம். உய்ந்தார் - உயிர் பிழைத்தார்கள். ஒழிந்தவர் - தப்பித்து ஓடிச் செல்லாது நின்று போர் செய்தவர்கள். தாமே நின்றார் - இயற்பகையாரைக் குறித்தது. 24

நாயனார் தொடர்ந்து பின் செல்லுதல்

428. திருவுடை மனைவி யாரைக்
கொடுத்து இடைச் செறுத்து முன்பு
வருபெரும் சுற்றம் எல்லாம்
வாளினால் துணிந்து மாட்டி
அருமறை முனியை நோக்கி
"அடிகள் நீர் அஞ்சா வண்ணம்
பொரு அரும் கானம் நீங்க
விடுவன்" என்று உடனே போந்தார்.

தெளிவுரை: திருமகள் போன்ற தன் மனைவியாரைக் கொடுத்து, இடையில் தடுத்துப் போர்க்கெழுந்த சுற்றத்தாரை எல்லாம் வாளினால் வெட்டி வீழ்த்திய இயற்பகையார், அருமறை வேதியரை நோக்கி, "அடிகளே! நீர் அச்சம் கொள்ளாதவாறு இக்காட்டினைக் கடந்து வெல்வதற்குத் துணையாக வந்து வழியனுப்புகிறேன்." என்று தெரிவித்து உடன் வெல்பவரானார்.

திருவுடை மனைவி - வெல்வம் மிக்க மனைவி: திருமகளைப் போன்றவரும் ஆம். மாட்டி - வீழ்த்தி. முனி - வேதியர். அடிகள் - மரியாதை குறித்த விளி. கானம் - காடு. 25

வேதியர் சொல்ல நாயனார் திரும்புதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

429. **இருவரால் அறிய ஒண்ணா**
ஒருவர் பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு
போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்காடு
அதன் மருங்கு அனைய மேவித்
திருமலி தோளி னானை
மீள் எனச் செப்பி னானே.

தெளிவுரை: இயற்பகையாரும் அவர் தம்மனைவியாருமான இருவராலும் அறிய முடியாத ஒப்பற்றவராகிய சிவபிரான் பின்னே செல்கின்ற அம்மையாரும் போர் செய்வதற்புரிய வல்லமையுடைய நாயனாரும் ஏக, முன்னே செல்லும் வேதியர் திருச்சாய்க்காடு என்னும் திருத்தலத்தைச் சார, அவர், நாயனாரைத் திரும்பச் செல்லுமாறு உரைத்தார்.

இருவர் - நாயனாரும் அவர் துணைவியாரும்: திருமால், பிரமன் ஆகியோரையும் குறிக்கும். ஒருவர் - சிவபிரான். ஏழை - அம்மையார். பொருதிறல் வீரர் - போர்த்திறன் கொண்ட இயற்பகையார். முனிவன் - வேதியர். சாய்க்காடு - திருச்சாய்க்காடு என்னும் திருத்தலம்; காவிரி வடகரைத்தலம்; திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல் பெற்ற தலம். புகார் (காவிரிப் பூம்பட்டினம்) நகர்க்கு அண்மையில் உள்ளது. மருங்கு - பக்கம். திருமலி தோளினான் - இயற்பகை நாயனார்; திருமலி என்பது வெற்றித் திருமகளைக் குறித்தது. 26

430. தவமுனி தன்னை மீளச்
சொன்னபின் தலையால் ஆர
அவன் மலர்ப் பதங்கள் சூடி
அஞ்சலி கூப்பி நின்று
புவனம் மூன்று உய்ய வந்த
பூசுரன் தன்னை ஏத்தி
இவனருள் பெறப்பெற்றேன் என்று
இயற்பகை யாரும் மீண்டார்.

தெளிவுரை: தவமுனிவரான வேதியர் தன்னைத் திரும்பிச் செல்லுமாறு, உரைத்த அளவில் நாயனார், வேதியரின் மலர்ப்பாதங்களில் வீழ்ந்து வணங்கிக் கை கூப்பி நின்று, "மூன்று உலகங்களும் உய்யுமாறு வந்த அந்தணரே." என்ற மனத்தால் ஏத்தி உடனே திரும்பினார்.

தவமுனி - வேதியர். ஆர - பொருந்த. புவனம் மூன்று - மேலுலகம், மண்ணுலகம், பதாளம். பூசுரன் - பூவுலகத் தேவர்கள் எனப்படும் அந்தணர். 27

வேதியர் மீண்டும் ஓலமிட்டு நாயனாரை அழைத்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

431. செய்வதற்கு அரிய செய்கை
செய்த நல் தொண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்தோள்
மறையவன் மகிழ்ந்து நோக்கிப்

பொய்தரும் உள்ளம் இல்லான்
பார்க்கிலன் போனான் என்று
மெய்திரு சிந்தை யானை
மீளவும் அழைக்கல் உற்றான்.

தெளிவுரை: செய்வதற்கு அரியதான செயலைச் செய்த திருத் தொண்டரான இயற்பகையார் திரும்பிச் செல்லக் கருமை விளங்கும் கண்டத்தவராய் எட்டுத் தோள்களையுடையவராய் விளங்கும் வேத நாயகரான சிவபிரான் மகிழ்ந்து நோக்கிப் பொய்ம்மையானது சிறிதளவும் இல்லாது திரும்பிப் பார்க்கிலானாய்ச் சென்றான் என்று எண்ணி, மெய்த்தன்மையே உடைய அத்தொண்டரை மீளவும் அழைக்கலானார்.

சிறப்புரை: தன்னுடைய அன்புக்குரிய மனைவியைத் தந்தும், இனிய சுற்றத்தாரை வீழ்த்தியும் சற்றும் பற்றிலராய்த் திரும்பிச் செல்லும் நயனாரின் ஈசன் பற்று இவண் "பொய் தரும் உள்ளம் இல்லான், மெய் தரு சிந்தையான்" எனப்பட்டது. இத்தகைய பக்தியின் பாலராக விளங்குபவரே சிவனடியார் என்னும் வகையில் திருப்பாட்டு 141-இல் (திருக்கூட்டச் சிறப்பு) உரைத்தமை காண்க.

நல் தொண்டர் - இயற்பகையார். மறையவன் - வேதியர்: ஈசன் என்க. 28

432. "இயற்பகை முனிவா ஓலம்
ஈண்டு நீ வருவாய் ஓலம்
அயர்ப்பு இலா தானே ஓலம்
அன்பனே ஓலம் ஓலம்
செயற்கு அரும் செய்கை செய்த
தீரனே ஓலம்" என்றான்
மயக்குஅறு மறை ஓலிட்டு
மாலயன் தேட நின்றான்.

தெளிவுரை: மயக்கத்தைத் தீர்த்து ஞானத் தெளிவை நல்கும் வேதங்கள் போற்றவும், திருமால், பிரமன் ஆகியோர் தேடவும் விளங்கும் சிவபிரான் வேதியர் வடிவு கொண்டவராய், "இயற்பகை முனிவரே! இங்கு வருக! சோர்வில்லாதவனே! அன்பனே! செய்வதற்கு அரிய செயலைச் செய்த தீரனே! அபயம்" என்றார்.

இவண் எல்லாப் பற்றுகளையும் துறந்து ஈசனையே போற்றி விளங்கிய இயற்பகையின் செம்மை குறித்து "முனிவா" என்று சாற்றப்பட்டது.

ஈண்டு - இவ்விடம். அயர்ப்பு - சோர்வு. மயக்கு அறு மறை - அஞ்ஞானத்தை நீக்கி இறைவன் புகழை ஓதும் வேதம். ஓலிட்டு - போற்றித் துதித்து. மாலயன் - திருமாலும் பிரமனும். ஓலம் - அபயம். 29

வேதியராக வந்த சிவபிரான் விண்ணினின்று காட்சி தருதல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்.

433. அழைத்தபேர் ஓசை கேளா
அடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவர் உளரேல் இன்னும்
பெருவலித் தடக்கை வாளின்
இழைத்தவர் ஆகின் றார்என்று
இயற்பகை யார் வந்து எய்தக்
குழைப்பொலி காதி னானும்
மறைந்தனன் கோலம் கொள்வான்.

தெளிவுரை: வேதியர், சாற்றும் பேரொலி கொண்டு அழைத்ததைக் கேட்ட இயற்பகையார், "அடியேன் வந்து விட்டேன்; எதிர்த்தவர்களில் யாரேனும் உயிர் பிழைத்துத் தீங்கிழைப்பவர் உள்ளனரோ!" என்று தன் கையில் பெரிய வாட்படையை ஏந்தி வரக் காதில் குழையணிந்து பொலியும் சிவபிரான் வேதியர் திருக்கோலத்தினின்று மறைந்தார்.

குழை - சிவபிரான் காதில் குழையை அணிந்து விளங்கும் சிறப்பினை உணர்த்திற்று. 30

434. சென்றவர் முனியைக் காணார்
சேயிழை தன்னைக் கண்டார்
பொன்திகழ் குன்று வெள்ளிப்
பொருப்பின்மேல் பொலிந்தது என்னத்
தன்துணை யுடனே வானில்
தலைவனை விடைமேல் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார்
நிலத்தினின்று எழுந்தார் நேர்ந்தார்.

தெளிவுரை: அங்கு சென்ற நாயனார் வேதியரைக் காணாதவராகி அம்மையார் மட்டும் தனித்திருக்கக் கண்டார். அப்போது பொன்திகழ் மலையானது வெள்ளி மலையின் மீது பொலிந்து விளங்குவது போன்று தன் நாயகனான சிவபிரான் உமாதேவியோடு காட்சி தரக் கண்டார். நாயனார் மண்ணில் வீழ்ந்து எட்டு உறுப்புகளும் பதியுமாறு வணங்கி எழுந்தார்.

சிறப்புரை: இவண் இடப வாகனம் வெண் பனி விளங்கும் மலையெனவும் பொன் திகழ்குன்று என்பது சிவபிரானுக்கும் உவமை சாற்றப்பட்டது.

முனி - வேதியர். சேயிழை - இயற்பகையாரின் மனைவியார். வெள்ளிப் பொருப்பு - கயிலை மலை. விடை - இடபம் 31

சிவபிரான் திருவருள் புரிந்து மறைதல்

- இது முதல் 3 - பாடல்கள் ஒரு தொடர்

435. "சொல்லுவது அறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்து அருளி என்னை
வழித் தொண்டு கொண்டாய் போற்றி
எல்லைஇல் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துள் ஆடும்
சேவடி போற்றி" என்ன;

தெளிவுரை: இயற்பகையார் இறைவனை வணங்கி நின்று, "தேவரீரை யாதென்று அறிந்து வாழ்த்துவேன்! திருக்காட்சி நல்கிய பெருமானே போற்றி! அடியேன் வழித்தொண்டில் மேவச் செய்து விரைவாக வந்து ஆட்கொண்ட பெருமானே! எல்லையில்லாத நாயகனே! தில்லையம்பலத்துள் திருநடனம் புரியும் தேவனே போற்றி!" என்று துதிக்கலானார்.

தோற்றம் - திருக்காட்சி. வல்லை - விரைந்து. சேவடி - இறைவன் தாமரையன்ன திருப்பாதம். என்ன - இது அடுத்த பாடலில் வினை முடிபு பெறும். வழித்தொண்டு - பிறவியை நீக்கும் வழியை உண்டாக்கும் திருத்தொண்டு. 32

436. விண்ணிடை நின்ற வெள்ளை
விடையவர் அடியார் தம்மை
"எண்ணிய உலகு தன்னில்
இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு
மகிழ்ந்தனம் பழுது இலாதாய்
நண்ணிய மனைவி யோடு
நம்முடன் போதுக" என்று:

தெளிவுரை: விண்ணில் தோன்றி இடப வாகனத்தின் மீது காட்சி நல்கிய சிவபிரான் அடியவரை நோக்கி, "இந்நிலவுலகில் நம்பால்

அன்பு கொண்டு செய்த அரிய செயலைக் கண்டு மகிழ்ந்தோம். எத்தன்மையிலும் குற்றம் இலாதவனே! நீ உன் மனைவியோடு நம்முடன் வருக!" என்று அருளிச் செய்தார்.

வெள்ளை விடையவர் - வெள்ளை நிறமுடைய இடப வாகனத்தில் விளங்கும் சிவபிரான். அடியவர் - இயற்பகை. தம்மை - அருட் செயலின் தன்மை கண்டு அடியாரைச் சிறப்பித்துக் கூறியது. பரிவு - அன்பார்ந்த செயல். போதுக - வருக. என்று - இது அடுத்த பாடலின் வினை முடிபு பெறும். 33

437. திருவளர் சிறப்பின் மிக்க
திருத்தொண்டர் தமக்கம் தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின்
மனைவியார் தமக்கும் தக்க
பெருகிய அருளின் நீடு
பேறளித்து இமையோர் ஏத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும்
பொற்பொது அதனுள் புக்கார்.

தெளிவுரை: செல்வத்தின் மேன்மையிற் சிறந்த திருத்தொண்டராகிய இயற்பகையார்க்கும் தெளிவு மிக்கவராயும் தெய்வக் கற்பின் விளங்கும் நாயனாரின் துணைவியார்க்கும் அருள் வயத்தால் மேவும் நீண்ட முத்திப் பேற்றினை அளித்து, இடப வாகனராகிய ஈசன் திருவருள் புரிய, தேவர்கள் எல்லாம் போற்றித் துதிக்கச் சிவபிரான் பொன்னம்பலத்துள் புகுந்தார்.

திருத்தொண்டர் - இயற்பகையார். பேறு - முத்திப் பேறு. விடைப்பாகர் - சிவபிரான். பொருவிடை - போர் ஆற்றல் கொண்ட விடை. பொற்பொது - பொன்னம்பலம். 34

நாயனார் அவரது மனைவியர் மற்றும் போர் செய்து மாண்டவர்கள் அனைவரும் முத்திப் பேறடைதல்

438. வானவர் பூவின் மாரி
பொழியமா மறைகள் ஆர்ப்ப
ஞானமா முனிவர் போற்ற
நலம்மிக சிவலோகத்தில்
ஊனமில் தொண்டர் கும் பிட்டு
உடன்உறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும்
வானிடை இன்பம் பெற்றார்.

தெளிவுரை: தேவர்கள் பூமாரி பொழிய, வேதங்கள் போற்றி செய்து ஒலிக்க, ஞானத்தால் மிக்கு விளங்கும் முனிபுங்கவர்கள் கூடி நின்று ஏத்த, நலங்கள் யாவும் திகழும் சிவலோகத்தில் மும்மலமாகிய ஊனத்தை விட்டொழித்த திருத் தொண்டராகிய இயற்பகையார் அனைவரையும் கும்பிட்டு வணங்கியவராய் அவர்களோடு உறையும் பெருமை பெற்றார். இவருடன் போரிட்டு, மாண்ட ஏனைய சுற்றத்தாரும் வானுலகத்தில் மேவி இன்பத்தைப் பெற்றார்கள்.

சிறப்புரை: இவண் நாயனார் செய்த திருத் தொண்டு அவரை மட்டும் அல்லாது அவரைச் சார்ந்தவர்களையும் பேரின்பத்தில் ஆழ்த்தி மகிழச் செய்தமை சாற்றப்பட்டது. இத்தன்மையில் அடியவர்கள் தம்மைச் சார்ந்த சுற்றத்தினர்களும் அருள் பெறுதலை மாணிக்க வாசகர், போற்றித் திருஅகவல் வரிகள் 118,119-இல்,

"மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழாமேயருள் அரசே போற்றி."

(மூவேழ் சுற்றம் - தன் சுற்றம், தாயின் சுற்றம், மனைவியின் சுற்றம் ஆகியோர் தம் ஏழு தலை முறை என்ப.)

என அருளிச் செய்தவாறும் காண்க.

வானவர் - தேவர்கள். மாமறை - பெருமையுடைய வேதங்கள். ஊனம் - மும்மலம்; பிறவிப் பிணி. தொண்டர் - இயற்பகை நாயனார். 35

இயற்பகையாரைப் போற்றித் துதித்து இளையான் குடி மாற நாயனாரின் திருத்தொண்டினை உரைக்கத் தொடங்குதல் - கவிக் கூற்று

439. இன்புறு தாரம் தன்னை
ஈசனுக்கு அன்பர் என்றே
துன்புறாது உதவும் தொண்டர்
பெருமையைத் தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன்
அடியவர்க்கு அன்புநீடு
மன்புகழ் **இளைசை மாறன்**
வளத்தினை வழுத்தல் உற்றேன்.

தெளிவுரை: உலகியல் வாழ்வுக்கு உகந்த மனைவியை ஈசனார் அன்பர்க்கு மனத்தில் எத்துணை விகற்பமும் கொள்ளாது உதவிய திருத் தொண்டரான இயற்பகையாரைத் தொழுது வாழ்த்தி, அன்புறு மனத்தால் சிவனடியார்களுக்கு அன்பு கொண்டு ஆற்றிய இளையான் குடிமாறனார் வளத்தினை உரை செய்வாம். இது கவிக் கூற்று.

தாரம் - மனைவி. துன்புறாது - மனம் வருத்தம் இல்லாது; விகற்பமில்லாது. தொண்டர் - இயற்பகையார். நாதன் அடியவர் - சிவனடியார். இளைசை - இளையான் குடி. வளம் - திருத் தொண்டு. வழுத்தல் - போற்றுதல், உரைத்தல். 36

இயற்பகை நாயனார் புராணம் நிறைவுற்றது

10. இளையான் குடிமாற நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்

இளையான் குடி என்னும் நகரில் வேளாளர் குலத்தில் மாறனார் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். மிக்க செல்வந்தரான அவர் சிவபக்தியில் சிறந்தவராய் விளங்கி அடியவர் யாவராயினும் அவர்க்கு உணவளிப்பதைப் பெருந் தொண்டாகச் செய்து வரலானார். அவர் திருத் தொண்டின் சிறப்பினை உலகுக்கு உணர்த்தும் திருவுள்ளம் கொண்ட சிவபிரான் முதற்கண் வறுமை உண்டாக்கினார். அப்போதும் அவர் திருத் தொண்டினைக் குறைவிலாது ஆற்றி வரலானார்.

ஒருநாள் இளையான் குடி மாறர் உணவின்றி நீண்ட நேரம் தனியே விழித்திருந்தார். அவருக்கு மிகவும் பசி. உணவு ஏதும் இன்றி வீட்டுக் கதவைத் தாளிட்டு உள்ளே வந்தார்.

அப்போது மழை பொழிந்து கொண்டிருந்தது. சற்று நேரத்தில் சிவபிரான் அடியார் திருவேடம் கொண்டு கதவைத் தட்டினார். நாயனார் கதவைத் திறந்து அன்பரை உள்ளே அழைத்து வந்து திருமேனியில் உள்ள ஈரத்தைப் போக்கி இனிது இருக்கச் செய்தார். அடியவர்க்கு அமுது அளிக்கும்படி எண்ணம் கொண்டவராய் என் செய்வது என்று ஏங்கினார். கடன் கொடுப்பாரும் இல்லை.

பின்னர், அன்று வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அடியவர்க்கு அமுது படைக்கலாம் என்று கருதி நள்ளிரவில் ஒரு கூடையைக் கொண்டு சென்றார். நெல் முளைகளைக் கோலி வாரிக் கொண்டு வந்தார் விறகுக்குத் தன் வீட்டின் கூரையில் உள்ள மரத்துண்டுகளை அறுத்துக் கொண்டார். நெல்முளைகளை

அரிசியாக்கி அமுது ஆக்கினார். கறியமுதுக்குத் தோட்டத்தில உள்ள கீரைகளைப் பறித்தார்.

உணவு படைக்கும் நிலையில் நாயனார் அடியவரை அழைத்துத் திருவமுது செய்வதற்கு எழுந்தருளுமாறு அழைக்கையில் அடியவர் சோதி வடிவமாய்த் தோன்றித் திருக்காட்சி நல்கி, சிவலோகத்தை அடையுமாறு அருள் புரிந்தார்.

இளையான்குடி மாறனார் சிறப்புரைத்தல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

440. அம்பொன் நீடிய அம்ப லத்தினில்
ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரான்அடி மைத்தி றத்துயர்
சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர
நல்கு லம்செய்த வத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னார்இளை
யான்கு டிப்பதி மாறனார்.

தெளிவுரை: அழகு விளங்கும் பொன்னம்பலத்துள் திருநடனம் புரியும் நடராசப் பெருமான் திருவடியை வணங்குபவராயும், சிவபிரான் அடிமைத் திறத்தில் விளங்கும் பண்பில் உண்டாகும் மேன்மையைக் கொண்டாடுபவராயும் நம்புவதற்கு உரிய தொன்மை மிகு வேளாளர் குலம் செய்த தவத்தின் பயனாய் இவ்வுலகின் பெருமைக்குரியவராயும் இளையான்குடி என்னும் நகரில் மாறனார் விளங்கினார்.

ஆடுவார் - நடராசப் பெருமான். தம்பிரான் - சிவபிரான். சூத்திர நல்குலம் - வேளாளர் குலம். இம்பர் ஞாலம் - இந்நிலவுலகம். பதி - ஊர். மேழியர் எனவும் பாடம். 1

441. ஏரின் மல்கு வளத்தி னால்வரும்
எல்லை இல்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி
யார்தி றந்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடுப யன்கொள்வார்.

தெளிவுரை: ஏர்த் தொழிலின் வளமையால் பெருகும் பெருஞ் செல்வமானது கங்கை தரித்த சடைமுடியுடைய சிவபிரான் அடியவர்களுக்கே பயன்தரும் திறத்துடன், சிறப்பு மிகுந்த அன்புடைய சிந்தையும் உலகில் பெருக அத்தன்மையில் பெருகின்ற திருவருளைப் பெறுபவராய் அவ்வடியார் மேவினார்.

ஏர் - வேளாண்மைத் தொழில்: இத்தொழிற்கு ஏர் என்னும் கருவி அடிப்படையாக உள்ளமை கொண்டு சாற்றப்பட்டது. இதுவே சிறப்பின் மிக்க வளம் என்னும் வகையில் திருவள்ளுவர்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

- திருக்குறள் 1033

எனச் சாற்றியவாறும் காண்க.

ஏர் - உழுகின்ற கருவி. சிறப்பும் ஆம் நீர் - கங்கை. வேணியார் - சடைமுடியுடைய சிவபிரான். சீரில் மல்கிய - சிறப்பால் விளங்கிய. நீடு பயன் - நீண்டு விளங்கும் முத்திப் பேரின்பத்தை நல்கும் திருவருள். 2

இளையான் குடி மாறனார் சிவனடியார்பால் இன்னுரை செய்து உணவளித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

442. ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவர் ஆயினும்
நித்தம் ஆகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென்மது ரப்பதம் பரிவு
எய்த முன்னுரை செய்தபின்.

தெளிவுரை: எலும்பு மாலை அணிந்த சிவபிரான் அடியவர்கள் என யாவராயினும் அவர்களைப் பக்தியுடன் எதிர்வந்து கை கூப்பித் தொழுது, செவி குளிர இன்சொல் பகர்ந்து வரவேற்பவராய் நாயனார் விளங்கினார்.

ஆரம் என்பு - எலும்பு மாலை. ஐயர் - சிவபிரான். அன்பர் - சிவனடியார். கூர - பொருந்த. ஈரம் மென் மதுரப்பதம் - இனிய அன்பு ததும்பும் மென்மையுடைய சொல். செய்தபின் - இது அடுத்த செய்யுளில் வினை முடிபு பெறும். 3

443. கொண்டுவந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார்.

தெளிவுரை: நாயனார், சிவனடியார்களை அழைத்து வந்து மனைக்குள் இருக்கை யளித்துப் பாதபூசை செய்து பேரன்புடன் அருச்சனை புரிந்து அவர்கள் இனிது உணவு கொள்வதற்கு விரும்பியவாறு அறுசுவையுடன் அமுதளிப்பவரானார்.

கொண்டு - அழைத்து வந்து. குலாவு பாதம் விளக்கியே - பாதபூசை செய்து. ஆதனம் - இருக்கை. உண்டி நாலுவிதம் - உண்ணல், தின்னல் நக்கல், பருகல் என்னும் நான்கு வகையான உணவு, ஆறு சுவை - கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்பன. இச்சை - விருப்பம். 4

அன்பரைச் சோதிக்கும் வகையில் ஈசன் வறுமையை உண்டாக்குதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

444. ஆளும் நாயகர் அன்பர் ஆனவர்
அளவி லார்உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதி யின் பரப்பு
நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளி னார்அள கைக்கு இருத்திய
தோழ னார்என வாழும்நாள்.

தெளிவுரை: யாவற்றையும் ஆட்கொள்ளும் நாதராகிய சிவபிரானுடைய அன்பர்கள் அளவில்லாதவர்களாய் விளங்க, அவர்கள் மனம் மகிழுமாறு நாள்தோறும் அளித்து அதன் தன்மையில் பேரருட் செல்வம் பெற்றும், அளவில்லாத பொருட் செல்வத்திற்கு உரியவனாய் ஆக்கிய எட்டுத் தொள்களுடைய ஈசனார் தோழனான குபேரனைப் போன்று நாயனார் விளங்கினார்.

ஆளும் நாயகர் - சிவபிரான். எண்தோளினார் - சிவபிரான். அளகை

- அளகாபுரி, குபேர பட்டினம். தோழனார் - குபேரன். வாழும் நாள் - இச் சொல் அடுத்த பாடலில் வினை முடிபு பெறும். 5

445. செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வது அன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆன போதினும்
வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாள்தொறும் மாறி வந்து
ஒல்லை இல்வறு மைப்ப தம்புக
உன்னி னார்தில்லை மன்னினார்.

தெளிவுரை: செல்வம் தழைத்து விளங்கிய நாளில் நாயனார் அடியார்களுக்கு அமுது படைக்கும் திருத் தொண்டு ஆற்றிவரும் பண்பினைப் புரிந்த நிலையில் செல்வம் குறைந்து வறுமை தலைப்பட்டாலும், அடியவர்களுக்கு குறைவிலாது மெய்ம்மை அன்புடன் திருத்தொண்டு புரியும் மனத்திண்மை வாய்க்கப் பெற்றவர் என்று உலகத்தார்க்கு அறிவிக்கும் வகையில் வளமை மிகுந்த செல்வம் மெல்ல மறைந்து நாள்தோறும் தேய்ந்து வறுமை நிலையை இளையான் குடிமாறர் அடையுமாறு, தில்லை மன்றுள் நடனம் புரியும் நடராசப் பெருமான் திருவுள்ளம் கொண்டார்.

சிறப்புரை: நாள்தோறும் வருகின்ற விருந்தினரை வரவேற்று உபசாரம் செய்யும் ஒருவரின் வாழ்க்கை வறுமையால் துன்புற்றுக் கெடுவதன்று என்னும் வகையில் திருவள்ளுவர்,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று." - திருக்குறள் - 83.

என்று சாற்றியவகையில் விருந்தோம்புதலின் வகையில் அடியார்க்கு அமுது செய்வித்தல் ஆதலால் இதன் வழி வறுமை காணப்பெறாது. இவண், நாயனார் வறுமை யுறினும் குறையாது செய்பவர் என்னும் மாண்பினை உலகறியக் காட்டும் முகத்தான் வறுமை உண்டாகுமாறு ஈசன் திருவுளம் கொண்டார் என்பதாம். இக்கருத்து இப்பாடலின் 2-ஆம் அடியில் உணர்த்தப் பெற்றது.

செயல் - அடியார்க்கு அமுது செய்வித்தல். மெய் - மெய்யன்பு. அல்லல் நல்குரவு - துன்பத்தை விளைவிக்கும் வறுமை. வல்லர் - அடியார் பக்தியுடைமையின் திண்மை சாற்றுதல். மல்லல் - வளப்பம். மாறிவந்து - தேய்ந்து குறைந்து. ஒல்லை - விரைவாக. பதம்புக

- நிலையடைய. உன்னினார் - திருவுளம் கொண்டார், நினைத்தார். தில்லை மன்னினார் - நடராசப் பெருமான். 6

நாயனார் உறுதி மேம்படத் திருத்தொண்டு புரிதல்

446. இன்ன வாறு வளம்சு ருங்கவும்
எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனம்சு ருங்குதல்
இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள
கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறுஇல் திருப்ப ணிக்கண்
முதிர்ந்த கொள்கையர் ஆயினார்.

தெளிவுரை: இவ்வாறு செல்வ வளம் குறைந்து வறுமையுற்றாலும் எம் தலைவராகிய இளையான்குடியின் கண் ஒளிரும் மாறனார் மனத்தினால் தளர்வுறாது, தம்மிடம் உள்ள பொருள்களை விற்றும், தன்னை நெருக்கி வாட்டும் தன்மையில் கடன்கள் பெற்றும் முன்னைப் போலவே மாறுதல் இன்றித் திருத்தொண்டு புரியும் பணியில் முற்றிய கொள்கை கொண்டு விளங்கினார்.

இது கவிக்கூற்று

எம்பிரான் - எம் தலைவன், நாயனாரைக் குறித்தது. மன்னன் - ஊரில் நாயனார் விளங்கும் பெருமை கொண்டு உரைக்கப் பெறுதாலாயிற்று. மனம் சுருங்குதல் - மனம் தளர்தல். உள்ளன மாறி - உடைமைகளை விற்பனை செய்தல் வகை. இறுக்க - துன்புறுத்தும் தன்மை. முன்னை - செல்வம் இருந்த காலம். 7

சிவபிரான் தவவேடம் பூண்டு வருதல்

447. மற்ற வர்செயல் இன்ன தன்மையது
ஆக மாலயன் ஆனஅக்
கொற்ற ஏனமும் அன்னமும் தெரி
யாத கொள்கையர் ஆயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய
பேதையாள் உடன் இன்றியோர்
நற்ற வத்தவர் வேடமே கொடு
ஞாலம் உயர்ந்திட நண்ணினார்.

தெளிவுரை: இளையான்குடி மாற நாயனாரின் செயல் தன்மை இத்தன்மைத்தாக, திருமால் பன்றி வடிவு கொண்டு பாதாளத்திற்

புகுந்து திருவடியையும், பிரமன் அன்னம் வடிவு கொண்டு மேல் நோக்கிப் பறந்து சென்று திருமுடியையும் தேடிச் சென்று காணத் தெரிந்து கொள்ளாத கொள்கையுடையவராகிய சிவபிரான், ஊர்கின்ற இடபம் இன்றி, இடப்பாகத்தில் விளங்குகின்ற உமாதேவியும் இன்றித் தவவேடம் கொண்டவராய் இவ்வுலகு உய்தி பெற நாயனாரிடம் நண்ணினார்.

அவர் - நாயனார். கொற்றம் - வெற்றி, திருமாலின் பெருமைக் குரிய அடைமொழி. ஏனம் - பன்றி. அன்னம் - அன்னப் பறவை. பெற்றம் - இடபம். ஊர்வது - வாகனம். நீடிய எக்காலத்தும் விளங்குகின்ற. பேதையாள் - உமாதேவி. ஞாலம் - உலகம். 8

மாரிக் காலத்து இரவில் சிவபிரான் தவவேடத்துடன் வர நாயனார் எதிர் கொண்டு உபசரித்தல்
கலி விருத்தம்

448. மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசிதலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன்

தெளிவுரை: தேன் விளங்கும் மாலையுடைய நாயனார் மழைக் காலத்தில் ஓர் இரவில் பசி வருத்த, வேறு வருவாய்க்குரியஆதரவு இல்லாது, உறக்கம் கொள்ளாது நீண்ட நேரம் விழித்திருந்து பின்பு கதவைத் தாழிட்டு அடைந்த நிலையில் சிவபிரான் விருந்தினராக வரப் பெற்றார்.

தாரிப்பு - உதவி. தலைக்கொள்வது - மிகுதிப்பட்டு வருத்துதல். பாரித்தல் - அதிகரித்தல். வேரி - தேன்: நறுமணம். தாரான் - மாலையணிந்த நாயனார். இது நாயனாரின் விருந்தோம்பும் பண்பு குறித்து சாற்றப்படுதலாம் என்க. தான் பசித்திருப்பினும் விருந்தினரை வரவேற்கும் நிலையில் உள்ளம் மகிழ்தலைச் சுட்டுதலாம். 9

நாயனார் விருந்தினரை உபசரித்துத் தன் மனைவியாரிடம் ஆலோசித்தல்
-இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

449. ஈரமேனியை நீக்கி இடம் கொடுத்து
ஆர இன்னமுது ஊட்டுதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கித் "தபோதனர்
தீர வேபசித் தார் செய்வது என்"னென்று:

தெளிவுரை: அடியவரான விருந்தினர் கதவைத் தட்ட, நாயனார் உடனே திறந்தார். துறவியின் கோலத்தில் வந்த சிவபிரானை உள்ளே அழைத்த நாயனார், மழையில் நனைந்த மேனியைத் துடைத்து இருக்கை தந்து, அவர்க்கு இனிய உணவை அளிக்கும் விருப்பம் கொண்டவராய்த் தன் மனைவியாரை அழைத்து "இத்துறவியார் பெரிதும் பசித்துள்ளார். அதற்குச் செய்ய வேண்டிய செயல் யாது." என்றார்.

சிறப்புரை: இல்லத்தில் பசித்திருந்த நாயனாரும், அவர் துணைவியாரும் அதனைப் போக்குவதற்குச் சிந்தை செய்யாத நிலையில், துறவியாரின் பசியைப் போக்குவதற்குரிய வழியைச் சிந்தித்தது அவர் அடியார்க்கு அமுது செய்யும் பெற்றியில் தலை நின்றார் என்க. மற்றும் துறவியாக வந்த ஈசனின் திருமேனியைத் தீண்டி
ஈரம் போக்கிய பெருமையை இனிது ஓர்க.

ஆர - பொருந்த. இன்னமுது - சுவை மிகுந்த உணவு. தார மாதர் - மனைவி. தபோதனார் - துறவியார். என்று - இதன் தொடர்ச்சி அடுத்த பாடலில் வரும். 10

450. **"நமக்கு முன்புஇங்கு உணவிலை ஆயினும்**
இமக்கு லக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறுஎங் ஙனே அணங் கே"என:

தெளிவுரை: நாயனார் தன் மனைவியாரை நோக்கி, "பெண்ணே! நாம் உண்பதற்கு இங்கு உணவு இல்லை. ஆனாலும் இமயவல்லியான பார்வதி தேவியைப் பாகம் கொண்டுள்ள சிவபிரானுக்கு இனியவரான இவ்வடியார்க்குநாம் இனிய உணவைப் பொருந்தும் வகையில் அமைக்கும் தன்மை எங்ஙனம்?" என்றார்.

இவண் நாயனார், தம் இல்லம் நாடிவந்த அடியவர்க்கு எத்தன்மையிலாவது இனிய உணவை அளிக்க வேண்டும் என்கிற கொள்கை யுடையவராயினார் என்க.

இமக் குலக்கொடி - பார்வதிதேவி. பாகர் - ஈசன். இனியவர் - தமக்கு அடியவர்க்கு. இன்னடிசில் - இனிய சுவை உணவு. தகவுற - சிறப்பாக. அணங்கு - பெண்: நாயனார் மனைவியைக் குறித்தது. 11

451. மாது கூறுவள் "மற்றொன்றும் காண்கிலேன்
ஏதி லாரும்இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செய" லென்று.

தெளிவுரை: நாயனாரின் துணைவியார் மனையிலும் உணவுப் பொருள் இல்லை: பிறகும் இனித் தருபவர் இல்லை; பொழுதும் கடந்து சென்றுவிட்டது: இனிச் சென்று உதவி கேட்பதற்கான இடமும் வேறு இல்லை: தீமை செய்தலால் பெற்ற வினையுடையேன் ஆயினேன். நான் என்ன செய்வது?" என்றார்.

சிறப்புரை: மனையில் பொருளின்மையும், எல்லோரிடமும் கடன் பெற்றுத் திருப்பித் தராத நிலையில் இனித் தருவார் இல்லை என்பதும், இவண் பெறப்படுவதாம். நன்மை செய்தலால் நல்வினையும், தீமை செயதலால் தீவினையும் சார்தலை இவண் சுட்டப்பெற்றது.

மாது - மனைவி. ஏதிலார் - பிறர்: அயலார். போது - பொழுது: இது இரவுப் பொழுது என்க. வைகிற்று - கடந்தது: நெடுநேரமாகி யாவரும் உறக்கம் கொள்ளும் நிலையாதல். 12

452. "செல்லல் நீங்கப் **பகல்வித்திய செந்நெல்**
மல்லல் நீர்முறை வாரிக்கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கிலும் ஆகும்மற்று
அல்லது ஒன்றுஅறி யேன்" என்று அயர்வுற

தெளிவுரை: மேலும் அவர்தன் நாயகரை நோக்கி, "நம் வறுமை நீங்கப் பெறுமாறு இன்று பகலில் விதைத்த நீர் முளையுடைய செந்நெல்லை வாரிக் கொண்டு வந்தால், அதற்கு ஏற்றவாறு உணவு சமைக்கவும் ஆகும். இதனையன்றி வேறு அறிகிலேன்." என்று வருந்திக் கூறினார்.

விதைக்காகக் காயவைத்த நெல்லை வேறு வகைக்குப் பயன்படுத்தாமை மரபாகும். அது மாறுதலால் அம்மையார்வருத்தம் கொண்டார் எனவாறு.

செல்லல் நீங்க - செல்வம் நீங்கிய நிலையில் அச்செல்வத்தை மீளவும் பெறும் வகையில் பயிர் செய்வதற்குரிய வகையில். மல்லர் - வளமை. வல்லவாறு - ஏற்றவாறு. அயர்வு - வருத்தம். 13

453. மற்றுஅம் மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரிது உள்மகிழ்ந்து
உற்ற காதலி னால்ஒருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார்.

தெளிவுரை: இவ்வாறு தன் மனைவியார் கூறக்கேட்ட நாயனார் செல்வம் பெற்றவர் போல் மகிழ்ந்து பேரன்பு தலைப்பட மனம் இசைந்து நீர் சூழ்ந்த வயலைச் சுற்றிச் செல்லத் தொடங்கினார்.

வதை நெல்லை வேறு ஒரு செயலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்னும் நெறியாயினும் தன் மனைவி கூறியதை ஏற்று இசைந்தமை, ஒருப்பட்டனர் எனச் சாற்றப்பட்டது.

காதல் - அன்பு: அடியார்க்கு அமுது செய்வித்தலால் கொள்வது, ஒருப்பட்டனர் - இசைந்தார். 14

நாயனார் நள்ளிரவில் விதைகளைத் திரட்டிக் கொண்டு வருதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்.

454. பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து
அருகு நாப்பண் அறிவரும் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்றது உலகெலாம்.

தெளிவுரை: அதிகமாக மழை பெய்து ஓரம் எது நடு எது எனத் தெரியாதவாறு அந்த இரவு எல்லா இடத்திலுள்ள இருளும் தன் கட்டுகளை விடுத்து அங்கு வந்து திரண்டது போன்று வானம் இருந்தது.

பிறங்க - மிகை கொள்ள. அருகு - ஓரம். நாப்பண் - நடு. கங்குல் - இரவு. கணம் - கூட்டம். உலகு - இளையான் குடி என்னும் ஊரைக் குறித்தது. 15

455. எண்ணும் இவ்வுலக கந்தவர் யாவரும்
துண்ணெ னும் படிதோன்றமுன் தோய்ந்திடில்
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம் என்று
நண்ணல் செய்யா நடுஇருள் யாமத்து:

தெளிவுரை: அந்நள்ளிரவானது இவ்வுலகத்து மக்கள் யாவரும் அஞ்சும்படி மிக்க கருமையுடைய வண்ணக் குழம்பு பூசப்பட்டது போன்று நெருங்கிச் செல்லவும் அரிதாகி இருந்தது.

பெருமழையும், பேரிருளும், நள்ளிரவும் கலந்து அச்ச உணர்வும், கண் புலனால் வழி தோன்றாதவாறும் நாயனார் உறுமாறு ஈசனால் சோதிக்கப்படுதலை இவன் சாற்றுதலாயிற்று.

துண்ணெனும் படி - அஞ்சும் படி. மைக்குழம்பு - கருமையின் அடர்த்தியைக் குறித்தது. 16

456. உள்ளம் அன்பு கொண்டு ஊக்க ஓர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்.
வள்ள லார்இளை யான்குடி மாறனார்.

தெளிவுரை: உள்ளம் பேரன்புடன் ஊக்கம் கொண்டு விளங்கப் பெரிய கூடையைக் கவித்துக் கொண்டு முன்னரே நடந்து சென்று பழகிய வழியைக் கண்டு இளையான்குடி மாற நாயனார், பறவையும் உறங்குகின்ற நள்ளிரவில் சென்றார்.

பேர்இடா - பெரிய கூடை. முன் கவித்து - தலையில் வைத்துக் கொண்டு. குறியின் வழி - முன்னரே நடந்து சென்று பழகிய வழி. வள்ளல் - நாயனாரைக் குறித்தது. வள்ளலார் இளையான் குடி மாறனார் என்பதனை வள்ளலார்க்கு (ஈசனுக்கு) அடிமையான இளையான் குடி மாறனார் எனவும் காண்க. 17

457. காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்து ஒல்லை மீண்டனர்.

தெளிவுரை: பகலில் விதைக்கப்பட்ட உயர்ந்த சாலி என்னும் நெல்லின் வெண்முளை வயலின்கண் நீரில் மிதக்கத் தன் காலால் தடவிச் சென்று கைகளால் மேலே துழாவிச் சேர்த்து வாரிக் கூடை நிறையக் கொண்டு தலையிற் சுமந்து விரைவில் திரும்பினார்.

சாலி - நெல்வகை. கோலி - சேர்த்து. இடா - கூடை. ஒல்லை - விரைந்து. 18

அடுப்பை மூட்டுவதற்கு வீட்டுக் கூரையின் மரச் சட்டங்கள் அறுத்தல் அறுசீர் ஆசிரிய விருத்தம்

458. வந்தபின் மனைவி யாரும்
வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில்
சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட
விறகில்லை என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும்
அலக்கினை அறுத்து வீழ்த்தார்.

தெளிவுரை: நாயனார் கூடையில் விதைத்த நெல்முனையைச் சேர்த்துத் திரட்டிக் கொண்டுவர, மனைவாயிலின் நின்று அவர் துணைவியார் வாங்கிச் சிந்தை மகிழ நீரில் அலம்பிச் சேறு நீக்கினார். பின்னர் அடுப்பு மூட்டுவதற்கு விறகு இல்லையே என்று எண்ணியபோது பெரிய அவர் மனையில் கூரையாக விளங்கும் மரச் சட்டங்களை நாயனார் அறுத்து எடுத்தார்.

அடியவர்க்கு அமுது செய்விக்க யாது செய்வது என்று அயர்வுற்ற நிலையில் அவர் எண்ணியவாறு நாயனார் முறை நெல்லைத் திரட்டி வந்தது மகிழ்வை உண்டாக்கிற்று என்பது "சிந்தையில் விரும்பி" எனச் சாற்றப்பட்டது,

வாய்தலின் - வாயிற்படி என்க. விரும்பி - மகிழ்ந்து. அந்தமில் மனை - பெரிய மனை. அலக்கு - மரச் சட்டங்கள். 19

கறி உணவாகக் கீரை பறித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

459. முறித்தவை அடுப்பின் மாட்டி
முளைவித்துப் பதம்முன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி
வாக்கிய உரையில் பெய்து
வெறுப்புஇல் இன்னிடிசில் ஆக்கி
மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்குஇனி என்செய் கோம் என்று
இறைஞ்சினர் கணவ னாரை.

தெளிவுரை: மனைக் கூரையில் சரங்கள் முதலானவற்றை முறித்து, அடுப்பில் வைத்து எரித்து, நெல் விதையின் முளை நீக்கிப் பதமாக்கி ஈரத்தைப் போக்க வறுத்தப் பின் அரிசியாக்கி, முன்னரே நீரிட்டுக் கொதிக்கும் உலையில் பெய்து சிறிதும் வெறுப்புக் கொள்ளாதவாறு இனிய சோறு வடித்துச் சமைத்த மேம்படு கற்பரசியான நாயனாரின் துணைவியார், உடன் கலந்து உண்ணும் கறி சமைத்தற்கு என் செய்யலாம் என்று தன் கணவனாரை வேண்டினார்.

ஈர நெல் அரிசியாதற்குப் பொருந்தாமையால் வறுத்த செயலும், பழகாத புது அரிசியாக உள்ள நிலையில் குழையாத சோறு ஆக்கும் திறனைச் சுட்டுமாறும் "வெறுப்பு இல் இன்னடிசில்" என உரைத்தலாயிற்று.

முறித்த அவை - மேற் கூரையின் மரச் சட்டங்கள். மாட்டி - வைத்து எரித்து. இன்னடிசில் - இனிய சோறு. கற்பின் மிக்கார் - நாயனாரின் மனைவி. கறி - உடன் உண்ணும் உணவு வகை. 20

460. **வழிவரும் இளைப்பி னோடும்**
வருத்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும்
அன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க
குறும்பயிர் தடவிப் **பாசப்**
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்து அவை கறிக்கு நல்க.

தெளிவுரை: வழியிடை நெடிது வந்த இளைப்பாலும், வருத்தும் பசியாலும் தளர்ச்சியுற்ற அன்புக்குரிய தலைவன் வருந்துதலைக் எண்ணித் தன் மனைவியின்கண் குழியில் பயிர் செய்த குறும்பயிர்களைக் கைகளால் தடவிப் பாசவினை களைவார் போலப் பறித்து வந்து கறியுணவு சமைக்குமாறு நாயனார் கொடுத்தார்.

வழிவரும் இளைப்பு - துறவியாக வந்த சிவபிரான் இரவில் நடந்து வந்தமையால் தோன்றும் இளைப்பினைப் புகன்றது. ஐயன் - தலைவன்: சிவபிரான். குறும்பயிர் - கீரை வகை: பூசனி, சுரை எனவும் கொள்க. 21

உணவு சமைத்து முடிந்ததும் துயில் கொள்ளும் அடியவரை எழுப்புதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

461. மனைவியார் கொழுநர் தந்த
மனம்மகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு
கறியமுது ஆக்கிப் பண்டை
நினைவினால் குறையை நொந்து
திருவமுது அமைத்து நின்று:

தெளிவுரை: நாயனாரின் மனைவியார் தன் கணவர் மன மகிழ்வோடு தந்த கறிகளை ஆய்ந்து நீரில் கழுவித் தகுந்த தூய பாத்திரத்தில் கைத்திறத்தால் வேறு வேறு கறியமுதாக்கினார். அவர் முன்பு

செல்வச் செழிப்புடன் இருந்த காலத்தில் பெருவிருந்து செய்து அடியார்களுக்கு அமுது செய்வித்த நிலையை எண்ணித் தற்கால நிலையைக் கண்டு வருந்தியவராய்த் திருவமுது சமைக்கலானார்.

கொழுநர் - கணவர். புனல் - நீர். கைம்மை வினை - கைத்திறன். வேறு வேறு கறி அமுது - கூட்டு, பொரியல் முதலானவாறு. பண்டை நினைவு - முன்பு வெல்வச் செழிப்புடன் விளங்கிய தன்மை. குறை - அடியவர்க்குப் பேருணவு அளிக்க இயலாத தன்மை. 22

462. கணவனார் தம்மை நோக்கிக்
கறிஅமுது ஆன காட்டி
இணையிலா தாரை ஈண்டு
அமுது செய் விப்போம் என்ன
உணர்வினால் உணர ஒண்ணா
ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்று அங்கு
அவர்துயில் அகற்றல் உற்றார்.

தெளிவுரை: பின்பு கணவனாரிடம் கறிகள் கொண்ட உணவு சமைத்ததைக் கூறி, வந்த இணையற்றவரான அடியவரை உணவு அருந்தச் செய்வோம் என்று உணர்த்தும் வகையில் தலைப்பட்டனர். உணர்வால் உணர முடியாத ஒருவரை உணர்த்தும் வகையில் எதிரே சென்று நின்று நாயனார் அவர் துயிலை நீக்கி, எழுமாறு செய்தார்.

இணையிலாதார். ஈசனைக் கூறி அடியவரை உணர்த்தியது. அணைய - அருகில் செல்ல. ஒருவர் - சிவபிரான். 23

நாயனார் அடியவரைத் துயில் எழுப்ப அடியவர் மறைதல்

463. அழுந்திய இடருள் நீங்கி
"அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு
அமுது செய்து அருள்க" என்று
தொழும்பனார் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும்
தொண்டரும் திகைத்து நின்றார்.

தெளிவுரை: நாயனார், "பெரியீர்! யான் அழுந்தியுள்ள பிறவியாகிய இடரிலிருந்த நீங்கி உய்யும் வகையில் கருணை கொண்டு அமுது செய்ய எழுந்தருள்க." என்று உரைத்த அளவில் அடியவர் சோதிச் சுடராய் எழுந்து தோன்றச் செழுமை விளங்கும் மனைவியாரும், அவர் கணவரான நாயனாரும் திகைத்து நின்றார்கள்.

இடர் - பிறவித் துன்பம். உய்ய - நற்கதியடைய. பெரியோய் - சிவபிரான்: அடியார் உருவில் வந்த வந்த திருவடிவத்தைக் குறித்தது. தொழும்பனார் - இளையான் குடிமாறர். அதாண்டர் - நாயனார். 24

சிவபிரான் இடப வாகனத்தில் ஏறி உமாதேவியோடு காட்சி நல்கி அருள் புரிதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்.

464. மாலயற்கு அரிய நாதன்
வடிவுஒரு சோதியாகச்
சாலவே மயங்கு வார்க்குச்
சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோடு
இடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த
திருத்தொண்டர் தம்மை நோக்கி:

தெளிவுரை: திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரிய தலைவனாயச் சோதி வடிவமாகத் தோன்றிய சிவபெருமான் மகிழ்ந்து, திகைத்து மயங்கி நிற்கும் நாயனார்க்கும், அவர் மனைவியார்க்கும் இடப வாகனராய் உமாதேவியோடு காட்சி நல்கிச் சீலம் மிகுந்த பூசையாகிய அடியவர்க்கு அமுது அளித்தலைப் புரிந்த திருத்தொண்டர்க்கு இனிது அருள் புரியலானார்.

இவண் நோக்கி என்பது அடுத்த பாடலில் "அருள் செய்தார்" என வினை முடிபு பெறும்.

மால் - திருமால். அயன் - பிரமன். நாதன் - தலைவன். சால - மிக. மயங்குவார் - திருத்தொண்டரான நாயனாரும் அவர் மனைவியாரும். சங்கரன் - நன்மை செய்பவர்: சிவபிரான். ஏலவார் குழலாள் - உமாதேவி. சீலமார்பூசை - அடியார்க்கு அமுது செய்வித்தல். திருத்தொண்டர் - இளையான் குடிமாற நாயனார்.

465. "அன்பனே அன்பர் பூசை
அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி
இருநிதிக் கிழவன் தானே

முன்பெரு நிதியம் ஏந்தி
மொழிவழி ஏவல் கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க" என்றே
அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்.

தெளிவுரை: யாவர்க்கும் எல்லாவற்றிலும் மேலோனான சிவபிரான், "அன்பனே! சிவனடியார்க்குப் பூசை அளித்த நீ நின் மனைவியோடு சிவலோகத்தை அடைந்து, குபேரன் பெருஞ் செல்வத்தை ஏந்தி நிற்கவும், நின் சொல் வழி ஏவல் கேட்கவும் இன்பத்தில் மேவி இருக்க." என்று அருள் புரிந்தார்.

இவண் செல்வம் அற்ற நிலையானது மாறி செல்வத்தின் அதிபதியான குபேரன் ஏவல் செய்யும் போது அடியவர்களைப் பூசித்தலால் கூடும் என்பது உணர்த்தப்பட்டது.

அன்பர் பூசை - சிவனடியார்களை வழிபடுதல். அணங்கு - நாயனாரின் மனைவி. என் பெரு உலகம் - சிவலோகம். இருநிதிக் கிழவன் - குபேரன்.

26

இளையான் குடிமாற நாயனாரை வாழ்த்தி மெய்ப்பொருள் நாயனார் திருத்தொண்டு சொல்லத் தொடங்குதல் - கவிக்கூற்று

466. இப்பரிசு இவர்க்குத் தக்க
வகையினால் இன்பம் நல்கி
முப்புரம் செற்றார் அன்பர்
முன்பெழுந்து அருளிப் போனார்
அப்பெரி யவர்தம் தூய
அடியினை தலைமேல் கொண்டு
மெய்ப்பொருள் சோதி வேந்தன்
செயலினை விளம்பல் உற்றேன்.

தெளிவுரை: இத்தன்மையில் இளையான் குடிமாற நாயனார்க்குத் தக்கவாறு முத்தி இன்பத்தினை அருளிச் செய்த முப்புரத்தை எரித்து அழித்த சிவபிரான், நாயனார் முன்பு வெளிப்பட்ட நிலையினின்று கரந்து தம் வியாபக நிலையில் மேவினார். அப்பெரியவரின் தூய அடியினையைத் தலையின் மீது கொண்டு, சேதிநாட்டு வேந்தரான மெய்ப்பொருள் நாயனாரின் சிறப்பின் மிக்க செயலை உரைக்கலுற்றேன்.

இது கவிக் கூற்று.

இவர்க்கு - இளையான் குடிமாறர். இன்பம் - முத்திப்பேறு. முப்புரம் செற்றார் - சிவபிரான். அன்பர் - இளையான் குடிமாறர். எழுந்தருளிப் போனார் - தன் வடிவை மறைத்துக் கொண்டார் குடிமாறர். மெய்ப்பொருள் - மெய்ப் பொருள் நாயனார். சேதி வேந்தன் - சேதி நாட்டு அரசர். 27

இளையான் குடிமாற நாயனார் புராணம் நிறைவுற்றது

11. மெய்ப்பொருள் நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்:

சேதி நாட்டின் திருக்காவலூரில் வாழ்ந்த வேந்தர், மெய்ப்பொருள் நாயனார் ஆவார். அவர், திருக்கோயில்களில் பூசை, விழா முதலியன செய்வதும், அடியவர்களின் கருத்தறிந்து ஏவல் செய்வதும் தம் திருத்தொண்டாக ஆற்றி வந்தார்.

முத்தநாதன் என்னும் அரசன் மெய்ப் பொருள் நாயனாரிடம் பகைமை கொண்டிருந்தான். பலமுறை போர் நிகழ்த்தியும் அவனால் அவரை வெற்றி கொள்ள முடியவில்லை. இதனால் வஞ்சனையால் அவரை வெற்றி கொள்ளக் கருதினான்.

ஒரு நாள் உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொண்டு சடைமுடிகளைச் சுருட்டிக் கட்டி, உடைவாளை மறைத்த சுவடிக் கட்டோடு சிவனடியார் போல் வேடம் தரித்துப் பகைவனான முத்தநாதன் அங்குச் சென்றான். அவனைச் சிவனடியார் என்று கருதி காவலர்கள் தடுத்திலர்.

முத்தநாதன், நாயனார் சயனம் கொள்ளும் நேரத்தில் செல்ல வாயிற் காவலனான தத்தன் எடுத்துச் சொல்லியும் கேளாது, உள்ளே நுழைந்தான். ஆங்குத் துணைவியார் நாயனார்க்கு அணுக்கத் தொண்டு செய்ய, சிவனடியாரைக் கண்டதும் விரைந்தெழுந்து நாயனாரை எழுப்பினார். அப்போது அவன், "சிவாகமங்களில் ஒன்றைக் கூற வந்தேன். உன் மனைவி இங்கே இருக்க வேண்டாம்." என்றான்.

நாயனார் மனைவி வெளியே செல்ல, வஞ்சகனாகிய முத்தநாதன் தான் நினைத்தபடியே, மறைத்து வைத்திருந்த உடைவாள் கொண்டு தன் கருத்தை முடித்தான். அந்நிலையில் நாயனார், "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" என்று தொழுதார். ஆங்கே

விரைந்து வந்த தத்தன், அவ்வஞ்சகனைத் தன் வாளால் வெட்டத் துணிந்தான். அப்போது நாயனார் "இவர் நம் தவர்: சிவனடியார்" என்று கூறித் தடுத்து "அவரை எல்லையைக் கடக்கும் வரை தீங்கு நேராதவாறு கொண்டு போய் விடு." என்றார்.

தத்தன், முத்தநாதனைப் பாதுகாப்பாக எல்லைக்கு அப்பால் சென்று விடுத்த செய்தியை நாயனார்க்குத் தெரிவித்தான். நாயனார்க்குத் திருக்காட்சி நல்கிய சிவபிரான் தன் அருட்பாத நிழலில் சேர்த்தருளினார்.

மெய்ப்பொருள் நாயனாரின் திருத் தொண்டு சாற்றுதல் - இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

467. சேதிநல் நாட்டு நீடு
திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநல் நெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர்
கருத்தறிந்து ஏவல் செய்வார்.

தெளிவுரை: சேதி என்னும் வளநாட்டின் திருக்கோவலூரில் உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரானை அன்புடன் வழிபடும் மலையமான் குலத்தில் வந்தவராய் ஒருவர் வேத நெறியின் வாய்மை விளங்கவும், ஈசனார் அன்பர் தம் கருத்தறிந்து பேரன்புடன் ஏவல் செய்யவும் விளங்கி வரலானார்.

இவர் மெய்ப்பொருள் நாயனார் என்க. இதனை முன் பாடலிலிருந்து வருவிக்க.

சேதி - நாட்டின் பெயர். மன்னி - விளங்கி. மாதொரு பாகர் - சிவபிரான். மலாடர் கோமான் - மலையமான் குலத்தினரான மெய்ப்பொருள் நாயனார். காதல் - பேரன்பு. ஈசர்க்கு அன்பர் - சிவனடியார். கருத்தறிந்து - உள்ளத்தில் மேவும் தன்மையறிந்து. ஏவல் - தொண்டு. 1

468. அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி

உரைதிறம் பாத நீதி
ஓங்கு நீர் மையினின் மிக்கார்
திரை செய் நீர்ச் சடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார்

தெளிவுரை: நல்லரசாட்சியில் விளங்கும் அறநெறியைக் குறைவிலாது காத்தும், மலை போன்ற உறுதி மிக்க தோள் வலிமையால் பகைவர்களைப் போர் முனையில் வெற்றி கொண்டு சாய்த்தும், சொல் தவறாத நீதி நெறியில் விளங்கி இனிமை மிக்கவராயும், அலைகளையுடைய கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபிரான் அன்பர்களின் திருவேடத்தையே சிந்தையில் கொண்டவராயும் மெய்ப்பொருள் நாயனார் ஒழுகி வரலானார்.

வழாமல் - குறைவிலாது. தோளால் - தோள் வலிமை: வீரத்தைக் குறித்தது. மாற்றலர் - பகைவர். முனை - போர்க்களம். உரைதிறம்பாத - சொல் தவறாத. நீர்மை - இனிய பண்பு. திரை செய் நீர் - கங்கை. அன்பர் வேடம் - சிவனடியார் திருக்கோலம் : இது திருநீறு, சடைமுடி, உருத்திராட்சம் ஆகியவற்றோடு விளங்குதல் என்க. சிந்தை - ஆழ்ந்த அன்பு. 2

469. மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நா யகருக்கு அன்பர்
தாள்அலால் சார்பு ஒன்று இல்லார்.

தெளிவுரை: உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபிரான் விளங்கும் திருக்கோயில்களில் நித்திய பூசை நிகழவும், ஏழிசையுடன் விளங்கும் தோத்திரப் பாடல்களால் இறைவனைப் போற்றவும், நாட்டியச் சிறப்பு ஓங்கவும் வழிபாடு நிகழ்த்தி நாயனார் இனிது வாழ்ந்து வந்தார். அவர் தம் நாயகரான சிவபிரான் அன்பர்க்கு அல்லாத வேறு சார்வு கொண்டு மனத்தைச் செலுத்தாதவராய் விளங்கினார்.

சிறப்புரை: இவண் ஈசனே யாவற்றுக்கும் உடைமையானவர் என்னும் கருத்தில் "உடையவர் மன்னும் கோயில்" எனச் சாற்றப்பட்டது. இ.ை.து இறைவன் திருநாமம் என்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவாசகம் போற்றித் திரு அகவலில்,

"உடையாய் போற்றி! உணர்வே போற்றி!
கடையேன் அடிமை கண்டாய் போற்றி!"

என்று அருளியவாறும் காண்க.

மங்கை - உமாதேவி. பாகம் - இடப்பாகம். உடையவர் - சிவபிரான். ஏழிசை - 1. குரல்; 2. துத்தம்; 3. கைக்கிளை; 4. உழை; 5. இளி; 6. விளரி; 7. தாரம். ஆடல் - நடனக் கலை. மல்க - வளம்பெற தங்கள் நாயகருக்கு அன்பர் - சிவனடியார். சார்பு - பற்று; மனம் செலுத்தும் தன்மை. 3

470. தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு
ஆவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து உவந்தார்.

தெளிவுரை: அரசுரிமையால் ஈட்டிய பொன் பொருள் முதலான செல்வங்களைத் தில்லை மன்றுள் ஆடும் ஈசனடியார்களுக்கு ஆவன யாவும் செய்தும், பெரு விருப்பத்தோடு அவர்கள் நண்ணிய போது குறைவில்லாது செல்வத்தை வழங்கியும் மெய்ப்பொருள் நாயனார் விளங்குதலானார்.

தேடிய - அரசுரிமையால் ஈட்டிய. மாடு நீடு செல்வம் - பொன், பொருள் முதலான செல்வம். மன்றுள் ஆடிய பெருமான் - நடராசப் பெருமான். அன்பர் - சிவனடியார். நாயன்மார் - சிவனடியார்: அடியவர்களே வழி படப் பெறும் தலைவராக விளங்குதலின் நாயன்மார் எனப்பட்டது. அணைந்த போது - சார்ந்த போது. கொடுத்து உவந்தார் - ஈத்துவக்கும் இன்பம் உணர்த்துதலாம். 4

அரசு நிலையில் பகைவனான முத்திநாதன் வஞ்சனையால் வெல்லும் வகையில் பொய்த் தவ வேடம் கொண்டு புகுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

471. இன்னவா றொழுகும் நாளில்
இகல்திறம் புரிந்துஓர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேல் கொண்டு

பொன்னணி ஓடை யானைப்
பொருபரி காலாள் மற்றும்
பன் முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனான்.

தெளிவுரை: இவ்வாறு மெய்ப்பொருள் நாயனார் அரசாட்சி புரிந்து வரும் காலத்தில் பகைத் தன்மையுடைய மன்னன் ஒருவன், நாயனாரை வெற்றி கொள்ளும் பொருட்டுப் போரிடை வைத்துப் பொன்னால் ஆன முகபடாம் கொண்ட யானைப் படையும், குதிரைப் படையும், காலாட்படையும் கொண்டு போர் செய்து பலமுறை தோற்று அவமானப்பட்டான்.

இவனே முத்தநாதன் என்பதைப் பின்வரும் பாடல்களால் காண்க.

இகல்திறம் - பகைமை. ஓர் மன்னன் - முத்தநாதன் என்க. அன்னவர் - மெய்ப்பொருள் நாயனார். அமர் மேல் - போர்க்களம். அணி - அணிகலன். ஓடை - யானையின் முகபாடம். பொருபரி - குதிரைப்படை. காலாள் - காலாட்படை. பரிபவம் - அவமானம். 5

472. இப்படி இழந்த மாற்றான்
இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்து வெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடம் கொண்டே
அற்றத்தில் வெல்வான் ஆகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரில் சேர்வான்.

தெளிவுரை: போர்க்களத்தில் தோல்வியடைந்த பகைவனான முத்தநாதன் இனிப் போர்க்களத்தில் மெய்ப்பொருள் வேந்தனை வெற்றி கொள்ள முடியாது என அறிந்து, அம்மன்னன் சிறப்பாகப் போற்றும் வெண்ணீறு சாத்தும் அடியவர் வேடம் கொண்டு வஞ்சனையால் வெல்லும் கருத்தில் திருக்கோவலூரை அடைந்தான்.

இழந்த - தோல்வியுள்ள. மாற்றான் - பகைவன்: முத்தநாதனைக் குறித்தது. சீலம் - சிவனடியார்களைப் போற்றும் சிறப்பு. அற்றம் - வஞ்சனை: சூழ்ச்சி. 6

473. மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைக ரந்த
புத்தகக் கவளி ஏந்தி

மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு
புகுந்தனன் முத்தநாதன்.

தெளிவுரை: உடம்பு முழுவதும் திருநீற்றினைப் பூசி, சடைமுடிகளை இணைத்துக் கட்டிக் கையில் உள்ள குறுவாளைச் சுவடிக் கட்டுக்குள் மறைத்து வைத்துக் கருமையை உள்ளே கொண்டு சூழும் விளக்கு போன்று மனத்துள் கறுப்பாம் வஞ்சகத்தை வைத்துப் புறத்தே பொய்யை மறைப்பதான தவ வேடத்தைக் கொண்டு முத்தநாதன் திருக்கோவலூருல் புகுந்தான்.

சிறப்புரை: உள்ளத்தில் வஞ்சகமும் புறத்தில் திருவெண்ணீறும் கொள்ளும் தன்மையானது பொய்மையை மறைக்கும் தவ வேடம் என்று வேடப்பாங்கின் மேன்மையும் உள்ளத்தின் வஞ்சகமும் உவமிக்கப்பட்டதை நோக்குக. மற்றொரு உவமையாகச் சிட்டம் கலந்த திரியின் கறுப்பும் அது எரிகின்ற போது தோன்றும் சுடரும் சாற்றப்படுதலையும் காண்க. இவண் உள்ளே திரியில் கறுப்புக் கலந்து மறைந்து இருப்பினும், அதனைச் சூழ்ந்துள்ள சுடர்க்குப் பெருமை தருதல் போன்று முத்தநாதன் உள்ளே வஞ்சகம் வைத்திருந்தானாயினும் சிவனடியாராக வரும் தவக்கோலம் ஒளி விளக்கு எனப் போற்றப்படுதல் இவண் சாற்றப்பட்டது.

மெய் - உடம்பு. வேணி - சடைமுடி. படை - குறுவாள். புத்தகக் கவளி - சுவடிக் கட்டு. கரந்த - மறைத்த. மை - கருமை. கறுப்பு - வஞ்சகம். பொய் தவ வேடம் - மெய்யான தவத்தைக் கொள்ளாது அத்தகைய திருவேடத்தைப் பொய்ம்மைக்குப் பயன்படுத்திய செயலைக் கூறுதலாயிற்று. 7

முத்த நாதன் அரண்மனை வாயிலை யடைதல்

474. மாதவ வேடம் கொண்ட
வன்கணான் மாடம் தோறும்
கோதைசூழ் அளக பாரக்
குழைக்கொடி ஆட மீது
சோதி வெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகில் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான்.

தெளிவுரை: பெருமைக்குரிய தவவேடத்தைப் பொய்யாகத் தரித்த கொடியவனாகிய முத்தநாதன் வீதி வழியாகப் போகும் போது, மாலை சூடி அடர்ந்த கொண்டை தரித்த கொடி போன்ற இடையுடைய மகளிர் நடனம் புரியவும், தூய்மை மனத்தைக் குறிக்கம் வெண் கொடிகள் பறக்கவும் விளங்கின. அந்நிலையில் அவன் சேதியர் தலைவரான மெய்ப்பொருள் நாயனார் இருக்கும் மாளிகை வாயிலை அடைந்தான்.

வன்கணான் - கொடியவனான முத்தநாதன். கோதை - மாலை. அளகபாரம் - அடர்ந்த தலைமுடிக் கொண்டை. குழைக்கொடி - குழையணிந்த மகளிர்: துவளும் இடையுடைய பெண் எனவும் ஆம். ஆட - நடனம் செய்ய. மறுகு - நீண்ட வீதி. சேதியர் பெருமான் - மெய்ப்பொருள் நாயனார். கோயில் - அரண்மனை: மாளிகை. 8

தத்தன் என்பவன் முத்தநாதனைத் தடுத்தல்

475. கடையுடைக் காவ லாளர்
கைதொழுது ஏற நின்றே
உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந்து அருளும் என்னத்
தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்
"இடை தெரிந்து அருள வேண்டும்
துயில்கொள்ளும் இறைவன்" என்றான்.

தெளிவுரை: முத்தநாதன் தவவேடம் புரிந்து வர, வாயிற் காவலர்கள் எல்லோரும், தம் மன்னர் முன்னமே அறிவித்திருந்த ஆணையின்படிக் கை கூப்பித் தொழுது சிவனடியார் வந்தார் என்று போற்றி, உள்ளே எழுந்தருளுமாறு கூறக் கடைசி வாயிலினிடை நின்றான். அங்கு மெய்க்காப்பாளனான தத்தன் சிவனடியாரை நோக்கி, "மன்னர் துயில் கொள்கிறார். ஆதலால் சமயம் அறிந்து உள்ளே போதல் வேண்டும்." என்றான்.

கடையுடைக் காவலாளர் - வாயிற்காவலர். உடையவர் - சிவனடியார். தத்தன் - நாயனாரின் மெய்க்காவலன். இறைவன் - மெய்ப்பொருள் நாயனார். 9

முத்தநாதன் தடையைப் பொருட்படுத்தாது உள்ளே செல்லுதல்

476. என்று அவன் கூறக் கேட்டே
"யான் அவற்கு உறுதி கூற
நின்றிடு நீயும் என்றே"
அவனையும் நீக்கிப் புக்கு
பொன்திகழ் பள்ளிக் கட்டில்
புரவலன் துயில மாடே
மன்றல்அம் குழல்மென் சாயல்
மாதேவி இருப்பக் கண்டான்.

தெளிவுரை: தத்தன் உரைத்ததைக் கேட்ட முத்தநாதன், "நான் அவற்கு மெய்த்தன்மை சாற்றும் உறுதிப் பொருளைக் கூற வேண்டும் நீ இங்கேயே நில்." என்று அக்காவலனையும் உள்ளே வரவொட்டாது தடுத்து உட்புகுந்தான். ஆங்குப் பொற் கட்டிலின் மீது நாயனார் துயிலில் இருக்கப் பக்கத்தில் நறுமணம் கமழும் கூந்தலையுடைய மென்மையான சாயல் கொண்ட மாதேவி இருக்கக் கண்டான்.

அவன் - தத்தனைக் குறித்தது. புரவலன் - மெய்ப் பொருள் நாயனார். மாடு - பக்கம். மன்றல் - நறுமணம். குழல் - கூந்தல். மாதேவி - மெய்ப்பொருள் நாயனாரின் துணைவியார். 10

மனைவி எழுப்ப நாயனார் துயிலெழுந்து சிவனடியாரை வணங்குதல்

477. கண்டு சென்று அணையும் போது
கதும்என இழிந்து தேவி
வண்டலர் மாலை யானை
எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்டர்
ஆம்எனக் குவித்த செங்கை
கொண்டிழிந்து எதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று

தெளிவுரை: முத்தநாதன் உள்ளே சென்ற நிலையில், அவனைக் கண்ட நாயனார் தம் மனைவியார் விரைவாக எழுந்து நின்று வண்டு ரீங்காரம் செய்யும் மாலையணிந்த மன்னவரை எழுப்பினார். மெய்ப்பொருள் உடனே துயிலகன்று எழுந்து நின்று சிவனடியார்

வந்துள்ளார் எனக் கண்டு கைகளைக் கூப்பித் தொழுது எதிரே சென்று முறைப்படி வணங்கி நின்றார்.

கதும் - விரைவுக் குறிப்பு. இழிந்து - கட்டிலிலிருந்து இறங்கி. தேவி - நாயனாரின் மனைவி. வண்டலர் மாலையான் - மெய்ப்பொருள் நாயனார். அண்டர் நாயகனார் - சிவபிரான். தொண்டர் - சிவனடியார் திருக்கோலத்தில் வந்த முத்தநாதன். கொள்கையின் வணங்கி - அடியவர்களை வணங்கும் மரபு வழிப்படி வணங்கி. நின்று என்பது அடுத்த பாடலில் வினைமுடிபு பெறும். 11

எங்கும் இல்லாத சிவாகம நூல் கிடைத்த வகையில் அதனைப் புகல வந்ததாகச் சிவனடியார் கூறுதல்

478. **"மங்கலம் பெருக மற்றென்**
வாழ்வுவந்து அணைந்தது என்ன
இங்கெழுந் தருளப் பெற்றது
என்கொலோ" என்று கூற
"உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்கும்இல் லாதது ஒன்று
கொடுவந்தேன் இயம்ப" என்றான்.

தெளிவுரை: சிவனடியாரைக் கண்டதும் நாயனார் உள்ளம் மகிழ "மங்கலம் பெருகும் வகையில் என் வாழ்க்கையில் நன்மை வந்து சேர்ந்ததைப் போன்று இங்கு தேவரீர் வந்தமைக்கு நான் என்ன பேறு பெற்றேன்." என்று கூற, முத்தநாதன் "உங்கள் நாயகனார் முன்னே உரைத்த ஆகம நூல் ஒன்று இதுவரையில் இவ்வுலகத்தில் காணப்பெறாத ஒன்றினைக் கூற வேண்டிக் கொண்டு வந்தேன்." என்றார்.

இவண் "உங்கள் நாயகன்" என்று சிவபிரானைச் சாற்றிய நிலையில் முத்தநாதனின் பொய்த்தன்மை உள்ளுறையாக உணர்த்தப் படுதல் காண்க.

மங்கலம் - சுபம், நன்மை. உங்கள் - நாயனாரைக் குறித்தது. நாயகன் - சிவபிரான். மண் - உலகம். கொடு வந்தேன் - கொண்டு வந்தேன். இயம்ப - கூற, சொல்ல. 12

நாயனார் மனைவியாரை அந்தப்புரத்துள் செல்லுமாறு செய்து முத்தநாதன் தன் கருத்தை முடித்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

479. "பேறெனக்கு இதன்மேல் உண்டோ
பிரானருள் செய்த இந்த
மாறுஇல்ஆ கமத்தை வாசித்து
அருள் செய வேண்டும்" என்ன
"நாறுபூங் கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறிடத்து இருத்த ல்வேண்டும்"
என்று அவன் விளம்ப வேந்தன்.

தெளிவுரை: நாயனார் "இதனினும் மேலான பேறு உலகில் உள்ளதோ! எம்பிரான் அருளிய மாறிலாத ஆகமத்தை வாசித்தருள்க." என்றார். அப்போது முத்தநாதன், "நறுமணம் கமழும் கூந்தலையுடைய இம்மாது இங்கே இருத்தலால், நானும் நீயும் வேறிடத்தில் தனித்து இருக்க வேண்டும்." என்றான்.

சிவகாமத்தில் கூறும் கருத்துகள் ஒன்றோடொன்று ஒத்து விளங்குவனவாய் இருத்தல் குறித்து மாறு இல் ஆகமம் எனப்பட்டது.

பேறு - வாழ்வில் காணும் சிறப்பு. பிரான் - சிவபிரான். ஆகமம் - சிவபிரான் சதாசிவ மூர்த்தியாகி ஐந்து திருமுகங்களின் வாயிலாக அருளிச் செய்யப்பட்ட 28 ஆகமங்களைச் சுட்டியது. நாறு பூங்கோதை - நறுமணம் கமழும் கூந்தல். மாது - நாயனாரின் மனைவி. வேந்தன் - மெய்ப்பொருள் நாயனார், இது அடுத்த பாடலில் வினை முடிபு பெறும். *13*

480. திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத்து இருந்து போற்றி
"இனி அருள் செய்யும்" என்றார்.

தெளிவுரை: நாயனார், திருமகள் போன்று அருகே நின்றிருந்த தன் மனைவியாரை நோக்கி விருப்பத்துடன் அந்தப்புரத்திரல் இருக்குமாறு கூறிப் போலியாகச் சிவவேடம் தரித்தவனை ஒரு பீடத்தின் மீது இருக்கச் செய்து, தாம் தரையில் அமர்ந்து வணங்கியவராய் "இனி அருள் செய்யும்" என்றார்.

தேவி - மனைவி. புரிவு - விருப்பம். தருதவ வேடம் - போலியாகப் புனைந்த தவ வேடம். வேடத்தான் - முத்தநாதன். தவிசு - பீடம். இரு நிலம் - தரை. 14

481. கைத்தலத்து இருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்து அவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைத்த அப் பரிசே செய்ய
"மெய்த்தவ வேடமே மெய்ப்
பொருள்" எனத் தொழுது வென்றார்.

தெளிவுரை: முத்தநாதன் தன் கையில் இருந்த சுவடிகள் அடங்கிய புத்தகத்தை அவிழ்ப்பது போன்று அதனுள் மறைத்து வைத்திருந்த குறுவாளை எடுத்துத் தான் முன்பு நினைத்த அத்தன்மையிலேயே செயல்புரிய, அதனைக் கண்ட நாயனார், "மெய்த்தன்மையுடைய தவவேடமே மெய்ப்பொருள்." என்று உரைத்து வென்றார்.

சிறப்புரை: முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சனையால் வெல்லக் கருதி வந்தமை திருப்பாட்டு 472, 473 ஆகியவற்றில் சாற்றியவாறு இவண் செயலாக்கினான் என்று காண்க. வந்தவன் பகைவன் என்று நாயனார் அறியாத முன்னே நின்றது சிவனடியார் திருக்கோலமும் அவர் கருத்துப்படி ஒழுகும் சீலமேயாம் எனக் காண்க. இத்தன்மையில் அடிவர்கள் துன்பம், பிறப்பு, இறப்பு, மயக்கம் என யாவும் நீங்கப் பெற்றவர்கள் என்னும் கருத்தை மாணிக்க வாசகர், பிடித்த பத்து திருப்பாட்டு, 10-இல்

"துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதீ"

என்று அருளியவாறும் காண்க. மற்றும் சிவனடியார்கள் கருத்தின் படி ஒழுகுதலே அடியவர் பெருமக்களின் மாண்பாதலும் இவண் சாற்றப்பட்டது. அத்தன்மையில் நாயனார் தம் கொள்கையில் வென்றார்

எனலாயிற்று. மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் திருவேடத்தைச் சிந்தை செய்த தன்மையின்படி, அத்தகைய மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என நாட்ட அதன்படி தன் இன்னுயிர் பெறுகின்ற பரிசே வெற்றியாயினமையும் எண்ணற்குரியது.

வஞ்சக் கவளிகை - வஞ்சனையாகக் குறுவாள் மறைத்து வைக்கப்பட்ட சுவடிக்கட்டு. பத்திரம் - உடைவாள். *15*

முத்தநாதனைக் கொல்ல தத்தன் வர நாயனார் தடுத்தல்

482. மறைத்து அவன் புகுந்த போதே
மனம் அங்கு வைத்த தத்தன்
இறைப் பொழுதின்கண் கூடி
வாளினால் எறியல் உற்றான்
நிறைத்த செங்குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் **"தத்தா**
நமர்" எனத் தடுத்து வீழ்ந்தார்.

தெளிவுரை: தன்னுடைய இயல்பான தோற்றத்தை மறைத்துப் பொய்வடிவம் புனைந்து முத்தநாதன் புகுந்த போதே, அவன்பால் ஐயுற்று மனம் வைத்த தத்தன் நொடிப்பொழுதில் உள்ளே சென்று பாய்ந்து வாளை உருவி எறிய முனைந்தான். அப்போது சிவந்த இரத்தம் பெருக கீழே சாயும் நாயனார் தன் நீண்ட கையால் தடுத்து, "தத்தா இவர் நம் இனமாகிய சிவனடியார்." என்றார்.

சிறப்புரை: முத்தநாதன் சிவனடியார் கோலம் தரித்தவனாயினும் அவன்பால் மென்னடையும், கருணை நோக்கும், மற்றும் சாந்தம் முதலான பாங்கும் இன்மையினை உணர்ந்தவனாய்த் தத்தன் ஐயுற்றமையும் இவண் உட்பொருள் நயம் வியங்க, "அவன் புகுந்த போதே மனம் வைத்த தத்தன்" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் நாயனாரும் வேடச் சிறப்பினை போற்றியமை கருதத்தக்கது. இதனை "நேயம் மலிந்தவர் வேடம்" என மெய்கண்ட சாத்திரம், சிவஞான போதம், சூத்திரம் 12-இல் அருளிச் செய்தமையும் ஓர்க.

தவிரவும், சிவனடியார் பெறும் திருநீற்றுக் கோலத்தை, வண்ணான் ஒருவன் உவர் மண் கொண்டுமேவஅது சிவ வேடத்தை நினைப்பித்தது என்று வணங்கிச் சேரமான் பெருமாள் நாயனார்,

"சேரர் பிரானும் அடிச்சேரன்
அடியேன் என்று திருநீற்றின்
வாரவேடம் நினைப்பித்தீர்
வருந்தாது ஏகும் என மொழிந்தார்."

-கழறிற்று அறிவார் நாயனார் புராணம்: பாடல் 19

என்று சாற்றிய வகையும் காண்க.

மறைத்து - தன் இயல்பான தோற்றத்தை மறைத்து. இறைப்பொழுது - நொடிப்பொழுது. வீழ்கின்றார் - நாயனாரைக் குறித்தது. தறைப்படும் - தரையில் விழுகின்ற: எதுகை நோக்கித் திரிந்தது. இத்தன்மையில் இயற்கை நாயனார் பாடல் 16-ல் குறித்தமையும் நோக்குக. நமர் -நம் இனத்தவரான சிவனடியார். 16

முத்த நாதனை இடையூறின்றி வெளியே கொண்டு செல்லுமாறு மெய்ப்பொருள் நாயனார் கூறுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

483. வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப்பட்ட
தாதனாம் தத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி
"யாது நான் செய்கேன்" என்ன
"எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டு போய்விடு நீ" என்றார்.

தெளிவுரை: உடலின்கண் பெருக்கெடுத்து ஓடும் இரத்தத்தால் பெரிதும் வேதனை எய்தி விழுந்த வேந்தரால், முத்தநாதன் வதைப்படாதவாறு தடுக்கப்பட்டதையறிந்த ஊழியனாகிய தத்தன் நாயனாரைத் தாங்கி தான் செய்ய வேண்டிய பணியை ஆணையிடுமாறு தெரிவித்தான். நாயனார் தத்தனை நோக்கி, "சிவனடியாராகிய இவரை வழியிடையே யாரும் தடுத்துத் தீங்கு செய்யாதவாறு கொண்டு போய் விடு." என்றார்.

வேந்தர் - மெய்ப்பொருள் நாயனார். தாதன் - ஊழியன்: பணி புரிபவன். எம்பிரான் அடியார் - சிவனடியார்.இடை விலக்கா வண்ணம் - இடையில் தடுத்துத் தீங்கு செய்யாதபடி. 17

484. அத்திறம் அறிந்தார் எல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
"பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்"
எனப்புடை சூழ்ந்த போது

தத்தனும் அவரை யெல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்றது
இறைவனது ஆணை என்றான்.

தெளிவுரை: மெய்ப்பொருள் நாயனார்க்கு உற்ற தன்மையை அறிந்த மக்கள் அனைவரும் தீங்கு செய்த பொய்த் தன்மையுடைய முத்தநாதனைக் கொல்வோம் என்று சூளுரைத்துச் சூழ்ந்த போது தத்தன் அவர்களைத் தடுத்து நிறுத்தி, மன்னன் ஆணையிட்டதைக் கூறி, வெளியே கொண்டு சென்றான்.

பொய்த்தவன் - பொய்த்தன்மையுடைய முத்தநாதன். புடை - பக்கம். இத்தவன் - இத்தன்மையான தவவேடம் புனைந்தவன். இறைவன் - வேந்தன்: மெய்ப்பொருள் நாயனாரைக் குறித்தது. 18

485. அவ்வழி அவர்கள் எல்லாம்
அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி
ஆளுறாக் கானம் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை
விட்டபின் மீண்டு வந்தான்.

தெளிவுரை: தத்தன் சென்ற வழியில் எதிர்நின்று சூழ்ந்தவர்களுக்கு வேந்தனது ஆணையைத் தெரிவித்துச் செவ்விய நிலையில் திருக்கோலூர் எல்லையைக் கடந்து சென்று, கையில் நீண்ட வாள் கொண்டு இடையில் தடையுண்டாகாதபடி கொடிய செயலைச் செய்த கொடியவனான முத்தநாதனை விட்ட பின்னர், மீண்டும் சென்றான்.

அவர்கள் - நகரமக்கள். அஞ்சிஅகல - வேந்தனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அகன்று செல்ல. திருநகர் - திருக்கோவலூர். ஆள் உறாக் கானம் - ஆள் நடமாட்டம் இல்லாத காட்டுப்பகுதி. வெவ்வினை - கொடுஞ்செயல். கொடியோன் - முத்தநாதன். 19

486. மற்றஅவன் கொண்டு போன
வஞ்சனை வேடத் தான் மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
தீதிலா நெறியில் விட்ட

சொற்றிறம் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான்.

தெளிவுரை: வேந்தரான மெய்ப்பொருள் நாயனாரின் குறிப்பின் வழி நின்ற தத்தன், அவன் கொண்டு சென்ற வஞ்சக வேடத்தினனான முத்தநாதன் மீது எதிர் நின்று தடுத்துப் போர் செய்ய வந்தவர்களை நீக்கித் தீங்கு உண்டாகாதபடி காத்த செய்தியைக் கூறக் கேட்கும் வரையில் தளர்கின்ற உயிர் பிரியாதவாறு தாங்கும் நாயனார் முன்பு சென்றான்.

அவன் - தத்தன். வஞ்சனை வேடத்தான் - முத்தநாதன். செற்றவர் - முத்தநாதனை எதிர்த்தவர். சொற்றிறம் - சிவனடியார் இடையூறின்றி வெளியேறிய செய்தி. கொற்றவன் - வேந்தன். கோமகன் - நாயனார். குறிப்பில் நின்றான் - தத்தன். 20

நாயனார் தத்தனைப் புகழ்ந்துரைத்தல்

487. சென்றடி வணங்கி நின்று
"செய்தவ வேடம் கொண்டு
வென்றவற்கு இடையூறு இன்றி
விட்டனன்" என்று கூற
"இன்றெனக்கு ஐயன் செய்தது
யார் செய்ய வல்லார்" என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெரும் கருணை கூர்ந்தார்.

தெளிவுரை: தத்தன் வேந்தன் முன்பு சென்று அடி வணங்கி நின்று, "தவவேடம் புரிந்து வந்த தேவரீர் மனத்தை வென்றவற்கு இடையூறின்றி விட்டனன்." என்று கூறினான். அதனைக் கேட்ட நாயனார் பெரிதும் மகிழ்ந்தவராய், "இன்று எனக்கு ஐயன் செய்த உதவியை வேறு யார் செய்யக் கூடியவர்." என்று போற்றியுரைத்து எதிர் நின்ற தன் மெய்க்காவலனைக் கருணை விளங்க நோக்கினார்.

வென்றவன் - முத்தநாதனைக் குறித்தது: இது அவன் தாங்கிய தவவேடத்தினைக் குறித்துச் சுட்டப்பெற்றது என்க. ஐயன் - தத்தன்: அன்பின் வயத்ததான வெளிப்பாடு. நின்றவன் - தத்தன். நிறைபெரும் கருணை - தவவேந்தராய் வந்த சிவனடியார் தீங்கு இல்லாது வெளியே சென்ற தன்மை குறித்த உணர்வு. 21

நாயனார் அம்பலக் கூத்தனை ஏத்துதல்

488. அரசியல் ஆயத் தார்க்கும்
அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம்
விளம்புவார் விதியினாலே
பரவிய **திருநீற் றன்பு**
பாதுகாத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும்
பூங்கழல் சிந்தை செய்வார்.

தெளிவுரை: நாயனார், தமக்குப் பின்னர் அரசாட்சியேற்று நடத்துதற்குரிய புதல்வர்களுக்கும், ஏனைய சுற்றத்தார்க்கும், தம்பால் பேரன்பு பூண்டு ஆழ்ந்த துயரில் வாடும் அன்பர்களுக்கும் தான் கடைப்பிடித்து வந்த கொள்கைகளை உரைப்பவராய், விதி முறையோடு போற்றப்படும் திருநீற்றின் மீது பற்றுக் கொண்டு சிவநெறியைக் கைக் கொள்வீர் என்னுமாறு தக்க அறிவுரைகளைச் சாற்றி, அம்பலத்துள் நின்றாடும் கூத்தப்பெருமான் திருப்பாத மலரைச் சிந்தை செய்தார்.

ஆயத்தார் - அரசாளும் உரிமையுள்ள புதல்வரும், ஏனைய உறவினர்களும். அழிவுறும் - துயருறும். காதலார் - அன்புடையார். விரவிய செய்கை - சிவநெறியில் மேவும் கொள்கை. உய்ப்பீர் - அரசு நடத்துவீர். புரவலர் - வேந்தரான மெய்ப்பொருள் நாயனார். மன்றுள் ஆடும் பூங்கழல் - அம்பலத்துள் திரு நடனம் புரியும் கூத்தர்பெருமான் திருத்தாள் மலர். 22

சிவபிரான் திருக்காட்சி நல்குதல்

489. **தொண்டனார்க்கு இமயப் பாவை**
துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவாறு எதிரே நின்று
காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட்கு எட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டு அவர் இடைய றாமல்
கும்பிடும் கொள்கை ஈந்தார்.

தெளிவுரை: அக்கணத்தில் திருத்தொண்டரான நாயனார்க்கு, அவர் சிந்தையில் எண்ணியவாறே பார்வதிதேவியாரின் துணைவரான

சிவபிரான் நடராசப் பெருமான் திருக்கோலத்தில் காட்சி நல்கித் தேவர்களுக்கு எட்டாத அருட்பாத நிழலில் சேருமாறு கொண்டு, அவர் இடையறாது கும்பிட்டு மகிழும் பேற்றினை அளித்தார்.

சிறப்புரை: முந்திய பாடலில் மன்றுள் ஆடும் பூங்கழலை நாயனார் தியானம் செய்ய, சிவபிரான் அதே போன்று காட்சி நல்கிய பேற்றினை " முன் தம்மைக் கண்டவாறே எதிர் நின்று காட்சி தந்தருளி" எனச் சாற்றியமை காண்க.

தொண்டனார் - மெய்ப்பொருள் நாயனார். இமயப் பாவை - பார்வதி தேவி. துணைவனார் - சிவபிரான். அண்டவானவர் - தேவர்கள். 23

மெய்ப்பொருள் நாயனாரின் பெருமை சாற்றியதைத் தொடர்ந்து விறன் மிண்டர் நாயனாரின் திருத் தொண்டைச் சொல்லுதல் - இது கவிக் கூற்று

490. இன்னுயிர் செகுக்கக் கண்டும்
எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி
நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக
இகல்விறன் மிண்டர் பொன்தாள்
சென்னிவைத்து அவர்முன் செய்த
திருத்தொண்டு செப்பலுற்றேன்.

தெளிவுரை: தனது இனிய உயிரைக் குறுவாள் கொண்டு போக்கியதைக் கண்டும் சிவனடியார் வேடம் தரித்தவர்என்னும் கொள்கையால் நல்ல நெறி காத்த சேதி நாட்டுத் தலைவரான மெய்ப்பொருள் நாயனார் பெருமையைச் சொல்லியதைத் தொடர்ந்து, நம்பியாரூரரோடு மாறுபாடு கொண்ட விறன் மிண்ட நாயனாரின் அழகிய தாள் மீது, என் சென்னியை வைத்து அவர் ஆற்றிய திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

இது கவிக் கூற்று.

சிறப்புரை: பகைமை பூண்டு உயிர்க்குத் துன்பம் விளைவிக்குமாறு ஆயினும் அவர் சிவனடியார் வேடம் தரித்திருந்தால் அவர் வழி நிற்றலே பெருமையுடையது என்னும் குறிக்கோள் இவண் சிறப்பிக்கப்பட்டது. இதே போன்று ஏனாதி நாதர் தன்னை எதிர்த்துப் போரிட சிவனடியார் திருக்கோலத்தில் நெற்றியில் திருநீறு அணிந்து

வந்த அதிசூரனால் இன்னுயிர் துறந்தவர் என்பதைத் திருப்பாட்டு 647-இல் நவின்றவாறும் காண்க.

செகுக்க - வாளால் குத்த. எம்பிரான் அன்பர் - சிவனடியார் வேடம் தரித்தவர். சேதி நாதனார் - சேதி நாட்டு வேந்தரான மெய்ப்பொருள் நாயனார். இகல் - மாறுபாடு: வலிமை: வன்மை. விறன் மிண்டர் - விறன் மிண்ட நாயனார். சென்னி - தலை. 24

மெய்ப்பொருள் நாயனார் புராணம் நிறைவுற்றது.

12. விறன் மிண்ட நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்

சேர நாட்டின் செங்குன்றூரில் வேளாண் குலத்தில் பிறந்தவர் விறன்மிண்ட நாயனார். முதற்கண் திருத்தொண்டர்களான சிவனடியாரைப் பணிந்து, பின்னர்ச் சிவபிரானைப் பணிவது அவர் வழக்கம். பல திருத்தலங்களைத் தரிசித்துத் திருவாரூரை அடைந்தார். ஒரு நாள் அங்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்துள் கூடியிருந்த அடியவர்களைத் தொழுது வணங்காது ஒதுங்கிச் சென்றதைத் கண்ட விறன்மிண்டர், "திருத் தொண்டர்களுக்கு வன் தொண்டனும் புறம்பு, அவனை ஆண்ட சிவனும் புறம்பு" என்றார்.

நாயனார் திருத் தொண்டர்கள்பால் கொண்டுள்ள சிறப்பினைக் கண்டு உலகு உய்யவும் தம் கருத்து முற்றுப் பெறவும் சுந்தரர் திருத்தொண்டத் தொகையைத் திருவாய் மலர்ந்தருளினார். இது நாயனார்க்குப் பெரு மகிழ்வைத் தந்தது. ஈசன், தம் கணங்களுக்குத் தலைவராய் இருக்கும் பெருவாழ்வினை நாயனார்க்கு அளித்தருளினார்.

சேர நாட்டுச் சிறப்புரைத்தல்
வேறு

491. விரைசெய் நறும்பூந் தொடைஇதழி
வேணியார் தம்கழல் பரவிப்
பரசுபெறு மாதவ முனிவன்
பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனும்
திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி
மல்கும் நாடு மலைநாடு.

தெளிவுரை: நறுமணம் விளங்கும் கொன்றைப் பூ மாலை சூடிய சடைமுடியுடைய சிவபிரான் திருப்பாதத்தைப் பரவிப் பெருந்தவம் செய்து பரசு என்னும் ஆயுதம் பெற்ற காரணத்தால் பரசுராமன் என்கிற பெயர் பெற்றதும், அலைகளையுடைய கடலின் வளமும், நிலங்களின் செழித்த வளமும் மலை வளத்தால் பெருகும் நலனும் கொண்டது மலை நாடு.

இதுவே சேர நாடு என்க.

மலைநாடு பற்றிய புராண வரலாறு வருமாறு : சமதக்கினி முனிவரின் மைந்தனான பரசுராமன் தன் தந்தையைக் கொன்ற கார்த்த வீரியனைக் கொன்று அவன் மரபினரையும் கரு வறுக்க விரதம் பூண்டான். சிவ பூசை செய்து பரசு என்கிற மழுவாயுதம் பெற்று இரத்தத்தால் அவன் பிதிர்த் தர்ப்பணம் செய்தனன். இதனால் அவனுக்குப் பழி சூழ்ந்தது. எனவே சிவபிரானை வழிபட்டு மறையவர்க்கு உதவும் வகையில் ஒரு நாடு வேண்ட வருண தேவன் அருளின் படித் தென்திசைக் கடலில் மழுவை வீசினான். மழுவிழுந்த இடமே மலை நாடு ஆயிற்று. இப் புராணக் கதைக் குறிப்பு இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது.

விரை - நறுமணம். தொடை - மாலை. இதழி - கொன்றைப் பூ. வேணியார் - சடைமுடியுடைய சிவபிரான். - திரை - கடலலை. வரை - மலை. மல்கும் நாடு - வள நாடு. 1

செங்குன்றூர்ச் சிறப்புரைத்தல்

492. வாரி சொரியும் கதிர்முத்தும்
வயல்மென் கரும்பில் படு முத்தும்
வேரல் விளையும் குளிர் முத்தும்
வேழ மருப்பின் ஒளிர் முத்தும்
மூரல் முறுவல் வெண்முத்த
நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட்டு ஊர்களின் முன்
சிறந்த மூதூர் செங்குன்றூர்.

தெளிவுரை: கடலில் தோன்றும் ஒளி திகழும் முத்துக்களையும், மூங்கிலிலிருந்து விளைகின்ற முத்துக்களையும், யானைத் தந்தங்களிலிருந்து விளைகின்ற முத்துக்களையும் இத்தன்மையான முத்துக்களே இங்குள்ள மகளிரின் வெண் பற்கள் என்று உவமை

காண்பவராய் நன்கு தெரிந்து முறையாகக் கோக்கின்ற சிறப்பின் மிக்க சேரர் திருநாட்டில் உள்ள ஊர்களில் சிறந்து விளங்கும் பழைமையான ஊர் செங்குன்றூர் ஆகும்.

சிறப்புரை: இவண் முத்து விளைகின்ற இடங்களான கடல், கரும்பு, யானைத் தந்தம் ஆகியன சாற்றப்பட்டன. மேலும் முத்து விளையும் இடங்களாகச் சந்திரன், மேகம், மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, செந்நெல், பன்றிக் கொம்பு, பசுவின் பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து எனவும் ஆம். கடலின் கண் சிப்பி, சங்கு ஆகியவற்றிலிருந்தும் முத்துத் தோன்றும்.

வாரி - கடல. கதிர் முத்து - ஒளி திகழும் முத்து. வேரல் - மூங்கில். வேழம் - யானை. மூரல் முறுவல் - முத்துப் போன்ற பற்கள் தெரிய நகைத்தல் குறிப்பு. நகையார் - முத்துப் போன்ற பற்களையுடைய மகளிர். 2

நகரமாந்தர் சிறப்புரைத்தல்

493. என்னும் பெயரின் விளங்கியுலகு
ஏறும் பெருமை உடையதுதான்
அன்னம் பயிலும் வயல் உழவின்
அமைந்த வளத்தால் ஆய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகும்
தூய குடிமைத் தலை நின்றார்
மன்னும் குலத்தின் மாமறை நூல்
மரபில் பெரியோர் வாழ்பதியாம்.

தெளிவுரை: செங்குன்றூர் என்னும் பெருடைய அவ்வூர் உலகம் ஏத்தும் பெருமையுடையதாய், அன்னப் பறவைகள் பயிலும் வயல்களில் உழவுத் தொழிலால் அமைந்த நெல் வளத்தால் மிக்க செல்வமும் உடைய வேளாளர்களும், வேத நெறியின்படி ஒழுகும் தூயநெறியும்கொண்டு மக்கள் இனிது வாழும் பேறுடையதாய்த் திகழும் வேதம் ஓதும் அந்தணர்களும் வாழ்வதற்குச் சிறந்த பதியாக அவ்வூர் விளங்கிற்று.

உழவின் அமைந்த வளம் - நெல்வளம். தலை நின்றார் - சிறந்தார். பெரியோர் - அந்தணர். 3

விறன் மிண்டரின் சிறப்புரைத்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

494. அப்பொன் பதியின் இடைவேளாண்
குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற்கு அரிய பெருஞ்சீர்த்திச்
சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார்
எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பால் பரிவுடையார்
எம்பி ரானார் விறன்மிண்டர்.

தெளிவுரை: அத்தகு அழகிய ஊரில் வேளாளர் குலத்திற்கு நன்கு பெருமை சேர்க்கும் வகையில் சொல்லற்கு அரிய பெரும் புகழையுடைய சிவபிரான் திருப்பாதத்தைப் பற்றிப் பிற பற்றினை முற்றிலும் நீத்தவராய், அன்பின் எல்லை எத்தன்மைத்து என்று அறியப்பட முடியாத மெய்த்தன்மையோடு பக்தி செய்யும் அடியவர்கள் பால் பேரன்பு கொண்டவராய், எம் தலைவராகிய விறன்மிண்ட நாயனார் திரு அவதாரம் செய்தார்.

பொன்பதி - அழகிய செங்குன்றூர். சீர்த்தி - புகழ். செய்ய கழல் - சிவனார் திருப்பாத மலர். எல்லை தெரிய - இத்தன்மை என்று வரையறுக்க இயலாத. மெய்ப்பத்தர்கள் - சிவனடியார்கள். பரிவு - அன்பு. எம்பிரான் - நாயனாரைக் குறித்த கவிக்கூற்று. 4

495. நதியும் மதியும் புனைந்த சடை
நம்பர் விரும்பி நலம்சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப்
படரும் காதல் வழிச் செல்வார்
முதிரும் அன்பின் பெருந்தொண்டர்
முறைமை நீடு திருக்கூட்டத்து
எதிர்முன் பரவும் அருள்பெற்றே
இறைவர் பாதம் தொழப்பெற்றார்.

தெளிவுரை: கங்கையையும் சந்திரனையும் சடைமுடியில் தரித்து விளங்கி மன்னுயிர்க்கு நம்பிக்கைப் பொருளாய் மேவி, பூசை செய்வோர் நலம் சிறக்க விரும்பி வீற்றிருந்தருளும் திருத்தலங்கள் எல்லாவற்றுக்கும் சென்று கும்பிட்டுப் பேரன்புடன் விறன்மிண்டர் திகழ்ந்தார். அவர் பேரன்புடன் தலங்களில் சென்று வழிபடும் போது முதற்கண் திருத்தொண்டர்களைப் பணிந்து வணங்கி அருள் பெற்றபின்னரே கோயிலுட் சென்று இறைவனைத் தொழும் நியமத்தில் விளங்கினார்.

சிறப்புரை: முத்தேவியர்களும், திருமால் பிரமன் இந்திரன் முதலானவர்களும், அகத்தியர் முதலான முனிவர்களும் மற்றும் முதலான பெருஞ் சீலமுடையவர்களும் சிவபிரானை இலிங்க மூர்த்தமாகப் பிரதிட்டை செய்யவும், சிவானுக்கிரகத்தால் சுயமாக விளங்கவும் மேவ, இறைவன் விரும்பிப் பூசைகளை ஏற்று வேண்டிய வரப் பிரசாதங்களை அருளிய புனித இடமே திருக்கோயில்களாகும் அத்தகைய கோயில்களை கொண்டு விளங்கும் ஊர்கள் இவண் "நலம் சிறந்த பதிகள்" என்று சாற்றப்பட்டது. இதன் வழித் திருத்தல வழிபாட்டின் சிறப்பு உணர்த்தப்பட்டது. இத்தகைய நெறிப்படியே திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தொழும் திருப்பதிகம் அருளிச் செய்தார்கள் என்க.

நதி - கங்கை. மதி - பிறைச் சந்திரன். நம்பர் - சிவபிரான். நலம் சார்ந்த பதிகள் - திருத்தலங்கள். படரும் காதல் - பக்தி. பெருந் தொண்டர் - நாயனார். திருக்கூட்டம் - சிவனடியார்கள். 5

விறன் மிண்டர் திருவாரூரை அடைதல்

496. பொன்தாழ் அருவி மலைநாடு
கடந்து கடல்சூழ் புவி எங்கும்
சென்றுஆ ளுடையார் அடியவர்தம்
திண்மை ஒழுக்க நடை செலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப்
புரங்கள் செற்று வைதிகத்தேர்
நின்றார் இருந்த திருவாரூர்
பணிந்தார் நிகரொன்று இல்லாதார்.

தெளிவுரை: நிகரற்ற அடியவரான விறன்மிண்டர் அழகு திகழும் அருவிகளையுடைய மலை நாட்டைக் கடந்து கடல் சூழ்ந்த மண்ணுலகில் விளங்கும் எல்லாத் தலங்களிலும் உள்ள சிவபெருமான் அடியவர்தம் உறுதியான வழிபாட்டு நெறியை நிலைக்குமாறு செய்து வணங்கி, வலிமையுடைய மேருமலையை வில்லாக்கி வளைத்து வேதங்களைத் தேராக்கி அதில் ஏறி நின்று முப்புரங்களை எரித்து அழித்த சிவபிரான் எழுந்தருளியுள்ள திருவாரூர் சென்று பணிந்தார்.

பொன் - அழகு; சிறப்பு. புவி - திருத்தலம். ஆளுடையார் - சிவபிரான். திண்மை - உறுதி. வன்தாள் - வலிமை. வைதிகத் தேர் - வேதங்களைத் தேராகக் கொண்டமை சாற்றியது. 6

சிவனடியார்களை வணங்காது
சென்ற சுந்தரரைப் புறகு எனல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

497. திருவார் பெருமை திகழ்கின்ற
தேவா சிரிய னிடைப்பொலிந்து
மருவா தின்ற சிவனடியார்
தம்மைத் தொழுது வந்தணையாது
ஒருவாறு ஒதுங்கும் வன்தொண்டன்
புறகென்று உரைப்பச் சிவனருளால்
பெருகா நின்ற பெரும் பேறு
பெற்றார் மற்றும் பெற நின்றார்.

தெளிவுரை: திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் பலர் மருவி நிற்கச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருக்கோயிலுட் செல்லும் போது, ஆங்கு இருந்த அடியவர்களைத் தொழுது வணங்குதற்குச் சாராது, ஒரு வகையில் ஒதுங்கிச் செல்லலானார். அதனைக் கண்ட சிவபிரான் திருவருளில் பெருகி நின்றவரும், மேலும் அருளைக் பெற நின்றவருமான விறன்மிண்டர் "வன் தொண்டர் புறகு" என்ற உரைக்கலானார்.

தேவாசிரியன் - திருவாரூர்க் கோயிலில் உள்ள மண்டபம். மருவா நின்ற - சார்ந்து இருந்த. வன் தொண்டன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். புறகு - ஒதுக்கி வைக்க. 7

498. சேணார் மேருச் சிலை வளைத்த
சிவனார் அடியார் திருக்கூட்டம்
பேணாது ஏகும் ஊரனுக்கும்
பிரானாம் தன்மைப் பிறைசூடிப்
பூண் ஆர் அரவம் புனைந்தார்க்கும்
புறகென்று உரைக்க மற்றுஅவர்பால்
கோணா அருளைப் பெற்றார்மற்று
இனியார் பெருமை கூறுவார்.

தெளிவுரை: "ஆகாயத்தை அளாவிய மேரு மலையை வில்லாக வளைத்த சிவபிரானுடைய அடியவர் திருக் கூட்டத்தைப் போற்றிப் பணியாது செல்லும் நம்பியாரூரர்க்கும் புறகு; பெருமானாகிய பிறைச் சந்திரனைச் சூடி நாகத்தினை அணிகலனாகப் புனைந்தவர்க்கும் புறகு." என்று உரைத்தார். இவ்வாறு உரைத்த நாயனார் அத்தகைய

வன் தொண்டரின் அன்பையும், சிவபிரான் திருவருளையும் பெற்றவராய் விளங்கினார் என்றால் அவர் பெருமையை இனியும் கூறுபவர் யாவர்?

சிறப்புரை: ஈசனாலும் வன் தொண்டராலும் போற்றப்படும் விறன்மிண்ட நாயனாரின் சிறப்பினை வேறு யாரால் சாற்ற இயலும் என்னும் கருத்து இத்திருப்பாட்டின் ஈற்றடி வாயிலாகப் புகலப்பட்டது. இத்தன்மையில் நம்பியாண்டார் நம்பி திருந்தொண்டர் திருவந்தாதியில்,

"பேரும் பெருமைஅவ் ஆரூ
ரனையும் பிரானவனாம்
ஈசன் தனையும் புறகுதட்டு
என்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக்
கே புக நீடு தென்றல்
வீசும் பொழில் திருச் செங்குன்றம்
மேய விறன் மிண்டனே."

என்று அருளிச் செய்தமையும் காண்க.

சேணார் - ஆகாயத்தில் அளாவிய. சிலை - வில். பேணாது - போற்றி வணங்காது. ஊரன் - சுந்தர மூர்த்தி சுவாமிகள். பிரான் - தலைவன்; சிவபிரான். பூண்ட - ஆபரணம். அரவம் - நாகம். புறகு - ஒதுக்கித் தள்ளு. அவர் - ஈசனாரும் வன் தொண்டரும் என்க. கோணா அருள் - மாறாத அன்பு. 8

சுந்தரர் திருத் தொண்டத் தொகை அருளிச் செய்தல்

499. ஞாலம் உய்ய நாம்உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்ய திருத்தொண்டத்
தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வரியார்
"அடியா ருடனாம் உள" தென்றால்
ஆலம் அமுது செய்தபிரான்
அடியார் பெருமை அறிந்தார் யார்.

தெளிவுரை: இவ்வுலகம் நன்னிலையடையவும், நாம் உய்யவும், சைவ நன்னெறியின் சிறப்பு விளங்கவும் நம்பியாரூரர் திருத்

தொண்டத் தொகை அருளிச் செய்யலானார். ஆங்கு வேதங்கள் ஓலமிட, உணர்வுக்கு எட்டாத சிவபிரான், "அடியார்களோடு நாம் இருப்பது" என்றார் எனில், கருணை பொழியும் முத்தான நஞ்சினை அமுது செய்த அப்பெருமானின் அடியவர்களுடைய பெருமையை அறிந்தவர்தாம் யாருளர்? இது கவிக்கூற்று.

சிறப்புரை: இவண் திருத்தொண்டத் தொகை அருளப் பெறுவதற்கு விறன் மிண்ட நாயனார் காரணமாக இருந்த பெருமை சாற்றப்படுதலாயிற்று. திருத்தொண்டத் தொகையானது உலகத்தை நன்னிலைப் படுத்தவும், சைவம் இனிது விளங்கவும், நாம் உய்யவும் செய்ய வல்லது என்பதாம்.

ஞாலம் - உலகம். நாம் - சிவனடியார்கள் என்க. உணர்வரியார் - சிவபிரான். 9

நாயனார் கணநாதராதல்

500. ஒக்க நெடுநாள் இவ்வுலகின்
உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித்
தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான்
அருளி னாலே தாள் நிழல்கீழ்
மிக்க கணநா யகர் ஆகும்
தன்மை பெற்று விளங்கினார்.

தெளிவுரை: இத்தன்மையில் நாயனார், இவ்வுலகில் நெடுங்காலம் உயர்ந்ததாகிய சைவப் பெருமை விளங்குமாறு அந்நெறியில் இனிது ஒழுகிச் சிவபிரான் திருவருள் வயத்தால் அவர் திருவடியின் நீழலில் கணநாயகராக விளங்கும் பேறு பெற்றார்.

கண நாயகர் - சிவ கணத் தலைவர். 10

விறன் மிண்ட நாயனாரை வாழ்த்தி அமர் நீதி நாயனாரின் திருத் தொண்டைச் சாற்றத் தொடங்குதல் - இது கவிக்கூற்று

501. வேறு பிறிதென் திருத் தொண்டத்
தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம்
பிரானார் விறன்மின் டரின்பெருமை

கூறும் அளவென் அளவிற்றே
அவர் தாள் சென்னி மேல் கொண்டே
ஆறை வணிகர் அமர்நீதி
அன்பர்திருத் தொண்டு அறைகுவாம்.

தெளிவுரை: விறன்மிண்டரின் பெருமையைப் பற்றி வேறு ஒன்று கூற யாது உள்ளது? திருத் தொண்டத் தொகை அருளப் பெற்று அதனால் உலகம் நன்மை யடைவதற்குக் காரணமாக விளங்கிய நாயனாரைப் பற்றிச் சாற்றுதற்கு என் சொல்லளவில் அடங்குமோ! அந்நாயனாரின் திருப்பாதத்தை என் தலையில் ஏற்றுப் போற்றிப் பழையாறை வணிகர் குல நாயகராம் அமர்நீதி நாயனாரின் திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குவாம்.

இது கவிக் கூற்று.

வேறு பிறிது - வேறு பெருமையுடைய ஒன்று. பிரானார் - தலைவனார்; என் அளவிற்றே - என்னால் சொல்லத்தக்க ஆற்றல் உள்ளதோ என்று தன்னடக்கமாகக் கூறும் மரபு வழிப் பண்பு என்க. அவர்தாள் - விறன்மிண்டர் திருப்பாதம். ஆறை - பழையாறை. அறைகுவாம் - சொல்வாம். 11

விறன்மிண்டர் நாயனார் புராணம் நிறைவுற்றது

13. அமர் நீதி நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்:

சோழநாட்டில் பழையாறை என்னும் நகரில் வணிகர் குலத்தில் அமர்நீதி நாயனார் வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த செல்வம் உடையவர். அவர், அடியவர்க்குத் திருவமுது செய்வித்தல், அவர்கள் கருத்தறிந்து கோவண ஆடை அளித்தல் முதலிய திருத் தொண்டுகள் ஆற்றி வந்தார். அவர் திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் திருமடம் அமைத்துத் திருத் தொண்டுகள் புரிந்து வந்தார்.

ஒரு நாள் சிவபிரான் நாயனாருக்குத் திருவருட் பேறு அளித்தற் பொருட்டு ஒரு வேதியப் பிரமசாரி வடிவம் தாங்கி இரண்டு கோவணமும் திருநீற்றுப் பையும் தருப்பைப் புல்லும் கட்டப்பெற்ற தண்டு ஏந்தித் திருமடத்தை யடைந்தார். நாயனார்

வேதியரை முறைப்படி வரவேற்று வழிபட்டார். வேதியர் தான் காவேரியில் நீராடி வருவதாகவும் ஒரு வேளை மழை வந்தால் வரும். எனவே இக்கோவணத்தைப் பாதுகாப்புடன் வைத்திருந்து தருமாறும் தெரிவித்துத் தண்டிலிருந்து ஒரு கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்தார். இக்கோவணம் மிகவும் பெருமையுடையது. எனவே அதனை இகழாது வைத்திருந்து தரவேண்டும் என்று உரைத்தார். நாயனார் அக்கோவணத்தைப் பெற்று உள்ளே சென்று ஒரு தனி இடத்தில் பாதுகாப்பாக வைத்தார்.

சிவபிரான் திருவருளால் அக்கோவணம் மறைந்தது. வேதியர் நீராடி மழையில் நனைந்து வந்தார். ஈரக் கோவணத்தை மாற்ற வேண்டுமென்று வேதியர் கூறித் தான் முன்னர் அவரிடம் பாதுகாக்குமாறு கொடுத்த கோவணத்தை எடுத்து வருமாறு பணித்தார். நாயனார் மனைக்குள் சென்று பார்க்க ஆங்கு வைத்த இடத்தில் அக்கோவணம் இல்லாததால் பெரிதும் கலங்கி எல்லா இடங்களிலும் தேடியும் காணப்பெறாது வேறு ஒரு புதிய கோவண ஆடையைக் கொண்டு வந்தார்.

வேதியர் அதனை ஏற்காது தான் கொடுத்த கோவண ஆடையே வேண்டும் என்று கூற, அது காணாமையால் வேறு பட்டாடை தருவதாகத் தெரிவித்தார். வேதியர் அதற்கு இணங்காதவராய்த் தான் கொடுத்த கோவண ஆடைக்கு இணையாகத் தண்டில் கட்டப்பட்டுள்ள கோவணத்திற்கு இணையாகக் கோவணம் கொடுத்தால் போதும் என்றார். வேதியர் கோவணத்துக்கு இணையாக யாதொரு பொருளும் ஈடாகாத நிலையில் நாயனார் திருவைந்தெழுத்தோதித் தம் மனைவியுடனும் மைந்தருடனும் தராசுத் தட்டில் அமர்ந்தார்.

இரண்டு தட்டுகளும் சரிசமமாக விளங்கின. மண்ணுலகத்தவர் வாழ்த்தத் தேவர்கள் மலர் மாரி பொழிந்தார்கள். வேதியராக வந்த சிவபிரான் மறைந்து இடப வாகனத்திலிருந்து உமாதேவியோடு காட்சி தந்து, தம்மை எக்காலத்திலும் தொழுது போற்றும் வான்பதம் அளித்தருளினார். நாயனாரும், அவர் மனைவியாரும், மைந்தரும் அமர்ந்த தராசுத் தட்டே விமானமாகி மேலே செல்லச் சிவலோகம் சேர்ந்தனர்.

பழையாறையின் சிறப்புரைத்தல்

கலித்துறை

502. சீரில் நீடிய செம்பியர் பொன்னிநல் நாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை

தெளிவுரை: சிறப்பின் மிக்க சோழ நாட்டின் கண் காவிரி பாயும் வளம் பெருகவும், மேகம் போன்று அமைந்த கரிய வண்டுகள் களித்து வாழும் மலர்ப் பொழில்களும், மணிகள் பதித்த தேரோடு அகன்ற வீதிகளும் விளங்க உலகில் நிலைத்த பெருமை கொண்டு திகழ்வது பழையாறை என்னும்நகரம்.

செம்பியர் - சோழர். பொன்னி - காவிரியாறு. கார் - மேகம்; வண்டுக்கு உவமை. களியளி - தேனுண்டு மகிழும் வண்டு. அளி - வண்டு. பார் - உலகம். பழையாறை - காவிரித் தென் கரைத்தலம்; அப்பர் பாடல் பெற்றது. 1

அமர் நீதியார் திருத்தொண்டினை உரைத்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

503. மன்னும் அப்பதி வணிகர்தம் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்தி லத்தினும் உள்ளன வருவளத்து இயல்பால்
அந்நி லைக்கண்மிக் கவர்அமர் நீதியார் என்பார்.

தெளிவுரை : நன்கு திகழும் அந்நகரில், வணிகர் குலத்தில் வந்தவராய்ப் பொன், முத்து முதலான நவரத்தின மணிகள், பட்டாடைகள் முதலான யாவும் எந்த நாட்டிலிருந்தாலும் அவற்றைத் தருவித்து வாணிபம் செய்பவராய்ச் செல்வச் செழிப்பினை இயல்பாகக் கொண்டு அமர்நீதியார் என்பவர் வாழ்ந்து வந்தார்.

மன்னும் - சிறக்கும். பூந்துகில் - பட்டு, பீதாம்பரம் முதலியன. 2

504. சிந்தை செய்வது சிவன்கழல்
அல்லதொன்று இல்லார்
அந்தி வண்ணணர்தம் அடியவர்க்கு
அமுதுசெய் வித்துக்

கந்தை கீளுடை கோவணம்
கருத்தறிந்து உதவி
வந்தசெல் வத்தின் வளத்தினால்
வரும்பயன் கொள்வார்.

தெளிவுரை: அமர்நீதி நாயனார் சிவபிரான் திருப்பாதத்தையன்றி வேறு ஒன்றையும் சிந்தனை செய்யாதவராய், அப்பரமனாகிய செம்மேனியானுடைய அடியவர்களுக்கு அமுது செய்வித்தும், கந்தை, கீளுடை, கோவண ஆடை முதலியவற்றைக் கருத்தறிந்து உதவியும் தான் பெற்றசெல்வத்தின் வளமையால் வரும் பயன் எனக் கொண்டு விளங்கினார்.

சிறப்புரை: இவண் நாயனார் செல்வத்தின் பயனே ஈதல் என்னும் கொள்கையில் மேவிச் சிவ புண்ணியத்தைப் புரிந்த செயல் ஈற்றடியின் வாயிலாகச் சாற்றப்பட்டது.

அந்திவானம் போன்று சிவந்த வண்ணமுடைய சிவபிரான் திருமேனி எழில் இவண் அந்தி வண்ணர் எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை, திருவையாற்றுப் திருப்பதிகத்தில்,

"சிந்தை வண்ணத்த ராய்த்திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த்தழல் போல்வதோர்
அந்தி வண்ணமும் ஆவர்ஜ யாறரே!"

என்று அருளிச் செய்தமையும் காண்க.

அந்திவண்ணர் - அந்திப் பொழுதில் காணப்பெறும் செவ்வானம் போன்ற திருமேனி வண்ணம் உடையவர். கந்தை, கீளுடை, கோவணம் - ஆடைவகை. வரும் பயன் - பதி புண்ணியம் என்க. 3

நாயனார் திருநல்லூரில் திருமடம் அமைத்தல்

505. முக்கண் நக்கராம் முதல்வனார்
அவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா
விருப்புடன் வணங்கித்

தக்க அன்பர்கள் அமுதுசெய்
திருமடம் சமைத்தார்
தொக்க சுற்றமும் தாமும்வந்து
அணைந்தனர் தூயோர்.

தெளிவுரை: முக்கண்ணுடையவராய், நிருவாணியாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருநல்லூர் என்னும் திருத்தலத்தில், சிறப்பு மிக்க திருவிழாக்களைச் செய்தும், இறைவனைப் பேரன்பு கொண்டு வணங்கி, அடியவர்கள் அமுது செய்வதற்கு ஏற்ற திருமடத்தை அமைத்தும், அமர்நீதியார் தம் சுற்றத்தார் சூழ அங்கிருந்து திருத் தொண்டுகளை ஆற்றி வந்தார்.

சிறப்புரை: இவண் நக்கராகிச் சிவபிரான் திருவிளையாடல் புரிந்த செயல் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருநாவுக்கரசர் ஐந்தாம் திருமுறை, திருத்தோணிபுரத் திருப்பதிகத்தில்,

"நக்கம் வந்து பலியிடுஎன் றார்க்கு இட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர் வயல் தோணி புரவர்க்குத்
தக்கது அன்று தமது பெருமைக்கே."

என்று அருளியவாறும் காண்க.

நக்கர் - நிருவாணர்; தாருக வனத்து முனி பத்தினியரிடையயே திருவிளையாடல் நிகழ்த்திய திருக்கோலத்தைக் குறித்தது. திரு நல்லூர் - காவிரித் தென்கரைத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. திருநாவுக்கரசர்க்குச் சிவபிரான் திருப்பாத மலர் சூட்டிய தலம். தூயோர் - நாயனார். 4

நாயனார் திருத் தொண்டு செய்து வரும் காலத்தில் ஒரு நாள் சிவபிரான் வேதியர் வடிவம் தாங்கி வருதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

506. மருவும் அன்பொடு வணங்கினர்
மணிகண்டர் நல்லூர்த்
திருவிழா அணி சேவித்துத்
திருமடத்து அடியார்

பெருகும் இன்பமொடு அமுதுசெய்
திடஅருள் பேணி
அருகு சிந்தையின் மகிழ்ந்துறை
நாளிடை ஒருநாள்;

தெளிவுரை: அமர்நீதியார் நல்லூர்த் திருத்தலத்தில் சிவபிரானுக்குத் திருவிழாக்களை அழகுற நடத்தித் தரிசனம் செய்தும், திருமடத்தில் அடியவர்களுக்குப் பெருமகிழ்வுடன் அமுது செய்வித்தும், ஈசனைப் பக்தி விளங்கக் கசிந்துருகிப் போற்றியும் மகிழ்வுடன் வாழ்ந்து வரலானார்.

மணிக்கண்டர் - நீலகண்டத்தையுடைய சிவபிரான். உருகு சிந்தை - பக்தி ஒரு நாள் - இது அடுத்த பாடலோடு சார்பு பெறும். 5

507. பிறைத் தளிர்ச் சடைப் பெருந்தகைப்
பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்துஇறை கோவணப்
பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு
நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா
ரியின் வடிவு ஆகி;

தெளிவுரை: இவ்வாறு அமர்நீதி நாயனார் திருத் தொண்டாற்றி வரும் நாளில் ஒரு நாள், பிறைச்சந்திரனை மென்மையான சடைமுடியில் தரித்து விளங்கும் பெருந்தகைமையுடைய பெருமை திகழும் திருநல்லூரில் எழுந்தருளியுள்ள நஞ்சணி கண்டத்துக் கடவுள், கோவண ஆடை வழங்கிப் புண்ணியத் தொண்டின் மேவும் அடியார் பெருமையை யாவர்க்கும் தெரியுமாறு காட்டும் வகையில் அன்னார்க்குப் பேரருள் செய்யும் முகத்தான் வேதியர் குலத்துப் பிரமசாரியாய்த் திருவடிவம் கொண்டார்.

பிறை - பிறைச் சந்திரன். தளிர் - மென்மையான. பெருந்தகை - அருள் தன்மையுடைய. கறைக்களத்து இறை - நஞ்சினைக் கண்டத்தில் உடைய கடவுள். அன்புடைத் தொண்டர் - அமர்நீதி நாயனார். மறைக்குலம் - வேதியர் குலம். 6

508. செய்ய புன்சடை கரந்ததோர்
திருமுடிச் சிகையும்
சைவ வெண்திரு நீற்றுமுண்
டகத்து ஒளித் தழைப்பும்

மெய்யின் வெண்புரி நூலுடன்
விளங்குமான் தோலும்
கையில் மன்னிய பவித்திர
மரகதக் கதிரும்;

தெளிவுரை: சிவந்த சடைமுடியை மறைத்த திருமுடிச் சிகையும், சைவ நிலை காட்டும் நெற்றியில் திருவெண்ணீரும் தரித்து, மேனியில் முப்புரி நூலுடன் மான்தோல் துண்டு விளங்கக் கைவிரலில் மரகதச் சுடரொளி காட்டும் மோதிரமும் கொண்டவராய்;

கதிரும் என்பது அடுத்த பாடலுடன் தொடர்பு கொண்டு முடியும்;

செய்ய - சிவந்த வெண் புரிநூல் - முப்புரி நூல். பவித்திரம் மோதிரம். மரகதம் - பச்சை வண்ணம் காட்டும் குறிப்பு. 7

509. முஞ்சி நாண் உற முடிந்தது
சாத்திய அரையில்
தஞ்ச மாமறைக் கோவண
ஆடையின் அசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறும்
மனத்தடி யார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடிமலர்
நீள்நிலம் பொலிய;

தெளிவுரை: முஞ்சிப் புல்லைத் திரித்து அரைஞாண் கயிறாக்கிக் கட்டி, வேதமாகிய கோவண ஆடை அசையவும், வஞ்சகமாகிய கொடிய களங்கம் இல்லாத உத்தம குணம் உடைய அடியவர்கள் மனத்தில் நீங்காத திருத்தாள் மலர், நீண்ட நிலத்தில் பொலிய;

பொலிய என்பது அடுத்த படலில் தொடர்பு பெறும்.

சிறப்புரை: சிவபிரான் வேதத்தைக் கோவணமாகத் தரித்துள்ள செயல் இவண் ஓதப்பெற்றது. இத்தன்மையில் மாணிக்க வாசகர்,

"மன்னுகலை துன்னு பொருள்
மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன்காண் சாழலோ."

திருச்சாழல், திருப்பாட்டு, 2

என்று அருளிய வாறும் காண்க.

முஞ்சி - தருப்பை வகைப் புல். நாண் - அரை நாண் கயிறு. மாமறை - வேதம். கறுப்பு - களங்கம். அடிமலர் - திருப்பாதம் நிலம் - தரை. பொலிய - சிறக்க. 8

510. கண்ட வர்க்குறு காதலின்
மனம் கரைந்து உருகத்
தொண்டர் அன்பெனும் தூநெறி
வெளிப்படுப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவணம்
நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்து **அமர் நீதியார்**
திருமடம் குறுக;

தெளிவுரை: தம்மைக் கண்டோர் பேரன்பு கொண்டு மனம் கரைந்து உருகவும், அமர்நீதியாகிய தொண்டர் அன்பெனும் தூய நெறியை வெளிப்படுத்தும் நேயம் கொள்ளவும், தண்டின் மீது இரு கோவண ஆடையும் திருநீற்றுப் பையும், தருப்பையும் கொண்டு ஈசனார், நாயனார் அமைத்த திருமடத்தை அடைந்தார்.

சிறப்புரை: நாயனாரின் புனித வரலாறு தண்டில் முடிக்கப் பட்டுள்ள இரு கோவணத்தைக் காரணமாக கொண்டு அமைதலையொட்டிச் சாற்றப்பெறும் "இரு கோவணம்" எனப் படுதலைக் காண்க. இரு என்பது பெரிய என்னும் பொருள் கொண்டு நோக்கின் அதுவே, நாயனாரைச் சிவலோகத்திற்கு இட்டுச் செல்ல காரணமாயிற்று எனலாம். இரண்டு என்னும் எண் குறித்ததாகக் கூறி அதே வகையில் பெரிய பொருளாக எண்ணுமாறு சாற்றும் அருங் கருத்தையும் நோக்குக.

காதல் - அன்பு; பத்தி. தொண்டர் - அமர்நீதி நாயனார். இரு - பெரிய; இரண்டு. குறுக என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 9

வேதியரைக் கண்ட நாயனார் எதிர் வணங்கி அன்புடன் வரவேற்றல்

511. வடிவு காண்டலும் மனத்தினும்
மிகமுகம் மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கி "இம்
மடத்தினில் காணும்

படியி லாதநீர் அணையமுன்
பயில்தவம் என்னோ
அடிய னேன்செய் தது" என்றனர்
அமர்நீதி அன்பர்.

தெளிவுரை: வேதியரின் இனிய தோற்றத்தைக் கண்டவுடன் அமர்நீதி நாயனார் மனத்தில் மகிழ்வு கொள்ள, அது முகத்தின் வாயிலாக வெளிப்பட, அவரை எதிர் கொண்டு வணங்கி, "இதுவரை திருமடத்தில் காணும்படி இல்லாத நீவிர் இன்று வெளிப்படக் காணுமாறு வந்தது அடியேன் முன் செய்த தவத்ததோ!" என்றார்.

கடிது - விரைந்து. அணைய - வந்து அடைய. 10

வேதியரை அமுது கொள்ளுமாறு நாயனார் வேண்டுதல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

512. பேணும் அன்பரை நோக்கி "நீர்
பெருகிய அடியார்க்கு
ஊணும் மேன்மையில் ஊட்டிநல்
கந்தைகீள் உடைகள்
யாணர் வெண்கிழிக் கோவணம்
ஈவது கேட்டுக்
காண வந்தனம் என்றனன்
கண்ணுதல் கரந்தோன்.

தெளிவுரை: நெற்றிக் கண்ணை மறைத்து வேதியராக வந்த சிவபிரான், தன்னை அன்புடன் எதிர்கொண்டு வரவேற்கும் அமர்நீதி நாயனாரை நோக்கி, "நீர் அடியவர்களுக்கு உணவும் சிறப்பாக அளித்து நல்ல கந்தை, கீளுடைகள், வளமையுடைய புதிய வெண்மையுடைய கோவணத்தையும் கொடுப்பதைக் கேள்வியுற்று உம்மைக் காண வந்தோம்." என்றார்.

பேணும் - அன்புடன் வழிபடும். ஊண் - உணவு. ஊட்டி இனிது அமுது செய்வித்து, யாணர் - வளமை; புதியது. ஈவது - கொடுப்பது. கண்ணுதல் கரந்தோன் - நெற்றிக் கண்ணை மறைத்து வேதியராக வந்த சிவபிரான். 11

513. என்று தம்பிரான் அருள்செய
"இத்திரு மடத்தே
நன்று நான்மறைப் பெருந்தவர்
அமுது செய் தருளத்
துன்று வேதியர் தூய்மையின்
அமைப்பதும் உளதால்
இன்று நீரும் இங்கு அமுது செய்து
அருளும்என்று இறைஞ்ச;

தெளிவுரை: இவ்வாறு சிவபிரான் உரைத்தருள இத்திருமடத்தில் நான்கு வேதங்களில் வல்லவர்களான அந்தணர்கள், இனிது அமுது செய்யும் பொருட்டு நிறைந்த வேதியர்கள் ஆசார சீலத்துடன் சமைப்பதும் உண்டு. ஆதலால் இன்று தேவரீரும் அமுது செய்ய வேண்டும்." என்று விண்ணப்பித்தார்.

இவண் வேதியர்கள் கொள்ளும் உணவு வகை தனித் தன்மைத்து எனவும், அதன் காரணமாக ஆசார நியமங்களுடன் அந்தணர் பெருமக்களால் சமைக்கப்பட்டது எனவும் சாற்றப்பட்டது.

தம்பிரான் - சிவபிரான். நன்று - இனிய என்னும் பொருளது. துன்று வேதியர் - நிறைந்த வேதியர். தூய்மையின் - ஆசார சீலப்படி. இறைஞ்சுதல் - பணிந்து வேண்டுதல்; விண்ணப்பித்தல். இறைஞ்ச என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 12

வேதியர் தண்டில் கட்டிய ஒரு கோவணத்தை அவிழ்த்து நாயனாரிடம் தந்து பாதுகாக்குமாறு கூறுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

514. வணங்கும் அன்பரை நோக்கிஅம்
மறையவர் இசைந்தே
"அணங்கு நீர்ப்பொன்னி ஆடிநான்
வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீர்
தாரும்" என்று ஒரு வெண்
குணங்கொள் கோவணம் தண்டினில்
அவிழ்த்துஅது கொடுப்பார்.

தெளிவுரை: வணங்கி நின்ற நாயனாரை நோக்கிய வேதியர் அமுது செய்ய இசைந்தவராய் தெய்வத் தன்மையுடைய காவிரியாற்றில் நான் நீராடி வருகிறேன். மழை வந்தாலும் வரும். ஆகையால் உலர்த்திய

இக் கோவணத்தைப் பாதுகாவலாக வைத்திருந்து தாரும்." என்று கூறித் தன் தண்டினிலிருந்த இரண்டு கோவண ஆடைகளுள் ஒன்றை அவிழ்த்துக் கொடுத்தார்.

அணங்கு நீர் - தெய்வத் தன்மையுடைய நீர்; நதிகளைப் பொதுவாக பெண்ணாகப் பாவித்தலைக் கொண்டு சாற்றியது. பொன்னி - காவிரியாறு. ஆடி - நீராடி. உணங்கு - உலர்ந்த. வெண்குணம் - தூய்மையைச் சாற்றி உரைத்தலாம். கொடுப்பார் - கொடுப்பவராகி எனக் கொண்டு அடுத்த பாடலில் கூட்டுக. 13

515. "ஓங்கு கோவணப் பெருமையை
உள்ளவாறு உமக்கே
ஈங்கு நான் சொல வேண்டுவது
இல்லை நீர் இதனை
வாங்கி நான் வரும் அளவும்உம்
மிடத்துஇக ழாதே
ஆங்கு வைத்து நீர் தாரும்" என்று
அவர் கையில் கொடுத்தார்.

தெளிவுரை: வேதியர் மேலும், "ஓங்கி விளங்குகின்ற இக்கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்குச் சொல்ல வேண்டிய தேவைஇல்லை. நீர் இதனை வாங்கி நான் நீராடி வருமளவும் உம்மிடத்தில் இகழ்ச்சியில்லாது பாதுகாத்துக் கொடுப்பாயாக." என்று சாற்றி நாயனார் கையில் கொடுத்தார்.

சிறப்புரை: ஈண்டு, ஈசனடியார்களுக்குக் கோவண ஆடை கொடுத்த நிலை மிகவும் ஏற்றமுடையது எனவும் அமையும். மற்றும் நாயனாரின் பெருமையின் ஏற்றமும் கோவணத்தைக் கொண்டு வெளிப்பட இருத்தலால் அதன் சிறப்பினைப் போற்றி பாதுகாத்து இருத்தல் வேண்டும் எனவும் ஆம். கோவணத்தின் பெருமையை நாயனார் நன்கு அறிந்தவர் என்பதாம்.

இகழாது - எளிய பொருளாக எண்ணாது 14

516. கொடுத்த கோவணம் கைக்கொண்டு
கோதிலா அன்பர்
"கடுப்பில் இங்கெழுந் தருளும் நீர்
குளித்" தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை
மறைந்தஅம் மறையோர்
அடுத்த தெண்திரைப் பொன்னிநீர்
ஆடஎன்று அகன்றார்.

தெளிவுரை: வேதியர் கொடுத்த கோவண ஆடையை வாங்கிய குற்றமில்லாத நாயனார் வேதியரை நோக்கி "விரைவில் நீராடி வருக" என்று கூறக் கங்கையை அணிந்த வளர்சடையை மறைத்த அவ்வேதியர் தெளிந்த அலைகளையடைய காவிரியாற்றில் நீராடச் சென்றார்.

கோதிலா அன்பர் - நாயனார். கடுப்பு - விரைந்து. தும்பிய வளர்சடை - நீண்டு தொங்கும் சடைமுடி. ஆட - நீராட. 15

517. **தந்த கோவணம் வாங்கிய**
தனிப்பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழிகொண்டு
முன்பு தாம் கொடுக்கும்
கந்தைகீ ளாடை கோவணம்
அன்றிஓர் காப்புச்
சிந்தை செய்துவேறு இடத்தொரு
சேமத்து வைத்தார்.

தெளிவுரை: வேதியர் கொடுத்த கோவண ஆடையை வாங்கிய நாயனார், முதற்கண் அந்தணர் சொன்னவற்றை மனத்திற்கொண்டு, தாம் அடியார் பெருமக்களுக்கு அளிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள கந்தை, கீளாடை, கோவணம் அல்லாத வேறு ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று சிந்தித்து ஆங்கு வைத்தார்.

அந்தணர் மொழி - இக் கோவணம் மிகவும் பெருமை வாய்ந்தது. இதனை நான் சொல்ல வேண்டியதில்லை. உனக்கே நன்கு தெரியும் என்று வேதியராக வந்த சிவபிரான் திருப்பாட்டு 515இல் உரைத்தமை என்க. சேமத்து - பாதுகாப்பான ஓரிடத்து. 16

வேதியர், திருவருளால் கோவணத்தை மறையச் செய்து மழை பொழிய ஈரமேனியுடன் நனைந்து வருதல்

518. **போன வேதியர் வைத்தகோ**
வணத்தினைப் போக்கிப்
பானல்அம் துறைப் பொன்னிநீர்
படிந்துவந் தாரோ
தூநறும் சடைக் கங்கை நீர்
தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட
நனைந்துவந்து அணைந்தார்.

தெளிவுரை: காவிரியாற்றை நோக்கிச் சென்ற வேதியர் அமர்நீதி நாயனார் பாதுகாப்பாக வைத்த ஈசனார் அளித்த கோவணத்தை மறையச் செய்து, கருங்குவளை மலர்கள் நன்கு மேவும் துறையில் காவிரியில் நீராடி வந்தாரோ அல்லது, தூய நறுமணம் கமழும் சடைமுடியில் விளங்கும் கங்கை நீரில் தோய்ந்து வந்தாரோ! வானத்தில் மழை நீர் பொழிய அவர் நனைந்து கொண்டு திருமடத்தை அடைந்தார்.

வேதியர் - சிவபிரான். நீர் மடிந்து - நீராடி. பானல் - கருங்குவளை; நீலோற்பலம். இது அட்டபுட்பங்களில் ஒன்று என்க. 17

அறுசுவையுணவை அமைத்த நாயனார் வேதியரை எதிர்கொண்டு சென்று அழைத்து அமுது செய்யுமாறு வேண்டுதல்

519. கதிர்இ ளம்பிறைக் கண்ணியர்
நண்ணிய பொழுதில்
முதிரும் அன்புடைத் தொண்டர்தாம்
முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறுசுவைத்
திரு அமுது ஆக்கி
எதிர்எ ழுந்து சென்று இறைஞ்சிட
நிறைந்த நூல் மார்பர்;

தெளிவுரை: இளமையான பிறைச் சந்திரனைத் தலையில் தரித்த சிவபிரான் வேதியர் வடிவத்தில் வந்தடைந்தபோது முற்றிய அன்புடைய திருத்தொண்டராகிய அமர்நீதி நாயனார் முதற்கண் அறுசுவை உணவைச் செய்து, விருந்தினரை வரவேற்கும் முறைபடி முன்னே சென்று வணங்கி நின்றார்.

நிறைந்த நூல் மார்பர் என்பதனை அடுத்த செய்யுளில் கூட்டுக.

பிறைக்கண்ணியர் - பிறைச்சந்திரனைத் தரித்தவர். முதிரும் அன்பு - முற்றிய பேரன்பு. தொண்டர் - நாயனார். முறைமை - விருந்தினரை வரவேற்கும் அன்பின் வெளிப்பாடு அமைந்த தன்மை. நிறைந்த நூல் மார்பர் - வேதியர். 18

வேதியர் தான் கொடுத்த கோவணத்தைக் கொண்டு வருமாறு கூறுதல்

520. **தொண்டர் அன்பெனும் தூயநீர்**
ஆடுதல் வேண்டி
"மண்டு தண்புனல் மூழ்கிய
ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம் நான்
தந்த கோ வணத்தைக்
கொண்டு வாரும்' என்று உரைத்தனர்
கோவணக் கள்வர்.

தெளிவுரை: வேதியரான சிவபிரான் கோவணக் கள்வராகித் திருத்தொண்டரான அமர்நீதி நாயனாரின் அன்பு என்கிற தூய நீரில் ஆடும் விழைவு கொண்டவராய், "காவிரியின் குளிர்ந்த நீரில் மூழ்கியதால் உண்டாகிய ஈரத்தை மாற்றத் தண்டின் மீது உள்ளதும் மழையால் ஈரமாயிற்று. நான் தந்த கோவண ஆடையைக் கொண்டு வாரும்." என்றார்.

இவண் சிவபெருமான் திருவருளால் கோவண ஆடை மறைந்ததை யொட்டிக் கோவணக் கள்வர் எனச் சாற்றப்பட்டது.

தொண்டர் - நாயனார். மண்டு - நிறைந்து விளங்கிய. கோவணக் கள்வர் - சிவபிரான். 19

வேதியரின் சூழ்ச்சியை அறியாத நாயனார் உள்ளே சென்று கோவணத்தைக் காணாது திகைத்துத் தேடுதல்

521. ஐயர் கைதவம் அறிவுறாது
அவர்கடிது அணுகி
எய்தி நோக்குறக் கோவணம்
இருந்தவே றிடத்தில்
மையில் சிந்தையர் கண்டிலர்
வைத்தகோ வணம்முன்
செய்ததென் என்று திகைத்தனர்
தேடுவார் ஆனார்.

தெளிவுரை: வேதியர் தாம் கொடுத்த கோவண ஆடை மறையும்படிச் செய்த சூழ்ச்சியை அறியாது களங்கமில்லாத சிந்தையரான நாயனார் விரைந்து உள்ளே சென்று தனியானதோர் இடத்தில் பாதுகாப்பாக

வைத்த அக்கோவணத்தைக் காண, அது காணப்பெறாது திகைத்தவராய்ப் பிற இடங்களிலும் தேடத் தொடங்கினார்.

ஐயர் - வேதியர். கைதவம் - வஞ்சனை; இது அடியவர் பெருமையை வெளிப்படுத்த வந்த செயல் என்க. கடிது அணுகி - விரைந்து சென்று. மையில் சிந்தையர் - களங்கமில்லாத சிந்தையுடைய நாயனார். 20

கோவணம் காணாமை யறிந்து வேறு ஒரு கோவணத்தைக் கொண்டு வெளியே வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

522. பொங்கு வெண்கிழக் கோவணம்
போயின நெறிமேல்
சங்கை யின்றியே தப்பினது
என்றுதம் சரக்கில்
எங்கு நாடியும் கண்டிலர்
என் செய்வார் நின்றார்
அங்கண் வேதியர் பெருந்தொடக்
கினில் அகப் பட்டார்.

தெளிவுரை: நன்கு பாதுகாப்புடன் வைத்த வெண்மைப் பொலிவுடைய கோவண ஆடை காணாமற் போன வழியைச் சிந்தித்து, அது ஐயமின்றியே தப்பியது என்று முடிவு கொண்ட நாயனார், தாம் வைத்திருந்த வேறு சரக்குகளிலும் தேடிக் கண்டிலர். அவர் செய்வதறியாது நின்றார். அவ்விடத்தில் வேதியர் சாற்றும் வாதத்தில் சிக்கியவராக ஆயினார்.

இது கவிக்கூற்று.

சிறப்புரை: நாயனார் தான் இனிச் செய்வது யாது என்று அறியாது திகைத்து நின்றமை இவண் "என செய்வார் நின்றார்." என உரைக்கப்பெற்றது. இத்தன்மையில் திரு நீலக்கண்ட நாயனார் திருவோடு காணப் பெறாமை கண்டு "மாயை ஒன்றும் அங்கு அறிந்திலார் தாம் உரைப்பது ஒன்று இன்றி நின்றார்" எனத் திருப்பாட்டு 380 - இல் (திருநீல கண்டநாயனார் புராணம் - 21) சாற்றிவாறும் காண்க.

பொங்கு வெண்கிழி - பொலிவு மிகுந்த வெண்மை வண்ணம். நெறி - வழி. சங்கையின்றி - ஐயமில்லாது. தப்பினது - மறைந்தது. நாடியும் - தேடியும். பெருந்தொடக்கு - வாதச் சிக்கல்; உரிய பதிலுரையின்றி வருந்தும் தன்மை. 21

523. மனைவி யாரொடு மன்னிய
கிளைஞரும் தாமும்
இனைய தொன்றுவந்து எய்தியது
என இடர் கூர்ந்து
நினைவது ஒன்றிலர் வருந்தினர்
நிற்கவும் மாட்டார்
புனைய வேறொரு கோவணம்
கொடுபுறப் பட்டார்.

தெளிவுரை: நாயனார் தன் மனைவியார் மற்றும் சுற்றத்தாருடன் இத்தன்மையைச் சாற்றி இதனால் வந்துற்ற இடரையும் எண்ணி வேறு ஒரு நினைவின்றி வருந்தி அமைதியில்லாதவாராய் வேதியர் உடுத்திக் கொள்வதற்குரிய வேறு ஒரு கோவண ஆடையை எடுத்துக் கொண்டு சென்றார்.

கிளைஞர் - சுற்றத்தார். புனைய - ஈர ஆடையை நீக்கி வேறு ஓர் ஆடையைத் தரித்துக் கொள்ள. 22

வேதியர் தந்த கோவணம் காணப்பெறாமையால் புதிய கோவணத்தை உடுத்திக் கொள்ளுமாறு நாயனார் வணங்கிக் கூறுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

524. அத்தர் முன்பு சென்று "அடிகள் நீர்
தந்தகோ வணத்தை
வைத்தி டத்து நான் கண்டிலன்
மற்றுமோர் இடத்தில்
உய்த்து ஒளித்தனர் இல்லைஅஃது
ஒழிந்தவாறு அறியேன்
இத்த கைத்த வேறு அதிசயம்
கண்டிலேன்" என்று;

தெளிவுரை: வேதியராக வந்த சிவபிரான் முன்னே சென்று, " அடிகளே! தேவரீர் தந்த கோவணம் வைத்த இடத்தில் இல்லை. வேறு ஓரிடத்தில் வேறு யாரேனும் மறைத்து வைத்தாரும் இல்லை. அக்கோவணம் காணாமற் போன வழி தெரிந்திலது. இத்தன்மையான அதிசயம் இதுவரை நான் காணவில்லை." என்றார்.

சிறப்புரை: வைத்த இடத்திலிருந்து ஒரு பொருள் மறைந்த தன்மையானது இவண் "அதிசயம்" என்று சாற்றப்பட்டது. இதே போன்று திருநீல கண்ட நாயனார் ஓடு காணாமையை "மாயை" என உரைத்தமை காண்க.

சிவபிரான் செய்கின்ற திருவிளையாடல் வினோதம் உடைய தன்மையை மாணிக்கவாசகர், திருவாசகம் திருச்சதகத்தில்,

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்கு
உரிய னாக்கினாய் தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

அத்தர் - சிவபிரான். அடிகள் - மரியாதை குறித்த விளி. ஒளித்தனர் - மறைத்து வைத்தவர். அ.ாது கோவணம். என்று என்பதை அடுத்த பாடலுடன் கூட்டுக. 23

525. **"வேறு நல்லதோர் கோவணம்**
விரும்பி முன் கொணர்ந்தேன்
கீறு கோவணம் அன்று நெய்து
அமைத்தது கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர்
மற்றது களைந்து
மாறு சாத்தி என் பிழைபொறுப்
பீர்" என வணங்க;

தெளிவுரை: நாயனார் மேலும் தொடர்ந்து, "வேறு நல்ல தொரு கோவண ஆடையை விருப்பத்தோடு கொண்டு வந்தேன். இது வேறு ஆடையிலிருந்து கிழிக்கப்பட்ட கோவணம் அன்று. தனியாகவே நெய்து அமைத்தது. உள்ளத்தில் பக்தியுணர்வை யுண்டாக்கும் திருநீறு தரித்த நெற்றியுடையீர்! தேவரீர் உடுத்தியுள்ள ஈரம் சார்ந்த கோவணத்தைக் களைந்து மாற்றாக இதனை அணிந்து என் பிழையைப் பொறுத்தருள்வீர்!" என்று வணங்கிக் கூறினார்.

சிறப்புரை: உலகியல் வழக்கப்படி பழைமையுடைய ஆடைநைந்தது என்பதனைக் கொண்டு இவண் "நல்லதோர் கோவணம்" எனப்பட்டது. தவிரவும் தான் பேரன்புடன் தருதலை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற கனிவு தோன்ற "விரும்பி முன் கொணர்ந்தேன்" என்பதனைக் காண்க. மற்றும் நீண்ட ஆடையிலிருந்து கிழிக்கப்படாது தனியாகவே அளவு கொண்டு நெய்யப்பட்டது எனச் சாற்றுதலையும் நோக்குக.

திருநீலகண்ட நாயனார் புராணத்தில் நாயனார் வேறு நல்ல ஓடு தருவன் எனச்சாற்றி "இப்பிழை பொறுக்க வேண்டும்" என உரைத்தமையும், இவண் வேறு ஆடையைக் கையில் ஏந்தி நின்று "என் பிழை பொறுப்பீர்" என்று நவிலும் மாண்பினையும் ஓர்க. இத்தன்மையில் நாயன்மார்களின் செயற்பாடு, வைத்துச் சென்ற பொருளைப் பாதுகாக்கத் தவறியது பிழையுடையதாகக் கொள்ளும் ஒழுக்க நெறியில் நிற்றலையும் இனிது காண்க.

விரும்பி - அன்பு கொண்டு. கீறு - கிழிக்கப்பட்ட. கிளர்கொள் - பக்தியுணர்வையுண்டாக்கும். மற்றது - வேதியர் உடுத்தியிருந்த ஈரமான கோவணம். வணங்க என்பது அடுத்த பாடலில் தொடர்பு கொண்டு வினைமுடிபு பெறும். 24

வேதியர் வெகுண்டு உரைத்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

526. நின்ற வேதியர் வெகுண்டு "அமர்
நீதியார் நிலைமை
நன்று சாலவும் நாளிடை
கழிந்ததும் அன்றால்
இன்று நான் வைத்த கோவணம்
கொண்டதற்கு எதிர்வேறு
ஒன்று கொள்க என உரைப்பதே
நீர்" என உரையா;

தெளிவுரை: நாயனார் உரைக்கக் கேட்ட வேதியர், "அமர் நீதியாரின் நிலைமை மிகவும் நன்று! நாளும் இன்று கழிந்தில. இன்று நான் வைத்த கோவணத்தை எடுத்துக் கொண்டு அதற்கு இணையாக வேறு ஒன்றைக் கொள்க என்று உரைப்பது தான் முறையோ!" என்று வெகுண்டுரைத்தார்.

வெகுண்டு - சினந்து. நன்று - முறையல்ல என்னும் பொருளில் ஏளனக் குறிப்பில் சாற்றப்பட்டது. எதிர் - இணையாக. உரைய - உரைத்து. 25

527. நல்ல கோவணம் கொடுப்பன்என்று
உலகின்மேல் நாளும்
சொல்லு வித்ததுஎன் கோவணம்
கொள்வது துணிந்தோ
ஒல்லை ஈங்குறு வாணிபம்
அழகிதே உமக்கென்று
எல்லை இல்லவன் எரிதுள்ளி
னால் என வெகுண்டான்.

தெளிவுரை: "நீர் நல்ல கோவணத்தைக் கொடுக்கிறேன் என்று உலகத்தில் நாள் தோறும் சொல்வது யாவும் என்னுடைய கோவணத்தைக் கொள்வதற்குத் துணிந்தோ? என்னுடைய கோவணத்தைக் கைக்கொண்டு, வேறு கோவணத்தினைக் கொண்டு வந்து இங்கே விரைந்து செய்யும் நின் வாணிபம் மிக்க அழகுடைத்து!" என்று எள்ளியவாறு அந்தம் இல்லாத பரம்பொருளாகிய சிவபிரான் நெருப்புப் பொறி துள்ளியெழுந்ததைப் போன்று பெருஞ்சினங் கொண்டு உரைத்தார்.

சிறப்புரை: வேதியர் கொடுத்த கோவண ஆடை காணாமைக்கு ஈடாக வேறு ஒரு கோவணத்தைக் கொண்டு வந்த செயலானது இவண் வாணிப நோக்கில் முனைந்ததாகச் சாற்றப்பட்டது.

ஒல்லை - விரைந்து. வாணிபம் - வேதியர் கோவணத்தைப் பெற்றுக் கொண்டு வேறு ஒரு கோவணத்தை ஈடாகத் தரும் செயலைக் குறித்தது. அழகிதே - அழகல்ல என்பது எள்ளற் சுவையில் கூறுதலாயிற்று. எல்லை இல்லான் - அந்தமில்லாத சிவபிரான். 26

நாயனார் வேதியரைப் பிழை பொறுக்குமாறு வேண்டிப் பணிதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

528. மறிக ரந்துதண்டு ஏந்திய
மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய உணர்வின
ராய்முகம் புலர்ந்து

சிறிய என்பெரும் பிழைபொறுத்து
அருள்செய் வீர்அடி யேன்
அறிய வந்ததொன்று அன்றென
அடிபணிந்து அயர்வார்.

தெளிவுரை: கையில் விளங்கும் மானை மறைத்துத் தண்டினைக் கையில் ஏந்திய ஈசன் வேதியர் வடிவத்தில் தோன்றி வெகுண்டு கூறப் பெரிதும் மனக்கலக்கம் உற்றவராய் முகம் சோர்ந்து வருந்திய நாயனார், "சிறியேனாகிய நான் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள்வீர். இந்தப் பிழை அடியேனால் அறிந்து நிகழ்ந்தது அல்ல." என்று பணிந்து உரைத்தவராய்ச் சோர்வடைந்தார்.

மறி - மான். மறையவர் - வேதியர். வெகுள - சினந்து கூற. புலர்ந்து - வருந்தி. 27

529. "செயத்த கும்பணி செய்வன்இக்
கோவணம் அன்றி
நயத்த குந்தன நல்லபட்
டாடைகள் மணிகள்
உயர்ந்த கோடி கொண்டு அருளும்" என்று
உடம்பினில் அடங்காப்
பயத்தொடும் குலைந்து அடிமிசைப்
பலமுறை பணிந்தார்.

தெளிவுரை: நாயனார், "தேவரீர் பணித்தவாறு செயத்தகும் பணி செய்கிறேன். இக்கோவணமே யன்றி விரும்பத் தகுந்த பல உயர்ந்த ரக பட்டாடைகள், மணிகள், ஆடைகள் என ஏற்றுக் கொண்டு அருள் புரிக." என்று அளவு கடந்த அச்சம் தோன்ற உடல் நடுக்கம் உற்றுப் பலவாறு தொழுது பணிந்தார்.

கோடி - ஆடை வகை. 28

வேதியர் தன் கோவணத்திற்கு இணையாக ஒன்றைத் தருவதே பொருந்தும் என்றுரைத்தல்

530. பணியும் அன்பரை நோக்கிஅப்
பரம்பொருள் ஆனார்
தணியும் உள்ளத்தர் ஆயினார்
போன்று "நீர் தந்த

மணியும் பொன்னும் நல் ஆடையும்
மற்றும் என் செய்ய
அணியும் கோவணம் நேர்தர
அமையும்" என்று அருள;

தெளிவுரை: இவ்வாறு பணியும் அன்பராகிய அமர்நீதி நாயனாரை நோக்கிய வேதியராக வந்த சிவபிரான் தணிந்த உள்ளத்தவர் போன்று மன்னி, "நீர் தருகின்றதாக உரைக்கின்ற பொன்னும், மணியும் மற்றும் உள்ள நல்லாடைகளையும் கொண்டு நான் செய்யத்தக்கது ஏதும் இல்லை. நான் அணிகின்ற கோவண ஆடைக்கு நிகராக உள்ள பொருள் தருவதாயின் பொருந்தும்." என்று உரைத்தருளினார்.

அன்பர் - அமர்நீதி நாயனார். அமையும் - பொருந்தும். 29

தண்டினில் உள்ள கோவணத்தை அவிழ்த்து அதற்கு இணையான எடைக்குப் பொருள் தருமாறு இறைவன் தெரிவித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

531. மலர்ந்த சிந்தையர் ஆகிய
வணிகர் ஏறு அனையார்
அலர்ந்த வெண்ணிறக் கோவணம்
அதற்கு நேராக
இலங்கு பூந்துகில் கொள்வதற்கு
இசைந்தருள் செய்யீர்
நலம் கொள் கோவணம் தரும் பரிசு
யாதென நம்பர்.

தெளிவுரை: வேதியர் உரைத்தவற்றைக் கேட்ட மலர்ந்த சிந்தையராகிய வணிகருள் ஏறு போன்று சிறப்புடையவரான அமர் நீதியார் இறைவனை நோக்கி, "வெண்மை வண்ண முடைய தங்கள் கோவணத்துக்கு இணையாகப் பூந்துகில் ஆடையை எடுத்துக் கொள்ள இசையவில்லையாயின், அதற்கு ஈடானதொரு கோவணத்தைத் தரும் வகையாது." என்றார்.

வணிகர் ஏறு - வணிகர்களுள் சிறப்புடையவராகிய அமர் நீதியார். பூந்துகில் - ஆடை வகை. நம்பர் - சிவபிரான்; இது அடுத்தபாடலில் வினை முடிபு பெறும். 30

532. "உடுத்த கோவணம் ஒழியநாம்
உம்கையில் தர நீர்
கெடுத்த தாகமுன் சொல்லும் அக்
கிழித்தகோ வணம்நேர்
அடுத்த கோவணம் இது" என்று
தண்டினில் அவிழா
எடுத்து **"மற்றிதன் எடைஇடும்
கோவணம் என்றார்."**

தெளிவுரை: சிவபிரான், "உடுத்தியுள்ள கோவணத்தைத் தவிர, உம் கையில் நாம் தர, நீர் கெடுத்ததாகிய முன் சொன்ன அக் கிழிந்த கோவணத்திற்கு இணையான கோவணம் இதுவே. எடைக்கு இணையாகக் கொள்ளப்பட வேண்டியது. எனவே இதற்கு ஈடாக இடும்.' என்று உரைத்துத் தன் தண்டில் முடிந்துள்ள கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்தார்.

சிறப்புரை: தண்டில் இருந்த இரு கோவண ஆடைகள் விளங்கியமையைப் பாடல் 510லும், அதனுள் ஒன்றை அவிழ்த்துக் கொடுத்தமையைப் பாடல் 514லும் சாற்றியமை காண்க. மற்றும் நாயனார் கையில் கொடுக்கப்பட்ட கோவணம் கிழிந்த கோவணம் என்பதனை நாயனார் வாக்காகப் பாடல் 525 - இல் கீறு கோவணம் என உரைத்தமையும் நோக்குக.

ஒழிய - நீங்க. கெடுத்த - தொலைத்த. அவிழா - அவிழ்த்து. 31

தராசுத் தட்டில் வேதியர் தந்த கோவணத்திற்கு ஈடாக இடப்பெறும் ஆடைகள், பொன் மணிகள் நிரம்பாமை உரைத்தல்

- இது முதல் 8 பாடல்கள் ஒரு தொடர்

533. நன்று சாலஎன்று அன்பரும்
ஒருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம்
ஒரு தட்டில் இட்டார்
நின்ற தொண்டரும் கையினில்
நெய்தகோ வணம் தட்டு
ஒன்றிலே இட நிறை நிலாது
ஒழிந்தமை கண்டார்.

தெளிவுரை: சிவபிரான் மொழிந்தவாறு ஏற்று நாயனார் தராசுத் தட்டினை நாட்டினார். மேருவை வில்லாகக் கொண்ட ஈசன் கோவணத்தை ஒரு தட்டில் இட்டார். எதிரே நின்ற அமர்நீதியாரும் தம் கையில் வைத்திருந்த புதிதாக நெய்த கோவண ஆடையை வேறு ஒரு தட்டில் இட, அத்தராசு நிறை சமமாக நில்லாது இருத்தலைக் கண்டார்.

அன்பர் அமர்நீதி நாயனார். துலை - தராசு. குன்ற வில்லியர் - மேரு மலையை வில்லாகக் கொண்ட சிவபிரான். தொண்டர் - நாயனார். 32

534. நாடும் அன்பொடு நாயன்மார்க்கு
அளிக்க முன் வைத்த
நீடு கோவணம் அடையநேர்
ஆகஒன் றொன்றாக்
கோடு தட்டின் மீது இடக்கொண்டு
எழுந்தது கண்டு
ஆடு சேவடிக்கு அடியரும்
அற்புதம் எய்தி;

தெளிவுரை: அன்பின் மேவிய அடியவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று முன்னமேயே நெய்து வைத்திருந்த ஏராளமான கோவண ஆடையைக் கொண்டு வந்து ஒவ்வொன்றாக மேல் எழுந்துள்ள தட்டின் மீது இட்டும் நிறைநில்லாது மேலேயே நின்றது. இதனைக் கண்டு திருநடம் புரியும் கூத்தப் பெருமான் அடியவராகிய அமர் நீதியார் வியப்படைந்தார்.

இவண் எய்தி என்பது அடுத்த பாடலில் இட்டார் என வினை முடிபு பெறும்.

நாயன்மார் - சிவனடியார்கள். நீடு - ஏராளமான. கோடு - மேல் எழுந்த தட்டு. ஆடு சேவடி - திருநடனம் புரியும் திருப்பாதம்; கூத்தப்பெருமானை உணர்த்தியது. அற்புதம் எய்தி - வியப்படைந்து. 33

535. உலகில் இல்லதோர் மாயைஇக்
கோவணம் ஒன்றுக்கு
அலகில் கோவணம் ஒத்தில
என்று அதி சயித்துப்
பலவும் மென்துகில் பட்டுடன்
இடஇட உயர
இலகு பூந்துகில் பொதிகளை
எடுத்து மேல் இட்டார்.

தெளிவுரை: உலகத்தில் காணப்படாத மாயை யுடையது இக் கோவணம். இந்த ஒரு கோவணத்திற்கு எண்ணற்ற கோவண ஆடைகளும் இணையாகாது என்று வியந்த நாயனார், பலவான மென்மையுடைய ஆடைகளையும், பட்டாடைகளையும் இட இடத் தட்டு உயரத்திலே நிற்க, மேலும் சிறந்து விளங்கும் ஆடைகளையுடைய மூட்டைகளை எடுத்து வைத்தார்.

அலகில் - எல்லையில்லாத. பொதி - ஆடைகள் கொண்ட மூட்டைகள். 34

536. முட்டுஇல் அன்பர்தம் அன்புஇடும்
தட்டுக்கு முதல்வர்
மட்டுநின் றதட்டு அருளொடும்
தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டும்துகில் அநேககோ
டிகள் இடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது
கோவணத் தட்டு.

தெளிவுரை: எத்தன்மையான தடையும் இல்லாத நாயனார் பேரன்பு கொண்டு இடுகின்ற தட்டுக்குச் சிவபிரான் தன் கோவணத்தால் இடப்பட்ட தட்டு அருளொடு தாழ்வுறும் என்கின்ற வழக்கின்படி பட்டாடை முதலான ஆடைகள் அநேக கோடிகள் இடப்பெற்ற பக்தரின் தட்டுமேலோங்கியும் கோவணத் தட்டு தாழ்ந்தும் விளங்கிற்று. இது கவிக்கூற்று.

சிறப்புரை: இவண் எடையில் கூடுதலாக இருந்த கோவணத் தட்டு இறையருளுக்கும், நாயனார் இட்ட பட்டாடைகளின் தட்டு, தடையில்லாத பேரன்புக்கும் சிறப்புறக் காட்டும் வகையில் மேற்பட நின்றது என்னுமாறு நவிலும் இனிமை காண்க.

முட்டு இல் - தடை இல்லாத. அன்பர் - அமர் நீதி நாயனார். முதல்வர் மட்டு - முதல்வர் மாட்டு என்க; முதல்வர் - சிவபிரான். பத்தர் - நாயனார். தட்டு மேற்பட - தட்டு மேலே நிற்க; எடை குறைந்தது என்க. தாழ்ந்தது - கீழே நின்றது; எடை கூடியதைக் குறித்தது. 35

537. ஆன தன்மை கண்டு அடியவர்
அஞ்சி அந் தணர்முன்
"தூந றுந்துகில் வர்க்கம் நூல்
வர்க்கமே முதலா

மானம் இல்லன குவிக்கவும்
தட்டின்மட்டு இதுவால்
ஏனை என்தனம் இடம்பெற
வேண்டும்" என்று இறைஞ்ச;

தெளிவுரை:: இவ்வாறுள்ளதைக் கண்டு நாயனார் அச்சம் கொண்டவராகி வேதியர் முன்னர் , "தூய்மையான ஆடை மற்றும் நூல் வகை அனைத்தும் அளவில்லாதன குவிக்கப்பட்ட நிலையில் தட்டின் அளவு இத்தன்மைத்தாயிற்று. ஆதலால் மற்றவகையான செல்வத்தை இத்தட்டில் இடம் பெற வேண்டும்." என்று வேண்டினார்.

அடியவர் - நாயனார். மானம் இல்லன - அளவில்லாதன. தட்டின் மட்டு - தட்டின் அளவு. தனம் - பொன், மணிகள் முதலியன. இறைஞ்ச - வேண்ட.

36

538. மங்கை பாகராம் மறையவர்
மற்றதற்கு இசைந்தே
"இங்கு நாம் இனி வேறொன்று
சொல்லுவது என்கொல்
அங்கு மற்றுங்கள் தனங்களி
னாகிலும் இடுவீர்
எங்கள் கோவணம் நேர் நிற்க
வேண்டுவது" என்றார்.

தெளிவுரை: மறையவராக வடிவம் கொண்டு வந்த உமா தேவியைப் பாகமாக உடைய சிவபிரான், "இங்கு நான் வேறொன்று உரைப்பதற்கு யாது உள்ளது? அத்தட்டில் உங்கள் செல்வத்தை யானாலும் இடுவீர். எங்கள் கோவணத்திற்கு இணையான எடையே யாம் வேண்டுவது." என்றார்.

மங்கை பாகர் - உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபிரான். அங்கு - அத்தட்டு. எங்கள் - பரமன் தனித்திலன் என்னும் பொருளினை உணர்த்தும் தன்மையில் பன்மையில் சாற்றுதலாம்.

37

539. நல்ல பொன்னொடும் வெள்ளியும்
நவமணித் திரளும்
பல்வ கைத்திறத்து உலோகமும்
புணர்ச்சிகள் பலவும்

எல்லை யில்பொருள் சுமந்து அவர்
இடஇடக் கொண்டே
மல்கு தட்டுமீது எழுந்தது
வியந்தனர் மண்ணோர்.

தெளிவுரை: உயர்ந்த பொன்னும், வெள்ளியும், நவரத்தின மணிகளும், பல்வகையான செம்பு, வெண்கலம் முதலான உலோகப் பொருள்களும் மற்றும் அவற்றின் கலவைகளும் அளவு கடந்த நிலையில் அத்தட்டில் இட்ட நிலையிலும் அது யாவற்றையும் தன்னிடத்தில் ஏற்று மேலேயே நின்றது. இத்தன்மையைக் கண்ட பூவுலக மக்கள் வியந்தார்கள்.

புணர்ச்சிகள் - கலவையுடைய உலோகங்கள். மண்ணோர் - உலக மக்கள்.

38

540. தவம்நி றைந்த நான் மறைப்பொருள்
நூல்களால் சமைந்த
சிவன் விரும்பிய கோவணம்
இடும் செழும்தட்டுக்கு
அவனிமேல் அமர் நீதியார்
தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா
என்பதும் புகழோ.

தெளிவுரை: தவப் பெருமையுடைய நான்கு வேதங்களின் பொருளாக அமைந்த சிவபிரான் விரும்பிய கோவண ஆடை இடப்பெற்றுள்ள தட்டுக்கு, உலகத்தில் அமர் நீதியாரின் பொன் பொருள் முதலான செல்வங்கள் அல்லாது உலகம் யாவையும் நேர்கொண்டு நிற்காது என்பதும் புகழற்கு உரியதோ!

இது கவிக் கூற்று.

சிறப்புரை: இவண் அறவழி ஈட்டிய அமர் நீதி நாயனாரின் புகழ் உலகினும் பெரியது என்பது சாற்றப்பட்டது. சிவபிரான் விரும்பிய கோவணம் வேதப் பொருளால் அமைக்கப்பட்டது என்று சுட்டப்பெறுதல் காண்க. இத்தன்மையில் வேதங்களே கோவணமாதலைத் திருப்பாட்டு 509 - இல் குறிப்பிட்டவாறும் நோக்குக.

சமைந்த - அமைந்த. அவனி - உலகம். தனம் - செல்வம், புவனம் - உலகம்.

39

தானும் தன் மனைவியும் மைந்தனும் தட்டில் ஏறுவதாக நாயனார் உரைத்தல்

541. நிலைமை மற்றது நோக்கிய
நிகரிலார் நேர்நின்று
"உலைவில் பல்தனம் ஒன்றொழி
யாமை உய்த்து ஒழிந்தேன்
தலைவ யானும் என் மனைவியும்
சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவதுன்
அருள்" எனத் தொழுதார்.

தெளிவுரை: தட்டு மேலேயே நிற்பதை நோக்கி நிகரில்லாத வராகிய நாயனார், "தலைவனே, அழிதல் இல்லாத செல்வங்கள் யாவும் ஒன்றுவிடாது தட்டில் வைத்து விட்டேன். யானும் என் மனைவியும் மைந்தனும் தகும் பொருளாயின் தட்டில் ஏறுவதற்குத் தேவரீருடைய அனுமதி வேண்டும்." என்று வேதியரைத் தொழுதார்.

நிகரிலார் - நாயனார் ஒன்றொழியாமை - ஒன்று விடாது. சிறுவன் - மைந்தன். அருள் - அனுமதி தருக. 40

நாயனார் தட்டில் ஏறுவதற்கு வேதியர் இசைதல்

542. பொச்சம் இல்அடிமைத் திறம்
புரிந்தவர் எதிர் நின்று
அச்சம் முன்புற உரைத்தலும்
அங்கணர் அருளால்
நிச்ச யித்து அவர் நிலையினைத்
துலையெனும் சலத்தால்
இச்ச ழக்கினின்று ஏற்றுவார்
ஏறுதற்கு இசைந்தார்.

தெளிவுரை: குற்றமில்லாத அடிமைத் திறம் புரிந்தவராகிய அமர்நீதி நாயனார் எதிரே நின்று அச்சம் கொண்டு உரைக்க, சிவபிரான் திருவருட் கருணையால் முன்னரே நிச்சயித்துத் தராசுத் தட்டு என்னும் முகாந்தரத்தால் இப்பொய்யுலகச் சிக்கலிலிருந்து கரையேறும் பொருட்டு அவர் அத்தராசுத் தட்டில் ஏறுவதற்கு இசைவு தந்தார்.

சிறப்புரை: இவண் நாயனார் பொய்யுலகக் கட்டிலிருந்து விடுபட்டு மெய்ம்மையின்பம் மேவும் சிவலோகத்தில் சேரும் வகையில் சிவபிரான்

வேதியராக வந்த திருவிளையாடல் "இச்சழக்கினின்று ஏற்றுவார்" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்க வாசகர்,

"பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடையாயவெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே."

என்று அருளிய வாறும் காண்க.

பொச்சம் - குற்றம். அங்கணர் - சிவபிரான். துலை - தராசு. சலம் - முகாந்தரம். சழக்கு - பிறவிக் கட்டு. 41

நாயனார் தராசினை வலம் வந்து திருவைந்தெழுத்து ஓதி ஏறுதல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

543. மனம் மகிழ்ந்து அவர் மலர்க்கழல்
சென்னியால் வணங்கிப்
புனை மலர்க்குழல் மனைவியார்
தம்மொடு புதல்வன்
தனை இடக்கொடி தனித்துலை
வலம் கொண்டு தகவால்
இனைய செய்கையில் ஏறுவார்
கூறுவார் எடுத்து.

தெளிவுரை: நாயனார் மனம் மகிழ்ந்து வேதியராக வந்த சிவபிரான் திருப்பாதத்தைத் தலையால் வணங்கி, தொடுக்கப் பெற்ற மலர் மாலை சூடிய மனைவியும், புதல்வனும் கொண்டு சிறப்பின் மிக்க தராசினை வலம் வந்து ஏறுபவராகிக் கூறலானார்.

நாயனார் கூறுதலை அடுத்த பாடலில் காண்க.

அவர் - வேதியராகிய சிவபிரான். 42

544. "இழைத்த அன்பினில் இறைதிரு
நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோம் பெருந்துலை
நேர்நிற்க" என்று

மழைத்தடம்பொழில் திருநல்லூர்
இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத்து ஓதினார்
ஏறினார் தட்டில்.

தெளிவுரை: நாயனார், "மேற்கொண்ட அன்பினில் இமைப் பொழுதும் திருநீற்றின் கண் பற்று வைத்துச் செலுத்திய அடிமைத் திறத்தில் நாங்கள் தவறு செய்யாதவராயினோம் என்பது உண்மையானால் இத்தராசு நேர்நின்று சம நிலை காட்டுவதாக." என்று மேகம் தவழும் பெரிய சோலைகளையுடைய திருநல்லூரில் கோயில் கொண்டுள்ள சிவபிரானைத் துதித்து வணங்கித் தழைத்தருள் செய்யும் திருவைந்தெழுத்தை ஓதி, நாயனார் தராசுத் தட்டில் ஏறினார்.

இவண் நாயனாரோடு அவர் மனைவியாரும் புதல்வனும் ஏறினர் என்க.

சிறப்புரை: இவண் வேதியராக வந்தவர் திருநல்லூரில் எழுந்தருளியுள்ள ஈசனே என்பதனைத் திருப்பாட்டு 507 இல் சாற்றவாறு காண்க.

ஈசனின் அருவப் பொருளாய் விளங்குவது திருநீறு என்பதும், அதனை மனங்கனிய அணிதலும் திருவைத் தெழுத்தை ஓதுதலும் சிவகதியை அளிக்கும் என்பதும், இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெறுதல் காண்க. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 4-ஆம் திருமுறை, திருப்பாதிரிப் புலியூர்த் திருப்பதிகத்தில்,

"கருவாய்க் கிடந்துஉன் கழலே
நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துஉன் றன் நாமம்
பயின்றேன் உனது அருளால்
திருவாய் பொலியச் சிவாய
நம என்று நீறு அணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூர் அரனே."

என்று அருளிய வாறும் காண்க.

இறை - இமைப்பொழுது. இறை திரு நீறு - இறையாகிய திரு நீறு எனவும் கொள்க. இறை - இறைவன்; ஈசன். மழை - மேகம். தடம் - பெரிய. அஞ்செழுத்து - நமசிவாய என்னும் தூல பஞ்சாட்சரம்; சிவய நம என்னும் சூக்கும பஞ்சாட்சரமும் ஆம்.

தராசுத்தட்டு சரி சமமாக நிற்றல்

545. மண்டு காதலின் மற்றுஅவர்
மகிழ்ந்து உடன் ஏற
அண்டர் தம்பிரான் திருஅரைக்
கோவணம் அதுவும்
கொண்ட **அன்பினால் குறைபடா**
அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர்
நின்றது அத் துலைதான்

தெளிவுரை: பேரன்புடன் ஈசனைத் தொழுது ஏத்தும் அமர்நீதியார் மகிழ்வோடு தட்டில் ஏற, அண்டர் நாயகரான சிவபிரான் திரு அரையில் விளங்கும் கோவணமும் அன்பிற் குறைவில்லாத அடியவர் அடிமைத் திறமும் ஒத்து விளங்குதலால் அத்தராசின் இரு தட்டுகளும் சமமாயின.

மண்டு காதல் - பேரன்பு. அவர் - நாயனாரைக் குறித்தது. தம்பிரான் - சிவபிரான். அடியவர் - அமர் நீதி நாயனார். துலை - தராசு. 44

தேவர்கள் பூ மழை பொழிதல்

546. மதிவி ளங்கிய தொண்டர்தம்
பெருமையை மண்ணோர்
துதி செய்து எங்கணம் அதிசயம்
உறஎதிர் தொழுதார்
கதிர்வி சும்பிடைக் கரந்திட
நிரைந்த கற்பகத்தின்
புதிய பூமழை இமையவர்
மகிழ்வுடன் பொழிந்தார்.

தெளிவுரை: மெய்ஞ்ஞானம் விளங்கப்பெற்ற தொண்டரான நாயனாருடைய பெருமையை உலக மாந்தர் கண்டு அதிசயித்துத் துதி செய்ய நாயனார் எதிர் தொழுது அனைவரையும் வணங்கினார். ஆகாயத்தில் விளங்கும் சூரியஒளி மறைக்கும் வகையில் வானுலகத்திலுள்ள தேவர்கள் கற்பகமரத்தின் புதிய பூக்களை மகிழ்வுடன் பொழிந்தார்கள்.

மதி - மெய்ஞ்ஞானம். தொண்டர் - அமர்நீதியார். மண்ணோர் - உலக மக்கள். கதிர் - சூரியஒளி. விசும்பு - ஆகாயம். கரந்திட - மறைக்குமாறு. கற்பகம் - தேவலோகத்தில் உள்ள மரம். இமையவர் - தேவர்கள். 45

வேதியர் மறைய நல்லூர்ப் பெருமான் உமா தேவியோடு வானத்தில் காட்சி தருதல்

547. அண்டர் பூமழை பொழியமற்று
அதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒருவழி
யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே
விசும்பினில் பாகம்
கொண்ட பேதையும் தாமுமாய்க்
காட்சிமுன் கொடுத்தார்.

தெளிவுரை: தேவர்கள் பூமழை பொழிய, அதனிடையில் நீறணிந்த வேதியர் மறைந்து முதன்மையான திரு நல்லூரில் தொன்மையில் தாம் விளங்கும் திருக்கோலத்தில் ஆகாயத்தில் தோன்றி இடப்பாகம் கொண்ட தேவியும் தாமுமாய்த் சிவபெருமான் திருக்காட்சி கொடுத்தார்.

அண்டர் - தேவர். ஒளித்த - தன் திருவடிவத்தை மறைத்துக் கொண்ட. முண்ட வேதியர் - திருநீறு தரித்து வந்த வேதியர். விசும்பு - ஆகாயம். பாகம் கொண்ட பேதை - இடப்பாகத்தைக் கொண்டுள்ள உமா தேவி. தாமும் - ஈசனைக் குறித்தது. 46

ஈசன் திருவருள் புரிதல்

548. தொழுது போற்றி அத்துலைமிசை
நின்று நேர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும்
மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம்
முன் தொழுது இருக்கும்
அழிவில் வான்பதம் கொடுத்தெழுந்து
அருளினார் ஐயர்.

தெளிவுரை: கை கூப்பித் தொழுகின்ற குற்றமில்லாத நாயனாரும், மைந்தரும், மனைவியாரும் முழுமையுடைய இனிய அருளைப் பெற்று விளங்க, அவர்கள் எக்காலத்திலும் தம் முன்னிருந்து துதிக்கின்ற அழிவில்லாத பெரும் பதத்தை வழங்கிய இறைவன் தம் திருவடிவத்தைக் கரந்து கொண்டார்.

வழுவில் அன்பர் - குற்றமில்லா அன்பர்; மும்மலம் அற்றவர் எனவும் கொள்க. அழிவுஇல் வான் பதம் - சிவலோகம். எழுந்தருளினார் - தம் திருஉருவத்தைக் கரந்தார். ஐயர் - சிவபிரான். 47

துலையே விமானமாக மாறி சிவலோகத்தை அடைதல்

549. நாதர் திரு வருளினால்
நல்பெரும் துலையே
மீது கொண்டு எழுவிமா னமது
ஆகிமேல செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும்
குறைவறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன் சிவ
புரியினை அணைந்தார்.

தெளிவுரை: சிவபிரான் திருவருளால் பெரியதாக விளங்கிய அத்துலையே விமானமாகி மேலே செல்லக் குற்றமில்லாத நாயனார் அவர்தம் குடும்பத்தோடு திருவருள் நல்கிய ஆதிமூர்த்தியாரின் சிவலோகத்தை அடைந்தார்.

நாதர் - சிவபிரான். கோதுஇல் அன்பர் - நாயனார். சிவபுரி - சிவலோகம். 48

அமர் நீதி நாயனார் புராணம் நிறைவுற்றது

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி அறுசீர் ஆசிரிய விருத்தம்

550. மலர்மிசை அயனும் மாலும்
காணுதற்கு அரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர்
ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப்
பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும்
தலைமை நம் தலைமை யாகும்.

தெளிவுரை: தாமரை மலரின் மீது விளங்குகின்ற பிரமனும், திருமாலும் காண்பதற்கு அரிய வள்ளலாகிய சிவபிரான் பலரும் போற்றிப் புகழும் திருவெண்ணெய் நல்லூரில் பழைமை வாய்ந்த ஓலைகாட்டி, உலகம் உய்யுமாறு அடிமை கொள்ளப் பெற்றவரான சுந்தரமூர்த்தி

சுவாமிகள் திருப்பாதத்தைத் தம் தலை மீது வைத்து அதன் கீழ் வாழும் அன்பர் தம் தலைமையே நம் தலைமையாகும்.

இது கவிக்கூற்று. இவண் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பாதங்களைத் தொழும் அடியவரே தலைமையுடையவர் என்பதும் அத்தகையோரே தமக்குத் தலைமையாவர் என்பதும் சாற்றப்பட்டது. இது சங்கம வழிபாடு என்க.

49

தில்லை வாழ் அந்தணர் சருக்கம் நிறைவுற்றது.

III. இலை மலிந்த சருக்கம்

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருத் தொண்டத் தொகையின் 2 - ஆம் திருப்பாட்டின் முதற் சீரின் தலைப்புக் கொண்டு - நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுதலாம்.

14. எறிபத்த நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம்:

கருவூர் என்பது சோழ மன்னர்களுக்குரிய தலைநகரங்களுள் ஒன்று. இது கொங்கு நாட்டில் உள்ளது. ஆங்கு ஆனிலை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபிரானை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் தீங்கு செய்பவர்களை மழுப்படையால் எறிந்து வந்தார் ஓர் அன்பர். அவர் எறிபத்தர் என்று அழைக்கப்பட்டார்.

ஒரு நாள் சிவகாமியாண்டார் என்னும் சிவனடியார் பூக்களைக் கூடையில் நிரப்பிக் கொண்டு செல்ல, அந்நாட்டு மன்னரான புகழ்ச் சோழரின் பட்டத்து யானை பூக்கூடையைப் பறித்து இரைத்தது. சிவகாமியாண்டார் கீழே சாய்ந்து "சிவதா" "சிவதா" என்று ஓலமிட்டார்.

அடியவரின் ஓலத்தைக் கேட்டு ஆங்கு வந்த எறிபத்தர் யானையின் மீது ஏறித் தன் கையில் இருந்த மழுவால் அதன் துதிக்கையை வெட்டினார். யானை கீழே விழுந்து மாண்டது. யானையோடு வந்த அரசனின் காவலர்கள் மூவரையும் பாகர் இருவரையும் வெட்டி வீழ்த்தினார். இச்செய்தியை அறிந்த மன்னர் சினத்து வந்தார். மன்னர் எறிபத்த நாயனாரைக் கண்டதும், யானையே பிழை செய்திருக்க வேண்டும் என்று தீர்மானித்து, நாயனாரிடம் சென்று வணங்கி நின்று, "சிவனடியார்க்கு விளைத்த தீங்குக்கு

இது போதாது. என்னையும் கொல்ல வேண்டும்." என்று கூறித் தன் வாளை நாயனாரிடம் கொடுத்தார்.

மன்னரின் செவ்வியைக் கண்ட நாயனார், இத்தகைய அன்பர்க்குத் தீங்கு விளைத்தனனே என்று வருந்தித் தன்னுயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். இதைக்கண்ட சோழ மன்னர் நாயனார் திருக்கரத்தைப் பற்றித் தடுத்தார். அப்போது நாயனார் வருத்தி நிற்க, "உங்கள் திருத்தொண்டின் மாண்பினை உலகத்தவர்க்குக் காட்டவே சிவபிரான் அருளால் இவையாவும் நேர்ந்தன." என்று அசரீரி வாக்கு எழுந்தது. இருவரும் ஒருவரையொருவர் வணங்கினர். உடனே இறந்த யானையும், காவலர்களும் உயிர்பெற்று எழுந்தனர். சிந்திய பூக்கள் திரண்டு கூடையில் வரச் சிவகாமியாண்டார் பூக்கூடையுடன் கோயிலுக்குச் செல்லத் தொடங்கினார். புகழ்ச் சோழர் அரண்மனை சார்ந்தார். எறிபத்த நாயனார் தாம் ஏற்ற திருத்தொண்டைப் புரிந்து, நாளடைவில் திருக்கயிலையில் சிவகணங்களுக்குத் தலைவரானார்.

புகழ்ச் சோழ நாயனாரின் வரலாறு தனியே பின்னர்ச் சாற்றப்படுகிறது.

எறிபத்தரைப் பற்றிக் கூறுதல் - கவிக்கூற்று

551. மல்லல் நீர் ஞாலம் தன்னுள்
மழவிடை உடையான் அன்பர்க்கு
ஒல்லைவந் துற்ற செய்கை
உற்றிடத்து உதவும் நீரார்
எல்லையில் புகழின் மிக்க
எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லல் ஆம் படித்தன் றேனும்
ஆசையால் சொல்ல லுற்றேன்.

தெளிவுரை: வளமையான கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் இளமையான இடபத்தை வாகனமாக உடைய சிவபிரான் திருவடியை ஏத்தும் அன்பர்க்கு உற்ற இடத்தில் விரைந்து வந்து உதவும் பண்புடையவராய், எல்லையற்ற புகழின் மிக்கவராய் மேவிய எறிபத்தர் என்பவரைப் பற்றி எம்மால் சொல்லுதற்கு அரிது என்றாலும் ஆசையால் சொல்லலுற்றேன்.

இது கவிக் கூற்று.

மல்லல் நீர் - கடல். ஞாலம் - உலகம். மழ விடை - இளமை வாய்ந்த இடபம். உடையான் - சிவபிரான். அன்பர் - சிவனடியார். ஒல்லை - விரைந்து. நீரார் - பண்புடையவர். 1

கருவூரின் சிறப்புரைத்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

552. பொன்மலைப் புலிவென் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக
அயல்வழி அடைத்த சோழன்
மன்னியஅநபா யன்சீர்
மரபின் மா நகரம் ஆகும்
தொன்னெடும் கருவூர் என்னும்
சுடர் மணி மாடமூதூர்.

தெளிவுரை: இமயமலையின் மீது புலிக்கொடி பொறித்தும், ஆங்கண் இடித்துப் பாறைகளைப் பெயர்த்துப் பாதை வகுத்தும், பிற சுற்றுவழிகளை அடைத்தும் விளங்கிய சோழ மன்னன் சிறப்பின் வழி, அநபாய சோழனின் மரபினர்க்குரிய தொன்மையான பெரு நகரமாய் விளங்குவது, சுடர்மணி மாடங்களையுடைய கருவூர்.

பொன்மலை - அழகு மிளிரும் இமயம். புலிவென்றோங்க - புலிக் கொடியோங்கு மாறு பொறித்த சோழ மன்னனின் சிறப்பினைச் சாற்றியது. சோழன் - கரிகால் சோழன். அநபாயன் - பெரிய புராணம் அரங்கேற்றிய சோழ மன்னர். 2

553. மாமதில் மஞ்சு சூழும்
மாளிகை நிறைவிண் சூழும்
தூமணி வாயில் சூழும்
சோலையில் வாசம் சூழும்
தேமலர் அளகம் சூழும்
சிலமதி தெருவில் சூழும்
தாம் மகிழ்ந்து அமரர் சூழும்
சதமகன் நகரம் தாழ.

தெளிவுரை: கருவூர் நகரமானது, நீண்டு உயர்ந்த மதில்களில் மேகவும் தவழவும், ஆகாயத்தை அளாவி நிற்கும் உயர்ந்த மாளிகைகள் கொண்டும், அம் மாளிகைகளில் நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற வாயில்கள் விளங்கவும், மலர் நிறைந்த பூஞ்சோலைகளில் நறுமணம் கமழவும், சிறந்ததான மலர்கள் மங்கையர் கொண்டையில்

விளங்கவும், சந்திரன் போன்ற ஒளி திகழும் அழகிய முகத்தையுடைய மாதர்கள் சிலர் வீதிகளில் சூழ்ந்து செல்லவும், மக்கள் அனைவரும் இன்முகத்துடன் விளங்கவும் தேவலோகத்தில் மேவும் இந்திரனது நகரம் போன்று விளங்கியது.

சிறப்புரை: கருவூர் என்பது சோழர் மரபினரின் தலைநகர் ஐந்தில் ஒன்று என்க. ஏனைய நகரங்களாவன: காவிரிப் பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், திருச் சேய்ஞலூர் ஆகும்.

மஞ்சு - மேகம். வாசம் - நறுமணம். அளகம் - மகளிர் கொண்டை. மதி - சந்திரன்; மாதர் முகத்தை உருவகித்தது. அமரர் - தேவர். சதமகன் - இந்திரன். சதமகன் நகரம் - தேவலோகத்திலுள்ள அமராவதி நகரம். 3

554. கடகரி துறையில் ஆடும்
களிமயில் புறவில் ஆடும்
அடர்மணி அரங்கில் ஆடும்
அரிவையர் குழல்வண்டு ஆடும்
படரொளி மறுகில் ஆடும்
பயில்கொடி கதிர் மீது ஆடும்
தடநெடும் புவிகொண் டாடும்
தனி நகர் வளமை ஈதால்.

தெளிவுரை: ஆங்கு, மதயானைகள் நீர்த் துறையில் படிந்து ஆடும்; களிப்பின் மிக்கு மேவும் மயில்கள் முல்லை மலர்ப் பொழில்களில் தோகையை விரித்து ஆடும்; நெருக்கமாகப் பதிக்கப்பெற்ற நவமணிகள் அணிந்த மகளிர் அரங்கத்தில் நடனம் புரிய அவர்கள், கூந்தலில் வண்டுகள் ரீங்காரம் செய்யும்; ஒளி மிகுந்து விளங்கும் வீதியில் நாட்டப்பட்ட உயர்ந்து ஓங்கும் கம்பங்களில் கட்டப்பட்ட கொடிகள் சூரிய மண்டலத்தில் ஆடிப் பறக்கும் இத்தன்மையில் அகன்று விளங்கும் இவ்வுலகத்தின்கண் சிறப்பின் மிக்க கருவூர் வளமை கொண்டிருந்தது.

கடகரி - மதம் கொண்ட யானை; இது யானையின் மும்மத நீர் கபோலம், கரடம், கோசம் அகிய இடங்களிலிருந்து பெருகும் வகையைச் சாற்றியது. புறவு - முல்லை மலர்ப் பொழில். அடர் மணி - நெருக்கமாக மணிகள் பதித்தது. அரங்கு - நாடக மேடை. அரிவை - மாதர்; 19-25 வயது மகளிர் என்க. குழல் - கூந்தல். மறுகு - வீதி. கதிர் - சூரிய மண்டலம். தனி நகர் - கருவூர். 4

கருவூர் ஆனிலை என்னும் கோயிலை உரைத்தல்

555. மன்னிய சிறப்பின் மிக்க
வளநக ரதனில் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து
சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க
தொண்டர்தம் சிந்தை நீங்கா
அந்நிலை அரனார் வாழ்வது
ஆனிலை என்னும் கோயில்.

தெளிவுரை: புகழ்மேவும் சிறப்புடைய வளநகரான கருவூரில் அழகொளிரும் மதில் சூழ்ந்து, தேவர்களும் போற்றுகின்ற பெருமையுடன், அன்பின் மிக்கதொண்டரின் சிந்தையில் நீங்காதவராய்ச் சிவபிரான் வீற்றிருக்கின்ற இடம் ஆனிலை என்னும் கோயில் ஆகும்.

ஆனிலை என்பது கோயிலின் பெயர். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கொங்கு நாட்டுத் தலம்.

பொன்னியல் புரிசை - அழகு ஒளிரும் மதில். துன்னிய அன்பு - நெருக்கமான அன்பு. 5

எறிபத்த நாயனாரின் திருத்தொண்டினை உரைத்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

556. பொருள் **திரு மறைக டந்த**
புனிதரை இனிது அக்கோயில்
மருள்துறை மாற்றும் ஆற்றால்
வழிபடும் தொழிலர் ஆகி
இருள்கடு ஒடுங்கு கண் டத்து
இறையவர்க்கு உரிமை பூண்டார்க்கு
அருள் பெரும் தொண்டு செய்வார்
அவர்எறி பத்தர் ஆவார்.

தெளிவுரை: மெய்த்தன்மை புகலும் வேதங்களுக்கும் எட்டாத புனிதராகிய சிவபிரான் விளங்கும் அத்திருக்கோயிலை நண்ணி அஞ்ஞானத்தை நீக்கும் பொருட்டு வழிபடும் பெற்றியராய், இருள் போன்று விளங்கும் நஞ்சு ஒடுங்கிய கண்டத்தையுடைய ஈசனார்க்கு

உரிமை பூண்ட சிவனடியார்களுக்கு அன்புடன் திருத்தொண்டு புரிபவராய், எறிபத்தர் என்பவர் விளங்கினார்.

புனிதர் - சிவபிரான். மருள் துறை - அஞ்ஞானம்; பிறவித் துன்பமும் ஆம். இருள் - நஞ்சின் வண்ணத்தைச் சுட்டியது. கடு - ஒடுங்கு கண்டம் - நஞ்சு பொதிந்த கண்டம்; நீலகண்டத்தைக் குறித்தது. 6

557. மழை வளர் உலகில் எங்கும்
மன்னிய சைவம் ஓங்க
அழல்அவிர் சடையான் அன்பர்க்கு
அடாதன அடுத்த போது
முழை அரி என்னத் தோன்றி
முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரவும் தூய
பரசுமுன் எடுக்கப் பெற்றார்.

தெளிவுரை: வான் மழை கொண்டு வளமை பெறுகின்ற இவ்வுலகத்தில் பெருமையுடைய சைவ நெறி ஓங்கும் வகையில், நெருப்பை ஒத்த சிவந்த சடைமுடியுடைய சிவபிரான் அடியவர்களுக்குத் தீங்கு ஏதேனும் சார்ந்தபோது, குகையிலிருந்து கிளம்பும் சிங்கம் போன்று வெளிப்பட்டுத் தோன்றி அவர்களுக்குற்ற இன்னல் கெடுமாறு எறிந்து அழிப்பதும், வேதங்களால் போற்றிப் பரவப் பெறுவதுமான மழு ஆயுதத்தைக் கையில் ஏந்தியவராய் எறிபத்தர் விளங்கினார்.

சிறப்புரை: வானத்திலிருந்து பொழியும் குளிர்ச்சியான மழையால் உலகம் நன்கு செழித்து விளங்கும் சிறப்பினை இவண் இனிது சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருவள்ளுவர், திருக்குறள் 11 - இல்,

"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று."

என்று புகன்றவாறும் காண்க. இத்தன்மையான குளிர்ந்த மழையமுதம் போன்று சிவனடியார்கள் விளங்கி உலகத்தில் சைவநெறி தழைக்கச் செய்கின்றார்கள் என்பது உள்ளுறைப் பொருளாக விளங்கப்பெறுதலை நோக்குக.

அழல் அவிர் சடையான் - நெருப்பின் வண்ணம் போன்ற சிவந்த சடை முடியுடைய சிவபிரான். முழை - குகை. அரி - சிங்கம்; நாயனார்க்கு உவமை கூறப்பட்டது. முரண் - பகை; தீங்கு. பழமறை - தொன்மையான வேதம். பரசு - மழுவாயுதம். எடுக்கப் பெற்றார் - இதற்கு எழுவாய் முன் பாடலில் வரும் எறிபத்தர் ஆவார் ஆயிற்று. 7

ஆனிலையில் உள்ள ஈசனுக்குச் சிவகாமியாண்டார் மலர்த் தொண்டு செய்தலை உரைத்தல்

558. அண்ணலார் நிகழும் நாளில்
ஆனிலை அடிக ளார்க்குத்
திண்ணிய அன்பு கூர்ந்த
சிவகாமி யாண்டார் என்னும்
புண்ணிய முனிவ னார்தாம்
பூப்பறித்து அலங்கல் சாத்தி
உண்ணிறை காத லோடும்
ஒழுகுவார் ஒரு நாள் முன்போல்;

தெளிவுரை: எறிபத்த நாயனார் இவ்வாறு திருத் தொண்டாற்றி வரும் நாளில், ஆனிலை கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்கு உறுதியான அன்பு பூண்ட சிவகாமியாண்டார் என்னும் புண்ணிய முனிவர் பூப்பறித்து மலர்மாலையாக்கி உள்ளத்தில் நிலவும் பக்தியோடு சாத்தி ஒழுகி வரலானார்.

இவண் ஈற்றடியில் வரும் "ஒருநாள் முன்போல்" என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

அண்ணலார் - எறிபத்த நாயனார். ஆனிலை அடிகளார் - சிவபிரான். அலங்கல் - மாலை. உள் நிறை காதல் - பக்தி. 8

சிவகாமியாண்டார் பக்தியுடன் மலர் பறித்து வருதல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

559. வைகறை உணர்ந்து போந்து
புனல்மூழ்கி வாயும் கட்டி
மொய்மலர் நெருங்கு வாச
நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல
கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வ நாயகர்க்குச் சாத்தும்
திருப்பள்ளித் தாமம் கொய்து;

தெளிவுரை: விடியற்காலைப் பொழுதில் விழித்து நீராடி வாயை மென் துகிலால் கட்டித் தூய்மை விளங்க நறுமணம் கமழும் நந்தவனத்தைச் சார்ந்து, அன்று மலரும் மலக்குரிய அரும்புகளைத் தேர்ந்து சிவகாமியாண்டார் கையினால் பறித்தார்.

சிறப்புரை: இவண், அன்றைய நாளில் மலரக்கூடிய மலரைத் தேர்ந்தறிந்து அரும்பு நிலையில் பறிக்க வேண்டும் என்கிற விதிமுறை சாற்றப்படுதல் காண்க. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 4 - ஆம் திருமுறை, திருக்கடவூர் வீரட்டத் திருப்பதிகத்தில்,

"பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர் வீரட்ட னாரே."

என்று அருளிய வாறும் கொள்க.

வைகறை - விடியற்காலை. புனல் மூழ்கி - நீராடி. வாயும் கட்டி - துகில் கொண்டு வாயைக் கட்டி; இது வாய்வழியாக வெளியேறும் மாசு பூக்களில் படியாதவாறு இருத்தற்கு அமைவது. நந்தனவனம் - பூந்தோட்டம். முகை அலரும் வேலை - மலரும் பருவத்தில் உள்ள அரும்பு. தெய்வ நாயகர் - சிவபிரான். திருப்பள்ளித்தாமம் - மலர். கொய்து - பறித்து. கொய்து என்பதனை அடுத்த பாடலில் கொண்டு கூட்டுக. 9

560. கோலப் பூங் கூடை தன்னை
நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்
வாலிய நேசம் கொண்டு
மலர்க்கையில் தண்டுங் கொண்டங்கு
ஆலயம் அதனை நோக்கி
அங்கணர்க்கு அமைத்துச் சாத்தும்
காலைவந்து உதவ வேண்டிக்
கடிதினில் வாரா நின்றார்.

தெளிவுரை: சிவகாமி யாண்டார் அழகிய பூங்கூடையில் மலர்களை நிரப்பி மிகுந்த பத்திச் சிரத்தையோடு மலர் போன்று மென்மையுடன் விளங்கும்

கையில் தண்டினை ஏந்திக் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குக் காலையில் நடைபெறும் பூசனைக்கு மாலைகளைத் தொடுத்துக் கொடுக்க வேண்டும் என்னும் கருத்தில், மிக விரைவாக வந்து கொண்டிருந்தார்.

சிறப்புரை: தாம் இருக்கின்ற இடத்தில் ஒருவர் வரும் செயலை வருதல் எனவும் தாம் இல்லாத இடத்தில் ஒருவர் செல்லுதலை ஏகுதல், சார்தல், செல்லுதல், போதல் என்னுமாறும் உரைத்தல் மரபு. இத்தன்மையில் சிவகாமியாண்டார் வந்து கொண்டிருந்தார் என்னுமாறு சாற்றுதலால் சேக்கிழார் சுவாமிகள் இவண் திருக்கோயிலின் கண் தோய்ந்து விளங்கி, அருளிச் செய்த பாங்கெனக் கொள்க.

வாலிய நேசம் - உறுதியான பக்தி. மலர்க்கை - சிவகாமி யாண்டாரின் மென்மையான கையைச் சாற்றியது. அங்கணர் - சிவபிரான் வாரா நின்றார் - வந்து கொண்டிருந்தார். *10*

பட்டத்து யானை மதங்கொண்டு வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

561. மற்றவர் அணைய இப்பால்
வளநகர் அதனில் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள்
குலப்புகழ்ச் சோழ னார் தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும்
பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம்
பெருகுமா நவமி முன்னாள்,

தெளிவுரை: ஒருபுறம் சிவகாமியாண்டார் திருக்கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருக்க, அந்த வளமையான நகரில் சோழர் குல மன்னரான புகழ்ச் சோழரின் பட்டத்து யானை யாகிய பட்டவர்த்தனம் பகைவர்களைப் போர் முனையில் வெற்றி கொண்டு விளங்கும் ஆற்றல்மிக்கதாய் விழா கொண்டாடுதற்குரிய நன்னாளாகிய அட்டமி நாளில் மதம் கொண்டு வந்தது.

"நவமி முன்னாள்" என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

சிறப்புரை: இவண் நவமி முன்னாள் என்பது அட்டமி நாளைக் குறித்தது. இ.ந்து ஈசன் வழிபாட்டுக்குச் சிறந்த நாள் எனவும்

காண்க. இத்தன்மையில் திருஞானசம்பந்தர் 2 - ஆம் திருமுறை, திருமயிராப்பூர்த் திருப்பதிகத்தில்,

"தண்ணா அரக்கன்தோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்
பண்ணார் பதினென் கணங்கள்தம் அட்டமி நாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

மற்றவர் - சிவகாமியாண்டார். கொற்றவர் - சோழ மன்னர். வளவர் - சோழர் மரபைக் குறித்தது. பற்றலர் - பகைவர். சாய்க்கும் - வெற்றி கொள்ளும். பட்டவர்த்தனம் - அரசரின் பட்டத்து யானையின் பெயர். பண்பு - சிறப்பு. கோலம் - விழா நடத்துகின்ற பெருமை. நவமி முன்னாள் - நவமிக்கு முன் நாள் அட்டமி என்க. 11

562. மங்கல விழவு கொண்டு
வருநதித் துறைநீர் ஆடிப்
பொங்கிய களிப்பி னோடும்
பொழிமதம் சொரிய நின்றார்
எங்கணும் இரியல் போக
எதிர்பரிக் காரர் ஓட
துங்கமால் வரைபோல் தோன்றித்
துண்ணென அணைந்தது அன்றே.

தெளிவுரை: மங்கல விழாவை முன்னிட்டு அந்நகரில் உள்ள ஆம்பிரவதி என்னும் நதியில் அவ் யானை நீரில் படிந்து பொங்கும் மகிழ்வும் களிப்பும் ஓங்க, அதனால் மதம் கொண்டு, ஆங்கு நின்றவர் எல்லாம் எல்லாப் பக்கமும் சிதறி அஞ்சி ஓடவும், உடன் வரும் பரிக்காரர்களும் ஓடவும், பெரிய மலை போன்று தோன்றுமாறு மிக விரைவாக ஆங்கு வந்தது.

விழவு - விழா. வரு நதி - ஆம்பிரவதி என்ற ஆறு; அமராவதி எனவும் பெறும். இரியல் - சிதறி ஓடுதல். பரிக்காரர் - யானையை அடக்கும் ஈட்டி கொண்டு விளங்கும் காவலர்கள். மால்வரை - பெரிய மலை. துண்ணென - மிக விரைவாக. 12

யானை சிவகாமியாண்டார் வைத்திருந்த பூக் கூடையைப் பறித்துச் சிந்த அவர் சினந்து அதனைத் தொடர்தல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

563. வென்றிமால் யானை தன்னை
மேல்கொண்ட பாகரோடும்
சென்றொரு தெருவில் முட்டிச்
சிவகாமி யார் முன் செல்ல
வன்தனித் தண்டில் தூங்கும்
மலர்கொள் பூங் கூடை தன்னைப்
பின்தொடர்ந் தோடிச் சென்று
பிடித்துடன் பறித்துச் சிந்த;

தெளிவுரை: போர்முனையில் பகைவரை வெற்றி கொள்ளும் ஆற்றலுடைய அப்பட்டத்து யானை தன் மீது அமர்ந்துள்ள பாகரோடு விரைந்து சென்று ஒரு தெருவில் முட்டிச் சிவகாமி ஆண்டார் தன் தோளின் மீது பூக்கூடை தொங்குமாறு தண்டினைத் தாங்கி முன் செல்லும்போது அக்கூடையைப் பிடித்து இழுத்துச் சிதறச் செய்து விரைந்து சென்றது.

வென்றிமால் யானை - வெற்றியையுடைய பெரிய பட்டத்து யானை
தூங்கும் - தொங்கும். 13

564. மேல் கொண்ட பாகர் கண்டு
விசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக்
கடிது கொண்டு அகலப் போக
நூல் கொண்ட மார்பின் தொண்டர்
நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு
தண்டு கொண்டு அடிக்க வந்தார்.

தெளிவுரை: இச்செயலைக் கண்ட யானைப்பாகர்கள் புயற்காற்றைக் கொண்டு செல்வதைப் போன்று மிக விரைவாகச் செலுத்தி அகல, முப்புரி நூலணிந்த சிவகாமியாண்டார் பதைத்து நோக்கிச் சினங்கொண்டவராய் அவ் யானையின் பின்னே சென்று தன் கையிலிருந்த தண்டால் அடிக்க முனைந்தார்.

விசை - விரைவு. சண்டக்கால் - புயற்காற்று. நூல் - முப்புரி நூல்.
தொண்டர் - சிவகாமியாண்டார். 14

திருத்தொண்டர் கீழே விழுந்து சிவதா என்று ஓலமிடுதல். இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

565. அப்பொழுது அணைய ஒட்டாது
அடல் களிறு அகன்று போக
மெய்ப்பெரும் தொண்டர் மூப்பால்
விரைந்து பின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால்
தரைஅடித்து எழுந்து நின்று
செப்பரும் துயரம் நீடிச்
செயிர்த்து முன் **சிவதா** என்பார்.

தெளிவுரை: அப்போது அந்த வன்மையுடைய யானை நெருங்க முடியாதவாறு விரைந்து அகல, மெய்ந்நெறியுடைய பெருந்தொண்டரான சிவகாமியாண்டார், தன்னுடைய மூப்பின் காரணமாக விரைந்து பின் தொடர்ந்து செல்ல இயலாதவராய்த் தரையில் விழுந்தார். பின்பு எழுந்து நின்று சொல்லுதற்கு அரிய துயரத்தால் சினந்தவராகிச் சிவதா என்று ஓலமிடுவாரானார்.

அடல் களிறு - வன்மையுடைய யானை. தொண்டர் - சிவகாமியாண்டார். செயிர்த்து - கோபம் கொண்டு. சிவதா - சிவனே என்று இறைவனை அழைக்கும் விளி; இது அன்பர் துன்பம் காண்கின்ற போது உரைக்கும் ஓலம்; இதன் பொருள் நன்மையைச் செய்கின்றவனே என்பது. 15

கலிவிருத்தம்

566. **களியா னையின் ஈ ருரியாய் சிவதா**
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா

தெளிவுரை : பின்வரும் நான்கு பாடல்களும் திருத்தொண்டர் ஓலமிட்டுச் சிவபிரானை நோக்கிப் புலம்புதலைச் சாற்றுதலாம்.

மதங்கொண்ட யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட பெருமானே! சிவதா எளியவர்களின் துணையாய் விளங்கிக் காக்கும் இறைவனே! சிவதா! அன்புடைய அடியவர்களின் மெய் யறிவாகி விளங்குபவரே! சிவதா! மெய்ஞ் ஞானம் உடையவர்களுக்கு அமுதமாக உள்ளவரே சிவதா!

களியானை - மதங் கொண்ட யானை. ஈருரி - யானைத்தோல். வலி - வலிமையுடைய துணை. அளியார் - அன்புடையவர். அறிவு - மெய்யறிவாக விளங்கி இயக்கும் தன்மையுடையவர். தெளிவார் மெய்ஞ்ஞானம் உடையவர். சிவதா - சிவனே உதவி புரிக தருக எனவும் ஆம்.

16

567. ஆறும் மதியும் அணியும் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே
வேறுள் நினைவார் புரம்வெந்து அவியச்
சீறும் சிலையாய் சிவதா சிவதா.

தெளிவுரை: கங்கையும், பிறைச் சந்திரனும் அணிகின்ற சடை முடியின் மீது சூடப்பட வேண்டிய மலரை யானை சிந்திப் பாழ் செய்வது முறையோ! தேவரீரைப் பகை கொண்ட முப்புர அசுரர்களையும் அவர்தம் கோட்டைகளையும் எரியச் செய்வதற்கு உண்டாகிய சீற்றம் மிக்கதாய் மேரு மலையை வில்லாகக் கொண்ட ஈசனே! சிவதா!

சிவபிரான் கங்கையைத் தரித்த புராண வரலாறு : ஒரு முறை உமையம்மை சிவபிரான் விழிகளைத் தன் இரு கைகளாலும் மறைக்க, உலகம் யாவும் இருண்டு உயிர்த் தொகையும் வளர்ச்சி யற்றிருந்தன. அப்போது சிவபிரான் நெற்றியின் நடுவில் ஒரு தனி விழிகொண்டு நோக்க இருள் நீங்கி ஒளியுண்டாயிற்று. அந்நிலையில் அம்பிகையின் கைவிரல்களில் அச்சத்தால் வியர்ப்பு தோன்றப் பன்மடங்கு அது பெருகி ஆறுகளாகிக் கடலை நிறைத்தன. அப்போது திருமாலயனாதியர் அவற்றைத் தணிக்குமாறு வேண்ட சிவபிரான் தன் ஒன்பது சடையுள் ஒன்றில் அவ்வெள்ளத்தை ஏற்றார். பின்பு பகீரதன் வேண்ட, கங்கை பெருக்கெடுத்து வர அவனைக் காக்கும் பொருட்டுச் சடையில் அதனை ஏற்று ஒரு சிறிது அவனுக்கு வழங்கினார். இவ்வரலாறு இத்திருப்பாட்டில் முதலடியில் சாற்றப்பட்டது.

சிவபிரான் சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்த வரலாறு : தக்கன் தன் புதல்வியர்களான அசுவினி முதல் இரேவதி வரையிலான 27 பேரையும் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். சந்திரன் தன் மனைவியருள் உரோகிணி என்பவரிடம் தனியன்பு செலுத்தி ஏனையோரைப் பொருட்படுத்தாத வனாயினான். தக்கன் புதல்வியர்கள் ரோகிணியை யொழிந்த ஏனையோர் தந்தையிடம் தெரிவிக்க அவன், சந்திரனுடைய கலையழகு தேயுமாறு சாபம் கொடுத்தான். சந்திரன் சிவபிரானைச் சரணடைய, பெருமான் தன் சடை முடியின் மீது

சூடி இழந்த கலைகள் வளருமாறு அருள் புரிந்தார். இவ்வரலாறு இத்திருப்பாட்டின் முதலடியில் சுட்டப்பெற்றது.

ஆறு - கங்கை. மதி - சந்திரன். ஏறும் மலர் - சிவபிரானுக்குச் சாத்தும் வகையில் பறிக்கப்பட்ட பூக்கூடையில் இருந்த மலர். கரி - யானை. புரம் - முப்புரம். சீறும் சிலை - மேருவாகிய வில். 17

568. தஞ்சே சரணம் புகுதும் தமியோர்
நெஞ்சேய் துயரம் கெடநேர் தொடரும்
மஞ்சே எனவீழ் மறலிக்கு இறைநீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா.

தெளிவுரை: தஞ்சம் என்று தேவரீர் திருப்பாதங்களைச் சரணம் அடைந்த தமியரான மார்க்கண்டேயரின் துயரம் கெட, மேகம் போன்ற கரிய கூற்றுவனைச் சிறிது நீட்டி உதைத்த திருப்பாதத்தை உடைய பெருமானே! சிவதா! சிவதா!

மார்க்கண்டேயர்க்கு அருள் புரியும் வகையில் கூற்றுவனை உதைத்து அழித்த வரலாறு :

மிருகண்டு முனிவர் புத்திர பாக்கியம் வேண்டச் சிவபிரான் தோன்றி, "உனக்குச் சற்புத்திரனாய் 16 ஆண்டு ஆயுள் கொண்ட மகன் வேண்டுமா? அல்லது 100 ஆண்டு ஆயுளையுடைய மூட மகன் வேண்டுமா?" என்றார். முனிவர் சற்புத்திரனை வேண்டச் சிவபிரான் அவ்வாறே அருள் புரிந்தார். மார்க்கண்டேயர் 16 ஆவது வயதை நெருங்கும்போது அவர் பெற்றோர்கள் தன் மகனின் அந்திம காலம் நெருங்குவதைக் கண்டு வேதனையடைந்தார்கள். இதையறிந்து மார்க்கண்டேயர், வரம் நல்கிய ஈசனிடமே முறையிட்டு வாழ்நாளை நீட்டித்துப் பெற்றோரை மகிழ்விக்கப் பூசிக்கலானார். அப்போது 16 ஆவது ஆண்டு முடிகின்ற தருணத்தில் கூற்றுவன் சென்று மார்க்கண்டேயரின் உயிரைப் பறிக்க முனையும் போது, சிவபிரான் வெளிப்பட்டுத் தோன்றித் தன் பாதத்தை நீட்டி அவனை உதைத்து அழித்து, மார்க்கண்டேயரின் துயரைப் போக்கிச் சிரஞ்சீவி நிலையை அருள் செய்தார். இவ்வரலாறு இப்பாடலில் உரைத்தலாயிற்று.

தஞ்சே - தஞ்சம். சரணம் - அடைக்கலம்; ஈசன் திருவடி. தமியோர் - மார்க்கண்டேயர். மஞ்சு - மேகம்; கருமை. மறலி - கூற்றுவன். இறை - சிறிது. 18

569. நெடியோன் அறியா நெறியார் அறியும்
படியால் அடிமைப் பணி செய்து ஒழுகும்
அடியார்களில் யான் ஆரா அணைவாய்
முடியா முதலாய் எனவே மொழிய;

தெளிவுரை: "அந்தம் இல்லாத முதற்பொருளே! திருமாலும் அறியவொண்ணாத நெறியில் சோதிப் பொருளாய் நின்றவராய் அடிமைப் பணித் திறத்தில் மேவும் திருத்தொண்டர்களில் என்னை எத்தன்மை கொண்டு அருள் புரிவீர்." என்று பெருந்துயர்கொண்டு அரற்றினார்.

சிறப்புரை: அடியவர்கள் இறைவனுக்குத் திருத்தொண்டு செய்யும் போது குறைவு நேராமையை இவண் எடுத்தோதப் பெற்றது. இத் தன்மையில் இறைவனுக்குச் சாத்தும் வகையில் கொண்டு சென்ற பூக்கள் சிதறியதை எண்ணி வருந்தும் திருத்தொண்டர், தன் அடிமைத்திறம் குறைவு பட்டதாகத் தெரிவித்தலைக் காண்க. தவிரவும் இறைவன் திருவருள்படியே அன்பர்களின் அடிமைத்திறம் விளங்கவல்லது என்பதையும் அறிக. சிவகாமியாண்டார் சிதறிய பூக்களைத் திரும்பப் பெற்று திருக்கோயிலுக்குச் செல்லும் பாங்கு பின்னர்ச் சாற்றப்படுதலை நோக்குக. இந்நிலையின் பரமன் திருவருளைத் திருஞான சம்பந்தர் 2 - ஆம் திருமுறை, திருக்கருவூர் ஆனிலைத் திருப்பதிகத்தில்,

"தொண்டெ லாமலர் தூவி யேத்த நஞ்சு
உண்ட லாருயிர் ஆய தன்மையர்
கண்ட னார் கரு வூருள் ஆனிலை
அண்டனார் அருள் ஈயும் அன்பரே."

என்று அருளிய வாறும் காண்க.

இவண் திருஞான சம்பந்தர் சாற்றிய முதலடியானது அனைத்துத் திருத்தொண்டர்களுக்கும் அமையும் எனவும், குறிப்பாக அத்திருத்தலத்தில் திருத்தொணடாற்றிய சிவகாமி யாண்டார்க்குச் சிறப்பாகச் சுட்டப் பெறும் எனவும் காண்க.

திருமால் நெடியோன் என்று அழைக்கப்படுதற்குப் புராண வரலாறு :

மகாபலி சக்கரவர்த்தி தேவர்களுக்கு எதிரான வேள்வியைச் செய்யும் போது திருமால் மிகச் சிறிய வடிவத்தில் வாமனனாக அவதாரம் கொண்டு மூன்றடி மண் யாசித்தார். மகாபலி அவ்வாறே வழங்க வாமனன் நெடிதுயர்ந்து திரிவிக்கிரமனாய்த் தன் ஒரு பாதத்தால் பூவுலகத்தையும் மற்றொரு பாதத்தால் தேவலோகத்தையும் அளந்தார். மூன்றாவது அடிக்கு இடமில்லாத நிலையில் அச்சக்கரவர்த்தி, தன் தலை மீது வைத்தருளுமாறு வேண்டினான். திருமால் அவனைப் பாதாள உலகிற்கு அழுத்தி மன்னன் ஆக்கினார். திருமால்

திரிவிக்கிரமனாக நெடிது உயர்ந்த செயல் கொண்டு, நெடியவன் என்று அழைக்கப்பட்டார். இவ்வரலாற்றுக் குறிப்பு இத் திருப்பாட்டின் வழி சாற்றப்பட்டது.

திருமாலால் அறியப்படாத சிவபிரான் சோதியாய் விளங்கிய செம்மை இவண் நெடியோன் அறியா நெறியார் எனப்பட்டது.

நெடியோன் - திருமால். நெறியார் - சிவபிரான். அறியும் படி - பலரும் காணுமாறு. ஆரா - நிறைவு பெறாத நிலை. அணைவாய் - வந்து அருள் புரியுமாறு வேண்டுதல். முடியா முதலாய் - அந்தமில்லாத பரம்பொருளாகும் ஈசன். மொழிய என்பது அடுத்த பாடலோடு தொடர்பு பெறும்.

19

திருத்தொண்டர் ஓலத்தைக் கேட்டு ஏறிபத்தர் வருதல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

570. என்றுஅவர் உரைத்த மாற்றம்
எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா மூளும்
நெருப்புயிர்த்து அழன்று பொங்கி
"மன்றவர் அடியார்க்கு என்றும்
வழிப்பகை களிறே அன்றோ!
கொன்றுஅது வீழ்ப்பன்" என்று
கொலைமழு எடுத்து வந்தார்.

தெளிவுரை: சிவகாமியாண்டார் உரைத்த ஓலத்தைக் கேட்ட எறிபத்தர் எதிரே வந்தவராய் நெருப்பெனக் காணும் பெருஞ்சினத்துடன் பொங்கியெழுந்து மன்றுள் திருநடனம் புரியும் கூத்தப் பெருமானுக்கு வழிப்பகையாக உள்ளது களிறே அல்லவா. அதனைக் கொன்று வீழ்த்துவேன்" என்று கொலைத் தன்மையுடைய மழுப்படையைக் கைக் கொண்டார்.

சிறப்புரை: சிவபிரானைத் தாக்க வந்தது யானையாக இருக்க, அதன் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட தன்மை இவண் வழிப் பகை எனப் பெற்றது. இத்தன்மையில் சிவகாமி யாண்டாரைத் தாக்கிய யானையும் அவ்வாறு சாற்றியமையாம்.

வாரா - வந்து. மனறவர் - திருநடனம் புரியும் கூத்தப் பெருமான். அழன்று பொங்கி - சின உணர்வைக் குறித்து உரைத்தது. வழிப்பகை - மரபுவழிப் பகை.

20

யானை சென்ற வழியைத் திருத்தொண்டர் கூறுதல்

571. வந்தவர் அழைத்த தொண்டர்
தமைக்கண்டு வணங்கி "உம்மை
இந்தவல் இடும்பை செய்த
யானை எங் குற்றது" என்ன
"எந்தையார் சாத்தும் பூவை
என்கையில் பறித்து மண்மேல்
சிந்திமுன் பிழைத்துப் போக
நின்றது இத் தெருவே" என்றார்.

தெளிவுரை: உதவிக்கு வந்தவரான எறிபத்தர், சிவகாமி யாண்டாரை வணங்கி "உம்மைத் தீங்கு செய்த யானை எங்கே சென்றது." என்று வினவ அவர், "சிவபிரானுக்குச் சாத்தும் பூக்களை என்னிடமிருந்து பறித்துத் தரையில் சிந்தி இத் தெருவழியே தப்பிச் சென்றது." என்றார்.

வந்தவர் - எறிபத்தர். தொண்டர் - சிவகாமியாண்டார். வல் இடும்பை - கொடிய துன்பம். எந்தையார் - சிவபிரான். 21

எறிபத்தர் விரைந்து சென்று பாய்ந்து யானையை வீழ்த்துதல் - இது 3 முதல் பாடல்கள் ஒரு தொடர்

572. இங்கது பிழைப்ப தெங்கே
இனியென எரிவாய் சிந்தும்
அங்கையின் மழுவும் தாமும்
அனலும்வெங் காலும் என்னப்
பொங்கிய விசையின் சென்று
பொருகரி தொடர்ந்து பற்றும்
செங்கண்வாள் அரியின் கூடிக்
கிடைத்தனர் சீற்றம் மிக்கார்.

தெளிவுரை: யானை சென்ற பாதையைக் கேட்டதும் இனி அவ் யானை உயிர் தப்ப முடியாது என்று நெருப்பை உமிழும் மழுவாயுதத்தை ஏந்தித் தீயும் கொடிய புயற்காற்றும் போன்று மிக விரைவில் சென்று சிவந்த கண்ணுடைய சிங்கம் போன்ற நாயனார் அப்போர் யானையை நெருங்கினார்.

அங்கை - இறைவனை ஏத்தும் சிறப்பினையுடைய நாயனார் திருக்கையின் எழிலைக் குறிக்கும் வகையில் "அழகிய கை" எனப்பட்டது. வெங்கால் - கடும் புயற்காற்று. அரி - சிங்கம். கிடைத்தனர் - யானையை நெருங்கி அடைந்தார். 22

573. கண்டவர் "இது முன்பு அண்ணல்
உரித்தஅக் களிறே போலும்
அண்டரும் மண்ணு ளோரும்
தடுக்கினும் அடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வேன்" என்று
சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந்து ஆர்த்துச் சென்று
காலினால் குலுங்கப் பாய்ந்தார்.

தெளிவுரை: நாயனார் யானையைக் கண்டதும் "இது முன்னர்ச் சிவபிரானைச் சினந்து போர் செய்த களிறே" என்று எண்ணியவராய்த் "தேவரும் மற்றும் உள்ள உலகோரும் தடுத்தாலும் இதனைப் போரிட்டுக் கொல்வேன்." என்று ஒளிரும் கூர்மையான மழுவாயுதத்தைப் கையில் ஏந்தி வலிமையாக வீசி ஆரவாரம் செய்து கொண்டு காலினால் யானை அஞ்சிக் குலுங்குமாறு பாய்ந்தார்.

அண்ணல் - சிவபிரான். அண்டர் - தேவர்கள். குலுங்க - யானை அஞ்சி நடுங்குமாறு. 23

574. பாய்தலும் விசை கொண் டுய்க்கும்
பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம்
திரிந்து மேல் கதுவ அச்சம்
தாய்தலை அன்பின் முன்பு
நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ
மழுவினால் துணித்தார் தொண்டர்.

தெளிவுரை: மதங்கொண்டு பாகர்களைத் தன் மேலே தாங்கி மிக வேகமாகச் செல்லும் நெருப்பெனச் சிவந்த கண்ணுடைய அந்த யானையின் மீது நாயனார் பாய்ந்த அளவில், தாய் அன்பின் முன்பு எதிர்த்து நிற்க மாட்டாதது போன்று யானையின் வலிமை எடுபடாத வகையில் அதன் நீண்ட துதிக்கையை வெட்டித் துண்டாக்கினார்.

மிசை கொண்டு - மேலே தாங்கிக் கொண்டு. பாகர் - யானைப் பாகர். காய்தழல் - சினம். வேழம் - யானை. தடக்கை - துதிக்கை. துணித்தார் - வெட்டினார். தொண்டர் - எறிபத்தர். 24

நாயனார் மேலும் ஐந்து காவலர்களை வீழ்த்துதல்

575. கையினைத் துணிந்த போது
கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம்
புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர்
மிசை கொண்டார் இருவராக
ஐயவரைக் கொன்று நின்றார்
அருவரை அனைய தோளார்.

தெளிவுரை: நாயனார் துதிக்கையை வெட்டிய அளவில் அது கடலலை போன்று பேரொலி செய்து கதறிக் கீழே விழுந்து கரிய மலை போன்ற அந்த யனை புரண்டது. யானைக்குப் பாதுகாப்பாக வந்த வீரர்கள் மூவரையும் மற்றும் யானைப் பாகர்கள் இருவரையும் கொன்று சாய்த்து அருமையுடைய மலை போன்ற தோளுடைய நாயனார் நின்றார்.

கை - துதிக்கை. மைவரை - கரிய மலை; யானைக்கு உவமை சாற்றியது. வேழம் - யானை, வெய்யகோல்- கொடிய ஈட்டி, அருவரை - அருமையுடைய மலை; அது நாயனாரின் தோளாற்றலுக்கு உவமையாயிற்று. தோளார் - தோளையுடைய எறிபத்தர். 25

நாயனார் இச்செயலை மன்னர்க்குத் தெரிவிக்குமாறு கூறுதல்

576. வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார்
ஒழியமற் றுள்ளார் ஓடி
மட்டவிழ் தொங்கல் மன்னன்
வாயில்கா வலரை நோக்கிப்
"பட்டவர்த தனமும் பட்டுப்
பாகரும் பட்டார் என்று
முட்ட நீர் கடிது புக்கு
முதல்வனுக்கு உரையும" என்றார்.

தெளிவுரை: நாயனார் அரசனின் காவலர்களை நோக்கி, "வெட்டப்பட்டு வீழ்ந்தவர்கள் போக எஞ்சியவர்கள் ஓடிச் சென்று தேன் துளிர்க்கும் மலர் மாலை யணிந்து மன்னனின் வாயிற் காவலரை நோக்கி, " பட்டத்து யானையாகிய பட்டவர்த்தனம் மற்றும் அதன் பாகர்களும் இறந்தார்கள் என்று விரைந்து சென்று நீவிர் அரசனுக்குத் தெரிவிப்பீர்." என்றார்.

மட்டு - தேன். தொங்கல் - மலர் மாலை. பட்டவர்த்தனம் - பட்டத்து யானை. பட்டு - இறந்து. பட்டார் - இறந்தார். முதல்வன் - அரசன். 26

மன்னர் இச்செய்தியறிந்து போர்ப்படையோடு வருதல்
- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

577. மற்று அவர் மொழிந்த மாற்றம்
மணிக்டை காப்போர் கேளாக்
கொற்றவன் தன்பால் எய்திக்
குரைகழல் பணிந்து நின்று
"பற்றலர் இலாதாய் நின்பொன்
பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலராம் என்று
செப்பினார் பாகர்" என்றார்.

தெளிவுரை: காவலர்கள் இச் செய்தியைக் கூறக்கேட்ட அரண்மனை வாயிற் காவலர்கள் அரசரை நண்ணி வணங்கி நின்று, "பகைவர் இல்லாத வேந்தனே! நின்னுடைய அழகிய பட்டத்து யானை வீழுமாறு சிலர் கொன்றனர் என்று பாகர்கள் உரைத்தார்கள்." என்றார்கள்.

மணிக்கடை - அரண்மனை வாயில். கொற்றன் - மன்னன். குரைகழல் - ஒலிக்கும் வீரக்கழல். பற்றலர் - பகைவர். பட்டமால் யானை - பட்டத்துப் பெருமையுடைய யானை. வீழச் செற்றனர் - கொன்றனர். 27

578. வளவனும் கேட்ட போதில்
மாறின்றி மண்காக் கின்ற
கிளர்மணித் தோள்அ லங்கல்
சுரும்பினம் கிளர்ந்து பொங்க
அளவில் சீற் றத்தி னாலே
யார் செய்தார் என்றும் கேளான்
இளஅரி யேறு போல
எழில்மணி வாயில் நீங்க;

தெளிவுரை: காவலர்கூறக் கேட்ட பகையின்றி நாட்டைக் காக்கின்ற ஆற்றல் மிக்க தோளில் மலர் மாலைகளில் ரீங்காரம் செய்யும் வண்டுகள் கிளர்ந்து தோன்றச் சீற்றம் கொண்ட சோழ மன்னர் இச்செயலைச் செய்தவர் யார் எனவும் கேளாதவனாய் இளம் ஆண் சிங்கம் போன்று அரண்மனை வாயிலிருந்து புறப்பட்டார்.

வளவன் - சோழன். மாறு - பகை. மண் - நாடு. அலங்கல் - பூ மாலை. சுரும்பு - வண்டு. இள அரியேறு - இளம் ஆண் சிங்கம். மணி வாயில் - அரண்மனை வாயில். நீங்க - புறப்பட. 28

579. தந்திரத் தலைவர் தாமும்
தலைவன்றன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை
வல்விரைந்து எழுமுன் சாற்ற
அந்தரத்து அகலம் எல்லாம்
அணிதுகில் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரும் மாவும்
இடையிடை களிறும் ஆகி;

தெளிவுரை: அரசன் புறப்பட்ட நிலை கண்டு அமைச்சரும், சேனைத் தலைவரும் சேனையோடு விரைந்து எழுமாறு பறைசாற்ற, ஆகாயத்தை அளாவும் கொடிகள் பறக்க, எந்திரத்தேரும், குதிரைகளும், யானைகளும் கொண்டு ஏகினர்.

தந்திரத் தலைவர் - அமைச்சரும் சேனைத் தலைவரும். பதாகை - கொடி. மா - குதிரை. 29

580. வில்லொடு வேல்வாள் தண்டு
பிண்டிபா லங்கள் மிக்க
வல்லெழு முசலம் நேமி
மழுகழுக் கடைமுன் ஆன
பல்படைக் கலன்கள் பற்றிப்
பைங்கழல் வரிந்த வன்கண்
எல்லைஇல் படைஞர் கொட்புற்று
எழுந்தனர் எங்கும் எங்கும்.

தெளிவுரை: வில், வேல், வாள், தண்டு, பிண்டி பாலம், இரும்பு உலக்கை, சக்கரப்படை, மழு, சூலம், ஈட்டி முதலான படைக்கலன்களை உடையவராய், அழகிய வீரக்கழலைக் காலில் வரித்துக் கட்டியவராய், எல்லையற்ற வலிமையுடைய படைவீரர்கள் சுழன்று வலது சாரி, இடது சாரி திரிந்து எழுந்தார்கள்.

பிண்டிபாலம் - தலைப்பகுதியில் பீலி கட்டப்பெற்று விளங்கும் எறிபடை. எழு முசலம் - இருப்புலக்கை. நேமி - சக்கரப் படை. கழுக்கடை - எறியீட்டி மற்றும் சூலம். பைங்கழல் - வீரக்கழல். வரிந்த - கட்டிய. வன்கண் - வலிமை. கொட்புற்று - சுழன்று திரிந்து. 30

581. சங்கொடு தாரை காளம்
தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை
வியன்துடி திமிலை தட்டி

பொங்கொலிச் சின்னம் எல்லாம்
பொருபடை மிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண
மருங்கெழுந்து இயம்பி மல்க.

தெளிவுரை: சங்கு, தாரை, எக்காளம், பேரொலி முழக்கும் பேரிகை, பெருத்த ஒலி முழங்கும் பம்பை, கண்டைப்பறை, பெரியதான உடுக்கை, சல்லரி, கரடிப்பறை முதலான அதிக ஒலியெழுப்பும் சின்னங்களை யெல்லாம் கொண்டு, போர்ப்படையோடு இடையே கலந்து விளங்கும் சிறப்பால் மேகங்கள் நிரம்பிய இடியோசையும் தாழுமாறு எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து விளங்கின.

காளம் - எக்காளம். தழங்கு ஒலி - பேரொலி. பேரி - பேரிகை. வெங்குரல் - கொடிய குரல் ஒலி. கண்டை - ஒருவகைப்பறை.துடி - உடுக்கை. திமிலை - சல்லரிப்பறை. தட்டி - கரடிப்பறை. சின்னம் - ஊதுகுழல் வகை. மிடைந்து - இடை கலந்து. மங்குல்வான் - மேகம் சூழ்ந்த ஆகாயம். இயம்பி - ஒலித்து. மல்க - நிரம்ப. 31

582. தூரியத் துவைப்பும் முட்டும்
சுடர்ப்படை ஒலியும் மாவின்
தார்மணி இசைப்பும் வேழ
முழக்கமும் தடந்தேர்ச் சீறும்
வீரர்தம் செருக்கின் ஆர்ப்பும்
மிககெழுந்து ஒன்றாம் எல்லைக்
காருடன் கடைநாள் பொங்கும்
கடல்எனக் கலித்த அன்றே.

தெளிவுரை: வாத்தியங்களைத் தட்டி இயம்புகின்ற ஒலியும், சுடர்மிகு படைக்கலன்களின் ஒலியும், குரைகளின் கழுத்தில் மாலையாகக் கட்டிய மணியோசையும், யானைகள் பிளிறும் முழக்கமும், பெரிய தேர்கள் செல்லும் ஒலியும், சீற்றம் மிக்க படைவீரர்களின் ஆரவாரமும் ஒருசேர எழுந்து ஆகாயத்தின் எல்லைவரை சென்று யுகம் முடிவில் தோன்றும் மேகத்தில் உண்டாகும் இடி முழக்கத்தோடு பொங்கும் கடலின் ஆரவாரம் போன்று ஒலித்தது.

தூரியம் - வாத்தியம். துவைப்பு - முழக்கம் ஒலிமுட்டும் - மோசம் வேழ முழக்கம் யானையின் பிளிறில் ஒலிகார் - மேகம் கடைநாள் - யுக முடிவு. கலித்த - ஒலித்த 32

583. பண்ணுறும் உறுப்பு நான்கில்
பரந்தெழு சேனை எல்லாம்
மண்ணிடை இறுகால் மேன்மேல்
வந்தெழுந் ததுபோல் தோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன்
தானைபின் தொடரத் தான்ஓர்
அண்ணல்அம் புரவி மேல் கொண்டு
அரசமா வீதி சென்றான்.

தெளிவுரை: அலங்கரித்து ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய படைகள் யாவும் ஊழிப் பெருங்காற்று போன்று மேன்மேல் வந்து எழுந்து பின் தொடர்ந்துவர, வெண்கொற்றக் குடையுடைய மன்னர் பெருமையுடைய குதிரையின் மீது ஏறி முன்னே சென்று அரச வீதியை அடைந்தார்.

பண்ணுறுதல் - ஒழுங்கு நிலை பெறுதல். உறுப்பு நான்கு - யானை, குதிரை, தேர், காலாள் படைகள். இறுகால் - ஊழிப் பெருங்காற்று. கவிகை - வெண் கொற்றக் குடை. தானை - சேனை. புரவி - குதிரை. 33

மன்னர் ஆங்கு எறிபத்த நாயனாரைக் காணுதல்

584. கடுவிசை முடுகிப் போகிக்
களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளம் குறுகச் சென்றான்
பகைப்புலத் தவரைக் காணான்
விடு சுடர் மழுஒன்று ஏந்தி
வேறுஇரு தடக்கைத்து ஆய
அடுகளிறு என்ன நின்ற
அன்பரை முன்பு கண்டான்.

தெளிவுரை: விரைவாகச் சென்று ஆங்கு பட்டத்து யானையோடு வீரர்களும் இறந்து கிடக்கும் இடத்தை அடைந்த மன்னர், பகைவர் எவரும் காணப்பெறாது சுடர் மழுவேந்திய நீண்ட இரு கைகளையுடைய யானை போன்று நிற்கும் அன்பர் ஒருவரை நேரில் கண்டார்.

விரை - விரைவு. படுகளம் - யானை இறந்த இடம். அடுகளிறு - எறிபத்தரைக் குறித்தது. அன்பர் - சிவனடியார். 34

யானையின் அருகில் நிற்கும் எறிபத்தரை நோக்கி மன்னன் வினவுதல்

585. பொன்தவழ் அருவிக் குன்றம்
எனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்றுள் என்றும்
நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவர் அடியார் ஆனார்
கொன்றவர் இவர்என்று ஓரான்
வென்றவர் யாவர் என்றான்
வெடிபட முழங்கும் சொல்லான்.

தெளிவுரை: செம்பொன் திகழும் அருவி போன்று இரத்தம் பெருக மலை போன்று தரையில் புரளும் களிற்றின் முன்பு நின்றவர் அம்பலத்துள் திருநடனம் பயிலும் வெள்ளி மலையாகிய கயிலை நாதரின் அடியவராக உள்ளவர். ஆதலால் அவரை நோக்கி இவரே இவ் யானையைக் கொன்றிருக்க மாட்டார் என்று எண்ணிய வெடியோசையென முழங்கும் சொல்லையுடைய மன்னர் 'வென்றவர் யாவர்' என்றார்.

அருவி - யானையின் இரத்தத்தைக் குறித்தது. மன்று - தில்லையம்பலம். நிருத்தம் - திரு நடனம். வெள்ளிக் குன்று - கயிலை மலை. வெடிபட முழங்கும் சொல்லான் - மன்னன். 35

யானையைக் கொன்றவர் எறிபத்தர் என்று காவலர் தெரிவித்தார்

586. அரசன் ஆங்கு அருளிச் செய்ய
அருகு சென் றணைந்து பாகர்
"விரைசெய் தார் மாலை யோய்நின்
விறல்களிற் றெதிரே நிற்கும்
திரை செய் நீர் உலகின் மன்னன்
யாருளர் தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்ற
இவர்" எனப் பணிந்து சொன்னார்.

தெளிவுரை: அரசன் வினவ, பாகர்கள் விரைந்து சென்று பணிந்து, நறுமணம் கமழும் மாலையணிந்த தலைவனே! நின்னுடைய வெற்றி மிகும் பட்டத்து யானையை எதிர்த்துத் தீங்கிழைக்கக் கூடியவர்

கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள். தன் கையில் மழுப்படையைக் கொண்டு நிற்கும் இவரே தீங்கு செய்தார்." என்று எறிபத்தரைச் சுட்டிக் காட்டிக் கூறினார்கள்.

விரை செய்தார் - நறுமணம் தரும் மலர்மாலை. விறல் - வெற்றி; வலிமை. திரை செய்ய நீர் - அலைகளையுடைய கடல் பரசு - மழு 36

சிவனடியார் தவறு செய்ய மாட்டார் என்று உறுதி கொண்டு, யானை செய்த குற்றத்திற்கு இந்தத் தண்டனை போதுமோ என்று மன்னர் கூறுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

587. குழையணி காதி னானுக்கு
அன்பராம் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார்
பிழைத்ததுண்டு என்றுட் கொண்டு
மழைமத யானை சேனை
வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவி மேல் நின்று
இழிந்தனன் உலக மன்னன்.

தெளிவுரை: காதில் குழையணிந்த சிவபிரானுக்கு அன்பராகவும், நற்குணச் சீலராகவும் விளங்கும் அவ் அடியவர் யானை பிழை செய்திருந்தால் அன்றிக் கொல்ல மாட்டார், ஆகையால் பட்டத்து யானை பிழை செய்திருத்தல் வேண்டும் என்று உறுதி செய்து, மழை போன்று மதநீர்பொழியும் யானை முதலான நான்கு படைகளையும் நிற்குமாறு செய்து, உலக மன்னரான அவ்வேந்தர் வீரம் மிக்க குதிரையின் மேலிருந்து கீழே இறங்கினார்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் பல்வகையான சிறப்புகள் எடுத் தோதப்படுகின்றன. சிவபிரான் அடியவர்கள் நற்குண நற்செய்கைகளையுடைவர்கள் என்னும் சிறப்பு, "குணத்தின் மிக்கார்" என்று சாற்றப்பட்டது. இத்தன்மையில் அரசன் அசைவுறாத உறுதி பூண்ட தன்மையாயிற்று. இதன் வழி மன்னர் சிவனடியார்களின் நற்பாங்கினை நன்கு அறிந்தவர் என்பது மட்டுமல்லாது பிறர் வாயிலாகவோ நேர் விசாரணை இன்றியோ அறிந்தனராதலும் சாற்றி, நுண்ணறிவாற்றலை இவண் சுட்டுதலும் ஆயிற்று. இவ்வகையில் செங்கோலின் மாட்சியுடன் மேவும் அரசனின் தகைமையைத்

திருவள்ளுவர், திருக்குறள் 546 - இல்

"வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்."

என்று நவின்றவாறும் காண்க.

கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த சோழ மன்னனான புகழ்ச் சோழர் ஒரு சிவனடியார் என்பதும், சைவ சமயம் உலகத்தில் ஒளிர்ந்து அன்பினை வளர்த்து மேலோங்கச் செய்யவல்லது என்று திருப்பாட்டு 557 - இல் உணர்த்தியதைத் தொடர்ந்து நிலை நாட்டும் வகையும் கொண்டு உலகில் இனிது அருளொளிர மேவும் அரசனது சிறப்பினை." உலக மன்னன் என உணர்த்தப்பட்டது.

குழை - சிவபிரான் அணியும் காதணி. அன்பர் - எறிபத்த ரைக் குறித்தது. பிழைத்தது - தவறு செய்தது. உட்கொண்டு - உறுதி பூண்டு. மழை மேகம் - பெருக்கியோடும் மத நீர். மாற்றி - நிறுத்தித் தடுத்து. உழை - பக்கம். வயப் புரவி - வலிமையுடைய குதிரை. இழிந்தனன் - கீழே இறங்கினான். உலக மன்னன் - புகழ்ச் சோழ வேந்தன்; சைவத்தை உலகெங்கும் ஒளிரச் செய்யும் அருள் நெறியுடைய அரசன் என்க. 37

588. மைத்தடங் குன்று போலும்
மதக்களிற்று எதிரே இந்த
மெய்த்தவர் சென்ற போது
வேறொன்றும் புகுதா விட்ட
அத்தவம் உடையன் ஆனேன்
அம்பால வாணர் அன்பர்
இத்தகை முனியக் கேட்டேன்
எண்கொலோ பிழையென்று அஞ்சி;

தெளிவுரை: அரசன், கரிய பெரிய மலை போன்று விளங்கும் இந்த மதம் கொண்ட யானையின் எதிரே மெய்த்தவத்தையுடைய சிவனடியார்க்குத் தீங்கு நேராத செம்மையே, தான் செய்த தவப் பயன் என்று எண்ணி, அம்பலவாணர் அன்பர்க்கு இத்துணைச் சினம் வருவதற்குத் தான் காரணம் ஆனதையும் கொண்டு பேரச்சம் உடையவராய் வருந்தினார்.

மைத்தடங்குன்று - கரிய பெரிய மலை; யானைக்கு உவமை. மெய்த்தவர் - எறிபத்தர். வேறொன்று புகுதா - நாயனார்க்குத் தீங்கு நேராத செய்கையைக் குறித்த சொல். முனிய - சினம் கொள்ள. கெட்டேன் - அந்தோ என்னும் இரக்கம் குறிப்பு. அஞ்சி - இது அடுத்த பாடலில் வினைமுடிபு பெறும். 38

589. செறிந்தவர் தம்மை நீக்கி
அன்பர்முன் தொழுது சென்று "ஈது
அறிந்திலேன் அடியேன் அங்குக்
கேட்டதொன்று அதுதான் நிற்க
மறிந்த இக் களிற்றின் குற்றம்
பாகரோடு இதனை மாள
எறிந்ததே போது மோதான்
அருள் செயும்" என்று நின்றார்.

தெளிவுரை: மன்னன் தன்னைச் சூழ்ந்து நெருங்கி நின்றவர்களை நீக்கி, எறிபத்தரிடம் சென்று தொழுது, "நான் கேட்ட செய்தி வேறு; அது ஒருபுறம் நிற்க. இச்செயலை நான் அறிகிலேன். எதிர்த்த இக்குற்றத்திற்குப் பாகரோடு இவ் யானை மாளுமாறு அளித்த தண்டனை போதுமோ! கூறுக." என்றார்.

செறிந்தவர் - நெருங்கிச் சூழ்ந்து நின்ற மன்னரின் பரிவாரங்கள். அன்பர் - எறிபத்தர். அங்குக் கேட்டது - யாரோ சிலர் பட்டத்து யானையைக் கொன்றனர் என்று நவின்றதனைப் பாடல் 577 - இல் உள்ளவாறு காண்க. மறிந்த - எதிர்த்த. எறிந்தது - வீழ்த்தியது. அருள் செயும் - கூறுக.

39

நாயனார் கூறுதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

590. மன்னவன் தன்னை நோக்கி
வானவர் ஈசர் நேசர்
சென்னிஇத் துங்க வேஷம்
சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர் சாத்தக்
கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத்
தரைப்படத் துணித்து வீழ்த்தேன்.

தெளிவுரை: மன்னரை நோக்கி, தேவர்களின் தலைவரான சிவபிரான் அன்புக்குரிய எறிபத்தர், "சோழனே! சிவகாமி யாண்டார் என்னும் அன்பர் கொய்து நாகத்தை ஆபரணமாக உடைய ஈசனார்க்குச் சாத்தக் கொண்டு வரும் மலர்களைப் பறித்துச் சிந்த இவ் யானையைத் தரையில் விழுமாறு வெட்டி வீழ்த்தினேன்." என்றார்.

வானவர் ஈசர் - தேவர் பிரானாகிய சிவபிரான். நேசர் - அன்பு மிக்க எறிபத்தர். சென்னி - சோழனே என்னும் விளி; சென்னி, செம்பியர் வளவர் என்பன சோழர்களுக்கு வழங்கப்பெறும் சிறப்புப் பெயர் என்க. துங்க வேழம் - மிக உயர்ந்ததான பட்டத்து யானை. பன்னகா பரணர் - நாகத்தை ஆபரணமாக உடைய சிவபிரான். பள்ளித்தாமம் - மலர்; பள்ளி - சயனித்தல். தாமம் - மலர் மாலை; இறைவன் திருமேனியில் சயனம் கொள்ளும் சிறப்புப் பெயராய் உரைத்தலுமாம். துணித்து - வெட்டி. 40

591. "மாதங்கம் தீங்கு செய்ய
வருபரிக் காரர் தாமும்
மீது அங்குக் கடாவு வாரும்
விலக்கிடாது ஒழிந்து பட்டார்
ஈதிங்கு நிகழ்ந்த" தென்றார்
எறிபத்தர் என்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து
பருவரைத் தடந்தோள் மன்னன்.

தெளிவுரை : "யானை தீங்கு செய்ய அண்மையில் வரும் பரிக்காரரும், அதன் மீது ஏறியமர்ந்து செலுத்தும் பாகரும் தீங்கு செய்தலினின்று தடுக்காது இருந்ததால் அவர்களும் வெட்டப்பட்டு மாண்டார்கள். இதுவே இங்கு நிகழ்ந்தது, என்று எறிபத்தர் கூற,அதனைக் கேட்டு அஞ்சிய மலை போன்ற அகன்ற தோளுடைய மன்னர், முறைப்படி நாயனார் பாதங்களைத் தொழுது உரைக்கலானார்.

இவண் சிவனடியாரான சிவகாமியாண்டார்க்குத் தீங்கு செய்ததைக் கண்டு அடைந்த துன்பமும் எறிபத்தரின் சீற்றமும் அரசர்க்கு அச்சவுணர்வைத் தந்தது என்க.

மாதங்கம் - யானை. கடவுவார் - யானைப் பாகர். ஒழிந்து பட்டார் - வெட்டப்பட்டு உயிர் துறந்தார்கள். மன்னன் - சோழ அரசர்; இது அடுத்த பாடலில் வினை முடிபு பெறும். 41

அரசர் தன்னைக் கொல்லுமாறு உடைவாளை எடுத்து நாயனாரிடம் கொடுத்தல்

592. "அங்கணர் அடியார் தம்மைச்
செய்த இவ் அபரா தத்துக்கு
இங்கிது தன்னால் போதாது
என்னையும் கொல்ல வேண்டும்

மங்கல மழுவால் கொல்கை
வழக்கும் அன்று இது ஆம்" என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக்
கொடுத்தனர் தீர்வு நேர்வார்.

தெளிவுரை: "சிவபிரான் அடியவராகிய சிவகாமியாண்டார்க்குச் செய்த தீங்குக்கு இத்தகைய தண்டனை போதாது. என்னையும் கொல்ல வேண்டும் மங்கலம் பெறும் மழுப்படை கொண்டு கொல்லுதல் முறைமையாகாது. ஆதலால் இந்த உடைவாளே அதற்கு உரியது." என்ற அத்தீங்குக்குத் தீர்வு காணும் வகையில் மன்னர் வாளைக் கொடுத்தார்.

இவண் மழுப்படையானது சிவனாரின் திருக்கையில் ஏந்தும் படையாதலின் அதனைத் தவிர்த்து உடைவாளைத் தந்தார் என்பதாம். இச்செய்தி திருப்பாட்டு 3961 - இல் புகழ்ச் சோழர் நாயனார் புராணத்திலும் - 15, உரைக்கப்பெறுதல் காண்க.

அங்கணர் - சிவபிரான். அடியார் - சிவகாமியாண்டார். அபராதம் - அடியார் வைத்திருந்த பூக்கூடையைப் பறித்த செயலுக்குரிய தண்டனை. இது தன்னில் - யானையையும் அதன் பாகர்கள் ஐவரையும் மட்டும் துணிப்பது. மங்கல மழு - முத்திச் செல்வத்தை அளிக்கும் மழுப்படை. இது - உடைவாளைக் குறித்தது. 42

அரசனின் அருள் நெறிகண்ட நாயனார் உடைவாளை வாங்கித் தன்னுயிரைப் போக்க முனைதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

593. வெந்தழல் சுடர்வாள் நீட்டும்
வேந்தனை நோக்கிக் 'கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்கு
அளவின்மை கண்டேன்" என்று
"தந்தவாள் வாங்க மாட்டார்
தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி"
வாங்கினார் தீங்கு தீர்ப்பார்.

தெளிவுரை: நாயனார் வெம்மை விளங்கும் ஒளிர் வாள் நீட்டும் மன்னரை நோக்கி, "அந்தோ! எல்லையில்லாத புகழ்கொண்டு விளங்கும் இவர்தம் அன்புக்கு அளவின்மை கண்டேன்." என்று நினைத்தவராகிப் பின்பு அதனை வாங்கவில்லையானால் அரசர்

தன்னைத் தானே மாய்த்துக் கொள்வார் என்று சிந்தனை செய்து, அச்சம் கொண்டு அத்தீங்கினைத் தீர்ப்பவரானார்.

அந்தமில் புகழான் - அளவில்லா புகழ் கொண்ட புகழ்ச் சோழர்.
துறக்கும் - உயிரைப் போக்கிக் கொள்ளுதல் 43

594. வாங்கிய தொண்டர் முன்பு
மன்னனார் தொழுது நின்றே
"ஈங்கெனை வாளி னால் கொன்று
என்பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப்
பெற்றனன் இவர்பால்" என்றே
ஆங்கு அவர் உவப்பக் கண்ட
எறிபத்தர் அதனுக்கு அஞ்சி;

தெளிவுரை: எறிபத்தர் வாளை வாங்கிய நிலையில், மன்னர் தொழுது நின்று, "இங்கு இவர் வாளினால் கொன்று என் பிழை தீர்க்கும் வகையில் உதவப் பெற்றேன்." என்று மகிழ்வு கொண்டதைக் கண்டார்

இவண் எறிபத்தர் அஞ்சி என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.
தொண்டர் - எறிபத்தர். உவப்ப - மகிழ. 44

595. வன்பெருங் களிறு பாகர்
மடியவும் உடைவா ளைத் தந்து
'என்பெரும் பிழையினாலே
என்னையும் கொல்லும்" என்னும்
அன்பனார் தமக்குத் தீங்கு
நினைத்தனன் என்று கொண்டு
முன்பெனது உயிர்செ குத்து
முடிப்பதே முடிவென்று எண்ணி;

தெளிவுரை: "வலிமையுடைய பெரிய பட்டத்து யானையும் பாகர்களும் மடிய, அரசர் தன் உடைவாளைத் தந்து, பெரும் பிழையால் தன்னையும் கொல்லும் என்று உரைத்து நிற்கும் இத்தகைய அன்புள்ளம் கொண்டவர்க்குத் தீங்கு நினைத் தனனே." என்று கருத்தில் கொண்டு தன்னுடைய உயிரை முன்னதாகப் போக்கிக் கொள்ள நாயனார் எண்ணினார்.

இவண் புகழ்ச் சோழர் சிவனடியார் என்பதால் அவரது உடைமையான பட்டத்து யானையும் பாகர்களையும் வெட்டி வீழ்த்திய செயல் தீங்கு நினைத்ததாக நாயனார் கருதினார் என்க.

அன்பனார் - புகழ்ச் சோழர். செகுத்து முடிப்பது - உயிர் துறப்பது. எண்ணி என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக. 45

596. புரிந்தவர் கொடுத்த வாளை
அன்பர்தம் கழுத்தில் பூட்டி
அரிந்திடல் உற்ற போதில்
அரசனும் 'பெரியோர் செய்கை
இருந்தவாறு இதுஎன் கெட்டேன்"
என்றெதிர் கடிதின் சென்று
பெருந்தடந் தோளால் கூடிப்
பிடித்தனன் வாளும் கையும்.

தெளிவுரை: மன்னர் விரும்பிக் கொடுத்த வாளை எறிபத்தர் தம் கழுத்தில் பூட்டி அரிந்து உயிரைத் துறக்க முற்பட்டபோது அரசர் அதனைக் கண்டு, "பெரியோர் செய்கை இருந்தவாறு என் கொல்! அந்தோ!" என்று விரைந்து சென்று தன் பெரிய தோள்களால் கூடி, நாயனாரின் வாளையும், கையையும் பிடித்துத் தடுத்தார்.

புரிந்து - விரும்பி. அன்பர் - எறிபத்தர். பெரியோர் - எறிபத்தர். கெட்டேன் - அந்தோ! 46

வானில் அசரீரி வாக்குத் தோன்றி உரைத்தலும் இறந்த யானையும் பாகரும் எழுதலும்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

597. வளவனார் விடாது பற்ற
மாதவர் வருந்துகின்ற
அளவிலாப் பரிவில் வந்த
இடுக்கணை அகற்ற வேண்டிக்
களம் அணி களத்துச் செய்ய
கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல் நின்று
எழுந்தது பலரும் கேட்ப.

தெளிவுரை: சோழ மன்னர் எறிபத்தரை விடாது பற்ற, மாதவத் தினராகிய எறிபத்தர், தன்னை மன்னவர் பற்றும்படியாயிற்றே என்று வருந்துபவராய் இருந்தார். இத்தகைய துன்பமானது ஒருவர்

மற்றொருவர் பால் கொண்ட அளவற்ற அன்பால் உண்டாக அதனைத் தீர்க்கும் வகையில் நீலகண்டத்தை யுடைய கண்ணுதற் பெருமான் அருளால் பலரும் கேட்குமாறு ஆகாயத்திலிருந்து அசரீரி வாக்கு எழுந்தது.

வளவனார் - சோழ மன்னர். மாதவர் - எறிபத்தர். களமணிகளம் - நீலகண்டம். கண்ணுதல் - நெற்றிக் கண்ணுடைய சிவபிரான். வாக்குக் கிளர் ஒளி - அசரீரி வாக்கு. 47

598. "தொழும் தகை அன்பின் மிக்கீர்
தொண்டினை மண்மேல் காட்டச்
செழுந்திரு மலரை இன்று
சினக்கரி சிந்தத் **திங்கள்**
கொழுந்தணி வேணிக் கூத்தர்
அருளினால் கூடிற்று" என்று அங்கு
எழுந்தது பாகரோடும்
யானையும் எழுந்த தன்றே.

தெளிவுரை: "தொழுகின்ற அன்பின் மிக்கீர்! உங்கள் திருத்தொண்டினை இவ்வுலகத்தில் காட்டும் பொருட்டுச் செழுமையான மலர்களைச் சினங்கொண்ட யானை பறித்துச் சிந்துமாறு பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்துள்ள அம்பலக் கூத்தர் அருளினால் கூடிற்று." என அசரீரி வாக்கு எழுந்தது. உடனே பாகரும் உயிர்பெற்று எழ, யானையும் உயிர்த்து எழுந்தது.

சினக்கரி - பட்டத்து யானை. திங்கள் கொழுந்து - பிறைச் சந்திரன். வேணி - சடைமுடி. கூத்தர் - நடராசப் பெருமான். 48

திருத்தொண்டர்கள் ஒருவரையொருவர் பணியத் தேவர்கள் பூமாரி பொழிதல்

599. ஈரவே பூட்டும் வாள்விட்டு
எறிபத்தர் தாமும் அந்த
நேரியர் பெருமான் தாள்மேல்
விழுந்தனர் நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக
எறிந்து அவர் கழல்கள் போற்றிப்
பார்மிசைப் பணிந்தார் விண்ணோர்
பனிமலர் மாரி தூர்த்தார்.

தெளிவுரை: தம் கழுத்தை அரியும்படி வைத்த வாளைக் கைவிட்டு எறிபத்தர், சோழ மன்னரின் பாதங்களில் விழுந்து வணங்கினார். புகழ்ச் சோழரும் போர்வாளை எறிந்து எறிபத்தரின் கழல்களைப் போற்றி நிலமிசைப் பணிந்து வணங்கினார். இவ்வரிய காட்சியைக் கண்ட தேவர்கள் வானுலகத்திலிருந்து மலர்மாரி பொழிந்தார்கள்.

ஈர - கழுத்தை அறுக்க. பூட்டும் வாள் - பதிக்க வைக்கம் வாள். நேரியர் பெருமான் - சோழ மன்னர். நிருபர் கோன் - சோழ மன்னர். அவர் கழல்கள் - ஏற்பத்தரின் பாதங்கள். பார்மிசை - நிலத்தின் மீது. விண்ணோர் - தேவர்கள். பனிமலர் - குளிர்ந்த தேவலோக மலர். தூர்த்தார் - பொழிந்தனர். 49

தரையில் சிதறிய பூக்கள் கூடையில் திரண்டு நிறைதல்

600. இருவரும் எழுந்து வானில்
எழுந்தபே ரொலியைப் போற்ற
அருமறைப் பொருளாய் உள்ளார்
அணிகொள்பூங் கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாமம்
நிறைந்திட அருள மற்றஅத்
திருவருள் கண்டு வாழ்ந்து
சிவகாமி யாரும் நின்றார்.

தெளிவுரை: எறிபத்த நாயனாரும் புகழ்ச் சோழ நாயனாரும் எழுந்து வானில் எழுந்த ஒலியைக் கேட்டுப் போற்றித் துதிக்க, அருமறைப் பொருளாய் உள்ள சிவபிரான் பூங்கூடையில் மருவிய மலர்கள் யாவும் திரண்டு நிறைந்திடுமாறு அருள் புரிய அத்திருவருட் செயலைக் கண்டு சிவகாமி யாண்டாரும் மனம் மகிழ்ந்து நின்றார்.

இருவர் - எறிபத்தரும், புகழ்ச் சோழரும். அருமறைப் பொருளாய் உள்ளார் - சிவபிரான். பள்ளித்தாமம் - மலர்கள். வாழ்ந்து - மனம் பூரிக்க மகிழ்ந்து. நின்றார் - விளங்கினார். 50

யானை உயிர்பெற்று எழுந்து பிளிற அதனைப் பாகர்கள் மன்னரிடம் கொண்டு வருதல்

601. மட்டவிழ் அலங்கல் வென்றி
மன்னவர் பெருமான் முன்னர்
உட்டரு களிப்பி னோடு
உறங்கி மீது எழுந்தது ஒத்து

முட்டவெங் கடங்கள் பாய்ந்து
முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு
பாகரும் அணைய வந்தார்.

தெளிவுரை: தேன் மணம் கமழும் மாலையுடைய வெற்றி மேவும் புகழ்ச் சோழரின் முன்னர் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க, உறங்கி எழந்தது போன்று மதநீர் பாய மேகம் போன்று முழங்கிய பட்டவர்த்தனம் என்னும் பட்டத்துயானை எழ, அதனை யானைப் பாகர்கள் கொண்டு வந்தார்கள்.

மட்டு - தேன். அலங்கல் - மாலை. மன்னவர் பெருமான் - புகழ்ச்சோழர். உட்டரு களிப்பு - உள்ளத்தில் விளங்கும் மகிழ்வு. 51

எறிபத்தர் யானை மீது எழுந்தருளுமாறு மன்னரை வேண்டுதல்

602. ஆனசீர்த் தொண்டர் கும்பிட்டு
"அடியனேன் களிப்ப இந்த
மான வெங் களிற்றில் ஏறி
மகிழ்ந்தெழுந் தருளும்" என்ன
மேன்மை அப் பணிமேல் கொண்டு
வணங்கிவெண் குடையின் நீழல்
யானை மேற்கொண்டு சென்றார்
இவுளிமேற்கொண்டு வந்தார்.

தெளிவுரை: அப்போது, சீர்த்தொண்டரான எறிபத்தர் கும்பிட்டு "அடியேன் மகிழுமாறு இப்பெருமையுடைய யானையின் மீது ஏறி மகிழ்வுடன்செல்ல வேண்டும்." என்று தெரிவிக்கக் குதிரையின் மீது ஏறி வந்த புகழ்ச் சோழ மன்னர், மேன்மையுடையதாய் அச்சொல்லைக் கருதி வணங்கி வெண்கொற்றக் குடை விளங்கும் அவ் யானையின் மீதுள்ள அம்பாரியில் அமர்ந்து சென்றார்.

சீர்த்தொண்டர் - எறிபத்தர். மான - பெருமையுடைய இவுளி - குதிரை. 52

சோழ மன்னர் அரண்மனை புகுதல்

603. அந்நிலை எழுந்த சேனை
ஆர்கலி எழும் ஒன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப
மண்ணெலாம் மகிழ்ந்து வாழ்த்தப்

பொன்னெடும் பொதுவில் ஆடல்
நீடிய புனிதர் பொன்தாள்
சென்னியில் கொண்டு சென்னி
திருவளர் கோயில் புக்கான்.

தெளிவுரை: அப்போது சேனையானது ஏழு கடல்கள் ஒன்று சேர்ந்து எழுப்பும் ஆரவாரம் போன்று வாழ்த்தி ஒலிக்க, மண்ணுலகில் உள்ள மக்கள் மகிழ்ந்து வாழ்த்த, பொன்னம் பலத்தில் திரு நடனம் செய்யும் புனிதராகிய நடராசப் பெருமான் திருப்பாதத்தைத் தலையில் சூடியவராய்ச் சோழ மன்னர், செல்வம் தழைக்கும் அரண்மனையை அடைந்தார்.

ஆர்கலி ஏழு : 1, பால் கடல்; 2. தயிர்க் கடல்; 3. நெய்க் கடல்; 4. தேன்கடல்; 5. கருப்பஞ்சாற்றுக் கடல்; 6. நன்னீர்க் கடல்; 7. உவர்நீர்க் கடல்.

மண் - மண்ணுலக மக்கள். பொன்னெடும் பொது- பொன்னம்பலம். ஆடல் நீடிய புனிதர் - நடராசப் பெருமான். பொன் தாள் - அழகிய திருப்பாதம். சென்னியில் கொண்டு - தலை மேல் கொண்டு; உயர்ந்த சிந்தனையுடையவராய். சென்னி - சோழ மன்னர். கோயில் - அரண்மனை. 53

சிவகாமியாண்டார் திருக்கோயிலை அடைய ஏறிபத்தர் தம் திருத்தொண்டு ஆற்றச் செல்லல்

604. தம்பிரான் பணிமேல் கொண்டு
சிவகாமி யாரும் சார
எம்பிரான் அன்ப ரான
எறிபத்தர் தாமும் என்னே
அம்பலம் நிறைந்தார் தொண்டர்
அறிவதற்கு அரியார் என்று
செம்பியன் பெருமை யுன்னித்
திருப்பணி நோக்கிச் சென்றார்.

தெளிவுரை:: சிவபிரானுக்குப் பூத்தொண்டு செய்யும் பணியை மேற்கொண்டு சிவகாமியாண்டார் செல்ல, எம்பிரான் அன்பரான எறிபத்த நாயனாரும் திருவம்பலத்தில் விளங்கும் கூத்தப் பெருமான் திருத்தொண்டர் அறிவதற்கு அரியவர் என்று புகழ்ச் சோழரின்

பெருமையைச் சிந்தை கொண்டவராய்த் தம் திருத்தொண்டினை ஆற்றும் வகையில் தொடர்ந்து சென்றார்.

தம்பிரான் - சிவபிரான் - எம்பிரான். அன்பர் - சிவனடியார். தொண்டர் - புகழ்ச் சோழ மன்னர். செம்பியன் - சோழர் குல மன்னரான புகழ்ச் சோழர் திருப்பணி - அடியார்க்கு உதவும் தொண்டு. 54

எறிபத்த நாயனார் கணநாதர் ஆதல்

605. மற்றவர் இனைய வான
வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத்து அடியார் முன்சென்று
உதவியே நாளும் நாளும்
நற்றவக் கொள்கை தாங்கி
நலம் மிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்னால்
கோமுதல் தலைமை பெற்றார்.

தெளிவுரை: மற்றும் எறிபத்தர் இத்தன்மையில் வலிமையான பெரும் தொண்டாக, அடியவர்கள் உலகத்தில் பிறவற்றால் துன்புறும் போது தக்க தருணத்தில் உதவி புரிதலை நாள்தோறும் ஆற்றும் கொள்கை யுடையவராய் விளங்கி நலம் மிகும் கயிலை மலையின்கண் சிவபிரான் கணங்களுக்கு முன்னே கணநாயகராகும் தலைமை பெற்றார்.

அவர் - எறிபத்தர். வன்பெரும் தொண்டு - அடியவர்களைத் துன்புறுத்துவோர் யாராயினும் அவர்களை வருத்தி அழிப்பது என்க. இது அடிவர்க்கு உதவி செய்யும் பாங்குடைத்து. இத்தன்மையில் சக்தி நாயனாரின் திருத்தொண்டு அமைந்தமையைப் பின்னர் உரைக்கப் பெறுதல் காண்க. கொற்றவர் - சிவபிரான். கணத்தின் முன்னால் கோ முதல் - சிவகணத் தலைவர். 55

நாயனார் பெருமை சாற்றுதல் - கவிக்கூற்று

606. ஆளுடைத் தொண்டர் செய்த
ஆண்மையும் தன்னைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற
வளவனார் பெருமை தானும்
நாளும் மற்று அவர்க்கு நல்கும்
நம்பர்தாம் அளக்கில் அன்றி
நீளும் இத் தொண்டின் நீர்மை
நினைப்பின்யார் அளக்க வல்லார்.

தெளிவுரை: சிவபிரானுக்கு அடிமை பூண்ட தொண்டரான எறிபத்தர் செய்த வீரச் செயலையும், தன்னைக் கொல்லுமாறு, வாளினைக் கொடுத்துத் தாழ்ந்த நின்ற புகழ்ச் சோழரின் பொருமையையும் மற்றும் அத்தகைய பேறாளர்களுக்கு அருள் நல்கும் சிவபெருமானே அளந்து காட்டுதல் அல்லாது நீண்டு விளங்கும் இத்தொண்டின் பண்பினை வேறு யாரால் அளக்க முடியும்! இதுகவிக்கூற்று.

சிறப்புரை: திருஞான சம்பந்தரை ஆளுடைய பிள்ளையார் எனவும், திருநாவுக்கரசரை ஆளுடைய அரசர் எனவும், சுந்தர மூர்த்தி சுவாமிகளை ஆளுடைய நம்பி எனவும் வழங்குதல் போன்று எறிபத்த நாயனார் ஆளுடைய தொண்டர் எனச் சாற்றப்படுதல் காண்க. மாணிக்க வாசகரை ஆளுடைய அடிகள் என்று அழைக்கப்பெறும் மரபினையும் நோக்குக.

ஆளுடைத் தொண்டர் - எறிபத்தர். ஆண்மை - வீரச் செயல். வளவனார் - புகழ்ச்சோழர். நம்பர் - சிவபிரான். அளக்கில் - அளவு கொண்டு சாற்றும் சிறப்பு. நீர்மை - பண்பு. 56

எறிபத்தரின் பாதம் போற்றி, ஏனாதி நாதரின் திருச்செயலை உரைத்தல் - இது கவிக்கூற்று

607. தேனாரும் தண்பூங் கொன்றைச்
செஞ்சடை யவர் பொன் தாளில்
ஆனாத காதல் அன்பர்
எறிபத்தர் அடிகள் சூடி
வானாளும் தேவர் போற்றும்
மன்றுளார் நீறு போற்றும்
ஏனாதி நாதர் செய்த
திருப்பணி இயம்பல் உற்றேன்.

தெளிவுரை: தேன் விளங்கும் குளிர்ந்த கொன்றை மலர் சூடிய சிவந்த சடைமுடியுடைய சிவபிரான் திருத்தாளில் குறையாத பக்தியுடைய அன்பரான எறிபத்தர் தம் திருப்பாதங்களைத் தலையின் மிது தரித்து வணங்கி, வானுலகில் விளங்கும் தேவர்கள் போற்றும் அம்பலவாணரின் திருநீற்றைப் போற்றும் ஏனாதி நாதர் செய்த திருச்செயலைச் சொல்லலுற்றேன்.

தேன் ஆரும் - தேன் விளங்கும் ; வண்டு சூழ்ந்து ரீங்காரம் செய்தலும் ஆம். செஞ்சடையவர் - சிவபிரான். ஆனாத காதல் - குறையாத பக்தி. வானாளும் தேவர் - வானுலகத்தில் விளங்கும் தேவர்கள். மன்றுளார் - நடராசப் பெருமான். நீறு - திருநீறு. இயம் பல் - சொல்லுதல். 57

எறிபத்த நாயனார் புராணம் நிறைவுற்றது.

15. ஏனாதிநாத நாயனார் புராணம்

புராண வரலாற்றச் சுருக்கம்:

சோழநாட்டில் எயினனூரில் தோன்றிய ஈழ குலச் சான்றோர் ஏனாதி நாதர் ஆவர். இவர் திருநீற்றினிடத்துப் பேரன்பு கொண்டவராய் விளங்கி வந்தார். அரச குமாரர்களுக்கு வாட்பயிற்சி யளிக்கும் தொழிலை அவர் நடத்தி வந்தார். அவர் காலத்தில் அதிசூரன் என்னும் மற்றொரு வீரனும் அத் தொழிலைச் செய்து வந்தான். அவன் தன்னைவிடத் தொழில்முறையில் ஏனாதிநாதர் சிறப்புடன் விளங்கி வருவதையறிந்து காழ்ப்புற்றவனாய்த் தன்னிடம் பயிலும் மாணவர்கள் சூழ அவர் இல்லம் அடைந்து தலைவாயிலில் நின்று போர்க்கு அழைத்தான். நாயனாரும் போர்க்கோலம் கொண்டு புறப்பட்டார். அவரோடு அவருடைய மாணவர்களும், ஊர் மக்களும் படையேந்திச் சென்றார்கள். ஒரு வெளி இடத்தில் இரு திறத்தார்க்கும் போர் நிகழ, அதிசூரன் புறமுதுகிட்டு ஓடினான்.

அதிசூரன் வஞ்சனையால் ஏனாதிநாத நாயனாரைக் கொல்ல வேண்டும் என்று எண்ணித் தூதுவன் ஒருவனை அனுப்பி இருவர் மட்டும் தனித்துப் போர் செய்வோம் என்று தெரிவித்தான். நாயனாரும் அவ் அதிசூரன் குறிப்பிட்ட இடத்தை நோக்கிச் சென்றனர்.

அன்று அதிசூரன் நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து அதனைத் தன் கேடயத்தால் மறைத்துச் சென்றான். அதிசூரன் நெற்றியிலிருந்த திருநீற்றைக் கண்டதும் நாயனார், "இவர் சிவபிரான் தொண்டர் ஆயினார்." என்று எண்ணி நீராயுதரைக் கொன்றார் என்னும் பழியும் சாராதவாறு போரிடுவார் போல் காட்டி நிற்க, அவன் தன் கருத்தை முற்றுவித்தான்.

சிவபிரான் ஏனாதி நாத நாயனார் முன்எழுந்தருளித் தம்மை நீங்காத பெருவாழ்வு அளித்து மறைந்தருளினார்.

எயினனூரின் சிறப்புரைத்தல்

கொச்சகக் கலி

608. புண்டரிகம் பொன்வரைமேல்
ஏற்றிப் புவியளிக்கும்
தண்தரள வெண் கவிகைத்
தார்வளவர் சோணாட்டில்

வண்டறைபூஞ் சோலை வயல்
மருதத்தண் பணை சூழ்ந்து
எண்திசையும் ஏறியசீர்
எயில் மூதூர் எயினனூர்.

தெளிவுரை: புலிக்கொடியை அழகிய இமயமலையின் மீது ஏற்றி நிலவுலகத்தை ஆட்சி செய்யும், குளிர்ந்த வெண் முத்துக்கள் பதித்த வெண்கொற்றக் குடையின் கீழ் ஆத்தி மாலை தரித்த சோழர்களின் வளமையான நாட்டில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் பூஞ்சோலைகளும், வயல்கள் சூழ்ந்த பண்ணைகளும் நிறைந்து எட்டுத் திக்குகளிலும் உயர்ந்து ஓங்கும் மதில்கள் கொண்டு விளங்குவது எயினனூர்.

புண்டரிகம் - புலி. பொன்வரை - அழகு மிகுந்த இமய மலை. தண் தரளம் - குளிர்ந்த முத்து. வெண் கவிகை - வெண் கொற்றக் குடை. தார் - ஆத்தி மாலை. தண்பணை - குளிர்ந்த வயல். ஏறிய சீர் எயில் - உயர்ந்து விளங்கும் மதில். மூதூர் - தொன்மையான ஊர். 1

ஏனாதி நாத நாயனாரை உரைத்தல்

609. வேழக் கரும்பினொடு
மென் கரும்புதண் வயலில்
தாழக் கதிர்சாலி
தான் ஓங்கும் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து
மன்னியஅப் பொன் பதியில்
ஈழக்குலச் சான்றார்
ஏனாதி நாதனார்.

தெளிவுரை: நாணற் கரும்பினொடு இனிய மென் கரும்பும் குளிர்ந்த வயலில் சாலி என்னும் நெற்கதிர் விளைந்து முற்றித் தாழவும், வளம் பெருகும் தன்மையுடையதால் குடிமக்கள் தழைத்து வாழும் அந்நகரில் ஈழக் குலச் சான்றோராக ஏனாதி நாத நாயனார் திகழ்ந்தார்.

சிறப்புரை: நாட்டின் வளமைக்குக் கரும்பும் நெல்லும் காரணமாக இருத்தல் இவண் சாற்றப்பட்டது. இதுவே நாட்டின் அணியெனத் திகழ்தலை நான்மணிக் கடிகையில் விளம்பி நாகனார், பாடல் 11 - இல்,

"நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம் தனக்கணியாம்
தான் செல் உலகத்து அறம்."

என்று சாற்றியவாறும் காண்க.

வேழக்கரும்பு - நாணற் கரும்பு. சாலி - நெல் வகை. குடி -மக்கள். பதி - எயினனூர் என்க. ஏனாதி நாதனர் - ஏனாதி நாதர் என்னும் நாயனார் ஏனாதி என்பதைப் பட்டப் பெயராகவும் கொள்வர். 2

நாயனார் திருநீற்றுத் தொண்டில் நின்று படைத்தொழில் பயிற்றுவித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

610. **தொன்மைத் திரு நீற்றுத்**
தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற
நலம் என்றும் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி
வடிவாள்படை பயிற்றும்
தன்மைத் தொழில் விஞ்சை
யில்தலைமை சார்ந்துள்ளார்.

தெளிவுரை: தொன்மை விளங்கும் திருநீற்றுச் செல்வத்தைப் போற்றித் துதிப்பவராய் அத்திருநீற்றின் நாயகராய் மேவும் சிவபிரானை வழிபடும் நன்மைக்கண் நின்று, நலம் யாவும் குறைவறப் பெற்றவராய் ஏனாதி நாதர் விளங்கினார். அவர் அரச குமாரர்களுக்கு வாட்போர்ப் பயிற்சி தரும்தொழிலைச் சிறப்புறச் செய்து மேம்பட்டு விளங்கி வரலானார்.

சிறப்புரை: இவண் திருநீற்றின் செம்மையை முதன்மையாகக் கொண்டு சிவத்தொண்டு ஆற்றி வந்தமை சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருநீற்றின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர், 2 - ஆம் திருமுறை கோளறு பதிகத்தில்,

"கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவற்கு மிகவே."

என்று அருளிய வாறும் காண்க.

தொன்மைத் திருநீறு - சிவபிரான் திருமேனியில் ஒளிரும் திருவெண்ணீறு எம்பிரானைப் போலவே ஆதியந்தம் அற்றது என்க. விஞ்சை - வித்தை, படைத்தொழிற் கல்வியைக் குறித்தது. தலைமை - மேன்மை. 3

611. வாளின் படைபயிற்றி
வந்த வளம்எல்லாம்
நாளும் பெரு விருப்பால்
நண்ணும் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும்
காணாதார் தம்மையும் தொண்டு
ஆளும் பெருமை
அடித்தொண்டர்க்கு ஆக்குவார்.

தெளிவுரை: வாட் போரில் பயிற்சி யளிக்க அதனால் வந்த வருவாய் முழுமையும் நாள்தோறும் செய்யும் கடமைப் பாட்டுணர்வுடன் திருத்தாளும் சடைமுடியும் காண மாட்டாதவரான திருமால், பிரமன் ஆகியோரையும் தொண்டு கொண்டு ஆளும் பெருமையுடைய சிவபிரானின் அடித் தொண்டர்க்கு உரியதாக்கி அறங்களைச் செய்து வந்தார்.

வளம் - வருவாய். தாள் - ஈசன் திருப்பாதம். தட முடி - சடை முடி. காணாதார் - திருமால், பிரமன். அடித் தொண்டர் - சிவனடியார். 4

அதிசூரன் என்பவன் ஏனாதி நாதர்பால் பகை கொண்டிருத்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

612. நள்ளார்களும் போற்றும்
நன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை
இயல்பின் ஒழுகும் நாள்
தள்ளாத தங்கள்
தொழில் உரிமைத் தாயத்தின்
உள்ளான் **அதிசூரன்**
என்பாண் உளனானான்

தெளிவுரை: பகைவர்களும்போற்றிப் பாராட்டும் நற்குண நற்செயலில் பிறர் எள்ளிப் பழித்துப் பேசாதபடி இயல்பாக நாயனார் ஒழுகிவரும் நாளில், தள்ள முடியாத தொழிலாகிய படைக்கலப் பயிற்சி யளித்தலில் உரிமை கொண்டவனாய்ப் பங்காளித் திறத்தின் இருப்பவனாய் அதிசூரன் என்பவன் உளனானான்.

நள்ளார் - பகைவர். எள்ளாத - இகழாத. தாயத்தின் - பங்காளித் தன்மை. 5

613. மற்றவ னும்கொற்ற
வடிவாய் படைத்தொழில்கள்
கற்றவர்கள் தன்னில்
கடந்துள்ளார் இல்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து
மிக்கபெரு மிதம் வந்து
உற்றுலகில் தன்னையே
சால மதித்துள்ளான்.

தெளிவுரை: அத்தகைய அதிசூரன் வாட்போர்த் தொழிலில் தன்னைவிடக் கற்றுத் தேர்ந்தவர்கள் எவரும் இல்லை என்னும் பெருமிதத்தில் உற்று, வேறு எவரையும் மதிக்காது தன்னையே பெரிதும் மதித்து வந்தான்.

கடந்துள்ளார் - பயிற்சி மிக்கவர்கள். பெருமிதம் - தற்பெருமை. சால - பெரிதாக. 6

614. தான் ஆள் விருத்தி கெடத்
தங்கள் குலத் தாயத்தின்
ஆனாத செய்தொழிலாம்
ஆசிரியத் தன்மை வளம்
மேல் நாளும் தான் குறைந்து
மற்றவர்க்கே மேம்படலால்
ஏனாதி நாதர் திறத்து
ஏலா இகல் புரிந்தான்.

தெளிவுரை: இவ் அதிசூரன், தான் ஈட்டுகின்ற வருவாய் கெடத் தங்கள் குலத்தின் உரிமை எனப்படும் குறைவிலாத வாட் பயிற்சி யளிக்கும் ஆசிரியத் தன்மையில் வருவாய் மேலும் குறைய, ஏனாதி நாதர் சிறந்து மேம்படலால் அவர் திறத்துப் பொருத்தமில்லாத பகைமை கொண்டான்.

விருத்தி - வருவாய். தாயம் உரிமை. ஆனாத - குன்றாத. மற்றவர் - ஏனாதி நாதரைக் குறித்தது. ஏலா - பொருந்தாத. இகல் - பகைமை 7

615. கதிரோன் எழ மழுங்கிக்
கால்சாயும் காலை
மதிபோல் அழிந்து பொறா
மற்றவனும் சுற்றப்
பதியோர் உடன் கூடப்
பண்ணி அமர் மேல் சென்று
எதிர் போர் விளைப்பதற்கே
எண்ணிஅது துணிந்தான்.

தெளிவுரை: காலையில் கதிரவன் தோன்றியபோது இரவு நன்கு ஒளியுடன் விளங்கிய நிலவு ஒளி மங்கித் தோற்றப் பொலிவும் கெடுதல் போன்று அழிந்த அதிசூரன் என்பவன், பொறாமை மேற்கொண்டு தன் சுற்றத்தாரையும், மற்றவரையும் ஒன்று சேர்த்து ஏனாதி நாதரை எதிர்த்துப் போர் செய்யத் துணிந்தான்.

சிறப்புரை: இவண் ஏனாதி நாத நாயனார் கதிரவனுக்கும், அதிசூரன் கதிரவன் முன்பு ஒளி மழுங்கும் சந்திரனுக்கும் உவமை சாற்றியமை காண்க.

கால் சாயும் - தோற்றம் கெடும். காலை மதி - சூரியன் தோன்றியபின் எதிர்ப்படும் சந்திரன். பதியோர் - ஊரார். கூடப் பண்ணி - ஒன்று சேர்த்து. அமர் - போர். 8

அதிசூரன் ஏனாதி நாதரைப் போர்க்கு அழைத்தல்

616. தோள்கொண்ட வல்லாண்மைச்
சுற்றத்தொடும் துணையாம்
கோள்கொண்ட போர் மள்ளர்
கூட்டத்தொடும் சென்று
வாள்கொண்ட தாயம்
வலியாரே கொள்வதென
மூள்கின்ற செற்றத்தான்
முன்கடையின் நின்றழைத்தான்

தெளிவுரை:: தோளாற்றல் மிக்க வலிமையுடைய சுற்றத்தாரைத் துணையாய்க் கொண்டு, போர் வீரர்கள் சூழச் சென்ற அதிசூரன், சிறப்பின் மிக்கதான உரிமையை வலிமையுடையவர்களே கொள்ள

வேண்டும் என்று நீண்டு மேவும் பகையுணர்வு கொண்டு, ஏனாதி நாதர் மனையின் தலை வாயிலில் சென்று போர்க்கு அழைத்தான்.

வல்லாண்மை - வலிமை. மள்ளர் - வீரர். வாள்கொண்ட தாயம் - வாட் பயிற்சி அளிக்கும் உரிமை. வலியார் - வலிமையுடையவர். செற்றம் - பகை. முன் கடை - ஏனாதி நாதர் மனையின் வாயிற்புறம் 9

ஏனாதி நாதர் போர்க்குப் புறப்படுதல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

617. வெங்கண் புலிகிடந்த
வெம்முழையின் சென்றழைக்கும்
பைங்கண் குறு நரியே
போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து
போர்குறித்து நேர் நின்றே
அங்கண் கடை நின்று
அழைத்தான் ஒலி கேளா;

தெளிவுரை: கொடிய விழி நோக்குடைய புலி படுத்துக் கிடக்கும் கொடிய குகையிடத்துச் சென்று அழைக்கும் குறுகிய பார்வையுடைய சிறு நரியைப் போன்று, அதிசூரன், போர் வீரர்களோடு ஆரவாரம் செய்து நாயனார் மனை வாயிற் புறத்தினை அடைந்து அழைத்தான்.

இவண் ஒலி கேளா என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

வெங்கண் - கொடிய விழிநோக்கு. வேம்முழை - புலியின் இருப்பிடத்தின் கடுமையைக் குறித்தது. பைங்கண் - வஞ்சக நோக்குடைய சிறிய நரி; இது பின்னர் அதிசூரன் செய்யவுள்ள சூழ்ச்சித் திறனைக் குறித்தலும் ஆம். பொங்கி - ஆரவாரம் செய்து. அங்கண் - ஏனாதி நாதர் மனை. கடை - வாயிற் புறம். ஒலிகேளா - ஒலி கேட்டு; இது அடுத்த பாடலில் தொடர்பு பெறும். 10

618. ஆர்கொல் பொரஅழைத்தார்
என்று அரி யேற்றின் கிளர்ந்து
சேர்வு பெறக் கச்சில்
செறிந்த உடைமேல் வீக்கி
வார்கழலும் கட்டி
வடிவாள் பலகையொடு
போர் முனையில் ஏனாதி
நாதர் புறப்பட்டார்.

தெளிவுரை: போர்க்குரல் கொடுத்ததைக் கேட்டு ஆண் சிங்கம் போன்று எழுச்சி கொண்டு உறுதியாகப் பொருந்தக் கச்சால் சேர்ந்த உடையை அழுத்தமாகக் கட்டி, வீரக்கழலை வாரினால் கட்டி, வடித்தெடுக்கப்பட்ட வாளும், கேடயமும் ஏந்தி ஏனாதி நாதர் போர் முனைக்குப் புறப்பட்டார்.

பொர- போர் புரிய. அரியேறு - ஆண் சிங்கம். கிளர்ந்து - அரவாரம் செய்து விரைந்து. மேல் வீக்கி - மேலே இறுகக் கட்டி, வார்கழல் - காலில் அணியும் வீரக்கழல். பலகை - கேடயம். 11

619. புறப்பட்ட போதின்கண்
போர்த்தொழில் கள்கற்கும்
விறல் பெருஞ் சீர்க் காளையர்கள்
வேறிடத்து நின்றார்
மறப்படைவான் சுற்றத்தார்
கேட்டு ஓடி வந்து
செறற்கு அரும்போர் வீரர்க்கு
இருமருங்கும் சேர்ந்தார்கள்.

தெளிவுரை: ஏனாதி நாதர் புறப்பட்டபோது அவரிடம் போர்த் தொழிற் கல்வியைக் கற்கும் வலிமை மிகு இளைஞர்களும், அயலே நின்றிருந்தவர்களும், வீரம் மிக்க சிறந்த சுற்றத்தினரும் செய்தி யறிந்து ஓடிவந்து வெல்லுதற்கு அரிய வீரரான ஏனாதி நாத நாயனாரின் இரண்டு பக்கமும் துணையாகச் சேர்ந்தார்கள்.

விறல் - வலிமை. காளையர் - இளையவர்கள். மறப்படை - வீரம் மிக்க படை. வான் - மேலான. செறற்கு - வெல்லுதற்கு. போர் வீரர் - ஏனாதி நாதர். மருங்கு - பக்கம் 12

போரில் வெற்றி பெற்றவரே வாட்பயிற்சித் தொழில் செய்யும் உரிமை யுடையவர் என அதிசூரன் கூற இரு திறத்தாரும் போர் புரிதல்

- இது முதல் 12 பாடல்கள் ஒரு தொடர்

620. வந்தழைத்த மாற்றான்
வயப்புலிப்போத்து அன்னார்முன்
"நந்தமது வாள் பயிற்றும்
நல் தாயம் கொள்ளுங்கால்

இந்தவெளி மேல்கை வகுத்து
இருவேம் பொருபடையும்
சந்தித்து அமர்விளைத்தால்
சாயாதார் கொள்வ" தென;

தெளிவுரை: முன்னே வந்து அழைத்த பகைவனானஅதிசூரன் வீரம் மிக்க ஆண்புலி போன்ற நாயனாரை நோக்கி, "வாட் பயிற்சி கற்றுத் தரும் நமது நல்லுரிமையானது இந்த வெளியிடத்தில் இருதிறத்துப் படையும் போரிட அதில் தோல்வியடையாதவர்களே பெற வேண்டும்." என்றான்.

மாற்றான் - அதி சூரன். வயப்புலிப் போத்து - வீரம் மிக்க ஆண்புலி; ஏனாதி நாதர்க்கு உவமை சாற்றியது. தாயம் - உரிமை. வெளி - போர் செய்யும் இடம். இருவேம் - இரு திறத்தாரும். அமர் - போர். சாயாதார் - தோல்வி பெறாதவர். 13

621. என்று பகைத் தோன்உரைப்ப
ஏனாதி நாதர் "அது
நன்றுனக்கு வேண்டுமேல்
நண்ணுவன்" என் றுள் மகிழ்ந்து
சென்று அவன் முன் சொன்ன
செருக்களத்துப் போர் குறிப்பக்
கன்றி இரு படையும்
கைவகுத்து நேர்மலைவார்.

தெளிவுரை: இவ்வாறு பகைத்தவனான அதிசூரன் உரைக்க, ஏனாதி நாதர், "நன்று நீ போர் செய்ய வேண்டும் என்று விரும்பினால், நானும் போர் புரிய வருகிறேன்." என்று மகிழ்ந்தவராய் அவன் முன்னே குறிப்பிட்ட போர்க்களத்தை அடைய இரு திறத்துப் படை வீரர்களும் சினந்தெழுந்து போர் புரியலானார்கள்.

போர் குறித்து மகிழ்தல் - வீரர்க்குரிய பண்பாம் என்க. பகைத்தோன் - அதிசூரன். கன்றி - சினங் கொண்டு. மலைவர் - போர் புரியலானார்கள். 14

அறுசீர் ஆசிரிய விருத்தம்

622. மேக ஒழுங்குகள் முன்கொடு
மின் நிரை தம்மிடையே கொடு
மாக மருங்கினும் மண்ணினும்
வல்லுரும் ஏறெதிர் செல்வன

ஆக நெடும்பல கைக்குலம்
ஆள்வினை வாளுடை யாடவர்
காகம் மிடைந்த களத்திரு
கைகளின் வந்து கலந்தனர்.

தெளிவுரை: மேகக் கூட்டங்கள் போன்று கேடயங்களும், மின்னல்களின் வரிசை போன்று ஒளிரும் வாட்படைகளும் சேர்ந்து நிலத்திடையே பரவுதல் போன்று, இரு திறந்து வீரர்களும் தம் கைகளில் ஏந்திக் காக்கைக் கூட்டங்கள் சேர்ந்து கூடிய போர்க்களத்தில் வந்து கலந்தார்கள்.

சிறப்புரை : வீரர்கள் கைகளில் இருந்த கேடயமும், வாளும் வானில் விளங்கும் மேகத்திற்கும், மின்னலுக்கும் உவமை கூறப்பட்டது. போர்களத்தில் இறந்து உடல்களின் ஊன்களைக் கொத்தித் தின்னும் வகையில் காகங்கள் சேர்ந்தன என்பதாம்.

மின் நிரை - மின்னல் வரிசை. மாக மருங்கினும் - விண் பக்கத்திலும். மண் - நிலப்பகுதி. உரும் ஏறு - இடி முழக்கம் பலகை - கேடயம். மிடைந்த - கலந்த. களம் - போர்க் களம். 15

623. கால்கழல் கட்டிய மள்ளர்கள்
கைகளின் மெய்கள் அடக்கிய
வாளொளி வட்டம் முனைந்திட
வந்து இரு கைகளின் முந்தினா
வேலொடு வேலெதிர் நீள்வன
மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலம் உறும்பணி வீரர்கள்
நாநிமிர் கின்றன ஒத்தன.

தெளிவுரை: காலில் வீரக்கழல் அணிந்த வீரர்கள் தம் கைகளைக் கொண்டு மேனியை மறைப்பதைப் போன்று வாளை ஒளி வட்டமாக வீசி முன் வந்து இரு அணியாக முனைந்திடப் போர் செய்தனர். வேல்கள் கொண்டு நீட்டி, இருதிறத்தினரும் செய்யும் போரானது பாதாள உலகத்திலிருந்து நாக வீரர்கள் தோன்றித் தம் நாக்குகளை நீட்டுகின்றாற் போன்று தோன்றின.

கால் கழல் - காலில் கட்டிய வீரக்கழல். மள்ளர் - போர் வீரர். மெய்கள் - போர் வீரர்களின் மேனியைக் குறித்தது. ஒளி வட்டம் - வாள் வீசுதலால் தோன்றும் ஒளிச் சுற்று. கை - அணி வகுப்பு. பாதலம் - பாதாள உலகமான நாக லோகம். பணி - பாம்பு ; நாக வீரர்களைக் குறித்தது. 16

624. வெங்கண் விறல்சிலை வீரர்கள்
வேறுஇரு கையினும் நேர்பவர்
தங்கள் சிலைக்குலம் உந்தின்
தாவில் சரங்கள் நெருங்குவ
பொங்கு சினத்தெரி யின்புகை
போகு கொடிகள் வளைத்தெதிர்
செங்கண் விழிக் கனல் சிந்திய
சீறு பொறிச் செலவு ஒத்தன.

தெளிவுரை: சிவந்த கண்களையுடைய வலிமையான வில்லேந்திய வீரர்கள் இருதிறத்திலும் அணிவகுத்துப் போரிட, விற்கூட்டங்கள் செரிந்த தாழ்வில்லாத அம்புகள் நெருங்கிப் பாய்ந்தன. மூண்டெழுந்த தீயினின்று கிளம்பும் புகை மண்டலங்கள் போன்று, சிவந்த கண்களிலிருந்து எழும் சினத் தீ சீறித் தெறிக்கும் பொறிகள் என விளங்கின.

விறல் - வலிமை. சிலை - வில். இருகை - இரு திறத்து அணிகள். நேர்பவர் - போர் புரிபவர். சரங்கள் - அம்புகள். புகை போகு கொடிகள் - கிளம்பும் புகைக் கொடிகள். கனல் - நெருப்பு. 17

625. வாளொடு நீள்கை துடித்தன
மார்பொடு வேல்கள் குளித்தன
தோளொடு வாளி நிலத்தின
தோலொடு தோல்கள் தகைத்தன
தாளொடு வார்கழல் இற்றன
தாரொடு சூழ்சிரம் அற்றன
நாளொடு சீறி மலைப்பவர்
நாடிய போர்செய் களத்தினில்;

தெளிவுரை: போரில், நீண்ட கைகள் வாளோடு துண்டிக்கப் பட்டுத் துடித்தன; மார்பில் வேல்கள் பதிந்து இரத்த வெள்ளத்தில் ஆழ்ந்தன; தோள்கள் அறுபட்டு அம்புகள் தரையில் வீழ்ந்தன. கேடயங்கள் ஒன்றோடொன்று உராய்ந்தன; வீரக் கழல்களோடு கால்கள் அற்று வீழ்ந்தன. தங்கள் வாழ்நாளைப் பற்றி எண்ணாது சீற்றங் கொண்டு போர் செய்பவர்கள் நாடிச் சென்ற போர்க்களத்தில் இவ்வாறு நிகழ்ந்தன.

குளித்தன - ஆழ்ந்தன. வாளி - அம்பு. தோல் - கேடயம். தாள் - கால்கள். தார் - மாலை. நாள் - வாழ்நாள்; உயிரைப் பற்றிப் பெரிதாக எண்ணாத பாங்கு. மலைப்பவர் - போர் செய்பவர். 18

626. குருதியின் நதிகள் பரந்தன
குறையுடன் ஒடி அலைந்தன
பொருபடை அறுதுணி சிந்தின
புடைசொரி குடர்உடல் பம்பின்
வெருவர எருவை நெருங்கின
விசி அறு துடிகள் புரண்டன
இருபடை தனினும் எதிர்ந்தவர்
எதிர்எதிர் அமர்செய் பறந்தலை.

தெளிவுரை: இருதிறத்துப் படைவீரர்களும் ஒருவரை யொருவர் எதிர் எதிரே நின்று போர் செய்யும் அப்போர்க் களத்தில், இரத்த ஆறுகள் பெருகின; வெட்டுப்பட்ட உடலின் அங்கங்கள் அவ்வெள்ளத்தில் அலைந்து ஓடின. போர் செய்த படைவீரர்களின் உடலிலிருந்து அறுபட்ட துண்டுகள் சிந்தின; உடலின் பக்கங்களில் வெளியே வந்த குடர்கள் நிறைந்தன. அச்சம் உண்டாக்கக் கூடிய கழுகுகள் நெருங்கின; வீசி அறுபட்ட உடுக்கைகள் புரண்டன.

அறுதுணி - அறுபட்ட துண்டம்; ஆடைவகையுள் என்க. புடை - பக்கம். பம்பின - நிறைந்தன. வெருவர - அச்சம் தருமாறு வருகின்ற. எருவை - கழுகு. துடி - உடுக்கை. பறந்தலை - போர்க்களம். 19

627. நீளிடை முடுகி நடந்தெதிர்
நேரிரு வரில் ஒரு வன்தொடர்
தாளிரு தொடைஅற முன்பெயர்
சாரிகை முறைமை தடிந்தனன்
வாளொடு விழும்உடல் வென்றவன்
மார்பிடை அறிமுன் எறிந்திட
ஆளியின் அவனும் இறந்தனன்
ஆயினர் பலர் உளர் எங்கணும்.

தெளிவுரை: நீண்ட தொலைவு விரைந்து நடந்து வந்த இருதிறத்து வீரர்களில் ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர் செய்யும் இருவரில் ஒருவன் கால்களும், இரண்டு தொடைகளும் வெட்டப்பட்டு விழ, அவன் கீழே சாய்வதற்கு முன்னர்த் தன்னை வென்றவன் மார்பிடையே பிளந்து அறுமாறு வாளைப் பாய்ச்சிட, சிங்கம் போன்ற அவனும் மடிந்தான். இவ்வாறு பலர் ஆயினர். இத்தகைய செயல்கள் அப்போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் காணப்பட்டன.

நேர் இருவர் - நேர் நின்று போர் செய்யும் இரு வீரர்கள் சாரிகை - வலது இடது என்னுமாறு நடந்து போர் செய்யும் தன்மை. அற - அற்று வீழ. ஆளி - சிங்கம். எங்கணும் - எல்லா இடத்திலும். 20

628. கூர்முனை அயில்கொடு முட்டினர்
கூடிமுன் உருவிய தட்டுடன்
நேர்உரம் உருவ உரப்புடன்
நேர்பட எதிரெதிர் குத்தினர்
ஆர்உயிர் கழியவும் நிற்பவர்
ஆண்மையின் இருவரும் ஒத்தமை
போர்அரு படைகொடு அளப்பவர்
போல்பவர் அளவிலர் பட்டனர்

தெளிவுரை: கூர்மையான வேல்கொண்டு எதிரில் கேடயத்தோடு வரும் வீரன் ஒருவனை அதட்டிக் குத்த, அவனும் தன்னைக் குத்தியவனைக் குத்த இருவர் உயிரும் கழிய, அவர்கள் நின்ற நிலையில் ஒருவர் மற்றொருவரின் ஆண்மையை அளந்து அறியுமாறு ஒத்திருந்தது. இத்தன்மையில் தம்முடைய போர்ப்படை கொண்டு அளப்பவர்கள் அளவற்ற பேர்களாய் ஆங்கு இறந்தொழிந்தார்கள்.

அயில் - வேல். முட்டினர் - குத்தினர். தட்டு - கேடயம். உரப்புதல் - அதட்டுதல். ஆண்மை - வீரச் செயல், பட்டனர் - இறந்தனர். 21

629. பொற்சிலை வளைய எதிர்ந்தவர்
புற்றரவு அனைய சரம்பட
விற்படை துணியவும் நின்றிலர்
வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவளன் இன்றியும்
முன்படு கொடைநிலை நின்றிட
உற்றன உதவிய பண்பினர்
ஒத்தனர் உளர்சில கண்டர்கள்.

தெளிவுரை: பொன் பூண் உடைய வில்லை வளைத்து எய்யும் பாம்பு போன்று சீறும் அம்புகளால் மாற்றானின் வில் துணிக்கப்பட்டு வீழ, அவ்வீரர் தன் உடைவாளைக் கொண்டு தொடர்ந்து போர் செய்யலாயினர். இச்செயலானது பெருஞ் செல்வந்தன் ஒருவன் தன்னுடைய செல்வ வளம் குறைந்த போதிலும் கொடைப் பண்பு குறையாத காரணத்தால், தம்மிடம் எஞ்சியுள்ளவற்றை வழங்கும் கொள்கையுடைமை போல் விளங்கிற்று. இத்தன்மையில் பலர் இருந்து போர் புரியலானார்கள்.

சிறப்புரை : வில்லைக் கொண்டு தொலைவில் உள்ளவரையும் தாக்கும் நிலையில் ஆயுத வளமாகச் சாற்றப்படுதலும், அங்ஙனம் இல்லையாயின் அண்மையில் உள்ளவர்களையே தாக்கக் கூடிய உடைவாளைக் கொண்டு போர் செய்தலும் இவண் சொற்பொருள் நயம் தோன்ற உரைக்கப்பெறுதல் காண்க. மற்றும் வில் முறிந்து பட்டதால் தளர்ச்சியடையாது வீரம் செறிந்த தம் ஆற்றலைக் காக்கும் திறத்தில், "வெற்றி அல்லது வீர மரணம்." என்னும் கொள்கையில் இப்படை வீரர்கள் இருந்தனர் என்பதும் நவிலப்படுவதாம்.

பொற்சிலை - பொன் பூண் அணியப்பட்ட வில்; வலிமையான வில் எனவும் ஆம் புற்றரவு - புற்றிலுள்ள பாம்பு; அம்புகளுக்கு உவமை சாற்றப்பட்டது. துணிய - முறிய. சுரிகை - உடைவாள். வழங்கினர் - போர் செய்யத் தொடங்கினர். கண்டர்கள் - போர் வீரர்கள். 22

630. அடல்முனை மறவர் மடிந்தவர்
அலர்முகம் உயிருள என்றுஉறு
படர்சிறை சுலவு கருங்கொடி
படர்வன சுழல்வன துன்றலில்
விடுசுடர் விழிகள் இரும்பு செய்
வினைஞர்தம் உலையில் முகம்பொதி
புடைமிடை கரியிடை பொங்கிய
புகைவிடு தழலை நிகர்த்தன.

தெளிவுரை: போர்க்களத்தில் இறந்த வீரர்களின் மலர்ந்த முகம் உயிருள்ளன என்று கருதிச் சிறகுகளை விரித்துப் பறக்கும் காக்கைகள் பக்கத்தில் சென்றன. இக்காட்சியானது ஒளிவீசி விளங்கும் வீரர்களின் கண்கள், இரும்புத் தொழில் செய்பவர் உலையில் பொதிந்து பக்கத்தே நிறைந்த புகையுடன் விளங்கும் நெருப்பை நிகர்த்தன.

இவண் போர்க்களமானது உலைக்களமாகவும், வீரர்கள் கொல்லராகவும், காக்கைகள் கரியாகவும், கண்கள் நெருப்பாகவும் உவமை சாற்றப்பட்டது. மற்றும் காக்கைகள் பறந்து விளங்கிய தன்மையைத் திருப்பாட்டு 622 - இல் உரைத்தமையும் காண்க.

அடல்முனை - போர்க்களம். மறவர் - வீரர். சிறை - சிறகுகள். கருங்கொடி - காக்கை. துன்றல் இல் - நெருங்காத. வினைஞர் - கொல்லர். புடை - பக்கம். தழல் - நெருப்பு. 23

631. திண்படை வயவர் பிணம்படு
செங்களம் அதனிடை முன்சிலர்
புண்படு வழிசொரி யும்குடர்
பொங்கிய கழுகு பருந்தொடு
கொண்டெழு பொழுதினும் முன்செயல்
குன்றுதல் இலர்தலை நின்றனர்
விண்டலர் கொடிவிடு பண்பயில்
விஞ்சையர் குமரரை வென்றனர்.

தெளிவுரை: திண்மையான படைவீரர்கள் மாண்டு வீர சொர்க்கம் அடைந்த அப்போர்க்களத்தில் சிலர் உடல்களிலிருந்து சொரியும் குடல்களை, மிகுதியாகக் கூடிய கழுகுகளும், பருந்துகளும் கொத்தியும் கவ்வியும் தூக்கி மேலே செல்ல அதனால் மனத் தளர்ச்சி யடையாத அவ்வீரர்கள் போர் முயற்சியில் தலை நின்றனர். இது வானத்தில் செல்கின்ற காற்றாடியைச் செலுத்தும் வித்தியாதர இளைஞர்களையும் வென்றவாறு தோன்றிற்று.

திண்படை வயவர் - உறுதிமிக்க படைவீரர். செங்களம் - சிவந்த ரத்தம் பெருகும் போர்க்களம். குன்றுதல் இலர் - தளர்ச்சியடையாதவர். தலைநின்றார் - உறுதியோடு போரிட்டார்கள். விண்டலர் கொடி - வானில் பறக்கும் கொடி - விஞ்சையர் குமரர் - வித்தியாதர இளைஞர்கள். இவர்கள் வானில் சஞ்சரிப்பவர்கள் என்க. 24

ஏனாதி நாதர் சினங்கொண்டு போர்க்களத்தில் புகுதல்

- இதுமுதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

கொச்சகக் கலி

632. இம்முனைய வெம்போரில்
இருபடையின் வாள்வீரர்
வெம்முனையில் வீடியபின்
வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர்
பின்ஆகத் தாம்முன்பு
தெம்முனையல் **ஏனாதி**
நாதர் செயிர்த்தெழுந்தார்.

தெளிவுரை: இப்போர்க்களத்தில் நடைபெறும் கொடிய போரில், இருதிறத்துக் படையின் வீரர்களும் உயிர் துறந்து எஞ்சியுள்ள தமது பலபடைவீரர்களையும் பின்னே இருக்குமாறு செய்து, தாமே முன் சென்று ஏனாதி நாதர் சினந்து எழுந்தார்.

வெம்முனை - கொடிய போர்க்களம். வீடிய - இறந்த. பின் ஆக - தமக்குப் பின்னே இருக்குமாறு செய்து. தெம்முனை - பகைவர் முனை. செயிர்த்து - சினந்து. 25

633. வெஞ்சினவா தீயுமிழ
வீரக்கழல் கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கு அன்பர்
தாம் எதிர்ந்த ஞாட்பின்கண்
எஞ்சி எதிர்நின்ற
இகல்முனையின் **வேல் உழவர்**
தஞ்சிரமும் தோளுரமும்
தாளும் விழத் துணித்தார்.

தெளிவுரை: வெம்மைமிகும் சினத்தோடு வீசும்வாள் நெருப்பினைப் பொறிகளாக வெளிப்படுத்த, காலில் அணிந்த வீரக்கழல் ஒலிக்க நஞ்சணிந்த கழுத்தையுடைய சிவபிரானுக்கு அன்பரான ஏனாதி நாதர் தாம் எதிர்த்துப் போர் செய்த போது எஞ்சியிருந்த படைவீரர்களின் சிரமும், தோளும், மார்பும், தாளும் விழுமாறு துண்டித்தார்.

சினவாள் - சினங் கொண்டு வீசப்படும் வாள். கலிப்ப - ஒலிக்க. நஞ்சணிகண்டர் - சிவபிரான். ஞாட்பின்கண் - போரினிடத்து. இகல் - பகை. வேல் உழவர் - படை வீரர். உரம் - மார்பு. 26

634. தலைப்பட்டார் எல்லாரும்
தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார் முட்டாதார்
கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு
நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வம் முதல்
குற்றம்போல் ஆயினார்.

தெளிவுரை: எதிர்ப்பட்டவர் எல்லாரும் ஒப்பற்ற வீரரான ஏனாதி நாதர் வாளில் கொல்லப்பட்டார்கள். எதிர்த்துப் போர் செய்யாதவர்கள் போர்க் களத்தினை விட்டோடினார்கள். இத்தன்மையானது மெஞ்ஞானம் உண்டானதும், அலை மோதும் காமம் முதலிய சுற்றங்கள் அற்றொழிதல் போன்று ஆயினமை யாயிற்று.

சிறப்புரை : மெய்ஞ்ஞானம் தலைப்படக் காமம், வெகுளி முதலான மயக்கங்கள் அறுந்து ஒழிதல் போன்று நாயனாரின் வாளுக்கு

முன்னால் பகைவர்கள் அஞ்சியோடியமை சாற்றப்பட்டது. அலைப்படும் தன்மை ஆசை முதலான குற்றங்கள் சாரும் அஞ்ஞானம் என்பதும், மெய்ஞ்ஞானம் என்பது நிலைப்படும் தன்மை என்பதும் இவண் காண்க. எனவே மெய்யுணர்வுடைய ஏனாதி நாத நாயனார் திருமுன்பு அஞ்ஞானத்தின் உணர்வுகள் தலைப்படாது என்று உரைத்தமை காண்க. இத்தன்மையில் மெய்த் தன்மையைக் கண்டறிந்தவர்கள் பிறவாமை என்னும் பெருநிலை அடைவார்கள் என்பதைத் திருவள்ளுவர், திருக்குறள் 256- இல்,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி."

எனச் சாற்றியமையும் காண்க.

தலைப்பட்டார் - போரில் எதிர்த்து நின்றவர். தனிவீரர் ஒப்பற்ற வீரராகிய ஏனாதி நாதர். முட்டாதார் - எதிர்த்துப் போர் செய்யாதவர்கள். கொல்களம் - போர்க்களம். மெய்யுணர்வு - மெய்ஞ்ஞானம். அலைப்பட்ட - நிலையற்றதாய் அலை மோதுகின்ற. ஆர்வம் முதல் குற்றம் - ஆறு வகையான பகைகளான காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) என்பன. 27

அதிசூரன் தோல்வியடைந்து புறமுதுகு காட்டி ஓடுதல் - இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

635. இந்நிலைய வெங்களத்தில்
ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய பல்படைஞர்
மீண்டார் தமைக்கொண்டு
மின்னொளி வாள் வீசி
விறல் வீரர் வெம்புலியேறு
அன்னவர்தம் முன் சென்று
அதிசூரன் நேர் அடர்ந்தான்.

தெளிவுரை: இத்தன்மையான கொடிய போர்க்களத்தில் தன் வீரர்களைக் கொண்டு எதிர்த்துத் தோற்ற அவமானத்தால் எஞ்சியிருந்த வீரர்களை ஒன்று சேர்த்து, மின்னலைப் போன்று ஒளி வீசும் வலிமை மிகு வீரராய்க் கொடிய ஆண் புலியென விளங்கும் ஏனாதி நாதர் முன்னே நின்று எதிர்த்துப் போர் புரிந்தான்.

வெங்களம் - போர்க்களம். அழிந்த - தோல்வியடைந்த. மானம் - அவமானம், இழிவு. விறல் வீரர் - வலிமையுடைய வீரர். புலியேறு

- ஆண் புலி. அன்னவர் - ஏனாதி நாதர். அடர்ந்தான் - போர் புரிந்தான்.
28

636. மற்றவர்தம் செய்கை
வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில்
தோன்றா வகை கலந்து
பற்றி அடர்க் கும் பொழுதில்
தானும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க்கு
உடைந்து புறகிட்டான்.

தெளிவுரை: மற்றும், ஏனாதி நாதரின் போர்ச் செயலாக வாளேந்தி வட்டமாகச் சுற்றி வரும் வகையில் மின்னலெனச் சுழற்றும் வாளின் ஒளியிடையில் தான் பிறர் கண்ணுக்குப் புலப்படாதபடி போரிடும் போது அதி சூரனும் படையுடன் தப்பிப் பிழைத்துப் பொற்கவசம் தரித்த பெரிய தோளையுடைய நாயனார்க்குத் தோல்வியுற்றுப் புறமுதுகிட்டுச் சென்றான்.

அவர்தம் செய்கை - ஏனாதி நாத நாயனாரின் போர்த்திறன். வட்டணை - வட்டமாக வாளைச் சுழற்றிப் போரிடுதல். தானும் - அதி சூரனைக் குறித்தது. உடைந்து - தோல்வியுற்று.
29

அதிசூரன் வஞ்சனையால் ஏனாதி நாதரை வெல்ல எண்ணித் தூது அனுப்புதல்

- இதுவும், அடுத்த பாடலும் ஒரு தொடர்

637. போன அதிசூரன்
போரில் அவர்க்கு அழிந்த
மானம் மிக மீதூர
மண்படுவான் கண்படான்
ஆனசெயல் ஓரிரவும்
சிந்தித்து அலமந்தே
ஈனமிகு வஞ்சனையால்
வெல்வன்என எண்ணினான்.

தெளிவுரை: புறமுதுகு காட்டிச் சென்ற அதிசூரன், ஏனாதிநாதர்க்குத் தோற்றதை எண்ணி அவமான உணர்வு மீதூர வெறுந்தரையில் படுத்து உறக்கமில்லாது இரவு முழுதும் சிந்தித்தவனாய்க் கீழ்த்தரமான வஞ்சனை செய்து வெல்லும் வகையை நினைத்தான்.

அவர்க்கு அழிந்த - ஏனாதி நாதர்க்குத் தோற்ற. மானம் - அவமான உணர்வு. மண்படுதல் - தரையில் படுத்தல்; பாவச் செய்கையால் தீவினைப் படுதல் எனவும் ஆம் கண் படான் - உறங்காதவனாகி; நல்லறிவின் வயப்படாதவன் என்க. அலமந்து - நெஞ்சம் சுழன்று அலை மோத. 30

638. சேட்டாரும் கங்குல்
புலர்காலைத் தீயோனும்
"நாட்டாரைக் கொல்லாதே
நாம் இருவேம் வேறிடத்து
வாட் டாயம் கொள்போர்
மலைக்க வருக" எனத்
தோட்டார்பூந் தாரர்க்குச்
சொல்லிச் செலவிட்டான்.

தெளிவுரை : நீண்டு செல்லும் இரவு கடந்து பொழுது விடியும்போது அதிசூரன், "நாட்டில் உள்ள மக்களைப் போரில் இறக்கச் செய்யாது நாம் இருவர் மட்டும் வேறிடத்தில் சென்று போரிட்டு வாள் பயிற்சி கற்றுத் தரும் தொழிலின் உரிமையைக் கொள்வோம். எனவே இதன்படி போர் செய்ய வருக!" என்று இதழ்களையுடைய பூமாலை யணிந்து மேவும் ஏனாதி நாதர்க்குத் தூதுவன் ஒருவன் வாயிலாகச் சொல்லி யனுப்பினான்.

சேட்டாரும் கங்குல் - நீண்டு மேவும் இரவுப் பொழுது; சேடு - நீடித்தல்; துன்பம் உடையவர்க்கு இரவுப் பொழுது நீண்டு விளங்குவது போன்ற உணர்வைக் கூறுதலாம். தீயோன் - அதிசூரன். நாட்டார் - இருதிறத்தார்க்கும் உடன் நிற்கும் வீரர்கள். வாட்டாயம் - வாள் பயிற்சியளிக்கும் உரிமை. மலைக்க - போரிட. தோடு - பூவிதழ். பூந்தாரர் - பூமாலையணிந்த ஏனாதி நாதர். செலவிட்டான் - தூது அனுப்பினான். 31

ஏனாதி நாதர் உடன்பட்டுப் போர்க்களத்தில் நிற்றல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

639. இவ்வாறு கேட்டலுமே
ஏனாதி நாதனார்
"அவ்வாறு செய்தல்
அழகிது" என அமைந்து
கைவாள் அமர்விளைக்கத்
தான் கருதும் அக்களத்தே
வெவ்வாள் உரவோன்
வருகென மேற்கொள்வார்.

தெளிவுரை: இச்செய்தியைக் கேட்ட ஏனாதிநாத நாயனார் அவ்வாறு செய்வது நன்றெனக் கொண்டு உடன்பட்டுக் கையில் வாளேந்திப் போர் செய்ய அதிசூரன் கருதிய அப்போர்க் களத்தில் கொடிய வாளேந்திய அவ்வீரன் வருக என அதற்குரிய செயலை மேற்கொண்டார்.

அழகிது - நன்று. அமர் - போர். தான் - அதிசூரனைக் குறித்தது. உரவோன் - வலிமையுடையவன். 32

640. சுற்றத்தார் யாரும்
அறியா வகை சுடர்வாள்
பொற்பலகை யும்தாமே
கொண்டு புறம் போந்து
மற்றவன் முன் சொல்லி
வரக்குறித்த அக்களத்தே
பற்றலனை முன்வரவு
பார்த்துத் தனி நின்றார்.

தெளிவுரை: சுற்றத்தார் யாரும் அறியாதபடி கையில் ஒளிரும் வாளும் பொன்னால் பதிக்கப்பெற்ற கேடயம் தாமே கைக் கொண்டு வெளியேறித் தன்னை வருமாறு குறித்த அப்போர்க் களத்தை யடைந்து பகைவனான அதிசூரன் வருகையை எதிர் நோக்கி நின்றார்.

வீரர்கள் தமது படைக்கலன்களைக் கொண்டு செல்லும் வகையில் துணைவர் சிலரை அழைத்துச் செல்லும் மரபு நோக்கி இவண் அவ்வாறின்றித் தனியே சென்றமை குறித்துத் "தாமே கொண்டு" எனப்பட்டது.

பொற்பலகை - கேடயம். புறம்போந்து - வெளிச்சென்று. மற்றவன் - அதிசூரன். பற்றலன் - அன்பற்றவன், பகைவன் என்க. 33

அதிசூரன் நெற்றியில் நீறணிந்து ஏகுதல்

- இதுவும், அடுத்த பாடலும் ஒரு தொடர்

641. தீங்கு குறித்தழைத்த
தீயோன் திருநீறு
தாங்கிய நெற்றியினார்
தங்களையே எவ்விடத்தும்

ஆங்கு அவரும் தீங்கிழையார்
என்பது அறிந்தானாய்ப்
பாங்கின் திருநீறு
பண்டு பயிலாதான்.

தெளிவுரை: நாயனார்க்குத் தீங்கு செய்ய வேண்டும் என்னும் குறிக்கோளைக் கொண்டு, போர்க்கு அழைத்த தீயவன் "நெற்றியில் திருநீறு அணிந்தவர்களை எத்தன்மையிலும் தீங்கு இழைக்காதவர் ஏனாதி நாதர்." என்பதனை அறிந்து, முன்னர்த் திருநீற்றினை முறைப்படி அணிதலைப் பயிலாத அதிசூரன் நீறணிந்து வந்தான்.

சிறப்புரை : இவண், ஏனாதிநாத நாயனார் திருநீற்றின் பெருமையறிந்து வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் தொண்டு புரிந்தமையைத் திருப்பாட்டு 610 - இல் சாற்றியமை காண்க. மற்றும் திருநீற்றினைத் தீக்கை பெற்று முறைப்படி சிவபஞ்சாட்சரத்தை அணியும் தன்மையை இவண் ஈற்றடியின் வாயிலாகச் சுட்டப்பெற்றது. இத்தன்மையில் சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனார் சைவ சமய நெறி குறட்பா 194 - இல்

"தரிக்க தலை ஆதிஅந்தம் சானுஈசாதி
தரிக்கமற்றெல் லாம் சாதத் தால்."

(இதன் பொருள் : தலை, நெற்றி, மார்பு, நாபி, முழந்தாள் என்னும் தானங்களில் முறையே ஈசானம், தற்புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோசாதம் என்னும் மந்திரங்களினால் தரிக்க. மற்றையுறுப்புகளில் சத்தியோசாத மந்திரத்தால் தரிக்க.)

என்று சாற்றியவாறும் காண்க.

தவிரவும் திருநாவுக்கரசர் திருப்பாரிதிப் புலியூர்த் திருப்பதிகத்தில், திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்" என்று அருளியமையும் காண்க. இத்தன்மை யான திருநீறு அணியும் பாங்கினைப் பெறாதவன் அதிசூரன் என இவண் சுட்டப் பெறுதலைக் காண்க.

தீங்கு குறித்து - ஏனாதி நாயனார்க்குத் தீங்கு செய்ய வேண்டும் என்னும் சூழ்ச்சி கொண்டு. தீயோன் - அதி சூரன். பாங்கின் - திருநீறு அறியும் விதிமுறையின் படி. பயிலாதான் - தீக்கை முதலிய சமய விதிமுறையில் நடவாதவன் என்க.

642. வெண்ணீறு நெற்றி
விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக்
கறுப்பும் உடன் கொண்டு
வண்ணச் சுடர்வாள்
மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப் போர்வீரர்க்குச்
சொன்ன இடம் புகுந்தான்.

தெளிவுரை: அதிசூரன் திருவெண்ணீற்றினை நெற்றி நிறையப் பூசி உள்ளத்தில் வஞ்சனையாகிய தீங்கினை வைத்து ஒளிரும் வாளேந்தி, மணிகள் பதித்த கேடயத்தைக் கைக் கொண்டு புண்ணியத்தின் மிக்குயரும் போர் வீரராகிய ஏனாதி நாதர் வருவதற்குக் குறிக்கப்பெற்ற இடத்தை அடைந்தான்.

சிறப்புரை: சிவனடியார்கள் "பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள்" என்று திருப்பாட்டு எண் 141 - இல் (திருக்கூட்டச் சிறப்பு) உணர்த்தியவாறு இல்லாது, புறத்தே வெண்மை திகழப் பூசி உள்ளத்தில் கறுப்பு வைத்த வஞ்சக எண்ணமானது இவண் சுட்டப்பெற்றது.

வஞ்சக்கறுப்பு - தீங்கு செய்யும் சூழ்ச்சி. மணிப் பலகை - நவமணிகள் பதிக்கப்பெற்ற கேடயம். புண்ணியப் போர்வீரர் - ஏனாதி நாத நாயனார்.

35

தன் நெற்றியில் உள்ள திருநீற்றைக் கேடயத்தால் மறைத்துக் கொண்டு அதிசூரன் வருதல்

643. வென்றி மடங்கல்
விடக்குவர முன்பார்த்து
நின்றாற்போல் நின்றார்
நிலைகண்டு தன்நெற்றி
சென்று கிடைப்பளவும்
திண்பலகையும் மறைத்தே
முன்தனி வீரர்க்கு எதிரே
மூண்டான் மறம் பூண்டான்.

தெளிவுரை: வெற்றிமேவும் ஆண்சிங்கம் தன் உணவுக்குரிய விலங்கை எதிர்நோக்கி நிற்றலைப் போன்று ஏனாதிநாதர் நிற்கும் நிலை கண்டு, அவர்க்கு எதிராக அதர்ம வழியை மேற்கொண்ட அதிசூரன் அருகில்

சென்று நெருங்கும் வரையில் தன் கையில் பற்றிருந்த வலிமையான கேடயத்தால் நெற்றியை மறைத்தபடி சென்றான்.

மடங்கல் - ஆண்சிங்கம். விடக்கு - மாமிச உணவு கொள்வதற்கான விலங்கைக் குறித்தது. கிடைப்பளவும் - நெருங்கும் வரையிலும். திண்பலகை - வலிமையான கேடயம். தனி வீரர் - ஒப்பற்ற வீரரான ஏனாதி நாதர். மறம்பூண்டான் - அதர்ம வழியில் போரிடும் பொருட்டுச் சென்ற வீரனான அதிசூரன். 36

பகைவன் நெற்றியில் திருநீறு இருத்தலை நாயனார் காணுதல் - இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

644. அடல் விடை ஏறு என்ன
அடர்த்தவ னைக் கொல்லும்
இடைதெரிந்து தாள்பெயர்க்கும்
ஏனாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றான்
பலகை புறம் போக்கக்
கடையவன்தன் **நெற்றியின்மேல்**
வெண்ணீறு தாம் கண்டார்.

தெளிவுரை: போர் செய்யும் வலிமையான இடபத்தைப் போன்று பகைகொண்டு வரும் அதிசூரனைக் கொல்லும் வகையில் உபாயம் தெரிந்து தம் பாதங்களை எடுத்து வைக்கும் ஏனாதிநாதரின் பக்கத்தில் வந்ததும் அப்பகைவன், தன் கேடயத்தை விலக்கினான். ஆங்கு அக்கடையவன் நெற்றியின் மீது திருவெண்ணீறு இருக்க நாயனார் கண்டார்.

இவண் அதிசூரன் நீறணிந்தவனாயினும் அவனைக் கடையவன் எனவும், முற்பாடலில் மறம் பூண்டான் எனவும் சுட்டப்பெறுதல் காண்க.

அடல் - வலிமை . விடையேறு - இடபம். அடர்த்தவன் - போர் செய்தவன். புடை - பக்கம். மாற்றான் - பகைவனான் அதிசூரன். பலகை - கேடயம். கடையவன் - கீழானவன்; அதிசூரனின் கீழ்பட்ட இழிந்த குணத்தைக் கொண்டு உவமை சாற்றப்பட்டது. 37

645. கண்டபொழுதே "கெட்டேன்
முன்பு இவர்மேல் காணாத
வெண்திரு நீற் றின் பொலிவு
மேல் கண்டேன் வேறு இனிஎன்

அண்டர்பிரான் சீர்அடியார்
ஆயினார் என்று மனம்
கொண்டு இவர்தம் கொள்கைக்
குறிவழிநிற் பேன்" என்று.

தெளிவுரை: அப்போது, "அந்தோ! முன்னர் இவர் மீது காணாத திருவெண்ணீற்றின் பொலிவு மேலோங்கக் கண்டேன். வேறாகச் செய்யக்கூடியது இனி யாது உள்ளது? தேவர் பிரானின் சீலம் மிக்க அடியவர் ஆயினார். இவர் என்ன கொள்கையில் உள்ளனரோ அந்த வழியிலேயே நிற்பேன்." என்று நாயனார் மனத்தில் கொண்டார்.

சிறப்புரை: அதிசூரன் பகை கொண்டு முதற்கண் போர்க்கு எழும்போது, "அது உனக்கு வேண்டுமேல் நண்ணுவன்" என்று ஒருமை வாக்காக (பாடல் எண் 621) உரைத்தமையும் இவண் "இவர் " என்னுமாறு மரியாதை குறித்த வாக்காக நாயனார் உரைத்தலையும் காண்க. மற்றும் "சீர் அடியார்" என்னும் பெருமை கொண்டு போற்றுதலையும் நோக்குக.

கொள்கைக் குறிவழி நிற்றலாவது வாள்பயிற்சித் தொழிலை அதிசூரன் பெறும் வகையில் அவனால் தான் கொல்லப்படுதலே யாம் என்னும் உறுதியை நாயனார் கொண்டார் என்க. இத்தன்மையில் திருப்பாட்டு 467 - இல் மெய்ப்பொருள் நாயனார் அடியவர் கருத்தறிந்து ஏவல் செய்தார் எனச் சாற்றியமையும் நோக்குக.

ஏனாதி நாதர், தன்னை எதிர்த்து வருபவர் ஒரு சிவனடியார் என்று கருதிய நிலையில் அக்கோலத்தில் ஆயுதம் ஏந்தியுள்ளவர், எண்ணியவாறு அடையத் தன்னுயிரை அவர் வாளால் போக்குவதற்குத் துணை புரிவதே இத் திருத் தொண்டர்க்குச் செய்யப்படும் வழிபாடு ஆயிற்று எனக் கொள்க.

கெட்டேன் - அந்தோ என்னும் வியப்புக் குறிப்பு. இவர் - அதிசூரனைத் திருநீறு தரித்த நிலையில் சுட்டப்பெற்றது. வேறுஇனி - தன்னுயிரைத் தருவதை விட வேறு தரப்படும் செம்மைப்பொருள் யாது உளது என்னும் பொருளது. அண்டர் பிரான் - சிவபிரான். இவர்தம் கொள்கை - அதிசூரன் கொள்கை. குறிவழி - சிவனடியாராக வந்த அதிசூரன் எண்ணியவாறு என்று இதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

646. கைவா ளுடன் பலகை
நீக்கக் கருதி அது
செய்யார் நிராயுதரைக்
கொன்றார் எனும் தீமை
எய்தாமை வேண்டும்
இவர்க்கென்று இரும்பலகை
நெய்வாளுடன் அடர்த்து
நேர்வார் போல் நேர்நின்றார்.

தெளிவுரை: தம் கையில் இருந்த வாளையும், கேடயத்தையும் நீக்கக் கருதினாரேனும், நிராயுதபாணியாக உள்ளவரைக் கொன்றார் என்னும் பழி நாடாது இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகி ஏனாதி நாதர் அவற்றை நீக்காது, வாளேந்திப் போர் செய்வார் போன்று அபிநயம் காட்டி எதிரில் நின்றார்.

பலகை - கேடயம். நிராயுதர் - ஆயுதமில்லாதவர். தீமை - ஆயுதம் இல்லாதவரைப் போர்க் களத்தில் கொல்லுதல் போர் அறமன்று என்பதால் அப்பழி நேராதவாறு காத்தலைச் சுட்டுதலாம். இவர்க்கு - திருநீறு அணிந்த அதிசூரனுக்கு. இரும் பலகை - கேடயம். அடர்ந்து நேர்வார்போல் - போரிடுவதைப் போன்று காட்டி. 39

அதிசூரன் தன் கருத்தை முற்றுவித்தலும் சிவபிரான் காட்சி நல்குதலும் உரைத்தல்

647. அந்நின்ற தொண்டர்
திருவுள்ளம் ஆர்அறிவார்
முன்நின்ற பாதகனும்
தன் கருத்தே முற்றுவித்தான்
இந்நின்ற தன்மை
அறிவார் அவர்க்கருள
மின்நின்ற செஞ்டையார்
தாமே வெளி நின்றார்.

தெளிவுரை: ஆங்கு நின்ற திருத்தொண்டரின் திருவுள்ளத்தை அறியக் கூடியவர் யார் உளர்? முன்னே நின்ற கொடியவன், தான் கொண்ட கருத்தை முற்றுவித்து ஏகினான். இவண் திருவெண்ணீறு அணிந்த திருக்கோலமே சிவனருட் பாங்காய் அமைவதாம் என்று ஏனாதி நாத நாயனார் வழிபட்ட தன்மையை அறிபவராய் மின்னும் சிவந்த சடையுடைய சிவபெருமான் தாமே வெளிப்பட்டுத் திருக்காட்சி நல்கினார்.

பாதகன் - அதிகூரன். மின் - மின்னல்; சிவபிரான் சடைமுடியை உவமித்தது. வெளி நின்றார் - திருக்காட்சி நல்கினார். 40

அம்பலவாணர் நாயனார்க்கு அருள் புரிதல்

648. மற்றினிநாம் போற்றுவதென்
வானோர் பிரான் அருளைப்
பற்றலர்தம் கைவாளால்
பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும்
உடன்பிரியா அன்பருளிப்
பொற் றொடியாள் பாகனார்
பொன்னம் பலம் அடைந்தார்.

தெளிவுரை: பகைவனின் கைவாளால் பாசத்தை நீக்கிய ஏனாதி நாதரை எக்காலத்திலும் பிரியாத அன்பொடு இருக்க அருளிச் செய்த உமாதேவியின் பாகரான சிவபிரான் பொன்னம்பலத்தை அடைந்தார். இதனினும் நம்மால் போற்றக்கூடியது யாது!

வானோர்பிரான் - சிவபிரான். பற்றலர் - பகைவர். உற்றவர் - ஏனாதி நாயனார். பொற்றொடியாள் - உமாதேவி. பாகனார் - உமாதேவியைப் பாகமாக உடைய சிவபிரான். 41

ஏனாதி நாத நாயனாரின் திருக்கழலை வாழ்த்திக் கண்ணப்ப நாயனாரின் திருத்தொண்டினை உரைக்கத் தொடங்குதல் - இது கவிக் கூற்று

649. தம்பெருமான் சாத்தும்
திருநீற்றுச் சார்புடைய
எம்பெருமான் ஏனாதி
நாதர் கழல் இறைஞ்சி
உம்பர்பிரான் காளத்தி
உத்தமர்க்குக் கண் அப்பும்
நம்பெருமான் செய்தபணி
நாம் தெரிந்த வாறு உரைப்பாம்.

தெளிவுரை: நமது பெருமானாகிய சிவபிரான் சாத்தும் திருநீற்றைச் சார்ந்து விளங்கும் எம்பிரானாகிய ஏனாதி நாதர் திருக்கழலை வணங்கித், தேவர் பிரானாகும் திருக்காளத்தி நாதர்க்குக் கண்ணை அப்பும் நம் பெருமானாகிய கண்ணப்பர் செய்த திருத்தொண்டினை நாம் தெரிந்தவாறு உரைப்பாம்.

இது கவிக் கூற்று.

தம்பெருமான் - தமது பெருமானாகிய சிவபிரான். எம்பெருமான் - எம் தலைவன்; நாயனாரைக் குறித்தது. இறைஞ்சி - வணங்கி. காளத்தி உத்தமர் - திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ள சிவபிரான். நம் பெருமான் - கண்ணப்ப நாயனாரைக் குறித்தது. செய்த பணி - திருத்தொண்டு. 42

ஏனாதி நாத நாயனார் புராணம் நிறைவு பெற்றது.

16. கண்ணப்ப நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம் :

பொத்தப்பி என்னும் மலை நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்னும் வேடர் தலைவன் இருந்தான். அவன் மனைவி தத்தை என்னும் பெயரினள். இவர்களுக்கு முருகப்பெருமான் அருளால் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் திண்ணன் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

திண்ணனார் வில் முதலான போர்ப் பயிற்சியில் தேர்ந்தார். ஒரு நாள் திண்ணனார் காட்டுக்குள் சென்று வேட்டையாடினார். அவர் ஓடிச் சென்று ஒரு பன்றியைத் தன் வாளால் கொன்றார். பின்பு தொடர்ந்து செல்லும்போது அவரோடு வந்த நாணன் என்பவன், " அங்கே குடுமித் தேவர் வீற்றிருக்கின்றார்; கும்பிடலாம்." என்றான். உடன் காடன் என்பவனும் சென்றான்.

திண்ணனார் சிவபிரானைத் தரிசிப்பதற்கு முன்னமே திருவருள் நல்க, நாயனாரது திருமேனி அன்புடையதாக ஆயிற்று. மகாதேவரைக் கண்ட திண்ணனார் கட்டித் தழுவினார்; ஆனந்தக் கூத்தாடினார். பேரன்பு தலைப்பட்டு இறைவனுக்குப் படைக்கப் பதம் செய்த ஊனை இலையிலும், சூடுவதற்குரிய மலர்களைத் தலைமுடியிலும், திருமஞ்சனத்திற்குப் பொன் முகலியின் நீரைத் திருவாயில் உறிஞ்சியும் கொண்டு சென்று குடுமித் தேவரைப் பூசித்து மலர் சூட்டி நைவேத்தியம் படைத்தார்.

குடுமித் தேவரின் முன்னர் ஊனும், இறைச்சியும், எலும்பும் இருக்கக் கண்டு வருந்திய சிவகோசரியார் என்னும் அந்தணர் தூய்மை கெட்டதே என்று எண்ணி வருந்திப் பின்னர் ஆகம விதிப்படிப்

பூசித்துச் சென்றார். நாணனும், காடனும் ஊர் திரும்பித் திண்ணனார். செயலை நாகனுக்கு அறிவித்தனர். திண்ணனார் காட்டிலேயே குடுமித் தேவர்க்குக் காவலாக இரவு முழுவதும் விழித்திருந்தார். பகல் முழுதும் வேட்டையாடித் திரிந்தார். சிவகோசரியாரும் நாள்தோறும் தூய்மை செய்து பின்னர்ச் சிவபிரானைப் பூசிக்கலானார்.

ஒரு நாள் சிவகோசரியார் சிவபிரானைத் துதித்து இத்தகைய அனுசிதத்தைப் போக்குமாறு வேண்டி நித்திரை செய்யலானார். சிவபிரான் சிவகோசரியார் கனவில் தோன்றித் "திண்ணன் அன்பு வடிவம் ஆனவன். நாளை பகல் மறைந்திருந்து பாரும்." எனச் சாற்றி மறைந்தார். தாம் கண்ட கனவை எண்ணி வியந்த சிவகோசரியார் மறுதினம் மறைந்து நின்று கண்டு கொண்டிருந்தர்.

திண்ணனாரின் அன்பினை வெளிப்படுத்தச் சிவபிரான் தன் வலக் கண்ணில் உதிரம் பெருகுமாறு செய்தார். நாயனார் உடனே பதறிச் சென்று பெருமானுக்குத் தீங்கு விளைவித்தவர் யாவரோ என்று தேடினார். பின்னர் மூலிகை மருந்துகளைக் கொண்டு வந்து பிசைந்து கண்ணில் வார்த்தார். இரத்தம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் பொருந்தும் என்னும் வகையில் நாயனார் தன் வலக்கண்ணைப் பெயர்த்து அப்பினார். நாயனார் மகிழும் வகையில் இரத்தம் பெருகுவது நின்றது.

அடுத்து ஈசனின் இடக்கண்ணில் குருதி பெருகிற்று. அப்போது நாயனார் தம் இடது காலைக் காளத்தி நாதரின் திருக்கண்ணில் ஊன்றி இடக்கண்ணைத் தோண்ட, "கண்ணப்ப நிற்க" என்று அருளித் திண்ணனார். கையைத் திருக்கையால் பிடித்துத் தடுத்துத் தன் பக்கத்தில் இருக்குமாறு அருள் செய்தார். தேவர்கள் பூமாரி பொழியச் சிவகோசரியார் கண்டு பேரானந்தத்தில் திளைத்துத் திருக்காளத்தியப்பரின் கருணையில் இனிது ஆழ்ந்தார்.

பொத்தப்பி நாட்டின் - சிறப்புரைத்தல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

650. மேவலர் புரங்கள் செற்ற
விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக்
கண்ணப்பர் திருநாடு என்பர்

நாவலர் புகழ்ந்து போற்ற
நல்வளம் பெருகி நின்ற
பூஅலர் வாவி சோலை
சூழ்ந்த **பொத் தப்பி நாடு.**

தெளிவுரை: மன்னுயிர்க்குப் பகைவர்களான மூன்று அசுரர்களின் கோட்டைகளை இடப வாகனத்தை யுடையவரும், வேத நெறியைக் காக்கும் நாயகரும் ஆகிய சிவபிரான் விளக்குவது திருக்காளத்திக் கண்ணப்பர் திருநாடு என்று அழைக்கப் படுவதாகும். அது புலவர்கள் புகழ்ந்து போற்றுகின்ற நல்வளம் பெருகிப் பூக்கள் மலர்ந்து விளங்கும் நீர் நிலைகளும், பூஞ்சோலைகளும் சூழ்ந்த பொத்தப்பி நாடு என்னும் பெயருடையது.

சிறப்புரை : இவண் திண்ணனார் சிவபிரானுக்குக் கண்ணை அப்பியதால் கண்ணப்பர் என்னும் பெயர் பெற்று அதுவே நாயனாரின் திருப்பெயராகி அதன் சிறப்புத் தோன்ற ஈசற்கும் சேர்த்துத் திருக்காளத்திக் கண்ணப்பர் திருநாடு என்று மருவியமை காண்க.

மேவலர் - பகைவர். புரங்கள - முப்புரக் கோட்டைகள். செற்ற - எரித்து அழித்த. விடையவர் - இடப வாகனத்தையுடைய சிவபிரான். வேத வாய்மைக் காவலர் - வேத நெறியாகிய தருமத்தைக் கடைப்பிடிப்பவர்க்கு அருள் புரியும் பரம்பொருள். திருக்காளத்தி - பஞ்ச பூதத் தலங்களுள் வாயுத்தலம்; தென் கயிலாய என்னும் சிறப்புடையது.ஸ்ரீ - சிலந்தி காளம் - பாம்பு, அத்தி - யானை, வழிபட்டதால் சீ காளத்தி எனப்பட்டது ; மூவர் பாடல் பெற்றது; இங்குள்ள பொன்முகலியாறு உத்திர வாகினியாக வடக்கு நோக்கிச் செல்கிறது. நாவலர் - புலவர். வாவி - நீர் நிலை. பொத்தப்பி - நாட்டின் பெயர். 1

உடுப்பூரின் சிறப்புரைத்தல்

651. இத்திரு நாடு தன்னில்
இவர் திருப் பதியா தென்னில்
நித்தில அருவிச் சாரல்
நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு
வன்தொடர் வேலி கோலி
ஒத்தபேர் அரணம் சூழ்ந்த
முதுபதி உடுப்பூர் ஆகும்.

தெளிவுரை: இத்தன்மையுடைய வளமான திருநாட்டில் கண்ணப்ப நாயனாரின் திருநகரமாவது, முத்துக்களைக் கொழிக்கும் நீரருவியின் சாரல் உடைய நீண்ட மலை சூழ்ந்த பக்கத்தில் மதங்கொண்ட யானைகளின் கொம்புகளைக் கொண்டு வலிமையுடன் தொடர்ச்சியாக வேலியமைத்துப் பாதுகாப்பு சூழ்ந்த தொன்மையுடைய உடுப்பூர் ஆகும்.

திருப்பதி - திருநகர். நித்திலம் - முத்து. வரை - மலை. மத்த - மதங்கொண்ட. களிற்றுக் கோட்டு - யானைக் கொம்பு. அரணம் - பாதுகாப்பு. முதுபதி - தொன்மையான நகரம். 2

உடுப்பூர் நகரின் தன்மையுரைத்தல்
- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

652. குன்றவர் அதனில் வாழ்வார்
கொடுஞ்செவி ஞமலி ஆர்த்த
வன்திரள் விளவின் கோட்டு
வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எங்கும்
கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில்
ஐவனம் உணங்கும் எங்கும்.

தெளிவுரை: அப்பதியில் வாழ்பவர்கள் மலைவாழ் மக்களான வேடுவர்கள். ஆங்கு வளைவான காதுடைய நாய்களைக் கட்டிய விளாமரத்தின் கிளைகளில் வார்களையுடைய வலைகள் தொங்கக் காட்டுப் பன்றியும், புலியும், கரடியும், காட்டுப் பசுவும், மான் கூட்டங்களும் என்னுமாறு பார்வை விலங்குகளும் இருந்தன. மற்றும் மனைகளின் முன்புள்ள பாறை அமைந்த முற்றங்களில் மலைநெல் உலர்த்தப்படுவன.

குன்றவர் - வேடுவர். கொடுஞ்செவி - வளைந்த செவி;ஞமல் - நாய். விளவின் கோட்டு - விளாமரக்கிளை. தூங்க - தொங்க. கடமை - காட்டுப்பசு. ஐவனம் - மலைநெல். உணங்கும் - காயும்; உலரும். 3

653. வன்புலிக் குருளை யோடும்
வயக்கரிக் கன்றி னோடும்
புன்தலைச் சிறும கார்கள்
புரிந்துடன் ஆடல் அன்றி

அன்புறு காதல் கூற
அணையும்மான் பிணைகளோடும்
இன்புற மருவி ஆடும்
எயிற்றியர் மகளிர் எங்கும்.

தெளிவுரை: அப்பகுதியில் வலிமையுடைய புலிக்குட்டி ஓடும். வலிமையுடைய யானைக் கன்றோடு வறண்ட தலைமுடி யுடைய வேடுவச் சிறுவர்கள் விரும்பி விளையாட, வேடுவர் மகளிர்கள் அன்பு கொண்டவர்களாய்ப் பெண்மான்களைத் தழுவி ஆடுவார்கள்.

புலிக்குருளை - புலிக் குட்டி. வய -வீரம் மிக்க. கரிக்கன்று - யானைக் கன்று. சிறு மகார்கள் - சிறுவர்கள். மான் பிணை - பெண்மான். மருவி - தழுவி. எயிற்றியர் - வேடுவர். 4

654. வெல்படைத் தறுகண் வெஞ்சொல்
வேட்டுவர் கூட்டம் தோறும்
"கொல் எரி குத்து" என்று ஆர்த்துக்
குழுமிய ஓசை அன்றிச்
சில்அரித் துடியும் கொம்பும்
சிறுகண் ஆகுளியும் கூடிக்
கல்லெனும் ஒலியின் மேலும்
கறங்கிசை அருவி எங்கும்

தெளிவுரை: வெல்லும் படைக்கலன்களும் அஞ்சாமையும் கடுஞ் சொல்லும் உடைய வேட்டுவ மக்களிடமிருந்து "கொல், எறி, குத்து" என்று ஆரவாரத்துடன் கூடிய ஓசை மட்டும் அல்லாது, சிறுபரல்களையுடைய உடுக்கையின் ஒலியும், ஊதுகொம்பின் ஒலியும், சிறு முகம் கொண்ட ஆகுளிப் பறையின் ஒலியும் சேர்ந்து "கல்" என்னும் ஒலியைவிட மிகுத்து ஒலிக்கும் அருவிகள் ஆங்கு உண்டு.

தறுகண் - அஞ்சாமை. வெஞ்சொல் - கொடிய சொல். சில் அரி - சிறுமணற் பரல். துடி - உடுக்கை. கொம்பு - ஊது கொம்பு. ஆகுளி - ஒரு வகைப் பறை. கறங்கிசை - ஒலிக்கும் இசை. 5

655. ஆறுஅலைத்து உண்ணும் வேடர்
அயல்புலம் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு
விரவும்ஆன் நிரைகள் அன்றி

ஏறுடை வானம் தன்னில்
இடிக்குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கம் காட்டும்
மதக்கைமா நிரைகள் எங்கும்.

தெளிவுரை: வழிப்பறி செய்து வாழ்க்கை நடத்தும் அவ்வேடர்களிடம் வேற்றாரிடமிருந்து கவர்ந்த பல திறத்ததான பசுக் கூட்டங்களே யன்றி உயர்ந்து மேவும் வானத்தில் விளங்கும் மேகக் கூட்டங்களில் உண்டாகும் இடி முழக்கத்திற்கு எதிராக முழக்கத்தைச் செய்யும் மதம் பொருந்திய யானைக் கூட்டங்களும் நிலவும்.

ஆறலைத்து - வழிப்பறி செய்து. ஆறு - வழி. அயல் புலம் - வேறிடம். ஆன் நிரை - பசுக்கூட்டம். ஏறு - உயர்வு. எழிலி - மேகம். மதக்கை மா - யானை. நிரை - கூட்டம். 6

வேடர் தலைவன் நாகனை உரைத்தல்

656. மைச் செறிந்து அனைய மேனி
வன்தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அன்பும் என்றும்
அடைவிலார் உடைவன் தோலார்
பொச்சையின் நறவும் ஊனின்
புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழல் பகழி வேடர்க்கு
அதிபதி நாகன் என்பான்.

தெளிவுரை: அடர்ந்து மேவும் கருமையுடைய மேனி வண்ணமும், கொடிய தொழிலும் உடைய அத்தகு வேடர்கள், அச்சமும், அன்பும் எக்காலத்திலும் கொள்ளாதவர்களாய்;வலிமையான தோலுடை அணிந்தவர்களாய், மலைத் தேனும், ஊன் கலந்த சோறும் உணவாகக் கொள்பவர்களாய், நஞ்சு தோயப் பெற்ற நெருப்பினை யொத்த அம்புகளை யுடையவர்களாய் இருந்தார்கள். இவர்களின் தலைவன் நாகன் என்பவன் விளங்கினான்.

மை - கருமை. வன் தொழில் - கொடிய தொழில். அடைவிலார் - வாய்க்கப் பெறாதவர். வன் தோல் - வலிமையான முரட்டுத் தோல். பொச்சை - மலை; காடு, நறவு - தேன், புழுக்கல் - சோறு. அதிபதி - தலைவன். 7

நாகன் மனைவியை உரைத்தல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒருதொடர்

657. பெற்றியால் **தவம்முன் செய்தான்**
ஆயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்
கொடுமையே தலைநின் றுள்ளான்
விற்றொழில் விறலின் மிக்கான்
வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்று அவன் குறிச்சி **வாழ்க்கை**
மனைவியும் தத்தை என்பாள்.

தெளிவுரை: நாகன், இயல்பினால் முன் செய்த தவப்பயன் உடையவனாயினும், வேடர் குலத்தில் பிறவி கொண்டதன் சார்பால் பிற உயிர்களை வதைத்தல் முதலான குற்றங்களையே தாம்புரியும் தன்மையில் வாழ்பவனாகிக் கொடுமை செய்தலில் முன்னின்று இருந்தான். வில் தொழிலில் ஆற்றல் மிக்க வனாய்க் கொடிய சினங்கொண்ட சிங்கம் போன்றவனாகிய அவனுடைய குறிஞ்சி நில வாழ்க்கையில் மனைவியாய் அமைந்தவள் தத்தை என்னும் பெயரினள்.

சிறப்புரை : நாகன் தான் பிறந்த குலத்தின் இயல்பினால் குற்றத்தை தன்னுடைய குணப்பாங்காகக் கருதினான் என்க. இது அச்சமின்மையும், அருள் தன்மையின்மையுமாம் என்க. இத்தன்மையில் திருக்குறள் 452 - இல்,

> "நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
> இனத்தியல்ப தாகும் அறிவு."

எனச் சாற்றியவாறு காண்க. இத்தகைய நாகன் தவம் முன் செய்தான் எனச் சாற்றப்படுதலாவது பின்னர்க் கண்ணப்ப நாயனாரைத் தன் திருப்புதல்வராகப் பெறவுள்ளதைச் சுட்டுமாறு ஆதலாகும். இவன் நல்வினைப் பயனால் புதல்வர்கள் அமைதலைச் சாற்றுதலாயிற்று. நாகன் பிறப்பின் சார்பால் கொடுஞ் செயலைக் புரியும் குணப்பாங்கினை யுடையவனானாலும் அவன் முன் செய்த தவமானது நல்வினைப் பயனாய் மருவி நிற்றலை "தவம் முன் செய்தான்" என்று சாற்றப்பட்டது. இத்தன்மையில் மனுநீதிச் சோழன் மைந்தனைப் பெற்ற சிறப்பினைத் திருப்பாட்டு 102 - இல் (திருநகர்ச் சிறப்பு) "சிறந்த நல் தவத்தால் தேவி திருமணி வயிற்றின் மைந்தன் பிறந்தனன் உலகம் போற்ற" என்று உரைத்தவாறும் காண்க.

தவிரவும் திருஞானசம்பந்தரைப் புதல்வராகப் பெற இருந்த நிலையில் சிவபாத இருதயார், "புனைமணிப்பூண் காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிந்தார்" எனத் திருப்பாட்டு 1922 இல் (திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் - 19) அருளியவாறும் கொள்க.

பெற்றி - இயல்பு. தவம் - நல்வினைப் பயன். குற்றம் - இவண் அருளின்மை என்க. குணமாக - தன்மையாக. விறல் - வலிமை; ஆற்றல். மடங்கல் - ஆண் சிங்கம். குறிஞ்சி - மலை சார்ந்த பகுதி. 8

658. அரும்பெறல் மறவர் தாயத்து
ஆன்றதொல் குடியில் வந்தாள்
இரும்புலி எயிற்றுத் தாலி
இடையிடை மனவு கோத்துப்
பெரும்புறம் அலையப் பூண்டாள்
பீலியும் குழையும் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச்
சூர்அரிப் பிணவு போல்வாள்.

தெளிவுரை: அவள், அருமையுடைய வீர வேட்டுவர் குலத்தில் தொன்மையான மரபில் தோன்றியவளாய்ப் பெரிதான புலிப்பல்லைத் தாலியாகவும் இடையிடையே சங்கு மணிகளைக் கோத்துப் பிடரியின் கீழேயும் நீண்டு தொங்குமாறும் அணியப் பெற்றவள். மற்றும் அவள் மயிர்ப்பீலியும், தாழை மலரும், தளிர்களும், வண்டுகள் மொய்க்கும் மலர் மாலையைச் சூடிய கொண்டையும் உடையவளாய் அச்சமூட்டும் பெண் சிங்கம் போன்று இருந்தாள்.

மறவர் - வீர வேட்டுவர். தாயம் - மரபு. இரு - பெரிய. புலி எயிற்று - புலிப்பல். மனவு - சங்குமணி. புறம் - பிடரி. பீலி - மயிற் பீலி. குழை - தாழை, தளிர் முதலியன. தட்ட - நெருங்க. சுரும்பு - வண்டு. படலை முச்சி - மாலை வகை. முச்சி - மயிர் முடி. சூர் - அச்சம். அரிப் பிணவு - பெண் சிங்கம். 9

முருகப் பெருமான் அருளால் இவர்களுக்குப் புதல்வன் தோன்றுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

659. பொருஅரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென்று எவரும் கூற
அதன்படு காத லாலே

முருகலர் **அலங்கல் செவ்வேள்**
முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்.

தெளிவுரை: ஒப்பற்ற சிறப்பின் மிக்க நாகன், தத்தை ஆகிய இவர்களுக்கு இனிப் புதல்வர்கள் பெருகின்ற பேறு வாய்ப்பது அரிது என்று அனைவரும் கூற இவர்கள், பிள்ளைப் பேற்றின் மீது கொண்ட பேரன்பினால் நறுமணம் கமழும் கடம்பமலர் மாலை யணிந்து, செவ்வேல் ஏந்தும் முருகவேள் சந்நிதியில் சென்று பரவி ஏத்தி, நாள்தோறும் வழிபாடு செய்து வந்தார்கள்.

பொருஅரும் - ஒப்பற்ற. இவர்க்கு - நாகன் தத்தை ஆகியோரைக் குறித்தது. காதல் - விருப்பம். முருகலர் - மணம் கமழும். அலங்கல் - கடப்ப மலர் மாலை. பராய்க் கடன் - கடமை தவறாத வழிபாடு. 10

660. வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை,

தெளிவுரை: சேவற் கோழிகளையும், வரிகளையுடைய மயில்களையும் காணிக்கைப் பொருள்களாக்கித் தோரணங்களாக மணிமாலைகளைத் தொங்கவிட்டு, வண்டுகள் ரீங்காரம் செய்யும் கடப்ப மலர் மாலைகளைக் கொண்டு அலங்காரம் செய்து, போரில் வல்ல நீண்ட வேலேந்திய முருகப் பெருமானுக்குப் புகழ்விளங்கும் பாடல்களைப் பாடிக் குரவைப் கூத்தாடல் செய்தும், அணங்காடல் செய்தும் இவர்கள் பெருவிழா நடத்தினார்கள்.

பின்றை என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

சிறப்புரை : சேவல் முருகப்பெருமானுக்குக் கொடியாகவும், மயில் வாகனமாகவும் விளங்கும் நிலையில் இவைகளைத் திருக்கோயில்களுக்குக் காணிக்கைப் பொருள்களாக வழங்குதல் வழிபாட்டு முறையின்பாற் படுவதாயிற்று. மற்றும் அருள் ஆவேசம் உண்டாக்கித் தேவராட்டியை வெறியாடல் செய்ய வைத்து அவள்

வாக்கை இறைவன் திருவாக்காக ஏற்கும் மரபானது அணங்காடல் எனத் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வருதலாம் என்க. இதனை நற்றிணைச் செய்யுள் 34 வரிகள் 8-11இல்,

"கார் நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே!"

என உரைத்தமையும் காண்க.

வாரணம் - கோழி. கதம்பம் - கடப்ப மாலை. குரவை - கைக்கோத்து ஆடும் கூத்து வகை. அணங்கு ஆடல் - வேலவன் ஆவேசித்து அருள் ஏறி ஆடும் வெறியாடல். 11

661. பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற ஊர்தி
வரைஉரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளினாலே,

தெளிவுரை: தழும்புகள் பொலிந்த உடம்பையுடைய வேடர்களின் தலைவனான நாகனுக்கு, முப்புரங்களை எரித்தழித்த எம்பெருமானாகிய சிவபிரான் திரு மைந்தரும், வெற்றி பொருந்திய மயிலை வாகனமாக உடையவரும், கிரவுஞ்ச மலையின் வலிமை கெடுமாறு எறிந்த உறுதி மிக்க வேற்படையைத் தன் நீண்ட கையில் ஏந்தியவரும், வெற்றி மேவும் பெருமையுடையவருமான முருகவேளின் திருவருளால் திருமகவு தோன்றியது.

இவண் அருளினாலே என்பதை அடுத்த பாடலின் "கருப்பம் நீட" என்பதனோடு கூட்டுக.

சிறப்புரை : வேடுவர்கள், அச்சம் மற்றும் அன்பு ஆகியவற்றின் வழி நில்லாத பாங்கினைத் திருப்பாட்டு 656-இல் சுட்டிய பாங்கின்படி, பகைவர் மற்றும் விலங்குகளோடு செய்யும் போரினால் உடலில் வடுப்பொலிந்தமை சாற்றப்படுதலாயிற்று. இத்தன்மையில்

முப்புரங்களை எரித்த சிவபிரானின் வீரச் செயலும், மயிலின் கொற்றமும் கிரவுஞ்ச மலையை இரண்டாக்கித் தாருகாசுரன் மார்பைப் பிளந்த வேற்படையின் ஆற்றலும், முருகப் பெருமானின் வெற்றிமேவும் பெருமையும் உரைத்தமை காண்க.

வடு - தழும்பு. பொலிந்த யாக்கை - வீரத்தைப் புலப்படுத்தும் அழகு என்க. பதி - தலைவன். எயில் - கோட்டை மதில். புரம் - முப்புரங்கள். செற்ற - அழித்த. எந்தையார் - சிவபிரான். மைந்தர் - முருகவேளைக் குறித்தது. கொற்றம் - வெற்றி. ஊர்தி - வாகனம். வரை - கிரவுஞ்ச மலை. உரம் - தாருகாசுரன் வலிமையான மார்பு. அவன் கிருவுஞ்ச மலையாகி மாயை புரிந்த வரலாற்றினைக் கந்த புராணத்தில் உள்ளவாறு காண்க. அயில் - வேல். அண்ணலார் - பெருமையுடைய முருகவேள். 12

662. கானவர் குலம்வி ளங்கத்
தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி
உறுகடன் வெறியாட் டோடும்
ஆனஅத் திங்கள் செல்ல
அளவிற் செய் தவத்தி னாலே
பால்மதி உவரி ஈன்றால்
எனமகப் பயந்த போது;

தெளிவுரை: வேட்டுவர் குலம் விளங்கும் வகையில் நாகன் மனைவியான தத்தை கருவுற்றனள். வேலவன் வெறியாடல் முதலான குற்றமில்லாத மரபுவழிச் சடங்குகளைச் செய்து உரிய மாதங்கள் செல்லவும் அளவற்ற பெருந்தவத்தால் பால் போன்ற நிறை நிலவைக் கடல் வெளிப்படுத்தியது போன்று தத்தை, குழந்தையைப் பெற்றனள்.

பயந்தபோது என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

இவண் அளவற்றதாகச் செய்த தவப் பயனால் குழந்தை பிறந்தது என்பதாம். இதனைக் பாடல் 657 - இல் உரைத்த குறிப்பின் வழியும் நோக்குக.

கானவர் - வேடுவர். ஊனம் இல் - குறைவில்லாத. பலிகள் - மரபு வழிச் சடங்குகள்.வெறியாட்டு - ஓர் அணங்கின் மீது முருகவேள் ஆவேசித்து நிலவும் அருள் நிலை. உவரி - கடல். 13

நாகன் குழந்தையைக் கையால் எடுத்து மகிழ்தல்

இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

663. கரிப்பரு மருப்பின் முத்தும்
கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர்
பொழிதரு மழையே அன்றி
வரிச் சுரும்பு அலைய **வானின்**
மலர்மழை பொழிந்தது எங்கும்
அரிக் குறுந்துடியே அன்றி
அமரர்துந் துபியும் ஆர்த்த

தெளிவுரை: அப்போது யானையின் பருமையான கொம்பில் தோன்றிய முத்தும், மூங்கிலில் தோன்றும் ஒளி திகழும் முத்தும், மலையில் தோன்றும் மணி வகையும் என வேடர்கள் பெருமகிழ்வோடு மழை போன்று பொழிந்ததோடல்லாது, வரிகளையுடைய வண்டுகள் பறக்க வானத்திலிருந்துதேவர்களும் மலர் மழைபொழிந்தார்கள். அப்போது சிறிய உடுக்கையேயன்றித் தேவர் துந்துபியும் முழங்கின.

கரி - யானை. மருப்பு - யானைத் தந்தம். கழை - மூங்கில். பொருப்பு - மலை. வரிச் சுரும்பு - வரிகளையுடைய அம்பு. துடி - உடுக்கை. ஆர்த்த - ஒலித்தன. 14

664. அருவரைக் குறவர் தங்கள்
அகன்குடிச் சீறூர் ஆயம்
பெருவிழா எடுத்து மிக்க
பெருங்களி கூருங் காலைக்
கருவரை காள மேகம்
ஏந்தியது என்னத் தாதை
பொருவரைத் தோள்கள் ஆரப்
புதல்வனை எடுத்துக் கொண்டான்.

தெளிவுரை: அருமை விளங்கும் மலைவாழ் வேடர்கள் தாங்கள் வதியும் திரண்ட மக்கள் சூழ்ந்த இடத்தில் பெருவிழா எடுத்து மகிழ்ச்சியில் திளைத்து விளங்கக் கரிய மலையானது கரிய மேகத்தை ஏந்தியது என்று தோன்றுமாறு தந்தையான நாகன் தன்னுடைய ஒப்பற்ற தோள்கள் மகிழுமாறு மைந்தனைக் கைகளில் எடுத்துக் கொண்டான்.

இவண் கரிய மலை என்பது நாகனுக்கும் கரிய மேகம் என்பது கரிய வண்ணமுடைய குழந்தைக்கும் உவமை சாற்றப்பட்டது.

குறவர் - வேடர். சீறூர் - சிறிய ஊர். ஆயம் - திரள். கருவரை - கரிய மலை. காள மேகம் - மழை விளங்கும் கரிய மேகம். தாதை - தந்தை; நாகனைக் குறித்தது - பொருவரைத் தோள் - ஒப்பற்ற மலை போன்ற தோள், ஆர - பொருந்த, மகிழ்தலும் ஆம். 15

குழந்தைக்குத் திண்ணன் என்று பெயரிட்டு மகிழ்தல்
- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

665. கருங்கதிர் விரிக்கும் மேனிக்
காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழின் ஓங்கி
இறவுளர் அளவே அன்றி
அரும் பெறல் உலகம் எல்லாம்
அளப்பரும் பெருமை காட்டித்
தரும் குறி பலவும் சாற்றும்
தன்மையின் பொலிந்து தேன்ற;

தெளிவுரை: கருமை விளங்கும் ஒளி நல்கும் அழகிய வண்ணம் கொண்டு யாவரும் விரும்பத்தக்க அக்குழந்தையும் பெரிய புலிக் குட்டி போன்று ஓங்கி வேடுவர்கள் மட்டும் அல்லாது அருமை பெறும் உலகம் யாவும் அளத்தற்கு அரிய பெருமையுடையதாய், நற்குறிகள் பலவும் சாற்றப்பெறும் தன்மையில் பொலிவுடன் தோன்றியது.

தோன்ற என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

புலிப்பறழ் - புலிக்குட்டி. இறவுளர் - குறிஞ்சி நில மக்கள்; வேட்டுவர்களைக் குறித்தது.

666. அண்ணலைக் கையில் ஏந்தற்கு
அருமையால் உரிமைப் பேரும்
"திண்ணன் என்று இயம்பும்" என்னத்
திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள
பொருஇல் சீர் உருவி னானைக்
கண்ணினுக்கு அணியாத் தங்கள்
கலன்பல அணிந்தார் அன்றே.

தெளிவுரை: அண்ணலாகிய அக்குழந்தையைக் கையில் ஏந்துதற்குக் கூடாமையாகிக் கனத்து இருந்ததைக் கண்டு, "இக் குழந்தையைத் திண்ணன் என்று கூறுக." என்று நாகன் இயம்ப, உறுதியான

வில்லேந்தும் வேடர்கள் எல்லோரும் மகிழ்வோடு ஆரவாரம் செய்தார்கள். அப்போது புண்ணியப் பொருளாய் விளங்கும் ஒப்பற்ற சிறப்பின் மிக்க உருவத்தையுடைய அக்குழந்தையைத் தன் கண்ணுக்கு அணிகலன் போன்று இனிது நோக்கிப் பல்வகையான ஆபரணங்களை அணிவித்தார்கள்.

சிறப்புரை : நாயனார் மண்ணுலகில் தோன்றிய பொழுதே யாவரும் விரும்பத்தகும் குழந்தையாக விளங்கியமை, திருப்பாட்டு 665-இல் "கருங்கதிர் விரிக்கும் மேனிக் காமரு குழவி" எனச்சாற்றப்பட்டமை காண்க. தேகத்தில் ஏனைய உறுப்புகளுக்கு அணிகலனாக இயம்பப்படுவது இனிய காட்சியே என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இக்குழந்தை ஏனையோர் கண்களுக்கு இன்னருள் பொழியும் திருவுருவத்தைக் கொண்டவராய் அன்னார் கண்களுக்கு அணி போன்று விளங்கினார் என்பதனை, "பொருவில் சீர் உருவினானைக் கண்ணினுக்கு அணியாய்" எனச் சாற்றப்பட்டது.

அண்ணல் - நாயனாரைக் குறித்தது. திண் சிலை - வலிமையான வில். புண்ணியப் பொருள் - மகிழ்வளிக்கும் பெரும்பொருள். பொருவில் - ஒப்பற்ற. அணி - அணிகலன்; மகிழ்வளிக்கும் பொருள். கலன் - ஆபரணம். நாயனார் புண்ணியப் பொருளாய் விளங்கிப் பிறவாமையை நல்கும் பாங்கினைக் கல்லாட தேவ நாயனார் 11 - ஆம் திருமுறை, திருக்கண்ணப்ப தேவர் திருமறம், வரிகள் 36-38 இல், 17

"நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட்டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல் வினைக் காரியம் கெடுமே!"

என்று அருளியவாறும் காண்க.

667. வரையுறை கடவுள் காப்பு
மறக்குடி மரபில் தங்கள்
புரையில் தொல் முறைமைக் கேற்பப்
பொருந்துவ போற்றிச் செய்து
விரைஇளந் தளிரும் சூட்டி
வேம்பு இழைத்து இடையே கோத்த
அரைமணிக் கவடி கட்டி
அழகுற வளர்க்கும் நாளில்;

தெளிவுரை:: மலையின் மீது எழுந்தருளும் முருகக் கடவுளைக் காவல் தெய்வமாகக் கொண்டு வேட்டுவர் மரபில் குறைவில்லாத

தொன்மையான முறைப்படி காப்புக் கட்டி ஏற்புடையதான துதிகளைச் செய்து நறுமணமுடைய இளந்தளிர்களைச் சூட்டி, வேப்பம் கொட்டைகளை இழைத்து இடையே அரைஞாண் கயிறாகக் கட்டி அக்குழந்தையை மகிழ்வோடு வளர்க்கலானார்கள்.

"வளர்க்கும் நாளில்" என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டிப் பொருத்துக.

"வரையுறை கடவுள், குறிஞ்சி நிலக் கடவுளான முருகவேள். மறக்குடி - வேட்டுவர் குலம். புரை இல் - குற்றமில்லாத. போற்றிச் செய்து - துதித்து. கவடி - அரையில் கட்டும் மணிக்கவடி பலகறை. அழகுற - மகிழ்வோடு. 18

668. வருமுறைப் பருவந் தோறும்
வளம்மிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க
பெருவிறல் வேடர்க் கெல்லாம்
திருமலி துழனி பொங்கச்
செழுங்கனி மகிழ்ச்சி செய்தே
அருமையின் புதல்வர்ப் பெற்ற
ஆர்வமும் தோன்ற உய்த்தார்.

தெளிவுரை: மற்றும் வருகின்ற பருவந் தோறும் வளம் மிகும் விழாக்களும் தெய்வங்களுக்குரிய படையலையும் செய்து பெருமையுடைய வீரர்களும் ஆரவார ஒலி மேவும்படிக் களிப்பு உண்டாக்கி அருமையாகப் பெற்ற புதல்வரை வாய்த்தமை கொண்டு ஆர்வம் தோன்றச் செய்தார்கள்.

பெருமடை - உணவுப் படையல் - திருமலி துழனி - மங்கல ஒலி.19

திண்ணனாரின் குழந்தைப் பருவம் உரைத்தல்

- இது முதல் 8 பாடல்கள் ஒரு தொடர்

669. ஆண்டெதிர் அணைந்து செல்ல
விடும் அடித் தளர்வு நீங்கிப்
பூண் திகழ் சிறுபுன் குஞ்சிப்
புலிஉகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண்
முளவுமுள் அரிந்து கோத்த
நாண்தரும் எயிற்றுத் தாலி
நலம்கிளர் மார்பில் தூங்க;

தெளிவுரை: ஓராண்டு கடந்த நிலையில் தளர்ச்சியான நடைநீங்கிச் சிறுநடைப் பருவம் வர புன்மையான மயிர்களையுடைய தலையில் பொன் பூண் அணியப்பட்ட புலி நகத்தால் ஆன சுட்டியைச் சாத்தி, செங்கண் கொண்டு சினந்த முள்ளம் பன்றியின் முள்ளை அரிந்து இடையிடையில் கோத்துப் பொன் கயிற்றில் புலிப்பல் கோத்து மார்பில் தவழும் மாலையாகச் சாத்தினார்கள்.

இவண் குழந்தைகளுக்குக் காப்புச் செய்யும் வகையில் இத்தன்மையில் விலங்குகளின் நகம், பல் முதலியவற்றை அணிதல் மரபு என்க.

ஆண்டு - ஓராண்டு. சிறுபுன் குஞ்சி - சிறிய அளவுடைய தலைமயிர். புலியுகிர் - புலி நகம். சுட்டி - தலையணிகலன். முளவுமுள் - முள்ளம்பன்றியின் முள். நாண் - கயிறு. எயிற்று - பல்லால் ஆன. தாலி - கழுத்தணி. தூங்க - தவழ. 20

670. பாசொளி மணியொடு ஆர்த்த
பல்மணிச் சதங்கை ஏங்கக்
காசொடு தொடுத்த காப்புக்
கலன்புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பின் தண்டை
செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலம் காட்டி
மறுகிடை ஆடும் நாளில்;

தெளிவுரை: பசுமையான ஒளி வீசும் மரகத மணியோடு பல வகையான மணிகளும் சேர்ந்து சதங்கையாக அரையில் ஒலித்து ஆரவாரம் செய்ய, செப்புக் காசுடன் புனையப்பட்ட தாயத்தையும் அரைஞாணில் சேர்த்து, ஒளிமிக்க யானைத் தந்தத்தால் ஆன தண்டை காலில் விளங்கக் காதணியாக மாணிக்கத்தால் ஆன அணிகலன் ஒளிர்ந்து தொங்கத் திண்ணனார் கண்டோரின் பிறவிப் பிணி தீர்க்கும் அருள் வண்ணம் கொண்டு தெரு வீதியில் விளையாடலானார்.

"ஆடும் நாளில்" என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

சிறப்புரை : நாயனார் பிறவாமை நல்கும் புண்ணியப் பொருள் என்று திருப்பாட்டு 666 - இல் உரைத்த வகையில் இவண் "மாசறு கோலம்" எனச் சாற்றியமை காண்க.

பாசொளி - பசுமை வண்ணம் விளங்கும் ஒளி. ஏங்க - ஒலிக்க. காசு - செப்புக்காசு. காப்புக் கலன் - தாயத்து. தேசு - ஒளி. மருப்பு -

யானைத் தந்தம். தண்டை - காலில் அணியும் அணிகலன். குதம்பை - காதில் தொங்கும் அணி. மின்ன - ஒளிர. மாசறு - பிறவிப் பிணி தீர்த்தல். கோலம் - அழகிய அருள் வண்ணம். மறுகு - தெரு வீதி. 21

671. தண் மலர் அலங்கல் தாதை
தாய்மனம் களிக்க வந்து
புண்ணியக் கங்கை நீரில்
புனிதமாம் திருவாய் நீரில்
உள்நனைந்து அமுதம் ஊறி
ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய்
குதட்டியே வளரா நின்றார்.

தெளிவுரை: குளிர்ந்த மலர் மாலையணிந்த தந்தையும் தாயும் மனம் மகிழுமாறு வந்து புண்ணிய நதியான கங்கையினும் புனிதமாக விளங்கச் செய்யும் திருவாயில் உமிழ் நீர் சுரக்க, அதனால் நனைந்து அமுதம் ஊறிய மழலைச் சொற்களை இனிது உதிர்க்கும் வகையில், தம் அழகிய பவளம் போன்ற சிவந்த வாய் கொண்டு குதட்டித் திண்ணனார் வளர்ந்து வரலானார்.

மலர் அலங்கல் - பூ மாலை. தாதை - நாகனைக் குறித்தது. தாய் - தந்தை என்க. புனிதம் - தூய்மை. 22

672. பொரு புலிப் பார்வைப் பேழ்வாய்
முழையெனப் பொன்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு
பைந்தழை கைக்கொண்டு ஓச்ச
இருசுடர்க்கு உறுகண் தீர்க்கும்
எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய்
வாய் முத்தம் கொள்ள மாற்றி.

தெளிவுரை: போர் புரியும் புலியின் திறந்த வாய், குகை போன்று விளங்க, அதனுள் பார்வை விலங்கு நுழைதலைப் போன்று தந்தையான நாகன் வாயைத் திறந்து காட்ட, அப்போது குழந்தையானது தன் கையை நீட்ட, அன்புடைய தந்தை செல்லமாக இளந்தளிர் கொண்டு ஓச்சுகிறார். அதைக் கண்ட குழந்தையாகிய திண்ணனார் சூரியர் சந்திரர் ஆகிய நிலையில் விளங்கும் தம் கண்களில் நீர் முத்துக்கள் வெளிவரத் தாயான தத்தை, வாய் முத்தத்தால் அவற்றை மாற்றுதலானாள்.

பொருபுலி - போர் செய்யும் புலி. பார்வை - பார்வை விலங்கு. பேழ்வாய் - திறந்தவாய். இது நாகன் வாய் திறத்தலுக்கு உவமையாயிற்று. முழை - குகை. பொன் கை - திண்ணனாரின் அழகிய கை. இரு சுடர் - சூரியன், சந்திரன்; நாயனார் கண்களுக்கு உவமை கூறப்பட்டது. துளி முத்தம் - கண்ணீர்த்துளி. 23

673. துடிக்குறடு உருட்டி ஓடித்
தொடக்கு நாயப் பாசம் சுற்றிப்
பிடித்தறுத்து எயினப் பிள்ளைப்
பேதையர் இழைத்த வண்டல்
அடிச்சிறு தளிரால் சிந்தி
அருகுறு சிறுவ ரோடும்
குடிச்செறி குரம்பை எங்கும்
குறுநடைக் குறும்பு செய்து;

தெளிவுரை: உடுக்கை வடிவாகச் செய்யப்பட்ட மரக்கட்டையை உருட்டி அதன் பின்னே ஓடியும், கட்டப்பட்ட நாயின் கயிற்றைச் சுற்றி இழுத்து அறுத்தும், வேட்டுவச் சிறுமியர் தெருவில் மணல் கொண்டு கட்டி விளையாடும் வீடுகளைச் சிறு தளிர் போன்ற காலால் சிந்திச் சிதைத்தும், அருகாமையில் உள்ள சிறு குடில்களில் சென்று குறுநடை புரிந்து குறும்புகள் செய்தும், திண்ணனார் விளையாடல்களைப் புரியலானார்.

துடி - உடுக்கை. குறடு - உருண்டை மரக் கட்டை. தொடக்கு - கட்டப்பட்ட. பாசம் - கயிறு. எயினப் பிள்ளைப் பேதையர் - வேட்டுவச் சிறுமியர். வண்டல் - மணலில் வீடு கட்டி ஆடும் விளையாட்டைக் குறித்தது. தளிர் - சிறுபாதம். குரம்பை - குடிசை. செய்து - புரிந்து; இதனை அடுத்த பாடலோடு கூட்டுக. 24

674. அனையன பலவும் செய்தே
ஐந்தின் மேல் ஆன ஆண்டின்
வனைதரு வடிவார் கண்ணி
மறச்சிறு மைந்த ரோடும்
சினை மலர்க் காவுள் ஆடிச்
செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப்பு உழலை வேலிப்
புறச்சிறு கானில் போகி,

தெளிவுரை: இவ்வாறு குறும்புச் செயல்கள் புரிந்த திண்ணார்க்கு ஐந்து ஆண்டு வயது ஆன நிலையில், புனையப்பட்டு விளங்கும்

அழகிய தலைமாலை சூடும் வீரம் மிக்க வேட்டுவச் சிறுவர்களோடு கிளைகளையுடைய மலர்ச் சோலைகளிலும் அடர்ந்து, விளங்கும் குடிசைகள் விளங்கும் மலைச்சாரல்களிலும் ஆடி, யானைக் கொம்புகளால் அமைக்கப்பட்ட ஊரின் எல்லையில் அமைந்த சிறு கானில் சென்று விளையாடலாயினார்.

இவண் யானையின் கொம்புகளால் வேலி அமைதலை நவின்றமை சாற்றியது காண்க இத் தன்மையில் திருப்பாட்டு 651 -இல் "மத்த வெங்களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி" எனச் சுட்டியமையும் நோக்குக.

கண்ணி - தலைமாலை. மறச் சிறுமைந்தர் - வீரம் செறிந்த வேட்டுவச் சிறுவர். சினை - மரக் கிளை. கா - சோலை. மருப்பு - யானைக் கொம்பு. உழலை - வேலியின் கண் அமைக்கப்படும் வழி. "போகி" என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 25

675. கடுமுயல் பறழி னோடும்
கான ஏ னத்தின் குட்டி
கொடிவரிக் குருளை செந்நாய்
கொடுஞ் செவிச் சாபம் ஆன
முடுகிய விசையில் ஓடித்
தொடர்ந்துடன் பற்றி முற்றத்து
இடுமரத் தாளில் கட்டி
வளர்ப்பன எண்ணி லாத.

தெளிவுரை: மிக வேகமாக ஓடும் முயல் குட்டிகளோடு காட்டுப் பன்றிக் குட்டியும், வளைந்த வரிகளையுடைய புலிக் குட்டியும், வளைந்த காதுகளையுடைய செந்நாய்க் குட்டியும் மிக விரைந்து ஓட, அவற்றை தொடர்ந்து ஓடி உடனே பற்றி முற்றத்தில் உள்ள மரத்தின் அடியில் கட்டித் திண்ணனார் வளர்ப்பன எண்ணிலாதனவாகும்.

கடு முயல் பறழ் - மிகவேகமாக ஓடும் தன்மையுடைய முயற்குட்டி. கான ஏனம் - காட்டுப் பன்றி, கொடு வரி - வளைவான வரிகளையுடைய புலி. குருளை - புலிக் குட்டி. கொடுஞ்செவி - வளைந்த காது. சாபம் - விலங்கின் குட்டி. விசை - விரைவு. தாள் - அடிப்பகுதி. 26

676. அலர்பகல் கழிந்த அந்தி
ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக்
கொண்டு கண் துயிற்றிக் கங்குல்

புலரஊன் உணவு நல்கிப்
புரிவிளையாட்டின் விட்டுச்
சிலமுறை ஆண்டு செல்லச்
சிலைபயில் பருவம் சேர்ந்தார்.

தெளிவுரை:: நன்கு விளங்கும் பகற்பொழுது கழிந்து மாலைப் பொழுதில் வெண்கடுகைப் புகையச் செய்துகாட்டிக் குறவர் குல மூதாட்டி திண்ணனாரை உறங்கச் செய்து, இரவு கழிந்து காலையில் ஊன் உணவு நல்கி விளையாடுமாறு செய்யலானாள். இவ்வாறு சில ஆண்டுகள் செல்ல, விற்பயிற்சியைப் பெறும் பருவத்தை அவர் அடைந்தார்.

அந்தி - மாலைப்பொழுது. ஐயவி - வெண் சிறு கடுகு; இது தீய சேட்டை முதலியவற்றினின்று காத்தற் பொருட்டுச் செய்யப்பெறும் சடங்கு முறை. முது குறத்தி - குறவர் குல மூதாட்டி. கண் துயிற்றி - உறங்கச் செய்து. கங்குல் - இரவு. சிலைபயில் - விற்பயிற்சி பெறுதல்.

27

677. தந்தையும் மைந்த னாரை
நோக்கித் தன்தடித்த தோளால்
சிந்தையுள் மகிழப் புல்லிச்
சிலைத் தொழில் பயிற்ற வேண்டி
முந்தைஅத் துறையில் மிக்க
முதியவரை அழைத்துக் கூட்டி
வந்த நாள் குறித்த தெல்லாம்
மறவர்க்குச் சொல்லி விட்டான்.

தெளிவுரை: தந்தையான நாகன் தன் மைந்தரான திண்ணனாரைச் சிந்தை மகிழ நோக்கி நன்கு தழுவியணைத்து, விற்றொழிலைப் பயின்றுவிக்கும் வகையில் முன்பு அத்துறையில் வல்ல முதியவரை அழைத்து விற்பயிற்சிக்கு உரித்த யாவும் குறித்து ஆய்ந்து அதற்கேற்றவாறு செய்யும்படி மறவராகிய வேடர்களுக்குக் கூறினான்.

புல்லி - தழுவி. சிலைத் தொழில் - விற்றொழில் பயிற்சி. மறவர் - வேடுவர்.

28

678. வேடர்தம் கோமான் நாகன்
வென்றிவேள் அருளால் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத்
திண்ணன்வில் பிடிக்கின் றான் என்று

ஆடியல் துடியும் சாற்றி
அறைந்தபோ ஓசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும்
மறக்குலத் தலைவர் எல்லாம்.

தெளிவுரை: வேடர்களுக்கெல்லாம் தலைவனான நாகன் வெற்றி மேவும் முருகவேள் திருவருளால் பெற்றெடுத்த அறிவின் மிக்கோரினும் மேம்பட்டவரான திண்ணனார் வில்லை ஏந்தி நலம் பெருகும் கல்வியைப் பெறுகின்றார் என வெற்றிப் பறை சாற்றி அறிவிக்க, அவ்வோசை கேட்டு அருகில் உள்ள மலைகளில் ஆட்சி புரியும் வேட்டுவ குலத் தலைவர்கள் எல்லாரும் சூழ்ந்து வரலானார்கள்.

எல்லாம் என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

சிறப்புரை: அறிவின் மிக்கவரை ஆதிசேடனுக்கு உவமை சாற்றுதல் இலக்கிய மரபு. அது சேடர் எனப்பட்டது. இவண் உரிய ஆறறிவினும் மேலோங்கும் மெய்யறிவு கொண்டு உணர்த்தும் வகையில், "சேடரினும் மிக்க செய்கைத் திண்ணன்" எனச் சாற்றுதலாயிற்று.

கோமான் - தலைவன். வென்றிவேளன் - முருகக் கடவுள், சேடர் - அறிவுடையோர்; ஆதிசேடன் என்க. ஆடியல் துடி - வெற்றிப் பறை, ஆடு - வெற்றி, துடி - உடுக்கை. இங்குப் பறை என்க. அறைந்த - ஒலிக்கச் செய்த, மாடு - பக்கம்; அண்மை. மறக்குலம் - வேட்டுவர் குலம். 29

679. மலைபடு மணியும் பொன்னும்
தரளமும் வரியின் தோலும்
கொலைபுரி களிற்றுக் கோடும்
பீலியின் குவையும் தேனும்
தொலைவில் பல் நறவும் ஊனும்
பலங்களும் கிழங்கும் துன்றச்
சிலையில் வேடர் கொண்டு
திசைதோறும் நெருங்க வந்தார்.

தெளிவுரை: மலையில் தோன்றும் நவரத்தின மணிகளும், பொன்னும், முத்தும், புலியின் தோலும், கொலைத் தன்மையுடைய யானைக் கொம்பும், மயிற் பீலி சுமையும், தேனும், பல்வகையான மது வகைகளும், ஊனும், பழங்களும், கிழங்குகளும் என மேவும் யாவும் பெருக, விற்றொழிலில் சிறந்த வேட்டுவர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் ஆங்குக் கொண்டு வந்து சூழ்ந்தார்கள்.

மலைபடு - மலையில் விளைகின்ற. தரளம் - முத்து. வரி - புலி. கோடு - கொம்பு. பீலி - மயில் தோகை. நறவு - மதுவகை. பலங்கள் - பழங்கள். துன்ற பெருக. சிலை பயில் வேடர் - விற்றொழிலில் மிக்க வேடுவர்கள்.

30

680. மல்கிய வளங்கள் எல்லாம்
நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம்
ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
"பல்பெரும் கிளைஞர் போற்றப்
பராய்க் கடன் பலவும் செய்து
வில்விழா எடுக்க" என்று
விளம்பினான் வேடர் கோமான்.

தெளிவுரை: பெருகிச் சேரும் வளங்கள் எல்லாம் நிறையுமாறு ஆங்கு வந்தோர் எல்லாரும் பெரும் பொருள்களோடு வந்து சேர, அவை எல்லையில் அடங்காதவாறு எல்லா இடங்களிலும் விரவி விளங்கின. வேடர் கோமானான நாகன் "பெருமை விளங்கும் சுற்றத்தார் சூழத் தெய்வத்தைப் போற்றி உரிய கடமைகளைப் புரியும் வகையில் வில் பயிற்றுவிக்கும் விழாவை நடத்துக." என்றான்.

ஈண்டினர் - வந்தவர்கள். இளைஞர் - சுற்றத்தார். பராய்க்கடன் - இறைவனைப் போற்றிப் பரவிச் செய்யப்படும் கடமைகள். எடுக்க - செய்க.

31

681. பான்மையில் சமைத்துக் கொண்டு
படைக்கலம் விளைஞர் ஏந்தத்
தேன்அலர் கொன்றை யார்தம்
திருச் சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சம்
ஆக்கிட அவர்க்கே பின்னும்
கான ஊன் அமுதம் ஆக்கும்
சிலையினைக் காப்புச் சேர்த்தார்.

தெளிவுரை: இவ்வாறு வில் விழாவுக்குரியன யாவும் பொருத்தமுற அமைத்த பின்னர், வில்தொழிலில் கை தேர்ந்த வீரர்கள் படைக்கலத்தை ஏந்தி நின்றார்கள். தேன் விளங்கும் கொன்றை மலர் சூடிய சிவபிரான் முன்னர் முப்புரத்தை அழிக்க வில்லாக விளங்கிய மேரு மலை, பின்னும் பாற்கடலைக் கடையும்போது முதற்கண் நஞ்சை வெளிப்படுத்துவதற்கு காரணமாகி நின்று

அப்பரமனே பெறுமாறு ஆக்கிய தன்மை போன்று, திண்ணனார் பயிற்சி பெறுதற்குரிய வில் அமைவதாயிற்று. இந்த வில்லே பின்னர் நாயனார் கானகத்தில் குடுமித் தேவர்க்கு ஊன் அமுதம் ஆக்கும் வகையில் விலங்கினைக் கொல்லப் பயன்பட உள்ளது என்னும் தன்மை விளங்க, அதற்குத் திருக்காப்பு செய்தனர்.

சிறப்புரை: இவண் நாயனார் புண்ணியப் பொருளாய் விளங்கினார் என்று சாற்றியதைத் தொடர்ந்து அவர் ஏந்த உள்ள வில்லானது ஈசன் ஏந்திய மேருவை ஒத்தது என்பது உணர்த்தப்பட்டது. மேரு மலை என்னும் பொன்மலை வில்லாக விளங்கி முப்புரம் எரித்தற்குத் துணை நின்றதன்மையும், பின்னர் அதுவே பாற்கடலைக் கடையும்போது நஞ்சைத் தோற்றுவித்தற்குக் காரணமாகியதைப் போன்று, நாயனாரது வில்லும் இறைவனுக்கு ஊனுணவு அளித்தற்குக் காரணமாயிற்று என்பது கருத்து.

சமைத்து - அமைத்து. படைக்கலம் - வில் முதலானவை. வினைஞர் - ஆயுதம் கையாளுவதில் வல்லவர். கொன்றையார் - சிவபிரான். சிலை - வில். காப்பு - பூசை முதலிய வழிபாடு. 32

682. சிலையினைக் காப்புக் கட்டும்
திண்புலி நரம்பில் செய்த
நலம்மிகு காப்பு நல்நாண்
நாகனார் பயந்த நாகக்
குலம் விளங்கு அரிய குன்றின்
கோலமுன் கையில் சேர்த்தி
மலையுறை மாக்கள் எல்லாம்
வாழ்த்தெடுத்து இயம்பி னார்கள்.

தெளிவுரை: வலிமையுடைய புலி நரம்பில் செய்த நலம் மிகு நாணாகிய கயிற்றை வில்லில் காப்பாகக் கட்டியதைப் போன்று, நாகன் பெற்ற வேட்டுவர் குலம் விளங்கும் வகையில் அருமையுடைய மலை போன்ற அழகுடைய திண்ணனார் முன்கையில் காப்பாகக் கட்டி, மலையில் விளங்கும் மக்கள் அனைவரும் சேர்ந்து தம்மரபுக்குரிய வாழ்த்தினை எடுத்து இயம்பினார்கள்.

சிலை - வில். நல் நாண் - காப்புக்குரிய கயிறு. நாகனார் - திண்ணனார் தந்தை. நாகக் குலம் - வேட்டுவக் குலம். குன்றின் கோலம் - குன்றெனப் பொலியும் திண்ணனார். மாக்கள் - வேடுவர்கள். 33

683. ஐவன அடிசில் வெவ்வேறு
அமைத்தன புற்பாற் சொன்றி
மொய்வரைத் தினைமென் சோறு
மூங்கில்வன் பதங்கள் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக்
கலந்தஊன் கிழங்கு துன்றச்
செய்வரை உயர்ப்ப எங்கும்
கலந்தனர் சினவில் வேடர்.

தெளிவுரை: மலை நெல்லைக் குத்தி அரிசியாக்கிய சோறும், புல்லரிசிச் சோறும், மலைச்சாரலில் விளைந்த தினையரிசிச் சோறும் மூங்கிலின் வலிய அரிசி கொண்டு வடித்த சோறும், சமையற் கலையில் தேர்ந்த வேட்டுவர்கள் ஆக்கி, அதனோடு ஊனும், கிழங்கும் கலந்து மலை போன்று குவித்தார்கள். ஆங்குச் சினத்தை இயல்பாகக் கொண்ட வேடர்கள் உண்பதற்காகக் கூடினார்கள்.

ஐவன அடிசில் - மலை நெல்லைக் குத்திச் சமைக்கப்பட்ட அரிசிச் சோறு. புற்பாற் சொன்றி - புல்லரிசிச் சோறு. வரை - மலை. மூங்கில் வன்பதம் - மூங்கிலரிசி. கைவினை எயினர் - சோறு சமைத்தலில் வல்லவரான வேட்டுவர். துன்ற - கலந்து சேர்த்த. செய்வரை - செய்குன்று; சோற்றுக் குவியலை உரைத்தல். கலந்தனர் - கூடினார்கள். 34

684. செந்தினை இடியும் தேனும்
அருந்துவார் தேனில் தோய்த்து
வந்த ஊன் அயில்வார் வேரி
விளங்கனிக் கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி
நசையொடு மிசைவார் வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர்
ஆயினர் அளவி லார்கள்.

தெளிவுரை: அளவற்றவர்களான அவ்வேடர்கள், செவ்விய தினைமாவும், தேனும் கலந்து அருந்துபவர்களாயும், ஊனுணவைத் தேனில் தோய்த்து இன்சுவையாக்கியும், விளங்கனியைத் தேனில் கலந்து கவளமாக்கியும் உண்பவர்களாயும், ஈசல்களை விருப்பத்தோடு உண்பவர்களாயும் ஆயினர். இவ்வாறு அவர்கள் பல்வகையான உணவு வகைகளை அளவில்லாது பேரார்வத்தோடு உண்ணத் தலைப்பட்டார்கள்.

இடி - மா. அயில்வார் - உண்பார். வேரி - தேன். ஈயல் - ஈசல் என்னும் பூச்சி வகை. நசை - விருப்பம். மிசைவார் - உண்பார். 35

685. அயல்வரைப் புலத்தின் வந்தார்
அருங்குடி இருப்பில் உள்ளார்
இயல்வகை உணவின் ஆர்ந்த
எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர்கதிர் உச்சி நீங்க
ஒழிவில்பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி
வரிசிலை விழவு கொள்வார்.

தெளிவுரை: இவ்வாறு உயர்வுடையதான வில் விழாவை நடத்தும் பொருட்டு வேறு மலைச்சாரலிலிருந்து வந்தவர்களும், ஆங்கே குடிகொள்ளும் வேடுவர்களும் இத்தன்மையுடைய சுவைமிக்க உணவைக் கொண்டு, ஆரவாரித்த ஆடவரும், மகளிரும் சூரியன் உச்சிப் பொழுதைக் கடக்கப் பல்வகையான மதுவகைகளை மிகையாக அருந்தி மயங்கியவர்களாய்க் களிப்பில் திளைத்தார்கள்.

அயல்வரைப் புலம் - பிற இடங்களிலிருந்து வந்த வேடுவர்கள். எயிற்றியர் - எயினர். வேட்டுவ மகளிர் ஆடவரைக் குறித்தது. கதிர் - சூரியன். நறவு - மதுவகை. மாந்தி - மிகையாக அருந்தி. மயல் - மயக்கம். நீடி - திளைத்து வரிசிலை விழவு - உயர்வுடையதான வில் விழா. 36

686. பாசிலைப் படலை சுற்றிப்
பல்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக்
கவடிமெய்க் கலன்கள் பூண்டு
மாசில் சீர் வெட்சி முன்னா
வரும் துறைக் கண்ணி சூடி
ஆசில் ஆ சிரியன் ஏந்தும்
அடல்சிலை மருங்கு சூழ்ந்தார்.

தெளிவுரை: பசுமையான இலைகளை மாலையாகச் சுற்றிப் பல்வகையான மலர்களைக் கொண்டு மாலையாக்கிச் சூடி, மணிகள் பதித்த வடத்தோலை மேலே கட்டிப் பலகறை மணிகளை நெருங்கக் கோத்துக்கட்டிக் குற்றமில்லாத வெட்சி முதலான போர்க்குரிய துறைகளுக்குண்டான மாலை சூடிக் குற்றத்தை நீங்கச்

செய்யும் வில்லாசிரியர் ஏந்தும் வலிமையான வில்லின் பக்கத்தே சூழ்ந்தனர்.

பாசிலை - பசுமையான இலை. படலை - மாலை. தொடையல் - மாலை. காசு - மணிகள். வடத்தோல் - தோற்பட்டை. கவடி - பலகறை. கலன் - ஆபரணம். வெட்சி முன்னா - வெட்சி முதலான போர்த்துறைக்குரிய மாலைகள், கண்ணி - தலை மாலை. ஆசில் - அறியாமை முதலான குற்றங்கள் இல்லாமையாக்குதல். அடல் சிலை - வலிமையான வில். மருங்கு - பக்கம். 37

687. தொண்டக முரசும் கொம்பும்
துடிகளும் துளைகொள் வேயும்
எண்திசை நிறைந்து விம்ம
எழுந்தபே ரொலியி னோடும்
திண்திறல் மறவர் ஆர்ப்புச்
சேண் விசும்பு இடித்துச் செல்லக்
கொண்ட சீர் விழவு பொங்கக்
குறிச்சியை வலம் கொண்டார்கள்.

தெளிவுரை: குறிஞ்சிப் பறையும், ஊதுகொம்பும், உடுக்கைகளும், துளைகளையுடைய மூங்கிற் குழலும் திசைகள் தோறும் நிறைந்து மேவும் வகையில், வலிமையுடைய வேட்டுவ வீரர்கள் ஆரவாரம் செய்ய, தொலைவில் உள்ள ஆகாயத்தில் முட்டுமாறு சிறப்புடன் விழாவை நடத்திக் கொண்டு அவ்வூரை வலம் வந்தார்கள்.

தொண்டக முரசு - குறிஞ்சிப் பறை; ஒருவகை முரசும் ஆம். கொம்பு - ஊது கொம்பு. துடி - உடுக்கை. வேய் - மூங்கிலால் செய்த இசைக் குழல். மறவர் - வேட்டுவ வீரர்கள். விசும்பு - ஆகாயம். இடித்து - மோத. சீர்விழவு - சிறப்புடைய வில் விழா. குறிச்சி - ஊர். 38

688. குன்றவர் வரிகொண் டாடக்
கொடிச்சியர் துணங்கை யாடத்
துன்றிய மகிழ்ச்சி யோடும்
சூர்அர மகளிர் ஆட
வென்றிவில் விழவி னோடும்
விருப்புடை ஏழாம் நாளாம்
அன்று இரு மடங்கு செய்கை
அழகுற அமைத்த பின்றை;

தெளிவுரை: குன்றவர்களில் வேட்டுவ ஆடவர்கள் குறிஞ்சிப் பண்களைப் பாடி வரிக்கூத்தாடவும், வேட்டுவ மகளிர் துணங்கைக் கூத்து ஆடவும்,

மிகவும் மகிழ்ச்சி கொள்ள, தெய்வத் தன்மையுள்ள அரமகளிர் ஆடவும், வில் விழாவானது சிறப்பாக நடைபெற, ஏழாம் நாளன்று இரு மடங்கு சிறப்புடன் மிக அழகுற அமையப் பெற்றது.

பின்றை என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

குன்றவர் - வேட்டுவ ஆடவர். வரி - கூத்து வகை, கொடிச்சியர் - வேட்டுவ மகளிர். துணங்கை - கூத்துவகைகளுள் ஒன்று; இருகைகளையும் முடக்கி அடிக்கும் அபிநயவகை. சூர் அர மகளிர் - தெய்வ மகளிர். 39

689. வெங்கதிர் விசும்பின் உச்சி
மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க
மருங்குபல் லியங்கள் ஆர்ப்பத்
தங்கள்தொல் மரபின் விஞ்சைத்
தனுத்தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப்
பொருசிலை பிடிப்பித் தார்கள்.

தெளிவுரை: கொடிய கதிர்களையுடைய சூரியன் வானத்தின் உச்சியில் மேவியபோது, எல்லா இடங்களிலும் மங்கல வாழ்த்து ஒலிக்கவும், பல்வகையான வாத்தியங்கள் சூழ்ந்து ஆரவாரித்து முழங்கவும், தொன்மையான தங்கள் மரபிற்குரிய வித்தையாகிய வில் தொழில் வல்லவர்களிடம் பேரொளி திகழும் கருமையுடைய காளை போன்றவரான திண்ணனாரைப் போர்வில்லைப் பிடிக்குமாறு செய்தார்கள்.

கதிர் - சூரியன். விசும்பு - வானம். பல்லியம் - வாத்தியம். விஞ்சை - வித்தை. தனுத் தொழில் - வில் தொழில். கரும்போர் ஏறு - கரிய காளை மாடு; திண்ணனாரைக் குறித்தது. 40

திண்ணனார் வில் தொழில் முதலான போர்த் தொழிலில் தேர்ச்சி பெறுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

690. பொற்றட வரையின் பாங்கர்ப்
புரிவறு கடன்முன் செய்த
விற்றொழில் களத்தில் நண்ணி
விதிமுறை வணங்கி மேவும்

அற்றைநாள் தொடங்கி நாளும்
அடல்சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும்
கானவர்க்கு அரிய சிங்கம்.

தெளிவுரை: அழகிய பெரிய மலையடிவாரத்தில் விருப்பத்தோடு வில்விழாவை முறைப்படி செய்த களத்தில் அடைந்து, விதிமுறையில் குரு வணக்கம் முதலானவற்றைப் புரிந்து, என்னை ஆளுடைய வேட்டுவச் சிங்கம் போன்றவராகிய நாயனார், வலிமைமிக்க விற்றொழிலை வீரம் மிக்கராய் முழுநிலையில் கற்றனர்.

இது கவிக்கூற்று.

பொற்றடவரை - அழகிய பெரிய மலை. விதிமுறை வணங்கி - குரு வணக்கம் முதலியன செய்து. அடல்சிலை - வலிமையுடைய வில். ஆண்மை - வீரம். முற்ற - கைகூடும் வகையில். என்னை - என் ஐ எனக் கொண்டு நாயனார் எனவும் காண்க. கானவர் - வேட்டுவர். சிங்கம் - திண்ணனாரைக் குறித்தது. 41

691. வண்ணவெஞ் சிலையும் மற்றப்
படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக்
கலைவளர் திங்களேபோல்
எண்ணிரண்டு ஆண்டின் செவ்வி
எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றி மேல்மேல்
வளர்வதன் பொலிவு போல்வார்.

தெளிவுரை: வீரத்தின் எழில்காட்டும் வில்லும் மற்றும் உண்டான படைகளையும் ஆளும் ஆற்றல் மிக்க திறனும் நன்கு கற்றுக் கண்ணுக்கு அடங்காத அழகொளிரக் கலை வளரும் சந்திரனைப் போலவும், புண்ணியப் பொலிவு மேன்மேலும் பெறுவது போலவும் திண்ணனார் பதினாறு ஆண்டுப் பருவத்தை அடைந்தார்.

வண்ணம் - வீரத்தின் எழிலை உரைத்தலாம். சிலை - வில். மற்றப்படைகள் - வேல், வாள், மற்போர் முதலாவன. கண்ணகல் - கண்ணுக்கடங்காத அழகின் பொலிவு. செவ்வி - வயது. 42

கொடிய விலங்குகளை வேட்டையாட வேண்டும் என்று வேடுவர்கள் நாகனிடம் கூறுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

692. இவ்வண்ணம் திண்ணனார் நிரம்பும் நாளில்
இருங்குறவர் பெருங்குறிச்சிக்கு இறைவன் ஆய
மைவண்ண வரைநெடுந்தோள் நாகன் தானும்
மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலம்
கைவண்ணச் சிலைவேட்டை ஆடித் தெவ்வர்
கணம் நிரைகள் பலகவர்ந்து கானம் காத்து
மெய்வண்ணம் தளர்மூப்பின் பருவம் எய்தி
வில்லுழவின் பெருமுயற்சி மெலிவான் ஆனான்.

தெளிவுரை: இவ்வாறு திண்ணனார் வயது பதினாறில் கல்வியில் முழுமைபெற்று விளங்கும் நாளில், வலிமைமிக்க வேடுவர்கள் விளங்கும் அவ்வூர்க்குத் தலைவனான கரிய வண்ணங் கொண்ட மலை போன்ற தோளுடைய நாகன் என்பவன், மலையிலும், கானகத்திலும், சென்று பல ஆண்டுகள் தன் வில் கொண்டு வேட்டையாடிப் பகைவர்களின் பசுக் கூட்டங்களையும் பல கவர்ந்து, காட்டினையும் பாதுகாத்து வந்தான். இந்நிலையில் அவன் மேனி வண்ணம் தளர்ந்து முதுமை பருவம் எய்தி விற்றொழிலின் செயற்பாடு குறைய மெலிவுற்றான்.

நிரம்பும் நாள் - விற்றொழில் பயிற்சி நிறையும் நாள்; புண்ணியப் பேறு கைகூடி வருதலும் ஆம். இருங்குறவர் - வேட்டுவர்கள்; பெருங்குறிச்சி - ஊரைக் குறித்தது; உடுப்பூர் என்க. இறைவன் - தலைவன்; நாகன் என்க. சிலை வேட்டை - வில்லேந்தி வேட்டையாடுதல். தெவ்வர் கணம் - பகைவர் கூட்டம். நிரைகள் - பசுக் கூட்டங்கள். வில்லுழவு - வில் தொழில். 43

693. அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்கள் எங்கும்
அடல் ஏனம் புலிகரடி கடமை ஆமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலாய் உள்ள
மிருகங்கள் மிக நெருங்கி மீதூர் காலைத்
திங்கள் முறை வேட்டைவினை தாழ்த்த தென்று
சினவேடர் தாம் எல்லாம் திரண்டு சென்று
தங்கள்குல முதல்தலைவன் ஆகி யுள்ள
தண்தெரியல் நாகன்பால் சார்ந்து சொன்னார்.

தெளிவுரை: அழகிய அந்த மலைச் சாரல்களின் சோலைகளில் போர்த்தன்மையுடைய காட்டுப் பன்றியும், புலி, கரடி, காட்டுப் பசு, மரை மான் முதலான விலங்குகளும் மிக நெருங்கி வந்து அழிக்கத் தொடங்கின. மாதந்தோறும் சென்று வேட்டைத் தொழில் செய்யாத தன்மையால் இவ்வாறு கொடுமை நேரிட்டது என்று வேடர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு தங்கள் குலத்தின் தலைவனாக உள்ள குளிர்ந்த மலர் மாலை அணிந்த நாகனிடம் சார்ந்து உரைத்தார்கள்.

மலைத்தடஞ்சாரல் - அகன்ற மலைச் சாரல். புனம் - சோலை. அடல் ஏனம் - காட்டுப் பன்றி. கடமை ஆமா - காட்டுப் பசு, மரை - மான்வகை. திங்கள் முறை - மாதந்தோறும். தெரியல் - மலர் மாலை. 44

தன் மூப்பு காரணமாகத் தளர்ச்சியுற்றதைக் கூறித் தன் புதல்வனைத் தலைவனாகக் கொள்ளும்படி நாகன் உரைத்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

694. சொன்னஉரை கேட்டலுமே நாகன் தானும்
சூழ்ந்துவரும் தன்மூப்பின் தொடர்பு நோக்கி
முன்அவர்கட்கு உரைசெய்வான் "மூப்பி னாலே
முன்புபோல் வேட்டையினில் முயல கில்லேன்
என்மகனை **உங்களுக்கு நாதன்** ஆக
எல்லீரும் கைக் கொள்மின்" என்ற போதின்
அன்னவரும் இரங்கிப்பின் மகிழ்ந்து தம்கோன்
அடிவணங்கி இம்மாற்றம் அறைகின் றார்கள்.

தெளிவுரை: வேடுவர்கள் இவ்வாறு உரை செய்யக் கேட்ட நாகன் தன்னைச் சூழ்ந்து வரும் மூப்பின் தொடர்பினைக் கண்டு, "முதுமையினால் முன்பு போன்று வேட்டையில் முனைந்து செயல்புரிய இயலாதவனானேன். ஆதலால் என் மகனை உங்களுக்குத் தலைவனாக நீங்கள் யாவரும் ஏற்றுக் கொள்வீர்." என்றான். அப்போது வேடர்கள் தாங்கள் இதுவரை ஏற்றுவந்த தலைவனைப் பிரிந்து இருத்தற்கு வருத்தம் கொண்டவராகிப் பின்னர்த் திண்ணனார் தமக்குத் தலைவராக வர இருப்பதை எண்ணி மகிழ்ந்தவர்களாய்த் தம் தலைவனை வணங்கி மறுமொழி கூறத் தொடங்கினார்கள்.

நாதன் - தலைவன். அறைகின்றார் - மொழிகின்றார். 45

695. "இத்தனைகா லமும்நினது சிலைக்கீழ்த் தங்கி
இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம் இன்னும்
அத்தநினது அருள்வழியே நிற்ப தல்லால்
அடுத்த நெறி வேறுளதோ அதுவே அன்றி
மெய்த்த விறல் திண்ணனையும் மரபில் சால
மேம்படவே பெற்றளித்தாய் விளங்கும் மேன்மை
வைத்தசிலை மைந்தனை ஈண்டு அழைத்து நுங்கள்
வரை ஆட்சி அருள்" என்றார் மகிழ்ந்து வேடர்.

தெளிவுரை: அப்போது வேடர்கள் மகிழ்ந்து, "இத்தனை காலமும் நின் வில்லாற்றலின் கீழ்த் தங்கி இனிது உணவு கொண்டு தீங்கின்றி வாழ்ந்தோம். தலைவனே! மேலும் உன்னுடைய ஆணைப்படியே நிற்பதன்றி வேறு பாதை உள்ளதோ! அது மட்டுமல்லாது வெற்றி மேவும் திண்ணனாரையும் நம் குலத்தில் மிக்கதாக மேம்படவே பெற்று எங்களுக்குத் தலைவனாக அளித்தனை. வில்லேந்தி விளங்கும் நின் மைந்தனை இங்கே அழைத்து உங்கள் மலைக்குரிய ஆட்சியைக் கொடுத்தருள்க." என்றார்கள்.

சிலைக்கீழ் - வில்லாற்றலின் கீழே. அத்த - தலைவ! அருள்வழி - ஆணைப்படி. வைத்த சிலை - வில்லேந்திய. வரை ஆட்சி - மலைப் பகுதியை ஆட்சி புரியும் உரிமை. 46

696. சிலைமறவர் உரை செய்ய நாகன் தானும்
திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பிவிட்டு
"மலைமருவு நெடுங்கானில் கன்னி வேட்டை
மகன்போகக் காடுபலி மகிழ ஊட்டத்
தலைமரபின் வழிவந்த தேவராட்டி
தனை அழைமின்" என அங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமைஅவள் தனக்குரைப்ப நரை மூதாட்டி
நெடிதுவந்து விருப்பினொடும் கடிது வந்தாள்.

தெளிவுரை: வில்லேந்திய வேடுவர்கள் உரை செய்ய நாகன், திண்ணனாரை அழைத்து வருமாறு செய்தி கூறி, மலை சூழ்ந்த பெரிய காட்டில் கன்னி வேட்டையாடுவதற்கு மகன் போகும் வகையில் காட்டுக்குரிய, வன தேவதைக்கு மகிழ்ந்து பலி செலுத்த வேண்டும். அதனால் முதன்மையுடைய மரபில் வந்த தேவராட்டியை அழைப்பீர்!" என்று உரைத்தான். உடனே ஆங்கு இருந்தோர் சென்று நிலைமையைத் தெரிவிக்க நரைமுடி கொண்ட மூதாட்டி ஒருத்தி மிகவும் விருப்புடனே ஆங்கு விரைந்து வந்து சேர்ந்தாள்.

சிலை மறவர் - வில்லேந்திய வேடர். கன்னி வேட்டை - முதன்முறையாக ஆடும் வேட்டை. காடு பலி மகிழ ஊட்ட - காட்டிற்குரிய வன தேவதைக்குரிய பலி இடுதல். தலை மரபு - முதன்மையுடைய மரபு; இதனைத் தெய்வ வழிபாடு நடத்துவோர் என்க. தேவராட்டி - தெய்வம் ஆவேசித்து ஏறப்பெற்று; அருள்வாக்கு உரைப்பவள். கடிது - விரைந்து.

47

தேவராட்டி வேடர் தலைவனை வணங்கி நிற்றல்

697. கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக்
கலைமருப்பின் அரிந்தகுழை காதில் பெய்து
மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு
மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத்
தழைப்பீலி மரவுரிமேல் சார எய்திப்
பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப்
போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள்.

தெளிவுரை: அத்தேவராட்டி, காட்டிலுள்ள தளிர்கள் நெருங்கிய மாலையைத் தலையில் சூடி, மான் கொம்பினை அரிந்து காதிற் குழையாக அணிந்து, மானின் வயிற்றில் தோன்றிய கஸ்தூரியை நெற்றியில் பொட்டாக வைத்து, மயிற்கழுத்துப் போன்று சங்குமணியை மாலையாகக் கழுத்தில் அணிந்து, மார்பகமானது முதுமை காரணமாகச் சரிந்து தாழ, இடையில் மயிற்பீலியும் மரவுரியும் சார ஆங்கு எய்தி, பூவும் அரிசி வகையும் கலந்த அட்சதை நல்கிப் போர்த் தன்மையுடைய வேடர் தலைவனான நாகனை வாழ்த்தி நின்றாள்.

கண்ணி - தலைமாலை. கலை மருப்பு - மான் கொம்பு. அரிதாரத் திலகம் - கஸ்தூரிப் பெட்டி. மனவுமணி - அக்குமணி; சங்குமணி. வடம் - மாலை. தழைப்பீலி - மயிற்பீலி. சார - வந்து. தோரை - அரிசி வகை. சேடை - அட்சதை. வேடர் கோமான் - நாகன். போற்றி - வாழ்த்தி.

48

தேவராட்டி வன தேவதைக்குப் பூசனை செய்து, ஏகுதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

698. நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை
நேர் நோக்கி "அன்னை நீ நிரப்பு நீங்கி
நன்றினிதின் இருந்தனையோ" என்று கூறும்
நாகன் எதிர் நலம் பெருக வாழ்த்தி" நல்ல

மென் தசையும் ஈயலொடு நறவும் வெற்பில்
விளைவளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லாம்
அன்று நீ வைத்தபடி பெற்று வாழ்வேன்
அழைத்த பணி என்னென்றாள்" அணங்கு சார்ந்தாள்

தெளிவுரை: எதிரே நின்ற குறவர் குலத் தேவராட்டியை நோக்கி, "அன்னையே! நீ வறுமையில்லாது நன்கு இனிமையோடு உள்ளனையோ!" என்று நாகன் கூறத் தெய்வ அணங்கு ஏறப் பெறும் தேவராட்டி, அத்தலைவனை நலம் பெருகுமாறு வாழ்த்தி, " நல்ல மென்மையான ஊனும், ஈசலொடு மதுவும், மலைப்பகுதியில் விளைகின்ற மலை நெல் முதலான பிறவளங்கள் என வேண்டிய அளவு குறைவில்லாது நீ கொடுத்த வகையில் பெற்று இனிது வாழ்கிறேன். இங்கு என்னை அழைத்த பணி யாதென இயம்புக!" என்றாள்.

படிமத்தாள் - தேவராட்டி. நிரப்பு - வறுமை. வெற்பு - மலை. வளன் - நெல் முதலியன. வைத்தபடி - வழங்கியவாறு. அணங்கு - தெய்வம் ஏறப்பெறும் தன்மை. 49

699. "கோட்டம் இல்என் குலமைந்தன் திண்ணன் எங்கள்
குலத்தலைமை யான் கொடுப்பக்கொண்டு பூண்டு
பூட்டுறுவெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும்
பொறுப்புரிமை புகுகின்றான் அவனுக்கு என்றும்
வேட்டைவினை எனக்குமே லாக வாய்த்து
வேறுபுலம் கவர்வென்றி மேவு மாறு
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக்
காடுபலி ஊட்" டென்றான் கவலை யில்லான்.

தெளிவுரை: அப்போது கவலையற்றவனாகிய நாகன், "நடுநிலை தவறாத என் குலமைந்தனாகிய திண்ணன், எங்கள் குலத்தின் தலைமை பதவியை நான் கொடுக்க ஏற்று, நாண் ஏற்றுப் பூட்டிய வலிமையான வில்லேந்தும் வேடர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு மிக்க உரிமையைப் பெற உள்ளான். அவனுக்கு எக்காலத்திலும் வேட்டைத்தொழிலில் என்னினும் மேலாக வெற்றி மேவுமாறும் காட்டில் உறையும் தெய்வங்கள் விரும்பி உண்ணத் தகுந்த பலி ஊட்டுக." என்றான்.

கோட்டம்இல் - நடுநிலை தவறாத. பூட்டுறு வெஞ்சிலை - நாணேற்றுக் கட்டப்பட்ட வலிமையான வில். வேறுபுலம் - பகைவர். வென்றி -

வெற்றி. கவலை இல்லான் - சூது, வஞ்சனை முதலிய தீய குணங்கள் அற்றவன் என்னும் வகையில் உள்ள நடுக்கம் இன்றி வாழ்பவன் என்க.

50

700. மற்றவன்தன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி
மனம் மகிழ்ந்து "இங்கன்போடு வருகின் றேனுக்கு
எற்றையினும் குறிகள் மிக நல்ல ஆன
இதனாலே உன்மைந்தன் **திண்ணன் ஆன**
வெற்றி வரிச் சிலையோன்நின் அளவில் அன்றி
மேம்படுகின் றான்" என்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவனத் தெய்வங்கள் மகிழ ஊட்ட
வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள்.

தெளிவுரை: நாகன் இவ்வாறு உரைக்கக்கேட்ட மலைவாழ்த் தேவராட்டி, மனம் மிக மகிழ்ந்தவளாகி, "நான் அன்பு விளங்கப்பெற்று இங்கு வரும்போது எந்த நாட்களிலும் நிகழாத நல்ல நிமித்தங்கள் பல உண்டாயின. இதனால் வெற்றி மேவும் உயர்வுடைய வில்லேந்திய உன் மைந்தனாகிய திண்ணன், நின்னைவிட மிகவும் மேன்மை யடைவான்" என்று விரும்பி வாழ்த்தினாள். பின்னர் வெற்றி மேவும் என தேவதைகள் மகிழுமாறு பலிகளை ஊட்டுவதற்கு வேண்டிய பொருள்களைக் குறைவில்லாது பெற்றுச் சென்றாள்.

சிறப்புரை: இவண் திண்ணனார் சிவபிரான் திருவருட் கருணையில் தோய்ந்து விளங்கும் பெற்றியைப் பின்னர் நிகழவுள்ளதாக அறிக. இத்தன்மையானது எத்தன்மையான தெய்வங்களை வழிபட்டாலும் மாதொரு பாகனான சிவபிரானே வந்து அருள் புரிபவர் என்பதைச் சிவஞான சித்தியார், சுபக்கம் திருப்பாட்டு 115இல்,

"யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வாம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம்
வருவர்"

எனச் சாற்றியவாறும் காண்க. இத்தன்மையில் சிவபிரான் ஆளுமையை இனிது ஓர்க. அவன் - நாகனைக் குறித்தது. சூராட்டி - தேவராட்டி. எற்றையினும் - எந்நாட்களிலும் நிகழாத. வரிச்சிலையோன் - உயர்ந்ததாகிய வில்லேந்திய திண்ணனார். வனதெய்வம் - காட்டில் உள்ள தெய்வங்கள். இது குடுமித்தேவரையும் உட்படுத்தியமையாகக் கொள்க.

51

திண்ணனார் தந்தையிடம் விடைபெற்றுச் செல்லுதல்

- இதுமுதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

701. தெய்வம் நிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
திண்ணனார் சிலைத்தாதை அழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி
மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து
காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்
செவ்வரைபோல் புயமிரண்டும் செறியப் புல்லிச்
செழும் புலித்தோல் இருக்கையினில் சேர வைத்தன்.

தெளிவுரை: தெய்வக் குறி சொல்லும் குறவர் குல மூதாட்டியான தேவராட்டி சென்ற பின்பு, வில்லேந்திய தந்தையாகிய நாகன் அழைத்த நிலையில் ஆங்குச் சென்ற கருமையுடைய தலை முடியில் நறுமண மாலையணிந்து நீலமணி மலையொன்று நகர்வதைப் போன்று வந்த திண்ணனார், வில்லேந்திய வேடர்கள் பலர் போற்றி நிற்க, அன்பின்மிக்க தந்தையின் பாதத்தை வணங்கினார். அப்போது அவன் தன் செப்பம் உடைய மலைபோன்ற தோள்கள் இரண்டும் நன்கு பொருந்தத் தழுவி, செழுமையுடைய புலித்தோல் இருக்கையினில் அமரச் செய்தான்.

குற முதியாள் - தேவராட்டி. சிலைத்தாதை - வில்லேந்திய தந்தை. மைவிரவு - கருமையுடைய நறுங்குஞ்சி - நறுமணம் கமழும் தலைமயிர். வாசக்கண்ணி - நறுமணம் கமழும் தலைமாலை. காதல் புரி தாதை - அன்பின் மிக்க தந்தை. செறியப் புல்லி - பொருந்தத் தழுவி. சேர - அமர. 52

702. முன்னிருந்த மைந்தன்முகம் நோக்கி நாகன்
"மூப்பெனைவந்துஅடைதலினால் முன்பு போல
என்னுடைய முயற்சியினால் வேட்டை யாட
இனியெனக்குக் கருத்தில்லை எனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு
மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்கு வாய்" என்று
உடைதோலும் சுரிகையும் கைக் கொடுத்தான் அன்றே.

தெளிவுரை: நாகன், தன்முன் அமர்ந்த மைந்தன் முகத்தை நோக்க, "முதுமை அடைந்ததால், என்னுடைய முயற்சி கொண்டு வேட்டையாடக் கருத்தில்லாதவனானேன். என்னை விட மேன்மையுடையவனாய்ப்

பெருமையுடைய வில்லேந்தும் மலைவாழ் வேடர் குலத்திற்குக் காவலாக விளங்கிப் பகை நீக்கி, விலங்குகளை வேட்டையாடி, எக்காலத்திலும் உன்னுடைய மரபுரிமையால் தலைமை கொண்டு இருப்பாய்." என்று கூறி, அரச அடையாளமான உடைதோலும், உடைவாளும் திண்ணனார் கையில் அப்போதே கொடுத்தான்.

மைந்தன் - திண்ணனார். மலையர் குலம் - மலைவாழ் வேடர்குலம். காவல் - காத்து விளங்கும் அரசுரிமை. மாறு எறிந்து - பகை நீக்கி. மாவேட்டை - விலங்கு வேட்டை. மா - விலங்கு. மரபுரிமை - அரசுரிமை, தாங்குவாய் - ஏற்பாய். உடைதோல் - அரசுரிமையின் அடையாளமான கேடயம்; தோலுடையும் ஆம். தோல் - கேடயம். சுரிகை - உடைவாள்

53

703. தந்தை நிலை உட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினால் மறாமை கொண்டு
முந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
முதல் சுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு
சிந்தைபரம் கொளநின்ற தின்ன னார்க்குத்
திருத்தாதை முகம்மலர்ந்து செப்புகின்றான்.

தெளிவுரை: தந்தையின் முதுமையை நெஞ்சில் கொண்டு நெகிழ்ந்தவராய்த் தங்கள் குலத்தின் தலைமைக்குச் சார்பு தோன்ற, மற்றும் தந்தையின் எண்ணத்தில் தோன்றிய குறைபாட்டினை ஈடுகட்டும் எண்ணம் கொண்டு அதனைக் குறிப்பின் வழி மறுப்பு செய்யாது ஏற்ற முறைமையில் பாதங்களை வணங்கிக் கேடயமும் உடைவாளும் திண்ணனார் வாங்கிக் கொண்டார். சிந்தையில் அரச பாரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நின்ற அவர்க்குத் திருவிளங்கும் தந்தையான நாகன் முகம் மலர்ந்து மேலும் சில சொற்களைக் கூறலானான்.

சிறப்புரை: திண்ணனார் அரச பாரத்தை ஏற்று வேடர் தலைவனாக விளங்கத் தலைப்பட்டமை உலகியல் வழி உணர்த்துதலாயிற்று. இவர் சிந்தையானது சிவபரம் பொருளைக் கொள்ள நின்றமையைச் சுட்டுமாறு. "சிந்தை பரம்கொள நின்ற திண்ணனார்" என்று சாற்றப் பெறுதலும் ஆம். பூவினில் நறுமணம் இயல்பாகப் பொருந்தி இருத்தல் போன்று சீவன் எனப் பெறும் ஆன்மாவில் சிவமணம்

விளங்கும் என்னும் கொள்கையில் திண்ணனார் விளங்கினார் எனவும் கொள்க. இத்தன்மையில், திருமந்திரம் பாடல் 1459 -இல்.

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக்கு உள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்து அறி வாளர்க்கு
நாவி அணைந்த நடுதறி யாமே."

என அருளிச் செய்தவாறும் காண்க.

நிரப்புமாறு - ஈடுசெய்யுமாறு. முந்தையவன் - தந்தை; அரசன் எனவும் கொள்க. சுரிகை - உடைவாள். உடைதோல் - கேடயம். பரம் - அரசபாரம்; சிவபரம்பொருள். திருத்தாதை - அரசன் என்னும் சிறப்புத் தோன்ற உரைத்தது. 54

704. நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
நான்கொண்டு பரித்ததன்மேல் நலமே செய்து
தெம்முனையில் அயல்புலங்கள் கவர்ந்துகொண்ட
திண்சிலையின் வளம் ஒழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம்முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்
விரைந்து நீ தாழாதே வேட்டை யாட
இம்முரண்வெஞ் சிலை வேடர் தங்களோடும்
எழுக என" விடைகொடுத்தான் இயல்பில் நின்றான்.

தெளிவுரை: அகப்பற்றும், புறப்பற்றும் இல்லாத சமநிலை மேவியவனான நாகன் "நம்முடைய குலத்து வீரர்களையும் சுற்றத்தினர்களையும் நான் ஏற்றுப் பாதுகாத்ததைவிட மேன்மையாக நலம் செய்தும், போர் முனையில் பகைவரின் பசுக் கூட்டங்கள் முதலான செல்வங்களைக் கவர்ந்தும் வலிமையான வில்லாற்றலின் பெருமை குறையாது வளங்களைப் பெற்று வாழ்வாயாக! கொடிய கானில் விலங்கு வேட்டைகளும் உனக்கு வாய்க்கும். ஆதலால் நீ காலம் தாழ்த்தாது விரைந்து இவ்வலிமையுடைய கொடிய வீரர்களோடு வேட்டையாடுவதற்கு எழுக!" என்று உரைத்து விடைகொடுத்து அனுப்பினான்.

சிறப்புரை: நாகன் பற்றற்ற நிலை கொண்டவனாய்ச் சமநிலையில் விளங்கும் தன்மையை இயல்பில் நின்றான் எனச் சாற்றப்பட்டது. பாடல் எண் 699 - இல் கவலையில்லான் எனச் சுட்டப் பெறுதலும் காண்க.

பரித்தது - பாதுகாத்தது. தெம்முனை - போர்முனை. அயல்புலம் - பகைவரின் பொருள்கள். வெம்முனை - கொடிய காட்டுப்பகுதி என்க. முரண் வெஞ்சிலை வேடர் - வலிமையும் கொடுமையும் உடைய வேட்டுவர்கள். இயல்பு - சமநிலை; வேடர்க்குரிய இயல்பும் ஆம். 55

705. செங்கண்வயக் கோள்அரியேறு அன்னதிண்மைத்
திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண் விறல் தாதைகழல் வணங்கி நின்று
விடைகொண்டு புறம்போந்து வேடரோடும்
மங்கல நீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி
வைகிருளின் புலர்காலை வரிவில் சாலைப்
பொங்குசிலை அடல் வேட்டைக் கோலம் கொள்ளப்
புனை தொழில்கை வினைஞ ரோடும் பொலிந்து புக்கார்.

தெளிவுரை: சிவந்த கண்ணும், வலிமையும் எதிர்த்தவர்களைக் கொல்லும் தன்மையுடைய ஆண்சிங்கம் போன்ற ஆற்றலும் மிக்க திண்ணனார், செய்த தவத்தின் பெருமையால் விளங்கும் கொடிய விழி நோக்குடைய ஆற்றல் மிக்க தந்தையின் பாதங்களை வணங்கி நின்று வெளியே போந்தார். பின்பு மங்கலம் விளங்கும் நீர் அருவியில் படிந்து நீராடி, மனையில் தங்கி இருள் நீங்குகின்ற விடியற்காலைப் பொழுதில் பல உயர்ந்த வில் வைக்கப்பட்டிருக்கும் சாலையிலிருந்து ஒரு வில்லை ஏந்திக் காட்டிற்குச் சென்று வேட்டையாடும் திருக்கோலத்தைக் கொள்வதற்காக அலங்காரம் செய்யும் கைத்தொழில் வினைஞரோடு புகுந்தார்.

சிறப்புரை: நாகனைச் செய் தவத்தின் பெருமை பெற்றவன் எனச் சாற்றப்பெறுதல் காண்க. இது திண்ணனாரை மைந்தராகப் பெற்ற தந்தையின் மேன்மையைச் சாற்றுதலாம். இத்தன்மையில் திருப்பாட்டு 657-இல் உரைத்த கருத்தின் வண்ணமும் நோக்குக. நாகனை "வெங்கண் விறல்" என அடைமொழி நல்கியது மரபின் தன்மை குறித்தது.

வயக்கோள் - வலிமையோடு கொல்லும் தன்மை. அரியேறு ஆண் சிங்கம். வெங்கண் - கொடிய விழி நோக்கு. விறல் - ஆற்றல், வெற்றி. தாதை கழல் - தந்தையின் வீரக் கழலணிந்த பாதம். நீர்ச்சுனை - அருவி நீர். வரிவில் - உயர்ந்து விளங்கும் வில். புனை தொழில் கை வினைஞர் - வேட்டைக்குச் செல்லும் வகையில் வீரர்களுக்குரிய உடை முதலானவை அணியச் செய்து புனைபவர். 56

திண்ணனார்க்குச் செய்த ஒப்பனையை விவரித்தல்

- இதுமுதல் 8 பாடல்கள் ஒரு தொடர்

கலித்துறை

706. நெறிகொண்ட குஞ்சிச் சுருள்துஞ்சி
நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக்கு இடைமொய்
ஒளிப் பீலி சேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது
குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின் குலம்சீர்
கொளப்பின்பு செய்து.

தெளிவுரை: அடர்ந்து விளங்கும் சுருண்ட தலைமயிரை நிமிர்ந்து இருக்குமாறு மேலே தூக்கிக் கட்டி, அதில் இலைத்தளிரால் முறுக்கப்பட்ட மாலை சாத்தி, இடையிலே மயில் இறகைச் சேர்த்து, நறுமணங்கொண்ட முல்லை மலர் மாலையோடு குறிஞ்சி மற்றும் வெட்சிப் பூக்களைச் சேர்த்து வண்டுகள் ரீங்காரம் செய்யுமாறு சிறப்புடன் அவற்றின் பின்னே சேர்த்துக் கட்டினர்.

செய்து என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

நெறிகொண்ட குஞ்சி - அடர்ந்த தலை மயிர். துஞ்சி நிமிர்ந்து - வளைவு நிமிர்த்தி. முறி கொண்ட கண்ணி - முறுக்கப்பட்ட மாலை. பீலி - மயிலிற்கு. வெறி - நறுமணம். முல்லைப் பிணை - முல்லைப் பூ மாலை. குறிஞ்சி, வெட்சி - மலர்வகை. செறிகொண்ட - அடர்ந்து விளங்குதல். 57

707. முன்நெற்றி யின்மீது முருந்திடை
வைத்த குன்றி
தன்னில் புரிகொண்ட மயிர்க்கயிறு
ஆரச் சாத்தி
மின்னில் திகழ்சங்கு விளங்குவெண்
தோடு காதின்
மன்னிப் புடைநின்றன மாமதி
போல வைக;

தெளிவுரை: முன் நெற்றியில் மயிலிறகின் அடியிலே இடையிடையே குன்றி மணிகளை வைத்து முறுக்கிய மயிற்கற்றை பொருந்தி

விளங்கச் சாத்தி, மின்னலைப் போன்று ஒளிரும் சங்கால் செய்த வெண்ணிறத்தோடு காதில் பொருந்த முழுமதியைப் போன்று ஒளிரச் செய்தார்கள்.

முருந்து - மயிலிறகின் அடிப்பகுதி. குன்றி - குன்றிமணி. மின்னில் - மின்னல் போன்று ஒளிரும் தன்மை. புடை நின்றன - பக்கத்தில் சூழ விளங்கின. மாமதி - முழுநிலவு. வைக - பொருந்தி மேவ; இதனை அடுத்த பாடலோடு கூட்டுக. 58

708. கண்டத்து இடைவெண் கவடிக் கதிர்
மாலைசேரக்
கொண்டுஅக் கொடுபல் மணிகோத்து
இடைஏனக் கோடு
துண்டப் பிறைபோல்வன தூங்கிட
வேங்கை வன்தோல்
தண்டைச் செயல்பொங்கிய சன்ன
வீரம் தயங்க,

தெளிவுரை: கழுத்தின் இடையில் வெண்ணிறப் பலகறைகளால் ஆன ஒளி திகழும் மாலை சேரச் சங்கு முதலான பல மணி வகைகளையும் கோத்து, இடையிலே பன்றிக் கொம்புகளைப் பிறை போன்று துண்டு படுத்தித் தொங்குமாறு செய்து, இவற்றைப் புலியின் வலிமையான தோலில் பதித்துத் தட்டை வடிவம் அமையச் செய்த சன்ன வீரம் எனப்பெறும் வெற்றிமாலை விளங்கச் செய்தனர்.

கண்டம் - கழுத்து. கவடி - பலகறை மணி. அக்கு - சங்குமணி. ஏனக்கோடு - பன்றியின் கொம்பு. பிறை போல்வன - வளைவாக. தூங்கிட - பதிய. வேங்கை வன் தோல் - புலியின் வலிமையான தோல். தண்டை - தட்டை. சன்ன வீரம் - வெற்றி மாலை. தயங்க - விளங்க. 59

709. மார்பில் சிறுதந்த மணித்திரள்
மாலை தாழத்
தாரின் பொலிதோள் வலயங்கள்
தழைத்து மின்னச்
சேர்வில் பொலிகங் கணம் மீது
திகழ்ந்த முன்கைக்
கார்வில் செறிநாண் எறிகைச்
செறிகட்டி கட்டி;

தெளிவுரை: சிறிய தந்தங்களாலான திரளாகக் கோத்த மணிகள் மார்பில் மாலையாகத் தொங்க, மாலை போன்ற வாகு வலயங்கள்

தோளில் பொருந்தி ஒளிவீச, பொலிவு பெறும் கங்கணம் கட்டப்பட்ட முன்கையில் கரிய வில்லிற் கட்டிய நாணை ஏற்றி அம்பு எய்வதற்கு ஏற்ற சாதனமாகிய கைக் கோதை எனப்பெறும் விரலுறையைக் கட்டினார்கள்.

தாழ - தொங்க. தார் - மாலை. மின்ன - ஒளிர. கங்கணம் - முன் கையில் கட்டப் பெறுவது கார் வில் - கருமை வண்ணம் உடையவில். எறிகைச் செறி - வில்லிலிருந்து அம்பு தொடுக்கும் வகையில் கையில் பாதுகாப்புக்காகக் கட்டப்பெறும் கோதை; விரலுறை என்க. கட்டி என்பதனை அடுத்த செய்யுளோடு பொருத்துக. 60

710. அரையில் சரணத்து உரி ஆடையின்
மீது பௌவத்
திரையில் படுவெள் அலகுஆர்த்து
விளிம்பு சேர்த்தி
நிரையின் பொலி நீள்உடை தோல்
கரிகைப் புறம் சூழ்
விரையில் துவர்வார் விசிபோக்கி
அமைத்து வீக்கி;

தெளிவுரை: இடுப்பில் பதிந்த தோலாடையின் மீது கடலலைகளின் வாயிலாகக் குவியப்பெற்ற பலகறைகளைக் கோத்து விளிம்பாய் ஓரத்தில் கட்டி, வரிசையாய் விளங்கும் நீண்ட உடையாகிய தோலையும் வாளின் பக்கத்துச் செறிந்த நறுமணம் சூழ்ந்த துவர் ஏற்றிய வாரையும் சேரக் கட்டும் விசியைப் பூட்டி அமைத்துக் கட்டினர்.

அரை - இடை, சரணம் - பதிதல், பொருத்துதல். பௌவம் - கடல், வெள்ளலகு - பலகறை. நிரை - வரிசை. சுரிகை - உடைவாள். விரை - நறுமணம். வீக்கி என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 61

711. வீரக்கழல் காலின் விளங்க
அணிந்து பாதம்
சேரத்தொடு நீடு செருப்பு
விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலம் கொண்டு
பணிந்து திண்ணன்
சாரத் திருத் தாள்மடித்து ஏற்றி
வியந்து தாங்கி;

தெளிவுரை: வீரக்கழல் காலில் விளங்கப் பாதத்தோடு பொருந்திச் சேரும்படி நீண்ட செருப்பு விருப்போடு வாய்க்கப் பாரம் மிகுந்த

பெரிய வில்லை வலம் வந்து பணிந்த திண்ணனார், இரண்டு பாதங்களுக்கிடையில் வில்லை வைத்து நாண் ஏற்றத் தாங்கினார். தாங்கி என்பது அடுத்த பாடலில் வினை முடிபு பெறும்.

712. அங்குஅப் பொழுதில் **புவனத்திடர்**
வாங்க ஓங்கித்
துங்கப்பெரு மாமழை போன்றுதுண்
என்று ஒலிப்ப
வெங்கண் சினம்நீடு விலங்கு
விலகி நீங்கச்
செங்கைத் தலைத்தால் தடவிச்
சிறுநாண் எறிந்தார்.

தெளிவுரை: ஆங்கு அச்சிற்றூரில் விலங்கு முதலியவற்றால் உண்டாகும் இடர் நீங்கும் வகையில் அவ்விலங்குகள் யாவும் விலகிச் செல்லும் வகையில் வானத்தில் மேவும் பேரிடி முழக்கம் போன்று துண்ணெனும் ஒலியுண்டாகுமாறு அழகிய கைத்தலத்தால் திண்ணனார் தடவி நாணொலி செய்தார்.

சிறப்புரை: இவண் நாயனார் கானம் சென்று வேட்டையாடச் சென்ற பின்னர் குடுமித் தேவரின் அன்புக்குப் பாத்திரமாகி ஆங்கே நிலைபெற்று மேவிய திருவருட் செயலானது பிறவித் துயரை நீக்கியதாம் என்னும் குறிப்பின் வழி இத்திருப்பாட்டின் முதலடி சாற்றப்படுதல் காண்க.

புவனத்திடர் - சிற்றூரில் காணப்படும் விலங்குகளின் இடையூறு; நாயனாரின் பிறவித் துயர்; ஆன்மாக்களின் பிறவித் துயர் என்று திருப்பாட்டு 666இல் சுட்டியவாறும் கொள்க. மாமழை - பேரிடி. சிறு நாண் எறிந்தார் - நாணொலி எழுப்பினார். 63

713. பல்வேறு வாளி புதைபார்த்து
உடன்போத ஏவி
வில்வேடர் ஆயத்துடிமேவி
ஒலிக்கும் முன்றில்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறும்
துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல்வாளி
தெரிந்து நின்றார்.

தெளிவுரை: பல்வேறு வகைப்பட்ட அம்புகளை அம்புக் கட்டிகளிலிருந்து தேர்ந்து எடுத்து வருமாறு மற்ற வில் வேடர்களை ஏவி, பலரும் சொல்லப்பெறும் வாழ்த்தொலிகள் திசைகள் தோறும் பரவி விளங்க, உடுக்கையொலிக்கும் முன்றிலில் வலிய சிங்கத்தைப் போன்ற திண்ணனார் வலிமையான அம்புகளை ஆராய்ந்து எடுத்து வந்து நின்றார்.

வாளி - அம்பு. புதை - அம்புக் கூடு. வேடர் ஆயம் - வேட்டுவர் கூட்டம். துடி - உடுக்கை. துதைந்து விம்ம - பரவியொலிக்க. வல்ஏறு - வலிமையான சிங்கம்; காளையும் ஆம். அடல் வாளி - வலிமையான அம்புகள். 64

தேவராட்டி வாழ்த்து கூறத் திண்ணனார் வேட்டைக்குப் புறப்படுதல்

- இதுமுதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

714. மானச் சிலை வேடர் மருங்கு
நெருங்கு போதில்
பானல்குல மாமலரின் படர்
சோதி யார்முன்
தேன்நல் தசைதேறல் சருப்பொரி
மற்றும் உள்ள
கானப்பலி நேர்க்கடவுள் பொறை
யாட்டி வந்தாள்.

தெளிவுரை: பெரிய வில்லைக் கையில் ஏந்திய வேடர்கள் பக்கத்தில் நெருங்கிக் கருங்குவளை மலர் போன்ற திருமேனி வண்ணம் உடைய திண்ணனாரைச் சூழ்ந்து நிற்கத் தேனும், நல்லானும், மதுவும், தேவர் உணவும், பொரியும் மற்றும் வன தேவதைகளுக்குரிய பலிகளையும் எடுத்துக் கொண்டு - தேவராட்டி வந்தாள்.

மானச் சிலை - பெரிய வில். மருங்கு - பக்கம். பானல் - கருங்குவளை. சோதியார் திண்ணனாரைக் குறித்தது. தேறல் - மது. சரு - தேவர் உணவு. கடவுள் பொறையாட்டி - தேவராட்டி. 65

715. நின்றெங்கும் மொய்க்கும் சினவேடர்கள்
நீங்கப் புக்குச்
சென்றங்கு வள்ளல் திருநெற்றியில்
சேடை சாத்தி

"உன்தந்தை தந்தைக்கும் இந்நன்மைகள்
உள்ள அல்ல
நன்றும் பெரிதும் உன் விறல் நம்மளவு
அன்றிது" என்றாள்.

தெளிவுரை: ஆங்குச் சூழ்ந்து நின்ற வேட்டைக்குச் செல்லும் வேடர்கள் ஒதுங்கி நிற்கத் தேவராட்டி திண்ணனார் முன்பு சென்று திருநெற்றியில் அட்சதை சாத்தி, "உன் தந்தைக்கும், பாட்டனுக்கும் இத்தன்மையான நன்மைகள் முன்பு உண்டானதல்ல. உன்னுடைய வெற்றி மிக நன்மையானதும், பெரியதும் ஆகும். இதனை நம்மால் எடுத்து இயம்ப இயலாது." என்றாள்.

சினவேடர்கள் - வேட்டைக்குச் செல்லும் தன்மையுடையவர்களின் இயல்பாகிய சினம் இவண் சுட்டப்பெற்றது. வள்ளல் - திண்ணனார். சேடை - அட்சதை. நம்மளவு அன்றிது - நம்மால் சொல்லுதற்கு அடங்காத மிகப் பெருமையுடையது 66

716. அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை
யாட்டி தன்னைச்
செப்பற்கு அரிதாய சிறப்பெதிர்
செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை
மேகம் என்ன
மெய்ப்பொற்பு உடைவேட்டையின் மேற்கொண்டு
எழுந்து போந்தார்.

தெளிவுரை: இத்தன்மையில் வாழ்த்து நல்கிய தேவராட்டிக்குச் சொல்லுதற்கு அருமையுடைய சிறப்புகள் பல செய்து வழியனுப்பித் தான் கையில் பற்றிய வலிமையான வில்லையேந்தியவராய்க் கார்காலத்து மழை மேகம் போன்று முழங்கிக் கொண்டு திண்ணனார் வேட்டையினை மேற்கொண்டு புறப்பட்டார்.

அணங்குடையாட்டி - தேவராட்டி. போக்கி - வழியனுப்பி. 67

வேட்டையாடும் தன்மையுரைத்தல்

- இது முதல் 11 பாடல்கள் ஒரு தொடர்

சந்தக் கலிவிருத்தம்

717. தாளிவாழ் செருப்பர்தோல்
தழைத்தநீடு தானையார்
வாளியோடு சாபம்மேவு
கையர்வெய்ய வன்கணார்

ஆளி ஏறுபோல ஏகும்
அண்ணலார்முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்டம்
மிக்குமேல் எழுந்ததே.

தெளிவுரை: வேட்டையை மேற்கொண்டு ஆண்சிங்கம் போன்று ஏகும் பெருமையுடைய திண்ணனார் முன்பு கால்களில் செருப்பு அணிந்தவர்களாய்த் தோலால் செய்யப்பட்ட நீண்ட உடையினை அணிந்து, வில்லும், அம்பும் கையில் ஏந்தி வலிமை மிகுந்த எண்ணற்ற வேட்டுவர்களின் கூட்டம் புறப்பட்டது.

தோல்தழைத்த நீடுதானையார் - நீண்ட தோலுடை அணிந்தவர். வாளி - அம்பு. சாபம் - வில். ஆளி ஏறு - ஆண் சிங்கம். அண்ணலார் - பெருமையுடைய திண்ணனார். மீளி - வலிமை. 68

718. வன்தொடர்ப் பிணித்த பாசம்
வன்கை மள்ளர் கொள்ளவே
வென்றி மங்கை வேடர் வில்லின்
மீது மேவு பாதம்முன்
சென்று மீளு மாறு போல்வ
செய்ய நாவின் வாயவாய்
ஒன்றோ டொன்று நேர்படாமல்
ஓடும் நாய்கள் மாடெலாம்.

தெளிவுரை: வலிமையான சங்கிலிக் கயிற்றால் நாய்களைப் பிணைத்து, வலிய வேடர்கள் கையில் பிடித்திருந்தால் வேடர்களின் வில்லின் மீது மேவும் வெற்றித் திருமகளின் பாதமானது முன்னே சென்று நீள்வது போன்று, அந்நாய்களின் சிவந்த தொங்கும் நாக்குகள் விளங்கின. அவை பக்கங்களில் தலைப்பட்டு ஒழுங்கின்றி ஓடின.

வன்தொடர் - வலிமையான. பாசம் - சங்கிலிக் கயிறு. வென்றி மங்கை - வெற்றித் திருமகள். செய்யநா - நாயின் சிவந்த நாக்கு. மாடு - பக்கம். 69

719. போர்வலைச் சிலைத்தொழில்
புறத்திலே விளைப்பஅச்
சார்வலைத் தொடக்கறுக்க
ஏகும் ஐயர் தம்முனே
கார்வலைப் படுத்த குன்று
கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறம்சுமந்து
வந்த வெற்பர் முந்தினார்.

தெளிவுரை: வேட்டைப் போர்க்குரிய வில் தொழிலும், வலைத் தொழிலும் புறத்தே நிகழ்ந்து வர, அத்தன்மையான பாசவலையின் தொடக்கை அறுக்கவுள்ள திண்ணனார்க்கு முன்னே மேகங்கள் சூழ்ந்த மலைகளிலும் உள்ள காட்டு விலங்குகளை வளைப்பதற்காக நீண்ட பெரிய வலைகளைச் சுமந்துகொண்டு வேடர்கள் முன்னே சென்றார்கள்.

சிறப்புரை: இவண் திண்ணனாரை ஐயர் எனச் சாற்றியமை காண்க. இவர் பிறவாமை என்னும் பெருநிலை அடைய உள்ளதைச் சார்வலைத் தொடக்கு அறுக்க ஏகும் செயலாக நவில்தலையும் ஓர்க. வலையில் அகப்பட்ட விலங்கு முதலானவை வதைபட்டு அழிதல் போன்று, பிறவியாகிய வலையில் உயிர் அகப்பட்டு அழிதலை உவமித்து, அத்தகைய பிறவி வலையை அறுத்தெறியும் வகையில் நாயனார் ஏகும் செயலின் மேன்மை கண்டு "ஐயர்" என நவின்ற பாங்கினையும் அறிக. சிவபிரானைச் சிந்தையில் கொண்டு அன்பு வடிவாக நாயனார் மேவப் பின்னர் நிகழ இருக்கும் தன்மையானது இரண்டாம் அடியின் வாயிலாகச் சுட்டப்பெற்றது. இத்தகுசிந்தை வளமே அடியார்க்குரிய செம்மை என்பதும், அத்தகையோர் பிறவி நீங்கிப் பெறுவர் என்னும் பான்மையில் மாணிக்கவாசகர், சிவபுராணம், வரிகள் 46-48இல்,

> "கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
> சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
> பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்."

என்று அருளிச் செய்தமையும் காண்க.

சிலைத் தொழில் - விற்றொழில். சார்வலைத் தொடக்கு - சாரும் பிறவித் துன்பம். ஐயர் - திண்ணனார். கார்வலைப்படுத்த - மேகம் தவழ்ந்து சூழ. கானமா - காட்டு விலங்குகள். வெற்பர் - வேட்டுவர்கள். 70

720. நண்ணிமா **மறைக்குலங்கள்**
நாட என்றும் நீடும் அத்
தண்ணிலா அரும்பு கொன்றை
தங்குவேணி யார்தமைக்
கண்ணில்நீடு பார்வை ஒன்று
கொண்டு காணும் அன்பர்முன்
எண்ணில் பார்வை கொண்டு வேடர்
எம்மருங்கும் ஏகினார்.

தெளிவுரை: பெருமை மிக்க நான்கு வேதங்களும் தேட, நீண்டு உயர்ந்த தண்மையுடைய பிறைச் சந்திரனும், அடர்ந்த கொன்றைமலரும் தரித்து மேவும் சடைமுடியுடைய சிவபிரானைத் தம் கண் கொண்டு காணப் பெறும் அன்பரான திண்ணனார் முன்னே, எண்ணற்ற வேடர்கள் எல்லாப் பக்கமும் பார்வையைச் செலுத்திக் கொண்டு ஏகினார்கள்.

மறைக் குலங்கள் நான்கு வேதங்களான இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், தண்ணிலா - பிறைச் சந்திரன். அடம்பு - கொன்றை வகை; ஒரு வகை மலர்; அரும்பு எனவும் படும். வேணியர் - சடைமுடியுடைய சிவபிரான். 71

721. கோடு முன்பு ஒலக்கவும்
குறுங்கண் ஆகு ளிக்குலம்
மாடு சென்று இசைப்பவும்
மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்டு கைவிளிச்
சிறந்த ஓசை செல்லவும்
காடு கொண்டு எழுந்த வேடு
கைவளைந்து சென்றதே.

தெளிவுரை: ஊதுகொம்பு ஒலிக்கவும், குறுகிய கண்கள் உடைய சிறு பறைகள் பக்கங்களில் ஒலிக்கவும், பம்பை கொட்டவும், எல்லோரும் சேர்ந்து கைத்தட்டுகள் கொண்டு சிறப்புடைய ஓசை எழுப்பவும், பெருந்திரளாய் எழுந்த வேடர் கூட்டம் காட்டின் பல பக்கங்களிலும் வளைந்து சென்றது.

கோடு - ஊதுகொம்பு - ஆகுளி - சிறு பறை. மாடு - பக்கம். சேடு - திரண்ட. கைவிளி - கைத்தட்டுதல். வேடு - வேட்டுவர்கள். 72

722. நெருங்குபைந் தருக்குலங்கள்
நீடுகாடு கூட நேர்
வரும் கருஞ் சிலைத் தடக்கை
மானவேடர் சேனைதான்
பொருந்தடந் திரைக்கடல்
பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனல்
களிந்தி கன்னி ஒத்ததே

தெளிவுரை: நெருக்கம் உடைய பசுமையான மரங்கள் விளங்கும் பெரிய காட்டை நோக்கி வரும் கரிய வில்லையேந்திய நீண்ட கைகளையுடைய வேடுவர் சேனையானது, அலைமோதும் அலைகளையுடைய கடல் பரப்பின் கண் புகும் அலைகளையுடைய நீர் நிறைந்த காளிந்தி நதியை ஒத்திருந்தது.

இவண் வேடுவர்கள் விரைந்து செல்லும் தன்மை காளிந்தி நதிக்கும், மரங்கள் அடர்ந்த காடு கடலுக்கும் உவமை கூறப்பட்டது.

பைந்தரு - பசுமையான மரம். கருஞ்சிலை - கரிய நிறமுடைய வில். மான - பெருமையுடைய. பொருந்தடந்திரை - கரையை மோதும் பேரலை. தரங்கம் - அலை. களிந்தி கன்னி - காளிந்தி நதி; யமுனை நதி. 73

723. தென்திசைப் பொருப்புடன்
செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்கள்
ஆதியான பல்குலம்
துன்றி நின்ற என்றடிச்
சுவட்டின் ஒற்றர் சொல்லவே
வன்தடக்கை வார்கொடுஎம்
மருங்கும் வேடர் ஓடினார்.

தெளிவுரை: தெற்குத் திக்கில் விளங்கும் மலையுடன் கூடிய அடர்ந்த காட்டில் மானினங்களும், பன்றி மற்றும் மரைக்கணங்களும் மற்றும் பல்வகையான விலங்குகளும் நெருங்கிக் கூடியுள்ளனவாய் அவற்றின் அடிச் சுவடுகளைக் கண்டு ஒற்றர்கள் தெரிவித்ததையடுத்து வேடுவர்கள், தம்கையில் வார்கொண்டு எல்லா இடங்களிலும் ஓடித் திரிந்தார்கள்.

பொருப்பு - மலை. செறிந்த கான் - அடர்ந்த காடு. வெம்மரை - மான் போன்ற விலங்கினம்; காட்டு மான். துன்றி - நெருங்கி. வார் - வலை வகை. 74

724. ஒடியெறிந்து வார் ஒழுக்கி
யோசனைப் பரப்பெலாம்
நெடியதிண் வலைத்தொடக்கு
நீளிடைப்பிணித்து நேர்

கடிகொளப் பரந்தகாடு
காவல் செய்து அமைத்தபின்
செடிதலைச் சிலைக்கைவேடர்
திண்ணனார்முன் நண்ணினார்.

தெளிவுரை: காட்டில் உள்ள மரக்கிளைகளை ஒடித்து அகற்றியும், வாரினால் ஆன வலைகளை ஒரு யோசனையளவு நெடிது கட்டியமைத்துக் கண்டோர் அஞ்சுமாறு பரந்த காட்டினைக் காவல் செய்து, புதர் போன்ற தலையுடைய வில்லேந்திய வேடர்கள் திண்ணனார் திருமுன்னே வந்து கூடினார்கள்.

ஒடி எறிந்து - மரக்கிளைகளை ஒடித்து அகற்றி. வார்ஒழுக்கி - வார்வலைகள் அமைத்து. கடிகொள - அச்சம் தர. செடிதலை - புதர்போன்ற தலைமயிர் உடைய. நண்ணினார் - வந்து கூடினார். 75

725. வெஞ்சிலைக்கை வீரனாரும்
வேடரோடு கூடிமுன்
மஞ்ச லைக்கும் மாமலைச்
சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித்து அடர்க்கும் நாய்கள்
அட்டமாக விட்டு நீள்
செஞ்சரத்தி னோடுசூழல்
செய்தகானுள் எய்தினார்.

தெளிவுரை: அப்போது கொடிய தன்மையுடைய வில்லை ஏந்திய வீரரான திண்ணனார் மற்ற வேடர்களுடன் கூடி, மேகம் தவழும் பெருமையுடைய மலைச் சாரலில் வந்த விலங்குகள் அஞ்சி ஓடுமாறு வேட்டை நாய்களை இடையே பல பக்கங்களிலும் ஓடச் செய்து, நீண்ட அம்புகளைக் கைக்கொண்டு தானும் காட்டினுள் புகுந்தார்.

வெஞ்சிலை - போர் செய்யும் கொடுந்தொழிலைச் சுட்டும் வகையில் வெஞ்சிலை எனப்பட்டது; கொடிய வில். வீரனார் - திண்ணனார்; நாயன்மார்களையும் சுட்டும்; இதனைத் திருப்பாட்டு 144-இல் (திருக் கூட்டச் சிறப்பு) சுட்டியவாறும் காண்க. மஞ்சு - மேகம். மலைச்சரிப்பு - மலைச்சாரல். மா - விலங்குகள். செஞ்சரம் - கூர்மையான அம்பு. 76

726. வெய்யமா எழுப்ப ஏவி
வெற்பர் ஆயம் ஓடிநேர்
எய்யும் வாளி முன் தெரிந்து
கொண்டு செல்ல எங்கணும்

மொய்குரல் துடிக்குலங்கள்
பம்பை முன் சிலைத்தெழக்
கைவி ளித்து அதிர்த்து மா
எழுப்பி னார்கள் கானெலாம்.

தெளிவுரை: கொடிய விலங்குகளை எழுப்பும் வகையில் நாய்களை ஏவிப் பின்னே வேடர் கூட்டமானது ஓடி, எய்தற்குரிய அம்புகளை ஆராய்ந்து எடுத்துக் கொண்டு சென்றார்கள். உடுக்கை மற்றும் பம்பைகளும் பேரொலியுடன் ஒலிக்கவும் அவற்றினோடு கைதட்டியும், வாயினால் அதட்டிக் கூவியும் காட்டில் பதுங்கியிருந்த விலங்குகளை வெளிப்படச் செய்தார்கள்.

வெய்யமா - கொடிய விலங்கு. வெற்பர் ஆயம் - வேடர் கூட்டம். வாளி - அம்பு. துடி - உடுக்கை. சிலைத்தெழ - ஆரவாரித்து எழ. கைவிளித்து - கைகளைத் தட்டி. அதிர்த்து - வாயால் அதட்டி. மா - விலங்கு. கான் - காடு. 77

727. ஏனமோடு மானினங்கள்
எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம்
புலிக்கணங்கள் கான்மரை
ஆனமா அநேகமா
வெருண்டெழுந்து பாயமுன்
சேனை வேடர் மேல் அடர்ந்து
சீறிஅம்பில் நூறினார்.

தெளிவுரை: காட்டுப்பன்றியும், மானினங்களும், கரடிகளும் வலிமையுடைய கலை மான்களும், காட்டெருமைகளும், யானைகளும், கொடிய புலி வகைகளும், காட்டு மான்களும் மற்றும் ஏராளமான விலங்குகளும் வெகுண்டெழுந்து பாய்வதற்கு வர, வேட்டுவச் சேனை வீரர்கள் அவற்றை எதிர்த்துச் சீறி எழுந்து அம்புகளை எய்து அழித்தார்கள்.

ஏனம் - காட்டுப் பன்றி. எண்கு - கரடி. கான மேதி - காட்டெருமை. கான் மரை - காட்டு மான். மா - விலங்கு. நூறினார் - அழித்தார். 78

காட்டு விலங்குகள் அழிந்து மாய்தலை உரைத்தல்

- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

வேறு

728. தாள் அறவன இடை துணிவன
தலைதுமிவன கலைமான்
வாளிகளொடு குடல் சொரிதர
மறிவன சில மரைமா
நீள் உடல்விடு சரம்உருவிட
நிமிர்வன மிடை கடமா
மீளி கொள்கணை படும் உடல்எழ
விழுவன பல உழையே.

தெளிவுரை: கலைமான்கள் கால் அறுபட்டும், இடை துண்டிக்கப்பட்டும், தலை நசுங்குவனவும் ஆயின. சில மரை விலங்குகள் அம்புகளோடு குடல் வெளிப்பட்டுத் தொங்க இறந்தன. கூட்டமாக நெருங்கிய மத யானைகள், வேடர்கள் செலுத்தும் நீண்ட அம்புகள் ஊடுருவிச் செல்லச் செயலற்று உணர்விழந்து நின்றன. பலவகையான உழையின மான் கூட்டங்கள் வலிமையான அம்புகள் பட்டுத் துள்ளித் தரையில் வீழ்ந்தன.

இடைதுணிவன - உடல்பகுதி துண்டிக்கப்பட்டன. மறிவன - இறந்தன. மரைமா - மரை விலங்குகள். மிடை கடமா - நெருங்கிக் கூட்டமாகவுள்ள மதம் கொண்ட யானைகள். மீளி - வலிமை. உடல் எழ விழுவன - உடல் துள்ளி விழுவன. உழை - உழை எனப்படும் மான்வகை. 79

729. வெங்கணைபடு பிடர்கிழிபட
விசைஉருவிய கயவாய்
செங்கனல்விட அதனொடுகணை
செறிய முன்இரு கருமா
அங்கெழுசிரம் உருவிய பொழுது
அடல்எயிறுற அதனைப்
பொங்கியசின மொடுகவர்வன
புரைவன சில புலிகள்.

தெளிவுரை: வேட்டுவர்கள் லேட்டையாடும் போது எய்த கொடிய கணை, காட்டுப் பன்றியின் பிடரியில் தாக்கிக் கிழிக்க, அப்பெரிய வாயின் வழியே இரத்தப் பெருக்கு வழியும், அதன் மீது மேலும் பாய்ந்த அம்புகள் அப்பன்றியை இழுத்துக் கொண்டு எதிரே பாய்ந்து வந்த புலியின் பற்களிடையே ஊடுருவின. இவ்வாறு வேடர்கள்

எய்த அம்பு பன்றியை இழுத்துச் சென்ற அம்புகள் புலிவாயில் பட்டுப் பன்றியோடு பொருத்த அக்காட்சியானது புலி அப்பன்றியைக் கவர்வது போன்று தோன்றியது.

கயவாய் - பெரிய வாய்ப் புறம். இருகருமா - பெரிய காட்டுப் பன்றி. அடல் எயிறு - புலியின் வலிமையான பல். புரைவன - ஒத்தன. 80

730. பின் மறவர்கள் விடுபகழிகள்
பிறகு உறவயிறு இடை போய்
முன் நடுமுக மிசை உருவிட
முடுகியவிசை யுடன்அக்
கொன் முனையடு சரம்இனம் எதிர்
குறுகிய முகம் உருவத்
தன் எதிரெதிர் பொருவனநிகர்
தலையன பல கலைகள்.

தெளிவுரை: வேடுவர்கள், கலைமான்களின் பின்னால் பதிந்து இடையே வயிற்றிடைப் புகுந்து முகத்தின் வழியே ஊடுருவி சென்று எதிரே வரும் மானினங்களின் முகத்தில் ஊடுருவி வீழ்த்தின. இத் தன்மையானது இருவகை மான்களும் ஒன்றையொன்று போர்க்களத்திடையே முட்டிப் போரிடுவன போன்று தோன்றின.

மறவர்கள் - வேட்டுவர்கள். பகழி - அம்பு. பிறகுஉற - மானின் பின்பக்கம் பதிய. விசை - வேகம். இனம் - மானினம். குறுகிய முகம் - மானின் சிறிய முகம். பொருவன - போரிடுவன. கலை - மானினம். 81

731. கருவரையொரு தனுவொடுவிசை
கடுகியதென **முனைநேர்**
குரிசில்முன்விடும் அடுசரம் எதிர்
கொலை பயில்பொழுது அவையே
பொரு கரியொடு சின அரியிடை
புரை அற உடல் புகலால்
வரும் இரவொடு பகல் அணைவன
எனமிடையும் அவ் வனமே.

தெளிவுரை: கருமை வண்ணம் கொண்ட மலையொன்று கையில் வில்லேந்தி விரைந்து வருதல் போன்று வேட்டை முனைக்கு வரும் பெருமைக்குரிய திண்ணனார், முன்னே செலுத்தும் அம்புகளானவை விலங்குகளைக் கொல்லத் தலைப்படும்போது அவை போர் செய்யும் யானைகளிடையே ஊடுருவிச் சினம் கொண்ட

சிங்கங்களோடும் இடைவெளியில்லாது அவற்றின் உடல்களில் புகுந்தன. இக்காட்சியானது இரவும், பகலும் ஒன்று சேர்ந்து விளங்குவதைப் போன்று அக்கானகம் தோன்றியது.

இவண் கரிய நிறம் கொண்ட யானை இரவுக்கும். சிவந்த நிறங்கொண்ட சிங்கம் பகலுக்கும் உவமை சாற்றப்பட்டது. கருவரை - கருமை வண்ணம் உடைய மலை; இது திண்ணனார்க்கு உவமையாயிற்று. தனு - வில். விசை கடுகியது - வேகமாகச் சென்றது. முனை - வேட்டை முனை. குரிசில் - திண்ணனார். கொலை பயில் பொழுது - விலங்குகளை வேட்டையாடும் போது. கரி - யானை. அரி - சிங்கம். புரையற - இடைவெளி நீங்கும் வகையில். அணைவன - சேர்வன. வனம் - காடு.

82

732. நீளிடை விசை மிசைகுதிகொள
நெடுமுகில்தொட எழுமான்
தாள் உறுகழல் மறவர்கள் விடு
சரம்நிரை தொடர் வனதாம்
வாள் விடுகதிர் மதிபிரிவுற
வரும் என விழும் உழையைக்
கோளொடு பயில் பணிதொடர் நிலை
கொளஉள எதிர்பலவே.

தெளிவுரை: நீண்டு விளங்கும் வானத்தில் வேகத்துடனே மேலே தாவிக் குதித்து மேகங்களைத் தொடுமாறு மான்கள் எழும்பி ஓட, வீரக் கழல் அணிந்த வீரர்கள் அம்புகளை வரிசையாகத் தொடுத்து அவற்றை விழச் செய்தார்கள். அக்காட்சியானது சந்திரனில் உள்ள மான்கள் இராகு, கேதுகளாகிய பாம்புக் கோளுக்கு அஞ்சிச் சந்திரனிலிருந்து கீழே பாய அவற்றை அக் கோள்களே பற்றுவது போன்று அம்புகள் பற்றி வீழ்த்தின.

இவண் சந்திரனில் உள்ள களங்கம் மான் என்று சொல்லப்படும் மரபு நோக்கிச் சாற்றப்பட்டது. வேடர்கள் செலுத்தும் அம்புகள் சந்திரனைப் பற்றும் பாம்புக் கோளுக்கு உவமையாயிற்று.

நீளிடை - நீண்ட வான் வெளி. நெடு முகில் - நீண்ட மேகம். எழுமான் மேலே துள்ளித் தாவும் மான் தாள் உறுகழல் - காலில் அணிந்த வீரக்கழல். மறவர் - வேடுவர். சரம் - அம்பு. மதி - சந்திரன். உழை - மான். கோள் - நவக்கிரகங்களாகிய இராகு, கேதுக்கள். பணி - பாம்பு.

83

733. கடல்விரிபுனல் கொளவிழுவன
கருமுகில் என நிரையே
படல்வொடு செறி தழைபொதுளிய
பயில்புதல்வனம் அதன்மேல்
அடல்உறு சரம் உடல் உறவரை
அடியிடம் அல மரலால்
மிடைகரு மரை கரடிகளொடு
விழுவன வன மேதி.

தெளிவுரை: கடலில் பரந்து விளங்கும் நீரை முகப்பதற்காகக் கருமுகில் வரிசையாகப் படர்வது போன்று செறிந்த தழைகள் பதிந்து மேவும் அம்மலைச்சாரலின் கண், வலிமையாகச் செலுத்தும் வேடர்களின் அம்புகள் தைத்ததால், ஆங்கு மேகக் கூட்டங்கள் போன்று கூட்டமான கரிய மரை இன விலங்குகளும், கரடிகளும், காட்டெருமைகளும் வீழ்ந்து சுழல்வதாயின.

இவண் கரிய விலங்குகள் மேகத்திற்கும், செறிந்த தழைகள் கடல் நீர்க்கும் உவமை சாற்றப்பட்டன.

புனல் - கடல் நீரைக் குறித்தது. நிரை - மேக வரிசை. புதல்வனம் - புதர்களையுடைய காடு. அடல் உறுசரம் - வலிமையான அம்புகள். வரை அடி - மலையடிவாரம். மிடை - இடையே. வன மேதி - காட்டெருமை. அலமரல் - அம்புகள் தைத்து விலங்குகள் உயிர் நீங்கும் நிலையில் புரள்வதை உணர்த்தியது. 84

734. பல முறைகளின் வெருவரலொடு
பயில்வலைஅற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற
உறுசினமொடு கவர்நாய்
நிலவிய இரு வினைவலியிடை
நிலை சுழல்பவர் நெறிசேர்
புலன் உறுமனன் இடைதடை செய்த
பொறிகளின் அளவுளவே.

தெளிவுரை: பல வழிகளிலிருந்தும் வருகின்ற விலங்குகள், அவ்வலைகள் அறுமாறு அச்சம் கொண்டு விழுந்து பின் கற்பாறைகளின் வழியாகத் தப்பிச் செல்ல முற்பட, அவற்றைச் சினம் மிக்க வேட்டை நாய்கள் கவ்விப் பற்றின. இத்தன்மையானது இருவினையின் வலைப்பட்டுத் தடுமாறிச் சுழல்பவர் நன்னெறி சேரும் மெய்யறிவு காணும்போது, அதன்பால் நாட வொட்டாது தடை செய்யும் ஐம்புலன்களைப் போன்று விளங்கின.

சிறப்புரை: இருவினையால் கட்டப்பட்ட இந்த ஆன்மா ஒன்பது வாயில்கள் உள்ள அழுக்கு உடம்பினுள் புகுந்து இருக்க ஐம்புலன்களும் வஞ்சனை செய்கின்றன என்னும் கருத்தினை இத்திருப்பாடலின் கடைசி இரண்டு அடிகளும் சாற்றுவதாயின. இத்தன்மையில் மாணிக்கவாசகர், சிவபுராணம், வரிகள் 50-55இல்,

"..... வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய"

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

பல துறை - பல வழிகள்; விலங்குகள் வரும் வழிகளைக் குறித்தது. வெருவரல் - அச்சம். நுழை மா - நுழைகின்ற விலங்குகள். உலமொடு படர்வன - சுற்றிச் சுற்றித் திரிவனவாகிய விலங்கு. தகையுற - தடுத்துப் பற்ற. இருவினை - நல்வினை, தீவினை. பொறி - ஐம்புலன்கள். உள - ஒத்தன. 85

வேட்டையாடும் போது கடைப்பிடிக்கும் அறநெறி கூறுதல்

735. துடியடியன மடிசெவியன
துறுகயமுனி தொடரார்
வெடிபட விரி சிறுகுறுளைகள்
மிசைபடு கொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன
அணைவுறு பிணை அலையார்
கொடியன எதிர் முடுகியும் உறு
கொலைபுரி சிலை மறவோர்.

தெளிவுரை: கொடுமையுடைய விலங்குகளை நோக்கி விரைந்து எதிர்ச்சென்று கொல்லும் தன்மையுடைய வில்லேந்திய வேடர்கள் உடுக்கைப் பறை போன்ற பாதங்களும், மடிந்த காதுகளும் உடைய யானைக் கன்றுகளைக் கொல்ல மாட்டார்கள். சிறிய குட்டிகள் மற்றும் கருவுற்ற நிலையில் தளர்ச்சியான நடையுடைய பெண் விலங்குகளையும் அவ்வேடுவர்கள் துன்புறுத்த மாட்டார்கள்.

அருள் தன்மையற்ற வேட்டுவர்களாக விளங்கினாலும் அவர்கள், வேட்டை வகையில் மேற்கொள்ளும் அறநெறியானது இவண் சாற்றப்பட்டது.

துடி - உடுக்கைப் பறை, அடி - பாதம். மடி செவி - மடிந்து மேவும் காது. கயமுனி - யானைக் கன்று. சிறு குருளைகள் - விலங்குக் குட்டிகள். பிணை - பெண் விலங்கு சிலை மறவோர் - வில்லேந்திய வேடுவர்கள். 86

காட்டுப் பன்றியொன்று விரைந்து வருதலையுரைத்தல்

736. இவ்வகை வரு கொலைமறவினை
எதிர் நிகழ்வுழி அதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை
கான் எழுவதொர் ஏனம்
பெய்கருமுகில் என இடியொடு
பிதிர்கனல் விழி சிதறி
மொய்வலைகளை அறநிமிர்வுற
முடுகிய கடு விசையில்.

தெளிவுரை: இவ்வகை வரும் கொலைத் தொழிலையுடைய வேடுவர்கள் வேட்டைத் தொழிலை நிகழ்த்தினார்கள். அப்போது யானைகளும், அக்கானகமும் அஞ்சத்தக்க வகையில் கரிய மேகம் போன்று இடிமுழக்கம் செய்து காட்டுப் பன்றி ஒன்று வெளிப்பட்டுக் கண்களில் தீயுமிழச் சினந்து வலைகள் அறுந்து போகுமாறு மிகுந்த விரைவுடன் ஓடியது.

கொலை மறவினை - கொலைத் தன்மையுடைய கொடுந் தொழில். கைவரை - யானை. வெருவுற - அச்சம் கொள்ள. ஏனம் - காட்டுப்பன்றி. நிமிர்வுற - எழுந்து கிளம்பி. கடுவிசை - மிக்க விரைவு. 87

திண்ணனார் பன்றியைத் துரத்திக் கொல்லுதல்
- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

737. போம்அதுதனை அடுதிறலொடு
பொரு மறவர்கள் அரியே
தாம் அவர் தொடர் வுறும் விசையுடன்
அடிவழிசெலும் அளவில்

தாம் ஒருவரும் அறிகிலர் அவர்
தனி தொடர்வழி அதன்மேல்
ஏமுனையடு சிலை விடலைகள்
இருவர்கள் அடி பிரியார்.

தெளிவுரை: வலிமையோடு போர் செய்யும் வேடுவர்களின் ஆண் சிங்கம் போன்ற திண்ணனார், ஓடுகின்ற அப்பன்றியைக் கொல்லும் வகையில் அதன் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செல்லும்போது, மற்ற வேடர்கள் எவரும் அறிகிலராய்த் தான் மட்டும் தனித்துச் சென்றார். அப்போது அம்புகளைக் கொண்டு வேட்டையாடும் வில்லேந்திய இளம் வீரர்கள் இருவர் மட்டும் அவரைப் பிரியாதவர்களாய்த் தொடர்ந்து சென்றார்கள்.

போம் அது - ஓடும் காட்டுப் பன்றி. அடுதிறல் - கொல்லும் வலிமை. மறவர்கள் - வேடுவர்கள். அரி - ஆண் சிங்கம்; திண்ணனாரை உணர்த்தியது. ஏ - அம்பு. சிலை விடலைகள் - வில்லேந்திய இளம் வீரர்கள். அடிபிரியார் - திண்ணனாரைப் பிரியாதவர்கள். 88

738. நாடிய கழல் வயவர்கள் அவர்
நாணனும்நெடு வரிவில்
காடனும் எனும் இருவரும் **மலை**
காவலரொடு கடிதில்
கூடினர்விடு பகழிகளொடு
கொலை ஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வது தரு
நீழலின் விரை கேழல்

தெளிவுரை: வீரக்கழலைத் தேர்ந்து விரும்பிக் கட்டிய அவ்வீரர்களான நெடிய உயர்ந்த வில்லேந்திய நாணன், காடன் என்னும் இருவரும், அந்த மலைக்கு அதிபதியாக விளங்கும் திண்ணனாரோடு மிக விரைவில் கூடினார்கள். அப்பன்றி, வீரர்கள் அம்புகளிலிருந்தும், மற்றும் கொலைத் தன்மையுடைய வேட்டை நாய்களினின்றும் தப்பி நீண்ட மலைச்சாரலில் உள்ள மரத்தின் நிழலில் விரைந்து ஏகியது.

நாடிய கழல் - விரும்பியணிந்த வீரக்கழல். வயவர் - வீரர். வரிவில் - உயர்ந்த வில். மலை காவலர் - அம்மலைக்கு அதிபதியாகத் திண்ணனார் ஆயினமை சாற்றியது; பாடல் 699 காண்க. பகழி - அம்பு. கொலை ஞமலி - கொலைத் தன்மையுடைய வேட்டை நாய். வழுவி

- தாக்கப்படாது தப்பித்துக் கொண்டு. நீடிய சரி - நீண்ட மலைச்சரிவு. தரு - மரம். விரை கேழல் - விரைந்து ஓடும் காட்டுப் பன்றி. 89

739. குன்றியை நிகர் முன் செறஎரி
கொடுவிழி இடி குரல்நீள்
பன்றியும் அடல் வன்திறலொடு
படர்நெறி நெடிது ஓடித்
துன்றியதொரு குன்று அடிவரை
சுலவியநெறி சூழல்
சென்று அதனிடை நின்றது வழி
தெருமர மரம் நிரையில்

தெளிவுரை: குன்றிமணியை ஒத்த எரிகின்ற விழி கொண்டு இடி போன்று முழக்கம் செய்யும் அப்பன்றியானது, நீண்ட தொலைவு ஓடி நெருங்கிய ஒரு குன்றின் அடிச்சாரலில் மேலும் ஓடுவதற்கு வலிமையற்று அங்கிருந்த மரக் கூட்டத்திடையே நின்றது.

துன்றியதொரு குன்று - நெடியகுன்று. சுலவிய நெறி - சூழ்ந்த தன்மை. தெருமர - வலிமையற்ற தன்மை. மரம் நிரை - மரங்களின் இடையே. 90

740. அத்தருவளர் சுழலிடை அடை
அதன்நிலைஅறி பவர்முன்
கைத்தெரிகணை யினில் அடுவது
கருதலர்விசை கடுகி
மொய்த்தெழு சுடர் விடுசுரிகையை
முனைபெற எதிர் உருவிக்
குத்தினர்உடல் முறிபட எறி
குலமறவர்கள் தலைவர்

தெளிவுரை: ஆங்கு மரங்கள் வளர்ந்த சூழலில் அடைந்த அப்பன்றியின் இயல்பை நன்கு அறிபவராய்த் தம் கையினால் தேர்ந்து எடுத்து அம்பு தொடுத்து வீழ்த்தக் கருதாது வேடர் குலத் தலைவரான திண்ணனார், உடைவாளைக் கொண்டு வேகத்துடன் நெருங்கிப் பாய்ந்து அதன் உடலைத் துண்டாகும் படிக் குத்தினார்.

தரு - மரம். தெரிகணை - அம்பு. அடுவது - கொல்வது. விசைகடுகி - விரைந்து சென்று. மொய்த்து - நெருங்கி. சுரிகை - உடைவாள். முறிபட - துண்டுபடும் படி. மறவர்கள் - வேடர்கள். தலைவர் - திண்ணனார். 91

திண்ணனாரின் வீரச் செயலை உடன் வந்த வீரர்கள் பாராட்டி வணங்குதல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

741. வேடர்தம் கரிய செங்கண்
வில்லியார் விசையில் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த
வராகத்தைக் கண்டு நாணன்
"காடனே இதன் பின் இன்று
காதங்கள் பலவந்து எய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோ"
என்று அவர் அடியில் தாழ்ந்தார்.

தெளிவுரை: கரிய நிறம் கொண்ட வேடர்களின் தலைவராகிய சிவந்த கண்களையுடைய வில்லேந்திய திண்ணனார் உடைவாளால் விரைந்து குத்தப் பக்கத்தே இரு துண்டங்களாக விழுந்த பன்றியைக் கண்டு நாணன் வியப்படைந்தவனாய், "காடனே! இப்பன்றியின் பின்னே பலகாத தொலைவு ஓடிவந்து தளர்ந்தோம். ஆண் தன்மையுடைய இவன் கொன்றான்." என்று பாராட்டினான். பின்பு இருவரும் திண்ணனார் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.

சிறப்புரை: நாணனும், காடனும் பல முறை வேட்டை செய்தனராயினும் அப்பன்றியினைக் கொல்லும் நிலையில் தளர்ச்சியடைந்ததை இவண், "காதங்கள் பலவந்து எய்த்தோம்" எனப்பட்டது. ஆயினும் முதன் முதலாக வேட்டைக்கு வந்த திண்ணனார் தொலைவில் நின்று அம்பு தொடுத்துக் கொல்லாதவராய் அண்மையில் நெருங்கித் தன் உடைவாள் கொண்டு இரு துண்டங்களாக்கிய செயல் பாராட்டுக் குரியது என்னுமாறு "ஆடவன் கொன்றான்" எனப்பட்டது.

மற்றும் அம்பு தொடுத்து யானையும், சிங்கமும் இணையுமாறு செய்து வீழ்த்திய வீரச் செயலைத் திருப்பாட்டு 731-இல் சாற்றியவாறும் காண்க.

வில்லியார் - வில்லேந்திய திண்ணனார். மாடு - பக்கம். இருதுணி - இரண்டு துண்டங்கள். வராகம் - பன்றி. காதம் - தொலை தூரத்தைக் குறித்தது; ஏழரை நாழிகை நடந்து செல்லும் வழித் தொலைவு. எய்த்தோம் - தயர்ச்சியடைந்தோம். ஆடவன் - ஆண் தகைமையுடையவன்; திண்ணனாரைக் குறித்தது. தாழ்ந்தார் - வணங்கினார்கள்.

இருவரும் அப்பன்றியைச் சுட்டுத் தின்று பசியாறுவோம் எனல்

742. மற்றவர் திண்ண னார்க்கு
மொழிகின்றார் "வழிவந்து ஆற்ற
உற்றது பசிவந்து எம்மை
உதவிய இதனைக் காய்ச்சிச்
சற்று நீ அருந்தி யாமும்
தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு
குறுகுவோம் மெல்ல" என்றார்.

தெளிவுரை: மற்றும் அவர்கள் திண்ணனாரை நோக்கி, "இத்தனைத் தொலைவான பகுதியை வந்து அடைந்த நிலையில் வயிற்றுப் பசி வந்தது. அது தீரும் பொருட்டு இங்கு வந்த இப்பன்றியைச் சுட்டுச் சிறிது நீயும் அருந்தி, யாமும் தின்று தண்ணீர் குடித்துப் பின்பு வெற்றி மிகும் வேட்டையாடும் வகையில் காட்டை மெல்ல அடைவோம்." என்றார்கள்.

மற்றவர் - நாணனும் காடனும் அதனை - காட்டுப் பன்றியைக் குறித்தது.

93

மூவரும் பொன்முகலி ஆற்றை நோக்கிச் செல்லுதல்

இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

743. என்றுஅவர் கூற நோக்கித்
திண்ணனார் "தண்ணீர் எங்கே
நன்றும் இவ் வனத்தில் உள்ளது"
என்றுரை செய்ய நாணன்
"நின்ற இப் பெரிய தேக்கின்
அப்புறம் சென்றால் நீண்ட
குன்றினுக்கு அயலே ஓடும்
குளிர்ந்தபொன் முகலி" என்றான்.

தெளிவுரை: இவ்வாறு உடன் இருந்த வேடர்கள் கூறத் திண்ணனார் அவர்களை நோக்கி, "நல்ல தண்ணீர் இவ்வனத்தில் எங்கே உள்ளது," என்று வினவினார். உடனே நாணன், "முன்னே உள்ள இப்பெரிய தேக்குமரச் சோலையைக் கடந்து சென்றால், நீண்ட குன்றின் பக்கத்தில் குளிர்ந்த நீர் ஓடும் பொன் முகலி ஆறு உள்ளது." என்றான்.

சிறப்புரை: இவண் தேக்கு மரங்கள் நிறைந்த மலையும், பொன்முகலி ஆறும் அங்கு எழுந்தருளியுள்ள காளத்தி நாதரையும் போற்றி, அப்பெருமான் திருவடிகள் தம் நெஞ்சில் நிலைக்கப் பெற்றான் என்பதனைத் திருஞான சம்பந்தர் 3ஆம் திருமுறையில்,

"சந்தமார் அகிலொடு சாதித் தேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தம் ஆர்பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத்து உள்ளவே."

என்று அருளியவாறும் காண்க.

தேக்கு - தேக்கு மரச் சோலை. அயல் - பக்கம்; அடுத்து. பொன்முகலி - பொன்முகலி என்னும் ஆறு. 94

744. பொங்கிய சினவில் வேடன்
சொன்னபின் "போவோம் அங்கே
இங்கு இது தன்னைக் கொண்டு
போதுமின்" என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார்
காவதம் அரையில் கண்டார்.
செங்கண் ஏறு உடையார் வைகும்
திருமலைச் சாரல் சோலை.

தெளிவுரை: சினம் பொங்க மேவும் வில்லேந்திய வேடனான நாணன் இவ்வாறு சொன்னவுடன், திண்ணனார், "நாம் அங்கே போவோம். இப் பன்றியைக் கெண்டு வாருங்கள்." என்று உரைத்துத் தாமும் அப்பொன்முகலியாற்றை நோக்கிச் சென்றார். அரைக்காத தூரம் கடந்த நிலையில் சிவந்த கண்களையுடைய இடபத்தை வாகனமாக உடைய சிவபிரான் வீற்றிருக்கும் செல்வம் மிக்க மலைச்சாரலை அடைந்தார்கள்.

சிறப்புரை: சிவபிரான் வீற்றிருக்கும் கயிலையைத் திருமலை எனச் சாற்றியது போன்று இதனையும் திருமலை என்று சமநிலை காட்டி உரைத்த சிறப்பினைக் காண்க. இத்தன்மையில் இரு நிலையினையும் சமனாக்குவது போன்று "கயிலை பாதி காளத்தி பாதி" என்னும் தலைப்பில் நக்கீர தேவ நாயனார் அருளிச் செய்த 11-ஆம் திருமுறை நூலையும் காண்க.

மற்றும் திருவாளன், திருநீறு என்னுமாப்போன்று மலையின் சிறப்பினை இனிது சாற்றும் வகையில் திருமலை என்பது அமைதலும் கொள்க.

பொங்கிய சினவில் வேடன் - வில்லேந்திய வேடனின் இயல்பினைச் சாற்றியமையாம். அங்கே -பொன்முகலி ஆற்றைக் குறித்தது. இது - பன்றியைச் சுட்டியது. போதுமின் - வருமாறு உரைத்தல். தாம் - திண்ணனார். காவதம் அரை - அரைக் காத தொலைவு; மூன்றே முக்கால் நாழிகை நடைவழி என்க. செங்கண் ஏறு - இடபம். ஏறுடையார் - சிவபிரான். திருமலைச்சாரல் - திருக்காளத்தி மலையடிவாரம். 95

குடுமித் தேவரைக் கும்பிடலாம் என்று நாணன் கூறத் திண்ணனார் நெடிது சென்று அன்புருவம் ஆதல்

இது முதல் 9 பாடல்கள் ஒரு தொடர்

745. “நாணனே தோன்றும் குன்றில்
நண்ணுவோம்” என்ன நாணன்
“காண நீ போதின் நல்ல
காட்சியே காணும் இந்தச்
சேணுயர் **திருக்கா ளத்தி**
மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்கும் பிடலாம்” என்றான்.

தெளிவுரை: திண்ண முன்னே தோன்றுகின்ற குன்றை அடைவோம். என்று கூற, நாணனும், “நீ காணச் செல்லும்போது நல்ல காட்சியே தோன்றும். நீண்டு உயர்ந்து விளங்கும் இத் திருக்காளத்தி மலையின் மீது நம்மைஇடர் இல்லாமையாக்கும் குடுமித் தேவர் இருக்கின்றார். அவரை வணங்கலாம்.” என்றான்.

சிறப்புரை: இங்குத் திருக்காளத்தி நாதரின் அருட்பாங்கினைச் செவ்வே கோணம் இல் குடுமித் தேவர் எனச் சாற்றப்படுதல் காண்க. மாந்தர்க்குத் துன்பம் மற்றும் இடர் உண்டாதலைக் கோணம் எனவும், அதனைப் போக்கி அருளும் செவ்விய பெற்றியினைக் குறிப்பிடும் வகையில் “கோணம் இல்குடுமித் தேவர்” எனவும் நவின்றமை காண்க. இத்தன்மையில் உறுதி கொண்டவனாகிய நாணன் இதனை நல்ல காட்சி என்று உரைத்தமையும் நோக்குக.

கோணம் இல் - இடர் முதலாகிய துன்பம் இல்லாமையாக்கும். குடுமித் தேவர் - திருக்காளத்தி நாதர்; மலையுச்சியில் உள்ள கடவுள். 96

746. "ஆவதென் இதனைக் கண்டிங்கு
அணைதொறும் என்மேல் பாரம்
போவதொன்று உளது போலும்
ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர்
விருப்புற விரையா நிற்கும்
தேவர் அங்கு இருப்ப தெங்கே
போகெ" ன்றார் தின்ன னார்தாம்.

தெளிவுரை: ஆங்குத் தின்னனார், "இந்த மலையைக் கடந்து இவ்விடத்தில் வரும்போது என் மேலுள்ள சுமை விலகிச் செல்வது போன்று தெரிகிறது. மனத்தில் பேரவா பொங்கியெழ என் நெஞ்சில் வேறு ஓர் ஒப்பற்ற பொருளை நாடி விருப்போடு பற்றி விரைகின்றது. இவ்வாறு ஆவது ஏன்? தேவர் இருப்பிடம் எங்கே உள்ளது? விரைந்து போ!" என்றார்.

சிறப்புரை: சிவபிரான் விளங்கும் தன்மையும், அப்பெருமான் திருவருளால் தின்னனார் விரைந்து ஏகும் குறிப்பும் இவண் சாற்றப்பட்டது. நாயனார் திருமேனியில் காணப்பெறும் சுமைகள் நீங்குதலானது பிறவிக்கான வினைகளை நீக்குவதாம். இதனைத் திருஞான சம்பந்தர்,

"ஓங்குவண் காளத்தி உள்ளமோடு உணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க்கு ஒருவனே."

- 3 - ஆம் திருமுறை, திருக்காளத்தித் திருப்பதிகம். என்று அருளிச் செய்தமையானும் காண்க. மற்றும் இத்திருமலையை, " அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி" என்று அருளிய ஆளுடைய பிள்ளையாரின் திருவாக்கினையும் இனிது நோக்குக.

அணைதொறும் - திருமலையை நெருங்குந் தோறும். பாரம் - மும்மலம்; பிறவிச் சுமை. விரையா - விரைந்து. தேவர் - சிவபிரான். போகு - விரைவாகச் செல். 97

747. உரை செய்து விரைந்து செல்ல
அவர்களும் உடனே போந்து
கரைவளர் கழையின் முத்தும்
காரகில் குறடும் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும்
வயிரமும் புளினம் தோறும்
திரைகள்முன் திரட்டி வைத்த
திருமுக லியினைச் சார்ந்தார்.

தெளிவுரை: இவ்வாறு திண்ணனார் உரைத்தவாறு விரைந்து செல்ல நாணன், காடன் ஆகியோரும் உடனே சென்று, கரைகளில் மூங்கில்கள் உதிர்த்த முத்தும், அகில் மரத் துண்டுகளும், சந்தனக் கட்டைகளும், மலை போன்ற மணி வகைகளும், பொன்னும், வயிரமும், மணற் குன்றுகளும் அலைகள் வாயிலாகத் திரட்டி வைத்த செல்வம் மிக்க பொன்முகலி ஆற்றங்கரையை இனிது அடைந்தார்கள்.

சந்தனம், அகில் முதலான பொருட்களைப் பொன் முகலி ஆறு தன் அலைகளால் உந்தித் தள்ளி வந்து கொழிப்பதைத் திருப்பாட்டு 743-இல் சிறப்புரையாகக் குறிக்கப்படும் திருஞான சம்பந்தரின் "சந்தமார் அகிலொடு" என்னும் திருப்பாடலின் வாயிலாகக் காண்க.

கழை - மூங்கில். குறடு - துண்டுகள். சந்து - சந்தனம். புளினம் - மணற்குன்று. திரை - அலை. திருமுகலி - பொன்முகலி ஆறு. 98

748. ஆங்கதன் கரையின் பாங்கோர்
அணிநிழல் கேழல் இட்டு
வாங்குவில் காடன் தன்னை
"மரக்கடை தீக்கோல் பண்ணி
ஈங்கு நீ நெருப்புக் காண்பாய்
இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள் வந்துஅணைவோம்" என்று
நாணனும் தாமும் போந்தார்.

தெளிவுரை: பொன் முகலி என்னும் ஆற்றின் கரையில் நிழலான ஓரிடத்தில் தாம் வீழ்த்திய பன்றியை வைத்த நிலையில் வில்லேந்தியவனாகிய காடனை நோக்கி, "இங்கு தீக்கடைக்கோல் கொண்டு நெருப்பினை உண்டாக்கு. இந்த மலையின் மீது ஏறிக் குடுமித் தேவரைக் கண்டு தொழுது நாங்கள் வந்து சேர்கிறோம்." என்று திண்ணனார் உரைத்து நாணனோடு செல்லலானார்.

கேழல் - பன்றி. கண்டு - குடுமித் தேவரைக் கும்பிட்டு. அணைவோம் - திரும்பி வருவோம். 99

749. அளிமிடை கரைசூழ் சோலை
அலர்கள் கொண்டு அணைந்த ஆற்றின்
தெளிபுனல் இழிந்து **சிந்தை**
தெளிவுறும் தின்ண னார்தாம்

களிவரு மகிழ்ச்சி பொங்கக்
காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூடு ஏகிக்
குலவரைச் சாரல் சேர்ந்தார்.

தெளிவுரை: வண்டுகள் மொய்க்கும் சோலைகள் சூழ்ந்த கரையில் உள்ள மலர்கள் மிகுதியாகச் சேர, அலைகளால் ஈர்த்துச் செல்லப்படும் அப்பொன்முகலி ஆற்றின் தெளிந்த நீரில் இறங்கிய சிந்தை தெளிந்த திண்ணனார், பேரானந்தம் கொண்டவராகித் திருக்காளத்தி மலையை நேராகக் கண்களால் இனிது காணப் பெற்றவராய்க் குளிர்ந்த அந்த நதியின் வழியே சென்று திரு மலையடிவாரத்தை அடைந்தார்.

இவண் திண்ணனார் பொன்முகலி நதியில் புனித நீராடினார் என்பது குறிப்பு.

அளிமிடை - வண்டுகள் மொய்க்கும். அலர்கள் - மலர்கள். தெளிபுனல் இழிந்து - தெளிந்த ஆற்று நீரில் இறங்கி. நதியூடு ஏகி - ஆற்றின் இடையே சென்று. குலவரை - தெய்வமலை; தம் குலத்துக்குரிய மலை. 100

750. கதிரவன் உச்சி நணணக்
கடவுள்மால் வரையின் உச்சி
அதிர்தரும் ஓசை ஐந்தும்
ஆர்கலி முழக்கம் காட்ட
"இது என்கோல் நாணா" என்றார்க்கு
"இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கள் மொய்த்து
மருங்கெழும் ஒலிகொல்" என்றான்.

தெளிவுரை: சூரியன் வானத்தின் உச்சியை அடையத் தெய்வத் தன்மையுடைய பெருமைமிகு மலையின் உச்சியில் ஐவகையான ஒலியும் கடலின் முழக்கம் போன்று தோன்றியது. அதனைச் செவிமடுத்த திண்ணனார், "நாணனே! இது என் கொல்?" என்றார். அதற்கு நாணன் "இம்மலையின் கண் உள்ள தேன் கூட்டினைச் சூழ்ந்து தேன் விளங்கும் மலர்களில் உள்ள ஈக்கள் சுற்றும் எழுப்புகின்ற ரீங்கார ஒலியோ!" என்றான்.

சிறப்புரை: திண்ணனார் சிந்தை சிவபிரான் திருக்கழலின் கண் பதிய, அவருடைய தேகமும் இலகு பெற விளங்கித் திருவருள் வயப்பட்ட நிலையில், அங்கு எழுகின்ற தேவதுந்துபி முதலான ஒலியை அறியும்

பேறு பேற்றமை இவண் சாற்றப்பட்டது. இதனைத் திருமலை என்று திருப்பாட்டு 744-இல் உரைத்தவாறும் நோக்குக. இத்தன்மையில் திருக்கயிலையில் எழுந்த இனிய ஒலியினைத் திருப்பாட்டு 14-இல் (திருமலைச் சிறப்பு) நவின்றவாறும் கொள்க.

மால்வரை - திருக்களாத்தி மலையைக் குறித்தது. ஓசை ஐந்து - தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக் கருவி ஆகியவற்றால் எழுந்த ஒலி. ஆர்கலி - கடல். மதுமலர் - தேன் விளங்கும் மலர்.

101.

751. **முன்பு செய் தவத்தின் ஈட்டம்**
முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட
அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர
வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக்கு உருகி உள்ளத்து
எழுபெரு வேட்கை யோடும்;

தெளிவுரை: முற்பிறவியில் செய்த தவமானது திரண்டு வந்து இப்புனிதப் பிறவியில் முடிவிலாத இன்பம் என மேவும் அன்பினை எடுத்துக் காட்டும் தன்மையாய்ப் பேரன்பு கூர, என்பும் நெக்குருக, உள்ளத்தில் எழுந்த பெரும் வேட்கையோடு திண்ணனார் அம்மலையை நோக்கிச் செல்லலானார்.

சிறப்புரை: திண்ணனார் முற்பிறவியில் செய்த தவமானது இப்புனிதப் பிறவியில் இனிது ஒரு சேரத் திரண்டு வந்தது என்று சாற்றும் வகையில் "தவத்தின் ஈட்டம்" என ஓதப்பெற்றது. பிராரத்த வினை நுகர்தற்கு இப்பிறவி வாய்த்தலும், எஞ்சியுள்ள சஞ்சிதவினை அடுத்து வரும் பிறவிகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டு நுகர்தலும் ஆகிய கொள்கை நூல்களில் சாற்றப் படுவதாகும். இவண், திண்ணனாரின் முன்வினையாக உள்ளது. தவத்தின் ஈட்டம் எனச் சாற்றி, அது இப்பிறவியில் காளத்தி நாதர் பால் இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட அமைவதாயிற்று என்பது இத்திருப்பாட்டின் முதலிரண்டு அடிகளின் கருத்தாயிற்று. அதனைச் செயலாக்கும் பொருட்டுப் பேரன்பு கொண்டு நாயனார் மலையை நோக்கி நடந்தார் என்பதாம். ஆங்கு என்பு நெருக்குருகி இறைவனைக் காணும் பெரு வேட்கை எழுந்தது என்க.

இத்தன்மையில் சஞ்சித வினை முழுமையும் தவப் பொருளாய் விளங்கி இப்பிறவியில் இன்பம் நல்கும் அன்பாய் நாயனாரைச் சார்ந்து வந்தமையும், அதன் வழி, பேரன்பு கொண்டு நெக்குருகி நின்றமையும் இத்திருப்பாட்டில் சுட்டப்பெற்றது.

முன்பு - முன் பிறவி. ஈட்டம் - திரட்சி. ஆர்வம் - விழைவு. வள்ளலார் - திண்ணனார்; வள்ளலார் மலையை எனக் கொண்டு சிவபிரானையும் கொள்க. மலை - திருக்காளத்தி மலை. வேட்கையோடும் என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 102

752. நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல **ஐயர்**
நீணிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்;

தெளிவுரை: நாணன் முன்னே செல்ல அவனோடு தன் அன்பும் முன்னதாக அக்குளிர்ச்சி மிக்க மலையின் மீது ஏறத் திண்ணனார் பேணும் தத்துவங்கள் என்கிற பெருகி மேவும் படிகளை ஏறிச் சத்தியே ஆணையாய் உடைய சிவபரம்பொருளைச் சாரும் சிவயோகிகள் போன்று ஈசன் வீற்றிருக்கும் நீண்ட மலையின் மீது நேராக ஏறிச் சென்றார்.

"செல்லும் போதில்" என்பதனை அடுத்த செய்யுயோடு கூட்டுக.

சிறப்புரை: நாணன் முதன்முதலில் குடுமித் தேவர் உள்ள இடத்தை நாயனார்க்கு நவின்ற தன்மை கொண்ட அவன் சென்றான் என்க. மற்றும் திண்ணனார் முன் செய்த தவமானது ஈண்டு இன்ப. அன்பாகத் தொடர, அதுவும் பெருவேட்கையோடு முன் செல்லத் திண்ணனாரின் தூல சரீரம் பின் சென்றது என்பதாம். இறைவனை அடையும் வழியானது தத்துவங் கடந்து செல்லும் நெறியாதலைச் சுட்டுமாறு "பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபனம் ஏறி" எனப்பட்டது. இது 36 தத்துவங்களை உணர்த்துதலாயிற்று. இத்தன்மையில் அருணகிரி நாதசுவாமிகள் கந்தரனுபூதியில்,

"ஆறா றையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித் தவனே."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

சிவபரம்பொருளின் ஆணையாக விளங்குவது சக்தியே ஆகும். இதனைச் சிவஞான சித்தியார் திருப்பாட்டு 239 - இல், "அருளது சத்தியாகும் அரன் தனக்கு." என்று ஓதப்படுவதன் வழி நின்று காண்க. அச்சக்தியாகிய அருளே இவண் ஆணையாய் விளங்கும் இயல்பு என "ஆணையாம் சிவத்தைச் சார" என்னுமாறு நுதலிற்று.

நளிர்வரை - குளிர்ச்சியான மலை. தத்துவங்கள் - 36 தத்துவங்களைக் குறித்தது. சோபானம் - படிகள். ஐயர் - குடுமித் தேவர்; சிவபிரான். 103

753. திங்கள் சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல்
பொருவில் **அன்பு உருவம் ஆனார்.**

தெளிவுரை: பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்து மேவும் சிவபிரானை நண்ணித் தரிசனம் செய்வதற்கு முன்னதாகவே, அப்பெருமான் கருணை விளங்கும் அருள் திருநோக்கம் செய்தார். அதன் வழி முன்னைப் பிறவிகளின் சார்பு நீங்கிய நிலையில் நாயனார் ஈசனாகிய ஒளியின் நீழலில் ஒப்பற்ற அன்பின் வடிவம் ஆனார்.

இவன் திருப்பாட்டு 751 - இல் தவத்தின் ஈட்டம் மேவியமை சாற்றியதைத் தொடர்ந்து இத்திருப்பாட்டில் அன்பின் வடிவம் ஆயினமை நவிலப் பெறுதலையும் காண்க.

திங்கள் - பிறைச்சந்திரன். சடையார் - சிவபிரான். அவர் - திண்ணனார். அங்கணர் - சிவபிரான். பவம் - பிறப்புச் சார்பு. பொருள்இல் - ஒப்பற்ற. 104

திண்ணனார் குடுமித் தேவரைக் கண்டு தழுவி மகிழ்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

754. மாகமார் திருக்கா ளத்தி
மலைஎழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்த பேர் உவகை அன்பின்
வேகமா னது மேற் செல்ல
மிக்க தோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார்.

தெளிவுரை: வானளாவும் திருக்காளத்தி மலைக் கொழுந்தாய் உள்ள தனி நாயகரைக் கண்ட திண்ணனார் அடைந்த பேருவகையானது அன்பின் வழி மேவி உந்திச் செல்ல மிகுந்த வேகத்தோடு மோகம் கொண்டவராய் ஓடிச் சென்று நன்கு தழுவி உச்சி மோந்து நின்றார்.

சிறப்புரை: திருக்காளத்தியப்பரைக் கண்ட நாயனார் பெருமோகம் கொண்டு ஓடிச் சென்று தழுவிக் கொண்டார் என்க. கற்றாவின் மனம் போலக் கசிந்துருகிய நாயனார், தான் எனப்படும் பசுபாசம் நீங்கிக் குடுமித் தேவரைப் பற்றி நின்றார் என்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர் கண்ட பத்து திருப்பாட்டு 7 - இல்,

> "பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளி
> பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
> சித்தம் எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
> வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேன்."

என்று அருளியவாறும் காண்க.

மாகம் - வானம். கொழுந்து - மலையுச்சிக் குடுமித்தேவர் என்க. ஏக நாயகர் - சிவபிரான். 105

755. நெடிது போது உயிர்த்து நின்று
நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க
மலர்க்கண்ணீர் அருவி பாய

"அடிய னேற்கு இவர்தாம் இங்கே
அகப்பட்டார் அச்சோ" என்று
படியிலாப் பரிவு தான் ஓர்
படிவம் ஆம் பரிசு தோன்ற;

தெளிவுரை: நாயனார் நீண்ட நேரம் அவ்வாறு மோந்து நின்று, பேரன்பும், ஆனந்தமும் மீதூர உடலில் உள்ள மயிர்க்கால்கள் எல்லாம் புளகாங்கிதம் அடையவும், காதலாகிக் கசிந்துருகி மல்கிய கண்ணீர் அருவியெனப் பெருகவும், "அடியனேற்கு இத்தேவரே இங்கு அகப்பட்டார்; என்னே!" என்று உவமை சாற்ற முடியாத அன்புக்குத் தானே ஓர் அரிய வடிவம் போன்று விளங்கினார்.

சிறப்புரை: முற்பிறவியின் தவப்பயன் திரண்டு எழுந்து வர, அத்தன்மையான இதயமலரில் திருக்காளத்தி நாதர் மருவிய தகைமையானது "இவர்தாம் இங்கே அகப்பட்டார்" என்னும் கலைச் சொற்களால் சாற்றப்படுதலாம் என்க.

திண்ணனார் குடுமித்தேவரைத் தழுவி நெடுநேரம் உயிர்த்து நின்ற தன்மையானது ஆன்மா இறைவன் பால் ஒன்றிய நிலையினைச் சாற்றுதலாம். இத்தன்மையில் திருநாவுக்கரசர், 5 - ஆம் திருமுறை, கோயில் திருப்பதிகத்தில்,

"ஊனில் ஆவி உயிர்க்கும்பொழுதெலாம்
நான் நிலாவி இருப்பன் என்நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான்நிலாவிய இருக்கவும் வைப்பரே"

என்று அருளியவாறும் காண்க.

வடிவு - நாயனார் திருமேனி. புளகம் - புளகாங்கிதம். மலர்க் கண்ணீர் - பக்திவயத்தால் பெருகும் ஆனந்தக் கண்ணீர். அகப்பட்டார் - பெரும் பொருளாகக் கிடைக்கப் பெற்றார்; உள்ளத்தில் மேவினார். அச்சோ - அந்தோ என்னும் வியப்புக்குறி படிஇலா - உவமை யில்லாத. பரிவு - அன்பு. படிவம் - வடிவம். தோன்ற என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 106

756. "வெம்மறக் குலத்து வந்த
வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை
அரிதிரி கானம் தன்னில்

உம்முடன் துணையாய் உள்ளார்
ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீர் இங்கு
இருப்பதே" என்று நைந்தார்.

தெளிவுரை: சிவபிரானைக் கண்ட நாயனார், "கொடிய வேடுவர் குலத்தில் உள்ள வேட்டுவர்களைப் போன்று யானை, கரடி, வேங்கை, சிங்கம் ஆகிய கொடிய விலங்குகள் திரியும் காட்டில் உமக்குத் துணையாக ஒருவரும் இல்லையே! தனியாக இம்மலையின் கண் உள்ளீரே! அந்தோ!" என்று மனம் கசிந்து வருந்தினார்.

கைம்மலை - யானை. அரி - சிங்கம். கெட்டேன் - அந்தோ என்னும் வியப்பு. நைந்தார் - கசிந்து வருந்தினார். 107

சிவபிரானைப் பூசித்தல் பற்றி நாணன் கூறத் தானும் அவ்வாறு செய் நாயனார் விழைதல்

- இதுமுதல் 6 - பாடல்கள் ஒரு தொடர்

757. கைச்சிலை விழுந்தது ஓரார்
காளையார் மீள "இந்தப்
பச்சிலை யோடு பூவும்
பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ"
எனறலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும்
"நானிது அறிந்தேன்" என்பான்.

தெளிவுரை: சிவபிரானைக் கண்டுற்ற பேரானந்தத்தில் தம் கையில் இருந்த வில் கீழே விழுந்ததையும் திண்ணனார் உணரப் பெறாதவராய்ப் பின்னர்ச் சற்றுத் தெளிந்து, "பெருமான் மீது பச்சிலை, பூ இட்டுத் தண்ணீரும் வார்த்துத் தகாத செயலைச் செய்தவர் யாரோ?" என்றார். அப்போது பக்கத்தில் நின்ற வில்லேந்திய நாணனும் தான் இச்செயலைப் பற்றி அறிந்துள்ளதாகக் கூறினான்.

இவண், சிவ பூசனை பற்றி அறிந்திராத திண்ணனார் வினவினார் என்க. இத்தன்மையில் இவ்வாறு பூசை செய்த பாங்கினை நாணன் வாயிலாகக் கேட்டதும் நாயனார் அவ்வண்ணமே செய்யத் தலைப்பட்டமை காண்க.

சிலை - வில். ஓரார் - உணராதவரானார். காளையார் - திண்ணனார். மீள - ஒரு சிறிது தன்னுணர்வு பெற்றவராகிய. பச்சிலை - பசுந்த தழை; "யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை" என்னும் திருமூலர் திருமந்திர வாக்கும் காண்க. மச்சு - தகாதது; குற்றம். சிலை நாணன் - வில்லேந்திய நாணன். 108

758. "வன்திறல் உந்தை யோடு
மாவேட்டை ஆடிப் பண்டு இக்
குன்றிடை வந்தோ மாகக்
குளிர்ந்த நீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி
ஊட்டி முன்பு அறைந்து ஓர் பார்ப்பான்
அன்று இது செய்தான் இன்றும்
அவன் செய்தது ஆகும்" என்றான்.

தெளிவுரை: "வலிமையும், ஆற்றலும் உடைய உன் தந்தையான நாகனோடு பெருமையுடைய வேட்டையாடும் பொருட்டு முன்பு ஒரு சமயம் இக்குன்றிடையே வரும்போது, ஓர் அந்தணர் குளிர்ந்த நீர் கொண்டு இக் குடுமித்தேவரை நீராட்டி, இலையும், பூவும் கலந்து சூட்டி, உணவு படைத்து ஊட்டி, மேலும் சில சொற்களைக் கூறி அன்று இத்தன்மையில் பூசனை செய்தார். இன்றும் அவரே இதனைச் செய்ததாகும்." என்று நாணன் கூறினான்.

சிறப்புரை: சிவகோசரியார் ஈசனை பூசித்த செயல் இவண் சாற்றப்பட்டது. அந்தணர் செய்த பூசையைச் சற்றுத் தொலைவில் நின்று கண்ட நாணன் தான் அறிந்த வகையில் தெரிவித்தான் என்க. பூசையில் நைவேத்தியம் படைத்ததை "ஊட்டி" என உரைத்தமையும், வேதமந்திரங்கள் சாற்றியதை "முன்பு அறைந்து" என உரைத்தமையும் ஆம். "முன்பறைந்து" எனவும் கொள்க. இவ்வுரையே நாயனார் பூசித்தற்கு அடித்தளமாக அமையப் பெற்றது.

வன்திறல் - வலிமையுடைய. உந்தை - திண்ணனாரின் தந்தையான நாகன். மாவேட்டை - விலங்கு வேட்டை. பண்டு - முன்பு. இவரை - குடுமித்தேவரை. ஒன்றிய - கலந்த. முன்பு அறைந்து - இறைவன் முன்பு வார்த்தைகள் கூறி. முன்பறைந்து - முன்னே சில கூறி. 109

759. **உள் நிறைந்து எழுந்த தேனும்
ஒழிவின்றி ஆரா அன்பில்
திண்ணனார் திருக்கா ளத்தி
நாயனார்க்கு இனிய செய்கை**

எண்ணிய இவைகொ லாம் என்று
இது கடைப் பிடித்துக் கொண்டவ்
அண்ணலைப் பிரிய மாட்டா
அளவில் ஆதரவு நீட;

தெளிவுரை: உள்ளம் நிறைந்து ஆனந்த வெள்ளத்தில் நிலவி இருந்தாலும், ஒழியாத அன்புடையவரான திண்ணனார், திருக்காளத்தி நாதருக்கு இனிய செயல் இவைதானோ என்று மனங்கொண்டு இத்தன்மையுடைய வழிபாட்டினையே கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று நினைத்தார். ஆயினும் அப்பெருமானைப் பிரிவதற்கு மனம் இன்றி அளவற்ற அன்புடையவராய் அங்கேயே நின்றார்.

சிறப்புரை: இவண், திண்ணனார் பிரிதல் என்பது பூசைக்குரிய நீரும், மலரும், உணவும் கொண்டு வருவதற்கு உடலால் பிரிந்து செல்லுதலைச் சுட்டியதாம்.

திருக்காளத்தி நாயனார் - திருக்காளத்தி நாதர். அண்ணல் - சிவபிரான். ஆதரவு நீட - அன்பு பெருக. நீட என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

110

760. "இவர்தமைக் கண்டே னுக்குத்
தனியராய் இருந்தார் என்னே
இவர் தமக்கு அமுத செய்ய
இறைச்சியும் இடுவார் இல்லை
இவர் தமைப் பிரிய ஒண்ணாது
என் செய்கேன் இனி யான் சால
இவர் தமக்கு இறைச்சி கொண்டிங்கு
எய்தவும் வேண்டும்" என்று;

தெளிவுரை: "இவரைக் காணும்போது இவர் தனியராக இருந்தார். அது என்னே! ஒருவரும் இவர்க்கு அமுது செய்யும் வகையில் இறைச்சியும் இடுவார் இல்லை. இவரைத் தனித்து விட்டுப் பிரிந்து செல்லவும் இயலாது. என்ன செய்வேன்! இவர்க்குப் போதிய இறைச்சியை அமுதாகக் கொண்டு வரவும் வேண்டும். என்ன செய்வது?" என்று கவலையுற்றார்.

என்று என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

சிறப்புரை: திண்ணனார் தம் உணவுப் பழக்கத்திற்கு ஏற்ப இறைவனுக்கு உணவு படைத்தலை மனம் கொண்டார் என்க. இப்பெருமானுக்குத்

துணை ஏதுமின்றி அமைந்த சூழல் குறித்துப் பெரிதும் வருந்தியதைத் திருப்பாட்டு 756 - இல் சாற்றியவாறு நோக்குக. இத்தன்மையில் நாயனார் புலம்பி நிற்கும் பாங்கு இவண் ஓதப்பெற்றது.

இவர் - திருக்காளத்திநாதர். அமுது - உணவு. சால - போதிய; ஏற்ற. 111

761. போதுவர் மீண்டு செல்வர்
புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர்
கன்றகல் புனிற்றாப் போல்வர்
"நாதனே அமுது செய்ய
நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்டிங்கு வருவேன்" என்பார்.

தெளிவுரை: திண்ணனார் இறைவன்பால் கசிந்துருகி நின்று பூசைக்குரிய பொருளைச் சேகரிக்கும் வகையில் புறப்படுவார்; மீண்டும் அன்பு மீதூரப் பிரிய மனமின்றித் திரும்பித் தழுவிக் கொள்வார்; அன்பு விளங்கப் பெருமானையே நோக்குவார்; கன்றை விட்டுச் செல்லும் ஈன்றணிமைப் பசுவைப் போல்வார். பின்பு "தலைவனே! தேவரீர் அமுது செய்யும் வகையில் குற்றமில்லாததும், சுவை மிகக்கதுமான ஆன இறைச்சியைக் கொண்டு வருவேன்." என்பார்.

போதுவர் - செல்லத் தொடங்குதல். புல்லுவர் - தழுவி நிற்றல். புனிற்று ஆ - கன்றை ஈன்ற பசு. நாதன் - குடுமித்தேவர். கோது - குற்றம். 112

762. "ஆர்தம ராக நீர் இங்கு
இருப்பது என்று அகல மாட்டேன்
நீர் பசித்து இருக்க இங்கு
நிற்கவும் இல்லேன்" என்று
சோர்தரு கண்ணீர் வாரப்
போய்வரத் துணிந்தார் ஆகி
வார்சிலை எடுத்துக் கொண்டு
மலர்க்கையால் தொழுது போந்தார்.

தெளிவுரை: திண்ணனார், "தேவரீர் யாரைத் துணைவராகக் கொண்டு இங்கு இருப்பீர்! ஆதலால் நான் இங்கிருந்து அகல மாட்டேன். நீர் பசியோடு இருக்க, நான் இங்கேயே நின்று கொண்டிருக்கவும் மனம் கொள்ளேன்." என்று கூறிக் கசிந்துருகிக் கண்ணீர் பெருக்கித்

தளர்ந்தார். பின்பு ஒருவாறு துணிந்து தன் நீண்ட வில்லை எடுத்துக் கொண்டவராகிப் பெருமானைத் தம் கைகளால் தொழுது அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

சிறப்புரை: குடுமித்தேவரைக் காட்டும் வகையில் நாணன் ஆங்கு நின்றிருந்தாலும் திண்ணனாரின் சிந்தனை புறம் செல்லாது எம்பெருமானையே நெஞ்சில் வரித்த பாங்கினை இனிது உய்த்துணர்க. இத்தன்மையில் முன்னர் பெருமான் திருப்பெயரைக் கேட்டுத் தெவிட்டாத ஆனந்தம் கொண்டவராகி, அப் பரமனையே யாவுமாய்க் கொண்டு தன்னை மறந்த நிலையில் நாயனார் திகழ்ந்தமை காண்க. இதனைத் திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை, திருவாரூர்த் திருப்பதிகத்தில்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

என்று அருளியமையும் காண்க.

தமர் - துணைவர். சோர்தரு - தளர்ச்சியுடைய. வார் சிலை - நீண்ட வில். 113

திண்ணனார், உடன் வந்த வேடுவர்களைப் பற்றிச் சிந்தியாது பூசைக்குரிய பூவும், நீரும், உணவும் கொண்டு வருதல்

- இது முதல் 9 பாடல்கள் ஒரு தொடர்

763. முன்பு நின்று அரிதில் நீங்கி
மொய்வரை இழிந்து நாணன்
பின்புவந்து அணைய முன்னைப்
பிறதுறை வேட்கை நீங்கி
அன்பு கொண்டு உய்ப்பச் செல்லும்
அவர்திரு முகலி ஆற்றின்
பொன்புனை கரையில் ஏறிப்
புதுமலர்க் காவில் புக்கார்.

தெளிவுரை: குடுமித்தேவர் திருமுன்பு நின்றிருந்த திண்ணனார் மனமின்றி நீங்கி மலையடிவாரத்தை அடைந்தார். நாணன் உடனே பின்னால் வந்து சேர்ந்தான். வேறு பற்றுகளை அறவே நீக்கித் திருக்காளத்திநாதர் மீது கொண்ட அன்பு மட்டும் உய்ப்பச் செல்லும் அவர், செல்வம் கொழிக்கும் பொன்முகலியாற்றின் கரையில் ஏறிப் புதுமலர்கள் விளங்கும் பூஞ்சோலை புகுந்தார்.

மொய்வரை - நெருங்கிய மலை. இழிந்து - இறங்கி. பிறதுறை வேட்கை - வேறு வகையாய் விளங்கும் புறப்பற்று. 114

764. காடனும் எதிரே சென்று
தொழுது "தீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏனம் உங்கள்
குறிப்படி உறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும்
மறித்து நாம் போகைக்கின்று
நீடநீர் தாழ்த்தது என்னோ!"
என்றலும் நின்ற நாணன்;

தெளிவுரை: காடன், திண்ணனார் எதிர் சென்று தொழுது, "நீர் உரைத்தபடி நெருப்பைக் கடைந்து உண்டாக்கி வைத்துள்ளேன். கொம்பினையுடைய பன்றியின் உறுப்புகள் யாவும் உங்கள் குறிப்புப்படி அருகில் உள்ளன. அவற்றைத் தக்கவாறு ஏற்றுக் கொள்வீர். நாம் திரும்பிச் செல்வதற்கு நீண்ட நேரம் காலம் தாழ்த்தியது என்ன காரணமோ?" என்றான். அப்போது ஆங்கு நின்ற நாணன் உரைக்கலானான்.

காடனைத் தீக்கடைந்து வைக்குமாறு திண்ணனார் சாற்றியமை திருப்பாட்டு 748 - இல் காண்க.

கோடு - பன்றிக் கொம்பு. மாடுற - பக்கத்தில் உள்ளது. மறித்து - திரும்பி. 115

765. "அங்கிவன் **மலையில் தேவர்**
தம்மைக்கண்டு அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா
வல்லுடும்பு என்ன நீங்கான்

இங்கும்அத் தேவர் தின்ன
இறைச்சி கொண்டு ஏகப் போந்தான்
நம் குலத் தலைமை விட்டான்
நலப்பட்டான் தேவர்க்கு" என்றான்.

தெளிவுரை: நாணன் காடனை நோக்கி, "இவன் மலையில் உள்ள குடுமித்தேவரைக் கண்டு மரப்பொந்தினைப் பற்றி மேவும் வலிமையான உடும்பு போன்று ஆங்கு நீங்காதவனாயினன். அவன் இங்கு வந்ததும், அத்தேவர்க்கு உணவு கொண்டு செல்லும் பொருட்டேயாகும். நம் குலத்திற்குரிய தலைமையை விட்டொழித்து அத்தேவர்க்கே ஆளாகினான்." என்றான்.

சிறப்புரை: நாணன் வாக்காகத் திண்ணனார் "நலப்பட்டான் தேவர்க்கு" என்று உரைத்த வாக்கினை நோக்குக. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு ஞானப்பால் அமுதம் பருகிய திருஞான சம்பந்தர் திருவாக்காக "நலங் கொள் ஞான சம்பந்தன்" என்னும் அருந்தமிழ்ச் சொல் 3 - ஆம் திருமுறை, திருவாவடுதுறைத் திருப்பதிகத் திருக்கடைக் காப்பாக வரும்,

"அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை எம் இறையை
நலமிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயின் நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே."

என அருளிச் செய்த பாடல் வழி நோக்குக.

இத்தன்மையில் திண்ணனார் நலம் பெற்றவராகி உயிர்களுக்குப் பிறவாமையருளும் பெற்றியுடையவராகி ஒளிர் தலைத் தலைப்படச் சுட்டுதலைக் காண்க. மற்றும் திருப்பாட்டு 666 - இல் உரைத்த குறிப்பினையும் இவண் ஒப்பு நோக்குக.

தேவர் - திருக்காளத்திநாதர். வங்கு - மரப் பொந்து; மலைக்குகை. உடும்பு - பல்லி வகையைச் சேர்ந்த ஓர் உயிரினம். தின்ன - நைவேத்தியத்தைக் குறித்தது. நலப்படுதல் - அருள்வழி நிலைத்தல்.

766. "என் செய்தாய் திண்ணா நீதான்
என்னமால் கொண்டாய் எங்கள்
முன்பெரு முதலி அல்லை
யோ" யென முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை
எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வேறு
அம்பினால் ஈர்ந்து கொண்டு;

தெளிவுரை: நாணன் உரைத்ததைக் கேட்ட காடன், "திண்ணா! நீ எத்தன்மையான மயக்கத்தைக் கொண்டாய்! எங்கள் குல்த்தின் பெருந்தலைவன் அல்லவோ! ஏன் இத்தன்மையுற்றாய்?" எனத் திண்ணனார் அவர்களைச் சிறிதும் ஏறெடுத்து நோக்காதவராகி வலிமையான பெரிய அப்பன்றியை நெருப்பில் வதக்கி இனிய சுவை மிக்க தசைகளை வெவ்வேறு அம்பினால் எடுத்து வைத்தார்.

கொண்டு என்பதனை அடுத்த பாடலோடு கூட்டுக.

பெருமுதலி - பெருந்தலைவன். இன்புறு - இனிய சுவையுடைய.117

767. கோலினில் கோத்துக் காய்ச்சிக்
கொழும் தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான்
வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம்
சருகுஇலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட
அதன் மிசை இடுவாரானார்.

தெளிவுரை: அம்பு கொண்டு கோத்துக் கொழுவிய தசையை நன்கு நெருப்பிலிட்டுக் காய்ச்சி வேகச் செய்து பதப்படுத்தி, அதன் இனிய சுவையைக் கண்டறியும் வகையில் வாயிலிட்டுத் தேர்ந்து, மிகவும் இனியவற்றையெல்லாம் சருகுகள் கொண்டு தைக்கப்பெற்ற இலைக் கலத்தில் அவற்றை இடுவாரானார்.

கோல் - அம்பு. வாலிய - இனிய; சிறப்புடைய. கல்லை - இலைக்கலம்; தொன்னை. ஏலவே கோலி - பொருந்துமாறு திரட்டி. 118

768. மருங்குநின் றவர்கள் பின்னும்
"மயல் மிக முதிர்ந்தான் என்னே
அரும்பெறல் இறைச்சி காய்ச்சி
அதுக்கி வேறு உமிழா நின்றான்
பெரும்பசி உடைய னேனும்
பேச்சிலன் எமக்கும் பேறு
தரும்பரிசு உணரான் மற்றைத்
தசை புறத்து எறியா நின்றான்."

தெளிவுரை: சூழ்ந்து நின்றவர்களான நாணனும், காடனும், "இவன் பெரிதும் மயக்கம் கொண்டவனானான். அருமையான இறைச்சியை நெருப்பில் காய்ச்சி வாயிலிட்டு அதுக்கிப் பின்னர் வெளியே உமிழ்கின்றான். அவனும் பெரும் பசியுடையவனாயினும் அதைப்பற்றி எண்ணாதவனானான். எமக்கும் பசியாற்றுமாறு தருவதற்கு உணராதவனானான். சில தசைகளை வெளியே எறிகின்றான்." என்றார்கள்.

மருங்கு - பக்கம். மயல் - மயக்கம். பேச்சிலன் - சிந்தை கொள்ளாதவன் பேறு - பசி நீக்கும் தன்மை. 119

769. "தேவமால் கொண்டான் இந்தத்
திண்ணன்மற்று இதனைத் தீர்க்கல்
ஆவதொன்று அறியோம் தேவ
ராட்டியை நாக னோடு
மேவி நாம் கொணர்ந்து தீர்க்க
வேண்டும் அவ் வேட்டைக் கானில்
ஏவல் ஆட் களையும் கொண்டு
போதும்" என்று எண்ணிப் போனார்.

தெளிவுரை: அவர்கள் மேலும் "இத்திண்ணன் தெய்வப் பித்து அடைந்தவனானான். இதனைத் தீர்க்கும் வகை நாம் அறிவதன்று. தேவராட்டியை நாகனோடு இங்கு அழைத்து வந்து இவன் மயக்கத்தைத் தீர்க்க வேண்டும். மற்றும் வேட்டைக்கு வந்த ஏனைய பணியாட்களையும் அழைத்துக் கொண்டு ஊர்க்குத் திரும்பிச் செல்வோம்." என்று எண்ணி அங்கிருந்து ஏகினார்கள்.

சிறப்புரை: சிவபிரானிடம் திண்ணனார் கொண்ட தன்மையானது இவண் "தேவ மால்" எனப்பட்டது. நாயனார் திருமேனி, அன்பு வடிவம் ஆய தன்மையில் பசி, தாகம் என யாவையும் துறந்து

பேரானந்தத்தில் மூழ்கித் திளைத்திருந்தார் என்பதாம். இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவண்டப் பகுதி வரிகள் 174 - 179 - இல்,

"அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதோறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச்செய்து ஆங்கெனக்கு
அள்ளுறு ஆக்கை அமைந்தனன்; ஒள்ளிய
கன்னல் கனி தேர் களிறு எனக் கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன்."

என்று அருளியவாறும் காண்க.

தேவமால் - தெய்வப் பித்து. போதும் - செல்வோம். 120

770. கானவர் போனது ஓரார்
கடிதினில் கல்லை யின்கண்
ஊனமுது அமைத்துக் கொண்டு
மஞ்சனம் ஆட்ட உன்னி
மாநதி நன்னீர் தூய
வாயினில் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமம்
குஞ்சிமேல் துதையக் கொண்டார்.

தெளிவுரை: உடன் வந்த வேடுவர்களான நாணனும், காடனும் அங்கிருந்து நீங்கிச் சென்றதைச் சிறிதும் உணர்வு கொள்ளாதவராய்த் திண்ணனார் இலைத் தொன்னையில் ஊனமுதமும், அபிடேகம் செய்வதற்காகப் பெருமையுடைய பொன்முகலியின் நன்னீரைத் தூய்மை மிகு வாயினிலும் கொய்த தூய நறுமணம் உடைய மலர்களைத் தலையின் மீது அடர்த்தியாகச் சொருகியும் கொண்டு செல்லலானார்.

கானவர் - நாணன், காடன். ஓரார் - உணராதவரானார். கடிது - விரைந்து. கல்லை - இலைக்கலம்; தொன்னை. மஞ்சனம் - அபிடேகம். உன்னி - நினைத்து. மாநதி - பொன் முகலி ஆறு. பள்ளித்தாமம் - பூக்கள். குஞ்சி - தலை முடி மயிர். துதைய - அடர்த்தியாக. 121

771. தனு ஒரு கையில் வெய்ய
சரத்துடன்தாங்கிக் கல்லைப்
புனிதமெல் இறைச்சி நல்ல
போனகம் ஒருகை ஏந்தி

இனியஎம் பிரானார் சாலப்
பசிப்பர் என்று இரங்கி ஏங்கி
நனிவிரைந்து இறைவர் வெற்பை
நண்ணினார் திண்ண னார்தாம்.

தெளிவுரை: ஒரு கையில் வில்லினைக் கொடிய அம்போடு ஏந்தி, மற்றொரு கையில் புனிதம் உடைய இறைச்சியெனும் நல்ல அமுதத்தைக் கொண்டுள்ள இலைக்கலனை ஏந்தி, இனிமையுடைய எம் தலைவராகிய திருக்காளத்தி நாதர் மிகவும் பசியோடு இருப்பாரே' என்று இரங்கி, ஏங்கி மிக வேகமாக இறைவன் வீற்றிருக்கும் மலையை நோக்கித் திண்ணனார் அடைந்தார்.

சிறப்புரை: முற்பிறப்பிற் புரிந்த தவமானது திரண்டு சார்தலாலும் (திருப்பாட்டு 751) சிவபிரான் கருணை கூர்ந்த திரு நோக்கம் பதிதலாலும் (திருப்பாட்டு - 753), திண்ணனார் புனிதம் பெற்று மேவுதலாலும் இறைச்சியும் புனிதமாயிற்று; அதுவே திரு அமுதும் ஆயிற்று என்க.

தனு - வில். சரம் - அம்பு. போனகம் - திரு அமுதம். எம்பிரான் - திருக்காளத்திநாதர். இறைவர் வெற்பு - திருக்காளத்தி மலை. 122

திண்ணனார் இறைவனைப் பூசித்துக் காவல் புரிதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

772. இளைத்தனர் நாயனார் என்று
ஈண்டச் சென்று எய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு
முடிமிசை மலரைக் கண்டு
வளைத்த பொன் செருப்பால் மாற்றி
வாயின் மஞ் சனநீர் தன்னை
விளைத்த **அன்பு உமிழ்வார் போல**
விமலனார் முடிமேல் விட்டார்.

தெளிவுரை: சிவபிரான் மிகவும் பசியினால் களைத்திருப்பார் என்று விரைந்து நெருங்கிச் சென்று மலையில் முளைத்தெழும் முதற் பொருளாய்க் குடுமித்தேவர் என்னும் பரமன் திருமுடியின் மீது முன்னமே வைக்கப்பட்டிருந்த மலரைத் தன் காலில் பொருத்தப்பெற்ற அழகிய செருப்புக் கொண்டு அகற்றி, வாயினின்று மஞ்சன நீரை, அன்பாகிய வடிவத்தில் விளைந்த அன்பினை உமிழ்வார் போன்று, திண்ணனார் ஈசன் திருமுடியின் மீது பொழிந்தார்.

சிறப்புரை : திண்ணனார் திருமேனி அன்பின் வடிவமாகிய நிலையில் அவர்தம் திருவாயினின்று வெளிப்படும் திருமஞ்சன நீரும் அன்பில் விளைந்த பேரன்பு என்று இத்திருப்பாட்டின் 3 - ஆம் அடியின் வாயிலாகச் சாற்றப்படுவதாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பி, திருப்பாட்டு 4 - இல்,

> "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப்பணித் தென்னை வாஎன்ற வான்கருணைச்
> சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி."

என அருளிச் செய்தவாறும் காண்க.

நாயனார் - நாதனார்; திருக்காளத்தி நாதர், ஈண்ட - விரைந்து நெருங்கி. வெற்பின் முளைத்தெழு முதல் - குடுமித் தேவர். பொன் - அழகு. மாற்றி - நிர்மாலியம் என அகற்றி. மஞ்சன நீர் - அபிடேக நீர். விளைந்த அன்பு - அன்பு வடிவமான தேகத்தில்; விளைந்த பேரன்பு. உமிழ்வார் - பொழிவார். விமலனார் - சிவபிரான். *123*

773. தலைமிசைச் சுமந்த பள்ளித்
தாமத்தை தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார்
முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத்
திண்ணனார் சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த ஊனின்
திருஅமுது எதிரே வைத்து;

தெளிவுரை: தலைமுடியின் மீது சுமந்த மலர்களைத் திருக்காளத்தி மலையின் மீது எழுந்தருளியுள்ள சிவபிரானை வணங்கித் திருமுடியின் மீது சாத்தி, வில்லின் மீது பொலிந்த சிவந்த கையையுடைய திண்ணனார். இலைக் கலத்தில் உள்ள ஊனமுதை எதிரே வைத்துப் படைத்தார்.

வைத்து என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

பள்ளித்தாமம் - மலர்கள். மலைமிசைத் தம்பிரானார் - திருக்காளத்தி நாதர். கல்லை - இலைக்கலன்; தேக்கிலை. *124*

774. "கொழுவிய தசைகள் எல்லாம்
கோலினில் தெரிந்து கோத்துஅங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப்
பல்லினால் அதுக்கி நாவில்

பழகிய இனிமை பார்த்துப்
படைத்த இவ் இறைச்சி சால
அழகிது **நாயனீரே**
அமுது செய்து அருளும் என்றார்.

தெளிவுரை: திண்ணனார் எம்பெருமானிடம், "என் தலைவரே! கொழுத்த தசைகள் யாவும் அன்பினால் தேர்ந்தெடுத்துக் கோத்து நெருப்பில் நன்கு பதம் கொள்ளுமாறு காய்ச்சிப் பல்லினால் அதுக்கி மிருதுத் தன்மையும், நாவினால் பழகி இனிமைச் சுவையும் பார்த்துப் படைத்த இவ் இறைச்சி மிகவும் இனியது. அமுது செய்தருளும். "என்றார்.

மற்றும் திண்ணனார் வாயிலிட்டுப் பல்லால் அதுக்கி மிருதுத்தன்மையும், நாவினால் பழகி இன்சுவையும் அறிந்து ஊனமுது படைத்த பாங்கினில் அதுவே திருவமுதமாக ஆயினமை சாற்றுப்பெறுதலாம்.

கோல் - அம்பு. அழல் - நெருப்பு. சால - மிக்க. அழகிது - நன்று; இனியது. நாயனீரே - நாயகரே என்னும் அன்புவிளி. *125*

775. அன்னஇம் மொழிகள் சொல்லி
அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்கா ளத்தி
மலையினார்க்கு இனிய நல்லான்
இன்னமும் வேண்டும் என்னும்
எழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப்
பகலவன் மலையில் தாழ்ந்தான்.

தெளிவுரை: இன்னவாறு பல்வகையான அன்புடைய மொழிகளைக் கூறிப் பரிவோடு ஈசனைத் திருவமுது செய்வித்த வேடர்குலத் தலைவரான திண்ணனாரின் உள்ளத்தில் மேவும் திருக்காளத்தி நாதர்க்கு இனிய நல்லான் இன்னும் வேண்டும் என்கிற விருப்பம் எழுதலைக் கண்டு, பல நீண்ட கதிர்களாகிய கரங்களைக் கூப்பிய சூரியன் மேற்குத் திக்கின் வழி மலையினின்று மறைந்தான்.

இது கவிக் கூற்று.

வேடர் மன்னனார் - திண்ணனார். ஏழு பெருங் காதல் - விருப்பம். பகலவன் - சூரியன். *126*

776. அவ்வழி அந்தி மாலை
அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங்கு உள என்று அஞ்சி
மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித்
திருக்கையில் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர்
மருங்குநின்று அகலா நின்றார்.

தெளிவுரை: இந்நிலையில் மாலை நேரத்தின் அந்திப்பொழுது அடைய இரவு சேர்கின்ற தன்மையில் "கொடிய விலங்குகள் உள்ளனவே. அவை பெருமானுக்கு ஊறு விளைவிக்குமே என்னும் அச்சமானது திண்ணனாரின் அன்பு விளங்கும் செம்மனத்தில் எழத் திருக்கையில் வில்லைத் தாங்கியவராய்க் கரிய மலை போன்று திருக்காளத்தி நாதரின் பக்கத்தில் அகலாது நின்று காவல் புரிந்தார்.

மைவரை - கரிய மலை; திண்ணனாரின் தோற்றம் பொலிவைக் குறித்தது. ஐயர் - திருக்காளத்திநாதர். 127

இரவுப் பொழுது கழிதலை உரைத்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

777. சார்வு அருந் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற்கு அரியார் தம்மை
ஆர்வம்முன் பெருக ஆரா
அன்பினில் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீள்இருள் நீங்க நின்றார்.

தெளிவுரை: மேகம் சூழ்ந்த மலையின் கண்ணும் மற்றும் காடு களிலும் சென்று அரிய தவங்களைச் செய்த முனிவர்களாலும், மற்றும் தேவர்களாலும் காண்பதற்கு அரியவரான சிவபிரானைப் பேரார்வம் பெருகக் கண்டு எல்லையில்லாத அன்பு பெருக எம்பிரான் திருக்கோலத்தின் எழிலையே நோக்கி இரவு முழுவதும் நின்றார்.

சிறப்புரை: ஈசன் திருவுருவாகிய அருவுருவத் திருமேனியைக் கண்ட மெய்த்தன்மையானது பசித்துக் களைத்துள்ளதாக நினைக்கச் செய்தது என்க. இதன் அடுத்த வெளிப்பாடு ஈசன் தன் திருவிழியில் இரத்தம் பெருகுமாறு பின்னர் நிகழ்த்தியமை என்க.

இறைவன், திண்ணனார் மீது அருட் கண் சாத்தியமை திருப்பாட்டு 753 - இல் உணர்த்தப் பெற்றதையொட்டி, நாயனாரின் உலகியல் நெறியும், அஞ்ஞான உணர்வும் நீங்கப் பெற்ற காரணத்தால் அந்நீண்ட இருளின் கண் அது நீங்கும்வரை நின்றிருந்தார் என்று, ஈற்றடியின் கருத்தாகக் கொள்க.

அமரர் - தேவர்கள். கார்வரை - மேகம் சூழ்ந்த மலை; கருமையுடைய மலை. அரியார் - அருமையுடைய சிவபிரான். ஆரா அன்பு - எல்லையற்ற அன்பு. நேர்பெற - நேராக; இறைவன் திருவருளை நேருக்கு நேராகப் பெறும் நிலையில். நீள் இருள் நீங்க - நெடிய பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்த அஞ்ஞானம் நீங்கிய நிலையில். 128

778. கழை சொரி தரளக் குன்றின்
கதிர்நிலவு ஒருபால் பொங்க
முழை அரவு உமிழ்ந்த செய்ய
மணிவெயில் ஒருபால் மொய்ப்பத்
தழை கதிர்ப் பரிதியோடும்
சந்திரன் தலைஉ வாவில்
குழை அணி காதர் வெற்பைக்
கும்பிடச் சென்றால் ஒக்கும்.

தெளிவுரை: அக்குன்றில் உள்ள மூங்கில்களிலிருந்து சொரியும் வெண்முத்துக்களினின்று நிலவின் குளிர்ந்த கதிர் ஒருபுறம் தோன்றும். குகைகளில் நாகம் உமிழ்ந்த சிவந்த மாணிக்க மணிகளின்று சூரியனைப் போன்ற செவ்வொளி வேறொரு புறம் தோன்றும். இவ்விருவகையான ஒளியும் சேர்ந்து விளங்கும் காட்சியானது சந்திரன், நன்கு பரவும் ஒளிக் கதிர்களையுடைய சூரியனுடன் இணைந்து கூடிக் காதில் குழையை ஆபரணமாக அணிந்த சிவபிரான் திருமலையை அமாவாசை நாளில் கும்பிடச் சென்றதை ஒத்திருக்கும்.

கழை - மூங்கில். தாளம் - முத்து. கதிர் நிலவு - நிலவின் ஒளி. முழை - குகை. அரவு - நாகம். மணிவெயில் - மாணிக்கத்தின் செவ்வொளி. பரிதி - சூரியன். தலைஉவா - அமாவாசை. குழை அணி காதர் - காதில் குழையை ஆபரணமாகக் கொண்ட சிவபிரான். அணி - ஆபரணம். வெற்பு - திருக்காளத்தி மலை. 129.

779. விரவுபன் மணிகள் கான்ற
விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளிகொள் நீல
மணிகளும் இமைக்கும் சோதி

பொரஇரு சுடருக்கு அஞ்சிப்
போயின புடைகள் தோறும்
இரவிருள் ஒதுங்கி னாலே
போன்றுளது எங்கும் எங்கும்.

தெளிவுரை: பலவகையான மணிகள் ஆங்கு விரவிப் பேரொளியைப் பக்கங்கள் முழுவதும் பரப்ப, மரகதத்தின் நீல ஒளியும், இரு சுடர்களான சூரியன் மற்றும் சந்திரனின் ஒளியோடு மோதுதற்கு அஞ்சி விலகி, ஆழமாக உள்ள குகைகளில் சென்று ஒளியும்.

கான்ற - வெளிப்படுத்திய. படலை - பரப்பு. மரகதம் - பச்சைக்கல். இமைக்கும் சோதி - ஒளிக்காட்டும் தன்மை. பொர - மோத. இருசுடர் - சூரியனும், சந்திரனும். புடை - பக்கம். ஒதுங்கினாலே போன்று - குகைகளிலும் ஆழமான பள்ளங்களிலும் தங்கினாற் போன்று. 130

780. செந்தழல் ஒளியின் பொங்கும்
தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்த
மணிவிளக்கு ஒளிக ளாலும்
ஐந்தும் ஆறு அடக்கி உள்ளார்
அரும் பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக் காளத்தி
மலையினில் இரவொன் றில்லை.

தெளிவுரை: திருக்காளத்தி மலையின் கண் சிறப்பின் மிக்க சோதி மரங்கள் உள்ளதால் அவை இரவில் ஒளி வீசிக் கொண்டிருக்கும். குரங்குகள் தாம் இரவில் தங்கும் குகைகளில் ஒளி மேவும் முத்துக்களை விளக்குகளாகக் கொண்டுள்ளதால், ஆங்கும் ஒளி மேவும். ஐம்புலன்களை அடக்கியும் ஆறு வகைப்பட்ட குற்றங்களை நீக்கியும் விளங்கிய முனிவர்களின் அரிய பெரிய அகஒளி விளங்குதலால் அம்மலையின்கண் புற இருள் இருத்தல் அரிதானமையின் இத்தன்மையிலும் ஒளி திகழ்தலாயிற்று. ஆதலினால் எந்தையார் திருக்காளத்தி நாதர் எழுந்தருளியுள்ள திருமலையில் இரவிலும் ஒளி பரந்து நிற்றலால் அங்கு இரவு என்பது எக்காலத்திலும் இல்லை.

இவண் இரவு என்பது இருள் மேவிய தன்மையற்ற நிலையைச் சுட்டியது. என்க.

தீபமாமரம் - பெருமை விளங்கும் சோதி மரம்; இது தெய்வீக மலையின்கண் விளங்கும் என்க. மந்தி - குரங்கு. முழை - குகை. ஐந்து - மெய் வாய், கண், நாசி, செவி என்னும் ஐம்புலன்கள் ஆறு - குற்றவகையாகிப் பகையாகும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) அரும்பெரும் சோதி - அகவொளி, இ.ந்து உள்ள இடத்தில் புற இருளும் நீங்கும் என்க. எந்தையார் - சிவபிரான். இரவு - இருளைக் குறித்தது. 131

பொழுது புலர்ந்ததும் திண்ணனார் ஈசனுக்கு ஊனமுது கொண்டுவர ஏகுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

781. வரும்கறைப் பொழுது நீங்கி
மல்கிய யாமம் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின்
சூழ்சிலம்பு ஓசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்று
கண்துயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானார்க்கு
அமுது கொண்டு அணைய வேண்டி;

தெளிவுரை: மாலைப்பொழுது நீங்கி அதனைத் தொடர்ந்து இருள் பொருந்திய யாமமும் கடந்து இரவு தாண்டியது. விடியற்காலைப் போதில் பறவைகள் ஒலிப்பதைக் கேட்டு திண்ணனார் பெறுதற்கரிய தம் பெருமானுக்கு ஊனமுதை உரிய நேரத்தில் கொண்டு வரும் வகையில் செல்ல ஆயத்தமானார்.

சிறப்புரை: திண்ணனார் கரிய மலை போன்று நின்றார் என்று திருப்பாடல் 776 - இல் உரைத்தமை காண்க. இது திண்ணனார் உறுதிப்பட நிற்றலைக் காட்டியதாயிற்று. இத்திருப்பாட்டில் அவர் கருங்கடற்கு உவமை சாற்றியமையானது அக்கடல், எல்லாக் காலத்திலும் அலைகள் கொண்டு உறக்கமில்லாது சலசலப்பது போன்று நாயனார் துயிலாது நின்றமை சாற்றப்படுதலாம்.

கறைப் பொழுது - மாலைப் பொழுது. யாமம் - நள்ளிரவு. புள் - பறவை. சிலம்போசை - பறவைகள் சிறகுகளை அடித்துப் பறக்கும் ஓசை. கருங்கடல் - திண்ணனார்க்கு உவமை சாற்றப்பட்டது. தம்பிரான் - திருக்காளத்தி நாதர். வேண்டி என்பதனை அடுத்த பாடலோடு கூட்டுக. 132

782. ஏறுகால் பன்றி யோடும்
இருங்கலை புனமான் மற்றும்
வேறு வேறு இனங்கள் வேட்டை
வினைத் தொழில் விரகி னாலே
ஊறு செய்காலம் சிந்தித்து
உருமிகத் தெரியாப் போதில்
மாறுஅடு சிலையும் கொண்டு
வள்ளலைத் தொழுது போந்தார்.

தெளிவுரை: நன்கு புலராத இருள் கொண்ட விடியற்காலையில் பகையினை அழிக்கக் கூடிய வில்லையேந்திய திண்ணனார், வள்ளலாராகிய குடுமித் தேவரை வணங்கிச் செங்குத்தாக மலைகளிலும் ஏறும் திறனுடைய பன்றியோடு பெரிய கலைமான்களையும், காட்டு மான்களையும், மற்ற வகையான விலங்குகளையும் வேட்டைத் தந்திர முறையால் கொன்று கையப்படுத்தும் பொருட்டுச் சென்றார்.

இவண் விலங்குகள் இருளில் சஞ்சாரம் கொள்ளுதலும், பகலில் பதுங்கி இருத்தலும் ஆனதால் திண்ணனார் தக்க பொழுதில் செல்லலானார் என்க.

ஏறுகால் பன்றி - நேராக மலையின் மீது ஏறிச் செல்லும் காலின் அமைப்புடைய பன்றி. இருங் கலை - கலைமான். புன மான் -காட்டு மான். விரகு - போர்த் தந்திரம். உரு - வடிவம். தெரியாப் போது - கண்ணுக்குப் புலப்படாத இருள் நிலவும் போது. மாறு அடு - பகையை வெல்லும். சிலை - வில். வள்ளல் - சிவபிரான். 133

கதிரவன் தோன்றும் காட்சியுரைத்தல்
கொச்சகக் கலி

783. மொய்காட்டும் இருள் வாங்கி
முகம் காட்டும் தோ்இரவி
மெய்காட்டும் அன்புடைய
வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க
இட்ட கருந் திரை எடுத்துக்
கை காட்டு வான் போலக்
கதிர் காட்டி எழும் போதில்;

தெளிவுரை: அடர்த்தியாக மொய்த்துள்ள இருளை நீக்கித் தன் முகத்தை வெளியே காட்டும் ஒற்றைச் சக்கரத் தேருடைய

சூரியன் தன்னுடைய தேகமே அன்புடைய வடிவமாக ஆகப்பெற்ற வில்லேந்திய திண்ணனார், தனித்து வேட்டைக்காகச் சென்ற பின்னர், விலங்கு வேட்டைக்கு இடப்பட்ட இருளான கருந்திரையை நீக்கி, "இதோ உள்ளன" என்று கைகாட்டித் தெரிவிப்பது போன்று தன் கதிர்களாகிய கைகளை நீட்டினான்.

"எழும்போதில்" என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

மொய்காட்டும் - மொய்த்து அடர்த்தியான. இருள் வாங்கி - இருளை நீக்கி. தேர் இரவி - ஒற்றைச் சக்கரத் தேருடைய சூரியன். மெய் காட்டும் அன்பு - தேகம் அன்பு வடிவமான தன்மையைச் சாற்றுதலாம்; மெய்யன்பு என்றும் கொள்க. வில்லியார் - வில்லேந்திய திண்ணனார். மா - விலங்கு. கருந்திரை - இருள். கை காட்டுதல் - இதோ உள்ளதெனக் கண்ணுக்குப் புலனாகுமாறு செய்தல். கதிர் - சூரியனின் கிரணங்கள்.

134

இறைவன் திருமுன்பு இறைச்சித் துண்டுகளைக் கண்ட சிவகோசரியார் பெரிதும் வருந்தித் தூய்மை செய்து, நீராடி ஆகம விதிப்படி பூசித்து மீளுதல்

- இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர்

784. எய்திய சீர் ஆகமத்தில்
இயம்பியபூ சனைக் கேற்பக்
கொய்தமல ரும் புனலும்
முதலான கொண்டணைந்தார்
மைதழையும் கண்டத்து
மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் **தவமுடைய**
முனிவர் சிவ கோசரியார்;

தெளிவுரை: நஞ்சு அருந்தியதால் நீலநிறம் திகழும் கண்டத்தை யுடைய மலையில் விளங்கும் மருந்து போன்ற திருக்காளத்தி நாதரை நித்தமும் பூசனை செய்து வழிபடும் தவமுடைய சிவகோசரியார் என்னும் முனிவர் சிறப்பின் மிக்க ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கு ஏற்றவாறு கொய்த மலரும், புனித நீர் முதலான யாவையும் எடுத்துக் கொண்டு ஆங்கு வந்து அடைந்தார்.

சிறப்புரை : சிவபிரான், உயிர்ப் பிணிக்கு மருந்தாகி வினை அறுக்கும் பிறவிப் பிணியை அகற்றியும் விளங்கும் தன்மையால் மருந்து என ஓதப்பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைத் திருப்பதிகத்தில்,

"வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணி யேமறைப் பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடையானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவனேதிரு ஆவடு துறையுள்
ஆனை யேயெனை அஞ்சல் என்று அருளாய்
ஆர்எனக்கு உறவு அமரர்கள் ஏறே!"

என்று அருளியவாறும் காண்க.

சிவாகம விதிப்படி பூசிக்கும் சிறப்பானது இவண் சீர் ஆகமத்து இயம்பிய பூசை எனச் சாற்றப்பட்டது. ஆகமங்கள் சிவபிரானது சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து திருமுகங்களால் தோற்றுவிக்கப்பட்ட பாங்கினை மாணிக்கவாசகர், கீர்த்தித் திருஅகவலில்,

"மற்றவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்றஐம் முகங்களால் பணித்து அருளியும்"

எனவும் அருளியவாறும் காண்க.

அன்னை காமாட்சி ஆகம விதிப்படி ஆற்றிய பூசையின் சிறப்பினைத் திருப்பாட்டு 1136 - இல் (திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 54) சேக்கிழார் சுவாமிகள்,

"ஏதமில் பல யோனிஎண் பத்து
நான்குநூ றாயி ரந்தனுள் வைத்த
பேத மும்புரந் தருளும் அக் கருணைப்
பிரான்மொ ழிந்த ஆகம வழிப் பேணிப்
போது நீர்மையில் தொழுதனள் போதப்
பொருப்பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி
மாதவம் புரிந்து அருளுதற்கு அமைந்த
வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான்."

என்று அருளிச் செய்தமையும் காண்க.

சீர் ஆகமம் - பூசித்தற்குச் சிறப்புடைய விதியாகிய ஆகமம். புனல் - புனித நீர். முதலான - தூப, தீப, நைவேத்தியம், ஒலி செய்யும் மணி முதலியன என்க. மைதழையும் கண்டம் - கருமையுடைய கழுத்து. மலை மருந்து - திருக்காளத்திநாதர். முனிவர் - தூய பெருந்தகையாகிய சிவாசாரியார்.

785. வந்துதிரு மலையின்கண்
வானவர் நா யகர் மருங்கு
சிந்தைநிய மத்தோடும்
செல்கின்றார் திருமுன்பு
வெந்த இறைச் சியும் எலும்பும்
கண்டகல மிதித்தோடி
"இந்த அனு சிதம் கெட்டேன்
யார் செய்தார்" என்றழிவார்.

தெளிவுரை: திருக்காளத்தி மலையின்கண் வீற்றிருக்கும் தேவர்பிரானாகிய திருக்காளத்தி நாதரின் பக்கத்தே புறத்தே காணப்படுவதானது மட்டும் அல்லாது, சிந்தையிலும் நியமத்தோடு விளங்கும் சிவகோசரியார் செல்லும்போது இறைவன் திருமுன்பு வெந்த இறைச்சியும், எலும்பும் இருக்கக் கண்டு அதிர்ச்சி கொண்டவராகி, அதன் மீது தம் பாதம் பட்ட நிலையில் குதித்து ஓடி, "இத்தகைய அனுசிதத்தை யார் செய்தார்? அந்தோ!" என்று எண்ணி வருந்தினார்.

சிறப்புரை: எலும்பும், இறைச்சியும் பெருமான் திருமுன்பு இருந்த செயலானது இவண் அனாசாரம் என்று குறிப்பிடப்பட்டமையை காண்க. இத்தன்மையில் பச்சிலையும், பூவும்சாத்தப் பெற்ற தன்மையைத் தகாத செயலெனத் திண்ணனாரின் கருத்தில் முதற்கண் பதிந்தமையைத் திருப்பாட்டு 757 - இல் சுட்டப்பெறுதல் காண்க.

இறைவன், அன்பர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் செய்யப்படும் பூசனையை இனிது பேதமின்றி ஏற்றுக் கொண்டு விளங்கும் தன்மையைத் திருஞான சம்பந்தர், 3 - ஆம் திருமுறை, திருவானைக்கா திருப்பதிகத்தில்,

"ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்று
ஆனொடு அஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே!"

(ஆனதொண்டர் - திண்ணனார் மற்றும் சிவகோசரியார்) என்று அருளிச் செய்தவாறும் காண்க.

திருமலை - திருக்காளத்தி மலை; திருக்கயிலைக்கு இணையாக அதனைத் தென் கயிலை என்று ஏத்தப் பெறும் சிறப்பினையும் நோக்கற்பாலது. வானவர் நாயகர் - தேவர்பிரான். மருங்கு - பக்கம். திருமுன்பு - இறைவன் சந்நிதி முன்பு. அனுசிதம் - அனாசாரம்.

அழிவார் - வருந்துவார். இவண் சிவகோசரியார் என்னும் எழுவாய் வருவிக்க.

136

786. **"மேவ நேர் வரஅஞ்சா வேடுவரே இது செய்தார்**
தேவதேவேசனே திருமுன்பே இது செய்து
போவதே இவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ளம்
ஆவதே" எனப்பதறி அழுது விழுந்து அலமந்தார்.

தெளிவுரை: "ஆசாரம் ஏதுமில்லாது இறைவன் திருமுன்பு வருவதற்குச் சிறிதும் அஞ்சாத வேடுவர்களே இதனைச் செய்தவரானார். தேவ தேவர்களான மூவர்க்கும் தலைவனே! தேவரீரின் திரு முன்னிலையிலேயே இவ்வாறு அனுசிதம் செய்து ஏகுவது ஒல்லுமோ! இத்தன்மையில் உண்டாக வேண்டும் என்பது தேவரீரின் திருவுள்ளம் ஆவதே!" என்று நெஞ்சம் பதறி அழுது கசிந்துருகித் தரையில் விழுந்து இறைவனைத் தொழுது பெரிதும் புலம்பினார்.

சிறப்புரை: சிவபெருமான் முதன்மைக் கடவுள் என்னும் தகைமையில் தேவதேவன், மகாதேவன், தேவர் பிரான், தேவாதி தேவன் என்று சிறப்பின்மிக்க நிலையில் போற்றப் படும் வகையில் மாணிக்கவாசகர் திருவெம்பாவையில், "முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய் மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்!" என்று அருளிச் செய்தமையும் காண்க. இத்திருப்பாட்டில் தேவர்களுக்குத் தேவராக விளங்கும் சிவப்பரம்பொருளின் மேன்மையானது, "தேவ தேவேசன்" எனச் சாற்றியமை நோக்குக. இத்தன்மையுடைய பெருமானைப் "பரமேட்டி" என்னும் திருவார்த்தை மலரச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கடவூர் மயானத் திருப்பதிகத்தில்,

"காயும் புலியின் அதளுடையர்
கண்டர் எண்தோள் கடவூரர்
தாயும் தந்தை பல்லுயிர்க்கும்
தாமே ஆய தலைவனார்
பாயும் விடையொன் றது ஏறிப்
பலிதேர்ந்து உண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே!"

என்று அருளிச் செய்தவாறும் ஏத்துக.

வேட்டுவர்கள் அச்சமும், அன்பும் அற்றவர்கள் என்று திருப்பாட்டு 656 - இல் சாற்றியவழி இவண், "அஞ்சா வேடுவர் என்று புகன்றமையும் ஆயிற்று.

மேவ - வருதற்கு. நேர்வர அஞ்சா - ஆசார நெறியைக் கடைப்பிடிக்காதவராய் இறைவன் சந்நிதியில் வருவதற்கு அச்சம் கொள்ளும் உளப்பாங்கு இருக்க வேண்டிய தன்மையில் அவ்வாறு கொள்ளாதவர்கள் என்பது குறிப்பு; இது வேடுவர்களின் துணிவு கண்டு உரைத்தமையென்க. புகுத - நடைபெற. நீர் - ஈசனைக் குறித்தது. திருவுள்ளம் ஆவதே - யாவும் இறைவன் திருவுளப் படியே நடத்தல் கூடும் என்பதால் இ.ஃது நடைபெற்றது திருக்காளத்தி நாதரின் திருவுள்ளமே என மனம் கசிந்து சிவகோசரியார் வருந்தினார் என்பதாம். அலமந்தார் - வருந்தினார். 137

787. "பொருப்பில் எழும் சுடர்க்கொழுந்தின்
பூசனையும் தாழ்க்க நான்
இருப்பது இனி என்" னென்று அவ்
இறைச்சி எலும்பு டன்இலையும்
செருப்படியும் நாய் அடியும்
திருஅலகால் மாற்றியபின்
விருப்பினொடும் **திருமுகலிப்**
புனல் மூழ்கி விரைந்தணைந்தார்.

தெளிவுரை: திருக்காளத்தி மலையின் கண் எழுந்தருளியுள்ள சோதிச்சுடராக விளங்கும் குடுமித் தேவர்க்கு உரிய நேரத்தில் பூசனை செய்யக் காலம் தாழ்த்துதல் கூடாது." என்று எண்ணிய சிவகோசரியார் ஆங்கு மலிந்து விரிந்து பரவியிருந்த இறைச்சி மற்றும் எலும்புத் துண்டுகளையும் கல்லையும், திண்ணனார் அணிந்திருந்த திருப்பாதச் சுவட்டின் தடயமும், உடன் வந்த நாயின் தடயமும், அகலும்படித் திரு அலகால் அகற்றிய பின்பு, மீண்டும் ஆசார முறைப்படி திரு முகலியாற்றில் விருப்பம் மேவத் தூய நீராடி விரைந்து திரும்பி வந்தார்.

சிறப்புரை: திண்ணனார் வேட்டைக்கு வந்த போது நாய்களை அழைத்து வந்தமையைப் பாடல் 725 - இல் காண்க. இவண் அவை தன் தலைவனைப் பிரிந்து செல்லாது மலைக்கண்ணே இருந்தன என்பதனை ஈண்டு உய்த்துணர்க. இத்தன்மையில் நக்கீர தேவர் அருளிச் செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம் 11ஆம் திருமுறை, வரிகள் 81 - 82 இல்,

"ஈங்கொரு வேடுவன்
நாயொடும் புகுந்து மிதித்து உழக்கி"

என்று அருளிச் செய்தமையும் காண்க.

பொருப்பு - திருக்காளத்தி மலை. சுடர்க்கொழுந்து - சோதிச்சுடராக விளங்கும் சிவபிரான். அலகு - விளக்குமாறு. மாற்றி - அகற்றி.

788. பழுது புகுந் தது தீரப்
பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுது பெறு வனகொண்டு
தூயபூசனை தொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே
முதலாக வரும்பூசை
முழுதும் முறைமையின் முடித்து
முதல்வனார் கழல் பணிந்தார்.

தெளிவுரை: இத்தன்மையில் ஈசற்குத் தகாத தன்மை நேரிட்டதைத் தீரும் வகையில் சுத்தமாகும் நிலையில் ஆகம விதிப்படி பிராயச்சித்தம் செய்து தொழுத சிவகோசரியார் வனத்தில் பெறும் பொருள்களைக் கொண்டு தூய்மையான சிவ பூசனையைத் தொடங்கிக் குற்றம் இல்லாத திரு மஞ்சனம் முதற்கொண்டு நடத்தப் பெறும் பூசை முழுமையும் முறைப்படி செய்து முடித்து முதற்பொருளாகவுள்ள சிவப்பரம்பொருளின் திருக்கழலை வணங்கினார்.

பழுது - ஊனும் எலும்பும் இருந்த நிலையைக் குறித்தது. பவித்திரம் ஆம் செயல் - பிராயச்சித்தம் செய்து தூய்மையாக்குதல். பெறுவன கொண்டு - வனத்தில் பெறுகின்ற சமித்து முதலியவற்றைக் கொண்டு வேள்வி செய்யும் தன்மையும் ஆம். திருமஞ்சனம் - தூய நீராட்டுதல். முறைமை - ஆகம முறை. முதல்வனார் - திருக்காளத்திநாதர். 139

789. பணிந்தெழுந்து தனி முதலாம்
பரனென்று பல்முறையால்
துணிந்த மறை மொழியாலே
துதி செய்து சுடர்த் திங்கள்
அணிந்தசடை முடிக் கற்றை
அங்கணரை விடை கொண்டு
தணிந்த மனத் திரு முனிவர்
தபோவனத்தின் இடைச்சார்ந்தார்.

தெளிவுரை: ஈசனைப் பணிந்து எழுந்த தணிந்த மனம் கொண்ட தவமுனிவரான சிவகோசரியார், ஒப்பற்ற பரம் பொருள் சிவபிரானே என்று அறுதியிட்டுக் கூறும் இறைவனைத் துதி செய்து, ஒளி மேவும் சந்திரனைச் சடை முடியில் தரித்த அப்பெருமானிடம் விடைபெற்றுத் தம் தவச்சாலையை அடைந்தார்.

தனி முதல் - ஒப்பற்ற முதற்பரம்பொருள். துணிந்த - அறுதியிட்டுக் கூறுகின்ற. மறை மொழி - வேதவாக்கியம். சுடர்த் திங்கள் - பிறைச் சந்திரன். அங்கணர் - சிவபிரான். திரு முனிவர் - சிவபிரானைப் பூசிப்பதான பெருஞ் செல்வப் பேற்றினையுடைய சிவகோசரியார் என்னும் முனிவர். தபோவனம் - சிவகோசரியார் வசிக்கும் இடம்.140

பெருமுனிவர் சென்றதும் திண்ணனார் பூசித்த திறத்தைச் சாற்றத் தொடங்குதல் - இது கவிக்கூற்று

790. இவ்வண்ணம் பெருமுனிவர்
ஏகினார் இனி இப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி
வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக்
கான்வேட்டை தனி ஆடிச்
செய்வண்ணத் திறம்மொழிவேன்
தீவினையின் திறம் ஒழிவேன்.

தெளிவுரை: இந்த நிலையில் பெருமை விளங்கும் முனிவரான சிவகோசரியார் பூசை புரிந்து சென்றதும் கரிய வண்ணமும், கரிய திருமுடிமயிரும் கொண்டு வனத்திலிருக்கும் வேடர் பெருமானாகிய திண்ணனார், கையில் அழகியதான அருள் வண்ணம் கொண்ட வில்லை வளைத்துக் காட்டில் வேட்டையைத் தனித்து ஆடிய வண்ணச் செயலை என் தீவினையின் தன்மை நீங்கும் வகையில் மொழிவேன். இது கவிக்கூற்று.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் இவ்வண்ணம் என்பது பெருமுனிவராகிய சிவகோசரியார் ஆகம விதிப்படி செய்த பூசனையைக் குறித்ததாம். மைவண்ணம் என்பது வனத்தில் வாழும் வேட்டுவர்களின் தலைவரான திண்ணனாரையும், அவர்தம் கரிய தலைமுடி மயிரையும், திருமேனி எழிலையும் குறித்தது என்க. கைவண்ணச் சிலை என்பது ஈசற்கு

ஊனமுது அளிக்கப்பெறும் ஓண் கருவியாக விளங்குதலின் அருள் வண்ணம் ஆகிய தன்மையெனக் கொள்க. செய்வண்ணம் என்பது தீவினை தீர்த்தல் காரணமாய்ச் செம்மை திகழும் முத்திப் பேற்றின் பெருஞ்சிறப்பினைக் காட்டும் செயல் எனவும் காண்க.

பெருமுனிவர் - சிவகோசரியார். மை - கருமை. குஞ்சி - தலைமயிர். வனவேடர் - திண்ணனார். பெருமான் - பெருமையுடைய தலைவர். சிலை - வில். தனி ஆடி - தனித்து நின்று வேட்டையாடி. செய்வண்ணம் - செயல் வண்ணம்; செம்மையும் ஆம் தீவினையின் திறம் - பிறவி என்னும் பிணியை வலிமையோடு பற்றும் தீவினையின் தாக்கத்தைச் சுட்டுதலாம். 141

திண்ணனார் காட்டில் வேட்டையாடி ஈசற்கு ஊனமுதம் கொண்டு வருதல்

- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

791. திருமலையின் புறம்போன
திண்ணனார் செறிதுறுகல்
பெருமலைகள் இடைச்சரிவில்
பெரும்பன்றி புனம் மேய்ந்து
வருவனவும் துணிபடுத்து
மானினங்கள் கானிடை நின்று
ஒருவழிச் சென்று ஏறுதுறை
ஒளிநின்று கொன்றருளி;

தெளிவுரை: திருக்காளத்தி மலையிலிருந்து புறத்தே சென்ற திண்ணனார், செறிந்த நீண்ட கற்களையுடைய பெரிய மலைகளின் இடையே உள்ள சாரலில் புனங்களை மேய்ந்து வருகின்ற பெரிய பன்றிகளைக் கொன்றார். மானினங்கள் காட்டிலிருந்து ஒரு வழிப்பக்கமாக ஏறிச் செல்லும் துறையிலும் மறைந்து நின்று கொன்றார். கொன்றருளி என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

சிறப்புரை:இவண் விலங்குகளைக் கொன்ற செயலைக் கொன்றருளி என்னுமாறு உரைத்தமை காண்க. இ.ஃது இறைவர்க்குத் திருவமுது என ஆகப்பெறுதலின் அருளிச் செயலாகச் சாற்றப்பட்டது.

ஈசனார்க்கு அன்பில்லாது செய்யும் புனிதச் செயலும் பாவமாகும்

என்பதும், அன்புடையதெனின் வன் செயலும் புண்ணியமாகும் என்பதும் ஆகும். தக்கன் செய்த புண்ணியச் செயலான வேள்வி பாவ காரியமாயினமையும், சண்டேசர் தம் தந்தையின் காலைப் போக்கிய வன்செயல் புண்ணியமாயினமையும் ஈண்டு நோக்குக. இதனைச் சிவஞான சித்தியார் - சுபக்கம், திருப்பாட்டு 119-இல்.

"அரனடிக்கு அன்பர் செய்யும்
பாவமும் அறம தாகும்
பரனடிக்கு அன்பிலாதார்
புண்ணியம் பாவமாகும்
வரம்உடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமையாகி
நாரினிற் பாலன் செய்த
பாதகம் நன்மை யாய்த்தே."

(பாலன் - சண்டேசர்.)

என்று அருளியவாறும் காண்க.

திருமலை - திருக்காளத்தி மலை. செறி துறுகல் - அடர்ந்த மலை; குன்று. சரிவு - மலைச்சாரல். புனம் - கொல்லைப் பயிர். துணிபடுத்து - கொன்று. ஒளி நின்று - மறைந்து நின்று. 142

792. பயில்விளியால் கலையழைத்துப்
பாடுபெற ஊடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி
அடி ஒற்றி மரைஇனங்கள்
துயிலிடையின் கிடைஎய்து
தொடர்ந்துகட மைகள் எய்து
வெயில்படவெங் கதிர்முதிரத்
தனிவேட்டை வினைமுடித்தார்.

தெளிவுரை: திண்ணனார் விலங்குகளை அழைக்கும் குரல் எழுப்பிக் கலைமான்களை வருமாறு செய்து ஊடுருவிச் செல்லும் கூர்மையான அம்புகளைத் தொடுத்து அவற்றைக் கொன்றார். அவர் மேலும் மரை இனங்களின் கால் சுவடுகளின் தடம் அறிந்து அவை துயிலும்போது அம்பு தொடுத்துக் கொன்றார். கடமை என்னும் மான் வகைகளையும் அவர் அம்பு தொடுத்துக் கொன்றார். இந்நிலையில் வெயில் கடுமையாக முதிர்வதற்குள் திண்ணனார் வேட்டைத் தொழிலை முடித்தார்.

கலை - கலைமான். அயில் - கூர்மையான. வெங்கணை போக்கி - கொடிய அம்புகளைச் செலுத்தி. மரை - ஒருவகை மானினம். கிடை - கூட்டம். கடமை ஒருவகை மான், காட்டுப் பசு, பெண்ணாடு. 143

793. பட்டவன விலங்கெல்லாம்
படர்வனத்தில் ஒரு சூழல்
இட்டருகு தீக்கடை கோல்
இருஞ்சுரிகை தனையுருவி
வெட்டி நறுங் கோல் தேனும்
மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை
மருங்குபுடை பட அமைத்தார்.

தெளிவுரை: திண்ணனார் இவ்வாறு வேட்டையில் இறந்து பட்ட விலங்குகளை அக்காட்டில் ஒரு பக்கமாக இட்டு, வலிய பெரிய வாளால் தீக்கடை கோலை வெட்டியெடுத்துக் கொம்புத் தேனையும் மிகுதியாக எடுத்துத் தேக்கிலையால் வட்டமான தொன்னைகளை அமைத்து நிறைத்துப் பக்கத்தில் வைத்தார்.

பட்ட - இறந்த. சுரிகை - உடைவாள். கோல் தேன் - கொம்புத் தேன். பெருங் கல்லை - பெரிய தொன்னை. மருங்கு புடை - பக்கத்தில். 144

794. இந்தனத்தை முறித்தடுக்கி
எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து
மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தி அயில் அலகம்பால்
குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண்டு எழும்தழலில்
வக்குவன வக்குவித்து;

தெளிவுரை: விறகுக் கட்டைகளை ஒடித்து அடுக்கி வைத்துத் தீக்கடையும் கோல் கொண்டு நெருப்பை உண்டாக்கிப் பெருகச் செய்து, இறந்த விலங்குகளை அம்பால் குத்தித் துண்டு படுத்திக் கொழுப்புப் பகுதிகளை அகழ்ந்து எடுத்து எரிகின்ற நெருப்பில் இட்டுத் திண்ணனார் நன்கு பக்குவமாக வதக்கினார்.

வக்குவித்து என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

இந்தனம் - விறகு. முறிந்து அடுக்கி. எரியும் அரணி - தீக்கடைக் கோல். அலகம்பு - கூரிய அம்பு. குட்டம் - வளைவு; தொன்மையாக, வக்குதல் - வதக்குதல். 145

795. வாயம்பால் அழிப்பதுவும்,
வகுப்பதுவும் செய்து அவற்றின்
ஆய உறுப்பு இறைச்சியெல்லாம்
அரிந்தொருகல் லையில் இட்டுக்
காய நெடுங் கோல் கோத்துக்
கனலின்கண் உறக்காய்ச்சித்
தூய திரு அமுதமைக்கச்
சுவைகாணல் உறுகின்றார்.

தெளிவுரை: கூர்மையான அம்பினைக் கொண்டு விலங்கின் ஊனை அழித்துப் புறத்தே எறிதலையும் ஏற்றதெனப் பகுத்தலையும் செய்த திண்ணனார், வேறு வேறு தொன்னைகளில் வைத்துத் தீயில் காயுமாறு அம்பில் கோத்துப் பொருந்தியவற்றைச் சுவையறிந்து மறைப்படுத்தினார்.

வாய் - கூர்மை. அழிப்பது - நீங்குவது. வகுப்பது - ஏற்றவாறு பகுப்பது. கல்லை - தொன்னை. நெடுங்கோல் - நீண்ட அம்பு. கனல் - நெருப்பு. சுவை காணல் - வாயில் இட்டுச் சுவையறிதல் 146

796. எண்ணிறந்த கடவுளருக்கு
இடும் உணவு கொண்டூட்டும்
வண்ணஎரி வாயின்கண்
வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு
தாம் சோதித்து அமைப்பார்போல்
திண்ணனார் திருவாயில்
அமைத்தார் ஊன் திருவமுது.

தெளிவுரை: எண்ணற்ற தேவர்களுக்கு இடுகின்ற அவியுணவை முதற்கண் தன்பால் ஈர்த்து ஆவியாக்கும் அக்கினிக் கடவுள் பின்னர் (அவ்அவிர் பாகத்தை) வானவர்களுக்கும், மும்மூர்த்திகள் முதலானோர்க்கும் வழங்குதல் போன்று திண்ணனார் அண்ணலாகிய

திருக்காளத்தி நாதர் அளிக்கப் பெறும் உணவைத் தாம் வாயிலிட்டு, நன்கு அமையுமாறு திருவமுது ஆக்கினார்.

சிறப்புரை: திண்ணனார் தம் திருவாய் கொண்ட ஊனுணவைப் புனிதம் என்று திருப்பாட்டு 771 - இல் நவின்றதைத் தொடர்ந்து இவண், அவியுணவு எனச் சாற்றப்பெறுதல் காண்க.

எண்ணிறந்த - எண்ணற்ற, அளவில்லாத. கடவுளர் - வானவர்கள். எரி - அக்கினிக் கடவுள். 147

797. நல்லபதம் உறவெந்து
நாவின்கண் இடும் இறைச்சி
கல்லையினில் படைத்துத் தேன்
பிழிந்து கலந்து அது கொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித்
தாமமும் தூய் மஞ்சனமும்
ஒல்லையினில் முன்பு போல்
உடன் கொண்டு வந்தணைந்தார்.

தெளிவுரை: நல்ல பதத்துடன் விளங்கும் வேக வைத்த ஊனமுதை, நாவின்கண் இட்டுச் சுவையுடையனவற்றைத் தேக்கிலைக் கலத்தில் வைத்து, அதனுடன் தேனைப் பிழிந்து கலந்து எடுத்துக் கொண்டு திண்ணனார் மிகவும் விரைவாகப் பூக்களைத் தலையில் சொருகியும், தூய்மையான திருவாயில் திரு மஞ்சன நீரும் கொண்டு முன்னாளன்று செய்தது போன்று மலையின் மீது ஏறி வந்தார்.

கல்லை - தேக்கிலைக் கலம்; தொன்னை. திருப்பள்ளித் தாமம் - இறைவனுக்குச் சாத்தப்பெறும் பூக்கள். ஒல்லை - விரைவாக. 148

திண்ணனார் சிவபூசை செய்தல்

798. வந்து திருக் காளத்தி
மலையேறி வனசரர்கள்
தந்தலைவ னார் இமையோர்
தலைவனார் தமைஎய்தி
அந்தணனார் பூசையினை
முன்புபோல் அகற்றிய பின்
முந்தை முறை **தம்முடைய**
பூசனையின் செயல் முடிப்பார்.

தெளிவுரை: வேடுவர்களின் தலைவரான திண்ணனார் திருக்காளத்தி மலையேறி வந்து தேவர்களின் தலைவரான குடுமித் தேவரை நண்ணி, சிவகோசரியார் ஆகம விதிப்படி செய்த பூசனையை முன்பு செய்தது போல் அகற்றிய பின்பு, முன்னாள் செய்த பூசை முறைப்படி தாம் செய்யும் பூசனையை நிறைவு செய்தார்.

வனசரர் - வானத்தில் உலவும் வேடுவர்கள். இமையோர் தலைவனார் - தேவர்கள் தலைவரான திருக்காளத்தி நாதர்; குடுமித் தேவர். அந்தணனார் - சிவகோசரியார். 149

திண்ணனார், திருக்காளத்தி நாதர்க்குத் திருஅமுது செய்வித்து இரவுக் காவல் புரிதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

799. ஊனமுது கல்லையுடன்
வைத்து "இது முன் னையின் நன்றால்
ஏனமொடு மான் கலைகள்
மரைகடமை இவை யிற்றில்
ஆனஉறுப்பு இறைச்சியமுது
அடியேனும் சுவை கண்டேன்
தேனும் உடன் கலந்தது இது
தித்திக்கும்" என மொழிந்தார்.

தெளிவுரை: திண்ணனார், பெருமான் திருமுன்பு தொன்னையோடு வைத்து, "பெருமானே! இந்த உணவு முன்னாள் வைத்ததைவிட நன்றாக உள்ளது. பன்றியோடு, மான், கலைகள், மரை, கடமை என்கிற இவ்வகைகளில் ஏற்ற இறைச்சி அமையப் பெற்றது. அடியேனும் இதன் சுவை கண்டேன். தேனும் இதனோடு கலந்துள்ளதால் தித்திக்கும்." என மொழிந்தார்.

முன்னையது - நேற்றைய தினம் கொண்டு வந்த ஊன். 150

800. இப்பரிசு திருஅமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனை செய்து அந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந்து எழும் அன்பால் காளத்தி
அன்பர் எதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை ஆடுவார்.

தெளிவுரை: திண்ணனார் இவ்வாறு பெருமானைத் துதித்து ஏத்தி, அமுது செய்வித்துத் தம்முடைய ஒப்பற்ற பூசனை செய்து, அந்த நெறியில் ஒழுகுபவராய்ப் பேரன்பு மேலும் மேலும் உள்ளத்திலிருந்து உந்தி எழத் திருக்காளத்தி அப்பரின் எதிரில் இரவு முழுவதும் உறங்காதவராகிப் பகற்பொழுதில் வேட்டை ஆடுபவரானார்.

அல் - இரவுப் பொழுது 151

சிவ கோசரியார் ஆகம விதிப்படி பூசித்தல்

801. மாமுனிவர் நாள் தோறும்
வந்தணைந்து வனவேந்தர்
தாம் முயலும் பூசனைக்குச்
சாலமிகத் தளர்வு எய்தித்
தீமையென அது நீக்கிச்
செப்பியஆ கமவிதியால்
ஆமுறையில் அர்ச்சனை செய்து
அந்நெறியில் ஒழுகுவரால்.

தெளிவுரை: மா முனிவரான சிவகோசரியார் நாள்தோறும் வனத்தை யடைந்து வனத்தில் மேவும் வேடர் தலைவரான திண்ணனார் முயன்று செய்யும் பூசனை கண்டு, மிகவும் மனம் வருந்தித் தளர்ந்தார். அவ்வாறு செய்த பூசை தீமையானது என அதனை நீக்கிய அவர், ஆகம விதிப்படி மீண்டும் நீராடி வந்து அதற்குரிய சடங்குகளைப் புரிந்து மீண்டும் ஆகின்ற முறையில் பூசித்து அர்ச்சனை செய்து ஒழுகுதலானார்.

மாமுனிவர் - சிவகோசரியார். வனவேந்தர் - திண்ணனார். தளர்வு எய்தி - வருந்தி. ஆமுறை - ஆகும் நெறிமுறை. 152

நாகன் மலையேறி வந்து தன் மகன் பேதலித்தான் என்று கண்டுவிட்டு நீங்குதல்

802. நாணனொடு காடனும் போய்
நாகனுக்குச் சொல்லியபின்
ஊணும் உறக்கமும் இன்றி
அணங்குறை வாளையும் கொண்டு

பேணும் மக னார் தம்பால்
வந்து எல்லாம் பேதித்துக்
காணும் நெறி தங்கள் குறி
வாராமல் கைவிட்டார்.

தெளிவுரை: திண்ணனாரை விடுத்து நீங்கிய நாணனும், காடனும் தம் தலைவனான நாகனிடம் கூற, அவன் ஊணும், உறக்கமும் இல்லாது பெரிதும் வருந்தித் தேவராட்டியை உடன் அழைத்து வந்து, தன் மைந்தனை நோக்கித் தக்கவாறு அறிவு புகட்டினான். ஆயினும் திண்ணனார் சிவநெறியில் ஆழ்ந்து தன்னுணர்வில் பற்றின்றி வேறு நோக்கமுமின்றி இருத்தலைக் கண்டு, அவர்கள் தம் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

அணங்கு உறைவாள் - தேவராட்டி. மகனார் - திண்ணனார். 153

திண்ணனாரின் கருத்தின் அளவை உரைத்தல்
கவிக்கூற்று

803. **முன்பு திருக் காளத்தி**
முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு
பொன்னாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினைஇரண்டும்
சாரும்மலம் மூன்றும் அற
அன்புபிழம் பாய்த் திரிவார்
அவர் கருத்தின் அளவினரோ.

தெளிவுரை: முன்னமே திருக்காளத்திநாதர் புரிந்த அருள் நோக்கால் இன்பம் அடைகின்ற நிலையில் இரும்பு பொன்னாக மாறியது போன்று, அவர் தேகத்தில் பசு போதம் மாறி சிவ உணர்வின் தலைப்பட்ட திண்ணனார், மும்மலமும், இருவினையும் அற்று விளங்கினார். இன்ன தன்மையில் அன்புப்பிழம்பாய்த் திரியும் அவரைப் பற்றி ஏனையோர் அளந்தறியும் கருத்துடையவராவரோ!

நாகன் முதலானோர் திண்ணனாரின் மெய்த் தன்மையையும், அன்பு வடிவம் ஆயினமையும் அறிந்திலர் என்பதாம். இது கவிக்கூற்று. திருக்காளத்திநாதர் அருள் நோக்கம் புரிந்தமையும்

திண்ணனார் அன்பு வடிவம் ஆயினமையும் முறையே திருப்பாட்டு 753, 755 - இல் காண்க.

இருவினை - புண்ணிய பாவம். மலம் மூன்று - ஆணவம், கன்மம், மாயை. அவர் - வேடர்கள்; நாகன் முதலானோர். 154

சிவகோசரியார் ஆகம விதிக்குப் புறம்பான பூசனையை நீக்குமாறு இறைவனை வேண்ட இறைவன் கனவில் உரைத்தல்

- இது முதல் 11 பாடல்கள் ஒரு தொடர்

804. அந்நிலையில் அன்பனார்
அறிந்த நெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால்
மாமுனிவர் அருச்சித்து" இங்கு
என்னுடைய நாயகனே
இது செய்தார் தமைக் காணேன்
உன்னுடைய திருவருளால்
ஒழித்தருள வேண்டும்" என;

தெளிவுரை: அந்நிலையில் பேரன்பரான திண்ணனார் தாம் அறிந்த நெறியில் பூசித்து மகிழ்ந்தார். பெருமையுடைய சிவாகம விதிப்படி மாமுனிவரான சிவகோசரியார் பூசித்து அர்ச்சனை செய்து, "என்னுடைய நாயகனே! இங்கு இத்தன்மையான செயலைச் செய்தவர் யார் என்று தெரியவில்லை. தேவரீருடைய திருவருளால் அதனை நீக்க வேண்டும்." என்று முறையிட்டார்.

திண்ணனார் செய்ததைப் பூசனையாகக் கருதாத நிலையில் "இது செய்தார்" எனவும், "ஒழித்தருள வேண்டும்" எனவும் சாற்றினார் என்க.

அன்பனார் - திண்ணனார். மாமுனிவர் - சிவகோசரியார். என - இதனை அடுத்த பாடலோடு கூட்டுக. 155

805. **அன்றிரவு கனவின் கண்**
அருள் முனிவர் தம்பாலே
மின் திகழும் சடைமவுலி
வேதியர்தாம் எழுந்தருளி

'வன்திறல்வே டுவன்என்று
மற்றவனை நீ நினையேல்
நன்று அவன்றன் செயல்தன்னை
நாம் உரைப்பக் கேள்" என்று;

தெளிவுரை: அன்று இரவு சிவகோசரியார் கனவில் மின்னலைப் போன்று ஒளிரும் சடைமுடியுடைய வேதநாயகரான சிவபெருமான் தோன்றி, " வன்மையுடைய வேடுவன் என்று அவனை நினைக்காதே! அவன் செயல் மிக நல்லது. அதனை நாம் சொல்ல இன்னமும் கேட்பாயாக!" என்று அருளிச் செய்யலானார்.

ஊனும் எலும்பும் இட்டது வேடுவன் ஒருவனாதல் வேண்டும் என்று எண்ணிய சிவகோசரியார்க்கு இறைவன் கனவில் தோன்றி அருளிச் செய்யலானார் என்பதாம்.

மின்திகழும் - மின்னல் போன்று ஒளிரும். வேதியர் - சிவபிரான். என்று என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக. 156

806. **"அவனுடைய வடிவெல்லாம்**
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலை இவ்வாறு
அறி நீ" என்று அருள் செய்தார்.

தெளிவுரை: ஈசன் "அவனுடைய வடிவம் நம்பால் சார்ந்து விளங்கும் அன்பு ஆகும். அவனுடைய அறிவு யாவும் நம்மை அறியும் அறிவேயாம். அவனுடைய செயல் நமக்கு மிகவும் இனியது. எனவே அவனுடைய நிலையை இத்தன்மையில் நீ அறிவாய்." என்று அருளிச் செய்தார்.

திண்ணனார் அன்புப் பிழம்பாய் விளங்கிச் சிவபோதத்தில் தலைப்பட்டு விளங்கும் சிறப்பினைத் திருப்பாட்டு 803 இல் அருளியவாறும் காண்க. இவண் சீவபோதம் சிவபோதமாகிய தன்மை சாற்றப்பட்டது. மற்றும் திருநாவுக்கரசர் அருளிச் செய்த வகையில்

"தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" எனக் குறிப்பிட்டவாறு திருப்பாட்டு 762 இல் சாற்றிய குறிப்பின் படியும் நோக்குக. 157

807. "பொருப்பினில் வந்து அவன் செய்யும்
பூசனைக்கு முன்பு என்மேல்
அருப்புறும்மென் மலர்முன்னை
அவை நீக்கும் ஆதரவால்
விருப்புறும் அன்பு எனும் வெள்ளக்
கால் பெருகிற்று என வீழ்ந்த
செருப்படிஅவ் இளம் பருவச்
சேய் அடியின் சிறப்புடைத்தால்."

தெளிவுரை: "திருக்காளத்தி மலையில் வந்து அவன் செய்யும் பூசனைக்கு முன்னதாக, என் மீது சாத்திய அரும்புகளையுடைய மென்மையான மலர்களை நீக்கும் தன்மையில், விரும்பத்தக்க அன்பு என்னும் ஆனந்த வெள்ளத்தால் பதிந்த அவன் செருப்படியானது இளமையுடைய முருகனின் பாதச் சிறப்பு உடையது."

இவண் சிவகோசரியார்க்குத், திண்ணனார் செய்யும் பூசையினை நன்கு அறியுமாறு சிவபிரான் உரைத்தருளினார் என்க.

பொருப்பு - திருக்காளத்தி மலை. அவன் - திண்ணனாரைக் குறித்தது. அருப்பு - மலர் அரும்பு. அன்பெனும் வெள்ளக்கால் - அன்புப் பெருக்கம். சேய் - முருகக் கடவுள். 158

குறிப்பு : பாடல் 807 முதல் 811 வரை 5 பாடல்கள் வெள்ளிப் பாடல்கள் என்பர்.

808. உருகிய அன்பு ஒழிவின்றி
நிறைந்த அவன் உருவென்னும்
பெருகிய கொள் கலமுகத்தில்
பிறங்கினிது ஒழுகுதலால்
ஒரு முனிவன் செவியுமிழும்
உயர்கங்கை முதல் தீர்த்தப்
பொரு புனலின் எனக்கு அவன்றன்
வாய் உமிழும் புனல் புனிதம்."

தெளிவுரை: பேரன்புடையவனாய், அன்பே விளங்க ஓய்வில்லாது கசிந்துருகும் அன்புப் பாத்திரமாய் அவன் இனிது விளங்க, ஒரு முனிவன் தன் காது வழியாக வெளிப்படுத்திய புனிதம் மிக்க கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களைவிட எனக்கு அவன் வாயிலிருந்து உமிழும் நீர் புனிதமாகும்.

சிறப்புரை: திண்ணனார் வாயின் வழியாக உமிழும் நீர், 'விளைத்த அன்பு' எனத்திருப்பாட்டு 772 - இல் சாற்றியவாறும் காண்க. இதனை, கங்கை நீரின் புனிதமாம் திருவாய் நீர் என்று திருப்பாட்டு 671 - இல் நவின்ற வாறும் கொள்க.

செவிவழியாக விடப்பெற்ற கங்கையின் வரலாறு:

ஒரு காலத்தில் பகீரதன் தன் மூதாதையர்கள் முடிவில்லாத நரக வாழ்விலிருந்து மீளும் வகையில் தன் குருவாகிய வசிட்டரின் ஆணைப்படி தவம் இயற்றினான். அவன் முதற்கண் பிரமனைக் குறித்தும், பின்னர் சிவபிரானைக் குறித்தும், அடுத்து கங்கையைக் குறித்தும் ஆக முப்பதாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தான். அக் கங்கையானது; ஆகாயத்திலிருந்து பூமியில் பொருந்தி வரும்போது வழியில், சந்நு என்கிற முனிவர் செய்த வேள்வியை அழித்தது. சினங்கொண்ட அவர் அதனை அருந்த, பகீரதன் பணிந்து, அருள் கொண்டு வெளிவிடுமாறு வேண்டினான். முனிவர் சினம் தணிந்து தன் செவி வழியாகக் கங்கையை வெளியே விடுத்தார். இதனால் சானவி என்னும் பெயர் கங்கைக்கு வழங்கலாயிற்று. இவ்வரலாறு இப்பாடலின் மூன்றாம் அடியில் சாற்றப்பட்டது.

அவன் உரு - திண்ணனார் திருவுருவம். கொள்கலம் - திண்ணனாரைக் குறித்தது. ஒரு முனிவன் - சந்நு என்கிற முனிவர். பொருபுனல் - ஒப்பற்ற புனித நீர். *159*

809. இம்மலைவந்து எனையடைந்த
கானவன்றன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல்
விரிந்தன போல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடு மால்
முதல்தேவர் வந்து புனை
எம்மலரும் அவன் தலையால்
இடுமலர்போல் எனக்கு ஒவ்வா.

தெளிவுரை: இம் மலையின் மீது ஏறிவந்த வேடுவனான திண்ணன், தன் இயல்பினால் உண்மையான அன்பு மலர்ந்து சாத்தப்பெறுதலால் செந்தாமரையின் மீது மேவும் பிரமனும் மற்றும் திருமால் முதலான முதல் தேவர்கள் வந்து சாத்தும் எத்தகைய மலரும், அவன் தலையின் மீது இடப்பட்ட அவர் போன்று எனக்கு ஏற்பது அன்று.

சிறப்புரை: இவண் திண்ணனார் இயல்பினால் சிவபிரான் மீது அன்பு செலுத்துதலானார் என்பதாம். இதனை "முன்பு செய் தவத்தின் ஈட்டம்" என்று திருப்பாட்டு 751 - இல் நவின்றவாறும் நோக்குக.

பேரன்பின் விளைவாகத் தனியுரிமை கொண்டு இறைவனுக்குச் சாத்தும் பூமாலையைச் சூடிக்கொடுத்து மகிழ்ந்த ஸ்ரீ ஆண்டாள் அன்பு நிலையினையும் இனிது காண்க.

கானவன் - வேடுவரான திண்ணனார். இயல்பு - முற்பிறவியில் செய்த தவத்தின் பயனாய் விளங்கும் தன்மை, மெய்ம்மலரும் அன்பு - உண்மை அன்பு; அன்பின் திருவுருவம். செம்மலர் - செந்தாமரை. அயன் - பிரமன். மால் - திருமால். ஒவ்வா - ஏற்பதாகாது. 160

810. வெய்யகனல் பதம் கொள்ள
வெந்துளதோ எனும் அன்பால்
நையும் மனத்து இனிமையினில்
நையமிக மென்றிடலால்
செய்யும் மறை வேள்வியோர்
முன்பு தரும் திருந்து அவியில்
எய்யும் **வரிச் சிலையவன்தான்**
இட்ட ஊன் எனக்கு இனிய

தெளிவுரை: வெம்மையுடைய நெருப்பில் நன்கு வெந்துள்ள பதத்தை அறியும் வகையில் அன்பு கசியும் மனத்தின் இனிமை மிக அழுத்திக் கடித்து மென்றிடுதலால், வேத நெறியில் செய்யும் வேள்வியில் இட்டு எரியச் செய்து காட்டும் அவிர்பாகத்தினும் உயர்ந்த வில்லேந்திய திண்ணன் இட்ட ஊன் எனக்கு இனியது.

இவண் வேள்வி செய்து எரியில் இட்டு அவிர்பாகம் என ஆக்குவிக்கும் புனிதத் தீக் கடவுளின் செயல் நாயனார்க்கு உவமை சாற்றப்பெறுதல் ஆயிற்று. இங்ஙனம் திருப்பாட்டு 796 - இல் உரைத்தவாறும் நோக்குக.

வெய்ய கனல் - வெம்மையுடைய நெருப்பு. நையும் மனத்து - கசிந்துருகும் அன்புள்ளம். அவி - வேள்வியில் பெறும் தேவர்களுக்குரிய அவியுணவு. வரிச்சிலையவன் - உயர்ந்த வில்லேந்திய திண்ணனார். 161

811. மன்பெருமா மறை மொழிகள்
மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்ப மொழித் தோத்திரங்கள்
மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்று அவன்றன்
முகம் மலர அகம் நெகிழ
அன்பில் நினைந்து எனையல்லால்
அறிவுறா மொழி நல்ல.

தெளிவுரை: பெருமையுடைய வேத மொழிகள், சிறப்புடைய முனிவர்கள் மகிழ்ந்து சாற்றும் இனிமை மொழியுடைய தோத்திரங்கள், மந்திரங்கள் என்னும் யாவற்றினும், திண்ணன் என்முன்னே நின்று முகம் மலரவும் உள்ளம் அன்பால் கசிந்துருகவும் என்னைத் தவிர வேறு எதனையும் அறிவுறாது உரைக்கப் பெறும் மொழியே நன்மையாகும்.

சிறப்புரை: திண்ணனார் சிந்தனையானது சிவபிரானையல்லாது வேறு எதனையும் பதியாத தன்மை, இவண் 'எனையல்லால் அறிவுறா மொழி நல்ல' என்று ஓதப் பெற்றது. இதுவே மெய்யுணர்தலைப் புலனாக்கும் என்னுமாறு திருவள்ளுவர்,

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" - திருக்குறள் 355

என்று சாற்றியவாறு காண்க.

மற்றும் இத்தன்மையில் மனம், மொழி, மெய் என யாவும் இறைவனுக்கே ஆக்கி வழிபடும் செந்நெறியை மாணிக்கவாசகர், திருவாசகம், திருச்சதகம், திருப்பாட்டு 26 - இல்

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர

வந்துஎனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச் சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே."

என்று அருளியவாறும் கொள்க.

மன்பெரு மா - பெருஞ் சிறப்பின் மிக்க. அவன் - திண்ணனாரைக் குறித்தது. அகம் நெகிழ - மனம் கசிந்துருக. 162

812. "உனக்கு அவன்றன் செயல்காட்ட
நாளை நீ ஒளித்திருந்தால்
எனக்கு அவன்றன் பரிவு இருக்கும்
பரிசெல்லாம் காண்கின்றாய்
மனக்கவலை ஒழிக" என்று
மறைமுனிவர்க்கு அருள் செய்து
புனல் சடிலத் திருமுடியார்
எழுந்தருளிப் போயினார்.

தெளிவுரை: "உனக்குத் திண்ணனின் செயல் திறத்தினை நாளை நான் காட்டுகின்றேன். நீ அங்குச் சற்று மறைவாக ஒளித்திருந்தால் அவன் என்பால் கொண்ட பரிவும் மற்றும் முதலான செயல்கள் யாவையும் காண்பாய். மனத்தில் கவலை கொள்ளாதே." என்று கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபிரான் சிவகோசரியார்க்குச் சாற்றி மறைந்தருளினார்.

சிறப்புரை: சிவகோசரியார் ஆகம வழி நின்று பக்திச் சிரத்தையோடு பூசனை செய்த நிலையில் திண்ணனார் ஆற்றிய பூசனையானது தீது எனக் கொண்டு இறைவனைத் தடுத்து அருளுமாறு திருப்பாட்டு 804 - இல் நவின்றவாறு எம்பிரான் அருள் செய்தார் என்க. இங்குத் திண்ணனார் பூசனை செய்த பாங்கானது "அன்பனார் அறிந்த நெறி" என்று பாடல் 155 - இல் ஓதப் பெறுதல் காண்க.

பரிவு - அன்பு. பரிசு - தன்மை. மறை முனிவர் - சிவகோசரியார். புனல் - கங்கை. சடிலத் திருமுடியார் - சடைமுடியுடைய சிவபிரான். எழுந்தருளிப் போயினார் - திருக்காட்சியை மறைத்துக் கொண்டார். 163

813. கனவுநிலை நீங்கியபின்
விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர்
புலர்வு அளவும் கண் துயிலார்
மனமுறும்அற் புதம் ஆகி
வரும்பயமும் உடனாகித்
துணைபுரவித் தனித்தேர்மேல்
தோன்றுவான் கதிர் தோன்ற;

தெளிவுரை: கனவு நிலை நீங்கியதும், விழித்து எழுந்த தவத்தையுடைய மாமுனிவரான சிவகோசரியார் அவ்விரவு முழுதும் உறங்காது புலர்வது வரையும் விழித்திருந்தார். அவர் மனத்தில் அற்புதமும், அதனால் விளைகின்ற அச்சமும் உடனே எழுந்தது. அப்போது வேகமாகச் செல்லும் குதிரைகளையுடைய ஒப்பற்ற தேரின் மீது தோன்றுபவனாய்ச் சூரியன் உதிக்கலானான்.

சிறப்புரை: இறைவன் கனவின்கண் தோன்றி உரைத்த வேடுவரின் பக்தி மேவும் பூசனையும், அவர்தம் அன்பு வடிவம் ஆகிய திருமேனி வண்ணமும் கேட்டு அற்புதம் அடைந்தமையும், பின்னர் அவ்வேட்டுவ அடியார்க்கு எத்தன்மையான சோதனையை காட்டி அவர்தம் அன்பினை வெளிப்படுத்த உள்ளனரோ என்று கருதிய நிலையில் அச்சமும் எழுந்தது என்க.

சூரியன் ஒற்றைச் சக்கரம் உடைய தேரில் ஏழு குதிரைகளைப் பூட்டி வலம் வருதலை இத்திருப்பாட்டின் ஈற்றடியானது குறித்தது.

கங்குல் - இரவு. புலர்வு - இருள் நீங்குதல். பயம் - அச்சம். துணைபுரவி - நெருங்கி வேகமாகச் செல்லும் குதிரை. கதிர் - சூரியன்.

814. முன்னை நாள் போல் வந்து
திருமுகலிப் புனல் மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான்
அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி
மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப்
பின்பாக ஒளித்திருந்தார்.

தெளிவுரை: முதல் நாள் போன்று சிவகோசரியார் யாவற்றையும் தூய்மை செய்து திருமுகலியாற்றின் நீரில் மூழ்கித் திருக்காளத்தி நாதர் கனவில் அருளிச் செய்ததை எண்ணிப் பல முறையும் நெஞ்சில் நினைந்து, திருக்காளத்தி மலைமீது முன்னர்ப் புரிந்தது போன்று ஆகம விதிப்படி இறைவனைப் பூசித்துப் பின்புறமாக மறைந்திருந்தார்.

தம்பிரான் - திருக்காளத்தி நாதர். பிஞ்ஞகன் - சிவபிரான் திருமுடியின் எழிலைக் குறித்துச் சாற்றும் திருநாமம். *165*

ஆறாம் நாள் காலை திண்ணனார் வேட்டையாடி ஊனமுதும், பூசனைப் பொருளும் கொண்டு வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

815. கருமுகில் என்ன நின்ற
கண்படா வில்லி யார்தாம்
வருமுறை ஆறாம் நாளில்
வரும் இரவு ஒழிந்த காலை
அருமறை முனிவனார் வந்து
அணைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத்
தனிப்பெரு வேட்டையாடி;

தெளிவுரை: கருமையுடைய மேகம் போன்று எழில் விளங்கக் கண் துயிலாது நின்ற வில்லேந்திய திண்ணனார், இவ்வாறு பூசித்து வரும் ஆறாம் நாளின் காலைப் பொழுதில் மறையவரான சிவகோசரியார் வந்து சேர்வதன் முன்னே சென்று, முன்னாளில் செய்த முறையின்படி ஒப்பற்ற பெரு வேட்டையாடினார்.

வேட்டையாடி என்பதனை அடுத்த பாடலோடு கூட்டுக.

வில்லியார் - வில்லேந்திய திண்ணனார். அருமறை முனிவனார் - சிவகோசரியார். *166*

816. மாறில்ஊன் அமுதும் நல்ல
மஞ்சனப் புனலும் சென்னி
ஏறுநாள் மலரும் வெவ்வேறு
இயல்பினில் அமைத்துக் கொண்டு

தேறுவார்க்கு அமுதம் ஆன
செல்வனார் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை
அணுகவந்து அணையா நின்றார்.

தெளிவுரை: இனிய சுவை மாறாத ஊனமுதும், நல்ல திருமஞ்சனமும், புரியும் வகையில் வாய்க் கலசத்தில் தூய நீரும், தலைமுடியில் ஏற்றிச் செருகிய அன்றலர்ந்த மலரும், வெவ்வேறு இயல்பினில் அமைத்துக் கொண்ட திண்ணனார் வஞ்சனையற்ற அன்புடையவராய்த் தெளிந்த சிந்தனையுடைய அன்பர்க்கு அமுதம் போன்றவரான திருக்காளத்தியில் வீற்றிருக்கும் கங்கையைச் சடைமுடியில் தரித்து விளங்கும் செல்வரான ஈசனாரை நாடி வந்தணைந்தார்.

மாறுஇல் ஊன் - வேற்றுச் சுவையில்லாத இனிய ஊன். நல்ல மஞ்சனப் புனல் - திண்ணனாரின் திருவாய்க் கலசத்தில் விளங்கிப் பூசனைக் குரிய புனித நீர். சென்னி ஏறு - தலையில் வைத்து இருத்திய. தேறுவார் - தெளிந்த மெய்யறிவுடையோர். ஆறு - கங்கை. 167

சகுனம் தீமையானது கண்டு திண்ணனார் விரைந்து வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

817. இத்தனை பொழுது தாழ்த்தேன்
எனவிரைந்து ஏகு வார்முன்
மொய்த்த பல் சகுனம் எல்லாம்
முறை முறை தீங்கு செய்ய
"இத்தகு தீய புட்கள்
ஈண்டமுன் உதிரம் காட்டும்
அத்தனுக்கு என்கொல் கெட்டேன்
அடுத்தது என்று" அணையும் போதில்;

தெளிவுரை: "இத்தனை நேரம் காலம் தாழ்த்தினனே!" என்று விரைந்து திண்ணனார் ஏகும் போது, பலவகையான தீய சகுனங்கள் வழியில் தென்பட்டன. உடனே "இவ்வாறான பறவைகள் எதிர்ப்பட்டால் இரத்தப் பெருக்கினை உண்டாக்கும் என்பர்." என்று எண்ணியவராய்த் தன்அன்பராகிய ஈசனார்க்கு என்ன ஆயிற்றோ! அந்தோ! என்று மேலும் அதிர்ந்து நெருங்கிச் சென்றார்.

இவண் தீய சகுனம் பற்றிய பறவை சோதிடத்தை நாயனார் நன்கு அறிந்துள்ளமை சாற்றப்படுவதாயிற்று.

புட்கள் - பறவைகள். ஈண்ட - நெருங்க. அத்தன் - சிவபிரான். அணையும் போதில் என்பதனை அடுத்த செய்யுளுடன் கூட்டுக. 168

818. அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவனார்க்குத்
தின்னனார் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந்து ஓடி வந்தார்.

தெளிவுரை: பெருமை விளங்கும் திருக்காளத்திநாதர் சிவ கோசரியார்க்குத் திண்ணனார் பூண்ட அன்பினைக் காட்டும் வகையில் தம் கண்கள் ஒன்றினில் திடீர் என உதிரம் பாய்ந்து பெருகுமாறு இருந்தார். தூரத்தில் வந்து கொண்டிருந்த வீரம் செறிந்த வில்லேந்திய திண்ணனார் இதனைக் கண்டதும் விரைந்து ஓடிவந்தார்.

அண்ணலார் திருக்காளத்தி அடிகள் - பெருமையுடைய திருக்காளத்தி நாதர். நயனம் - கண். துண்ணென - திடீரென. வெஞ்சிலையார் - வில்லேந்திய திண்ணனார். வல்விரைந்து - மிக விரைவாக. 169

ஈசன் திருக்கண்ணில் உதிரம் பெருகுதலைக் கண்டு உடனே துடைத்துத் தீங்கு செய்தவர் யார் எனத் தேடுதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

819. வந்தவர் குருதி கண்டார்
மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனும்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித்தாமம்
குஞ்சிநின்று அலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

தெளிவுரை: இவ்வாறு வேகமாக ஓடிவந்த திண்ணனார் சிவபிரான் திருக்கண்ணிலிருந்து இரத்தம் பெருகுவதைக் கண்டு மயங்கியவரானார். அவர் திருவாயில் இருந்த நல்ல நீரும் சிந்திடக் கையில் இருந்த ஊனமுதும், வில்லும் சிதறி வீழத் தலையில் கொத்தாக விளங்கிய மலர்களும் தலைமுடியிலிருந்து அலைந்து வீழப் பசுந்தழையை மாலையாக உடைய திண்ணனார் தரையில் பதைத்து வீழ்ந்தார்.

குருதி - இரத்தம்; உதிரம். சிலை - வில். கொந்தரர் - கொத்தாக அலர்ந்த. பள்ளித்தாமம் - மலர்கள். குஞ்சி - தலைமயிர். அலங்கல் - மாலை. 170

820. விழுந்தவர் எழுந்து சென்று
துடைத்தனர் குருதி வீழ்ந்து
ஒழிந்திடக் காணார் செய்வது
அறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்து போய் வீழ்ந்தார் தேறி
யாரிது செய்தார் என்னா
எழுந்தனர் திசைகள் எங்கும்
பார்த்தனர் எடுத்தார் வில்லும்.

தெளிவுரை: கீழே விழுந்த திண்ணனார், விரைந்து எழுந்து சிவபிரான் திருவிழியைத் துடைத்தும், இரத்தம் நிற்காது பெருகுவதைக் கண்டு செய்வதறியாது பெருமூச்சுவிட்டு மீண்டும் மனம் அழிந்து கீழே வீழ்ந்தார். பின்னர்த் தேறியவராய் இச் செயலைச் செய்தவர் யாவர்? என்று வினவி திசைகள் தோறும் நோக்கித் தன் வில்லை எடுத்தார்.

குருதி - இரத்தம். உயிர்த்து - நெடுமூச்சு எறிந்து. அழிந்து - மனம் மயங்கி. 171

821. வாளியும் தெரிந்து கொண்டுஇம்
மலையிடை எனக்கு மாறா
மீளிவெம் மறவர் செய்தார்
உளர்கொலோ விலங்கின் சாதி
ஆளிமுன் னாகி உள்ள
விளைத்தவோ அறியேன் என்று
நீளிருங் குன்றைச் சாரல்
நெடிதிடை நேடிச் சென்றார்.

தெளிவுரை: வில்லேந்திய திண்ணனார் கையில் கூர்மையான அம்பைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு, "இந்த மலையில் எனக்கு மாறுபாடாக வலிமையுடைய கொடிய வேடுவர் செய்தனரோ! விலங்கின் வகையில் சிங்கம் முதலாகச் சொல்லப்படுவன நேர் வந்து இவ்வாறு விளைத்தனவோ! அறியேன்." என்று நெடிய பெரிய குன்றின் சாரல் வரையில் சென்று நீண்ட நேரம் தேடிச் சென்றார்.

இரத்தத்தை உறியும் விலங்குகள் வந்து அறைந்து ஊறு விளைவித்ததோ என்னும் கருத்தில் "ஆளி முன்னாகி உள்ள விளைத்தவோ" என்று நவின்றமையாம்.

வாளி - அம்பு. தெரிந்து - நன்கு ஆராய்ந்து. மாறா - மாறுபட்டு. மீளி - வலிமை. வெம் மறவர் - கொடிய வேடுவர். ஆளி - சிங்கம். நீளிரும் - நீண்ட பெரிய. சாரல் - மலையடிவாரம். நெடிதிடை - நீண்ட நேரம். நேடி- தேடி. 172

822. வேடரைக் காணார் தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியும் காணார் மீண்டும்
நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினார் கண்ணீர் வார.

தெளிவுரை: திண்ணனார் நன்கு தேடியும் வேடர் எவரையும் காணதவராகிக் கொடிய விலங்குகளும் பக்கத்தில் தென்படாத நிலையில் மீண்டும் திருக்காளத்தி நாதரை அடைந்து பெருஞ் சோகத்தோடு அவர்தம் திருப்பாத மலரைப் பற்றி அருகிற் சென்று கட்டித் தழுவிக் கண்ணீர் பெருக்கெடுக்கக் கதறி அழுதார்.

கண்ணீர் வார என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

நாடி - தேடி. நாயனார் - திருக்காளத்திநாதர். மாடு - பக்கம். கட்டி - தழுவி. 173

823. "பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க்கு அடுத்தது என்னோ
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க்கு அடுத்தது என்னோ

மேவினார் பிரிய மாட்டா
விமலனார்க்கு அடுத்தது என்னோ
ஆவதொன்று அறிகிலேன் யான்
என்செய்கேன்" என்று பின்னும்;

தெளிவுரை: பாவியேனாகிய நான் இப்போது காணும் தன்மையில் சிவபிரானுக்கு விளைந்தது யாதோ! உயிரினும் இனிய எங்கள் தலைவர்க்கு விளைந்தது யாதோ! என்னை இனிது மேவிப் பிரியாதவராகிய ஈசர்க்கு விளைந்தது யாதோ! நான் செய்ய வேண்டியது யாது என அறியாதவனானேன்! அந்தோ! என் செய்கேன்!" என்று புலம்பினார்.

பின்னும் என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

சிறப்புரை : சிவபிரான் மீது கொண்ட பெரும் பக்தியும், பேரன்பும், தன்னை மறந்த உணர்வும் திண்ணனார் உள்ளத்தின் வெளிப்பாடாக இவண் உணர்த்தப்பட்டது. உயிரினும் இனியவராக விளங்கும் சிவபிரான் மாண்பினை, "ஆவியின் இனிய எங்கள் அத்தன்" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 5 - ஆம் திருமுறை, திரு இன்னம்பர்த் திருப்பதிகத்தில்,

"என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாயப்புறம் போந்துபுக்கு
என்னு ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே."

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

மற்றும் சிவபிரானை அத்தன் எனச் சாற்றப் பெறுதல் காண்க. இத்தன்மையில் இ.ந்து இறைவன் திருநாமங்களும் ஒன்றென ஓதுக. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய "பித்தா" என்று தொடங்கும் முதல் திருப்பாட்டில்,

"வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா! உனக்கு ஆளாய் இனி
அல்லேன் எனல் ஆமே"

எனவும், மாணிக்கவாசகர் திருவெம்பாவையில்,

"அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்"

எனவும் அருளியவாறு நோக்குக.

ஆவி - உயிர். அத்தன் - தலைவன்; அன்பன்; இறைவன் திருநாமம் என்க. மேவினார் - அன்பர். விமலனார் - சிவபிரான். 174

பெருகும் இரத்தத்தைத் தடுப்பதற்குத் திண்ணனார் முனைந்து செயற்படுதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

824. என் செய்தால் தீரு மோதான்
எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்
மொய்கழல் வேடர் என்றும்
மின் செய்வார் பகழிப் புண்கள்
தீர்க்கும் மெய் மருந்து தேடிப்
பொன் செய்தாழ் வரையில் கொண்டு
வருவன் நான்;; என்று போனார்.

தெளிவுரை: இவ்வாறு புலம்பிக் கலங்கிய திண்ணனார், எத்தகைய செயல் செய்தால் இத்தகைய இரத்தப் பெருக்கு நிற்கும் என்று எண்ணியவராய்த் தீங்கு செய்தவரையும் காணப் பெறாதவராய் நின்று, பின்னர் மொய்த்த வீரக் கழலையுடைய வேடர்களுக்கு மின்னல் போன்று ஒளி வீசும் நீண்ட அம்புகளால் உண்டாகும் புண்களைத் தீர்க்கும் மெய்யில் சாத்தும் மூலிகைகளைப் பொன்னென விளங்கும் மலையடிவாரம் சென்று கொண்டு வருவேன்." என்னும் கருத்தில் சென்றார்.

எம்பிரான் - சிவபிரான். மின் செய் வார் பகழி - மின்னல் போன்று ஒளிரும் நீண்ட அம்பு. மெய்மருந்து - மெய்யில் சாத்தும் பச்சிலை. 175

825. நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறுஎன வெருக்கொண்டு எய்திப்

புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூத நாயகன்பால் வைத்த
மனத்தினும் கடிது வந்து அம்
மருந்துகள் பிசைந்து வார்த்தார்.

தெளிவுரை: மருந்தைக் கொண்டு வரவேண்டும் என்னும் எண்ணம், நெஞ்சில் மேவத் தன் இடத்தைப் பிரிந்து வந்த சிவந்த கண்ணுடைய இடபம் போன்று வெருவி ஒரு பக்கம் அச்சமும் கொள்ள, வனங்கள் எங்கும் எய்தி, உரிய பச்சிலை மூலிகைகளைப் பறித்தார். உயிர்க்கெலாம் தலைவனாகிய திருக்காளத்தி நாதரின் மீது அன்பு கொண்டு மேவும் மனத்தினும் மிக விரைந்து வந்து, மருந்தைப் பிசைந்த திண்ணனார், அப்பெருமான் திருவிழியில் அதன் சாற்றை வார்த்தார்.

சிறப்புரை: இனம் எனப்பட்டது சிவபிரானோடு இருத்தல் என்பதும், அதனைப் பிரிந்த சீவன் திண்ணனார் என்பதும் காண்க. இவர் ஏறு போன்று வேகமாகத் துள்ளிச் சென்று பச்சிலைகளுடன் திரும்பினார் என்பதாம்.

இறைவனைப் பூத நாயகன் எனச் சாற்றப்படுதல் காண்க. இதனை இறைவன் திருநாமமாகவும் கொள்க. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறையில்,

"வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே."

என்று அருளியவாறும் நோக்குக.

இனம் - இவண் சிவபெருமான் என்க. ஏறு - இடபம். புனம் - காடு. பூத நாயகன் - சிவபெருமான் 176

826. மற்றவர் பிசைந்து வார்த்த
மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணில் புண்ணீர்
குறைபடாது இழியக் கண்டும்

இற்றையின் நிலைமைக்கு என்னோ
இனிச் செயல் என்று பார்ப்பார்
உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு
ஊனெனும் உரைமுன் கண்டார்.

தெளிவுரை: மூலிகையைப் பிசைந்து வார்த்தும், திருக்காளத்தி நாதரின் கண்ணில் பெருகும் இரத்தம் குறையாது ஒழுகிக் கசியக் கண்டு, இத்தகு நிலைக்கு இனிச் செய்ய வேண்டியது யாதுளது என்று ஆய்ந்த திண்ணனார், ஊனுக்கு ஊன் இட்டு உற்ற நோயைத் தீர்க்கலாம் என்னும் சொல் முன்னர்க் கேட்டுள்ளதை எண்ணினார்.

மற்றவர் - திண்ணனார். திருக்காளத்திக் கொற்றவர் - திருக்காளத்தி நாதர். புண்ணீர் - இரத்தம். உரை - பழமொழி. 177

827. "இதற்கினி என்கண் அம்பால்
இடந்து அப்பின் எந்தை யார்கண்
அதற்கு இது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும்" என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் **னிருந்து தம்கண்**
முதல்சரம் அடுத்து வாங்கி
முதல்வர்தம் கண்ணில் அப்ப;

தெளிவுரை: இச்செயலுக்கு என் கண்ணை அம்பால் இடந்து அப்பினால், எந்தையான ஈசனார் கண்ணுக்கு இது தகுந்த மருந்தாகி இரத்தம் பெருகுவதும் நிற்கும்." என்று பூரித்து எழும் மகிழ்ச்சி மீதூரத் தம் வலது கண்ணை அம்பு கொண்டு பெயர்த்துத் திருக்காளத்தியப்பர்க்கு வலது கண்ணில் அப்பினார்.

எந்தையார் - சிவபிரான். புண்ணீர் - இரத்தம். மதர்த்து - பூரித்து. தம்கண் முதல் - வலக்கண். முதல்வர் - சிவபிரான். 178.

828. நின்ற செங் குருதி கண்டார்
நிலத்தில் நின்று ஏறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்தும் ஆடி
"நன்று நான் செய்த இந்த
மதி" யென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே
உன்மத்தர் போல மிக்கார்

தெளிவுரை: திண்ணனார் தம் வலக்கண்ணை இடந்து இறைவன் வலக் கண்ணில் அப்பியதும், இரத்தப் பெருக்கு நின்றது. உடனே அவர், பேருவகையடைந்தவராய்த் தரையிலிருந்து துள்ளிக் குதித்தார். குன்றென விளங்கும் தம் தோள்களைத் தட்டிக் கூத்தாடினார். தான் செய்த இச்செயல் மேன்மையுடையது எனப் பெரு நகையும் தோன்ற, பேரானந்தம் கொண்ட உன்மத்தர் போன்று காணப்பட்டார்.

சிறப்புரை: திண்ணனார் தன்னுடைய புலன் உணர்வுகளை நீத்துப் பூரண அன்பு வடிவம் பெற்றவராய்ப் பரமன் பால் யாவுமாய் மேவினார் என்பதாம். இத்தன்மையான அருட்பெரு நிலையை மாணிக்கவாசகர், திருவாசகம், கோயில் திருப்பதிகம், திருப்பாட்டு 10 - இல்

"தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில்கொண்ட எம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே."

என அருளிச் செய்தவாறும் காண்க.

மற்றும் திருஞானசம்பந்தர் 3 - ஆம் திருமறை திருக்காளத்தித் திருப்பதிகத்தில்,

வேய் அனைய தோள்உமையொர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நடம்
ஆடிமலை தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடு செயும்
வேடன் மலர் ஆகு நயனம்
காய்கணையி னால் இடந்து ஈசனடி
கூடுகாளத்தி மலையே."

என்று அருளியவாறும் நோக்குக. தவிரவும் திண்ணனார் கண்ணப்பிய அருட் செயலைத் திருக்காளத்திநாதர் பால் கண்டபாங்கில் 3 - ஆம் திருமுறை, தென்குடித்திட்டைத் திருப்பதிகத்தில் ஏற்றிக்

"கானலைக்கும் அவன் கண்ணிடந்து அப்பநீள்
வானலைக் கும்தவத் தேவுவைத் தான் இடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்துறை
தேனலைக் கும்வயல் தென்குடித்திட்டையே."

என்று அருளியமையும் ஓர்க.

செங்குருதி - இரத்தம். ஏறப்பாய்ந்தார் - நிலத்திலிருந்து மேலே எழும்பித் துள்ளிக் குதித்தார். கொட்டினார் - வெற்றிக் களிப்பால் தோளைத் தட்டுதல். கூத்து - ஆனந்தக்கூத்து மதி - மேன்மையுடைமை. நகை - மகிழ்ச்சியால் தோன்றிய பூரிப்பும்; சிரிப்பும். உன்மத்தர் - சிவானந்த நிலை என்க. 179

சிவபிரான் தன் மற்றொரு கண்ணில் இரத்தம் பெருகச் செய்தலும், திண்ணனார் மற்றொரு கண்ணை இடந்து அப்ப முற்படுதலும்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

829. வலத்திருக் கண்ணில் தம்கண்
அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னும் காட்ட
நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில் செங் குருதி பாயக்
கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து
கொள்கையின் உம்பர் மேலார்.

தெளிவுரை: திண்ணனார் தம் வலக்கண்ணைப் பெயர்த்துத் திருக்காளத்திநாதரின் வலக்கண்ணில் அப்பி இரத்தத்தை நிற்கச் செய்தார். ஈசன் மேலும் தன் அன்பரின் அன்புப் பெருக்கத்தை வெளிக்காட்டும் வகையில் மற்றைக் கண்ணிலும் சிவந்த இரத்தம் அளவில்லாது பெருகுமாறு செய்தார். அதனை வேடர் குலப் பெருந்தவத்தால் தேவர்களின் மேன்மையுடைய பாங்குடையவராய் உலகில் தோன்றிய திண்ணனார் கண்டார்.

வள்ளலார் - திண்ணனார். நாயனார் - திருக்காளத்திநாதர். மற்றைக் கண் - இடது கண் என்க. உலப்பில் - குறைவு படாத. உம்பர் மேலார் - தேவர்களினும் மேன்மையுடைய திண்ணனார். 180

830. கண்டபின் கெட்டேன் எங்கள்
காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டும் மற்று இதனுக்கு அஞ்சேன்
மருந்து கை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்அக் கண்ணை
இடந்துஅப்பி ஒழிப்பேன் என்று;

தெளிவுரை: திண்ணனார், "அந்தோ! எங்கள் காளத்தியார்க்கு ஒரு கண்ணில் புண்ணுண்டாகி அது குணம்பெற்று விளங்க, இப்போது மற்றொரு கண்ணும் இரத்தம் பெருக வழிகின்றதே! இதனைக் கண்டு நான் அஞ்ச மாட்டேன். அதற்குரிய மருந்து என் கைவசம் உள்ளது. எனக்குள்ள மற்றொரு கண்ணை இடந்து ஒழிப்பேன்." என்றார்.

கெட்டேன் - அந்தோ! மற்றைக் கண் - இடது கண். மண்டும் - பெருகும். மருந்து - ஊனுக்கு ஊன் என்பது. ஒரு கண் - திண்ணனாரின் இடது கண். ஒழிப்பேன் - இரத்தக் கசிவை நிறுத்துவேன். என்று என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக. 181

831. கண்ணுதல் கண்ணில் தம்கண்
இடந்து அப்பின் காணும் நேர்பாடு
எண்ணுவார் தம்பி ரான்றன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்.

தெளிவுரை: நெற்றியில் கண்ணுடைய சிவபிரான் இடது கண்ணில் தம் இடது கண்ணை இடந்து அப்பும் போது, தம் இரண்டு கண்ணும் இல்லாத நிலையில் இறைவனுடைய கண்ணுள்ள இடத்தை உணரும் குறிப்பை எண்ணுபவராய்த் திண்ணனார், பரமர்தம் திருக்கண்ணில் தம் இடக் காலை ஊன்றி, உள்ளத்தில் மகிழ்ச்சி மேலுற ஒப்பற்ற ஓர் அம்பு கொண்டு தம் கண்ணை இடந்தெடுக்க முற்படும்போது, தேவ தேவராகிய ஈசன் தரித்திலராய் இரங்கினார்.

கண்ணுதல் - நெற்றியில் கண்ணுடைய சிவபிரான். காணும் நேர்பாடு - தம் கண்ணிழந்த நிலையில் இறைவரின் கண் பகுதியை அறியும் உணர்வைக் காணும் தன்மை. தம்பிரான் - சிவபிரான். பகழி - அம்பு. தரித்திலர் - பொறுத்திலராய் இரங்கினார். தேவதேவர் - இறைவன். *182*

இறைவன் தம் திருக்கரத்தால் திண்ணனார் கையைத் தடுத்துக் "கண்ணப்ப நிற்க" எனச் சாற்றி அருள் புரிதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

832. செங்கண் வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்க மூன்று அடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க என்ற.

தெளிவுரை: சிவந்த கண்ணுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவரும், திண்ணனாரை ஆட்கொண்ட திருக்காளத்தி நாதரும், அற்புதருமான சிவபிரான் திருக்கையானது, அன்பர் தன்னுடைய மற்றொரு கண்ணை இடந்து எடுக்கும் முன்னதாகத் தடுக்கவும், நாகத்தைக் கையில் கங்கணமாகக் கட்டிய அப்பிரான் அமுதத் திருவாக்காகக் "கண்ணப்ப நிற்க" என்று மூன்று முறை சாற்றியருளினார்.

சிறப்புரை: சிவபிரான் திருநாமங்களுள் ஒன்றாக அற்புதர் எனவும் காண்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர் திருவெண்டப் பகுதியில்,

"அற்புதன் காண்க அநேகன் காண்க"

என நவின்றமையும் காண்க.

திண்ணனார் தன் இடக்கண்ணை இடந்து செயற்படு முன்னதாகத் திருக்கையால் பரிசம் செய்து தடுத்தும், திருவாயால் விரைந்து மும்முறை "கண்ணப்ப நிற்க" எனச் சாற்றியதும் ஒரே

சமயத்தில் அமைந்ததென்க. இதன் வழி, திண்ணனார் செயற்படும் வேகத்தையும், இறைவன் திருவருள் பாங்கினையும் உய்த்துணர்க. இத்திருக்காட்சியை நக்கீர தேவநாயனார் அருளிச் செய்த 11 - ஆம் திருமுறை, கண்ணப்பதேவர் திருமறம், வரிகள் 142 - 153 - இல்,

"கண்தனை இடந்து கடவுள்தன் கண்ணுறு
புண்ணில் அப்பியும் காண்பன் என்றொரு கண்ணிடைக்
கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் அப்பலும் குருதி
நிற்பதொத்து உருப்பெறக் கண்டு நெஞ்சு உகந்து
மற்றைக் கண்ணிலும் வடிவக்கணை மடுத்தனன்;

மடுத்தலும்,
நில்லு கண்ணப்ப 'நில்லு கண்ணப்ப' என்
அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப! என்று
இன்னுரை அதனோடும் எழிற்சிவலிங்கம்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அவனவன் தன்கை அம்பொடும் அகப்படப்பிடித்து
அருளினன்."

என்று அருளியவாறும் நோக்குக.

வெள்விடை - வெள்ளை இடபம். விடையின் பாகர்- இடப வாகனம் உடைய ஈசன். அங்கணர் - சிவபிரான். அற்புதர் - ஈசன் திருநாமத்தைக் குறித்தது. அன்பர் - திண்ணனார். மூன்று அடுக்கு - மூன்றுமுறை. நாக கங்கணர் - நாகத்தைக் கையில் கங்கணமாகக் கொண்ட ஈசன். கண்ணப்ப நிற்க; இச்சொல் திண்ணனார்க்குச் சிறப்புடைய "கண்ணப்பர்" என்னும் திருநாமம் பெறுவதற்குக் காரணமாயிற்று என்க. 183

833. கானவர் பெருமா னார்தம்
கண்ணிடந்து அப்பும் போதும்
ஊனமுது உகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலாய் உள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

தெளிவுரை: வேடர் தலைவரான திண்ணனார் கண்ணை இடந்து அப்பும் போது, ஊனமுதை உகந்து ஏற்ற சிவபிரான், அன்பர்தம் இடக் கண்ணை இடந்து அப்புவதற்கு முற்படும்போதும், அவர்தம் திருக்கை முன்னெழுந்து பிடிக்கும் போதும், மறைந்து நின்றிருந்த ஞானமா முனிவரான சிவகோசரியார் நேரில் கண்டார். வேதங்கள் ஒலிக்கப் பிரமன் முதலான தேவர்கள், வானிலிருந்து கற்பக மலர்களை மாரி போன்று பொழிந்தார்கள்.

கானவர் பெருமான் - திண்ணனார். ஐயர் - சிவபிரான். ஞான மாமுனிவர் -சிவகோசரியார். வானவர் - தேவர்கள். வளர்பூ - கற்பக மலர். மறைகள் - வேதங்கள்.

184

834. பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண்டு அஞ்சித் தம் கண்
இடந்து அப்ப உதவும் கையை
ஏறுயர்த் தவர்தம் கையால்
பிடித்துக் கொண்டு "என்வலத்தில்
மாறிலாய் நிற்க" என்று
மன்னுபேர் அருள்புரிந்தார்.

தெளிவுரை: சிவபிரான் திருக்கண்ணில் தோன்றிய புண்ணைக் கண்டு அஞ்சி "ஊனுக்கு ஊன்" என்னும் முறையில் தம் கண்ணை இடந்து அப்புவதற்கு முன்படும் கையை இடபக் கொடியுடைய சிவபிரான், தன் கையால் பிடித்துக் கொண்டு "மாற்றமில்லாத அன்புடையவனே! என் வலப்பக்கத்தில் இருக்க!" என்று திருவருள் புரிந்தார். இதனினும் பெறத்தக்க பேறு வேறு உண்டோ!

கண்ணப்பர் ஆறு நாளில் தவவழிப் பூசனை மேவி இறைவன் திருவருளை அடைந்த பெற்றியினைப் பட்டினத்தார் "தொண்டு செய்து நாள் ஆறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லேன்" என்று சாற்றிய மாண்பினையும் இவண் காண்க.

பிரான் - சிவபிரான். ஊறு - துன்பம். ஏறு உயர்த்தவர் - இடபக் கொடியுடைய ஈசன். மாறிலாய் - அன்பின் மாற்றம் இல்லாத திண்ணனார்.

185

கண்ணப்பரை வாழ்த்திக் குங்குலியக் கலய நாயனார் திருத்தொண்டைக் கூற முற்படுதல்
- இது கவிக் கூற்று

835. மங்குல்வாழ் திருக்கா ளத்தி
மன்னனார் கண்ணில் புண்ணீர்
தங்கணால் மாற்றப் பெற்ற
தலைவர்தாள் தலைமேல் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழும்
கடவூரில் கலய னாராம்
பொங்கிய புகழின் மிக்கார்
திருத்தொண்டு புகலல் உற்றேன்.

தெளிவுரை: மேகம் விளங்கித் தவழும் திருக்காளத்தி மலையின் மீது வீற்றிருக்கும் சிவபிரான் கண்ணில் இரத்தம் பெருக அதனைத் தம் கண் கொண்டு மாற்றிய தலைவரான கண்ணப்பர் திருத்தாளைத் தலைமேல் கொண்டு, கங்கை விளங்கும் சடைமுடியுடைய சிவபிரான் வீற்றிருக்கும் திருக்கடவூரில் மேவும் குங்கிலியக் கலயர் என்னும் புகழின் மிக்க அன்பர் ஆற்றிய திருத்தொண்டினை உரைக்கத் தொடங்கினேன்.

இது கவிக் கூற்று

மங்குல் - மேகம். மன்னனார் - சிவபிரான். புண்ணீர் - இரத்தம். தங்கணால் - தம் கண்ணால். தலைவர் - கண்ணப்ப நாயனார். கலயர் - குங்குலியக் கலய நாயனார். *186*

கண்ணப்ப நாயனார் புராணம் நிறைவுற்றது.

17. குங்குலியக் கலய நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம் :

சோழ நாட்டில் திருக்கடவூரில் மறையவர் குலத்தில் கலயனார் என்னும் அன்பர் வாழ்ந்து வந்தார். இவர் திருக்கோயிலில் குங்குலியத் தூபமிடும் அருந் தொண்டினை ஆற்றி வந்தார். இவ்வாறு செய்து வந்த காலத்தில் வறுமை நிலை எய்தியது. ஆயினும் இத்திருத்தொண்டைத் தவறாது செய்து வந்தார். நாளடைவில்

அவரது செல்வம் யாவும் ஒழிந்து உணவும் கிடைக்காது பசிக் கொடுமையில் தவித்தார். அப்போது நாயனாரின் துணைவியார் தமது திருமாங்கலியத்தைக் கழற்றிக் கொடுத்து உணவு சமைப்பதற்குரிய நெல் வாங்கி வருமாறு தெரிவித்தார்.

நாயனார் அத்தாலியைக் கையில் கொண்டு கடைவீதியில் செல்லும்போது எதிரில் குங்குலியப் பொதியைச் சுமந்து கொண்டு ஒருவன் வந்தான். நாயனார் தான் வைத்திருந்த தாலியைக் கொடுத்துக் குங்குலியத்தை வாங்கிக் கொண்டு விரைந்து சென்று திருக்கோயிலில் சேர்த்துச் சிவபிரான் திருவடியைத் துதித்துக் கொண்டிருந்தார்.

இல்லத்தில் நாயனாரின் மனைவி மக்கள் முதலியோர் பசியால் வாடி வருந்திக் கொண்டிருந்தனர். அக்களைப்பால் உறங்கிவிட்டனர். அடியவர்க்கு எளியவராகித் திருவருள் புரியும் சிவபிரான் நாயனாரின் மனையில் பொற்குவியலும், நெற்குவியலும் நிரம்புமாறு திருவருள் புரிந்து நாயனார் மனைவியாரின் கனவில் தோன்றி உணர்த்தினார். அம்மையார் விழித்தெழுந்து செல்வக் குவியல் இருத்தலைக் கண்டு இறைவன் திருவருளை வியந்து போற்றிக் கணவனார் மகிழுமாறு அமுது சமைக்கலானார்.

திருக்கோயிலில் நாயனார்க்குத் தக்கவாறு அறியும் வண்ணம் "பசியால் வருந்துகின்றாய். வீடு சேர்ந்து உணவு கொள்வாய்" என்று அருளினார். நாயனார் தம் மனையை அடைந்து செல்வம் பெருகியுள்ளதைக் கண்டு வியந்து வினவ, அவர் மனைவியார் "இவை யாவும் இறைவன் திருவருளால் அமையப் பெற்றது." என்றார். நாயனார் இறைவனைப் போற்றி அடியவர்களோடு சேர்ந்து அமுதுண்டு இன்புற்றார். கலயனார் வழக்கம்போலத் திருத்தொண்டு புரிந்து அடியவர்களுக்கு அறுசுவை அமுதளித்து வாழ்ந்து வந்தார்.

திருப்பனந்தாளில் சிவலிங்கத் திருமேனியின் திருவுருவானது சற்றுச் சாய்வு கொண்டிருந்தது. அதனை நேர்படுத்தி வழி பட வேண்டும் என்று எண்ணிய அரசன் தன் சேனையிலுள்ள யானைகளைக் கட்டி அத்திருவுருவை இழுக்கச் செய்தான். ஆயினும் அவன் எண்ணம் நிறைவடையவில்லை. மன்னன் பெருந்துயரில் ஆழ்ந்தான். அவன் மனத் தளர்வைக் கண்ட கலயனார், தன் கழுத்தில்

சிவலிங்கத்திருமேனியில் கட்டியுள்ள கயிற்றைப் பூட்டி இழுத்தார். உடனே சிவலிங்கத் திருமேனி இனிது நேராக நிமிர்ந்து நின்றது. மன்னன் நாயனாரை வணங்கி இறைவனைப் போற்றித் திருப்பணிகள் செய்து தன் பதியை அடைந்தான்.

நாயனார் சிலகாலம் ஆங்குத் தங்கித் திருத்தொண்டு புரிந்து திருக்கடவூர்க்குத் திரும்பினார். ஆங்குத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எழுந்தருளியபோது எதிர்கொண்டு அழைத்துத் திருவமுது செய்வித்தார்.

இவ்வாறு குங்குலியக் கலய நாயனார் நெடுங்காலம் திருத்தொண்டாற்றிச் சிவபிரான் திருவடி நீழலை அடைந்தார்.

திருக்கடவூரின் சிறப்புரைத்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

836. வாய்ந்த நீர் வளத்தால் ஓங்கி
மன்னிய பொன்னி நாட்டின்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும்
எயில்பதி எறிநீர்க் கங்கை
தோய்ந்த நீள்சடையார் பண்டு
தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி
இருப்பது கடவூர் ஆகும்.

தெளிவுரை: தெய்வத்தன்மையால் வாய்க்கப் பெற்ற காவிரியாற்று நீர் வளத்தால் ஓங்கிச் சிறப்புடன் திகழும் சோழ நாட்டில் சீர் பொருந்திய மறையவர்கள் வாழும் பதியாகவும், அலைகள் கொண்ட கங்கையாறு தோயப் பெற்ற நீண்ட சடைமுடியுடைய சிவபிரான் ஒரு காலத்தில் மார்க்கண்டேயர் மீது பாசக் கயிற்றை வீசி உயிரைக் கவரச் சென்ற இயமனை உதைத்து மாய்த்த திருவடியுடைய எம்பிரான் நெடிது இருக்கும் பதியுமாகவும் உள்ளது திருக்கடவூர் ஆகும்.

சிறப்புரை: காவிரியாறு அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்து விநாயகப் பெருமானால் காக்கை வடிவத்தின் வாயிலாகப் பெருகச் செய்து அதன் வளத்தால் சோழநாடு வளம்பெற்றதாதலின் "வாய்ந்த

நீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாடு" எனப்பட்டது. அத்தகைய பதியில், நீர்வளம் பெருகும் கங்கை தங்கிய சடைமுடியுடைய சிவபிரான் வீற்றிருக்கும் ஏற்றத்தைச் சாற்றுதலையும் நோக்குக. மார்க்கண்டேயரைக் காத்த திருத்தலம் காசியெனக் கந்த புராணத்தில் குறிக்கப்பெறுதலையும் ஈண்டு நோக்குக.

வாய்ந்தநீர் - தெய்வத்தன்மையால் வாய்க்கப் பெற்ற காவிரி நீர். பொன்னி நாடு - சோழநாடு. ஏய்ந்த - பொருந்திய. எயில்பதி - மதிலையுடைய ஊர். எறிநீர் - அலை மோதும் நீர். பண்டு - முன்பு ஒரு காலம். தொண்டர் - மார்க்கண்டேயர். கூற்று - இயமன். காய்ந்த - மாய்த்த. நீடு இருப்பது - நெடிது நிலைத்திருப்பது. 1

837. வயலெலாம் விளைசெஞ் சாலி
வரம்பெலாம் வளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை
அணையெலாம் கழுநீர்க் கற்றை
புயலெலாம் கமுகின் காடு அப்
புறமெலாம் அதன் சீர் போற்றல்
செயலெலாம் **தொழில்கள் ஆறே**
செழுந்திருக் கடவூர் என்றும்.

தெளிவுரை: நீர் வளம் மிக்க திருக்கடவூரில், வயல்களில் நன்கு விளையும் செம்மையுடைய சாலி நெல் விளங்கும். வரப்புகளில் சங்குகளும் மற்றும் அவை ஈன்ற முத்துகளும் விளங்கும். வயல்களின் அயற்புறத்தே வேதங்கள் வாயிலாகச் செய்யப்பெறும் நலம் பெருகும் வேள்விச் சாலைகள் விளங்கும். ஆங்குள்ள நீர்நிலைகள் தோறும் வளப்பத்தைப் புலப்படுத்தும் செங்கழுநீர்ப் பூக்கள் மலிந்து விளங்கப் பாக்கு மரங்கள் நன்கு உயர்ந்து மேவி அடர்ந்த காடு போல் நிறைந்து மேகங்களைத் தழுவி விளங்கும். அத்தகு சிறப்பின் மிக்க வளம் பெருகும் திருக்கடவூரில் அதன் பெருமையைச் சிறப்பாகச் சாற்றும் வகையில் அந்தணர்கள் ஆறு தொழில்களைப் புரிபவர்களாய் விளங்கினார்கள்.

சிறப்புரை: வேத நெறியில் ஒழுகி வேள்வி புரிதலால் மழைவளம் பெருகும் என்னும் வழி, மறைவர்கள் பல்வேறு இடங்களில் வேள்விகளைச் செய்து வருபவர்களாக விளங்கினார்கள் என்க. இவண் புற வேள்விகள் ஐந்தென உரைக்கப் படுதலையும் கொள்க. அவை 1. பித்துரு வேள்வி, 2. பிரம்ம வேள்வி, 3. தேவ வேள்வி,

4. மானுட வேள்வி (விருந்தோம்பல்), 5. பூத வேள்வி (காக்கை முதலியவற்றுக்கு உணவிடுதல்) என்பதாம். மற்றும் அக வேள்வியான 1. ஓதல், 2. ஓதுவித்தல், 3. கேட்டல், 4. கேட்பித்தல், 5. சிந்தித்தல் எனவும் காண்க.

இவண் அந்தணர்களின் ஆறு தொழில்களாவது 1. ஓதல், 2. ஓதுவித்தல், 3. வேட்டல், 4. வேட்பித்தல், 5. ஈதல், 6. ஏற்றல் என்பன. இவ்வாறு செய்தல் அப்பதியை வளம்பெருக்கும் என்னும் வகையில் யாவரும் போற்றுமாறு அந்தணர்கள் புரிந்தார்கள் என்க. இவர்கள் சீர் போற்றச் செய்தனர் என்ற நிலையில் ஏனைய மாந்தரும் தத்தம் தொழில்களை மேன்மையுடன் ஆற்றினர். என்பது குறிப்பு.

செஞ்சாலி - நெல் வகை. வரம்பு - வயல் வரப்பு. வளை - சங்கு. முத்தம் - முத்து. அயல் - வயலுக்கு ஒட்டிய ஊர்ப்பக்கம் என்க. இது ஊரில் மேவும் பல இடங்களையும் உணர்த்தியது. கழுநீர்க் கற்றை - செங்கழுநீர்ப் பூக்கள்; செங்குவளை மற்றும் செவ்வாம்பல் என்க. புயல் - மேகம். கமுகு - பாக்கு மரம். காடு - அடர்த்தியைக் குறித்தது. ஆறு தொழில்கள் - அந்தணர்க்குரிய கடமைகள். என்றும் - எல்லாக் காலத்திலும் நிகழ்தலைச் சாற்றுதல். 2

838. குடங்கையின் அகன்ற உண்கண்
கடைசியர் குழுமி ஆடும்
இடம்படு பண்ணை தோறும்
எழுவன மருதம் பாடல்
வடம்புரி முந்நூல் மார்பின்
வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை இடங்கள் தோறும்
எழுவன சாமம் பாடல்

தெளிவுரை: உள்ளங்கையைப் போன்று அகன்ற வட்டவடிவமான மையிடப்பெற்ற கண்களையுடைய உழவர் குலப் பெண்கள் குழுமி ஆடுகின்ற பண்ணைகள் தோறும், மருதப்பண்கள் ஒலிக்க விளங்குவன. நன்கு வடமாக முறுக்கப்பட்ட முப்புரி நூலணிந்த மார்பினையுடைய வைதிகம் தோய்ந்த மறையவர்கள் விளங்கும் இடந்தோறும் சடங்கு முறைப்படி வேள்விகளைச் செய்ய சாமவேத ஒலி எழுவன. இவ்வாறு திருக்கடவூர் திறப்புடன் திகழ்வதாயிற்று.

சிறப்புரை: செந்தாமரையனைய கண்கள் சிறப்புடைமை என்பதும், அது உள்ளங்கை போன்று அகன்று விளங்கக் கூடியது என்பதும்

இவண் சாற்றப்படும் முதலடியின் கருத்தாயிற்று. பண்ணைகளில் மகளிர் குழுமி மருதப் பண்ணிசைத்து ஆடுகின்ற வழி ஆங்குப் பண்ணைகளில் ஆடவர்கள் உடன் பணியாற்றுதலும், ஆடிப்பாடுதலும் குறிப்பால் உணர்த்துதலாயிற்று.

குடங்கை - உள்ளங்கை. உண்கண் - மை தடவப் பெற்ற கண். கடைசியர் - உழவர் குலப் பெண்கள். பண்ணை - பயிர்கள் விளங்கும் இடம். வடம்புரி - முறுக்கப்பெற்ற. சடங்கு - வேள்விச் சடங்கு. சாமம் - நான்கு வேதங்களுள் ஒன்று. 3

839. துங்கநீள் மருப்பின் மேதி
படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து **வாசக்**
கமலமும் தீம்பால் நாறும்
மங்குல் தோய் மாடச் சாலை
மருங்கிறை ஒதுங்கும் மஞ்சும்
அங்கவை **பொழிந்த நீரும்**
ஆகுதிப் புகைப்பால் நாறும்.

தெளிவுரை: பெருமையுடைய நீண்ட கொம்புகளையுடைய எருமைகள் நீர் நிலைகளில் படிந்து பால் சொரிய, ஆங்கு வாழும் கயல் மீன்கள் பாய்ந்து துள்ளிக் குதிப்பதால் நறுமணம் கொண்ட தாமரை மலர்களும் இனிய பால் மணம் வீசும். ஓங்கி உயர்ந்த மாட மாளிகைகளில் தவழும் மேகங்களில் ஆங்கு நடைபெறும் வேள்வியால் எழுந்த புகை கலந்து மேவ, பொழிந்த மழை நீரும் வேள்விப் புகையின் நறுமணம் கமழும்.

சிறப்புரை: இவண் பால் வளமும் வேள்வியின் வளமும் இனிது போற்றப்படுவதாயிற்று. எருமைகள் நீரில் படிந்து மகிழ்ந்திருக்க ஆங்கு வாழும் கயல்கள் எருமைகளின் மடியில் முட்ட அவை கன்று எனக் கருதி பால் சொரிதலும், அம்மீன்கள் துள்ளிப் பாயும் தருணத்தில் பால் கலந்த நீரும் தாமரைகளில் படிந்து பால்மணத்தைப் பரப்பச் செய்தன என்பதாம். மற்றும் வேள்வி செய்தலால் எழுந்த புகை மேகத்திற் கலந்து அத்தகைய இனிய மணம் கமழும் தன்மையில் மழை நீரும் விளங்கின என்னுமாறு சாற்றிய சிறப்பின் வழிக் கம்ப ராமாயணம், பால காண்டம், நாட்டுப் படலம் 41 - இல்,

"அகில் இடும்புகை அட்டில் இடும்புகை
நகலின் ஆலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முயங்கின எங்கணும்."

என்று புகன்றவாறும் காண்க.

இத்திருப்பாடலில் தீம்பால் என்பது இன்சுவையுடைய பால் என்னும் பொருளிலும், புகைப்பால் என்பது புகையெழும் தன்மையால் என்னும் பொருளிலும் வந்து மடக்கு என்னும் சொல்லணி கொண்டு விளங்குதலைக் காண்க. இத்தன்மையில் பல இடங்களிலும் இவ்வாறு சாற்றப்படுதலையும் கண்டு மகிழ்க.

துங்கம் - பெருமை. மருப்பு - கொம்பு. மேதி - எருமை. செங்கயல் - மீன்வகை. வாசக் கமலம் - நறுமணம் உடைய தாமரை. தீம்பால் - இனிய சுவையுடைய பால். நாறும் - நன்மணம் பெறும். மங்குல் - ஆகாயம். இறை - சிறிது பொழுது; உடனே மழையாகப் பொழிதலால் சிறிது எனப்படுவதாயிற்று. ஒதுங்குதல் - தங்கி நிலவும். மஞ்சு - மேகம். ஆகுதி - வேள்வி. புகைப்பால் - புகைத்தலால். 4

கலயர் என்னும் திருத்தொண்டரை உரைத்தல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

840. மருவிய திருவின் மிக்க
வளம்பதி யதனில் வாழ்வார்
அருமறை **முந்நூல் மார்பின்**
அந்தணர் கலயர் என்பார்
பெருநதி அணியும் வேணிப்
பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த
சிந்தையார் ஒழுக்கம் மிக்கார்.

தெளிவுரை: செல்வ வளமை கொழிக்கும் அத்தகைய திருத்தலத்தில் வாழ்பவராய், வேத நெறியின்படி ஒழுகும் சீலராய், முப்புரி நூலணிந்த அந்தணர் குலத்தில் கலயர் என்னும் திருநாமம் கொண்டவர் விளங்கினார். அவர் சிறந்த ஒழுக்கம் உடையவராய்க் கங்கையைச் சடைமுடியில் அணிந்த சிவபிரான் திருப்பாதத்தைப் போற்றி நாள் தோறும் உருகும் அன்பினில் பக்தி மிக்கவராய்த் திகழ்ந்தார்.

திரு - செல்வம், வளம்பதி - திருக்கடவூர். பெருநதி - கங்கை. வேணிப்பிரான் - சடைமுடியுடைய சிவபிரான். 5

841. பாலனாம் மறையோன் பற்றப்
பயம்கெடுத்து அருளும் ஆற்றால்
மாலும்நான் முகனும் காணா
வடிவுகொண்டு எதிரே வந்து
காலனார் உயிர்செற் றார்க்குக்
கமழ்ந்தகுங் குலியத் தூபம்
சாலவே நிறைந்து விம்ம
இடும்பணி தலைநின் றுள்ளார்.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரிய பொருளாக விளங்கிய சிவபிரான், இளமை திகழும் அந்தணரான மார்க்கண்டேயர் பற்றித் தொழ அச்சத்தை நீக்கி, எதிர் வந்து காட்சியளித்துக் கூற்றுவனின் உயிரை மாய்த்தவர். அப்பரமர்க்கு நறுமணம் கமழும் குங்குலியப் புகையைத் தூபம் காட்டி மகிழ்ந்து அப்பணியில் தலை நின்று ஒழுகுபவராய்க் கலய நாயனார் விளங்கினார்.

பாலனாம் மறையோன் - மார்க்கண்டேய முனிவர். பயம் - அச்சம். காலனார் உயிர் - காலன் உயிர் நீங்கற்கு அரியதாதலால் ஆருயிர் எனப்பட்டது. செற்றார் - மாய்ந்த சிவபிரான். கமழ்ந்த - நறுமணம் கமழக்கூடிய. குங்குலியம் - சாம்பிராணி. விம்ம - பரவ. 6

842. **கங்கைநீர் கலிக்கும் சென்னிக்**
கண்ணுதல் எம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம்
பொலிவுறப் போற்றிச் செல்ல
அங்கவர் அருளினாலே
வறுமை வந்து அடைந்த பின்னும்
தங்கள் நாயகர்க்குத் தாம்முன்
செய்பணி தவாமை உய்த்தார்.

தெளிவுரை: கங்கைநீர் ஆரவாரிக்க மேவும் திருமுடியும், நெற்றியில் கண்ணுமுடைய சிவபெருமானுக்கு மேன்மேலும் விளங்கும் குங்குலியத் தூபத்தைச் சிறப்போடு காட்டிப் போற்றி, நாயனார் விளங்குகையில், சிவபிரான் திருவருளை நல்கும் பாங்கில் வறுமையடையலானார். ஆயினும் கலயர் தமது திருத்தொண்டினைத் தவறாது ஆற்றி வந்தார்.

சிறப்புரை: திருத்தொண்டு செய்பவரின் உறுதிப்பாட்டினை உலகுக்கு உணர்த்தும் வகையில் ஈசன் செய்யும் சோதனையாக வறுமை வந்து அடைதலால் இவண், "அருளினால் வறுமை வந்து அடைந்தது." எனச் சாற்றப்பட்டது.

கலிக்கும் - ஆரவாரம் செய்யும். சென்னி - தலை முடி. கண்ணுதல் - நெற்றியில் கண்ணுடைய சிவபிரான். எம்பிரான் - சிவபிரான். பொலிவு - சிறப்பு. அவர் - சிவபிரானைக் குறித்தது. நாயகர் - சிவபிரான்; திருக்கடவூரில் உள்ள திருத்தலத்தில் விளங்கும் அமிர்தகடேஸ்வரர்; இத்தலம் மூவர் பாடல் பெற்றது. தவாமை - தவறாத தன்மை. 7

நாயனாரின் வறுமை நிலையுரைத்தல்

843. இந்நெறி ஒழுகும் நாளில்
இலம்பாடு நீடு செல்ல
நன்னிலம் முற்றும் விற்றும்
நாடிய அடிமை விற்றும்
பன்னெடும் தனங்கள் மாளப்
பயில்மனை வாழ்க்கை தன்னில்
மன்னிய சுற்றத் தோடு
மக்களும் வருந்தினார்கள்.

தெளிவுரை: இவ்வாறு கலய நாயனார் திருத்தொண்டாற்றி ஒழுகிவரும் காலத்தில், வறுமை என்னும் துன்பம் பெரிதும் உண்டாக நன்கு மேவும் விளை நிலத்தை விற்றும், அடிமைத் திறம் மேவிய ஊழியர்களை நீக்கியும், மற்றும் நவமணிகள் முதலான செல்வங்கள் யாவும் நீக்கவும், இல்வாழ்வில் மனைவி, மக்கள் சுற்றம் ஆகியோர் சூழப் பெருந்துன்பத்தில் வாடினார்.

இலம்பாடு - வறுமை. நீடு செல்ல - பெரிதும் இருக்க. நன்னிலம் - நன்கு விளையும் வளம் மிக்க நில புலன்கள். முற்றும் - முழுமையும். அடிமை - ஏவலாட்கள், ஊழியம் செய்வோர் முதலானோர். தனங்கள் - செல்வங்கள். மாள - குறைந்து இன்மையாக. 8

துணைவியார் நெல் வாங்கிவருமாறு தன் தாலியை எடுத்துத் தர நாயனார் குங்குலியம் வாங்கிக் கொண்டு திருக்கோயிலை நண்ணுதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

844. யாதொன்றும் இல்லையாகி
இருபகல் உணவு மாறிப்
பேதுறு மைந்தரோடும்
பெருகு சுற்றத்தை நோக்கிக்
காதல் செய் மனைவி யார்தம்
கணவனார் கலயனார் கைக்
கோதில்மங் கலநூல் தாலி
கொடுத்து நெல் கொள்ளும் என்றார்.

தெளிவுரை: மனையில் எத்தகைய பொருளும் இல்லாத வறுமை நிலையில், இரண்டு வேளைக்குரிய பகலுணவும் குறைவுபட்டு மைந்தரும், சுற்றத்தினரும் வாடுகின்றதை நோக்கிய நாயனாரின் அன்பு மனைவியார், திரு மங்கல நூலில் அணிந்துள்ள தாலியைக் கழற்றித் தன் கணவரிடம் கொடுத்து உணவு சமைத்தற்குரிய நெல் வாங்கி வருமாறு வேண்டினார்.

பேதுறு - பசித்து நைந்து வாடுகின்ற. கொள்ளும் - பெற்று வருக. 9

845. அப்பொழுது அதனைக் கொண்டு
நெல்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியம் கொண்டு ஓர்
வணிகனும் எதிர்வந் துற்றான்
இப்பொதி என்கொல் என்றார்க்கு
உள்ளவாறு இயம்பக் கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர்
முகம் மலர்ந்து இதனைச் சொன்னார்.

தெளிவுரை: தன்னுடைய மனைவியார் கொடுத்த மங்கலத் தாலியைப் பெற்றுக் கொண்ட நாயனார் நெல்லை வாங்கிவரும் பொருட்டுப் போகும்போது, ஒப்பில்லாத மேன்மையோடு விளங்கும் குங்குலியத்தைச் சுமந்து கொண்டு வணிகன் ஒருவன் எதிரே வந்தான். இப்பொதி யாது என நாயனார் வினவ வணிகனும் தன்னிடம் விற்பனைக்கிருந்த பொருளைத் தெரிவிக்க அவர் முகம் மலர உரைக்கலானார்.

முப்புரிவெண்ணூல் மார்பர் - முப்புரி நூலணிந்த மார்பினையுடைய கலய நாயனார். 10

846. **"ஆறுசெஞ் சடைமேல் வைத்த**
அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம், ஈதேல்
நான் இன்று பெற்றேன் நல்ல
பேறு மற்று இதன்மேல் உண்டோ
பெறாப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வதென்" என்று
உரைத்தெழும் விரும்பின் மிக்கார்.

தெளிவுரை: "கங்கையைச் சடைமுடியின் மீது தரித்த சிவபிரான் பூசித்தற்கான நறுமணம் கமழும் குங்குலியம் இதுவேயாகில் நான் நற்பேற்றினை இன்று பெற்றவனாவேன். இதனினும் நற்பேற்றுக்குரியது வேறு எதுவும் இல்லை. பெறுதற்கரிய யாது உள்ளது!" என்று மகிழ்ந்து உரைத்து அதனைக் கொள்வதற்குப் பெரும் விருப்பம் உடையவரானார்.

சிறப்புரை: ஆகம விதிப்படிச் செய்யும் பதினாறு வகையான உபசாரங்களுள் முதலாவதாக உரைக்கப்படுவது தூபம் காட்டுதல் என்பதனைத் தவத்திரு சிதம்பரநாதமுனிவர் அருளிய நடராச சதகம், பாடல் எண் 60, 63 ஆகியவற்றில் சாற்றியவாறும் காண்க. இதனைக் குங்குலியத் தூபம் எனவும் இதற்கு அதி தேவர் அக்கினி எனவும் இவ்வுபசாரம் செய்யும் கால அளவு 15 மாத்திரை எனவும், இதன் பயன் பாவம் நீங்கும் எனவும் அறிக.

ஆறு - கங்கை, அங்கணர் - சிவபிரான், நல்ல பேறு - புண்ணியப் பேறு. 11

847. "பொன்தரத் தாரும்: என்று
புகன்றிட வணிகன் தானும்
"என்தர இசைந்தது" என்னத்
தாலியைக் கலயர் ஈந்தார்
அன்று அவன் அதனை வாங்கி
அப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார்
நிறைந்தெழு களிப்பி னோடும்.

தெளிவுரை: நாயனார் விருப்பத்தோடு குங்குலியத்தைப் பெறும்தன்மையில், "யான் பொன் தர குங்குலியத்தைத் தருக" என்று புகல வணிகனும், எத்தன்மையான பொன்னைத் தர இசைந்தது." என்று வினவினான். நாயனார் உடனே தன்னிடமிருந்த தாலியைக் கொடுக்க வணிகனும் அதைப் பெற்றுக் கொண்டு குங்குலியப் பொதியைக் கொடுத்தான். உடனே அவர் பேருவகையுடையவராகி விரைந்து திருக்கோயிலை நோக்கிச் செல்லலானார்.

பொதி - குங்குலிய மூட்டை

12

848. விடையவர் வீரட்டானம்
விரைந்து சென்று எய்தி என்னை
உடையவர் நம்மை ஆளும்
ஒருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற ஒடுக்கி எல்லாம்
அயர்த்தெழும் அன்பு பொங்கச்
சடையவர் மலாத்தாள் போற்றி
இருந்தனர் தமக்கு ஒப்பு இல்லார்.

தெளிவுரை: தமக்கு இணையாக ஒப்புமை கூறற்கு அரிய நாயனார், சிவபிரான் எழுந்தருளியுள்ள வீரட்டானத்தை விரைந்து சென்றடைந்து என்னை அடிமையாக உடையவரும் நம் அனைவரையும் ஆட்கொள்பவருமான ஒப்பற்ற ஈசன் பண்டகசாலையில் சேர்ப்பித்துத் தாம் கொண்டுள்ள பசியும் தம் மனையில் உள்ளவர்களின் வறுமைத் துன்பம் முதலானவற்றையும் மறந்து சிவபிரான் திருப்பாத மலரையே சிந்தித்துப் போற்றித் துதித்தவராய் இருந்தார்.

சிறப்புரை: சிவபிரான் தம் வீரத்தை வெளிப்படுத்திய எட்டுத் திருத்தலங்களுள் திருக்கடவூர் வீரட்டம் ஒன்றெனக் காண்க. இதனைத் தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 88 - இல் நவின்ற குறிப்பின் படியும் காண்க.

இத்திருப்பாட்டில் சேக்கிழார் சுவாமிகள் திருக்கடவூர் வீரட்டத்தில் வீற்றிருக்கும் அமிர்த கடேசப் பெருமானைத் தன்னை உடையவர் எனவும், திருத்தொண்டராக மேவும் அடியவர்களை ஆளும் ஒப்பற்றவர் எனவும் கவிக் கூற்றாகச் சாற்றியமை நோக்குக. தவிரவும் தாம் கொண்ட பசித்துயரும் தம் மனையில் உள்ளவர்களின் துன்ப நிலையையும் பெரிதாகக் கருதாது ஈசர்க்குப் புரியும் திருத் தொண்டின் மேன்மையையே எண்ணத்தில் மேவ விளங்கிய நாயனார், ஈடு இணையற்றவராயினார் என்பதாம்.

விடையவர் - .இடப வாகனத்தையுடைய சிவபிரான். என்னை - இவண் சேக்கிழார் சுவாமிகளைக் குறிக்கும் கவிக்கூற்று. நம்மை - இது கவிக்கூற்றாகி அடியவர் பெருமக்களைச் சுட்டுதலாயிற்று. ஒருவர் - ஒப்பற்றவராகிய சிவபிரான்; இதனை "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்னும் மாணிக்கவாசகரின் திருவாக்கின்படி இறைவன் திருப்பெயராகவும் கொள்க. அடைவுற ஒடுக்கி - சேர்த்து. அயர்த்து - வறுமை முதலான துன்பங்களை மறந்து. ஒப்பு இல்லார் - நாயனாரைக் குறித்தது. 13

இறைவன் பெருஞ்செல்வம் வழங்கி நாயனார்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் உணர்த்துதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

849. அன்பர் அங்கு இருப்ப நம்பர்
அருளினால் அளகை வேற்தன்
தன்பெரு நிதியம் தூர்த்துத்
தரணிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும்
பொருவில் பல்வளனும் பொங்க
மன்பெரும் செல்வம் ஆக்கி
வைத்தனன் மனையில் நீட

தெளிவுரை: நாயனார் திருக்கோயிலில் இருந்த நிலையில் சிவபிரான் திருவருளால் அளகாபுரியின் வேந்தனான குபேரன் தன்னிடமுள்ள பெருஞ்செல்வத்தை நிலவுலகில் பெருகச் செய்பவனாய்க் கலயனார் திருமனையின் கண் பொற்குவியலும், நெற்குவியலும் மற்றும் உண்டான ஒப்பற்ற பொருட் செல்வமும் மேவத் திகழும் வளமை பொங்க வைத்தனன்.

அன்பர் - நாயனார். நம்பர் - சிவபிரான். அளகை வேந்தன் - அளகாபுரியின் வேந்தனான குபேரன்; இவனைச் சிவபிரான் தோழராக உரைத்தல் புராண மரபு. நிதியம் - செல்வம். தூர்த்து - நிறையச் செய்து. பொரு இல் பல்வளன் - ஒப்பற்ற பல்வகையான வளம். நீட - பெருக. 14

850. மற்றுஅவர் மனைவி யாரும்
மக்களும் பசியால் வாடி
அற்றைநாள் இரவு தன்னில்
அயர்வுறத் துயிலும் போதில்

நற்றவக் கொடிய னார்க்குக்
கனவிடை நாதன் நல்கத்
தெற்றென உணர்ந்து செல்வம்
கண்டபின் சிந்தை செய்வார்.

தெளிவுரை: நாயனார் திருக்கடவூர் வீரட்டானத்தில் விளங்க அவருடைய மனைவியாரும், மைந்தர் மற்றும் சுற்றத்தினரும் அன்று இரவு அயர்வுற்றுத் துயின்றார்கள். அப்போது நற்றவம் மிக்கவரான கொடி போன்ற இடையுடைய நாயனார் மனைவியாரின் கனவில் சிவபிரான் திருக்காட்சி நல்கி அருள் புரிய, அவர் விரைந்து துயிலெழுந்து இனிது உணர்ந்து மிகு செல்வம் ஆங்கு மலிந்து இருக்கக் கண்டார்.

சிறப்புரை: சிவனடியாரைக் கணவராகப் பெற்றவராதலின் நற்றவம் உடையவர் எனச் சாற்றியமை ஓர்க. நங்கையொருத்தி செய்யும் தவப் பேற்றால் நல்ல அன்பரைக் கணவராக அடையும் சிறப்பு இவண் ஓதப் பெற்றது. இத்தன்மையில் உமையம்மை, தக்கன் மகளாகத் தோன்றித் தாட்சாயணி என்னும் திருப்பெயரில் தவம் புரிந்து சிவபிரானைச் சார்ந்தமையும், பார்வதி தேவியாய் அவதரித்துத் தவம் புரிந்து சிவபிரானைச் சார்ந்தமையும், பார்வதி தேவியாய் அவதரித்துத் தவம் புரிந்து ஈசனைச் சார்ந்தமையும் காண்க. மாணிக்கவாசகர் திருவெம்பாவை வாயிலாக,

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க"

எனவும்,

"உன்னைப் பிரானாக பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே"

பாங்காவோம்

"அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்."

எனவும் அருளிச் செய்தமை காண்க.

அவர் - நாயனாரைக் குறித்தது. அயர்வு - தளர்ச்சி. நற்றவம் - சிவனடியார் ஒருவரைக் கணவராக அடைதற்கு உரிய புண்ணியப் பேறு. கொடியனார் - கொடி போன்ற மெல்லிய இடையுடைய மாது; தவப்பயன் கொடியென உயர்ந்து நிலவும் புண்ணியப் பேறு எனவும் காண்க. தெற்றென - விரைவாக எழுந்து தெளிவுற்று. 15

851. கொம்பனார் இல்லம் எங்கும்
குறைவிலா நிறைவில் காணும்
அம்பொனின் குவையும் நெல்லும்
அரிசியும் முதலாய் உள்ள
எம்பிரான் அருளாம் என்றே
இருகரம் குவித்துப் போற்றித்
தம்பெரும் கணவ னார்க்குத்
திருவமுது சமைக்கச் சார்ந்தார்.

தெளிவுரை: இல்லம் முழுமையும் குறைவில்லாத பொற்குவியலும், நெற்குவியலும், அரிசியும் மற்றும் உள்ள செல்வம் மிக்க மணிகள் முதலானவற்றையும் கண்ட நாயனார் மனைவியார், இவ்வாறு அமையப்பெற்றது சிவபிரான் திருவருளே என்று எண்ணி இருகரம் குவித்துப் போற்றித் தன் பெருமைமிக்க கணவனார்க்குத் திருவமுது சமைக்கலானார்.

கொம்பனார் - நாயனாரின் துணைவியார். அம்பொனின்குவை - பொற்குவியல். எம்பிரான் - சிவபிரான். 16

852. **காலனைக் காய்ந்த செய்ய**
காலனார் கலய னாராம்
ஆலும் அன்பு உடைய சிந்தை
அடியவர் அறியும் ஆற்றால்
"சால நீ பசித்தாய் உன்றன்
தடநெடு மனையில் நண்ணிப்
பாலின் இன்னடிசில் உண்டு
பருவரல் ஒழிக" என்றார்.

தெளிவுரை: கூற்றுவனை உதைத்து மாய்த்த சிவந்த பாதங்களையுடைய கால காலனாக விளங்கும் சிவபிரான், தம் பால் நெகிழ்ந்த அன்புடையவரான கலய நாயனார் தக்கவாறு அறியும் வகையில் "நீ மிகவும் களைத்தனை. உன் மனைக்குச் சென்று பாலினும் சுவையுடைய இனிய உணவு உண்டு, பசித் துன்பத்தை விடுக. என்றார்.

சிறப்புரை: சிவபிரான் காலனுக்குக் காலனாக விளங்கும் சிறப்பு இவண் முதலடியின் வாயிலாக உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 7 ஆம் திருமுறை திருக்கச்சி ஏகம்பத் திருப்பதிகத்தில்,

"ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே"

என்று அருளியவாறும் நோக்குக.

இவண் நாயனார்க்குப் பாலின் இன்னடிசில் உண்ணுமாறு உரைத்தமையின் சிறப்பானது, சிவனடியார்கள் சத்துவ குணத்தின் பால் அமையப் பெறும் உணவைக் கொள்ளும் தன்மையுடையவர்களாவார்கள் என்னும் புனிதத்தைச் சாற்றுதலாம்.

காலனார் - காலகாலனாகிய சிவபிரான். ஆலும் அன்பு - மனம் கசிந்த பேரன்பு. சிந்தை அடியவர் - கிரியையால் மட்டுமல்லாது சிந்தையிலும் அன்புடையவராய் விளங்கும் பாங்கினைச் சாற்றுதலாம். தட நெடு மனை - பெரிய மாளிகை. இன்னடிசில் - இனிய உணவு. பருவரல் - பசித் துன்பம். *18*

இறைவன் ஆணைப்படி மனையை அடைந்து பெருமகிழ்வு கொண்டு ஈசனை ஏத்துதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

853. கலயனார் அதனைக் கேளாக்
கைதொழுது இறைஞ்சிக் கங்கை
அலைபுனல் சென்னி யார்தம்
அருள் மறுத்து இருக்க அஞ்சித்
தலைமிசைப் பணிமேல் கொண்டு
சங்கரன் கோயில் நின்று
மலை நிகர் மாட வீதி
மருங்குதம் மனையைச் சார்ந்தார்.

தெளிவுரை: சிவபிரான் திருவாக்கைச் செவிமடுத்த கலய நாயனார் கைதொழுது ஏத்திக் கங்கையைச் சடைமுடியில் தரித்த ஈசனார் ஆணையை மறுத்தற்கு அஞ்சி, அக் கட்டளையைத் தலைமேற் கொண்டவராகித் திருக்கோயிலினின்றும் மலை போன்று

உயர்ந்து மேவும் மாட வீதியின் பக்கம் உள்ள தமது மனையை அடைந்தார்.

கங்கை அலைபுனல் - அலைகள் மோதும் கங்கை. புனல் - நீர். சங்கரன் கோயில் - வீரட்டானம்; திருக்கோயில். மலை - உயர்ந்து விளங்குதலைக் குறிப்பது. மருங்கு - பக்கம். 18

854. இல்லத்தில் சென்று புக்கார்
இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று
திருமனை யாரை நோக்கி
"வில்லொத்த நுதலாய் இந்த
விளைவெலாம் என்கொல்" என்ன
"அல்லொத்த கண்டன் எம்மான்
அருள்தர வந்தது" என்றார்.

தெளிவுரை: நாயனார் தம் இல்லத்தினைச் சென்றடைந்ததும் செல்வக் குவியல்கள் நிறைந்து விளங்குதலைக் கண்டு அதிசயித்து நின்று, மனைவியாரை நோக்கி, "வில்போன்ற நெற்றியுடையாய்! இவ்வாறு செல்வம் பெருகி விளையுமாறு நிகழ்ந்து விளங்குவது எவ்வாறு ஆயிற்று?" என்று வினவ, திரு மனைவியாரும் "நீலகண்டத்தையுடைய சிவபிரான் திருவருளால் யாவும் நிகழ்ந்தது." என்றார்.

புக்கார் - இல்லத்தைஅடைந்தார். இருநிதி - பெருஞ் செல்வம். வில் - நாயனார் மனைவியார் நெற்றிச் சிறப்பினைச் சாற்றியது; இது கற்பின் திண்மையைக் குறித்தலும் ஆம். விளைவு - நிகழ்வு. அல் - இருள். அல்லொத்த கண்டன் - நீல கண்டத்தையுடைய சிவபிரான். 19

855. மின்னிடை மடவார் கூற
மிக்கசீர்க் கலய னார்தாம்
மன்னிய பெருஞ்செல் வத்து
வளம்மலி சிறப்பை நோக்கி
"என்னையும் ஆளும் தன்மைத்து
எந்தை எம்பெருமான் ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம்
என்று" கை தலைமேல் கொண்டார்.

தெளிவுரை: மின்னல் போன்று மெலிந்த இடையுடைய துணைவியார் கூறக் கேட்ட கலய நாயனார், சிறப்பின் மிக்க பெருஞ்செல்வம்

வளமை மேவ இருக்கும் பெருமை கண்டு, "என்னையும் ஆள்கின்ற தன்மையில் எந்தை பிரானாகிய ஈசன் அருள் புரிந்த வண்ணம் தான் என்னே!" என்று ஏத்திப் போற்றும் வகையில் தம் இரு கைகளையும் தலைக்கு மேல் குவித்துத் திரியங்க வணக்கம் செய்தார்.

மடவார் - நாயனார் துணைவியார். கை தலை மேல் கொள்ளல் - தலைக்கு மேலே கைகளை உயர்த்தி வணங்கும் முறை; இது திரையங்க வணக்கம் என்க. 20

நாயனார், அடியார் சூழத் திருவமுது செய்தல்

856. பதுமநல் திருவின் மிக்கார்
பரிகலம் திருத்திக் கொண்டு
கதும் எனக் கணவ னாரைக்
கண்ணுதற்கு அன்ப ரோடும்
விதிமுறை தீபம் ஏந்தி
மேவும் இன்னடிசில் ஊட்ட
அது நுகர்ந்து இன்பம் ஆர்ந்தார்
அருமறைக் கலய னார் தாம்.

தெளிவுரை: தாமரை மலரில் மேவும் திருமகளினும் மேம்பட்டவரான துணைவியார் உண்பதற்குரிய கலத்தை விரைந்து கொண்டு வந்து வைத்துக் கணவரைச் சிவனடியாரோடும் அமரச் செய்து விதிமுறையின்படி தீபம் ஏந்தி இனிய உணவை அளிக்கலானார். அருமையுடைய வேதம் வல்ல கலயனார் அத்தகைய இனிய உணவை உண்டு மகிழ்வுற்றார்.

மகேஸ்வர பூசை நிகழ்த்தி உணவு பரிமாற்றம் செய்த செயலானது "விதி முறை தீபம் ஏந்தி மேலும் இன்னடிசில் ஊட்ட" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையினை இனிது சாற்ற மகேஸ்வர பூசை நடத்தி அடியவர்களை உபசரிக்கும் பெருநிலை உடையவராதலின் "திருவின் மிக்கார்" என்று நாயனார் மனைவியாரைச் சிறப்பித்துக் கூறப்பட்டது.

பதுமம் - செந்தாமரை. திரு - திருமகள். திருவின் மிக்கார் - நாயனார் துணைவியார். 21

கலயனாரின் இனிய ஒழுகலாறு உரைத்தல்

857. ஊர்தோறும் பலிகொண்டு உய்க்கும்
ஒருவனது அருளி னாலே
பாரினில் ஆர்ந்த செல்வம்
உடையராம் பண்பில் நீடிச்
சீருடை அடிசில் நல்ல
செழுங்கறி தயிர்நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர
அடியவர்க்கு உதவும் நாளில்;

தெளிவுரை: ஊர்தோறும் திரிந்து கபாலமாகிய திரு வோட்டினைக் கையில் கொண்டு பலியேற்ற ஒப்பற்ற சிவபிரான் திருவருளால் உலகில் பெருஞ்செல்வம் உடையவராய்ப் பண்பில் மிக்கவராய்ச் சிறப்புடைய சோறு, பால், தயிர், நெய், செழுமையான காய்கறிகள் எனக் கொண்டு அன்பின் மிக்க நாயனார் அடியவர் பெருமக்களோடு கூடி அருந்தி ஒழுகலானார்.

உதவும் நாளில் என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

சிறப்புரை: சிவபிரான் ஊர்தோறும் சென்று திருவோடு ஏந்திப் பலியேற்ற திருவிளையாடல் இவண் முதலடியில் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருஞானசம்பந்தர் முதல் திருமுறையில்

"முற்றல் ஆமை இளநாகமோடு ஏனம்
முளைக்கொம்பு அவை பூண்டு
வற்றல்ஓடு கலனாப் பலி தேர்ந்து எனது
உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார்கழல்
கையால் தொழுது ஏத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுர மேவிய
பெம்மான் இவன் அன்றே."

என அருளிச் செய்தமையும் காண்க.

பலி - பிரமன் ஆணவம் மேலிட்ட நிலையில் அவன் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கொய்த அளவில் அது பலிகலனாகிய நிலையில் பிச்சையேந்திப் பிட்சாடனர் திருக்கோலத்தில் திருவிளையாடல் நிகழ்த்திய வரலாறு சாற்றப்படுதலாம். ஒருவன் - சிவபிரான். அடிசில் - உணவு. காதல் கூர - அன்பு கொண்டு விளங்க; பக்தி நிலை என்க.

திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி வளைவு பெற்றிருக்க அரசன் துயர் கொண்டிருத்தல்

858. செங்கண்வெள் ளேற்றின் பாகன்
திருப்பனந் தாளில் மேவும்
அங்கணன் செம்மை கண்டு
கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழம் எல்லாம்
பூட்டவும் நேர் நில்லாமைக்
கங்குலும் பகலும் தீராக்
கவலையுற்று அழுங்கிச் செல்ல;

தெளிவுரை: சிவந்த கண்ணுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவராகிய சிவபிரான் திருப்பனந்தாள் என்னும் திருக்கோயிலில் தன் சிவலிங்கத் திருமேனியை வளைத்து நின்றார். அந்நாட்டு அரசன் அதனை நேராக விளங்கச் செய்யும் வகையில் யானைகளைப் பூட்டி இழுத்தும் நேர் நிலையில் அமையாத நிலையில் பெருந் துயர் அடைந்தான். இதனால் அவன் கவலையுற்றுப் பகலும் இரவும் வருந்தியவனானான்.

செல்ல என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

சிறப்புரை: திருப்பனந்தாள் என்னும் சிவத்தலம் காவிரி வடகரைத் தலத்தில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள ஈசன் திருப்பெயர் செஞ்சடையப்பர், தாலவனேஸ்வரர், அருணஜடேஸ்வரர், ஜடாதரர் என்பன அம்பிகையின் திருப்பெயர் பிருகந் நாயகி, பெரிய நாயகியாகும். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. தாடகை என்னும் பெண் மாலை சாத்துவதற்குத் திருமேனியை வளைந்து காட்டியதால் வளைவு கொண்டது. இக்கோயிலுக்குத் தாடகேச்சுரம் என்பது பெயர். வளைவு கொண்டுள்ள சிவலிங்கத் திருமேனியைக் குங்குலியக் கலய நாயனார் நிமிர்த்தியருளினார். இவர் திருமனைவியார் பெயர் "நீலாயி" எனக் கல்வெட்டு மூலம் அறியப் பெறுகிறது.

வெள்ளேறு - வெள்ளை இடபம். வெள்ளேற்றின் பாகன் - வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவர்; சிவபிரான். அங்கணன் - சிவபிரான். வேழம் - யானை. கங்குல் - இரவு. அழுங்கி - வருந்தி.

நாயனார் இறைவனைத் தரிசிக்கத் திருப்பனந்தாள் வருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

859. மன்னவன் வருத்தம் கேட்டு
மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தாம்
நாதனை நேரே காணும்
அந்நெறி தலைநின் றான்என்று
அரசனை விரும்பித் தாமும்
மின்னெறித்து அனைய வேணி
விகிர்தனை வணங்க வந்தார்.

தெளிவுரை: அரசன் வருத்தமடைந்த நிலையை ஏனையோர் சொல்லக் கேட்டுக் குற்றமில்லாத புகழ் கொண்டு மேவும் கலயனார், மின்னல் போன்று ஒளிரும் சடைமுடியுடைய சிவபிரானாகிய தலைவனை நேரே காணத் தலைப்பட்டார் அத்தன்மையான சிவநெறியில் விளங்கும் அரசனையும் காணும் விருப்பம் கொண்டவராய் நாயனார் இருந்தார்.

சிறப்புரை: உலகில் தோன்றும் உயிர்கள் நன்னெறியில் நிற்கவும் அதன்வழிக் குற்றமில்லாத புகழில் தோய வேண்டும் என்னும் பாங்கும் சிறப்புடைமையாகும் என்பதனைச் சாற்றும் வகையில் "மாசறு புகழின் மிக்க நன்னெறிக் கலயனார்" எனப்பட்டது. துணி வெளுக்கப் பயன்படும் உழமண் போன்று, அழுக்குடைய உடலை நல்கி வினையால் பற்றப்படும் ஆன்மாவானது தன் மாசினைக் களைந்து பிறவாமை என்னும் புகழ் மிகும் பேற்றினை அடைந்த சீலர் கலய நாயனார் என்பது இவண் உள்ளுறையாகச் சொல்லப்படுவதாயிற்று. இத்தகைய நன்னெறியில் அரசனும் தலை நின்றான் என்பதனை அறிந்து நாயனார் விரும்பிக் காண வந்தார் என்க.

மாசறு - குற்றம் இல்லாத; பிறவியாகிய குற்றத்தினைப் போக்கும் புகழ்த்தன்மையுடைய. மின்னெறித்து - மின்னல் போன்று ஒளிரும். வேணி விகிர்தன் - சடைமுடியுடைய சிவபிரான். விகிர்தன் - உலகியலினின்று வேறுபட்டவன். 24

860. மழுவுடைச் செய்ய கையர்
கோயில்கள் மருங்கு சென்று
தொழுது போந்து அன்பி னோடும்
தொல்மறை நெறிவ ழாமை

முழுதுல கினையும் போற்ற
மூன்றெரி புரப்போர் வாழும்
செழுமலர்ச் சோலை வேலித்
திருப்பனந் தாளில் சேர்ந்தார்.

தெளிவுரை: திருக்கடவூரிலிருந்து புறப்பட்டுச் செல்லும் போது பக்கத்தில் உள்ள சிவாலயங்கள் பலவும் சார்ந்து மழுப்படையேந்திய சிவந்த கையுடைய சிவபிரானைத் தொழுது போற்றினார். பின்பு அன்பின் மேம்பட்டவராகவும், வேத நெறியைத் தவறாது கடைப்பிடித்து ஒழுகுபவராகவும், மூன்று வகையான எரியை ஓம்புபவராகவும் விளங்கும் அந்தணர் வாழ்கின்ற, செழுமையான மலர்ச் சோலைகளை வேலியாகக் கொண்ட திருப்பனந்தாளை அடைந்தார்.

மழு - சிவபிரான் வலக்கையில் ஏந்திய படை. செய்ய கையர் - சிவந்த கையுடையவர். மூன்று எரி புரப்போர் - ஆகவனீயம், காருக பத்தியம், தட்சிணாக்கினி என்று மூன்று வகையான நெருப்பினை வளர்த்து உலகம் புரக்கும் அந்தணர்களைக் குறித்தது. 25

கலயநாயனார் தம் கழுத்தில் வடத்தைப் பூட்டிச் சிவலிங்க மூர்த்தியை நேர் செய்தல்

- இது முதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர்

861. காதலால் அரசன் உற்ற
வருத்தமும் களிற்றி னோடும்
தீதிலாச் சேனை செய்யும்
திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே எய்த்து
வீழ்ந்து இளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும்
மனத்தினில் வருத்தம் எய்தி;

தெளிவுரை: சிவபிரான்பால் உற்ற பேரன்பு காரணமாக அரசன் வருத்தம் கொண்டமையும், யானை முதலான தீது இலாத சேனையும் செய்யும் திருப்பணி முழுமையடையாது புவியில் தளர்ந்து வீழ்ந்து இளைத்துச் சோர்வு அடைதலையும் கண்டு பெருந்தவத்தையுடைய கலயனார் மனங்கலங்கினார்.

எய்தி என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

சிறப்புரை: அரசன் மேற்கொண்டுள்ள செயல் திருக்கோயில் பணியாதலால் திருப்பணி எனச் சாற்றப்பட்டது. மற்றும் போர்ப் படைகள் பகைவரை அழிக்கும் தன்மையில் மேவாது, திருக்கோயிலின் திருப்பணியில் ஈடுபட்டதால் "தீதிலாச் சேனை" என்று நவிலப்பட்டது. இது தீதுக்குரிய வினையை இல்லாமையாக்கிப் பிறவாமை கொள்ளும் தன்மையுடையது எனவும் கொள்க.

காதல் - பேரன்பு; பக்தி. தீதிலாச் சேனை - பிறவித் துன்பத்தை நீக்கும் சேனை. நேர்படாமை - நிறைவு அடையாமை. மேதினி - பூமி. 26

862. சேனையும் ஆனை பூண்ட
திரளும் எய்த்து ஏழாமை நோக்கி
யானும் இவ் இளைப்புற்று எய்க்கும்
இதுபெற வேண்டும் என்று
தேனலர் கொன்றை யார்தம்
திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு
கழுத்தினால் வருந்தல் உற்றார்.

தெளிவுரை: "சேனையும், யானைகளும் கொண்ட படையெலாம் திரண்டு பணி செய்து மெலிகின்ற நிலையிலும் மேல் எழாது நிற்கும் சிவலிங்கத் திருமேனியில் யானும் இத் திருப்பணியில் ஈடுபட்டு இளைப்புற்று இருத்தல் வேண்டும்" என்று கருதியவராய்த் தேன் துளிர்க்கும் கொன்றை மலர் தரித்த சிவபிரான் திருமேனியில் பூக்களால் பொருந்திய வலிமையான கயிற்றினைத் தம் கழுத்தினிற் பூட்டி வருத்திக் கொண்டு கலயனார் இழுக்கலானார்.

இவண், இத்தகைய திருப்பணியில் ஈடுபட்டுப் புண்ணியப் பேற்றினை அடைதல் வேண்டுமென நாயனார் முனைந்தார் என்பதாம்.

எய்த்து - தளர்ந்து. எழாமை - சிவலிங்கத் திருமேனி நேர் பெறாமை. கொன்றையார் - கொன்றை மாலை தரித்த சிவபிரான். பூங்கச்சு ஏய்ந்த - பூக்களால் நெருங்கிப் பொருந்தக் கட்டப்பட்ட. மான வன் கயிறு - பெரிய வலிமையான கயிறு. 27

863. நண்ணிய ஒருமை அன்பின்
நார்உறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி
இளைத்தபின் திறம்பி நிற்க

ஒண்ணுமோ **கலய னார்தம்**
ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார்
அமரரும் விசும்பில் ஆர்த்தார்.

தெளிவுரை: அன்பு என்னும் நார் கொண்டு மேவும் அருமையுடைய கயிற்றால் பூட்டப்பட்டு விளங்கும் உறுதிமிக்க திருத்தொண்டர் இளைப்புற்ற நிலையில் முன்போலவே சாய்ந்து இருப்பதற்கு இறைவன் திருவுள்ளம் இசையுமோ! கலயனார்தம் உள்ளத்தில் தோன்றிய ஒருமை அன்பினைக் கண்ட போதே சிவபிரான் நேராக நின்றார். தேவர்கள் எல்லோரும் விண்ணிலிருந்து ஆரவாரம் செய்தார்கள்.

அன்பின் நார் - அன்பாகிய கயிறு. திண்ணிய தொண்டர் - உறுதி மிக்க தொண்டராகிய கலயர். திறம்பி நிற்க - மாறுபட்டு நிற்க. ஒண்ணுமோ - இசையுமோ. அண்ணலார் - சிவபிரான். அமரர் - தேவர். விசும்பு விண்; ஆகாயம். 28

வேந்தன் நாயனார் திருக்கழல் பணிந்து
திருக்கோயில் திருப்பணி செய்து நீங்குதல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

864. பார்மிசை நெருங்க எங்கும்
பரப்பினர் பயில் பூ மாரி
தேர்மலி தானை மன்னன்
சேனையும் களிறும் எல்லாம்
கார்பெறு கானம் போலக்
களித்தன கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் தொண்டர்
மலரடி தலைமேல் வைத்து;

தெளிவுரை: விண்ணிலிருந்து தேவர்கள் பூமியின் பரப்பு முழுமையும் நன்கு நெருங்க மேவுமாறு பூமாரி பொழிந்தார்கள். தேர்கள் மிகுந்த மன்னனுடைய சேனைகளும், யானைகளும் மழை கொண்ட காடு போன்று தழைத்து மகிழ, வீரக்கழல் அணிந்த வேந்தன் தன் கைகளைக் கூப்பித் திருத்தொண்டரான கலய நாயனார் பாதத்தில் தன் தலையைச் சூடுமாறு வைத்து ஏத்தினான்.

பார் - பூமி; தரை. களிறு - யானை. கார் - மழை. தொண்டர் - கலய நாயனார். வைத்து - இதனை அடுத்த பாடலிலும் அதற்கு அடுத்த பாடலிலும் தொடர்பு படுத்துக. 29

865. "விண்பயில் புரங்கள் வேவ
வைதிகத் தேரில் மேருத்
திண்சிலை குனிய நின்றார்
செந்நிலை காணச் செய்தீர்
மண் பகிர்ந்தவனும் காணா
மலரடி இரண்டும் யாரே
பண்புடை அடியர் அல்லால்
பரிந்து நேர் காண வல்லார்!"

தெளிவுரை: "வானில் உலவுகின்ற முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கும் பொருட்டு வேதமாகிய தேரில் எழுந்தருளி, மேரு மலையை உறுதி மிக்க வில்லாக வளைத்து நின்ற சிவபிரான் சிவலிங்கத் திருமேனியை நேராக நிற்கச் செய்தீர். பூமியைக் குடைந்து சென்று காணுதற்கு முனைந்த திருமாலும் காணாத சிவபிரான் மலரடிகளைத் தேவரீரைப் போன்ற அடியவர்களே யல்லாது அன்புடன் மேவி நேரே காண்பதற்கு யாரால் இயலும்!" என்று வணங்கி மொழிந்தான்.

விண்பயில் - ஆகாயத்தில் உலவுகின்ற. புரங்கள் - பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான மூன்று அசுரர்களின் கோட்டைகள். மேரு - மேரு மலை. சிலை - வில். குனிய - வளைய. செந்நிலை - நேரே நின்று நிலவுமாறு உள்ள சிவலிங்கத் திருமேனியின் தோற்றம். மண் பகிர்ந்தவன் - திருமால். அடியர் - சிவனடியார்கள்; இவண் கலய நாயனாரைக் குறித்தது. பரிந்து - அன்பு கொண்டு விளங்கி. வல்லார் - இதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 30

866. என்றுமெய்த் தொண்டர் தம்மை
ஏத்தி அங்கு எம்பி ரானுக்கு
ஒன்றிய பணிகள் மற்றும்
உள்ளன பலவும் செய்து
நின்ற வெண் கவியை மன்னன்
நீங்கவும் நிகரில் அன்பர்
மன்றிடை ஆடல் செய்யும்
மலர்க்கழல் வாழ்த்தி வைகி;

தெளிவுரை: வெண்கொற்றக் குடையுடையவனாகிய அரசன், மெய்த் தொண்டரான கலயரை ஏத்திப் போற்றிச் சிவபிரானுக்குரிய மற்ற

பணிகளையும் மேற்கொண்டு திருப்பணிகள் செய்து, அங்கிருந்து தன் தலைநகரை அடைந்தான். ஒப்புவமையில்லாத அன்பான கலயர் தில்லையம்பலத்தில் திருநடனம் புரியும் நடராசப் பெருமான் திருக்கழலை வாழ்த்திச் சிலகாலம் வசித்தார்.

மெய்த்தொண்டர் - கலய நாயனார். எம்பிரான் - சிவபிரான். ஒன்றிய பணிகள் - பொருந்திய திருப்பணிகள். வெண்கவிகை - வெண் கொற்றக்குடை. மன்று - தில்லையம்பலம். மலர்க்கழல் - நடராசப் பெருமான் மலர்ப்பாதம். வைகி - சிலநாள் இருந்து;
இதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 31

திருக்கடவூர் சார ஆங்கு எழுந்தருளிய திருஞான சம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் ஆகியோர்க்கு நாயனார் திருவமுது அளித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

867. சிலபகல் கழிந்த பின்பு
திருக்கட வூரில் நண்ணி
நிலவுதம் பணியில் தங்கி
நிகழும்நாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாரும்
தாண்டகச் சதுரர் ஆகும்
அலர்புகழ் அரசும்கூட
அங்கெழுந் தருளக் கேட்டு;

தெளிவுரை: சில நாள் சென்ற பின்பு நாயனார் திருக்கடவூரைச் சார்ந்து, தாம் எப்போதும் ஆற்றுகின்ற குங்குலியப் புகை காட்டும் பணியை நாள்தோறும் ஆற்றி வந்தார். அங்கு நிகரில்லாதவரான சீகாழித் திருத்தலத்தில் திரு அவதாரம் செய்த ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தரும், தாண்டக வேந்தரான பெரும் புகழ் உடைய திருநாவுக்கரசரும் எழுந்தருளிய செய்தியைக் கேட்டார்.

கேட்டு என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

சிலபகல் - சிலநாள். தம்பணி - குங்குலியப் புகை காட்டி இறைவனுக்கு ஆற்றும் உபசாரப் பணி. காழி - சீகாழி. பிள்ளையார் - திருஞானசம்பந்தர். தாண்டகச் சதுரர் - செய்யுள் வகையில் தாண்டக வகை சாற்றும் மேன்மையுடையவர். தாண்டகம் - இருபத்தாறின் மிக்க எழுத்தால் அடி கொண்டு வரும் பாடல் வகை. 32

868. மாறிலா மகிழ்ச்சி பொங்க
எதிர் கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க்கு
இன்னமுது ஏற்கும் ஆற்றால்
ஆறுநற் சுவைகள் ஓங்க
சமைத்து அவர் அருளே யன்றி
நாறு பூங் கொன்றை வேணி
நம்பர்தம் அருளும் பெற்றார்.

தெளிவுரை: இணையில்லாத மகிழ்ச்சி மீதூர அப்பெரியார்களை எதிர்கொண்டு சென்று அழைத்துத் தம் மனையை அடைந்து, பேரன்புடடைய அவர்களுக்கு ஏற்றவாறு இனிய அமுதினை ஆறு சுவைகள் விளங்குமாறு சமைத்துப் பரிமாறி அன்னாரின் திருவருளேயன்றி, நறு மணம் கமழும் கொன்றை மாலையைச் சடைமுடியில் தரித்த சிவபிரான் திருவருளையும் பெற்றார்.

சிறப்புரை: சிவனடியார்களுக்குச் செய்விக்கும் மகேஸ்வர பூசையும், அதன் சிறப்பினையும் இத்திருக்காட்டில் மூன்று மற்றும் நான்காவது அடிகளால் சாற்றப்பெறுதலாம். இத்தன்மையில் திருப்பாட்டு 856 இல் சுட்டியவாறும் காண்க.

மாறிலா மகிழ்ச்சி - இணையற்ற மகிழ்ச்சி. ஈறிலா அன்பு - எல்லையற்ற அன்பு; பேரன்பு. ஆறு நல்சுவை - அறுசுவை உணவு. நாறு - நறுமணம் கமழும். வேணி - சடைமுடி. நம்பர் - சிவபிரான். 33

நீடு தொண்டாற்றிய நாயனார் சிவபதம் அடைதல்

869. கருப்புவில் லோனைக் கூற்றைக்
காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல்
மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை
உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவும் செய்து
சிவபத நிழலில் சேர்ந்தார்.

தெளிவுரை: கரும்பு வில்லேந்திய மன்மதனையும், கூற்றுவனையும் மாய்த்த சிவபிரான் வீற்றிருக்கும் திருக்கடவூரில் விளங்கி, விருப்பம் மேலோங்க அன்பின் பெருக்கமும் சூழ மனம் ஒன்றிய நிலையில்

தமக்கு என்று பணியை வரித்துக் கொண்டவராகிய கலயனார், நெடுங்காலம் திருப்பணிகள் பலவும் செய்து சிவபதமாகிய இனிய நிழலில் சேர்ந்தார்.

சிறப்புரை: நாயனார் பொருந்தி ஆற்றிய திருப்பணிகளாகக் குங்குலியத் தூபம் காட்டுதலும், அடியவர்களுக்கு அமுது செய்வித்தலும் முதலிய திருத்தொண்டுகள் என்க. திருத்தலம் பரவுதலும் கொள்க. சிவபத நீழல் என்பதனை இணையடி நிழல் என்னும் வழி, திருநாவுக்கரசர், 5ஆம் திருமுறையில்,

> "மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே."

என அருளிச் செய்தவாறும் கொள்க.

கரும்பு வில்லோன் - கரும்பு வில்லேந்திய மன்மதன். கூற்று - இயமன். திருப்பணி - திருத்தொண்டு. சிவபதம் - சிவபிரான் திருவடி நிழல். 34

குங்குலியக் கலய நாயனாரைப் பணிந்து மானக் காஞ்சாறர் திருமேவும் புகழைப் போற்றத் தொடங்குதல் - இது கவிக் கூற்று

870. தேனக்க கோதை மாதர்
திருநெடுந் தாலி மாறிக்
கூனல் தண் பிறையி னார்க்குக்
குங்குலி யம் கொண் டுய்த்த
பான்மைத்திண் கலய னாரைப்
பணிந்து அவர் அருளினாலே
மானக்கஞ் சாறர் மிக்க
வண்புகழ் வழுத்தல் உற்றேன்.

தெளிவுரை: தேன் துளிர்க்கும் பூமாலை சூடிய துணைவியார் தம் மங்கல நாணிலிருந்து தாலியைக் கழற்றித் தர அதனை மாற்றிப் பிறைச்சந்திரனைச் சூடிய சிவபிரானுக்குக் குங்குலியம் வாங்கித் திருக்கோயிலில் சேர்த்த பாங்குடைய கலயனாரைப் பணிந்து போற்றி, அவர் திருவருளினால் மானக்கஞ்சாறர் என்னும் திருத்தொண்டரின் வளமை பெறும் புகழை வாழ்த்தல் உற்றேன். இது கவிக் கூற்று.

தேனக்க கோதை - தேன் துளிர்க்கும் மலர். மாதர் - நாயனாரின் துணைவியார். கூனல் தண் பிறை - பிறைச் சந்திரன் 35

குங்குலியக் கலய நாயனார் புராணம் நிறைவுற்றது.

18. மானக்கஞ்சாற நாயனார் புராணம்

புராண வரலாறு :

கஞ்சாறூரில் வேளாளர் குலத்தில் மானக்கஞ்சாற நாயனார் தோன்றினார். இவர் சேனைத் தலைவராக விளங்கித் தம் பொருள் யாவும் சிவனடியார்களுக்கே உரிமையுடையவையாய் யாவும் வழங்கித் திருத்தொண்டாற்றி வந்தார். இறைவன் திருவருளால் இவர்க்குப் பெண் மகவு பிறந்தது. இவரை ஏயர்கோன் கலிக்காம நாயனார்க்குத் திருமண நாள் குறிப்பிட்ட அன்று, சிவபிரான் மாவிரத கோலம் தாங்கி மானக்கஞ்சாறர் மனைக்குள் நுழைந்தார். நாயனார் வந்நவரை மகிழ்ந்தேத்தி வணங்கி இங்கு நடைபெறவுள்ள மங்கல நிகழ்ச்சி யாதென வினவினார். மானக்கஞ்சாறர் தம் மகளின் திருமணச் செய்தியைக் கூறினார். மாவிரதியார் "உமக்கு மங்கலம் உண்டாகுக." என்று வாழ்த்தினார்.

உடனே மானக்கஞ்சாறர் தம் புதல்வியை அழைத்து அடியவரை வணங்கச் செய்ய அவர், இந்நங்கையின் கூந்தல் தமக்கு மார்பில் அணியப் பெறும் பூணூல் அணிக்கு உதவும் என்றார். உடனே கஞ்சாறர் தம் மகளின் கூந்தலை அறுத்து மாவிரதியாரிடம் நீட்டினார். அடியவர் கோலத்தில் வந்த சிவபிரான் அக்கூந்தலை வாங்குவார் போல் நின்று மறைந்தருளி உமாதேவியுடன் இடப வாகனத்தில் காட்சி தந்தார். பின்பு "இவ்வுலகின்கண் நின் அன்பின் திறத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாறு செய்தோம்." என அருளிச் செய்தார்.

அப்போது திருமணத்திற்கு வந்தவர்கள் மகிழ்ந்து போற்ற, உள் நுழைந்த ஏயர்கோன் கலிக்காமர் இச்செய்தியறிந்து "இப்பேற்றைத் தாம் காணும் பேறு அமையவில்லையே என்று வருந்தி நின்றார். அப்போது "உமக்குத் திருவருள் செய்வோம்." என்று ஈசன் அருளிய திருவாக்கு உண்டாக மகிழ்ந்தார்.

சிவபிரான் திருவருளால் உடனே கூந்தல் இனிது விளங்கப் பெற்றுக் கஞ்சாறார் திருமகள் கலிக்காமர், திருமணம் கொண்டு தம்முடைய ஊரை அடைந்தார்.

மானக்கஞ்சாறர் திருப்புதல்வியரைப் பற்றிய யெ்தி ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் சாற்றப் பெறுதலையும் காண்க.

மானம் - பெருமை. கஞ்சாறு - ஊர்ப்பெயர். கஞ்சாறர் - நாயனார் திருப்பெயர். 36

கஞ்சாறூர் நாட்டு வளம் உரைத்தல்

- இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர்

கொச்சகக் கலி

871. மேலாறு செஞ்சடைமேல்
வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன் குணர்வார்
தாம் பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக்
கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயல் கரும்பின்
கமழ்சாறூர் கஞ்சாறூர்.

தெளிவுரை: மேலான கங்கை தரித்த செஞ்சடையுடைய சிவபிரான் விரும்பியதும், மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்த மேலோரால் பாடப் பெறும் தெய்வத் தன்மை பொருந்தியதும், கொம்புத்தேன் ஆறாகப் பொழிய வளமான பழச்சாறும் கலந்து வாய்க்காலில் பெருக, வயல்களிலுள்ள கரும்பின் சாறும் கமழ விளங்குவதுமான கஞ்சாறூர் என்பதாகும்.

சிறப்புரை: ஊரின் வளமையானது நீர் வளமும், நெல் வளமும் மட்டுமல்லாது மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோர் பெருமக்கள் கூடி வாழ்கின்ற பாங்கும் சிறப்புடன் விளங்க வேண்டும் என்னும் வகையில், "நூலாறு நன்குணர்வார் தாம் பாடும் நோன்மையது" எனச் சாற்றப்படுதலைக் காண்க. இத்தன்மையில் புறநானூற்றில் பிசிராந்தையார் என்னும் புலவர் பாடல் 191 இல்,

"..... வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆற்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே!"

என உரைத்தமையும் காண்க.

மேலாறு - மேன்மையுடைய கங்கை. மேல் என்பதனைப் புனிதம் என்னும் பொருள் கொண்டும் காண்க. செஞ்சடை மேல் வைத்தவர் - சிவபிரான். நூலாறு - மெய்ந்நூல் வழி. நோன்மை - தெய்வத் தன்மை; வலிமையுமாம். கோலாறு தேன் - கொம்புத் தேன்; மரக்கிளை வழியாகப் பொழிதலும் ஆம். காலாறு - வாய்க்கால் வழி. 1

872. கண்ணீலக் கடைசியர்கள்
கடுங்களையில் பிழைத் தொதுங்கி
உண்ணீர்மைப் புணர்ச்சிக்கண்
உறைத்து மலர்க் கண் சிவக்கும்
தண்ணீர்மென் கழுநீர்க்குத்
தடஞ்சாலி தலைவணங்கும்
மண்ணீர்மை நலம் சிறந்த
வளவயல்கள் உள அயல்கள்.

தெளிவுரை: நீலோற்பல மலர் போன்ற கண்களையுடைய உழவர் பெண்கள் வயல்களில் இறங்கிக் களை பறிக்க, அதில் தப்பியொதுங்கி ஒரு பக்கம் சார, நீர் உள்ளே புகுந்ததால் செழித்து மேவிப் பொலியும் தண்ணீர்ப் பூவான சிவந்த செங்கழுநீர்ப் பூக்களுக்கு வளமான சாலி நெற்கதிர்கள் தலை வணங்கும். இத்தகைய மண் வளம் சிறந்த வளமான வயல்கள் எல்லா இடங்களிலும் விளங்கும்.

சிறப்புரை: நீலோற்பலம் போன்ற கண்களையுடைய உழவர் பெண்களின் எழிலும், நீர் வளம் பொலிய விளங்கும் செங்கழு நீர்ப் பூக்களும், சாலி நெற்களின் வளமையும் இப்பாடல் வாயிலாக இனிது சாற்றப்பட்டது.

இப்பாடலில் வயல்கள் என்னும் சொல் மடக்கு எனப்படும் சொல்லணியாக வழங்கப் பெறுதலைக் காண்க.

நீலம் - நீலோற்பலமலர்; கருங்குவளை. கடைசியர்கள் - உழவர் குலப் பெண்கள். களை - நெற்பயிரையன்றிப் புல் முதலானவற்றைக் களையும் செய்கை. பிழைத்து ஒதுங்கி - களையிலிருந்து தப்பிய செங்கழுநீர்ப் பூக்கள். நீர்மைப் புணர்ச்சி - நீர் மிகுதியாகச் சேர்தல். மண்ணீர்மை - மண்ணின் வளம். அயல்கள் - பக்கங்களில் விளங்குதல். 3

873. புயல்காட்டும் கூந்தல் சிறு
புறம் காட்டப் புனமயிலின்
இயல்காட்டி இடை ஒதுங்க
இனம் காட்டும் உழத்தியர் கண்
முயல்காட்டும் மதி தோற்கும்
முகங்காட்டக் கண்மூரிக்
கயல் காட்டும் தடங்கள் பல
கதிர் காட்டும் தடம் பணைகள்.

தெளிவுரை: ஆங்கு உழவர் குலப் பெண்களின் பின்புறத்தில் உள்ள பிடரி மயிரானது மேகத்தைக் காட்ட, அவர்கள் இடையானது கானகத்தில் உள்ள மயில்களின் சாயலைக் காட்டும். அவ்வுழத்தியரின் முகமானது முயற்கறையுடைய சந்திரனைத் தோற்கச் செய்யும். அவர்களுடைய கயல் போன்ற கண்கள், மீன்கள் வாழிடமான அகன்ற நீர் நிலைகளைக் காட்டும். இத் தன்மையான நீர் நிலைகள் பல விளங்கிப் பயிர் வளத்தை மேம்படச் செய்யும் பண்ணைகள் உள்ளன.

இவண் நீர் வளமும், நிலவளமும் நிறைந்து விளங்க உழவர் குலப் பெண்களின் உழைப்பும் மேலோங்கி நின்றமை சாற்றப்பட்டது. பெண்களைச் சாற்றிய தன்மையில் ஆடவர்களின் மேம்பட்ட பணி, குறிப்பின் வழி உணர்த்தப்படுதலும் காண்க.

புயல் - மேகம். சிறுபுறம் - மகளிரின் பிடரி. புனம் - கானகம். உழத்தியர்கண் - உழவர் குலப் பெண்களுடைய. முயல் - சந்திரனிடம் உள்ள களங்கம் என்று சாற்றப்படும் புராணக் கூற்று. மதி - சந்திரன். கயல் - மீன்வகை. கதிர் - நெற்கதிர். தடம் பணை - விசாலமான வயல்கள். 3

874. சேறணிதண் பழனவயல்
செழுநெல்லின் கொழுங்கதிர் போய்
வேறருகு மிடை வேலிப்
பைங்கமுகின் மிடறுரிஞ்சி
மாறெழு திண் குலை வளைப்ப
வண்டலைதண் தலைவுழவர்
தாறரியும் நெடுங்கொடுவாள்
அனைய உள தனி இடங்கள்.

தெளிவுரை: சேறு மல்கிய குளிர்ந்த மருத நில வயலில் விளைந்த, செழுமையான உயர்ந்த நெற்கதிர்கள், அருகே வேலி போன்று அமைந்துள்ள பசுமையான பாக்கு மரங்களின் கழுத்தை உராய்ந்து அவற்றின் குலைகளை வளைவு கொள்ளுமாறு செய்யும் தகைத்து. அவை வண்டுகள் உலவும் சோலைகளில் வாழ்கின்ற உழவர் கையில் உள்ள நீண்ட அரிவாள் போன்று விளங்கின.

சிறப்புரை: நெற்கதிர்கள் பாக்கு மரத்தின் கழுத்துவரை ஓங்கியுள்ள தன்மை இவண் சாற்றப்பட்டது. நெற்கதிர்கள் கரும்புகள் போன்று செழித்து ஓங்கியும், கரும்புகள் பாக்குமரங்கள் போன்று ஓங்கி வளர்ந்தும் விளங்கிய காட்சியினைப் பாடல் 65 (திரு நாட்டுச் சிறப்பு) 1-15 இல் நவின்றதை ஒப்பு நோக்குக. பாக்கு மரத்தின் கழுத்து என்பது இவண் நெற்கதிரின் உயரத்திற்குச் சாற்றப்படும் சிறப்பினையும் ஓர்க.

பழன வயல் - மருத வளம் மிக்க வயல். மிடை வேலி - நெருங்கிய வேலி. கமுகு - பாக்கு மரம். மிடறு - கழுத்து. உரிஞ்சி - உராய்ந்து. தண் தலை - சோலை. தாறு பாக்கின் குலை. நெடுங்கொடுவாள் - நீண்ட அரிவாள். 4

875. பாங்குமணிப் பலவெயிலும்
சுலவுஎயிலும் உளமாடம்
ஞாங்கர் அணி துகில் கொடியும்
நகில்கொடியும் உள அரங்கம்
ஓங்கி நிலைத் தோரணமும்
பூரணகும் பமும் உளவால்
பூங்கணைவீ தியில் அணைவோர்
புலம் மறுகும் சில மறுகு.

தெளிவுரை: மாளிகைகளின் பக்கங்களில் பல வகையான மணிகள் பதித்த மதில்கள் விளங்குவன. அவற்றையொட்டிய மேடைகளில் துகிலால் ஆன கொடிகள் உயர்ந்து விளங்குவன. பூங்கொடி போன்ற இடையுடைய நங்கையர்கள் அரங்குகளில் விளங்கினர். சில இடங்களில் நிலைப்பாடுடைய தோரணங்களும், பூரண கும்பங்களும் நிலவின. சில வீதிகளில் புலன்களை மயங்கச் செய்யும் பூங்கணைகளும் விளங்கும்.

மணிப்பல - பல வண்ண மணிகள். வெயிலும் - ஒளிரும். சுலவு எயில் - சூழ்ந்த மதில். மாடம் - உயர்ந்த மாளிகைகள். ஞாங்கர் -

பக்கம். துகில் கொடி - துணிக் கொடி. நகில் கொடி - மங்கையைக் குறித்தது. நகில் - மார்பகம். பூங்கணை- மன்மத பாணம். புலம் மறுகும் - புலன்களைச் சுழலச் செய்யும். சில மறுகு - சில வீதிகள். 5

876. மனை சாலும் நிலையறத்தின்
வழி வந்து வளம் பெருகும்
வினை சாலும் உழவுதொழில்
மிக்க பெருங் குடிதுவன்றிப்
புனைசாயல் மயிலனையார்
நடம்புரியப் புகல் முழவம்
கனைசாறு மிடை வீதிக்
கஞ்சாறு விளங்கியதால்

தெளிவுரை: நிலைபெற்ற இல்லற மாண்பின்படி ஒழுகும் மாந்தர்கள் வளம் பெருக்கி அதற்குரிய செயல்களைப் புரியவும், உழவுத் தொழில் செய்யும் குடிகள் மலிந்தும், நெருங்கியும் விளங்க, மயில் போலும் சாயலையுடைய மகளிர் நடம் புரிய, அதற்கு ஏற்ப முழவுகள் ஒலிக்க, ஆரவாரம் மிக்க வீதிகள் கொண்டு விளங்குவது கஞ்சாறூர்.

மனை - இல்லறம். வினை - செயற்பாடு. புகல் முழவம் - முழவொலி. 6

மேன்மையுடைய மானக் கஞ்சாறரை உரைத்தல்
- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

877. அப்பதியில் குலப்பதியார்
அரசர்சே னாபதியாம்
செப்ப வரும் குடி **விளங்கத்**
திருஅவதா ரம் செய்தார்
மெய்ப் பொருளை அறிந்துணர்ந்தார்
விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய **மேன்மையினார்**
மானக்கஞ் சாறனார்.

தெளிவுரை: அத்தகைய சிறப்பின் மிக்க கஞ்சாறூரில் பெருமையுடைய வேளாளர் குலத்தின் சிறப்பு விளங்கத் திருவவதாரம் செய்த மானக்கஞ்சாறர் அரசரின் சேனாதிபதியாகவும், மெய்ப்பொருளாகிய சிவபிரானை அறிந்துணர்ந்த மேன்மையுடையவராகவும் விளங்கினார்.

மெய்ப்பொருள் - சிவபிரான் 7

878. பணிவுடைய வடிவுடையார்
பணியினொடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க்கு
ஆளாகும் பதம் பெற்ற
தணிவில் பெரும் பேறுடையார்
தம் பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய **தொண்டர்க்கே**
ஏவல் செயும் தொழில் பூண்டார்.

தெளிவுரை: மனம், மொழி, மெய்களால் பணிவுடையவராய் விளங்கும் கஞ்சாறர், பாம்பும், குளிர்ந்த சந்திரனும் ஆபரணமாகக் கொண்ட சடை முடியுடைய சிவபிரானுக்கு அடிமை பூணும் பெரும் பதம் பெற்ற குறைவில்லாத பேறுடையவராய் விளங்கினார். அவர்தம் தலைவரான சிவபெருமான் திருத்தாளை ஏத்தும் உறுதிமிக்க தொண்டர்க்கே ஏவல் செய்யும் நியமத்தைக் கொண்டு மேவினார்.

சிறப்புரை: பணிவின் மிக்கவராய் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தின் மாசினையும் துறந்து அத்தன்மையில் சிவனடியார் தோற்றத்தில் காணப்பட்டார் என்க. இத்தன்மையில் திருவள்ளுவர் திருக்குறள் 95 - இல்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற."

என ஓதியவாறும் காண்க.

பணிவு - புலனடக்கம். வடிவு - தோற்றப் பொழிவு; அழகு. பணி - பாம்பு. பனிமதி - குளிர்ந்த சந்திரன். அணி - ஆபரணம். ஆள் - அடிமை; அடியார். தணிவு இல் - குற்றமில்லாத, பெருமான் - சிவபிரான். தொழில் - நியமம்; கடமை; தொண்டு 8

879. மாறில் பெருஞ் செல்வத்தின்
வளம் பெருக மற்றதெலாம்
ஆறுலவும் சடைக் கற்றை
அந்தணர்தம் அடியாராம்
ஈறில் பெருந் திருவுடையார்
உடையார் என்று யாவையும் நேர்
கூறுவதன் முன் அவர்தான்
குறிப்பறிந்து கொடுத்துள்ளார்.

தெளிவுரை: குற்றமில்லாது ஈட்டப்பெறும் செல்வ வளம் பெருக, அவற்றைக் கங்கை தரித்த சடை முடியுடைய தூய புனிதராம் சிவபிரான் அடியவராகும் அன்பரே பெருந் திருவுடையவர்களாய் யாவும் உடையவர்கள் என்று உளமாற எண்ண, அத்தன்மையுடையோர் தம் எண்ணத்தைத் தெரிவிக்கும் முன்னரே குறிப்பறிந்து போற்றும் செயலைச் செய்து நாயனார் உதவி வந்தார்.

அருட் செல்வம் உடையவரே பெருஞ் செல்வம் உடையவராதல் கருதித் தம் பொருட் செல்வத்தை நாயனார் வழங்கி வந்தார் என்பது சாற்றப்பட்டது.

சிறப்புரை: இவண் அடியவர்களே பெருஞ்செல்வம் உடையவர்கள் என்னும் கருத்தில் பெருந் திருவுடையார் எனவும் அத்தகையோரே யாவும் உடையவர் எனவும் நவின்ற பாங்கில் திருவள்ளுவர் திருக்குறல் 241 - இல்,

> "அருட் செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
> பூரியார் கண்ணும் உள."

என்று ஓதியவாறும் காண்க.

மாறில் - மாறுபட்டு விளங்கும் குற்றம் இல்லாது. ஆறு - கங்கை. சடைக்கற்றை - சடைமுடி. அந்தணர் - வேதநாயகராக விளங்கும் சிவபிரான். ஈறில் - எல்லையற்ற. உடையார் - அருளாளர்; எல்லாம் உடைமையாய் உள்ளவர். 9

நாயனார் இறைவன்பால் மகப்பேறு வேண்டுதல்

880. விரிகடல்சூழ் மண்ணுலகை
விளக்கியஇத் தன்மையராம்
பெரியவர்க்கு முன் சிலநாள்
பிள்ளைப் பேறு இன்மையினால்
அரியறியா மலர்க் கழல்கள்
அறியாமை அறியாதார்
வருமகவு பெறல் பொருட்டு
மனத்தருளால் வழுத்தினார்.

தெளிவுரை: பரந்த கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் இத்தன்மையில் திருத்தொண்டு புரிந்து வந்த நாயனார்க்குச் சிலகாலம் புத்திரப்பேறு இன்மையால், திருமாலும் அறியாத மலர்ப் பாதத்தை அறிதலை

அறிந்தவராகிய தன்மையில் மகப்பேறு வாய்த்தல் பொருட்டு மனத்தில் திருவருள் தூண்ட சிவபிரானைத் துதித்தார்.

சிறப்புரை: திருமாலால் காண முடியாத திருவடியை அடியவர் அல்லாது காண வல்லவர் யாரும் இல்லை என்பது இவண் மூன்றாம் அடியில் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருப்பாட்டு 865 - இல் (குங்குலியக் கலய நாயனார் புராணம் - 30) அருளியவாறும் நோக்குக. நாயனாரைப் பெரியவர் என்றதால் அவர்தம் மூத்த நிலையைக் காண்க.

இத்தன்மை - திருத்தொண்டு புரியும் தன்மை. பெரியவர் - நாயனாரின் மூத்த பிராயம் உடைதலைக் குறித்தது; பெரியோர் எனச் சாத்தப்பெறும் நாயன்மார்களைப் போற்றும் தன்மையையும் கொள்க. அரி - திருமால். மலர்க்கழல்கள் - சிவபிரான் திருப்பாதமலர்கள். அறியாமை அறியாதார் - அறிதலை அறிந்த நாயனார். மனத்தருள் - நாயன்மார்கள் விருப்பு வெறுப்பு சாத்தும் தன்மை என்க. இதனை "வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்னும் திருவாசகத் தொடர் கொண்டு காண்க. *10*

நாயனார் பெண் மகவைப் பெறுதல்

881. குழைக் கலையும் வடிகாதில்
கூத்தனார் அருளாலே
மழைக் குதவும் பெருங்கற்பின்
மனைக் கிழத்தி யார் தம்பால்
இழைக்கும் வினைப் பயன் சூழ்ந்த
இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்கும் நெறி தமக்கு தவப்
பெண் கொடியைப் பெற்றெடுத்தார்.

தெளிவுரை: அழகிய காதில் குழையணிந்து அசைய விளங்கும் நடராசப் பெருமான் திருவருளால் நாட்டில் மழை பெய்தற்கு உதவும் கற்பின் மிக்க தன் மனைக் கிழத்தியின் பால், செய்வினைப் பயனால் சூழ்ந்த இப்பிறவியில் தீவினையினின்று மீளும் வகையில் நாயனார் தவப் பயனாகப் பெண் மகவைப் பெற்றார்.

சிறப்புரை: பெண்மையின் சிறப்போங்க விளங்கிய நாயனார் துணைவியாரின் கற்பு நிலையானது "மழைக்குதவும் பெருங்கற்பு" எனச் சாற்றப்பட்டது. இத்தன்மையில் திருவள்ளுவர் திருக்குறள் 55 - இல்,

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழ தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை."

என ஓதியமை காண்க. மற்றும் பெண்மையின் கற்புடைய மாதரின் மழைவளம் பெருகும் மேன்மையைக் கலித்தொகை, குறிஞ்சிக் கலி 3 வரி, 6 - இல்,

"அருமழை தரல் வேண்டில்
தருகிற்கும் பெருமையளே"

என்று சாற்றியமையும் காண்க.

சிவபிரான் குழை யசையும் அழகிய காதுடையவர் என்று குறித்த நிலையில் திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறை - திருக்கழுமலத் திருப்பதிகத்தில்,

"காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே"

எனவும், முதல் திருமுறை, முதல் திருப்பதிகத்தில்

"தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்
உள்ளம் கவர் கள்வன்"

எனவும் அருளியமை காண்க. மாணிக்கவாசகர், சிவபிரான் குழையும் தோடும், அணிந்த திருக்கோலத்தைத் திருக்கொத்தும்பி - பாடல் 18 - இல்,

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக் கோலமே
நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."

என அருளிச் செய்தமையும் கொள்க.

பிழைக்கும் நெறியைத் தமக்கு உதவும் பெண் மகவு என்பது, பிறர் மனையிற் சென்று கணவனார் விளங்கும் குடும்பத்தில் விருந்தோம்பல் முதலான அறங்களைப் புரியும் வகையில் பெற்றோர் பெறும் புண்ணியப் பேறு முதலானவற்றையும் அதன் புனிதத்தையும்

ஏத்தி உரைத்தலாம் என்க. இதன் ஏற்றத்தைச் சுட்டுமாறு தமக்கு உதவும் பெண்கொடி என்னுமாறு உரைத்தலையும் ஓர்க.

குழை - காதணி வகை. அலையும் - அசையும், வடிகாது - அழகியகாது. பெண் கொடி - மகள். 11

கஞ்சாறர் தம் புதல்வியை இனிது வளர்த்துத் திருமணம் செய்விக்க மங்கல நாள் குறித்தல்

- இது முதல் 7 - பாடல்கள் ஒரு தொடர்

882. பிறந்த பெரு மகிழ்ச்சியினால்
பெரு மூதூர் களிசிறப்பச்
சிறந்த நிறை மங்கலதூ
ரியம் முழங்க தேவர்பிரான்
அறந்தலை நின் றவர்க்கெல்லாம்
அளவில் வளத்து அருள் பெருக்கிப்
புறந் தருவார் போற்றிசைப்பப்
பொற்கொடியை வளர்க்கின்றார்.

தெளிவுரை: பெண் குழந்தை பெற்றெடுத்த மகிழ்ச்சியால் பெருமையும், தொன்மையும் உடைய அவ்வூரில் அனைவரும் மகிழும் வண்ணம் சிறந்த முறையில் நிறைவுடைய மங்கல வாத்தியங்கள் முழங்கச் சிவபிரானை ஏத்தி வழிபடும் சைவ நெறியில் தலைப்பட்டு ஒழுகும் அடியவர்களுக்கெல்லாம் அளவில்லாத செல்வத்தை அன்பு மீதூரப் பெருக்கி உதவிப் பாதுகாத்து வளர்க்கும் செவிலியர்கள் போற்ற நாயனார் பொன் கொடி போன்ற தன் புதல்வியை இனிது வளர்த்து வரலானார்.

பெருமூதூர் - கஞ்சாறூர். மங்கல தூரியம் - மங்கல வாத்தியம். தேவர் பிரான் - சிவபிரான். அறந்தலை - சைவநெறி. அளவில் வளம் - பெருஞ் செல்வம். புறந்தருவார் - வளர்ப்பவர்கள்; செவிலித்தாயர். பொற்கொடி - அழகிய மகள்: 12

883. காப்பணியும் இளங்குழவிப்
பதம் நீங்கிக் கமழ் சுரும்பின்
பூப்பயிலும் சுருள் குழலும்
பொலம் குழையும் உடன் தாழ
யாப்புறு மென் சிறுமணிமே
கலையணிசிற் றாடையுடன்
கோப்பமைகிண் கிணியசையக்
குறுந்தளிர்மெல் லடி ஒதுங்கி;

தெளிவுரை: கையில் காப்பு அணியும் இளமையான குழந்தைப் பருவத்தைக் கடந்து வண்டுகள் மொய்க்கும் பூக்களை அணிந்த சுருண்ட கூந்தலும், காதில் அணியப்பெற்ற பொன்குழையும் தொங்கி மேவ சிறு மணிகளால் கோத்து அமைக்கப்பட்ட மேகலையும் அழகிய சிற்றாடையும், கிண்கிணிச் சலங்கையும் அசைய, அக்குழந்தை தன் பூப்போன்ற சிறிய பாதங்களால் மெல்ல நடந்தது.

ஒதுங்கி என்பதனை அடுத்த பாடலுடன் பொருத்துக.

காப்பு - கைக்கு அணியும் ஆபரணம். பதம் - பருவம். சுரும்பு - வண்டு. சுருள் சூழல் - சுருண்ட கூந்தல். பொலம் குழை - பொன் குழை. கிண்கிணி - சலங்கை. ஒதுங்கி - கடந்து 13

884. புனைமலர் மென் கரங்களினால்
போற்றியதா தியர் நடுவண்
மனையகத்து மணிமுன்றில்
மணல் சிற்றில் இழைத்து மணிக்
கனை குரல்நூ புரம் அலையக்
கழல் முதலாப் பயின்று முலை
நனை முகம் செய் முதல்பருவம்
நண்ணினள்அப் பெண்ணமுதம்.

தெளிவுரை: பெண்ணமுதம் போன்று விளங்கும் அக்குழந்தை தளிர் போன்ற மென்மையான கரங்களால் தன்னை வளர்த்து வரும் செவிலித் தாயார்களிடையே அழகிய வீட்டின் முற்றத்தில் மணல்கொண்டு சிறுவீடு கட்டியும், பரல்கள் ஒலிக்க மேவும் காற் சலங்கைகள் அசைய மார்பகம் எழும்புகின்ற பேதையாம் முதற் பருவம் நண்ணினாள்.

தாதியர் - செவிலியர். நூபுரம் - காற் சிலம்பு. கனை குரல் - நெருங்கி ஒலிக்கும் ஒலி. முதல் பருவம் - பேதைப் பருவம்; 5 முதல் 7 வயது வரையுடையது. 14

885. உறுகவின் மெய்ப் புறம்பொலிய
ஒளிநுசுப்பை முலைவருத்த
முறுவல்புறம் அலராத
முகிழ்முத்த நகை என்னும்
நறுமுகை மென் கொடிமருங்குல்
நளிர்ச் சுருள் அம் தளிர்ச் செங்கை
மறுவில் குலக் கொழுந்தினுக்கு
மணப்பருவம் வந்தணைய,

தெளிவுரை: அப்பெண் குழந்தையின் பேரழகு புறத்தே ஒளிர, தனங்கள் பூரிக்க, இடை துவள, புன்முறுவல் வெளியே தெரியாத வகையில் முத்துப் பற்கள் விளங்கச் சுருண்ட கூந்தலும், தளிர் போன்ற சிவந்த கைகளும் கொண்டு குற்றமில்லாத குலக்கொழுந்தெனத் திருமணப் பருவத்தை அடைந்தார்.

வந்தணைய என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

கவின் - அழகு. நுசுப்பு - இடை. நகை - பல். நறுமுகை - அரும்பு. மறு - குற்றம். *15*

886. திருமகட்கு மேல் விளங்கும்
செம்மணியின் தீபம் எனும்
ஒரு மகளை மன்னுலகில்
ஓங்குகுல மரபினராய்க்
கரு மிடற்று மறையவனார்
தமர்ஆய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச
வந்தணைந்தார் பெருமுதியோர்.

தெளிவுரை: திருமகளினும் மேம்பட்டு விளங்கும் சிவந்த மாணிக்கத்தின் மணியொளி போன்ற ஒப்பற்ற மகளை, இவ்வுலகில் திருமணம் கொள்ளும் தன்மையில் ஓங்கும் வேளாண் குல மரபினரும், நீலகண்டராக விளங்கும் சிவபிரான் அன்பருமான வீரக்கழல் அணிந்த ஏயர்கோன் பெருமகனாரான கலிக்காமருக்கு மகட்பேசும் பொருட்டுப் பெருமைக்குரிய மூத்தோர் ஆங்கு வந்து சேர்ந்தார்.

தீபம் - ஒளி. கருமிடற்று மறையவனார் - சிவபிரான். தமர் - அன்பர். ஏயர் பெருமகன் - ஏயர்கோன் கலிக்காமர். *16*

887. வந்தமூது அறிவோரை
மானக்கஞ் சாறனார்
முந்தை முறை மையின் விரும்பி
மொழிந்த மணத் திறம் கேட்டே
எந்தமது மரபினுக்குத்
தரும்பரிசால் ஏயும் எனச்
சிந்தை மகிழ் வுற உரைத்து
மணம் நேர்ந்து செலவிட்டார்.

தெளிவுரை: மானக்கஞ்சாறர் தம் மனை நோக்கி மணம் பேச வந்த முதியோரை இனிது வரவேற்று முறைப்படிப் போற்றித் தம் மரபுக்கு ஏற்ற சிறப்புடையதாதலால் பொருந்தும் என்று சிந்தை மகிழ்வுற உரைத்துத் திருமணத்திற்கு உடன்பட்டுச் செல்ல விடுத்தார்.

ஏயும் - பொருந்தும். நேர்ந்து - உடன்பட்டு. 17

888. சென்றவரும் கஞ்சாறர்
மணம் இசைந்த படி செப்பக்
குன்றனைய புயத்து ஏயர்
கோனாரும் மிக விரும்பி
நின்ற நிலை மையின் இரண்டு
திறத்தார்க்கும் நேர்வு ஆய
மன்றல்வினை மங்கலநாள்
மதிநூல்வல் லவர் வகுத்தார்.

தெளிவுரை: மணப்பெண்ணைக் கண்டுவந்த முதியவரான பெரியோர் கஞ்சாறர் திருமணச் செயலுக்கு உடன்பாடு கொண்டதைக் கூற, ஏயர் கோன் தலைவரும் மிகவும் மகிழ்ந்து இரு திறத்தினர்க்கும் பொருந்திய மங்கலத் திருநாளைச் சோதிட நூல் வல்லுநர்களைக் கொண்டு வகுத்தனர்.

ஏயர் கோனார் - ஏயர்கோன் தலைவரான கலிக்காமர். விரும்பி - மகிழ்ந்து. நேர்வு ஆய - பொருந்திய. மதிநூல் வல்லவர் - சோதிட வல்லுநர். 18

மணமகளுக்கு அலங்காரம் செய்து மங்கல வாத்தியம் முழங்கச் சிவபிரான் ஆங்கு வருதல்

- இது முதல் 3 பாடல்கள் ஒரு தொடர்

889. மங்கலமாம் செயல்விரும்பி
மகள் பயந்த வள்ளலார்
தங்குலம் நீள் சுற்றமெலாம்
தயங்குபெருங் களி சிறப்பப்
பொங்கியவெண் முளைப் பெய்து
பொலங்கலங்கள் இடைநெருங்கக்
கொங்கு அலர்தண்பொழில் மூதூர்
வதுவை முகம் கோடித்தார்.

தெளிவுரை: தேன் துளிர்க்கும் மலர்ச்சோலைகள் உள்ள அம் மூதூரில் பெண்ணமுதம் போன்ற புதல்வியைப் பெற்ற நாயனார், மங்கலச் செயலை மேற்கொள்ளும் வகையில் அக்குலத்தில் உள்ள நீண்ட சுற்றத்தினரும் பூரிப்புக் கொண்டு மகிழுமாறு வெண்மையுடைய முளைபெய்து பொன்னாபாரணங்கள் சாத்தி நெருக்கமான மலர்மாலைகள் புனைந்து மணமகளை அலங்காரம் செய்தார்கள்.

வள்ளலார் - மானக் கஞ்சாறர் நாயனார். நீள் சுற்றம் - தூரத்து உறவு. தயங்கு - பூரிப்பு. பொலம்கலம் - பொன்னாபரணம். கொங்கு - தேன். தண்பொழில் - குளிர்ந்த சோலை. வதுவை - மணமகள். கோடித்தார் - அலங்கரித்தார். 19

890. **கஞ்சாறர் மகள் கொடுப்பக்**
கைப்பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப்பெருமானும்
தஞ்சால்பு நிறை சுற்றம்
தலைநிறைய முரசியம்ப
மஞ்சு ஆலும் மலர்ச் சோலைக்
கஞ்சாற்றின் மருங்கு அணைய;

தெளிவுரை: கஞ்சாறர் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்கும் நிலையில் அந்நங்கையைக் கைப்பிடிக்க வருகின்றவரும், குறையாத புகழும், பெருமையுமுடைய ஏயர்குலப் பெருமானுமாகிய கலிக்காமர் சாந்தம் நிறைந்த சுற்றத்தார் சூழவும் முரசு முதலான வாத்தியங்கள் முழங்கவும், மேகம் தவழும் மலர்ச் சோலைகளுடைய கஞ்சாறூரின் பக்கம் சார்ந்தார்கள்.

எஞ்சாத குறைவிலாத, சால்பு நிலை - சாந்த குணம். தலை நிறைய - பெரிதும் சூழ. மஞ்சு ஆலும் - மேகம் தவழும். அணைய என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 20

891. **வள்ளலார் மணம்** அவ்வூர்
மருங்கணையா முன் மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார் தம்
திருமனையில் ஒரு வழியே
தெள்ளுதிரை நீர் உலகம்
உய்வதற்கு மற்று அவர்தம்
உள்ளநிலைப் பொருளாய
உம்பர்பிரான் தாம் அணைவார்.

தெளிவுரை: ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருமணத்தையொட்டி அவ்வூரை அடைவதன் முன்பு, தாமரைமலர் போன்ற கண்ணுடைய ஒளிமிக்க ஆபரணங்கள் அணிந்த அந்நங்கையைப் பெற்றவரான மானக்கஞ்சாறர் திருமனையில், தெளிந்த அலைகளையுடைய கடல்சூழ்ந்த உலகம் உய்வதற்கு நாயனார் உள்ளத்தின் நிலைப் பொருளாய் மேவும் தேவர் பிரானான சிவபிரான் அடைந்தார்.

சிறப்புரை: நாயன்மார்களை வள்ளலார் என்று சாற்றும் வகையில் இவண் திருமணம் கொள்ள இருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் வள்ளலார் என்று அழைக்கப்பட்டார் என்க. ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் வரலாறு பின்னர் எடுத்தோதப்படுதலையும் நோக்குக.

வள்ளலார் - ஏயர்கோன் கலிக்காமர். அவ்வூர் - கஞ்சாறூர். ஒள்ளிழை - ஒளிமிக்க ஆபரணங்களை யணிந்த மானக்கஞ்சாறர் திருப்புதல்வி. பயந்தார் - பெற்றவரான கஞ்சாறருடைய. உள்ள நிலைப் பொருள் - உள்ளத்தில் நிலைப் பொருளாக உள்ள. உம்பர் பிரான் - சிவபிரான்.

21

மாவிரதி கோலத்தில் சிவபிரான் மானக் கஞ்சாறர் மனை புகுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

892. முண்டம் நிறை நெற்றியின்மேல்
முண்டித்த திருமுடியில்
கொண்ட சிகை முச்சியின் கண்
கோத்தணிந்த என்புமணி
பண்டொருவன் உடல் அங்கம்
பரித்தநாள் அது கடைந்த
வெண் தரளம் எனக்காதின்
மிசையசையும் குண்டலமும்,

தெளிவுரை: திரிபுண்டரம் போன்று வெண்ணீறு தரித்து, முன்பக்கம் திருமுடியை மழித்து உச்சிக் குடுமியில் எலும்பு மணியைக் கோத்து, முன்பு ஒரு காலத்தில் திருமாலின் எலும்பைக் கொண்ட நாளில் அதனைக் கடைந்தெடுத்து வெண்மையான முத்துப் போன்று காதில் விளங்கி அசையும் குண்டலம் எனக் கொண்டு, சிவபெருமான் விளங்கினார்.

சிறப்புரை: சிவபிரான் ஒருவரே எக்காலத்திலும் முடிவில்லாதவராய் விளங்கும் தன்மையுடையவர் என்பதும், திருமால், பிரமன் முதலானோர் அழியும் தன்மையுடையவர் என்பதும் சாற்றும் வகையில் திருநாவுக்கரசர், ஐந்தாம் திருமுறையில்,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாரா யணர்அங்கனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே."

என்று அருளியமை காண்க. திருமாலின் எலும்பினை ஈசன் அணிந்த வரலாறு இத்திருப்பாடலில் "பண்டு ஒருவன் உடல் அங்கம் பரித்த நாள் அது கடைந்த வெண் தரளம்" எனச் சுட்டுதலாயிற்று.

இவண் சிவபிரானின் நிலைத்தன்மை உணர்த்தப்பட்டது.

முண்டம் - திரிபுண்டரம். முண்டித்த - முன்தலைப்பக்கம் மயிர் நீக்கிய சிகை முச்சி - உச்சியில் உள்ள தலை மயிர். ஒருவன் உடல் - திருமால் உடல். வெண் தரளம் - வெண் முத்து. 22

893. அவ்வென்பின் ஒளிமணிகோத்து
அணிந்திருத் தாழ்வடமும்
பைவன் பேர் அரவு ஒழியத்
தோளில் இடும் பட்டிகையும்
மைவந்த நிறக்கேச
வடப்பூணும் நூலும் மனச்
செவ்வன்பர் பவம் மாற்றும்
திருநீற்றுப் பொக்கணமும்.

தெளிவுரை: காதில் எலும்பைக் கடைந்த வெண் முத்துப் போன்ற மணிகளாலான திருமாலையும், அழகொளிரும் பாம்பை நீக்கித் தோளில் உத்தரீயப் பட்டிகையும், கருமை விளங்கும் மயிர் கொண்டு வடமாக முறுக்கப்பட்ட பூணூலும், செம்மையுடைய சைவ நெறியில் விளங்கும் அன்பர்களின் பிறவிப் பிணியை நீக்கும் திருநீற்றுப் பொட்டலமும் கைக்கொண்டு சிவபிரான் மாவிரதியாக வந்தார்.

தாழ்வடம் - மாலை. பை - பசுமை, இளமை. அரவு ஒழிய - பாம்பை நீக்கி. பட்டிகை - மேலாடை. மை - கறுப்பு. கேசம் - தலை மயிர். பவம் - பிறவிப் பிணி. பொக்கணம் - திருநீற்றுப் பை. முன் செய்யுளில் வரும் பொக்கணமும் என்பதனையும் அடுத்த செய்யுளோடு கூட்டுக. 23

894. ஒரு முன்கைத் தனிமணி கோத்து
அணிந்த ஒளிர் சூத்திரமும்
அருமறைநூல் கோவணத்தின்
மிசையசையும் திருஉடையும்
இருநிலத்தின் மிசை தோய்ந்த
எழுதரிய திருவடியும்
திருவடியும் திருப்பஞ்ச
முத்திரையும் திகழ்ந்திலங்க;

தெளிவுரை : தன் முன் கையில் எலும்பு மணி ஒன்றினைக் கயிற்றில் கோத்து அணிந்தும், அருமையுடைய வேதமாகிய கோவணத்தின் மீது கட்டிய திரு உடையும், எழுதுதற்கரிய பெருமையுடைய நிலத்தில் தோய்ந்த திருவடியும், திருவடியில் திகழும் பஞ்சமுத்திரையும் விளங்க ஈசன் தோன்றினார்.

இலங்க என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

தனிமணி - எலும்பு மணி; சூத்திரம் - கயிறு. மறை நூல் - வேதம்; இது ஈசற்குக் கோவணம் என்க. "மறை நான்கே வான் சரடா" என்னும் திருவாசகத் திருவாக்கினைக் காண்க. இரு நிலம் இது பூமியைக் குறித்தது. இதன் சிறப்பினை,

"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கி"

என்னும் திருவாசகத் தொடர்களால் அறிக.

திருப்பஞ்ச முத்திரை - தாமரை, சங்கு, சக்கரம், மகரம், தண்டம் முதலான இரேகைகள் யோகியர்கள் பால் இருத்தலைச் சாற்றும். 24

895. பொடி மூடு தழல் என்னத்
திருமேனி தனில் பொலிந்த
படிநீடு திருநீற்றின்
பரப்பணிந்த பான்மையராய்க்
கொடி நீடு மறுகணைந்து
தம்முடைய குளிர் கமலத்து
அடிநீடும் மனத்தன்பர்
தம்மனையின் அகம் புகுந்தார்.

தெளிவுரை: நெருப்பின் மேல் மூடப்பட்ட சாம்பல் போன்று சிவந்த திருமேனியில் திருநீற்றினை விளங்கப் பூசிய பான்மையில் கொடிகள் பல நாட்டி அலங்காரம் செய்யப் பெற்ற அவ்வீதி வழியே வருபவராய்க் குளிர்ச்சியான தாமரை போன்று விளங்கும் தம் திருவடியில் சாத்தும் இனிய மனத்து அன்பர் மானக் கஞ்சாறர் தம் மனையின் உள்ளே சிவபிரான் புகுந்தார்.

சிறப்புரை: சிவபிரானின் ஒளி மேவும் திருவடிவத்தைத் தழல் எனவும், அதனைத் திருவெண்ணீறு மூடியுள்ளதைப் "பொடி மூடு தழல்" எனவும், சாற்றுதல் இவண் நோக்கற்பாலது. பெருமான் திருவடிச் சிறப்பினைக் குளிர்ந்த செந்தாமரை என்னுமாறு "குளிர் கமலத்து அடி" எனவும் உணர்த்துதல் காண்க. இ.ஃது அடியவர்க்கு அருள் செய்யும் பாங்கினைச் சுட்டுதலாம் என்க.

பொடிமூடு தழல் - நீறு பூத்த நெருப்பு. படி நீடு திருநீறு பொலியப்படியும் திருநீறு. பரப்பு - பரவ. மறுகு - வீதி. கமலம் - தாமரை. அகம் புகுந்தார் - உள்ளே புகுந்தார். 25

நாயனார் இறைவனை அன்போடு பணிந்து வரவேற்றல்

896. வந்தணைந்த மாவிரத
முனிவரைக் கண்டு எதிர்எழுந்து
சிந்தைகளி கூர்ந்து மகிழ்
சிறந்த பெருந் தொண்டனார்
"எந்தை பிரான் புரிதவத்தோர்
இவ்விடத்தே எழுந்தருள
உய்ந்தொழிந்தேன் அடியேன்" என்று
உருகிய அன் பொடு பணிந்தார்.

தெளிவுரை: தன் மனைக்கண் வந்த மாவிரத முனிவர் திருகோலத்திலுள்ள ஈசனை எதிர்கொண்டு எழுந்து நின்று, "எந்தை பிரானை ஏத்தும் தவத்தினரான தேவரீர் வந்ததால் நான் உய்ந்தேன்" என்று பேரன்புடன் பணிந்தார்.

மாவிரதம் - சைவத்தின் அகச் சமயம். பெருந்தொண்டனார் - மானக் கஞ்சாறர். எந்தை பிரான் - சிவபிரான். புரிதவத்தோர் - மாவிரதி முனிவராகிய சிவபிரான். உய்ந்தொழிந்தேன் - பிறவிப் பிணி நீங்கப் பெறுதலும் பேரின்பம் பெற்று மகிழ்தலும் என்க. 26

அன்றைய மங்கலச் செயல் யாதென வினவ நாயனார் தம் புதல்வியின் திருமணம் நிகழும் நாள் எனல்

897. நற்றவராம் பெருமானார்
நலமிகுஅன் பரை நோக்கி
"உற்ற செயல் மங்கலம் இங்கு
ஒழுகுவதென்" என "அடியேன்
பெற்றதொரு பெண் கொடிதன்
வதுவை" யெனப் பெருந்தவரும்
"மற்றுமக்குச் சோபனம் ஆ
குவ" தென்று வாய்மொழிந்தார்.

தெளிவுரை: நல்ல மாவிரதியென்னும் தவமுனிவராய் வந்த சிவபிரான் சிவநலம் மிகுந்த அன்பரான கஞ்சாறரை நோக்கி, "இங்கு மங்கலச் செயல் எதன் பொருட்டு நடைபெறுகிறது?" என்று வினவ, நாயனார், "அடியேன் பெற்ற புதல்விக்கு இன்று திருமண நிகழ்வு நடைபெறவுள்ளது." என்றார். அதற்கு ஆங்கு எழுந்தருளிய பெருந்தவ வேந்தரான சிவபிரான், "உமக்குச் சுபம் உண்டாக உள்ளது." என்று திருவாய் மொழிந்தார்.

நற்றவராம் பெருமான் - சிவபிரான். அன்பர் - மானக் கஞ்சாறர். பெண் கொடி - புதல்வி; பெண் மக்கள் வழிப் பெருகும் மரபினைப் பெண் கொண்டி எனக் கொள்க. வதுவை - திருமணம். சோபனம் - சுபம் ஆகுவது என்பது நாயனார் சிவபிரான் திருக்காட்சி நல்கப்பெறும் சுபம் என்க. 27

நாயனார் தம் புதல்வியை அழைத்து வந்து ஈசன் திருவடியை வணங்கச் செய்தல்

898. ஞானச்செய் தவர்அடிமேல்
பணிந்து மனை அகம் நண்ணி
மானக்கஞ் சாறனார்
மணக்கோலம் புனைந்திருந்த
தேன்நக்க மலர்க்கூந்தல்
திருமகளைக் கொண்டணைந்து
பானல் கந் தரம் மறைத்து
வருமவரைப் பணிவித்தார்.

தெளிவுரை: ஞானம் நிறைந்த தவத்தினரான மாவிரதியார் திருவடியைப் பணிந்த மானக் கஞ்சாற நாயனார் மனையின் உள்ளே நண்ணி மணக்கோலம் புனைந்திருந்த தேன் துளிர்க்கும் மலர் தரித்த கூந்தலையுடைய செல்வப் புதல்வியை அழைத்துக் கொண்டு வந்து நீலோற்பல மலர் போன்று விளங்கும் கரிய நஞ்சினைக் கண்டத்தில் மறைத்து விளங்கும் அம்முனிவர் பாதங்களை வணங்குமாறு செய்தார்.

செய்தவர் - தவத்தையுடைய முனிவர். அகம் நண்ணி - உள்ளே சென்று. திருமகள் - செல்வ மகள். பானல் சுந்தரம் - நீலோற்பல மலர் போன்ற கரிய கண்டம். மறைந்து வருமவர் - நீலகண்டத்தை மறைத்து வந்துற்ற சிவபிரான். 28

வணங்கிய புதல்வியின் கூந்தல் பஞ்சவடிக்குப் பயன்பெறும் என முனிவர் வடிவில் வந்த ஈசன் கூற, நாயனார் உடனே உடைவாளால் அறுத்துத் தருதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

899. தம் சரணத்து இடைப் பணிந்து
தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சு தழைத்து என வளர்ந்த
மலர்க் கூந்தல் புறம் நோக்கி
அஞ்சலி மெய்த் தொண்டரைப் பார்த்து
அணங்கு இவள்தன் மயிர் நமக்குப்
பஞ்சவடிக்கு ஆம் என்றார்
பரவஅடித் தலம் கொடுப்பார்.

தெளிவுரை: தம் பாதத்தில் பணிந்து தாழ்ந்து எழுந்த கஞ்சாறர் செல்வப் புதல்வியின் கருமேகம் போன்று தழைத்து வளர்ந்த மலர் போன்ற மென்மையான கூந்தலைக் கண்ட நிலையில், தம்மைக் கை கூப்பித் தொழும் திருத்தொண்டரை நோக்கி, "இப்பெண்ணின் தலைமயிர் நமக்கு அணியப் பெறும் பஞ்சவடிக்கு உதவும்." எனத் தன்னைப் போற்றும் அடியவர்க்குத் திருவடிப் பேற்றினை அருளும் சிவபிரான் தெரிவித்தார்.

சரணம் - பாதம். மடக்கொடி - நாயனார் புதல்வி. பஞ்சு - மேகம், கூந்தலுக்கு உவமை. அஞ்சலி மெய்த் தொண்டர் - கை கூப்பியவராகி நிற்கும் நாயனார். அணங்கு - நாயனார் செல்வமகள். பஞ்சவடி - நன்கு மயிரால் முறுக்கப்பட்ட பூணூல். அடித்தலம் - திருவடிப்பேறு. 29

900. அருள் செய்த மொழி கேளா
அடல் சுரிகை தனை உருவிப்
"பொருள் செய்தாம் எனப் பெற்றேன்"
எனக் கொண்டு பூங்கொடிதன்
இருள் செய்த கருங்கூந்தல்
அடியில் அரிந்து எதிர் நின்ற
மருள் செய்த பிறப்பறுப்பார்
மலர்க் கரத்தின் இடை நீட்ட;

தெளிவுரை: மாவிரதி முனிவர் இவ்வாறு உரைத்ததைக் கேட்டவுடன் வலிமையான உடைவாளை உருவி, "அடியவர்க்குரிய பொருளாய் ஆகும் என்பதால் அதனைக் கொடுப்பதற்குப் புண்ணியம் வாய்க்கப் பெற்றேன்." என்று முடிவு கொண்டு தன் மகளின், இருள் போன்று விளங்கும் கருங்கூந்தலை அடிப்பகுதியில் அரிந்து மயக்கத்தைத் தரும் பிறவியைத் தீர்க்குமாறு எதிரே அடியவராக வந்த சிவபிரான் மலர்க்கரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நீட்டினார்.

அருள் செய்த - உரைத்த. அடல் சுரிகை - வலிமையான உடைவாள். பொருள் செய்தாம் என - பயன் தரும் பொருளாக உள்ளதெனக் கருதி. பூங்கொடி - மகள். மருள் - மயக்கம். 30

மாவிரதிமுனிவர் மறைந்து இடபவாகனராகக் காட்சிதருதல்

901. வாங்குவார் போல் நின்ற
மறைப்பொருளாம் அவர் மறைந்து
பாங்கின் மலை வல்லியுடன்
பழையமழ விடையேறி
ஓங்கிய விண்மிசை வந்தார்
ஒளிவிசும்பின் நிலம் நெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி
தொழும்பர் தொழுது எதிர்விழுந்தார்.

தெளிவுரை: தன் மகளின் கூந்தலை அரிந்து கொடுக்க வாங்குவார் போல் நின்ற வேதப் பொருளாகிய மாவிரதி முனிவர் தன்னுடைய உருவத்தை மறைத்துக் கொண்டு பாங்குடைய மலைவல்லியான பார்வதிதேவியோடு இடப வாகனத்தில் ஏறி விண்ணில் தோன்றியருளினார். தேவர்கள், ஒளியுமிழும் கற்பக மலரை நிலம் முழுமையும் பரவுமாறு மழை போலப் பொழிந்தார்கள். இவ்வரிய

காட்சியைக் கண்ட நாயனார், எட்டு அங்கமும் நிலத்தில் படிய ஈசனைத் தொழுது பணிந்தார்.

மறைப்பொருள் - வேதப் பொருளாய் விளங்கும் சிவபிரான். மலை வல்லி - பார்வதிதேவி. மழவிடை - இளமையானஇடபம். இதன் தொன்மை விளங்க 'பழைய' எனச் சாற்றப்பட்டது. தூங்கிய - சொரிந்த. பொன்மலர் - கற்பக மலர். தொழும்பர் - திருத்தொண்டராகிய மானக் கஞ்சாற நாயனார். 31

நாயனார் கொண்ட அன்பினை உலகுக்கு வெளிப்படுமாறு செய்தோம் என்று இறைவன் அருளிச் செய்ய அனைவரும் கை கூப்பி வணங்குதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

902. விழுந்தெழுந்து மெய்ம் மறந்த
மெய்யன்பர் தமக்கு மதிக்
கொழுந்தலைய விழும் கங்கை
குதித்த சடைக் கூத்தனார்
"எழும்பரிவு நம்பக்கல்
உனக்கிருந்த பரிசு இந்தச்
செழும்புவனங் களில் ஏறச்
செய்தோம்" என்று அருள் செய்தார்.

தெளிவுரை: கீழே விழுந்து வணங்கி எழுந்து, தன்னை மறந்து நின்ற மெய்யன்பர்க்குப் பிறைச்சந்திரன் அலையுமாறு பெருகி மேவும் கங்கையைச் சடைமுடியில் தரித்த கூத்தப் பெருமான், "உனக்கு நம்பால் இருந்த பேரன்பினை இந்த உலகம் காணுமாறு தெரியச் செய்தோம்." என்று அருளிச் செய்தார்.

மெய்யன்பர் - நாயனார். மதிக் கொழுந்து - பிறைச்சந்திரன். கூத்தனார் - சிவபிரான். பரிவு - அன்பு. பரிசு - தன்மை. புவனம் - உலகம். ஏறச் செய்தோம் - அறியுமாறு வெளிப்படுத்தினோம். அருள் செய்தார் - உரைத்தருளினார். 32

903. மருங்கு பெருங் கணநாதர்
போற்றிசைப்ப வானவர்கள்
நெருங்கவிடை மேற்கொண்டு
நின்றவர்முன் நின்றவர்தாம்

ஒருங்கிய நெஞ்சொடு கரங்கள்
உச்சியின்மேல் குவித்து ஐயர்
பெருங்கருணைத் திறம்போற்றும்
பெரும்பேறு நேர்பெற்றார்.

தெளிவுரை: பக்கங்களில் சூழ்ந்துள்ள சிவகணத் தலைவர்கள் போற்றித் துதிக்கத் தேவர்கள் நெருங்கி வர, இடப வாகனத்தின் மீது எழுந்தருளி வந்து காட்சி நல்கிய சிவபிரான் முன் நின்ற மானக் கஞ்சாறனார் மனம் ஒன்றியவராய், இரு கரங்களையும் உச்சியின் மீது குவித்துக் கொண்டு, இறைவனை எந்நாளும் போற்றித் துதிக்கும் பெரும் பேற்றினைப் பெற்றார்.

மருங்கு - பக்கம். வானவர்கள் - தேவர்கள். விடைமேற்கொண்டு நின்றவர் - சிவபிரான். முன் நின்றவர் - நாயனார். ஐயர் - சிவபிரான். 33

சிவபிரான் திருக்காட்சி மறைய, கலிக்காமர் உள்ளே புகுதல்

904. தொண்டனார் தமக்கருளிச்
சூழ்ந்திமையோர் துதி செய்ய
இண்டைவார் சடைமுடியார்
எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழல் கொடியைக்
கைப்பிடிக்க மணக்கோலம்
கண்டவர்கள் கண்களிப்பக்
கலிக்காம னார் புகுந்தார்.

தெளிவுரை: திருத்தொண்டராகிய மானக் கஞ்சாறனார்க்கு அருளிய தலைமாலையுடைய சிவபிரானைத் தேவர்களெல்லாம் நெருங்கிச் சூழ்ந்து துதி செய்ய, அவர் தம் திருவுருவை மறைத்துக் கொண்டார். அந்நிலையில் வண்டுகள் ஒலிக்கும் கூந்தலையுடைய நாயனார் செல்வ மகளை வதுவை செய்து கொள்ளும் வகையில் வரும் மணக்கோலத்தைக் கண்டவர்கள் மகிழுமாறு ஏயர்கோன் கலிக்காமர் வந்து சேர்ந்தார்.

தொண்டனார் - மானக் கஞ்சாறர். இமையோர் - தேவர்கள். இண்டை - தலைமாலை; எழுந்தருளிப் போயினார் - காட்சியை மறைத்துக் கொண்டார். கொடி - நாயனார் மகள். 34

கலிக்காமர் ஈசன் திருவருளை எண்ணிக் கசிந்துருகிப் போற்றிப் பின்னர் அந்நாயனார் செம்மகளைத் திருமணம் கொண்டு தன் நகரை அடைதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

905. வந்தணைந்த ஏயர்குல
மன்னவனார் மற்று அந்தச்
சிந்தை நினைவு அரிய செயல்
செறிந்தவர்பால் கேட்டருளிப்
புந்தியினில் மிக உவந்து
புனிதனார் அருள் போற்றிச்
சிந்தை தளர்ந்து அருள் செய்த
திருவாக்கின் திறம் கேட்டு;

தெளிவுரை: ஆங்கு உள்ளே புகுந்த ஏயர்கோன் கலிக்காமர் மானக் கஞ்சாறர் சிந்தையும் அதன் தொடர்பான அரிய செயலையும், ஆங்கிருந்த ஞானப் பெருந்தகையர் உரைத்தவாறு கேட்டு மிகவும் மகிழ்ச்சி பொங்க இறைவர் செய்த திருவருளைப் போற்றித் துதித்தார். பின்பு இத்தகு அருளிச் செயல் நடைபெறும்போது தாம் காணும் பேறு இல்லையே என்று தளர்ந்து நைய, "உனக்குத் திருவருள் புரிவோம்."என்னும் திருவாக்கும் எழுந்தது.

கேட்டு என்பதனை அடுத்த செய்யுளுடன் கூட்டுக.

செறிந்தவர் - ஆங்கிருந்த ஞானப் பெருந்தகையாளர். புனிதனார் - சிவபிரான். சிந்தை தளர்ந்து - தாம் இத்தகு புனிதக் காட்சியைக் காணும் பேறு பெறவில்லையே என்று வருந்தி. 35

906. மனம் தளரும்இடர் நீங்கி
வானவர் நாயகர் அருளால்
புனைந்த மலர்க் குழல் பெற்ற
பூங்கொடியை மணம் புணர்ந்து
தனம் பொழிந்து பெருவதுவை
உலகெலாம் தலை சிறப்ப
இனம் பெருகத் தம்முடைய
எயின் மூதூர் சென்றணைந்தார்.

தெளிவுரை: ஏயர்கோன் கலிக்காமர் வருத்தம் நீங்கிய நிலையில் தேவர்பிரானான சிவபிரான் திருவருளால் காஞ்சாறரால் அரியப்பெற்ற நங்கையின் கூந்தல் இனிது வளரப் பெற்று ஒளிர்ந்தது. அத்திரு

நங்கையை மணம் புரிந்து செல்வத்தை வழங்கிச் சிறப்புறுமாறு செய்து, தம் சுற்றத்தார் சூழக் கலிக்காமர் தம்முடைய மதில் சூழ்ந்த ஊர்க்குச் சென்றார்.

வானவர் நாயகர் - சிவபிரான். பூங்கொடி - கஞ்சாறர் செல்வ மகள். பெருதுவை - பெருமையுடைய திருமணம். இனம் - சுற்றத்தார். எயில் - மதில். 36

தன் புதல்வியின் கூந்தலைச் சிவபிரானுக்குக் கொடுத்த நாயனார் பெருமையைப் போற்றி, நிலத்தின் வெடிப்பில் சிதறிய மாவடுவைக் கடித்த ஓசையைக் கேட்ட அரிவாட்டாய நாயனார் வரலாற்றைக் கூறத் தொடங்கினேன் கவிக்கூற்று அறுசீர் விருத்தம்

907. ஒருமகள் கூந்தல் தன்னை
வதுவை நாள் ஒருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும்
பெருமை என் அளவிற்று ஆமே
மருவிய கமரில் புக்க
மாவடு விடேல் என் ஓசை
உரிமையால் கேட்க வல்லார்
திறம் இனி உரைக்க லுற்றேன்.

தெளிவுரை: ஒப்பற்ற மகளின் கூந்தலைத் திருமணம் கொள்ளும் நாளன்று சிவபிரானுக்கு ஈந்த பெருமையுடைய திருத்தொண்டரைப் போற்றும் செயல் என்னளவில் ஆகக் கூடியதோ! பொருந்திய தரைப் பிளப்பில் சிதறிய மாவடுவைக் கடித்த ஓசையினை அன்பின் உரிமையால் கேட்கவல்ல அரிவாட்டாய நாயனாரின் செயல் திறத்தினை இனி உரைக்கலானேன்.

என்னளவிற்று ஆமே என்பது உரைத்தற்கு அரிய பெருமையுடையது என்பதாம். இது கவிக்கூற்று.

வதுவை நாள் - திருமண நாள். ஒருவர் - சிவபிரான். பெருமையார் - பெருமையுடைய மானக்கஞ்சாறர். மருவிய கமர் - பொருந்திய நிலப் பிளப்பு. விடேல் - மாவடுவைக் கடிக்கும் ஓசைக் குறிப்பு. 37

மானக்கஞ்சாற நாயனார் புராணம் நிறைவுற்றது.

19. அரிவாட்டாய நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம் :

சோழநாட்டில் கணமங்கலம் என்னும் பதியில் வேளாளர் குலத்தில் தாயனார் என்னும் அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் செல்வ நிலையில் விளங்கிச் சிவபிரானுக்குச் செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் கொண்டு திருவமுது செய்விக்கும் திருத்தொண்டு ஆற்றி வந்தார். இவருடைய திருத்தொண்டின் திறத்தை உலகுக்கு வெளிப்படுத்திக் காட்டும் வகையில் ஈசன் நாயனாருக்கு வறுமையை உண்டாக்கினார்.

அவரது செல்வ வளம் குறைவுபட்டாலும், கூலித் தொழில் செய்து செந்நெல்லை இறைவனுக்குத் திருவமுதாக்கிக் கார் நெல்லைத் தாம் உண்டு வந்தார். சில நாட்களில் உணவு இல்லாது கீரையும், நீரும் தாம் அருந்தியவராகித் திருத்தொண்டு ஆற்றி வரலானார்.

ஒரு நாள் தாயனார் செந்நெல்லரிசியையும், செங்கீரையையும், மாவடுவையும் ஒரு கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு இறைவனுக்குத் திருவமுதூட்டச் செல்லும் போது பசிக் களைப்பால் கால் தளர்ந்து தவறிக் கீழே விழலானார். அப்போது தாயனாரின் பின்னே பஞ்சகவ்வியத்தை ஏந்திச் சென்ற அவர் துணைவியார் தம் கையால் கணவரைக் கீழே விழாது பற்ற முனைந்தும் கை விடாது கூடையிலிருந்த செந்நெல் முதலிய யாவும் சிதறி நில வெடிப்பில் சிந்தி விட்டன.

நாயனார் உடனே "ஆண்டவனுக்குத் திருவமுது செய்விக்கும் பேற்றினை நான் இழந்தனனே பாவியாகிய நான் இந்த அரிவாளால் தொண்டை அறுத்து உயிர் விடுவேன்" என்று அரிவாளைக் கைக்கொண்டு தொண்டையை அரியத்தொடங்கினார். உடனே நில வெடிப்பிலிருந்து இறைவன் திருக்கரம் வெளிப்பட்டு நாயனாரின் கையைப் பற்றியது. இந்நிலையில் ஈசன் மாவடுவைக் கடிக்கும் " விடேல்" "விடேல்" என்னும் ஓசையும் எழுந்தது.

நாயனார் துணுக்குற்று இறைவன் கருணையையும், திருச்செயலையும் எண்ணிப் போற்றி நின்றார். தொண்டையில் ஊறு நீங்கிய நாயனார் காணுமாறு சிவபிரான் இடபவாகனத்தில்

தோன்றி, "நீ புரிந்த செயல் நன்று. உன் மனைவியோடு நம் உலகில் எப்போதும் வாழ்வாயாக." என்று அருளித் தம் உருவைக் கரந்து கொண்டார்.

நாயனார், அரிவாளைப் பூட்டினமையால் அரிவாட்டாயனார் (அரிவாள் தாயனார்) என்னும் சிறப்புத் திருநாமம் பெறலானார்.

கணமங்கலம் என்னும் பதியின் சிறப்பும் நாயனார் என்னும் அன்பரின் திருத்தொண்டும் சாற்றுதல்

- இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர்

கலிவிருத்தம்

908. வரும்புனல் பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொரு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்கண் உடையவாய் விட்டு நீள்
கரும்பு தேன் பொழியும் கண மங்கலம்.

தெளிவுரை: இடையறாது நீர் பெருகும் சோழ நாட்டின் கண் ஒப்பற்றவர்கள் வாழும் வளமையுடைய பதியாகவும், ஆண் வண்டு, பெண் வண்டோடு சூழ்ந்து ரீங்காரம் செய்யவும் மெல்லிய கணுக்கள் உடையனவாய் விளங்கும் நீண்டுயர்ந்த கரும்பு, தேன் பொழியவும் மேவும் சிறப்புடையது கணமங்கலம் என்னும் ஊர்

புனல் - நீர். பொன்னிநாடு - காவிரி நீர் பாயும் சோழ நாடு. வாழ்பதி - வாழும் ஊர். சுரும்பு - ஆண் வண்டைக் குறித்தது. முரன்றிட - ரீங்காரம் செய்து ஒலிக்க. மென் கண் - மெல்லிய கணுக்கள். நீள் - நீண்ட; உயர்ந்து ஓங்கிய. 1

909. செந்நெல் ஆர்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார்.

தெளிவுரை: செந்நெல் விளங்கும் வயலில் களையெடுக்கும் வகையில் வரப்புகளில் எறியப்பட்ட செந்தாமரை மலர்களில் முன்னரே சங்குகளால் உமிழப்பெற்ற முத்துக்கள் விளங்கி இருந்தன. ஆங்குப் பணி செய்யும் உழவர்கள் கைகளால் அவற்றை எடுக்கும் காட்சியானது பதுமநிதியைக் கைப்பெற்றவர்கள் போன்று விளங்கினார்கள்.

கட்ட செந்தாமரை - களையென நீக்கப் பெற்ற செந்தாமரை. நந்து - சங்கு. மள்ளர் - உழவர். பங்கய மாநதி - குபேர பட்டணத்தில் உள்ள பதும நிதியை உணர்த்தியது. 2

910. வளத்தில் நீடும் பதிஅதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயல்அயல்
குளத்தும் நீடும் குழையுடை நீலங்கள்.

தெளிவுரை: வளத்தில் சிறந்து மேவும் அப்பதியில் வண்டுகள் சுழலும் ஐந்து வகையான கூந்தல் அலங்காரம் உடைய மகளிர் தம் முகத்தில் உள்ள கயற் கண்களின் விழி நோக்கு, காது வரை செல்லும் தன்மைத்து. கயல் மீன்கள் வயல்களின் அருகில் உள்ள நீர் நிலைகளில் விளங்கும். அத்தடாகங்களில் நீலநிறப் பூக்கள் விளங்கும். நீலமணிகளால் செய்யப்பட்ட ஆபரணங்கள் கழுத்தில் தொங்கும்.

சிறப்புரை: மாதர்களின் கண்கள் காதுவரை செல்லும் தன்மைத்து என்னும் கருத்தும் திருப்பாட்டு எண் 147 - இல் (தடுத்தாட் கொண்ட புராணம் - 1) சாற்றப்பட்டவாறு சுட்டப்பெறுதல் காண்க. கயல் என்பது குளத்தில் உள்ள மீனையும், மகளிரின் கண்களையும் சாற்றுமாறு உரைத்தலையும், அதே போன்று நீலங்கள் என்பது நீல மலர்களோடு நீல மணிகளையும் குறித்தவாறு கொள்க.

வரி - வண்டு. உளர்த்து - சுழன்று. ஐம்பால் - ஐந்து வகையான கூந்தல் அலங்கார வகை. சுருள், குழல், அளகம், துஞ்சு, குரல் என்க. களம் - கழுத்து. கயல் - மீன் வகை; கண்ணுக்கும் உவமை. குழை - காதணி. நீலம் - மணி வகை; மலர் வகை. 3

911. அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையின் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார்.

தெளிவுரை: அத்தன்மையுடடைய நற்பதியில் அறநெறியுடைய வராய்ப் பெருமையோடு இல்லறத்தைப் பேணி ஒழுகுபவராய், செல்வம் மிக்கவராய், வேளாண்மைத் தொழில் உடையவராய்த் தலைமை பூண்ட அன்பர் ஒருவர் விளங்கினார்.

912. **தாய னார்எனும் நாமம்** தரித்துளார்
சேய காலம் தொடர்ந்து தெளிவிலா
மாய னார்மண் கிடைத்து அறி யாதஅத்
தூய நாள் **மலர்ப் பாதம்** தொடர்ந்துளார்.

தெளிவுரை: தாயனார் என்னும் திருப்பெயரையுடைய அவர், நெடுங்காலம் தொடர்ந்து பூமியைத் தோண்டியும் தெளிவில்லாத திருமால் அறியாத அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற சிவபிரான் திருப்பாதத்தைப் பற்றியவராய் விளங்கினார்.

சிறப்புரை: திருமால் பன்றி வடிவம் கொண்டு பூமியைக் குடைந்து சென்றும், சிவபிரான் திருவடியைக் காணப்பெறாத புராண வரலாறு இத்திருப்பாட்டின் இரண்டு மற்றும் மூன்றாம் அடிகளில் குறிக்கப்பெற்றது. இத்தன்மையில் திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை கோயில் திருப்பதிகத்தில்,

"நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடி யும்திரிந் தும்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடி பாதம்என் நெஞ்சுள் இருக்கவே."

என்று அருளியமையும் காண்க.

சேய காலம் - நெடுங்காலம். மாயனார் - திருமால். மண் கிளைத்து - பூமியைக் குடைந்து. நாள் மலர் - தாமரை; பகலில் பூக்கும் மலர் எனவும் காண்க. பாதம் - சிவபிரான் திருவடி. 5

913. மின்னு செஞ்சடை வேதியர்க் காம் என்று
செந்நெல் இன்னமுதோடு செங்கீரையும்
மன்னுபைந்துணர் மாவடு வும்கொணர்ந்து
அன்ன என்றும் அமுது செய் விப்பரால்.

தெளிவுரை: மின்னல் போன்று ஒளிரும் சிவந்த சடையுடைய வேதநாயகரான சிவபிரானுக்கு என்னுமாறு செந்நெலான இனிய அமுதோடு செங்கீரையும், பசுமை விளங்கும் மாம் பிஞ்சும் கொண்டு வந்து அவற்றை நாள் தோறும் அமுது செய்விப்பவராய்த் தாயனார் விளங்கினார்.

செஞ்சடை வேதியர் - சிவபிரான். பைந்துணர் மாவடு - பசுமையான கொத்தாக உள்ள மாம்பிஞ்சு. அன்ன - அவற்றை. ஆல் - அசைச்சொல். 6

வறுமையுற்றாலும் நாயனார் இத்தகு திருத் தொண்டினைப் புரிபவர் என்பதனை உணர்த்தும் வகையில் அவரது செல்வத்தை ஈசன் மாற்றுதல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

914. இந்த நல்நிலை இன்னல் வந்து எய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர் வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார்.

தெளிவுரை: செல்வம் பெருகியுள்ள நிலையில் நாயனார் இத்தகைய திருத்தொண்டு ஆற்றும் தன்மையில் இருந்தாலும், செல்வம் நீங்கப் பெற்றுத் துன்பம் எய்திய காலத்திலும், இத்திருத் தொண்டர் திருவமுது செய்வித்தலை உவப்புடன் விளங்கும் மாண்பினைக் காணும் வகையில், ஆதி முதல்வரும் வேத நாயகருமான சிவபிரான், நாயனார் பால் இருந்த செல்வம் எவ்வாறு நீங்கிற்று என்பதனை அறியாதவாறு மாற்றினார்.

இவண் தாயனார் செல்வ வளத்தை இழந்து வறுமையுற்றார் என்பதாம்.

நல்நிலை - செல்வநிலை. இன்னல் - வறுமைத் துன்பம். முந்தை - ஆதி முதல்வன். வேத முதல்வர் - வேத நாயகன்; சிவபிரானைக் குறித்தது. அறியாமை - செல்வம் மறைந்த வழி தெரியாத படி 7

915. மேவு செல்வம் களிறுண் விளங்கனி
ஆவது ஆகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றஅத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார்.

தெளிவுரை: தாயனார்பால் இருந்த செல்வம் அனைத்தும் யானை உண்ட விளங்கனி போன்று முற்றுமாக அழியவும், உமையம்மையைப் பாகமாகக் கொண்ட சிவபிரானுக்கு முன்பு செய்து வந்த குற்றமில்லாத செயலை அவர் கைவிடாதவரானார்.

சிறப்புரை: விளாங்கனியின் உள்ளே காணப்பெறும் சுளைப்பகுதியானது, யானை என்று உரைக்கப்பெறும் நோய் தாக்கப் பெற்றால் அது வறண்டு விடும். இதுவே இவண் "களிறு உண் விளங்கனி" என்னுமாறு சாற்றப்பட்டது. இது பிறர் காணப்பெறாது விளாங்கனி பழுதுறல் போன்று தாயனாரின் செல்வம் பிறர் அறியாதவாறு மறைந்தது என்பதாம். மற்றும் செல்வம் நிலைத்த தன்மையுடையதன்று எனவும், அதன் ஈட்டமும், மறையும் எதிர்பாராதவாறு நிகழத் தக்கது எனவும் புலப்படுத்தும் வகையில் திருவள்ளுவர் திருக்குறல் 332இல்,

"கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்து அற்று."

என்று சாற்றியவாறும் காண்க.

களிறு - நோய் வகை. பாவை பங்கர் - உமா தேவியைப் பாகமாக உடைய சிவபிரான். தாவில் செய்கை - குறைவில்லாத திருத்தொண்டு. தவிர்ந்திலர் - விடாது செய்தவரானார். 8

916. அல்லல் நல்குரவு ஆயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலின் பெற்றன நாயனார்க்கு
ஒல்லை இன்னமு தாக்கொண்டு ஒழுகுவார்.

தெளிவுரை: துன்பம் தரும் வறுமையான நிலை வரக் கூலிக்கு நெல்லறுத்து மெய்யன்பினால் நல்ல செந்நெல்வகையைச் சிவபிரானுக்குத் திருவமுது செய்யும் தன்மையில் தாயனார் ஒழுகுவாராயினார்.

நல்குரவு - வறுமை. நல்ல செந்நெல் - உயர்ந்த வகையான சம்பா நெல். நாயனார் - சிவபிரான். ஒல்லை - விரைவில். 9

917. சாலி தேடி அறுத்து அவை தாம் பெறும்
கூலி எல்லாம் திரு அமு தாக் கொண்டு
நீல நெல் அரி கூலிகொண்டு உண்ணும் நாள்
மால்அ யற்கு அரியார் அது மாற்றுவார்.

தெளிவுரை: தாம் நெல்லறுத்துக் கூலியாகப் பெறும் சாலி நெல்லெல்லாம் மாலயனாதியர் அறிதற்கு அரியாச் சிவபிரானக்குத் திருவமுது ஆக்கிக் கார் நெல்லைக் கூலியாகக் கொண்டதைத் தாம் உண்ணும் உணவாக்கியும் ஒழுகலானார்.

நீல நெல் - கார் நெல். அரி கூலி - அறுவடைக் கூலி. மாலயற்கு அரியார் - சிவபிரான். அயன் - பிரமன். 10

செந்நெல் கூலியாகப் பெற்று நாயனார் சிவபிரானுக்கு அமுது செய்வித்தல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

918. நண்ணிய வயல்கள் எல்லாம்
நாள் தோறும் முன்னம் காண
வண்ணவார் கதிர்ச் செஞ் சாலி
ஆக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலார் அறுத்த கூலி
கொண் "டிஃது அடியேன் செய்த
புண்ணியம்" என்று போத
அமுதுசெய் விப்பா ரானார்.

தெளிவுரை: அவ்வூரில் உள்ள வயல்கள் யாவும் இதற்கு முன்பு காணப்பட்டதைவிட அதிகமாகச் செஞ்சாலி நெல் விளங்க மகிழ்ந்து நாயனார் அறுவடை செய்த கூலி நெல் கொண்டு, "இ.ஃது அடியேன் செய்த புண்ணியப் பேறு." என்று எண்ணி, இனிது சிவபிரானுக்கு உரிய திருவமுதாக்கி உவந்தார்.

இவண் திருவமுதுக்குரியதாகச் செந்நெல்லை ஆக்கியதால் தாம் உண்பதற்குரிய கார்நெல் வகை கிடைத்தற்கு அரிதாயிற்று என்பதாம்.

அண்ணலார் - தாயனார். போதஅமுது - அதிகமான திருவமுது. 11

919. வைகலும் உணவு இலாமை
மனைப்படப் பையினில் புக்கு
நைகரம் இல்லா அன்பின்
நங்கைகை அடகு கொய்து
பெய்கலத்து அமைத்து வைக்கப்
பெருந்தகை அருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணம்
திருப்பணி செய்யும் நாளில்;

தெளிவுரை: நாள்தோறும் நாயனார் உண்பதற்கு நியமம் கொண்டிருந்த கார் நெல் காணாமையால் மனையின் தோட்டத்தில் சென்று இகழ்தல் தன்மையில்லாத அன்பின் மிக்க மனைவியார் தம் கையால் கீரைகளைக் கொய்து சமைத்து, உண் கலத்தில் இட்டு வைக்கப் பெருந்தகையாளரான நாயனார் அருந்தித் தாம் படைக்கும் திருவமுதுத் திருத்தொண்டினைத் தடங்கலில்லாது சிறப்பாகச் செய்து வந்தார்.

நாளில் என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

செந்நெல் சிவபிரானுக்கு வழங்கிய தன்மையால் தாம் கார் நெல் பெறாத நிலையில் அரிசி உணவு கொள்ளாத தாயனார் பாங்கினை ஈண்டு நோக்குக.

வைகலும் - நாள்தோறும். படப்பை - தோட்டம். நைகரம் - இகழப்படும் தன்மை. அன்பின் நங்கை - தாயனார் துணைவியார். கை அடகு கொய்து - கைகளால் கீரை பறித்து. பெய்கலம் - உண்கலம். பெருந்தகை - தாயனார் நாயனார். 12

நாயனார் கீரையுணவின்றி நீர் அருந்தி இருத்தல்

920. மனைமருகு அடகு மாள
வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க
அமுது செய்து அன்ப னாரும்
வினைசெயல் முடித்துச் செல்ல
மேவுநாள் ஒருநாள் மிக்க
முனைவனார் தொண்டர்க்கு அங்கு
நிகழ்ந்தது மொழியப் பெற்றேன்.

தெளிவுரை: மனையின் பக்கத்தில் உள்ள கீரை வற்றிக் காய்ந்து அழிய வடமீன் போன்றவரான அருந்ததியென விளங்கும் கற்பிற் சிறந்த நாயனாரின் மனைவியார் நீரைவார்க்க, அதனையே உணவாக அமுது செய்து சிவபிரானுக்குத் திருவமுது செய்வித்து வரலானார்.

இவ்வாறு நீரையே உணவாகப் பருகித் திருத்தொண்டு செய்து வரும் நாளில் ஒருநாள் சிவபிரான் திருத்தொண்டரான தாயனார்க்கு ஆங்கு நிகழ்ந்ததை இனி உரைக்கும் பேறு பெற்றேன். இது கவிக்கூற்று.

அடகு - கீரை. மாள - இன்மையாக. வடநெடு மீன் - அருந்ததி. அனையவர் - அருந்ததி போன்ற கற்பின் சிறப்புடைய நாயனாரின் துணைவி. அன்பனார் - தாயனார். முனைவனார் - சிவபிரான். தொண்டர் - நாயனார்.

13

தாயனார் திருவமுதும் அவர் துணைவியார் பஞ்ச கவ்வியமும் ஏந்திச் செல்லுதல்

921. முன்புபோல் முதல்வ னாரை
அமுது செய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல்
அரிசி மா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர்
கூடையில் சுமந்து போதப்
பின்புபோம் மனைவி யார்ஆன்
பெற்றஅஞ்சு ஏந்திச் சென்றார்.

தெளிவுரை: தாம் முன்னர்ச் செய்து வந்தது போன்று சிவபிரானை அமுது செய்வித்தற்கு அன்பே வடிவமாகி விளங்குதல் எனத் தூய செந்நெல்லரிசி, மாவடு, கீரை ஆகியவற்றை ஒரு கூடையில் சுமந்து கொண்டு பிறவித் துன்பத்தைப் போக்கும் மனத்துடையவராகிய திருத்தொண்டர் முன்னே செல்ல, பின்னே அவர் துணைவியார் பஞ்ச கவ்வியத்தை ஏந்திச் சென்றார்.

சிறப்புரை: பேரன்பானது தாயனார் திருவடிவத்தைக் கொண்டு நிற்றலை "மூளும் அன்பு போல்" என்னும் கலைச் சொல் கொண்டு சாற்றப்படுதல் காண்க. இத்தன்மையில் கண்ணப்ப நாயனார் அன்பு உருவத்தில் திகழ்ந்ததைத் திருப்பாட்டு 753 - இல் (கண்ணப்ப நாயனார் புராணம் - 104) உரைத்தவாறும் காண்க.

முதல்வனார் - சிவபிரான். அன்பு போல் - அன்பு வடிவம் போன்று . துன்புபோம் - பிறவித் துன்பம் போக. ஆன் பெற்ற அஞ்சு - பசுவின் வாயிலாகப் பெறப்படும் பூசனைக்குரிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய ஐந்து.

14

நாயனார் பசிக் கலைப்பால் தளர்ச்சியடைந்து சாயத் திருவமுதுக்குரிய யாவும் சிதறித் தரையில் விழுதல்

922. போதரா நின்ற போது
புலர்ந்து கால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார்
மட்கலம் மூடு கையால்

காதலால் அணைத்தும் எல்லாம்
கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தம் தொண்டர்
போவது அங்கு இனி ஏன் என்று;

தெளிவுரை: இவ்வாறு நாயனார் செல்லும்போது பசிக்களைப்பால் சோர்ந்து கால் தளர்ந்து தவறிக் கீழே சாயத் தலைப்பட்டார். அந்நிலையைக் கண்டு, பின்னே பஞ்ச கவ்வியத்தை ஏந்திச் சென்ற அவர் மனைவியார் அப்பாத்திரத்தை மூடியுள்ள கையால் அன்புடன் தம் கணவர் கீழே விழாதபடி அணைத்துப் பற்ற, நாயனார் ஏந்திய கூடையிலிருந்த செந்நெல் அரிசி, கீரை, மாவடு என யாவும் தரையில் சிதறிப் பிளப்பில் விழுந்தன. அதனைக் கண்ட சிவபிரான் திருத்தொண்டர் "இனி அங்குப் போவது ஏன்?" என்று எண்ணினார்.

என்று என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

போதரா நின்ற போது - போகின்ற போது; சிவபிரானுக்குத் திருவமுது படைக்கச் செல்லும் தருணம். புலர்ந்து - பசியால் தளர்ந்து. மாதரார் - தாயனாரின் துணைவியார். மட்கலம் - பஞ்ச கவ்வியம் உடைய கலம். கமர் - தரைப் பிளப்பு. பூதநாதர் - சிவபிரான். தொண்டர் - தாயனார். 15

தாயனார் தமது கழுத்தை அரிதல்
- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

923. "நல்ல செங் கீரை தூய
மாவடு அரிசி சிந்த
அல்லல் தீர்த்து ஆள வல்லார்
அமுது செய்து அருளும் அப்பேறு
எல்லையில் தீமையேன் இங்கு
எய்திடப் பெற்றி லேன்" என்று
ஒல்லையில் அரிவாள் பூட்டி
ஊட்டியை அரியல் உற்றார்.

தெளிவுரை: நன்கு சமைக்கப்பட்ட கீரையும், தூய்மையான மாவடுவும், செந்நெல்லரிசியும் சிதற, பிறவித் துன்பத்தைப் போக்கி ஆட்கொள்ள வல்லவரான சிவபிரான் அமுது செய்தருளும் பேற்றினை அளவற்ற தீமையுடையவனாகிய அடியேன் அடையப் பெற்றிலனே என்று

பெரிதும் வருந்தி அரிவாளால் தம் கழுத்தை அரிந்து கொள்ள முனைந்தார்.

அல்லல் - பிறவித் துயர்; இவண் துன்பு போம் மனத் தொண்டர் என்று பாடல் எண் 921- இல் சுட்டியமையும் காண்க. ஒல்லை - விரைவு. ஊட்டி - கழுத்து; தொண்டையின் பக்கமான குரல்வளை என்க. அரியல் உற்றார் - அரியத் தொடங்கினார். என்பதாம். 16

924. "ஆட் கொள்ளும் ஐயர் தாம் இங்கு
அமுது செய் திலர்கொல்" என்னாப்
பூட்டிய அரிவாள் பற்றிப்
புரைஅற விரவும் அன்பு
காட்டிய நெறியின் உள்ளம்
தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியும் அரியா நின்றார்
உறுபிறப்பு அரிவார் ஓத்தார்.

தெளிவுரை: " பிறவி வேரை அரிபவரை ஒத்ததாயனார், தம்மை அடிமை கொள்ளும் தலைவரான சிவபிரான் ஈண்டு அமுது செய்திலரே" என்று பெரிதும் வருந்தியவராய்ப் பூட்டிய அரிவாளைப் பற்றிக் குற்றமற விரவிப் பரவும் அன்புள்ளம் கொண்டவராய்த் தம் கழுத்தின் குரல்வளையை அரிவாராயினார்.

சிறப்புரை: எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள சிவபிரான் இவ்விடத்தில் அமுது செய்திலரே என்னும் குறிப்புத் தோன்ற "இங்கு" என்று சுட்டுமாறு சாற்றப்படுதலாகவும் கொள்க.

ஐயர் - சிவபிரான். குற்றம் அற - ஊட்டி, தண்டு, கழுத்து ஆகியவற்றை ஒரு சேர அறுத்தல். உறுபிறப்பு - பிறவித் துன்பத்தினை அறுத்தல் போன்று அரிவாளால் அரியத் தொடங்கினார் என்பதாம். 17

சிவபிரான் திருக்கரம் தரைப் பிளப்பிலிருந்து தோன்றி தாயனார் கரத்தைப் பற்றுதல்

- இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்

925. மாசறு சிந்தை அன்பர்
கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற
அம்பலத்து ஆடும் ஐயர்

வீசிய செய்ய கையும்
மாவடு "விடேல் விடேல்" என்று
ஓசையும் கமரில் நின்றும்
ஒக்கவே எழுந்த தன்றே.

தெளிவுரை: மாசில்லாத சிந்தையுடைய அன்பரான தாயனார் தம் கழுத்தை அரியத் தொடங்கிய நிலையில், குற்றமற்ற வண்மையுடைய அடியவர் கையைத் தடுக்கும் வகையில் திருவம்பலத்துள் திருநடனம் புரியும் நடராசப் பெருமான் தாம் வீசியாடும் சிவந்த மலர் போன்ற கையால் பற்றினார். அதே போது, சிவபிரான் மாவடுவைக் கடித்துச் சுவைக்கின்ற "விடேல் விடேல்" என்னும் ஓசையும் தரைப் பிளப்பிலிருந்து எழுந்தது.

சிறப்புரை: தாயனார் தம் கழுத்தை அரிந்து கொண்டு உயிர் துறப்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் திருக்கை எழுந்து முற்பட்டுத் தடுக்கவும், இறைவன் திருவமுதை ஏற்று மாவடுவைக் கடிக்கும் ஒலியை எழுப்பவும், ஒரு சேரத் திருவருள் பாலித்தார் என்பதாம்.

அன்பர் - தானார். ஐயர் - தலைவர்; சிவபிரான்; இச்சீரிய தொடர் கொண்டு ஈசனைச் சுட்டியமை திருப்பாட்டு 387 - இல் (திருநீலகண்ட நாயனார் புராணம் - 28) கூறியவாறும் காண்க. விடேல் - மாவடுவைக் கடித்துச் சுவைக்கும் ஓசைக் குறிப்பு. கமர் - தரைப் பிளப்பு. ஒக்க - ஒரு சேர. 19

926. திருக்கை சென்று அரிவாள் பற்றும்
திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடு அங்கு ஊறு நீங்க
வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத்
தம்பிரான் பேணித் தந்த
அருள்பெரும் கருணை நோக்கி
அஞ்சலி கூப்பி நின்று;

தெளிவுரை: சிவபிரான் திருக்கையானது அரிவாளைப் பற்றும் தாயனாரின் வலிமையான கையைப் பிடித்தபோது துணுக்கென ஊறு நீங்கப் பெற்ற அடியார் வெவ்வினை கெட, மகிழ்ச்சி நெடிது விளங்க, ஈசன் புரிந்த பெருங் கருணையை நோக்கிக் கைகூப்பி நின்றார்.

நின்று என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

திருக்கை - சிவபிரான் திருக்கை. திண்கை - இறைவன் திருத்தொண்டுக்குரிய செந்நெல்லை அரிந்த உறுதியை ஈண்டு காண்க. தம்பிரான் - சிவபிரான். 19

தாயனார் ஈசனைப் போற்றித் துதித்தல்

927. அடியனேன் அறிவிலாமை
கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங்கு
அழுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாகம் ஆன
தூயநல் சோதி போற்றி
பொடி யணி பவள மேனிப்
புரிசடைப் புராண போற்றி.

தெளிவுரை: தாயனார், "அடியவனின் மெய்யுணர்வு இல்லாத தன்மையைக் கண்டும் அடிமை கொள்ளுமாறு பூமியின் வெடிப்பின் இடையே வந்து இங்குத் திருவமுது செய்த பரமனே போற்றி! உடுக்கை போன்ற மெலிந்த இடையுடைய உமாதேவியைப் பாகமாக உடைய தூய நற்சோதியே போற்றி! திருவெண்ணீறு பொலியப் பூசிய பவளம் போன்ற சிவந்த மேனியும், சுருள் கொண்டு விளங்கும் சடைமுடியும் உடைய தொன்மையனே போற்றி!" என்று துதித்தார்.

அறிவு - மெய்யுணர்வு. படி - உலகம். கமர் - நிலவெடிப்பு. துடி - உடுக்கை. பொடி - திருவெண்ணீறு. பவளமேனி - பவளம் போல சிவந்த. 20

சிவபிரான் இடபவாகனத்தராய்த் தோன்றி அருள் செய்து மறைதல்

928. என்று அவர் போற்றி செய்ய
இடபவா கனராய்த் தோன்றி
"நன்று நீ புரிந்த செய்கை
நன்னுத லுடனே கூட
என்றும் நம் உலகில் வாழ்வாய்"
என்று அவர் உடனே நண்ண
மன்றுளே ஆடும் ஐயர்
மழவிடை உகைத்துச் சென்றார்.

தெளிவுரை: தாயனார் ஈசனைத் துதித்துப் போற்றவும் எம்பெருமான் இடபவாகனராகத் தோன்றி, "நீ புரிந்த செய்கை நன்று. உன் மனைவியோடு நம்முலகில் எப்போதும் வாழ்வாய்." என்று அருளிச் செய்தார். அக்கணத்திலேயே நாயனார் தம் திருமனைவியாரோடு சிவலோகத்தையடைய, தில்லையம்பலத்தில் திருநடனம் புரியும் தலைவர் இளமையான இடபத்தோடு தம்உருக் கரந்தார்.

அவர் - நாயனார். நன்னுதல் - நாயனாரின் மனைவியார். நம்முலகு - சிவலோகம். ஐயர் - சிவபிரான். மழவிடை - இளமையான இடபம். 21

அரிவாட்டாயர் என்னும் திருநாமத்தின் சிறப்புரைத்தல்

929. பரிவுறு சிந்தை அன்பர்
பரம்பொரு ளாகி உள்ள
பெரியவர் அமுது செய்யப்
பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேல் எனாமுன்
வன்கழுத்து அரிவாள் பூட்டி
அரிதலால் **அரிவாட் டாயர்**
ஆயினார் தூய நாமம்.

தெளிவுரை: சிந்தையில் அன்பு விளங்கும் அன்பர், பரம்பொருளாகிய பெரியோனான சிவபிரான் திருவமுது செய்யும் வகையில் பேற்றினைப் பெறவில்லையே என்று வருந்தியபோது, ஈசன் மாவடுவைக் கடித்து விடேல் என்னும் ஓசையை எழுப்புவதன் முன்னர், அரிவாளைக் கழுத்தில் பூட்டி அரிதலால் அரிவாள் தாயர் என்பது அவர்தம் தூய பெயர் ஆயிற்று.

சிறப்புரை: சிவபிரானைப் பெரியவர் எனப் போற்றப்பட்டமை காண்க. இத்தன்மையில் மாணிக்கவாசகர், திருவாசகம், திருச்சதகம், திருப்பாட்டு 18 இல்,

"அரியானே யாவர்க்கும்
அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே"

என்று அருளியமை காண்க.

அன்பர் - தாயனார். பெரியவர் - சிவபிரான். விடேல் - மாவடுவைக் கடிக்கும் ஓசை. அரிவாள் தாயர் - அரிவாட்டாயர் ஆயிற்று. நாமம் - பெயர்.

22

இறைவன் நல்கிய மாவடு ஓசையைக் கேட்ட நாயனாரைத் தொழுது ஆனாய நாயனார் செய்கையை அறிந்தவாறு வாழ்த்தலுற்றேன் கவிக்கூற்று

930. முன்னிலை கமரே யாக
முதல்வனார் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச்
செவியுற **வடுவின் ஓசை**
அந்நிலை கேட்ட தொண்டர்
அடிஇணை தொழுதி வாழ்த்தி
மன்னும் **ஆனாயர்** செய்கை
அறிந்தவா வழுத்தல் உற்றேன்.

தெளிவுரை: செந்நெல் அரிசி, கீரை, மாவடு ஆகியன தரைப் பிளப்பில் சிந்த, அத்தகைய தரைப் பிளப்பே முன்னிலையாகக் கொண்டு இறைவனால் கடிப்புண்ட மாவடுவின் ஓசை கேட்ட அரிவாட்டாய நாயனாரின் திருச்செயலை அறிந்தவாறு வாழ்த்தி உரைக்கலானேன்.

இது கவிக் கூற்று.

முன்னிலை - நேரிடமாக; முன் இலை என்னுமாறு கொண்டு முன்னே உள்ள உண்கலனாகக் கொள்ளுதலும் ஆம். முதல்வனார் - சிவபிரான். வடு - மாவடு. தொண்டர் - அரிவாட்டாய நாயனார். அடிஇணை - திருவடி. ஆனாயர் - ஆனாய நாயனார்.

அரிவாட்டாய நாயனார் புராணம் நிறைவுற்றது.

20. ஆனாய நாயனார் புராணம்

புராண வரலாற்றுச் சுருக்கம் :

மழநாட்டில் திருமங்கலம் என்னும் பகுதியில் ஆயர் குலத்தில் தோன்றியவர் ஆனாய நாயனார். அவர் சிவபிரான் பால் பேரன்பு பூண்டவர். பசுக் கூட்டங்களைக் காட்டுப் பகுதிக்கு ஓட்டிச் சென்று

மேய்த்துக் காப்பதோடு பண்ணிசையில் வல்லவராய் வேய்ங்குழலை வாசிப்பதும் ஆனாயரின் வழக்கமாய் இருந்தது.

கார் காலத்தில் ஒரு நாள் ஆனாயர் பூத்துக் குலுங்கும் கொன்றை மரத்தைக் கண்டார். உடனே அவர் திருமனம் சிவபிரான் மீது இலயித்துவிட்டது. புல்லாங்குழலை எடுத்துத் திருவைந்தெழுத்தினைக் குழலில் ஏற்றி வாசிக்கலானார்.

பசுக் கூட்டங்கள் அவ் இசையில் ஆழ்ந்து புல் மேய்தலை விடுத்து நின்றன. இளங்கன்றுகள் பாலூட்டுதலை மறந்து அசைவின்றி நின்றன. பக்கலில் உள்ள மாடு மேய்ப்பவர்கள் வந்து அசையாது நின்று விட்டார்கள். தேவர்கள், விஞ்சையர்கள் முதலானோர் விமானங்களில் வந்தார்கள். பாதாள உலகில் உள்ளவர்கள் பிலங்கள் வழியாக வந்தார்கள். பகை கொண்ட காட்டு மிருகங்கள் பகை மறந்து ஒன்றையொன்று கூடியிருந்து மகிழ்ந்தன. காட்டாறு முதலான ஆறுகளும் சலனம் சிறிதுமின்றி ஒலி செய்யாது நின்றன. முகில்களும், பறவைகளும் அசைவற்று நிலவின.

இவ்வாறு யாவும் ஆனாயரின் இசை கேட்டு அயர்ந்து நின்ற போது சிவபிரான் ஆனாயர் முன்னே தோன்றி, காட்சி நல்கி, "இத்தன்மையிலேயே நம்பால் அணைவாய்." எனச் சாற்றினார்.

நாயனார் அங்ஙனமே சிவலோகத்தையடைந்து பேரின்பம் பெற்றார்.

மழ நாட்டுச் சிறப்புரைத்தல்

- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

கலித்துறை

931. மாடு விரைப்பொலி சோலையின்
வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை
வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின்
மேகம் இளைத் தேற
நீடு வளர்த்தது மேல்மழ
நாடெனும் நீர் நாடு.

தெளிவுரை: பக்கங்களில் விளங்கும் நறுமணம் கமழும் பூஞ்சோலைகளில் வானத்தில் விளங்கும் நிலவின் ஒளி ஏறவும், அரிகள் குவிக்கப்பட்டு மேவும் வயல்களின் வரப்புகளில் வண்டுகள் ஏறி மொய்க்கவும், பெருமை மிகவுடைய நெற்போர்களில் மேகம் இளைத்து ஏறவும், மிகவும் வளமை பெற்று விளங்குவது மேன்மையுடைய மழ நாடு என்னும் நீர்வளம் உடைய நாடு.

மாடு - பக்கம். சூடு - நெல்லரிகள். வரம்பு. ஈடு - பெருமை. போர் - நெற்போர். மேகம் இளைத்து - நிழல் தரும் வகையில் மெலிந்த மேகம் என்க. நீடு வளம் - பெரு வளம். நீர் நாடு - நீர்வளம் மிகுந்த நாடு. மேல் மழநாடு - மேன்மையுடைய மழ நாடு. 1

932. நீவி நிதம்ப உழத்தியர்
நெய்க்குழல மைச்சூழல்
மேவி உறங்குவ மென் சிறை
வண்டு விரைக் கஞ்சப்
பூவில் உறங்குவ நீள்கயல்
பூமலி தேமாவின்
காவின் நறுங்குளிர் நீழல்
உறங்குவ கார்மேதி.

தெளிவுரை: ஆங்குக் கொய்சகம் வைத்து உடுத்திய அல்குலையுடைய உழவர் பெண்களின் நெய் பூசப்பெற்ற கரிய கூந்தலில் மென்மையான சிறகுகளையுடைய வண்டுகள் மொய்க்கும். நறுமணம் உடைய தாமரை மலரில் நீண்ட கயல் மீன்கள் விளங்கும். இனிய நீண்ட மாமரச் சோலைகளின் குளிர்ந்த நிழலில் கரிய எருமைகள் உறங்கும்.

நீவி - ஆடையின் கொய்சகம். நிதம்பம் - அல்குல். நெய்க்குழல் மை - நெய் தடவப் பெற்ற கருங்கூந்தல். மென் சிறை - மென்மையுடைய சிறகுகள். விரை - நறுமணம். கஞ்சப் பூ - தாமரைப் பூ மலி - பூக்கள் நிறைந்த. தேமா - இனிய மாமரம். உறங்குவ - இது மொய்க்கும், விளங்கும், உறங்கும் என்னும் பொருளில் வந்தவாறு நோக்குக. கார்மேதி - கரிய எருமைகள். 2

933. வன்னிலை மள்ளர் உகைப்ப
எழுந்த மரக்கோவைப்
பன்முறை வந்தெழும் ஓசை
பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்துறை
வாவி அதன் பாலைக்
கன்னல் அடும்புகையால் முகில்
செய்வ கருப்பாலை.

தெளிவுரை: வலிமையுடைய உழவர்கள் கரும்பின் சாறு எடுக்கும் வகையில் இணை மரங்களைக் கொண்டு மாடுகளைப் பூட்டி அதட்டி ஓட்டுவதால் எழுகின்ற ஓசை முழக்கமும், அன்னம் பயிலும் நீர் நிலைகளின் பக்கத்தில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும்போது எழுகின்ற புகையும், அங்கு மேகம் விளங்குவதன் தோற்றத்தைக் காட்டும்.

சாறு பிழியும் இயந்திரத்தின் ஒலியும், சாற்றைக் காய்ச்சுவதால் உண்டாக்கும் தன்மையாயிற்று என்பதாம்.

வன்னிலை - வலிமையுடைமை. மள்ளர் - உழவர். மரக்கோவை - கருப்பஞ்சாறு பிழிந்தெடுப்பதற்கு என அமைக்கப்பெறும் இயந்திரம். தண்துறை வாவி - குளிர்ந்த நீர்நிலை. கன்னல் - கருப்பஞ்சாறு. அடும்புகை - காய்ச்சுவதால் உண்டாகும் புகை. முகில் - மேகம். 3

934. பொங்கிய மாநதி நீடலை
உந்து புனல் சங்கம்
துங்க இலைக்கத லிப்புதல்
மீது தொடக்கிப் போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி
ஊடு தவழ்ந் தேறிப்
பைங்கமு கின்தலை முத்தம்
உதிர்க்குவ பாளையென.

தெளிவுரை: பெருகிப் பொங்கியோடும் பேராற்றின் நீண்ட அலைகளால் உந்தப்பெற்ற சங்குகள் பெரிய இலைகள் கொண்ட வாழைப்புதரின் வழியாகப் படரும் கொடிகள் ஊடே மேலும் வளர்ந்து பாக்கு மரங்களில் உள்ள பாறைகளில் படர, அவற்றில் வெண் முத்துக்களைச் சொரியும்.

ஆற்றில் உள்ள சங்குகள் பசுமையுடைய பாக்குமரத்தின் உச்சியில் முத்துக்களைச் சொரியும் என்பதாம். இதன் வழி நீர்வளம், வாழை மரங்களின் வளம், பாக்கு மரங்களின் வளம், முதலான செல்வ வளத்தை இயம்புவதாயிற்று.

இதுவரை மருத நில வளத்தின் சிறப்பு உரைத்தலாயிற்று.

மாநதி - பேராறு. புனல் சங்கம் - நீரில் உள்ள சங்குகள். துங்க - பெரிய. கதலி - வாழை. பாசடை - பசுமையான இலைகள். பைங் கமுகு - பசுமையான பாக்கு மரங்கள். முத்தம் - முத்துக்கள். 4

935. அல்லி மலர்ப்பழ னத்தயல்
நாகிள ஆன் ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின்
உழக்கு குழக் கன்று
கொல்லை மடக்குல மான்மறி
யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை
உடுத்த மருங்கு ஓர்பால்.

தெளிவுரை: அல்லி மரங்கள் விளங்கும் வயல்களையடுத்து மிக்க இளமையான பசு ஈன்ற இளங்கன்று கருவின் முழுப் பையை உதைத்து மிதித்துக் கலக்கி, கொல்லையில் உள்ள மான் கன்றுகளின் கூட்டத்தோடு குதித்து ஓடும். இத்தகைய சிறப்புடைய முல்லை நிலத்தின் வளம் காட்டும் பகுதியும் ஒரு பக்கம் விளங்கும்.

பசுவின் கன்று துள்ளிக் குதிக்கும் செய்கையானனது மான்கன்றுகளின் செயல்களுக்கு ஒப்புமை கூறியமை காண்க.

பழனம் - வயல். நாகிள ஆன் - இளமையுடைய பசு. ஒல்லை - விரைவில். குழக் கன்று - ஈன்ற கன்று. மான் மறி - மான் கன்று. 5

936. கண்மலர் காவிகள் பாய
இருப்பன கார் முல்லைத்
தண் நகை வெண்முகை மேவு
சுரும்பு தடஞ்சாலிப்
பண்ணை எழும்கயல் பாய
இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய
வன்சிறை வண்டானம்.

தெளிவுரை: கார்காலத்தில் விளங்கும் முல்லைக் கொடியில் மலரும் மாதர்களின் பற்களைப் போன்ற வெண்மையான அரும்புகளில் ரீங்காரம் செய்யும் வண்டுகள், கண்களைப் போன்று மலரும் குவளை மலரில் பாய்வன. காயாமரத்தின் அழகிய கிளையின் மீது விளங்கும் வலிமையான சிறகுகளையுடைய நாரைகள், சாலி நெல் பயிராகும் அகன்ற நிலத்தினின்று மேலே துள்ளியெழும் கயல் மீன்களில் பாய்வன.

வண்டுகள் நீர்நிலைகளில் உள்ள மலர்களில் உள்ள தேனை அருந்தியும், நாரைகள் வயல்களிலுள்ள மீனை அருந்தியும் மகிழ்ந்தன என்பது கருத்து.

கண்மலர்காவிகள் - மாதர் கண்கள் போன்ற குவளை மலர்கள்; கள் மலர் எனக் கொண்டு தேன் எனவும் பொருள் அமையும். நகை - பல். வெண் முகை - முல்லை அரும்பு. சுரும்பு - வண்டு. பண்ணை - வயல். கயல் - மீன் வகை. காயா - ஒரு வகை மரம். சினை - மரக்கிளை. வன் சிறை - வலிமையான சிறகுகள். வண்டானம் - நாரை. 6

937. பொங்கரில் வண்டு புறம்பலை
சோலைகள் மேல்ஓடும்
வெங்கதிர் தங்க விளங்கிய
மேல் மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கலம்
ஆக அதற்கே ஓர்
மங்கலம் ஆனது மங்கலம்
ஆகிய வாழ் மூதூர்.

தெளிவுரை: மரக்கொம்புகளைச் சூழ்ந்து வண்டு ரீங்காரம் செய்யவும், புறத்தேயுள்ள சோலைகளில் சூரியனுடைய வெம்மையான கதிர்கள் தங்கவும் விளங்கிய மேல் மழ நாடு என்னும் பகுதியில் அந்நாட்டின் அருமையுடைய ஆபரணமாகி ஓர் அழகிய மங்கல அணி போன்று விளங்குவது தொன்மையான திருமங்கலம் என்னும் ஊர்.

சிறப்புரை: இவண், நாட்டிற்கு அணிகலமாகத் திகழும் மங்கலம் என்னும் ஊர், தன் பெயருக்கேற்ப மங்கலப் பொருளாகத் திகழ்தல் ஆயிற்று என்பதாம். இதற்கு அடிப்படையாக விளங்குவது இத்திருத்தலத்தில் தோன்றிய ஆனாய நாயனார் என்பது குறிப்பால் உணர்த்தப்படுவது என்க.

பொங்கர் - மரக்கொம்பு; மலை. புறம்பு - பக்கம். செங்கதிர் - சூரியன். மண் - பூமி. அருங்கலம் - ஆபரணம். மங்கலம் - முன்னது சுபம் தரும் பொருளையும், பின்னது ஊர்ப் பெயரையும் குறித்தது. 7

ஆனாயர் சிறப்புரைத்தல்

- இது முதல் 7 பாடல்கள் ஒரு தொடர்

938. ஒப்பில் பெருங்குடி நீடிய
தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி
அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின்
மலிந்தது சீர்மேவும்
அப்பதி **மன்னிய ஆயர்**
குலத்தவர் ஆனாயர்.

தெளிவுரை: ஒப்பற்ற பெருமைக்குரிய குடிமக்கள் நீண்ட காலம் இருந்து வாழும் தன்மையில் தவறுதல் நேராத பெருவளங்கள் பெருக்கி அறம்புரியும் சால்பில் சீர்மேவும் திருமங்கலம் என்னும் ஊரில் பெருமைக்குரிய ஆயர் குலத்தினராய் ஆனாயர் என்பவர் விளங்கினார்.

ஓவாமே - குறையாது. தப்பில் - தவறாத. மன்னிய - பெருமைக்குரிய; இதில் சிவபூசைக்குரிய பஞ்சகவ்வியம் பசுவிலிருந்து பெறப்படுதலாலும் அப்பசுக்களைப் பாதுகாப்பவர் ஆயர் குலத்தவராதலாலும் மன்னிய என்னும் அடை மொழி சாற்றப்பட்டது. இதனை நாயனார்க்கு ஆக்கலும் அமையும். 8

939. **ஆயர் குலத்தை விளக்கிட**
வந்துதயம் செய்தார்
தூய சுடர்த்திரு நீறு
விரும்பு தொழும்பு உள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்தும்
மனத்தின் வினைப் பாலின்
பேயுடன் ஆடு பிரானடி
அல்லது பேணாதார்.

தெளிவுரை: ஆனாயர் என்னும் திருத்தொண்டர் ஆயர்குலத்தின் புகழ்விளங்குமாறு இப்பூவுலகத்தில் தோன்றியவராய் விளங்கித் தூய்மை செய்யும் திருநீறு அணிந்து, விருப்புடன் சிவத்தொண்டு செய்பவராய் இருந்தார். அவர் மனத்தாலும், வாக்காலும், செயலாலும் பேயோடு ஆடுகின்ற சிவபிரான் திருவடியை அன்றி வேறு எதன்பாலும் பற்றின்றி ஒழுகுவாராயினார்.

சிறப்புரை: ஆயர் குலத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் நாயனார் அக்குலத்தின்கண் தோன்றியமை சாற்றப்பட்டது. இத்தன்மையில் சிவபிரானை ஏத்தும் அடியவர்கள் குலப்பெருமைக்கு உரியவராவர் என்பதனைத் திருஞானசம்பந்தர், முதல் திருமுறை, சிவபுரத் திருப்பதிகத்தில்,

"சுருதிகள் பலநல முதல் கலை துகள்அறு
வகை பயில் வொடு மிகு
உருவியல் உலகவை புகழ்தர வழியொழுகு
மெய்உறு பொறி ஒழி
அருதவ முயல்பவர் தனதடி அடைவகை
நினை அரன் உறை பதி
திருவருள் சிவபுர நினைப்பவர் திகழ்குலன்
நிலனிடை நிகழுமே."

என்று அருளியவாறும் காண்க.

சிவபிரான் பேயோடு ஆடுகின்ற தன்மையானது, "பேயுடன் ஆடு பிரான்" என்று சாற்றப்பட்டது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கடவூர் மயானம் திருப்பதிகத்தில்,

"காயும் புலியின் அதளுடையர்
கண்டர் எண்தோள் கடவூரர்
தாயும் தந்தை பல்லுயிர்க்கும்
தாமே ஆய தலைவனார்
பாயும் விடையொன்றது ஏறிப்
பலி தேர்ந்து உண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே."

என்று அருளிச் செய்தமை காண்க.

உதயம் செய்தார் - தோன்றினார். தூய சுடர் - ஞான ஒளி. தொழும்பு - தொண்டு. வினைப்பால் - செய்கை; இது மனம், வாக்கு, காயம் ஆகிய செய்கை. பிரான் அடி - சிவபிரான் திருவடி. பேணாதார் - விரும்பி ஏத்தாதவர். 9

940. ஆனிரை கூட அகன்புற
வில்கொடு சென் றேறிக்
கானுறை தீய விலங்குறு
நோய்கள் கடிந்தெங்கும்

தூநறு மென்புல் அருந்தி
விரும்பிய தூநீர் உண்டு
ஊனமில் ஆயம் உலப்பில
பல்க அளித்துள்ளார்

தெளிவுரை: அத்தகைய சீலம்மிக்க ஆனாயர் பசுக் கூட்டங்களை அகன்ற முல்லை நிலக் கானகத்திற்கு ஓட்டிச் சென்று விலங்குகள் மற்றும் நோய்களால் நேரக்கூடிய துன்பங்களை நாடவொட்டாது பாதுகாத்து, மென்மையுடைய புல்லை மேயவும், தூய நீரை அருந்தவும் செய்து ஆவினங்கள் பலவாகிப் பெருகுமாறு காத்து வந்தார்.

ஆநிரை - பசுக்கூட்டம். புறவு - முல்லை நிலம். கான் - காடு. கடிந்து - நீக்கி. ஆயம் உலப்பில் - எண்ணற்ற பசுக் கூட்டங்கள். பல்க - பெருக. 10

941. கன்றொடு பால்மறை நாகு
கறப்பன பால் ஆவும்
புன்தலை மென்சினை ஆனொடு
நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும்
இனம் தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ
லுடன்பல தோழங்கள்.

தெளிவுரை: கன்றொடு விளங்கும் பால் மறந்த பசு, கறவையுடைய பசு, சிறிய தலையுடைய சினைப்பசு, அதிகமாக விளங்கும் கன்றை ஈன்ற பசு, ஆகியவற்றோடு வெற்றி மேவும் காளை மாடுகள் ஆகியன யாவும் இனம் வகையாக நிறைந்து நெருங்கி மேவுவனவாய்ப் பல மாட்டுக் கொட்டில்கள் இருந்தன.

பால் மறை நாகு - பால் மறந்த இளம் பசு. பால் ஆ - பால் கறக்கும் பசு. புனிற்று ஆ - கன்றை அப்போது ஈன்ற பசு. விடைக்குலம் - காளை மாடுகள். தோழம் - மாட்டுக் கொட்டில். 11

942. ஆவின் நிரைக்குலம் அப்படி
பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட
ஆயர் குலம் பேணும்
காவலர் தம்பெரு மானடி
அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல்
வாசனை மேல் கொண்டார்.

தெளிவுரை: பசுக் கூட்டங்கள் இவ்வாறு வளர்ந்து பெருக அவற்றை அன்புடன் மேய்க்கும் கோவலர்கள், ஆயர்குலத் தலைவராகிய ஆனாயர், தம் தலைவரான சிவபிரான் பால் பேரன்பு பூண்டு இசையில் விளங்கும் துளைக் கருவியான வேய்ங்குழலைச் செய்து அதனை வாசிக்கலானார்.

பல்க- பெருக. கோவலர் - மாடு மேய்ப்பவர். குலம் பேணும் காவலர் - ஆனாயர். கானம் - இசை. கருவிக் குழல் - வேய்ங்குழல்; புல்லாங்குழல். வாசனை - வாசித்தல். 12

கொச்சகக் கலி

943. முந்தைமறை நூல் மரபின்
மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தம் முதல் நாலிரண்டில்
அரிந்து நரம்பு உறுதானம்
வந்த துளை நிரையாக்கி
வாயு முதல் வழங்குதுளை
அந்த மில்சீர் இடையீட்டின்
அங்குலி எண் களின் அமைத்து;

தெளிவுரை: பழைமையான இசை மொழியப் பெறும் வேத நூல்களில் உள்ளவாறு மூங்கில் தண்டினை எடுத்து நுனியில் நான்கு பங்கும், அடியில் இரண்டு பங்கும் வெட்டியெடுத்து இடைப்பட்ட பகுதியில் சுரங்கள் எழுகின்ற தானங்களில் அங்குல அளவில் கணக்கிட்டுத் துளைகளை வரிசைப்படுத்தி, முதற்கண் காற்றினை உண்டாக்கும், தனித்துளையை உண்டாக்கி ஆனாயர் வேய்ங்குழலை அமைத்தார்.

மறை நூல் - இசை பற்றிச் சாற்றும் வேத நூல். வேய் - மூங்கில். நிரையாக்கி - வரிசைப்படுத்தி. வாயு - காற்று. அங்குலி எண் - அங்குலக் கணக்கு. அமைத்து என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 13

944. எடுத்த குழல் கருவியினில்
எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்த முறை ஏழிசையின்
சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாம்
தங்கவரும் தம் கருணை
அடுத்த இசை அமுதளித்துச்
செல்கின்றார் அங்கொரு நாள்;

தெளிவுரை: இவ்வாறு அமைத்த வேய்ங்குழலில் சிவபிரான் திருவைந்தெழுத்தைத் தொடுத்து முறையாக அமைந்த ஏழிசையின் சுருதி பெறுமாறு வாசித்து, அதனால் வேறு புறம்பான வழியில் சராசரங்கள் யாவும் செல்லவொட்டாது தடுத்துக் கருணை விளங்கும் இசையமுதைப் பொழியலானார். இவ்வாறு நாள் தோறும் ஒழுகலானார்.

அங்கொரு நாள் என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டுக.

குழல் கருவி - வேய்ங்குழல். எழுத்தஞ்சு - தூல பஞ்சாட்சரமான நமசிவாய. ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. 14

ஆனிரைகளை மேய்க்கப் புறம் போந்த ஆனாயரின் திருக்கோலத்தை உரைத்தல்

- இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

945. வாசமலர்ப் பிணைபொங்க
மயிர்நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையின்
செறிகண்ணித் தொடை செருகிப்
பாசிலை மென்கொடியின் வடம்
பயில நறு விலிபுனைந்து
காசுடை நாண் அதற்கயலே
கருஞ்சுருளின் புறம்கட்டி;

தெளிவுரை: நறுமணம் கமழும் மலர்மாலையானது தலை மயிரைக் கோதி உச்சியில் முடித்து விளங்கத் தலைமாலையும் நெருக்கமாகத் தரித்துப் பசுமையான இலைகளையுடைய கொடியையும் பொற்காசு முடிக்கப்பெற்ற கயிறும் அதற்கு அடுத்துக் கருமையான சுருள் முடியைப் புறத்தே கட்டி, ஆனாயர் விளங்கினார்.

புறம் கட்டி என்பதனை அடுத்த பாடலுடன் கூட்டிப் பொருத்துக.

மலர்ப்பிணை - பூமாலை. நுழுதி - கோதி. மருங்கு - பக்கம். சிகழிகை - உச்சி. கண்ணித் தொடை - தலை மாலை. பாசிலை - பசுமையான இலை. காசு - பொற்காசு. கருஞ்சுருள் - கருமையுடைய சுருண்ட தலைமுடி. 15

946. வெண்கோடல் இலைச் சுருளில்
பைந்தோட்டு விரைத் தோன்றித்
தண்கோல மலர் புனைந்த
வடிகாதின் ஒளிதயங்கத்
திண்கோல நெற்றியின் மேல்
திருநீற்றின் ஒளி கண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக்
கவின் விளங்க மிசை யணிந்து;

தெளிவுரை: வெண்காந்தள் இலைச்சுருளில் பசுமை மணமும், செங்காந்தளின் தன்மையும் பொருந்தச் சூடிய அழகிய காதின் ஒளி விளங்க, அழகிய உறுதியான நெற்றியின் மீது பூசப்பெற்ற திருவெண்ணீற்றின் ஒளியானது கண்டோரைக் கவரச் செய்யும் தன்மையில் நாயனார் விளங்கினார்.

அணிந்து என்பதனை அடுத்த செய்யுளுடன் கூட்டுக.

வெண் கோடல் - வெண் காந்தள். விரை - நறுமணம். வடிகாது - அழகிய காது. ஒளி தயங்க - ஒளி வீச. திண் - உறுதி. கவின் - அழகு. 16

947. நிறைந்த நீறு அணி மார்பின்
நிரை முல்லை முகை சுருக்கிச்
செறிந்த புனை வடம் தாழத்
திரள் தோளின் புடைஅலங்கல்
அறைந்த சுரும்பு இசை அரும்ப
அரைஉடுத்த மரவுரியின்
புறம் தழையின் மலிதானைப்
பூம்பட்டுப் பொலிந்தசைய;

தெளிவுரை: நிறைவை நல்கும் வளமுடைய திரு நீறு அணியப் பெற்ற திருமார்பில் முல்லை அரும்புகளை நெருக்கமாகக் கட்டி மாலையாக அமைத்துக் கழுத்தில் தாழுமாறு விளங்கத் திரட்சியான தோளின் பக்கத்தில் விளங்கும் பூமாலைகளில் வண்டுகள் இசையோடு ரீங்காரம் செய்ய, அரையில் மரவுரியும் இதனை அடுத்துத் தழையாலான தானையாகிய பூம்பட்டுப் பொலிந்தசைய, ஆனாயர் விளங்கினார்.

பொலிந்தசைய என்பதனை அடுத்த செய்யுளோடு கூட்டுக.

முல்லை முகை - முல்லையரும்பு. புனை வடம் - புனையப்பெற்ற மாலை. அலங்கல் - பூமாலை. இசை அரும்ப - இசைத்து ரீங்காரம் செய்ய. மரவுரி - மரப்பட்டையால் செய்யப்பட்ட ஆடை வகை. 17

948. சேவடியில் தொடு தோலும்
செங்கையினில் வெண்கோலும்
மேவும் இசை வேய்ங் குழலும்
மிக விளங்க வினை செய்யும்
காவல்புரி வல்லாயர்
கன்றுடைஆன் நிரைசூழப்
பூஅலர்தார்க் கோவலனார்
நிரைகாக்கப் புறம் போந்தார்.

தெளிவுரை:: திருப்பாதத்தில் செருப்பும், சிவந்த கையில் வெண் கோலும், இசையெழுப்பும் புல்லாங்குழலும் பெருமையுடன் விளங்க, ஏவல் செய்யும் வகையிலும், காவல் புரியும் வகையிலும் பணியாற்றும் வலிமையுடைய ஆயர்களும், கன்றுடைய பசுக் கூட்டம் சூழப் பூக்களால் ஆன மாலை தரித்த ஆனாயர் பசுக்களை மேய்க்கும் பொருட்டு வெளியே புறப்பட்டார்.

சேவடி - திருப்பாதம். தொடு தோல் - காற் செருப்பு. வெண்கோல் - மாடு மேய்த்தலுக்குரிய கோல் - வல்லாயர் - காட்டு விலங்குகளினின்றும் பசுக்கூட்டங்களைப் பாதுகாக்கும் வலிமை மிகுந்த ஆயர்குல ஆடவர்கள். தார் - மாலை. கோவலனார் - ஆனாய நாயனார். 18

கார்காலம் வருதலை உரைத்தல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

949. நீலமா மஞ்ஞை ஏங்க
நிறைக் கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகைஏர் முல்லை
கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலும்மின் இடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீடு அரங்கில் ஆடக்
காரெனும் பருவ நல்லாள்.

தெளிவுரை: நீலவண்ண மயில்கள் அகவ, வரிகையாக விளங்கும் கொடிகளைச் சூழ்ந்து சுழலும் வண்டுகள் முல்லைப் பண்ணைப்பாட, இந்திர கோபம் என்னும் சிவந்த பவளம் போன்ற வாயில் வெண்பல் போன்று முல்லையரும்புகள் மலர, மின்னல் போன்ற இடையும், மாலையணிந்து சுமக்கின்ற மார்பகம் அசையும் வகையில் மாலைப்பொழுதும், உலகமாகிய அரங்கில் ஆடுகின்ற கார்ப்பருவம் என்னும் நங்கை வந்தடைந்தாள்.

சிறப்புரை: கார்ப் பருவம் என்னும் மங்கைக்கு நீல வண்ணமயில் குரலாகவும், வண்டுகளின் ரீங்காரம் முல்லைப் பண்ணாகவும், முல்லையரும்பு வெண் பல்லாகவும், இந்திர கோபம் வாய் இதழாகவும், மாலைப் பொழுது தனங்களாகவும் உலகம் என்னும் அரங்கு ஆடும் தளமாகவும் உள்ளது என, இவண் இயற்கையானது வருணிக்கப்பட்டது.

இது கவிக் கூற்று.

மஞ்ஞை - மயில்; இது குறிஞ்சிக்குரியதாயினும் இவண் முல்லைக்கண் வந்தது திணை மயக்கம் என்க. புறவம் - முல்லை நிலம்; இவண் முல்லைப் பண்ணைக் குறித்தது. கோபம் - இந்திர கோபம் என்னும் தம்பலப் பூச்சி; சிவந்த வண்ணம் உடையது. ஆலும் - அசையும். மின் - மின்னல். பயோதரம் - தனம்; கொங்கை. ஞாலம் - உலகம். கார் - கார் காலம். நல்லாள் - நங்கை. 19

நாயனார் கொன்றை மரத்தைக் கண்டு சிவபிரானைச் சிந்தையிற் பதித்துப் புல்லாங்குழலை இசைத்தல்

இது முதல் 4 பாடல்கள் ஒரு தொடர்

கொச்சகக் கலி

950. எம்மருங்கும் நிரைபரப்ப
எடுத்தகோ லுடைப் பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத்
தண்புறவில் வரும் தலைவர்
அம்மருங்கு தாழ்ந்தசினை
அவர் மருங்கு மதுவுண்டு
செம்மருத்தண் சுரும்பு சுழல்
செழுங்கொன்றை மருங்கணைந்தார்.

தெளிவுரை: எல்லா இடங்களிலும் பசுக்கூட்டங்கள் பரவி நிலவ, அவற்றை மேய்ப்பவர்களாகிய ஆயர்கள் ஆனாய நாயனாரைத் தொழுது அருகில் சென்றார்கள். ஆங்கு முல்லை நிலத்தின் கண் வரும் தலைவராகிய நாயனார், வண்டுகள் சுழன்று மது அருந்திக் களிப்புற நிலவும் செழுமையான கொன்றை மலர்கள் விளங்கும் இடத்தினை அடைந்தார்.

நிலை - பசுக்கூட்டம். கோல் - மாடு மேய்க்கும் கோல். பொதுவர் - ஆயர். தண் புறவு - குளிர்ந்த முல்லை. சினை அலர் - கிளையிலுள்ள மலர். மது - தேன். செம்மரும் - களிப்புறும். 20

951. சென்றணைந்த ஆனாயர்
செய்தவிரைத் தாமம் என
மன்றல் மலர்த் துணர்தூக்கி
மருங்குதாழ் **சடையார்போல்**
நின்ற நறுங் கொன்றை யினை
நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றிய சிந்தையில் **அன்பை**
உடையவர்பால் மடை திறந்தார்.

தெளிவுரை: அருகே சென்ற ஆனாயர் நறுமணம் கமழும் கொன்றை மலர்க் கொத்துக்களை மாலை போன்று தூக்கித் தாழ்ந்த சடையுடைய சிவபிரானைக் காண்பது போன்று நறுமணம் கமழும் கொன்றை மலரை நோக்கி அங்கனே நின்று, காதலால் கசிந்துருகி ஒன்றிய சிந்தையில் தன்னை உடையவராகிய ஈசன்பால் மடை திறந்தாற்போன்று அன்பைப் பொழிந்தார்.

சீவ சிந்தனையானது சிவ சிந்தனையான நிலையில், கொன்றை மலரானது சிவபிரானாகவே தோன்றியது என்க. ஆன்மாவில் ஒளிரும் ஈசன் கண்புலன் வழிச்சார்ந்து அழகிய திருமலரையே சிவத்தோற்றத்தில் நிலவச் செய்தார் என்பதாம்.

விரைத்தாமம் - நறுமணம் கமழும் மாலை. மலர்த்துணர் - பூங்கொத்து. சடையார் - சிவபிரான். உடையவர் - சிவபிரான். 21

952. அன்பூறி மிசைப் பொங்கும்
அமுத இசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி
எழுத்தைந்தும் வழுத்தித்தாம்

முன்பூதி வரும் அளவின்
முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும்
இன்னிசை வேய்ங் கருவிகளில்.

தெளிவுரை: அன்பினில் ஊறிப் பொங்கி வலிமையான பூதகணப் படைகளின் தலைவரான சிவபிரான் திருவைந்தெழுத்தையும் போற்றி வாழ்த்தித் தாம் முன்பு புல்லாங்குழலில் ஊதிய முறையிலேயே என்பும் கரைந்து உருக்கும் இனிய இசையை எழுப்பலானார்.

"கருவிகளில்" என்பதனை அடுத்த செய்யுளுடன் கூட்டுக.

இசைக்குழல் - புல்லாங்குழல். வன்பூதப் படையாளி - சிவபிரான். எழுத்தைந்து - திருவைந்தெழுத்து; பாடற் குறிப்பு 944 காண்க. 22

953. ஏழுவிரல் இடையிட்ட
இன்னிசை வங் கியம் எடுத்துத்
தாழும் அலர் வரிவண்டு
தாது பிடிப் பனபோலச்
சூழும் முரன்று எழநின்று
தூய பெருந் தனித்துளையில்
வாழியநம் தோன்றலார்
மணி அதரம் வைத்தூத;

தெளிவுரை: ஏழு விரல்கள் இடையீடு உண்டாகுமாறு அமைக்கப்பட்ட இன்னிசை எழுப்பும் புல்லாங்குழலை எடுத்துத் தாழ்ந்து விளங்கும் மலர்களிலுள்ள தேனை, வண்டு அருந்துவது போல முரன்று எழச் செய்து தனித்து விளங்கும் பெரிய துளையில் பெருமை மிகும் ஆனாய நாயனார் தம் பவளம் போன்ற வாயை வைத்து ஊதலானார்.

சிறப்புரை: 20 விரலளவு கொண்ட புல்லாங்குழல் அமைப்பானது, முகப்பின் இரண்டு விரலளவு நீக்கி பின்னர் ஏழங்குலம் விட்டு இடையில் உள்ளதில் துளையிடப்படும். அடுத்து ஏழு துளைகளிலும் வாயின் பக்கம் உள்ளவற்றில் மூன்று விரல்களை வைத்து, அடுத்து வலக்கையின் பெருவிரலில்லாத நான்கு விரல்களை வைத்து, ஆக ஏழு விரல்களைக் கொண்டு எழுப்பப்பெறும் இசைக் குழல் என்க.

வங்கியம் - ஒருவகைப் புல்லாங்குழல். தாது - மகரந்தம்; தேன். முரன்று எழ - ஒலி சுழித்து எழ; இது முரலுதல், எழுதல், நிற்றல் என மூன்று தன்மையும் குறிக்கும். தனித்துளை - வாய் வைத்து ஊதும் தனித்துளை. வாழிய - பெருமையுடைய. தோன்றலார் - ஆனாய நாயனார். 23

நாயனார் வேய்ங்குழலில் இன்னிசை எழுப்புதல்
- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

954. முத்திரையே முதல் அனைத்தும்
முறைத்தானம் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி
வக்கரனை வழி போக்கி
ஒத்த நிலை உணர்ந்ததன்பின்
ஒன்று முதல் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை
அமரோசை களின் அமைத்தார்.

தெளிவுரை: முத்திரை முதலான முறையான தானங்களாக அமைக்கப்பட்ட ஏனைய ஏழு துளைகளையும் நன்கு சோதித்து விரல்களை முறைப்படி செலுத்திப் பண்ணிசை முறையில் ஆரோகணம், அவரோகணம் ஆகியவற்றை ஆனாயர் அமைத்தார்.

இவண் ஏழு சுரங்களானவை ச, ரி, க, ம, ப, த, நி எனப் பெறும் சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பன. ஆரோசை என்பது ஏற்றம் பெறும் சுரமாக ச, ரி, க, ம, ப, த, நி, ச எனவும் அமரோசை என்பது அவரோகணமாக இறங்கு நிலைச் சுரமாக ச, நி, த, ப, ம, க, ரி, ச எனவும் பெறும். மற்றும் பாடல் எண் 944 - இல் குறித்தவாறும் காண்க.

முத்திரை - வளைவாய்க்கு அடுத்த எட்டாவது துளை. நீக்கப்படுவது - ஊது மிடத்துள்ள துளையை முத்திரை என்று நீக்கி முன்னின்ற ஏழு துளையினையும் இடது பெருவிரலை யடுத்த மூன்று விரல்களும் வலது பெருவிரலையடுத்த நான்கு விரல்களும் பற்றி வாசித்தல் என்பது அடியார்க்கு நல்லார் (சிலப்பதிகாரம்) குறிப்பு. வக்கரனை - எல்லாப் பண்களும் குழலின் துளைகளால் உண்டாகும்படி விரல்களால் சமன் செய்தல்; ஆலாபனை செய்தல்; வக்கிரனையும் ஆம். 24

955. மாறுமுதல் பண்ணின்பின்
வளர்முல்லைப் பண் ஆக்கி
ஏறியதாரமும் உழையும்
கிழமை கொளஇடும்தானம்

ஆறுலவும் சடைமுடியார்
அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாம்
கொடிப்பாலை யினில் நிறுத்தி;

தெளிவுரை: ஆனாயர் மாறிவரும் சுரங்களைக் கொண்ட முதலாவதான குறிஞ்சிப் பண்ணை யடுத்து, முல்லைப் பண்ணை ஆக்கிப் பின்பு பாலை யாழ்க்குரிய உச்சமாகிய தாரமும், மத்திமமாகிய உழையும் அமைய இடும் தானங்களில் கங்கையுலவும் சடைமுடியுடைய சிவபிரான் திருவைத்தெழுத்தின் இசை பெருகக் கூறிய அழுத்தம் மிக்கதான இளி என்னும் பஞ்சமத்தில் உலவும் கொடிப் பாலையினில் நிறுத்தினர்.

சிறப்புரை: ஏழிசையின் சிறப்பானது இத்திருப்பாட்டில் நன்கு போற்றப்படுதல் காண்க. இறைவன் திருவடிவமே திருவைந்தெழுத்தாதலும் ஏழிசையில் அமைத்தலையும் இவண் சாற்றப்படுதலாயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்த் திருப்பதிகத்தில்,

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத்தந்து
ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே."

என்று அருளியமை காண்க.

நடராசப் பெருமான் திருவடிவமானது திருவைந்தெழுத்தாகிய நமசிவாய என்னும் தன்மைத்து என்பதனைத் திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளிச் செய்த உண்மை விளக்கம் திருப்பாட்டின் வழித் தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 71 இல் சாற்றிய குறிப்பின் படியும் காண்க.

மாறு - மாறுபடும் சுரங்களின் தன்மை. முதல் பண் - குறிஞ்சிப் பண். தாரம் - நிடாதம்; நி. உழை - மத்திமம்; ம. ஆறு - கங்கை. சடை முடியார் - சிவபிரான். அஞ்செழுத்து - திருவைந்தெழுத்து;

தூல பஞ்சாட்சரமான நமசிவாய. பட்டடை - அழுத்தம். இளிகுரலாம் கொடிப்பாலை - பஞ்சமம் ஆகிய கோடிப்பாலை. 25

956. ஆயஇசைப் புகல்நான்கின்
அமைந்த புகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன
விடுப்பனவாம் விரல்நிரையில்
சேய ஒளி இடையலையத்
திருவாளன் எழுத்தஞ்சும்
தூய இசைக் கிளை கொள்ளும்
துறை அஞ்சின் முறை விளைத்தார்.

தெளிவுரை: இசை புகலும் நான்கு வகையில் கோடிப்பாலைக் குரிய திறத்தை எடுத்துச் சுரம் எழுப்புகின்ற ஏழு துளைகளின் வாயிலாக விரல்களால் பற்றுவனவும், விடுப்பனவும் ஆகியன தொடக்கி, சிவபிரான் திருவைந்தெழுத்தினைத் தூய இசையின் கண் பதித்து ஐந்து துறைகளிலும் ஆனாயர் வாசித்தார்.

சிறப்புரை: இசை புகல் நான்கெனப்படும் பண் பண்ணியல், திறம், திறத்திறம் என்பவற்றுள் திறம் என்றமை இவண் எடுத்தலாம் என்க. இசைக் கிளையின் துறை ஐந்தாவன: ஆயத்தம்,எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம் என்பதாம். சிவபிரானின் திருவருட் பெருமை சாற்றும் வகையில் திருவாளன் எனப்பட்டது. எல்லாச் செல்வமும் பெருமானின் அருள்திறத்தால் ஆளப்படுதலால் திருவாளன் என்க. இப்பரமனின் வடிவம் திருவைந்தெழுந்தாதல் போன்று ஏழிசையினையும் திருவைந்தெழுத்தில் பொருத்த இசைக்கப்பட்டது எனக் கொள்க. இத் தன்மையில் திருநீற்றைத் திருவாளன் திருநீறு என்று சாற்றப்படுதலைத் திருப்பாட்டு *1337* - இல் திருநாவுக்கரசு சுட்டிய வாறும் காண்க.

விரல் நிரை - விரல் வரிசை. விளைத்தார் - பாடினார். 26

957. மந்தரத்தும் மத்திமத்தும்
தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும்
சமம் கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரல் தொழில்கள்
அளவு பெற அசைந்தியக்கிச்
சுந்தரச் செங் கனிவாயும்
துளைவாயும் தொடக்குணண;

தெளிவுரை: ஆதாரத்தானம், மத்திமத்தானம், உச்சத்தானம் என்னும் மூன்று வகையான சுருதியிலும், துளைகளை மெலிவு, சமம், வலிமை ஆகிய வகையில் மூடி இடையிலுள்ள துளைகளை உரிய வகையில் இயக்குமாறு ஆனாயர் தம் செம்பவள வாயும், வேய்ங்குழலின் துளை வாயும் கூடி விளங்கச் செய்தார்.

தொடக்குண்ண என்பதனை அடுத்த செய்யுளுடன் கூட்டுக.

மந்தரம் - ஆதாரம். மத்திமம் - சமம். தாரம் - உச்சம். தந்திரி - துளை. செங்கனி வாய் - நாயனாரின் பவளம் போன்ற வாய்க்கு உவமை. 27

958. எண்ணிய நூல் பெருவண்ணம்
இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லாம்
மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியும் இயலும்
தூக்கும்நடை முதல்கதியில்
பண்ணமைய எழும் ஓசை
எம்மருங்கும் பரப்பினார்.

தெளிவுரை: நாயனார், இசை நூலில் சாற்றியபடி பெருவண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணம் எனப் பெறும் இசை வகையாவும் இனிய நாதத்தில் எழச் செய்து பொருந்திய தாளம், ஏற்றம், நடை முதலிய கதிகளோடு பண்முறை எழுகின்ற ஓசையை எல்லாப் பக்கங்களிலும் பரவுமாறு எழுப்பினார்.

மாதுரிய நாதம் - இனிய இசை. பாணி - தாளம்; இசை. இயல் - இராக வகை. தூக்கு - ஏற்றம். நடை - இயல்பு வகை. 28

ஆனாயர் வேய்ங்குழல் வாசித்தலால்
எழுந்த நிலையுரைத்தல்
- இது முதல் 8 பாடல்கள் ஒரு தொடர்

959. வள்ளலார் வாசிக்கும்
மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறை அஞ்செழுத்தாக
ஒழுகியெழும் மதுர ஒலி

வெள்ளம் நிறைந்து எவ்வுயிர்க்கும்
மேல்அமரர் தருவிளைதேன்
தெள்ளமுதின் உடன்கலந்து
செவிவார்ப்பது எனத்தேக்க;

தெளிவுரை: நாயனார் வாசிக்கும் பெருமையுடைய துளை பொருந்திய புல்லாங்குழலில் தம் உள்ளத்தில் உறைந்து ஒளிர்விக்கும் திருவைந்தெழுத்தை இசையொலியாக்கி, இனிய வெள்ளம் போன்று நிறையச் செய்ய, அது எல்லா உயிர்களினும் மேன்மையுடைய தேவர்கள் வாழும் தேவலோகத்தில் மேவும் கற்பக மரத்தில் விளைந்த தேனைத் தெளிந்த அமுதத்தோடு கலந்து உயிர்கள் தோறும் காதில் வார்ப்பது போன்று விளங்கிற்று.

சிறப்புரை: இறைவன் திருவடிக் காட்சியானது கண்வழி புகுந்து ஆன்மாக்களை மகிழ்விப்பது போன்று இறைவன் திருவைந்தெழுத்தானது ஆனாயர் வாசிக்கும் வேய்ங்குழலினின்று எழுந்து ஆன்மாக்களைச் செவி வழியே சாந்து ஆனந்தத்தை உண்டாக்கிற்று என்க. இத்தன்மையுடைய திருவைந்தெத்து நாயனாரின் உள்ளத்திலிருந்து தோன்றியமையை "உள்ளுறை அஞ்செழுத்து" என்று உணர்த்தப்பட்டது.

வள்ளலார் - ஆனாய நாயனார். உள்ளுறை உள்ளத்தில் உறையும். மதுர ஒலி - இனிய ஒலி. அமரர் தரு - தேவலோக மரமான கற்பகம். எனத்தேக்க - நிறைக்க; இதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 29

960. ஆன் நிரைகள் அருகு அருந்தி
அசைவிடாது அணைந்து அயரப்
பால் நுரைவாய்த் தாய்முலையில்
பற்றும் இளங் கன்றினமும்
தான்உணவு மறந்தொழியத்
தடமருப்பின் விடைக்குலமும்
மான் முதலாம் கான் விலங்கும்
மயிர் முகிழ்த்து வந்தணைய.

தெளிவுரை: பசுக் கூட்டங்கள் அறுகம் புல்லைத் தின்ற பின்னர் அதனை அசைபோட்டு மெல்லுதல் செய்யாதனவாய், நாயனாரின் புல்லாங் குழலிசை வாயிலாகப் பரவும் திருவைந்தெழுத்தின் ஓசை கேட்டுத் தம்மை மறந்தன; தாய்ப்பசுவின் மடியில் வாய் வைத்துப் பற்றும்

பால் நுரை வழியும் இளம் கன்றினம், உணவு மறந்து இருந்தன; பெரிய கொம்புகளையுடைய எருதுகளும், மான் முதலான காட்டு விலங்குகளும் மயிர் சிலிர்த்து வந்தணைந்தன.

ஆன் நிரை - பசுக்கூட்டம். அறுகு - அறுகம்புல். அயர - மறக்க. தாய்முலை - பசுவின் மடி. தடமருப்பு - பெரியகொம்பு. விடைக்குலம் - எருது வகைகள். மயிர் முகிழ்த்து - உடல் சிலிர்த்து. அணைய - நெருங்க; இதனை அடுத்த பாடலுடன் கூட்டுக. 30

961. ஆடுமயில் இனங்களும் அங்கு
அசைவு அயர்ந்து மருங்கணுக
ஊடு செவி இசை நிறைந்த
உள்ளமொடு புள்ளினமும்
மாடு படிந்து உணர்வொழிய
மருங்கு தொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும்
குறைவினையின் துறை நின்றார்.

தெளிவுரை: கார்ப்பருவத்தில் களித்த ஆடுகின்ற மயிலினங்களும் ஆங்கு ஆடும் தன்மையினை நீக்கி அயர்ந்து பக்கத்தில் சாரச், செவியின் வழியாகத் திருவைந்தெழுத்தோசை கேட்ட பறவைகளும் பக்கத்தில் அடைந்து தம் உணர்வு மயங்கி மேவின. அருகாமையில் பசுக்கூட்டங்களை மேய்ப்பவர்களான ஆயர்கள் தம் தொழிலை ஆற்றுதலில் குறைவுடையவராய், ஆனாயர் எழுப்பிய இசையில் ஈடுபட்டவராய் மயங்கி நின்றார்கள்.

அசைவு அயர்ந்து - ஆடுதலை மறந்து. மருங்கு - நாயனார் வாசிக்கும் பக்கமாக. புள்ளினம் - பறவையினம். மாடு படிந்து - பக்கம் சென்று. உணர்வு - தன்னிலை. வன் கோவலர் - வலிமையுடைய ஆயர்கள் . குறைவினை - செயலில் கருத்தின்மை. 31

962. பணிபுவனங் களில் உள்ளார்
பயில்பிலங்கள் வழி அணைந்தார்
மணிவரை வாழ் அரமகளிர்
மருங்கமயங் கினர் மலிந்தார்
தணிவில்லொளி விஞ்சையர்கள்
காரணர்கின் னரர் அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி
விமானங்கள் மிசை அணைந்தார்.

தெளிவுரை: நாகர் உலகத்தில் உள்ளவர்கள் பூமியில் உள்ள பிலங்கள் வழியாக நாயனாரின் இசை கேட்டு அருகில் அடைய, அழகுடன் ஒளிரும் மலைகளில் வாழும் தெய்வ மகளிர் பக்கத்தில் சார்ந்து மயங்கினார்கள்: குறைவில்லாது ஒளிரும் விஞ்சையர், சாரணர், கின்னரர், தேவர் ஆகியோர் விமானங்களின் மீது ஏற வந்து அருகே சார்ந்தார்கள்.

தேவர்கள் முதலியோர் கால்கள் பூமியில் பரவாமையால் விமானங்களில் இருந்து இசை கேட்டு மகிழ்ந்தார்கள் என்க.

பணி - பாம்பு. பணிபுவனம் - நாக லோகம். பிலம் - பூமியில் - உள்ள துணை. மணி வரை - உயர்ந்து ஒளிரும் மலை. அர மகளிர் - தெய்வ மகளிர். மலிந்தார் - நிரம்பி இருந்தார்கள். தணிவில் ஒளி - தணியாதனவாய் எல்லாக் காலத்திலும் ஒளிரும். விஞ்சையர் - வித்தியாதரர், சாரணர், கின்னரர் - ஒருவகைத் தேவ சாதியார். அமரர் - தேவர். மிசை - மீது. அணைந்தார் - சார்ந்தார். 32

963. சுர மகளிர் கற்பகப் பூஞ்
சோலைகளின் மருங்கிருந்து
கர மலரின் அமுதூட்டும்
கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவு நறுங்குழல் அலைய
விமானங்கள் விரைந்து ஏறிப்
பரவிய ஏழி மிசையமுதம்
செவிமடுத்துப் பருகினார்.

தெளிவுரை: தெய்வப் பெண்கள், கற்பக மரம் சூழ்ந்த சோலைகளில் மருங்கே தமது தாமரை மலர் போன்ற கரத்தால் அமுது ஊட்டப்பெறுகின்ற கனிந்த வாய் உடைய கிளிகளோடு, நறுமணம் கமழும் தம் கூந்தல் அசைய விமானங்களில் விரைந்து ஏறி வந்து ஆனாய நாயனார் திருவைந்தெழுத்தை ஏழிசையால் பரவச் செய்ய அவ்வமுதத்தைப் பருகினார்கள்.

சிறப்புரை: வாய்ச் சுவையளிக்கும் தேவர் அமுதத்தை உண்பதால் அடையப் பெறும் பயனைவிட நாயனார் அளிக்கும் திருவைந்தெழுத்தின் இன்னிசை செவி வழிச் சென்று பேரானந்தத்தை அளிக்கும் தன்மையை உணர்த்தும் வகையில் இவண், "ஏழிசை யமுதம்" எனப்பட்டது.

சுரமகளிர் - தெய்வ மகளிர். கரமலர் - தாமரை போன்ற கரம். அழுது - தேவர் அழுது. கிள்ளை - கிளி. குழல் - கூந்தல். 33

964. நலிவாரும் மெலிவாரும்
உணர்வு ஒன்றாய் நயத்தலினால்
மலிவாய் வெள் ளெயிற்று அரவம்
மயில்மீது மருண்டு விழும்
சலியாத நிலை அரியும்
தடங்கரியும் உடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும்
புல்வாய புலவாயும்.

தெளிவுரை: பிறரைத் துன்புறுத்துபவரும், அவர்களால் வருத்தம் அடைய மெலிந்தவரும் தம் தம் உணர்வுகளும் எழுச்சிகளும் மறைய உணர்வு ஒன்றிய நிலையில் அன்பின் வயப்பட்டு நிற்றலால், வாயில் மலியும் வெண்மையான பற்களையுடைய நாகம், மயிலின் மீது மயங்கி விழும். எப்போதும் துடிப்புடன் மேவும் சிங்கமும், பெரிய வடிவம் உடைய யானையும் ஒன்றோடொன்று சார்ந்து விளங்கும். புலியின் வாய்ப் பக்கத்தில், புல்லை அருந்தும் வாயுடைய மானும் சாரும்.

சிறப்புரை: ஏழிசையில் வருகின்ற திருவைந்தெழுத்தின் ஓசையானது உயிர்களைப் பற்றியுள்ள வன்தொழிலான குணப்பாங்கினையும், அச்சம் உடைய உணர்வினையும் மாற்றும் தன்மையது என, இவண் உணர்த்தப்பட்டது. கொலை செய்யும் தன்மையுடையவராயினும் நற்குணங்கள் அமையப் பெறாதவராயினும் திருவைந்தெழுத்தைக் கொள்வாராயின் தீங்கினின்று விடுபடுவர் என்னும் கருத்தில் திருஞான சம்பந்தர் மூன்றாம் திருமுறை, நமச்சிவாயத் திருப்பதிகத்தில்,

"கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பதால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே."

என்று அருளியமை காண்க.

நலிவார் - பிறரை நலியச் செய்து துன்புறுத்துபவர். மெலிவார் - பிறரால் துன்பம் அடைவோர். எயிறு - பல். அரவம் - நாகம். அரி - சிங்கம். தடங்கரி - பெரி யானை. புலிவாயின் மருங்கு - புலி என்னும் விலங்கின் வாய் அருகில். அணையும் - சாரும். புல்வாய - சிறிய

வாயையுடைய. புல் வாய் - மான்; இது புல்லைத் தின்பதால் பெற்ற தனிப்பெயர் என்க. 34

965. மருவியகால் விசைத்தசையா
மரங்கள் மலர்ச்சினை சலியா
கருவரை வீழ் அருவிகளும்
கான்யாறும் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள் புடை
பெயரொழியப் புனல் சோரா
இருவிசும்பின் இடை முழங்கா
எழுகடலும் இடை துளம்பா.

தெளிவுரை: அப்போது உலவுகின்ற காற்றும் அசையாது நின்றது. மரங்களில் உள்ள மலர்களையுடைய கிளைகளும் ஆடாதனவாயின. கருமையுடைய மலைகளிலிருந்து வீழும் அருவிகளும், காட்டில் ஓடும் ஆறும் ஆரவார ஒலியின்றி ஓடாதாயின. வானத்திலுள்ள மேகக் கூட்டங்கள் அசைவின்றி நின்றன. பெரிய மேகக் கூட்டங்கள் இடியோசையின்றி மழையை வழங்காதொழித்தன. ஏழு கடல்களும் அலை வீசாது இருந்தன.

கால் - காற்று. கருவரை - கருமையுடைய மலை. புடை - பக்கம் புனல் சோரா - மழை பொழியாதனவாயின. இருவிசும்பு - பெரிய வானம். முழக்கம் - இடி முழக்கம். துளும்பா - அலைகளைப் பெருக்காதன. 35

966. இவ்வாறு நிற்பனவும்
சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரணம்
மேவிய ஒன்று ஆயினவால்
மொய்வாச நறுங்கொன்றை
முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசை வைத்த
திருக்குழல்வா சனை உருக்க.

தெளிவுரை: இவ்வாறு நறுமணம் கமழும் கொன்றை மலர் சூடிய சடைமுடியுடைய சிவபிரான் திருத்தொண்டரான ஆயனார், தமது சிவந்த வாயிலிருந்து திருவைந்தெழுத்து இசையொலியாக எல்லா இடங்களிலும் பரவி உருகச் செய்ய, அசையும் பொருளும், அசையாப் பொருளும் இசைமயமாகித் தம் செயலொழிந்தன. உயிர்களின் புலன் முதலான கரணங்கள் யாவும் தமது இயல்பினை மறந்து திருவைந்தெழுத்தின் ஓசையில் ஒன்றி விளங்கின.

திருவைந்தெழுத்தை வெளிப்படுத்துவதால் புல்லாங்குழல் திருக்குழல் எனச் சாற்றப்பட்டது.

நிற்பன - அசையாப் பொருள். சரிப்பன - அசையும் பொருள். கொன்றை முடிச் சடையார் - சிவபிரான். தொண்டர் - ஆனாயர். திருக்குழல் - புல்லாங்குழல். வாசனை - வாசித்தல். உருக்க - மனத்தில் பதிந்து உருகச் செய்ய. 36

ஆனாயரின் இசையமுதம் சிவபிரான் திருச்செவியில் பதியத் திருக்காட்சி நல்கித் திருவருள் புரிதல்

- இது முதல் 5 பாடல்கள் ஒரு தொடர்

967. மெய்யன்பர் மனத்தன்பின்
விளைத்த இசைக் குழலோசை
வையம் தன்னை யும் நிறைத்து
வானம் தன் மயமாக்கிப்
பொய் அன்புக்கு எட்டாத
பொன்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச் செவியின்
அருகணையப் பெருகியதால்

தெளிவுரை: மெய்யன்பரான ஆனாயர் மனத்தில் விளையும் அன்பின் பெருக்கால், புல்லாங்குழலினின்று பெருகிய ஓசை, இவ்வுலகத்தில் எல்லா இடங்களிலும் நிறைந்து, வானம் முழுமையும் தன் வயமாக்கிப் பொய்யானஅன்புக்கு எட்டாதவராய்ப் பொன்னம்பலத்தில் திருநடனம் புரியும் தலைவராகிய நடராசப் பெருமான் திருச்செவியின் அருகே அணையப் பெருகிற்று.

மெய்யன்பர் - ஆனாய நாயனார். வையம் - உலகம். பொன்பொது - தில்லை பொன்னம்பலம். ஐயன் - நடராசப் பெருமான் 37

968. ஆனாயர் குழலோசை
கேட்டருளி அருள்கருணை
தானாய திருவுள்ளம்
உடையதவ வல்லியுடன்
கானாதி காரணர்தாம்
கண்ணுதலார் விடை உகைத்து
வானாறு வந்தணைந்தார்
மதிநாறும் சடைதாழ.

தெளிவுரை: ஆனாயர் பாடும் குழலோசை கேட்ட அருள் தன்மையே பெருங்கருணையாகிய திருவுள்ளம் கொண்ட உமாதேவியுடனாகி இனிய இசைக்கே மூலகாரணமாகும் சிவபிரான் சந்திரனைத் தரித்த சடை முடியுடையவராய் இடப வாகனத்தில் ஏறி விண்ணின் வழியாக எழுந்தருளினார்.

அருள் கருணை - அருள் புரியும் கருணையாய் விளங்கும் உமையம்மையின் இயல்பு உரைக்கப்பட்டது. தவவல்லி - உமாதேவி; பார்வதி தேவியாய் இமயமலையில் தவம் செய்த பெருமையினை ஓர்க. கானாதி - இனிய கானமாகிய இசை; "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனும் திருப்பாடல் 955 - இல் குறித்த தேவாரப் பாடலையும் நோக்குக. கண்ணுதலார் - நெற்றியில் கண்ணுடைய சிவபிரான். விடை உகைத்து - இடப வாகனத்தில் ஏறிச் செலுத்தி; இடபக் கொடியுடையவராய். வான் ஆறு - ஆகாய வழியாக. அதி நாறும் - பிறைச்சந்திரன் மேவும். 38

969. திசைமுழுதும் கணநாதர்
தேவர்கட்கு முன்நெருங்கி
மிசை மிடைந்து வரும்பொழுது
வேற்றொலிகள் விரவாமே
அசையயெழும் குழல் நாதத்து
அஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசை விரும்பும் கூத்தனார்
எழுந்தருளி எதிர் நின்றார்.

தெளிவுரை: திசைகள் தோறும் பரவி விளங்கும் தேவர்களையும் நெருங்கி முன்னே சென்று சிவகண நாதர்கள் விளங்க, ஆங்கு ஆரவாரம் முதலான வேறு எத்தன்மையான ஓசைகளும் கலவாது, அசைய எழும் குழல் நாதமாகிய திருவைந்தெழுத்தால் பரவும் இசையை விரும்பும் நடராசப் பெருமான் உமையம்மையோடு எழுந்தருளி, நாயனார் முன்னே நின்றார்.

மிசை மிடைந்து - இடையில் கூட்டத்தோடு. நெருங்கி குழல் நாதம் - புல்லாங்குழல் இசை. கூத்தனார் - நடராசப் பெருமான். 39

970. முன்நின்று மழவிடைமேல்
முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர்
திருக்குழல்வா சனைகேட்க

"இந்நின்ற நிலையே நம்
பாலணைவாய்" என அவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார்
ஐயர்திரு மருங்கணைந்தார்.

தெளிவுரை: இளமையான இடபவாகனத்தின் மீது எழுந்தருளிய சிவபிரான் செம்மை விளங்கும் பெரியோரான ஆனாய நாயனார் புல்லாங்குழலில் வாசிக்கும் திருவைந்தெழுத்தின் ஓசை கேட்டுக் கொண்டிருக்க, "இங்கு நின்ற நிலையிலேயே நம்பால் வருவாய்" என்று அருளிச் செய்தார். ஆனாயரும் அந்த நிலையிலேயே சிவபிரான் பக்கத்தில் பெருமானோடு அணைபவராய் மருங்கு சென்றார்.

இவண் புல்லாங்குழலின் கண் சிந்தை செலுத்தித் திருவைந்தெழுத்தை வாசித்த வண்ணமே சிவபிரானோடு சார்ந்தார் என்க.

மழவிடை இளைமையுடைய இடபம். முதல்வனார் - சிவபிரான். பெரியோர் - ஆனாயர். திருக்குழல் வாசனை - புல்லாங்குழல் வாசித்தல். ஐயர் - நடராசப் பெருமான். 40

971. விண்ணவர்கள் மலர்மாரி
மிடைந்துலகம் மிசைவிளங்க
எண்ணில்அரு முனிவர்குழாம்
இருக்குமொழி எடுத்து ஏத்த
அண்ணலார் குழல் கருவி
அருகு இசைத்தங்கு உடன் செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப்
பொன்பொதுவின் இடைப்புக்கார்

தெளிவுரை: பூவுலகம் யாவும் நிறையுமாறு தேவர்கள் மலர்மாரி பொழிய, எண்ணற்ற முனிவர் குழாம் இருக்கு முதலான வேத கீதங்களை எடுத்து ஏத்தப் பெருமையுடைய நாயனார், புல்லாங்குழலின் வாயிலாக எழுப்பும் திருவைந்தெழுத்தை இசைத்தபடியே உடன் செல்லச் சிவபிரான் பொன்னம்பலத்தில் புகுந்தருளினார்.

சிவபிரான் பொன்னம்பலத்தில் புகும் போது முனிவர் குழாம் வேத மொழிகளைச் சாற்றி ஏத்த, நாயனார் திருவைந்தெழுத்தை வாசித்தவாறே சார்ந்தார் என்க.

விண்ணவர்கள் - தேவர் முதலானோர். மலர் - கற்பக மலர். மிடைந்து - நெருங்கிச் சேர்ந்து. மிசை விளங்க - மேலே விளங்க. இருக்கு மொழி - வேதம். அண்ணலார் - பெருமையுடைய ஆனாயர். புண்ணியனார் - சிவபிரான். பொன்பொது - பொன்னம்பலம். புக்கார் - புகுந்தார்; சார்ந்தார். 41

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

972. தீது கொள் வினைக்கு வாரோம்
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும்
கதிர்நிலவு இருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க
மனையிடை இருகால் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத்
தொழும்பு கொண்டு உரிமை கொள்வார்

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவந்த சடைமுடியுடைய சிவபிரானை, காதில் அணிந்து ஒளிரும் குழைகள் வீசும் நிலவொளி இருளைப் போக்குமாறு விளங்கப் பரவையார் கொண்டிருந்த ஊடலைத் தீர்க்கும் வகையில் இருமுறை செல்லுமாறு தூது கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் நம்மை அடிமைகொண்டு, உரிமை கொள்வார். ஆதலால் தீமை பயக்கும் வினை வழி காணும் பிறவித் துன்பத்தை அடைய மாட்டோம்.

தீது கொள்வினை - பிறவித் துன்பம். மாது - பரவையார். தொழும்பு - அடிமை. புலவி - தூது. 42

ஆனாய நாயனார் புராணம் நிறைவுற்றது

இலைமலிந்த சருக்கம் நிறைவுற்றது.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு	வ. எண்
அ	
அகலிடத்து	359
அகிலகாரணர்	139
அகில் விரை	162
அக்குலப் பதிக்	405
அக்குலப் பதி	911
அங்கணரை அடி	236
அங்கணர் அடியார்	592
அங்கணாளன்	39
அங்கண் ஓர்	26
அங்கண் மலைத்	693
அங்கண் மாமறை	245
அங்கப் பொழுதில்	712
அங்கிவன் மலையில்	765
அங்குமவன்	233
அங்குமுன்	33
அங்குரைக்கு	90
அடல்முனை	630
அடல் விடையேறு	644
அடிபணிந்த	133
அடியவர்க்கு	336
அடியனேன்	927
அடுத்து மேன்மேல்	312
அணிசிலம்பு	284
அண்டர் பூமழை	547
அண்ணல் வீற்	12
அண்ணலவன்	291
அண்ணலார்திருக்	818
அண்ணலார்நிக	558
அண்ணலைக்கையில்	666
அதுகண்டு	231
அத்தர்தந்த	25
அத்தர்முன்பு	524
அத்தர்வேண்டி	140
அத்தருவளர்	740
அத்திருப்பதி	42
அத்திறம்	484
அந்தணர் அவை	198
அந்தணர் கூற	207
அந்தணனாம்	391
அந்தணாளரும்	40
அந்தமில்சீர்	34
அந்தமெய்ப்பதி	49
அந்தரத்தமரர்	330
அந்திவான்மதி	27
அந்நிலை அவரை	399
அந்நிலை ஆரூரன்	232
அந்நிலை எழுந்த	603
அந்நிலையில் அன்ப	804
அந்நிலையே	132
அந்நின்ற தொண்டர்	647
அப்பதியில் குலப்	877
அப்பெற்றியில்	716
அப்பொழுதணைய	565
அப்பொழுததனை	845
அப்பொற்பதியின்	494
அம்புனிற்று	108
அம்பொன் நீடிய	440
அயல்வரைப்	685
அயலறியாத	403
அயலோர் தவம்	223
அரசனாங்கு	586
அரசியல் ஆயத்	488

பாட்டு	வ. எண்
அரசியல் நெறி	468
அரசு கொள்கடன்	76
அரந்தை செய்வார்	307
அரந்தை தீர்க்கும்	138
அரம்பையர்	19
அரிதருசெந்நெல்	73
அருங்கடிஎழுந்த	168
அருந்தவத் தொண்டர்	395
அரும்பெறல்	658
அருமறை நாவல்	205
அருமறைமுறை	192
அருவரைக் குறவர்	664
அருள் செய்த	900
அருளின் நீர்மை	9
அரையில் சரணத்து	710
அலர்பகல்	676
அலறு பேர் ஆவை	110
அல்லல் நல்குரவு	916
அல்லி மலர்	935
அவர்தங்கள்	363
அவனுடைய	806
அவ்வண்ணம்	124
அவ்வழி அந்தி	776
அவ்வழி அவர்கள்	485
அவ்வளவில்	317
அவ்வாறு பணிந்	297
அவ்வுரைஅவை	201
அவ்வுரைகேட்ட	117
அவ்வுரையில்	125
அவ்வென்பின்	893
அழுந்திய இடருள்	463
அழைத்தபேர்	433

பாட்டு	வ. எண்
அளவில்தொல்	104
அளவிலாத	5
அளவிலாமரபின்	362
அளிமிடைகரை	749
அறம் பொருளின்பம்	102
அனைத்து நூல்	200
அனையன பலவும்	674
அன்பரங்கிருப்ப	849
அன்பனே அன்பர்	465
அன்பனை	219
அன்பின் வந்தெதிர்	244
அன்பு பெருக	272
அன்பூறி மிசைப்	952
அன்றிரவு கனவின்	805
அன்ன இம்மொழி	775
அன்னதன் திருத்	23
அன்னதொல்நக	98
அன்னம் ஆடும்	69
அன்னவன் பெயர்	32

ஆ

ஆங்கதன்	748
ஆங்கதுகேட்ட	114
ஆடுகின்றவர்	255
ஆடு தோகை	247
ஆடு மயில்	961
ஆட்கொள்ளும் ஐயர்	924
ஆட்சியில்	202
ஆண்ட கை அருளின்	172
ஆண்டெதிர்	669
ஆதி மாதவ	52
ஆதி மூர்த்தி	37

பாட்டு	வ. எண்
ஆதியாய் நடுவும்	350
ஆதியார் நீலகண்டத்து	366
ஆய இசைப்புகல்	956
ஆயும் நுண்பொருள்	407
ஆயல் குலத்தை	939
ஆரங்கண்டிகை	144
ஆரணங்களே	95
ஆரநறுஞ்சேறாட்டி	319
ஆரம் என்பு	442
ஆர்கொல்பொர	618
ஆர்த்தி கண்டும்	311
ஆர்தமராக	762
ஆலும் மறை	174
ஆலை பாய்பவர்	68
ஆவணம் பறிக்க	190
ஆவதிது கேண்மின்	183
ஆவதென் இதனை	746
ஆவதென் உன்பால்	385
ஆவின்நிரை	942
ஆளுடைத் தொண்டர்	606
ஆளும் நாயகர்	444
ஆறலைத்து உண்	655
ஆறு சூடிய	406
ஆறு செஞ்சடை	846
ஆறும் மதியும்	567
ஆன சீர்த்தொண்டர்	602
ஆன தங்கேள்வர்	364
ஆனதன்மை	537
ஆனாயர் குழலோசை	968
ஆனிரைகள்	960
ஆனிரைகூட	940

பாட்டு	வ. எண்
இ	
இங்கதுபிழைப்ப	572
இங்கு இதன்	10
இசைவினால்	199
இடம் மருங்கு	241
இதற்கினி என்கண்	827
இதற்கு முன்	277
இது எனக்கு முன்பு	411
இத்தனை காலமும்	695
இத்தனை பொழுது	817
இத்திருநாடு	651
இந்த நன்னிலை	914
இந்த மாதவர்	146
இந்தனத்தை	794
இந்நிலைய	635
இந்நெறி ஒழுகும்	843
இந்நெறி ஒழுகும்	369
இப்படி இழந்த	472
இப்பரிசிவர்க்கு	466
இப்பரிசு திரு	800
இம்மலைவந்து	809
இம்முனைய	632
இயம்பல துவைப்ப	166
இயற்பகை முனிவா	432
இருக்கோலம்	260
இருவரால் அறிய	429
இருவரும் எழுந்து	600
இருள் மறைமிடற்	204
இல்லத்தில் சென்று	854
இவர்தமைக்	760
இவ்வகைவரு	736

பாட்டு	வ. எண்
இவ்வண்ணம் பெருமுனிவர்	790
இவ்வண்ணம் திண்ணனார்	692
இவ்வாறு கேட்டலு	639
இவ்வாறு நிற்பன	966
இழைத்த அன்பினில்	544
இழையணி	382
இளமையின்	368
இளைத்தனர்	772
இனையவகை	135
இன்புறுதாரம்	439
இன்றிவர்	358
இன்று நீர்	412
இன்னதன்மைய	314
இன்னவாறு வளம்	446
இன்னவாறேத்தும்	341
இன்னவாறொழுகும்	471
இன்னுயிர் செகுக்க	490
ஈ	
ஈரமெனியை	449
ஈரவே பூட்டும்	599
உ	
உடுத்த கோவணம்	532
உடைய அரசு	229
உம்பர் நாயகர்தம்	299
உம்பர் நாயகர் அடியார்	349
உருகிய அன்பு	808
உரைசெய்த	747
உலகமுய்யவும்	50
உலகில் இல்லதோர்	535
உலகெலாம்	1
உழுதசால்	62
உள் நிறைந்து	759
உள்ளம் அன்பு	456
உள்ளமார் உருகாத	93
உள்ளவண்ணம்	31
உறுகவின்மெய்ப்	855
உனக்கவன்றன்	812
ஊ	
ஊர்தொறும்பலி	857
ஊனடைந்த	2
ஊனமுது	799
எ	
எடுக்கும் மாக்கதை	3
எடுத்த குழல்	944
எண்ணிய ஓசை	215
எண்ணிய நூல்	958
எண்ணில் பேருலகு	248
எண்ணிறந்த	796
எண்ணும்	455
எம்பிராட்டி	44
எம்பிரான் கோயில்	212
எம்பிரான் யான் செயும்	374
எம்மருங்கும்	950
எய்திய சீர்	784
எய்து மென்பெடை	304
என மொழிந்து	127
என் செய்தாய் திண்ணா	766
என் செய்தால் தீரும்	824
என் மகன் செய்	122

பாட்டு	வ. எண்
என்றரசன்	123
என்றலும் நின்ற	193
என்றவர் அருளி	414
என்றவர் கூற	743
என்றவர் போற்றி	928
என்றவர் விரைந்து	380
என்றவருரைத்த	570
என்றவன் கூறக்	476
என்றவுரை கேட்ட	318
என்றான்இறை	184
என்றின்னனவே	324
என்றினைய	295
என்று கூற	30
என்று கூறிய	409
என்றுசாலவும்	301
என்று தம்பிரான்	513
என்று பகைத்	621
என்று பலமுறை	275
என்று மாமுனி	47
என்று மெய்த் தொண்டர்	866
என்றுரை செய்	180
என்றெழும் ஓசை	214
என்ன அவ்வுரை	410
என்னும் பெயரின்	493
ஏ	
ஏடா நீ என் செய்	421
ஏரின் மல்கு	441
ஏழு விரலிடை	953
ஏறு கால் பன்றி	782
ஏன மோடுமானின	727
ஐ	
ஐந்து பேரறிவும்	252
ஐயர் கைதவம்	521
ஐயர் நீர்	387
ஐவனஅடிசில்	683
ஒ	
ஒக்க நெடுநாள்	500
ஒடியெறிந்து	724
ஒண் துறை	60
ஒப்பில் பெருங்குடி	938
ஒரு மகள்	907
ஒரு முன்கைத்	894
ஒரு மைந்தன்	129
ஓ	
ஓங்கு கோவணப்	515
ஓலை காட்டென்ற	189
ஓவியம் நான்முகன்	287
க	
கங்கை நதி	388
கங்கை நீர்	842
கங்கையும் மதியும்	147
கஞ்சாறர் மகள்	890
கடகரிதுறை	554
கடல்விரிபுனல்	733
கடுமுயற்பறழி	675
கடுவிசைமுடுகி	584
கடையுடைக்	475
கணவனார் தம்மை	462
கண்கள் எண்இலாத	171

பாட்டு	வ. எண்
கண்கொள்ளாக்	289
கண்டத்திடை	708
கண்டதோர்	188
கண்டபின்	830
கண்டபொழுதே	645
கண்டவர்க்குறு	510
கண்டவரிது முன்பு	573
கண்டனர் கைகள்	400
கண்டு சென்றணை	477
கண்ணிடை	175
கண்ணீலக்	872
கண்ணுதல் கண்ணில்	831
கண்ணுதல் கோயில்	335
கண்மலர்	936
கதிர்மணி	278
கதிரவன் உச்சி	750
கதிரிளம் பிறை	519
கதிரோன் எழ	615
கந்தம் கமழ்	321
கயல் பாய்	66
கரிப் பெருமருப்பின்	663
கருங்கதிர்	665
கருப்புவில்	869
கரும்படுகளமர்	77
கரும்பல்ல	65
கருமுகில் என்ன	815
கருவரையொரு	731
கலயனார்	853
கழைசொரி தரளக்	778
களியானையின்	566
கற்பத்தின்	286
கற்பனை கடந்த	351
கற்புறு மனைவி	367
கனங்கொண்ட	315
கனவு நிலை	813
கன்றொடு பால்	941
கா	
காடனும் எதிரே	764
காடெல்லாம்	67
காதலால் அரசன்	861
காதில் வெண்குழை	18
காதில் அணி	176
காப்பணியும்	883
காமத்துயரில்	326
காலனைக் காய்ந்த	852
காலினால்	457
காலை செய்வினை	160
கால் கழல் கட்டிய	623
காவி நேர்வரும்	302
காவினிற் பயிலும்	70
கானவர்குலம்	662
கானவர் பெருமானார்	833
கானவர் போனது	770
கானில் வரித்தளிர்	697
கீ	
கீளொடுகோவணம்	370
கு	
குடங்கையின்	838
குருதியின் நதிகள்	626
குலமுதல் அறிவின்	154
குழைக்கலையும்	881
குழைமறைகாதி	194

பாட்டு	வ. எண்
குழையணிகாதி	587
குன்றவர் வரி	688
குன்றவர் அதனில்	652
குன்றியைநிகர்	739
கூ	
கூர்முனை அயில்	628
கே	
கேடிலாப் பெரியோய்	384
கேடும் ஆக்கமும்	143
கேட்க விரும்பி	274
கை	
கைக்கிடா	333
கைகள் அஞ்சலி	38
கைகள் கூப்பி	28
கைச் சிலை	757
கைத்தலத்து இருந்த	481
கையில் மான்	22
கையினில் புனை	331
கையினை	575
கைவாளுடன்	646
கொ	
கொடுத்த கோவணம்	516
கொண்டு வந்து	443
கொத்தார்	220
கொம்பனார்	851
கொழுவிய தசை	774
கொற்றஆழி	100

பாட்டு	வ. எண்
கோ	
கோடு முன்பு	721
கோட்ட மில	699
கோலப் பூங்கூடை	560
கோலினிற்கோத்து	767
ச	
சங்கொடுதாரை	581
சடை மருங்கில்	131
சம்புவின்	29
சா	
சார்வரும்தவம்	777
சாலநாள் கழிந்த	378
சாலி தேடி	917
சாலி நீள்	71
சாலியின் கற்றை	74
சி	
சிந்தை செய்வது	504
சிலபகல்	867
சிலை மறவர்	696
சிலையினைக் காப்பு	682
சிவனுறையும்	225
சீ	
சீரில் நீடிய	502
சீறடிமேல்	316
சு	
சுரமகளிர்	963
சுற்றத்தார் யாரும்	640

பாட்டு	வ. எண்
சூ	
சூத பாடலங்கள்	79
செ	
செங்கண்வெள்	858
செங்கண்மாதர்	92
செங்கண்வயக்	705
செங்கண் வெள்விடை	832
செங்குவளை	64
செந்தழல் ஒளி	780
செந்தினை இடி	684
செந்நெலார்	909
செப்பலுற்ற	7
செம்மாந்து	234
செம்மையால்	357
செய்த்தகும்	529
செய்ய புன்சடை	508
செய்வதற்கு அரிய	431
செல்லல் நீங்கப்	452
செல்லும்மாமறை	196
செல்வம் மேவிய	445
செறிந்தவர்	589
சென்றடிவணங்கி	487
சென்றணைந்த	951
சென்றவர் தடுத்த	424
சென்றவர் முனியை	434
சென்றவரும் கஞ்சாறர்	888
சென்னியால்	383
சென்னிவெண்	404
சே	
சேட்டாருங்கங்குல்	638
சேணார்மேரு	498
சேதி நன்னாட்டு	467
சேவடியில் தொடு	948
சேறணிதன்	874
சேனையும் ஆனை	862
சை	
சையமால்	53
சொ	
சொரிந்தன குடல்	426
சொல்லார் தமிழ்	222
சொல்வது	435
சொன்ன நாட்டிடை	86
சொன்னவுரை	694
சோ	
சோதிமணி	267
ஞ	
ஞாலம் உய்யநடம்	338
ஞாலம் உய்ய நாம்	499
ஞானச் செய்	898
ஞானமேமுதலா	356
த	
தஞ்சரணத்து	899
தஞ்சே சரணம்	568
தடுத்து முன்	254
தண்டு இரு	397

பாட்டு	வ. எண்
தண்ணளி	130
தண்தரளமணி	288
தண்மலர் அலங்கல்	671
தந்த கோவணம்	517
தந்தது முன்	389
தந்திரத் தலைவர்	579
தந்திருக்கண்	310
தந்தைநிலை	703
தந்தையார்	153
தந்தையும் மைந்த	677
தம்பிரான் அருளி	150
தம்பிரான் அருள்	265
தம்பிரான் பணிமேல்	604
தம்பெருமான் கொடுத்த	348
தம்பெருமான் சாத்தும்	649
தலைப்பட்டார்	634
தலைமிசைச்	773
தவநிறைந்த	540
தவமுயன்று	103
தவமுனிதன்னை	430
தனிப்பெருந்	107
தனு ஒரு கையில்	771
தன்னுயிர்க் கன்று	112
தன்னை ஆளுடைய பிரான்	328
தன்னையாளுடையநாதன்	344
தன்னையொப்பரியது	375

தா

தாயனார்	912
தாழ்ந்த வேணியர்	96
தாளறுவன	728
தாளில்வாழ்	717
தானாள்விருத்தி	614

தி

திங்கள் சூடிய	55
திங்கள் சேர்	753
திங்கள் வெண்	105
திசை முழுதும்	969
திண்படைவயவர்	631
திரண்ட மாமறை	208
திருக்கை சென்று	926
திருத்துறையூர்	227
திருமகட்கு மேல்	886
திருமகள் என்ன	480
திருமலையின்	791
திருமிகுமறை	210
திருவளர்சிறப்பின்	437
திருவார் பெருமை	497
திருவுடை அந்தணாளர்	394
திருவுடை மனைவி	428

தீ

தீங்கு குறித்த	641
தீது கொள்	972

து

துங்கநீள்	839
துடிக்குறடு	673
துடியடியன	735

தூ

தூநறும்	163
தூமலர்ப்பிணை	164

பாட்டு	வ. எண்
தூரத்தே திருக்	347
தூரியத்துவைத்து	582
தெ	
தெண்ணிலா	253
தெய்வம் நிகழ்	701
தெரிவு அரும்	6
தென்திசைப்	723
தென்னாவலூர்	327
தே	
தேசமெல்லாம்	46
தேடிய அயனும்	217
தேடிய மாடுநீடு	470
தேமலங்கல்	238
தேராரும் நெடு	264
தேரும் கொடியும்	323
தேவமால் கொண்டான்	769
தேனக்ககோதை	870
தேனார்க்கும்	261
தேனாருந் தண்பூங்	607
தொ	
தொண்டக முரசும்	687
தொண்டர் அன்பெனும்	520
தொண்டனார்க்கு	489
தொண்டனார் தமக்கு	904
தொல்லை மால் வரை	345
தொல்லை வேட்கோவர்	376
தொழுது போற்றி	548
தொழுந்தகை	598
தொன்மைத் திரு	610

பாட்டு	வ. எண்
தோ	
தோள்கொண்ட	616
தோற்றும் மன்னுயிர்	308
ந	
நக்கான்முகம்	185
நங்கள் நாதனாம்	45
நண்ணிமா மறை	720
நண்ணிய ஒருமை	863
நண்ணிய தவச்	372
நண்ணிய வயல்	918
நதியும் மதியும்	495
நமக்கு முன்பு	450
நம்முடைய குல	704
நரசிங்க முனையர்	151
நலிவாரும்	964
நல்ல கோவணம்	527
நல்ல செங்கீரை	923
நல்ல பதம்	797
நல்ல பொன்	539
நல்லொழுக்கம்	390
நள்ளார்களும்	612
நறைகமழும் சடை	392
நற்றமிழ் வரை	85
நற்றவராம்	897
நன்று சால என்று	533
நா	
நாகசூதவகுளம்	239
நாடிய கழல்	738
நாடும் அன்பொடு	534
நாடும் இன்பொற்பு	281

பாட்டு	வ. எண்
நாட்டு நல்லிசை	303
நாணனும் அன்பும்	752
நாணனே தோன்றும்	745
நாணனோடு	802
நாதர் தம் திருவரு	549
நாதனார் அருளி	343
நாயகன் கழல்	17
நாவலர் கோன்	224
நாவலூர் வந்த	332
நாளிகேரம்	78
நான்மறை முனிவ	209
நி	
நிலமகட்கு	97
நிலவும் எண்ணில்	13
நிலைமை மற்றது	541
நிறைகுடம் தூபம்	170
நிறைந்த நீறு	947
நினைத்தனர் வேறு	825
நின்ற செங்குருதி	828
நின்ற முதுகுறக்	698
நின்ற வேதியர்	526
நின்று கோபுரத்தை	256
நின்றெங்கும்	715
நீ	
நீடு தேவர்	16
நீதி மாதவர்	339
நீலமாமஞ்ஞை	949
நீவி நிதம்ப	932
நீளிடை முடுகி	627
நீளிடை விசை	732
நீள் நிதியாம்	393
நெ	
நெடிது போது	755
நெடியோன் அறியா	569
நெடுஞ்சடை	371
நெருங்கு தூரியங்	169
நெருங்குபைந்தரு	722
நெறி கொண்ட	706
நெற்றியின்	21
நெற்றி விழி	182
நே	
நேர்ந்தவர்	423
ப	
பஞ்சின்மெல்லடி	305
படர்ந்த பேரொளிப்	91
பட்டவன	793
பணிந்தெழுந்து	789
பணிபுவனங்	962
பணியும் அன்பரை	530
பணிவுடைய	878
பண்டிசரிகோவண	177
பண்ணுறும் உறுப்பு	583
பண்தருவிபஞ்சி	82
பதும நல்திரு	856
பத்தியின் பாலர்	72
பந்தம் வீடு	300
பயில்வடுப்பொலி	661
பயில் விளியால்	792
பரசு வந்தியர்	106

பாட்டு	வ. எண்
பரம்பொருளைப்	237
பரவினர் காப்பு	279
பரவையார்	296
பரிவுறு சிந்தை	929
பலதுறைகளின்	734
பல்லியங்கள்	88
பல்வேறுவாளி	713
பழிப்பறை	113
பழுது புகுந்தது	788
பனி விசும்பில்	15
பா	
பாங்கியர் மருங்கு	283
பாங்கு மணிப்	875
பாங்கோடிச்	292
பாசமாம் வினை	298
பாசிலைப் படலை	686
பாசொளி மணி	670
பாட்டியல் தமிழ்	51
பாய்தலும் விசை	574
பார்மிசை	864
பார் விளங்க	243
பாலனாம் மறையோன்	841
பாவியேன்	823
பான்மையில்	681
பி	
பிஞ்ஞகனும்	181
பித்தனும் ஆக	187
பிள்ளைமை	282
பிள்ளையார்	258
பிறந்ததெங்கள்	313
பிறந்தபெருமகிழ்ச்சி	882
பிறைத்தளிர்	507
பிறைவளர் சடை	373
பின் மறவர்கள்	730
பு	
புண்டரிகம் பொன்	608
புயல்காட்டும்	873
புரிந்தவர் கொடுத்த	596
புலரும் படியன்று	322
புலனொன்றும்	226
புறந்தருவார்	257
புறப்பட்ட போதின்	619
புற்றிடம் கொண்ட	271
புற்றிடம் விரும்பி	285
புனை மலர்	884
பூ	
பூத நாயகர்	136
பூதம் ஐந்தும்	142
பூதம் யாவையின்	43
பூவார் திசைமுகன்	137
பெ	
பெருகிய நலத்தால்	148
பெருகுவானம்	454
பெருமதில் சிறந்த	250
பெருமைசால்	152
பெருமையால்	342
பெருவிறலாளி	420
பெற்றியால்தவம்	657

பாட்டு	வ. எண்
பே	
பேணும் அன்பரை	512
பேர் பரவை	294
பேறினி இதன்மேல்	834
பேறெனக்கிதன்	479
பொ	
பொங்கரில் வண்டு	937
பொங்கிய சினவில்	353
பொங்கிய திருவில்	744
பொங்கிய மாநதி	934
பொங்கு மாமறை	101
பொங்கு வெண்கிழி	522
பொச்சமில்லடிமை	542
பொடி மூடுதழல்	895
பொய்கடிந்தறத்	361
பொருட்டிருமறை	556
பொருபுலிப்பார்வை	672
பொருப்பில் எழும்	787
பொருப்பினில்	807
பொருவருஞ்சிறப்	659
பொருவருந் தவத்	41
பொருவரும் வழக்	211
பொலங்கலப்புரவி	334
பொற்சிலை	629
பொற்றடவரை	690
பொய்தயங்கு	134
பொன் தரத்தாரும்	847
பொன்தவழ் அருவி	585
பொன்தாழ் அருவி	496
பொன் திரளும்	235
பொன்மலைப்புலி	552
பொன்னின்வெண்	11
போ	
போகம் நீடுநிதி	246
போதராநின்ற	922
போதுவர் மீண்டு	761
போமதுதனை	737
போர் வலைச்	719
போற்றிசைத்து	126
போற்றி நீள்	352
போன் அதிசூரன்	637
போனவேதியர்	518
ம	
மகிழ்ச்சியால்	157
மங்கலகீத நாத	167
மங்கல கீதம்	268
மங்கலம் பெருக	478
மங்கலம் பொலிய	156
மங்கல மாஞ்செயல்	889
மங்கல விழவு	562
மங்கல வினைகள்	80
மங்குல் வாழ்	835
மங்கை பாகராம்	538
மங்கையைப் பாகமாக	469
மட்டவிழ் அலங்கல்	601
மணவிணைக்கு	158
மண்டிய பேர்	259
மண்டு காதலின்	545
மண்டு புனல்	63
மண்ணில் வாழ்	99
மதிவளர்சடை	4
மதிவிளங்கிய	546

பாட்டு	வ. எண்	பாட்டு	வ. எண்
மந்தரத்தும்	957	மற்றவர் மொழிந்த	577
மந்திரிகள் அது	119	மற்றவர் அணைய	561
மருங்கு நின்ற	768	மற்றவன் இசைந்த	155
மருங்கு பெருங்	903	மற்றவன் கொண்டு	486
மருவிய கால்	965	மற்றவன் தன்	700
மருவிய திருவின்	840	மற்றவனும் கொற்ற	613
மருவும் அன்பொடு	506	மற்றிதற்கு	48
மலர்ந்த சிந்தை	531	மற்றினி நாம்	648
மலர் மிசை அயனும்	550	மற்று நீவன்மை	216
மலர் அமளி	320	மனந்தளரும்	906
மலைபடுமணி	679	மனமகிழ்ந்து	543
மலைவளர்சந்து	228	மனை சாலும்	876
மல்கிய வளங்கள்	680	மனை மருகு	920
மல்லல் நீர்	551	மனைவியார் கொழுநர்	461
மழுவுடைச் செய்ய	860	மனைவியார் சுற்றத்	416
மழை வளர் உலகில்	557	மனைவியார் தம்மை	396
மறிகரந்து	528	மனைவியாரோடு	523
மறுவிலா	355	மன்பெருந்திரு	337
மறுவில் சிந்தை	306	மன்பெருமாமறை	811
மறைகளாயின	191	மன்றுளாடும்	242
மறைத்தவன் புகுந்த	482	மன்றுளேதிருக்	401
மறைமுனி	419	மன்னவர் திரு	165
மறைவனாகி	381	மன்னவன் அதனை	115
மற்றது கண்டு	109	மன்னவன் தன்மைந்தன்	128
மற்றம் மாற்றம்	453	மன்னவன் தன்னை	590
மற்றவர் இனைய	605	மன்னவன் வருத்தம்	859
மற்றவம் செயல்	447	மன்னிய சிறப்பின்	555
மற்றவர் சொன்ன	422	மன்னுசீர் வயல்	346
மற்றவர் தம்செய்கை	636	மன்னும் புகழ்	325
மற்றவர் திண்ண	742	மன்னும் அப்பதி	503
மற்றவர் பிசைந்து	826	மன்னுயிர் புரந்து	118
மற்றவர் மனைவி	850		

பாட்டு	வ. எண்
மா	
மாகமார் திருக்	754
மாசறு சிந்தை	925
மாசிலாதமணி	141
மாசிலா மரபில்	186
மாட மாளிகை	89
மாடலை குருதி	427
மாடு போதகங்	83
மாடு விரைப்	931
மாதங்கம் தீங்கு	591
மாதர் நாறு	61
மாதவம் செய்த	35
மாதவ வேடம்	474
மாது கூறுவள்	451
மாதுடன் கூட	329
மாது தன்னை	413
மாதொரு பாகனார்	149
மாநிலங் காவலன்	121
மாமதில் மஞ்சு	553
மாமறைவிதி	159
மாமுனிவர்	801
மாரிக் காலத்து	448
மார்பிற்சிறு	709
மாலயற்கு அரிய	464
மாலயன்	249
மாலின் உந்திச்	54
மாவிரைத் தெழுந்து	59
மாளிகைகள்	266
மாறில் ஊன்	816
மாறில் பெருஞ்	879
மாறிலா மகிழ்ச்சி	868
மாறு முதற்	955
மானச் சிலை	714
மானிளம்பிணை	280
மி	
மின்னார் செஞ்சடை	263
மின்னிடை மடவார்	855
மின்னுசெஞ்சடை	913
மு	
முக்கண் நக்கராம்	505
முஞ்சிநாணுற	509
முட்டில் அன்பர்	536
முண்டம் நிறை	892
முத்திரையே	954
முந்தைமறை	943
முறித்தவை	459
முறையால்வரு	221
முன் நின்ற மழவிடை	970
முன் நெற்றியின்	707
முன்பு நீ நமக்கு	213
முன்பு செய்தவத்	751
முன்பு திருக்	803
முன்பு நின்று	763
முன்பு போல்	921
முன்னம் ஆங்கு	36
முன்னிருந்த	702
முன்னிலை	930
முன்னே வந்து	290
முன்னை நாள்	814
மூ	
மூண்ட அப்புலவி	365

பாட்டு	வ. எண்
மூண்டு முன்	425
மெ	
மெய்யன்பர்	967
மெய்யெலாம்	473
மே	
மேகஒழுங்குகள்	622
மேகமும் கயிறும்	81
மேயஇவ்வுரை	8
மேலாறு செஞ்சடை	871
மேல்கொண்ட	564
மேவநேர்வர	786
மேவலர் புரங்கள்	650
மேவு செல்வம்	915
மேன்மை	14
மை	
மைச்செறிந்து	656
மைத்தடங்குன்று	588
மைவளர்கண்டர்	276
மொ	
மொய்காட்டும்	783
மொய்த்துவளர்	178
யா	
யாதவன்	24
யாதொன்றும்	844
வ	
வடிவு காண்டலும்	511
வணங்கும்	514
வண்ணநீள்	56
வண்ணவெஞ்சிலை	691
வந்தஇப்பழி	111
வந்தணைந்த ஏயர்	905
வந்தணைந்த மாவிரத	896
வந்தபின் தொண்ட	379
வந்தபின் மனைவி	458
வந்த மூதறிவோரை	887
வந்தவர் அழைத்த	571
வந்தவர் குருதி	819
வந்தழைத்த	620
வந்து தண்புகார்	408
வந்துதிருக்	798
வந்து திருமலை	785
வந்து திருமாமறை	179
வந்தெதிர் கொண்டு	269
வம்புலா மலர் நீரால்	57
வம்புலாமலர் அலைய	267
வயலெலாம் விளை	837
வரிவளர் பூஞ்	230
வருங்கறைப்	781
வரும்புனற்	908
வருமணக்கோல	173
வருமுறை எரி	354
வருமுறைப் பருவம்	668
வரையுறை கடவுள்	667
வலத்திருக்கண்	829
வல்லையேல்	203
வழக்கென்று	120
வழிவரும்	460
வழிவிடுந்துணை	418
வளத்தில்	910
வளத்தினால் மிக்க	386

பாட்டு	வ. எண்
வளவநின்	116
வளவனார்விடாது	597
வளவனும் கேட்ட	578
வள்ளலார் மணம்	891
வள்ளலார் வாசிக்கும்	959
வன்திறல்	758
வன்தொடர்ப்	718
வன்தொண்டர்	293
வன்புலிக்குருளை	653
வன் பெருங்களிறு	595
வன்னி கொன்றை	240
வன்னிலை	933
வா	
வாக்கிய தொண்டர்	594
வாங்குவார்போல்	901
வாசகம் கேட்ட	206
வாசநீர் குடை	58
வாசநெய்யூட்டி	161
வாசமலர்ப்	945
வாயம்பால்	795
வாய்ந்த நீர்	836
வாரணச் சேவ	660
வாரிசொரியும்	492
வாவி புள்ளொலி	309
வாவியின் மூழ்கி	398
வாழியமாமறை	273
வாளியுந் தெரிந்து	821
வாளின் படை	611
வாளோடு நீள்கை	625
வாளோடு பலகை	415
வானவர் பூவின்	438
வானுற நீள்	270
வி	
விடையவர் வீரட்	848
விண்ணவர்கள்	971
விண்ணிடைநின்ற	436
விண்பயில்	865
விரவு பன்மணி	779
விரிகடல் சூழ்	880
விரைசெய்நறும்	491
வில்லொடு வேல்	580
விழுந்தவர்	820
விழுந்தெழுந்து	902
விளக்கம்மிக்க	94
விறலுடைத்	402
வீ	
வீதிகள் விழவின்	84
வீரக்கழல்	711
வெ	
வெங்கணைபடு	729
வெங்கண்புலி	617
வெங்கண் விறல்	624
வெங்கதிர்விசும்பின்	689
வெஞ்சிலைக்கை	725
வெஞ்சினவாள்	633
வெட்டுண்டுபட்டு	576
வெண் கோடல்	946
வெண்ணீறு நெற்றி	642
வெந்தழல் சுடர்	593
வெம்மறக்குலத்து	756
வெய்யகனற்	810

பாட்டு	வ. எண்
வெய்யமா	726
வெய்யகனற்	810
வெய்ய மா	726
வெல் படை	654
வென்றிமடங்கல்	643
வென்றிமால்	563

வே

வேடரைக் காணார்	822
வேடர்தங்கரிய	741
வேடர் தங்கோமான்	678
வேண்டுமாறு	145
வேத ஆரணம்	340
வேத ஓசையும்	87
வேத நான்முகன்	20
வேத பாரகரின்	197
வேதனை எய்தி	483
வேதியர் தில்லை	360
வேதியன் அதனை	195
வேதியன் ஆகி	218
வேலொடு வில்	417
வேழக் கரும்பின்	609
வேறு நல்லதோர்	525
வேறு பிறிதென்	501

வை

வைகலும்	919
வைகறைஉணர்ந்து	559
வைதெரிந்து	75
வைத்தபின்	377
வையகம் பொலிய	251

Designed & Printed By: Anush Printers, Colombo-13. Tel: 0777-244893